குமரன். 14.4.24

என் கடன் பணிசெய்து கிடப்பதே.

உருத்திரோத்காரி ஞு

சதங்கை உ

பத்திராசிரியர்:
சொ. முருகப்ப செட்டியார்
காரைக்குடி.

உள்ளுறை.



உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு சித்திரைமீ	மணி க.

வணக்கம்.

விநாயகர்.

பகவதி காவலனை மிசைதயில் பயிலும்
இகலறு குமரனை யினிதருள் புரிக
அகாரமு முகாரமு மகாரமு மாகித்
திகழுறு பிரணவ மெழுசிறு களிறே.

—சிதம்பர சுவாமிகள்.

முருகக்கடவுள்.

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாஅ லைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துன்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விஞ்சைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

திருமுருகன் இளமை வனப்பு.

பண்டித—மயில்வாகனனார் B. Sc., (Loud.)

பரமர்திருச் சடைப்புனலும்
　　பரைதிருக்கைம் மலரும்
படிந்தழகு விளங்குதிருப்
　　பதநினைந்து நினைந்தெஞ்
சிரமிசைவைத் தருணகிரி
　　திருப்புகழாற் புகழ்ந்து
திருமறையின் பொருளுரைத்த
　　சிவகுருவே யென்போம்
சரவணத்தில் வந்துதித்த
　　தனிமுதலே யென்போம்
தமிழ்விளக்கே பரஞ்சுடரே
　　தமனியப்பொன் னுருவே
திருமுருக நினதிளமைச்
　　செவ்வியையாங் காணச்
சிறியேமுக் கருள்புரியுந்
　　தெள்ளமுதே யென்போம்.

இமயமலையின் வடசாரலிலே கருங்குவளைப் பூமலிந்த பசிய சரவணப் பொய்கையானது தெய்வ வனப்போடு விளங்குகின்றது. ஒருநாட் காலையில் அன்பினாற் கவரப்பட்ட உள்ளத்தினராகிய நாரதமுனிவர் இப்பொய்கைக் கரைக்குவந்தார். வந்து தம்முன்தோன்றிய தெய்வக்காட்சியைக்கண்டு மனமுருகி ஆராமைமிக்கு இமையா விழியினின்றும் உவகைக் கண்ணீர் கலுழச் சிரமேற்கூப்பிய கரத்தராய்ச் சுவரிற் றீட்டிய சித்திரம்போல நின்றார். சிறிது பொழுதிற் கசிவுற்ற உள்ளமானது ஓரளவுக்கு நிலைபெற்று நிற்க ஏழிசை யமுதுகுக்கும் யாழினைக் கரத்தெடுத்துச் சுதிகூட்டி மிடறுங்கருவியும் ஒருங்கு செல்லப் பாடுவாராயினர்.

தண்ணாயிரத்தோன் மிடிதீர்க்குங் கருத்தாலுலகு தழைத்தோங்கத்
தண்ணார் கமலத் திருக்கரத்திற் றனிவே லெடுத்த பெருமானே
தண்ணார் கமலத் திருக்கரத்திற் றனிவே லெடுத்துஞ் சிறுமகவாய்
விண்ணோர் வாழச் சரவணத்தில் விளையாட் டயரும் வியப்பென்னே.

அரியு மயனும் பெரிதுமுயன் றமைத்துப் புரக்கு மவனியெலாம்
சரியக் கணத்திற் றுகள்படுத்துஞ் சதுர்வே லெடுத்த முதல்வோனே
சரியக் கணத்திற் றுகள்படுத்துஞ் சதுர்வே லெடுத்துஞ் சிறுமகவாய்
விரிதண் கமல மலர்சிதைத்து விளையாட் டயரும் விழைவென்னே.

அள்ளற் பள்ளத் தகன்பணைநாட் டால வாயை யழிக்கவரும்
வெள்ளஞ் சுவற்றிக் கடலலைத்த விறல்வே லெடுத்த திறலோனே
வெள்ளஞ் சுவற்றிக் கடலலைத்த விறல்வே லெடுத்துஞ் சிறுமகவாய்
மெள்ளத்தவழ்ந்து விரல்சுவைத்து விளையாட் டயரும்விதமென்னே.

என்று இவ்வாறு பாடித்துதித்து அருந்தவப் பேற்றினை யுடையாராகிய இருடி பத்தினிமார் அறுவரும் பாலூட்டி வளர்த்த ஆறு திருவுருவங்களையுந் தனித்தனியாகநோக்கினர். ஒரு திருவுருவம் அறுவரன்னைமாருள் ஒருவருடையமடித் தலத்திலிருந்து அவ்வன்னையினது முகத்தைப்பார்த்து இளநகைபுரிந்து குதலைச்சொல் மொழிந்துகொண்டிருந்தது. முகம் கோடி சூரியப்பிரகாசமாக விளங்க ஒரு திருக்கரம் ஆகாயத்தைச்சுட்டி நிற்க மற்றொரு திருக்கரம் தொழிலின்றி மருங்கு கிடப்ப அழகனைத்துந் திரண்டு ஒருருவெடுத்தாலொப்பத் திகழ்ந்து மன்னிய திருவுருவத்தைக் கண்டுமகிழ்ந்தமுனிவரர்,

உலகிரு ளகற்றப் பலகதிர் பரப்பி
யொப்பிலா வனப்பொடு விளங்கிப்
பொலிவுறு முகமுந் தெறுகதிர் வெம்மை
போக்குதற் கெண்ணிவிண் படர்ந்து
செலுமுனி வரரைப் புரந்தபொற் கரமுந்
திருவிகை முறைவலு மருங்கிற்
குலவிய கரமுங் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக்கோலம்.

எனத்துதித்து அப்பால் நோக்கினர். சிறியயானைக்கன்றின்மே லிவர்ந்து ஒரு திருக்கரமானது தொடையின்மிசையமர மற்றொரு திருக்கரத்தில் அங்குசத்தைத் தாங்கி வேண்டுவார் வேண்டும் வரங்களைக் கொடுத்துவருகிற இளந்திருக் கோலத்தைக் கண்டார். கண்டுமனமுருகி,

விழைபவர் விழையும் வரங்களை யளிக்க
விரும்பிய திருமுகப் பொலிவை
அழகிய தொடையி லமைத்தபொற் கரத்தை
யங்குசந் தாங்கிய கரத்தை

மழகளி றூர்ந்து வருதிரு வுருவ
வனப்பினை நினைக்குமெல் லையிலே
குழைவுறு மனத்தேன் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

எனத்துதித்து மற்றொருபுறம் நோக்கினார். நிலத்திற் படுத்திருந்த சிங்கக்குருளை பொன்றின்மே லிருந்துகொண்டு ஒரு திருக்கரத்தில் ஒரு சிறியவேலும் மற்றொரு திருக்கரத்தில் வட்டமாகிய சிறிய பரிசையும் ஏந்தித் தென்றிசைநோக்கிச் சற்றுத் தூரத்திலே வேதநெறிவழுவா அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயினைப் பார்த்த வண்ணமாக இருந்த இளந்திருக் கோலத்தைக் கண்டார். கண்டு அன்பினால் அகங்குழைந்து,

மந்திர விதியின் மரபுளி வழாது
மாமறைத் தீயினை வளர்க்கும்
அந்தணர் வேள்வி புரந்தரு ளிறையை
யந்தரத் தமரர்கள் வாழக்
சுந்தரப் பரிசை யயிற்படை யேந்துந்
துணைக்கரத் தெழிலுரு நிறைவைக்
கொந்தவிழ் பொழிலிற் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

எனத்துதித்துச் சரவணப்பொய்கை நடுவண்நோக்கினார். ஆங்கு அலர்ந்திருந்த வெள்ளைக் கமலமொன்றின்மீது பதுமாசனமிட்டுக் கண்மூடி மவுனமாகவிருந்த இளந்திருக்கோலத்தைக் கண்டார். இந்தத் திருவுருவத்தின் திருமுகம் கலைநிறைந்த சந்திரனென்னத் தண்கதிர் பரப்பியது. ஒரு திருக்கரம் சின்முத்திரைவிளங்க மார்பில் வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு திருக்கரம் மார்பிலே தாழ்ந்த மாலையைப்பற்றிய வண்ணமாக விருந்தது. முனிவரும் நெஞ்சு நெக்குருகி,

அளிமிகு மியல்பா லருமறைப் பொருளும்
ஆகமத் துட்பொருண் முடிபும்
தெளிவுறின் மவுன மெனுந்திரு முகமும்
சின்மய மிதுவெனக் காட்டும்
ஒளிமிகு கரமும் மார்பினன் மாலை

குளிரிதழ் மலர்மேற் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

என்னத் துதித்து மெய்ம்மறந்து நின்றனர். சிறிது நேரத்திற் றெளிந்து மற்றொரு திசையைநோக்கினர். மயில்வாகனத்தி லிவர்ந்துவருகிற இளந்திருக்கோலத்தைக் கண்டார். பால்மணம் மாறாத் திருமுகத்திலே வெகுளி தோற்றியது. தொடியணிந்த ஒரு கை சுழன்று களவேள்விசெய்யும் முத்திரையைக் காட்டியது. மற்றொருகை மணியை யசைத்து ஒலியுண்டாக்கியது. இத்திருவுருவத்தைக் கண்ட முனிவர்,

விரைவினிற் செல்லுங் களிமயி லேறி
விளங்கிள வுருவின தெனினும்
பரிவொடு கறுவுந் திருமுக வனப்பும்
படுமணி யிரட்டிய கரமும்
திருநிறை தொடியோ டெடுத்தபொற் கரமுஞ்
சிந்தைநொந் தலைபவர்ப் புரக்குங்
குரைகழற் பொலிவுங் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

என்று துதித்து மற்றொரு திசையை நோக்கினர். அன்பே யுருவாய திருமுகத்திற் புன்னகையரும்ப மார்பிலே சந்தனமும் முத்துமாலையும் பொலிய மழலைக் குழவிப் பருவத்தோடு மணமகனுருவமும் விளங்க மலர்மாலைகளை யெடுத்துத் தம்மை வணங்கி முன்னிற்கின்ற தெய்வப்பெண்களுடைய கழுத்தில் ஒவ்வொன்றாக அணிவதையும் மங்களகரமான மழையைப் பொழிவிப்பதையுங் கண்டார். கண்டு பரவசராகி,

அணியர மகளிர் விழைவினை யகற்ற
அவர்மன நினைவினிற் பொருந்தும்
மணமக னுருவும் மாலையை யேந்தி
மயங்கிய திருக்கர வனப்பும்
பணைகல மடைய வுலகுயிர் தழைப்பப்
பயன்றரு மழைபொழி கரமும்

என்று பாடித் துதித்து நிலமிசைச் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டு எழுந்து நின்றார். அங்ஙனம் நின்ற நாரத முனிவர்மீது திருவருள் சுரந்த குமாரக்கடவுள் யானைக்கன்றின்மேலேறிய திருவுருவத்தினராக முன்வந்து "ஏ நாரத முனிவ! நீ விரும்பியதெது?" என்று கேட்டருளுதலும் முனிபுங்கவர் மீட்டும் பணிந்தெழுந்து "எம்பெருமானே பெருந் தவப்பேற்றினால் தேவரீருடைய இளந் திருக்கோலத்தைத் தரிசிக்கப் பெற்றேன். நான் விரும்பியபோதெல்லாம் இந்தத் திருவுருவத்தோடு காட்சி தந்தருளவேண்டும், இதுவே நான் வேண்டுவது, பிறிதெதுவும் வேண்டேன்," என்றார். இதனைக்கேட்ட பாலசுப்பிரமணியர் புன்னகைபுரிந்து "முனியே, தேவரும் உலகரும் என்னை நோக்கி நெடுநாட் டவங்கிடந்து நான் வெளிப்படும்போது மண்ணைப் பொன்னை மக்களை வாழ்வைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள், நீயேது முழுமுடத்தனமாக ஒன்றும் வேண்டாமென்று சாதித்துக் கொண்டு நிற்கிறாய், விரும்பியதைக்கேட்டுப் பெற்றுக்கொள்" என்று பணித்தார். நாரதரும் சுவாமியை நோக்கி "முருகா, கபடநாடக சூத்திராவதாரியாகிய கண்ணன்மருகா, தேவரையும் மக்களையும் ஏமாற்றி யனுப்பிவிடுவது போல என்னையும் ஏமாற்றி யனுப்பிவிடப் பார்க்கிறாயா? எனக்கு மண்ணும்வேண்டாம்; பொன்னும்வேண்டாம்; மக்களும்வேண்டாம்; வாழ்வும் வேண்டாம்; நீ மாறாது எனது உள்ளத்தில் வதிந்தருளவேண்டும். பேரழகு வாய்ந்த நினது இளந்திருக்கோலத்தைக் கண்டபின் வேறு விரும்பத்தக்க பொருள் மூவுலகத்திலுமில்லை. நினக்கு நீயே யொப்பான நீர்மையனே! இவ்வுலகில் தொட்டவற்றையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப் பெற்றும் அதனை வீசி யெறிந்துவிட்டு அப்பரிசவேதியின்றற் பொன்னைக் கண்டுசிறிய நார் இரும்புத்துண்டைச் சேமித்து வைப்போனும், விரும்பிய பொருளையெல்லாந் தரும் கற்பகவிருக்ஷத்தை விரும்பாது அக்கற்பகந் தந்த சிறியதொரு பொற்குவையை விரும்பியவனும் மூடரெனக் கருதப்படுவதுபோலக் காண்டற்கரிய நின்னைக் காணப்பெற்றபின் பிறிதொன்றின்மேல் உள்ளத்தைச் செலுத்துவோர் வினைற்ற மூடரெனப்படுவார். நான் அந்த

மூடர் வரிசையிற் சேரமாட்டேன். பெறற்கரும் பொருளைப் பெற்றேன் பிறிதொன்றும் வேண்டேன். நான் தருங் கையுறையாகத் திருமான் மகளிர் இருவரை நினக்குக் கலியாணஞ் செய்து வைக்கப்போகின்றேன். போய்வருகிறேன் விடை தந்தருளுக'' என்றார். குமாரநாயகனும் திருவருள் சுரந்து தமது திருவடியைத், தண்டனிட்டுக் கிடந்த முனியின் சிரமீதுவைத்து அநுக்கிரகிக்கப், பெறற்கரும் பொருளினைப் பெற்ற முனியும் கன்றைப் பிரிந்த புனிற்றாவைப்போலப் பிரிவாற்றாது பிரிந்துபோயினர்.

புத்திலக்கியங்கள்.

(வ. வெ. ஸு. ஐயர் அவர்கள் எழுதியது.)

தமிழ்மொழியை வளர்த்தலைப்பற்றித் தமிழபிமானிகள் எழுதிய வண்ணமாக இருக்கிறார்கள். "குமரன்" தனது அரும்பெரு நோக்கங்களில், தமிழ் மொழியின் புனருத்தாரணத்தையும் பிரதானமான ஒன்றாகக் கருதியிருக்கிறான் என்பது அவனது அபிமானிகள் அனைவரும் அறிந்தவிஷயம்.

சென்ற சிலமாதங்களாக "குமர"னில் ஸ்ரீமான் வ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள் தமிழ்மொழியைப்பற்றி எழுதி வருவதை ஆழ்ந்து கவனித்துப்பார்க்கும்படி தமிழ் இலக்கியங்கள் எழுதவேண்டும் என்ற கருத்துள்ளவர்களை வேண்டிக் கொள்வோம். இங்கே நாம் புத்திலக்கியங்கள் இன்னபோக்கின்படி போயின் நம் நோக்கம் இனிது நிறைவேறும் என்று மாத்திரம் சிலவார்த்தைகளில் சூசிப்பிக்க விரும்புகிறோம்.

"இரவியின் குடையின்கீழே புதியதாமொன்றுமின்றே" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இதுவரையில் மனிதனுக்குத் தோன்றாத ஒன்றையே நாம் எழுதுவோம் என்று யாரும் சங்கற்பித்துக் கொள்ளுவ தில்லை. பராந்தகன் காலம், செங்குட்டுவன்காலம், விக்கிரமார்க்கன்காலம், ஸ்ரீஹர்ஷன்காலம், போ

ஜன்காலம், எலிஸெபெத்தின்காலம், பதினாலாம் லூயியின் காலம், மெதிஸியின்காலம், பெரிக்ளிஸ்காலம், ஔகுஸ்தன் காலம் முதலிய மகா இலக்கிய காலங்களில்கூட, அவ்வக்காலத்துக் கவிஞர்களும் ஆசிரியர்களும் புதிய கதைகளையே சிருஷ்டித்தெழுதுவோம் என்று முயன்றதில்லை. பழைய காவியங்கள், பழைய காவியங்களிலுள்ள உபாக்கியானங்கள், தங்கள் நாடுகளிலும் அயல்நாடுகளிலும் நிகழ்ந்த சம்பவங்கள்—ஆகிய இவைகளேதாம் பெரும்பாலும் அவர்கள் எழுதப்புகுந்த நூல்களின் விஷயங்கள். அப்படியிருக்கையில் நாம் நம் நாளில் புத்திலக்கியங்களை எவ்வாறு எதிர்பார்க்கலாகும் என்று சிலர் வினவலாம். அதற்கு நாம் பதில்கூறுவோம். அத்தகைய காவியங்களையும், உபாக்கியானங்களையும் சம்பவங்களையும் ஆதாரமாகக்கொண்டே, ஆசிரியனுடைய மனோதர்மமாகிற விசுவகர்மா வானவன், இந்திரனுடைய சுதர்மா என்னும் சபையைக்கூட எள்ளும்படியான ஓர் கவிதா மண்டபத்தை அமைக்கும் ஆற்றலுடையவன். காளிதாஸன் சகுந்தலையின் கதையை மகாபாரதத்தினின்று எடுத்துக்கொண்டான். ஆனால் பாரதத்திலுள்ள கதையெங்கே, காளிதாஸனுடைய அழியாப் புகழ்படைத்த நாடகமெங்கே? பவபூதி ராமாயண கதையை இரண்டு நாடகங்களாகச் செய்தான். ஆனால் மகாவீர சரிதமாவது உத்தர ராமசரிதமாவது முதநூலின் இலக்கணங்களில் ஓரம்சமாவது குறைந்திருக்கின்றன என்று ரஸிகர் யாரும் சொல்லமாட்டார்கள். அதேமாதிரி உலகத்தின் ஆதிகவிகளான வால்மீகி வியாசன் ஹோமர் முதலிய சில கவிகளைத்தவிர மற்றெல்லா மகாகவிகளும் தமக்கு முன்னுள்ள கவிகள் சிருஷ்டித்துவைத்த கதைகளையே அல்லது கதைகளின் அம்சங்களையே பெரும்பாலும் முதற்பொருள்களாக வைத்துக்கொண்டு அவற்றைத் தங்கள் மனோதர்மமாகிய வாலையில் வைத்துக் காய்ச்சியும் "ஆசு"*கள் சேர்த்தும், ஆயிரந்தெட்டு மாற்றுத் தங்கமாக மாற்றிவிடுகிறார்கள்.

---

* "ஆசு" என்பது ரஸவாதச் சொல். எந்தப் பொருள் தன்னுடைய கலப்பினால் இதர உலோகங்களைப் பொன்னாகச் செய்கிறதோ அதற்கு ரஸவாதிகள் "ஆசு" என்று பெயர் கொடுக்கிறார்கள்.

இதில் கவிகளும் ஆசிரியர்களும் கவனிக்கவேண்டியது என்னவென்றால் ராமாயணக்கதையையாவது அதைப்போன்ற அழகிய கதைகளையாவது எடுத்துக்கொண்டு அவைகளைக் காவிய ரூபமாகவாவது கதை ரூபமாகவாவது எழுதிவிட்ட காரணத்தால் மாத்திரம் அவர்களுடைய நூல்கள் புத்திலக்கியங்கள் என்ற பெயருக்கு அருக முள்ளவை யாகா. மற்றென்னவெனின், அவ்விலக்கியங்களில் ஆசிரியனுடைய மனோதர்மத்தின் ஓர் முத்திரை விழுந்திருக்க வேண்டும். ஆசிரியனுடைய மனோபாவமானது ஓர் வாலையைப்போன்றிருக்கவேண்டும் என்று முன்னே சொன்னோம். வாலையானது தனக்குள்ளே பெய்யப்பட்ட பொருள்களின் தன்மையையே மாற்றிவிடுகிறது; மாற்றி, அக்கூட்டுப் பொருள்களைவிட உயர்ந்ததோர் புதிய பொருளைத்தருகிறது. நமது ஆசிரியரும் கீசகவதையை வர்ணித்தெழுதினானால் அவருடைய கீசகன் வியாசனுடைய கீசகனாகவே மாத்திர மிருந்து அக்கீசகனுடையகருமங்களைமாத்திரம் செய்வானாயின் அவருடைய இலக்கியம் புத்திலக்கியமாகக் கருதப்படாது. அவருடைய கீசகன் புதிய சில குணங்களைக்கொண்டவனாக இருத்தல்வேண்டும், புதிய சில செயல்களைச் செய்தல்வேண்டும். ஆனால் இந்தப் புறத்திலும் சிலபடுகுழிகள் இருக்கின்றன—அவைகளுக்குள்ளும் ஆசிரியர்கள் விழுந்துவிடக் கூடாது. சில ஆசிரியர்கள் கதையில் ஏதாவது மாறுபாடுகள் செய்யவேண்டும் என்று அசம்பவமான—அனர்த்தமான சில சம்பவங்களைச்சேர்த்துக் கதைகளை யாத்துவிட்டு, தாங்கள் சிறந்ததோர் நூல் செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டு திருப்தி யடைந்து விடுகிறார்கள். அதில் பயன் ஏதுமிராது. சேர்க்கும் சம்பவங்கள் சம்பாவியமாக, நடக்கக்கூடியவைகளாக இருக்கவேண்டும். தவிர சம்பவங்களெல்லாம் ஒன்றோடொன்று பிணைந்து, அவயவங்களெல்லாம் சேர்ந்து ஓர் சரீரமாவதுபோல, ஒரு ஒற்றைத் தனிக்கதையாதல்வேண்டும். சரீரத்தில் தலை, உடல், அவயவங்கள் அமைந்திருப்பதுபோல ரஸமானகதைகளின் சம்பவங்களும் ஏற்றபடி விபாகப்படுத்தப்பட்டுத் தகுதியாயிருக்கவேண்டும்.

இன்னும், உன்னதமான நூல்கள் தமக்குள்ளே ஓர்சிறந்த

தர்மத்தை அடக்கியிருத்தல் வேண்டும். இது சுலபமாய் நிறைவேற்ற முடிந்த ஓர் விதியென்னப்பலர் நினைக்கலாம். ஆனால் அது அவ்வாறு அன்று. நூலில் அங்கங்கே அறமொழிகளைப் பெய்து வைத்தல் மூன்றாம் தரத்து ஆசிரியர்களுக்கும் சாத்தியம். இத்தகைய "உபதேச" (ஆங்கிலத்தில் திதாக்திக் என்று சொல்லுவார்கள்) நூல்களில் வேறு எவ்வித யோக்கியதை இருந்தபோதிலும் அவை ரஸிகர் அங்கீகரிக்கும்படியான நூல்களாகா. ரஸிகர் ஏற்கும் நூல்கள் வெளிப்படையாக உபதேசம் செய்யா. ஆனால் அறநூல் முடிவுகளும் கதையும் ஜீவசம்பந்தத்தோடு தம்முள் பிணைந்து நிற்கும். தற்காலத்தில் நமது நாட்டிற்கு முக்கியமாகவேண்டிய தர்மங்கள் தேசபக்தியும், தர்மவீரமும், தியாகபுத்தியும், குற்றமற்ற பிரேமையும் ஆகும். ஆகையால் இக்காலத்து நூல்களைப் படிக்கும்போது இத்தகைய தர்மங்களின் உணர்ச்சி தொனிக்கவேண்டும்.

ஆகவே தற்காலத்தில் நூல்கள் எழுதப்புகும் ஆசிரியர்கள் பிரகிருதியையும் மனிதனுடைய இருதய உணர்ச்சிகளையும் திறந்த கண்களோடும் மனத்தோடும் பார்த்து அனுபவித்து, அந்த அனுபவத்தைத் தங்கள் நூல்களில் தோற்றுவிக்கவேண்டும். உலகத்திலுள்ள பிரகிருதியின் தோற்றங்களும், சரித்திர சம்பவங்களும் அனந்தமான காவியங்களும் ஆசிரியர்களுக்கு முதற்பொருட் களஞ்சியமாக விளங்குகின்றன. மலையையும் நதியையும், காற்றையும் கடலையும், சந்திரிகையையும், தாமரைக்குளத்தையும், மேகங்களையும், சோலைகளையும், பக்ஷிகளையும் மிருகங்களையும் இன்னும் எண்ணற்ற பிரகிருதித் தோற்றங்களையும் கவிகள் வர்ணிக்கலாம். காந்தாரியின் பிரலாபம், சீதாராவணசம்வாதம், அபிமன்யூ உத்தரா சம்வாதம், ரதீப்பிரலாபம், ஹரிச்சந்திரன், மாணிக்கவாசகர், கைஸர் வில்லியம், நப்போலியன் முதலியோர் தங்கள் தங்கள் கஷ்டகாலத்தில் சிந்தித்த அல்லது சிந்திக்கக்கூடிய சிந்தனைகள்—ஆகிய இவைபோன்ற எத்தனை சந்தர்ப்பங்கள் கவிகளின் யாப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன? அவை அனைத்தையும் எழுதிக்காட்டல் முடியவும் முடியாது; அவசியமும் இல்லை. உதாரணத்துக்காக மாத்திரந்தான் மேலே எழுதியவைகளை

எடுத்துக் காட்டினோம். இன்னும் நம்முடைய முக்கியமான சரித்திர சம்பவங்களை வைத்துக்கொண்டு சரித்திரக்கதைகள்-நாவல்கள்—எழுதலாம். இது மிகவும் அவசியமான காரியம். அனேக ஆசிரியர்கள் முன்வந்து சிறு சிறு கதைகள் எழுதிக் கைப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, சரித்திர கதைகள் எழுதித் தமிழ்நாட்டாருக்குத் தேசபக்தியும் ஒழுங்கான வாழ்க்கை முறைகளையும் அறநோக்கையும் உண்டாக்கித் தர வேண்டும். ஆனால் தயைசெய்து ஆசிரியர் ரெய்நால்ட்ஸ் என்பவனின் கதைகளையும், அவன்போன்ற ஆசிரியரின் கதைகளையும் தமிழில் செய்து படிப்போரின் மனதைத் தீயவழிகளில் செல்லும்படி செய்யாதிருக்கக் கடவர். தற்காலத்தில் எழுதப்படும் "நாவல்கள்" பெரும்பாலும் இத்தகையனவாய்த்தாமிருக்கிறபடியால் நமக்கு உண்டாகும் துக்கத்துக்கு எல்லையில்லை. இனிவரும் ஆசிரியர்களாவது பொருந்தாக்காமத்தைப் பிரதானமான ரஸமாகக்கொண்ட நூல்கள் எழுதி, இலக்கிய உலகத்தின் தீண்டாதாராகப் போகாதிருத்தல் வேண்டும்.

ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லி முடிப்போம். ஓர் ஆங்கில அல்லது பிரெஞ்சுக் கதையைப்பார்த்துக் கதை எழுதுவோருக்குச் சென்ற சில வருஷங்களாக ஓர் துர்க்குணம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அக்கதைகளின் நாயகர்களின் பெயர்களை எடுத்துவிட்டு, அவைகட்குப் பதிலாகத் தமிழ்ப் பெயர்களைப்போட்டுக் கதைகளை ஏறத்தாழ அப்படி அப்படியே மொழிபெயர்த்து விடுகிறார்கள். இதில் இரண்டு விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவைகளுள் ஒன்றாவது, ஐரோப்பிய பழக்க வழக்கங்களை நம்முடைய பழக்க வழக்கங்கள் என்று தவறாக வர்ணிக்கவேண்டியிருக்கிறது. அக்கதைகளை நமது சிறுவர்களும் சிறுமிகளும் படிப்பதால் நமது வாழ்க்கை முறைகள் மெல்ல மெல்ல மாறி மேனாட்டு முறைகளைப் பின்பற்றத் துவக்கி விடுகின்றன. அநியாயமாய் இப்பொழுதே இந்தத் தீமை நாட்டில் பரவத் துவக்கிவிட்டது. இனியாவது நமது ஆசிரியர் இத்தகைய விளைவு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். இரண்டாவது கஷ்டம் இதுவாகும்:— ஐரோப்பிய பேராசிரியர் எழுதும் நூல்களில் வரும் பாத்திரங்

கள் அல்லது நாயகர்களின் பெயர்களை முறையில்லாமல் நினைத்தபடி மாற்றி முற்றிலும் தமிழ்ப் பெயர்களாகச் செய்து விட்டால், அவைகளைப்பற்றிய உயர்ந்த ஆராய்ச்சி நூல்களை மூலநூல்களிலாவது, மொழிபெயர்ப்பு மூலமாயாவது பார்க்கும்போது படிப்போருக்குக் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போலாகிவிடும். ஆனால் பெயர்களை அப்படியே எழுதுவதும் தமிழ்ப்பாஷைக்குப் பொருத்தமாயிராதாகையால், அப்பெயர்களின் பகுதிகளை அப்படியே வைத்துவிட்டு விகுதிகளை மாத்திரம் தமிழ்விகுதிகளாக மாற்றிக்கொள்ளவேண்டும். முன்னுட் கவிகளெல்லாரும் இவ்வாறுதான் செய்தார்கள் என்று எடுத்துக்காட்டுவோம். ராம: என்ற பெயர் இராமன் என்றும், ஸீதா என்ற பெயர் சீதை என்றும், அர்ஜுன: என்ற பெயர் அருச்சுனன் என்றும், ஹலாயுத: என்ற பெயர் அலாயுதன் என்றும் தற்பவமாகி யிருக்கின்றன வன்றோ? அதேவிதியைத்தான் மேனுட்டு நூல்களை மொழிபெயர்ப்போரும் அநுஷ்டிக்க வேண்டும். ஆகையால் ஹாம்லேத் என்னும் பெயரை ஹாமலேதன் என்றாவது ஆமலேதன் என்றாவது எழுதலாம்; தேஸ்தேமோனு என்னும் பெயரை தேசதேமோனை என்றெழுதலாம்; அகில்லெஸ் என்னும் பெயரை அகில்லன் என்று எழுதலாம். இவைபோலவே இன்னோரன்ன பெயர்களையும்மாற்றி எழுதினுல்தான் நாம் மேற்கூறிய இரண்டு இடைஞ்சல்களும் ஏற்படா. நம் குறிப்புக்களை இவ்வளவோடு நிறுத்துவோம். ஆசிரியர் இவற்றைப்பற்றி யோசித்துக் கொள்ளக்கூடியவற்றைக்கொண்டு, தள்ளவேண்டியவற்றைத்தள்ளி, தமிழில் பேரிலக்கியங்கள் எழுதி, நமது தாய்மொழியைத் தற்கால வளர்ச்சியிலும் மற்ற நாட்டுப்பாஷைகளுக்கு எள்ளளவும் தாழாத பாஷையாக ஆக்க முயலுவார்கள் என நம்புவோம். தமிழணங்கு நீடுவாழ்க.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

ஆராய்ச்சி—பெரியபுராணம்.

(Registered copy right.)

இலக்கண விளக்க பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகர் எழுதியது.

ஆராய்ச்சி என்னுஞ்சொல் நிறைந்ததாகக் காணப்படும் ஒரு பொருளை யூன்றி நோக்கி அதனிற் காணப்படுங் குறைகளை நீக்கு என்னும் பொருள்படும் ஆராய் என்னும் வினையடியாகப் பிறந்தவொரு தொழிற்பெயராம். நிறைபொருளை ஆராய்தல் எற்றுக்கெனின் நிறைந்த பொருளையன்று; நிறைவுபோற் றோன்றுமொரு பொருளையேயாம். இது விரிப்பிற் பெருகுமாகையான் இதனோடு நிறுத்தி பெரியபுராணத்தை ஆராய்வாம். ஈண்டு நூல்கள் பலவற்றுள்ளும், இமய மலையரையன் மகடழுவக் கச்சி யேகம்பர் திருமேனி குழைந்தனூன்று சமயமவை யாறினுக்குந் தலைவிக்கு ஈசர்தந்தபடி எட்டிரண்டு நாழி நெல்லும், உமை திருச்சூடகக் கையாற் கொடுக்க வாங்கி யுழவுத்தொழிலாற் பெருக்கி உலகமெல்லாந் தமது கொழுங்குடிகொடு வளர்க்கும் வேளாண்டலைவராம், சேக்கிழார் மரபு விளங்கவந்த அருண்மொழித்தேவராம் சுவாமிகள் பாடிய பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தை எடுத்துக்கொள்ளக் காரணந்தானென்னையெனின் கூறுதும். சிலவாண்டுகட்கு முன்னர், நிலமகட்கு அழகு ஆர்தருநீனுதற் றிலகமொப்பதும் பண்டு செம்பியன் வாழ்பதியுமான நிறைசெல்வத் திருவாரூரின் கண்ணே அடங்கன் முறையிலும், திருத்தொண்டர் புராணத்திலும் அச்சிட்ட பிரதிகளில் பல பிழைகள் உண்டாயினவென்று கண்டு ஒரு விண்ணப்பம் வெளியாயிற்று; ஆயினும் அது அடியேன் வசக்குச் சிறிதுகால முன்னர்த்தான் கிட்டியது.

இஃதிங்ஙனமாக யான் ஒருக்கால் புள்ளிருக்கு வேளூரானைக் காண்பான் வேண்டிச் சென்றகாலத்து, அக்காலத்தென் னண்பரெனக் கூறத்தகுதியுடையராய தருமையாதீனத்தைச் சார்ந்த திருமிகு சொக்கலிங்க முனிவரவர்கள் கண்டு தற்செயலாக இவ்விடயத்தையே ஆராய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அக்காலந்தொட்டு இப்பணியில் ஈடுபட்டேன. ஈடுபட்டுமென! யான் கேட்ட கதைகட்கு மாறாகச் சில கதைகளும் இருந்ததைப்பார்த்தும், அச்சிட்ட பிரதிகள் தேடியும் பார்க்கும்போது விண்ணப்பத்திற் கண்ட கூற்று உண்மைதானெனக் கண்டேன். இதனோடு நில்லாது திருத்தொண்டர் புராணமியற்றிய தெய்வ

டர் சீர் பாவுவார் காலத்தையும் இந்நூலின் காலத்தையும் ஆராய்ந்து வெளியிடுவதாக வந்த சிலர் பலர் தத்தமக்கு வேண்டியவாறே காலத்தைத் தாபித்துச்சென்றனர். அதனுண்மை காணவேண்டியதும் கடமையாயிற்று. இவைகளையெல்லாம் உளத்துக்கொண்டு இவற்றினை யாராய்வான்புக்கு யான் கண்டவற்றை நீலமாமிடற்றான்றன் னாலவாயின்கண்ணின்று வெளிவரும் 'செந்தமிழ்' வாயிலாக இரண்டு உரை நடைகள் எழுதி வெளியிட்டேன். அவற்றின் பொருளைச் சுருக்கிக்கூறி மேற்செல்வேன்.

பெரிய புராணத்தை அச்சிட்டார் நால்வர் ஆவர்; அவர்கள்:—

(க) திருமயிலை சுப்பராய ஞானியார்—பிரமோதூதஹு

(உ) சிதம்பரம் இராமலிங்கபிள்ளை—பிரமாதிஹு

(௩) யாழ்ப்பாணம் சதாசிவப்பிள்ளை—அநேக பதிப்புக்கள்.

(௪) சென்னை பக்தஜன சபையார்—விஜய, ஜய.

மேற்கூறியவற்றுள் அதிகமாகவழக்கிலுள்ளது நாவலர் பதிப்புஎன்றுகூறப்படும் சதாசிவப்பிள்ளையவர்கள் பதிப்பே. இப்பதிப்புக்களுள் க-ல்-சஉகக செய்யுள்களும்,உ-ல்சா௩0சு செய்யுள்களும்,௩,௪-ல்சஉஅசு செய்யுள்களும் காணப்படுகின்றன.இவற்றினை யாராய்வுழி திருமயிலை சுப்பராய ஞானியார் முதன்முதலாகப் பெரியபுராணத்தை அச்சிட்டவராகையான் பல அச்சுப்பிழைகள் உண்டாயினவெனக்கண்டனம். திருவாரூர்ச் சிறப்பின் இறுதியிலே பாடற்றொகை க௩ரு-என்றச்சிடுவதற்குப் பதிலாக் கசரு-என்று அச்சிடப்பட்டதுபோலப் பலகணக்குப் பிழைகள் காணப்படுவதால் அவற்றைத்தள்ளி உள்ள பாடல்களைக் கணக்கிடுவோமாயின் சஉஅக பாடல்கள்தானிருக்கின்றன. சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்கள் பதிப்பிலும் இப்பிழைகள் உண்டு; இதனோடு மில்லாது இப்பதிப்பில் கண்ணப்ப நாயனார் புராணத்திலே இடைச்செருகலென்று அக்காலத்தேயே உணரப்பட்டு வெள்ளிபாடலென்று ஒதுக்கப்பட்ட கடுஎ-முதலுள்ள ரு-பாடல்களைச் சேர்த்தும், மட்டவிழ் கொன்றையினார்தம் திருக்கூத்து முன் வணங்கும் இட்டமிகு பெருங்காதலுடைத் தூரைக் காத் போயார் தம் புராணத்து இரண்டாம் பாட்டென வொன்றை யச்சிட்டும் தங்கணக்கை மிகைப்படுத்திச் சென்றனர். இதுமாதிரியாகவே நாவலர் பதிப்பிலும் செறிதுறுகற் பெருமலைகளிடைச் சரியிற் பெரும்பன்றி புன் மேய்ந்து வருவனவுந் துணிபடுத்தும், கானிடை நின்றொருவழிச்சென்றேறும் மானினங்களை யொருதுறை யொளிநின்று கொன்றும் ஒரு குழவிட்டுச் சமைத்துக் காளத்தியப்பனையூட்டிய திண்ணனார் புராணத்து மிகையென ஞானியார் தள்ளிய ஐந்து பாடல்களையும் சேர்த்து அச்சிட்டு வருகின்றனர். ஆகவே: இவைகளையெல்லாம் நீக்கிக் கணக்கிடுவோமாயின் காணப்படும் பாடற்றொகை சஉஅக-ஆகும்.

இனி, தொண்டர்சீர் பரவுவாரெனப் பட்டமெய்திய பாலாறுவளஞ் சுரக்கப்பாயும் தொண்டை நாட்டினராய் குன்றத்தூரிலே யவதரித்த தெய்வச் சேக்கிழாரது புராணத்தைப்பாடியகோற்றவன்குடிப்பெரியார்

காண்டமிரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக்
கருதரிய சருக்கங்கள் பதின்மூன்று நிலையிட்
டண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த நாலா
யிரத்திருநூற் றைம்பத்து மூன்றாக வமைத்துச்
சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்
டாண்டகைமை பெறவெழுதி மைக்காப்புச் சாத்தி
யழகுபெறக் கவளிகையு மமைத்ததில்வைத் ததன்பின். (ச௩)

என்று கூறுவது கொண்டு, அப்பெரியார் திருத்தொண்டர் புராணம் ௪௨௫௩-செய்யுட்களைக்கொண்டதாக இரண்டுகாண்டங்களாக பதின்மூன்று சருக்கங்களோடுநிலையிட்டாரென்பதுவெள்ளிடைமலையாம். காண்டம் இரண்டா வகுத்த இடந்தானெதுவெனின் இக்காலத்தும் புலவர் பெருமானெனப்படும் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது சேக்கிழார்பிள்ளைத்தமிழிலே,

பார்கொண்ட தொண்டர்வர லாறுசொல் புராணமம்
பலவரருளா லமைந்த
படிதெரிந்திட வுலகெலா மெனுஞ் சுருதி நாப்
பண்ணு மீற்றும் பொருந்திப்
பேர்கொண்ட சைவபரி பாடையறி வரியசம்
பிரதாய முதலி யாவும்
பிறங்கத்தெரித் தெம்மை யாண்டகுன் றத்தூர்ப்
பிரானைப் புரக்க வென்றே. என்று பிள்ளைத்தமிழ்

முதலிலேயேகூறப்பட்டிருக்கிறதுகொண்டுதெளிவாம் 'இவ்வுலகெலாம்' என்றதெய்வத் திருவாக்கையுடைய செய்யுள்கள் பெரிய புராணத்திலே காணப்படுமிட மூன்று; அவை "உலகெலாம்" என்ற முதற்செய்யுள்; 'சோதிமுத்தின்சிவிகை...ஏறினார் உய்யவுலகெலாம்' என்ற திருஞான சம்பந்தப்பிள்ளையார் புராணம் ௨௧௯-வது செய்யுள்; இறுதிச்செய்யுள். ஆகவே இந்நடுவான சோதிமுத்தின் என்பது தனக்குமுன்னும்பின்னும் பகுத்துக் காட்டக்கூடிய துலாக்கோலன்ன நிற்பது. இதற்குமுன் முதற்காண்டமாக ௨௧௨௬-செய்யுட்களையும் இதற்குப் பின் இரண்டாங்காண்டமாய் ௨௧௨௬-செய்யுட்களையுடையதுமாயிற்று.

இனி, அச்சிட்ட நூல்களின்படி கணக்கேற்றும்போது; மேலே காட்டிய எண்களை வைத்துக் கணக்கேற்றுவோமானால் உகககூ-செய்யுட்களே முதற்காண்டத்தில் காணப்படும். இதனிலும் சருக்க இறுதியில் தம்பிரான்றோழரது துதிச்செய்யுள்களையும் சேர்த்துக் கணக்கிட்டுவிட்டனர். யான்பார்த்த ஏட்டுப்பிரதிகள் ஒன்றிலாயினும் இச்செய்யுள்கள் புராணத்தோடு சேர்க்கப்படவில்லை. அன்றியும் ஒவ்வொரு புராண இறுதிச் செய்யுளில் இன்னபுராணம் கூறுவாம் என்று கூறிச் சருக்கத்தை முடிக்கும்போது இத்துதிச் செய்யுளைக் கூட்டுவதும் முறையாகாது. இவ்வாறாகத் தில்லைவாழந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையாலுலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம் ஆய நான்கு சருக்கத் துதிப்பாடல்களையும் முன் அச்சிட்ட புராணத்து முதற்காண்டத் தொகையான உகககூ-ல் கழிக்க, மிகுவது உக௦கூ-செய்யுட்களே இப்பொழுது முதற்காண்டத்திற் காணப்படுவது. இவ்வாறு கண்டபிறகு இதற்குவேண்டிய மிகுதியாகும் செய்யுள்களைத் தேடுவான் புகுந்தபோது மிகப்புராதனமான எமதில்லப் பிரதியிலே தடுத்தாட்கொண்ட புராணத்தில் செய்யுள் மிக்கிருக்கக்கண்டு கம்பிக்காதழக ஞானதியாகேசனது அருளை நினைந்துருகிப் பார்க்கும்போது, கன்னபரம்பரையாக வழங்கிவரும் விறன்மிண்ட நாயனாருக்கும் தலைவருக்கும் மாதுகொள் புலவி நீக்க மனைபிடையிருகாற் செல்லத் தூதுகொள் பவராஞ் சுந்தரனைக் குறித்துண்டான கலாமாகவிருந்தது. அதனை ஈண்டுக்கண்டபடி பொறிக்கின்றேன். அடியவர்க்கடியனாவேன் என்ற கக௦-வதுசெய்யுட்குப்பினனே,

வன்றொண்டர் காதல் கண்டு மழவிடை யுடையார் தாமு
முன்றொண்ட ராக வாண்ட முதனம்பி யாரூ ரற்குச்
சென்றங்குப் போற்று மிக்க திருத்தொண்டர் தம்பாற் சேர
வொன்றும்பண் பருள வேண்டி யொருதொண்டர் வெருளச்
செய்தார். ககக

பெருந்தவத் தொண்ட ரான பெருவிறன் மிண்ட ரென்பா
ரிருந்தவக் குழாத்தி னின்று மெதிர்செயிர்த் தெழுந்து நின்ற
வருந்தவப் பெரியோர் தம்மைப் பணிந்தனை யாது போன
வருந்தவ னுடைய வேட மற்றிவ னார்கொ லென்று. ககஉ

வேறு

பக்க மேவரு வார்கள் பலருடன்
புக்க போது பொருவிறன் மிண்டர்தா
மிக்கெ ழுந்த வெகுளியா னம்பிபாற்
றக்க வில்லன சாலவுந் தெவ்விஞர். ககங

சொன்ன தொண்டரை நோக்கிமெய்த் தொண்டரான்
மன்னி நீடு வளர்பெருங் கூட்டத்து
முன்னி ருந்தா ரொருவர் மொழிகின்றா
ரின்னல் சொல்ல வியல்பல்ல வாமென்று ௧௯௪

ஓலை காட்டி யுடையவர் முன்னின்று
ஞால மேற்கவாட் கொண்ட நம்பியைச்
சீல முன்பறி யாதிவை செப்பினீர்
கோலமே கண்டு கூறலா மோவென்றார். ௧௯௫

என்று கூற விகழ்ந்து விறன்மிண்டர்
நன்று சாலவு நம்பெரு மக்கள்வந்
தொன்று கூட்ட முணரா வொருவனை
மன்று தம்பிரா னாளா வழக்கில. ௧௯௬

கருந்தடங் கண்ணி பாகர்தங் காதல்கூ
ரிருந்த வத்தடி யாரை யணைவின்றி
புரிந்த பண்பினிற் றூர்த்தன் புறகெனா
விருந்த தொண்ட ரிருக்கை சார்தலும். ௧௯௭

வெம்பி நீர்மொழி யேல்விறன் மிண்டரே
நம்பியா ரூரர் காணுமந் நாயனா
ரம்பொன் மாளிகை யாரூ ரமர்ந்தரு
டம்பிரான் றோழ னாரவர் தாமென: ௧௯௮

தோழ ராகினுந் தொண்டரே யாகினு
மாழி மாலயன் காணா வருட்கழல்
சூழு மெய்யடி யாரைத் தொடர்வின்றி
வாழுமூ ரன்பிரா னுதல் வைத்திலம். ௧௯௯

இன்ன வாறடி யார்புற கென்றபி
னன்ன வாறறிந் தஞ்சியா ரூரர்தா
மின்னு வார்சடை வேதியன் றூடொழப்
பொன்னவா மணிப்பூங் கோயில் சார்தலும். ௨௦௦

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவ
ரங்கு காட்சி கொடுத்தரு ளாமையி
னிங்குப் பேறெனக் கிவ்வண மோவென்பா
ரெங்குந் தேடி யுழிவுற் றியம்புவார். ௨௦௧

என்னை யாட்கொண்ட வீசனு மாயெனக்
கன்னை யாயமு தாயறி வாயினாய்
பொன்னை யார்ந்த புரிசடைப் புண்ணியா
வுன்னையா னிங்குக் காணே னொளித்தியோ. உ௦உ

வெள்ள நீர்பரந் தோங்கும் விரிசடை
வள்ள லேமலை யாண்மண வாளனே
தள்ளு மாமறை யின்றெளி வாகியெ
னுள்ள மேபுகுந் தாயெங் கொளித்தியோ உ௦ங

ஈச னேயெனக் கெய்ப்பினில் வைப்பெனப்
பேச லாகும் பெரும்பொரு ளாயினாய்
தேச னேசிவ னேசிவ லோகனே
யோசை யேயுனை யானுண ரேனென்று உ௦ச

தோழ ராகிநற் சுற்றமு மாயடி
நீழ றந்தளிப் பாரெதிர் நீங்கவ
மாழி போன்ற வடியார் முனியவும்
வாழ வன் றொண்டர் சால வருந்தினார். உ௦ரு

வேண்டி யாட்கொண்ட வீறு தொண்டரை
யாண்ட நாயகர் வாவென் றருள்செய்து
காண்ட கும்படி காட்சி கொடுத்தலும்
பூண்டு கொண்டவன் பொன்னடி போற்றுவார். உ௦சு

இதற்குமேல் 'மன்பெருந் திருமாமறைவண்டு' என்ற பாடலும் பிற்பாடல்களும் காணப்படுகின்றன. 'மேல் தூரத்தே திருக்கூட்டம் ....அருள் செய்வாய்' என்ற செய்யுளுக்குப்பின்,

அப்பெரியார் சிவனருளா லளவிறந்த கருணையா
யொப்பரிய வாரூரன் பிரானுத லுளதாமென்
றிப்பரிசுக் கினிதிருக்கை சாற்றுமென வெழுந்தவா
மெப்புவனங் களுமுவப்ப வெழுந்தவொலி கேட்டனரால்

என்ற செய்யுள் காணப்படுகிறது. ஆக இப்பதினேழு செய்யுள்களும் கூடியகாலை முதற்காண்டம் நிறைவுபடும்.

இனி இரண்டாங் காண்டத்துச் செய்யுள்களைக் கணக்கிடுவோமாயின் பாடற்றொகை உகசுஎ-என்பது பெறப்படும். அவைகளுள் சோமாசிமாறர், சாக்கியர், முனையடுவார், கோட்புலியார், அப்பாலு மடிச்

சார்ந்தார் ஆய இவர் புராண சுற்றிலுள்ள தம்பிரான் றோழரது துதிகளை நீக்கிக்கண்டது உகசுஉ. இருந்த இருக்கவேண்டியது உகஉசு-போக அதிகப்படுவது நூசு-செய்யுள்கள். இவற்றுள் எவை இடைச்செருக லென ஆராயும்போது (க) எயர்கோன் கலிக்காமர் புராணத்தில் நூடு-ங் கும் நூசு-க்குமிடையில் ஆண்டநம்பி என்ற செய்யுள் முதன் முதலாகப் பதிப்பித்த பிரதியில் காணப்படவில்லை. அது இருக்கவு நியதியில்லை யெனறுங்காட்டினும். (உ) காழிக் கவுணியர் கோன் புராணத்திலே திருவேடிட்ட செய்யுளான அஉக-க்குப் பிறகு 'திருவுடைப்பிள்ளையார் தம் திருக்கையாலிட்ட' எனற செய்யுள் கதைத்தொடர்ச்சியினை ஆற் றொழுக்காகக் கூற நடுவண் 'அந்தணர் தேவர் ஆனினங்கள்' என்றது முதலான பல செய்யுட்களை இடைமடுத்துக் கதைப்போக்கைத் தடுத் தனர். அதனாற் கூடியது (அடஉ—அசடு) உச-செய்யுட்கள். (ந.) அப்புராணத்தேயே உசுக-வது செய்யுட்குப்பின் காணப்படும் 'மறை யவர்கள் அடிபோற்ற........சிவிகை பெற்றார்' என்பது இடைச்செரு கலாயிருத்தல் கூடுமெனச்காட்டினும். (ச) அதற்கடுத்த உஅஉ— உஅச-செய்யுள்கள் மிகையென்று காரணங்காட்டினும். (டு) அதற் கடுத்த நூஅஉ-வது செய்யுளுக்குப் பின்னர் முதுவேனில் வருணனை அவண் வேண்டப்படாததென்று கடாவிடைகளுடன் காட்டினும். (சு) மேலே எநூஅ-வது செய்யுளான 'நோக்கிட விதியிலாரை' என்பதும் இடைச்செருகலென்று காட்டினும். இவ்வாறு கூடிய நூசு-செய்யு ளும் இடைச்செருகலாகையான் அவற்றைக்களைவோமாயின் இரண் டாங்காண்டமும் இரண்டாயிரத் தொருநூற்றிருபத்தாறு செய்யுட்களு டையதாகவே காண்பாம். இதன் விரிவை செந்தமிழ் கஎ, உ௦-ம் தொகுதிகளிற்காண்க.

இனி, இப்புராணகாலந்தான் யாதோவெனவும் அதனையொட்டி ஆசி ரியர்காலந்தான் யாதோவெனவும் நாட்ட வேண்டியதன் காரணம் முதலி லே கூறினும். ஆசிரியர் சேக்கிழார்சுவாமிகள் காலத்தைப்பற்றியும்,பொ துவாகக்காலவாராய்ச்சியும்செய்து தம்மனப்போக்கின்படி நிலைநாட்டிய வர்களில் தலைமைபெற்றார் காலஞ்சென்ற (க) து. அ. கோபிநாதராவ் அவர்கள். (உ) சேது சமஸ்தான வித்வான் உ. வே. ரா. ரங்கஸ்வாமிஐயங் கார்சுவாமிகள். (ந.) தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் டாக்டர் ஹூல்ஷ் துரைபவர்கள் ஆவர். இம்மூவருள் முதல்வரான கோபிநாத ராவ் அவர்கள் 'செந்தமிழ் மூன்றந் தொகுதியிலே கி, பி. க௦எ௦-முதல் கககஅ-வரை அரசாண்ட முதற் குலோத்துங்கன் காலத்து முற்பகுதி யான பதினோராநூற்றாண்டின் இறுதியிலிருந்தனர்' எனறு கூறினார்கள். மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம் சுமாராக கி. பி. அகூ௦ என்றும் மேற்கூறிய தொகுதியிலேயே கூறிச்சென்றார்கள். இவர்கள் காலத்

திற்கு ஒரு இருநூறு வருடத்திற்குள்ளேயே திருத்தொண்டர் புராணம் பாடப்பட்டிருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும் என்றார்கள். சேதுசமஸ்தான வித்வானான உ. வே. ரா. ராகவையங்கார்சுவாமிகளை செந்தமிழ் மூன்றாந் தொகுதியில் சென்னி அநபாயன் குலோத்துங்கன் ஆராய்ச்சியில் இவன் இரண்டாங் குலோத்துங்கனென்றும் அப்படித்துணிதற்கு இடந்தருவது திருத்தொண்டர்புராணமேயெனறும் காட்டினார்கள். இரண்டாங் குலோத்துங்கன் காலம் ககங௫—ககசௗ.

இனி ஹூல்ஷ் துரையவர்கள் தென்னிந்திய கல்வெட்டுக்கள் (South Indian Inscriptions) தொகுதி II-ல் ௩அ-ம். கல்வெட்டைப்பற்றிப் பேசும்போது தமிழ்மொழியின் சரித்திரத்திற்கே இக்கல்வெட்டு ஒரு முக்கியமான அம்சமாகுமென்றும், இம்முதலாம் ராஜராஜனது காலமே தேவாரத்திருமுறை பாடியமூவர்காலத்தின் கடைநிலையைக் குறிக்குமென்றும் கூறுகிறார். மேலும் "டாக்டர் கால்டுவெல் இந்தத் திருமுறை பதின்மூன்றாம் நூற்றாண்டிலுண்டானது என்கிறார். ஆனால் இந்தக்கல்வெட்டு அவைகள் (தேவாரம்) ராஜராஜனுடைய காலத்துக்குமுன்னர் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று காட்டுகிறது. இக்கல்வெட்டில் தேவாரத் திருமுறை ஆசிரியர்களான திருஞானசம்பந்தர், அப்பர், நம்பிஆரூரனர், அவர் மனைவியார் நங்கை பரவையார் இவர்கள் பேர்கள் காணப்படுகின்றன"

"தேவாரம் பாடிய மூவருள்பட ௬௩-நாயன்மாரும் ராஜ ராஜதேவருடைய காலத்துக்கு வெகு முற்பட்டவர் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. சுந்தரமூர்த்தி (சுவாமிகளது) திருத்தொண்டத் தொகையில் சுபதேவர் கமலாவதியின் திருக்குமாரரான கோச்செங்கணனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. கனகசபைப்பிள்ளையால் மொழிபெயர்க்கப்பட்ட பொய்கையாரது களவழி என்னு நூலின் பாட்டுடைத்தலைவனாய செங்கணனும் இவனும் ஒருவனே என்று காணப்படுகிறது. அக்கல்வியானே பின்வந்த நூலான கலிங்கத்துப்பரணியி லிருந்து சிலபாக்களை மொழிபெயர்த்திருக்கின்றனர்; அதனில் சோழ அரசர்கள் பெயர்கள் கூறப்படாவிடினும் கோக்கிள்ளி, கோச்செங்கணன், கரிகாலன் இம்மூவர்களையும்பற்றிக்கூறப்படுகிறது. கிடைத்த சோழரது இரண்டே செப்புப்பட்டையங்களிலும் முதற்பராந்தகனின் பாட்டனை விஜயாலயன் முன்னோர்களாக இ த மூன்று பேர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றனர். பாணவாசகன் அத்திமல்லன் சாசனத்திலும் கோக்கிள்ளி, கரிகாலன், செங்கணன் என்று கூறப்படுகிறது; பெரிய லெய்டன் (Leyden) சாசனத்திலும் கரிகாலன், கோச்செங்கணன், கோக்கிள்ளி என்றெழுதப்பட்டிருக்கிறது. உருத்திரங்கண்ணனார் இயற்றிய பட்டினப்பாலை கரிகா

லன் பேரிலாம். செங்கணானுக்குக் களவழியிருக்கிறது. இவ்விதமாகச் செய்யுள்கள் பழஞ்சோழர் காலத்து இயற்றப்பட்டிருப்பதாகக் காணப்படுவதால், தேவாரமும் அக்காலத்தேயே இருந்ததென்று கொள்வதில் ஆட்சேபமில்லை "இம்மூவர் உள்பட சுஉ-திருத்தொண்டரது சரித்திரம் சேக்கிழாரால் அநபாயன் என்ற ஒரு அரசனது காலத்தில் பாடப்பட்டதாகக்காணப்படுகிறது, திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் இவ்வரசனது கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டின் ஆரம்பத்தில் இவனைக் கோவிராஜகேசரிவன்மன் திரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர் என்று ஆரம்பமாவதோடு இறுதியில் இரண்டு கிரந்த சுலோகங்களில் அநபாயன் என்ற பெயர் காணப்படுகிறது. இவனுடைய அரசாட்சியின் ஏழாம் வருடத்தில் இவன் இக்கோயிலில் நான்கு உருவங்களைத்தாபித்தான. தஞ்சாவூர்க்கோயிலில் இருப்பதுபோல அவைகள் ஆளுடைய நம்பி, பரவை நாச்சியார், ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசுதேவ ராவர். கல்வெட்டின் கடைசிப்பாகம் கிரந்த சுலோகமாகும். * அதன்பொருள் பின் வருமாறு:—

ஹேமசபாநாதரது பாதத்தில்நமஸ்கரித்து விளங்குகின்ற அநபாயஅரசன் ஆரூராலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிரமபுரீசர், வாக்காதிபதி, சுவஸ்வாமி மித்திரர் இம்மூவர்க்கும் நிலம் தங்கம் பொன்னாபரணங்களும் பாத்திரங்களும் கொடுத்தான். வியாக்ரஹாரத்தில் கனகசபையில் எழுந்தருளியிருக்கும் நடேசப்பெருமானது சரணாரவிந்தத்தில் மொய்த்த வண்டாகிய அனபாயனென்ற அடியேன் பின்னோர்கள் கமலாலயத்தில்செய்யப்பட்ட காணிக்கைகளைக் காப்பாற்றும்படியாக அவர்களுக்கு நமஸ்கரிக்கின்றேன். ஆளுடைய நம்பியின்றாய் இசைஞானி கமலாபுரத்திலே சைவாசார்யாருள்ளே கௌதமகோத்திரத்திலே ஞான சிவாசார்யரதுவீட்டிலே ஆளுடைய நம்பியின்றாய் இசைஞானியார் ஜனனமானார்." மேலேகாட்டிய சுலோகம் அனபாயனையும் அவன சிதம்பரத்தில் பற்றுடையான் என்பதையும் காட்டுகிறது.

மற்றொரு சாசனம் "பரகேசரிவர்மன் திரிபுவந சக்கிரவர்த்திகள் விக்கிரமசோழ தேவருடைய ரு-ம் வருஷத்தில் வெட்டப்பட்டது பெரிய புராணத்தைப்பற்றிக் கூறுகிறது. நாங்கள் அங்கு தங்கிய சில நாழிகைக்குள்ளே என்று உதவிஎழுதிய கையெழுத்துப் பிரதியிலிருந்து பெரியபுராணம் கற—கஉ-பக்கங்களில் கூறிய மனுவும் பசுவும் பற்றிய கதையைப்பற்றிச் சொல்லியதாகத் தெரிகிறது. (தொடரும்.)

* கிரந்த எழுத்துக்கள் இன்னும் சரியாக வந்துசேரவில்லை. வந்தவுடன் வெளியிடப்பெறும். ப—ர்

கந்தழி.

(தி. நா. சுப்பிரமண்யம், தஞ்சை.)

புறப்பொருளின் ஒருபாகமாகிய பாடாண்டிணையுள் தேவர்க்குரிய பாடாணைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனக் கூறுகின்றார். இதற்கு உரை யெழுதும் பொழுது உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர்,

"கொடிநிலை—கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்: கந்தழி—ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள்: வள்ளி—தண்கதிர் மண்டிலம்: என்ற வடுநீங்கு சிறப்பின் முதலனமூன்றும்—என்று சொல்லப்பட்ட குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும்: கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே—முற்கூறிய அமரரோடே கருதுமாற்றாற் றோன்றும்" * என எழுதுகின்றார். அன்னாரது மதப்படி கந்தழி, தத்துவங்கடந்த பொருளாகிய பரம்பொருளைக் குறிக்க, அஃது எங்ஙனம் கடவுள் வாழ்த்திற்குரிய இடத்தை அடையாது பின்னால் வந்தது என அறிய இயலா திருக்கிறது. இதே விஷயத்தைப் பற்றிக் கூறிய மற்றைய ஆசிரியர்கள் இவரினின்றும் வேறுபட்டுக் கூறுகிறார்கள். அவ்வேறுபாடுகளை காலமுறையிற் பார்ப்போம். புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார்,

"கொடிநிலை:—மூவர் கொடியுள் ஒன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந்தன்று.

(இ—ள்) அரி அயன் அரனென்னும் மூவர் கொடியுள்ளும் ஒன்

---

* தாமோதரம்பிள்ளை பதிப்பு. பொருளதிகாரம் பக்கம் 10. சூ அஅ.

றுடுவமித்துப் பலரும் பொருந்துதல் வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது" எனவும், *

"கந்தழி:—சூழ்நேமியான் சோவெறிந்த
விழிச்சீர் விறன்மிகுத்தன்று.

(இ—ள்) வளைந்த திகிரியை யுடையவன் சோவென்னும் அரணத்தினை அழித்த கெடாத தன்மையினை யுடைய வெற்றியைச் சிறப்பித்தது" எனப் பாடாண் படலத்துள்ளும்,†

"மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மற்றுவலின்று.

(இ—ள்) வண்டினையுடைய மாலையாற் சிறந்தநீலமணிபோன்றமேனியையுடையான் வீரசோவென்னும் அரணத்தை அழித்த வீரத்தைச் சொல்லியது" § என உழிஞைப்படலத்துள்ளும்.

"வள்ளி:—பூண்முலையார் மனமுருக
வேன்முருகற்கு வெறியாடின்று.

(இ—ள்) ஆபரணத்தினாற் சிறந்த முலையினையுடையார் நெஞ்சுநெகிழ வேலினையுடைய குமரனுக்கு வெள்ளியென்னுங்கூத்தை ஆடியது" எனப் பாடாண் படலத்துள்ளும் கூறுகிறார்.○

இவருக்குப்பின் வந்த இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதும்பொழுது மேலே கூறிய மூன்று சொற்களையும் விளக்காது ஐயனாரிதனார் உதாரணங்காட்டிய வெண்பாக்களையே உதாரணமாகக்காட்டிச் செல்லுவதால் இன்னார் மதத்தையே கொண்டனர் ‡ எனக்கருதவேண்டியிருக்கிறது. வீரசோழியக்காரராகிய புத்தமித்திரனார், பொருட் படலத்து,

"புகட்சிபாவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
மிகட்சி மல்வள்ளி யென்றிவை யாறு நெறிமுறைமின்
றிகட்சி மலைதரு பாடாண் பகுதிசெப் பாதனவு
இகட்சியுண் டாகா வகைதேர்ந்தறித லியல்புடைத்தே" (உக)

எனக்கூறியதற்கு உரையாசிரியர் பெருந்தேவனார்,

* உ. வே. சாமிநாதய்யர் உ-ம் பதிப்பு பக்கம் கடுரு. சூ. நக.
† ஷை சூ சo. § ஷை உழிஞைப்படலம் சூ எ. பக்கம் சக.
○ ஷை பாடாண்படலம் சூ சக. பக்கம் கoசு. ‡ வை. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பு பக்கம் கஉங, சூ அரு.

"கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவது,—கந்தழியாவது செருவிற்றெட்பமுடைமை,—வள்ளியாவது முருகவேளைக்குறித்தது." என எழுதிச்செல்கின்றார். § இவை யாவும் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டவை. இனி, அவர்க்குப் பின்வந்த ஆசிரியர்கள் யாது கூறுகின்றார்களெபன்தைப்பார்ப்போம்.

திருவாரூர் வைத்திநாததேசிகரும், புறத்திணையியலில்,

"மூவர்கொடியுளு மொன்றொடு பொரீஇ
மேவரவுரைதம வியன்கொடி நிலையுஞ்
சோவினையழித்த துளவணிமாயோன்
மேவறு விறலினை வியந்த கந்தழியு
மெரிசுடர் வேளவர்க்கிளகிய வுள்ளத்
தரிமலர்க்கண்ணிய ராடிய வள்ளியும்."

எனக்கூறி உரையெழுதும் பொழுது ஐயனாரிதனார் எழுதிய செய்யுட்களை மேற்கோட்களாகக்கொண்டனர். ‡ இங்ஙனமாக யாவரும் கண்மூடியாக ஐயனாரிதனாரைப் பின்பற்றினார்கள். அவரினின்றும் நச்சினார்க்கினியர்மட்டுமே மாறுபட்டனர். மேற்கூறிய இரண்டு கொள்கைகளையும் நீக்கி, மூன்றாவதாக ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார் அவர்கள் தமது தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியில்,

"'கொடிநிலை' என்பது, மேகத்தையுணர்த்தும்; கீழ்த்திசைக்கண்ணே நிலைபெறுதலுடையது, நீடனிலையுடையது என்பன இதன்பொருளாம்...மேகவாகனனது திசைகீழ்த்திசையாதலின் அத்திசையே மேகத்திற்கும் உரியது...மின்னற்கொடிக்கு நிலைக்களமாதல்பற்றி மேகம் 'கொடிநிலை' எனப்பட்டதெனினும் அமையும்...கந்தழி என்பது—கந்து—பற்று அழி—அழிவு; அஃதாவது பற்றழிந்தார் அல்லது நீத்தார் தன்மை என்றபடியாம். மூன்றாவதான வள்ளி அறத்தைக் குறிக்கும்...படவே, வண்மையாகிய அறத்திற்குரிய கடவுள்

§ தாமோதரம்பிள்ளை பதிப்பு பொருட்படலம் பக்கம் அச. சூ உக.
‡ இலக்கணவிளக்கம் பக்கம் ருகக. சூ சுகஎ.

வள்ளி எனப்பட்டதென்க. இங்ஙனம் மேகம், நீத்தார், அறக் கடவுள் என்ற மூன்றும், கடவுளை முதலாகக்கொண்டு வாழ்த் தப்படுதலும் இப்பாடான் பகுதியாம் என்பது, சூத்திரப் பொருளாதல் கண்டுகொள்க. எனவே, வள்ளுவனார் கூறிய பாயிரமும் இவ்விலக்கணம்பற்றி அமைந்ததென்பது விளக்கமாகும்" எனக் குறளை ஆதாரமாகக்கொண்டு கூறுகின்றார். * இங்ஙனம் ஒருவர்க்கொருவர் பெரிதும் மாறுபடுகின்றனர். ஆனால் உண்மைப்பொருள் தான் யாது?

தொல்காப்பியத்தை ஆதாரமாகக்கொண்டதும் வாழ்த்து முதலியவற்றை உடையதுமான நூல்கள் மிகச்சிலவே. அவற்றுள் முக்கியமானவை திருக்குறளும் சிலப்பதிகாரமும். குறள் ஜாதி மதம் வழக்கம் முதலிய வேறுபாடுகளின்றி யாவரும் அனுஷ்டிக்கத் தக்க சாத்திரமாம். ஆகவே, தமிழ்நாட்டுச் சிறப்பு ஒழுக்கங்களை நன்கு கூறுவதும் பொருட்டுறைகளை உதாரணமுகத்தால் விளக்கிக்காட்டுவதும், காவியமாகிய சிலப் பதிகாரமே. இதுவே, ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானது. இளங்கோவடிகள் வாழ்த்துக்கூறும் மங்கல வாழ்த்துப்பாடலில் முதலில்,

> "திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
> கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
> வங்க ணுலகளித்த லான்"

எனக்கூறி பின் முறையே ஞாயிற்றையும் மாமழையையும் வாழ்த்துகின்றார்.

தக்கயாகப்பரணிக் கடவுள்வாழ்த்தில் கூறும் பாடலில் "மதிவாழி, ரவிவாழி, மழைவாழியே" எனக்கூறப்பட்டிருக்கிறது என்பதை ஸ்ரீமத், மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் அவரது சிலப்பதிகாரப்பதிப்பில் கூறியிருக்கின்றார். o அப்படியாயின் கொடிநிலை கந்தழி வள்ளி ஆகியமூன்றும் ஞாயிறு, மழை, (மேகம்) சந்திரன் ஆகிய மூன்றையும் குறிக்குமா?

---

* தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி பக்கம் ௧௩௪.

o இரண்டாம் பதிப்பு பக்கம் ௩௩.

'கொடி' என்பது கீழ்த்திசை யென்பது "குன்றிவர்ந்து கொடிக்கொண்ட கோடையால்" "கொடிமிசை மையறுமண்டிலம்" என்னும் கலித்தொகையடிகளான் அறியற்பாலது. மேற்கூறியவாற்ருன், கிழக்கே நிலைபெற்றிருப்பது ஒவ்வொரு நாளும் கீழ்த்திசைக்கட்டோன்றி மக்களுக்கு இருளைப்போக்கி நன்னிலைக்கொடுக்கும் ஞாயிறு ஆகும். கந்தழி என்பது மேகத்தை யுணர்த்தும். (கந்துதல்—குறைதல் கெடுதல். அழி—அழிவு) இப்பதம் இன்னும் இப்பக்கங்களில் இதே பொருளைக் குறித்துக்கொண்டு உலகவழக்கிலிருப்பதை யாவரும் அறிவர். மழையில்லாதுபோயின் உலகம் அழிந்தேபோய் விடும். அங்ஙனமின்றித் தடுப்பது (மேகமாகிய) கந்தழி. வள்ளி என்பது சந்திரன். பூமத்திய ரேகைக்குச் சமீபத்தில் உள்ள தமிழர்களுக்குச் சூரியவெப்பம் மிகக்கடுமையானதென்பது அறிந்ததே. அவர்களுக்கு அவ்வெப்பத்தை நீக்கி, இல்லறம் நடாத்துவோர் ஆவல்கொண்டு எதிர்பார்க்கும் நிலவை அளிக்கும் திங்கள். உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாத ஞாயிறு. மழை இவற்றுடன் வைத்தெண்ணப்படுவது இயல்பே. ஆசிரியர் தொல்காப்பியர் "வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" எனக்கூறியது சூரியன், மேகம், சந்திரன் ஆகிய இம்மூன்றிற்கும் பொருந்துவதுபோல வேறு எவற்றிற்கும் பொருந்தாது. ஆகவே, இதுதான் ஆசிரியர் கருத்து எனப் புலப்படுகின்றது. இதை நீக்கி, உண்மைப்பொருள் இதுவென ஆதாரங்கொண்டு அறிஞர் காட்டினல், அதை ஒத்துக்கொள்ள முற்றிலும் தயாராய் இருக்கிறேன்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச்சொன்னால்
வாய்முத்தந் தந்து விடுவோநெல் வேலி வடிவன்னையே.

—பட்டினத்துப் புலவர்.

திருப்பதி வரலாறு.

(துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள் எழுதியது.)

ஒளிநாடும், பெருவளநாடும், சகூ-நாடுகளைத் தன்னகத்தே கொண்ட குமரி நாடும் கடல்கொண்டொழிந்ததன்பின் தமிழ் நாட்டிற்கு வடவெல்லையாக ஆன்றோர்களால் எடுத்தாளப்பட்டது திருப்பதி என்னும் திருவேங்கடமே. இதனை,

க வட வேங்கடம் தென்குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து. —பனம்பாரனார்

உ வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே. —சிகண்டியார்

ங வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலது முறையே வாலிதின் விரிப்பின்.

—காக்கை பாடினியார்.

எனவரும் பாசுரங்களால் அறியலாம். மேலும் சோழ அரசர்கள் காலத்தில் அதாவது கரிகாற்சோழன் காலத்தில் (ளு—கூ A. D.) தொண்டைநாடு பிரிக்கப்பட்டபொழுது தொண்டை நாட்டிற்கு வடவெல்லையாக அமைந்ததும் திருவேங்கடமே. இதனை,

மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. —ஔவை.

எனவரும் பாசுரத்தால் அறியலாம். கரிகாற் சோழன் தொண்டை நாட்டை, உண்டாக்கி அதனை உச-கோட்டங்களாகவும் (ஜில்லாக்களாக), எகூ-நாடுகளாகவும் (தாலுகா) ககூ00-நத்தங்களாகவும் (கிராமங்கள்) பிரிவுசெய்து நற்குடியிற் பிறந்த சஉ,000 வேளாளர்களைக் குடியேற்றித் தன்மகன் ஆதொண்டனை ஆளும்படி ஏற்பாடு செய்தான். காடு நாடாயினபின் முதன் முதல் அரசாண்டது ஆதொண்டச் சக்கிரவர்த்தியானதால் அவன் பெயராலேயே அந்நாடு தொண்டைநாடு என இன்றும் அழைக்கப்படுகிறது. தொண்டைநாட்டிற்கு (இராஜதானி

யாக) அரசன் வசிக்குமிடமாக இருந்தது காஞ்சிபுரம் என்னும் நகரமே. அவ்வூரில் காடுவெட்டிப் பிள்ளையார் என்ற ஒரு விநாயகர் ஆலயம் இருக்கிறது. சோழன் முதன் முதல் காடுகளை வெட்ட ஆரம்பித்தபோது விநாயக பூசை செய்து பின் காடுகளை வெட்டி நாட்டையுண்டாக்கினன். ஆகையால் அப்பிள்ளையாருக்குக் காடுவெட்டிப்பிள்ளையார் என்று பேர் ஏற்பட்டது.

திருவேங்கடமானது உச கோட்டங்களில் வேலூர்க் கோட்டத்தில் சேர்ந்திருந்தது. இக்காலத்து ஆங்கிலேய அரசாட்சியில் இத்திருவேங்கடமானது சித்தூர் ஜில்லா சந்திரகிரிதாலூகாவில் இருக்கிறது. தற்காலம் சித்தூர்ஜில்லா பூராவும் தெலுங்குநாட்டுடன் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அங்குள்ள ஜனங்கள் தெலுங்கையே முக்கிய பாஷையாகக் கொண்டிருக்கிறார்கள். சித்தூருக்கு வடக்கே கொஞ்சதூரத்திலுள்ள பூத்தல்பட்டு என்னும் கிராமத்திலும் இன்னும் சில இடங்களிலும் உள்ள பூர்வீகக் கோவில்களின் கல்வெட்டுகள் தமிழாகவே இருக்கின்றன. திருக்காளத்தி என்னும் சிவதலமும் திருத்தணி என்னும் குகதலமும் திருப்பதியின் அருகாமையிலுள்ளன. திருப்பதி குமாரசுவாமியுடைய இருப்பிடமென்பது புராதன நூல்களால் வெளியாகின்றது. தற்காலம் திருப்பதிமலையில் இருக்கும் குமாரக்கடவுளுக்கு வைஷ்ணவ சம்பிரதாய வைகானஸ முறையாக பூசைநடந்துவருகிறது. இம்மாதிரி பூசை ஸ்ரீ இராமானுஜர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்பது ஐதிகபாரம்பரை.

ஆங்கிலேய அரசாங்கத்தில் தயாரித்த வட ஆர்க்காடு மேன்யூலிலும் திருப்பதி குமாரசுவாமியின் இருப்பிடமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதில் கூறியிருக்கும் முக்கியமான காரணம் ஒன்று. அதாவது:—மலையின்மேல் "சுவாமி புஷ்கரணி" என்று ஒரு தீர்த்தம் உளது. அந்தத் தீர்த்தத்திற்கு "சுவாமி புஷ்கரணி" என்று பெயர் வருவானேன் என்று ஆராய்ந்தவழி "சுவாமி" என்பவர் குமாரசுவாமியே என்றும் அவருடைய தீர்த்தம் ஆனதால் "சுவாமி புஷ்கரணி" என்றும் ஏற்பட்டதாகக் கூறியுள்ளது.

மேலும் இப்போது வடதேயத்திலிருந்து வருகிறவர்களெல்லாரும் திருப்பதி சுவாமியை "பாலாஜி" என்று சொல்லுகிறார்கள். பாலாஜி என்பது பாலசுப்பிரமணியன் அதாவது குமரன் என்பதே. இன்னொரு காரணம் என்னவென்றால் சுவாமிக்கு வில்வ அர்ச்சனை நடப்பது. வில்வஅர்ச்சனையை இப்போது மார்கழி மாதத்தில் மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திருமால் கோவிலாயிருந்திருந்தால் வைஷ்ணவப் பிராமணர்கள் வில்வ அர்ச்சனைக்கு இடம் கொடுப்பார்களா?

மற்றொருகாரணம் என்னவென்றால் சுவாமிக்கு வெள்ளிக்கிழமை தோறும் மஹாபிஷேகம் நடந்துவருகிறது. இதற்கு சர்க்கார் திட்டம் கூ௦௦-ரூபாய். ஒரு அபிஷேகத்திற்கு அறுநூறு ரூபாய் செலவாகிறது. திருமால் அலங்காரப் பிரியரே ஒழிய அபிஷேகப் பிரியரன்று. இதரத் திருமால் கோவில்களில் அபிஷேகம் கிடையாது. மேலும் இத் திருவேங்கடத்திற்கு அருணகிரி நாதருடைய திருப்புகழ் நான்கு பாடல்கள் உள. அவையாவன:—

க "வரி சேர்ந்திடு ...."
உ "கோங்கிள நீரிளக ...."
ங "சாந்தமில் மோக வெரி ......"
ச "கறுத்த தலை வெளிறு ......"

இத் திருப்புகழில்

க சிலை வாங்கிய நாரணனார் மரு
மகனாகுந் தகனே டோழில் சூழ்தரு
திருவேங்கடம லை மேவிய பெருமாளே.

உ பாண்டவர் தேர்கடவும் நீண்டபிரான் மருக்
பாண்டிய னீரணிய—மொழிவோனே
வேங்கையும் வாரணமும் வேங்கையும் மானும்வளர்
வேங்கடமாமலையில்—உறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றுதவு—பெருமாளே.

ங வேந்த குமாரகுக சேந்தமயூர வட
வேங்கட மாமலையில்—உறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றுதவு—பெருமாளே.

ச மலர்க் கமல வடிவுள செங்கை
அயிற் குமர குகைவழி வந்த
மலைச்சிகர வடமலை நின்ற—பெருமாளே.

மேற்கண்ட திருப்புகழ்களில் "குமாரகுக" எனவும் "குமர" எனவும் திருப்பதி மலையில் இருக்கும் குமாரசுவாமியின் இயற்பெயரை அருணகிரியார் கூறியிருப்பதை இதனை வாசிப்போர் கவனிக்கலாம். "குகைவழிவந்த குமர" என்பது எதைக் குறிக்கிறதென்றால் குமாரசுவாமியானவர் தன் தாயுடன் கோபித்துக்கொண்டு கைலையை விட்டு அகன்று பாதலத்தேகி அங்கிருந்து ஓர் குகைவழியாகத் திருவேங்கட

என்னும் மலைக்கு வந்தார் என்னும் கந்தபுராணச் சரித்திரத்தைக் குறிக்கிறது.

கந்தபுராணம் வழிநடைப்படலம் :—

அண்ட மன்னுயி ரீன்றவ ளுடன்முனி வாகித்
தொண்டகங் கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே யோர்துகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்.

இந்த விடயத்தைத்தான் "வேங்கடாசல மகாத்மியத்தில்" வேறு விதமாக வைஷ்ணவபரமாக்கிக் கூறியிருக்கிறார்கள். இதன் வன்மை மென்மைகள் பின்னால் ஆராயப்படும்.

பெருமாள் என்பது முருகக்கடவுளின் திருநாமங்களில் ஒன்று. திருமாலுக்கும் பெயராகும்.

திருப்பதிமலையில் அம்மன் கோவிலே கிடையாது. எந்த உற்சவத்திலும் அம்மனைக் கொண்டாடுகிறதில்லை. சுவாமி மாத்திரம் தனித்திருக்கிறார். எல்லா உற்சவங்களையும் சுவாமி மாத்திரம் தனிப்படக் கொண்டருளுகிறார். இதற்குக்காரணம்அவர் குமாரசுவாமியாய் இருப்பதே. குமாரசுவாமியார் திருவேங்கடம் வந்தபொழுது கலியாணமாகாதவரா யிருந்தார். பிரமனைக்குட்டிச் சிறையில் வைத்த பிற்பாடு ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் தாமே ஏற்றுக் கொண்டு திருப்பதிமலைக்குவந்து அம்முத்தொழில்களையும் மும்மூர்த்தி சொரூபமாய் இருந்து நடத்தின அவதாரம். ஆகையால் அக்குமார சுவாமியை பிரமா வென்றும் சொல்லலாம்; விஷ்ணு வென்றும் சொல்லலாம்; உருத்திரன் என்றும் சொல்லலாம். ஏனென்றால்அவர்களுடைய தொழில்களை இவர் ஏற்று நடத்தினவராயிருக்கிறதால். ஆகையால் திருப்பதி மலையில் இருக்கும் குமாரசுவாமியை பிரம வழிபாட்டாலும் வழிபடலாம். விஷ்ணு வழிபாட்டாலும் வழிபடலாம். உருத்திரவழிபாட்டாலும் வழிபடலாம். குமாரசுவாமிக்கு எப்படி வழிபாட்டாலும் உவப்பே. ஸ்ரீ இராமானுஜர் விஷ்ணு வழிபாட்டை ஏற்படுத்திய காலத்தில் குமாரசுவாமி சும்மாயிருந்தநின் காரணமும் இதுவே. வைஷ்ணவர்கள் கூறும் வண்ணம் திருமாலாயிருந்தால் பூமி நீளா சமேதராக வன்றோ இருப்பார். அப்படி இல்லாமல் இருப்பதே அவர் குமார சுவாமி என்பதை வலியுறுத்தும்.

வேங்கடாசல மகாத்மியத்தில் திருவேங்கடமுடையார் ஆகாசக் கியன் மகளாகிய (பத்மாவதியை) அலர்மேலுமங்கையைக் கலியாணம் செய்து கொண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அலர்மேலு

மங்கை அம்மன் மலைக்கு வருகிறதே இல்லை. அந்த அம்மன் இருப்பிடம் திருப்பதிக்கு நான்குமைல் தெற்கேயுள்ள திருச்சானூர் என்பதே. அத்திருச்சானூருக்கும் திருவேங்கடமுடையார் போவதில்லை. இந்தத் திருக்கல்யாணம் நடந்தபின்னும் சுவாமி தனித்திருப்பானேன்? தனியாக உற்சவம் கொண்டருளுவதேன்? எனக் கேட்பாருக்கு உத்தரம் சொல்ல முடியவில்லை. வாசிப்போரே அறிந்துகொள்ளுவார்களாக. மேற்கண்ட காரணங்களால் திருவேங்கடமுடையார் குமாரசுவாமியே என்பதுபோதரும்.

கபிலேச்சுரம்.

திருவேங்கடமலையின் அடிவாரத்தில் "கபிலதீர்த்தம்" என்று ஒன்று இருக்கிறது. இக்கபில தீர்த்தம் அப்பெயர்கொண்ட நீர் வீழ்ச்சியின் கீழ் (Water fall) அமைந்துள்ளது. நீரானது சுமார் ௭௫-அடி உயரத்திலிருந்து விழுகிறது. இக்கபில தீர்த்தத்தை அடுத்துக் கபிலேசுரர் ஆலயம் ஒன்று உளது. இவ்வாலயத்தை அடுத்து முன் ஊர் இருந்ததாகவும் அதற்குக் "கீழ்த்திருப்பதி" என்றும் "கபிலேச்சுரம்" என்றும் பெயர்கள் இருந்தன என்றும் சொல்லுகிறார்கள். அங்கே ஊர்இருந்ததற்கு அநேகஅடையாளங்கள் இன்றும் உள. யாத்திரைசெய்பவர்கள் நேரே பார்க்கலாம். அவ்வூர் மலையடிவாரத்தில் இருந்ததால் மலைசுரத்தால் (Maloria) மிகுதியும் அலக்கணுற்றிருந்தது.

திருப்பதிக்கு யாத்திரை செய்கிறவர்கள் இக்கபில தீர்த்தத்தில் முதன் முதல் ஸ்நானம் செய்த பின்புதான் மலைமேல் போகவேண்டும் என்பது ஐதீகம். அப்படிச் செய்யாவிட்டால் பலனில்லை. யாத்திரை செய்கிறவர்களெல்லாம் (வைஷ்ணவர்களாயிருந்தபோதிலும்) இன்றும் அம்மாதிரி கபில தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதையும், தெரியாதவர்களுக்கு அவ்விடத்து சாஸ்திரிகள் அம்மாதிரி எடுத்துரைப்பதையும் ஒவ்வொருவரும் கண்கூடாகப் பார்க்கலாம். யாத்திரிகர்களில் கபில தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யாதவர்களே கிடையாது என்று சொல்லலாம். கபிலேச்சுரம் பூர்வீகத்தலம் என்பதைத் தாபிக்க இவ்வழக்கம் ஒன்றுமே போதுமானதாக உள்ளது.

இப்போது கீழ்த்திருப்பதி என்று வழங்கும் ஊருக்குக் கோவிந்தராஜபட்டணம் என்று பெயர். இக்கோவிந்தராஜ் பட்டணத்திலிருந்து கபிலேச்சுரம் வடகிழக்கில் இரண்டுமைல் தூரத்தில் இருக்கிறது. கபிலேச்சுரத்தில் இப்போது கோவிலும் தீர்த்தமும் மாத்திரம் இருக்கின்றன. ஊர் கிடையாது. ஊர் கபிலேச்சுரந்தன்னை இருந்த

காலத்தில், அவ்வூர் மலைசுரத்தால்பீடிக்கப்பட்டு இருந்ததால் "திருப்பதி மலைசுரம் உள்ள இடம்" என்று பெயராய் விட்டது. கோவிந்தராஜ பட்டணம் மலைசுரமான இடம் அல்ல. ஸ்ரீ இராமானுஜர் காலத்தில் கபிலேச்சுரம் என்னும் ஊர் இருந்தது. கோவிந்தராஜபட்டணம் அப்போது இல்லை. ஸ்ரீ இராமானுஜர் திருப்பதிக்குச்சென்றபொழுது கபிலேச்சுரம் சென்றார். அவ்வூர் மலைச்சுரத்தால் மிகுதியும் அலைக்கப் பட்டதைக் கண்ணுற்றார். அவ்வூர் ஜனங்களும் யாத்திரையாகவந்தவர்களும் அவ்விஷசுரத்தால் அவஸ்தைப்படுவதையும் மாண்டுபோவதையும் கண்டு அதை நிவிர்த்திக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார்.

ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் ஸ்தலயாத்திரை செய்துகொண்டு வரும்போது திருச்செங்கோட்டில் விஷசுரம் பாவி யிருப்பதைக்கண்டு "அவ்வினைக் கிவ்வினை........" என்று திருப்பதிகத்தைப்பாடி அவ் விஷசுரத்தை அடியோடே தொலைத்தருளினர்.

ஸ்ரீ இராமாநுஜரோ அவ்வூரையே வேறு இடத்தில் ஸ்தாபித்து விட்டால் நலமெனக்கண்டு இப்போதிருக்கும் கோவிந்தராஜ பட்டணத்தின் இடத்தைத் தெரிந்தெடுத்தார். ஜனங்களெல்லாரையும் வேறு இடத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னால் கவர்ன்மெண்டாருக்கே அசாத்தியமாயிருக்கும்போது ஒரு மதாச்சாரியருக்கு எவ்வளவு கஷ்டமாயிராது. ஆகையால் அவர் ஒரு சூழ்ச்சி செய்தார். அதாவது:— ஆதிசேஷன் திருவேங்கடமலையாக இருக்கிறான் என்றும், அம்மலை சேஷாசலம் என்றும், அவ்வாதிசேஷன் பேரில் திருமால் நின்றதிருமேனியாயிருக்கிறார் என்றும், அவ்வாதிசேடன் ஒவ்வோர் காலங்களில் விஷக்காற்றை வெளியிடுவதால் விஷசுரமாகிய மலைசுரம் உண்டாகிறதெனறும், கபிலேச்சுரத்திற்கு அவ்விஷக் காற்று நேராக வருகிறதென்றும், ஆகையால் அவ்வூர் அக்காற்று வரும்வழியில் இருந்தால் விஷசுரத்தால் கஷ்டப்படநேருமென்றும், பாம்புக்குப் பகை கருடன் ஆகையாலும் கருடன் திருமாலுடைய வாகனமாகையாலும் புதிதாய்க் கட்டும் ஊரை கருடாகாரமாய்க்கட்டினால் விஷக்காற்று அவ்வூரை எப்போதும் உபத்திரவிக்காதென்றும் எடுத்து எல்லாருக்கும் போதித்தார்.

அம்மலையின் கொடுமுடி சந்திரகிரிப்பக்கம்இருக்கிறது. சந்திரகிரியிலிருந்து அம்மலையானது போகப்போகத் தாழ்ந்து இரேணுகுண்டாவுக்கு வடக்கே மூன்று மைல் தூரத்திலுள்ள கருக்கம்பாடி யண்டை தாழ்ந்து பூமியோடு பூமியாய் முடிந்திருக்கிறது. அம்மலையின் மேல் பாகத்தைத் தூரத்திலிருந்துபார்த்தால் பாம்பின் அடிப்பக்கம்போல் தோன்றும். சந்திரகிரியிலிருந்து கருக்கம்பாடிவரை ௨௪ மைல் தூரம். ஆகையால் ஜனங்கள் ஸ்ரீ இராமாநுஜர் கூற்றை எளிதாக நம்பிவிட்டார்கள்.

இக்காலத்திலானல் அக்கூற்றை நம்பமாட்டார்கள். கொசுவால் மலே சுரம் உண்டாகிற தென்பது எல்லோருக்கும் தெரியும். இக்காலத்தில் எல்லா வியாதிகளும் (Germs) புழுக்களால் உண்டாகிறதாக வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். அக்காலத்திலோ என்றால் எல்லாம் தெய்வத்தால் உண்டாவது என்பது கொள்கையாயிருந்தது. உதாரணமாக:— அம்மைநோய் மாரியம்மன் கோபத்தால் உண்டாவதென்றும், காவராகாளி கோபத்தால் உண்டாவதென்றும், இவ்வாறு நினைக்கும் காலம். ஆகையால் ஸ்ரீ இராமானுஜருக்கு எளிதான காலமாயிருந்தது. ஜனங்களெல்லாரும் அவருடைய புத்திமதிப்படியே ஒத்துக்கொண்டார்கள். உடனே அவர் இப்போதிருக்கும் கோவிந்தராஜபட்டணத்தை நிர்மாணம் செய்தார். மத்தியில் கோவிந்தராஜசுவாமி கோவிலைக்கட்டிய பின் ஊரைக் கருடாகாரமாய் ஏற்பாடு செய்தார். இவ்வரலாற்றினை அவ்வூரிலுள்ள முதியோர்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

மகன்த் பகவான்தாஸ்ஜிவாரு காலம்வரை கோவிந்தராஜ பட்டணம் அதிகப்பிரபலம் அடையவில்லை. எல்லாம் கூரைவிடுகளாய் அழகற்று இருந்தன. பகவான்தாஸ்ஜி காலம் முதற்கொண்டு பட்டணம்மெத்தைக் கட்டடங்களாகப் பெருக ஆரம்பித்தது. இப்போது அப்பட்டணம் அநேக அழகான கட்டடங்களால் நிறையப்பெற்று பொலிவுற்று விளங்குகிறது. இன்னும் விருத்தியாகும் என்பதற்கு ஐயுறவில்லை. அது முதல் மலேசுரம் அவ்வூரைவிட்டு அகன்றது. இம்மாதிரி ஜனங்கள் எல்லாம்வசியப்பட்டதே அவருக்குத் திருமலையில் வைஷ்ணவ பூசையை ஏற்பாடு செய்யச் சௌகரியமாயிருந்தது என்னலாம். இதன் விபரம் பின்னால் விவரிக்கப்படும்.

கபில தீர்த்தத்தின் நான்குமூலைகளிலும் நான்கு கற்றூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அக் கற்றூண்களில் " சக்கரத்தின் " உருவம் அடிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் ஏதோ செதுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை உற்றுநோக்குமிடத்து கசு-வது நூற்றாண்டின் முதற் பகுதியில் இருந்த விஜயநகரத்துஅச்சுதராயலுவாரு அவைகளைநாட்டினதாகஏற்படுகிறது. இன்னும் என்ன விசேடம் என்றால் கபிலதீர்த்தம் என்னும் பெயரை மாற்றி "சக்கர தீர்த்தம்" என்று செதுக்கப்பட்டிருக்கிறது.

தற்காலம் வைஷ்ணவ பிராமணர்கள் மாத்திரம் கபிலதீர்த்தத்தை "ஆழ்வார் தீர்த்தம்" என்று வழங்குகிறார்கள். மற்றெல்லா ஜனங்களும் கபிலதீர்த்தம் என வழங்குகிறார்கள். இதுவரை "சக்கரதீர்த்தம்" என வழங்கக்கண்டிலேம். கபிலதீர்த்தம் என்றால் சிவதீர்த்தமாய் முடி

யுமென்று எண்ணின வைஷ்ணவர்கள் பக்கத்தில் நம்மாழ்வார்கோவிலை ஒன்று கட்டிவைத்துவிட்டு ஆழ்வார்தீர்த்தமென அழைக்கின்றார்கள். அவர்களெல்லாம் இக் கல்வெட்டை அப்போதுகவனிக்கவில்லையென்று ஏற்படுகிறது. இனி இக் கல்வெட்டைப் பார்த்துவிட்டால் சக்கரமும் சக்கரத்தாழ்வார் ஆனதால் முதற்குறையாய் ஆழ்வார்தீர்த்தமாயிற்று என் பார் போலும். தீர்த்தத்திற்குத்தான் இம்மாதிரி சூழ்ச்சிசெய்து பேரை மாற்றிவிட்டார்கள். மலையோடு மலையாய் சுயம்புவாய் இருக்கும் கபி லேசுர இலிங்கத்தை என்ன செய்யமுடியும்? ஒன்றும் செய்யமுடி யாது. முடியாமல்தான் சும்மாவிட்டுவிட்டார்கள்.

ஆனால், கஅசுஙில் தர்ம தாஸ் என்ற புண்ணியசீலராகிய அதி ராம்ஜி மடத்தைச் சேர்ந்த மகந்த் ஒருவர் கபிலதீர்த்தத்தின் படிக்கட்டு களைக்கட்டி, மண்டபங்களைப் புதுக்கி, சுவாமியின் சந்நிதியைப் பழுது பார்த்து, உற்சவங்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்து பெரும்புகழை அடைந்தார். கபிலதீர்த்தப்பேர் அம்மகானாலேயே இன்று பிரசித்தமாக விளங்குகிறது என்னலாம். இப்போது தற்காலம் இருக்கும் மகந்த் பிரயாகதாஸ்ஜி வாரும் கபிலேசுர சுவாமிக்கு வேண்டுவன செய்துவரு கிறார். உற்சவாதிகளையும் சிறப்பாக நடத்தி வருகிறார். இக்கபிலேசு ரர் ஆலயமும் அவர் விசாரணைக்குள்பட்ட உஎ ஆலயங்களில் ஒன்று. திருமலை திருப்பதி முதலிய தேவஸ்தானக் கணக்கில் ஏற்பட்டது,

இப்படியிருக்க ஸ்ரீ கபிலேசுர சுவாமிக்கு உற்சவாதிகள் நாளுக்கு நாள் விமரிசையாய் நடைபெறவே அவைகளைக் கண்டு மனம்புழுங் கின சில வைஷ்ணவப் பிராமணர்கள் மேலே கூறிய நான்கு கற்றூண் களை ஆதாரமாகக் கொண்டு "சக்கர தீர்த்தத்தைக்" கபில தீர்த்தம் என்று மாற்றி வழங்குகிறதாகவும், கபிலேசுர சுவாமிக்கு ஆலயம்ஒன்று இருந்ததில்லை.யென்றும், திருப்பதி தேவஸ்தான வரும்படியிலிருந்து அக்கபிலேசுர சுவாமிக்குச் செலவு செய்வது சம்மதமில்லைப் போலும் எழுதுகின்றார்கள். இது "முழுப் பூசனிக் காயைச் சோற்றில் மறைப் பதை யொக்கும்." அன்னணம்கூற முன்வரும் பெரியோர்கள் "வேங் கடாசல மகாத்மியம்" என்ற நூலையும் பொய் என்று புறக்கணிக்க எத்தனப் படுகிறார்கள். ஏனென்றால் அம்மகாத்மியத்தில் கபிலேசுர சுவாமியையும், கபில தீர்த்தத்தையும்பற்றிக் கூறியிருக்கிறது. ஆராய் ச்சி பலத்துவரும் இக்காலத்தில் உண்மையை மறைப்பது எளிதன்று.

பேச்சுவழக்கிலும் நூல்வழக்கிலும் இல்லாத ஒரு பெயராகிய சக் கரதீர்த்தம் என்பதைக் கற்றூண்களில் செதுக்கி யிருப்பதே அதைப் பொய்ப்பிக்கப் போதுமானது. மேலும் அத்தூண்கள் கசு-வது நூற்

ருண்டில் வைஷ்ணவப்பற்றுள்ள அச்சுதராயலுவால் நாட்டப்பட்டவை. அதற்குமுன் வழங்கின கபிலதீர்த்தப் பெயருக்கு அவர் என் செய்வார்? பழுது பார்ப்பதுபோல் ஏதோ சில திருப்பணிகளைச் செய்துவிட்டு, "சக்கரதீர்த்தம்" என்று செதுக்கப்பட்ட கற்றூண்களையும் நான்குமூலை களிலும் நாட்டிவிட்டார். பொதுஜனங்கள் விளக்குக் கம்பங்கள் நாட் டப்பட்டதாக்கும் என வாளாவிருந்தனர். தாம் செய்த திருப்பணியைப் பற்றி அக்கம்பங்களில் அச்சுதராயலு செதுக்கி வைத்தார் என, அக் காலத்தில் நினைத்தார்கள். பக்தியோடு திருப்பணி செய்யும் ஒரு அரசனு னவன் இம்மாதிரிப் பேர்மாற்றம் செய்வானென்று யார்தான் கருதுவார். நானூறு வருடங்கள் சென்றதன்பின் ௨०-ம் நூற்றாண்டாகிய இப் போது "சக்கர தீர்த்தப்" பெயர் வெளிக்கு வருகின்றது. இது எவ் வளவு தூரம் வலியுடைத்தாகுமென்று இதை வாசிக்கும் அன்பர்களே கண்டுகொள்வார்களாக.

இம்மாதிரி சூழ்ச்சிகள் பிராமணர்களுட் சிலரிடத்தில் அநேகமாய் எப்போதும் குடிகொண்டிருக்கின்றன. சிலவற்றைக் கூறுவேனாக:—

௧. சேக்கிழார் பெரிய புராணத்தைச் சமஸ்கிருதத்தில் சில மாறு தல்களுடன் மொழி பெயர்த்து வைத்துக்கொண்டு அதற்கு உபமந்யு பக்தவிலாசம் எனப்பெயர்கொடுத்து அதிலிருந்துதான் சேக்கிழார் புரா ணம் பாடினார் என்று கூறுவது ஒன்று. அப்படி அவர் உபமந்யுபக்த விலாசத்தை மொழிபெயர்ப்பதற்குத் "திருச்சிற்றம்பலமுடையார்" "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க வேண்டிய அவசியம் ஒரு சிறிதும் இன்று.

௨. வடமொழி வேதங்களின் சாரத்தையெடுத்துத் திருவள்ளுவர் திருக்குறள் விரித்தார் என்பது. இதைப்போல புத்தியீனம் வேறெது வுமில்லை.

௩. சாணக்கிய சதகத்தினின்றும் ஔவை என்பாள் மூதுரை, நல்வழி முதலியன பாடினள் என்பது மூன்றாவது. இக்கொள்கையை மூடனும் ஒத்துக்கொள்ளமாட்டான்.

௪. "மந்த்ர மாலிகா" என்னும் வடமொழி நூலிலிருந்து திருமூலர் திருமந்திரத்தை மொழிபெயர்த்தார் என்பது. இது மாவை. வே. விஸ்வநாதபிள்ளை அவர்கள் அச்சிட்ட திருமந்திரப் புத்த கத்துக்கு முகவுரை தந்த ஒரு சாஸ்திரிகள் "வடமொழியில் ஸ்ரீமந்திர மாலிகா எனவும் தென்மொழியில் திருமந்திர மெனவும் பெயர்பெற் றோங்கும் மெய்யறிவுத் தேனாகிய இவ்வினியநூல்" என்று தொடங்கி

பலவும் மனம்போனவாறு எழுதிச்சென்று ௧௫-ம் பக்கம் கீழ்க் குறிப்பில் "உபமர்யூ பக்த விலாசத்தின்கண் விளம்புறும் ஸ்ரீமந்திரமாலிகா என்னும் ஞானநூல் முதலில் வடமொழியில் ஆக்கப்பட்டதெனக் கொள்வதற்கு இடமுண்டு. அப்பக்தவிலாசத்தில் பகரும் வாய்மையை நோக்கின் இத் திருமந்திரத்தின் முதல்நூல் வடமொழியில் உள்ளது என்பது பெறப்படும்" என்பதும் பிறவும் எழுதியுள்ளார்கள். அம்மந்திரமாலிகை இன்றளவும் வடமொழியிலுண்டா? இல்லவேயில்லை. இனிமேல் மொழிபெயர்ப்புப் பூர்த்தியானதன்மேல் ஒருக்கால் வெளிவரும்.

ஆரியமதத்தை அநுசரித்த நம்நாட்டுப் பிராமணர்கள் தமிழ்நூற்களெல்லாம் வடமொழியிலிருந்து வந்தன என வேண்டுவன செய்து வருவர். அதாவது சித்தர்கள் நூல் "ரஸேஸ்வரதரிசன"த்தின் வழிப்பட்டது. திருமந்திரம் மந்திரமாலிகாவின் வழிப்பட்டது என்பன முதலிய பலவும், இப்பொழுது வார்த்தையளவில் வெளிப்படுத்திவிட்டு, இதனை ஆதாரவாகக்கொண்டு வடமொழியில் பழயநூல்களில் செருகியோ புதிதென்றுமல் புதிதாகத் தனி நூல்கள் ஆக்கியோ வடஇந்தியாவாசிகளுடன் அளவளாவி அங்கேயே சமஸ்கிருதத்தில்அச்சிட்டு வைத்துவிடுவர். இது அவர்களுக்குப் புதியவழக்கமல்ல, தொன்றுதொட்ட வழக்கமென்பது மேலே குறித்தவைகளால் அறிந்து கொள்ளலாம். இவரது புரட்டல்கள் இதுவரை நூல் வழக்கிலிருந்தன. இப்போது கல்வெட்டிலும் ஆரம்பித்துவிடப்பட்டன. தமிழர்களே எச்சரிக்கையாயிருங்கள்.

காப்பிக் கொட்டை.

("கமர்ஷியல் இந்தியா"விலிருந்து.)

தென்னிந்தியாவின் முக்கியமான ஏற்றுமதிச் சாக்குகளில் காப்பிக்கொட்டை ஒன்றாகும். காப்பிச்செடி கி. பி. ௧௬-ம் நூற்றாண்டிலிருந்து பயிர் செய்யப்படுகிறது. ஆனால் ஐரோப்பாவில் காப்பிக்கொட்டைக்கு கிராக்கி அதிகம் ஏற்பட்ட காரணத்தினால் கி. பி. ௧௮௫௦-ம் வருஷத்திலிருந்து இது முறையாகப் பயிர்செய்யப்பட்டு அது முதல் மேன்மேலும் விர்த்தியாகிவந்து இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் காப்பிக்கொட்டை விளைவில் இந்தியாவே முதன்மை பெற்றிருக்கி

றது. ௧௮௬௨-ல் காப்பி இலைகளில் பூச்சிகள் விழுந்து பயிரை நாசமாக்கி விட்டதினால் இலங்கையில் அதுவரையில் ஏராளமாய்ப் பயிர் செய்யப்பட்டு வந்தது ஒழிந்தது போலவே தென்னிந்தியாவிலும் இத்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது.

உலகமெங்கும் விளையும் காப்பிக்கொட்டைகள் எண்பது வகைப்படுவன. ஆனால் இந்தியாவில் அராபியன்கொட்டை என்னும் ஒரே வகைதான் விளைவிக்கப்படுகிறது. இப்போது அராபிக்கொட்டைக்கும் லிபேரியக் கொட்டைக்கும் மத்தியான ஒருவகைக் கொட்டையை உற்பத்தி செய்யக்கூடுமா என்பதைப்பற்றிப் பரிசோதனை நடந்துவருகிறது. காப்பிச்செடி சென்னைமாகாணத்தின் தென் ஜில்லாக்களிலும், மைசூர், குடகு, கொச்சி, திருவாங்கூர் நாடுகளிலும் மலைச்சரிவுகளில் பெரும்பாலும் பயிர்செய்யப்படுகிறது. ௧0 ஏகராவுக்குக் குறைந்த விஸ்தீரணமுள்ளவை நீங்கலாகச் சுமார் ௩000 தோட்டங்கள் உள. வேலை கடுமையாக நடக்கும் காலத்தில் சுமார் ௭0,000 ஆட்களுக்கு வேலை கொடுக்கிறது.

விஸ்தீரணம்.

	௧௯௧௯—௨0 ஏகரா	௧௯௨0—௨௧ ஏகரா	௧௯௨௧—௨௨ ஏகரா
சென்னைமாகாண ஜில்லாக்கள்	௨௫,0௯0	௨௬,௫௯௭	௨௭,௯௫௬
மைசூர்	௫௫,௨௯௫	௬௩,௬௭௨	௬௪,௨௪௫
குடகு	௩௨,௯௧0	௩௨,௧௯௨	௩௧,௮௮௫
கொச்சி	௨,௧௪௭	௨,௧௭௨	௨,௨௬௭
திருவாங்கூர்	௮௮௯	௯௩௩	௨[illegible]0
மொத்த விளைவு பவுண்டு	௨௧,௩௨௫,0௩௫	௨௨௪௮௬௬௯௬	௨0௬௪௫௭௪௨

விளைவு, காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றபடியிருப்பதால் ஒரு ஏகராவுக்கு இவ்வளவு விளையுமென நிதானித்தல் முடியாது.

அக்டோபர் மாதத்தில் காய்கள் பழுக்க ஆரம்பிக்கின்றன. ஜனவரி வரையில் பழங்களைக் கையினால் சேகரிக்கிறார்கள். 'செறி' என்னும் பழங்களில் இரு பிளப்பான விதைகள் இருக்கின்றன. 'பீபெறி' பழங்களில் ஒரே உருண்டையான கொட்டைகள் இருக்கின்றன. பழங்களை உலர்த்தி அரைத்தாவது, ஊறவைத்துத் தோல் நீக்கியாவது விதைகளைப் பக்குவம் செய்கிறார்கள். காப்பிக்கொட்டைக்கு மூன்று விதமான தோல்கள் உள. முதலாவது பழத்தின் மேற்றோல்; இரண்டாவது

'பார்ச்மெண்ட்' என்றுசொல்லப்படும் சவ்வுத்தோல்; மூன்றாவதுவிதையைச் சூழ்ந்திருக்கும் மெல்லிய வெள்ளைத்தோல்.

காப்பிக்கொட்டை 'பார்ச் மெண்ட்' என்னும் சவ்வுத் தோலுடனாவது அல்லது முற்றிலும் தோல்போக்கியாவது ஏற்றுமதி செய்யப்படுகிறது. மைசூர், குடகு நாடுகளில் விளையும் காப்பிக்கொட்டையில் பெரும்பாகம் கோயம்புத்தூர், கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, மங்களூர் முதலிய விடங்களில் ஏற்றுமதிக்காகப் பக்குவம் செய்யப்படுகிறது.

வியாபாரத்தில் 'செறி' என்றும் 'பிளாண்டேஷன்' என்றும் இரு விதமான பெயர்கள் வழங்குகின்றன. முழுப்பழங்களைத் தோலுரிக்கும் இயந்திரங்களில் செலுத்தாமல் வெயிலில் உலர்த்தி எடுக்கும் கொட்டைகளுக்கு செறி என்று பெயர் வழங்குகிறது. இந்தியர்களின் தோட்டங்களில் பெரும்பாலும் இவ்விதமாகவே கொட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. 'பிளாண்டேஷன்' கொட்டைகளோ மேர்கூறிய இடங்களில் தக்கவாறு தயார்செய்யப்படுகின்றன. இன்னும் காப்பிக்கொட்டை பருமனுக்குத் தக்கவாறு ஏ, பி, ஸி என மூன்று தரங்களாகப் பகுக்கப்பட்டு விற்பனைக்கு வருகிறது. நொறுங்கிய கொட்டைகளும் முற்றிலும் பக்குவமாகாத கொட்டைகளும் 'டிரியேஜ்' என்று கடைத்தரமாய் விற்கப்படுகின்றன. இந்தியக் காப்பிக்கொட்டை பெரும்பாலும் ஏற்றுமதிக்காகவே தயார் செய்யப்படுகிறது. ௨௫௦ வருஷங்களுக்குமுன் யாருமறியாதிருந்த காப்பிக்கொட்டை இப்போது, முக்கியமாய்க் குளிர்நாடுகளில் பிரியமான பானமாகக்கொள்ளப்படுகிறது. இந்தக் கிராக்கியினால் இந்தியாவிலிருந்து காப்பிக்கொட்டை ஏற்றுமதி வர வர அதிகரித்து வருகிறது. இப்போது ஓராண்டில் சுமார் ௨,௩௦,௦௦௦ அந்தர் நிறையுள்ள கொட்டை வெளிநாடுகளுக்குச் செல்லுகிறது. இந்தியக் காப்பிக்கொட்டையை வாங்கும் நாடுகளில் பிரிட்டிஷ் தீவுகளும் பிரான்சுமே தலைமையாய் நிற்கின்றன.

ஏற்றுமதி.

	௧௯௧௯—௨௦ அந்தர்	௧௯௨௦—௨௧ அந்தர்	௧௯௨௧—௨௨ அந்தர்
பிரிட்டிஷ் தீவுகள்	௭௨,௬௬௨	௧௯,௬௭௭	௮௫,௨௬௬
பிரான்சு ...	௮௨,௯௪௯	௪௧,௭௨௭	௮௦,௮௮௨
கிரீஸ் ...	௫௭,௯௨௩	—	—
ஆசியா துருக்கி	௮,௧௧௦	௩௪,௦௧௨	௫,௪௬௦
அராபியா	௭,௯௪௮	௧௪,௦௩௭	௮,௮௯௯

பாரீன் தீவுகள்	௧,௬௫௮	௨௨,0௮௧	௧௧,௩௭௭
இலங்கை	௧௨,௭0௬	௫,௬0௮	௮௩௭
ஆஸ்திரேலியா	௪,௬௧௬	௮,௯௨௮	௧0,௪௧௫
இதர நாடுகள்	௧௫,௫௯௨	௧0,௩௪0	௩௧,௮௫௨
மாகாணவாரி			
சென்னை	௨,௩௩,௪௭௯	௨,௧௮,0௩௪	௨,௧௧௯,௧௫௩
வங்காளம்	௫௬	௧௧	௨௭
பம்பாய்	௩௧,௯௧௭	௧௫,௨௧௧	௧௬,௮௨0
சிந்து	௧0௯	௨௭௬	௬௪

மேற்காட்டிய கணக்குகளை ஆழ்ந்து நோக்குங்கால் பிறநாடுகளில் காப்பிக்கொட்டையின் கிராக்கி நிலவரம் நன்கு தெரியவரும்.

காப்பிக்கொட்டை மலாய்நாடுகளிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திறங்கித் திரும்பவும் ஆசிய துருக்கிக்கும் மஸ்கத்துப்பிரதேசம் பேரீன் தீவுகளுக்கும் ஏற்றி யனுப்பப்படுகிறது. இவ்வாறு சுமார் ௩௫,000 அந்தர்வரையில் வந்திறங்கி ௨0,000 அந்தர் வரையில் திரும்ப ஏற்றப்படுகிறது. ஏற்றுமதி செய்யும் காலம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பமாகி மார்ச்சுமாதம் வரையிலும் சில சமயங்களில் மே மாதம் வரையிலும் நீடிக்கிறது. ஏற்றுமதி செய்தற்காக காப்பிக்கொட்டையை இரட்டைக்கோணிகளில் அல்லது பீப்பாய்களில் அடைக்கிறார்கள். கோணி ஒன்றுக்கு ௧௮௨-பவுண்டு நிறையுள்ளகொட்டை போடப்படுகிறது.

உலகத்தில் காப்பிக்கொட்டைச் செலவில் ஒரு சிறு பகுதியே இந்தியாவில் விளைவிக்கப்படுகிறது. காப்பிக்கொட்டையை மிகுதியாய்விளைவிப்பதில் பிரேஸில் நாடே தலைமை வகிப்பதாகும். கடும்போட்டியால் விலை இறங்கிய போதிலும், இந்தியக் காப்பியின் சிறந்த குணத்தினால் இதற்குப் பிற நாடுகளின் காப்பியைவிட அதிகவிலை கிடைக்கிறது. தென்னிந்தியாவின தோட்டப் பிரதேசங்களுக்கு இப்போதுள்ள போக்குவரத்து வசதிக்குறைவு நிவர்த்திக்கப்பட்டு ஏற்றுமதி வசதியும் ஏற்படுமாயின், பிறநாடுகளுடன் போட்டி போடுவதில் இந்தியா எப்போதும் வெற்றிபெறுமென்பது திண்ணம்.

காப்பிக்கொட்டையின்ஏற்றுமதிவிலை இந்தியாவில் ௨௬இ-பவுண்டு கொண்ட பீப்பாய் அல்லதுமூடை ரூபாய்க்கணக்காகவும், லண்டனில் ஒரு அந்தர் இவ்வளவென்று ஷில்லிங் கணக்காகவும் கூறப்படுகிறது. பெரும்போருக்கு முன் வழங்கியவிலை பிளாண்டேஷனுக்கு ரூ. ௫0, ௬0-ஆகவும், செறிக்கு ரூ. ௪0, ௫0 ஆகவும், இருந்தது. தற்காலவிலை பீபெறிபார்ச்மெண்ட் ரூ. ௨௨, பார்ச்மெண்ட் ரூ. ௧௭; இந்தியன் (சுதேசி) ரூ. ௧௪ ஆகும்.

நமது பலசரக்குக் கடை.

(Registered copy right.)

அஞ்சா நெஞ்சன் எழுதுகிறார்:—

எனக்குப் படிப்பு அவ்வளவாகப் போதாது. வயது கொஞ்சம் சுமாராக ஏறிப்போய்விட்டபடியால் இனி உடம்பு வளைந்து படிக்க இடந்தராது. ஆகையினாலே ஒரே சரக்கு வியாபாரம் செய்ய நான் முயலவில்லை. மேனாட்டு வியாபாரிகள் உலக முழுமையும் ஒரேசரக்கு வியாபாரம் நடத்துகிறார்கள். ஒரு மண்ணெண்ணை வியாபாரி, ஒரு மோட்டார் வியாபாரி, ஒரு காகிதவியாபாரி, ஒரு பென்சில்குச்சி வியாபாரி அடிக்கிற அடி படு அடியாக விருக்கிறது. எனக்கும் அப்படி வியாபாரம் பண்ண ஆசையிருக்கிறது. என்ன செய்யலாம்! ஐந்தும் மூன்றும் வேண்டுமே. தேசம் இந்தியாவென்பதையும், பல வழியிலும் தடையேற்படுமன்றி உதவி யேற்படா தென்பதையும் எண்ணவேண்டுமல்லவா? ஆகையால்தான் பலசரக்கு வியாபாரஞ்செய்யத் தீர்மானித்தேன். முன்னொரு இடத்தில் கடை வைத்துக்கொஞ்சம்அநுபவம் அடைந்திருக்கிறேன். காலம்பார்த்துசவுதம் பிரியம் பார்த்து நைசாக வியாபாரஞ்செய்யத் தெரியும். நமது கடையில் காரசாரமான சரக்குக் கொஞ்சம் அதிகமாகவிருக்கும். ஆனால் வியாபாரம் கொஞ்சம் நாணயமாகவும் கண்டிப்பாகவுமிருக்கும். உங்களுக்குப்பிடித்தால்ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தள்ளிவிடுங்கள். உலகத்தில் மனிதர் பலவகை. ஆதலால் நமது கடையில் பலவகைச் சரக்கும் வியாபாரத்துக்கு வரத்தானே வேண்டும்.

* * *

புதுச் சீர்திருத்தத்தை இந்தியருக்கு வெள்ளைக்காரர் கொடுத்து விட்டார்கள். உத்தியோகங்கள் கறுப்பர்களுக்கு ஏராளமாகக் கிடைக்கின்றன. பிராமணர்களை யமுக்கிவிட்டுதிராவிடக் கட்சியார் இந்த வகையிலே மேலேறிவிட்டார்கள். காடு கரைகளில் கிடந்தவர்களெல்லாரும் வோட் கொடுக்கும் சுதந்தரம்பெற்றுவிட்டார்கள். பலே! அச்சா! கிடைத்த பலனென்ன?

அரசாங்கத்திற்குச் செலவுபட்டியல் வலுத்துப் போய்விட்டது. வேறு எங்கிருந்து பணம் வரும்? என்னென்ன செய்யலாமென்று கமிட்டிகள்கூடி யோசனை செய்து முடித்துவிட்டார்கள். தபால்தலை விலை ஒன்றுக்கு ரெண்டாக ஏறியது. ரயில் வண்டிக்கூலி பலமடங்கு ஏறியது. தந்திக்கூலி ஏறியது. கோர்ட்டு முத்திரைகள் ஏறின. வீட்டுவரி, மாட்டுவரி, வண்டிவரி, டோல்கேட்டுவரி, வருமானவரி, துறைமுகவரி முதலிய எல்லாவரியும் ஒருவாறு ஜனங்கள் பொறுத்துவிட்டார்கள். குதிரைவண்டி ஓட்டாவிட்டால் அந்த வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். மோட்டாரை விற்றுவிட்டால் அந்தவரி ஒன்றுஞ்செய்யாது. பஞ்சாயத்துக்குப் போகலாம். இப்படியாகக் குறைத்துக்கொண்டு காலத்தைக் கடத்தலாம். ஒருவழியிலும் தப்பமுடியாத வரியொன்று புறப்பட்டிருக்கிறது. பணக்காரருக்கு இது சிறுவரிதான். ஆனால் ஏழைகட்குப் பொறுக்க முடியாது. துன்பவரி. துயரவரி. கண்ணீர் வடிக்கிறவரி. ஆறாத வரி. அமராதவரி. உப்புவரி. இந்தக் கஷ்டவரி இப்போது தலைதூக்கி யிருக்கிறது.

* * *

இந்தியாவில் பிறந்த ஏழைகளின் உடல் உப்ப வழிகிடைக்கவில்லை. கண்ணீர் சொரிகின்றனர். வயிறு ஒட்டிக் காய்ந்து போய்விட்டது. நல்லசோறு கிடையாது. கோடிக்கணக்கான மக்கள் இராப்பட்டினி பகற்பட்டினி பலநாள்பட்டினி கிடக்கின்றனர். கஞ்சிதான் கிடைக்கவில்லை. கூழுக்குத் தாளம்போட்டனர். அந்தக்கால்வயிறு கூழுக்கும் போட்டுக்குடிக்க உப்பில்லை. ஐயோ! கடல் தண்ணீரைக் காயவைத்தெடுக்கும் உப்புக்குமா இழவு வரவேண்டும்! வேறு வரிகிடையாதா? பதினாயிரம் இருபதாயிரம் சம்பளம்வாங்கி வயிறுபுடைக்கத்தின்று கொழுக்கும் புத்திமான்கள் பலர் இந்தியாக் கவர்ன்மெண்டில் நெளிகின்றனரே! இவர்கள் வேறு யோஜனை சொல்லமாட்டார்களா? ஏழைகள் வயிற்றில்தானா அடித்துக் கொல்லவேண்டும். சட்டசபை அங்கத்தினர்கள் என்ன செய்வார்கள். பாவம்! அழகான குறிச்சியிலிருக்க ஆசைப்பட்டார்கள், போனார்கள், இருந்

தார்கள். பார்த்தார்கள். ஆனால் இந்த விஷயத்தில் உப்புவிஷயத்தில் ஒருமனதாக அவ்வளவுபேரும் கூடாதென்று சொன்னார்கள். சொல்லிப்பயனென்ன? ஒன்றுமில்லை. ராஜப்பிரதிநிதி அவர்கள் அதிகாரத்தைக் கொண்டு அரங்கேற்றி விட்டார். சட்டசபை மெம்பர்கள் காந்திகட்சியைச் சேர்ந்தவர்களில்லையே! அவர்கள் சொன்னதையும் லார்ட் ரீடிங் கேட்கவில்லை. காரணமென்ன? தெரியுமா? தங்கட்குப் பிடிக்காததொன்றை எந்தப் பாட்டன்சொன்னாலும் கேட்கமாட்டார்கள். சட்டசபை மூட்டைகளே! உஷார். நம்முடைய கறுப்புப் புலிகளுக்கே ஏழைகளின் கஷ்டம் புலப்படாதபோது வெள்ளைக்காரத் துரைகளுக்குத் தெரியாது. அதிலும் ஸிம்லாவில் இன்பவாழ்க்கை வாழும் ரீடிங்பிரபுவைக் குறைகூறமுடியுமா? முடியாது. பழய அரசர்கள் இரவில் மாறுவேடம் போட்டுக்கொண்டு தெருத்தெருவாக வந்து ஊர் நடப்பைத் தெரிந்துகொண்டார்கள். அப்படி நமது ரீடிங்பிரபு உடையை மாற்றிக்கொண்டு கால்நடையாக்க் கிராமங்களைச் சுற்றிப்பார்த்திருப்பாரானால் உப்புவரியைப் போட்டிருக்கமாட்டார். ஏழைகளின் ரத்தத்தை உப்புவரியென்ற ஆலையினால் பிழிந்து பலர் குடிக்கின்றனர். ஏழைகள் உப்புக்குப் படுங்கஷ்டம் எல்லாருக்குந்தெரிகிறது. கூட்டங்கள் கூடுகிறார்கள். ஆயினும் என்ன நடக்கப்போகிறது?

* * *

கதர் கட்டுவதில் பலமாதிரியுண்டு. உள்கதர் வெளிக்கதர் உள்ளும்வெளியுங்கதர் ஆக மூன்றுதினுசு. மனதிலே அபிமானம். வெளியிலே யாரையாவது கண்டால் நடுக்கம். யார் பிடித்துக்கொண்டு போய்விடுவார்களோவென்று வெடுவெடுத்துப் போய் சிலர் வீட்டுக்குள்ளே கதர்கட்டிக்கொள்கின்றனர். இந்த வகுப்பிலே கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள்—ஜட்ஜுகள், இன்ஸ்பெக்டர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், ராவ்பகதூர்கள், முதலிய படேபடே ஆசாமிகளும் கலந்திருக்கின்றனர். இது கள்ளப்பெண்டாட்டி அபிமானம். இதொருதினுசு. இனி வெளிக்கதர் ஆசாமிகள்தான் பக்காஆசாமிகள்! இவர்களுக்கு மனதில் விருப்பமேயில்லை. வெளியிலே வேஷம் போடுகிறார்கள்.

இப்போது தலைவர்கள் கணக்கில்லாமல் புறப்பட்டுவிட்டார்கள். இந்த வகுப்பு வலுத்துவருகிறது. (இதைப்பற்றி மற்றொரு சமயம் சரியாக அளப்பேன்) இவர்களில் நல்லவர்போக போலி மக்கள் கதர்வேஷம் போடுகின்றனர். வீட்டிற்குப் போனல் பரதேசிகளாக விளங்குகின்றனர். மேடைக்கு வந்தால் எல்லாம் கதர் அலங்காரம்! பிரசங்கமேடையில் கதர் கட்டாமல் ஏறுவானானல் அவன் முகத்தில் காறி யுமிழ்ந்துவிடுவார்கள் வந்திருப்பவர்கள். என்னசெய்கிறது. இதற்காக வாங்கிவைத்திருக்கிற ஒரு கதர்வேட்டியை வாரிச் சுற்றிக்கொள்கின்றனர்! இவர்களுடைய திருவிளையாடல்களை சென்னைக்கடற்கரையில்பாக்கக் காணலாம். இந்தத் தலையர்களின் உள்ளும்புறமும் மாறுபட்ட வஞ்சத்தினுல்தான் தமிழ்நாடு படுத்துக்கிடக்கிறது. இந்த நாகரிகத் தலைவர்கள்தான் வெளிக்கதர்த் திருடர்கள்! உள்ளும் வெளியும் கதர்க் கட்டுபவர் மிகச்சிலரே யாவர். அவர்தான் உண்மைப் பாரத புத்திரர். கட்டினுல் உண்மையாகக்கட்டு! இல்லாவிட்டால் சீமைத்துணியைக் கட்டிக்கொள்! மோசம்பண்ணுதே! தலைவன் தலைவன் என்று கூறி வேஷம்போட்டு மோசம் பண்ணவேண்டாம். காந்தி எங்கிருந்தோ கதரைப்புரட்டிக்கொண்டு வந்தார். தமிழ்நாட்டுத் தலைவர்களைக் கதர்புரட்டினுலும் நிற்காமல் குப்புறவிழுகின்றனரே! பாவம்!

பத்திரிகை ஆராய்ச்சி.

தென்னுப்பிரிக்காவிலிருந்து வெளியாகும் "விவேகபாநு" பத்திரிகையில் பின்வரும் விஷயங் காணப்படுகிறது:—

"ரப்பர் பாலைக்கொண்டு ஏதேனும் நிரந்தரமான உபயோகத்தை உண்டுபண்ணக்கூடுமா என்று சிலகாலமாய் அறிவாளிகள் ஆலோசித்துவந்தனர். இப்பொழுது அது பலித்திருப்பதாகத் தெரிகின்றது. ரப்பர் பாலைக்கொண்டு செய்யப்பட்ட ஒரு காகிதத்தில் 'இன்வெஸ்டர்ஸ் கிரானிகள்' என்ற பத்திரிகை அச்சிடப்படுகிறது. காகித உற்பத்திக்கு ரப்பர் மிக்க உபயோகமாயிருக்குமென அது கூறுவதனல், இனி ரப்பர் தோட்டங்கள் நல்ல நிலைமைக்குவர இடமுண்டு. அமெரிக்கர்கள் இப்பொழுது பல இடங்

களிலிருந்தும் ரப்பர் வாங்கி வருகின்றனராம். அவ்விடத்தில் "ரப்பரினால் காகித உற்பத்தி செய்வதற்கென்றே" ஒரு கம்பெனி ஏற்பட்டிருக்கின்றதாம். சஉ000 பவுன் அதன் மூலதனமென்றும் தெரிகின்றது."

இம்முறை அநுபவத்தில் பயன்பட்டிருக்கிறதென்று ஷை பத்திரிகை கூறுவதால் சந்தோஷப்பட இடமிருக்கிறது. இஃதுண்மையாகவிருக்குமானால் ரப்பர்விலை வரவர ஏறிக்கொண்டு செல்லுமென்பது நிச்சயம்.

* * *

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் "கமர்ஷியல் இந்தியா" என்னும் பத்திரிகையில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது:-

உலகத்தில் கோதுமை ஏற்றுமதியில் முதன்மையாயிருப்பது கானடா நாடெனத்தெரிகிறது. சென்ற ஆகஸ்ட்டு மாதத்தின மதிப்பின்படி கோதுமை விளைவிக்கும் முக்கியமான நாடுகளிலிருந்து ஏற்றுமதியளவு பின்வருமாறு:-கானடா, கூக-கோடி பூசல். அமெரிக்கா ஐக்கியநாடுகள், கூ0½கோடி பூசல். பிரிட்டிஷ் இந்தியா, கூ கோடியே எ0 லட்சம் பூசல். அர்ஜெண்டினா உ கோடி பூசல். ஆஸ்திரேலியா கூ கோடியே கூ0லட்சம்பூசல். இதரநாடுகள் கூ-லட்சம் பூசல்.

* * *

தனவைசிய ஊழியனில் பின் வரும் விஷயம் காணப்படுகிறது:—

(கும்பகோணம்) ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள், கைராட்டினத்தைப்பற்றிக் கூறிய அபிப்பிராயம் பின்வருமாறு:—"மநுதர்ம சாஸ்திரத்தில் ஓர் ஸ்திரீயானவள் புருஷனையும் தன்புத்திரனையும்இழந்து ஜீவனத்திற்குக் கதியில்லாமல் இருக்குங்கால், கைராட்டில்நூல்நூற்று ஜீவன உபாயங்களைத் தேடிக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும்பிராமணர், தங்கள் எக்ஞோபவீதத்தைக்கைராட்டின்நூலில்தான் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கைராட்டை ஸ்திரீ புருடர் குழந்தைகள் ஒவ்வொருவரும் கால்மணிநேரமாவது சுற்றிக் கதரபிவிர்த்தி செய்யவேண்டும்."

ஸ்ரீ-ஸ்ரீ சுவாமிகள், காலத்தையுணர்ந்து கதரின் பெருமையைப் பலரும் உணருமாறு உபதேசிக்க முன்வந்ததற்கு

நன்றி கூறுகிறோம். சந்யாஸிகள் முன்வந்து தேசநலம் சமய நலம் நாடி யுபதேசிக்கும் காலம் எப்போது வரப்போகிறதென்று காத்திருக்கும் தமிழ்நாட்டில் எழுகின்ற சுவாமிகளின் அருமை வாக்கு போற்றற்குரியது.

சதங்கையொலி.

குமரன்.

நமது குமரனின் இரண்டாவது சதங்கை முதல்மணி சித்திரைமீ கடைசியில் வெளிவருமென்று தெரிவித்திருந்தோம். குமரனுக்கென்று தனியாக ஓர் அச்சுக்கூடத்தை யேற்படுத்த வேண்டிய அவசியமாகி விட்டபடியாலும், அதற்கு வேண்டிய சாமான்கள் வந்துசேரத் தாமதித்துவிட்டபடியாலும் காலந் தாழ்க்க நேர்ந்தது. வைகாசிமீ கடைசியாகிய இன்று சித்திரைமாத சஞ்சிகை வெளிவருகின்றது. வைகாசிமாத சஞ்சிகை நடுவே வெளிவருதல் கூடும். பின்னர் வழக்கம் போல் அந்தந்தமாதம் கடைசியில் வெளிவரும். எதிர்பாராது நேர்ந்த தாமதத்திற்கு அன்பர்கள் வருத்தமுற மாட்டார்களென்று நம்புகிறோம். அவசர நிமித்தம் பக்கங்கள் குறைவாக வெளிவருகின்றது.

சந்தாதார் கவனிக்க.

புது வருஷத்திற்குப் பணமனுப்பியுள்ள நேயர்கட்கு இன்று பத்திரிகைகள் அனுப்பப்பெறுகின்றன. உள்நாட்டிலுள்ள ஏனைய சந்தாதார்கட்கும், மலாய்நாட்டிலுள்ள சந்தாதார்கட்கும் வி. பி. மூலம் அனுப்பப்பெறுகிறது. வி. பி. முறையில்லாத வெளிநாடுகளிலிருந்து பணமனுப்பாத பழைய சந்தாதார்கட்குப் பத்திரிகை அனுப்பப்பெறவில்லை. கடிதமெழுதிக் கேட்பதற்கு அதிகச் செலவு அனுவசியமாகப் பிடிக்கிறபடியால் அன்பர்கள் முன் பணமனுப்பிக் குமரனை ஆதரிப்பார்களென்று நம்புகின்றோம்.

* * *

காக்கப் பெற்றது.

உள்ளூரிலுள்ள முத்தாளம்மன் பொங்கலில் ஆயிரக்கணக்கான ஆடுகளும் கோழிகளும் கொல்லப்படுவது வழக்கம், சில வருஷங்களாகக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைவடைந்து வருகிறது. அங்கு ஆடறுக்கவரும் பக்தர்கள் சமீபத்திலுள்ள சிவாலயத்தின் ராஜகோபுர

வீதியில் இடமின்றி ஆடுகளை யறுத்து ரணகளமாக்கி விடுவார்கள். இவ்வருஷம் சில சிவபக்தர்கள் அதனைத்தடுக்க முயற்சி செய்தார்கள். சுமார் உ௫ வாலிபர்கள் இராமுழுமையும் விழித்திருந்தனர். இவ்வூர் யூனியன்போர்டு பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஆவி. பழ. சிதம்பரஞ்செட்டியாரவர்கள் வீதிகளில் ஆடுகளை அறுத்தல் கூடாதென்று உத்திர விட்டிருந்தார்கள். ஆகவே சிவன்கோவில் சந்நிதானவீதியில் ரத்தம் சிறிதும் சிந்தவில்லை. இம்மாதிரிஉத்தமகாரியங்களில் உதவிபுரியும் அன்பர்கட்கு நன்றி கூறுகிறோம்.

மதுரைக் கோவில் தும்பாபிஷேகம்.

திருவாலவாயுடையார் ஆலயத்திலுள்ள எல்லா முகூர்த்தங்கட்கும் மருந்துசாத்தி கும்பாபிஷேகம்செய்ய முயற்சி நடைபெற்றுவருகிறது. அத் திருக்கோவிலில் சுமார் ௬00 முகூர்த்தங்களிருக்கின்றனவாம். இக் கும்பாபிஷேகத்தில் மருந்துக்குமட்டும் பதினாயிரம் ரூபா செலவாகுமென்று மதிப்பிடப் பெறுகின்றது. பிராமணபோஜனம், நகரவிருந்து இதர கும்பாபிஷேகச்செலவு வகையில் ஒன்றரை லக்ஷம் ரூபாய் செலவாதல் கூடுமென்று மதிப்பிடுகிறார்கள். இதற்குச் சில சிவபக்தர்கள் முன்வந்து பணம் வசூலித்து வருகின்றனர். இவ்வளவு பெரிய கும்பாபிஷேகம் பல வருஷங்கட்கிடையில் நடந்ததில்லையாம். இம்மாதிரி கோயிற்பணியில் நாட்டம் வைக்கும் அன்பர்கள திருக்கோயில்களின் நடைமுறைகளையும் கவனிக்குமாறு வேண்டுகிறோம்.

திருஞான சம்பந்தர் திருநாள்.

சைவசமயப் பயிர் தழையத் தனிமழைபொழிந்த தண்ணருள் மேகமாகிய எம்பிரான் திருஞானசம்பந்த மூர்த்திகளது திருநாள் நாளிது வைகாசிமீ ௧௮௨ வருகின்றது. ஒவ்வொரு அன்பரும் அத்திருநாளைக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

மதிப்புரை.

நளாயினி; சாவித்திரி:—இவ்விரு சிறுநூல்களும் இவ்வூரில் தற்போது வசித்துவரும், ஸ்ரீமாந் கோ. வைத்திலிங்கப் பிள்ளையவர்களால் இனிய எளிய தமிழ்வசன நடையில் எழுதப்பெற்ற இரண்டுகதைகளாகும். கதைகள் படிப்பதற்கு மிகுந்த சுவையுடையனவா யிருக்கின்றன. மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமானவை. நளாயினி கதை விலை அணா உ. சாவித்திரி கதை விலை அணா ௩.

ஆரோக்கியமும் சிசுவின் வாழ்வும்:—ஒரு பகுதி ஆங்கிலமும் மற்றொரு பகுதி தமிழுமாகச் சுகாதாரத்தைக் குறிக்கொண்டு திருநெல்வேலியிலிருந்து வெளிவரும் இப்புதிய மாதப்பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் வரப்பெற்றோம். இரண்டு இதழ்களும் பல அறிஞர்களுடைய அரிய கட்டுரைகளைத் தாங்கிநிற்கின்றன. ஆசிரியர் டாக்டர் அன்னுதாமஸ் அம்மாள். வருடசந்தா ரூ. ௩.

* * *

செந்தமிழ்ச் செல்வி:—ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களை ஆசிரியராகக்கொண்டு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவில் சென்னையிலிருந்து வெளிவரும் இவ்வரிய செந்தமிழ் மாதப்பத்திரிகையின் க, உ, ௩, ௪, இதழ்கள் வரப்பெற்றோம். ஒவ்வொரு இதழிலும் சிறந்த அறிஞர்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் திகழ்கின்றன. உயர்ந்த காகிதமும் அச்சிடப்பெறும் அழகும் இன்னும் அதிகமாகப் பொலிவுறச் செய்கின்றன. இவ்வரிய பத்திரிகையினை நமது தமிழ்நாட்டிலே தோற்றுவித்துத் தமிழ்மணத்தைப் பரப்புதற்குக் காரணராக உள்ளவர் ஸ்ரீமாந் திருவரங்கம்பிள்ளையாவர். இதன் நோக்கம், "தமிழ் ஒருகண்ணும் சைவம் மற்றொரு கண்ணுமாகத் துலங்கும்." என்று முதலிதழில் பத்திராதிபரவர்கள் குறித்துள்ளார்கள். நமது செந்தமிழ்ச்செல்வி சிறப்புற்றோங்கி, யாண்டும் செந்தமிழ் மணத்தையும் சிவமணத்தையும் பரப்புவாளாக! இதன் வருடக் கையொப்பம் ரூ. ௩, விலாசம்:—மானேஜர் செந்தமிழ்ச் செல்வி, ௩௦௪ லிங்கசெட்டித் தெரு ஜி. டீ. சென்னை.

* * *

விமலாதேவி:—இது மலையாள பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சரித்திரசம்பந்தமான "நாவல்." இதனை மொழிபெயர்த்தவர் ஸ்ரீமத் ஆர். அய்பாத்துரை ஐயரவர்களாவார்கள். ஆனால் இந்நூலை சிறந்த தமிழ்ப்பண்டிதரான திருச்சி நாஷனல் காலேஜ் தமிழ் பிரசங்கியார் ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் பெருக்கியும் புதுக்கியும் பதிப்பித்துள்ளார்கள். சாதாரண நாவல்களில் காணப்படும் ஆபாசங்களும் இலக்கண வழுக்களுமின்றி நல்ல தமிழ் நடையில் பிற அங்கங்களுடன் பொலிந்து விளங்குகின்றது. கிரவுன் அளவில், ௩௪௦ பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ. க—உ—௦ தபாற்கூலி வேறு. இப்புத்தகம் பதிப்பாசிரியரிடத்திலும், மதுரை புத்தகவியாபாரி இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனரிடத்திலும், காரைக்குடி இந்தியன் ஸ்டோரிலும் கிடைக்கும்.

உருத்திரோத்காரி வருஷ டைரி:—இது தேவகோட்டை ஸ்ரீராம கிருஷ்ண பிரசுரசாலையாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் பொதுவாக மக்கட்கு வேண்டிய இன்றியமையாத பல குறிப்புகளும் பஞ்சாங்கமும் அடங்கியிருக்கின்றன. குறிப்பெழுதுதற்காக நாளொன்றுக்கு ஒரு பக்கம் விடப்பட்டிருக்கிறது. அழகிய கட்டிடம். தனவைசியர்கள் வசிக்கும் ஊர்கள் வட்டகைவாரியாகவும் டைப்பு வட்டி விவரமும் யாவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா பத்து; தபாற்கூலி வேறு. வேண்டுவோர் ஷை பிரசுரசாலையாருக் கெழுதிப் பெற்றுக்கொள்க.

* * *

திருக்குறள் விளக்கம்:—இது வினாவிடையாக எழுதப்பெற்ற ஒரு சிறு நூல். வினாவுக்குக்கூறும் விடையை அடுத்து அதே பொருளடங்கியதான குறளொவ்வொன்றுகத் தெரிந்தெடுத்து பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. இச்சிறுநூல் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகமாக வைக்கவேண்டிய சிறந்த நூலாகும். இந்த முறையில் இதன் பிற்பாகங்களும் வருமென்றறிகிறோம். விலை இரண்டணா. வேண்டுவோர் இதன் ஆசிரியர் தச்சநல்லூர் ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப் போற்றி ஐயா அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

* * *

தோத்திரக் கோவை:—இது சிலோன் பட்டுநகரில் வாழ்ந்திருந்த தமிழ்ப் புலவரும் சைவத்திருவாளருமான ச. பூபால பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற பல பிரபந்தங்களில் பத்துப் பிரபந்தங்களைப் பொருக்கி வெளியிடப்பெற்ற நூலாகும். இதனை சென்னை மைலாப்பூர் திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். கலிவெண்பா ஆசிரியப்பா ஆசிரியவிருத்தமெனும் யாப்பால் சொல்லும் பொருளும் அழகு பெற எளியநடையில் யாக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் பிற்பகுதியில் நல்லிசை நாற்பது என்னுந்தலைப்பில் இறைவன் அருள் விளையாடல்களையும் அவர் பெருமையினையும் வியந்து உல்லாசமாகப் பாடப்பெற்றிருக்கும் வெண்பாக்கள் இனிக்கின்றன. இப்புத்தகத்தின் விலை அணா ஆறு. தபாற்கூலி வேறு.

* * *

கிராமபரிபாலனம்:—இது ஸ்ரீமாந் பி.எஸ். ஆச்சாரியாரவர்களைப் பத்திராதிபராகக்கொண்டு திருநெல்வேலியிலிருந்து வெளிவரும் பக்ஷப்பத்திரிகையாகும். இதில் கிராமவாழ்க்கைக்கு இன்றியமையாத பலவிஷயங்கள் வெளிவருகின்றன. இதன் வருஷசந்தா ௹. ௧.

[illegible]



ஸ்ரீ அபேதாநந்த சுவாமிகள்.

SOLDEN & CO., MADRAS, S.E.

உ
சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஸு வைகாசிமீ	மணி உ.

வணக்கம்.

முருகக்கடவுள்.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

மாணிக்கவாசகர்.

உள்ள மாகிய புலத்தினைப் பத்தியா லுழுது
தெள்ளு ஞான வித்துறுத்துநற் சிரத்தைநீர் பாய்த்திக்
கள்ளவான் பொறிக் களைகள்கட் டானந்தம் விளைத்துக்
கொள்ளை கூறு மாணிக்க வாசகன்கழல் குறிப்பாம்.

—கச்சியப்பர்.

பரிபாடலும் பகவானும்.

(ஸ்ரீமாந் அ. கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் எழுதியது.)

பரிபாடல் என்பது, கடைச்சங்கத்திருந்து தமிழாராய்ந்த தண்ணிசைப் புலவர்களால் தொகுக்கப்பட்ட ஓர் நூல்; அஃது எட்டுத் தொகையுள் ஐந்தாவது; பரிபாடல் என்னும் பாக்களால் தொகுக்கப்பட்டமையின் பரிபாடல் என்னும் பெயர் பெற்றது; பரிபாடல் என்பது ஓர்வகைப்பா. அப் பரிபாடல்கள் திருமாலுக்கு ௮-ம், முருகக்கடவுளுக்கு ௩௧-ம், வையையாற்றிற்கு ௨௬-ம், மதுரைக்கு ௪-ம் ஆக ௭௰ பாடல்கள் பகரப்பட்டன. இவற்றுள் நம் தவப்பயனுகக் கிடைத்தவை ௨௨. இவற்றுள் திருமாலுக்கு ௬-ம், முருகக்கடவுளுக்கு ௮-ம், வையை யாற்றிற்கு ௮-ம் ஆகும். பரிபாடற்கு இலக்கணம் முன்னூலாகிய தொல்காப்பியத்தன்றி, பின்னூல்களெல்லாவற்றினும் பார்த்தோமில்லை. இலக்கணம்இயம்புவதே பின்னூலாருக்கு இயலாமல் போகவே, அதனை இயற்றுவோர் இன்மையானைதப்பற்றி இயம்பல்வேண்டா. இதுகாறும் அச்சுவாகனம் ஏறு "மாறன்பாப்பாவினம்" எனும்ஓர் நூலிலன்றி, வேறெங்கும் புதியபரிபாடல்களைப்பாடி யிருக்கவில்லை. இதுகாலை, பரிபாடல் பாடும் பாவலரைக்காணேம். அக்காலம், பாவலரின் மனப் பரியில் பரிந்துசென்ற பரிபாடல், இக்காலம் படுத்துவிட்டது. அன்றியும், இதுகாலை, கலிப்பாவினங்களில் ஒன்றாகிய தரவு கொச்சகம் அன்றி, மற்றைய கலிப்பாக்களும் உறுப்புக்களும் மறைந்துவிட்டன. கலிப்பாவும் காலகதியில் அவ்வாறுகுமோ என்று கரைகின்றேம். இப்பொழுது பாடுவோர் "விருத்தம் விருத்தம்" என விருத்தப் புலவராயினர். செந்தமிழ்த்தாயின் திருவுள்ளம்.

பரிபாடலின் சொல்நோக்கும், பொருள்நோக்கும், தொடைநோக்கும் மற்றைய தொகைநூல்களினும், தொன்மையனவாகக் காணப்படும். எட்டுத்தொகைகளின் முதலில் ஒவ்வொன்றைக் காப்புச் செய்யுளாக அமைக்கப்பட்டனவேயன்றி,

நடுவனும், இறுதியும் கடவுளை வழிபடும் முறைமையாக, ஓர் செய்யுளேனும் தொகுக்கப்படவில்லை. பரிபாடலிலோ கடவுளைவழிபடும் பாடல்களே பலவாயுள்ளன. ஆகையால் இதனை "ஓங்கு பரிபாடல்" என அடைகொடுத்துப் பாராட்டினர், மற்றைய சங்க இலக்கியங்களைப் போன்றே, இந் நூலிலும் பண்டைய தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களும், நாகரிக முறைகளும், தெய்வ வழிபாடுகளும், பிறவும் இயற்கையழகோடு சொற்சுவை பொருட்சுவை சொட்டக் கற்றோர்களுந் துக்கரையுமாறு இயம்பப்பட்டுள்ளது. அனைத்தினும்கடவுளைப் பற்றிக் கழறும் பாடல்களின் சொற்செறிவும், பொருளாழமும் பகரும் பான்மைத்தன்று. எனினும், பண்டைத் தமிழ் மக்கள் பகவானை வழிபட்ட பேரன்பு என்னும் சாக்கறையுள், பரிபாடல் என்னும் பரியினைக்கொண்டு புகுவோம்; அதனுள் கிடைத்த மணிகளைக்கொண்டு மகிழ்வோம்.

பரிபாடலில் பகவானைப்பற்றிப் பலப்பல படிகளாகப்பகரப் பட்டுள்ளன. அவற்றை ஆழ்ந்து நோக்கின், சாமவேதத்தின் சாரமோ? உபநிடதத்தின் உட்பொருளோ? பிரும்மசூத்திரத்தின் பிரதிபதமோ? என ஐயம்நிகழும். பகவானைப்பற்றிப் பல்வேறு விதங்களாகப் பகரினும், அவற்றுள் சிறந்தவை திருமாலிருஞ்சோலை, திருப்பரங்குன்றம் என்னும் இரண்டைப்பற்றியனவேயாம். நமது தமிழ்மக்கள் இயற்கைவழியாக வாழ்ந்தகாலத்தில், இயற்கைப் பொருள்களையே இறைவனாகப் போற்றிவந்தனர்; இயற்கையாகத்தோன்றுவனவற்றையே கடவுளாகக்கண்டு கைதொழுதனர். அதனுள் மலையும் ஒன்று. மலையோ மண்தோன்றுதற்கு முன்தோன்றியதாகும். "கல் தோன்றி மண்தோன்றாக் காலம்" என ஐயனாரிதனாரும் மலையும் மண்தோன்றினதற்கு முன்தோன்றியதெனக் குறிப்பித்தனர். இதனை, இதுகாலை சடதத்துவ ஆராய்ச்சிக்காரர் சாற்றுவதும் வலியுறுத்தும். இங்ஙனம் இயற்கைப்பொருள்களை வழிபடுங்கால், பருப்பொருளாகவன்றி நுண்பொருளாகவும்—தூலவடிவாகவன்றி சூக்குமவடிவாகவும்—கண்டுகளித்து வழிபட்டுவந்தனர்.

பகவரீனப் பருப்பொருளாகப் பார்க்குங்கால்:

"தீவளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும் ....
....
மூவேழு உலகமும் உலகினுள் மன்பது
....
நீ எனமொழியுமால் அந்தணர் அருமறை" எனவும்,

அதனையே நுண் பொருளாக நோக்கி

"நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள;
நின், தண்மையும் சாயலும் திங்கள் உள;
நின், சுரத்தலும் வண்மையும் மாரி உள;
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள;
நின், நாற்றமும் வண்மையும் பூவை உள;
நின், தோற்றமும் அகலமும் நீரின் உள;
நின, உருவமும் ஒலியும் ஆகாயத்து உள;
அதனால், இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும்
ஏமம் ஆர்ந்த நின் பிரிந்தும்
மேவல் சான்றன." எனவும்,

"கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தினுட் பொருளும் நீ." எனப்

பகவானின் உண்மைத்தன்மையை, உள்ளவாறு உள்ளம் உருகிட வந்த மாண்பு என்னே! என்னே! இவ்வழகிய அடிகளை ஆழ்ந்து நோக்க நோக்கத் திருவாய்மொழியும், திருவாசகமும் முன்னின்று தித்தியா நின்றன.

இங்ஙனம் இயற்கைவழியாக வழிபட்ட இயற்கைத் தமிழ் மக்கள், இயற்கையில் தோன்றிய செயற்கைவழியாகவும் வழிபடலாயினர். அங்ஙனம் வழிபடுங்கால், அவ்வியற்கைப்பொருள்களின் குணம், செயல், வடிவங்களையே செயற்கைவழிபாட்டிற்கும் கருத்தியமைத்துக்கொண்டனர். தனக்கென்று ஊர், பேர், நிறம், வடிவம் முதலியன இல்லாத இறைவனை, ஊர், பேர், நிறம், வடிவம் உள்ளவனாக வைத்து இறைஞ்சினர்.

அவற்றை ஆராயின் அவ்வியற்கைப் பொருள்களின் குணம், செயல்களையே செயற்கையினும், அமைத்து வழிபட்டனர் என்பது நன்கு புலப்படும். பண்டைத் தமிழ்மக்களுள் ஒருவரும், பகவானுக்கு இந்நிறம், இச்செயலென்று வற்புறுத்தினர் இல்லை. தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்; தமர் உகந்தது எப்பேர் அப்பேர்; தமர் உகந்தது எவ்வண்ணம் அவ்வண்ணம். என்னும் பரந்த கொள்கையைக் கொண்டே, பகவானைத் தமக்கு இயைந்த படிவமாக மனத்தின்கண் பாவித்துப் போற்றிவந்தனர். இந் நுண்ணிய கருத்தை ஓரிடம் **“மனக்கோள் நினக்கென வடிவு வேறு இலையே”** எனக்கூறினர். இதற்கு உரையாசிரியர் “அன்பர் மனத்திற்கொண்டனவன்றி நினக்கென் வேறுவடிவம் உடையை அல்லை” என்றும் “தனக் கோர்வடிவும், பெயரும் இன்றி, அன்பராயினர் கருதினவடிவே வடிவாகவும், இவர் இட்டபெயரே பெயராகவும் உடையன்; ஆதலின், வடிவு வேற்றுமையும், பெயர்வேற்றுமையும் சொல்லப்பட்டன” என இயம்புவாராயினர். இதனால், அவரவர் மனக்கொள்கைகளுக் கேற்றவண்ணம் வடிவமைத்து வழிபட்டனர் என்பது தெளிவாகின்றது. ஆகையால், பகவானின் வடிவு, நிறம், செயல்களைப்பற்றிய வழக்குகள் அக்காலம் உண்டோ? இல்லை; இல்லை.

பரிபாடல்களில் திருமாலிருஞ் சோலையைப் பற்றியவை இயற்கை அழகுகளுடன் நன்கு வருணிக்கப்பட்டுள்ளது. அதில் எழுந்தருளியிருக்கும் பகவானைப்பற்றிக் குறிக்கும்பொழுது பலதேவரையும் கண்ணபிரானையுமே குறிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் அவ்விருவரையும் ஒற்றுமைப்படுத்தி மிக அழகுபடப் பாடப்பட்டுள்ளன. இப்பொழுது எழுந்தருளியிருக்கும் சுந்தரராஜப் பெருமாளின் திருவடிவத்தைப்பற்றியேனும், திருக்கோயிலைப்பற்றியேனும், ஒன்றுமே உரைக்கப்படவில்லை. புதிதாகப் பிரிதோரிடம் கண்ணபிரானுக்குத் திருக்கோயில் புதுக்கியிருப்பினும், பலதேவற்குத் திருக்கோயிலொன்றில்லாமற் போனமை பரிதபிக்கக்கூடியதே. மேலும் “பால்நிற உருவில் பனைக்கொடியோனும், நீல்நிற உருவில் நேமியோனும் என்று, இருபெருந்தெய்வமும் உடன் நின்

ஞ்ஞாங்கு" எனச் சங்கத்தமிழில் பலபடிகளாகப் பலவிடங்களில் பலதேவரையும், கண்ணபிரானையும் போற்றியிருப்பதைப் போல், ஸ்ரீராமபிரானையும் இலக்குமணனையும் உரைக்காக்காரணம் என்னையோ? நிற்க. திருமாலிருஞ் சோலைமலையைப்பாடிய இளம்பெருவழுதியார் பாந்துவழிந்த பேரன்புடைய உள்ளத்தராய், உலகத்தாரை நோக்கி,

" சிலம்பாறு அணிந்த சீர்செழு திருவில்
சோலையொடு தொடர்மொழி மாலிருங் குன்றம்,
பொன்புனை உடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே
நினைமின் ; மாந்தீர் ! கேண்மின் கமழ்சீர் ;
சென்று தொழுகல்லீர் கண்டுபணிமினமே ;
தையலவரொடும், தந்தாரவரொடும்,
கைம் மகவோடும், காதலவ ரொடும்,
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்"

எனும் அடிகளை ஆயுந்தொறுந் தொறும் ஆனந்தம் அதிகரிக்கின்றது ; பக்திபரவுகின்றது.

திருப்பரங்குன்றத்தைப் பற்றிக்கூறுங்கால், அக்குன்றின் சுனையழகும், பூக்களழகும், வள்ளியம்மையின் திருமணத்திற்கு மதுரையிலுள்ளார் செல்லும் வழிநடை அழகும், முருகப்பெருமானிடம் தத்தம் குறைவுகளைச் சொல்லிவேண்டிக் கொள்ளும் முறையீடுகளின் அழகும், ஒருகாலுக்குப் பலகால் படித்து இன்புறற்பாலன. அங்கு அமைந்த ஓர் மண்டபத்து வரைந்துள்ள சித்திரங்களைப் பலதிறப்பட வருணிக்கப்பட்டுள்ளன. அதில், அகலிகையின் சாபவிமோசனமும் ஒன்றென்பதை நினைவு கூர்தல் வேண்டும். கடுவன் இளவெயினனார் என்பார், முருகப்பெருமானை நோக்கி, உள்ளங்குழைந்து உருகின உவப்புடன்

" யாஅம் இரப்பவை
பொருளும், பொன்னும், போகமும் அல்ல ; நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்,
உருள் இணைக் கடம்பின் ஒலிதாரோயே !

என்னும் இதனை எத்துணை முறை ஓதினும், முருகு கமழும் தமிழ்ச்சுவையும், அன்பும் ஒருகாலுக்கொருகால் அரும்பி நிறைந்து, அடங்காமல் பெருகா நின்றன.

பரி பாடலில் பகவானின் பான்மையைப் பற்றிப் பலப்பல படியாகப் பகுத்துக் கூறப்படுகின்றனவேயன்றி, திருக்கோயில் களைப்பற்றி ஒன்றுமே செப்பவில்லை. சிறப்பாகத் திருமாலிருஞ்சோலையையும் திருப்பரங்குன்றத்தையும் பற்றிக் கூறினார், ஆங்குத் திருக்கோயில்களிருப்பின் அவற்றைப் பற்றிக் கூறாதிருப்பரோ? திருப்பரங்குன்றத்தில் நிகழ்ந்த திருமணச் செய்திகளையும், ஆங்குள்ள மண்டபங்களையும் பற்றி, விரித்துக்கூறின நப்பண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர், திருக்கோயிலைப்பற்றிக் குறிப்பிக்காக் காரணம் என்னையோ? மேலும் அத்திருமணத்திற்குப் பாண்டிய மன்னன் தன்மனைவியரோடும் அமைச்சரோடும் வருவதை,

> " புலமாண் வழுதி
> மடமயில் ஓரும் மனையவரோடும்
> கடன் அறி காரியக் கண்ணவரோடும் நின்
> சூர் உறை குன்றின் தடவரை ஏறி "

என அழகாக அமைக்கப்பட்டுள்ளது. மனம் நிறைந்த அன்புடன் மன்னவர் துன்னிவணங்கிய காலம்-பிறவெல்லாம் பொருள் குறைவின்றி நிறைவுறச்செய்தகாலம்—திருக்கோயில்கள் கட்டுவதற்கு நேர்ந்த இடையூறுகள் என்னையோ? மலையுச்சியோ, மரநிழலோ, மலைக்குகையோ, திருக்கோயிலாக இயற்கையின் அமைந்ததையே எம்பெருமான் எழுந்தருளும் இடமாக ஏற்படுத்தியிருக்கலாம். திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் திருக்கோயிலைப்பற்றிச் சொல்லுங்கால், இயற்கைக்கோயிலாகிய கடம்பமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்தனர் என இயம்புகின்றனர். அத்திருக்கோயிலை

> "புலவரை அறியாத புகழ்பூத்த கடம்பு அமர்ந்து " என்றும்,
> " இவ்வரை மருங்கில்;
> கடம்பு அமர் அணி நிலை பகர்ந்தோம் "

என்றும் கூறுகின்றமையால், அக்காலம் ஆண்டவனுக்குத் திருக்கோயில்கள் செயற்கையாகப் பாடுதற் கேற்றவண்ணம் அமைந்திருப்பின் அறையாதிருப்பரோ? மேலும், புத்தம் புதி

தாகப் புற்றீயல் போலப் புராணம் புகன்றோரும், "ஆதியின் ஆண்டவன் இன்ன மரத்தின்கீழ் இருந்தனன்; இன்ன குகையில் குறிக்கொண்டனன்; இன்னபுற்றிலிருந்து புறப்பட்டனன்." என இயம்புகின்றனர். ஆதலால் அக்காலம் திருக்கோயில்கள் இக்காலம் அமைந்திருப்பனபோன்று ஆக்கப்பட்டிருக்குமோ என ஐயுறுகின்றேம். இதனை அறிஞர் ஆராய்தல் வேண்டும்.

இயற்கைக் கோயிலின்கண் இறைவன் எழுந்தருளியிருந்தபொழுது, அக்கோயிலுக்கு இச்சமயத்தவர், இக்குலத்தவர் செல்லலாம்; மற்றவர் செல்லல் ஆகாது. எனும் வேற்றுமைகள் இருந்திருக்கா. எனவே எவ்வகுப்பினரும் எவ்விதவேற்றுமையுமின்றி ஆலயத்துட் சென்றனர்; இயைந்த முறைகளால் வழிபட்டனர். அங்ஙனம் தாமே சென்று நேர்முகமாக வழிபட்டு பூசித்த காலத்தில், வழி வழி முறையாக யாம்தாம் பூசைசெய்ய உரிமையுள்ளோம் எனும் ஒருதனிவகுப்புக் கூட்டம் இருந்திருக்குமோ? முருகக்கடவுள் கடம்பமரத்தின்கீழ்க் கோயில்கொண்டுள்ள காலத்தில், அவை வலியர், மெலியர், உள்ளார், இல்லார் என்று பாகுபடுத்தப்பட்ட சுங்கச்சாவடிகளாகத் திரும்பியிருக்குமோ?

நல்லழிசியார் என்பார், முருகப்பிரானை முன்னிட்டு மொழியுங்கால், திருப்பரங்குன்றத்தைத் தொழுது, யாம் எம் சுற்றத்தொடு பிறவித்துன்பம் சாராதநாளைப் பெறுவோமாக, என்னும் பொருள்பட,

> "பிணி முகம் ஊர்ந்த வெல்போர் இறைவ!
> அணி நெடுங் குன்றம் பாடுதும்; தொழுதும்;
> அவை யாமும் எம் சுற்றமும் பரவுதும்;
> ஏம வைகல் பெறுக யாம் எனவே." என்றும்,

இளம்பெருவழுதியார் என்பார், பலதேவரையும் கண்ணபிரானையும்திருவடிதொழுது, திருமாலிருங்குன்றத்தின்கண் உறைதலை வேண்டிக் கோடலாக,

> "உள்ளமர்ந்து இசைத்து இறை
> இருங் குன்றத்து அடிஉறை இயைக எனப்
> பெரும் பெயர் இருவரைப் பரவுதும் தொழுதே." என்றும்

பரவினர். இதனுல், இறைவன் திருக்கோயில் யாதென்பதை இயம்பல்வேண்டுமா? வேண்டா; வேண்டா. கடவுளுக்கு எத் துணை வடிவவேறுபாடுகளும் குணக்கூறுபாடுகளும், கற்பிக்கப் பட்டனவோ, அத்துணையும் இன்னல்களுக்கு இருப்பிடம் ஆயின. எக்காரணமோ, எப்பாவமோ ஆலயங்கள் பெருகப் பெருக, அன்பர் அருகலாயினர்; திருவிழாக்கள் சிறக்கச் சிறக் கத் தீச்செயல்கள் செழிக்கலாயின; வழிவழியாகப் பூசை புரி யும் தனிக்கூட்டம் வளர வளர, வழிபடுவோருக்கு வருத்தங் கள் வளரலாயின; ஆலயங்களில் மேல்நாட்டு நாகரிகம் மிக மிகப், பகவானும் மேல்நாடு செல்லலாயினர். அந்தோ! இயற் கைக்கோயில்களும், இயற்கை வழிபாடுகளும் என்று நலிந்து குறைந்தனவோ, அன்றே, ஆண்டவன் திருவருள் அருகலா யிற்று. அருகவே, வறுமை வளர்ந்தது; பிணி பெருகியது; சண்டை தலையெடுத்தது; மக்கள் மாண்டனர். இயற்கைக் கட வுளே! என்செய்வேம்; என்செய்வேம்.

இங்ஙனம் ஓர் காலத்தில் இன்னல்கள்நேரிடும் என்பதை எண்ணியே இளம்பெருவழுதியார்

"எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின்
மன்பதை மறுக்கத் துன்பங்களைவோன்." என,

இறைவன் திருவவதார இயல்பை இயம்புவாராயினர். இங் ஙனமே பகவத்கீதையும் "நல்லவர்களை அளிக்கவும் தீயோர் களை அழிக்கவும் அறத்தை நிலைநிறுத்தவும் ஒவ்வோர் ஊழி யிலும், ஊழியிலும் உற்பவிப்பேன்" எனப் பகவான் பகர்ந்த தாகப் பகர்கின்றது. இதனைக்குறிக்கொண்டே கிறித்துவமதம் கிளக்கின்றது; முகம்மதியமதம் மொழிகின்றது. ஆகையால் இயற்கை வடிவாக உள்ள இறைவன், அருந்தமிழ் வடிவாக உள்ள ஆண்டவன் இக்காலம்—முன்னவனுர்கோயில் பூசைகள் முட்டியகாலம்—பன்னரும் நோய்கள் மிகுந்த பாழ்ங்காலம்—வாரிவளங்குன்றிய வறுமைக்காலம்—திருவவதாரம் செய்வான் என்பது திண்ணம் திண்ணம். பரிபாடல் பாட்டுப் பழுதுரூது.

"இன்பமுங் கவினும் அழுங்கல் மூதூர்
நன்பல நன்பல நன்பல வையை
நின் புகழ் கொள்ளாதிம் மலர்தலையுலகே."

சமயங்களுங்
கொல்லாமை புலாலுண்ணாமையும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதியது.

சென்ற ஐப்பசித் திங்கள் வெளிவந்த 'க்ஷத்திரிய மித்திரன்'' என்ற இதழில், சிற்றுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனை உணவாக அருந்துவது தீவினையாகாதென்றும், ஆகவே ஊனுணவு கொள்பவர்கள் அதனை நீக்குவது வேண்டப்படாதென்றும் விரித்துத் தமக்குத் தோன்றிய ஏதுக்களை ஒருவர் எடுத்துக்காட்டியிருக்கின்றார். இவரைப்போலவே இங்ஙனங் கூறுவார் இன்னும் சிலர் ஆங்காங்கு உளராகலின், அவர்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து முடிவுகட்டவேண்டுவது இன்றியமையாததாயிருக்கின்றது. உலகத்திலுள்ள எந்தமதத்தவரும் ஊனுணவு கொள்வதை மறுப்பதில்லை யென்றார். பண்டைக் காலந்தொட்டுச் சைவசமயத்தவர் எந்த உயிரையும் கொள்ளுதல் ஆகாதென்றும் கொன்று அதன் அதன் ஊனை உண்ணுதல் தீவினையாகுமென்றும் அறிவுறுத்து வருகின்றனர்; இதற்குக் ''கொல்லாமற்கொன்றதைத் தின்னாமல் குத்திரங் கோள் களவு கல்லாமல்'' என்னும் பட்டினத்தடிகள் திருமொழியும், ''கொல்லா விரதம்ஒன்று கொண்டாரே நல்லார்'' என்னும் தாயுமான அடிகள் திருமொழியுமே யாவரும் அறிந்த சான்றாகும். இனித் ''தேவார திருவாசகங்கள்'' திருமந்திரம் முதலான சைவத் திருமுறைகளினும் சைவசித்தாந்த நூல்களினும் கொல்லாமை புலாலுண்ணாமை ஆகிய அறங்களை நன்கு எடுத்து அறிவுறுத்தும் திருமொழிகள் அளவில்லாதன. அவற்றை விரிப்பிற் பெருகும். சைவ சமயத்தின்கட் சொல்லப்பட்டவாறே அதனைப்பற்றி யொழுகும் சைவ வேளாளரும் பார்ப்பனரும், பண்டைக்காலந்தொட்டுக் கொலையும் புலையும் நீக்கி ஒழுகி வருகின்றனர்.

இனி, மிகப் பழைய காலத்ததாகிய 'சோராஸ்டர்' மதத்தின் கண்ணும், ஆடு, மாடு, குதிரை கோழி முதலியவற்றைக்

கொல்வது பெருந் தீவினையாகச் சொல்லப்பட்டிருப்பது பாரசிகரது "அவஸ்தா" என்னும் பண்டை நூலிற் போந்த வேண்டுகோள் ஒன்றால் நன்கு விளங்கும்.

இனிப் புத்தசமயத்திற்கும் முற்பட்டதாகிய சமணசமயமானது கொல்லாமை புலாலுண்ணாமை என்னும் அறத்தின்கண் தலைசிறந்து நின்று வருதலும் எல்லாரும் நன்குணர்ந்ததேயாம்.

புத்த சமயத்தை ஆக்கிய கௌதம சாக்கியர் நிருவாணம் (பற்றறுதி) அடைதற்குரிய எட்டு முறைகளுள், தீங்கற்ற உணவு கொள்ளுதலை ஒன்றாக வகுத்துக் கூறியிருக்கின்றார். மேலும் அவர், "உயிர்க்கொலைக்கு உலகமெல்லாம் நடுங்குகின்றது, மக்களெல்லாரும் சாவினைக்கண்டு நடுங்குகின்றனர். உன்னிடத்திற் பிறவுயிர்கள் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டுமென்று நீவிரும்புகின்றனையோ, அங்ஙனமே நீயும் அவைகளிடத்தில் நடந்துகொள்ளல் வேண்டும். உயிர்க்கொலை செய்யாதே, எதனையும் சாவப்பண்ணாதே." என்று அவர் அறிவுறுத்திய அறிவுமொழியும் பௌத்த சமய நூல்களிற் காணப்படுகின்றது. ஆதலால், புத்தர், கொல்லாமை புலாலுண்ணாமை என்னும் அறத்திற் றலைநின்றவராகக் காணப்படுகின்றனர். அங்ஙனமாயின் 'சந்தன்' என்னுந் தட்டான் ஒருவன் சோற்றோடு கலந்து கொடுத்த பன்றி இறைச்சியைப் புத்தர் உணவாகக்கொண்டது என்னையெனின், உலக நன்மையினையே எந்நேரமுங் கருதிக்கொண்டிருந்த அவர் சோற்றிற் கலந்துகொடுத்த பன்றி யிறைச்சியைத் தெரிந்துகொள்ளாமல் 'உண்டாரென்று கொள்வதே பொருத்தமுடைத்து. அதற்குமுன் பன்றியிறைச்சி முதலிய ஊனுணவு கொண்டு வழக்கப்பட்டிருந்தாராயின், அவன் தந்த அவ்விறைச்சியை உண்டதனால் இறந்திருக்கமாட்டார். அவர் ஊனுணவு கொள்ளாதவராய் நெடுக உயிர் வாழ்ந்து வந்தமையால் அவன் கொடுத்த பன்றியிறைச்சியையுண்டு செரியாமையால் நோய்கொண்டு உண்ட அன்றைக்கே உயிர் துறந்தார். அங்ஙனமாயின், இவர் ஊனுணவு கொள்ளாதவர் என்பதை அறிந்திருந்தும் அத்தட்டான் அவர்க்கு ஊனுணவு

கொடுத்தது என்னையோவெனின் அவன் கல்வியறிவு இல்லாதவனாய் அன்பில் மட்டும் சிறந்தானாதல் வேண்டும். மேலும் அவன் இழிகுலத்தான் ஆகலின், அவர் வடநாட்டில் அறிவுறுத்திவந்த அறிவுமொழிகளை அறியானாய் அவர்பெருமையைமட்டும் பிறர்கூறக்கேட்டு அறிந்தவனாய், அவரை அன்போடேற்றுத்தானுண்ணும் பன்றியிறைச்சியை அவர்க்குங் கொடுத்தானாதல் வேண்டும். அல்லது, அவ்விறைச்சியைச்சோற்றில் மறைத்துக் கலந்து கொடுத்தான் என்பதனால் அவர் ஊன் உண்ணார் என்பதைத் தெரிந்தே தானுண்ணும் ஊன்உணவைச் சிறந்ததாகக் கருதி அவர்க்கும் அதனை ஊட்டுதல் வேண்டுமென்னும் அன்புமேலீட்டினாற் சோற்றின்கண் வைத்து மறைத்துக் கொடுத்தானாதல் வேண்டும். இவன்தந்த இவ்வூனுணவு புத்தரது முடிவிற்கு ஏதுவானமை பற்றி அவர்தம் சீடர்கள் அவன்மேற் பெரிதும் வெகுண்டனரென்பதைப் புத்தருணர்ந்து அவர்க்கு ஆறுதல் சொல்லி அத்தட்டானுடைய அன்பையே வியந்துபேசி உயிர்விடுத்தனர். ஆதலாற், புத்தர் கொல்லாமை புலாலுண்ணாமை என்னும் அறத்தில் தலைநின்றவர் என்பது ஐயுறற்பாலதன்று. மேலும், புத்தரது முடிவிற்கு ஊனுணவு ஏதுவாயிற்றென்பதனால், ஊனுணவு கொள்வதன் தீமையும் இவ்வரலாற்றினால் நன்குவிளங்கும்.

இன்னும், புத்தரை அடுத்துத்தோன்றி உலகமெங்கணும் அவர்தம் அறமொழிகளைப் பரவச் செய்துவந்த அசோக மன்னன், தான் செதுக்கிய முதற்கல்வெட்டில் "உணவுக்காகவாவது வேள்வி வேட்கும் பொருட்டாவது எந்த உயிரையும் கொலைசெய்தல் ஆகாது" என்று பொறித்திருத்தலும், எட்டாவது கல்வெட்டில் "மூச்சுவிடும் எந்த உயிரையும் கொலைசெய்யப்படுதலினின்றும் பலியிடப்படுதலினின்றும் முற்றும்விலக்குதலால் மட்டுமே சமயமானது வளரும்" என்றுபொறித்திருத்தலும் புத்தருடைய கொல்லாமை புலாலுண்ணாமை அறத்தை நன்கு விளக்கிக்காட்டும்.

இனி, யூதர்க்கும், கிறிஸ்துவ சமயத்தவர்க்கும் முதனூலாகிய பைபிள் முதலாகமத்தில் கடவுள் உலகங்களைத்தோற்

றுவித்து மக்கட்கு முதற்றாய் தந்தையரைப் படைத்தபின் அவரை நோக்கி "நிலத்தின் மேலுள்ள வித்துக்களைத் தரும் ஒவ்வொரு பூண்டினையும், வித்துகளோடு பழத்தையும் தரும் ஒவ்வொரு மரத்தினையும் யான் உமக்குத் தந்திருக்கின்றேன்; அவை உமக்கு உணவாகுக" என்று கூறியருளினர் என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டிருத்தலால் கடவுளால் முதன் முதல் மக்களுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டவை புற்பூண்டு, மரம், செடிகொடிகளின் பயன்களேயா மென்பது இனிது பெறப்படுகின்றது. மேலும் 'ஐசாய' என்னும் ஆகமத்தில் உயிர்களைக்கொன்று பலியிடுவோரைவிளித்து "நீங்கள்என்னைநோக்கிச் செய்யும் வேள்விகள் எதன் பொருட்டு? நன்றாய் வளர்க்கப்பட்ட விலங்குகளின் கொழுப்பையும், செம்மறி ஆடுகளைப் பொரித்த அவியுணவையும் எனக்கு நிறையக் கொடுத்தீர்கள்; ஆனால், எருதுகள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாட்டுக் கிடாய்கள் இவற்றின் இரத்தத்தில் யான் மகிழ்ச்சி யடையமாட்டேன்; என்னெதிரில் நீங்கள் வரும்போது எனது மன்றத்தை மிதிப்பதற்கு யார் இவைகளை உம்மிடம் பெறவிரும்பினார்கள்?" என்று சொன்னமை நன்கெடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. மேலும், கடவுள் முதற்றாய் தந்தையர்க்குத் தந்த பத்துக்கட்டளைகளுள் "நீ எதனையும் கொல்லாதே" என்பது முதற்கட்டளையாகக் காணப்படுகின்றது.

இனிக் கிறித்துவக் கொள்கையை நிலை நிறுத்தினவராகிய இயேசு நாதரும் அவர்மாணாக்கர்களும் ஊனுணவு கொள்ளாதவர்களென்பது அவர்களைப்பற்றிக்கூறும் வரலாறுகளால் நன்கு விளங்கும். இயேசுநாதர் நாற்பதுநாள் பட்டினி கிடந்து தவம் புரிந்தார் என்பதைக் கிறித்துவக்கொள்கை நூல்கள் கூறுகின்றன. அவருடைய மாணாக்கர்களில் ஒருவராகிய "மத்தேயு" என்பவர் வித்துக்கள் கொட்டைகள், காய்கறிகள் முதலியவற்றையே உண்டாரேயன்றி ஊனுணவு கொண்டிலரெனக் "கிளெமென்ஸ்" (Clement) என்பவர் எழுதியிருக்கின்றார். கிறித்துவரின் திருக்கோயிற்கு முதற்றலைவராகிய 'ஜேம்ஸ்' முனிவர் சாங்காலத்துணையும் ஊனுண்டிலரென்று 'ஈஜிசிப்பஸ்'

(Hegesippus) என்னும் சரித்திரக் (வரலாறு) காரரும் ஆகஸ்டின் (Augustine) முனிவரும் கூறுகின்றனர். இங்ஙனம் இயேசு நாதர் தம் மாணாக்கர்களை ஊனுணவு கொள்ளாதவர்களாயிருந்தது, தம் ஆசிரியர் அவ்வருள் ஒழுக்கத்தில் மிக்கவராயிருந்தமை பற்றியேயாம். அற்றேல், இயேசு நாதர் தம்மிடம் வந்திருந்த குடிமக்கள் பசியால் வருந்தியது கண்டு அவர்கட்கு மீனையும் அப்பத்துண்டுகளையும் வாழ்த்திக் கொடுத்தா ரென்று கூறுவதென்னையெனின், அக்காலத்திருந்த யூதர்களில், அறிவிற்சிறந்த சிலரைத் தவிர, மற்றைப் பொதுமக்களெல்லாரும் ஊனுணவு கொண்டு உயிர்வாழ்ந்தவர்களே யாவர். நாளேற நாளேற அவ் யூதமக்கள் உயிர்க்கொலையிலும், அதன்வழியே வரும் பல தீவினைகளிலும் பெருகி வந்தமையின், அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் பொருட்டே இயேசு இறைவனருளால் அவர்களிடையே பிறந்தருளினார். அவர்கள் நடுவிற் பிறந்துவளர்ந்த அவர் முதலில், தம்மைத் தூயராக்குதல் வேண்டியே நாற்பதுநாள் பட்டினிகிடந்து தவஞ்செய்தார். அத்தவம் முற்றுப்பெற்றபின், அவர் யூதமக்கட்கு நல்லறிவுபுகட்ட முன்வந்தார். வந்தவர், அவர்களுடைய பழக்கவழக்கங்கட்கு முற்றும் மாறாய்நின்று அவர்கட்குக் கொல்லாமை முதலிய உயர்ந்த ஒழுக்கங்களைக் கூறப்புகுந்திருந்தால், அவர்சொற்களை எவரும் செவிகொடுத்துக்கேட்டிரார். பாகனுக் கடங்காது கடிவாளத்தை அறுத்துக்கொண்டு சடுதியில் விரைந்தோடும் ஒரு குதிரையை, அந்நேரத்தில் உடனே பிடித்து அடக்கப்புகுந்தால், அது சிறிதும் கைகூடாது. பின், அது விரைந்தோடும் வழியே விடுத்து, அது தன் மும்முரம் அடங்கி ஓய்ந்த பின்பு அதனைப்பிடித்து அடக்கிக்கொள்ளுதல் எளிது. அதுபோலவே, ஊனுண்டு கொடிய விலங்குகளைப்போல உயிர்வாழ்ந்த அவ்யூதர்களின் பழக்க வழக்கங்கட்கு இணைந்து நிற்பவரைப்போற் காட்டி அவர்களைத் திருத்துவதே இயேசுவின் திருவுள்ளக் கருத்து. ஆதலால் தமது நல்லுரை கேட்கவந்த யூதர்க்கு அவர்கள் பட்டினியாயிருந்ததை யுணர்ந்து அப்பத்துண்டுகளையும் மீன் துண்டுகளையும் உணவாகக் கொடுத்தருளினார். இங்ஙனம் பொரித்தமீனைத்துண்டம் பால், ஆடு, கோழி முதலான உயிர்

ந்த உயிர்களைக்கொன்று அவற்றின் ஊனைக்கொடாமல் அவை கட்குத் தாழ்ந்தபடியிலுள்ள மீனின் இறைச்சியையே கொடுத் தார். ஐயறிவுடைய சிற்றறிவுயிர்களிலும் ஆடு, மாடு, குதி ரை,பன்றி, கோழி முதலியவற்றைக்கொல்லும் தீவினையைவிட மீன்களை வலைவீசிப்பிடிக்கும் தீவினை குறைந்ததாகலின், அவர் களது வழக்கங்களுள் தீவினை குறைந்த அதற்கு ஒருவாறு ஒத்து நடப்பாராயினர். கைக்கும் மருந்துண்ணாத குழவிக்கு இரக்கமுடைய அன்னை கருப்பங்கட்டியில் அம்மருந்தைப்பொ திந்துவைத்து ஊட்டி அதன்நோய் தீர்த்தல்போல், இயேசுவும் தம் அற உரைகளாகிய மருந்தை உட்கொள்ளமாட்டாத யூதர் க்கு, அவர்க்கு இனிக்கும் அவர்தம் வழக்கங்களாகிய சிலவற் றுடன் சேர்த்துக்கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்துவா ராயினர். மேலும் தமக்கு நன் மாணாக்கரைத் தேர்ந்தெடுக் கையில், அவர்களை மீன்பிடிக்கும் செம்படவர் குடியினின் றும் எடுத்தது என்னையென்று ஆழ்ந்து ஆராய்ந்தால், கொல் லாமை அறத்தில் நின்ற அவர் திருவுள்ளக் கருத்து நன்கு புலனாம். மீன் பிடிக்கும் ஒருவனை அத்தொழிலினின்றும் நீக்கி நல்வழிப்படுத்தினால் எத்தனையோ மீன்கள் உயிர்பிழைக் கும்? அம்மீன்களைத் தின்று உயிர்வாழும் எத்தனையோமக்கள் அத்தீவினையினின்றும் விலகிப்பிழைப்பர். இதுபற்றியே, இக் காலத்திருந்த இராமலிங்க சுவாமிகளும் செம்படவர் பலரை யும் ஊன்விற்பார் பலரையும் சைவராக்கினர்.

மேலும், ஊன் விருப்புடையார்க்குப் பட்டினி கிடந்து உடம்பை வாட்டித் தவம்புரியும் மன ஒருமைப்பாடு உண்டா காது. அதுபற்றியே ஔவையார் "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்றும் "படைகொண்டார் நெஞ்சம்போல் நன் றூக்காது ஒன்றன், உடல்சுவை யுண்டார் மனம்" என்று திருவள்ளுவனாரும் அருளிச்செய்திருக்கின்றனர். ஊனுணவி னால் உடம்பு அளவுக்கு மிஞ்சிக் கொழுப்பேறி நோயை வரு வித்தலோடு, ஐம்பொறிகளை யடக்கித் தவம்புரிதற்கும் இடை யூறு பயக்கும். ஆகவே, தவம்புரிவாரெல்லாரும் ஊனுணவை அறவே ஒழித்தவராக இருத்தல் வேண்டுமென்பது திண்ணம்.

இயேசுநாதர் சிறுவராயிருந்தபோது தம் தாம் தந்தையரால் ஊனுணவு ஊட்டப்பட்டவராயிருக்கலாம். அங்ஙனம் ஊனுணவு உண்டுவளர்ந்த தமதுடம்பு தவ ஒழுக்கத்திற்கு இசையாது என்பது கண்டே அவ்வுணவால் வந்த நச்சுநீரையும் மிகு கொழுப்பையும் புறங்கழித்தற் பொருட்டு அவர் நாற்பதுநாள் பட்டினிகிடந்து நோன்பியற்றினர். அங்ஙனம் நோன்பியற்றிய பின்னர்த் தம்வாழ்நாள் முடியுமட்டும் அவர்எங்கும் ஊனுணவு கொண்டிலர். அவர் வரலாற்றினைக் கூறும்நூல்களும் அவர் ஊனுண்டாரெனக் கூறுகின்றில.

இனிக் கிரேக்கருட் பழைய காலத்தில் அறிவான்மிக்க சான்றோராகிய பித்தாகோரஸ் (Pythagoras) பிளேடோ (Plato) என்பவரும் ஊனுண்ணா அறத்தின்கண் நின்றதோடு, பிறரும் அங்ஙனமே அதனைக்கடைப்பிடித் தொழுகும்படி அறிவுறுத்தி வந்தனர்.

இனி, ஊனுணவு கொள்வார்க்கு நுண்ணுணர்வும் பேரறிவும் இல்லாமற் போவதோடு உடம்பும்பொலிவிழந்து போகின்றதென்பதைப் பண்டைக் காலத்திருந்த மேன்மக்கள் சிலர் உணர்ந்திருந்தனரென்பது கிறித்துவர் மறையாகிய விவிலிய (Bible) நூலில் தானியேல் என்னும் மறையில் சொல்லப்பட்டிருத்தல் கொண்டு நன்கறிகின்றோம். தானியேல் என்னும் பெரியவரும் அவரைச் சார்ந்த சிலரும் தம்மை வருவித்த ஓர் அரசன் தந்த ஊனுணவையும் கொடிமுந்திரிச் சாற்றையும் உட்கொண்டு தம்மை மாசு படுத்துதற்கு இசையாராய்த் தாமுண்ணுதற்கு வித்துக்களையும் பருகுதற்குத் தூய தண்ணீரையுமே தரும்படி கேட்டனரென்றும், அதுகண்ட அவ்வரசனின் ஏவலாட்கள் அரசன் கட்டளைக்குமாறாக அங்ஙனங் கொடுப்பின், அவர்கள் உடம்புஇளைத்து முகம்வாடிப் போவார்களென்று அஞ்சி வருந்தி நிற்க, அதனை யுணர்ந்த அப்பெரியவர் "எமக்கு வித்துணவும், அரசனைச் சேர்ந்தார்க்கு ஊனுணவும் பத்துநாள்வரையிற் கொடுத்துப் பிறகு எம்மையும் அவரையும் ஒப்பிட்டு நோக்கு" என்று கூற, அவர்கள் அங்ஙனமே செய்த பிறகு அப்பெரியவரும் அவரைச் சார்ந்தாரும், பேரறிவும்,

கலையுணர்வும், நிரம்பிக் கனவு நிகழ்ச்சிகளையும் மறைபொருட் டோற்றங்களையும் காணும் புலமை திருவருளால் நரப்பெற்று பெரும் பொலிவுடையராய்த் திகழ்ந்தனரென்றும், அவ்வரசன் தான்கொடுத்த ஊனுணவு கொள்வாராய்த் தன்னிடத்துள்ள மறைமொழியாளரும் (மந்திரகாரர்) கோள்நூலரும் (சோதிடர்) ஆகிய எல்லாரினும் பார்க்க, அப்பெரியவரும் அவரடியாரும் அறிவாற்றல்களில் பத்துமடங்கு சிறந்தாராய் விளங்குதல் கண்டு வியந்தனன் என்றும் தானியேல் மறைநூலின் முதல் இயலில் (அதிகாரம்) சொல்லப்பட்டிருக்கின்றது.

இனி, மகமது கொள்கையை (மதத்தை) நிலைநிறுத்திய மகம்மது முனிவர் அரேபியா (Arabia) நாட்டில் கடவுளருளால் தோன்றியபோது, அங்கிருந்த மக்களெல்லாரும் மிகக் கொடியவர்களாய்ப் பல விலங்குகளையும், சிற்றுயிர்களையும், கொன்று அவற்றின் ஊனைக் குருதி ஒழுக ஒழுகத் தின்னும் இயல்பினராய்ப் பல பெருந்தீவினைகளைச்செய்து உயிர்வாழ்ந்து வந்தனர். அக் கொடியவர்களை அக் கொலைத்தொழில் புலைத் தொழில்களி னின்றும் விடுவித்தற்பொருட்டு மகம்மது முனிவர் எவ்வளவோ முயன்று பார்த்தும், முடியாமையால் இயன்றமட்டுமாவது அவர்களவற்றைவிடத் தக்கபடி, "தானேயிறந்தனவும், பன்றியின் இறைச்சியும், குருதியும், கடவுளல்லாத பிறர்க்கு என்று வரைந்து வைக்கப்பட்டனவும், உங்களாற் கொல்லப்படாமல் ஏனை மற விலங்குகளால் தின்னப்பட்டனவும், கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டனவும், மண்டை உடைத்துக் கொல்லப்பட்டனவும், கீழேவிழுந்து குத்தப்பட்டனவும், உங்களால் விலக்கப்படுவன வாகுக" என்று கட்டளை தந்தார். கடவுளுக்கு என்று ஏற்பியாமல் அவர்கள் ஊனுணவு கொள்ளலாகா தென்று விலக்கினமையால் கடவுளையும் அவர் பேரிரக்கத்தோடு எல்லாவுயிர்களுக்கும் உடம்புகளைப் படைத்துக் கொடுத்திருத்தலையும் அவர்கள் கருத்தூன்றி நினைக்க நினைக்க உயிர்களைக் கொன்று அவற்றின்ஊனைத் தின்னும் கொடுஞ்செயலைத் தாமாகவே விட்டுவிடுவர் என்பது கருதியேயாகும். இனிக் கழுத்தை நெரித்தும், மண்டையை யுடைத்தும் கீழ்வீழ்த்திக் குத்தியுங் கொல்லப்படுவன மாடு,

ஆடு, மரை, மான், குதிரை ஒட்டகம் முதலிய பெரு விலங்குகளே யாதலால் அப்பெருங் கொலையைத் தடுத்து, எளிதிற் பிடித்துக் கழுத்தைநெரியாமலும் மண்டையை யுடையாமலும் கீழ்வீழ்த்திக் குத்தாமலும் கொல்லப்படத்தக்க மீன் கோழி முதலிய சிற்றுயிர்க்கொலையை மட்டுஞ் செய்தற்கு இடந்தந்தமையால், அவ்வறிவுரை பல பெருந்தொகையான பயன்படும் விலங்குகள் உயிர் பிழைத்தற்கு வழிசெய்தவாறும். புலி, கரடி, அரிமா முதலான அறக்கொடிய விலங்குகளை யொத்து ஆடு, மாடு, மான், மரை, குதிரை, ஒட்டகம் முதலான பயன் மிக்க உயிர்களைக் கணக்கின்றிக் கொன்று முழுதுங்கொலைத்தொழிலிலேயே பழகிய அக்காலத்து அராபியர்களை முற்றும் அக் கொடுஞ் செயலினின்றும் நீக்குதல் இயலாமையின், பயன்படாத மீன், கோழி முதலிய சிற்றுயிர்க் கொலைக்கு இடந்தரு முகத்தால் அவர் அளவின்றிச்செய்து போந்த பேருயிர்க் கொலையை நிறுத்துதலே மகமது முனிவர் கூறிய இவ் அறவுரையின் நோக்கமாதல் காண்க. இன்னும் மகமதுசமயத்தார்க்கு மறை (வேதம்) யாகிய "குரானில்" "கடவுளானவர் நாற்கால் உயிர்களைச் சுமை சுமப்பதற்காகப் படைத்திருக்கின்றார்; காய்கறிகளையும் பருப்புக்களையும் மக்களுக்கு உணவாகக் கொடுத்திருக்கின்றார்; நீங்கள் வேள்வியிற் கொல்லும் உயிர்களினிறைச்சியையும் அவற்றின் இரத்தத்தையும் கடவுள் வேண்டவில்லை. ஆனால், அவர் உங்களுடைய மனத்தூய்மையையே வேண்டுகின்றார்" என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும், மகம்மது முனிவர்க்கு மருகராகிய அஸ்ரத் அலி என்பவர் "உங்களுடைய வயிற்றை விலங்கினங்களுக்குக் கல்லறைகளாக்காதீர்கள்" என்று அறிவு கூறியிருக்கின்றார். இனி, மகமது முனிவரே தமக்கு உணவாகப் பேரீச்சம் பழத்தையும் வாற் கோதுமை அப்பத்தையும் அருந்தி வந்தார். பாலையும் தேனையும் சிற்சிலநேரங்களில் அருமையாக அருந்துவதுண்டு. இங்ஙனமாக மகமதிய மதத்தின் முதன்மையான கொள்கைகளையும் அவற்றை அறிவுறுத்திய பெரியோர்களின் கருத்துக்களையும் நாம் உற்றுநோக்குவோமாயின், அவை எல்லாம் கொல்லாமை புலாலுண்ணாமை என்னும் அறத்தையே

தெளிவாக எடுத்து வற்புறுத்துகின்றன என்பது நன்கு விளங்காநிற்கும்.

இங்ஙனமாகப் பண்டைக்காலந்தொட்டு உலகமெங்கணும் பரவி வழங்கும் சமயக் கொள்கைகளெல்லாம் 'கொல்லாமை' 'புலாலுண்ணாமை' என்னும் அறங்களை முதன்மையாகவைத்து வற்புறுத்துதல் தெற்றென விளங்கா நிற்க, 'முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைப்ப' தை ஒப்ப அம்மதங்களெல்லாம் கொலையையும் புலையையும் மறுக்கவில்லை யென்று வாய்கூசாது பொய்யுரை கூறுபவரது பொய்ம்மை அறிஞரால் நகுதற் பாலதேயாம் என்க.

இனி, அவர் கொலையும் புலையும் ஆமென்பதற்குக் கூறிய வினைஎதுக்களையும் ஆராய்வோம்.

---

* ஈப்போ உபந்யாசம்.

அக்கிராசனாதிபதியவர்களே! சகோதரர்களே!

இன்றுமாலை என்னை உள்ளன்புடன் வரவேற்று, உங்களுடைய பிரியவசனங்கள் பொலிந்த வரவேற்புப் பத்திரம் ஒன்று எனக்களித்ததற்காக உங்களனைவருக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறேன். இன்று உங்கள் மத்தியில் இருக்கப்பெற்றதற்கு நான் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். அதிலும், நமது புராதன ரிஷிகள் வைத்துவிட்டுப்போன பாம்பரைச் சம்பத்தாகிற ஸநாதன தர்மத்திற்கு நம்முடைய சகோதரன் ஒருவன் தொண்டுபுரிந்து வந்திருக்கிறான் என்பதில் நீங்கள் அடைந்துள்ள பெருமிதம் தோற்றும் உங்கள் முகங்களைக்காண எனது உவகை இன்னும் பதின்மடங்கதிகமாகிறது. சகோதரர்களே! சென்ற இருபத்தைந் தாண்டுகளாக மேல்நாடுகளில் நமது தர்மத்தை நான் பிரசாரம் செய்துவந்திருக்கிறேன். இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் உள்ளோருக்கு நமது புராதன தர்மத்தின் அரிய தத்துவங்களை நான் புகட்டிவந்திருக்கிறேன். இதெல்-

---

* இது துன்மதி௵ புரட்டாசி௴ உஎஉ ஈப்போ ஹரிமா மண்டபத்தில் வெளிநாட்டாரும் இந்தியருமாக பல்லாயிரம் ஜனங்கள் கூடிய பெருங்கூட்டத்தில் ஸ்ரீலஸ்ரீ அபேதாநந்த சுவாமிகளால் செய்யப்பெற்ற உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பாகும்.

லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். உலகம் முழுவதும் ஒப்பும் வண்ணம் நம்முடைய இந்த ஸநாதன தர்மத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ பரமாசாரியார் சமீபத்தில் நமக்குப் போதித்தருளினார்கள். இந்த யுகத்திற்கென அவதரித்த மகாபுருஷனே இவர் என நிச்சயமாக நாம் கூறலாம். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் நம்மிடை வாழ்ந்துவந்தார். ௧௮௯௩-ம்வருடத்தில் சிகாகோவில் கூடிய சர்வ சமய சங்கத்தில் ஓர் வீரசிம்மம்போல எழுந்துநின்று விவேகானந்த அடிகள் நமது ஸநாதன தர்மத்தின் பெருமையை இடிமுழக்கம் செய்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்பொழுது விவேகானந்த அடிகளுக்கு ஞானவமுதூட்டி யருளிய குருமூர்த்தம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரேயாவர் எனின், இவருடைய பெருமையைப்பற்றி நான் வேறு சொல்லவும் வேண்டுமோ? இம்மகானுபாவனுடைய திருவடிக்கமலங்களில் அமர்ந்து இவரது முகாரவிந்தத்தினின்றும் பொழிந்த ஞானம்ருதத்தைப் பருகும்பேற்றை ஈராண்டுகள்வரை நான் அடைந்திருந்தேன். நிற்க, விவேகாநந்த அடிகள் சர்வசமய சங்கத்திற்கு விஜயம் செய்துவிட்டுப் பிறகு நாலாண்டுகள்வரை ஐக்கிய நாடுகளிலேயே தங்கியிருந்தார்கள். பின்னர், ௧௮௯௫-ல் லண்டன்மா நகருக்கு அவர்கள் விஜயஞ் செய்தனர். இங்கு இருக்கும்பொழுது தான், தன்னுடைய வேலைகளை மேற்போட்டுக்கொண்டு எடுத்து நடத்துவதற்காக, இந்தியாவிலிருந்து என்னை லண்டனுக்கு வருமாறு நமது அடிகள் பணித்தார்கள். நான் புறப்பட்டுச் சென்றதும் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லுதலையும் இதர பிரசாரவேலைகளையும் என் கையில் ஒப்படைத்துவிட்டு, அடிகள் தாய்நாட்டின் பக்கம் திரும்பினார்கள். ௧௮௯௯-௯௭-ல் லண்டனில் இருந்துவிட்டுப் பின்னர் நியூயார்க் நகரத்திற்கு நான் போனேன். இதன்மேல் பிரதி வருடமும் நான் லண்டனுக்கும் தவறாது சென்று வந்தேன். அங்கு ஸ்தாபிக்கப்பட்ட லண்டன் விவேகானந்த சங்கத்திற்கும் நானே தலைமை வகித்துவந்தேன். இதுபோலவே, நியூயார்க்கிலும் ஸ்தாபிக்கப்பெற்ற விவேகானந்த சங்கத்திற்கும் நான் இருபத்தீராண்டுகள் தலைமைவகித்திருந்தேன். நான் அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்து அங்கு பிரசித்திபெற்ற சர்வ கலாசாலைகள் அனைத்திலும் பலதடவைகள் சென்று பிரசங்கம் செய்து வந்திருக்கின்றேன். உதாரணமாக, ஹார்வார்டு, தார்ட்மௌத், பெர்கலி, கார்நெல், கொலம்பியா, முதலிய சர்வகலாசாலைகளுக்கு நான் அடிக்கடி சென்று வந்திருக்கிறேன். இன்னும், இச் சர்வகலாசாலைகளில் இருந்த பேராசிரியர்கள் பலரையும் நான் தனியாகக்கண்டு பேசியும் வந்திருக்கிறேன். அறிவுலகத்தில் வணங்காமுடி மன்னராய்ச் சஞ்சரிக்கும் மகாதீரர்கள் இவ்வுலகில் எத்தனை சித்தாந்தங்கள் தரி

சனங்கள் உளவோ அவற்றில், ஒன்றிலோ பலவற்றிலோ கரைகண்ட சித்தாந்திகள், மகா பிரக்யாதிபெற்ற விக்ஞானிகள் பேராசிரியர்கள் இவர்களையெல்லாம் நேரில்கண்டு ஸநாதன தர்மவிஷயமாக நான் ஸம்பாஷித்தேன். நமது விவேகானந்த அடிகள் போதித்த உண்மைகள் சர்வோத்கிருஷ்டமானவைகள் என்று இவர்களனைவரும் ஒரே மனதாய்ப் பாராட்டுகின்றார்கள். ஏன்? நம் அடிகள் போதித்த தத்துவங்கள் இன்று நின்று நாளை வீழ்வனவல்ல; என்றென்றும் ஒரு படித்தாய்நிற்கும் பரம ஸத்யத்தின்பாற் பட்டனவாகும்! குறித்த ஒருசாரினருக்கே உரியன ஏனையர்க்கு உரியவாகா எனும்படியான ஒருதலைச் சித்தாந்தமல்ல அவை; இன்னும் குறித்த இடம் பொருள் ஏவல்களுக்கே பொருந்தும், இவற்றுக்குப் புறம்பாக உள்ளவருக்குப்பொருந்தா என்பதும் இல்லை. மற்று இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய எந்த பிராந்தியங்களில் வசித்தபோதிலும், இவ்வுண்மைகள் ஒவ்வொருவருடைய தினசரி வாழ்க்கையனுபவங்களுக்குப் பொருத்தமுடையனவாயிருக்கும். இவ்வுண்மைகள் ஆன்மவாழ்க்கையினையடுத்த அத்தியாத்தும விதிகளைப்பற்றியே பிரஸ்தாபிக்கும். இதற்கு முந்தி, புத்தபகவான் இதே உண்மைகளை உபதேசம் செய்திருக்கிறார். இவர் ஸ்தாபித்த மதம் கிறிஸ்துபிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே உலகத்தில் ஸர்வ வல்லமைபெற்று மகா காந்தியுடன் பொலிந்து உலகத்தை நல்வழிப்படுத்தி வந்தது. மானிடவாழ்க்கையைச் சீர்படுத்தத் தோன்றிய மகாபுருஷர்களின் வரிசையில் புத்தபிரானே அக்கிரஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். வடக்கே சிபேரியா முதல் தெற்கே ஈழம்(இலங்கை) வரையிலும், கிழக்குச் சீனம் தொட்டு மேற்கு மிஸ்ஸரம் (எகிப்து) முடிய பௌத்த விதூதர்கள் (மதப்பிரசாரகர்கள்) சென்று ஆங்காங்கே புத்தசமய சங்கங்களைக்கண்டு வந்தார்கள். மிங் சக்கிரவர்த்தி அரசு செலுத்திவந்தபொழுதுதான் சீனத்தில் புத்த சமயம் முதன்முதலாகத் தலைகாட்டியது. அங்கிருந்து கி. பி. ஆறாவது நூற்றாண்டில் ஜப்பானில் பரவியது. இந்தியாவில் தோன்றிய புத்தசமயத்தினின்றும்பெற்ற உத்வேகத்தின் பயனாலேயே சீனத்தில் இலக்கியமும் சித்திரம் முதலிய கலைகளும் தோன்றிச்செழிக்கலாயின. இதுமாதிரியே புத்தசமயத்தினின்றுபெற்ற புத்துயிர் காரணமாகவே ஜப்பானிலும் காவியங்களும் கலைகளும் மிளிரலாயின. சீனம்,பர்மா, ஈழம் முதலிய பிரதேசங்களில்உள்ள பௌத்தர்கள் அனைவரும் நமது சொந்த சகோதரர்களே யாவர். இவர்கள் யாவரும் ஹிந்துக்களை ஒத்தவரே யாவர். விஷ்ணுவே புத்தனாக அவதரித்தார் என்பதை நாம் மறந்துவிடுவோமா? புத்தபகவான நேரில் போதித்தது ஹிந்துக்களுக்கேயன்றோ? ஹிந்துஎன்ற பேயரோ அத்துணை சரியான

தன்று. நமக்கு நாமே சூடிக்கொண்ட பெயரன்று இது. கிறிஸ்து பிறப்பதற்கு ஐயாயிர வருடங்களுக்கு முன்பு மத்திய ஆசியாவினின்றும், இந்தியாவிற்குவந்து குடியேறிய ஆரியர்களின் சந்ததியாரே நாம். ஹிந்து என்றபெயரை வேற்று நாட்டினரே நமக்குக்கொடுத்தார்கள். முன்பு கிரேக்கர்களும் பாரசீகர்களும் இந்தியாவின்மீது தண்டெடுத்து ஸிந்துநதி வரை வந்தார்கள். கிரேக்க பாரசீக மொழிகளில் 'ஸ' எனும் ஒலியே கிடையாது. எனவே அவர்கள் 'ஸிந்து'வை "ஹிந்து" என்றார்கள். இந்த நதிக்குக் கிழக்கே இருந்தவர்களை 'ஹிந்துக்கள்' எனவும், அவர்இருக்கும் இடத்தை 'ஹிந்துஸ்தான'மெனவும் இவ் வன்னியர் அழைத்தனர். இவ் வாற்றால்தான் நமக்கு இப்பெயர் வந்தது. எனவே நமது மதத்தின் உண்மையான பெயர் ஹிந்துமதம் அன்று; மற்று ஸநாதன தர்மம் ஆகும்; அதாவது என்றென்றும் நிலை பெயராது நிற்கும் உண்மை என்பது ஆகும். இப்பரம ஸத்தியத்தையே, நமது முன்னோர்கள் அரிய பொக்கிஷமாக நமக்குத் தேடி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இப்படி தேடிவைத்துச்சென்ற நமது மூதாதைகள் சாமானியர்கள் அல்லர்; மற்று, சத்தியத்தின் நேர் திரஷ்டாக்களாவர்; உண்மைப்பொருளை உலகத்திற்கு விண்டுகாட்டுவதற்கென பரம்பொருளின் ஆணைபெற்று வந்த மகரிஷிகளாவர். எனவே, சகோதரர்களே, நாம் ஆரியர்களின் சந்ததி என்றும், ஐரோப்பாவின் பெரும்பாகத்திலும் பாரசீகம் முதலிய நாடுகளிலும் வசித்துவரும் காகேசிய ஜனங்கள் நமது பந்துக்களாவர் என்றும் மேலே சொல்லியதினின்றும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். பூர்வத்தில் ஒரே மத்தியபிரதேசத்தில் இருந்த ஆரியர்களின் ஒருசாகை புறப்பட்டு இந்தியாவிற்கு வந்துகுடியேறிற்று; இதனைச் சரிதக்காரர் இந்தோ-ஆரிய சாகை யென்பர். இதுபோலவே பாரசீகத்திற்கு ஓர் கிளைவர, ஈரானோ-ஆரியர் என்ற பெயர்பெற்றது; மூன்றாவதொரு கிளை ஐரோப்பாவிலுள்ள ஆங்கிலோ-ஸாக்ஸனிய நாடுகளுக்கும் லத்தீன் நாடுகளுக்கும் சென்று தங்கியது. இப்படி மூன்று பிரிவுகளாகக் குடியேறின் போதிலும் இவர்களுடைய பாஷை ஆதர்சங்கள், கர்ணபரம்பரைகள், நடையுடை பாவனைகள், புராணங்கள் எல்லாம் ஒன்றாகவே இருந்தன. ஒருவேளை, இன்றைக்கு உங்களைக்கீழேதள்ளப் பட்டு மிதித்துத் துவைக்கப்பட்ட ஓர் ஜாதியாக ஐரோப்பியர் கருதலாம்; கருப்பு ஜாதியர், அடிமைச் சாதியர் என உங்களை அவர்கள் எள்ளித்தூற்றலாம். ஆனால், இவர்கள் தூற்றும் இந்தியர், கிறிஸ்துவுக்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்பு இந்நாட்டிற்குவந்த இந்தோ-ஆரியரின் சந்ததியா ரென்பதையும், இந்தோ-ஆரியர்கள் எந்த ஜனத்தின் ஓர் கிளையோ அதே ஜனத்தைச் சேர்ந்தவர்தான் நாமும் என்பதையும்

இவ் ஐரோப்பியர் இன்று மறந்துவிட்டனர் போலும். ஆனால், அமெரிக்காவில் இன்றும் இந்தியர் காகேசிய ஜனத்தைச் சார்ந்தவராகவே கருதப்படுகின்றனர். எனவே, எந்த ஹிந்துவும் ஓர் அமெரிக்கனாகலாம்; இன்னும் அமெரிக்காவில் மிக உயர்ந்தவர்களுடனும் ஹிந்துக்கள் சரிசமமாகக் கலந்து பழகலாம். எவருடைய சம்பாஷணையை இங்கிலாந்தின் முடிசூடிய மன்னரும் பெருமையுடன் பாராட்டிக் கொள்வார்களோ அத்தகைய ஐக்கியநாடுகளின் தலைவர்கள் சிலருடன் நானும் நேரில் கலந்து சம்பாஷித்திருக்கிறேன். அத்தலைவர்கள் இரு கைகளாலும் என்னை வரவேற்று, உள்ளன்புகொண்டு என்னுடன் உரையாடினார்கள். இதோ உங்கள் கண்முன் எரியும் இந்த மின்சார விளக்குகளைக் கண்டுபிடித்தவர் அடிசன் எனும் பிரசித்திபெற்ற விக்ஞானியாவர். அன்னவருடனும் நமது தர்மத்தைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். ஹிந்து ஸித்தாந்தத்தில் தனக்கு விசேஷ சிரத்தையுண்டென்றும், இதனை ஸர்வோத்தமமான ஸித்தாந்தமாகத்தான் பாராட்டுவதாகவும், அப்பெரியார் என்னிடம் கூறினார். ஆகவே, சகோதரர்களே, உங்கள் மூதாதைகள் வைத்துவிட்டுப்போன இந்த பிதிரார்ஜித சொத்து ஸாமானியமானதன்று; இதற்கு மேம்பட்டது இதுவெனக் காட்டுவதற்கு இவ்வுலகத்தில் ஒருபொருளுமேயில்லை; அத்துணை ஸர்வோத்கிருஷ்டமானஞானத்தையன்றோ அவர்கள் உங்களுக்குத்தேடி வைத்திருக்கின்றார்கள். விக்ஞானிகளுடைய துணிபுடன் இது அதிசயிக்கும்வண்ணம் இசைந்திருக்கின்றது! இப்படியே இக்காலத்திற்கு இதைப்போல் அத்துணைபொருத்தமுடைய வேறுஒன்றைகாண்பதற்கில்லை. தன் மூலதத்துவங்களிலாகட்டும்! முன்வைத்துள்ள ஆதர்சங்களில்ஆகட்டும்,பரந்த நோக்கிலாகட்டும், சர்வ சமரசத்திலாகட்டும் நமது ஸநாதன தர்ம ஸித்தாந்தத்திற்கு இணையென வேறு எந்தஸித்தாந்தத்தைக் காட்டமுடியும்? ஒருதலைச்சார்பான கட்சிக்கோட்பாடுகளை நமது ஸநாதன தர்மம் வலியுறுத்தவரவில்லை; மற்று ஒன்றே, இரண்டாவதொன்றில்லை எனும் இலக்கணத்திற்குரிய பரமஸத்தியத்தையே அது உத்கோஷம் செய்யும். இந்த ஒரே ஸத்தியவஸ்துவைத்தான் பலஜாதிகளும் தத்தம் மனதிற்கு வந்த பெயர்களில் வணங்குகின்றார்கள். "மோட்சலோகத்தில் உள்ள பரமபிதாவே" என்று கிறிஸ்தவர்களும், "ஜிஹோவா" என்று யூதர்களும், "அல்லா" வென்று முஸல்மான்களும், "அஹுரமஸ்தா" வென்று பார்ஸிகளும், தொழுவது ஒரே பரம் பொருளையன்றி வேறில்லை.

வெள்ளை நிறத்தவருக்கெனத் தனியாக வெண்ணிறக் கடவுளும், கறுப்பருக்குப் பிறிதோர் கடவுளும் உண்டெனும் கூற்று வெறும் "புளுகு" ஆகும். இருப்பது ஒரே ஒரு கடவுள்தான்; அவருக்கு வென்

ளை நிறமும் கிடையாது; கறுப்பு நிறமும் இல்லை;. ஊர், பேர், குணம் உருவம், நிறம் எதுமே பரம்பொருளுக்குக் கிடையா. அதுவோ என்றும் அழிவில்லாத நித்தியப்பொருள்; ஸத்தியஞானானந்த மயமானது. அப்பொருளைத்தான் நாம் வணங்குகின்றோம். கிறிஸ்தவர்களின் விவிலியவேதம், யூதர்களின் "பழைய புராணம்" அல்லது ஏற்பாடு பார்ஸிகளின் ஸெந்த்அவஸ்தா ஆகிய இந்தகிரந்தங்கள் பிறப்பதற்கு எத்தனையோ காலத்துக்கு முன் தோன்றியது நமது ரிக்வேதம். இதில் பரம்பொருளைப்பற்றி அடியில் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி", "இருப்பது ஒரே பரம்பொருள்; மனிதர்கள் பல பெயரிட்டழைக்கின்றனர்." என்று ரிக்வேதம் கோஷிக்கிறது. ஆதலால், சினேகிதர்களே, பெயர் மாத்திரத்தில் வேற்றுமை காணப்படலாம்; ஆனால், இவ்வேறான பெயர்களனைத்தாலும் குறிக்கப்படும் பொருளில் ஒரு சிறிதும் வேற்றுமை கிடையாது. அது ஒரே அகண்ட ஸத்தியவஸ்துவன்றி இரண்டாகிவிடாது. உதாரணமாக ஜலம் என்னும் ஓர் பொருளை எடுத்துக்கொள்வோம். இவ்வொரே பொருளைக்காட்டி அதன் பெயரைச் சொல்லுமாறு கேட்டால் ஒவ்வொரு ஜாதியானும் ஒவ்வொரு பெயர் சொல்லுவான். ஆங்கிலேயன் 'வாடர்' என்றும், லத்தீன் க்காரன் 'ஆக்வா' என்றும், தமிழன் 'நீர்' என்றும் இப்படியே பலவிதமாகச் சொல்லிக்கொண்டே போவார்கள். இத்தனை பெயர்கள் வழங்கப்படினும் இவைகள் குறிக்கும் பொருள் ஒன்றுதான். இதுபோலவே அல்லா, ஜிஹோவா, புத்தன் முதலியஎப்பெயரிட்டழைத்தாலும் இப் பெயர்களால் இறைஞ்சப்படும் பொருள் எங்கும் நிறைந்த பராபர வஸ்துவன்றிப் பிறிதில்லை. இப் பரம்பொருள் ஒன்றே அனைவருள்ளத்தும் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கிறது. இவ்வுண்மையையே, "மோட்ச சாம்பிராஜ்ஜியம் உங்களுக்குள்ளேயே யிருக்கிறது. மேகமண்டலத்துக்கு மேலே ஒரு தனிச் சிம்மாசனத்தில் ஏகாங்கியாகப் பரம்பொருள் வீற்றிருக்கவில்லை" என்று யூதாசாரியனான கிறிஸ்துவும் வலியுறுத்தி யிருக்கிறார். நேயர்களே, இக் கருத்து யூதர்களுக்குப் புதிதாயிருந்திருக்கலாம். ஆனால் நாம் அவ்வாறு கருதமாட்டோம். கிறிஸ்து பிறப்பதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முதற்கொண்டே நமது வேதங்கள் இவ் வுண்மைகளை விடாது பறைசாற்றி வந்திருக்கின்றன. இவ் வேதக்கருத்துக்களையே, கிறிஸ்து யூதர்களுக்குப் போதித்தார். வேறு கருத்துக்களிலும், வேதங்களின் போதனைகட்கும் கிறிஸ்துவின்உபதேசங்கட்கும் நெருங்கிய ஒற்றுமை நிலவக்காண்கிறோம். "மோட்சலோகத்திலுள்ள நமதுபிதா சம்பூரண சித்தராயிருத்தல் போன்றே நீங்களும் சம்பூரணசித்தராகலாம்" என்று கிறிஸ்து கூறுகின்றார். வேதங்களும் இவ் வுண்மையை யல்லவா

நாட்ட வந்திருக்கின்றனா? ஒவ்வொரு ஜீவனுக்கும் சம்பூரணம் பெறு தலே லட்சியமாதல் வேண்டும். அதுவும் இங்கே இவ்வாழ்விலேயே தான் வெல்லுதல் வேண்டும். இகத்தில் சம்பூரணம் சித்திக்கப்பெறு தென்றும் பரத்திற்குச் சென்றபிறகே அதனை அடைதல் கூடும் என் றும் சாமானிய மதப்பற்றுள்ள கிறிஸ்தவர்கள் நம்பலா-ம். ஆனால், நண்பர்களே, பரத்தினில் உங்கட்கு வருவது, இகத்தினில் நீங்கள் இயற்றியுள்ள வினைகளின் பயனாகவே இருக்கும். இகத்தில் ஒரு தூர்த் தனாய், கயவனாய்வாழ்ந்தோனுங்கூட, மரணத்திற்குப்பின் சிறகுமுளைக் கப்பெற்று மோட்சவீடேறுவர் எனும் கூற்று வெறும் பொய்யுரையே யாகும். நிகழ்காலத்தை அனுசரித்தே வருங்காலம் அமையும். இதற்கு மாறாக பால் என்பார், நம்பிக்கையொன்றே மோட்சம் தந்துவிடும் என்று சொல்லியிருக்கின்றார். இன்றோ, யுக்தியின் ஆட்சி நாளாகும். யுக்தியினால் ஆராயாது நம்பிக்கை ஒன்றால்மட்டும் எதையும் யாரும் இன்று ஏற்றுக்கொள்ளமாட்டோம். ஒவ்வொன்றின் மூலத்தையும் இன்று நாம் துலக்கியறிய விரும்புகிறோம். பாவம் என்பது யாது? நன்று, தீது என்பன யாவை? என்றிவ்வாறாய பொருள்களையெல்லாம் பற்றி இன்று நன்கு ஆராய்ந்தறிய விரும்புகிறோம். அறியாமை இருள் வாய்ப்பட்டு நாம் இழைக்கும் பிழையே பாவமென வேதங்கழறுகின் றது. அமெரிக்காவில், கிறிஸ்தவ சாஸ்திர இயக்கம் என் ஓர் புதிய இயக்கம் தோன்றியிருக்கிறது. அது மேலேசொன்ன வேதக்கருத்தை உண்மையென ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் கிறிஸ்துவென ஒரு தனி மனிதன் என்றும் யாண்டும் வாழ்ந்துவந்ததாக இவ் வியக்கம் நம்பவில்லை; மற்று கிறிஸ்து தர்மம், கிறிஸ்து தத்துவம், என்பதில் இது நம்பிக்கை பூண்டிருக்கின்றது. எனவே, வைதிக கிறிஸ்தவ சம யத்தை இது ஒருஅடி பின்னே தள்ளிவிட்டது. புராதன வைதீக கிறிஸ் தவ சமயம் பண்டைநாட்களுக்கே ஏற்றது; இக்காலத்திற்குச் சிறிதும் பொருந்தாது என்று இக்கிறிஸ்தவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். இந்த நவீன ஸித்தாந்திகளின் முடிபுகள், சென்ற முப்பதாண்டுகளாக மேல் நாடுகளில் நாங்கள் பிரசாரம்செய்து வந்த ஸநாதன தர்மத்தினின்றும் வேதாந்தத்தினின்றும் பெறப்பட்டனவே யாகும். ஸகோதரர்களே, பண்டைக்கிறிஸ்தவ சமயத்தைத் தழுவுவோர் வரவர அருகி வருகின் றனர். கிறிஸ்தவ சமயம் பொதிந்துள்ள நடுநாயகமான உண்மையைக் காணவும், உலகிலுள்ளோர் அனைவரையும் தழுவுவதான ஓர் சர்வசமரச சமயத்தைக் காணவும் ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் பெருமு யற்சிகள் செய்துவருகின்றனர். (தொடரும்.)

ஆராய்ச்சி—பெரியபுராணம்.

(Registered copy right.)

[உக-ம் பக்கத் தொடர்ச்சி.]

டாக்டர் ஹூல்ஷ் மறுபடியும் தென்னிந்திய சிலாசாசனம் இரண்டாம் காண்டம் (Vol) நாற்பதாவதிலக்கக் கல்வெட்டின் முகவுரையாக, இக் கல்வெட்டு மெய்ப்பொருணயனர் சரிதத்தைக் கூறுகிறதென்று சொல்லிவிட்டு இரண்டாவது பகுதியில் (Para) "௩௮ வது இலக்கத்தின் தொடக்கத்தில் பெரிய புராணச் செய்யுள்களியற்றிய சேக்கிழார் (சுவாமிகள்) அநபாயன் என்கிற குலோத்துங்க சோழதேவன் காலத்தில் இயற்றினரென்று கூறப்பட்டது. இவ்வாசனது திருவாரூர் கல்வெட்டுக்களின் எழுத்துக்கள் தஞ்சாவூரிலுள்ள ராஜராஜன், ராஜேந்திரசோழன் இவர்களது கல்வெட் டெழுத்துக்களைவிட பிற்காலத்திய

திருவாரூர் கல்வெட்டு அரசாங்கத்தாராலாவது வேறு யாராலாவது இன்னும் அச்சிடப்படவில்லை. அது பின்வருமாறு:—

பூமாலை மிடைந்து..................தெரிவையர் (௩) திலகம் தியாகப்தாகை புரிகழல் மடப்பிடி புவிதந்துணைவனிதை, திரிபுவனமுழுதுடையாளிவள் திருவுளத்தருள முழுதுடையாளென உடனிருப்ப செம்பொன் வீரஸிம்ஹாஸநத்து முக்கோக்கிழானடிகளொடும் வீற்றிருந்தருளிய கோபரகேசரிவம்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு அஞ்சாவது மிதுந நாயிற்று பூர்வபக்ஷத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள் முந்நூற்று நாற்பதினுல் (௩௪௦) ஜெயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து திருவாரூர்உடையார் வீதிவிடங்கனேன் ஆதிரைநாளில் சதை......வந்தருளி தேவாச்ரயன் திருக்காவனத்தில் ஸிம்ஹாஸநத்து எழுந்தருளி இருந்து பதியிலான் தியாகவிநோதத்தாள் சொல்லியருளாநிற்ப ஸ்ரீகாரியம் சுப்பிர (ச) மங்கலமுடையான் மாதவன் இரவியான்மாநாச்ர மூவேந்தவேளார் விண்ணப்பத்தினுல் பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசார்ய தேவகன்மிகளுக்கு கோயில்......திருமுகம் முன் அருளினபடி. நம் எல்லாம் ஸ்ரீ லோகராஜ்யஞ் சேதிரவன் ஸூர்யன புத்ரன் மநு தன்புத்திரன், அறிவருகிறம் தரிலே கன்றுபட்டு பிரமாதப்பட அதின்மாதாவான சுரபி கண்டு துக்கித்து மனுவின் வாசலில் மணியை எறிய அதுகேட்டு மனு தன் மந்திரி இராதனை ... பாலையூருடையார் உபய குலாமல்லனை

தாக (புதியதாக) க்காணப்படுகிறது. ஆகையால் பெரியபுராணமும் இவ்விகட்டுப் பின்னர்த்தான் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் சேக்கிழார் (சுவாமிகள்) தம்நூலிற் கூறிய கதைகள் தானாக நூற்றதல்லவென்பதும் ராஜேந்திர சோழனுக்கு முந்தின காலங்களிலேயே இவைகள் பரவியிருக்கவேண்டு மென்பதும் தோன்றும்'' என்றும் எழுதியுள்ளார் திருவாரூர் கல்வெட்டுக் கூறுவதைக்கொண்டு விக்கிரமசோழன் காலமென்று கொண்டனர்போலும். இவைகளே யானறிந்தவரையிலுள்ள சுவாமிகளது காலநிர்ணயக் குறிப்புக்கள்.

இனி, கோபிநாதராயரவர்கள் "இவைகளை யெல்லாம் (பேரம்பலம் பொன்வேய்ந்தவன்; துன்னுசெங்கதிர் வழித்தோன்றல் என்பவைகளை) உற்றுநோக்கின், இவ்வரசன் ராஜகேசரிவன்மனாகிய குலோத்துங்கன் (முதற் . குலோத்துங்கன்) ஆக விருக்கவேண்டுமென்பது புலப்படும். ஏனெனில் கங்கைகொண்ட சோழன்மகன் வயிற்றுப்பேரன் என்பது யாவருமறிந்ததே. இதனாற்றான் இவனை உமாபதியார் 'கங்கைகுலதிலகர்' என்றார். அபயன் என்னும் பெயர் இவ்வரசனுக்கு உண்டு என்பது

பார்த்து நீ சென்று அறிந்துவாவென அவன் பார்த்து ஒரு பசு மணி எறியாநின்றது என்று சொல்ல அதுகேட்டு மநு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக்கிடந்த கன்றையுங்கண்டு தன் புத்திரன் ஏறின தேரி (இ) லே பட்டமை அறிந்து அதன் கன்றுக்கு நேராக தன் புத்திரன் பிரிய புத்தனை தேரிலே ஊர்ந்து கொடுக்க வென்று உபயகுலாமலனுக்குச் சொல்ல ......ஸந்தாவத்தோடும் புறப்பட்டு தன் செவிகளைக் குடைந்து கொடுத்தது கண்டு த்வாரபாலகன் புகுந்து உபயகுலாமலன் தன் செவிகளைக்குடைந்.....துக்கிதனாய் மநுதானே புறப்பட்டுத் தன்புத்ரனைத் தானே தேரிலே ஊர்ந்து கொடுக்க அப்போதே நாம் அவனை அநுக்கிரஹித்து கன்றுக்கும் மந்திரிக்கும்மனுபுத்திரனுக்கும் ஜீவன்கொடுக்க அது கண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்து......க்கு உபயகுலாமலன் மகன் சூரியனை மந்திரியாக்கி இவனுக்கு தன் புத்ரன்... ......மங்கலம் கொடுத்து மநுவும் (சு) உபயகுலாமலனும் தபஸினைத் தலைநின்றமையில் பாலையூருடையான் உபயகுலாமலன் வம்சத்தானாகிய பாலையூருடையான் சந்திர வீதிவிடங்கனென் குலோத்துங்கசோழ மஹாபிரமாராயன்..........வமிசாதியாக வருகிற மாளிகைமனையும் மாளிகையாக வெடுத்து குடிவைப்பதாகச் சொல்ல இதிலே நித்தமும் நம்அடியார்க்கு சோறு இடப்பெற வேண்டுமென்று இவன் தமக்குச் சொன்னமையினாலே (அப்படி) இடப்பெறுவதாகவும். (என்று மேலேநிலவிட்டது இரண்டுவரியில் சொல்லப்படுகிறது.)

கலிங்கத்துப் பரணி படித்த ஒவ்வொருவருக்கும் தெரியவரும். திருவாரூரிலிருக்கும் ஒரு பெரியசாசனத்தில் அநபாயன் எனப்படுவான் எனக் கூறியிருத்தலால் சேக்கிழார் காலத்தரசன் குலோத்துங்கன் * என்பதில் ஐயமேயில்லை என்றனர். [செந்தமிழ் பக்கம் கஅள]

அம்பலம் பொன்வேய்ந்ததைக்கொண்டு இவன்தான் சென்னி அநபாயன் குலோத்துங்கன் என்பதால் இவ்வம்பலம் பொன்வேய்ந்தவர்கள் பலராவர் என்பதைக்காட்டுதும். அவர்கள் வரிசையைக்கீழ்க்காண்க.

க ஆதித்தன் I என்பது.

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பலமுகடு
கொங்கிற் கனகமணிந்த வாதித்தன் குலமுதலோன்
திங்கட் சடையார் தமரதென் செல்வமெனப் பறைபோக்
கெங்கட் கிறைவனிருக்கு வேளூர் மன்னிடங்கழியே.

என்னும் நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி சுகு வது செய்யுளால் விளங்கும். (செந்தமிழ் க, பக்கம் சுச.)

உ பராந்தகன் I என்பது

i மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்* —மீதெலா
மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்† —கண்கொண்ட
சோதிலாத் தேறல் குளிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்.

—விக்கிரமசோழனுலா.

ii அணங்கு
படுத்துப் பொதியனைய பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழியாக் கொண்டோன்—அடுத்தடுத்துச்
சீறுஞ் செறுவிற் றிருமார்பு தொண்ணூறு
மாறும் படுதழும்பி னார்த்தோன்—வேறு
பிரமர்க்கன்று ......
புரமர் திருத்தில்லை டார்த்தோன், ...

—குலோத்துங்கசோழனுலா.

---

* கோச் செங்கணான் † ஆதித்தன்,

iii. வெங்கைக் கனவழிப் பாடலுக்கு வில்லவனைக்
கொங்கைத் துளைகளைந்த கோமானுஞ்—செங்குருதிப்
புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணாகத்
தொண்ணூறு மாறுஞ் சுமந்தோனுங்—கண்ணுதலோன்
நாடகத்தாலான் திருஞானத் திருமன்றம்
ஆடகத்தால் வேய்ந்தவபயனும். —சங்கரசோழனுலா.

iv பராந்தகனே சைவனாகத் தோன்றுகதோடு தன்னுடைய பக்தியைச் சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்தைப் பொன்வேய்ந்து புதுப்பித்ததாற் காட்டினான். (சர்வகலாசங்க சரித்திரப்பேராசிரியர் டாக்டர் ராவ்பகதூர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள். புராதன இந்தியா ௧௦௧.)

௩ கோபிநாதராயர் அவர்கள் கொள்கைப்படி சோழசளுக்கியான முதலாம் குலோத்துங்க சோழதேவன் ஒருவன்.

௪ "அங்கையா ரழலனழகார்சடைக் கங்கையாருறையுந் திருமழுவாடி"க் கோயிற் கல்வெட்டு ஒன்று வருமாறு:- (௧) ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாலை மிடைந்து ...... ௨, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௧௦, ௧௧, ௧௨ * (௧௩) மண்முழுதுங்களிப்ப மநுநெறிவளர்த்துத் தன்கோயிற் கொற்றவாசற் புறத்து மணிநாவொடுங்க முரசு (௧௪) கள் முழங்க விஜயமும் புகழும் மேன்மேலோங்க வாழிவாழி இம் மாநிலங்காக்கத் திருமேனிப் பொற்றோ (௧௫) ட்டெழுது பத்தாண்டு வந்திறை முன்னே மன்னவர் சுமந்து திறை நிறைததுச் சொரிந்த செம் (௧௬) பொற்குவையால் தன் குலநாயகம் தாண்டவம் பயிலுஞ் செம்பொன்னம்பலஞ் சூழ்திருமா (௧௭) ளிகையும் கோபுரவாசல் கூடசாலைகளும் உலகுவலங்கொண்டொளி நேமிக் கு (௧௮) லவரை உதைய குன்றமொடு நின்றெனப் பசும்பொன் மேய்ந்து இருநிலந் தழைப்ப இமையவர் களிப்ப பெரியதிருநாள் பெரும் (௧௯) பெயர்விழாவெனும் உயர் புரட்டாசி உத்திரட்டாதியில் அம்பல நிறைந்த அற்புதக்கூத்தர் இம் (௨௦) பர் வாழ எழுந்தருளுவதற்குத் திருத்தெற்கோயில் செம்பொன்மேய்ந்து பருத்திரள்முத்தின் (௨௧) பயில்வடம் பரப்பி நிறைமணிமாளிகை நெடுந்திருவீதி தந்திருவளர் பெயராற்செ(௨௨)ய்தமைத்தருளி பைம்பொற்றொழித்த பரிக்கலமுதலாச் செம்பொற் கற்பகத்தொடு பரிச்சிர் (௨௩) ரமும் அளவில்லாதன வொளிபெற வமைத்துப் பத்தாமாண்டில் சித்திரைத் திங்கள் அத்த(௨௪)ம் பெற்ற ஆதித்தியவாரத்துத் திருவளர்மதியின் திரயோதசிப் பக்கத்து

---

* மெய்க்கீர்த்தி முழுவதும் எழுதினால் அதிகஇடம் கொள்ளுமென்றஞ்சி விடப்பட்டது.

இன்ன பலவும் இனிது (உகு) ச்மைத்தருளி .... புவனிமுழு துடையாளொடும் வீற்றிருந்தருளிய கோபரகேசரிபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் விக்கிரமசோழதேவற்கு யாண்டு கடு-வது என்பதால் இவ் விக்கிரமசோழதேவர் ஒருவர்.

> ஞ்ாவிரும் பாணில் வெங்களத் திவேட்டுக் கலிங்கப்
> பெரும் பரணிகொண்ட பெருமாள்—தரும்புதல்வன்
> குற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கள்
> முற்றப் புரக்கு முகில்வண்ணன்—பொற்றுவரை
> யிந்து மரபின் றிருக்குலத் துதிலிருந்து
> வந்து மநுக்குலத்தை வாழ்வித்த—பைந்தளிர்க்கை
> மாதர் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
> காதர் பெயரான் கனகனவன்—யாதானுந்
> தீட்டற் கரிய திருவே திருமாலை
> சூட்டித் திருமகுடஞ் சூட்டியபின்—நாட்டு
> முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தஞ்
> சிறைவிட் டரசருளிச் செய்து—கறைவிட்ட
> மைந்நாக மோரெட்டு மதளுக மோரெட்டும்
> பைந்நாக மோரெட்டும் பாங்கெடுத்து—இஞ்ஞாலம்
> தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத
> பேதைக்குந் திமிரப் பொறைநீக்கி—மாதரில்
> ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைகட்
> டக்க சிலைமைத் தனித்தேவி—மிக்க
> புவன முழுதுடைய பொற்றொடியுந் தானும்
> அவனிசுரர் சுருதி யார்ப்ப—நவநிதிதோய்ந்
> தேத்தற் கருங்கடவு ளெல்லையி லானந்தக்
> கூத்தைக் களிகூரக் கும்பிட்டுப்—போற்றினமேல்
> தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
> தொல்லைக் குறும்பு தொடுத்தெடுத்து—மல்லற்
> றசும்பு வராகனிற் றன்பெருநாவ
> லசும்பு பசும்பொன் னடுக்கி ......
> ... . குலத்தான்
> ஆடுந் திருப்பே ரம்பலமும் கோபுரமு
> மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடப்
> பொலங்கோட் டிரண்மேருப் பூதமும் போல.

—குலோத்துங்க சோழனுலா

ii தாணியொரு கவிகை தங்கக்கலிங்கப்
பாணி புனைந்த பருதி—முரணில்
புரந்தானேகி பொருவ வகில
துரந்தான் விக்கிரம சோழன்—பயந்தபயனென்
றுஅய் பெயர்கொண் டகிலாண் டமும்புரந்த
சேவய் பெரிய திருக்குலத்து—நாயகன்
சிற்றம்பலமுந் திருப்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய
மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுந்
தூளிகையு மத்தேருவுந் தோரணமும்—ஆளுடையார்
கோயிற் றிருக்காம கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் றுயிற்றி. —ராஜராஜதேவருலா.

iii "கூத்தர்இரண்டுலாக்களிலும் தக்கயாகப்பரணியிலும் விரித்துரைத்த தில்லைத் திருப்பணிகளுக்கும் பொருந்த நோக்குமிடத்து இப் புராணத்துட் கண்ட பெயரும், செயலும் அகளங்கன் மகனான சென்னி, அநபாயன் என்னும் பெயர்களால் விளங்கிய குலோத்துங்கன் (உ) என்பானுக்கே உரியவாம்" (வித்வான் ரா. ராகவய்யங்காரவர்கள், செந்தமிழ் சு.)

ஆகவே இவ் வைவருள் பொன்னம்பலம் பொன்னின் மயமாக்கியவன் இன்னானென்று தாபிக்கப்படும்வரை அச்செய்திகொண்டு காலம் துணிதல் உபயோகமற்றதாகும்.

இனி, செந்தமிழ் மூன்றாந்தொகுதியில் அக்காலத்துப் பத்திராசிரியராயிருந்த சேதுசமஸ்தான வித்வானான உ. வே. திரு. ரா. ராகவய்யங்கார் சுவாமிகள் இரண்டாங்குலோத்துங்கன் காலத்தவராவர் நமது சுவாமிகள் என்றும், அக்காலத்தேதான் திருத்தொண்டர் புராணமும் பாடப்பட்டதாதல் வேண்டுமென்றும் முடிவு செய்ததற்கு உள்ள ஆதாரங்கள் சென்னி அநபாயன் குலோத்துங்கன் என்னும் பெயர்களும், முன்னர்க் காட்டிய பொன்னம்பலம் பொன்னாற் குயிற்றியதுமேயாம். இவர்கள் கல்வி கேள்வி நிறைந்த பெரும்புலவர். தாம்கொண்ட கூற்றைச் சாதிக்க வல்லவ ரென்றாலும், தக்க காரணங்களுண்டாயின் தம் கூற்றை மாற்றுமியல்புடையவர்கள் என்பது பலருமறிந்ததொரு செய்தியாம். ஆகையான் உண்மை காண்ப தொருபொருளை நினைத்தே இத்துணை யாராய வேற்பட்டதுமாம்.

முதலாவதாக, இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் நமது தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் என்போமாயின் இவனது தந்தையான விக்கிரமசோழதேவர் காலத்தேயே முன்னர்க் காட்டிய திருவாரூர்ச் சாஸனத்தால் பெரியபுராணத்திற் காணும் திருவாரூர்ச் சிறப்பிலுள்ள மநு, மநுமைந்தன் வரலாறுகள் சம்பந்தமான செய்திகள் படிக்கப்படுகின்றன. அது எவ்வித முண்டாயிற்றெனும் வினா எழும். அதற்குக் கொஞ்ச நாள் முன்னாவது அச்சரிதங்கள் வெளியாயிருக்க வேண்டுமென்பது திண்ணம். ஆகவே இரண்டாங் குலோத்துங்கன் என்று கொள்ளுதல் தவறுடையதாகும்.

இரண்டாவதாக, பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தி கொண்டு தீர்மானிக்கலாமென்றாலோ அதுவும் இயலாதகாரியமென்று முன்னர்க் காட்டினும்.

மூன்றாவதாக சென்னி அநபாயன் குலோத்துங்கன் என்ற பேர்களைக்கொண்டு தாபிக்கலாமென்றாலோ இப்பெயர்கள் பலராலும் உபயோகிக்கப்பட்ட பொதுப்பெயர்கள் என்று காண்கிறது. இதற்காக விக்கிரமசோழனுலா, ராஜராஜசோழனுலா சங்கரசோழனுலா இம்மூன்றுலாக்களையும் நோக்குவோமாயின் பின்வருமாறு காணப்படும்.

	விக்கிரம சோழனுலா.	ராஜராஜன் உலா. கண்ணிகள்	சங்கரசோழன் உலா.
அகளங்கன்	கூக, கருஉ, கஅஉ, உ0அ, உருசு, உஅசு	கசு0	கஎங
அக்கங்கன்	கருஉ	...	கஎங
சென்னி	ககஅ, கசஎ, கருக, உரு0, உசக, ஙசஉ	சகூ, அஅ, ஙசஅ	கஎச
உத்துங்கன்	கஉச	...	...
சயதுங்கன்	கசஅ, கஅஉ, ஙஉங, ஙசஉ	...	கஙஎ, கஎங
அனகன்	...	...	கசுசு
அநபாயன்	...	ஙகரு	ககசு
உபயகுலோத்தமன்	...	கஎங	...
அபயன்	...	உஅச	கஎங, உ00, உருஉ
சயதரன்	...	...	உருசு
மானதன்	...	கசுரு	...

(தொடரும்.)

மஞ்சள்.

திருவண்ணாமலை ஆயுர்வேத வைத்தியர் அ. வேங்கடாசல முதலியார் அவர்கள் எழுதியது.

சீரும் சிறப்பும் மலியப்பெற்று வளஞ்சிறந்து விளங்கிய நமது நாட்டிற்கு மங்களகரமாய் பிரகாசிப்பவைகளுள் முக்கியமானவை மஞ்சள், குங்குமம் என்னும் இரண்டேயாம். இவற்றின் பெருமைகளை நமது தேவாலயங்களும், மடாலயங்களும், சாஸ்திரவகைகளும்; பொதுவிதி, சிறப்புவிதி, விசேஷவிதி என்னும் பாகுபாடுகளால் பரப்ப விவரியா நிற்கும். “இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை” என்ற சீரிய மொழிக்கு இலக்காய் இல்லாள் என்ற பெரும் பட்டப்பெயரைத்தருவன மஞ்சளும் குங்குமமுமேயாம். இவற்றை யணிகலனைப் பூணாத இல்லக்கிழத்தி அப்பெயருக் குரியளேயாகாள்.

இவ்வளவு பெரும் புகழ்வாய்ந்த இரண்டனுள்ளும் தலையாய் நிற்கும் மஞ்சளைப்பற்றி, மிக முக்கியமானதாய், உயிரை உடலில் சுகமாய் வசிக்கச்செய்வதாய், நித்யகடமைகளைப் போதிப்பதாய், ஆபத்துற்றபோது நிவர்த்திப்பதாய் எப்போதும் இன்றியமையாததாய், சுகாரோக்கியத்தைப் பாதுகாப்பதாய் உள்ள வைத்திய சாஸ்திரம் கூறுவதைக் கவனிப்பது அத்யாவசியமேயாம்.

பெயர்.

மஞ்சள், காதரி, குனிவிந்தம், நிசி, அரிசனம், பீதம், காஞ்சனி, கசறப்பம், முதலாய பலபெயர்கள் வைத்திய நிகண்டு, சூடாமணி நிகண்டுகளில் தோற்றலாம்.

வகைபேதம்.

கறிமஞ்சள், பூசுமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், முதலிய சிலவாம். இவற்றுள் முன்னிரண்டும் வீட்டுபயோகம், பின்னிரண்டும் வைத்திய உபயோகம் என பிரிக்கப்பட்டு வாழ்க்கையை சீர்படுத்தி வருகின்றன என்பது அறுப்பவரே

யாம். வைத்திய மஞ்சளை நீக்கி வீட்டுமஞ்சளாகிய, கறிமஞ்சள், பூசுமஞ்சள் என்னும் மஞ்சள் கிழங்கைப்பற்றிக்கூறும் பொதுவிதியாவது:—

தினசரி, நமது ஆகாரவஸ்துக்களை, சுத்தப்படுத்தி, ஜீரணமாக்கி, எழுபத்திரண்டாயிரம் நரம்புகளுக்கும் உத்ஸாகத்தைக் கொடுத்து, வாத பித்த ஐய நாடிகளை கிரமப்படுத்தி தேகத்தைப் போஷித்துவரும் அரியசக்தி இந்த மஞ்சளுக்கு இருப்பதனாலேயே நமது தேக, தேச ஒழுக்க, சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு இந்தமஞ்சளை பிரதிதினமும் சேர்த்துவரும்படி முன்னோர்கள் செய்திருக்கின்றனர். அதனை நோக்க அப்பெரிய அநுபவசாலிகளின் அறிவு விசாலத்தை எவரே கணிக்க வல்லார்.

மஞ்சளை ஆகாரவஸ்துக்களில் சேர்த்துவருவதால் தீரும் வியாதிகள்.

௧. தேகத்தின் வலிகள்
௨. சலதோஷம்
௩. நீரேற்றம்
௪. தலைவலி
௫. தலைபாரம்
௬. நீர்க்கோர்வை
௭. அக்கினி மந்தம்
௮. மந்தாக்கினி
௯. பித்தம்
௧௦. வாந்தி
௧௧. ஒக்காளம்
௧௨. வாயு
௧௩. இருமல்
௧௪. கற்றாழை நாற்றம்
௧௫. புலால் நாற்றம்
௧௬. துர்நாற்றம்
௧௭. அதிவியர்வை
௧௮. முகப்பரு
௧௯. ஐயம்
௨௦. சிரோரோகங்கள்
௨௧. கர்ண ரோகங்கள்
௨௨. வாய் நீர் ஊறல்
௨௩. அம்மை உஷ்ணம்
௨௪. மயிர்ப் பிளவு
௨௫. செம்பட்டைமயிர்
௨௬. சொறி
௨௭. சிரங்கு
௨௮. தினவு
௨௯. தேகத்தில் உப்பு பூத்தல்
௩௦. தலைச்சுண்டு
௩௧. சொள்ளு ஒழுகல்
௩௨. அதிக சளிஒழுகுதல்
௩௩. நீர் மல சம்பந்தமான பலவித குற்றங்கள்
௩௪. அஜீர்ணபேதி
௩௫. கிராணி
௩௬. வாதகுன்மம்

௩௭. பீனசம்
௩௮. கன்னக்கிரந்தி
௩௯. மூக்கரையன்
௪௦. அருசி
௪௧. வாய்நாற்றம்
௪௨. பல் ஈறு சுரத்தல்
௪௩. ஈறு உதிரம்
௪௪ பல்ஆட்டம்
௪௫. பிரமேகம்
௪௬. வாதமிகுதி
௪௭. வயிற்று இரைச்சல்
௪௮. கை கால் குத்தல்
௪௯. அசதி
௫௦. சோம்பல்
௫௧. அதிக நித்திரை
௫௨. நித்திரையின்மை
௫௩. காமாலை
௫௪. சோகை
௫௫. பாண்டு
௫௬. சிறு கருப்புப் புள்ளிகள்.

முதலிய பல வியாதிகள் தேகத்தில் தோன்றாமலும், தோன்றினும் விருத்தியாகாமலும், தடைப்படுத்தல் மஞ்சளின் முக்கிய குணங்களில் ஒன்றாம். ஆகாரத்தில் குறைந்த அளவாக சேர்க்கப்படுவதால், அறுசுவை யுணவில் உப்பும்—தாம்பூலத்தில் சுண்ணாம்பும்—கலங்கல் ஜலத்தில் தேத்தான் வித்தும், ஔஷதமாக நின்று தோஷங்களைப் போக்குவதுபோல இந்த மஞ்சளும் ஆகாரவஸ்துக்களிலுள்ள தோஷங்களைப்போக்கி சுத்தமாக்கி இரைப்பை முதலிய ஜீரண கருவிகள் கெடாமலும் அஜீரணம் பேதி முதலியன உண்டாகி தேகம் சீர்கெடாமலும் பாதுகாத்துப் பெரிய உபகாரத்தைச் செய்துவருகிறது.

மஞ்சளைப் பூசிக் குளிப்பதன் பயன்.

குளிக்கும் போதெல்லாம் பூசுமஞ்சளைத் தேகத்தில் ஒவ்வோர் பாகத்திலும் நன்றாய்ப்படும்படியாகத் தேய்த்துச்சற்று நேரம் ஊறியபின்பே ஸ்நானம் செய்தல் என்பது நமது நாட்டுக் குலதெய்வங்களாகிய வனிதா ரத்தினங்களுக்கு ஏற்பட்டுள்ள வழக்கமாகும். சுபசோபனங்களில் முதன்மையாய் விளங்கக்கூடிய மஞ்சளால் ஸ்நானம் செய்து வருவதால் நமது மங்கை மணிகள் அடையும் பயன்களிற் சில அடியிற்காண்பனவாம்.

மஞ்சளைப் பூசிக் குளிப்பதன் பயன்.

க. ருதுகால பேதம்
உ. ருதிரச்சிக்கல்
ங. சூதகபாண்டு
ச. சூதகச்சிக்கல்
ரு. சூதகக்கட்டு
சு. சூதகக்கட்டி
எ. சூதகங்கண்டு மறைதல்
அ. அடுத்தடுத்து சூதகங்காணல்
கூ. நாலைந்துமாதத்து ஓர்முறை காணல்
கo. பெரும்பாடு
கக. சூதக நிறபேதம்
கஉ. சூதக காலபேதம்
கங. சூதக வயிற்றுவலி
கச. மணிக்குடல் வெப்பம்
கரு. கர்ப்பகால நீர்க்கட்டு
கசு. கர்ப்பகால மலக்கட்டு
கஎ. பிரசவக்குற்றம்.
கஅ. பால் இல்லாமை
ககூ. பால் வறட்சி
உo. பால் தடிப்பு
உக. பாலில் நாற்றம்
உஉ. பாலில் புளிப்பு
உங. பயோதர புண்
உச. மார்புச் சிலந்தி
உரு. மார்பு வெடிப்பு
உசு. நமைச்சல்
உஎ. உப்புப்பூத்தல்
உஅ. கழுத்து நரம்பிழுத்தல்
உகூ. இடுப்புக் குடைச்சல்
நo. முதுகு எலும்பு வலி
நக. தொடைவலி
நஉ. கெண்டைக்கால் வலி
நங. அடிவயிற்றுவலி
நச. மார்புவலி
நரு. தோள்பட்டை வலி
நசு. கைகால் அசதி
நஎ. மறதி
நஅ. மூளைக் கொதிப்பு
நகூ. பயம்
சo. மனக்கலக்கம்
சக. பயங்கரக் கனவுகள்
சஉ. வாய் நாற்றம்
சங. வாய்ப்புண்
சச. கர்ப்பகால வாந்தி
சரு. கர்ப்பகாலமயக்கம் (மசக்கை)
சசு. கர்ப்ப கிராணி
சஎ. பிரசவ கிராணி
சஅ. தலைபாரம்
சகூ. தலைவலி
ருo. ஒற்றைத் தலைவலி
ருக. முன் தலைவலி
ருஉ. பின் தலைவலி

இப்படிப் பல வியாதிகள் நமது நாட்டில் பெண்மக்களைப் பிடித்துப் படாதபாடுபடுத்திவைப்பதும்; இவற்றில் சிலவற்றுலோ பலவற்றுலோ அவஸ்தையுறும் அப் பாவைமார்களைப் பேய், பிசாசம், முனி காட்டேரி முதலிய துர்த்தேவதைகள் பிடித்திருப்பதாய் எண்ணி பூசாரி, மந்திரவாதி, தந்திரவாதிகளாகிய வேஷக்காரரிடம் ஒப்புவித்து சாதி, சமய, ஒழுக்க

வழக்கங்களுக்கு மாறுகப் பூசை, பலி, தலையாட்டம், குறி சொல்லல் பேயோட்டல் முதலிய அநாசாரங்களைக்கொண்டு, குலப்பெயரைக்கெடுத்தும், கோத்திரக்கொள்கையை விடுத்தும் பலவிதச் சங்கடங்களுக்கு ஆளாக்குதல் சில குடும்பங்களில் வழக்கமாயிருக்கிறது. பெண்பாலராகப் பிறந்தோர்க்குப் பெரும்பாலாய்க் காணும் வியாதிக ளத்தனையும் சூதகவாயுவாலும் சுரோணிதக் குற்றத்தாலுமே யென்பதை அநுபவசாலிகள் நன்கறிவர்.

இத்தகைய குற்றங்கள் பலவற்றைப்போக்கி, இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி, சூதக, சுரோணித மாறுதல்களை சமனமாக்கி திரிநாடிகளைச் சரிவர நடைபெறச்செய்து இளம் பெண்கட்கு அத்யாவசியம் வேண்டிய கட்டழகை அதிகரிப்பித்து, குடும்ப பாதுகாப்புக்காக மணவாழ்க்கையில் மனதைச் செலுத்தி, கங்கைபோல் பாலை உற்பத்தியாக்கி, அப்பாலைப் பருகும் குழந்தைகளுக்கு அந்தக் குற்றமற்ற பாலே ஆகாரமாகவும் ஔஷதமாகவும் ஆகுமாறு உதவிபுரிந்து வருகின்றது. சுருங்கக்கூறுமிடத்து கர்ப்பவாசத்தை சுத்தீகரித்து, அதினின்றுண்டாகும் சந்ததிகளை விருத்திபாக்கு முறையில் நோயற்ற தேகிகளாக வளரச்செய்து குடும்பப் பாதுகாப்பளிப்பதே மஞ்சளின் முக்கிய இயற்கைக் குணமென்பதை நமது மூதாதைகளாகிய மகரிஷிகள் கண்டுணர்ந்தே பிரஜா உற்பத்திக்கு ஜீவாதாரமாகிய கர்ப்ப பூமியை பண்படுத்த மஞ்சட் குளியலைப் பெண்மக்கட்குத் தினசரி கட்டாயநியமமாக ஏற்படுத்தியுள்ளார்கள்.

பால் வளர்ச்சி.

கர்ப்பிணிகள், பிரசவஸ்திரீகள் பாலூட்டுந் தாய்மார்கள், இவர்கள் பிரதிதினமும் காலையில் ஸ்நானம் செய்யும்போது, அடிவயிறு, மார்பு, முகம், இவ்விடங்களில் மஞ்சளை அதிகமாகப்பூசி, நன்றாய்த் தடவித் தேய்த்துக் குளிக்கவேண்டியது அவசியமென வயது சென்ற பாட்டிமார்களும் அநுபவசாலிகளான வைத்தியர்களும் வற்புறுத்திக்கூறுவர். இதன் கார

ணம் இரத்த ஓட்டத்திற்குத்தடையாயுள்ள மாசுகளையெல்லாம் அகற்றி இரத்ததாரையையும், இரத்த ஓட்டத்தையும் கிரமப் படுத்தி, இரத்தத்திலுள்ள கொழுமையையும், பால்சத்தை யும் அதிகப்படுத்தி அவசியமானால் இரத்தத்தையும் (வேண் டிய அளவு) பாலாக மாறச்செய்து, தேகத்திற்கு வேண்டிய பாதுகாப்பைக் கொடுத்துத் தாயையும் குழந்தையையும் போ ஷித்துவருதல் பிரத்தியட்சமாகும், இரத்தத்தின் விகற்பங் களை மாற்றுதல் மஞ்சளுக்கு இயற்கை. ஏதேனுங் காயம் பட்டு அல்லது அடிபட்டு இரத்தங்கட்டிக்கொண்டால்அதைக் கரைக்க மஞ்சள் பற்றுப்போடுதல் நமது நாட்டு வழக்கம். வீக்கங்களைமாற்றவும் மஞ்சள்அரைத்துப் பூசிவருதல் பழமை. இப்படியே பாலை உற்பத்திசெய்யவோ, உற்பத்தியான பாலை விருத்தியாக்கவோ, அல்லது பால்விருத்திக்கு மாறாகவுள்ள குற்றங்களை நீக்கவோ மஞ்சட் குளியல் முக்கிய மருந்தென் பது நம்மவரின் அநுபவம். சோப் என்னும் சவுக்காரக்கட்டி களும் கோவா பவுடர் என்னும் வாசனைப் பொடியும் மலிந்துள்ள இந்நாளில் இது வெறுங் கதையாகக் காணலாம். அநுபவசாலிகளுக்கு இதனுண்மை புலனும். பால்தரும் (கன் றையுடைய) பசுக்களுக்கு நெற்றி, பால்மடி, வால்புறம்) இவ் விடங்களில் மஞ்சள்பூசி, குங்குமப்பொட்டிட்டுக் காமதேநு வாகப் பூசித்து வருவதை இன்றும் சிலகுடும்பங்களில் காண லாம்.

இப்படிப் பசுவிற்கு, நெற்றி, பால்மடி, வால்புறம் இவ்வி டங்களில் மஞ்சள் பூசுதல் பால் உற்பத்தி அதிகமாகவும் பா லில் குற்றமற்றும் இருக்கவேண்டுமென்பதே. பால் உற்பத் திக்கு முகம் பால்மடி வால்புறம் மூன்றுமே முக்கிய இடங்க ளாகையாலும், இவ்விடங்களில் மஞ்சள் பூசிவருவதால், பால் உற்பத்தி யதிகரிப்பதோடு, பாலில் உண்டாகும் பல துர்க் குணங்கள்நீங்கி, பால் தெளிவடைந்து, நன்மணத்துடன், இன் சுவையாய், ததும்பிவழிய அப்பாலைக் குடிக்கும் இளஞ் சிறு கன்று நோயற்றுச் சுகதேகியாய்வாழவும், இதன் காரணமாய் ஆவினம் பெருகவும், இப் பெருக்கால் தேசம் செழிக்கவும்

காரணமாதல் கண்டே இவ்வழக்கத்தை நித்திய கடமையில் அமைத்தனர் ஆன்றோர். (தொடரும்.)

---

*சுதந்திரப் பாக்கள்.

பண்டித—ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் இயற்றியன.

'திண்ணிய துணிவும் திகழ் சுதந்திரமும்
சேர்ந்தவர் மரபுதித் தோம்' என்
றெண்ணியே செருக்கும் மாந்தரீர்! 'அடிமை
எனஒரு மனிதனு யினும் இம்
மண்ணுல கதனில் உயிருட னிருந்து
வாழ்ந்திடு வரையிலும் நீவிர்
உண்மையிற் றுணிவும் உயர்சுதந்திரமும்
உடையவர் ஆவிரோ? உரையீர்! (க)

சுற்றநம் முடைய சோதரர்க் கடிமைத்
துன்பம்வந் துற்றிடுங் காலை
மற்(று) அவர்அடிமைத் திறத்தினை இரக்கம்
மல்கிய உளத்தினராய் நீர்
உற்றுணர் கிலிரேல், உயர்சுதந் திரமே
உறுவதற் கென்றுமே தகுதி
யற்றதந் நலத்த ராக்கிய அற்ப
அடிமைகள் அல்லிரோ? அறையீர்! (உ)

மன்பதைக் குறும்ஊத் துன்பையும் துடைத்தல்
மற்(று)அவர் போன்றநம் கடமை
என்பதை மறந்தே இரக்கமில் கடின
இருதயம் வாய்ந்தவராகித்

---

* இவை J. R. Lowell என்ற மேற்றிசைப் புலவர் இயற்றிய "Stanzas on Freedom" என்பதன் மொழிபெயர்ப்பு.

தன்பெரு நலமிங் கொன்றையே கருதி
தனைப்பிடித் திருக்கியே நாளும்
துன்புசெய் தளையைத் துணித்திடமேலோர் மெய்ச்
சுதந்திரம் என்பது? சொல்வீர். (௫)

இன்னதே உண்மைச் சுதந்திர மன்று
'யாதுமெய்ச் சுதந்திரம்?' எனிலோ,
தன்னுடன் பிறந்தோர் தரித்துள எல்லாத்
தளையையும் கூடவே தாங்கி
மன்னுமெய்ச் சுவதந்திரமவர் எய்தி
மனமுற விரும்பலும், மற்றும்
பன்னரும் விதத்தும் பாடுபட் டவரைப்
பற்றிய தளைதவிர்த் தலுமாம். (௬)

ஆதரவற்ற தாழ்நிலை யினர்க்கும்
ஆக்கையில் வலிமையில் லார்க்கும்
கோர்தறப் பரிந்து பேசுதற் கஞ்சும்
கோழைகள் அடிமையா குவரே
தீதறத் தனது மனமறிந் திட்ட
செய்தியைத் தெரிப்பின் நிச்சயமாய்
ஏதமார் வெறுப்பு வெம்பழி வசையென்
றிவ்வொருங் கெய்திடு மெனினும் (௭)

ஓதும்மற் றிவற்றை ஒருபெரும் பேறு
உள்முவந் தேற்றிடா துட்கி
ஏதும்வாய் திறந்து பேசுதற் கஞ்சும்
ஈனரே அடிமையா குவரே
நீதிசால் நெறிக்கண் நிற்பவர் தொகைதான்
நிகழ்த்திடில் இரண்டு மூன்றுன்
போதினும் அவரைப் புல்லுதற் கஞ்சும்
புல்லனே அடிமையா குவனே. (௮)

மனோரஞ்சிதம்.

குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc., எழுதியது.

எப்படிக் கூப்பிடுகிறது?—சில ஜாதியார் தம்முடைய மனைவிமாரை அடி பிடி வாடி போடி ஏண்டி என்னடி என்று அழைக்கிறார்கள். சில ஜாதியார், யாங்கிறேன் என்னங்கிறேன் ஒன்னைத்தாங்கிறேன் வாங்கிறேன் என்று அழைக்கிறார்கள். சிலர் இந்தா அடே ஒன்னைத்தானே கை கூ ஓய் ஏ என்று மாடு ஓட்டுகிறார்கள். சில ஜாதியார் ஏபிள்ளை என்னபிள்ளை அடபிள்ளை என்று அழைக்கிறார்கள். இவைகளெல்லாம் எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. ஆனால் எப்படிக் கூப்பிடலாம் என்ற விஷயம் பெருத்த யோசனையில் இருக்கிறது.

* * *

ஒரே அபிப்பிராயம்:—என் சிநேகிதருக்கும் அவருடைய மனைவியாருக்குந் தினந்தோறும் சண்டை நடந்துகொண்டே யிருக்கும். ஒருநாள் நான் "நண்பரே! என்ன சண்டை பெரிதாயிருக்கிறதே கொஞ்சம் ஒற்றுமைப்பட்டால் நன்றா யிருக்குமே" என்று சொன்னேன். அதற்கு அவர் "சண்டையடித்துக்கொண்டு தொண்டை யெல்லாம் கட்டிப்போய்விட்டது; துன்பமாகத்தான் இருக்கிறது; என்ன செய்யலாம்?" என்றார். "காதலிருவர் கருத்தொருமித்தால் இன்பமாயிருக்கும்" என்றேன். நண்பருக்குக் கோபம் பொங்கிவிட்டது. அந்த இழவைச்சொல்லாதே. எங்கள் ரெண்டு பேருக்கும் ஒரே அபிப்பிராயமாக இருப்பதால்தான் சண்டையடித்துக்கொண்டு சாகிறோம். எனக்கு அவளை அதிகாரம்பண்ண ஆசை. அவளுக்கு என்னை அதிகாரம் பண்ண ஆசை. இப்படிக்கொஞ்சங்கூட வித்தியாசமில்லாமல் இருவருக்கும் ஒரே அபிப்பிராய மிருப்பதுதான் இவ்வளவு சண்டைக்கும் காரணமா யிருக்கிறது. ஆதலால் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் ஒத்த அபிப்பிராய மில்லாமல் மாறுபட்ட அபிப்பிராயம் பார்த்துத்தான் கலியாணம் பண்ணவேணுமென்றார்! எப்படி? சரிதானே!

வயிறுமட்டும் வளருகிறது:—“நமது நாட்டிலுள்ள பொது ஜனங்களில் பலர் தினந்தோறும் மூக்குப்பிடிக்கப் பலவகையான ஆகாரங்களையும் தலையணைக்குப்பஞ்சு அமுக்குவதுபோல் வயிறு முட்ட வைத்து அடைக்கிறார்கள். அதனால் அவர்களுடைய வயிறுமட்டும் நன்றாகப் பரங்கிப்பழம்போற் பெருத்து விடுகிறது. தேகாப்பியாசமின்மையால் மற்ற கை கால் தலை முதலிய உறுப்புக்கள் எல்லாம் சிறியனவாகத்துர்ப்பலமாகவே இருக்கின்றன. சில சமயங்களில் மேலும், வயிறுவேறு அஜீரணத்தால் பொருமிப் போகின்றது. பிறகு லேகியங்களை உருட்டி உள்ளே தள்ளுகிறார்கள். மிகப் பரிதாபமாக இருக்கிறது.” என்று என்னிடத்தில் ஒரு வைத்திய நண்பரவர்கள் சொன்னார்கள். அப்பொழுது நான், “அமெரிக்காவில் மீசைக்காரர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒருசபை கூட்டி, மிக நீண்ட மீசையுடையவருக்குப் பரிசு அளித்தார்கள். அது போல் இவர்களும் ஒரு சபை கூட்டுதல் நல்லது” என்றேன். அவர்கள், “இவர்கள் எல்லோரும் தங்களுடைய வயிற்றைத் தூக்கிக்கொண்டு வரமுடியவே முடியாது.” என்றார்கள். இரண்டுபேரும் சிரியடாசிரி யென்று சிரித்தோம்.

* * *

வெயில்:—வெயில் மிகக் கடுமையாக விருக்கிறது. அக்கினிக் காவடிக்காகப் பரப்பப்பெற்ற நெருப்பில் நடப்பதைப் போல் இருக்கிறது தெருவில் நடப்பது. சூடு அள்ளிக்கொண்டு போகின்றது. மிதியடியும் குடையும்இன்றி நடப்போரெல்லாம் துடித்துக்கொண்டே ஓடுகிறார்கள். பள்ளிக்கூடத்துக்குப்போகும் பெண்குழந்தைகளிற்சிலர் மிதியடி குடையின்றிப் பறந்து தவித்துக்கொண்டு செல்கிறார்கள். இதைப் பார்க்கும் பெற்றோருக்கும் தமது பெண் குழந்தைகள் மிதியடி குடையைத் தொடக்கூடாது அவை பெண்களுக் குரியன வல்ல என்று சொல்ல மனமும் வருகிறதே! மற்றும் இந்தக் கடும் வெயிலில் சந்தைக்கும் கடைத் தெருவிற்கும் வேற்றிடங்கட்கும் செல்லும் பெண்டீர்கள் படும்பாட்டிற்கு அளவே யில்லை. துடித்துக் கொண்டுதான் செல்லுகிறார்கள். ஐயோ! மிதியடியைப் போட்டுக்கொண்டால், குடை பிடித்துக் கொண்டால்

என்ன குடிமுழுகியாபோகும். மிதியடி குடையைப்போகப் படுத்தக்கூடாதென்று கண்டிக்கும்புருஷர்கள் அவர்களை வெளி யில் நடக்கவிடக்கூடாது. இல்லை, அப்படி நடந்துதான் தீர வேண்டும் என்றால் தடையின்றி மிதியடி குடையை வாங் கிக்கொடுக்கவேண்டும். இவை யிரண்டையும் ஒப்புக்கொள் ளாதவர்கள் கடவுளை நோக்கிப் பெண்மக்களுடைய கால்களில் ஆட்டுக்கும் மாட்டிற்கும் இருப்பதைப்போல் குளம்பு முளை க்க வேண்டுமெனத் தவம் புரிதல் வேண்டும்!

* * *

புத்தகம்:—1598-ஆம் வருடத்தில் பதிக்கப்பெற்ற ஒரு அணு விலையுள்ள, "பேகன் வியாசங்கள்" எனும் புத்தகம் ஒன்றைச் சமீபத்தில் ஒரு ஆங்கில கனவான் 407 பவுனுக்கு வாங்கியிருக்கிறாராம். ஆ! ஆ!! அவர்கள் புத்தகத்தில் எவ் வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள். நம்முடையநாட்டில் படித் தவர்கள் பத்து ரூபாய் விலையுள்ள புத்தகம் பத்தணாவிற்கு அகப்படாதா என்று பார்க்கிறார்கள். படியாதவர்கள் தேடித் தேடித் திருடன்பாட்டு தெம்மாங்கு, தில்லாலே டப்பா உப் புமாப்பாட்டு தலையணை மந்திரம் காணாமற்போன கண்மணி அல்லது கனகப் பதக்கம் முதலிய திராவைப் புத்தகங்களையே வாங்குகிறார்கள்.

* * *

எப்படி நடைபெறும்?:—இந்த ஆண்டில் காங்கிரஸ் பிர சாரம் வழியாக நடைபெறவில்லை. ஒரு பக்கம் தேசீயக்கட்சி யாருடைய கிளர்ச்சியும், மற்றொரு பக்கம் சுயராஜ்ஜியக்கட்சி யாருடைய கிளர்ச்சியும் வலுவடைந்துவருகின்றன. இரண்டு கட்சியாரும் தத்தம் கட்சியை வலுப்படுத்துதற்குரிய வழியில் பிரசாரஞ்செய்து வருகிறார்களே யன்றிக் காங்கிரஸ் நிர்மாண வேலையைக் கவனிக்கவில்லை. "நீயும் நானும் சாமியாடினால் யாரடி பிள்ளை தூக்குகிறது" என்பதுபோல் இரண்டு கட்சி யாரும் தத்தங் கட்சியைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால் தேசீயவேலை எப்படி நடைபெறும்?

பத்திரிகை ஆராய்ச்சி.

'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் பின்வருமாறு ஒரு குறிப்புக் காணப்படுகிறது:—

ஆட்டச் சீட்டுகளைக் குறித்து ஒரு கதை சொல்லப்படுகிறது. ஆட்டச் சீட்டுகள் முதன்முதலில் பிரான்சுதேசத்தில் உண்டாயினவாம். 'ஆடுதன்' என்னும் ஜாதி அத்தேசத்தில் வைதீகரையும், 'ஸ்பேட்' என்பது போர்வீரரையும், 'டைமன்' என்பது தொழிலாளரையும், 'கிளாவர்' என்பது பயிரிடுவோரையும் குறிப்பனவாம். நான்கு ராஜாக்களும் அக்காலத்துப் பெரிய அரசர்களாகிய தாவீது அலெக்சாந்தர், சீஸர், ஷார்லமன் என்பவர்களையும்; இராணிகள் அலென், ஜூடித், எஸ்தர், பைலாஸ் என்பவர்களையும் குறிப்பனவாம். இவை நான்கும் குடிப்பிறப்பு, தைரியம், பக்தி, ஞானம் என்ற பெண்களின் நான்கு சிறந்த குணங்களைக் காட்டுவனவாகும். 'ஜாக்கி' அல்லது 'நேவ்' என்பதோ சுத்த வீரர்களாகவோ அல்லது அவர்களின் பணியாளர்களாகவோ இருந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

௧௫ ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் சுதேசியக்கிளர்ச்சி தீவிரமாயிருந்தபோது ஆட்டச்சீட்டுகள் இந்தியாவிலேயே சுதேசிய படங்களுடன் அச்சிடப்பெற்று விற்பனைக்கு வந்தன. ஆனால், அவைகள் ஆதரிப்பாரின்றித் தானே ஒழிந்தனபோலும்.

* * *

ஏப்ரல் மாதத்திய 'மாடர்ன் ரிவ்யூ' வில் கீழ்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன:—

௧௮௬௧-ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாகவிருந்த மிஸ்டர் கிளாட்ஸ்டன், காகிதஇறக்குமதியின்பேரில் ஏற்பட்டிருந்த வரியை எடுத்துவிட்டார். அதுமுதல் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் பெருக்கமும் ஆதிக்கமும் விர்த்தியடையலாயின. ஆனால் பிரிட்டிஷ் சாமான்ய ஜனங்களின் பத்திரிகை வாசிப்பது அதிகரித்தது ௧௮௭௦ ஆண்டில் ஆரம்பக்கல்விச்சட்டம் ஏற்பட்டதுமுதலேஎனக் கூறலாம். இக்காரணங்களாலேயே ஆங்கிலப் பத்திரிகை நீடித்த காலம் செல்வாக்குடன் வாழ்ந்துவருகின்றன. மார்னிங்போஸ்டு ௧௭௭௨-லும், டைம்ஸ் ௧௭௮௫-லும், ஸ்பெக்டேடர் ௧௮௨௮-லும்,

பஞ்ச் ௧௮௪௰ லும்; சர்ச் கார்டியன் ௧௮௪௬ லும், மாஞ்செஸ்டர் கார்டியன் ௧௮௨௧ லும், ஆரம்பிக்கப்பெற்று நெடுங்காலமாய்ச் செல்வாக்குடன் நடைபெற்று வருகின்றன.

*　　　*　　　*

மார்ச்சுமாதத்திய 'ஹெல்த்' பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது:—

எண்ணெய் தேய்த்து முழுகுவது தேகத்துக்கு ஆரோக்கியமானதென மேனாட்டு வைத்தியமுறைகளில் தேர்ச்சிபெற்றோர்களும் இப்போது ஒப்புக்கொள்ளுகிறார்கள். முக்கியமாய் தேகப்பயிற்சிமிகுதியாகச்செய்த பின்னும் முன்னும் எண்ணெய் தேய்த்துக்கொள்வது வழக்கமாயிருக்கிறது. எண்ணெயானது தோலுக்குப் பதனிடுவது போன்றது. அதைத் தேய்ப்பதில்தான் நல்ல பலன் உண்டாகிறது. எண்ணெய் தேய்த்துக்கொள்வதால் தோலிலும் நாடிகளிலும் ரத்த ஓட்டம் விர்த்தியடைகிறது; இதனால் தேகத்திலுள்ள உஷ்ணம் வெளிப்போகாதபடி காக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் உஷ்ணம் அதிமாயிருத்தலால் சரீரத்தின்மேற்றோல் வறட்சியடைந்து செதிள்களாய் உதிருகிறது. இதைத்தடுப்பதற்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். எள் நெய், தேங்காய் நெய், ஒலிவையிலை நெய் பருத்தி விதை நெய் ஆகிய இவை தேகத்துக்கு மிக நலமானவை. தென்னிந்தியாவைப் போன்ற உஷ்ணப்பிரதேசத்தில் வாரம் ஒருமுறையாவது எண்ணெய் தேய்த்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

நெடுங்காலமாக நமது முன்னோர்கள் அநுபவத்தில் தெரிந்து கையாண்டுவரும் இந்தப் பழக்கத்தின் பயனை இப்போது நாம் மேனாட்டு வைத்தியத்தால் அறிந்துகொள்ள வேண்டியதில்லை. பிளேக் வியாதியைத் தடுப்பவைகளில் எண்ணெய் (எள்நெய்) முழுக்கும் ஒன்றெனத் தென்னிந்தியாவில் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

*　　　*　　　*

"கமர்ஸி ஆப் இந்தியா" வில் பின்வரும் விஷயங் காணப்படுகின்றது:—

ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற இலங்கைத் தோட்டக்காரர்களின் கூட்டக்கமிட்டியில் ரப்பர் உற்பத்தியைப்பற்றியும் ஒரு வருடத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவைப்பற்றியும் பேச்சு

நடந்ததில், ஒரு வருஷத்தில் மொத்த உற்பத்தி 156,150,049 பவுண்டும், ஏற்றுமதியாகக்கூடிய மொத்த ரப்பர் 94,396,622 பவுண்டும், இதில் 10 ஏகருக்குட்பட்ட தோட்டங்கள் 18000000 பவுண்டும், 10 ஏகருக்கு மேற்பட்ட தோட்டங்கள் 75,690,024 பவுண்டும் முன் ஒப்பந்தத்துக்காக 706,598 பவுண்டும் ஏற்றுவ தென்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டில் 10 ஏக்கருக் குட்பட்டதோட்டங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவைப்பூர்த் தியாக உற்பத்தி செய்யக்கூடாமையால், அவ்வாறு முடியாமல் போன அளவைப் பெரிய தோட்டங்கள் உற்பத்திசெய்து விற்று வந்திருக்கின்றனவாம். ரப்பர் லைசென்சின் பேரிலும் வியாபாரத் தின்பேரிலும் இப்போதுள்ள தடை நீங்கினபிறகு ரப்பர் தொழி லுக்குக் குறைவு ஏற்படக்கூடுமோ என்ற பயமிருப்பதால் இவ் விஷயத்தைப் பற்றி மத்திய சங்கத்தாருடன் கலந்து யோசிப்ப தெனக் கமிட்டியார் தீர்மானம் செய்தனர்.

* * *

பின்வரும் விஷயம் "கமர்ஸியல் இந்தியா" வில் காணப் படுகிறது.

மலாய் நாட்டிற்கும் ஜப்பானுக்கும் வர்த்தகசம்பந்தம் வரவர மிக நெருக்கமாய் வருகிறது. இன்னும் சில பொருள்களில் மலாய் நாட்டில் தனது வியாபாரத்தை விசாலப்படுத்துவதற்கு ஜப்பா னுக்கு இடமிருக்கின்றது. பட்டுத்துணிகள், ரப்பர் சாமான்கள், திராவகங்கள், தீப்பெட்டிகள், சாராயம், அரிசி-இவைபோன்ற பொருள்கள்ஜப்பானிலிருந்து மலாய்நாட்டிற்கு இப்போதைக்காட் டிலும் அதிகமாய் வந்திறங்கலாம். சென்றவாண்டில் ரப்பர்தொ ழில் சிறிது அதிகரித்ததின் பலனாக மலாய் நாட்டின் ஏற்றுமதி பெருக்கமடைந்தது. கஉ-மாதங்களில் ஏற்றுமதி மதிப்பு மொத் தம் 48 கோடியே 60 லட்சம் டாலர். இதில் 11330000 டாலர் மதிப்புள்ள சாமான்கள் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டன. இறக்கு மதி மதிப்பு மொத்தம் 45கோடியே 10 லட்சம் டாலர். இதில் 18130000டாலர் மதிப்புள்ள சாமான்கள் ஜப்பானிலிருந்துவந்தன. ரப்பர், செம்பு, ஈயம் ஆகியவற்றின் ஏற்றுமதி அதிகரித்தது. இறக்குமதி மதிப்புக் குறைந்ததற்குக் காரணம், கிலக்கரி, சர்க் கரை, மீன் ஆகியவற்றின் இறக்குமதிக் குறைதான் எனச் சொல் லப்படுகிறது.

தூத்துக்குடித் துறைமுகம்.

சென்னை கவர்ன்மெண்டார் தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிர்த்தி செய்யும் யோசனையை ஒப்புக்கொண்டுவிட்டனர். மொத்தச்செலவு ௪௦ லட்சம் ரூபாவுக்கு அதிகமாகாதென்று துறைமுக இஞ்சினீர் கூறுகிறாராம். தூத்துக்குடி துறைமுக அபிவிர்த்தி சங்கத்தாரிடம் இப்போது ௩ லட்சம் ரூபாயிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு டன் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் கட்டணம் விதிப்பதால் சேரும் தொகையானது பாக்கி செலவுக்கு ஈடு செய்யுமென நம்பப்படுகிறது. இதற்கு வாங்கும் கடனை ௩௦ ஆண்டுகளில் திருப்பிக்கொடுக்கும் ஏற்பாட்டையும் கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிறார்கள். துறைமுக இஞ்சினீர் தற்காலத்துக் கேற்றபடி வேலைத்திட்டத்தைச் சரிப்படுத்தவும் முதல் வருஷச்செலவுக்கு எவ்வளவு தொகை வேண்டுமென்பதையும் ௫ வருஷம் வரையில் வேலை படிப்படியாய் நடைபெற வேண்டிய தென்பதைப்பற்றியும் தெரிவிக்கும்படி கேட்டுவிடப்பட்டிருக்கின்றனர். தென்னாட்டிலுள்ள தொண்டித்துறைமுகம் முதலியனவும் கவனிக்கப்படுமோ?

தேசபந்து தாஸர் வருகை.

தேசத்திற்காகப் பெருந்தியாகங்களைச் செய்த தேசபந்து சித்தரஞ்சன தாஸர் காங்கரஸில் மகாத்மா போட்டுள்ள திட்டத்தில் மாறுபட்டுப் பிரசாரஞ் செய்து வருகிறார். சட்டசபைக்குச்சென்று போராடவேண்டுமென்று இப்பொழுது நம்மாகாணத்தில் பிரசாரஞ்செய்துவருகிறார். ஆனால் தமிழ்நாடு அவருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்று தெரிவித்துவருகிறது. ஸ்ரீமான் தாஸருடைய தியாகத்தை சென்னைத் தலைவர்களான ஸ்ரீமான்கள் ஐயர் ஐயங்கார் ஆகிய இருவரின்செய்கையால்தமிழ்மக்கள் மறக்க நேருகிறதென்பதுமிகையாகாது. ஸ்ரீமான் தாஸர் "தான பெருந் தியாகஞ் செய்திருக்கிறதாகவும் அதிகமாக தேசத்துக் குழைத்திருப்பதாகவும் மற்றவரியாவரும் அப்படிச் செய்யவில்லை யென்றும்" தொனிக்கும்படியே எங்கும் உபந்யசித்திருக்கிறார். இந்த அபிப்பிராய முள்ள தாஸர்— புலாலுண்ணும் தாஸர்—பொது ஜனங்களின் உரிமைக்கு எள்ளளவும் இடங்கொடாத தாஸர்—செவி கைப்பச் சொற்பொறுக்குங் குணமில்லாத தாஸர்—கோபத்தை யடக்கி அன்பு ததும்ப உபந்யசிக்க முடியாத தாஸர் மஹாத்மாவின் பெருமையை அறியமுடியுமா? அவருடைய அஹிம்சையைத் தான் அறியமுடியுமா?

தாஸரின் அபிப்பிராயம் மாறலாம்.

தமிழ் நாட்டில் உள்ள, தேசநிலை அறியாத நண்பர்களின் படாடோபத்தைக் கண்டே தாஸர் தமிழ்நாட்டிற் சுற்றுப்பிரயாணம் செய்ய முயன்றுள்ளார். தமிழ்நாட்டின் தலைவர்களென்று கூறிக்கொள்ளும் நமது நண்பர்களுக்குத் தமிழ்நாட்டின் நிலையை அறிந்துகொள்ள சந்தர்ப்பங்கள் வாய்த்தும் அறிந்துகொள்ளாமல் தமிழ்நாடு தங்கள் பேச்சிலும் எழுத்திலும் புறத்தோற்றத்திலும் மயங்கிவிடுமென்று கருதுவது ஆச்சரியப்படத்தக்க தொன்றாகும். இந்தப் போலித்தலைவர்களின் புன்மைத்தனத்தையும் அவர்கட்குத் தமிழ்நாட்டிலிருக்கும் செல்வாக்கையும் எண்ணிப்பார்த்து ஸ்ரீமான் தாஸர் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வாரென்று நினைக்கிறோம். மேலும் புண்ணியத் தமிழ்நாட்டில் பிரசாரஞ் செய்த பயனால் தாஸர் நேரியவழியில் வருதல்கூடுமென்றும் நம்பலாம்.

பாரதியார் பாடல்.

தமிழ்நாட்டுக் கவிச்செல்வரான பாரதியாரின் பாடல்களை தமது ஆட்சிக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகமாக வைக்கவேண்டுமென்று திருநெல்வேலி, கும்பகோணம் முதலிய தாலுகாபோர்டுகளிலுள்ள சிலர் விரும்பித் தீர்மானங்கொண்டு வந்தனர். ஆனால் கல்வி இலாகாத்தலைவர் "அது கூடாது" என்று அபிப்பிராயங்கொடுத்திருக்கிறாரென்று தெரிகிறது. பாரதியார் பாடலில் தேசபக்தியும் தெய்வ பக்தியும் தமிழ்த்தாயிடத் தன்பும் ததும்புகின்றன. காலத்திற்கேற்ப இயற்கையழகிலேயே வீர நடையோடு செல்லும் பக்தித் திருப்பாடல்களாம் பாரதியார் பாடலைப் படிக்குமபடிஒவ்வொரு மாணவனையும் செய்தல்வேண்டும். அப்படிச் செய்வதால் ராஜபக்தி குன்றுமென்று கல்வியிலாகா கருதுமானால், தேசியப்பாடல்களை மட்டும் நீக்கிவிட்டு தெய்வ சம்பந்தமான— தமிழ் சம்பந்தமான பாடல்களைத் தொகுத்து எல்லாக் கலாசாலைகளிலும் பாட புத்தகமாகச் செய்தல் வேண்டு மென்று நாம் யோசனை கூறுகின்றோம்.

நாட்டுக்கோட்டையார் பாங்கி.

இந்தியாவிலும், பர்மா, இலங்கை, பினங்கு சிங்கப்பூர் முதலிய தூரதேசங்களிலும் வெள்ளையரின் நாணயசாலைகளை ஆதரிப்பதில் நமது நகரவைசிய லேவாதேவித் தொழிலும் ஒன்றாகும். ஆகிலும் அந்நியரின் நாணய சாலைகளால் தங்கள் சுயஜாதியாருக்கு அதிக நன்மைகிடைக்கின்றனவேயன்றி, நமதுலேவாதேவித்தொழிலுக்கு மிகுந்த கஷ்டமேற்படுகிறது அனுபவத்தில் கண்டறிந்த விஷயம். நகரவைசியர்களின் தொழிலபிவிர்த்திக்காக நம்மவரையே பங்காளிகளாகக்கொண்ட ஒரு பெருத்த லேவாதேவி நாணயமாற்றுச்சாலை சென்னை போன்ற தலைநகரில், நகர லேவாதேவி நடக்கும் பெரியபட்டணங்களில் கிளைச்சாலைகளுடன் ஏற்பட்டால் நம்மவருக்கு மிகுந்த நன்மையுண்டாகுமென்பதில் தடையில்லை. இம்மாதிரி நாணயசாலையொன்று ஏற்படுத்த நமது நகரவைசிய பிரமுகர்களிற் சிலர் முன்வந்திருக்கின்றாரென உலவும் வதந்தி உண்மையானால் மிகுந்த ஸ்லாக்கியமே.

உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஷு ஆனி மீ	மணி ௩.

வணக்கம்.

முருகக்கடவுள்.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

உமாதேவியார்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

—குமரகுருபரர்.

க.ந.

தென்னாட்டுப் பாளையக்காரர்.

திருநெல்வேலி ஜில்லா ஒட்டப்பிடாரம் தாலூகாவில் தட்டப்பாறை ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி சற்றேறக் குறைய வடக்கு நோக்கி எட்டு மைல் தூரம் போனால் ஒட்டப்பிடாரம் என்னும் சிறு பட்டணத்தை யடையலாம். அங்கிருந்து ஐந்து மைல் தூரம் வடமேற்காய்ச் சென்றால் ஒரு சிற்றூரைச் சேரலாம். அங்குத்தான் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்கார வம்சத்தின் வழித் தோன்றல்கள் இப்போது வசித்துவருகின்றனர். அவர்களை இந்நாளில் பகலில் அந்நியர் பார்க்கமுடியாதபடி மறைவாயிருக்கிறார்களென்ச் சொல்லப்படுகின்றது. ஒட்டப்பிடாரத்துக்கு ஒன்றரை மைல் வடகிழக்காய்ச் சென்றால் சில மண்மேடுகளும் இடிந்த கட்டிடங்களின் அடையாளங்களும் காணப்படும். இவைதாம் சுமார் 125 வருடங்களுக்கு முன் ஆங்கிலேயருக்கு நினைப்பதற்கும் பெருந்திகிலைக் கொடுத்து நின்ற பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையின் ஞாபகக் குறிகளாய் இருக்கின்றன.

ஒன்பது வகைப்பட்ட கம்பளத்தாரில் ஒரு வகுப்பாருக்கு கட்டபொம்ம நாயக்கன் என்பான் தலைவனாகப் பாஞ்சாலங்குறிச்சியில் முதன் முதல் கி. பி. 1709-ம் ஆண்டில் பாளையத்தை நிறுவினான். அது முதல் அந்தப் பாளையம் அழிவுற 1801-ம் ஆண்டுவரையில் நான்கு பாளையக்காரர்களே சரித்திர பூர்வமாய் நமக்குத் தெரிய வருகிறார்கள். கட்டபொம்ம நாயக்கன் என்பது முதன் முதலில் பாஞ்சாலங்குறிச்சியிற் பாளையத்தை ஸ்தாபித்தவனுக்குரிய பெயராயிருந்த போதிலும், அந்தப் பெயரே அவ் வம்சத்தில் பின் தோன்றிய பாளையக்காரர் யாவருக்கும் குடும்பப் பெர்துப் பட்டப்பெயராய் வழங்கலாயிற்று.

1755-ம் ஆண்டில் திருநெல்வேலி நாட்டிலிருந்த பாளையகாரர்கள் கருநாடக நவாபுக்குக் கப்பம் செலுத்தாது நிறுத்தி விட்டதால், நவாபு வேண்டுகோளுக்கிணங்கி ஆங்கிலக் கம்பெனியார் 500 ஐரோப்பியரும் 2000 சிப்பாய்களும்கொண்ட ஒரு

சேனையை நவாபு சேனைக்குத் துணையாகச்சென்று பாளையகாரர்களை அடக்கி வரும்படி அனுப்பினார்கள். நவாபு சேனையும் ஆங்கிலக் கம்பெனியாரின் சேனையும் சேர்ந்து கர்னல் ஹீரான் என்னும் ஆங்கில வீரனால் நடத்தப்பட்டன. கர்னல் ஹீரான் மதுரையைத் தாக்கிக் கோவில்குடியைப் பிடித்தபிறகு 1756-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். இந்தச் சேனையைக் கண்டதும் நவாபினிடம் நேரே குத்தகை ஒப்புக்கொண்டிருந்தவர்கள் கீழ்ப்படிந்து விட்டனர். ஆனால் பாளையக்காரர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய கப்பத்தைச் செலுத்தாமல் சாக்குப் போக்குச் சொல்லிவந்தனர். இந்தப் பாளையக்காரர்களுக் கெல்லாம் அக் காலத்து முன்னின்றவன் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்ம நாயக்கனே. இவன் பெயர் ஜகவீர கட்டபொம்ம நாயக்கன் என்பதாம். பஞ்சாலங்குறிச்சியை அடக்கிவிட்டால் மற்றப் பாளையக்காரர்கள் தானே வழிக்கு வந்து விடுவார்களென்று தோன்றியபடியால் பஞ்சாலங்குறிச்சிக்கு 200 வெள்ளையரும் 500 சிப்பாய்களும் அடங்கிய சேனை ஒன்று 2 பீரங்கிகளுடன் அனுப்பப்பட்டது. இந்த சைன்யம் பஞ்சாலங்குறிச்சியைச் சார்ந்த முக்கியமான கோட்டைகளிலொன்றாகிய எல்லையநாயக்கன் பேட்டை வரைக்கும் சென்று விட்டது. இதைக்கண்டதும் பாளையக்காரன் சமாதானத்துக்கு வந்து தான் செலுத்தவேண்டிய கப்பத்தில் ஒரு பகுதியை மாத்திரம் செலுத்தி பாக்கித் தொகைக்கு நபர் ஜாமீன் கொடுத்தான். மற்றும் சில சிறு பாளையக்காரர்களிடமிருந்து சிறிது தொகை வசூலாகியது. உடனே திரும்பும்படி கர்னல் ஹீரானுக்கு உத்தரவு வந்ததால் ஜாமீனை மீட்டுக்கொள்ளும்படி கட்டபொம்ம நாயக்கனைக் கேட்டார். ஆனால் நவாபுசேனை இனித் தனது நாட்டில் தாமதிக்காதென்று தெரிந்துகொண்டதால், கட்டபொம்ம நாயக்கன் வெறும் சாக்குப் போக்குகள் சொல்லி ஜாமீன் நபர்களை சைன்யத்துடன் கொண்டுபோகும்படி விட்டான். கர்னல் ஹீரானும் சேனையுடன் திரும்பித் திருச்சிக்கு வராது தாமதித்தான். நவாபுக்குத் திருநெல்வேலியில் பிரதிநிதியாக நியமனம் பெற்றிருந்தவனும் நாவாபின் மூத்தசகோதரனுமாகிய மாபூஸ்கான் என்பவன் கர்னல் ஹீரானுடைய உதவி

ஷிகளைத் தந்திரமாய் வசப்படுத்தி அவன் மூலமாய் நாடு அவ்வளவு செழிப்பில்லையென்று கர்னலுக்கு அறிவித்தும் கர்னலுக்குத் தாராளமாய் பரிதானம் வழங்கியும் மதுரை, திருநெல்வேலி இரு நாடுகளையும் 15 லட்சம் ரூபா வருஷக் குத்தகைக்குத்தரும்படி இசைவித்துக்கொண்டான். கர்னல்ஹீரான் இந்த மாபூஸ்கானுடைய சொல்லைக் கேட்டுக்கொண்டு, மேல்நாட்டுப் பாளையக்காரரில் தலைமையாயிருந்த புலித்தேவரை எதிர்ப்பதற்காக அவருடைய கோட்டையை நோக்கிச் சென்றான். அங்குச் சென்றும் பயனில்லாமல் வீண்காலம் கடத்திவிட்டு மாபூஸ்கானுடனும் தன் படைகளுடனும் கர்னல்ஹீரான் மதுரைக்குத் திரும்பி வந்தார். அங்கிருந்து அவரைக் கம்பெனியார் சென்னைக்குத்தருவித்து வேலையில் அசிரத்தை லஞ்சம் வாங்கியது முதலிய குற்றம் சாட்டி வேலையினின்றும் நீக்கிவிட்டனர்.

புலித்தேவருடன் எதிர்த்து நிற்கமுடியாமல் கர்னல் ஹீரான் திரும்பியதும் மேல்நாட்டுப் பாளையக்காரருக்குத் தைரியம் உண்டாகி அவர் ஒன்றுகூடி மாபூஸ்கானுடைய அதிகாரத்தை எதிர்க்க ஆரம்பித்தனர். இவர்களுடன் முன் கருநாடக நவாபுக்கு எதிரியாகவிருந்த சந்தாசாகிபைச் சார்ந்த மூன்று மகமதியரும் சேர்ந்துகொண்டனர். இருதரத்தாருக்கும் களக்காட்டில் இரண்டு சண்டைகள் நடந்ததில் மாபூஸ்கான் பலத்த நஷ்டத்துடன் தோல்வியடைந்தான். இந்த வெற்றிகளால் உற்சாகம் அதிகரித்து மேல்நாட்டுப் பாளையக்காரர்கள் ஒன்றுகூடிக் கீழ்நாட்டுப் பாளையக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு எல்லோரும் ஒருமித்து நவாபு சேனையையும் ஆங்கிலக் கம்பெனியாரின் படையையும் எதிர்ப்பதற்கு முயற்சித்தனர். ஆனால் கீழ்நாட்டுப்பாளையக்காரருக்குள் கட்டபொம்ம நாயக்கனே தலைமையாயிருந்தகாலும், இவன் முன்னர் ஜாமீன்கொடுத்திருந்த ஆட்கள் திருச்சிச் சிறையில் இருந்ததாலும் கலகக் கட்சியாருடன் சேர்ந்துகொள்ளப் பயந்து சும்மாவிருந்துவிட்டனர். பின்னர் மேல்நாட்டுப் பாளையக்காரர்கள் மதுரையைச்சேர்ந்த மலைநாட்டுப் பாளையக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு மதுரையைத் [illegible] யோசனை செய்தனர். இதனையறிந்ததும் சென்

னையிலுள்ள ஆங்கிலக் கம்பெனியின் கவர்னர் மாபூஸ்கானுல் இனி ஒன்றும் முடியாதென்று தெரிந்து கொண்டதால், திருநெல்வேலி நாட்டில் கிஸ்தி வசூலைக் கம்பெனியாரே ஏற்றுக் கொள்வதெனத் தீர்மானித்தனர். திருநெல்வேலி வர்சியர்கிய தளவாய் (தீத்தாரப்ப) முதலியார் என்பவர் தாம் கிஸ்திக் குத்தகையை ஒப்புக்கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொடுத்தார். இதற்குள் நாட்டில் கலகம் மீறிவிடாமல் காக்கவேண்டியது அவசரமாகத் தோன்றியதால் கம்பெனி படைகளின் சுதேச தளகர்த்தனுகிய யூசப்கான் என்பவன் தலைமையின் கீழ் ஒரு பெரும் படையைக் கம்பெனியார் அனுப்பி வைத்தனர். மேல்நாட்டுப் பாளையக்காரரும் அவர்கள் மகமதிய சகாக்களும் கூடி ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டைக்குள் அப்தல்ரகீம் அப்தல்மாலி என்ற இருவரின் கீழிருந்த நவாபின் படையை எதிர்த்துத் தாக்கித் தோற்கடித்தனர். இந்த வெற்றியினுல் கலகக்காரர்களுக்கு மேன்மேலும் ஊக்கம் மிகுந்து 25000 காலாட்களும் 1000 குதிரைவீரரும் கொண்ட ஒரு பெரும் சேனையுடன் மாபூஸ்கானைத் திருநெல்வேலியில் சந்திக்க வந்தனர். இதனிடையில் மாபூஸ்கான் கட்டபொம்மநாயக்கனுக்குச் சில பூமிகளைக்கொடுத்துக் கீழ்நாட்டுப் பாளையக்காரரைத் தன் வசப்படுத்திக்கொண்டான். இப்போது இவனிடம் 1500 குதிரைவீரரும் 1000 சிப்பாய்களுமே இருந்தனர். திருநெல்வேலிக்கு ஏழுமைல் தூரத்தில் இருதரத்தாரும் எதிர்த்துப் போர் புரிந்ததில் மேல்நாட்டுப் பாளையக்காரருக்குத் துணையாய்வந்த மூன்று மகம்மதியரில் மூடேமியா என்பவன் இறந்துபடவே, கலகக்காரர் யானைகளையும் பீரங்கிகளையும் 300 குதிரைகளையும் விட்டுவிட்டு, ஓட்டம் பிடித்தனர். இதனுடன் மேலப் பாளையக்காரரின் கூட்டு ஒழிந்ததெனவே கூறலாம்.

கட்டபொம்மநாயக்கன் தனது ஜாமீன் நபர்களை மீட்டுக் கொள்வதற்காகத் திருச்சியிலிருந்த கம்பெனியின் தளகர்த்தனை காப்டன் கலியாட் என்பவருடன் பேசியதில் ஜாமீன் ஆட்களைப் புதுக்கோட்டைத் தொண்டமானிடம் ஒப்புவித்ததும் கிஸ்தி பாக்கியைச் செலுத்திவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி கம்பெனி சேனையுடன் திருநெல்வேலி

யை நோக்கிப் புறப்பட்ட யூசப்கான் ஜாமீன் நபர்களைப் புதுக் கோட்டையில் விட்டுவிட்டு மதுரைக்கு வந்து அங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்குப்போய் அவ்விடத்தில் ஒரு சிறுபடையை நிறுத்திவிட்டு நடுமண்டலம் வழியே கயத்தாறு வந்து மாபூஸ் கானுடன் சேர்ந்துகொண்டான். ஆனால் யூசப்கான் ஒரு காசு கூட வசூல் செய்யக்கூடவில்லை. மாபூஸ்கானோ இதைவிடக் கேடான நிலைமையிலிருந்ததால் முன் கர்னல் ஹீரானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபடி அவன் கிஸ்தி செலுத்தவாவது சைன்யங்களுக்கு வேண்டியவற்றை உதவவாவது முடியாம லிருந்தான். பிறகு கயத்தாற்றிலிருந்து இருவரும் சைன்யங்க ளுடன் எட்டயாபுரம் நோக்கிச் சென்றனர். இங்கே கட்ட பொம்மநாயக்கனும் எட்டயாபுரம் பாளையக்காரரும் இருந்தனர். கட்டபொம்மநாயக்கன் முன்னமே தனது ஆட்களை யனுப்பிப் புதுக்கோட்டையிலிருந்த தனது ஜாமீன் நபர்களை மீட்டுக் கொண்டான். ஆனதால் இரண்டு பாளையக்காரரும் கப்பம் செ லுத்த மறுத்துவிட்டனர். இப்போது அவர்களுடன் சண்டை யிடுவது உசிதமல்லவெனக் கண்டு மாபூஸ்கானும் யூசப்கானும் எட்டயாபுரமிருந்துகண்டமநாயக்கருடைய கொல்லர்பட்டிக்குச் சென்றனர். ஆங்குச் சென்றதும் பாளையக்காரன் கிஸ்திப்பணம் தருவதாகச் சொல்லிக்கொண்டே காலங்கடத்தி வந்தான். அதன்மேல் யூசப்கானுக்குக் கோபம் பிறந்து கோட்டையைத் தாக்க ஆரம்பித்தான். முடிவில் இறந்தவர்போக எஞ்சிய சேனையுடன் பாளையக்காரனும் பிடிபட்டான். உடனே அங் கிருந்து திரும்பி யூசப்கானும் மாபூஸ்கானும் ஸ்ரீவில்லிபுத்தூ ருக்கு வந்து தங்குவாசரயினர். கொல்லர்பட்டி பாளையக்கார னுக்கு நேர்ந்த கதியைக் கேள்வியுற்ற புலித்தேவர் உள்ளிட்ட மற்ற மேல்நாட்டுப் பாளையக்காரர்கள் சமாதானத்துக்கு வரு வதாகத் தெரிந்ததால் நவாபின் உத்தரவுப்படி மாபூஸ்கானை ஆற்காட்டுக்குப் போகும்படி அனுப்பிவிட்டு யூசப்கான் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே இருந்தான். மாபூஸ்கான் தான் எண் ணியபடி மதுரை திருநெல்வேலி நாடுகளின் குத்தகை கிடைக் காது ஆற்காட்டுக்குத் திரும்பும்படி நேரிட்டதால், அதுமுதல் கலகக்காரப் பாளையக்காரருடன் சேர்ந்துகொண்டு நவாபுக்கும்

கம்பெனியாருக்கும் விரோதமாய் வேலை செய்வானாயினன். யூசப்கான் கலகக்காரப் பாளையக்காரர்களை அடக்குவதிலேயே மூன்று ஆண்டுகள் கழித்தனன். நாட்டில் சமாதானமும் சுக வாழ்வும் சிறிதுகாலம் ஏற்பட்டிருந்தது.

1761 ஆண்டில் யூசப்கான் நாட்டில் கலகங்கள் அடங்கி அமைதி ஏற்பட்டு விட்டதென்றும் திருநெல்வேலி மதுரை நாடுகளை வருஷம் ஒன்றுக்கு ஏழு லட்சம் ரூபாவீதம் நான்கு வருஷகாலத்துக்குக் குத்தகையாகத் தான் ஒப்புக்கொள்வதாக வும் நவாபுக்கும் கம்பெனியாருக்கும் எழுதினான். கம்பெனி யார் முதன்முதலில் இவனுக்குச் சாதகமாக இருந்தும் நவாபு அதற்கிணங்கவில்லை. இதனால் யூசப்கான் மனங்கசந்து தானே பலாத்காரமாய் நாட்டைக் கைக்கொள்ளச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். 1762-ம் ஆண்டில் கம்பெனியார் இவன் எண்ணங்களைப்பற்றிச் சந்தேகங்கொண்டு இவனைச் சென்னைக்கு வரும்படி எழுதினார்கள். ஆனால் இவன் பலவித சாக்குப் போக்குகள் சொல்லிக் காலங்கடத்தி வந்தான். அன் றியும் மதுரையில் இருந்துகொண்டு தஞ்சாவூர் புதுக்கோட்டை நாடுகளிலும் போர்வீரர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தான். இவனிடம் 27500 போர்வீரரும் 14 அல்லது 16 பீரங்கிகளும் இருந்ததாக மதிப்பிடப்பட்டது. 30 பிரான்சியப் போர்வீர ரும் சேர்ந்திருந்தனர். மேலும் தென்கேதிறும் பிரான்சியரிட மிருந்தும் ஐதர்அலியினிடமிருந்தும் உதவிகள் வந்துகொண் டிருந்தன. இதனால் திருச்சியிலிருந்த கம்பெனி தளகர்த்தர் யூசப்கானை அடக்குவதற்காக உடனே ஒரு பெருஞ்சைன்யத் தை அனுப்பும்படி சென்னைக்கு எழுதித் தருவித்து மதுரைக்கு அனுப்பி முற்றுகை போடுவித்தார். ஒரு வருஷகாலம் மதுரை முற்றுகை போடப்பட்டிருந்து கடைசியாக 1764 அக்டோப ரில் யூசப்கானின் கீழிருந்த பிரான்சிய தளகர்த்தன் மார்ச்சண்டு என்பான் யூசப்கான் தொழுகையிலிருந்த சமயத்தில் மோசடி யாகப் பிடித்து முற்றுகை போட்டுக்கொண்டிருந்த ஆங்கில தளகர்த்தனிடம் ஒப்புவித்தான். யூசப்கான் மதுரைக்கு மேற்கே 2 மைல் தூரத்தில் அரசாங்கத் துரோகத்துக்காகத் தூக்கிட்டுக்கொல்லப்பட்டு அவ்விடத்திலேயே புதைக்கப்பட்-

டான். யூசப்கான் அதிகாரம் இவ்வாறு முடிந்தது. இவன் ஆதியில் இந்துவாயிருந்து பிறகு மகம்மதியனானவன் எனச் சொல்லப்படுகிறது. இவனைத் தென்னாட்டிலுள்ளோர் "கான் சாகிப்" என்றும் "கான்சா" என்றும் வழங்குவர். இன்றைக்கும் 'கான்சா காலம்' என்று வழக்கத்திலிருக்கிறதால், இவன் அதிகாரம் செலுத்திவந்த திறமையும் ஒழுங்கும் நன்கு விளங்கும். "கான்சாகிப் சண்டை" என்ற ஓர் சிறிய புத்தகமும் சின்னாட்களின் முன்னர் விற்பனையிலிருந்தது. அது இக்காலத்தில் தென்படவில்லை. (தொடரும்.)

கண்ணகியார் அடிசில் சமைத்தல்.

பண்டித—மயில்வாகனனார் எழுதியது.

கற்பினுக் கரசியாராகிய கண்ணகியார் தமது கணவனாராகிய கோவலனாரோடுடன் சென்று, மதுரை மாநகர் புகுந்த பொழுது, அவர் வரவு கண்டு பெருமகிழ்வெய்திய மாதரி என்னும் இடைக்குலமடந்தை கண்ணகியாரை நோக்கி "பூவிற் பொலிந்த கோதையையுடைய நங்காய், நுமது வரவு நல்வரவாகுக, ஒன்றற்குங்கவலாது ஈண்டிருந்தருள்க" என்று இன்மொழிகூறித் தொழுது ஆயரோடு ஆய்ச்சியர் குடியிருந்த பழய மனையினன்றிக், கட்டுவேலி சூழ்ந்து காவல் பொருந்திக் குளிர்மையொடு வனப்புமிக்க சோலைநடுவண் அமைந்த செம்மண் பூசப்பட்ட சிறிய புதியமனையிலே யிருத்தினளாக அவளது சுற்றத்தாராகிய ஆயர்மகளிர் சிலர் உடனின்று கண்ணகியாரைப் புதிய நீரால் மஞ்சனஞ்செய்வித்தனர். அதன் பின் மாதரி கண்ணகியாரை நோக்கி "அன்னாய், இம் மதுரைப் பதியிலேயுள்ள பெண்கள் அருவிலை கொடுத்துப் பெற்ற ஆபரணங்களாற் றம்மை யலங்கரித்துக் கொள்வதினாலியைந்த செயற்கைவனப்பு நுமக்கு இயல்பாகவே யமைந்துள்ள இயற்கை வனப்பினுக்கு ஈடுசொல்லத் தகாததாதலின் நீர் அவரை வென்றீராவீர்; நுமக்குக் குற்றேவல் செய்தற்கு ஒரு அடித்தொழிலாட்டி யில்லையென்று கருதற் பாலீரல்லீர்; எனது

மகள் ஐயை நமக்கு அடித்தொழிலாட்டியாவாள்" என்று சொல்லி அருகே சூழநின்ற ஆய்ச்சியர்களை நோக்கி "கோவலனார் விரதங்காக்கு மியல்பினராதலின், நங்கையார் நாத்தூணாருடனே நீங்களும் பகற்பொழுதேயுண்ணும் அடிசில் சமைத்தற்குப் பொருந்தின நல்ல புதுக்கலங்களை விரைய்க்கொண்டு வந்துகொடுப்பீராக" வென்று சொன்னாள்.

ஐயை முதலாகிய இடைக்குலமடந்தையர் இதனைக்கேட்டு மாதரி கூறிய இயல்பிற்குறைவுபாடில்லாத மடைக்கலத்துடனே பூவாது காய்க்கும் இயல்பினையுடைய, பலாவினது கொழுவிய திரண்டகனிக்காயும் வளைந்தவரியையுடைய வெள்ளரிக்காயும் கொம்மட்டி மாதுளங்காயும் இனிய மாங்கனியும் வாழைக்கனியும் செந்நெலரிசியும் தம்மிடத்துள்ள பாலும் நெய்யும் என்னுமிவற்றைக்கொண்டுவந்து "நேரியவளையலை யணிந்தமாதே இவற்றைக்கொள்வாயாக" என்று கொடுத்தனர்.

அங்ஙனம் அவர் கொடுத்த பலவேறு வகைப்பட்ட பசுங்காய்களை வளைந்தவாயினையுடைய அரிவாளிலே வைத்து அரிதாலும் மென்றன்மையவாகிய விரல்கள் சிவந்தன; திருமுகம் வியர்த்தது; கண்கள் சிவப்படைந்தன; கரியை இடத்தேயுடைய சமயற்சாலையைக்கண்டனளாய் முன்பு ஆக்கிக் கைதேறினாற்போலக் காதலனுக்காகிய உணவினையமைத்தாள், வைக்கோலாலெரியூட்டிய ஐயை உடனிருந்து உதவிபுரிந்தாள்.

> "மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
> கொடுவாய்க்குயத்து விடுவாய் செய்யத்
> திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
> கரிப்புற வட்டில் கண்டனள் பெயா
> வையெரியூட்டியவையை தன்னொடு
> கையறிமடைமையிற் காதலற்காக்கி"

சமையல் முடிந்த பின்னர் தாலப்புல்லினது மிகவும் வெள்ளிய தோட்டினால் அழகு பொருந்த அமைந்த ஆசனத்தையிட்டு அதில் தனது செல்வன் வந்திருந்த பின்பு காமனை மலரின்

புதிய பூவைப்போன்ற அகங்கையினுற் புதுமட்சட்டியுளிருந்த நீரினை யெடுத்துக் காதலனது அடிமலரைக் கழுவிக் கழீஇய நீரை தான் தொழுதனளாய் மாற்றி மண்ணகமடந்தையினது மயக்கத்தைத் தெளிவிப்பாள்போலக் குளிர்ந்த நீரை நிலத்திற் றெளித்துத் தடவிமண்டலமிட்டு ஈனுவாழையினது குருத்தை விரித்து அதனகத்தே அமுதைப்பெய்து "சுவாமி, ஈங்கு அமுது செய்தருள்க" என்றனள்.

> "செய்வினைத் தவிசிற் செல்வ னிருந்தபின்
> கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
> சுடுமண் மண்டையிற் றொழுதனண் மாற்றி
> மண்ணக மடந்தையை மயக்கொழிப்பாள்போற்
> றண்ணீர் தெளித்துத் தன்கையாற் றடவிக்
> குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்
> கமுதமுண்க வடிகளீங்கென்"

புறத்தேநின்ற ஐயையும் மாதரியும் இவ்விருவரது பேரெழிலைநோக்கி "நல்லமுதுண்கின்ற இந்த நம்பி ஆயர்பாடியில் அசோதைபெற்ற புதிய காயாம்பூப்போலும் வண்ணத்தையுடைய கண்ணனோதான்; இவன்றுயர் தீர்த்த இப்பல்வளைத் தோளியும் காளிந்தியாற்றின்கண் தூய மணிவண்ணனது துயரந்தீர்த்த பின்னையென்னும் பெண்மணியோதான்; இவரழகு நங்கண்களினடங்கா" என்று புகழ்ந்து நின்றனர்.

ஈப்போ உபந்யாசம்.

[எ௩-ம் பக்கத் தொடர்ச்சி.]

கிறிஸ்தவ மதம் ஓர் சர்வஜன சமயமாதல் முடியாது. ஏனென்றால் அது யூதர் எனும் ஒரு வகுப்பினருடைய கருத்துக்களையும்ஆதாரங்களையும் சமயகுரவர்களையுமே பாராட்டுகின்றது. கிறிஸ்து போதித்த சமயம் வேறு; இன்று கிறிஸ்தவ சமயம் என்ற பெயர் தாங்கித்திரிவது வேறு; இவ்விரண்டிற்கு மிடையே அளவிறந்த வேற்றுமையுண்டு என்பதை இங்கு குறித்தல் அவசியமாகும். இற்றைக் கிறிஸ்தவ மதத்தை "கோயில் மதம்" 'சர்ச் மதம்' என்று கூறுவதுவழக்கம். ஏனென்றால், யூதர்களைக் கரையேற்றுவிக்க வந்த மகாபுருஷனாகிய கிறிஸ்து

வினுடைய போதனைகளை இக் கோயில்மதம் முற்றும் தழுவி நிற்க வில்லை. சற்று மாறணும் பட்டிருக்கின்றது. யூதர்களிடை மட்டிலும் தான் இத்தகைய ஓர் மகானுபாவன் தோன்றினான் என்று கருத வேண்டாம். யூதர்களின் கிறிஸ்துவுக்குச் சமமான பெருமைவாய்ந்த ஓர் சம்ரட்சகன், மோட்ச பிரதன் நம்மிடையேயும் தோன்றியிருக்கி றார். நம் குலத்திலும் கண்ணபிரான் தோன்றியிருக்கின்றார். கிறி ஸ்து பிறப்பதற்கு ௧௪00 வருடங்கட்கு (?) முன்னரேயே கண்ண பிரான் பாரதத்திடை அவதரித்துவிட்டார். இவர் பறைசாற்றிய உண்மைகளைத்தான், பின்னர் கிறிஸ்து எடுத்து ஆண்டார். கிறிஸ் துவிற்கு ௧௪00 வருடங்களுக்கு முன்பாகச் செய்யப்பட்ட கண்ண பிரானது உபதேச ரத்தினங்கள் இன்றும் பகவத் கீதை மூலமாக அறி யக்கிடக்கின்றனர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே ஓர் கொடும்போர் மூண்டது. அதுகாலை, இருசேனைகளுக்குமிடையே ஓர் தேர்ப்பாகனாக அமர்ந்துகொண்டு, பாண்டவசேனாநாயகனான அர் ஜுனனுக்குப் கண்ணபிரான் உபதேசித்தருளினார். இவ்வுபதேசங்களில் ஓர் இம்மிகூட நழுவவிடாமல் ஹிந்துக்கள் அப்படியே இன்றளவும் போற்றிவந்திருக்கின்றனர். கிருஷ்ணன், அன்று, சர்வ சமரஸ தரு மத்தையே போதித்தார் என்பது பின்வரும் அவருரைகளால் இனிது விளங்கும். "எவர் எவ்வழி நின்று என்னை ஆசிரயித்தாலும், முடிவில் என்னிடம் வந்து சேருவார்கள். உலகிலுள்ள மனிதர்கள் வேறு வே றான மார்க்கங்களில் போய்த் தத்தளித்துக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வழிகள் எல்லாம் முடிவில் ஸத்தியனாகவும், நித்தியனாகவு முள்ள என்னிடத்திற்கே கொண்டு சேர்க்கின்றன." இதனின் றும், பல்வேறு சமயங்களும் ஒரு முடிவுக்கு வரும் புலவழிகளேயா கும் என்பது வெள்ளிடைமலைபோல் உங்கட்கு விளங்கவில்லையா? ஓரோர் சமயமும் ஓரோர்வகையான பக்குவிகளுக்கு ஏற்றதாயிருக்கும். யூதர்களின் பருவத்திற்கேற்றது முகம்மதியர்களுக்கு ஒவ்வாதிருக்க லாம்; பௌத்தர்களின் மனத்திற்கு வந்தது ஹிந்துக்களுக்குப்பொருத்த மல்லாததாய் இருக்கலாம். ஆதலால், சகோதரர்களே, நீங்கள் எதனை யும் பழித்தல் தகாது. ஏனையருடைய மார்க்கங்களும் உங்களுடைய மார்க்கத்தைப் போன்று அத்துணை சிறப்புற்றனவே. கிறிஸ்தவர்களு டைய மார்க்கம் விழுமியதா யிருக்கலாம். ஆனால் கிறிஸ்து ஐரோப்பி யர்களுடைய ஆசாரியனன்று. ஐரோப்பியர்களிடையே ஓர் ஆசாரியன் கூடத் தோன்றவில்லை. யூதர்களுடைய ஆசாரியனைத் தமக்கும் ஆசாரி யனாக அவர்கள் எடுத்துக்கொண்டனர். ஐரோப்பியரைப்போல, ஆசா ரியனுக்காகப் பிற ஜாதியிடத்துக் கடனுக்குப் போகவேண்டிய அவ சியம் ஹிந்துக்களுக்கு இல்லை. ஹிந்துக்களுக்குச் சொந்தமாக ஆசாரி

யர்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்து போதித்த உண்மைகள், முதன் முதலாக அவர் வாய்ப்படவே வந்தன வென்று கூறுதற்கில்லை. அவ்வுண்மைகளை புத்தபிரானே முதன்முதலாக உலகுக்கு உபதேசம் செய்தருளினர். கிறிஸ்துபோதித்த "விடுகதை"களை எடுத்துக்கொள்ள தந்தை பணத்தைத் தாறுமாறாய்ச் செலவிட்டுத் தவிர்ந்தொழுகிய, விடப்புதல்வன் என்ற கதை புத்தன் சொல்லிய கதைகளுள் ஒன்றாகும் எனக் காண்கிறோம். இதுமாதிரியே, மணவிருந்துக் கதையை முதலாவதாகச் சொல்லியவர் கிறிஸ்து வல்லர் என அறியக் கிடக்கின்றது. கிறிஸ்துவிற்கு ௫00 வருடங்களுக்கு முன்னரேயே, சிபேரியா, பாலஸ்தீனம், மிஸ்ஸரம் முதலிய நாடுகளில் புத்தமதத்தை புத்த ஸந்யாசிகள் பிரசாரம் செய்ய ஆரம்பம்செய்து விட்டார்கள். இவர்கள் பரப்பிய கருத்துக்கள் அவ்வந்நாட்டு அறிவாகாயத்தில் விதானமிட்டிருந்தன. எனவே இயற்கைவழியிலேயே இக்கருத்துக்கள் தன் மனத்துள்ளும் வேரூன்றப்பெற்று, பரம்பொருளின் ஓர் அருந்தவப் புதல்வன் என்று பாராட்டப்படும் பரமாசாரியனுன கிறிஸ்து இவற்றைத் திறம்பட எடுத்து உபதேசம் செய்தார். இங்கு இன்னுமொரு விஷயத்தைச் சொல்லவிரும்புகிறேன். அதாவது, கிறிஸ்து இந்தியாவிற்கு நேரிலேயே வந்துளாரென்றும், இங்கு வந்து ஆறாண்டுகள்வரை தங்கியிருந்தார் என்றும் நம்புதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. ஆனல் இவ் விஷயத்தில் அபிப்பிராய பேதமிருக்கலாம். மேல்நாடுகளில் இதைப்பற்றிப் பலநூல்கள் எழுதப் பட்டு வருகின்றன. இவற்றை பிரமாணநூல்களாகவே அமெரிக்காவிலுள்ள ஜனங்கள் மதிக்கின்றனர். கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஓர் பகுதி இருள்மூடியதாக இருக்கின்றது. இக்காலத்தில் அவர் எங்கு சென்றார் என்ன செய்தார் என்பதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. இருள்வாய்ப்பட்ட இந்தக் காலத்தில்தான் கிறிஸ்து இந்தியாவுக்கு வந்தார் என நம்பப்படுகின்றது. அக்காலங்களில் நாகரீகஉலகம் முழுவதும் இந்தியாவுடன் வியாபாரம் செய்து வந்தது. ஜெருசலத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த ஒரு வர்த்தகக்கூட்டத்துடன் கிறிஸ்து வந்திருக்கவேண்டும் என ஊகிக்கப்படுகின்றது. மிஸ்ஸரம் சீனம் முதலிய நாடுகளுடன் எல்லாம் அக்காலங்களில் நாம் வர்த்தகம் செய்து வந்திருக்கிறோம். தென்னுப்பிரிக்காவும் அன்று நம்முடன் வியாபாரப் போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தது. இப்படியே பர்மா, சீயம், மலையதீபகற்பம், ஜாவா, ஸுமாத்ரா, பிலிப்பையின் வரையிலுள்ள தீவுகளில் எல்லாம் அக்காலங்களில் இந்தியர்கள் குடியேறி இருந்திருக்கின்றனர். ஹவாய் தீவுகளிலும்கூட ஹிந்துக்கள் சென்றிருக்கவேண்டுமெனத் தெரிகிறது. ஏனென்றால், அங்குள்ளவர்கள் பேசும் மொழி

களில் பல சமஸ்கிருதத்தின் மரூஉக்களாயிருக்கின்றன. சமஸ்கிருத மொழியின் கருத்துக்களும் அங்கு விரவியிருக்கின்றன. எனது சகோதரர்களே, உங்களது தற்கால நிலைமையைப் பார்த்துவிட்டு, நீங்கள் ஒரு சிறுஜாதியாராகத்தான் எப்பொழுதும் இருந்து வந்திருக்கின்றீர்கள் என்று இழிவாக உங்களைப்பற்றிக் கருத்துட்கொண்டுவிட வேண்டாம். உங்களுடைய ஜாதி அற்பமானதொன்றன்று; சாமானியமானதன்று. உங்கள் மூதாதைகளின் சிறப்பைச் சற்று சிந்தனை செய்துபாருங்கள். உங்கள் முந்தையோரும் அயல்நாடுகள் சென்று குடியேறியுள்ளார்கள். அவ்வன்னியர்கள் வேண்டியபோதெல்லாம் உற்ற உதவியும் அளித்து வந்திருக்கிறார்கள். தம் மதத்தைத் தழுவியிருத்தல் காரணமாக எவரையும் நமது முன்னோர்கள் இமிசை செய்ததே கிடையாது; பிற சமயிகள் போன்று ஓர்கையில் தம் மதநூலும், ஓர்கையில் கத்தியும் கொண்டு திரிந்தாரிலர். இன்றைக்கும் நம்மிடைப் பலவகுப்புகள் செறிந்துள்ளன என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த வகுப்புக் கோட்பாடுகள் ஸநாதன தர்மத்தினின்றும் பிறந்தனவல்ல; இக்கோட்பாடுகட்கும் ஸநாதன தர்மத்திற்கும் எவ்விதத்தொடர்பு மிலது. கட்சி சம்பிரதாயங்கள் உண்மைச் சமயத்திற்கும் சத்தியத்திற்கும் முரண்படுவனவாகும். கடவுளறிவு வாய்ப்பதுதான் சமயத்தின் உண்மையான பயன். முக்தியின் உண்மைப் பொருள் இதுவேயாகும். இவ்விதமின்றி, என்றென்றும் நீங்காத நரகத்தினின்றும் மோட்சம் பெறுதல் எனும் கருத்து உண்மையை ஒட்டியதாகக் கருதப்படவில்லை. ஏனென்றால், என்றும் அழியாத நரகம் என ஒன்றே கிடையாது. என்றும் அழியாத நரகம் என்பது ஓர் மித்தை; வெறும் கட்டுரை. இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் உள்ள அத்யாத்மவாதிகளும், மனோதத்துவசாஸ்திரிகளும் இறந்த பின்னர் மனிதருடைய ஆவிகள் தொலையாத நரகவாய்ப்பட்டு அல்லற்படவில்லை யென்றும், அவைகள் உயிர்தாங்கிச் சந்தோஷமாகவேதான் இருந்து வருகின்றன வென்றும் நிதர்சனமாக நிரூபணம் செய்துவிட்டார்கள். ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பார் இக்காலத் தவருள் மகா பெரிய விஞ்ஞானி என்று போற்றப்படுகிறார். இவருடைய புதல்வன், சென்ற மகாயுத்தத்தின் போழ்து சண்டைக்குச் சென்று, ஈப். ரஸ் முனையில் உயிர் துறந்தான். உயிர்துறந்த தன் மகனுடைய ஆவியுடன், ஸர் ஆலிவர் லாட்ஜ், தான் நேர்முகமாகச் சம்பாஷணை செய்துள்ளேன் என்று கூறியிருக்கிறார். அவர் சென்ற மாரிகாலத்தில் ஸான் பிரான்ஸிஸ்கோவிற்கு வந்து உபந்நியாசம் செய்தார். அதனை நேரில் கேட்கும் அதிர்ஷ்டமும் எனக்கு அப்பொழுது கிடைத்தது. அதுகாலை இறந்துபோய்விட்ட நமது நண்பர்களின் ஆவிகளுடன் பேசுவது இய

லும் என்று ஸர் ஆலிவர்லாட்ஜ் தீரமாக சித்தாந்தம் செய்தார். எனவே அழியாத நரகம் என்பது தீயோர் பொருட்டும் இல்லை; நல்லோர் பொருட்டும் இல்லையெனின், எவர் பொருட்டு அது எங்கு இருக்கிறதெனக் கேட்கிறேன். ஆனால் நரகம் என ஒன்று இருக்கின்றதென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இப் பிரபஞ்சத்தின் ஓர் மூலையில் அது தனியாகக்கட்டப்பட்டிருக்க முடியாது. தீயசெயல்களின் பயனாய் வாதைப்பட்டுக்கொண்டிருக்கும் மனத்தின் நிலைமையே நரகமென்பர். இக்கருத்தும், கத்தோலிக்க சமயத்தினரால் புதிதாகக் கண்டுபிடித்து விடப்படவில்லை. புத்தபிரானே முதலாவதாக இக் கருத்தை வாய்விட்டார். முதலில் புத்தபிரான் என்பவர் நரகம் என்ற கருத்தை வெளியிட்டார். அக் கருத்தை ஏனைய சமயங்களும் பற்றிக்கொண்டன. நேயர்களே, நாம் இவ்வாழ்க்கையிலேயே சம்பூரண சித்திபெற முடியுமென்றும், அதற்காக நாம் முயலவேண்டுமென்றும் சர்வஜன சமயமாகிற ஸநாதன தர்மம் போதிக்கின்றது. சம்பூரணசித்தியடைதலே, ஆன்ம விடுதலை எனப்பெறும். அரசியல் விடுதலையை இன்று ஐரோப்பாவிலுள்ள எல்லா ஜாதிகளும் தம்முடைய பிரதம லட்சியமாகக் கொண்டொழுகுதல் போன்றே ஆன்ம விடுதலையை நீங்கள் பிரதம லட்சியமாகக் கடைப்பிடித் தொழுகவேண்டும். ஆன்ம விடுதலையைப் போதிப்பதற்காகத்தான், ஐரோப்பியர்களின் ஆசாரியனான கிறிஸ்து தோன்றினார். எனினும், தம் ஆசாரியன் உபதேசத்தை ஐரோப்பியர், முற்றிலும் கைநழுவ விட்டுவிட்டனர். வியாபாரவிடுதலையை, அரசியல் விடுதலையை விட எத்துணையோ சீரியது—விழுமியது ஆன்ம விடுதலை என்பது. வியாபார விடுதலையினால் செல்வமும் செழிப்பும் பெருகலாம். ஆனால் நிலைநில்லாதது, வெள்ளிமயக்கம் தருவது என உத்தம ஞானிகள் செல்வத்தைப் பழித்துள்ளார்கள். இதுபோன்றேதான் அரசியல் விடுதலையும், நெடுநாள் நிற்கப்பெறாத ஒன்றேயாகும். ஏனென்றால், அடிமை ஜனங்கள் அறிவொளி பெற்றதும், தமக்கும் விடுதலை வேண்டுமெனக் கிளம்புவார்கள். ஆனால் ஆன்ம விடுதலை பெற்றுவிட்டால், எவரும் என்றும் அடிமைத்தனத்திற்குள் தாழாது நிலைநிற்கலாம். மோட்சத்தையும்விட உயர்ந்தபொருள் உயர்ந்த லட்சியம் ஒன்றும் உளதோ? "உண்மை அறிக; உண்மை உங்கட்கு விடுதலை தந்துவிடும்." என்று இயேசுவும் உபதேசித்திருக்கிறார். உண்மையின் அறிவால் ஆன்மா விடுதலைபெறும். காமம், கள், கஞ்சா நுகருதலை நன்மை, இன்பமெனக் கண்ணற்ற ஜனங்கள் கருதி, இவற்றை நுகருவதில் தடையேற்படாதிருத்தலை விடுதலையெனக்கொள்ளலாம். இது ஒரு போழ்தும் உண்மையான விடுதலையாகாது. குடி ஓர் ஸத்விஷயமன்று; கஞ்சா (புகை) குடித்தல் ஓர் புண்ணிய காரியமன்று.

இவ் விரண்டும் மனிதனுடைய அறிவையும் ஆன்மாவையும் படுகுழியில் வீழ்த்திவிடும் கொடும் பாவச்செயல்களாகும். நீங்கள் குடிவகைகளில் எதையுமே தொடலாகாது; கஞ்சா அபின் முதலியவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. நாகரிகத்தில் மிக்க உயர்ந்தஜாதி என்று எது உலகில் பாராட்டப்படுகிறதோ அந்த ஜாதி குடியினால் விளையும் கேட்டை நன்கு உணர்ந்து, அதனை நிஷேதித்துத் தள்ளிவிட்டது. ஐக்கிய நாடுகளில் குடியை அறவே ஒழித்துவிட்டனர். எனினும், திருட்டுத்தனமாகச் சிலர் குடிவகைகளை ஐக்கியநாடுகளுக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கலாம். சீனர்கள் அபினியைச் செருப்புகளுக்குள் வைத்து மறைத்துக் கொண்டுவந்து விடுகின்றனர். உண்மைதான்; ஆனால் ஐக்கியநாட்டுச் சர்க்கார் ஊழியர்கள் கண்டுபிடித்துக்கொண்டார்களானால், இவர்களைச் சிறையில் தள்ளிவிடுவார்கள். ஓர் உயர்ந்த நாகரிகமே இதைத் தனது ஆதர்சமாகக் கொண்டொழுகும்போது இதனை நாமும் கைப்பற்றுவதில் இன்னும் காலந்தாழ்த்தல் தகுதியோ? கள்ளும் கஞ்சாவும் பெரிய பீடைகள்; சனிகள்; இவை பற்றியிருக்கும் மட்டும் ஆத்மஞானம் நம்மை எட்டியும் பாராது. கள்ளுண்பதால், மூளை ஓட்டமின்றி மயங்கிக்கிடக்கும். அப்பொழுது, வாழ்க்கையின் உன்னத லட்சியங்களைக் குறித்து விசாரணை செய்ய ஆற்றலாவது, நோக்கமாவது எப்படி யிருக்கும்? கஞ்சாப் புகைகுடித்தால் பலவிதமான மானதக்காட்சிகள் தோன்றலாம்; கைலாசமே நேரே வந்துவிட்டது போலவும் தோன்றும். ஆனால், இதெல்லாம் புத்தியின் பிரமையன்றிப் பிறிதாமோ? ஆதலால், என் அரிய சகோதரர்களே, ஆண்மைபெற்று இம்மறங்களை அறுத்து, விசிராந்தியும், மனவமைதியும் பெற்றுத் திகழுவீராக. அப்பொழுதுதான், ஆத்மவிசாரணை செய்ய உங்களுக்கு அதிகாரத்துவம் வரும். அப்படிச் செய்யீரேல், ஆத்ம விசாரணைக்கு நீங்கள் என்றும் அருகராகமாட்டீர்கள். ஏனென்றால், உங்கள் அறிவு எப்பொழுதும் மூலிகையின் மயக்கத்திலேயே அழிந்து கிடக்கும். மூலிகைகள் அறிவை, மனவமைதியைக்கொள்ளைகொண்டு போய்விடா வண்ணம் பாதுகாத்து வந்துவிட்டீர்களானால், இவ் வாழ்க்கையிலேயே நீங்கள் சம்பூரணசித்தி பெற்றுவிடலாம். பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரை நான் நேரில் தெரிசித்திருக்கிறேன், அவர் ஸதா பிரமநிஷ்டானுபூதியிலேயே இருந்து வந்தார். இக் கலியுகத்தில் அவர் பிரத்தியட்ச தெய்வமாக விளங்கினார். குவேகர்கள் எனும் கிறிஸ்தவ சமயிகள், தாம் தொழும் கிறிஸ்துநாதர் இவரே யென்று போற்றிக் கொண்டாடி இன்னார் அடிகளை வணங்கிச் செல்வார்கள். தம் மார்க்கத்தில் கூறிய மகா புருஷனாக இவரைக்கருதி முகம்மதியர்கள் தொழுது செல்லுவார்கள். இப்படியே தம் தம் மார்க்கத்தின் சொந்தக்கடவுளா

என்று பௌத்தர்கள், ஹிந்துக்களின் சகலவகுப்பினர்களும் வந்து துதி பாடி வணங்குவார்கள். இதையெல்லாம் என் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். ஆதலால், சகோதரர்களே, இப் புருஷோத்தமனிடத்து நம் மதத்தின் ஆதர்சங்கள் அனைத்தும் பொலிந்து ஒளிரக் காண்கிறோம். சகல மதங்களையும் ஒன்று படுத்தி சமரஸத்தை நிலைநாட்ட வந்த அவதாரபுருஷனே இவர் என நாம் நிச்சயமாகக் கூறலாம். நடுநாயகமான சமரசத்தைக் காண நாம் முயன்று வரவேண்டுமே யொழிய, ஒரு சமயத்தை மற்றதினின்றும் பிரிக்கும் கட்டுக்கள் கோட்பாடுகள் இவற்றை ஊறிப்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. நமது மதத்தின் மூல தத்துவங்களை ஆராய்ந்து, அவற்றின் வழி நிற்பதாயின், பிற மதத்தினரையும் நமது சொந்த சகோதரர்களாகக்கொண்டு, உள்ளன்புடன் நம்மிடையே வரவேற்றுத் தழுவிக்கொள்ளுபவராவோம். இன்று முதலே, (இதுவரை யில்லையெனின்) நாம் கிறிஸ்தவர்களைச் சகோதரர்களாகப் பாவித்துவரவேண்டும். முகம்மதியர்களும் நமது சொந்த சகோதரர்களே யாவர்! இவ் விரு திறத்தினருடைய குறி கோட்பாடுகளுக்கும் நம்முடையவற்றுக்கும் வேற்றுமையிருக்கலாம்; ஆனால் உண்மைவழி நின்று ஆராயுமிடத்து இச் சமயங்களுள் வேற்றுமையே தென்படாது. இன்றும் இந்நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள முகம்மதியர்களிற் பெரும்பாலர் பிறப்பால் ஹிந்துக்களாகவே இருப்பர். வேற்றுமை முரண்பாடு எனும் பெரிய சுழல்வாய்ப்பட்டு இன்று உலகமே தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இதனைக் கரையேற்ற வல்லது நமது ஸநாதனதர்மமாகிற சர்வ சமரச சமயமேயாகும். இவ்வாறிருக்கும்பொழுது இந்த நம்முடைய தர்மத்தின் ஆதர்சங்களை நாமே மறந்துவிடுதல் அழகாகாது. மதவெறிகொண்டு, சைவர்கள் விஷ்ணுவின் அடியார்களை வெறுக்கின்றார்கள் என நான் கேள்விப்பட்டேன். அறிவு போதாமையினாலேயே இவர்கள் இங்ஙனம் செய்கின்றார்கள். சைவர்கள் போற்றும் சிவனும், வைஷ்ணவர்கள் தொழும் விஷ்ணுவும் ஒரே பரம்பொருள்தான் என்ற அறிவு அவர்களுக்கு இன்னும் உதிக்கவில்லை. இவ் விருசாராரும், வேறுவேறான பெயர்களைச் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் வேற்றுமை அப் பெயர்களின் அளவிலேயே நின்று விடுகின்றது; இப்பெயர்கள் குறிப்பிடும் வஸ்துவில் சிறிதும் வேற்றுமை என்பது கிடையாது. எனவே, சண்டைகள், வேற்றுமைகள் இவற்றை அறவே கடிந்துவிட்டு, அனைவரையும் எங்களுடைய சகோதரர்களாகக்கருதி மருவி வாழவேண்டும். சம்பூரணம் அடைவது குறித்த ஒரு சாரினருக்குத்தான் சொந்தக்காணி யென்பதில்லை; அதனை அடைதற்கு அனைவருக்கும் சமபாத்தியமுண்டு, இந்தவாழ்விலேயேநாம் சித்திபெற்றுவிட வேண்டும். (தொடரும்.)

மஞ்சள்.

திருவண்ணாமலை ஆயுர்வேத வைத்தியர் அ. வேங்கடாசல முதலியார் அவர்கள் எழுதியது.

[அஎ-ம் பக்கத் தொடர்ச்சி.]

இவ்வாறே, நமது குடும்ப விருத்தியைநாடிய பெண்மணிகளும் தங்கள் முகம், மார்பு, அடிவயிறு இவ்விடங்கள் தவறாமல் பிரதிதினமும் மஞ்சளைப்பூசிக் குளிப்பதால், பால் விருத்தியாவதோடு பாலில் தெளிவு நன்மணம் இன்சுவை விஷமுறிவு ஜீரணசக்தி முதலிய வமைந்து கங்கைபோல் ததும்பிவழிந்து சிசுக்களைப்போஷிக்கும். இவ்வித குற்றமற்ற பாலைப் பருகும் செல்வச்சிறுர்கட்கு மாந்தம், தோஷம், கணம் பிரளி வலிப்பு இழுப்பு சோகை காமாலை எலும்புருக்கி முதலிய அஜீரண மந்த உஷ்ணவியாதிகளும் வாந்தி, பேதி, வாந்திபேதி முதலிய வயிற்றுப்போக்கு வகைகளும் உண்டாகா. தலை, கால், கை, புட்டம், கனுக்கள் இவ்விடங்களில் கண்டு மகா உபத்திரவம் செய்துவரும் கரப்பன் வியாதிகளும் தலைகாட்டா. இவ்வகையாய் பாலரோகம் பலவற்றிற்கும் காரணமாயுள்ளது தாய்ப்பாலும் கெர்ப்பச்சூடுமேயாம்.

"சொல்லுகின்ற குழவிக்குக் கரப்பானேது?
தோஷமென்ற வினையேது? மாந்தமேது?
கொல்லுகின்ற கணமேது? அக்கரங்களேது?
கூறும்வை சூரியென்ற குன்றலேது?" என்றும்,

"கொல்லுகின்ற கரப்பாலும் கர்ப்பமேகம்
போதுற்ற தோஷமெல்லாம் முலைப்பாற்சூடே"

"சூடான மாந்தமெல்லாம் தாய்ப்பால் மந்தம்
தொகையான கணங்களெல்லாம் கர்ப்பச்சூடு"

என்றும், வைத்திய சாஸ்திரங்கள் கூறுகிற்கும். எனவே ஸ்திரீகள் தேகமுழுமையும் மஞ்சள் பூசி நன்றாகத்தேய்த்துக் குளிக்கவேண்டுமென்பது இன்றியமையாக்கடமை. மஞ்சள்

பூசிக்குளிப்பதால் முகம் மாறுதலடைந்து கிழமுகம் போல் விகாரமாய் விடுவதாகத் தற்கால நாகரிகக் கடலில் மூழ்கிய சிலர் வாது பேசுவர். இது காப்பியும் பிராந்தியும் ஆர்லிக்ஸ் மாவுமே தேகத்தையும் மூளையையும் பாதுகாத்து, கர்ப்பத்தையும், சிசுவையும் போஷிப்பது எனக்கூறும் நமது மக்களின் வாதம் போலாம். காப்பி, பிராந்தி, ஆர்லிக்ஸ் உணவுமாவு இவற்றிற்கும் நமது நாட்டிற்கும் எத்தனை ஆயிர வருஷசம்பந்தம் என்பதை உற்று நோக்க உண்மைவிளங்கும்.

எனவே, இப்படிப்பட்ட வீண்வாதங்களுக்கு செவிசாய்க்காமல், நமது பழயகால வழக்கப்படி மஞ்சளைத் தினசரி ஆகாரவர்க்கங்களிலும், ஸ்நானத்தின் போதும் உபயோகித்து வருதலே அவசியமானது. ஸ்திரீகளுக்கு மஞ்சள் பூச்சு இன்றியமையாததென்பதை "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும்" என்ற நாலடியாரும் நன்குணர்த்தும். தேகசுகத்தை, பால்பெருக்கை, சந்ததிவிருத்தியை, குடும்ப நன்மையை, நோயற்ற வாழ்க்கையை, விரும்பும் ஒவ்வொரு பெண்மணியும் மஞ்சள் பூசிக் குளித்தலை ஓர் விரதமாகக் கொண்டு, தவறாது நடத்திவருதல், குலச்சிறப்பும், குணச்சிறப்பும், சமயச்சிறப்பும், நாட்டுச்சிறப்புமாம்.

குழந்தைகளும் மஞ்சளும்.

குழந்தைகளுக் கெல்லாம் பெண்குழந்தைகளே யல்லாமல் ஆண்குழந்தைகளுக்குங்கூட மஞ்சள் பூசி ஸ்நானம் செய்வித்தலும், மஞ்சள் பொடியால் நாவு வழித்தலும், மஞ்சள் தூளிட்டு தூபங்காட்டித் தலை துவட்டலும், நமது பூர்வகால வழக்க மென்பதை இன்றும் கிராமாந்திரங்களில் சில சில குடும்பங்களில் மாத்திரம் காணலாம். ஒழுக்கத்தையே பிராணாதாரமாய்க் கொண்டுள்ள ஒரு சில குடும்பங்களில் இவ்வழக்கத்தைக் காணும்போதெல்லாம் நம் நாட்டின் தற்காலச் சிறுமையும் முற்காலப்பெருமையும் நினைவிற்குவர அளவிற்கடங்காத துக்கமேமுன்நிற்கிறது. குழவிப்பருவத்திருந்தே மஞ்சளை மேற்பூச்சுக்கும், நாவழித்தலுக்கும், தூபங்காட்டலுக்கும், உரை மருந்து (காரஉருண்டை) களுக்கும் உபயோகித்து

வந்ததாலேயே இந்நாள் போன்று அந்நாளில் பாலாரிஷ்ட ரோகங்கள் பரவிப்பெருகி வியாபகமாகா தொழிந்தன. ஆண்குழந்களுக்கும் மஞ்சளைப்பூசி ஸ்நாநம் செய்வித்தார்கள் என்பது

"மெய்ந்திமிரு நானப் பொடியொடு மஞ்சளும்"

"மஞ்சளும் செங்கழு நீரின்
வாசிகையும் நாறுசாந்தும்
அஞ்சனமுங் கொண்டு வைத்தேன்
அழகனே நீராட வாராய்"

"மஞ்சளை மாட்டி,"
"பற்று மஞ்சள் பூசி"

"கையுங் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித்து ... ..."

என்று கண்ணபிரான் திருமஞ்சன விஷயமாய் பெரியோர்கள் கூறியுள்ள திருவாக்குகளால் புலனாகின்றது. குழந்தைகளுக்கு மஞ்சள்பூசி ஸ்நாநம் செய்விப்பதாலும், மஞ்சள் பொடியால் நாவழிப்பதாலும்,

க.	கண்ணோய்	கங	கணமூலம்
உ	கட்டி	கச	காமாலை
ங	புண்	கரு	பேதி
ச	விரணம்	கசு	வாந்தி
ரு	இருமல்	கஎ	அஜீரணம்
சு	சளிப்பு	கஅ	கிருமி
எ	கரப்பான்	கக	வீக்கம்
அ	சுரம்	உ0	பெருவயிறு
க	கணசுரம்	உக	கைகால் சிறுத்தல்
க0	சுவாசம்	உஉ	அடிபுறப்படல்
கக	எலும்புருக்கி	உங	வெண்மையாய் நீரிறங்கல்
கஉ	சவலை	உச	மஞ்சளாக நீரிறங்கல்

முதலிய பலவியாதிகள் வராமலும் வந்தாலும் நீடிக்காமலும் தடையாதல் அநுபவம். குழந்தைகளுக்குச் செய்யக்கூடிய மாந்த மாத்திரை, உரை மாத்திரை, காயமாத்திரை, சுவலை

மாத்திரை, மாந்த எண்ணெய், மாந்தப்பொடி, இவற்றில் மஞ்சள் சேர்ந்தேவருவதால் எவ்வளவு தூரம் பாலசஞ்சீவியாய் மஞ்சள் உதவிவருகின்றதென்பதைக் கவனிக்கலாம்.

புருஷர்களும் மஞ்சளும்.

ஆண்குழந்தைகளேயல்லாமல் வயது வந்த ஆண்பாலார்களுக்கெல்லாம் நித்திய உபயோகமாய் உதவிவரும், ஸ்னானப்பொடி, கலவைச்சாந்து, சிகிச்சாப்பொடி (சிக்காப்பொடி) கதம்பப்பொடி, வாசனைத்தூள், ஆரோக்கிய சூர்ணம் எனப்பல பெயர்களால் வழங்கும் பொடிகளில் மஞ்சள் சேராமலிருப்பதில்லை. ஸ்திரிகளுக்குத் தனி மஞ்சள் பூச்சுபோல், புருஷர்களுக்கு, ஆவரம்பூ பாசிப்பயறு முதலிய சில பல தினுசுகளுடன் மஞ்சள் சேர்ந்து ஸ்நானப்பூச்சுப் பொடியாய் உபயோகமாகிவருகிறது. இதனால் பெண் பாலரேயல்லாது ஆண்பாலர்க்கும் மஞ்சள் உள்ளுக்கு ஆகாரவஸ்துக்களோடும், வெளிக்குமேல் பூச்சாகவும் ஒன்றாய் உதவுதல் உலகறிந்த உண்மை.

மஞ்சள் வஸ்திரம்.

பலவகை மருந்துகளாலும், தீராத சில வியாதிகள் மஞ்சள் வஸ்திரம் அணிந்து வருவதால் தீர்ந்து விடுவதாக வைத்திய சாஸ்திரம் கூறும். அவை நீர்க்கடுப்பு, காசம், விஷசுரம், நமைச்சல், வெப்பம், மலக்கட்டு முதலிய ரோகங்கள் மஞ்சள் வஸ்திரத்திற்கு அஞ்சியோடும்.

பாட்டிமார்களும் மஞ்சளும்.

தற்காலம் ஒவ்வொர் குடும்பத்தாரும் அதிலும்கிராமவாசிகளை விட நகரவாசிகள் ஒரு சிறிய பிணிக்கும் வைத்தியரையும், வைத்தியசாலைகளையும், மருந்துகளையும், மருந்து விற்கும் வியாபாரசாலைகளையும் தேடி யலைந்து காலத்தையும், பணத்தையும், மனத்தையும் சில சமயம் தேகத்தையும் அழித்துக்கொள்வதே போல் செய்யாது அந்தந்த வீட்டுப்பாட்டிமார்களே குடும்பவைத்திய முறையில் பலபிணிகளை வீட்டுச்சரக்கு தோட்டச்சரக்குகளைக்கொண்டே ஓட்டி வந்தார்களென்பது இன்றும் அநேக குடும்பங்களில் அநுபவமாய் வந்து கொண்டி

ருப்பதாற் காணலாம். நகரங்களிலும் கார்த்திகைப்பிறை போல் இரண்டொரு குடும்பங்களில் அவ்வழக்கம் தொன்று தொட்டுவருகிறது.

வீட்டுப் பாட்டிமார்களாகிய அநுபவ மருத்துவிகள் இந்த மஞ்சளை கீழ்க்கண்டவாறு உபயோகித்தார்கள். உபயோகித் தும் வருகின்றூர்கள். அவை:— மேற்காட்டியுள்ள பாலரோகங் களே யல்லாது மஞ்சளை, விளக்கெண்ணெய் வேப்பெண் ணெய் விளக்குகளில் கொளுத்திய புகையை நாசியில் இழுக் கச்செய்து, ஜலதோஷம் மார்சளி இருமல் சீதள தொண் டைக்கட்டு இவற்றை, ஒருபங்கு தூளாக இடித்தமஞ்சளை இருபது பங்கு ஜலத்தில் நன்றாகக் கொதிக்கவைத்து இந்த ஜலத்தைக்கொண்டு கண்களைக் கழுவியும், இந்த ஜலத்தில் துணியை நனைத்து கண்களுக்கு ஒத்தடம் கொடுத்தும், இந்த ஜலத்தில் நனைத்துப்பிழிந்த வெள்ளைத்துணியை கண்களுக்குக் கட்டியும், கண்வலி கண்களில் நீர்முட்டல் மாலைக்கண் மஞ்சட் காமாலை வெங் கண்ணோய் மந்தபார்வை இவற்றையும்; மஞ்சள் பொடிசெய்து வெந்நீரில் காலை மாலை இருநேரம் ஒரு சிட்டிகை வீதம் கொடுத்து, வயிற்றுப் பொருமல் அஜீ ரணபேதி புளித்தேப்பம் வயிற்று இரைச்சல் இவற்றையும்; மஞ்சள் பொடியைத் தூவியும்; மஞ்சளையும் சாதத்தையும் அரைத்துக்கட்டியும், கட்டிகள் விரணங்கள் புழுக்கள் ஆறுபுண்கள் மாறாத சீழ் தீராதவெடிப்பு இவற்றையும்; முருங்கையிலைக் கொழுந்தை விளக்கெண்ணெய் விட்டுவதக்கி மஞ்சள் பொடி சேர்த்து இடத்திற்குத் தக்கபடி அரைத்தோ அரைக்காமலோ கட்டிவைத்து முகப்பருக்கள் பழுக்காத கட் டிகள் உதட்டைத்தின்னும் புழுக்கள் நாற்றமெடுத்தபுண் இவற்றையும்; அப்போது கறந்த புதிய பசும்பாலில் மஞ்சள் பொடியிட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து இருமல் புகை யிருமல் சிணுக்கிருமல் வாய்ப்புண் இவற்றையும்; மஞ்சள் பொடியை உப்புடன் கூட்டி கட்டை விரலில்தொட்டு உண்ணாக் கில் தடவி உண்ணாக்குவளர்ச்சி மேல்வாயில்வழவழப்பு கபக் கட்டு இவற்றையும்; இவை போன்ற பலவியாதிகளையும் குழந் தைகள் முதல் பெரியவர் வரையில் சுகப்படுத்தி வருவதோடு

கெர்ப்பிணிகள், பிரசவஸ்திரீகள், காலங்கடந்தும் புஷ்பிணியாகாதவர்கள் முதலியவர்களுக்கும் இந்த மஞ்சளைக் கொண்டு அநேகவித ஸ்திரீவியாதிகள் கேர்ப்பரோகம் பிரசவரோகம் சொணிரோகம் முதலிய வியாதிகளேயும் தீர்த்து வருதல் நம் நாடுசெய்த தவப்பயனேயாம்.

கடிதம் நீண்டுவிட்டதால் முக்கியமான தேரையமகா முனிவரின் சில பாக்களோடு நிறுத்துவாம்.

மஞ்சள் கிழங்கின் குணம்—வெண்பா.

பொன்னிறமாம் மேனிப் புலால்நாற்ற மும்போகும்
மன்னு புருஷ வசியமாம்—பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போந் தீபனமாங்
கூர்ந்தமஞ்ச ளின்கிழங்குக் கு.

தலைவலிநீ ரேற்றஞ் சளியாத மேகம்
உலைவுதரு பீநசத்தி னூடே—வலிசுரப்பு
விஞ்சு கடிவிஷமும் வீறுவிர ணங்களும்போம்
மஞ்சட் கிழங்குக்கு மால்.

மஞ்சள் பூசிக் குளித்தலின் குணம்—வெண்பா.

மஞ்சட் குளிதனக்கு மாறுந்தூர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியம் விட்டகலும்—தொஞ்சலுறும்
ஐயம் ஒழியும் அடர்வியர்வுங் காணுது
வைய மதனில் வழுத்து.

திருநீலகண்ட நாயனர் கதாசாரம்.

தச்சநல்லூர் ஸ்ரீமான் இலக்ஷுமணப்போற்றி ஐயா அவர்கள் எழுதியது.

திருநீலகண்ட நாயனர் சைவசமய நாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒருவர். அவர் சிவபிரானது நீலகண்டத்திற் பதிந்த அன்புடையராயிருந்தார். ஏன்? பாற்கடலினின்றும் எழுந்த விஷமானது உலகத்தைத் தகிக்கத்தொடங்கிய பொழுது சிவபெருமான் கருணையினுல் ஆன்மாக்களைக்காக்கும்பொ

ருட்டு அதனைக்கரத்திற்பற்றி உண்டார் என்பதும் அதனுல் சகல உயிர்களும் பிழைத்தனவென்பதும் பிரசித்தமாதலால் அக்கருணையை உள்ளுற உணர்ந்து அக்கண்டத்தின்பால் மிக்க ஆர்வம் கொண்டவராயினுர் நம் நாயனுர். "சிவபக்தி ஒரு பால் இருப்ப இவர் இளமை மீதூற இன்பத்துறையினில் எளியராகி" பரத்தையரிடத்திலும் சிறிது பற்றுடையவராயி னுர். உண்மையான பக்தியும் அதற்கு மாருகிய சிற்றின்பப் பற்றும் ஒரே புருஷனிடத்தில் ஒருங்கே இருத்தல் கூடுமா? எனச்சங்கை நிகழும். கூடுமென்பதே துணிபாம். ஜீவான் மாக்கள் அஞ்ஞானத்தில் மூழ்கியிருப்பதால் நினைத்தமாத்திரத் திலேயே ஞானுநுபவத்தைப் பெறுதல் இயலாது. நித்திரை யில் உள்ளான் ஒருவன் ஜாக்கிர அவஸ்தைக்கு வருமளவும் இடையில் எவ்வளவோ மயக்க உணர்ச்சிகள் எய்தப்பார்க்கின் றனம். ஞானம் முதிர முதிர அஞ்ஞானம் அருகுதல்வேண்டும். பக்திசெய்யச்செய்ய ஞானம் பலப்படவே காம குரோதாதிகள் வலியிழத்தல் இயல்பாம். ஆனதுபற்றி அரனிடத்தில் அழுந் திய பக்தியும் அபலைகளிடத்தில் ஆசையும் ஒருங்கே அமை யப்பெற்றவராய் நமது நாயனுர் வீற்றிருத்தல் புதுமையன்று.

ஒருநாள் நாயனுர் பரத்தையரை அடைந்து வந்த செய் தியை உணர்ந்த அவரது உத்தம மனைவியார் "எம்மைத் தீண்டலாகா"தென்று தமதுகணவருக்கு உரைப்ப அவர் மீண் டும் முயலவே அவருக்குக் குறிக்கோளா யுள்ள திருநீல கண்டத்தின் மீது ஆணையிட்டனள். இதைக்கேட்டவளவிலே நாயனுர் திருநீல கண்டத்தின் மீது தமக்கு நிகழ்ந்த பக்திமே லீட்டினுல் தமது மனைவியை மட்டுமன்று அவர் எம்மை என்று பன்மையிற் கூறியதால் பெண்களாயுள்ளார் எவரை யும் தொடுகிறதில்லை யென்கிற வைராக்கியம் பூண்டனர். இவ் வாறு அந்தரங்கத்தில் நிகழ்ந்து வரினும் புறம்பே நடத்த வேண்டிய இல்லறச்செயல்களில் யாதொரு குறைவுமின்றி உத்தம பத்தினியார் ஒழுகிவருவா ராயினர். நிற்க,

கணவன் சொல்வழி நிற்றல் மனைவியர் கடமையா யிருக்க கணவனை மீறிநடக்கை பெண்களுக்கு நல்லறமாகுமா? நற்

பயன் விளையின் நல்லறமாகும் என்க. "தற்காத்துத் தற்கொண் டாற் பேணி" எனத்திருவள்ளுவர் கூறுவதால் தம்கணவரைப் பேணுதல் பெண்களின் சிறந்த கடமையாகும். கணவன் தன் மனைவி யிருக்க மறு மாதரை இச்சிப்பதால் விவாக சமயத்தில் தான் செய்துகொடுத்த பிரதிஞ்ஞைக்கு இழுக்கு நேர்வதுபற்றி எரிவாய் நரகத்திற்கு ஆளாவது ஒன்று. அன்றியும் பிற க்ஷேத்திரங்களில் சந்ததி உற்பத்தியாவதால் அதைப்பாதுகாக்க இயலாது அதன் பாவத்தைப் பகிர்ந்துகொள்வது மற்றொன்று. பின்னும் இவ்வுலகத்தில் எய்தத்தக்க கேடுகள் பலவாம். இவ்வாறு தன் கணவன் அடையத்தக்க பல கேடுகளினின்றும் பேணப்படுவதால் அவன் சொல்வழி நில்லாமை மனைவியின் கற்பினுக்கு இழுக்காகாது. அவ்வாறு பேணுதல் கற்பினுக்கு இலக்கண மென்க.

நாயனார் வேட்கோவர் குலத்துதித்தவராதலின் மட்கலம் வனைந்து ஜீவிப்பாராயினர். சிவனடியார்களுக்கு ஓடும் உதவுவாராயினர். நமது நாயனாரது உண்மை நிலையை உலகத்தார் அறிந்து உய்யுமாறு சிவபெருமான் சிவயோகிவடிவுகொண்டு அவரிடம் வந்து ஒரு திருவோட்டைக் கொடுத்துவைத்து நாம் திரும்பவந்து கேட்கும்போது அதே ஓட்டைப் பாதுகாத்துக் கொடுத்தல்வேண்டும் என்று பலவாறு உறுதிமொழிபெற்றுச் சென்றனர். பல நாட்கழித்து அச்சிவயோகி தாம் அடைக்கலப் பொருளாகக் கொடுத்து வைத்திருந்த திருவோட்டைத் தரும்படி நாயனாரைக்கேட்டனர். நாயனார் மனை யுட்புகுந்து தேடியும் காணாது திகைத்து நிற்ப, சிவயோகியாய்வந்த பரமசிவம் அவரை இகழ்ந்துபேச முடிவில் அவர் அவ்வோட்டைக் களவுசெய்யாமைக்கு நாயனார் புதல்வனைப்பற்றி குளத்தில் மூழ்கித்தரவேண்டுமென்றனர். நாயனார் தமக்குப் "பொய்யில் சீர்ப்புதல்வன் இல்லை" யென்றார். பொய்யில்சீர்ப் புதல்வன் என்றமையால் மனைவியல்லாத பிறக்ஷேத்திரங்களில் புத்திரன் உற்பத்தியாயிருக்கலா மென்பது ஊகிக்கற்பாலதாம். கடைசியாக தில்லை மூவாயிரவர் அவைக்களத்திற் சென்று மனைவி கைப்பற்றி மூழ்கித்தருவதாக ஒருவாறு நாயனார் இணங்கி குளத்திற் சென்று மனைவியின் கையைத்தொடாமைப்பற்றிய

காரணத்தைப்பலரும் அறியச்சாற்றி முழ்கவே அவ்விருவரது முதுமைப்பருவமும் நீங்கி இளமை எய்தவே சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி கொடுத்து அநுக்கிரகம் பண்ணிச் சென்றனர்.

இச்சரித்திர சாரமாவது.

(க) நாயனர் வேட்கோவராயிருப்பினும் யோக்கியதையினல் பூஜிதைபெற்றமையால் ஜாதியினும் ஒழுக்கம் சிறந்ததாயிற்று.

(உ) ஒழுக்கம் தெய்வபக்தியினல் அடையக்கூடும்.

(ங) ஒரே பிறப்பில் தீயொழுக்கத்தில் நின்றான் ஒருவன் அப்பிறப்பிலேயே நல்லொழுக்கமுடையனாதல் கூடும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றவாறு மேலான கருத்தையே குறியாக வைத்துக் கொள்ளல்வேண்டும்.

(ச) மனைவியைக் காம இச்சைக்கு உரியவளாக மதியாமல் தனக்கு உண்மைத்துணையாகக் கொள்ளல்வேண்டும்; அவளது நன்மொழிகளை கௌரவமாக ஒப்புதல் வேண்டும்; அது குறைவாகாது.

தமிழும் ஆரியமும்.

துடிசைக்கிழார் அ. சிதம்பரனரவர்கள்.

இத்தலைப் பெயர் கொண்ட விடயமானது சின்னாள் முன்னர் புதுவையினின்றும் வெளிவந்துலவிய "கலைமகள்" வெண்டாமரை ச இதழ் அ—கூ-ல் பிரசுரிக்கப்பட்டது. அப் பத்திரிகை இப்போது நடைபெறவில்லை. பின், இப்போது சென்னைச் சிவனடியார் கூட்டத்துத் திங்கட்டாளாக வெளிவரும் "சைவம்" என்னும் பத்திரிகையின் அ-வது மலர் ங-வது இதழில் கலைமகளினின்றும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட விடயத்தைப்பற்றி நடுநிலைமைத் திறம் வாய்ந்தவர்களுக்குச் சில சொல்லவேண்டியது அவசியமாகத் தோன்றினபடியால் அடியில் வருமாறு வரையலுற்றேன். பத்திராசிரியர் இதற்கும் இடம் தந்து உதவுவாரென்றே எண்ணுகிறேன்.

பத்திரிகைகள் உலகத்திற்கு இன்றியமையாதன என்று ஒவ்வொருவரும் தற்காலம் செவ்வனே அறிந்திருப்பர். ஏனென்றால், விடயங்களைச் செவ்வனே அறிந்துகொள்ள அவைகள் கருவிகளாயிருக்கின்றன. பத்திரிகாசிரியரும் விடயதானம் செய்யும் பண்டிதர்களும் விடயங்களைச் சந்தேக விபரீதமறத் தெளிவாய்ப் பிரித்துப் பிரித்துக் கூற வேண்டியது கடமை.

அப்படியிருக்கப் பத்திராதிபரே ஆரியத்தையும் தமிழையும் வேறு பிரித்து அறியாதேயுங்கள். ஒன்றெனநினையுங்கள். "ஆரியம் தமிழ் என்ற மொழிப் பிரிவு ஏற்படுத்தி நாம் யாரை ஆரியரென்று ஒதுக்குவது? எவரைத் தமிழரென்று விலக்குவது? இது முடியாத காரியம். ஆரியரென்பதும் தமிழரென்பதும் இப்போது ஒரு தேயத்துச் சனங்கட்கே பெயராகும். ஆகவே இப் பிரிவேற்படுவதனால் நன்மையுண்டாகுமா? ஒருபோதும் உண்டாகாது. நன்மையுண்டாகாமற் போவது மட்டுமோ? தீமையும் விளையும். எக்காலத்தோ குண கருமங்களைக் கொண்டு, அக்காலத்துக்கு நலம் தருமென்று கருதி ஏற்படுத்தப்பட்ட சாதி வருணாச்சிரமங்கள், நடவடிக்கையிலின்றி வெறும் சொன் மாத்திரமாக நின்று உயர்வு தாழ்வுகளைக் கற்பித்து ஒற்றுமையைக் கெடுத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் இம்மொழிப்பிரிவு ஒன்றும் ஏற்படுமானால் அது நன்மையைத் தருமா என்று நீங்களே நினைத்துப் பாருங்கள். இன்னும் ஒற்றுமையைக் கெடுத்துத் தீமையைத்தான் உண்டாக்கும். இதில் ஐயமேயில்லை" என்றும் "ஆரியாவர்த்தத்திலிருந்துவந்தவர்கள் ஆரியர்கள்; அவர்கள் இங்கு வந்து தமிழர்களை வென்று தமிழ்நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைக்கச் செய்து கொண்டார்கள்; பின்னர்த் தமிழர்களும் அவர்களும் ஒன்றுசேர்ந்துவிட்டார்கள்; அவர்களாலேயே வர்ண பேதங்கள் கற்பிக்கப்பட்டன; அவர்கள் வந்தபிறகே தமிழிற்கு ஆரியக் கலப்பு ஏற்பட்டது என்பது முதலாகச் சரித்திரக்காரர் முதலிய சிலர் சாற்றுகின்றனர். எப்படி யிருந்தாலும் இருக்கட்டும். அதைப்பற்றிய ஆராய்ச்சி இப்போது நமக்கு வேண்டுவதில்லை. என்றும் எழுதுகிறார்.

பத்திராதிபர் கடமை என்னவென்றால் ஒவ்வொரு விடயத்தையும் தெளிவாகப்பிரித்துக் காட்டுவதாகும். அறிவு என்னும் பதமானது அறு என்னும் பகுதி அடியாகப் பிறந்த பெயர். ஒவ்வொரு விடயங்களையும் பிரித்துப் பிரித்து அவைகளின் உண்மை நிலைகளைத்தெரிந்துகொள்ளுவதே அறிவு. அதைவிட்டுப் பிரித்துப்பாராதே, கண்ணை மூடிக்கொள், ஒன்றெனநினை. என்று உபதேசம் செய்வது நன்று! நன்று!! இவர் இப்படிக் கூறுவது எழுதுவோருடைய கருத்தை

அறியாமையாகும். தெலுங்கைத் தெலுங்கென்றும், ஆங்கிலத்தை ஆங்கிலமென்றும், ஆரியத்தை ஆரியமென்றும், தமிழைத் தமிழென்றும் தெரிந்துகொள்ளுவதால் நஷ்டம் என்ன? ஒவ்வொன்றினுடைய சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளுவதால் தீமை எப்படி விளையும்? பாஷையாவது,—மனிதர்கள் தங்கள் கருத்துக்களை ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்ட ஒரு கருவியேயாகும். உலகத்தில் தற்காலம் நிலவுகின்ற எல்லாப் பாஷைகளும் ஏக காலத்தில் உண்டாயிருக்கமுடியாது. ஒன்றின் பின் ஒன்றாகத்தான் பிறந்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய ஆராய்ச்சியில் கண்டபிரகாரம் எந்தப் பாஷையை முதல் என்று சொன்னால் என்ன; அது ஆரியமானாலும் ஆகுக; தமிழானாலும் ஆகுக; அல்லது கிரீக், லத்தீன், ஈப்ரூ பாஷைகள் ஆனாலும் ஆகுக. ஆராய்ச்சியே கூடாது என்று கூற வரும் பத்திராதிபரை இது வரை நாம் கண்டிலம்.

ஓசையைக் குறிக்க எழுந்த குறியீடுகள் எழுத்துக்கள். எழுத்துக்கள் சேர்ந்தது பதம். பதங்கள் சேர்ந்தது வாக்கியம். வாக்கியங்கள் சேர்ந்தது பாஷை. பாஷைகள் ஏற்படுத்தப்பட்டபெ ழுது பண்டிதரானோர் கால் தேசவர்த்தமானங்களுக்குத் தக்கபிரகாரம் அவ்வக்காலங்களில் வழங்கிய ஓசைக்குத் தக்கபிரகாரம் குறியீடுகள் அமைத்தார்கள். பிறகு பாஷையாயின. குறியீடுகள் அமைக்கப்படாமுன்னம் ஒவ்வொரு பாஷையும் பேச்சுவழக்கிலேயே இருந்தது. பேச்சின் போக்கை அநுசரித்துப் பாஷைகள் பிரிந்தன.

தற்காலம் அநேக பண்டிதர்கள் உலகத்தில் முதன் முதல் மனித உற்பத்தி எங்கே உண்டாயிற்று என்றும், முதன்முதல் உண்டான பாஷை எது என்றும் ஆராயப்புகுந்தார்கள். அப்படி ஆராய்ச்சி செய்யும் காலத்தில் சிலர் தமிழில் இயற்கை ஓசைகள் நிறைந்திருக்கின்றன; ஆரிய முதலிய மற்றப்பாஷைகளில் செயற்கை ஓசைகள் நிறைந்திருக்கின்றன; தமிழில் உள்ள குறியீடுகள், முதன் முதல் உண்டாக்கப்பட்ட குறியீடுகள்; ஆரியத்திலுள்ள குறியீடுகள் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவைகள் என்று தாம் கண்டதை எழுதுகிறார்கள். இதனால் என்ன தீங்கு? இன்னும் சிலர் சமஸ்கிருதத்தை முதல் பாஷையென்றும் அதனினின்றும் மற்றப்பாஷைகள் உண்டாயினவென்றும் கூறுகின்றனர். இதனால் என்ன தீங்கு?. ஆராய்ச்சி இன்றேல் உண்மை ஏற்படாது. பத்திராசிரியர் ஆராய்ச்சியைப் பலப்படுத்துவது பொய்வேண்டாமென்று சொல்வதைப்பார்க்க வேடிக்கையாய் இருக்கிறது. "தமிழும் ஆரியமும் இன்னகாலத்தில் ஏற்பட்டதென்று சொல்ல எவராலும் இயலாது" என்று இவர் என் மனப்பால் குடிக்க வேண்டும். இருக்கட்டும். இன்ன காலத்திலென்று காலத்தைக் குறிப்

பிடாமற் போனபோதிலும் இரண்டு பாஷைகளும் ஏககாலத்தில்உண்டா யிருக்க முடியுமா? இதைப்பற்றி இவர் கூறும் ஆதாரங்களைக் கவனிப் போம்.

(க) இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவர்"

என்பதும்

(உ) வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற் கிணையாத்
தென்மொழியைஉலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்"

என்பதும் ஆமென்க. இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவராயி ருக்கலாம். அதனாலேயே இரண்டும் ஏககாலத்தில் ஏற்பட்டது என் பது போதராது. வடமொழியைப் பாணினிக்குத் தெளிவுறுத்தியிருக் கலாம்; தென்மொழியை அகத்தியர்க்குத் தெளிவுறுத்தியிருக்கலாம்; அதனாலேயே இரண்டுபேருக்கும் ஏககாலத்தில் தெளிவுறுத்தினர் என் பது எப்படிப் பேர்தரும்.

கலைமகள் பத்திராசிரியர் "சரித்திர வாராய்ச்சி இப்போது நமக்கு வேண்டுவதில்லை" என்கிறார். இவருக்குப் பொய்க் கதைகள் தான் வேண்டும் போலும். சரித்திரவாராய்ச்சி இல்லாததினால் அல்லவோ தமிழ்நாடு தாழ்ந்த நிலைமையில் இருக்கிறதென்பதைப் பத்திராசிரியர் ஞாபகத்தில் வைக்கவேண்டும். சரித்திர வாராய்ச்சியால் மேல்நாடுகள் சீரும் சிறப்பும் எய்தி இருப்பதை இவர் கண்திறந்து பார்ப்பாராக. பாணினியாரும் அகத்தியனாரும் ஏக காலத்தவரா? கண்ணுதலார் இரு வரையும் ஏக காலத்தில் வைத்துக்கொண்டு இரு பாஷைகளையும் உப தேசித்தாரா? அல்லது எந்தப் பாஷையை முன் பகர்ந்தார்? எதைப் பின் பகர்ந்தார்? எந்தப் பாஷை இலக்கண வரம்பு பெற்றது? எது இலக்கண வரம்பில்லாதது? எந்தப் பாஷை உலக வழக்கழிந்தொழிந்து சிதைந் துள்ளது? எது அப்படிச் சிதையாமல் என்றும் ஒரு படித்தாயுளது? எந்தப்பாஷை ஆதிகாலந்தொட்டு இந்நாட்டில் நிலவுவது? எது நடுவில் வந்து சேர்ந்தது? எந்தப்பாஷைக்கு எழுத்துக்கள் நடுவில் கற்பிக்கப்பட் டன? எதற்குஆதிகாலம் தொட்டு வரிவடிவு உண்டு? என்று இன்னணம் ஆராய்வதால் என்ன தீங்கு? ஆராய்ச்சியில் எது முந்தியிருந்தால்என்ன? உள்ளதை உள்ளபடி அறிய வேண்டாமா? இவ்விந்தியாவில் தமிழர் ஆரியர் இவ்விருவர்களைத் தவிர மங்கோலியர் நீக்ரோவர் முதலானவர் களும் இருக்கிறார்கள். அவர்களையும் வேறுபடுத்திப் பேசவேண்டாம், அவர்களுடைய வேதங்களையும் தமிழர்களும் ஆரியர்களும் ஒத்துக் கொள்ளவேண்டும் என்று பத்திரிகாசிரியர் கூற முன்வருவார்போலும்.

ஆராய்ச்சி செய்பவர்கள் ஒரு பாஷையைத் தூஷிக்கக்கூடாது. எந்தப் பாஷையானாலும் சரி என்றிருக்க வேண்டும். ஆராய்ச்சியில் கண்டதை நிந்தனை யில்லாமல் எழுதவேண்டும். அப்படி எழுதும் போது ஆராய்ச்சி முறையில் ஒன்றிலிருந்து ஒன்று உண்டான சம்பந்தத்தைக் குறிக்க வேண்டிவரும். அல்லது இதுவரை கொண்டிருந்த கருத்துக்களை மறுக்க வேண்டிவரும். அவையெல்லாம் ஆராய்ச்சியின்பாற் படுமே அன்றி நிந்தனையாகாது. படிப்போர்களும் அவ்வாறு நிந்தனையாகக் கொள்ளக்கூடாது.

உதாரணமாக:—"சமஸ்கிருதம்" என்ற பதத்திற்கு "நன்றாய்ச் செய்யப்பட்டது" என்று அர்த்தம். ஆகையால் சமஸ்கிருத பாஷையானது இயற்கை மொழியல்ல. பிற்காலத்தில் நன்றாய்ச் செய்யப்பட்ட பாஷை என்று ஒருவர் எழுதுகிறார். இதனால் யாருக்கு என்ன தீங்கு? அந்த வார்த்தையினால் விளங்கும் பொருளை விளக்கினால் எல்லாருக்கும் நலமல்லவா? சமஸ்கிருதப் பற்றுடைய சிலருக்கு மாத்திரம் கொஞ்சம் மனவருத்தம் ஏற்படுமே யொழிய வேறின்று. அவர்களும் ஊன்றி யோசித்துப் பார்ப்பார்களானால் கவலைப்படமாட்டார்கள்.

கலைமகள் பத்திராசிரியர் மேலும் "எவரைத் தமிழர் என்று விலக்குவது, யாரை ஆரியரென்று ஒதுக்குவது, இது முடியாத காரியம்" என்று எழுதுகிறார். இவரை ஒதுக்கவும் விலக்கவும் ஒருவரும் சொல்லவில்லை. இப்போது மகம்மதியர்களுடனும் கிறிஸ்துவர்களுடனும், சீனர்களுடனும் கலந்து வாழவில்லையா? அவர்களையும் தமிழர் என்றா கூறுகினறோம்? இல்லையே. அவரவர் ஜாதிப் பெயரானன்றோ அழைக்கின்றோம். அதுபோல் ஆரியரை ஆரியரென்று கூறுவதில் என்ன தீங்கு? அவருடன் ஒத்துவாழ வேண்டாமென்று ஒருவரும் சொல்லவில்லை. அவரவர்களுடைய உண்மைச் சரிதத்தை அறிந்து கொள்ளவேண்டுமென்பதே எழுதுவோருடைய கருத்து.

பிரொபஸர் கீத் என்பவர் இவ் விந்திய நாட்டிற்கு வந்து பல ஜாதிகளைப்பற்றியும் தெரிந்துகொண்டுபோய் சென்ற வருடம் மார்ச்சு மாதத்தில் லண்டன்பட்டினத்தில் பேசினதாவது:—தமிழர் ஆரியவகுப்பில் சேராதவர்கள். ஆரியர் (காக்கேசியர்) மங்கோலியர், நீகிரோவர் இவைகளில் தமிழர் சேரார். தமிழ் வகுப்புத் தனிவகுப்பு. தமிழ் வகுப்பை மூக்கு-தலை இவைகளின் அமைப்பால் அறியலாம். இந்தியாவில் தமிழ் வகுப்பே அதிகம். என்று கூறியிருக்கின்றார். இப்படி ஆராய்ச்சி பலத்துவரும் இக்காலத்தில் கலைமகள் பத்திராசிரியர் பிரித்துப் பேசாதேயுங்கள் என்றால் நடக்குமா? இவருக்குத் தமிழரையும் ஆரியரையும் வேறு பிரித்து அறியமுடியாவிட்டால் மற்றவர்களாலும்

முடியாது என்று ஏன் கூறவேண்டும்? சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களே தமிழர் ஆரியர்களை வேறுபிரித்துக் கூறியிருக்கிறதற்கு இவர் என் செய்வர்? (சாந்தோக்கியம் திரிதீய காண்டம் ௯-வது பிராபாடகம் பார்க்க.)

ஆகையால், தமிழ் ஆரியம் என்ற இரண்டினது ஆராய்ச்சியே இவ் விந்தியநாட்டின் சரித்திரத்தை வெளிப்படுத்தும். உண்மையையும் தெரிவிக்கும். இதை வேண்டாமென்றால் கட்டுக்கதைகளைத்தான் நம்பி மோசம்போக வேண்டும்.

ஆரியர்கள் எப்படிவேதங்களையும் சாஸ்திரங்களையும் ஆரிய முதன் மூன்று ஜாதிகளைத்தவிர மற்றவர் வாசிக்கக்கூடாதென்று சொல்லுகிறார்களோ அப்படியே கலைமகள் பத்திராசிரியரும் சரித்திரவாராய்ச்சி வேண்டாமென்கிறார். வேதங்களைப் படித்தால் ஆரியர்களுடைய சரித்திரத்தைத் தெளிவாய் அறியலாம். தமிழர்களுடைய உயர்வும் தமிழ்ப் பாஷையின் உன்னத மாட்சியும் அதனால்விளங்கும். உதாரணமாக:—சாந்தோக்கியத்தில் "இதற்கு முன் இந்த வித்தையானது ஆரியன் எவனுக்கும் தெரியாது. முதன்முதல் உனக்கு நான் உபதேசம் செய்கிறேன்" என்று ஆரியன் அல்லாத ஒருவன் கூறுவது ஆரியருக்கு ஞானபாகம் அதற்கு முன் தெரியாது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆகையால் ஞான சாஸ்திரங்கள் தமிழில்தான் இருந்தனஎன்பதும் தமிழர்கள் வேத காலத்தில் மிக்க ஞானவான்களா யிருந்தார்கள் என்பதும் போதருகின்றது. ஆகையால் இவ்வித சங்கதிகளெல்லாம் வெளிவரக்கூடாது எல்லோரும் இவைகளைப் படிக்கக்கூடாது என்று அபிப்பிராயமுள்ளவர்கள் வேதங்களையும் உபநிஷத்துக்களையும் படிக்கக்கூடாது என்றும் சரித்திர முறையாய் கவனிக்கக்கூடாது என்றும் கூறுகிறார்கள். இந்த மாதிரியாக பத்திரிகாசிரியராக உள்ளவர்கள் எண்ணுதல்கூடாது.

சரித்திர ஆராய்ச்சியின்படியும் இருக்கு வேதமும் சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துக்களும் கூறுகிறபடி ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகின்றார்கள். அவர்களுக்குப்பின் மகமதியர்கள் வந்தார்கள். வந்துசேர்ந்த ஆரியர்கள் தமிழ் நாட்டிலேயே நிலையாய்க்குடியேறி தமிழர்களுடைய சமயத்தைக் கைக்கொண்டு தமிழர்களுடைய தெய்வங்களை வழிபட ஆரம்பித்தார்கள். ஆரியக்கொள்கைகளையும் தமிழர்களைக் கைக்கொள்ளச்செய்தார்கள். இருபெரும் வகுப்பார்களுக்கும் பிராமணகாலத்தில் அதாவது கௌதமசாக்கியமுனிக்கு முந்தி சண்டை உண்டாயிற்று.

ஆகையால், ஆரியர்கள் இந்நாட்டிற்கு எப்போது வந்தார்கள்? அவர்களால் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் என்னென்ன பெருமைகள் உண்

டாயின்? அல்லது என்னென்ன தீங்குகள் உண்டாயின்? சுத்த ஆரியப் பரம்பரையார் யாவர்? ஆரியமதத்தைத் தழுவின தமிழ்ப் பரம்பரையார் யாவர்? எந்தெந்த அரசர்கள் ஆரியரோடு மலைந்துபோர்செய்தவர்கள்? யாவர் ஆரியரோடு உறவாடி இருந்தவர்கள்? என்று எல்லாம் ஆராய்வது சரித்திரக்காரர் இயல்பு. இப்படிஆராய்ந்தால் தமிழர் இன்னார் ஆரியர் இன்னார் என்று பிரிப்பது எளிது. உண்மைநிலை வெளிப்பட்டால் இருபெரும் வகுப்பாரும் சந்தோஷமாய் சிநேகபாவமாய் வாழ்வார்கள். ஒற்றுமைஏற்படும். ஒருவனுக்கு ஒரு பிளவை ஏற்பட்டால் அறுத்துத்தான் சுகப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் முடியாது. அதுபோல் இருவர் சங்கதியையும் ஒவ்வொருவரும் அறிந்தால்தான சுகம் ஏற்படும்.

நம்நாட்டில் அநேகம் பேர் கிணற்றுத்தவளைகளாயிருக்கிறார்கள். அதனால் தான் இப்படி யெல்லாம் எழுதவேண்டிவருகிறது. பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜாதியைத்தவிர உலகத்தில் வேறு இல்லை என்கிறார்கள். ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இதைக் கேட்டால் சிரிப்பார்கள். தாவர வர்க்கங்களுக்கும் தாது வர்க்கங்களுக்கும் பக்ஷி மிருகங்களுக்கும் நாற்சாதிப் பகுப்புக் கற்பிக்கிறார்கள். இது விந்தையினும் விந்தை. இருக்கு யசுர் சாமம் அதர்வணத்தையே உலகமெல்லாம் அநுசரிக்கவேண்டுமென்கிறார்கள். இது தப்பான எண்ணம். உலகத்தில் ஒவ்வோர் பக்கம் வாழ்பவர்களுக்கெல்லாம் வேதம் வேறு. ஜாதிவகுப்புக்கள் வேறு. ஆரியவேதம் எல்லாருக்கும் ஒவ்வாது. இதுபிரத்தியக்ஷப்பிரமாணம். அதுபோல் தமிழருக்குஆரியவேதம் ஒவ்வாது. மகா-ள-ள-ஸ்ரீ கே. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் "செந்தமிழ்ச்செல்வி" யில் எழுதிய "நான்மறை விளக்கம்" பார்க்க. ஆதலால் காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்தல் அறிவுடையார் கண்ணது என்பதை மாத்திரம்சொல்லி இத்துடன் இதனை நிறுத்துகின்றேன்.

நமது பலசரக்குக் கடை.

(Registered copy right.)

அஞ்சா நெஞ்சன் எழுதுகிறார்:—

உலகம் புரண்டுபோய்க் கிடக்கிறது. நல்லவர் அதிகமாகக் கிடையாது. ஒருவ ரிருவர் இருந்தால் அவரை மதிக்க ஆளும் கிடையாது. கொலையும் புலையும் மலிந்துவிட்டன. பொய்யும் புரட்டும் நிரம்பி விட்டன. கள்ளுங் காமமுங் களி

யாட்டபர்கின்றன. அகட விகடம் பேசி ஆடித் திரியும் ஆகாசப் புரட்டரே பல்கிவிட்டனர். இந்தக் கூட்டத்தைப் பார்க்கிறபோது எனக்குச் சிரிப்பு வருகிறது. அழுகை வருகிறது. கோபம் வருகிறது. பொறுமையும் வருகிறது. நாக்கின்மேலே பல்லும் மூக்கின் மேலே கோபமும் வந்து செய்பக் கிடப்பதென்ன? இப்படியோஜித்தால் பொறுமையும் வந்துவிடுகிறது. மதத்தை ரக்ஷிக்க மடாதிபதிகளை வைத்தோம். கடவுளை வழிபட கோவில்களைக் கட்டினோம். அவைகள் நன்றாக நடைபெற வேண்டுமென்று ஏராளமானகிராமம் பூமிகளைக்கொடுத்தோம். சத்திரங்களைக் கட்டினோம். மடங்கள் பாடசாலைகள் பசுமடங்கள் முதலிய எண்ணிறந்த தருமங்களைச் செய்தோம். எல்லாம் இப்போது எப்படி யிருக்கின்றன. மடாதிபதிகள் பஞ்சமகாபாதகங்கட்கு அஞ்சவில்லை. கோவில்கள் திருடர்கள் இருக்கும் குகைபோலவும் சுங்கச்சாவடி போலவும் ஆகிவிட்டன. வேதபாடசாலை வெறும் சோற்றுமடங்கள் ஆகிவிட்டன. பசுமடத்தில் பாலைக் கறந்து தாசிவீட்டிற்குக் கூட சில விடங்களில் கொடுக்கப்படுகிறது. சத்திரங்கள் மடங்களில் நடைபெறும் அநியாயங்கள் சொல்லவேண்டியதில்லை. பரமசிவனே! சேரசோழ பாண்டியர்கள் அறம் வளர்த்த தமிழ்நாடு—இறைவனும் இறைவியும் இளையோனும் அரசாண்ட இந்நாடு சமய வாழ்க்கையை மறந்தும் இடர்ப்படலாமா? இளைஞர்களே! ஊறிந்து சமூகத்தின் ஆணிவேரில் கறையான் பிடிக்கிறது. இதைச் சிலரே அறிந்திருக்கின்றனர்.

* * *

நம்முடைய நாட்டிற் பிறந்திருக்கிற ஒவ்வொருவருக்கும் உபதேசிக்கவேண்டிய மகாமந்திரம் "நடுங்காதே! தைரியமாயிரு!" என்பதாகும். நம்மவர்கள் தைரியத்தை இழந்து பல வருஷங்களாகிவிட்டன. நடுக்கத்தைப் பேணிவளர்க்க ஆரம்பித்தும் பல நாளாகி விட்டன. எதைக்கண்டாலும் பயந்து சாகின்றனர். உண்ணும்போதும் உறங்கும்போதும் எண்ணும்போதும் எழுதும்போதும் நடக்கும்போதும் நிற்கும்போதும் நினைக்கும்போதும் பேசும்போதும் இருக்கும்போதும் இறக்கும்போதும் நடு நடுங்கி வெடிவெடிக்கின்றனர். மனிதன்

பயந்து பயந்து தன்னுயிரைக் கழித்துக் கொலைபுரிகின்றான். பயம் வளர வளர அறிவு குன்றி ஆராய்ச்சிகுன்றி வலிமை குன்றி வாழ்க்கை குன்றி அடிமைப்பட்டு மிருகச் சாவு சாகின்றான். ஐயோ! வீராதிவீரர் பிறந்த தமிழ்நாடு—ஞானதீரர்களையும் வெற்றிவீரர்களையும் பெற்ற தமிழ்நாடு இன்றெப்படியிருக்கிறது? உடல் வலியுமின்றி உயிர்வலியுமிழந்து அடிமை வாழ்க்கை—உயிரற்ற வாழ்க்கை—அங்கு மிங்கும் பார்த்து நடு நடுங்கி வாழும் வாழ்க்கையே எங்கும் காணப்படுகிறது. தமிழ் நாட்டில் தைரியத்தைக் காணவில்லை. மார்பை முன்னே தூக்கித் தலைநிமிர்ந்து அஞ்சா நெஞ்சுடன் நடக்கும் ஆண்மகனைக் காணமுடியவில்லை. "தறி செறி களிறு மஞ்சேன்" "தழல் விழி உழுவை யஞ்சேன்" "வன்புலால் வேலு மஞ்சேன்" என்று கூறிய மந்திரி மாணிக்கவாசகர் பிறந்த இந்த நாட்டில். "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று நிமிர்ந்து கூறிநின்ற நாவுக்கரசடிகள் வேதம் விரித்த வீரத்தமிழ் நாட்டில்—"நாள்களும் கோள்களும் நம்மைநலியா" என்றெடுத்துரைத்த ஞானசம்பந்தர் பிறந்த திருநாட்டில்—"வினைதானென்செயும் எனைநாடிவந்த கோளென்செயும் கொடுங் கூற்றென்செயும்" என்று திருவாய் மலர்ந்த அருணகிரிச் செல்வர் திகழ்ந்த திருநாட்டில் பிறந்திருக்கும் வாலிபர்களே! ஆண்மை எங்கே! நடுக்கத்தையொழியுங்கள்! தைரியமாயிருங்கள்! பரோபகாரஞ் செய்ய முன்வாருங்கள்! கடவுளைநம்புங்கள்!

* * *

ஒரு ஊரிலே ஒரு புருஷனும் பெண்டாட்டியு மிருந்தார்கள். பையனும் நல்லவன். பெண்ணும் நல்லவள். இருவரும் குடும்பத்தை நன்றாக நடத்திக்கொண்டு வந்தார்கள். ஆனால் தினந்தோறும் சமையல் செய்து முடிந்தவுடன் அந்தப்பெண் வந்து புருஷனைப் "பழையது சாப்பிட வாருங்கள்" என்று கூப்பிடுவது வழக்கம். உள்ளேபோய்ப் பார்த்தால் சாதம் கறி குழம்பெல்லாம் சுடச் சுடப் புதிதாகவிருக்கும். ஏன் இப்படிச் சொல்லுகிறாளென்று புருஷன் யோசித்தான். விளையாட்டாகக் கேலிக்குச் சொல்லுகிறாளென்று தீர்மானம் பண்

னிக்கொண்டிருந்து விட்டான். ஒருநாள் அவனுடைய புதிப் சிநேகிதர் பலர் விருந்துக்கு வந்திருந்தனர். பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது. சமையலும் ஷட்ரஸத்துடன் தயாராகி விட்டது. வழக்கம்போல் அந்தப் பெண் வந்து "எல்லாரும் பழயது சாப்பிட வாருங்கள்" என்று அழைத்தாள். சீட்டுப் போட்டுக் கொண்டிருந்த ஆண் சிங்கத்துக்குப் பொறுக்குமா? பொறுக்கவில்லை. எழுந்தான்! திடுமுடென்றுபோட்டு அடித்து அந்தப்பெண்ணை வெளுத்துவிட்டான். பக்கத்தில் இருந்த சிநேகிதர்கள் எழுந்துபோய் விலக்கி என்ன நடந்ததென்று விசாரித்தார்கள். அந்த ஆண்மகன் சொல்லுகிறான். "என் னிங்கிதேன் கலியாணஞ்செய்த நாளாகத் தினந்தோறும் பழயது சாப்பிடவாருங்கள் வாருங்கள்" என்றே சொல்லுகிறாள். ஊரெல்லாம் சொல்லுகிறமாதிரி "சாப்பிட வாருங்கள்" என்று சொன்னாலென்ன? என்று கூறினான். சிநேகிதர்கள், "அத னாலென்ன வெயில் காலந்தானே பழய்து சாப்பிட்டாலும் பாத கமில்லை" என்று சொன்னார்கள். "சோறுதானய்யா வடித் துத் தொலைக்கிறாள். சொல்கிறதுதான் பழயது! எப்போதும் கேலியா? நாலுபேர் வந்திருக்கிற போதாவது மரியாதை வேண்டாமா என்றுதான் அடித்து நொறுக்கினேன்" என்று வீட்டுக்காரர் கூறினார். அந்தப் பெண்ணைப் பார்த்து ஏன் அப்படிச் சொல்லுகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு அந் தப்பெண் மொழிகிறாள்:- "வேறொன்றுமில்லை, எங்கள் வீட் டிலிருக்கிற எல்லாச்சொத்தும் பழயதுதான்; புதிதாக உங்கள் நண்பர் ஒரு காசு கூட சம்பாதிக்கவில்லை; ஆனால் நன்றாகச் செலவு செய்துகொண்டிருக்கிறார்; அந்தப் பழய பணத்திலிரு ந்துதான் அரிசி முதலியன வாங்கிச் சமையல் நடக்கிறபடியால் 'பழயது சாப்பிடவாருங்கள்' என்று கூப்பிட்டேன்" என்று சொன்னாள். எல்லாரும் வெட்கித் தலைகுனிந்து போயினர். அன்று முதல் அந்த வீட்டுக்காரன் வியாபாரஞ்செய்ய ஆரம் பித்தான். தனக்குப் புத்திசொன்ன பெண்டாட்டியை உயி ருக்குயிராக எண்ணிப் போற்றிவந்தான். இது ஒரு பழய கதை. இப்படி இந்தக்காலத்திலும் பழயது சாப்பிடுகிற ஆட் கள் இருக்கிறார்களோ என்னவோ? புதுசாகச் சாப்பிடாவிட்

டாலும் பழசைக் கொஞ்சம் சுடவைத்தாவது சாப்பிடலாமல்லவா?

* * *

முந்தின காலத்தில்—நவீன நாகரிகக்காரர் இந்தியாவில் தலைகாட்டாத காலத்தில்—வெந்ததைத்தின்று விதிவந்தால் சாகிற பழய மனிதர் வாழ்ந்த காலத்தில்—காபியும் டீயுங் காணாத காலத்தில்—டேக்காட்டும் மோட்டாரும் தெரியாத காலத்தில்—சட்டையுங் குல்லாவும் அறியாத காலத்தில்—ஆங்கிலமும் சோஷலுந் தெரியாத காலத்தில்—நியாய நெறியிலே வாதம்புரிய விருக்கும் வக்கீல்கள் மலியாத காலத்தில்—அவ்வளவு பெரிய பழைய காலத்தில் இந்த நாட்டில் மனிதர்கள் இருந்தார்கள். இதில் சந்தேகமே யில்லை. மான்செஸ்டரும் சீமை வேட்டியும் முளைக்காத காலத்தில் இங்கே யிருந்த சனங்களெல்லாரும் எப்படி யிருந்தார்கள்? அம்மணமாகவா இருந்தார்கள்? இல்லை. வேட்டியும் சேலையும் கட்டிக்கொண்டு தானே யிருந்தார்கள்? ஆனால் முரட்டுத் துணியாகவா கட்டிக் கொண்டிருந்தார்கள்? இல்லை. டக்கா மஸ்லின் போன்ற குழாய் ஆடையன்றோ கட்டிவாழ்ந்தார்கள்! நேற்று முப்பது வருஷத்திற்கு முந்தி நூல் நூற்ற ராட்டினம் மனையெல்லாம் எங்கள் வீட்டிலே இன்னும் இருக்கின்றன. அதில் நூல்நூற்ற கிழவிகள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். எங்கள் தெருவில் இன்னும் நூறு நெசவுக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாரும் லங்காஷயர் மான்செஸ்டருக்குச் சென்று பழகிப்பாஸ் பண்ணி வரவில்லையென்று சத்தியம் செய்கிறேன். இந்தத்தொழிலுக்கு வேண்டிய சாமான்கள் எந்த லிமிடெட் கம்பெனியில் செய்து வந்தன? கொல்லன்பட்டரை உளியினாலே தச்சன் கையினாலே செய்கிறான்! இதற்கு ஆதாரம்: புராணங்களிலே பார்க்கவேண்டியதில்லை. கல்வெட்டுகள் வேண்டியதில்லை. கண்ணுக்கு முன்னாலே பார்க்கலாம். ஐரோப்பிய வியாபாரிகளும் அமெரிக்கா ஜப்பான் வியாபாரிகளும் இந்தத் தொழிலிலே மண்ணடிக்க வந்துசேர்ந்தார்கள். வழிந்தது நக்கி வாழும் நமது நாட்டு அடிமை வியாபாரிகள் இந்த நாட்டு ஜனங்களின் ரத்தத்தைப் பிழிந்து வெளிநாட்டுக்கு அனுப்பி

விட்டுச் சிந்துகிற ரத்தத்துளியைச் சுவைத்துவாழ முற்பட்டு விட்டனர். இதனால்தான் கைராட்டினமும் கைத்தறியும் தவித்துப் போயின. ராட்டினங்கள் அடுப்பெரித்தாய் விட்டன. கைத்தறிகள் மட்டும் அங்குமிங்கும் அசைகிறதைப் பார்க்கிறோம். இதுமட்டும் அசையக் காரணமென்ன? கைத்தறி நெசவிலிருக்கிற நயம் மில் தறிக்கு வரவில்லை. வரமாட்டாது! மல்லுக்கட்டி அதனைப் புகழும் சகோதரர்களே! கரையில் காலிறங்காமல் கோர்த்து வாங்கி இரண்டு பட்டுச் சேலை மில் தறியில் நெய்து வாங்கியனுப்ப முடியுமா? கும்பகோணம் கோயம்புத்தூர் நெசவிலுள்ள நயம்—அழகு நூறு வருஷம் தவம் பண்ணினாலும் மில் தறியில் வருமா? நீண்ட நாளாக விட்டுப்போன தொழில் கையிலெடுத்தவுடன் எங்காவது நயமாகிவிடுமா? ஐம்பது வருஷமாகத் தேடாத ராட்டினத்தை யெடுத்தவுடன் இருநூறும் நம்பர் நூல் எப்படி வரும்? அதிகமாக நூற்க நூற்கக் கை திருந்தும். விலையாக விலையாக அதிகமாக நூற்பார்கள். பலரும் அதிகமாக வாங்கிக் கட்ட முன்வந்தால் அதிகமாக விலையாகும். அதை ஆதரிப்பவர் அதிகரித்தாலல்லாமல் கதர்வேட்டி—சேலை ஒருநாளும் மெல்லிதாக வர முடியாது. பல நண்பர்கள் நைசாக வந்தபிறகு கட்டுகிறேன் என்று கூறுகிறார்கள். இவர்கள் கட்டாவிட்டால் நைசாக வரப்போவதேயில்லை; இவர்கள் நைசாக வராவிட்டால் கட்டப்போவதில்லை. பலே! நல்ல போட்டி! "கலியாணம் ஆகாவிட்டால் பைத்தியம் தீராது; பைத்தியம் தீராதவரையில் ஒருவரும் கலியாணம் செய்யமாட்டார்கள்". ஏன் சரிதானே? இந்த ஆசாமிகட்கு சுயராஜ்யமும் வேண்டுமாம்!

பணியாரந் தோசைப்பாட்டு.

பணியாரந் தோசை லக்கொங்கை தோய்ந்திடப் பார்ப்பர் பல்லி
பணியாரந் தோசை யிலாச்செந்து வாய்ப்பிறப் பார்க ளென்றே
பணியாரந் தோசை முன்னோனுக் கிட்டேத்திப் பழனிச்செவ்வேட்
பணியாரந் தோசைவ ராகாரன் றோர்க்கென்ன பாவ மிதே.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

மனோரஞ்சிதம்.

குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc., எழுதியது.

பிள்ளையையுந் தள்ளலாமா?:— சின்னாட்களுக்கு முன்னர், சேலம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள இலக்கற்றுழையில், அன்று பிறந்த ஒருஅழகிய பச்சிளங் குழந்தை கிடந்ததாம். அது இப்பொழுது அந்நகர வைத்தியசாலையில் வைத்துப் பாதுகாக்கப் பெறுகிறதாம். அந்தோ! பெற்றதாய்க்கும் பிள்ளையை எறிய மனம் வருமா? கன்மனமோ? காரணம் யாது? இத் தீத்தொழில் புரியும் தாய்மார் யாவர்? தமது நாயகன் தம்மைவிட்டுப் பிரிந்து வெளிநாட்டிற்குச் சென்றிருக்கும் பொழுதோ, அல்லது விண்ணுலகேகிய பின்னரோ, தாம் ஆசை நாயகரோடு கூடிக் குலாவிப் பிறர் காணுமற் பெறும் பிள்ளைகளை, உலகறிய வளர்க்க ஒண்ணுது மண்ணுக்கு இரையாக்கும் மாதரே யாவர். ஆ! ஆ!! ஆற்றிலும் சேற்றிலும் காட்டிலும் மேட்டிலும் கள்ளியிலும் முள்ளியிலும் கங்கையிலும் கிணற்றிலும் எத்தனை குருத்துக் குழந்தைகள் காணப் பெறுகின்றன? இரண்டுமாதம் மூன்று மாதங்களிலேயே மருந்துண்டு மக்களைத் தள்ளுவோர் எத்தனை பெயர்? இதற்கு நேராக மணம் புரிந்துகொண்டு மக்களைப்பெற்று வளர்த்தல் தங்கம். தங்கம்.

*　　*　　*

அழகு! அழகு!! :— ஆண்மக்களிற் சில இளம் பிள்ளைகள் கழுத்தைச் சுற்றிச் சட்டையின்மேல் தங்கச் சங்கிலிகளைத் தாழ்வடம்போல் அணிந்துகொள்ளுகிறார்கள். சிலர் வருணச் சட்டைகளையும் புலிக் கோடுகள்போல் புள்ளியிடப் பெற்ற வேஷ்டிகளையும் அணிந்து கொள்ளுகிறார்கள். அவர்களைப் பார்க்கும்பொழுது அழகு அழகு அஞ்சு, அழகாகக் காணப் பெறுகிறார்கள். ஐயோ! இந்தப் புலிவேஷமெல்லாம் எதற்கு?

*　　*　　*

கெடுக்கிறார்கள்:—பெற்றோர்களிற் சிலர் தங்களுடைய பிள்ளைகளை, "அவர்களோடு (படித்தவர்களோடு) சேர்ந்து சங்கத்

கிற்குப் போனும் கெட்டுப்போய்விடுவாய். அங்கே யெல்லாம் போகாதே. நமக்கும் அதற்கும் ஒத்துவராது. உனக்கு வேண்டுமென்பவைகளை யெல்லாம் தருகிறேன். நான் சொல்வதைக் கேள்" என்று சொல்லுகிறார்கள். நல்ல வேஷ்டிகளையும் சரிகை உருமால்களையும், பட்டுச் சட்டைகளையும், பட்டைக் காப்புகளையும், மோதிரங்களையும் மோக்ஷமாக அணிந்துகொள்ளச் சொல்லுகிறார்கள். குறைவில்லாமல் - பணங்காசை பற்று எழுதி எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறார்கள். பிள்ளைகளுக்குப் பெருங்குஷி வந்துவிடுகிறது! பொழுது பிறந்து விட்டால் சொல்லவாவேண்டும்; சில பிள்ளைகள், விசிறிமடி மடித்த கும்பகோணம் நெரியல் துப்பட்டாவை எடுத்துக் கழுத்திலே ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு சூதாடப் போய்விடுகிறார்கள். சிலர் வைர மோதிரம் மாங்காய்மாலை அட்டியல் முதலியவைகளை எல்லாம் காணுமல் எடுத்துக்கொண்டு, மதுரை திருப்பத்தூர் திருக்கோட்டியூர் திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் திருக்கோகர்ணம் முதலிய இடங்களுக்கு முறுக்காகச் சென்றுவிடுகிறார்கள். இதில் இன்னுஞ் சில மணிப்பிள்ளைகள், இரவில் பெண்டாட்டி கழுத்திலிருக்கும் நகைகளைக் கழற்றிக்கொண்டு நாலு காலிப்பேர்வழிகளைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போய் விடுகிறார்கள். பிறகு கதை பெருங்கதையாய் முடிந்து விடுகிறது. கொண்டு விற்கப்போனபிள்ளை ஊருக்குலைந்து ஆறு மாதம் கழித்ததும் சம்பளம் சாமானுக்குத் தக்க பெருத்த வரும்படியோடு வந்து சேருகிறான். பிறகு வேறு பிள்ளையாண்டானை ஆளாக ஆக்குவதற்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. இவ்வாறு பிள்ளைகளைச் சங்கத்துக்குப் போய்க் கெட்டுப்போகாதே என்று கூறிப் பெற்றோர்கள் தாங்களே வேறுமாதிரியாய்க் கெடுத்துவருகிறார்கள். பரிதாபம்!

* * *

சிறுவர்களும் சீட்டாட்டமும்:- இப்பொழுது மூலைக்கு மூலையாக எல்லாம் சீட்டுப்போட ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களோடுகூட இருந்து, சிலபெரியவர்களும் ஊதுபத்தியை வாயிலே பற்ற வைத்துக்கொண்டு, அவர்களுக்குப் பழகிக் கொடுக்கிறார்கள். இப்படிப் பழக்கப் பெறும் பக்கடாப்புத்

தங்கங்கள், ஒன் ஒன்றுக்குப் பத்தாக எழுதிக்கொடுத்துப் பணத்தையெல்லாம் பாழ்படுத்தமாட்டா? படிக்கும்பொழுது பிள்ளைகளையும் பாழ்படுத்திவிட்டுப்பிறகு பத்திரிகையில், "என் பேரனுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. அவன் காலியாய்த் திரிகிறபடியால் அவனுக்கு ஒருவரும் கடன் கொடுக்கக் கூடாது" என்று நோட்டீஸ் வெளியிடுவதில் என்ன பயன்? குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா?

* * *

வளர்க்க வேண்டாமா?:—வேஷ்டி கட்டிக்கொள்ள எல்லோருக்கும் பிரியந்தான். ஆனால் பருத்தியை விதைத்துத் தினந்தோறும் தண்ணீர் பாய்ச்சிப் பயிராக்கினால்தான் பலன் கிடைக்கும். ஆடிக்கொருமுறை தோட்டத்தை வெகு முழுமூரமாகக் கவனித்தால் என்னகிடைக்கும்? ராட்டினத்தை எடுத்து வைத்துக்கொண்டு நூல் நூற்றுத் தறியில் நெய்தால் தானே வேஷ்டிகளைப் பெறலாம். சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம். இவ்வாறே எல்லோரும் எல்லா ஊர்களிலும், "சங்கங்களை ஸ்தாபித்துப் பயனடைதல் வேண்டும்" என்று விரும்புகிறார்கள். வெகு ஆடம்பரமாகச் சங்கங்களை ஸ்தாபிக்கிறார்கள். பிறகு முழுமூச்சாக ஒருவருஷம் தூங்குகிறார்கள். பிறகு மட மட வென்று எழுந்திருந்து வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம் கொண்டாடுகிறார்கள். பருத்தி புடவையாய்க் காய்க்குமா?

* * *

தலைக்குட்டை:—இந்த நாட்டில் சில ஜனங்கள் கலியாணச் சடங்கு முதலியவற்றிற்குச் செல்லும்பொழுது, கோட்டு முதலியவைகளின்றி வெற்றுடம்பினராகத் தலையில் மட்டும் கூடை போன்ற ஒருவிதத் தலைக்குட்டையைக் கவிழ்த்துக் கொண்டு போகிறார்கள். அது மிக அசிங்கமாயிருக்கிறது. ஒன்று கோட்டும் தலைப்பாகையும் அணிந்துகொள்ளலாம். அல்லது பழைய நாளை வழக்கம்போல் துண்டைமட்டும் தலையில் கட்டிக் கொள்ளலாம். புதுமுறையிற் புகுந்தால். ஒழுங்காகப் புக வேண்டும்.

பிரைஸ் சீட்டு:—பிரைஸ் சீட்டு இப்பொழுது எல்லா ஊர்களிலும் அதிக மும்முரமாய் நடைபெறுகிறது. அண்டாக்களென்ன, அலமாரிகளென்ன, அரிக்கன்லாம்ப் என்ன, தண்ணீர் வேம்பாவென்ன, தங்கமோதிரம் என்ன, பெங்களூர்க் கண்டாங்கிகளென்ன! வெள்ளிப் பாத்திரங்களென்ன இவைகளெல்லாம் பிரைஸ் பொருள்களாகக் கொடுக்கப் பெறுகின்றன. இனிப் பெண்கள் கொடுக்கும் பிரைஸ்தான் பாக்கி! விளக்கைக் கண்டு வீட்டில் பூச்சி விழுவதுபோல் ஏழைகள் எல்லோரும் போய் இதில் விழுகிறார்கள். இதனால் சீட்டுப் போடுவோர்க்குண்டாகும் நஷ்டம் சிறுதொகையே யானாலும் "இஞ்சி லாபம் மஞ்சியிலே" என்பதுபோல், ஒருகால் சீட்டு நடத்தும் பேர்வழிகள் பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடிப் போய்விட்டால் அப்புறம் எல்லோரும் ஏமாந்துபோக நேரிடும்.

* * *

பொய்க்காற் குதிரை:—திருவிழாக்களில் சுவாமி திருவீதி வலம் வரும்பொழுது, முன்னால் பொய்க்காற் குதிரைக்காரன் ஒருவன், ராஜாவேடம்போட்டுக்கொண்டு, மேளதாளங்களோடு "ததிங்கிண தோம்" என ஆடுகிறான். ஏராளமான ஜனங்கள் அவனைச்சூழ்ந்துகொண்டு வேடிக்கைபார்க்கிறார்கள். இப்படிச் செய்யவேண்டும் என்று எந்த ஆகமத்திற் சொல்லப்பெற்றிருக்கின்றது? இது திருவிழாவிற்கு மிக அவசியமானதா? இதற்கெல்லாம் கொடுப்பதற்குக் கோயிற்காசு கொள்ளையிலா விளைகின்றது?

* * *

தூக்கமுடியவில்லையாம்:—பெண்மக்களிற் சிலர்களுக்குப் பேர்வழிகள், "கதர் ஆடைகளைத் தூக்கமுடியவில்லை. அதனால் தான் அவைகளை அணிந்துகொள்ளவில்லை" யென்று சாக்குச் சொல்லுகிறார்கள். தலையில் ஒரு கூடை நெல்லையும் வயிற்றில் ஒரு படி சோற்றையும், இடையில் கதரைவிட மூன்றுமடங்கு கனமுள்ள கண்டாங்கிகளையும் பெங்களூர்ப் பட்டுக்களையும், ஒரு சுமை நகைகளையும் தூக்கிச் சுமப்பவர்களுக்குக் கதர் கட்டிக்கொள்வது கஷ்டமென்று எனக்குத் தோன்றவில்லை.

புலாலுண்போர்க்கு உறுதிகூறல்.

"நந்தனாரே நம்ம சாதிக்கடுக்குமோ ஞாயந்தானோநீர் சொல்லும்"
என்ற கீர்த்தனை வர்னமெட்டு.

பல்லவி.

நானிலத்துலவிடு முயிர்களை வதைக்கின்ற
ஞானிகளே யிவற்றைக் கேளீர். இந்த (நானிலத்)

அநுபல்லவி

மானேந்தி வாகனம் மாடு-அதை
வணங்கித் தொழுதிடவே தோடு-விடாது
ஊனையுந் தின்னுதல் கேடு-என
வுன்னாத வுள்ளமிருட் காடு-இந்த (நானிலத்)

சரணங்கள்.

முருகன் வாகனம் அந்த மேடம்-அதை
முன்னாததே மிகு மூடம்-மனம்
உருகக் கொல்லுதல் பெருந் தோடம்-என
உரைப்பதேனிது பழம் பாடம்-இந்த (நானிலத்)
செவ்வே ளணியுங் கொடி கோழி-அதைத்
தெய்வமெனக் கொள்ளல் நீ டூழி-நாம்
செவ்வையாக எதுவரும் வாழி-தவறின்
சேர்ந்தழுந்துவோம் நரகாழி-இந்த (நானிலத்)
மாலவதாரம் பன்றி மச்சம்-ஆமை
வதைத்துத் தின்றலோ மிகச் சொச்சம்-மற்ற
எலும் பிறப்புக்களே மிச்சம்-அவ்வுயிர்
எற்று விழுங்காததே யெச்சம்-இந்த (நானிலத்)

கா. மு. சுந்தரமுதலியார்
ஆரணி, தேசியபாடசாலைத் தமிழ்ப் பண்டிதர்.

காரைவீரர் கரந்தைசூடிச் செருமலைதல்.

பொருமின்! பொருமின்! மூந் தூற்றுப் பொருமின்!
பொறுக்கார்தீர், இனிப் புண்ணிய வீரர்காள்!
ஒச்சு மென்னுநந் தனிப்பெருந் தந்தையைத்

தெய்வத் தன்மைசார் தீந்தமிழ்த் தாயைச்
சிறைமீட் டலினுஞ் சிறந்தபே றுண்டோ
உரைபெறு தென்னா டுறித்தநந் தமக்கே?
ஆறினு நூறினுஞ் சாவுள தாதலின்
சீரிய குறிக்காத் தியாகஞ் செய்குவம்
வம்மின்! சோதரீர்! மாயஇக் கோட்டையின்
வெம்மை அவாவெனும் வியனு மூகழியை
விவேகச் சுடுசரம் விடுத்தொழித் தான்ம
நிவேதனஞ் சால நிகழ்த்தார் வியுடற்
றிரள்மே னடந்து சேர்மின், வன்னெஞ்சமென்
முரண்மிகு மதிலடி; முடுக்குமின் படைகள்.
சாதிப் பகையும், சமயப் பிணக்கும்,
நீதிக் கேலாச் சுயநல நாட்டமும்,
பொல்லாக் குருட்டு வழக்கமும் போன்ற
எல்லாப் பொறிகளும் எயில்நின் றெறியும்
கூற்று நிகர்க்குமிக் கொடுங்குண் டென்செயும்
நீற்றுக் கவசம்நம் மேனி நிலவலால்?
இவ்வனே,
திரிபுர மெரித்த விரிசடைச் சிவனர்க்
குரிமையிற் செய்யும் உட்புறப் பூசை,
தொண்டர்செய் பேருரை, துண்டுப் பிரசுரம்,
கொண்டிடி கொண்மூ எனத்தகர்த் திடிமின்.
கொலை பலி புலவாற் குலவிய வன்மதில்
இலையென இங்ஙன் இருதல் காணிர்.
இனியே,
பெற்றோர்ச் சிறைவைத்த பெருவலி யசுரன்
பற்பல மாயா சத்திகள் பரப்பின்
ஞானச் சுடர்வாள் நாதப் பறைமுழக்
கான இவற்றால் அழிப்பம் அவையெலாம்
பின்னரவ் வசுரனே பிறங்கி எதிர்க்கின்
என் நமக்கச்சம்? இலையோ நம்பால்
சூர்முதல் தடிந்த சிவசுதன் "குமரன்"
யார் எதிர்த்திடினும்? அஞ்சலிர்! அஞ்சலிர்!!

மண்பொன் பெண்ணையே மதித்து வணங்குநர்
புண்படக் கூறும் புரைமொழி கேளாது
தந்தைதாய்ப் பேணும் தநயரைக் கண்டு
முந்தைச் சைவமும் தமிழு முகமலர்ந்
தார்வத் தொடுதழீஇ ஆசிகள் வழங்கிப்
பூர்வத் திற்போற் பொலிவுறும் அதனால்
பொருமின்! பொருமின் முந்துற்றுப் பொருமின்
திருவளர் காரைச் சிவனடித் தொண்டர்காள்!.

ச. சச்சிதானந்தம்பிள்ளை பி.ஏ., பி.எல்.,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

பத்திரிகை ஆராய்ச்சி.

"தாருல் இஸ்லாம்" ஜூன்மாதஸஞ்சிகையில் அதன் ஆசிரியர் "எனது மேல்நாட்டநுபவம்" என்னும் தலையங்கத்தோடெழுதிவரும் நீண்டதொரு வியாசத்தில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது:—

"மேல்நாடுகளில் பத்திரிகைகளும் அளவிட்டுச் சொல்ல முடியாதபடி அவ்வளவு அதிகமாய்க் காணப்படுகின்றன. இலக்ஷக்கணக்கான சந்தாதாரர்களையுடைய தினசரிப்பத்திரிகைகள் அங்கே பலவுண்டு; சில தினசரிகளுக்குப் பத்து லக்ஷக்கணக்காயும் சந்தாதாரருண்டு. வாரப்பத்திரிகைகளுக்கும், பக்ஷப்பத்திரிகைகளுக்கும், மாதப்பத்திரிகைகளுக்கும் ஓர் எல்லை சொல்லி முடியாது. "லண்டன் டைம்ஸ்" என்னும் தினசரிக்கு ௧௦ இலக்ஷம் சந்தாவுக்கு அதிகமாயுண்டு. இது "மதராஸ்மெயில்" பத்திரிகை போன்ற ஸைஸில் தினம் தினம் ௨௪ பக்க முதல் ௩௨ பக்கம் வரையில் அச்சிட்டு ஒன்றரை அணுவுக்கு ஒரு பிரதி விகிதம் விற்கப்படுகிறது. மேல் நாடுகளில் பத்திரிகை படிப்பதென்பது உண்பது உறங்குவதைப்போன்ற ஒரு முக்கியமான காரியமாகக் கருதப்பட்டு வருகின்றது. ஏதேனுமோர் பத்திரிகை மூலமாய் அன்றாடம் சமாசாரங்களைப் படிக்காத யாதேனுமோர் ஆணையேனும் பெண்ணையேனும் காண்பதரிதாகும். தெருப் பெருக்கும் தோட்டிகளும் தினசரிப்பத்திரிகை யொன்றைப் படிக்காமலிரார். தெருக்களைப் பெருக்கிக் கொண்டிருக்கும் பொழுதே குப்பை வண்டியை நிறுத்தி விட்டு ஒரு மர நிழலில் நின்று அந்தத் தோட்டி தன் பத்திரிகையைப் படிப்பான்."

பத்திரிகை நடத்தல் பத்திரிகை பார்த்தல் பத்திரிகை படித்தல் என்பன ஒரு அலட்சியமான தொழில் என்று கருதிப் புறக்கணிக்கும் மக்கள் மிகுந்த நமது தேசத்துச் சோம்பேறிகளை மேல்நாட்டார் மிதித்துத் துவைப்பதற்கு இவ்வொரு விஷயமே போதியசாக்ஷியாகும். முற்றிலும் நம் நாட்டு ஜனங்களைக் குறைசொல்ல முடியவில்லை. மேல்நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் படித்திருக்கின்றனர். நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் படிக்கவில்லை.

* * *

தென்னாப்பிரிக்காவில் வெளியாகும் "வித்யாபாநு" பத்திரிகையின் தலையங்கம் ஒன்றில் பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன:—

"வெள்ளையர்கள் குடியிருக்கும் தெருவழியாக இந்தியமோட்டார் வண்டிகள் போகக்கூடாதென்று தாக்கவும் ஆரம்பித்து விட்டனர். அதன் நிமித்தம் இவர்கள் தெரிவிக்கும் காரணங்களோ மிக அற்புதமானவை. நகரபரிபாலன சபையாரும் இவர்களுடைய கூக்குரலுக்கிசைந்து ஷை வண்டிகள் குறித்த சில தெருக்கள் வழியே செல்லக் கூடாதென்று போலீஸ் அதிகாரிகளைக் கொண்டு தடுத்து வருகிறார்கள்.

இம்மட்டில் நில்லாமல் இந்தியர்கள் இந்நாட்டில் தொழில்செய்து பொருளைச்சம்பாதித்து வெள்ளையரைப் போல் சௌகரியமாயிருக்க வசதியான வீடுகளோ, தோட்டங்களோ வாங்க எத்தனித்தாலும் வெள்ளையர் அதைத்தடுக்கமுயலுகின்றனர். சம்பாதித்த பொருளை இவ்வூரிலேயே செலவழிக்கத்தக்க வழிகளில்லாமையினால் நம் தாய்தேசத்திற்கு அனுப்பி அங்கேயாகிலும் நமக்கு சௌகரியங்களைத் தேடமுயன்றாலும், ஐயோ பணமெல்லாம் இந்தியாவுக்கு அனுப்பிவிடுகிறார்களே என்று சொல்லிப் பொறாமை கொண்டு கூக்குரலிடுகிறார்கள். நல்ல உடைகள் உடுத்தினாலும் பொறுக்கவில்லை. கந்தை யுடுத்தினாலும் அசுத்தமானவர்களெனப் பரிகசிக்கிறார்கள். ஓ! ஈசனே இந்தியரெந்தவிதமாயிருந்தால் இவர்களுக்குச் சம்மதமாகுமோ தெரியவில்லை? நம்மவர் இவ்வெள்ளையரிடத்தில் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அவர்களும் நன்மை செய்வதில்லை. பிறர் செய்வதையும் செய்ய விடுவதில்லை. இந்த நிலையில் நம்ம

வர் பிழைக்கும் வழிதான் யாதோ? கருணைவள்ளலாகிய தயாபரக் கடவுளே, நம்மவருக்குத் துணை புரிவாராக"

இந்தத் துன்பம் தென்னாப்பிரிக்காவில் மட்டுமல்ல. பிஜி கானடா முதலிய வெளிநாடுகள் பலவற்றிலும் இந்தியர்களைத் துன்புறுத்துவதென்பது சாதாரண வழக்கமாகி விட்டது. இம்மாதிரியாக ஜப்பான்காரரையாவது அமெரிக்கர்களையாவது வேறு ஐரோப்பியர்களையாவது அவமானப் படுத்தவும் துன்புறுத்தவும் முடியாது. தாயிலாப் பிள்ளைகள்போல இந்தியர்கள் இருப்பதால் எல்லா நாட்டிலும் வேறுபடுத்தித் துன்புறுத்துகின்றனர். மற்றவர்களைத் துன்புறுத்துவதானால் அவர்களின் சொந்த அரசாங்கம் மல்லுக்கு வருகிறது. இந்தியர்கள் இந்தியாவிலேயே தாழ்த்தப்படும்போது வெளியிலே நடப்பவைகளைக் கவனிக்க யாரிருக்கிறார்கள்: ஈசனைப்பார்த்து முறையிட வேண்டியதுதானே?

* * *

வங்காளத்தில் சிறந்து விளங்கும் சர் பி.ஸி.ரே. அவர்கள் தாம் செய்த பிரசங்கத்தில் கூறிய விஷயம் "நவசக்தி" யில் சிறிது வெளியாகியிருக்கிறது. அதில் பின்வரும் வாக்கியங்களும் காணப்படுகின்றன:—

"சுயராஜ்யத்தையும் மகாத்மாவின் கோரிக்கையையும் சட்டசபைகள் நல்கா; சட்டசபைகள் முன்னேற்றத்தை யுண்டாக்கா; புதிய உயிரைக் கொடா; சுயராஜ்யம் அடைய வேண்டுமானால் தூய கிராம வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பார்லைக்குப் பிரகாசம் கொடுத்துக் கொண்டிருக்கும் அந்நியநாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டிருப்பதை விட்டுவிட வேண்டும். கதர்தான் சுயராஜ்ஜியத்தின் அறிகுறியாகும். பேச்சாலும் ஆரவாரத்தாலும் சுயராஜ்யம் வராதென்பதை ஒவ்வொருவரும் உணரல் வேண்டும். தன்னுடைய முயற்சியாலும் சுய நம்பிக்கையாலும்தான் இந்தியா சுயராஜ்யத்தை அடையவேண்டும்.

கதரின்பெருமையைநன்கறிந்த ஆஸ்திகசிரோமணியின் கூற்றை உற்று நோக்குதல் வேண்டும். மேல்நாட்டுப் படிப்பும் மேல்நாட்டினிடத்து மயக்கமும் கொண்டிருக்கும் மக்களுக்குக்கதரின் தத்துவம் விளங்குமா?

"செந்தமிழ்ச்செல்வி" வைகாசி இதழில் அதன் ஆசிரியர் எழுதியிருக்கும் கட்டுரையில் பின்வரும் மொழிகள் காணப்படுகின்றன:—

"எத்துணையோ பலர் மெது கருத்துக்களையும் மெது விருப்பு வெறுப்புக்களையுமே பிறர் நூல்களில் கண்டு மகிழ்வெய்துகின்றனர். பலர் தமது கருத்தைப் பிறர் நூல்களில் இடர்ப்பட்டுப் புகுத்தி இன்பெய்துகின்றனர். பலர் ஒரு பொருளைக் குறித்துத் தாம் துணிந்துள்ள முடிபுகளுக்கு வேறுபாடாகத் தோன்றும் நூல்களைக் கண்ணாலும் பாரார். கையாலும் தொடார். சைவப்பற்றுடையாருள் சிலர் வைணவ நூல்களைக் கற்பதற்குங் கூசி நிற்கின்றனர். வைணவ ஆசாரியரிற் பலர் திவ்வியப் பிரபந்தத்தைத் தவிர வேறு நூல்களைக் கருத்தாலும் நினைக்கலாகாதென மாணவ குழாங்களுக்கு அறிவுறுத்துகின்றனர். இதனால் அறிவு விரிதலின்றி, அன்னோர் குறுகிய அறிவுடையாராய்க் கிணற்றுத் தவளைக ளாகின்றனர். கம்பராமாயணத்தின் கவின்பொருந்திய நடையையுங் கருத்தழகுகளையுங் கற்பனைநயங்களையும் இழக்கும் சைவப் புலவர்களையும், திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தின் மிக உயர்ந்த பக்குவ நிலையைப் பலமுறை யெடுத்துக் காட்டி அன்புச்சுவையை ததும்பும் அரிய இனிய திருப்பாடல்களின் விஞ்சிய சுவையை யிழக்கும் வைணவப் புலவர்களையுங் கண்டு யாம் பெரிதும் இரங்குகின்றோம்."

மாணவர்களின் ஹிருதயத்தை விரிவடையவொட்டாது பயிற்றுவிக்கும் ஆசிரியர்களிடம் பயிலும் மாணவர்கள் பிற்காலத்தில் தேச வாழ்க்கையிலும் பொதுவான மனித வாழ்க்கையிலும் பரோபகாரம் பொறுமை முதலிய குணங்களை யிழந்து நிற்கிறார்கள்.

* *

ஆனிமீ கஉஉ வெளியான "சுதேசமித்திரனில" பின்வரும் விஷயங் காணப்படுகின்றது:—

"மலாய் நாட்டில் சென்றமாதத்தில் ஒருதோட்டத்தில் செல்லமுத்து என்ற ஒரு தமிழ்க்கூலி ஒருபுஷ்பச்செடிப் பாத்தியிலிருந்த களைகளைப்பிடுங்கிக் கொண்டிருந்தான். களையுடன் ஒரு செடியும் வந்துவிட்டதாம். அருகில் நின்று தொண்டு பார்த்துக் கொண்டிருந்த துரையின் மனைவி செல்லமுத்துவின் விலாவில் ஒரு

உதை கொடுத்தான். அதைப்பொறுக்கக் கூடாமல் செல்லமுத்து எழுந்து இரண்டு தப்படி நடந்து கீழே விழுந்து மாண்டு போய் விட்டான். டாக்டர் பிரேதத்தை அறுத்துப்பார்த்தார், நுரை ஈரல் வீங்கியிருந்ததாம். உதை தாங்காமல் கிழிந்துபோய் விட்டதாம். பிறகு மரண விசாரணையில் இந்த விஷயத்தை டாக்டர் அறிவித்ததன்மேல், செல்லமுத்துவை மிஸஸ் தோர்ன் என்ற துரைசாணி உதைத்திராவிடில் அவன் இறந்து போயிருக்கமாட்டானாயினும், அவனுடைய நுரை ஈரல் வீங்கியிருந்த செய்தி அந்தம்மாளுக்குத் தெரியாதாகையாலும், செல்லமுத்துவுக்குத் துன்பமுண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்தம்மாள் உதைக்கவில்லையாகையாலும், அவள் மீது நடவடிக்கை நடத்தத் தேவையில்லையென்று மரண விசாரணைசெய்த அதிகாரி சிபார்சு செய்து விட்டார். 'இவ்வளவு நியாயமாக இந்தியர் காப்பாற்றப்படும் மலாய் நாட்டிற்கு இங்கிருந்து மேன்மேலும் இந்தியர் அழைத்துக்கொண்டு போகப்படலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் அநுமதி கொடுத்திருக்கிறார்கள்."

இந்தக்கூலி வேண்டுமென்று செடியைப் பிடுங்கவில்லை. களையை யெடுக்கும்போது செடியும் தானாக வந்துவிட்டது. அதற்காக அந்தப்பெண் இரக்கமின்றி உதைத்து ஒரு இந்தியனைக் கொன்றுவிட்டாள். இதற்கு நியாயம் வழங்கியவர் வேண்டுமென்று செய்யவில்லை யென்று காரணம் கூறிவிட்டாராம். இவன் விதி முடிந்துவிட்டதென்று சொல்லியிருந்தால் இன்னும் அழகாயிருந்திருக்கும். இந்தக் கூலிக்காரனாவது அல்லது வேறொரு இந்தியனாவது மேற்படி துரைசாணியை ஒரே மிதியாக மிதித்துக் கொல்லமுடியாதென்பதில்லை. அப்படிச் செய்திருந்தால் குற்றவாளி தப்பித்துப்போக முடியுமா? மரண விசாரணைசெய்த இந்த அதிகாரிதான் இப்படித் தீர்ப்புச் செய்வாரா? இந்தியருக்கு ஏவங்கேட்க நாதியில்லையே! —

* * *

ஆரணியிலிருந்து வெளிவரும் "சுகோதயத்தில்" பின்வருமாறு ஒரு குறிப்பு காணப்படுகிறது:—

"தனவைசிய ஊழியன்" பத்திரிகை ஜாதீய வழிகளிலிருந்து தேசிய விஷயங்களிலும் ஈடுபட ஆரம்பிப்பது போற்றத்தக்கது. தேசீயநிலை ஒழுங்குபட்டாலன்றி ஜாதீயவழிகள் சீர்திருந்துவது வேரற்ற மரம் தளிர்ப்பதுபோலும். தவிர, இவ்வித ஈடுபாட்டால் சுயநலத்திலிருந்து பொதுநலத்திற் குழைப்பதுமாகும்.

மே மாதத்திய 'இண்டஸ்ட்ரி' பத்திரிகையில் பின்வரும் குறிப்பு காணப்படுகின்றது:—

"சென்னை வண்ணாரப் பேட்டையிலிருக்கும் அரசாங்கத்தாரின் வச்சிரத் தொழிற்சாலை நெடுநாளாகப் பரீக்ஷார்த்தமாக நடைபெற்று வந்து இப்போது வர்த்தக ரீதியாகப் பிழைத்துக்கொண்ட தென்று கூறலாம். இப்போது வேலை மிகவும் குறைவாய் நடைபெற்ற போதிலும் மாதம் ஒன்றுக்கு ௪௦ டன் வச்சிரம் வரையில் தயார் செய்யப்படுகிறதாம். அந்த வச்சிரம் சிறந்த குணமுடையதாயிருப்பதால் உயர்ந்த மரவேலைகளுக்கும், புத்தகக் கட்டிடங்களுக்கும் அச்சு மை உருளைகளுக்கும் சாலவும் ஏற்றதாயிருக்கிறது. இக் குணங்களினால், அந்நிய வச்சிரங்களுடன் போட்டி என்பதைச் சிந்திக்கவே தேவையில்லை.

சதங்கையொலி.

சுந்தரர் திருநாள்.

நமது தமிழ்நாடு உய்யவந்த தவப் பயனும், முதலை யுண்டபாலனை யழைத்தருளிய தவ முதல்வருமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், இப் பூவுலகினின்றும் திருக்கைலைசென்று இன்புற்றிருந்த திருநாள் நாளிது ஆடிமாசுவாதி வருகின்றது. அன்று அப்பெரியார் திருநாளை எல்லா ஊர்களிலும் எல்லோரும் இனிது கொண்டாடுதல் வேண்டும். யாண்டும் தேவாரத்திருமணங் கமழச்செய்தல்வேண்டும்.

அநியாயம்.

கோட்டையூர் அழகாபுரியில் காட்டை அழிக்கிறதென்று வீடுகளில் இருந்த ஆடுகள் முழுமையும் பால்மாடு குட்டிகள் உள்பட யாவற்றையும் வெட்டி வீழ்த்தி விட்டனராம். இப்படிச் செய்ய வேண்டுமென்று நாட்டார்கூட்டத்தில் தீர்மானமும் செய்யப்பட்ட தென்று தெரிகிறது. ஐயோ! நாட்டாருக்குக் காட்டிலிருக்கிற மரஞ்செடிகளின் பேரிலிருக்கிற அபிமானம் வீட்டிலிருக்கிற உயிர்ப்பிராணிகளிடம் உண்டாகவில்லையே! வலம்பர்களினுடைய வீரம் முன்னாளில் அரசாள முயன்றதெனக் கேள்விப்பட்டோம். இப்போது ஆட்டு வேட்டையில் முடிந்து நிற்கிறது.

உ
சிவமயம்,

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை. உ	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு ஆடி மீ	மணி ௪.

வணக்கம்.

சிவபெருமான்.

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

— மாணிக்கவாசகர்.

முருகக்கடவுள்.

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

—அருணகிரிநாதர்.

தென்னாட்டுப் பாளையக்காரர்.

(௧௦௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

யூசப்கானுக்குப் பிறகு மதுரை திருநெல்வேலியில் கிஸ்தி வசூலை வகித்து வந்தவர்கள், அவ்வளவு திறமையாளரல்லாமையால் பாளையக்காரர்கள் தங்கள்கொடூரச்செயல்களை முன்போல் ஆரம்பித்துக் கொண்டனர். 1766ல் பாளையக்காரரின் வீரர்கள் 20000 பேர்வரையில் ஆயுதபாணிகளாய்க் கிராமந்தோறும் சென்று நாசப்படுத்திக் கொண்டிருந்தனரெனப் பாளையங்கோட்டையிலிருந்த ஆங்கில தளகர்த்தர் சென்னைக்கு எழுதினார். இவரே 1000 குதிரை வீரரும் மற்றும் காலாட்களும் அடங்கிய ஒரு படையைப் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பினார். ஆனால் அந்தப் படை ஒன்றும் செய்ய வியலாமல் கோட்டைக்கு வெளியே சும்மா காத்திருந்தது. பாளையங்கோட்டையிலிருந்து வெளியூர்களுக்குத் தபால்கள் அனுப்புவதே அசாத்தியமாக விருந்தது. அதிக்கிரமம் செய்யும் ஒவ்வொரு பாளையக்காரனையும் அடக்கும்பொருட்டுச் சிறு சிறு படைகளை அனுப்பியும் பயன்படவில்லை. கொல்லங்கொண்டான் கோட்டையை எதிர்க்கப்போன படை மிகுந்தசேதத்துடன் திரும்பி வந்தது. 1767-ல் பாளையங்கோட்டையிலிருந்து பெரிய பீரங்கிகளும் துணைப்படையும் வந்துசேரவே, ஆங்கில தளகர்த்தனாகிய மேஜர் பினிண்ட் என்பவன் பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கும்பொருட்டுப் போனான். பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை முற்றிலும் மண்ணால் ஆனது. பெப்ருவரி 15உ காலையில் சண்டை தொடங்கி அன்று மாலையே ஆங்கிலப் போர்வீரர் கோட்டைக்குள் நுழைய ஆரம்பித்தனர். ஆனால் எதிரிகள் பலமாய் எதிர்த்து நின்றதால் உள்ளே பிரவேசிக்கக் கூடாமல் திரும்பும்படி நேரிட்டது. ஆங்கிலப்படையில் அ வெள்ளையர்கள் கொல்லப்பட்டும் கஅ பேர் காயமடைந்தும் போயினர். மொத்த சேதம் கூஉ பேர். பிறகு தளகர்த்தன் கோட்டையை வளைந்துகொண்டு ஆகாரப்பொருள்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்துவிட முயற்சித்தான். ஆனால் கோட்டையுள்ளிருந்தோர் இரவிலேயே வெளியேறி தூத்துக்குடிக்கும் வைப்பாற்றுக்கும் நடு பொலிக்கனர். பிறகு பாஞ்சாலங்குறிச்சியை

விட்டுத் திரும்பி ஆங்கிலப்படை எட்டையாபுரத்தைக் காக்கப் பார்த்ததில் அதுவும் பாளையக்காரரால் கைவிடப்பட்டு வெறுமையாயிருந்தது. வைப்பாறும் அவ்விதமே யாகியது. ஆங்கிலத் தளகர்த்தன் எதிரிகளைக் கண்டுபிடிக்க வியலாமையால் ஒன்றும் செய்யமுடியாமல் திகைத்தான். இதனைக் கேள்வியுற்ற சென்னைத் துரைத்தனத்தார் தாங்கள் எதிர்பார்த்திருந்தபடி சுலபமாய் முடியாததால், அடங்காத பாளையக்காரரை ஒரேமட்டாய் அடக்குவதற்குத் தக்க பலமுள்ள சேனையொன்றை மேஜர் காம்பல் என்னும் தளகர்த்தன் வசம் அனுப்பினர். இவர் கொல்லங்கொண்டான் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு பீரங்கிப் பிரயோகம் செய்தார். ஆனால் கோட்டையுள்ளிருந்தோர் முன்னமே ஓடிவிட்டனர். சேற்றூராரும் அவ்வாறே மேஜர் காம்பெல் வந்ததும் ஓடிப்போயினர். சேற்றூர்க் கோட்டையை இடித்துவிட்டு மேஜர் காம்பெல் சிவகிரிக்குச் சென்றார். அவ்விடத்திலும் கோட்டை ஜனமில்லாது பாழாயிருக்கக் கண்டு அதை இடித்துத் தள்ளிவிட்டு வாசுதேவ நல்லூருக்குப் போனார். இந்தக் கோட்டை வேகாக்கல்லினாலும் மண்சாந்தினாலும் எழுப்பப்பட்டிருந்ததால் பீரங்கிக்கு அசையவில்லை. உள்ளிருந்தோர் நல்லமழையில் அதிகாலையில் வெளியேறி அருகிலிருந்த குன்றுகளில் போய் மறைந்துகொண்டனர். அந்தக்கோட்டையில் ஒரு சிறு படையைக் காவலுக்கு வைத்துவிட்டு சங்கரநயினார் கோயிலிலும் ஒரு படையை நிறுத்திவிட்டுப் பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். பிறகு நவாபினிடமிருந்து வந்த உத்தரவுப்படி பாளையக்காரர்களின் பிரதிநிதிகளைத் தருவித்து அவரவரிடமிருந்து வரவேண்டிய கிஸ்திப்பாக்கியை ஒருவழியாய்த் தீர்த்துக்கொண்டு இனி ஒழுங்காய்க் கிஸ்தி செலுத்த வேண்டியதற்கும் ஏற்பாடு செய்துவிட்டுப் புறப்பட்டார்.

மேஜர் காம்பெல் புறப்பட்டு இரண்டு மாதமாவதற்குள் மறுபடியும் முன்போல் பாளையக்காரர் அடங்காமலும் கிஸ்திகளைச் செலுத்தாமலும் இருக்கின்றனரெனச் சென்னைக்குச் சமாசாரம் எட்டியது. இப்போது நவாபு காரியஸ்தராயிருந்த

ஹூ-ெக்குமக்ராம் என்பவரின் முயற்சியால் பாளையக்காரரு டன் மறுமுறையும் ஒரு விதமாய் முடிவு செய்யப்பட்டது. இவர் சிவகிரி பாஞ்சாலங்குறிச்சி பழைய பாளையக்காரர்களை நீக்கிவிட்டு அவர்களுக்குப் பிரதியாக வேறு பேர்வழிகளை நியமித்தார். 1767 செப்டம்பரில் ஐதர் அலி எல்லாப்பாளையக் காரருக்கும் கடிதம் அனுப்பி தனக்கு ஒத்தாசை புரியும்படி கேட்டதோடு அவ்விதம் ஒத்தாசை செய்வோருக்குத் தான் தாராளமாய் பிரதிப் பிரயோஜனம் செய்வதாக வாக்களித் திருந்ததாகவும் தெரியவந்தது. அக்டோபர் 24 ந் தேதி நீக் கப்பட்ட சிவகிரி பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரைச் சார்ந் தோர் கலகங்களை எழுப்பிக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. இந்தப் பாளையக்காரர் இருவரும் இராமநாதபுரம் நாட்டில் போயிருந்ததால், துரைத்தனத்தார் இராமநாதபுரம் தலைவ ருக்குக் கடிதம் எழுதி அவர்களுக்கு உதவி செய்யப்படா தென்று எச்சரித்தார்கள்.

8-வருஷ காலம் இராமநாதபுரம் நாட்டில் மறைந்திருந்த கட்டபொம்மநாயக்கன் 1776 ல் திடீரெனப் பாஞ்சாலங்குறிச் சிக்கு வந்து தனக்குப்பதிலாய் நியமிக்கப்பட்டிருந்தவனைக் கொன்றுவிட்டுப் பாளையத்தைக் கைக்கொண்டான். அதன் மேல் நவாபு தரத்தார் ஒரு பெருஞ்சேனையைத் திரட்டி பாஞ் சாலங்குறிச்சியை எதிர்க்கும்படி அனுப்பினர். ஆனால் கட்ட பொம்ம நாயக்கன் நவாபுக்குத் துணையாய் நிற்பதாக வாக்க ளித்துச் சமாதானஞ்செய்துகொண்டதாகத் தெரிகிறது. 1777 பிப்பிரவரியில் சிவகிரி பாளையத்தை எதிர்க்கச் சென்ற நவாபு சேனையுடன் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து 4000போர்வீரரும் சேர்ந்திருந்தனர். 1781-ல் டச்சுக்காரர் தூத்துக்குடியை பற்றிக் கொண்டிருந்தனர். இவர்கள் கட்டபொம்ம நாயக்கனுக்குப் பெருத்த உதவி செய்துகொண்டிருந்ததாகவும் பாஞ்சாலங்குறிச்சியில் டச்சுக்கொடியே நாட்டப்பட்டிருந்த தாகவும் செய்தி எட்டியது. இந்தச் சமயத்தில் கட்டபொம்ம நாயக்கன் கழுநிக் கோட்டையிலிருந்து 100 பேர் சேதத்து டன் துரத்தியடிக்கப்பட்டனனும்.

அப்போது கல்கத்தாவில் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் அக்காலத்தில் இலங்கைத்தீவில் பலமாய் ஸ்தாபித்திருந்த டச்சுக்காரருடன் உடன்படிக்கை செய்துகொள்ளப் பிரயத்தனப்பட்டார். அவ்வுடன்படிக்கை முடிந்திருந்தால் திருநெல்வேலி நாட்டில் டச்சு அதிகாரம் நிலைபெற்றிருக்கும். ஆனால் சென்னைத்துரைத்தனத்தாரும் நவாபும் இதற்கிணங்காததால் அது நிறைவேறவில்லை.

1781ம் ஆண்டு இறுதியில் கருநாடக நவாபுடன் ஆங்கிலக்கம்பெனியார் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன் பலனாகத் திருநெல்வேலியும் கருநாடகத்தில் அடங்கிய மற்ற நாடுகளும் ஆங்கிலேயரின் நேரான அதிகாரத்திற்குள் வந்தது. இந் நாடுகளில் வசூலாகும் இறைப்பணத்தில் ஆறிலொருபங்கை நவாபின் சொந்தச் செலவுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியை ஆங்கிலக் கம்பெனியார் வைத்துக்கொள்ளும்படி நிபந்தனை ஏற்பட்டது. இந்த ஏற்பாட்டினால் ஆங்கிலக்கம்பெனியாருக்கு அடங்காத பாளையக்காரரை அடக்கிக் கிஸ்தி வசூல் செய்வதற்கு மிகுந்த அநுகூலம் கிடைத்தது. நவாபின் அதிகாரிகள் ஆங்கிலக்கம்பெனி அதிகாரிகளின் சொற்படி நடந்துகொள்ளும்படியாக உத்தரவிடப்பட்டனர். முதன் முதலில் திருநெல்வேலியில் ஆங்கிலக் கம்பெனியாரின் பிரதிநிதி (கலெக்டர்) ஆக நியமனம் பெற்றவர் மிஸ்டர் ஜியார்ஜ் பிரக்டர் என்பவராம்.

1782ல் ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்கும் சண்டை மூளவே, பாளையங்கோட்டையிலிருந்து ஒரு ஆங்கிலப் படை டச்சுத் துறைமுகக் கோட்டையாகிய தூத்துக்குடியைப் பிடிக்கும்படி அனுப்பப்பட்டது. அந்தக் கோட்டைக்குள்ளிருந்த டச்சுக் காரரின் சிறுபடை சிறை பிடிக்கப்பட்டது. அந்தப் படையில் கலந்திருந்த 200-பாஞ்சாலங்குறிச்சி வீரர் ஆங்கிலப் படையைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தனர்.

1783-பிரக்டருக்குப் பதிலாக ஐர்வின் என்பவர் திருநெல்வேலி கலெக்டராக வந்தார். இவர் வந்ததும் மறுபடியும் பா

ளையக்காரரின் அதிக்கிரமச் செயல்கள் மிதமிஞ்சி விட்டனவெ ன்றும் அவர்கள் மறுபடியும் அடக்கப்படவேண்டுமென்றும் துரைத்தனத்தாருக்கு எழுதினர். அதன்மேல் கர்னல் புல்லர் டன் என்பவர் ஒரு பெரும் சேனையுடன் திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டார்.

கர்னல் புல்லர்டன் வந்து சேர்ந்ததும் நாட்டின் நடவடிக் கைகளைக்கவனித்துத் துரைத்தனத்தாருக்கு ஒருநீண்ட அறிக் கை எழுதியனுப்பினர். அதன் சாராம்சமாவது: "திருநெல் வேலி பாளையக்காரர்கள் கலகம் செய்கிறார்கள். இவர்களுக் குக்கொழும்பிலுள்ள டச்சுக்காரரிடமிருந்து ஒத்தாசைகிடைக் கிறது. தென்னாட்டில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஆயுதம் தாங்கிய வீரர் இருக்கின்றனர். இவர்களை எதிர்த்து அடக்க நமது தென்பாகப்படை போதாது. கஜானா வறட்சியடைந்து விட்டது. நாட்டில் குடிகள் கிடையாது. வரியைக் கலகக்காரர் கள் வசூலித்துக் கொண்டனர். நமது சேனை சீர்கேடாயும் சம்பளக்குறைவுடனும் ஆகாரக்குறைவுடனும் சரியான தலைவ னின்றியும் இருக்கிறது. ஆனதால் நாட்டில் அமைதியையும் செழிப்பையும் நிலை நிறுத்தவேண்டுமானால் குழப்பங்களை சைன்யங்களைக்கொண்டு ஒழிக்கவேண்டியது மிக்க அவசியம். ....திருநெல்வேலி பாளையக்காரர் யாவரிலும் பலத்தி லும் படுக்காளித்தனத்திலும் முதன்மை வாய்ந்தவன், சிவகிரி ஜமீன்தாரைத் தவிர்த்தால், கட்டபொம்ம நாயக்கனே யாவன். இவன் தனது கோட்டையிலிருந்து 70—மைல் தூரத்திலுள்ள சொக்கம்பட்டிக்கோட்டை முற்றுகையில் சேனையுடன் தானே நேரில் நின்று நடத்தினான்."

பிறகு கர்னல் புல்லர்டன் பாஞ்சாலங் குறிச்சிக்குப்போய்க் கோட்டைக்குப்பக்கத்தில் தங்கி ஒரு தூது அனுப்பி கதவைத் திறந்து தன்னை உள்ளே விடும்படி கேட்டார். அதற்குக் கோட்டையுள்ளிருந்தோர் இணங்காததால், கோட்டையின் வடகீழ்ப்பக்கத்தை பீரங்கிகளால் தகர்க்கச்சித்தமாயிற்று. கோ ட்டைக்குள் பல்லாயிரம்வீரர்கள் கூடி எதிர்த்து நின்றதாகவே காணப்பட்டது. பீரங்கிகள் சுட்டும் கோட்டையைப் பிளக்க

முடியாதென்று கண்டு ஆங்கிலப்படை மறுபுறமாகச்சென்று தாக்கிற்று. கொட்டையை உடைப்பதற்கு அஸ்தமித்து விட்டதால் இரவில் ஆங்கிலப்படை உட்செல்லமுடியாது கீழிறங்கியது. மறுபடியும் கோட்டையைத் தகர்க்க முயற்சி செய்து கொண்டிருக்கையில், பாஞ்சாலங்குறிச்சியார் தங்கள் குண்டு மருந்து பீரங்கி மற்றும்யுத்ததளவாடங்களையும் 40000 பூவராகன்களையும் போட்டு விட்டு ஓடிப்போயினர். கட்ட பொம்ம நாயக்கன் கொழும்பிலிருந்த டச்சுத்துரைத்தனத்தாருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் நகல் ஒன்றும் கோட்டைக்குள்ளிருந்து எடுக்கப்பட்டது. அதன் பிறகு ஒரு சிறு படையைக் கோட்டைக்குள் காவலாகவைத்துவிட்டு கர்னல்புல்லர்டன் பாளையங்கோட்டைக்குச் சென்றார். பிறகு சிவகிரி பாளையக்காரனை அடக்குவதற்குக் கர்னல் புல்லர்டன் புறப்பட்டுச் சென்று மிகுந்த கஷ்டத்துடன் அந்தக்கோட்டையைக் கைப்பற்றினர். ஆனல் உள்ளிருந்தோர் மலைகளிலும் காடுகளிலும் ஓடி மறைந்தனர். அதன்மேல் கலெக்டர் ஐர்வின் யோசனையின்படி சிவகிரி பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரின் பிரதிநிதிகளைத் தருவித்துத் திருமங்கலத்தில் வைத்துப்பேசி முன்பாக்கிக்காக ஒவ்வொருவரும் 30000 சக்கரம்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தங்களிடம் கோட்டைகளைத் திருப்பிக்கொடுப்பதற்காக 15000 வராகனுக்குக் கடன் பத்திரமும் எழுதிக்கொண்டு வந்தார்கள். பாஞ்சாலங் குறிச்சியின் பாதுகாப்பு வேலைகளை எடுத்துவிட வேண்டுமென்றும் கம்பெனிதளகர்த்தரும் போர் வீரர்களும் தாராளமாய்க் கோட்டைக்குள் பிரவேசிக்க இடம் கொடுக்கவேண்டுமென்றும் பாளையக்காரன் தனதுஉயிர் பொருள் சந்ததி இவற்றைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினல் இனி அடங்கி நடந்துகொள்ளவேண்டுமென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்திக்கொண்டு பாஞ்சாலங் குறிச்சியில் பிடிபட்ட கட்ட பொம்மநாயக்கன் குமாரத்தி உள்பட யாவரையும் திருப்பிக் கொடுத்துவிட்டனர்.

(தொடரும்)

ஈப்போ உபந்யாசம்.

(சகஉ-ம் பக்கத்தொடர்ச்சி)

ஸநாதனதர்மம் மனித சகோதரத்துவம் ஒன்றைமட்டுந்தான் நமக்குப் போதிக்கின்றது என்பதில்லை; அகில பிரபஞ்ச ஐக்கியத்தையும் அது வலியுறுத்துவதாகின்றது. இவ் வுலகத்திலுள்ள பொருள் எல்லாம ஆத்ம தருமத்தில் ஒன்றுபட்டிருக்கின்றன என்பதையும் ஸநாதன தர்மம் நமக்குப் போதிக்கின்றது.

"வேத வித்தான பிராமணன், ஒரு பசு, யானை, நாய், பறையன் இவர்களிடத்துப் பரம்பொருள் சமரீதியாகவே வியாபித்திருக்கிறது. என்று தீரர்கள் கூறுகின்றனர்" என்று பகவத்கீதை சொல்லுகிறது. நாமனைவரும் தெய்விகம் வாய்ந்தவர்கள், அழிவற்ற ஆனந்தத்தின் சந்ததிகள் என்று பகவத் கீதையில் ஸ்ரீ கண்ணபிரான் சொல்லியிருக்கின்றார். பாக்கியவந்தர்களான ஒருசில கூட்டத்தார் தாம் பரஞ்சோதியினிடமிருந்து வந்தவர்களென்றும் ஏனையர் பிசாசு வழிவந்தவர்கள் எனும் கூற்றில் ஓர் துளிகூட உண்மை கிடையாது.

பிசாசென்பதே, முதலில், ஓர் அபாண்டமான மித்தையே ஒழிய வேறில்லை; அது மனிதனுடைய மனோகற்பனையில் மாத்திரம் நிலவும் ஒன்றாகும். குற்றத்தை, மறத்தை உருவகப்படுத்திப் பெறப்படுவதே பிசாசு என்க. பிசாசை, அச்சம் என்பதற்கு "ராஜா" வென்று சொல்லலாம். ஸநாதன தர்மத்தில் பிசாசு எனும் பெயரை மூச்சுவிடுவதற்கும் இடமில்லை. "பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணம்" இருக்க, பிசாசுவாழ்தற்கு இடமேது? ஒவ்வொரு அணுவிலும் பரம்பொருள் அந்தர்யாமியாயிருந்து வருகிறது. "பரம்பொருளோ அணுவிற்கும் அணுவாயிருப்பது; மகத்துக்கு மகம் போன்றது. ஒருபரமாணுவிலும் வாழ்கின்றது; மற்று இந்த ஸௌரஜகத் முழுவதிலும் அவ்வொரு பொருளே பரவி நின்று இதற்கப்பாலுமாய் விரிந்து நிற்கும். அதுவேதான் அனைவருடைய இதயகமலங்களிலும் வீற்றிருப்பது. இத்தன்மைத்தான அதனையுள்ளபடி யார் அறிந்து வழிபடுகின்றார்களோ, அவர்கள் நித்தியானந்தத்தை அனுபவிப்பார்கள்." இதுபோன்றவோர் ஆதர்சம் வேறு எந்த சமயத்தில்—அது பண்டைத்தாதல் இற்றை நாளதாதல் இருக்கட்டும்—காணக்கிடைக்கும்? இவற்றின் பெருமை சிந்திக்கச் சிந்திக்க அத்தியாச்சரியம் தருவதாயிருக்கின்றது. சாமானியர்களுடைய புத்திக்கு இது எளிதில் புலனாகக் கூடியதொன்றன்று. பகவத்கீதையில், இவ்வொருகருத்துப் பலவிடங்களிலும் எடுத்துக்கூறப்பட்டு நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. "தீரர்,

அறிஞர், ஒவ்வொரு பொருளிடத்திலும் பரம்பொருளையும், பரம்பொருளிடத்தில் ஒவ்வொரு பொருளையும் காண்பார்கள். இவ்வாறாக ஒவ்வொரு பொருளையும் அவர்கள் சைதன்யமயமாகவேகொண்டொழுகுவார்கள்.'' என்பன போன்ற தத்துவ சித்தாந்தங்கள் பகவத்கீதையில் பரக்கக்கிடக்க நாம் காணலாம் "நாம் சேர்வதும் உண்டு வாழ்வதும் எல்லாம் நித்தியப் பொருளிடத்திலேயே'' என்று கிறிஸ்துவும் இதே தத்துவத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், இந்த சித்தாந்தம் ஐரோப்பியர்களின் மூளையில் ஏறவில்லை. இது கீழ் நாட்டிடைப் பிறந்ததாதலாற் போலும். ஆங்கிலோ ஸாக்ஸானியர்கள், எதனிலும் உட்பொருளை ஆராயாது, புறப்பொருளை மட்டுமே சுமந்துதிரிவர். ஆதலான் அவர்கள் தவறுகள் இழைத்து விடுகின்றனர். கீழ்நாட்டுத் தரிசனங்களின் வழிநின்று ஆராய்வதாலேயே இயேசு கிறிஸ்துவின் உண்மையான மதத்தை அறியமுடியும். அப்பொழுதுதான் கிறிஸ்துவின் உபதேசங்களின் மாட்சிவிளங்கும். அவரது உரைகளினின்றும் எத்துணை உயர்ந்த சமரசம் ததும்பிவழிகின்றதென்பதை அப்பொழுதுதான் நீங்கள் காண்பீர்கள். ஏனென்றால், அவரது உரைகள் நாமரூபமில்லாத நமதுஸநாதன தர்மத்தை அநுசரித்ததாகவே இருக்கின்றன.

இருப்பது ஒரே ஒருகடவுள்தான். மனிதர் அனைவரும் இவரைத்தான் தொழுகின்றார்கள். உண்மை ஈதாக, நமக்குள்ளே சண்டைகளேன்? பிறமத தூஷணையும் ஹிம்சையும் என்? ஒரு மதத்தினரை வேறோர் மதத்திற்கு இழுக்க இத்துணை பிரயாசைதான் எடுத்துக் கொள்வானேன்? இவற்றுக்கெல்லாம் இப்பொழுது அவசியமேயில்லை. தனது வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக ஒழுகும் ஓர் கிறிஸ்துவன் முக்தி பெறுவான். அப்படியேதான் தன் மதா சாரங்களைத் திரிகரண சுத்தியுடன வழுவாது கைப்பற்றி நடக்கும் ஓர் முகம்மதியனுக்கும் முக்தியுண்டு. இந்த பிரகாரமே ஒரு பௌத்தன் உண்மையான பௌத்தனாக வாழ்ந்துவரட்டும்; ஒரு ஹிந்து ஒரு ஹிந்து சிரேஷ்டனாக வாழ்க்கையை நடத்திவரட்டும். இவரும் அதே மோட்ச பூமிக்குத்தான் செல்வர். நாமனைவரும் நமக்கு நமக்குரிய ஆதர்சங்களைப் பின்பற்றி உண்மையைக் கடைப்பிடித்து வருவோமாக. கடைசியில் நாமனைவரும் ஒரு இடத்திற்கேபோய்ச்சேருவோம்.

பண்டை நாட்களில்தான், கடவுள் புருஷாகிருதியுடன் கூடியவர் என்று நம்பி வந்தார்கள். இந் நாட்களுக்கு இந்த சித்தாந்தம் ஒரு சிறிதும் பொருந்தாததாகும். பண்டு மனிதர் பரந்த அறிவு படைத்தவராயிருந்தாரிலர். அதனால் அந்நாளிருந்தவர், கடவுள்ஒருபுருஷன் போன்று வானுலகில் அரியாதனத்தில் வீற்றிருந்து நாம் செய்யும் வழிபாடுகளை இறையாகப் பெற்றுக்கொள்கிறார் என்று எண்ணினார்கள். இவற்றின்

உண்மையை ஆழ்ந்து ஆராய்வோமாகில், இத்தகைய கூற்றுக்கள் வெறும் அணிகள் ப்ரதிகங்கள் என்பது புலனாகும். உதாரணமாக, கிறிஸ்தவக் கோயில்கள் உடலுக்கு பிரதீகங்களாகவே கட்டப்பட்டுள்ளன. என்பது புலனாகும். அதே மாதிரிதான் மசூதிகளும் பிரதீகங்கள் எனத்தென்படும். யூதர்கோயில்களின் மூலஸ்தானங்கள் நமது அந்தக்கரணத்தையே குறித்துநிற்கின்றன. விமலன் எழுந்தருளியிருக்கும் நமது இதயமே பலிபீடமாகும். ஆதலால் பரம்பொருளை உள்ளவாறு அறிந்து, அந்தக் கரணத்திலேயே அவனை வழிபடுதல் வேண்டும். மனத்தால் தொழுவதே தொழுகை எனப்படும்; ஏனைய புறத்தொழுகைகள் பிற்பட்டனவே யாகும். ஆதலால் புறக்கருவிகள் ஏதுமே நமக்கு வேண்டுவதில்லை; மசூதிகள், கோயில்கள், பள்ளிகள் எல்லாம் அனாவசியமேயாகும். நிஜமான பூஜைசெய்ய வேண்டுவீரேல், உங்கள் அகத்திற்குள்ளேயே ஆழ்தல்வேண்டும். ஹிருதயமாகிற கோயிலிலே, ஹிருதயமாகிற குகையிலே ஹிருதயமாகிற மசூதியிலே பராபரவஸ்து பிரத்தியட்சமாக எழுந்தருளி யிருக்கக்காண்பீர்கள். இவ்வுண்மையை நீங்கள் ஸாக்ஷாத்காரமாக்கிக் கொண்டபொழுதுதான், ஸநாதன தர்மத்தை உண்மையில் கடைபிடித்தொழுகியவராவீர்கள்.

நாம் எடுத்துக்கொள்ளும் உணவினால் நமக்கு விசேஷமான சாதக பாதகங்கள் ஏற்பட்டுவிடா. உணவு விஷயம் அத்துணை பிரதானியமானதன்று. வேண்டிய உணவைப் புசித்துக்கொண்டே, நீங்கள் ஆத்மயோகபரர்களா யிருந்துவரலாம். உணவின் வேறுபாட்டால், ஆத்மயோகம் நஷ்டமாகிவிடாது. என்றாலும், காய்கனிகளை மாத்திரம் புசித்துவருதலே ஹிந்துக்களுக்கு நல்லது. மாமிசபட்சணிகளுங்கூட மாமிசபோஜனமே. சிறந்த உணவு எனக் கூறுகின்றார் இலர். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பலர் புலால் உணவை விடுத்து காய்கறிகளையே அருந்தி வருகின்றனர். லண்டன்மாநகரத்திலுங்கூட, புலாலை முற்றிலும் நீக்கிய சாப்பாட்டுக்கடைகள் இருக்கின்றன. அங்ஙனமே ஐக்கிய நாடுகளில் ஒவ்வொரு பாகத்திலும் இம்மாதிரி பட்சணபவனங்கள் இருக்கின்றன. காய்கறிகளைத் தின்பது கொல்லாமை நோன்பை அடிப்படையாக்கொண்டதாகும். ஆரியர் கொண்டிருந்த ஆதர்சங்களில் கொல்லாமையும் ஒன்றாகும். எனவே, இதனைக் கடைப்பிடித் தொழுகுவீராக. இதனால், மாமிசபோஜனம் மிகவும் நிஷித்தமானது, அருவருக்கத்தக்கது என்று நான் சொல்லவரவில்லை. புலால் உணவினால் விசேஷமான கெடுதல் இல்லை யென்று கூறும் நூல்கள் உளவாயினும், அதனைத் தவிர்த்தொழுகுதலே சாலச் சிறந்ததென நான் சொல்ல வந்தேன். இங்கு சரியான முறையையே கைப்பற்றியுள்ளோம் என்று ராசபட்சணிகள் பெருமை கொள்ளலாம்.

எனது சகோதரர்களே, ஆத்மா அழியாது; நித்தியமானது என்ற தத்துவபோதத்தை ஸநாதன தர்மம் ஒன்றிலேயே தான் காணமுடியும். ஏனைய சமயங்களோ வெனின், நாம் அழிந்து போகக்கூடியவர்கள்; சூனியத்தினின்று, வெறுமையினின்று திடீரெனப்படைத்து விடப்பட்டுள்ளோம். நமது முயற்சியின் பயனாலேயே நமக்கு அழியாமை வரவேண்டும்; அதிலும் இவ்வாறு முயற்சி செய்ய வாய்க்கும் சந்தர்ப்பம் ஒன்றே ஒன்று தான்; அதில் தவறிவிட்டால் எல்லாம் அதோ நஷ்டமாக வேண்டியதுதான். அப்பால் கடைத்தேற ஒருவழியும் பிறவாது என்று பலபடக்கூறி நிற்கும். அன்பர்களே, ஆத்மாவை ஊழ்வினை என்பது அணுகாது; அது இறந்த காலத்திலும் இருந்தது; இனி வருங் காலத்திலும் அசையாது நிற்கும்; காலமுள்ளளவும், அதற்கப்பாலுங் கூட அது ஒரே பெற்றியாய் நிற்கும் இயல்பினது. சாவு எனப்படுவது ஆத்மாவுக்கு இல்லவே இல்லை. சாவு எனப்படுவதெல்லாம் தூலத்தில் வடிவு மாற்றமே யொழிய வேறில்லை. இதனை மிகவும் அழகாக கண்ணபிரான் பகவத் கீதையில் விளக்கியுள்ளார். "கிழிந்து நைந்து போன வஸ்திரங்களைக் களைந்து புதுவஸ்திரங்களை மனிதர் அணிந்து கொள்ளுதல் போன்று, பழைய உடல்களைக் கழற்றி யெறிந்துவிட்டு ஆத்மா புதிய உடல்களைத் தரித்துக்கொள்ளுகிறது" என்று அவர் கூறியிருக்கிறார். ஆகவே, மரணபயம் என்பது உங்களுக்கு ஒரு சிறிதும் வேண்டியதில்லை. மனிதருக்கு ஒரே ஒரு பிறவிதான் உண்டு; முதல் கடை யெல்லாம் இவ் வொரு பிறவிதான்; ஆதலால் கடைத்தேறுதற்குரிய சாதனங்களை இதற்குள்ளேயே தேடியடைந்துகொண்டு விடவேண்டும்; இல்லை யெனில், பின்னால் ஒரு பிறவியும் வாய்க்காது. என்றிவ்வாறாகக் கூறும் சித்தாந்திகள் உண்மை முழுவதையும் உணர்ந்தவராகார்; மற்று அதன் ஓர் காலையே கண்டவராவர். ஏனென்றால் இவ்வொரு பிறவிபோல வேறு எத்தனையோ பிறவிகள் வாய்க்கும் என்பதுதான் தேர்ந்த உண்மை. கிருமி கீடங்களாயிருந்து, விகாசமுறை பற்றி வளர்ந்து வளர்ந்துவந்தே இன்று இந்நிலைக்கு வந்துளோம். இன்னும் சொல்லப்போனால், நாம் உலோகங்களாகவும் செடி கொடிகளாகவும் கூட இருந்திருக்கிறோம். அதுபோலவே, இதனிலும் உயர்ந்த பிறவிகளையும் எய்துவோம். கடைசியாக சம்பூரணத்தை நாடியே இவ்வுலகிலுள்ள மாந்தர் அனைவரும் தத்தம் மனத்திற்கு வந்த வழிகள் பற்றிச்சென்று கொண்டிருக்கின்றனர். விகாசமுறையைத் தனக்கு ஒரு மூலதர்மமாக ஸநாதன தர்மம் கொண்டிருக்கிறது. இம் முறைக்கு முரணி, இவ்வுலகம் திடீரெனப் படைக்கப்பட்டதென்றும், இது ஓர் மாயா சிருஷ்டி யென்றும், வெறுமையினின்று, சூனியத்தினின்று ஒரு பொருள் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்வாறாகக் கூறும் சித்

தாந்தம் நகைப்புக்கே இடமாகும். இச் சித்தாந்தம் தற்காலத்திய விக்ஞானிகளால் தகர்க்கப்பட்டு சின்னபின்னமாகி விட்டது. இப்படிக்கின்றி, விகாச தர்மத்திலோ வெனில், ஒவ்வொரு பெற்றியர்க்கும் கடைத்தேற வழியுண்டு. இன்று சாக்கடையில் தள்ளப்பட்டு இடியுண்டு அறியாமைச் சேற்றில் பதிந்து கிடக்கும் ஒருவன், நாளைக்கு இவ்வகில உலகத்தையும் புரக்கும் வேந்தனுடைய பதவியை எய்தினும் எய்தலாம். ஆதலால் இன்று தாழ்வுற்றுள்ள ஒருவன் என்றென்றும் அப்படியே இருந்துவிடமாட்டான். இவ்வாறிய தத்துவங்கள் செறிந்த ஆதர்சங்களைக் கடைப்பிடித்தொழுகுங்கள். அறியாமை, மித்தியாசாரம், பொய்நம்பிக்கை, மூடபக்தி இவற்றின்வழி பிறந்த கருத்துக்களை திரஸ்கரித்துவிடுங்கள். உங்களுடைய சொந்த புத்தியை உபயோகப்படுத்தி விஷயங்களை நன்கு சீர்தூக்கிப் பார்க்க உங்களுக்குப் பூரணபாத்தியமுண்டு. குருட்டுத்தனமான நம்பிக்கையிலேயே ஒருமதம் வேண்டும் என்பதன்று எமது கருத்து. மற்று யுக்தி, சாஸ்திரம், தர்க்கம், அனுபவம், தத்துவ சாஸ்திரம் என்பவற்றை ஆதாரமாகக்கொண்டு திகழவேண்டும் ஒவ்வொரு உண்மையான சமயமும். இச்சாதனங்கள் அனைத்தும் உண்மைக்கு முற்றிலும் இசைந்தனவேயாம். சாஸ்திரம் உண்மையைத் தேடிக் கண்டுபிடித்தல்போல, தரிசனம் உண்மையின் இருக்கையை வலியுறுத்தல்போல, மதம் உண்மையின ஸாக்ஷாத்கார அநுபவத்தை நமக்குப் போதிக்கும். இங்கு ஒரு விஷயம் குறித்தற்பாலது. அதாவது சாஸ்திரம் முடியும் இடத்து தரிசனம் தொடங்குகின்றது; தரிசனம் முடியும் இடத்து சமயம் துவங்குகின்றது. ஏனெனில், சமயந்தான் எல்லாவற்றையும்விட அதிகமாகச் சமயத்தை யொட்டியது. சித்தாந்த வரிசைகள், கருத்துமாலைகள், கோட்பாடுகளின் மூட்டைகள், இவைகள் சேர்ந்து ஒரு சமயம் ஆகிவிடாது. இப்பொழுது, கிறிஸ்தவ சமயிகளுடைய வாழ்க்கையை கிறிஸ்துவினுடைய வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கிறிஸ்துவின் வாழ்க்கையைப்போன்ற புனிதமான வாழ்க்கையை நடத்தும் கிறிஸ்தவன் யாராவது இருக்கிறானா என்று பார்க்க வேண்டும். எவன் தன் நலம் துறந்திருக்கின்றான்? எவன் அடுத்தநாளைப் பற்றிக் கவலையற்றிருக்கிறான்? எவன் பரம்பொருளின் அருள்மாத்திரமே நோக்கி வாழ்கின்றான்? எவன் தன்னைப்போன்றே அடுத்தவனையும் கருதி நேசிக்கின்றான்? தன் பகைவனிடத்திலும் மாறாத அன்புவைத்திருப்பவன் எவன்? தன்னை ஏசுவோனையும், தனக்குச் சாபங்கொடுப்போனையும் மனமார வாழ்த்துவோன் எவன்? என்று தேடிப்பாருங்கள். இவ்வாறாக ஒருவன் வாழ்ந்துவந்தால் அவனதான் உண்மையான கிறிஸ்தவன் ஆவான்; கிறிஸ்துவை உண்மையிற் பின்பற்றுவோன் என்று

அவனையே சொல்லவேண்டும். இத்தகைய மனிதர் இன்றும் வாழ்ந்து தான் வருகிறார்கள். ஆனால் ஞானஸ்நாநம் எனும் தீர்த்த புரோட்சணம் செய்யப்பெற்றவரல்லர் அவர்கள். இதில் அவர்களுக்கு நம்பிக்கையுமில்லை. நிற்க, இங்கு இன்னுமோர் விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஞானஸ்நாநம் என்ற ஸம்ஸ்காரம் ஆதியில் இந்தியாவில்தான் பிறந்தது; புத்தபிரானே முதல் முதல் அதைக் கையாண்டார். பிறகு பாலஸ்தீனத்தில் இது கைப்பற்றப்பட்டது. ஜான் தீர்த்தர் அதனை எடுத்துக்கொண்டார். இவருக்குப் பிறகுதான் இயேசு கிறிஸது கையாளத் துவக்கினார். இதனின்றும், இயேசு மாத்திரந்தான் இதனைக் கையாண்டுவந்தார் எனும் கூற்று ஊற்றுக்கு நிற்காது எனக் கண்டுகொள்ளலாம். பௌத்தர்களும் ஹிர்துக்களும் இவருக்கு முன் இதனைக் கையாண்டு வந்துள்ளார்கள். இப்படி ஒவ்வொரு காரியமாக எடுத்து ஒப்புவமைகளைச் சொல்லிக்கொண்டே போவதாயின் எத்தனை மணி நேரத்திற்கு வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு இப்பொழுது அவகாசம் இல்லை.

பிம்மஞானமும்—பரம்பொருளை அறிதலும்—பிரமநிஷ்டையும்—பரம்பொருளையன்றி வேறெதிலும் மனத்தைச் செல்லவிடாது ஒரே நிலையில் நிறுத்தி விடுதல் தான் மதம் எனப்படும் என ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். எனவே, இப்பொழுதுள்ள பிரசினை குறித்த கோட்பாடுகளில், சம்பிரதாயங்களில் நம்பிக்கையிருக்கின்றதா இல்லையா என்பதன்று. நீங்கள் குறித்துக்கொண்டுள்ள ஆதர்சங்களை மனமாரத்தழுவி நடக்கப்போகின்றீர்களா என்பது தான் இன்றைய பிரசினை. "ஒருவன் வலது கன்னத்தில் உனனை அறைந்தால் இடது கன்னத்தையும் அவனுக்குக் காட்டிக்கொடு" எனக் கிறிஸ்து சொல்லியிருக்கின்றார். இன்று எத்தனை கிறிஸ்தவர்கள் இதன்படி ஒழுகத் தயாராயிருக்கின்றார்கள் என நான் கேட்கிறேன். சென்ற மகாயுத்தத்தின்போது, ஐரோப்பாவிலுள்ளோர் என் செய்தனர்? தம்மை அடிக்க வந்த எதிரிக்கு, "இடது கன்னத்தை" யும் காட்டிக்கொடுத்தனரா? இதற்கு மாறாக அன்பு சகோதரபாவம் முதலிய அனைத்தையும் துறந்து வெறுப்புத் தெய்வத்தையே கோயிலிலேற்றி வைத்து அதற்குக் கட்டியங் கூறி நின்றார்கள் அல்லரா? இவர்கள் செய்தி இங்ஙனமாக, இவர்கள் வழிபடும் இயேசுநாதர் அவதாரம் செய்ததன் முக்கிய நோக்கம் என்னவென்று கவனிப்போம். உலகத்தில் வெறுப்பு, துவேஷம் முதலியன எதற்கும் இடம் வைக்காமல், அன்புவெள்ளமே என்றும் எங்கும் கரைபுரண்டோடுமாறு செய்யவேண்டுமென்பதே யாகும். ஆகவே ஐரோப்பியர்களுடைய ஆதர்சத்துக்கும் ஒழுக்கத்துக்கும் எத்தனை பொருத்தம் பார்த்தீர்களா? ஒருவர் தலையை மற்றவர் அறுத்தெறிந்துள்ளவிய

இவர்கள்தம் நாட்டில் உதிரம் பெருக்கெடுத்தோடிய தன்றி, அன்பு ஒரு துளியேனும் தலைகாட்ட இடமிருந்ததோ? எனினும், இவர்களனைவரும் தம்மைக் கிறிஸ்தவர்கள்தாம் எனச் சொல்லிக்கொண்டனர். சொல்லிக்கொள்ளுகிறார்கள். என்னே! இவர்தம் நேர்மை!

இயேசு பிறப்பதற்கு சுமார் ௫௦௦ ஆண்டுகளுக்கு முன்னரே புத்தபிரான் இந்தியாவில் தோன்றிவிட்டார். பின்னர் கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட உண்மைகளை புத்தபிரான் அக்காலம் முதற்கொண்டே உலகிற்குப் பறைசாற்றி வந்திருக்கிறார். எத்தனைபேர் எத்தனை காலத்திற்குப் போதித்தாலும் என்ன? "செவிடன்காதில் சங்கு ஊதிய" கதையே யாயிற்று. ஐரோப்பியருக்குச் செய்த உபதேசங்கள் அனைத்தும் "வெறுப்பினை வெல்வது வெறுப்பன்று; அன்பே அதனை வெல்ல வல்லது" என்று புத்தபிரான் திருவாய்மலர்ந்தார். இதனிலும் மேலானதோர் ஸத்திய தர்மவிதி உளதோ? இக்கருத்தை அமைத்தே "தன்னைப் போலவே தன் மாற்றானையும் நேசிக்கக் கடவை" என்று கிறிஸ்துவும் உபதேசம் செய்தார். இவ்வுண்மைகளை அறிதல் மட்டும் பயன்படாது; மற்று, ஒழுக்கத்திலும் இவை அமையும்படி செய்வதும் நமது கடமையாகும். காற்றுத் துருத்திகளைப்போன்று வெறுமே வாயினால் மட்டும் இவற்றைப் பிதற்றிக்கொண்டு திரிவதால் சிறிதும் பயன்படாது. காரணம் காற்றுத் துருத்தியினின்றும் வெறும் இரைச்சல் மட்டும் வெளியாகுமேயன்றி, ஸாரவத்தான பொருள் ஏதேனும் வெளியாகாமையே. எனவே இவ்விதிவழி வாழ்க்கையை நடாத்த, ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியம் ஆதர்சமாக மட்டும் திகழ்தல் அன்றி பிரத்தியட்சானுபவமும் ஆகிவிடக்காணலாம்.

இது தவிர, ஸர்வ மானுஷ்ய ஐக்கியமும் சித்திப்பதாகும். மனிதனுக்குமனிதன் ஏற்றத் தாழ்வென்பதே உண்மையில் கிடையாது. ஏனென்றால் அனைவரும் பரம்பொருளின் பிள்ளைகள்; ஏன்? கடவுளர் என்றே சொல்லிவிடலாம். மனுஷ்ய ஸமூகத்தில் தெய்வம் இல்லையென்றால் வேறு எங்கு இருக்கமுடியும். கடவுளை அறிய விரும்புவீரேல் 'மானுட'த்தைத் தொழுவீராக. இப்பூவுலகில் நாம் காணக்கூடிய பிரத்தியட்ச தெய்வம் மனுஷ்ய ஸமாஜம் ஆகும். உங்கள் அனைவருடைய முக விலாசங்களினின்றும் ஒளிர்வது அவனுடைய தேஜஸ். உங்கள் முகங்களின் வாயிலாக, கண்களின் வாயிலாக அப் பரஞ்சோதியையே நான் காண்கிறேன். நீங்கள் எல்லீரும் தெய்விகம் பொருந்தியவர்கள். உங்களது தெய்விகத்தன்மை அல்லாமல், மற்று உங்களிடத்துள்ள குறைகளாவது பாவங்களாவது என் கண்களுக்குத் தென்படவேயில்லை. ஸத்தியப்பொருள் உருவெடுத்து வந்தாற்போன்று உங்களைப் பார்க்கும்பொழுது உணர்ச்சி எழுகின்றது. எனது நண்பர்களே! இத்

தகைய ஸத்திய திருஷ்டி உங்களில் ஒவ்வொருவருக்கும் ஸாத்தியமாகி விடவேண்டும். "ஆண்டவனுக்குக் கண்கள் எண்ணிறந்தன; செவிகள் கணக்கில்லாதன; கைகள் அளவிறந்தன; கண்கள் அனைத்தின வழியாகவும் அவன் பார்க்கிறான்; செவிகள் எல்லாவற்றிலும், அவனே நின்று கேட்கிறான்; கைகள் செய்யும் வேலைகள் அனைத்தும் அவனுடைய வேலையன்றிப் பிறிதில்லை; மனத்திடத்துப் பிறக்கும் எண்ணங்கள் அனைத்தும் அவனது எண்ணங்கள் ஆகும்" என்று நமது ஸநாதன தர்மநூல்கள் கோஷிக்கின்றன. உயர்வானிடத்து ஓர் பதுமை வடிவில் கடவுள் ஓர் தனி சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார் என்ற கருத்து உண்மையினின்று மாறுபட்டதாகும். உங்கள் தலைகளுக்கு மேலே எட்டாத உயரத்தில் அன்று மோட்சலோகம் இருப்பது; மற்று உங்கள் ஹிருதய வெளிக்குள்ளே யாக்கும் அது பரந்துகிடக்கின்றது. உங்கள் உள்ளத்தில்தான் மோக்ஷ சாம்பிராஜ்ஜியம் உளது என கிறிஸ்து நாதரும் போதிக்கவில்லையா? முகம்மதியர்களிடமிருந்தும் பௌத்தர்களிடமிருந்தும் இவ் வுபதேசத்தை நாம் பெறலாம். மோட்சத்திற்குச் செல்லும் வழியை நமக்குள்ளேயேதான் தேடிப்பார்த்தறியவேண்டும்; மோட்சமும் நரகமும் வெவ்வேறு மன நிலைகளாம். மறச் செயல்கள் அனைத்தும் அறியாமை இருளிடை நம்மைக்கொண் டுய்த்து விடும். அதற்குமாறாக, அறக்காரியம் அனைத்தும் அறிவுச் சூரியன் ஜொலிக்கும் பரவெளியில் கொண்டுபோய்விடக் கூடியனவாகும். இவ் வெளிக்குத்தான் மோட்சம் என்று பேர். இந்த லோகத்தில், சாதி சமயம் முதலிய வேற்றுமைகளேது மில்லாமல் நாமெல்லோரும் ஒரு மனுஷ்ய வர்க்கமாக, ஒரு விராட் சரீரமாகச் சமைந்து நிற்போமாக. அப்பொழுதுதான் இவ்வுலகில் சாந்தியும் அன்பும் பெருகும். இப்படியில்லாது துவேஷம், மாற்சரியம், பெருமை (வியாபாரத்திலாயினும் அரசியலிலாயினும் சரியே) எனும் பேய்கள் தாண்டவமாட இடங்கொடுத்து வருமட்டும், அன்பும் அமைதியும் இங்கு தோன்றுதல் சாத்தியமாகாது. அன்பையும் ஆனந்தத்தையும் பெருக்குவதற்குத் தான் கிறிஸ்து இங்கு அவதாரம் செய்தார். இவ்விரண்டுமோ உண்மையின் அறிவு பெற்றாருக்கே சுலபமாகும். வியக்திகள்—(தனி மனிதர்கள்) மட்டுந்தான் இவற்றைச் சாதித்துக்கொள்ள முடியும் என்பது மில்லை. தனி மனிதர்களுக்குப் போன்றே ஜாதிகளுக்கும் இவை சித்திக்கும். பல வியக்திகள் சேர்ந்தே ஓர் ஜாதியாகின்றார்கள். அது போலத்தான் தனி மனிதர்கள் ஓர் ஜாதிக்கு அவயவங்களே ஆவார்கள். இன்னும் ஓர் ஜாதியின் நினைவு என்பது அதிலடங்கியுள்ள தனிப்பட்டவர்களின் சிந்தனைகளின் தொகையாகும். எனவே, ஓர் ஜாதி மாண்புமிக்கு இலங்குவது, அதன் அங்கங்களாகிய தனி மனிதர்களையே பொறுத்தி

ருக்கிறது. தனிமனிதர்கள்தாம் அதற்குப் பாடுபடவேண்டும். ஒற்றுமை, சகோதரத்துவம் எனும் தருமங்களைக் கைப்பற்றி அவர்கள் தான் ஒழுகுதல் வேண்டும். என்றென்றைக்கும் அன்புதான் வெல்லும். ஆதலால் சகோதரர்களே! உங்களை அணுகுவோர்க்கு, ஒல்லும் வகையால் உதவி புரியுங்கள். வலியற்றாருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் உங்களாலியன்ற தொண்டை உள்ளன்புகொண்டு புரிவீராக. எளியாருக்கும் நலிந்தாருக்கும் துணைநிற்றல் சமயக்கடமைகளுள் முக்கியமான தொன்றாகும். எனவே, "ஓயாது அறஞ்செய்மின்!" எளியாருடைய பிறப்புரிமைகளைக் கொள்ளை கொள்ளுதலைத் தவிர்ந்தொழுகக் கடவீர். அவ்வாறின்றிக்கொள்ளைகொள்ளுவோன், உண்மையான ஹிந்து பௌத்தன், கிறிஸ்தவன், முகம்மதியன் இவர்களில் எவனும் ஆகமாட்டான். பெயருக்குமட்டில்தான், அவன் ஒரு சமயத்தைத் தழுவியவனாவான். ஆனால் உண்மையில் எந்த மதத்திற்கும் அவன் சொந்தமாகமாட்டான். ஸநாதன தர்மத்தின் அந்தரங்க தாற்பரியத்தைக் கண்டறிக. அப்படிச் செய்ய உலகில் உள்ள ஏனைய சமயங்கள் அனைத்தும் அதனோடு இசைந்திருக்கக் காண்பீர்கள். தவிர எல்லோரையும் உங்கள் சகோதரராகப் பாவிக்கும் ஆற்றலும் உங்களுக்குக் கைவரும். ஒரே ராஜபாட்டைக்குக் கொண்டுவிடுகின்ற பல கிளைவழிகள் போன்றன சமயங்கள் எல்லாம் என்று இதுகாறும் சொல்லிவந்ததினின்றும் உங்கட்குப் புலனாகியிருக்கும் என நம்புகின்றேன். இங்கு நான் குழந்தையாயிருந்த போழ்து, நாடோறும் ஜெபித்துவந்த ஓர் மந்திரம் எனது நினைவிற்கு வருகின்றது. அதாவது "ஹே சர்வேசா! வெவ்வேறு மலைகளில் உற்பத்தியாகிப் பலவழிகளில் பிரிந்தோடி முடிவில் ஒரே சமுத்திரத்தை அடையும் ஆறுகள் போன்று, இங்குள்ள பற்பல சமயங்களும் விதவித திருஷ்டிகளைக்கொண்டு தோன்றி, பலவிதமான மார்க்கங்களைப்பற்றி முடிவில் ஸச்சிதானந்தசாகரமான உன்னையே சரணடைகின்றன." ஓம்.

(இது கல்லிடைக்குறிச்சி குருகுல வித்தியாலயத்தின் காரியஸ்தர் ஸ்ரீ. ரா. அநந்தகிருஷ்ணன் அவர்களால் மொழிபெயர்க்கப் பெற்றது.)

ஸ்ரீ விவேகாநந்தர் துதி.

துளக்கறு கல்வி செல்வம் சோர்வுறு ஆண்மை வீரம்
அளக்கரு மாண்பு மேன்மை ஆயவிவ் வெல்லாந் தந்து
இளக்கமும் மனைய ரச்சம் ஏகவே யளிக்கும் ஞான
விளக்கமாம் விவேகா நந்த மெய்க்குரு பாதம் போற்றி. முரு.

கந்தரலங்காரச் சிறப்பு.

பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள் எழுதியது.

இந்நூல் சுப்பிரமணியப் பெருமானடியவராகிய அருணகிரிநாத சுவாமிகளாலருளிச் செய்யப்பட்டது. சுவாமிகள் கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருப்புகழ், திருவகுப்பு முதலிய நூல்களையுமியற்றி யருளினர். இவர் முருகப்பிரான் மீது பேரன்புடையராதலின் அவர் மீது பல பாக்கள் புனைவதுமவ ரமர்ந்தருளியிரா நின்ற பலதலங்களை வழிபடுவதுமே தமது தொழிலாகக்கொண்டனர். சுவாமிகள் விண்ணுலகஞ் சேறற்பொருட்டுக் கிளியுருவெடுத்து அக்கிளி யுருவுடனிருந்து கந்தரநுபூதியைப் பாடினாரென்று சிலர் கூறுப. விண்ணுலகஞ் செல்லுமாற்றல் மக்கள் வடிவிற்கின்மை போலவே கிளிக்கு மின்மையின் அது பொருந்தாக் கூற்றென மறுக்க. கிளியுருவெடுத்திலரெனவே தண்டாபூப நியாயத்தால் அவ்வுருவுடன் கந்தரநுபூதியைப் பாடினாரல்ல ரென்பதும் பெறப்படும்.

கந்தரலங்காரச் செய்யுட்கள் சொன்னயம், பொருணயங் கெழுமித் தேனினுமினிய சுவையவாய் இசைநயங்கனிந்து படிப்போரதுள்ளத்தைக் கவர்ந்து முருகப்பிரானிடத்துப் பேரன்பு பதியச் செய்யு மாற்றலுடையனவாம். பொதுவாகத் தமிழ்மொழியில் வடமொழி விரவிவருதல் சிறப்புடைத்தன்று; கலப்பாற் சிறப்புக்கேடு தமிழில் மாத்திரமன்று; மேலைத்தேயமொழியாகிய ஆங்கிலத்திலும் லத்தீன் கிரீக் முதலிய வேற்றுமொழிகள் கலந்து வருதல் சிறப்பின்றெனக் கூறுவர். சுவாமிகள் பல வடமொழிகள் வழங்கிவரப் பாக்க ளியற்றினர்.

> மரண ப்ரமாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
> கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகுள
> சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
> பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே.

இச் செய்யுளிலுள்ள வடமொழிகள் தமிழாதற்கு வேண்டுந் திரிபும்பெறாமலே வந்தன. இந்நாளில் நந் தமிழ்மக்கள் அந்தணர்மீதுள்ள இகலால் அவரோடு தொடர்பில்லாத வடமொழியை அவர்க்குத் தொடர்புடையதென நினைந்து அம்மொழியைப் பழித்துமிழித்துங் கூறுவதன்றி இறைவ னூலாகிய வேதாகமங்களையு மிகழ்கின்றனர். சுவாமிகள் யான், எனது என்னுமிருட் பண்புகளை முற்றக்கடந்த தூயராதலின் மொழி வேற்றுமையைச் சற்றுங் கருதாதொழிந்தனர். இங்ஙன மிவரியற்றியபோது மிப்பாவினிசையுஞ் சுவையும் நிறைந்தே யுள்ளன. இந்நூலிலுள்ள "அடலருணை" என்ற செய்யுளில் தமிழ்ச் சொற்களே மிக்கு வழங்கிவந்தன. இச் செய்யுளினினிமையினும் மேற்சொல்லிய பாவினினிமை குறைபாடுடையதன்று. இவ்வாசிரியர் செய்யுட்கள் மிகவுஞ் சுவையுடைமைபற்றி யன்றோ "வாக்கிற் கருணகிரி" என மேலோர் கூறினர்.

இந்நூல் வாழ்த்துநூ லெனினும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நாற்பொருள்களையுந் தழுவி அறத்தையும் வீட்டையும் விரித்துரைக்கின்றது.

ஈகை:—ஈதலாவது வறுமையுடையோராய்த் தம்மைவந்து இரந்தவர்க்கு மாறாதுகொடுத்தல். அது அறிவிற் சிறந்தோரா லெடுத்தாளப்படும் நாற்பொருட்களிலொன்றாகிய அறமாகும். "ஈதலறம்" என்றார் ஔவைப்பிராட்டியாரும். இவ்வறம் யாவராலுஞ் செய்யப்பட வேண்டுமென்பதைச் சுவாமிகள் பின்வருஞ் செய்யுட்களால் விளக்கினர்.

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதாயி னும்பகிர்ந் தேற்றவர்க்கே.

ஒருவனொரு பிறவியிலே யேற்ரோர்க்கு மருது கொடுப்பின் அப்பயனவன் மறு பிறவிகளனைத்திலுஞ்சென்று கைகொடுக்கு மாகையால் ஒவ்வொருவருந் தம்மிடத்துள்ளதிலோ ரெட்டுணை யேனுங் கொடுத்தல் சிறந்ததாம். நாங்களனுபவிக்கும் பொருளை அல்லது உணவை வேறொருவருக்குக் கொடுத்தால் நம்முடைய சுகங்குறையும். குறையவே யான், எனதென்னு மிருட்பண்புகள் படிப்படியாகக் குறையும். அவைகள் குறைய நாம் மேலான நிலையையடைவோ மாதலால் ஈகை மிகவுஞ் சிறந்ததே. அற்ப அளவேனுங்கொடுத்த லவசியமென்பது போதர "நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்" என்றார். சிலர் வறியோர் தம் மில்லம்புகின் அவரை இரக்கமின்றி வைது வெளியிற் போகும்படி யுதைத்துத் தள்ளிவிட்டுத் தாமறு சுவைப்போகமுமுண் டேப்பமிடுவர். சிலர் தாமிருந்தவிடத்தைவிட் டுள்ளேபோக எத்தனிப்பர். இவர் தாம் முன் செய்த நல்வினைப் பயனாலிவ்வறத்திற்குச் சாதனமான செல்வத்தைப் பெற்றிருந்துந் தங்களதும், பிறரதுஞ் சுகத்தைக் கருதாத அறிவிலிகளாவர். இவரின்னணஞ் சேமித்து வைக்கும் பொருளை யிவரிறந்தபின் மக்கள் முதலாயினோர் தீயவழியிற் செலவிட்டழித்துவிடுவாரென்பது யாவராலுங் கொள்ளக்கூடியதே. இதைப் பின்வருஞ் செய்யுட்கள் விளக்குகின்றன.

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

... ... பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனுமெழுந்திருப்பர்
வேற்கும ரர்க்கன்பி லாதவர் ஞான மிகவுநன்றே.

செல்வநிலையாமை:—கடல் புடைசூழ்ந்த வுலகின்கண்ணே மக்களிடத்துள்ள செல்வமானது மின்னலைப்போலவும், ஆற்றின் பெருக்குப்போலவும், கனவைப்போலவும், நிலையற்றதென்பது யாவர்க்கு மொப்பமுடிந்ததே. இத்தகைய செல்வத்தை நாமடைந்தா லக்கணமே யதை நன்னெறியிற்செல

விட்டு நடைக்குபயோகப் படுத்தல்வேண்டும். சிலர் இந்நிலவியல்பிற்றாய செல்வத்தை நிலையுள்ளதெனக் கருதித் தமக்கு அறம் முதலிய நற்செய்கைகள் செய்தற்கின்னும் போதியகால மிருக்கிறதெனநினைந்து வாளாவிருப்பர். இங்ஙன மிருத்த லறிவிலிகளது செய்கையாதலால் அந் நினைவகற்றி நாஞ்செய்ய வேண்டிய முயற்சிகளை யுணர்ந்து அதைப்பெற்ற வுடனே செய்தல்வேண்டும். "சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வம், செல்வம் பார்க்குமிடத்தந்த மின்போலுமெ ன்பர்" இவைகளா லிந்நிலையாமை காட்டினர்.

திருவருள் பெறும்வகை:—

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்று
மிடுங்கோ ளிருந்த படியிருங்கோ ளெழுபாரு முய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுனக்கு வெளிப்படுமே.

மனமே யெல்லா விடயங்களிலும் பற்றுவைப்பதற்குக் கருவியாதலா லம்மனத்தை யொருவழி நிறுவினாலன்றித் திருவருளைப் பெறுதலரிதென்பார் "தடுங்கோள் மனத்தை" என்றும் வெகுளியே தவம் முதலியவைகளைச் சிதைத்துப் பல தீங்குகட் குள்ளாக்குவதாதலால் "விடுங்கோள் வெகுளியை" யென்றும், உயிர்கள்மீ தன்புவைக்கச் செய்வதாதலால் "தானமென்றுமிடுங்கோ" ளென்றும் விடயங்களிற் பற்றுவையாது இன்ப துன்பங்களை யொப்பாகக்கருதல் மெய்யறிவிற்கு வழியாகிய இருவினை யொப்பாதலால் "இருந்தபடி யிருங்கோ" ளென்றும் கூறியருளினர். இவைகளை விதிப்படிசெய்யின் திருவருளை நாமெளிதிற் பெறுவோம்.

சிவனடியா ரொன்றுக்கு மஞ்சார்:—

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்புமெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

பட்டிக் கடாவில் வருமந்த காலனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாளிரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்படடா சத்திவா ளென்றன் கையதுவே.

திருநாவுக்கரச சுவாமிகளுந் தம்மை யழைக்கவந்த மந்திரி சேனுவீரர்க்கு "நாமார்க்குங் குடியல்லோம்" என அஞ்சாது புகன்றனர். பொருள், உடல், ஆவி மூன்றையுங் கடவுளிட மொப்புக்கொடுத்தவ ராதலா லவற்றிற்கு வரு மிடையூறு கட் கஞ்சாமை யிவ்விரு பாக்களாலுங் காட்டினர்.

முத்தியின்பம் பெறும்வகை:—சிந்தையுமொழியுஞ் செல் லாநிலைமைத்தாகிய முத்தியின்பத்தைப் பெறுதற்குரியவழியை

"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்தவன்பால்
குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பற வேண்டுமென்ரு
லிராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே"

கடவுளுடைய திருவருளின்றி யோர்செயலுங் கைகூடாதென் பார் "அராப்புனை வேணியன் சேயருள்வேண்டும்" என்றும், மனப்பற்றின்றிச் செய்யப்படும் வணக்கத்தால் யாதொரு பய னுமில்லை யென்பார் "அவிழ்ந்தவன்பாற் குராப்புனை தண்டை யந்தா டொழல்வேண்டு" மென்றும், புலன்களைத் தம்வழியே செல்லவிடாது தடுத்த லவசியமென்பார், "கொடிய வைவர் பராக்கறல்வேண்டு" மென்றும், மனதை யொருவழியில் நிறுத் தல் வேண்டுமென்பார் "மனமும் பதைப் பறல்வேண்டு" மென்றுங் கூறினர்.

யோகம்:—இயமம், நியமம் முதலிய தன்மைகளைப் பொ ருந்தாதார் தம்முடம்பினு மூச்சை யடக்கல் முதலிய அப்பி யாசங்களைச் செய்தலே யோகமெனக் கருதித் தம்வாழ்நாளை வீணுக்குகின்றனர். இவ் வப்பியாசங்கள் உடம்பிற்கு நன்மை கொடுப்பதன்றி உயிர்க்கு நன்மைபயவா. மேற்கூறிய நிலை களைப் பொருந்தச் சிவ்யோகந் தானேகைகூடும். இதற்காகக் காலம் போக்கல் வீணும். இவ்வுரியர்மையைக் கண்டு இதி

விருந்தவர்களைக் காப்பாற்றுவான், பின்வருஞ் செய்யுட்களைக் கூறினர்.

தருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் ஞஞ்சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளிதே விழிநாசி வைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

சிவபக்தியின் முதிர்ச்சியே யன்றி மூச்சடக்கல் முதலிய வெளித்தொழில்கள் யோகத்திற்கு நெறியாகா.

தன்னையிகழ்தல்:—

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென றணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி லேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட்சங் க்ராமசயில சரசவல்லி
யிறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

இவைகளால் இவர் தன்னை யிகழ்ந்து குமாரக் கடவுளுடைய உருவத் திருமேனியைத் தரிசித்து வணங்குவது மவர்புகழை வாயார வாழ்த்திப் பேசுவதுமே நாமிம் மானுடயாக்கை எடுத்ததின் பயனென நவின்று, இவ்வரிய யாக்கையைப் பெற்றும் தாஞ் செய்யவேண்டியவைகளைச் செய்யாது தம் வாழ்நாளை வீணிலே கழித்ததற்காகப் பரிவுற்றிரங்கினர். ஆகையா லொவ்வொருவரும் இந்தப் பிறவியிலேயே செய்யவேண்டியவைகளைச் செய்தலவசியமாம்.

ஞானம்:—ஞான நூல்களிலுள்ள உண்மையே ஞானமென்றும் அவற்றைப் படித்தலே ஞானத்தைப் பெறுதலென்றுஞ்

சிலர் மயங்குவர். ஞானமென்பது ஒரு நிலை. கிரியையில் ஞானத்தால்வரும் பக்குவத்தால் நுண்மாணுழை புலமுடையராய் அகத்தொழில் மாத்திரையாய் அருவத் திருமேனியை வழிபடல் யோகம். யோகத்தில் ஞானத்தால் வரும் பக்குவ விசேடத்தால் உண்மையறிவு விளங்கி இறைவனை சச்சிதானந்த சொரூபியாக அறிவது ஞானம். இஞ்ஞானமித்தன்மையதெனச் சொல்லப் படுவதொன்றன்று.

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மாவிருக்கும்
எல்லையுட் செல்ல வெனைவிட்ட வாவிகல் வேலனல்ல[செவ்வாய்
கொல்லியைச் சேர்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே.

என்று இப் பாவால் விளக்கினர். அது ஞானநிலையை யடைந்த ஞானிக்குப் புலப்படுமேயன்றிப் புறத்தார்க்கும் புலனாவதொன்றன்று. மும்மல பேதத்தையு மவற்றை யடக்கும் முறைமையையும் பின்வருஞ் செய்யுட்களில் பாடினரென்ப. *

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு வடியிடவெண்
டிசைவரை தூளபட்ட வத்தூளி வாரி திடர்ப்பட்டதே.

படைபட்ட வேலவன பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

அவுணர் ஆணவமென்றும், அவுணகுடர் கன்மமென்றும் மேரு சுத்தமாயை யென்றும், எண்டிசைவரை வித்தியாதத்துவ மேழும் அசுத்த மாயையு மென்றுங் கூறினர்.

உடம்பினுண்மை நிலை:—

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவனே மறவே னுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

* ஸ்ரீமான் மு. திருவிலங்கம் சாமியாரிய வர்களவி லிவ்வாறு கூறினர்.

ஐம்புலன்கட்கிடனாய் இருகால்கள்வைத்து அதிலிருகைகள் வைத்தமைக்கப்பட்ட வமைப்பே இவ்வுடம்பு. இது நிலை யற்றது. இத்தகையவுடம்மை உயிர்நீங்குங் காலத்து உம்மை மறவாத நம்மைவந்து காத்தருள்வா யென வேண்டினர். இவ் வுடம்பானது உயிர்வந்து கூடும்போதன்றி ஒற்றெழுத்துப் போன்று தன்வயமா யியங்குமாற்றலுடையதன் றென்பார் "ஐவர்க்கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு கை வைத்தவீடு" என்றார்.

முத்தி நிலை:—

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மோடுங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

உலகத்தோடுகூடிய பெத்தான்மாக்கட்கெங்கு முலகமாய்த் தோன்றுமாறுபோல முத்திநிலைகூடிய ஆன்மாக்கட் கவர்பார்க் குமிடமெங்குஞ் சிவந்தோன்றும். சிவத்தைக்காணவே உல க்ந்தெரியா தூவந்துவிடும். அங்ஙனம்வர உலகத்திலே யிருக் கிற தமதுடம்பையும் மறந்துவிடுவார். இதை யுணர்த்துவான் "என்னை மறந்திருந்தே" னென்றார். முப்பத்தாறு தத்துவங் களையுங் கடந்து மௌனநிலையுற்றுச் சிவத்தை யறிந்து நிற் றலே முத்திநிலையாம்.

சிவாநந்த இனிமை:—

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள [கை
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல்லொ ணாதிந்த வானந்தமே

இவ்வின்பம் கரும்பு, தேன்முதலியவற்றின் சுவையையும் வென்ற இனிமையுடையதா யொருவர்க்கொருவ ரிப்படிப்பட்டதெனக் கூறவியலாததா யுள்ளது.

குமரவேளுருவத் திருமேனிச்சிறப்பு:—

திருவடியுந் தண்டையுஞ் சிலம்புஞ் சிலம்பூ டுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தெ னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்
கொங்கேய் தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென்
எங்கே நினைப்பினு மங்கேவந் தென்மு னெதிர்நிற்பனே.

இவ்விருகவிகளும் நாம் பாலசுப்பிரமணியப் பெருமானைத் தியானித்தற்குத் துணையாயுள்ளன.

கந்தரலங்காரத்தி னருமையு மழகும் மெய்யறிவாளர்க்கே விளங்கும். என்புல்லறிவிற் கெட்டிய சிலவற்றை யீண்டெடுத்துரைத்தேன். அறிவுக்குறைவை யெண்ணாது ஆசைமிகுதியா லிதை யெழுதத்துணிந்தேன். அறிவாளிகளிவ்வுண்மை யாவர்க்கும் பயன்படுமாறு விளக்கிக்காட்டுவாராக. குமாரக் கடவுள் திருவடிவாழ்க. அருணகிரிநாதர் திருவடி வாழ்க.

தெய்வம் முருகேசன்.

வாசனையில் மிக்கதுவும் வானவரின் மிக்கோரும்
பூசனையில் மிக்கதுமென் போர்வேந்தே—மாசற்ற
கீர்த்திமணம் தெய்வமுரு கேச னவனடியில்
சாத்துமன நற்பூ சனை.

—முத்துராமலிங்க சேதுபதி

சந்தான கரணி.

பண்டித—மயில்வாகனனார் எழுதியது.

பாரதமாதாவின் அருந்தவப் புதல்வரான ஸ்ரீமத் விவேகானந்தசுவாமிகள், இமயம்முதற் கன்னியாகுமரி வரையும் கால்நடையாக யாத்திரைசெய்து ஆங்காங்குள்ள ஸ்தலங்களையும் மக்களையும் பார்வையிட்டுக்கொண்டு வந்த காலத்தில் எங்கனும் நிறைந்திருந்த வறுமையையும் துன்பத்தையுங் கண்ணுற்றமையால் அவ்வுத்தம புருஷருடைய உள்ளம் உருக்கத்தினுற் சலிப்படைந்தது. பின்னரில், சுவாமிகள் மேற்றிசையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபொழுது, ஓரிரவு ஒரு பெரிய தனவந்தனுடைய வீட்டிற் றங்கிநிற்க நேரிட்டது. பார்த்தவிடமெங்கும் மின்சாரவிளக்குகள் இலங்க இந்திரன் வாழும் அமராபதியோ எனச் சிறந்து விளங்கிய அவ்வீட்டிற் பதினைந்தடுக்கு மெத்தைகளிடப்பட்ட சப்ரகோள மஞ்சத்தின்மீது சிறிதயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கும்பொழுது சுவாமிகளுக்கு இந்தியாவிலுள்ள சகோதரர்களுடைய எண்ணம் வந்தது. ஏழைகளுடைய துன்பத்தையும் வறுமையையும் நினைத்தார்; கண்ணிலிருந்து வழிந்த கண்ணீர் தலையணையை முற்றிலும் நனையப்பண்ணிற்று. "பாரதமாதாவின் மக்களாகிய எனது சகோதரர் வறுமைத்துன்பத்தினுல் வருந்த நான் இந்த மஞ்சத்தின்மேற் படுத்தல் தகுமோ" என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு கீழேயிறங்கித் துணியை விரித்துப் படுத்துக்கொண்டு இந்தியாவிலுள்ள ஏழைச் சகோதரருடைய துன்பத்தை நினைப்பதிலே இராப்பொழுது முற்றினையுங் கழித்தார். இந்த மகாபுருஷருடைய வாழ்நாள் பாரதமாதாவாகிய நமது அன்னையின் பாதசேவைக்கு அர்ப்பணமாகப், 'பூதவுடம்பு கழிந்ததெனினும் புகழுடம்பேபாடு கூடிய இவர் வருந்துவோருக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டு இன்னும் எம்மிடையே உறைந்து வருகின்றார்.

இந்திய மக்களுடைய துன்பம் நீங்கும்பொருட்டு எரவாடா சிறைச்சாலையினுள் உடற்றுன்பத்தை யநுபவித்துக் கொண்டு பெருஞ் சகிப்போடிருக்கும் சாந்தமூர்த்தியாகிய உலகு தொழு சீதத்துங் காந்தியடிகள் குபேரசம்பத்துடைய வீட்டிற்பிறந்தும் அவற்றையெல்லாம் நாய் தொட்ட மட்கலம் என்னவீசி யெறிந்துவிட்டு ஏழைகளுடைய கண்ணிலிருந்து வழியுங்கண்ணீரைத் துடைப்பதற்காக ஏழைகளுள் ஏழை போல் வாழ்க்கை நடத்திவந்த இயல்பினை நம் கண் முன்னுகக் காணுகின்றேமல்லவா? மண்ணுண்ட மன்னர் பெயரும் அம் மன்னர் வழிவந்த "லார்ட்," "ஸர்," "திவான் பஹதூர்" என்பனவும் நாளையே யழிந்துபோக மகாத்மாவினுடைய பெயர் மனுக்குலம் இருக்கும்வரையும் நிலைபெறுமல்லவா? ரஷியா தேசத்து தால்ஸ்தாய், இங்கிலாந்து தேசத்து எட்வர்ட்கார்ப் பென்ரர் அமெரிக்கா நாட்டுக்குப் பிரஜாதிபதியாயிருந்த ஆபிரகாம் லின்கன் என்னும் இப்பெரியார்கள் ஏழைகளுடைய துன்பத்தைத் தமது துன்பமாக எண்ணி உழைத்துவந்தமை யானன்றே உலகிலுள்ள மக்கள் இவர்களை மாருமல் நினைத்து வருகிறார்கள். இந்தப் பெரியார்களைப்போல நாமெல்லாம் சீவியம் நடத்தமுடியுமா என்று நாம் நமக்குள்ளே நினைத்தல் கூடும். ஏன் நடத்தமுடியாது என்று நம்மை நாமே கேட்போமாயின் மறுமொழி சொல்லமுடியாது திகைப்போம். "யாவர்க்குமாம் இறைவர்க்கொருபச்சிலை, யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" என்றவண்ணம் நாம் ஏழைகளாயிருப்பினுஞ் சரி, தனவந்தர்களா யிருப்பினுஞ் சரி, கற்றவர்களா யிருப்பினுஞ் சரி, கல்லாதவர்களாயிருப்பினுஞ் சரி, பேதைகளாயிருப்பினுஞ் சரி ஞானிகளாயிருப்பினுஞ் சரி ஏழைகளுடைய துயரைக்கண்டு வருந்துவதற்கு நமக்கு இறைவன் கொடுத்த இருதயமில்லையா? கண்ணீர்வடியக் கண்ணில்லையா?

நாட்டைச்சுற்றிப் பார்ப்போமாயின், உட்குழிந்த கண்ணும் வலியிழந்த தோற்றமுமுடைய ஆடவரையும், பசியினுல் வருந்தும் தாயரையும், பால்காணுதலறும் குழவிகளையும் எங்குங்காண்போம். இவர்களுடைய துன்பத்தைத் தவிர்க்க வழி யெது என்று எண்ணுவோமாயின் தானதருமஞ் செய்து

தவிர்ப்போ மென்போம். எத்தனைபேருடைய பசியைத் தவிர்க்க எம்மாலியலும்? அஃதன்றியும் "என்பெல்லாம்பற்றி யெரியுதே யையகோ, அன்பில்லாளிட்ட அமுது" என ஔவைப்பிராட்டியார் வருந்தியவாறுபோல, எம்முட்சில போலிப் பிரபுக்கள் வெளிவேஷத்துக்காகச் செய்கிற தானதருமங்களில் அன்பில்லாது இட்ட சோற்றினையுண்ட ஏழைகள் ,,என்பெல்லாம்பற்றி யெரியுதே" என்று அழுது பிரலாபிக்கிறார்கள். அங்ஙனமாயின் நாம் செய்யவேண்டுவதென்ன? வயித்தியன் நோயை விசாரித்து மருந்தைக் கொடுக்கும் மரபுபோலத் தீர்க்கும் வழியை யாலோசிக்குமுன் நாட்டிலுள்ள துன்பங்களுக்கு மூலகாரணம் எது என ஆராய்ந்தறிவோம். வயோதிகர் பெண்டிர் சிறுவர் என்னும் முத்திறத்தாரையும் காப்பாற்ற வேண்டியது யாருடைய கடமை? ஆடவருடைய கடமை. காப்பாற்றக்கூடிய வலிமை ஆடவருக்கு எதனாலெய்தியது? ஆண்மையினாலெய்தியது. ஆதலினாலே நாட்டின் நலம் எதன் மேற்றங்கியிருக்கிறது ஆடவருடைய ஆண்மையின் மேற்றங்கியிருக்கிறது. ஆடவர் ஆண்மையிழந்து பேடிகளானால், இந்தப் பேடிகளைக் காப்பவரார், இந்தப் பேடிகள் மீது நம்பிக்கை வைத்துக் காத்திருந்த பெண்கள், சிறுவர், வயோதிகர் என்னும் இவரைக் காப்பவரார்? எல்லாம் மண்ணாய்ப் போகவேண்டியதுதான். இதனாற்றான் ஜனசங்கச் சீர்கேட்டை ஆராய்ந்தறிந்த விவேகாநந்த சுவாமிகள் முதலிய பெரியோரெல்லாம் "ஆண்மை" "ஆண்மை" என்னும் மகா மந்திரத்தை எமது செவியில் உபதேசிக்கிறார்கள்.

ஆண்மையினுடைய இப..பையும் அதனை மக்களிடத்து விருத்தியாக்கும் பரபினையும் ஆராய்வது எம்மனோருடைய கடனாதம். மேற்றிசையாரும், பரதகண்டத்தில் முன்னிலிருந்த ஆரியமக்களும் தமிழ்மக்களும் வீரம் ஆண்மையுடையவர்களா யிருந்தார்கள். இந்நாளில் இந்தியர்கள் பொதுவாக ஆண்மையினும் வீரத்திலும் குறைவுற்றிருக்கிறார்கள், இது உணவு வேறுபாட்டாலாயிற்று என்று எண்ணினேன். ஊனுணவு உண்போர் வீட்டிலே பூனைக்குட்டிகள்போலும், அணிற்பிள்ளைகள்போலும் வலியற்ற குழந்தைகள் பிறக்கின்றனவே

என நண்பரொருவரெடுத்துக் காட்டினார். ஆதலால் உணவு காரணமாகாது எனக் கண்டேன். தொன்றுதொட்டு ஆண்மைக்கு உறைவிடமாயிருந்த இந்நாடு இந்நிலையை யடைவதற்குக் காரணமென்ன என்று பன்முறையும் ஆலோசித்தேன். தமிழ் மக்களுடைய பழமை பொருந்திய வீர காவியங்களைப் படித்துப் பார்த்தால் அவை வீரமும் ஆண்மையும் நிறைந்தனவாக விருக்கின்றன. இந்தப் புத்தகங்களை அச்சிட்டுப் பரப்பியவர்கள் பண்டைத் தமிழர்களுடையஆண்மையையும் வீரத்தையும் ஏதாவது ஒரு முறையினாற் பெருகப்பண்ணித் தமிழ் மக்களுட் பரப்பலாகாதா என்றெண்ணினேன். ஆண்மை, வீரத்தைப் புகழ்ந்து பேசும் நூல்களினும் பார்க்க ஆண்மையும் வீரமும் பெரிதென்று சொல்வதற்கு ஏதாவது ஐயமுண்டா? பொருளையிழந்து அதனைப்பற்றிப் பேசும் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பது பிள்ளை விருப்பினாற் சாணைச் சீலையை முத்தமிட்டதுபோலாமன்றோ? தமிழ்நூல்களைக் கொள்ளைகொண்ட கடல், அவற்றினுஞ் சிறந்த ஆண்மை வீரத்தையும் உடன் கொண்டுபோயிற்றோ என்று எண்ணினேன். அங்ஙனமாயின் நாம் உயிர் வாழ்வதினும் பார்க்கக் குமரியங் கடலினுள்ளே குதித்துவிடுவது நலமாமே என்று நினைக்கவேண்டியதாயிற்று.

இங்ஙனம் எல்லாம் நினைக்கும்போது ஒரு உண்மை புலப்பட்டது. முன்னாளில் ஒருடலும் பலவுயிரும் என்று சொல்லும்படியும், ஒருவயிற்றிற் பிறந்த சகோதர் என்று சொல்லும்படியும் ஒருமித்திருந்த நாம் ஒன்றையொன்று வெறுத்தொதுக்குகிற பல துண்டுகளாய் விட்டோம், இது காரணமாகவே சிறுமையெல்லாம் வந்தெய்திற்று என அறிந்தேன். அறிந்து வருத்தமுற்றேனாயினும் துண்டமாகச்சிதைவுற்ற உடலைப் பொருத்துகிறதற்கு வேண்டிய சந்தான கரணி தமிழ் மக்களாகிய எம்மிடத்து உண்டு என்னும் எண்ணம் உதிக்க மகிழ்வுற்றேன். விவேகானந்த சுவாமிகள், காந்தியடிகள், தால்ஸ்தாய், கார்ப்பெண்டர், லின்கன் என்னும் பெரியோர்களாற் கையாளப்பட்ட கைகண்ட மருந்தாகிய இச் சந்தான கரணி யானது காருண்ணியக் குளிகை, அன்புச்சிமிழ், தன்-

னலமறுப்புப் பஸ்பம், அருள்மெழுகு, சகோதரநேய சிந்தா மணி, பிறர் துயர்க்குருகும் பெருஞ்சந்தனுதி யென்னும் மருந் துகளாகச் செய்யப்பட்டு ஜனசங்க வாழ்க்கையிலுள்ள நோய னைத்தினையுந் தீர்க்கும் வலிமையுள்ளதாக இருக்கிறது. இம் மருந்தினை யுபயோகிக்கும் சில பிரயோக முறைகளைக் குறிப் பிடுகிறேன். இதனைப் படிப்பவர்களுக்கு இன்னும் பல பிர யோகங்கள் புலப்படுவனவாம்.

(க) பொறாமைக்காய்ச்சல். இது மிகவும் பயங்கரமான தொற்றுநோய். இதனால் பீடிக்கப்படுபவர்கள் முகத்தில் ஒளியி ழந்து, நாவரண்டு, மாறுதலைபிடியும், நெஞ்சுநோவுமுள்ள வர்களாய் உடல் மெலிந்து வாட்டமுற்றிருப்பார்கள். வைத்தி யன் தன்மேல் நோய் தொற்றாத வண்ணம் புன்னகைத் திலத மிட்டுக்கொண்டுபோய் நோயாளியை யணுகிச் சகோதர நேய சிந்தாமணியை அளவறிந்து கொடுக்கவேண்டும்.

(உ) ஆடம்பரப் பைத்தியம். இந்த நோயால் வருந்து கிற பிணியாளியைப் பார்த்து நகைப்பதற்கும், பொருளைக்கொள் ளைகொள்வதற்கும் பலபேர்திரண்டு கூடுவார்கள். இச்சகம்பேசு வோர் என்னும் அட்டைகளை விட்டுச் செல்வம் என்னும் இரத் தத்தை உறிஞ்சுவித்துச் சில வைத்தியர்கள் இந்த நோயைத் தீர்ப்பார்கள். அது அவ்வளவு நல்ல முறையல்ல. தன்னல மறுப்புப் பஸ்பத்தைத் தவறாமற் கொடுத்து வந்தால் இரத்த மும் நன்னிலையடையும், நோயுந்தீரும்.

(ங) வன்னெஞ்ச மார்வலிப்பு. இந்த நோயாற் பீடிக்கப் படுவோருக்குத் தூக்கமே கிடையாது. காருண்ணியக் குளி கையை ஏற்ற அநுபானங்களைக் கூட்டிக்கொடுக்கவும்.

(ச) பக்ஷபாதப் பக்கவாய்வு. இதற்குச் சகோதர நேய சிந்தாமணியை சிறிது அன்பு லேகியத்தோடு கலந்து கொடுக் கவும்.

(ரு). கொடுங்கண் நயனரோகம். இந்த நோயினுல் வருந் துகிறவர்களது முன்னிலையில் யாரும் போதல் நன்றன்று. இள

ஞ்சிறுவர் இந்நோயால் வருந்துவோரது கண் முன் படுவாராயின் வெயிலிற் பிடுங்கியெறிந்த இளங்கீரைபோல வாட்டமுறுவர். அருள் மெழுகை உரைத்துப்பூசி உள்ளுக்குங் கொடுத்தல் நன்று.

(௬) தற்பெருமை வீக்கம். பிறர் துயர்க்குருகும் பெருஞ் சந்தனுதியைத் தவறாமற் றேய்த்து ஸ்நானஞ் செய்து வந்தால் சிறிது சிறிதாக வீக்கங் குறைந்துபோம்.

மேற்காட்டிய வியாதிகளில் ஒன்றோ பலவோ நீண்ட காலம் பிடிக்குமாயின் அதனால் ஆண்மை யழிவெய்தும். அதன் பெறு பேறாக வறுமை சிறுமை எனப் பெரிய இரத்தக் குறைவுண்டாகும். இவற்றை நீக்குவதற்கு வைத்தியன் அருள் மெழுகு அன்பு லேகியம் என்னும் இவற்றைத்தான் அபரிமிதமாகவுண்டு அதனுலெய்திய பயனை நோயாளிக்குக் கொடுக்க வேண்டும். நோயாளிக்கு நல்லிரத்தம் ஊறச்செய்து பின்பும் நோய்வராது காக்கும்படி மேற்கண்ட மருந்துகளுட் சிலவற்றை முறையறிந்து கொடுக்கவேண்டும்.

ஆடவர்க் கழகினைத்தரும் ஆண்மை யென்னுங் குணத்தைப் பெருக்கிக்கொள்வதற்குப் பின்வரும் முறையைக் கைக்கொள்ளலாம். பிறர்துயர்க்குருகும் பெருஞ் சந்தனுதியைத் தேய்த்து ஸ்நானஞ்செய்து அன்புருவாகிய சிவத்தை உள்ளத்திலிருத்தி, புன்னகை (குறுஞ்சிரிப்பு) த்திலதமிட்டு, அன்பு லேகியத்தை அமிதமாகவுண்டு, அருள் மெழுகை மையாக்கிக் கண்ணுக்குத்தீட்டி அச்சமின்மை யென்னும் ஆடையையணிந்து பகைவர், நண்பர், நொதுமலர், என்னும் முத்திறத்தார் முன்னும் ஆடை யின்றிப்போகலாகாது— வீரம் என்னும் வைரமணிபிலங்கத் தன்னல மறுப்புப் பஸ்பத்தையும் சகோதர நேய சிந்தாமணியையும் தாம்பூலத்தோடு சேர்த்து உண்டு மலையுடைந்துவரினும் அசையாத மனநிலை யோடிருக்கவேண்டும். இன்னுஞ்சில ஆபரணங்களணிய ஆசையிருந்தால்,

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கணி.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல மைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி.
கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாறாநீர்வையக் கணி.

என உரைத்த ஆபரணங்களை அணிந்து கொள்ளலாம். அஃதன்றி பெண்களணிந்து கொள்ளும்பொற்காப்பு சங்கிலி, பதக்கம் அணிந்துகொள்ளும் ஆடவர் ஆடவரெனப்படார்.

இதனை வாசிக்கும் என்னருமைச் சகோதரர்களே! நமது தாய்நாடு நலமடைய, "அருள், வலி, ஆண்மை, கல்வி, அழகு, அறிவு, இளமை, ஊக்கம்," என்னும் சிறப்புகள் நம்மிடம் பொலிந்து விளங்க, நாம் ஒருவர்மீ தொருவர் அளவு கடந்த அன்பு பாராட்டுவோமாக. மணமகனும் மணமகளும் பொலிந்து விளங்குவது அவர்களொருவர்மீ தொருவர் காட்டும் அன்பின் பெருக்கத்தினாலல்லவா? சில குடும்பங்களில் கணவனும் மனைவியும் ஒருவரோடொருவர் சீறுவதனால் இருவரும் வாடி உடல் மெலிந்திருக்கக் காண்கின்றோமல்லவா? பொறாமையுற்றோர் பிறர்க்கு விளைக்குந் தீங்கிலும் தமக்குப் பெரியதாகிய தீங்கினை விளைத்துக் கொள்ளுகிறார்களென்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமல்லவா? சிறுகுழந்தை சிறப்புற வளர்வதற்கு உண்டு அன்பினையுங்கலந்தூட்டுதல் வேண்டும். நம்மிறைவனே யன்புருவானார் என்பதை நாமறியோமா? ஜனசங்கத்திலுள்ள துன்பனைத் தினையுந்தீர்ப்பது அன்பு என்னுஞ் சந்தானகரணி யென்பதை மறவாதிருப்போமாக.

அன்பே சிவம்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

—திருமூல தேவர்.

நிலக்கடலை.

துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்.

மாந்தர்களுக்கு அதிகச் செலவு இல்லாமல் எப்போதும் எவ்விடத்திலும் அகப்படக்கூடிய உணவு நிலக்கடலையே. மனிதர்களுக்கு நிலக்கடலையானது தகுதியான உணவுப்பொருளாயிருக்கிற தென்பதை அநேக பெரியவர்கள் அநேக இடங்களில் கூறியிருக்கிறார்கள். இந்தியாவில் நிலக்கடலை யென்றும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் "பீநட்" (Pea-Nut) என்றும் சொல்லப்படுகிறது. இது தேங்காய்க்குச் சமானமானது. கிராமாந்தரங்களில் ஏழை ஜனங்கள் நிலக்கடலையை அரைத்துக் காய்கறிகளில் சேர்த்துப் பாகம்செய்து சாப்பிடுவதை நான் நேராகப்பார்த்திருக்கிறேன். தேங்காயை அரைத்துப் போட்டால், எவ்வளவு உருசிஏற்படுமோ அவ்வளவுஉருசி ஏற்படுகிறது. இன்னும் சிலர் உப்புமாவிற்கு நிலக்கடலைப் பருப்பை நெய்யில் வறுத்து முந்திரிப்பருப்புக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். இதுவும் நன்றாகவே இருக்கிறது. ஐக்கிய மாகாணங்களில் உள்ள (Tuskegee Institute) டஸ்கிஜிக் கல்லூரியின் விவசாய இலாகா பண்டிதர் மிஸ்டர் ஜார்ஜ் டப்ளியூ கார்வர் (George W. Carver) என்பவர் இந்நிலக்கடலையைப் பலவிதமாகப் பரிசோதித்து அடியில் வருமாறு Popular Science Monthly என்னும் பத்திரிகையில்எழுதுகிறார்:—

"A pound of Pea-Nuts has more building nutriment than a pound of good beef steak and furnishes twice as much heat and energy producing nutriment"

அதாவது "ஒருபவுன் மாட்டிறைச்சியில் எவ்வளவு சத்து இருக்கிறதோ அதைவிட ஒருபவுன் நிலக்கடலையில் இருமடங்கு சத்து இருக்கிறது. அது தேகத்துக்கு ஊட்டத்தைக் கொடுக்கக்கூடிய உஷ்ணம், சத்து இவைகளைக் கொடுக்கிறது" என்கிறார். ஆகையால் மாமிசம் சாப்பிடுகிறவர்கள் நிலக்கடலையை உபயோகித்து வந்தால் மாமிசத்தை கொஞ்சநாளில் விட்டு விடலாம். ஆட்டுமாமிசத்துக்குப் பதிலாக உளுந்தையும் மாட்டிறைச்சிக்குப் பதிலாக நிலக்கடலையையும் உபயோகிப்பது நல்லது. நான் அதை உபயோகித்தவரையில் என்ன தோன்றுகிறது என்றால், நிலக்கடலையில் உள்ள "மூளை". (இரண்டு பருப்புக்கும் இடையில் உள்ள மூக்குப்போன்ற ஒரு வஸ்து) மிகவும் பித்தத்தைக் கொடுக்கிறதென்றும், அம் மூளையை எடுத்துவிட்டு உபயோகித்தால்

அதைப்போல தேகத்துக்குச் சத்தைக் கொடுக்கக்கூடிய வஸ்து வேறு ஒன்று இல்லையென்றும் தோன்றுகிறது. நிலக்கடலை பயிரிடுவதால் நிலம் நல்ல வளப்பத்தை அடைகிறது. நிலக்கடலை பயிரிட்ட நிலத்தில் வேறு தானிய வகைகள், காய்கறிச்செடிகள் பயிரிட்டால் எருவில்லாமலே செழித்து வளருகின்றன. இதை ஒவ்வொருவரும் நேராகப் பார்க்கலாம்.

நிலத்தை வளப்பம் செய்யக்கூடியசக்தி நிலக்கடலைக்கு உள்ளது என்பதை மிஸ்டர் கார்வர் கண்டுபிடித்து அமெரிக்காவில் உள்ள ஐக்கிய மாகாணத்தாருக்கு அடியில் வருமாறு புகட்டியிருக்கிறார்:—

"One of the most remarkable characteristics of the pea-nut called also the "goober" is that it has the power to extract NITROGEN from the air and deposit it in the soil, thus becoming a soil-builder rather than a soil, and so improving the land for other cultivation"

அதாவது, நிலக்கடலைச் செடியானது ஆகாயத்திலுள்ள (நைட்ரொஜன்) உப்புவாயுவை (Nitrogen) இழுத்து பூமியில் சேர்க்கிறது. அதனால் நிலம் வளப்பத்தை அடைகிறது. இந்த உப்புவாயுவுக்கு (Nitrogen) ஆகத்தான் மல மூத்திராதிகளையும், மாட்டுச்சாணி, ஆட்டுப்புழுக்கை முதலியவைகளையும் விவசாயிகள் போடுகிறார்கள். இதைத்தான் எருவிடுதல் என்கிறார்கள். நிலக்கடலையைப் பயிரிடுவதால் எருவிடும் பிரயாசை ஒழிந்துபோகிறது. பிரயாசையில்லாமலே நிலம் வளப்பத்தை அடைகிறது. நிலத்துக்குச் சொந்தக்காரர்களாயிருப்பவர்கள் இதைக் கவனிக்க.

அமெரிக்காவில் நிலக்கடலைப் பருப்பை அரைத்து வடிகட்டிப் பால் எடுத்து மாட்டுப்பாலுக்குப் பதிலாக காப்பி, டீ, கோகோ முதலியவைகளுக்கு உபயோகிக்கிறார்கள். மிகவும் நன்றாக இருக்கிறதென்று கூறுகிறார்கள்.

நிலக்கடலைப் பருப்புக்கு மேலாக சிவந்ததோல் இருக்கிறதல்லவா? அதிலிருந்து கொயினா (Quinine) செய்கிறார்கள். பசுவின் பாலைவிட நிலக்கடலைப் பாலில் Carbo ydrates மூன்றுபங்கும் Proteid மூன்றுபங்கும், (கொழுப்பு) fat பன்னிரண்டு பங்கும் அதிகமாக இருக்கின்றன. அமெரிக்காவில்இன்னும் நிலக்கடலையிலிருந்து ககவித வர்ணங்கள், மெட்டல் பாலிஷ்கள், வண்டிகளுக்குப்போடும் கொழுப்புகள், சோப்புகள் (soap) எழுதும் மை (ink)முதலிய அநேக சாமான்

கள் செய்கிறார்கள். இந்தியாவில் இந்தவிதமான சாமான்கள் நிலக்கடலையிலிருந்து செய்ய வர்த்தகர்கள் முன்வருவார்களானால் பருத்தி வியாபாரம் மாதிரி இதுவும் இலாபகரமாயிருக்கும். எல்லாரும் கவனிப்பார்களாக.

நிலக்கடலைப் பிண்ணாக்கு மிகவும் உபயோகமானது, நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கிறார்கள். நெல் பயிராயிருக்கும்போது தண்ணீரைக்கட்டி இந்தப்பிண்ணாக்குப்போட்டால் பயிர்நன்றாய் வளருகிறது. குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் அரிசித்தவிடும் நிலக்கடலைப் பிண்ணாக்கும் கலந்து கொடுத்தால் அவைகள் நன்றாய் சதை வைக்கும் உறுதியாய் வேலைசெய்யும். கொள் வைப்பதைவிட செலவு சுருக்கம். நான் என்னிடத்திலுள்ள குதிரைக்கு வைத்துப் பார்த்திருக்கிறேன். எலும்புங் கூடுமாயிருந்த குதிரை நன்றாய் சதை வைத்து பார்வைக்கு அழகாய்விட்டது. மேனியில் மினுமினுப்பும் உண்டாகிவிட்டது.

இந் நிலக்கடலையின் குணம் அறிந்தே மகாத்மா காந்தி போன்ற அநேகர் அதை உணவாகக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் நிலக்கடலை பயிரிடுவதை விருத்திசெய்யவும் அதிலிருந்து அமெரிக்கா மாதிரி அநேக மேலே கூறிய சாமான்கள் செய்யவும் நம்மவர்கள் முன்வருவார்களானால் நாடு நன்மையடையும் என்பதில் தடையில்லை.

சிறுமணித் திரள்.

பூர்வத்தில் ஓரரசன் இரவில் தன் பட்டணத்தைச் சுற்றிக் காவல் காப்பதற்காக ஒரு தலையாரியை நியமித்திருந்தான். ஒரு நாளிரவு அத்தலையாரி வேறு வேலையின் நிமித்தம் தான் செல்லவேண்டி யிருந்தமையால் அவ்வூருக் கருகாமையிலுள்ள வனத்தில் படுத்துறங்கிக் கொண்டிருந்த ஓர் ஞானியை எழுப்பிக்கொண்டு வந்து தமுக்கை யவரிடத்திற்றந்து, அன்று இரவு பட்டணத்தைச் சுற்றி வந்து ஜனங்களை ஜாக்கிரதைப் படுத்திக் காவல் காக்கும்படியும், அதற்குக் கூலி கொடுப்பதாகவுங் கூறிச்சென்றான். அதன்படியே அந்த ஞானியார் ஊரைச் சுற்றி வீதிகள் தோறும் தமுக்கடித்துக் கொண்டு நான்கு சாமங்களிலும் கீழ்க்கண்ட பொருளையுடைய நான்கு சுலோகங்களைக் கூறி ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்தார்.

முதல் சாமத்தில்:—உலகில் மக்கள் ஆசையாற் கட்டுப்பட்டு துக்கத்தி லுழல்கின்றனர். நாள்தோறும் தங்கள் ஆயுள் குறைந்து வருவதைத் தெரிந்து கொள்ளுவதில்லை. ஆதலின் சாக்கிரதை! சாக்கிரதை!!

இரண்டாவது:—இவ்வுலக போக பாக்கியங்களும், உனது ஜீவிதமும் கண நேரத்தில் மறைந்து போகப்பட்டவை. சிறிதும் தயை தாக்ஷண்ய மில்லாமற் காலன் காத்துக்கொண்டிருக்கின்றான். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

மூன்றாவது சாமத்தில்:—தாய் தந்தையர், பந்து மித்திரர்கள், தன தான்யங்கள் இவை ஒன்றும் ஸ்திரமாகவிரா. ஆதலின் உஷார்! உஷார்!!

நான்காவது சாமத்தில்:—தேக மென்ற வீட்டில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் என்ற அறுவகைத் திருடர்கள் புகுந்து உன்னிடத்துள்ள ஞான ரத்தினத்தை யபகரித்துக் கொள்ளக் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆதலின் விழிமின்! விழிமின்!!

* * *

ஒரு நாள் ஸ்ரீ தயாநந்த சரஸ்வதி சுவாமிகளைக் கண்டு ஒருவர் "சுவாமி! தங்கள் மனத்தில் எப்பொழுதும் இந்திரிய விகார முண்டாவ தில்லையா?" என்று வினவினர். அதற்கு அப்பெரியார் "இரவு பகலெப்பொழுதும் பரமார்த்த சிந்தனையிலும், பகவத் குணானுபவத்திலும் என் மனம் முழுகி யிருப்பதால் வேறு சிந்தனைகள் ஏற்படுவதற்கு இடமில்லாமற் போயிற்று." என்று சாந்தமாக பதிலளித்தார்.

* * *

ஸ்ரீ ராமதீர்த்த சுவாமிகள் சிறுவயதி லொரு நாள் ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டே தெருவில் நடந்து கொண்டிருந்தார். அதைக் கண்ட ஒரு பெரிய மனிதர் அவரை விளித்து "சிறுவ! புத்தகத்தை மூடிக்கொண்டு பாடசாலைக்குச் சென்று படித்துக்கொள். தெருவில் படித்துக்கொண்டு போவானேன்என்றார்.அதற்கு அச்சிறுவர் "ஐயா! இப்பிரபஞ்ச மனைத்தும் எனக்குப் பாடசாலையாகவே தோன்றுகிறது." என்று விடை பகர்ந்தார்.

* * *

சீக்கிய மதத் தலைவராகிய குரு நானக் தேவரவர்கள் ஒருகால் மெக்காவுக்குச் சென்றிருந்தபோது, மெக்கா ஆலயத்தை நோக்கித் தம் கால்களை நீட்டிக் கொண்டு சயனித்திருந்தார். அதைக்கண்ட காஜியார் ஒருவர் இவரை விளித்து "கடவுளிருக்கும் இடத்தை நோக்கி உமது கால்களை நீட்டிக்கொண்டிருக்கலாமா;" என்று வினவினர்.

அதற்கு அப்பெரியார் "ஐயா! நான் மிகுந்த களைப் படைந்திருக்கின் றேன். தாங்களே தயை செய்து எனது கால்களைக் கடவுள் இல் லாத இடத்தை நோக்கித் திருப்பி விடுங்கள்." என்று பணிவாக விடை பகர்ந்தார்.

* * *

சோக்ரடீஸ் என்பவர் ஒரு நாள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி மௌனத்துட னிருக்கையில் அவரது மனைவி அவரை யழைத்தாள். அதற்கு அவர் பேசாதிருப்பதைக் கண்டுக் கோபித்து ஊரெங்கும் எதிரொலி கேட்கும்படி இரைச்சலிட்டுத் திட்டினாள். அப்பொழு தும் அவர் அசைவற்றிருந்தமைக் கண்டு, அவள் அடக்கமுடியாத ஆத்திரத்தைக் கொண்டவளாகி ஒரு குடத்தின் நிறையச்சேற்று நீரைக் கொணர்ந்து அவரது முகத்தின் மீது ஊற்றினாள். அப் பொழுதும் அம்மகான் சிறிதும் கோபிக்காது புன்னகை புரிந்து "ஆஹா! இடி இடித்தவுடன் மழை பொழியு மென்ற பழமொழி இப்பொழுதல்லவா உண்மையாயிற்று" எனக் கூறி மீண்டும் தம் சிந்தனையில் மூழ்கி மௌனங் கொண்டார்.

* * *

இராவணன் சீதா தேவியை வனத்தில் எடுத்துக் கொண்டு சென்ற பின்னர் ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் அச்சீதா தேவியைத் தேடிக் கொண்டு போகையில் வழியில் அவ்வம்மை எறிந்து விட்டுச்சென்ற ஓர் நகை முடிப்பைக் கண்டெடுத்தனர். அவற்றை ஸ்ரீராமர் லக்ஷ் மணரிடம் கொடுத்து "இந்நகைகளை இன்னாருடைய தெனக் கண்டு பிடிக்க மாட்டுவாயா?" என்று வினவினார். லக்ஷ்மணர் அவற்றைப் பரிசோதித்துப் பார்த்து அவற்றில் காலணிகளை மாத்திரம் வேறாக எடுத்து "இவை எனது அண்ணியாருடையனவே. அதற்குச் சந் தேக மில்லை" யென்று கூறினார். மற்ற நகைகளை ஏன் கண்டு பிடிக்க வில்லை. யென்று ஸ்ரீராமபிரான் கேட்க, லக்ஷ்மணர் "பெரி யோய்! என தன்னை யாரின் பாதங்களைத் தவிற மேல் பாகங்களை ஒரு போதும் பார்த்தறியேன்" என்று பதிலளித்தார்.

* * *

ஸ்ரீராம பக்தியிற் கனிந்த பழ மெனத் திகழ்ந்த அனுமார் கட லைத் தாண்டி ஸ்ரீராம பிரானிடத்திற்கு வந்த பொழுது "சுவாமி! தங்கள் அருளால் இம்மகா சமுத்திரத்தையும் தாண்ட லாயினேன்." என்று கூறினார். அதற்கு ஸ்ரீராம சந்திரர் "மித்திரா, சம்சார மென்ற மகா சமுத்திரத்தையே தாண்டியவராகிய உமக்கு இச் சமுத்திரத்தைத் தாண்டுவது பிரமாத காரியமா?" என்று புன்னகை புரிந்தார்.

என். வே.

நமது பலசரக்குக் கடை.

(Registered copy right.)

அஞ்சாநெஞ்சன்எழுதுகிறார்:—

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பது பழயகாலத்திலிருந்து வருகிற ஒரு பேச்சு. தலை சரியாயிருந்தால்தான் எல்லாம் சரியாயிருக்கும். தலை தடுமாறினால் எல்லாந் தடுமாறிப் போகும். உடலுக்குத் தலை யெப்படியோ அப்படித்தான் ஒரு கூட்டத்திற்குத் தலைவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது இந்தியா முழுமைக்கும் தலைவர் காந்தி. அயர்லாந்திற்கு திவாலரா. ஆனால், சில தேசங்களில் சரியான தலைவர்கள் கிடையாது. மராட்டா தேசத்திலே பல தலைவர்கள் இருக்கிறார்கள். வங்காளத்திலே தாஸ், ரே முதலியவர்கள் தலைமைபெற்று விளங்குகிறார்கள். மாளவியா நேரு முதலியவர்கள் மற்ற மாகாணங்களில் மிளிர்கின்றனர். நம்முடைய தமிழ்நாட்டிலும் இந்தச் சரக்கு மலிவுதான். இருந்தாலும் சுத்தமான சரக்காக இல்லை. கல்ப்படமாகவும் ஊசிப்போன சரக்காகவும் சமயத்தில் உதவாததாகவும் இருக்கிறது. இங்கே தலையை உடையவர்களெல்லாரும் தலைவர்கள்தான். தலைமை-ஆர்-தலைவர். இந்தப் பொருள் பழசாகப் போய்விட்டது. இப்பொழுது தலை-ஆர்—தலைவர். இந்தப் பொருள் அமுலுக்கு வந்துவிட்டது. வாய்க்கொழுப்பாக வீதிக்கரையில் நின்று திட்டிவிட்டால் ஒரு பூமாலை வந்து கழுத்திலே விழுகிறது. அவர் பேருக்கு ஒரு ஜே சொல்லியாய்விடும். அந்த இடத்திலே தலைவராகி விடலாம். பூமாலை வாங்கிப்போட ஆள் கிடைக்காத விடத்தில் தாங்களே ரூபா கொடுத்து, வாங்கிக் கழுத்தில் மாட்டுதற்கு ஆள் வைத்திருக்கிற கதைகூட எனக்குத் தெரியும். வக்கீல் தொழிலில் பணம் வராவிட்டால் தெருவிருக்கிறது. வியாபாரம் நன்றாக நடக்காவிட்டால் வீதியிருக்கிறது. தன்பெயர் நாட்டமாகாவிட்டால் மந்தையிருக்கிறது. இப்படிப் பலர் கிளம்பி விட்டனர். இந்த முண்டங்களில் அநேகம் நிரக்ஷரக் குறிகளா யிருக்கின்றன. யாருக்குப் புகழ் அதிக மிருக்கிறதோ அவர்களுடைய பெயரை வாக்கியத்திற்கு ஒருதரம் சொல்லிக் காலந்தள்ளுவோர் பலர். உதாரணமாக மகாத்மா பெயரைச் சொல்லிப் புறப்பட்டவர் ஆயிரக்கணக்கு. காந்தி பெருமை யெல்லாருக்குந்தெரியாது. ஏதோ சுயராஜ்யம் வாங்கப்போகிறார்; உத்தியோகத்தில் உயர்ந்தது நமக்குக்கிடைக்கும் என்று பலர் பலாப்பழத்தில் ஈ மொய்த்தமாதிரி மொய்த்தனர். பின்வரும் பெருமைக்காக முன்னால் கஷ்டப்பட முன்வந்தனர். பாவம்! அவரை அடைத்துவைக்கவே ஒவ்வொன்றாக அறுந்துக்கொண்டு ஓடுகின்றன. காந்தியின் பெருமையை அறிபவர் உலகிலேயே சிலர்தானிருக்கமுடியும். அந்தப் புண்ணியவான், உப்பைநீக்கியவர்; புளியைநீக்கியவர்; உறைப்பையும் நீக்கியவர்; உணவில் ஆசையை நீக்கியவர்; பெண்ணிச்சையற்றவர்; உலகமெல்லாம் ஒருயிரென்

றுணர்ந்த ஞானி; குழந்தைக் குணமும், அன்புமொழியும், துறவுவாழ்க்கையும், ஞானத்திருவுருவும், கடலினும் ஆளிய கருத்தும், அருள்பொங்கும் முகமும் உடையவர். அந்தப் புண்ணியவான் சென்ற முப்பதுவருஷ காலமாகத் தலைவர்க்குரிய குணங்களை ஊழியஞகவிருந்து ஏழையாக விருந்து பயின்ருர். இப்பொழுது தமிழ்நாட்டிற் பிறந்து, காபியைக்கூட விடமுடியாது, புலாலுந்தின்று, சுருட்டுக் குடித்துத் தொந்தியைத்தடவிப் பெருமூச்சுவிடுகிற புலிகளும் தலைவராகப் பார்க்கின்றனர். மேடையிலேறி மகாத்மா காந்திக்கு ஜே என்று கத்துகின்றனர். ஐயோ! பாவம்! இந்தப் பேர்வழிகளை அறியாதமக்கள் பலர், இவர் காந்தியின் அடியாரென்றெண்ணி மயங்குகின்றனர். உண்மையில் ஒன்றுமில்லை. காந்திபுகழ் உலகெங்கும் பரந்தது. அந்த நிழலைத் தவிர இந்தத் தொழிலாளர் ஒதுங்க வேறுகதியில்லை. ஆதலால் அந்தப்புகழின் நிழலில் ஒதுங்கி உயிர் பிழைத்தனர். தவறி அன்றைக்கு எதிர்த்திருப்பாராஞல் இந்தத் தலைவர்கள் போனவிடம் புல்முளைத்துப் போயிருக்கும். இதிற் சேர்ந்து குறுகுறென்று பார்த்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது பக்கத்துக்குப் பக்கம் பிடுங்கியோடுகின்றனர்.

* * *

திலகரும், காந்தியும், விவேகாநந்தரும் மத அறிவில்லாதவனுக்கு (இந்தியாவில்) ஒன்று உருப்படாது என்ற கருத்துக்கொண்டனர். தற்கால அரசியலில் கலந்திருக்கிறவர்களில் எத்தனை பேருக்கு மத அறிவிருக்கிறது? தற்கால அரசியல் ஞானிகளில் நூற்றுக்கு கூடு பேருக்குச் சமய ஞானம் கிருஷ்ணர்ப்பணந்தான். சமயஞானம் இல்லாத பேர்வழிக்கு அஹிம்சை ஒருநாளும் வரவே வராது. அந்த மனிதன் அஹிம்சா தருமமே சிறந்தது என்று பேசுவதற்கு அர்த்தமே கிடையாது. ஒரு ஐயங்கார்; சோஷல்மூவ்மெண்டில் சேர்ந்தவர்தான்; லண்டனுக்கும் போய்வந்தவர்; திலகர் பெருமான் வந்தபோது காலில் விழுந்துவணங்கினர். காந்தியடிகளின் திருவடியில் விழ அவர் மனம் நாணியது. இந்தச் சுயநலப் பேர்வழியும் நமது ராஜதானியில் ஒரு தலைவர்தான். காந்தியடிகள் பெயரைச் சொல்லிச் சென்ற இரண்டு வருஷமாகப் பிழைத்துத் திரிகிற தென்னுட்டு ஆசாமியொருவர் ஊன்நாறும் வாயிஞல் காந்தி இந்தியாவைக் கெடுத்தார் என்று கரைந்தார். காந்தி பெயர்சொல்லி இவர் உயிர் இன்றுவரை இருக்கிறது. தலைவர் குழுவில் இவர் இருக்கிருர். ஆஞல் இந்தத் தலைவர்க்குச் சமயஅறிவு கிடையாது. இவருக்கும் காந்திக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? இவர் புலாற்பிரியர்; டம்பப்பிரியர்; போகப்பிரியர்; பணப்பிரியர்; வர்த்தகப் பிரி

யர்; கொலைப்பிரியர். இவர் எப்படியோ போகட்டும். உலகத்திலே மனிதர் கோடிமாதிரி. அதிலே இதொருமாதிரியென்று தள்ளிவிடலாம். "கதையேனுமாங்கு கொலைபொறுக்காத கருணையாளனு"சிய காந்திபெயர்சொல்லி அஹிம்சையைப் பற்றி, சாந்தத்தைப்பற்றி யேன் இவர் பேசவேண்டும்?

* * *

எல்லாரும் தூங்கிக்கிடந்தார்கள். காந்திவந்து கதரைக்கிளப்பிவிட்டார். ஆர்முதசிலர் இதனைக்கேட்டு மிரண்டுமிரண்டு விழிக்கின்றனர். கதர் கட்டுவது அரசியலென்று கூறுகின்றனர். உடம்பிலே பலம் மிகக்குன்றிப் போனுல் பச்சைத் தண்ணீர்கூட செமியாத சாமானுகிவிடும். உடம்பிலே சரியாகப் பலமிருந்தால் கல் மண் எல்லாம் செமிக்குந் தன்மைபெற்று விடுவதியல்பு. இது சாதாரணம். இம்மாதிரி இந்தியாவில் அரசியல் அறிவும் அநுபவமும் மக்களுக்கு வெம்பிப்போயிருப்பதால் காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்றபடி யாய்விட்டது. காந்தி அரசியல் வாதி; அவர் வாயிலிருந்துவந்த கதரும் அரசியல். இது ஒரு குருட்டெண்ணம். காந்தி பால் கூடாதென்கிறுர்; பழம் சாப்பிடவேண்டுமென்கிறுர்; ஒருவரையுந் துன்பப்படுத்தப் படாதென்கிறுர்; பொய்சொல்லப்படாதென்கிறுர்; பொறுமை வேண்டுமென்கிறுர்; இவையாவும் அவர் வாயிலிருந்துவந்தன. இவையாவும்அரசியல்தானு? இத்தனைக்கும் மாருகத்தானு நடக்கவேண்டும்? நாளைச் சோறு சாப்பிட வேண்டுமென்று காந்தி சொன்னுல் அதுவும் அரசியலாகி விடுமே! அதற்குப் பயந்தால் யாவரும் பட்டினிகிடக்க வேண்டுமே! என்னுல்முடியாது! உங்களாலும் முடியாது! காந்திசொன்னுல் என்ன ஆர் சொன்னுல்என்ன? அரசியல் அரசியலில்தான்வரும். கதருக்குள்வரமுடியுமா? நான் ஒரு ராட்டினம் வைத்திருக்கிறேன். நூல்நூற்று வருகிறேன். நெய்த வேட்டியும் கட்டியிருக்கிறேன். நன்ருக ஆராய்ந்து பார்த்தேன். அரசியலை நான் காணவேயில்லை. பஞ்சிலே யில்லை. ராட்டினத்திலும் யில்லை. நூலிலுமில்லை. நூற்கிறவர் யாவரிடத்திலுமில்லை. வேட்டியைப் பிரித்துப்பார்த்தாலும் அதிலுமில்லை. உலகந்தெரியாது உளறித்திரிபவருடைய வாயிலேதான் அரசியலுக்கும் கதருக்கும் சம்பந்தம் இருக்கிறது. சாயவேட்டியைக்கண்டு மஞ்சிவிரட்டுமோடுவெறித்தோடுகிறமாதிரி சிலர்திரிகின்றனர்.

———

கார்வண்டு.

(தரவு கொச்சகக் கலிப்பா.)

தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் அ. கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள்

ஆய்ந்த பிறப்புரிமை அகிம்சைவழி தந்தருள்வான்,
சாந்தமய வடிவாகித் தாங்கரிய தவம்புரியும்,
ஏந்தல், எம்பெருமான், எரவாடா சிறைச்சென்று,
காந்திமகான் கழன்மலரில் களித்தூதாய் கார்வண்டே. (க)

மண்ணடங்க, வானடங்க, மாற்றாரும் வாயடங்கக்,
கண்ணடங்கா ஒற்றுமையைக் கண்டிருந்த காலம்போய்
உண்ணடுங்க, உரைநடுங்க, உறுதிபெறும் உடல்நடுங்கத்
திண்ணெனுமிப் பிரிவினையைச் செப்புவாய் செவ்வண்டே. (உ)

கண்ணாகி, மணியாகிக், காந்தியுமாங் காவலன்பால்
எண்ணாது தேசசபை இருபிளவாய், அதிற்பலவாய்,
நண்ணாரும் முறுவலிப்ப நாடோறும் கலாம்விளைத்தல்
புண்ணாகி வருத்துவதைப் பொறிக்குவாய் பொன்வண்டே. (ங)

ஒற்றுடை யிடைபுனைந்து, ஒத்துழையாப் போர்தொடங்கும்
அற்றைநாள் ஆண்டநின் அருள்வழியே அவனிஎலாம்,
"கற்றாவின் இனம்போலக் கசிந்துருகி" நின்றவையோ!
இற்றைநாள் இகன்றிருப்ப தியம்புவாய் எழில்வண்டே. (ச)

சட்டசபைக் குள்ளேயும், வெளியேயும், சாதித்தல்
எட்டுணையும் இலதேனும், என்றாலும் தாசர்வழி
விட்டுக்கொ டுத்தேகி, வீடுபெற முன்னிற்கும்
கட்டுரையைக் காந்தமுனி கருத்திருத்தாய் களிவண்டே. (ரு)

ஆந்தலைமை நீவகித்து, அரசியலைக் கோலியநாள்
காந்தமெனுங் கழலிணையில் கட்டுண்ட நின்னடியார்,
தாந்தலைமை எனத்தருக்கித் தத்தமக்கோர் வழிகோலும்,
போந்தவுரைப் பெரும்பூசல் புகலுவையே பொன்வண்டே. (சு)

காரணமெலாங் கடந்தபெருங் காந்திமகான் நின்னடிகள்
சரணமெனத் தலைக்கொண்டு, தகுதியிலா அரசியலின்
மரணபய மொழிந்தோம் மன்னியநல் லரசுபெறும்
அரணம் வகுக்கறியோம் அறைகுவயே ஆண்வண்டே. (எ)

கலகமெலாம் அழிந்தொழிந்து, களித்திருக்க மாந்தருக்குக்
கலகமிலா வழிவகுத்தாய் கட்டுண்டாய் காவலனே!
உலகமெலாம் போற்றும் உத்தமஇவ் வநியாயம்
நிலகுலைவு தென்றென்று நினைந்துரைப்பாய் என்வண்டே. (அ)

அஞ்சாற்றும் அருந்தவன்பால் உண்மையெனும் வாளுருவி,
அஞ்சாமைப் பலிபீடத் தாண்மையுடன் தலைநிமிர்ந்து,
தஞ்சாவைத் துரும்பென்று தன்னைத்தானே ஒறுக்கும்,
அஞ்சாத பேரெழுச்சி சூழ்ந்துரைப்பாய் சுழல்வண்டே. (கூ)

பட்டம் பதவியெனும் பழங்தேனை உண்ணாதே,
கட்டறுத்த கருங்கயத்தில் கதித்தெழுந்த சுதந்தரப்பூ
மொட்டவிழ்ந்த புதுத்தேனை முகந்துண்ணக், காந்திமுனி
கிட்டபுரி நினமலன்தாள் நின்றாதாய் நிழல்வண்டே. (கக)

பத்திரிகை ஆராய்ச்சி.

"தமிழ்நாடு" ஆனி உசவ இதழில் மன்னார்குடி ஸ்ரீமான் க. சந்தானம் அவர்கள் "காந்தி மதம்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருக்கும் கட்டுரையில் பின்வரும்பகுதியை இங்கே தருகிறோம்:—

மனிதர்களென்று சொல்வோரில் பெரும்பான்மையோர் உண்மையில் முழு மனிதர்களல்லர். பாதி மிருகங்கள். மிருகத்தன்மையை ஒழித்து மனுஷ்ய தன்மையைப் பெருக்குவதுதான் மானிட வாழ்க்கையின் உத்தேசம். இதற்குத் தகுந்த உபாயத்தைக் கொடுப்பதே மதமென்றும், நாகரீகமென்றும் சொல்லத் தகுந்தவை. மனிதனிடம் குடிகொண்டிருக்கும் மிருகத்தன்மையை வளரச்செய்யும் எந்த பழக்கங்களும், கட்டுப்பாடுகளும் நன்மைதரா. இவைகள் பார்வைக்கு எவ்வளவு மேன்மையாகவும், விசித்திரமாகவும், புத்தி சாதுர்யத்துடன் கூடியும் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவு உலகத்தின் நற்கதிக்கு தீமை பயக்கக்கூடியவையாகவிருக்கும். இவற்றின் மோக வலையை அறுத்து, சத்தியத்தைக் கடைப்பிடித்து நடப்பது தான் நமது கடமை. இதுதான் "காந்தி மதம்"

இவற்றோடு இன்னும் சிறிது விளக்கியெழுதியுள்ளார்கள். காந்தி மதம் என்றே ஒரு மதத்தை உண்டாக்கி வேலைசெய்யவேண்டு மென்று "நவசக்தி"யும் கூறிவருகிறது. அரசியல் நிலையானது பலவாகப் பிளவுபட்டுக் கிடக்கும் இப்போது காந்தியிடத்து உள்ளன்பும் உறுதியு முள்ள அன்பர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டு உழைப்பார்களானால் உறுதியான நலத்தை எதிர்பார்க்கலாம்.

* * *

ஜூன் மாதம் கமர்ஸியல் இந்தியாவில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது:—

"ஆமதாபாத்து நெசவுச்சாலை வேலையாட்கள் வேலைநிறுத்தம் செய்ததின் பயனாக முதலாளிகளுக்கு உ௭-லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதென மதிப்பிடப்படுகிறது. தொழிலாளிகளும் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளத்தில் அதற்குச் சமமாகிய தொகையே இழக்கநேரிட்டதாம். ௬,௩௦,௦௦,௦௦௦ பவுண்டு நூலும் க,அ௦,௦௦,௦௦௦ பவுண்டு துணியும் நாட்டிற்கு நஷ்டம். மில் ஏஜெண்டுகளின் கமிஷன் வகையிலோ கூ-லட்சம் ரூபா நஷ்டமாம். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளரில் ௭௦௦ பேருக்கு ஆமதாபாத்து முனிசிபாலிட்டியிலும் உ௩௫ பேர்க்கு தேசிய சர்வகலாசாலைக் கட்டிடத்திலும் ௩௫௦ பேருக்கு மற்றும் பலவித துறைகளிலும் வேலை கிடைத்தது. தவிரவும் மிஸ்டர் மகன்லால்கந்தி கதர்த்தொழிலில் பஞ்சு அரைத்தல் முதல் நெசவு வரையில் எல்லாத் தொழிலுக்குமாக ௬௦௦ பேர்களுக்கு வேலை கொடுத்து வந்தாராம்.

சிறு சிறு மனஸ்தாபங்களிலிருந்தே பெரிய வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு விடுகின்றன. சிறு குழப்பங்களை முதலாளிகள் அசட்டை செய்து விடாமல் கவனித்து அவ்வப்போது சீர் செய்து விடுவார்களானால் பல வகையான துன்பங்களும் நேரா. பெரிய ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை நிறுத்தங்கள் நேருவதால் ஏழைத் தொழிலாளர்கள் படுந் துன்பங்கள் அளவில. அப்படியே முதலாளிகட்கும் பெருத்த நஷ்டமேற்படத்தான் செய்கிறது. இத்துன்பமில்லாது பரஸ்பரம் ஐக்கிய முண்டாகிவிடின் இருதரப்பாருக்கும் நன்மையுண்டாவதோடு நாட்டிற்கும் நன்மை யுண்டாகுமன்றோ?

ஜூன் மாதத்திய 'கமர்ஷியல் இந்தியா' வில் கீழ்வரும் குறிப்புக் காணப்படுகிறது:—

பி அண்டு ஓ கப்பல் கம்பெனியார் சமீபத்தில் ௧௫,௦௦௦ டன்னுள்ள ௬ கப்பல்களும் ௧௦,௦௦௦ டன்னில் ஒரு கப்பலும் ௧௫,௨௦௦ டன்னில் ஒன்றும் கட்டுவிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியா கம்பெனியார் ௮,௦௦௦ டன்னில் ௫ கப்பல்களும் ௨ மோட்டார் கப்பல்களும் ௭,௯௦௦ டன்னில் கந்தல்லா என்னும் கப்பலும் மற்றும் டல்கமா, ரிங்கா என்னும் இருமோட்டார் கப்பல்களும் ஆகப் பத்துக் கப்பல்கள் கட்டுகின்றனர். இவை யாவும் இந்தியப் போக்குவரத்துக்காகவே செய்யப்படுகின்றனவாம். பி அண்டு ஓ கம்பெனியார் இப்போது கட்டிக்கொண்டிருக்கும் கப்பல்களின் மொத்த நிறை ௧௭,[illegible] டன்னாகும். பி. ஐ. கம்பெனியின் மொத்த நிறை ௩௪,௬௦௦ டன்.

சதங்கையொலி.

சிவாலயப்பணி.

சிவாலயப்பணி செய்வதில் நாட்டுக்கோட்டையார் மிகுந்த ஊக்கமுடையவரென்பது உலகப் பிரசித்தம். இதனைக்கொண்டே இவ் வகுப்பாரை "திருப்பணிச் செல்வர்" என்று பல விடங்களிலும் வழங்கி வருகின்றனர். சமயாச்சாரியர்களால் பாடப்பெற்ற தலங்களைப் புதுக்குவதிற்றான் பெரிதும் முயன்று வருகின்றனர். இவ் வகுப்பினர் வசிக்குமிடம் எல்லையினுள் பழமையான சிவாலயங்கள் பல சிதைப்பட்டும் பூசையற்றும் கவனிப்பாரின்றியும் இருக்கின்றன. இவைகளையும் கவனித்துத் திருப்பணிசெய்ய முற்படுவார்களாயின் பெரும் புண்ணியங் கிடைக்குமென்று நாம் கூறவேண்டுவதில்லை.

ஜமீன் கோவில்கள்.

பழங்காலத் திருந்தே இப்பகுதியில் இராமநாதபுரம் சிவகங்கை யென்ற இரண்டு ஜமீன்கள் இருந்து வருகின்றன. இராமநாதபுரஞ் ஜில்லாவின் பெரும்பாகம் இந்த இரண்டு ஜமீன்களில் அடங்கி யிருக்கிறது. நாட்டுக் கோட்டையார்

புதுக்கோட்டை சமஸ்தானந்தவிர இந்த இரண்டு ஜமீன்களுள் தான் வசித்துவருகின்றனர். இந்த ஜமீன்தாரிகள் வசத்தில் பல சிவாலயங்கள் இருக்கின்றன. அவற்றிற்கெனப் பல கிராமங்களு மிருக்கின்றன. அதனதன் வரும்படியைக்கொண்டே அந்தந்தக் கோவில்களை அழகுபெற நடத்தலாம். ஷை ஜமீன்தாரிகளான இராமநாதபுரம் சிவகெங்கை ராஜாக்கள் ஆலய பரிபாலன இலாகா வொன்றை சிரத்தையுள்ளதாக நிறுவி எல்லாக் கோவில்களையும் பழுதுபார்த்தும் பூஜை முதலியன குறைவின்றிச் செய்வார்களாயின் இப்பகுதியில் சமயவளர்ச்சி குன்றாதிருக்கும். இது அவர்கள் கடமையுமாகுமன்றோ?

இந்தியருக்குக் கப்பல் வேண்டும்.

இந்தியமக்கள் வெளிநாடுகட்குச் செல்வதற்கும் தங்கள் சரக்குகளை யேற்றிச் செல்வதற்கும் சொந்தக் கப்பல்கள் இல்லாதபடியால் இவர்கள் மிகக் கஷ்டமுறுவதைப் பலரும் அறிவர். இந்தியர்கள் மிகுதியாகப் போக்குவரவு வைத்திருக்குமிடங்கள் பர்மா மலாய்நாடுகளாகும். இந்த வழியில் இந்தியர்களின் கப்பல்களொதுவுமில்லை. ஐரோப்பிய கம்பனிக்காரர்களின் கப்பல்களில் ஏறுவதாலும் சரக்கேற்றுவதாலும் படும் அவமானமும் துன்பமும் நஷ்டமும் சொல்லி முடியாது. கப்பலில் ஏறும்போதும் இறங்கும்போதும் இறப்பும் பிறப்பும் போலவே கருதவேண்டியிருக்கிறது. இந்தியமக்களுக்குக் கப்பலில் போடப்படும் உணவு மக்கள் எண்ணத்தக்கதன்று. அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் கக்கூசாகவே இருக்கின்றது. அக் கப்பல் வேலைக்காரர் இந்தியர்களைப் படுத்தும்பாடு எழுதிமுடியாது. இத்தனை துன்பங்களும் ஒழியுமாறு ஒரு பெரிய கப்பற் கம்பெனியை ஆரம்பித்து நடத்தினால் பெருத்த நன்மையுண்டாவதோடு லாபமுங் கிடைக்கும். பெரிய பெரிய ஸ்தானங்களிலிருக்கும் இந்தியச் சீமான்கள் ஏன் இத்துறையில் இறங்கக்கூடாது? ஆங்கிலச் சீமான்களோடும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களோடும் பெரும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் இத்துறையிற் புகுந்தால் நன்மை தருமென்று நாம் கருதுகின்றோம்.

ஒரு ரூபா நோட்டு.

"ஒரு ரூபா நோட்டுகளை வெளியிடுவதிலும் அவற்றைக் கையாடுவதிலும் உண்டாகும் செலவையும் அசௌகரியங்களையும் பார்த்து இவற்றை இனிச் செலாவணியிலிருந்து எடுத்து விடுவதாக ஆலோசனை செய்யப்படுகிறது." என்றொரு செய்தி வெளிவருகின்றது. இது நல்ல ஆலோசனையேயாகும். பொது ஜனங்களின் உபயோகத்துக்குச் சில்லரை நாணயங்கள் அதிகமாகப் பழக்கத்திலிருப்பது நன்மை பயக்கும். ஆனால் ஒரு ரூபா நோட்டினால் பலர் துன்பமும் நஷ்டமுமடைகின்றனர். ஒரு ரூபா நோட்டை ஏழைகளிற் பலர் நான்காக மடித்தே வைத்துக்கொள்கின்றனர். அது அப்படியே கிழிந்து போகிறது. எண்ணை பட்டாலும் கிழிந்து போனாலும் செலாவணியாகவில்லை. மேலும் கிழிந்துபோன நோட்டைச் சேர்த்துவைத்து ஒட்டிக்கொள்வதற்குக் கூடத் தெரியாத ஏழை ஜனங்களே நமது நாட்டில் மிகுந்திருக்கின்றனர். இதை யுத்தேசித்து ஏழைகளிடமுள்ள இரக்கத்தினால் ஒரு ரூபா நோட்டை எடுக்காவிட்டாலும் செலவை யுத்தேசித்தாவது எடுத்துவிட்டால் நன்மையேயாகும. ஆனால் அதற்குப் பதில் வெள்ளிரூபா வெளியிடப்படுமா? என்று நாம் வினவுகிறோம்.

இந்து மதத்திற்குப் பெருந்தீங்கு.

மேனாட்டுப் பாதிரிமார்களேயன்றி அவர்களின் கீழ் வேலை செய்யும் இந்தியக் கிறிஸ்தவ மதபோதகர்களும் நம் இந்து மதத்துக்குச் செய்துவரும் தீங்குகள் அளவிறந்தன. ஐரோப்பியப் பாதிரிமார்களின் கல்விச்சாலைகளில் கல்வி பயின்றுவரும்படி விடப்படும் இந்தியச் சிறுவர் சிறுமிகள் சிறிது சிறிதாகமேனாட்டு நடை யுடை பாவனைகளையேயன்றிகிறிஸ்தவ மதத்தையும்கைக்கொள்ளும்படி தூண்டப்படுகின்றனர். இவ்விதம் ஆண்டு தோறும் நம் புராதன இந்து மதத்தை விட்டுச் செல்பவரின் தொகை அதிகரித்தேவருகின்றது. ஆண் பிள்ளைகளேயன்றி இந்துப் பெண்களும் கிறிஸ்தவரின் போதனைக்குட்பட்டுத் தமது தாய் தந்தை சகோதர சகோதரிகளையும் இல்லத்தையும் விட்டு மோசடியாகக் கொண்டு போகப்படுகின்றனர். சமீபத்தில் சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு இந்து குடும்பத்தைச் சார்ந்த பங்கஜம் என்ற ஒரு யுவதி அவ்விடத்துப் பாதிரிமார்களால் பெற்றோருக்குத் தெரியாது மோசடியாக வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனள்.

இக் கன்னிகைக்கு இப்போதுதான் ௧௮-வயதாகியிருப்பதால் சட்டப்படி பெற்றோர் இவ்விஷயத்தில் யாதும்செய்யவியலாது, இவள் திருவல்லிக்கேணி ஆங்கில ஜனனா பாதிரிமார் பெண் பாடசாலையில் கல்வி பயின்று ௪-வது பாரம் வாசித்ததும் வீட்டிலேயே நிறுத்தப்பட்டாள். ஆனால் மதபோதனை செய்துவரும் கிறிஸ்தவ உபாத்தியாயனி அக் கன்னிகைக்கு வீட்டிலேயே தையல் பின்னல் வேலைகள் கற்பித்துவர அநும திக்கப் பட்டிருந்தாள். நாளடைவில் உபாத்தியாயனி மாணவி யின் மனதைக் கிறிஸ்துமதக் கொள்கைக்குத் தக்கவாறு பக் குவப்படுத்திவந்து அவ் யுவதி சட்டப்படி பெரியவள் (மேஜர்) ஆனதும் வீட்டாருக்குத் தெரியாதவாறு அவளை அழைத்துப் போயினள். பாதிரிமார்களின் உள்ளெண்ணங்களும் நோக் கங்களும் நம்மவருக்குக் கண்கூடாகத் தெரிந்திருந்தும் கிறிஸ் தவப் பாடசாலைகளுக்கு நம் சிறுவர் சிறுமிகளை அனுப்புவதும் கிறிஸ்தவ மதபோதகரை வீட்டிற்கு வரும்படி அநுமதிப் பதும் மிகவும் கண்டிக்கத்தக்கதே. இனியாவது அதி சிரேஷ் டமாகிய நமது இந்துமத ஆசாரங்களைப் பாதுகாப்பதற்காக பிரமுகர்கள் ஒரு சபை சேர்ந்து பாதிரிமார்களின் பாடசாலைக ளிருக்கும் இடங்களிலெல்லாம் சிறுவர் சிறுமிகளுக்கு இந்து பாடசாலைகளை ஏற்படுத்தவும் ஆங்காங்கே சுறு சுறுப்பான பிரசாரம் செய்விக்கவும் முன்வருவார்களா? இந்துபாடசாலை களிலும் தற்காலம் பெண்களுக்குக் கல்வி போதிக்கும் முறை யில் நம்நாட்டுப்பெண்மணிகளின் புராதனமானதும் உயர்ந்தது மான ஆசாரங்களையும் நடையுடை பாவனைகளையும் கைவிட்டு மேனாட்டு ஒவ்வா பழக்க வழக்கங்களையே பெரும்பாலும் பின் பற்றுவதா யிருக்கிறதால், நம் பெண்மணிகளின் கல்விமுறை யிலும் பலமாறுதல்கள் செய்யவேண்டியது அவசியமாகும்.

ஜெர்மன் மார்க்கு.


ஜெர்மன் மார்க்குகளை அந்நிய நாணயங்களாக மாற்றுவ தற்கு ஜனங்கள் ஏராளமாய் முயற்சித்ததால் ஜூலை மாதம் ௧௯-தேதி யன்று பர்லின் நாணயமாற்றுச்சாலையில் மிகுந்த பர பரப்பு உண்டாயது. சின்னாட்களுக்கு முன்பாகவே இந்தப் பர பரப்பு மிகுதியாய்க் காணப்பட்டு வந்தது. இதனால் ரீச் பாங்கி என்னும் அரசாங்கநாணயச்சாலையார் இனி நாணயமாற்றுக்கு இடங்கொடுக்க வியலாதெனப் பயமுறுத்தினர். மறுநாள் லண் டனில் ஒருபவுனுக்கு ௧௮-லட்சம்மார்க்காகவிருந்தமதிப்பு அன் றுமாலை ௨௦ லட்சம் வரையில் எட்டியது. ஜெர்மன் மார்க்கு களை வாங்கி வைத்திருப்போர்க்கு இந்நிலை கவலைக்கிடமானதே.

மதிப்புரை.

மகாபாரத வசனம் (முதற்பாதி):—இது பாரதக் கதையின் தொடர்பை விடாது ஆற்றொழுக்காகச் சுருக்கிக் கூறிச்செல்லுகிறது. வியாச பாரதத்தை யொட்டிச் செல்லும் இந்நூலில் முதல் ஒன்பது பருவங்களும் அடங்கியிருக்கின்றன: மீதியுள்ள ஒன்பது பருவங்களும் பிற்பகுதியாக வெளிவரு மென்றும் அறிகிறோம். பிழையின்றி நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. கண்டபடியாக எழுதப்படும் நாவல்களை வாங்கிப்படிக்கும் நமது நாட்டுச் சிறுவர்களும் பெண்மக்களும் இதனை வாங்கிப் படித்தல் நலமாகும். பள்ளிக்கூடங்களில் உபயோகிப்பதற்கு இப்புத்தகம் மிக உபயோகமாயிருக்கும். இந்நூலில் கதாபாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிடும்போதும், வேறு சில வடமொழிச் சொற்களை உபயோகிக்கும்போதும் வடமொழியிலக்கணத்தை மிகுதியாக ஆசிரியர் தழுவிச் சென்றிருக்கிறார்கள். அவற்றைத் தமிழிலக்கணப்படி பிரயோகிப்பது தமிழ்நாட்டு மக்களுக்குப் படிக்க சுலபமாயிருக்கும். மேலும் வில்லிபாரதத்திலிருக்கும் அருஞ் செய்யுள்கள் இடையிடையே காணப்படுமானால் இன்னும் அழகாகவிருக்கும். இவற்றையும் அடுத்த பதிப்பில் கவனித்தல் கூடுமென்று நம்புகிறோம். கிரவுன் கஉ0 பக்கங்கொண்ட இந்நூலின் விலை ஒரு ரூபாய். வேண்டுவோர் இதன் ஆசிரியர் "ஸ்ரீமான் கே. எஸ். சேஷகிரி ஐயரவர்கள், சித்ரக்குளம் கீழ்ப்பக்கம் தெரு, மைலாப்பூர், சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதுக.

தமிழ்நாடும் நம்மாழ்வாரும்:—இந்நூல் சென்னை சாதுராத்ந சற்குருபுத்தகசாலையாரால் அனுப்பப்பெற்றோம். இதனையெழுதியவர், தமிழ்நாட்டுத் தவப்பயனாக விளங்கும் நமது நண்பர் ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தரராவர். நடையழகும் சொல்லழகும் பொருளழகும் படிப்போர் உள்ளத்தைக் கவரும். ஆசிரியர் பெயரைக் குறிப்பிட்டபின்னர் வேறொன்றும் நூலைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை. ஆயினும் "தமிழ்நாட்டிற் பிறந்து யாழ்ப்பாணத்து வீரசைவரிடம் பயின்ற உண்மைச் சைவத்திருவாளரொருவர் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியைக் காய்தலின்றி ஆராய்ந்து அதிலுள்ள இன்பச் சுவையைத் தமிழ்நாட்டுக்கு நல்கியிருக்கின்றனர்," என்றுமட்டும் கூறவிரும்புகின்றோம். இந்நூல் ஒவ்வொருவரும் படிக்கவேண்டியதாகும். இதன்விலை அணா நான்கே. தபாற்கூலி வேறு. விலாசம்:—சாதுராத்நசற்குரு புத்தகசாலை, 4/34, நயினியப்பநாய்க்கென் தரு, சென்னை.

[illegible]



குன்றக்குடி மலையும், கோயிலும்.

சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றள் தொழாது ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை. உ	காரைக்குடி உருத்திரோற்காரி ௵ ஆவணி ௴	மணி ரு.

வணக்கம்.

முருகக்கடவுள்.

பிறர்புக ழின்சொற் பயிலுமி ளந்தைப்
பருவம தன்கைச் சிலையாலே
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவழி சென்றக் குணமேவிச்
சிறுமைபொ ருந்திப் பெருமைமு டங்கிச்
செயலும ழிந்தற் பமதான
தெரிவையர் தங்கட் கயலைவி ரும்பிச்
சிலசில பங்கப் படலாமோ
கெறுவித வஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்
கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிளிபட வொன்றிப் பொருதோனே
குறுமுனி யின்பப் பொருள்பெற அன்றுற்
பனமனு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமானே.

திருமாலடியவர்.

அராவணை துறந்து போந்தன் றசோதைகண் களிப்ப நீடு
தராதலம் விளங்க வெண்ணைத் தாழிசூழ் தரகின் றூடிச்
குராமணங் கமழுங் கூந்தற் கோவியர் குரவை கொண்ட
புராதனன் றனையே யேத்தும் புனிதர்தாள் போற்றி செய்வாம்.

தென்னாட்டுப் பாளையக்காரர்.

(கருக-ம் பக்கத் தொடர்ச்சி,)

1783-ஆம் அக்டோபரில் கட்டபொம்மநாயக்கனும் சிவகிரி பாளையக்காரரும் ஒழுங்காய் நடந்துகொண்டார்களென கலெக்டர் ஐர்வின் அறிவித்தார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டையிலிருந்து எடுத்துக்கொண்டுவரப்பட்ட கடிதங்களில் டச்சுக்காரருக்கும் கட்டபொம்மநாயக்கனுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துகளும் உடன்படிக்கையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் துரைத்தனத்தாருக்கு அனுப்பப்பட்டது. மேலும் டச்சுக்காரருடன் சமாதானம் ஏற்பட்டு விட்டால்—இனி அவர்களுக்குத் தூத்துக்குடி திருப்பிக்கொடுக்கப்பட்டால் அவர்கள் கட்டபொம்மநாயக்கனுக்கு யாதொரு உதவியும் செய்யாதிருக்கும்படி நிபந்தனை ஏற்படவேண்டியது அவசியமெனவற்புறுத்தினர். 1784-ம் அக்டோபரில் எழுதிய கடிதத்திலும் சிவகிரி பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்கள் மிகவும் ஒழுங்காய் நடந்துகொண்டதாகவும் தங்கள் கிஸ்திகளைக் காலந்தவறாமல் செலுத்திவருவதாகவும் கலெக்டர் துரைத்தனத்தாருக்கு அறிவித்தார்.

1785-ல் தூத்துக்குடியும் அதைச்சார்ந்த மற்றும் இடங்களும் டச்சுக்காரருக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டன.

[1785-ஜூன் 28-ம்தேதி கருநாடக தேசத்தின் நிர்வாகம் நவாப்புக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டது.] இதன் பலனை மறுபடியும் தென்னாட்டில் பாளையக்காரரின் அதிக்கிரமச் செயல்கள் தலையெடுத்தன. இவ்வாறு 5-வருஷ காலம் ஆங்கிலேயரின் அதிகாரத்தினின்றும் நீங்கி நவாபு நிர்வாகத்திலிருந்த கருநாடகதேசம் 1790-ஆகஸ்டு 7-ம்தேதி திரும்பவும் ஆங்கிலேயர்கைக்குவந்தது. இந்தத்தடவை ஆங்கிலேயர் உடன்படிக்கையின்றித் தாங்களாகவே நாட்டின் நிர்வாகத்தைக்கைப் பற்றிக்கொண்டனர். ஆங்காங்கே வரிவசூலுக்கு அதிகாரிகளைநியமித்[illegible]னர்.

1791-அக்டோபரில் திருநெல்வேலி கலெக்டர் துரைத் தனத்தாருக்கு எழுதிய கடிதத்தில் சிவகிரி பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்களுக்குக் கர்னல் புல்லர்டன் காட்டிய தயவினால் அவர்கள் கலகச் சூழ்ச்சி அதிகரித்து விட்டதென்றும் முக்கிய மாய்ப் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரனை அடக்குவதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமென்றும் தெரிவித் தார். அன்றியும் புலித்தேவர் கோட்டைக்கு அனுப்பிய ஒரு காவற்படை புலித்தேவர் ஆட்களால் ஆயுதங்களுடன் பிடித் துக்கோட்டைக்குப் புறத்தேகொண்டுபோய் விடப்பட்டதென் றும் அறிவித்தார்.

1792-ஜூலை 12-ம் தேதி நவாபுக்கும் கம்பெனியாருக் கும் நடந்த உடன் படிக்கையின் பிரகாரம் பாளையக்காரரிடம் கிஸ்திவசூல் செய்யும் பொறுப்பு முற்றிலும் கம்பெனியார் ஒப் புக்கொண்டனர். கருநாடக தேசத்தில் பாளையங்களல்லாத நவாபின் நேர் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் மதுரை திரு நெல்வேலி நாடுகள் மாத்திரம் கம்பெனியார்வசம் விடப்பட் டன. ஏனைய நாடுகள் நவாபின் ஆட்சிக்கே உரிமையாயிருந் தன. அதுவரையில் பாக்கியிருந்த கிஸ்திக்குச் சமமாகிய தொகை வசூலாகும் வரையில் மதுரை திருநெல்வேலிநாடுகள் கம்பெனியார்வசமிருக்கவேண்டியது. அன்றியும் சண்டை நே ருங்கால் கருநாடக தேசம் முழுவதும் கம்பெனியின் நிர்வா கத்துக்கு விடப்படவேண்டியது. 1792-ல்பாஞ்சாலங்குறிச்சியி லிருந்து எட்டயாபுரத்துக்கு இரண்டு கிராமங்கள் மாற்றப்பட் டன. ஆனால் கட்டபொம்மநாயக்கன் இந்த கிராமங்களை விட்டுக் கொடுக்க இசையவில்லை. கலெக்டரும் இந்த உத்தரவை அமுலு க்குக்கொண்டுவரக்கூடவில்லை. இதனால் எட்டயாபுரம் பாளை யக்காரனுக்கும் கட்டபொம்ம நாயக்கனுக்கும் முன்னிருந்த நேசப்பான்மை ஒழிந்து விரோதமுண்டாகியது.

1793-ல் கட்டபொம்ம நாயக்கன் கீழ்ப் பிரதேசங்களிலு ள்ள குடிகளைக்கொலைசெய்தும் கொள்ளையடித்தும் அக்கிரமங் கள் நடத்திவந்ததாகவும் பாஞ்சாலங்குறிச்சி ஆட்கள் ஆழ்வார் திருநகரியையும் ஸ்ரீவைகுண்டத்தையும் கொள்ளையிட்டுத்தலை

மையான குடிகளைச் சிறைபிடித்துப் போயினரென்றும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு பாளையக்காரரின் கொடுமைகள் அதிகரித்து வந்ததைக்கண்டு, இவர்களின் ஆயுதங்களை எவ்வாறு வாங்குவது, சமாதான வழிகளில் சிறுகச் சிறுகச்செய்வதா அல்லது ஒரேயடியாய்ப் பலாத்காரமாய்ச் செய்வதா என்பவற்றை திருநெல்வேலி கலெக்டரும் தளகர்த்தனும் கூடி ஆலோசித்து முடிவுதெரிவிக்கும்படி கேட்டுவிடப்பட்டிருந்தனர். 1795-ல் தூத்துக்குடி டச்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயரால் பிடிபட்டது.

1795-ஜூன் மாதம் கம்பெனி அத்தியக்ஷர் சபையினின்றும் வந்த கடிதத்தில் அக்காலத்துப் பாளையக்காரர்களின் நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. 1. யுத்த வீரரின் பலத்தைக்கொண்டு தங்கள் மனம் போனபடி ஒருவரோடொருவர்சண்டையிட்டுக்கொள்தலும்கொள்ளையிடுதலும். 2. கம்பெனிக்குச்சேரவேண்டிய கிஸ்தியைச் செலுத்தமுடியாதபடி தங்கள் நாட்டையும் கஜானாவையும் வறுமையில்ஆழ்த்திவிடுதல். 3. குடிகளை இம்சித்துத் தொந்தரவு செய்தல். இவ்விதகொடுமைகளால் நாட்டில் குடிகளேயில்லாதுபோய் வரிவசூலாகிறதில்லை. இந்த நிலைமை நிலைத்திருக்கும் வரையில் வரிவசூல் செய்வது அசாத்தியமாகவேயிருக்கும்.

இரண்டாவது கட்டபொம்மநாயக்கன் 1791-ல் இறக்க மூன்றுமவன் பாளையத்தின் உரிமையைக்கைக்கொண்டான். இவனும் இறந்தபிறகு 1799-ல் கடைசி கட்டபொம்மநாயக்கன் பாளையக்காரனானான். இவன் பெயர் வீரபாண்டியன் என்பதாம்; கருத்தையா என்றும் வழங்குவதுண்டு. இவனுக்கு இருசகோதரர்கள் இருந்தனர். முதல் சகோதரன் பெயர் குமாரசாமி நாயக்கன். இவன் செவிட்டூமை. இவன் சாகசமும் போர்த்திறமும் ஆங்கிலேயராலும் பயத்துடன் கொண்டாடப்பட்டதென்றால் அதிகம் சொல்லவேண்டியதில்லை. இவன் உயரமாய் 'மெலிந்ததேகியாகவும் பார்வைக்கு வியாதிபிடித்தவன் போலவும் காணப்பட்டாலும், எவ்வளவு கஷ்டம் வந்தகாலத்திலும் மன உறுதியைக் கைவிடாதவன். பஞ்சேந்திரியம்

களில் இரண்டு குறைவாயிருப்பது ஏனையோரிடத்துப் பெருங் குறையாய்க் காணப்பட்டாலும், இவன் விஷயத்தில் அளவில்லா மதிப்பையுண்டாக்கக் கூடிதாயிருந்தது. ஊமையன் குடிஜனங்களால் தெய்வமாகக் கொண்டாடப்பட்டான். இவன் ஒரு சிறு சைகைசெய்தால் போதும் அதுவே தெய்வ ஆக்ஞையாகக்கருதப்பட்டது. ஒவ்வொருவனும் அவன் ஆணைப்படி நடந்துகொள்ள முந்துவர். இவன் தலைமைவகிக்காத சபையே கூடுவதில்லை. எந்த துணிகரமான செய்கையிலும் இவன் முன்னின்று நடத்துவன். இவன் ஆங்கிலேயரைப்பற்றிப் பேசுவது மிகச் சுலபமாயிருக்கும். அதாவது சில சிறு வைக்கோல் கூளங்களைத் தன் இடது உள்ளங்கையில் கூட்டிவைத்துக்கொண்டு அவைகளை ஆங்கில வீரர்களெனக் காட்டி வலது கையினால் ஒரு தரம் கசக்கி ஊதிவிடுவானாம். ஆங்கிலப்படைகளை எதிர்த்துச் சின்னாபின்னப் படுத்தியபோதெல்லாம் இவனே முன்னணியில் நின்றவன். இவனுக்கு இளையவன் பெயர் சுப்பாநாயக்கன்; சிவத்தையா என்றும் வழங்குவதுண்டு. இவனும் படைத்தலைமை வகித்துப் போரை நடத்திவந்தான். கட்ட பொம்மநாயக்களை ஆங்கிலப் போர்வீரர் தங்கள் மொழியில் சுருக்கமாகப் 'பூனை' என்ற பொருள் தரும் 'Cat' என்று குறிப்பிடுவது வழக்கம்.

18-ம் நூற்றாண்டின் மத்தியில் புலித்தேவர் இருந்ததைப்போலவே அந்நூற்றாண்டின் இறுதியில் கட்டபொம்ம நாயக்கன் துரைத்தனத்தாருக்கு அடங்காமல் கொடிய அதிக்கிரமச் செயல்கள் நடத்திவந்தான். இவன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிலிருந்து ஆயுதபாணிகளான வீரருடன் வெளிப் புறப்பட்டுச் சர்க்கார் கிராமங்களிலும் மற்றப் பாளையக்காரரின் கிராமங்களிலும் பிரவேசித்துக் கிடைத்த பொருள்களைக் கொள்ளைகொண்டு கிராமங்களையும் அழித்துப் பாழாக்கிவிட்டு முக்கிய குடிகளைச் சிறை பிடித்துப் போவது வழக்கமாயிருந்தது. 1797-ல் இராமநாதபுரம் நாட்டில் குழப்பம் நேரிட்டபோது கட்டபொம்ம நாயக்கன் தலைமையின் கீழ் மற்றும் பல பாளையக்காரர்களும் குழப்பத்தில் சேர்ந்து

கொண்டு கிஸ்தி செலுத்த மறுதளித்தனர். துரைத்தனத்தார் இதைக் கேள்வியுற்றதும் மிகுந்த பீதியடைந்து உடனே இராமநாதபுரத்தில் கலெக்டராயிருந்த ஜாக்ஸன் துரைக்கு எழுதிப் பாளையக்காரரை நேரில் கண்டுபேசி அவர்களது குறைகள் யாவையென அறிவிக்கும்படி கேட்டனர். 1798-ல் ஜாக்ஸன்துரை கட்டபொம்ம நாயக்கனை இராமநாதபுரத்துக்கு நேரில் வந்து ஆஜராகும்படி உத்தரவிட்டனர். அவன் பல பல சாக்குப் போக்குகள் சொல்லிக் காலங்கடத்திவிட்டு இறுதியாக 1798 செப்டம்பர் 9ம் தேதி இராமநாதபுரத்தில் கலெக்டர் முன்னிலையில் ஆஜரானன். அன்று மாலை கலெக்டர் சபாமண்டபத்தில் சில கடிதங்கள் வாசித்துக் காட்டிக் கொண்டிருக்கையில் கட்டபொம்ம நாயக்கன் திடீரெனப் பயந்தவன்போல் வெளியே ஓடினன். ஓடும்போது கோட்டை வாசலில் காவலிருந்த இரு ஆங்கில வீரரில் அட்ஜூடெண்டு கிளார்க் என்பவனைக் குத்திக்கொன்று விட்டுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. ஓடிப்போன கட்டபொம்ம நாயக்கன் ஆயுதந்தரித்த தனது ஆட்களுடன் வழியிலுள்ள சர்க்கார் கிராமங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு பாஞ்சாலங்குறிச்சி போய்ச் சேர்ந்தான்.

துரைத்தனத்தார் ஜாக்ஸனை காரியத் தாழ்ச்சிக்காகக் கடிந்துவிட்டு கட்டபொம்ம நாயக்கன் உடனே கலெக்டரிடம் போய் ஆஜராகவேண்டுமென பகிரங்க அறிக்கை பிறப்பித்தனர். ஆனல் இவன் அந்த அறிக்கையை லட்சியம் செய்யாது வழக்கம்போல் பக்கத்திலுள்ள எட்டயாபுரம் பாளையத்தைச் சேர்ந்த கிராமங்களில் பிரவேசித்துக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான்.

கலெக்டர் ஜாக்ஸன் கட்டபொம்ம நாயக்கனை நடத்திய விதத்தைக் கண்டித்து ரிவினியூ போர்டார் சென்னைத் துரைத்தனத்தாருக்கு இரண்டு கடிதங்களெழுதினர். அவற்றில் ஜாக்ஸன் கட்டபொம்ம நாயக்கனை அதிகமாய்க் கடிந்ததனலேயே கட்டபொம்ம நாயக்கன் கொலைசெய்து விட்டு ஓட நேர்ந்ததென்றும் இராமநாதபுரம் கோட்டைக்குள்ளிருந்த

கலெக்டர் கச்சேரிக்கு நேரில் ஆஜராகிப் பிறகு திடீரெனப் பெருங் குற்றவாளிபோல் ஓடிவிட்டதால் அவன் நோக்கம் இன்னதென்றாவது அவன் அடையும் பலன் இன்னதென்றா வது அறியக்கூடவில்லை யென்றும், ஆயுதபாணிகளான 4000 வீரர்கள் இராமநாதபுரம் கோட்டைவாசல் வரையில் யாருமறி யாமல் வந்து மறைவிருந்து கட்டபொம்ம நாயக்கன் வெளியே ஓடும் சமயத்தில் அவனுடன் சேர்ந்து அவனுக்குத் துணையாய் நின்றார்களென்று கூறுவதை நம்பக்கூடவில்லையென்றும் ஆனா லும் கட்டபொம்ம நாயக்கன் செய்த அக்கிரமங்களுக்குத்தக்க படி கடுமையாய்ச் சிட்சைசெய்ய வேண்டியது அவசியமாகை யால் அவனது பாளையத்தை அரசாங்கத்துக்குச் சேர்த்துவிட வேண்டுமென்றும் யோசனை கூறினார்கள். இதன்மேல் கவர் னர் கட்டபொம்ம நாயக்கனை அடக்கப் போதுமான படை யைச் சேர்ப்பதற்கு அவசர உத்தரவு அனுப்ப யோசிக்கையில் பாளையக்காரன் வழிக்குவந்து விடுவானென்று தெரியவந்த தால் ஒரு பகிரங்க அறிக்கையை உடனே அனுப்பும்படி ஏற் பாடு செய்தார். அவ்வாறே பகிரங்க அறிக்கையொன்று ஜாக் ஸனுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் ஜாக்ஸனிடத்தில் கட்ட பொம்ம நாயக்கனுக்குச் சிறிதும் நம்பிக்கையில்லாததால் மேஜர் ஜெனரல் பிளாய்டு என்பவரை அனுப்பிக் கட்டபொம்ம நாயக்கனுடன் கலந்து பேசும்படி நியமித்தனர்.

அப்பால் இராமநாதபுரத்தில் நடந்த காரியங்களை நன்கு விசாரிக்கும்படியாக மூன்று வெள்ளைய ரடங்கிய கமிட்டி யொன்றும் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியார் விசாரணை யிலிருந்து கட்டபொம்ம நாயக்கன் ஜாக்ஸன் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து இராமநாதபுரம் கச்சேரியில் வந்து ஆஜராகத் தாமதம் செய்யவில்லை யென்றும், ஆனால் அவனை 23 தினங் கள் கலெக்டர் சென்ற விடங்களுக்கெல்லாம் கூடவே அழைத் துச் சென்றது பாளையக்காரனை அவமரியாதை செய்ததாகக் கருதக்கூடியதென்றும், இவ்வாறு செய்ய ஜாக்ஸனுக்கு அதி காரமில்லையென்றும், இராமநாதபுரம் கச்சேரியிலேயே ஜாக்ஸ னும் கீழ் அதிகாரிகளும் கட்டபொம்ம நாயக்கனை அவமரியாதை

கடுமையாக நடத்தினார்களென்றும், இவ்விதம் நடத்தியதால் கட்டபொம்ம நாயக்கன் நடந்துகொண்ட மாதிரியில் யாதொரு வித அசம்பாவிதமுமில்லையென்றும், சாட்சியங்களிலிருந்துயார் கையால் தளகர்த்தன் கிளார்க் கொல்லப்பட்டானென்பது சந்தேகமாயிருக்கிறதென்றும், கமிட்டியார் பாளையக்காரனுடனிருந்த எவனோ ஒரு ஈட்டிக்காரனால் குத்தப்பட்டிருக்க வேண்டுமென ஏகமனதாய் அபிப்பிராயப்படுவதால் கட்டபொம்ம நாயக்கனை அக்குற்றத்தினின்றும் விடுதலை செய்ய வேண்டுமென்றும், ஆனால் அவனது ஆள்செய்த குற்றத்துக்கு அவனும் உடந்தையாயிருந்ததனால் இறந்துபட்ட தளகர்த்தன் கிளார்க்கின் குடும்பசம்ரக்ஷணைக்குவேண்டியபொருளை அவனே கொடுக்கக் கடமைப்பட்டவனென்றும் தீர்மானிக்கப்பட்டது. துரைத்தனத்தாரும் அவ்விதமே கட்டபொம்ம நாயக்கனை மன்னித்து அவனுடைய பாளையத்தையும் கொடுத்து விடும்படி உத்தரவிட்டனர்.

ஜாக்ஸன் ஆத்திரக்காரனென்றும் கீழ்ப்படியாத முரட்டு சுபாவமுள்ளவனென்றும் குற்றம் சாட்டப்பட்டு வேலையினின்றும் நீக்கப்பட்டான்.

1799-ம் ஆண்டு ஜனவரி 12ம் தேதி ஜாக்ஸனுக்குப் பின் லூஷிங்டன் என்பவர் கலெக்டராக வந்தார். இவரிடத்தில் கட்டபொம்ம நாயக்கன் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து ஜாக்ஸன் அபிப்பிராயமே சரியானதென்று தோன்றிற்று. எட்டயாபுரம் சரித்திரம் எழுதிய இந்தியரும் கிளார்க் தளகர்த்தனைக் கொன்றவன் கட்டபொம்ம நாயக்கனே யென்னும் அபிப்பிராயத்தை ஆதரித்தார்.

லூஷிங்டன் வந்து இரண்டு மாதத்திற்குப் பின் கட்டபொம்ம நாயக்கனுக்கு மிகுந்த மரியாதையாக எழுதிய லிகிதத்தில் கிளார்க் தளகர்த்தன் கொலையுண்டமைக்காகச் சாட்டப்பட்ட குற்றத்தினின்றும் அவனை (கட்டபொம்ம நாயக்கனை) கவுரமாக விடுதலை செய்துவிட்டதாகவும் அவன் பாளையத்தை முழு சுதந்தரத்துடன் அநுபவிக்கும்படி அவனுக்கு விடப்பட்டதென்றும் கூறிக் கிஸ்தி பாக்கியுடன் இராமநாதபுரம் கச்

சேரிக்கு வந்து சேரும்படி கேட்டிருந்தார். இதற்குக் கட்டபொம்ம நாயக்கன் பதிலளித்ததில் தான் அரசாங்கத்தாருக்கு மிகுந்த நன்றி பாராட்டுவதாகவும் தன் கடமைப்படி கீழ்ப்படிந்து நடப்பதாகவும் ஆனால் அப்போது கம்பெனியாரிடமிருந்து தனக்குக் கிடைக்கவேண்டிய காரியங்கள் யாவும் கிடைக்கும் வரையில் கிஸ்தி பாக்கியைச் செலுத்தவாவது இராமநாதபுரத்துக்கு வரவாவது முடியாதென்றும் தெரிவித்தான்.

லூஷிங்டன் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் கட்டபொம்ம நாயக்கனைத் தன்னிடம் தனியாக வரவழைக்கவாவது, அவனிடமிருந்து கிஸ்தியை வசூலிக்கவாவது இயலாமற் போயினமையால், அவனையும் அவனைப்போல் அடங்காமலிருந்த மற்றும் சில பாளையக்காரரையும் அடக்குதற்குவேண்டிய சைன்யத்தை அனுப்பவேணுமென்று சென்னைக்கு எழுதினார். அரசாங்கத்தாரும் இனித் தாமதித்தால் மற்றப் பாளையக்காரருக்குள் கலகச் சித்தம் பரவிவிடுமென்றுகண்டுஉடனே படையை அனுப்பத் தீர்மானித்தனர்.

கட்டபொம்ம நாயக்கனுடன் சேர்ந்து அவனுக்கு உதவியாய் நின்றவர்கள், நாகலாபுரம், கொல்லர்பட்டி (கோலவார்பட்டி), ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரரே. மேல்நாட்டில் கலகத்துக்கு முதன்மையாய் நின்றவர் சிவகிரி பாளையக்காரன் மகனும் மாப்பிள்ளை வன்னியனுமாவர். இவர்கள் இருவரும் சேர்ந்து சிவகிரி பாளையக்காரனைத் தொலைப்பதற்கு முயற்சி செய்தார்கள். சிவகங்கை மருது சகோதரர்கள் கட்டபொம்ம நாயக்கனுக்கு யோசனை சொல்லியும் மற்ற விதமாகவும் உதவி செய்துகொண்டிருந்தனர். கட்டபொம்ம நாயக்கனுக்கு விரோதமாய்க் கம்பெனியார் பக்கலில் உறுதியாய் நின்றவர், எட்டயாபுரம், ஊத்துமலை, சொக்கம்பட்டி தலைவன் கோட்டை, மணியாச்சி, மேல்மாந்தை பாளையக்காரர்களே.

ஸ்ரீரங்கபட்டணம் பிடிபட்டுத் திப்புசுல்தானுடன் யுத்தம் முடியும் வரையில் துரைத்தனத்தார் தாமதித்திருந்தனர். அதன்மேல் அரசாங்கத்தாரின் முக்கிய கவலை ஒழிந்ததாலும் துருப்புகள் விடுவிக்கப்பட்டதாலும், பாளையக்காரர் பக்கம் கவனம் செலுத்துவதற்கு இடமுண்டாயிற்று. 1799 ஆகஸ்டில் மேஜர் பானர்மான் என்னும் தளகர்த்தன் கீழ்ப் பெரும் படையொன்று திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டது. இவர் பாளையக்காரர்களுடன் நேரேகலந்துபேசவோ போர்புரியவோ பகிரங்க அறிக்கைமூலம் அதிகாரம் பெற்றிருந்தார்.

செப்டம்பர் 5ந்தேதி மேஜர் பானர்மான் பாஞ்சாலங்குறிச்சியை அணுகினார். இங்கு கோயில்பட்டி கயத்தாற்றிலிருந்த படைகளும் வந்துசேர்ந்தன. ஐரோப்பிய சேனைப் பகுதி வந்துசேர்வதற்குத் தாமதப்பட்ட போதிலும் அது வரையில் காத்திராமல் அன்றைக்கே கோட்டையை எதிர்த்துக் கைப்பற்ற முயன்றார். ஏனெனில் காலதாமதம் செய்தால் பாளையக்காரன் தன் தகப்பன் செய்ததுபோல் கோட்டையிலிருந்து வெளியேறிச் சிவகிரிக்கு ஓடிவிடுவானென்று அவர் கருதினார். அதன்மேல் பாளையக்காரனைத் தன்னிடம் வந்து ஆஜராகும்படி மேஜர் பானர்மான் செய்தியனுப்பினார். ஆனால் எழுத்துமூலமாய் கவுல் கொடுத்தாலன்றி வெளிவரமுடியாதென்று பாளையக்காரன் கூறினான். அரைமணிநேரம் சென்று ஆங்கிலப்படை இரவு பத்துமணிக்குக் கோட்டையைத்தாக்க ஆரம்பித்தது. உடனே பாளையக்காரன் சரியானகவுல் அனுப்பினால் நான்குமணி நேரத்தில் தான் வந்து ஆஜராவதாகச்சொல்லி யனுப்பினான். அதைக்கவனியாது கோட்டையின் நான்குபுறங்களிலும் ஆங்கிலப்படைகளை அணிவகுத்து நிறுத்திக்கோட்டையைத்தாக்க ஆரம்பித்தார்கள். கோட்டைவாயில் க்தவுகள் பீரங்கியால் தகர்க்கப்பட்ட போதிலும் ஆங்கிலப்படையில் சேதம் அதிகமாகியும் உட்செல்லக்கூடவில்லை. ஆங்கிலப்படையில் நான்கு உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டும் இருவர் காயமடைந்தும் சேதமாயி

னார். இரண்டுநாட்கள் தாமதித்து எதிர்பார்த்திருந்த ஆங்கிலப்படையின் பகுதி வந்துசேர்ந்தது. அடுத்தநாள் கோட்டையைத்தாக்கச் சித்தம் செய்யப்பட்டது. ஆனால் அன்று இரவே பாளையக்காரனும் அவனைச்சேர்ந்தவர்களும் கோட்டையைக் காலிசெய்து விட்டு ஒடி விட்டனர்.

அதன்மேல் மேஜர் பானர்மான் கட்டபொம்மநாயக்கன் ஓடிப்போனதாகத் தெரியவந்த திசையிலுள்ள அவனுக்கு விரோதிகளான பாளையக்காரர்களுக்கு அவனைப்பிடிக்கும்படி கடிதம் போக்கித் தனது படையில் காயமடைந்தவர்களையும் காவலுக்காக மற்றும் சிலரையும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் நிறுத்திவிட்டு எஞ்சியபடையுடன் வடக்குநோக்கிப் புறப்பட்டனர். எட்டயாபுரம் பாளையக்காரர் தன் படையுடன் கம்பெனியின் ஆணையை நிறைவேற்றத் தயாராயிருப்பதாகப் பதிலெழுதிவிட்டுக் கட்டபொம்ம நாயக்கனைப் பின்தொடர்ந்து போய்க் கொல்லர்பட்டியில் அவனைச் சந்தித்தார். இருதரத்தாருக்கும் கைகலந்த யுத்தம் நடந்தது. இருபுறத்திலும் கடுஞ்சேதம் நேர்ந்தது. ஆங்கிலப்படையில் ஒருபகுதியும் எட்டயாபுரம் படைக்கு உதவியாய் நின்றது. கட்டபொம்மநாயக்கன் ஆறுபேருடன் தப்பிக் குதிரைமீதேறி ஓடிவிட்டான். அவனுடன் துணையாய் நின்ற 34 பேர்கள் பிடிபட்டனர். இவர்களில் கட்டபொம்மநாயக்கனுக்கு மந்திரியாகவிருந்து கலகத்துக்குத் தூண்டுதல் செய்துகொண்டிருந்த சுப்பிரமணியபிள்ளையும் அவன் தம்பியும் சேர்ந்திருந்தனர். கட்டபொம்மநாயக்கனை விடச் சுப்பிரமணியபிள்ளையே எல்லாக் குறும்புகளுக்கும் பிறப்பிடமாகக் கருதப்பட்டபடியால் நாகலாபுரத்திலேயே உந்த ஸ்தானத்தில் அவனைத் தூக்கிட்டுக் கொன்று பிறகு அவன் தலையைப் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டுபோய் அங்கு ஒரு ஈட்டிமுனையில் நாட்டிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது. சுப்பிரமணியபிள்ளையின் தம்பியும் ஏனையோரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

(தொடரும்)

புத்தகாலயங்கள்.

III

இந்தியாவில் புத்தகாலய வியக்கத்தைக் கண்டு வளர்த்து வந்திருப்பதில் முதன்மையானது பரோடா ராஜ்ய மென்பதைக் கடந்த ௧-வது வியாசத்தில் குறிப்பிட்டேன். இம்முறை அந்த ராஜ்யத்தில் இவ்வியக்கம் வளர்ந்து வந்துள்ள நிலைமையைச் சற்று விவரிப்பாம்.

பரோடா ராஜ்யத்தில் நான்கு பெரிய நகரங்களும், முப்பத்தொன்பது பட்டணங்களும், நானூற்றிருபத்தாறு பெரிய கிராமங்களும்; இரண்டாயிரத் தறுநூற் றிருபத்தெட்டு சிறிய கிராமங்களுமுண்டு. இங்கு ௧௯௦௭-ம் ஆண்டில் புத்தகாலய வியக்கம் தலைதூக்கிய தென்றாலும் ௧௯௧௦-ம் வருடம் வரையில் அது நன்கு வளர்ச்சி பெறவில்லை. ௧௯௧௦-ம் ஆண்டில் அமெரிக்காவினின்றும் இவ்வியக்க வளர்ச்சியில் போதிய அநுபவம் வாய்ந்த போர்டன் என்பவர் இதற்கெனவே இங்கு வரவழைக்கப்பட்டார். அவர்பரோடாவந்து சேர்ந்தபொழுது அங்கிருந்த புத்தகாலயங்கள் யாவும் மிகக்கேவலமான நிலைமையிலிருந்தன. அதற்குக் காரணம் துரைத்தனத்தார் புத்தகாலயங்களுக்கு யாதொரு உதவியும் செய்யாமற் போனதே. அதனால் புத்தகாலயங்களில் மேன்மேலும் நூதன புத்தகங்கள் வாங்கி வைக்கப்படவில்லை. சாதாரணமாக வாசகர்கள் ஒரு முறை படித்த புத்தகங்களையே மீண்டும் பலமுறை படிக்க விரும்பமாட்டார்கள். இதனால் வாசகர்களின் சங்கையும் நாளடைவில் குறைந்துபோயிற்று. புத்தகாலயங்களும் ஊக்கத்திற் றளர்ந்தன. இக்குறைகளைக் கவனித்து, போர்டன் அவர்கள் ஒரு புதிய சீர்திருத்தத் திட்டம் தயாரித்தார். நகரப் புத்தகாலயம் இருபதினாயிரம் புத்தகங்களோடும், பட்டணப் புத்தகாலயம் ஐயாயிரம் புத்தகங்களோடும், கிராமப் புத்தகாலயங்கள் ௫௦௦ அல்லது ௨௦௦ புத்தகங்களோடும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தார். அத்திட்டத்தில் பொது மக்களுக்கு சுய முயற்சி ஏற்படும் வண்ணம் சில நிபந்தனைகள் சேர்க்கப்பட்டன. இதன் கீழ்க்கண்ட திட்டம் ௧௯௧௧-ம் ௵ ஜூன் மாதத்தில் துரைத்தனத்தாரின் அனுமதியைப் பெற்றது.

(௧) ஒவ்வொரு வருடமும் கிராமப் புத்தகாலய அங்கத்தினர்கள் சந்தாவாகவாயினும், வெகுமதியாகவாயினும், ஐம்பது ரூபாய் சேர்த்துக்கொண்டு தெரிவிப்பார்களாயின் துரைத்தனத்தாரும், ஜில்லா போர்டாரும் சேர்ந்து ஐம்பது ரூபாய் அப் புத்தகாலயத்திற்கு வெகுமதி--சகாயம் செய்யவேண்டும்; அங்கத்தினர்கள் குறைந்த பக்ஷம்

உரு ரூபாய் தம்முன் வசூலித்துத் தலைமைப் புத்தகாலயத்திற்கனுப்பி ஞல்அப்புத்தகாலயத்தார் நூறுரூபாய் பெறுமான சுதேச பாஷைப் புத்தகங்களை யளிக்க வேண்டும்.

(உ). நாலாயிரத்திற்கு மேற்பட்ட ஜனசங்கையுடைய பட்டணப் புத்தகாலய சங்கத்தார் ரு00 ரூபாய் தம்முன் சேர்ப்பார்களாயின, துரைத்தனத்தாரும் நகரபரிபாலன சபையாரும் சேர்ந்து ரு00 ரூபாய் அவர்களுக்கு உதவுவார்கள். நகரப் புத்தகாலயத்தோர் எ00ரூபாய் வரையில் கிராண்ட் உதவியைப் பெறுவார்கள்.

(ரு) எப் புத்தகாலய சங்கத்தாராயினும் சொந்தக் கட்டிடத்தை ஏற்படுத்திக்கொள்ள விருப்பமுடையவர்களாய் அதற்காகும் செலவில் மூன்றிலொரு பங்குத் தொகையைத் தம்முன் வசூலித்துச் சேர்ப்பார்களாயின் மற்றிரண்டு பங்கு செலவை துரைத்தனத்தாரும், ஜில்லா போர்டாரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ளுவார்கள்.

(ச). துரைத்தன உதவியைப்பெறும் ஒவ்வொரு புத்தகாலயமும் ஜாதி மத வேற்றுமையின்றி எல்லா ஜனங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். புத்தகாலய மொவ்வொன்றும் அதன் சந்தாதாரர்களால் வருடத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படும் ரு முதல் கூ வரை யங்கத்தினர்களடங்கிய காரிய நிர்வாக சபையால் பரிபாலிக்கப் படவேண்டும்.

(ரு) எத்தாலூகா போர்டாராயினும் தன் புத்தகாலயத்தின் ஊதியத்தைப் பெருக்கவேண்டுமென்ற விருப்பத்தோடு அந்தத் தாலூகாவிலுள்ள படித்தவர்களின்மீது சிறிது வரி விதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அவ் வேண்டுகோளைத் துரைத்தனத்தார் சாதகமாக யோசிப்பார்கள்.

(சு). துரைத்தன உதவியைப்பெறும் ஒவ்வொரு புத்தகாலயமும் தனது வரும்படியினின்றும் நூற்றுக்கு உரு புத்தகங்களை வாங்கவும், ரு0 பத்திரிகைகளுக்கும், உ0 வாடகைச் சாமான்களுக்கும், உரு இதர சில்லரைச் செலவுகளுக்கும் செலவிடவேண்டும்.

(எ) ஒவ்வொரு புத்தகாலய சங்கத்தாரும் தமது புத்தகாலயத்தின் வளர்ச்சியைத் தெரிவிக்கும் அறிக்கை (ரிப்போர்ட்) யை மூன்று மாதங்களுக் கொருமுறை ஜில்லா புத்தகாலயத்திற் கனுப்பவேண்டும். அப்படியே ஜில்லா புத்தகாலயங்கள் தங்கள் அறிக்கையை மாகாணத் தலைமைப் புத்தகாலயத்திற் கனுப்பவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு கூகூகூ-ம் வருடத்திற்குள் சகூ000 ரூபாய் செலவழிக்கப்பட்டது. அவ்வாண்டில் ருச பட்டணப் புத்தகாலயங்களும், ருகூ0 கிராமப் புத்

சாலயங்களும், ஏக வாசகசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. ௯0 பட்டணப் புத்தகாலயங்களும், ௯ கிராமப் புத்தகாலயங்களும் தமக்குச் சொந்தக் கட்டிடங்களை நிருமித்துக்கொண்டன. அவ்வருடத்திலேயே புத்தகங்களை வாங்கி யுதவுவதற்கும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் ஒவ்வொரு வருடமும் இருபதினாயிரம்ரூபாய் செலவழிப்பதற்குதுரைத்தனத்தார் தீர்மானித்தனர். ௧௯௧௯-ம் வருடக் கடைசியில் பரோடா ராஜ்யம் முழுவதிலும் ௬௪௨ புத்தகாலயங்க ளேற்பட்டிருக்கக் கணக்கிடப்பட்டது.

யாத்திரைப் புத்தகாலயங்கள்.

எல்லா கிராமங்களிலும் உடனே புத்தகாலயங்களை ஏற்படுத்துதல் இயலாத காரியம். ஆனால் கல்வியறிவு உடனே எங்கும் பரவ வேண்டியிருக்கிறது. அதனால் புத்தகாலயங்களின் பயனை இயன்ற வரையில் யாவர்க்கும் எட்டச் செய்யவேண்டுவது அவசியமாகும். இதை முன்னிட்டு, சில புத்தகங்களை ஒரு பெட்டியில் வைத்து படிக்கத் தெரிந்தவரிருக்கும் பிரதி கிராமத்திற்கும் யாத்திரைப் புத்தகக் களஞ்சியமென்று அதை யனுப்பிவைத்தனர். எல்லா மக்களுக்கும் கல்வியறிவை—விஞ்ஞானப் பயிற்சியை யுண்டாக்குவதற்கு யாத்திரைப் புத்தகாலயங்கள் சுலபமானதும், மலிவானதும், விரைவில் சாதிக்கத்தக்கதுமான நல்ல வழி யென்பதை அறிஞர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

பரோடா ராஜ்யத்தில் ௧௯௧௨ல் யாத்திரைப் புத்தகாலயங்களென்ற இக்கிளை ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. துரைத்தனத்தார் ௬000 ரூபாய் இதற்கென பிரத்யேகப்படுத்தினர். அத்தொகையைக் கொண்டு அ௯ புத்தகப் பேழைகள் தயாரிக்கப்பட்டன. அவற்றுள் உ௫00 புத்தகங்கள் வைக்கப்பட்டன. அப்பேழைகளில் ௩௰ புத்தகங்களை வைக்கக்கூடிய சிறு பெட்டிகளும், ௯0 புத்தகங்களை வைக்கத்தக்க பெரிய பெட்டிகளுமாக இருவகைச் சிறு பெட்டிகளிருக்கும். இவ்வித யாத்திரைப் புத்தகாலய மொன்று ஒரு கிராமப் பாடசாலையின் தலைமையாசிரியர் வசம் மூன்று மாதகாலம் ஒப்புவிக்கப்படுகிறது. அவ்வுபாத்தியாயர் தமக்கறிமுக மானவர்களுக்காவது, தக்கவர்களால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்காவது புத்தகத்தின் விலையை ஜாமீனாகப் பெற்றுக்கொண்டு புத்தகாலயத்திலுள்ள எப்புத்தகத்தையும் வீட்டுக்கு வாசிக்க இரவல் கொடுக்கலாம். ஒவ்வொரு யாத்திரைப் புத்தகாலயத்திலும் புத்தகங்களின் ஜாபிதா, புத்தகாலய நிபந்தனைகள், புத்தகங்களைப்பெற்றுக் கொள்ளுபவர்கள் கையெழுத்திடும் ரிஜிஸ்தர் முதலியவை வைக்கப்பட்டிருக்கும். மூன்று மாதங்களானதன் பின்

னர் அப்புத்தகப் பேழையை அவ்வுபாத்தியாயர் மற்றொரு கிராமத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அவசியமேற்பட்டபொழுது அவற்றைத் தலைமைப் புத்தகாலயத்திற்குக் கொணர்ந்து வேண்டிய மராமத்துகள் செய்வார்கள். ககககம் ஆண்டினிறுதியில் ௬டூ0 யாத்திரைப் புத்தகால்யங்கள் ஏற்பட்டு வேலை செய்யத்தொடங்கின. அவற்றில் ககூ000 நூல்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

அசையும் படக்காக்ஷி.

பரோடா ராஜ்யத்திலுள்ள இரண்டு லக்ஷம் ஜனத்தொகையில் நூற்றுக்குப் பதின்மரே அப்பொழுது படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தனர். மீதித் தொண்ணூறு பேரும் புத்தகாலயங்களின் பயனையடைய இயலாதவர்களாயிருந்தனர். அப்படிப்பட்டவர்களின் அறிவை விருத்தி செய்வதற்கு இரண்டு வழிகளுண்டு. அதாவது கண்காக்ஷிகளாலும், உபந்நியாசங்களாலும் அதைச் சாதிக்கலாம். சினிமா என்னும் அசையும் படக்காக்ஷிகளைக் கொண்டு பொது ஜனங்களுக்கு கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், தேசசரித்திரம், பூகோளசாஸ்திரம் முதலிய அநேக விஷயங்களைக் கற்பிக்கலாம். இக்கருத்தை மேற்கொண்டு ககூக0—ல் சிறிய சினிமா யந்திரமொன்றை வாங்கினர். ககுகஉம் ஆண்டில் மாகாணத் தலைமைப் புத்தகாலயத்தார் கண்காக்ஷி என்ற ஒரு கிளையை யாரம்பித்தனர். அதன்மேல் பதினாயிர ரூபாயில் பெரிய சினிமா யந்திரத்தை வாங்கினர். முதல் காஷி என்ற ஜில்லாவில் ௬அ காக்ஷிகள் காட்டப்பட்டன. அவற்றிற்கு ௬௯000 ஜனங்கள் வந்திருந்தனர். காலக்கிரமத்தில் சிறிய சினிமாக்கள் பத்து வாங்கினர். தற்போது வருடந்தோறும் லக்ஷத்தைம்பதினாயிரமக்கள் இக்காக்ஷிகளின் பயனையடைந்து வருகிறார்களென்று மதிப்பிடப்படுகிறது.

புத்தகப் பிரசுரம்.

புத்தகாலயத்தின சார்பாக ககககம் ஆண்டிலிருந்து அச்சிடப் பெறாத பழய புத்தகங்களில் நல்லவற்றை அச்சிட்டுப் பிரசுரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு கைக்வார் புராதனப் புத்தகப்பிரசுரங்கள் எனப் பெயரிட்டனர். புத்தகப் பிரசுரங்களுக்காக துரைத்தனத்தார் ஆறாயிரம் ரூபாய் பிரத்யேகப்படுத்தினர். ககககூம் ஆண்டில் ஐந்து சமஸ்கிருத நூல்கள் உரையுடன் அச்சிடப்பட்டன. புத்தகாலய சாஸ்திரசம்பந்தமான புத்தகங்களும் சில பிரசுரிக்கப்பட்டன. ககூகடுல் தாலுகா ஜில்லா புத்தகாலய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மாகாணத்தலைமைப் புத்தகாலயத்தின் சார்பாக மூன்று பாஷைகளில் "புத்தகாலயங்கள்" என்ற பெயரால் ஒரு

மாதப்பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. வருடந்தோறும் புத்தகாலயங்களுக்குஉபயோகமான பலவிதபொருட்காக்ஷிகளையும் நடத்துகின்றனர்.

௧௯௧௮ல் லாஹோரில் நடைபெற்ற முதல் புத்தகாலய மகாநாட்டுக்கு பரோடா தலைமைப் புத்தகாலயத்தின் சார்பாகப் பிரதிநிதியையுமனுப்பிவைத்தனர். ௧௯௧௯ல் சென்னையில் நடைபெற்ற புத்தகாலய மகாநாட்டுக்கு பரோடா புத்தகாலய வியக்கத் தலைவராயிருந்து காலஞ்சென்ற ஜே. எஸ். குடால்கர் அவர்களே அவைத்தலைமை வகித்தார். பரோடா ராஜ்யமானது புத்தகாலய வியக்க விஷயத்தில் இவ்வளவு தூரம் முன்னேறி யிருப்பதற்குக் காரணம் அவ்விராஜ்யத்தின் அதிபராகிய சாயாஜி கைக்வார் மகாராஜா அவர்களின் அபிமானமேயாகும். அன்னார் மேல்நாடுகளுக்குச் சென்று, அங்கு இவ்விஷயமாக நடைபெறும் அரிய முயற்சிகளைக் கண்ணுற்று, அதில்மிக்க ஆர்வமுடையவராய் சுதேசத்திற்குத் திரும்பிவந்தது முதல், தம் ராஜ்யத்தில் புத்தகாலய வியக்கத்தை ஸ்தாபித்து, இன்றுவரையில் அதிசயிக்கும் வண்ணம் அதை வளர்த்துவருகிறார். இதனால் அம்மகாராஜா அவர்களுக்குள்ள கல்வி யபிமானமும், தேசாபிமானமும், பரோபகார குணமும் இத்தகையதென்பது தெற்றென விளங்குகிறதல்லவா? அதிகம் சொல்லுவானேன்? இன்றைக்கு இந்து தேசத்தில் புத்தகாலய வியக்க வளர்ச்சிக்கு பரோடாதேசமே வழிகாட்டியாக நிற்கிறதென்போம். இதுபோலவே ஒவ்வொரு சுதேச மன்னர்களும் தத்தம் ராஜ்யங்களில் பொது மக்களின் அறிவுவளர்ச்சியில் தக்க கவனம் செலுத்துவார்களாயின் நாடு எவ்வளவோ முன்னேற்றமடையலாம். நிற்க பரோடா ராஜ்யத்தில் புத்தகாலய வியக்கம் இத்துணை வளர்ச்சிபெற்றது அத்தேச துரைத்தனத்தாரின் ஆதரவினாலேயே யென்பதைக் குறிப்பிடவேண்டும். துரைத்தனத்தாரின் ஆதரவில்லாத எவ்வியக்கமும் சித்தியடையாது. ஆதலின் நமது பிரிட்டிஷ் துரைத்தனத்தாரும் இவ்விஷயத்தில் கவனம்செலுத்தி நந்நாட்டுப்புத்தகாலய வளர்ச்சிக்குத் துணைபுரியுமாறு செய்ய நமது சட்டசபை யங்கத்தினர்களும், மந்திரிகளும், பொதுஜனங்களும் தக்க முயற்சிசெய்ய வேண்டுவது அவசியமாம். நந்தமிழகத்தில் இதுவரை பொதுமக்களின் முயற்சியால் எத்தனை புத்தகாலயங்கள் தோன்றியுள்ளன வென்ற விபரத்தையறிய அநேகர் ஆவல் கொள்ளலாம். இதைப்பற்றி உதவி செய்யுமாறு சென்னை பிம்பர சபையாருக்கு ஏற்கனவே ஒரு சமயம் எழுதிக்கொண்டிருக்கின்றேன். நற்பயனால் அச்சபையார் சமீபத்தில் தாம் வெளியிட்டிருக்கும் வருடப்புத்தகமென்ற ஒரு பெரிய பிரசுரத்தில் சென்னை மாகாணத்திலுள்ள முக்கியமான புத்தகாலயங்களின் ஜாபிதா ஒன்றையும் சேர்க்கப் பிரயத்தனித்துள்ளார்கள். நமது தமிழ்நாட்டு ஜனத்தலைவர்களாகிய தேசாபிமானிகள் இவ்விஷயத்தில் ஊக்கம்கொண்டு உழைக்க முன்வருவார்களாயின் நந்தமிழகத்தில் புத்தகாலய வியக்கம் நனிவளர்ந்தோங்குமென்பதிற் றடையில்லை. இதைக் கவனிப்பார்களா?

என். வேங்கடரமணன்,

"ஆநந்த நிலயம்," சேலம்.

ஆராய்ச்சி—பெரியபுராணம்.

(Registered copy right.)

[௮௦-ம் பக்கத் தொடர்ச்சி.]

இனி கலிங்கத்துப்பரணியிலே இப்பெயர்கள் பலர்க்கும் பொதுப் பெயர்களாக இடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக அபயன் என்பது I ௪,௧௬, II ௨௧, IV ௪, V ௩, VI ௧௨, ௧௬, VII ௬௨, ௨௨, VIII ௭, IX ௧, X ௧௦, ௨௪, ௩௪, ௬௬, ௬௧ செய்யுள்களில் காணப்படுகிறது. இவ் வபயன் வருமிடமெல்லாம் ஒரு அரசனையே குறிக்கவில்லை யென்பது அந்நூலை வாசிப்போர் அறிந்ததொரு செய்தியாம்.

சண்டேசுரநாயனார் புராணம் எட்டாவது செய்யுளில் சென்னியப யன் குலோத்துங்கசோழன் தில்லைத்திருவெல்லை பொன்னின் மய மாக்கிய வளவர்போரேறென்றும் புவிகாக்கு மன்னர்பெருமான் அநபா யன் என்பதுகொண்டு அவன் இரண்டாங் குலோத்துங்கன் என்று துணிதல் தவறக்கூடும் என்பது அவர்களே பின்னர்க்கூறிய "சேக் கிழார் நாயனார் காலத்துச் சோழன் கலிங்கம் வென்ற அபயனாயின், மற் றென்னகாரணத்தானோ அவர் அவனை உபயகுலோத்தமன் என வும் கலிங்கம் வென்றவன் எனவும் சுங்கந் தவிர்த்தவனெனவும் புகழ்ந் தனரில்லை என் வினா நிகழ்த்தற்கு இடனாகின்றது" என்று கூறி மறுத்தலினாலே இவன் இரண்டாங் குலோத்துங்கனல்லவென்றும், முத லாங்குலோத்துங்கனுக்கு முன்னிருந்தவனென்றும் கொள்ளவேண்டும்.

இன்னும், இவர்கள் "தண்டியலங்கார நூற்கண்ணே பெரும்பான் மையாக அநபாயன், சென்னி என்னும் பெயர்களால் ஒருசோழனையே புகழ்ந்தெடுத்துரைத்துள்ளார். அந்நூலுட் புகழப்பட்ட சென்னி, அந பாயன் என்னும் சோழன் யாவனென ஆராயுங்கால் அவ்வலங்கார நூற் கண்ணே,

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—லொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.

என - ஒட்டக்கூத்தர் கவியைப் புகழ்ந்துரைக்குமாற்றால் அவ்வணிநூல் கூத்தர்காலத்தே இயற்றப்பட்டதாகத் துணியப்படும். கூத்தர்காலத் தே சென்னி அநபாயன் என்னும் பெயர்களால் விளங்கியவன் அகளங்

கன்மகனாகிய குலோத்துங்கன் என்பது முன்னே தெளிவிக்கப்பட்டதாம்'' † என்றார்கள். இத்தீர்மானம் ஈண்டுக்குறித்த வெண்பாவைக்கொண்டு நாட்டியதாகும். கூத்தன் என்பது ஒட்டக்கூத்தனென்றெவ்வாறாயிற்றென்று காட்டினார்களில்லை. கூத்தன், ஆநந்தக்கூத்தர், பகழிக்கூத்தர், செந்தன் கூத்தன், ஒட்டக்கூத்தன் எனப்பலராவர். உலாப்பாடிய கூத்தர் கூத்தமுதலியார் என்றும் காழிஒட்டக்கூத்தன் என்றும் அழைக்கப்படுபவர். இவர் வாணிதாசரென்று ஒரு பேருடையார் என்று அவர்களே செந்தமிழ் மூன்றாந்தொகுதியில் காட்டியிருக்கின்றார்கள். * அவர் வாணியை வழிபட்ட காரணத்தால் வாணிதாசர் என்றுபேர் பெற்றாரென்றும், அவ்வாணியைப் பூசித்தவிடத்திற்கு கூத்தனூர் என்றும் கூறுப. இவ்வூர் திரு அம்பர் மாகாளம், என்னும்க்ஷேத்திரத்திற்கும் திலதைப்பதி என்ற க்ஷேத்திரத்திற்கும் புகைரதம் விட்டிறங்கும் இடமான பூந்தோட்டம் என்கிற ஊருக்கு மேற்கில் திலதைப்பதியை யொட்டியுள்ளதாம். கூத்தர் காழியொட்டக்கூத்தர் என்னும் வழக்குண்மையையும் நோக்குக. செங்குந்த மரபினர் கூத்தரைத் தங்கள் இனத்தவரென்று கூறிவருதல் ஒருபழஞ்செய்தியாகும். அவர் ஈட்டி எழுபது பாடியதும் இம் மரபினரைப்பற்றியதேயன்றோ! இவர்களுள் எல்லா நாட்டினரும் தலைகொடுக்க, மருகல்நாட்டினர் தலைகொடுக்காதகாரணத்தினாலன்றோ இன்றும் அந்நாட்டினர் மற்றையவர்களோடு சேர்த்தெண்ணப்படுவதில்லை யென்றும் வழங்குகிறது. இவைகளான் கூத்தமுதலியாரான ஒட்டக்கூத்தர்தான் மலரிவருங்கூத்தன் என்பதற்குப் போதிய ஆதாரமில்லை என்பதைக்காண்க. மேலும் மலரிஎன்பது சேதுநாட்டிலுள்ளதொரு ஊர் என்பார் உ. வே. ரா. ராகவையங்கார் சுவாமிகளே. இவற்றைக்கொண்டு—இவ்வெண்பாவைக்கொண்டுதண்டியலங்காரம் இரண்டாங்குலோத்துங்கன் காலத்ததென்றுகொள்ள இடமில்லை என்பது பெறப்படும்.

அன்றியும், அவர்கள் அந்நூலினகத்துக் காணப்படும் உதாரணங்கள் கொண்டு குலோத்துங்கன் இவனென நிச்சயித்தல் இயலாதென்பதையும் காட்டுவாம். தண்டியலங்கார நூற்கு முன்னர் வீரராஜேந்திரனது பேரால் நடைபெற்றுவரும் வீரசோழியம் என்னுநூல் இயற்றப்பட்டதென்பது யாவரும் ஒப்புக்கொண்டதொரு செய்தியாம். அதனிற்காணப்படும் உதாரணங்கள் பலவும் அந்நூற்கென்றே வீரராஜேந்திரன்பேரில்இயற்றப்பட்டதென்பதும் உலகறிந்ததே. அப்படிவீரசோ

---

† செந்தமிழ் வால்யம் ௩ பக்கம் ௯உ. * சரசுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தமுதலியார் என்பது தமிழ்நாவலர் சரிதை.

ழியத்துக்கென்றே இயற்றப்பட்ட உதாரணங்கள் அப்படியே தமிழ்த் தண்டியாசிரியரால் எடுத்தாளப்பட்டிருப்பது தவனிக்கவேண்டியதொரு முக்கிய விடயமாகும். அவர்கள் தமிழ்த்தண்டியலங்கார நூற்கண்ணே வருவனவாக பின்வருஞ்செய்யுள்களைக் காட்டுகின்றனர். அவை வருமாறு:—

வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரக் காயை வளர்க்குமார்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லனபாயன கொய்பொழில் சூழ்
கங்கா புரமாளி கை.

மூவாத் தமிழ்பயந்த முந்நூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
வுழைபொருதென் னுள்ளங் கவரா—மழைபோற்
றருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்.

செம்மை மரைமலருந் திங்களு நம்முகமுந்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—யெம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீ
ரொப்பாரு மென்பா ருளர்.

ஆயினும் அந்நூலை யாராயும்போது இச்செய்யுள்களோடு பின்வரும் செய்யுள்களுங் காணப்படுகின்றன. அவைகளை அபயன், சென்னி, அநபாயன் என்ற தலைப்பின் கீழ்க் காட்டுதும்.

I அபயன்.

(1) மலையி னலைகடலின் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தால்—தலைமைசேர்
அம்மார்தர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவத்தோ மியாம்.

(2) கடாத்தான் மாரியுங் கண்ணார் வெயிது
நிறைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையபய னோரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வனம்.

(3) மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
விழையார் விழையார் மெல்லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
மூழையா முழையா முறை.

(4) அமல லகல மகல லபய
கமல பவன மவள
வமல டமர வளக
வதன மடர மதன.

II சென்னி

(1) செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்ன—ரொருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாங்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்.

(2) செம்மை மரைமலருந் திங்களு நம்முகமும்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—எம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீர்
ஒப்பாகு மென்பா ருளர்.

(3) குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
உழைபொரு தென்னுள்ளங் கவரா—மழைபோல்
தருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்.

(4) அடிநோக்கி ஞாழ்கடல் வண்ண னவன்றன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான்—முடிநோக்கிற்
றேர்வளவ னாகத் தெளிந்தென்றன் சென்னிமேல்
ஆரலங்கல் தோன்றியது கண்டு.

(5) சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினான்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.

(6) கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் வறிஞ ரினங்கவர்ந்தும்—ஒன்றும்
அறிவரிதாய் நிற்கும் மலர்வின தா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு.

(7) கோட்டந் திருப்புருவங் கொள்ளாவவர் செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டம்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.

(8) ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாட
ரருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.

III அநபாயன்.

(1) என்னே சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யன்பாயன் பொன்னெடுந்தோண்—மூன்னே
தனவேயென் றுளுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.

(2) அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பர் நிலவேந்தர்—அன்னதே
வாரி புடைசூழ்ந்த வையகத்திற் கில்லையாற்
சூரியனே போலுஞ் சுடர்.

(3) தண்கவிகை யாலுலகந் தாங்கு மனபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை—யெங்கும்
மதியத்துட னிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள்.

(4) பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால்—நீதி
யடுத்துயர்ந்த கீர்த்தியனபாயா! யார்க்கும்
கொடுத்தியெனக் கொள்கின் றிலம்.

(5) தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினுங்
கைம்மாறுந் தாவ முடைத்தன்றே—எம்மாவி
யன்னவனை வாழி யனபா யனையலரான்
மன்னவனை மானுமோ வான்.

(6) இகன்மதமால் யானை யனபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவால்—நகமலர்வ

செங்கயற்க் ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.

(7) மூவாத் தமிழ்பயந்த முன்னோன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

(8) வன்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாம்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லன்பாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை.

மேலே காட்டிய செய்யுள்களை யெல்லாம் உற்றுநோக்குவோமாயின், இவைகளெல்லாம் திரிபுவன சக்கரவர்த்திகள் எனப் பட்டந் தாங்கிய சோழசளுக்கிகளான முதலாங் குலோத்துங்கனை யுள்ளிட்டாரை யன்று என்பது நன்கு விளக்கமாவதோடு, ஒருவனைச் சுட்டினும் பொதுப் பெயராகவே பலராலுங் கொள்ளப்படுவன வென்பது விளங்கும். மேலும் கங்காபுர மாளிகை, கங்கைகொண்ட சோழபுரமாகவே; அது கட்டிய ராஜேந்திரதேவன் முதல் வீரசோழனான வீர ராஜேந்திரன் வரையிற்றான் அது தலை நகராயிருந்ததென்று ஊகித்தற் கிடமிருக்கின்றதேயன்றி பின்னையவர்கள் இருந்தாண்டவிடம் இன்னதென்று உறுதிகூறக்கூடிய சான்றொன்றையும் காண்கிலம். ஆகையால் தண்டியலங்காரநூல் மேற்கோள்கொண்டு துணிதல் அமையாதென்றாகும்.

இனி, திருத்தொண்டர் புராணமாம பெரிய புராணத்தே காணப்படும்,

"சென்னியபயன் குலோத்துங்க சோழன் றில்லைத்திருவெல்லை
பொன்னின் மயமாக்கிய வளவர்போரேறென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா னனபாயன் வருந்தொன் மரபின்முடிசூட்டுந்
தன்மைநிலவு பதியைந்தி னொன்றாய் விளங்குந் தகைத்தவ்வூர்.

—சண்டேசுரநாயனார் புராணம் 8.

அந்நகரிற் பாரளிக்கு மடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டனபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்.

—புகழ்ச்சோழ நாயனார் 8.

என்பன்போலப் பலவிடங்களிலும் அநபாயன் அநபாயன் என எடுத்துப் புகழ்ந்துளார். சேக்கிழார் நாயனுரால் திருத்தொண்டர் புராணத்துள் அநபாயன் என்னும் பெயரை வைத்தோதிய செய்யுள்கள் பலவற்றுள் ஈண்டுக்காட்டிய இவ்விரு செய்யுளுமே அவ் வநபாயன் தில்லைத் திருவெல்லையைப் பொன்மயமாக்கிய செய்தியையும் கூறுவனவாய்ச் சிறிது சரிதம்பற்றி வந்தனவாம். இவ்வநபாயன் என்னும் பெயரும் இவன் செய்த தில்லைத் திருப்பணியையும் கொண்டேதான் இவன் இன்னனென்று காணவேண்டியுள்ளது. சேக்கிழார் நாயனுர் காலத்துச்சோழன் கலிங்கம் வென்ற அபயனுயின் மற்றென்னை காரணத்தானே அவனை அவர் உபய குலோத்தமன் எனவும் கலிங்கம் வென்றவன் எனவும் சுங்கந் தவிர்த்தவனெனவும் புகழ்ந்தனரில்லை. என்னும் வினு நிகழ்த்தற்கு இடனுகின்றது.........இவற்றுற் சேக்கிழார் காலத்தவன் கலிங்கம் வென்ற அபயன் என்பது துணியப்படாது நின்றது. கூத்தர் உலாவிலும் உலவை யடுத்துரைத்த வெண்பாவிலும் தண்டியலங்காரத்தும் நன்று பயின்றுள்ள அநபாயன் என்னும் பெயருக்கும், கூத்தர் இரண்டுலாக்களிலும் தக்கயாகப் பரணியிலும் விவரணமாக விரித்துரைத்த தில்லைத் திருப்பணிகளுக்கும் பொருந்த நோக்குமிடத்து இப் புராணத்துட்கண்ட பெயரும் செயலும் அகளங்கன் மகனுன சென்னி அநபாயன் என்னும் பெயர்களால் விளங்கிய குலோத்துங்கன் II என்பானுக்கே உரியவா மெனத் தெளியலாகும். என்றுர் உ. வே. ரா. ராகவையங்கார் சுவாமிகள்.

முன்னரே பொன்னம்பலம் பொன்னின்மய மாக்கியோர் பலரென்றும், அபயன், சென்னி, அநபாயன் என்னும் பெயர்கள் ஒருவனைச் சுட்டுவன வல்லவென்றும் எடுத்துக் காட்டியுள்ளேன். இவர்களும் இப்பெயர்களுடையவர்களில் ஒருவனுன சோழசளுக்கியாம் முதலாங் குலோத்துங்கனு யிருக்கமுடியாதென்று விளங்கக்கூறி விட்டார்கள். இரண்டாங் குலோத்துங்க னென்றுல் இவனது உலாவில் இப் பெருஞ்செய்தி குறிக்கப்படாமலிருக்க நியாயமில்லை. அன்றித் தக்கயாகப் பரணியிலாவது குறிக்கப்படலாம். அதுவுமில்லை. இவனது மகனுன் ராஜ ராஜதேவர் பேரிலியற்றிய உலாவிலாவது இவன் (குலோத்துங்கன்) பெயர் வரும்போது இதனைக் குறித்தல் பொருத்தமுடையதானது. அதுவும் இல்லை. இவைகளோடுபோகாது இக்கூற்றுக்குப் பெருந்தடையாக நிற்பது இக்குலோத்துங்கன் தந்தையான விக்கிரமசோழன் காலத்திலேயே இப்புராணத்துக் கண்ட கதைகளில் ஒன்றுன மநுவின் சரித்திரம் முழுவதும் கல்வெட்டாக அவ்வரசன் திருவாரூரில் எழுந்தருளினகாலத்துக் கேட்கப்பட்டுக் கொடுபட்டதாகக் காண்கிறேம் என்று முன்னர்க் குறித்துளோம்.

இந்நிகழ்ச்சியொன்றே இப்புராணம் இவன்காலத்தி லியற்றப்பட்டதல்ல வென்பதற்குப் போதியசான்றாகு மென்றுங் கூறினும். இன்னும் இவன் காலத்ததாயின் நமது சுவாமிகள் சென்னியபயன் குலோத்துங்கன் என்று அடையின்றிச் சொல்லியதுபோலல்லாமல் சுங்கந்தவிர்த்தான், கலிகடிந்தான் முதலிய அடைமொழிகளை வைத்தோதியிருப்பார்கள். மேலும் கலிங்கம் வென்றவர்களும் முதலாங் குலோத்துங்கனுக்கு முன்னர், வீரராஜேந்திரனும், அவன் முன்னோர்களுமாவர். ஆகையால் இதுவரையிலும் கூறியதுகொண்டு நமது சுவாமிகள் காலம் சோழ சளுக்கிகளான குலோத்துங்களை உள்ளிட்டோர் காலமன்று என்று துணிந்து கூறலாம். ஆகவே இவர்கள் காலம், முதலாங் குலோத்துங்கனுக்கு முற்பட்ட வீரராஜேந்திரனாட்சியைக் கடையெல்லையாகக் கொள்ளல்வேண்டும்.

இங்ஙனம் வீரநாராயணன், கரிகாலன், பரகால நிருபன் முதலாயபேர்களை வகித்து ராஜாதிராஜன் என மகுடஞ்சூட்டிய வீரராஜேந்திரனது காலம் கடையெல்லையாக, தலையெல்லை எதுவாயிருக்கக்கூடுமென ஆராய்வாம்.

திருநாரையூரினில் ஆதிசைவ மறையோன்பால் வையமெலாம் ஈடேறச் சைவம் வாழவந்த மாமணியாம் நம்பியாண்டார்நம்பி பனுவலுக்கு முதலாம் பெருமைபெற்ற திருமுறைகண்டது ராசராசமன்னவன் பொருட்டன்றே. அவர் தம் பெருமானை பொல்லாப்பிள்ளை யறிவுறுத்தவன்றோ நம்பி பாடியது கலித்துறையந்தாதி. இவைகொண்டன்றோ திருமுறை கண்டான் ராசராச மன்னவன் என்பதூஉம். இந்நம்பிக்குப் பிற்பட்டும் ராஜராஜமன்னவனுக்கும் பிற்பட்டுத்தானே நமது சுவாமிகள் அவைகளை மூலமாகக்கொண்டு மாக்கதையாம் திருத்தொண்டர் புராணம் பாடினார்கள். இதனையேயுள்ளடக்கித் தில்லைமூவாயிரவருள் ஒருவரான கொற்றவன் குடியாரும்,

அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்டமொன்பதாக வறுபத்தொன்ப தானடியார்கதையை—மறுவிறு நாவலூர்ச் சிவமறையோர் குலத்துவருசடையனார்மனைவியிசைஞானி வயிற்றி—லுறுதிபெற வவதரித்த வாரூரர் முன்னுளுரைசெய்த திருத்தொண்டத் தொகைப்பதிகத் தடைவே—நறைமலியும் பொழில்புடைசூழ் திருநாரை யூரி னம்பியாண் டார்திருவந் தாதிகடைப் பிடித்து,

காண்டமிரண்டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்தனர் என்றார்கள். (தொடரும்)

திருமந்திர தானம்.

(வ. வேதநாயகம்பிள்ளை M.A B.L., பி. ஸ்ரீ. ஆச்சாரியார்.)

"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்." —குறள்.

ஸ்ரீபெரும்புதூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கேசவ சோமயாஜியார் என்ற ஒருவர் இருந்தார். அவர் மனைவி பெயர் காந்திமதியம்மை. அவர்கள் இருவரும் புத்திரப்பேறில்லாமல் புத்திர காமேஷ்டி யாகம் செய்து அதன் பலனாக இராமாநுஜர் என்ற அருந்தவப் புதல்வரைப் பெற்றனர். ஸ்ரீ விசிஷ்டாத்துவித சித்தாந்தத்திற்கு வடமொழியில் பாஷ்யம் வகுத்து மெய்ஞ்ஞான பானுவாய் விளங்கின காரணத்தால் ஸ்ரீ பாஷ்யகாரர் என்று இவர் பெயர் பெறுவர். உடையவர், இளையாழ்வார், எம்பெருமானார், எதிராஜர் என்றும் இவர் அழைக்கப்படுவர்.

திருக்கோட்டியூர் என்னும் புண்ணியஸ்தலத்தில் எழுந்தருளியிருந்த காரணத்தால் திருக்கோட்டியூர்நம்பிகள் என்று அழைக்கப்பெறும் வைஷ்ணவ சமயாசாரியர் ஒருவர் தேசம் எங்கும் சித்தாந்தத்தைப் பரப்பிவரும் நாளில், இராமாநுஜர் இவரை யடைந்து தமக்குத் திருமந்திரதானஞ் செய்து இரகசிய அர்த்தங்களை வெளியிட்டுத்தரும்படி பலகாலும் வேண்டிக்கொண்டனர்.

நம்பிகள் தம் மனத்தே பின்வருமாறு ஆலோசிக்கலாயினர். "இம் மந்திரார்த்தங்களின் ஏற்றமோ என்னால் சொல்லும் தரத்ததன்று. சரணாகதனல்லாதவனுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், குருவிடம் பலவருஷம் ஊழியம் செய்யாதவனுக்கும், பகவானுடைய அவதாராதிகளில் அசூயைப் படுகிறவனுக்கும், ஒருகாலும் இந்த இரகசியங்களைச் சொல்லலாகாது என்பதன்றோ பகவானுடைய நியமனம். சிஷ்யலக்ஷ

ணம் இவரிடம் பூர்ணமாயிருக்கிறதென்று பரிசோதித்தன்றோ இவ் வுண்மைகளை வெளியிடவேண்டும்."

இவ்வாறு ஆலோசனைசெய்து இராமாநுஜரைப் பலமுறையும் பரீக்ஷித்து இவர் நாடிக்கேட்டதை அருளிச்செய்யாமலேயிருந்துவிட்டார். பின்னரும் இவர் சலியாமல் நித்தமும் இல்லங்கள் தோறும் பிச்சை யேற்று நம்பிகள் பாதாரவிந்தங்களே சரண் என்று தொண்டு பூண்டொழுகுவாராயினர். நம்பிகள் இவரிடத்துச் சிறிதும் இரக்கமில்லாதவர்போலக் காட்டி, ஸ்ரீரங்கத்திற்கு விடைகொள்ளும்படி ஆணைதந்தார். இவரும் அவ்வாறே சென்று நம்பிகளது திருவுருவைத் தம் கண்களிலும் சிந்தையிலும் தேக்கி,

"கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றிவேறோர்
இற்புறத் தவரை நாடார்."

என்பதற் கிணங்க நம்பிகள் திருவடிகளே தஞ்சம் என்றிருந்தார். இவ்வாறிருக்கும்நாளில் நம்பிகள் சிஷ்யர் ஒருவர் திருக்கோட்டியூரினின்று ஸ்ரீரங்கத்திற்கு வந்து இராமாநுஜர் நிலையைக் கண்டுணர்ந்து அவரோடு அளவளாவினர். பின்னர் அவர் தம் ஊருக்குத் திரும்பும் சமயத்தில் இவர் அவர் பாதங்களில் விழுந்து,

"பொன் னாழிக் கையார்க்குப் பூந்துழாய்முடியார்க் கிங்கு
என்னாவி ஈடழித்தல் தகவலவென் றியம்பீரே."

என்று கண்ணும் கண்ணீருமாய் முறையிட்டுக்கொண்டார்.

அவர் சென்று நம்பிகளுடைய திருவடிகளிலே இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய அவர் கேட்டு இராமாநுஜருடைய அன்பிருந்த நிலையை யுணர்ந்து அவர்க்கு அருள் செய்யுமாறு திருவுளம் பற்றினர். எனினும் முற்றும் சோதிக்க எண்ணி "ஒருமாசம் வரை உபவாசமிருந்து தண்டும் பவித்திரமுமாக வரச்சொல்லும்" என்று ஸ்ரீரங்கத்திலிருந்து திரும்பி வந்தவைஷ்ணவரையே மீண்டும் அனுப்பினர். அவர் வந்து இளையாழ்வாருக்கு நம்பிகள் திருவுள்ளத்தை அறிவித்தார். அவ்வாசகம் உரைக்கேட்ட இராமாநுஜரது திருமுகமண்ட

லத்தின் செவ்வி 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை' யென்றது.

திருக்கோட்டியூர் சென்று இளையாழ்வார் நம்பிகள் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து சௌமியநாராயணன் சந்நிதியில் உபவாசமிருந்தார். நீரற்ற குளத்தில் சூரிய கிரணங்களால் தகிக்கப்பட்டுச் சோபையிழந்த தாமரை மலரைப்போல இவரது திருமேனி யெல்லாம் பதினாறு நாள்கள் கழிவதற்கு முன்பாகவே ஒளி மழுங்கிப்போயிற்று. இட்டகால் இட்ட கைகளாகி இவர் தரைமீது கிடந்தனர்.

இதுகண்ட ஜனங்களெல்லாம் நெஞ்சங்கலங்கி "நம்பிகள், வைத்திருக்கிற பத்தியத்தைப் பார்த்தால் வைஷ்ணவசமயமே அடங்கிவிடும்போல் காண்கிறதே!" என்று ஒருவரோடொருவர் வார்த்தையாடிக்கொண்டிருந்தனர்.

நம்பிகள் திருவுள்ளத்தை இவருக்கு முன் அறிவித்த ஸ்ரீவைஷ்ணவர் மிகவும் துரிதமாகஓடி மனம் பொறுக்காமல் வாயில் அறைந்து கொண்டு நம்பிகளிடம் தாம் கண்ட கோலத்தை விவரித்தார். தம் சிஷ்யருடைய வேண்டுகோளுக்கிணங்கி அதுமுதல் இராமாநுஜருக்கு ஒரு சிறுங்கைத்தீர்த்தம் எடுத்துப் புகட்டும்படி நம்பிகள் அநுமதி கொடுத்தார். அன்று தொடங்கி இவ்வாறு தீர்த்தத்தை உட்கொண்டு இளையாழ்வார் தமது உபவாசத்தை நிறைவேற்றினர்.

பின்னர் இராமாநுஜர் ஆசிரமத்திற்குரிய தண்டையும் பவித்திரத்தையும் களைந்தெறிந்துவிட்டுத் தமது அன்பிற்குரியராய்த் தம்பக்கல் தொண்டு பூண்டொழுகிய கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் இருபக்கங்களிலும் வரச்செய்து நம்பிகள் திருமாளிகைக்கு மெள்ள மெள்ள எழுந்தருளி அவர் திருவடிகளில் வேரற்றமரம்போல் விழுந்துகிடந்தார்.

நம்பிகள் இவரை வாரியெடுத்துத் தம் திருக்கைகளால் இவரது அருமைத் திருமேனியைத்தடவி, "இளையாழ்வாரே! நீர் விரதத்தால் மிகவும் இளைத்துப் போனீர்" என்று கூறி விட்டு "நீர் ஒருவர் மாத்திரமே வரவேண்டுமென்று நாம்சொ

ல்லியிருப்பவும், இவ்விருவர்களையும் கூட்டிவந்ததற்குக் காரணம் என்ன?'' என்று வினவினர்.

''தேவரீர் அடியேனைத் தண்டும் பவித்திரமுமாக வரும்படி நியமத்தருளினீர். அடியேனும் அவ்வண்ணமே வந்துள்ளேன். அடியேன் ஆச்ரமத்தில் நிலைபெறுமாறு தண்டுபோல் உற்றவிடத்துதவும் முதலியாண்டானே தண்டமாவன். கூரத்தாழ்வானையே உசாத்துணையாகக்கொண்ட எனக்குப் பவித்திரமும் வேறுண்டோ?'' என்று கூறி,

''குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினும் ஆயினசெய்யும்
நலந்தரும் சொல்லை''

அடியேனும் உய்யும் வண்ணம் உபதேசித்தருள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

நம்பிகளும் இளையாழ்வாரைக்குளிர நோக்கி ''இம்மகாமந்திரத்தை இவர்களொழிய மற்றெவர்க்கும் புகலாதீர்'' என்று ஆக்ஞாபித்து இவரைத்தம்முடிதொட்டுச் சூளுறவு செய்யும்படி வேண்டிக்கொள்ள இவரும் அவர் அடிதொட்டுப் பிரதிக்ஞைசெய்து கொடுத்தார். அதன் பின் நம்பிகள் இவரைத் தம் வலப்பக்கத்தில் வைத்துப் பெரிய திருமந்திரார்த்தத்தை உபதேசித்தருளினர். இவரும் பசியன் சோற்றைக்கண்டுமேல் விழுந்து உண்ணுமாப்போலே நம்பிகள் அருளிய அர்த்தவிசேஷங்களைச் செவிவாயர்கப்பருகினர்.

இராமானுஜர் தமதிருப்பிடம் சென்று அன்றிரவெல்லாம் தம்மில் தாமே யோசிக்கலாயினர். தாம் நம்பிகளிடமிருந்து இந்த இரகசிய உண்மையைப் பெறும் பொருட்டு அடைந்த சிரமங்களெல்லாம் அவர் மனக்கண்ணுக்கு முன் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்தன. ''இம்மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் செப்பனிட்டமார்க்கம் அமைத்து, அதன்மேல் ரோஜா மலர்களின் தளங்கள் விரித்து, அவற்றின் மீது பனிநீர் பொழிந்து பாதையின் இருபாரிசத்திலும் வெயிலின் கொடுமைதோன்றாதபடி குளிர்தருக்கள் நிழலிடப்ப வசர்தருதலில் இவ்வீதி வழி

யே உலாவிச் சென்று அந்தமில் இன்பத்து அழிவில் செல்வத்தை அடையலாம் வாருங்கள்! என்று அறைகூவிப் பறைசாற்றினும் 'வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி' என்பதற்கிணங்க, இவ்வுலகத்தின் அநித்திய இன்பங்களில் அன்றோ அமிழ்ந்து கிடக்கும் இச்சன சமூகம்! நம்பிகள் பரீக்ஷையோ பொறுத்தற்கரிய கொடுமை வாய்ந்ததாகவும் நினைத்தற்கும் பயங்கரமாகவும் இருக்கின்றதே! இவ் அளவில்லாக் கஷ்டத்தைப் பொருட்படுத்தாது, உண்மையே விரும்புவோர் இவ்வுலகில் கோடியில் ஒருவர்கூட இருக்கமாட்டார்களே! வயலில் உழுகிறவனும், இன்பத்தில் அமிழ்ந்து அரண்மனையில் வசிப்பவனும், கல்வியின் ஒளிவீசப் பெறாத பெண்ணும் பேதையும், போர்முகத்தில் உழைப்பவனும், நெற்றி வியர்வை முத்துப்போல் நிலத்தில்விழப் பூமியின் குடர்களில் பிழைப்பின் பொருட்டுச் சுரங்கம் வைக்கும் பஞ்சைகளும், தங்கள் மனக்கொந்தளிப்பை மாற்றி ஆறுதலளிக்கும் இவ்வுண்மையை அடைந்தாலல்லவா ஆளவந்தார் உள்ளக்குறிப்புப் பலிதமாகும்'' என்று இவ்வாறு சிந்தனைசெய்து எதிராஜரும் கங்குலின் எல்லை காண்பாராயினர்.

சூரியோதய மாயிற்று. இராமாநுஜரும் துயில் நீத்துக் காலைக்கடன் கழித்து சௌமிய நாராயணனைச் சேவிப்பதற்குச் சென்றார். வழி யெல்லாம் ஜனத்திரள். திருவிழா ஆதலின் அடுத்த கிராமங்களிலிருந்து மைந்தரும் மகளிரும் உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்து, பூமாலைகள் புனைந்து, தாம்பூலந்தரித்து, உல்லாச உரையாடிக்கொண்டு கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தனர்.

இராமாநுஜர் தமக்கு நிற்பதற்கும் இடம் போதாதபடி பெருகிக் கொண்டிருந்த கூட்டத்தைக்கண்டு தம்மை மறந்து ஆநந்தபரவசரானார். நம்பிகள் உபதேசித்தால் உலக மெல்லாம் உய்யுந்தருணம் வாய்த்ததென்று உடல் பூரித்தார், கோபுரத்தின்மீது அதி துரிதமாக ஏறினார். நம்பிகள் திருவடியைத் தியானித்துக்கொண்டு, கண்கள் ஆநந்தபாஷ்பம் பொழிய, ஆகாயத்தைப் பிளந்து செல்லும் மகா கம்பீரமான

குரலில், ஆசாரியன் தமக்குப் பரம இரகசியமாக உபதேசித் திருந்த மறை பொருளை வெளியிட்டருளினர்.

நம்பிகள் இச் செய்தியைக் கேட்டு இவரை யழைத்து, "நாம் உம்மைப் பல்விதத்தாலும் சோதித்து ஒருவருக்கும் சொல்லலாகாதென்று நியமித்து உபதேசித்த இரகசிய உண்மையை நீர் பெருமாள் சந்நிதியில் பெருந்திரளில் நின்று கொண்டு யாவர் செவியிலும் விழும்படியாய் வெளியிட்டு, நம் மிடத்தில் செய்திருந்த சூளுறவையும் மீறினீர் என்று கேள் விப்படுகிறோமே. இது உண்மைதானு?" என்று வினவினர்.

இவர் "சுவாமி! இது உண்மைதான். அடியேன் தேவ ரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டே கூறினேன்" என்று விடைபகர்ந்தனர்.

நம்பிகள் "நமது ஆணையை மீறி ஊரவர்க் கெல்லாம்கூறி உமக்கும் என்பெற்றீர்?" என்று கோபித்தார்.

இவர் "குருவின் ஆணையைக் கடந்த அடியேனுக்கு நர கம் ஒழிய வேறில்லை" என்று நம்பிகள் திருவடிகளை நோக் கிக்கொண்டு தலை குனிந்தபடியே நின்றார்.

நம்பிகள் இவரைக் குறித்து மிகவும் இரங்கி "இதை யறிந் திருந்தும் செய்வானேன்?" என்று கேட்டருள, இவர் "அடி யேன் ஒருவன் நசித்துப் போவதற்குச் சிந்தனை செய்யவில்லை. தேவரீருடைய திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொல்லு கையாலே இவ்வாத்ம கோடிகளெல்லாம் பிழைத்துப் போ வார்கள் என்று எண்ணிச் சொன்னேன்" என்றார்.

"இவருக்கு உலகத்தாரின்மீது இருந்த அன்பு நமக்குக் கூடிற்றில்லையே!" என்று நம்பிகள் வருந்தி இவரைத் தமது மார்போடணைத்து "எம்பெருமானரே! வாரும்" என்று தழுவி "அன்று சேனசமுத்திரத்தில் அர்ச்சுனனுக்கு அருள் புரிந்த கீதாசார்யனை அவர் தாமோ நீர்!" என்றருளிச் செய்தார்.

பின்னர், தம்மனத்தே அலைவீசிப்பொங்கியெழும் உவகை கரைபுரள, தமது சித்தாந்தம் பரம வைதிக சித்தாந்தமென வழங்கப் பெற்றது. இன்று முதல் இது எம்பெருமானர்

தரிசனமாக நாடும் நகரமும் நன்கறிய விளங்கும். பரமபதநா தன் ஜீவகோடிகளுக் கெல்லாம் படைப்பினால் உடையனானன். இவரோ ஜீவகோடிகள்பால் பெருகியெழும் அன்பினால் உடையவரானார்" என்று அருளிச் செய்தார்.

தமிழகமும் ஜாதியும்.

பண்டித சுகவனம் சிவப்பிரகாசனார் எழுதியது.

(ஓர் குறிப்பின் விரிவு).

திருமா லிந்திரன் பிரம னுபமன்யன், தபந னந்தி செவ் வேளாதி, தரும முது குரவர்க்குந் தனதருளால் ஆசிரியத் தலைமை நல்கி, வருமெவர்க்கு முதற்குருவாம் சிவபிரா னாரது தெய்வத் திருத் தமிழ் வரலாற்றினையும், தமிழ்நாட்டின் ஆதிக்கிய முதலானவைகளையும், ஜாதியுற்பத்தி யாதிகளையும் உள்ளபடி உள்ளவாறு நன்குணரா மாந்தர் பலா, தம்மறிவுக் கெட்டியவாறு முறைபிறழ எழுதி வெளியிடும் உரைகளில் பொய் மெய் இவை யென்றுணர வலியில்லார், அவர்கள் உரைத்தனவெல்லாம் வேதப் பிரமாணங்களெனக் கொண்டு தாங்களு மவ்வாறே உரைப்பதுபற்றி, அறிஞரானவர் உண்மை தெரிந்து பயனடையும் வண்ணம் இக் கட்டுரை எழுந்ததா மென்க.

கிழக்கில் மேற்கில் கடலையும், வடக்கே இமயத்தினையும், தெற்கே குமரியினையும்எல்லையாகவுடைய தமிழகச் சம்பன்னர் காள்! சதுரர்காள்! சன்மார்க்கர்காள்!

நம்மை யருமையுடன் பெற்றதுந் தமிழ், நாளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்ததுந் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்துந் தமிழ், மழலைச் சொற்க ளால் நம் மைங்குரவர்களையும் மகிழ்வித்ததுந் தமிழ், நாம் குழந்தைப் பருவத்திற் பேசவாரம்பித்தபோது, முதன்முதல்

உச்சரித்ததுந் தமிழ், நம் பெற்றோர்கள் நமக்குப் பாலுடன் புகட்டியதுந் தமிழ், ஆதியில் உபதேசித்ததுந் தமிழ், நம் முன்னோர்கள் பண்டைக்காலமுதல் பேசிக்கொண்டு வந்ததுந் தமிழ் எழுதிக்கொண்டுவந்ததுந் தமிழ், நமது பந்துஜனங்களும் இஷ்ட மித்திரர்களும் பேசுவதுந்தமிழ், நமது நாடு நகரங்களுந்தமிழ், வீடுவாசல்களுந்தமிழ், வாணிப மாதிகளுந் தமிழ், இராஜாங்கவழக்கமுந் தமிழ், கொட்டுமுழக்குந் தமிழ், கோயில் குளங்களுந் தமிழ், சீருஞ் சிறப்புகளுந் தமிழ், திருவிழாச் சங்கங்களுந் தமிழ். தட்டுமுட்டுகளுந் தமிழ், சட்டிபானைகளுந் தமிழ், திக்குத்திசைகளுந் தமிழ், தெருக்கடையாதியுந் தமிழ். ஏருநுகலப்பையுந் தமிழ், கழனியும் வயலுந் தமிழ், வீட்டின் கூறுகளாகிய தலைக்கடை புறக்கடையாதியுந் தமிழ், நம தங்கங்களாகிய தலை, முகம், கண், காது, மூக்கும் நாக்குந் தமிழ், முன்னுவவெல்லாந் தமிழ், நாம் குடியிருக்கும் சிற்றூர் பேரூர் சீரூர் நேரூர், பட்டி, தொட்டி, பாக்கமாதியாம் இடப்பெயர்களுந் தமிழ். 'க, உ, ங, ச, ரு, சு, எ' ஆதி எண்கள் யாவுந் தமிழ். ஆழாக்கு, உழக்கு, குறுணி, பதக்கு, கலமாதி முகத்தளவைகளுந் தமிழ், சாண்முழமாதி நீட்டலளவைகளுந் தமிழ் பலம், வீசை, மணங்கு, துலாமாதி எடுத்தலளவையுந் தமிழ், கீழ்வாயிலக்கம் மேல்வாயிலக்கம், குழிமாற்று, சதுரவாய்ப்பாடு முதலியவுந்தமிழ், உண்ணல், உடுத்தல், உறங்குத லாதியனவுந் தமிழ். சோறு, கறி, குழம்பாதிகளுந் தமிழ். உப்பு முதலொன்பதும், பருப்புமுதற் பத்துந் தமிழ். புல், பூண்டு, செடி, கொடி, யாதியுந் தமிழ். அரும்பு, பூ, பிஞ்சு, காய், கனி, தழைதாம்பாதியுந் தமிழ். இனிப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு ஆதியறுசுவைகளுந் தமிழ். வெண்மை, பசுமையாதி நிறங்களுந் தமிழ். ஆடை, அணி, ஊர்தியாதிகளுந் தமிழ். பள்ளம், மேடு; தோப்பு, தோட்டம்; நாற்றம், மண மாதியுந் தமிழ். காசு பணமாதியுந் தமிழ்; படுக்கை, மெத்தை, கட்டில், பஞ்சணையாதி போகப் பொருள்களுந் தமிழ்; ஏடு; எழுத்து; சுவடி யாதியனவுந்தமிழ். எழுத்தும், சொல்லாம் பொருளும், யாப்பு அணியுந் தமிழ்; வேதம்; ஆகமம் மிருதி, புராண

மாதிகளுந் தமிழ். பரதங்களுந் தமிழ். மந்திரம், தந்திரம், யந்திர மாதியுந் தமிழ். நிலம் நீராதியுந் தமிழ். மலை, யாறு, குளம், குட்டைகளுந் தமிழ். காடு, வனம், சோலை யாதியுந் தமிழ். இயற்கை, செயற்கை, புணர்ப்பு, பிரிப்பு, வேற்றுமை யாதியுந் தமிழ். கூட்டல், பெருக்கல், வகுத்தல், தொகுத்த லாதியுந் தமிழ். உடுக்கள், கோள், கிழமை யாதியுந் தமிழ். அறிவு, அறியாமை, உள்ளம், உணர்வாதியுந் தமிழ். நன்மை தீமை யாதியனவுந் தமிழ். உயிர்க் குணங்களுந் தமிழ். தொழி லாதியும், உவப்பு, வெறுப்பாதியுந் தமிழ். ஆண்டான், அடிமை, உலகுந் தமிழ். கடவுள், மோக்ஷம், நரகம், பாவம், புண்ணியம் யாவுந் தமிழ்.

அதான்று,

தெய்வத் தன்மை வாய்ந்ததும், அற்புதங்களைக் கொண்டுள்ளதுந் தமிழ். நந்திபகவானுடைய மாணாக்கர்களாகிய சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், சிவயோக முனிவர், பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருமூலராகிய இவ் வெண்மருக்கும் உபதேசிக்கப் பட்டதுந் தமிழ். ஆரிய பாஷையின் புராதீனத்தைப் பார்க்கிலும், மிக்குப் புராதீனத்தைக் கொண்டுள்ளதுந் தமிழ். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், பாலி, பிராகி, திமிலம் என்னும் பாஷைகளுக்குத் தாயகமாயிருப்பதுந் தமிழ். அகத்தியரும், அவர் மாணாக்கரும் இலக்கண நூலாராய்ச்சி செய்யுமுன்னரேயே, தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபுடையதுந் தமிழ். முதலா மூழிமுதல் முச்சங்கங்களைப் பெற்றுள்ளதுந் தமிழ். முத்தமிழ் வேந்தர்களையும் தன்னடிமையர்களாக்க வாக்கிக் கொண்டுள்ளதுந் தமிழ். ஆரியத்தின் உதவியை எட்டுணையும் வேண்டாது, தன்னத் தனியே தனித் தியங்கு மாற்ற லுள்ளதுந் தமிழ். ஆக்க லழித்த லாதி பஞ்ச கிருத்தியங்களை வகித்துள்ளதுந் தமிழ். அத்துவா மார்க்கம் தத்துவா மார்க்கங்களைப் போதிக்க வல்லதுந் தமிழ். வடசொற்க ளனைத்தையுந் தூரத்தே யகற்றிவிட்டுத் தனக்குத் தானே ஒப்புமையும் மேம்பாடுடையதுந் தமிழ். வேண்டுமானால், உலகத்துள்ள சகல பாஷைகளையுந் தன்னகப்

படுத்திக்கொள்ளும் சாமர்த்திய முடையதும் தமிழேயாம்!

இத்தகைய தெய்விகப் பைந்தமிழ் பரவிய இப் பரதகண்டமானது, ஒரு காலத்தில், இக்ஷ்வாகுக்குப் புத்திரனாகிய தண்டக னென்பவனுடைய ஆளுகையில் தண்டகதேச மெனும் பெயருடையதாய்த் தமிழ் நாட்டின் சகல வளங்களுடனும், ஷ்ண் மங்கல க்ஷேத்திர முடனும், பாஸ்கர க்ஷேத்திர முடனும் தமிழரொழுக்கத் துடனும், முத்திசாதனங்களுடனும், மூர்த்தி ஸ்தலதீர்த்தமுடனும் மிகவுஞ் சிறப்புற்றோங்கி யிருந்தது.

இது, இராமாயண காலத்தே, விந்திய மலைக்குத் தென் பாலும், தற்கால நைஜாம் ராஜ்யத்திற்கு வடபாலுமாய்க் கீழ் மேலாக நீண்டுகிடக்க, இதிற் கிழக்குப்பகுதி தண்டகாரணிய மென்றும், மேற்குப் பகுதி ஜனஸ்தாபன மெனவும் முறையே காடுபாதி நாடுபாதியாகி, இராவணனுடைய ஆளுகைக் குட்பட்டிருந்ததுமன்றி, முத்தமிழ் வேந்தர் மூவர் நாடுகளையும் அடுத்திருந்தது.

பின்பொரு காலத்தே, பார்க்கவ முனிவரது சாபத்தால் மண்மாரி பொழிந்தழிப்ப, எல்லா வளங்களுங் குன்றி, மக்களும், மாக்களும், மரமாதிகளும் இல்லாமல், பாழ்நிலமாகிப் பல்லாயிர வருடம்வரைப் போயிருந்தது. அங்ஙனம் பாழ்த்துப் போயிருந்த நிலையில், நந்தமிழகமானது தற்போழ்துள்ள குமரி (Cape Comorin) க்குத் தெற்கில், அநேக காவத தூரத்திற் கப்பால் பரந்துபோகலாயிற்று.

அதுபோழ்தில், மண்மாரிக்குத் தப்பிய தண்டகதேச வாசிகளில் ஒரு சிலர் தமிழ்நாட்டகத்துள்ள பச்சைமலை, பவளமலை, பன்றிமலை, குதிரைமலை, பசுமலை, மான்மலை, மயிலமலை, தலைமலை, சாலமலை, கண்மலை, யானைமலை, நாகமலை, புலிமலை, பூனைமலை, பொதிகைமலை, கொல்லிமலை, சுருளிமலை, வெண்ணெய்மலை, பாலமலை, அரவான்மலை, கோயன்மலை, வெள்ளிமலை, பொன்மலை, பனிமலை முதலான மலைப்பிரதேசங்களிலும்,

மற்றும் ஒரு சிலர் தெற்கே கடலைத்தாண்டி சுமுத்திரா, ஜாவா, இலங்கை, பர்மா, சீயம், மோரீஸ், ஆபிரிக்

காவின் தென்கோடி முதலான தீவுப்பிரதேசங்களிலும், வேறு சிலர் விந்தியத்தின் வடக்கிலுந் தெற்கிலும், தெற்கிலுள்ள மலையடிவாரங்களிலும், அங்குள்ள ஆசுரநாடு, மகதநாடு, மகதத்தின் வடக்கிலுள்ள பிரதேசமாகிய நேபாளம், நேபாளத்துக்கு மேற்கேயுள்ள பிரதேசங்களாகிய பாஞ்சாலம், குருக்ஷேத்திரம், கோசலம், சனகநாடு, அயோத்தி, கொங்கணம், மைசூர் முதலான இடங்களிற் சென்று குடியேறி, அங்குள்ளவர்களுடன் கலவாது, நம் நாட்டின் வழக்கப் பழக்கப்படி, வாழ்க்கை புரிந்துகொண்டும், அரசுபுரிந்துகொண்டும் வரலாயினர். ஆனால், தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து வந்த வேளாளர்களும், மலைவாழ்நர்களும் மாத்திரம் மண்மாரியின் கொடுமைக்கஞ்சி யோடியொளியாமல், மண்மாரி பெய்தவிடத்திலேயே தப்பிப் பிழைத்துக் கொண்டிருந்தனர். இக்காரணத்தினால்தான் வேளாளருக்குச் சுதேசிகளெனும் பொருள்படப் பதியுடையோர், முதுகுடியார், கிழார், பூணவர், பூபாலர், பூணலர் எனத் தொல்காப்பியனார் குறியீடுசெய்து வழங்கலாயினர். இவ்வாறு பல்லாயிரவருடங்கழியவும், முனிவரது சாபநிவாரண காலம் வரலும், பாழ்த்துப்போன நிலமானது நிலத்தியல்புமாறி நாளுக்குநாள் வளர்பிறைபோலத் திருந்துதலும், புல், பூண்டு, மரஞ்செடி கொடி யாதியன பல்கித் தழைத்தோங்கவே, மண்மாரிக்குப் பயந்தோடிய சிலஜனங்கள் இடையிடையே வந்து வந்து விருத்தியடைந்து காடுகள் போக்கிக் கரம்பு களைந்து திருத்திச் சிற்றூராதியன சமைத்துக் குடிவாழ்க்கைக்கும் அருக ராயினர்.

ஆகவே, செந்தமிழ் நாடுகள்: வஞ்சிநாடு, பூந்துறைநாடு, வராக்காநாடு, ஆவினன்குடிநாடு, மணநாடு, கிழங்காநாடு, பொங்கர்நாடு, நல்லூர்க்கா நாடு, கவடிக்கா நாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அறுவாவடதலைநாடு, வாழவந்திநாடு, ஆறநாடு, தட்டநாடு, கரசை நாடு, சோணாடு, பூவாணி நாடு, சேரநாடு, சேந்திநாடு, பிங்கல நாடு, காஞ்சிக் கோயி னாடு, கரு நாடு; சீதநாடு, மலைநாடு, மலையமா நாடு, ஒளிநாடு முதலாயின வுண்டாயின.

இன்னம் பலநாடுகளை உள்கொண்டவைகளாய், சிங்கள தேயம், சீனதேயம், சோனகதேயம் சாவகதேயம், துளுவ தேயம், குடக தேயம், கொங்கண தேயம், கன்னட தேயம், கொல்லதேயம், தெலுங்கதேயம், கலிங்கதேயம், வங்கதேயம், கங்க தேயம், மகததேயம், கடாரதேயம், கவுடதேயம், குசல தேயம் முதலான தேயங்களும் உண்டாயின.

செந்தமிழ் நாடாவது: வைகைக்கு வடக்கும், மருதயாற்றிற்குத் தெற்கும், கருவூருக்குக் கிழக்கும், மருவூருக்கு மேற்குமாக எல்லையுடையதாய்த் தமிழ்ச்சங்க மிருந் தாராய்ந்த விடமாம். செந்தமிழ் நாட்டுத் தெய்வம் சிவபிரானாராம். இதற்குத் திருவாசகத்தில் "தென்பாண்டி நாட்டானே" என்றிருப்பதே தக்க சான்றாம்.

மேலும், செந்தமிழ் நாட்டுத் தன்மைகளை ஆசிரியர் சேனாவரையர் உரையில் பரக்கக் காணுவதுமன்றி, வால்மீகிராமாயணம், அரண்யகாண்டம் கஅ—ஆம்-அத்தியாயத்துச் சுலோகங்களானும் தெளிவுபட விரிவா யுணரலாகும்.

இவ்வாறு நாடும்தேயமுமாகவே; யூரோப் கண்டத்திருப்பவர்களை யூரோப்பிய ரென்றும், ஆஸ்டிரேலியா கண்டத்திருப்பவர்களை ஆஸ்டிரேலிய ரென்றும், அமெரிக்கா கண்டத்திருப்பவர்களை அமெரிக்க ரென்றும், ஆப்பிரிக்காக் கண்டத்திருப்பவர்களை ஆபிரிக்க ரென்றும், ஆசியா கண்டத்திருப்பவர்களை ஆசியரென்றும் கூறுமாபோல், ஆதியில் எங்கெந்த விடத்தில் தங்கினர்களோ அந்தந்தவிடத்திற்கேற்ற பெயரினையுடையராய், அவரவர்களின் நிலச் சுதந்தரம் அவ்வரவர்கட்கே உரியதென்றும்; ஒவ்வொரு நிலத்தாரும் தத்தமக்குள் தக்காரொருவரைத் தங்களுக்குத் தலைவர் அல்லது அரசரெனக் கொண்டு, அவ்வரச ராணைக்கடங்கி வாழ்ந்து வருவதென்றும்; ஒரு நிலத்தான் மற்றொரு நிலத்தில் நீண்ட காலம் வசிக்கப் பெற்றால், அவன் பின்னர் வசித்த நிலத்தினனாகவே எண்ணப்படுவன் என்றும்; ஒரு நிலத்தாருடன் மற்றொரு நிலத்தார் கொள்கொடுத்து உறவாடி அளவளாவி வாழ்வது

வே முறைமை யெனக் கொண்டும் குறிஞ்சி நிலமாக்கள், நெய்தனில மாக்கள், மருத நிலமாக்கள், முல்லை நிலமாக்கள் என்றுரைவாராயினர்.

இந்நான்கு பிரிவினையை நந்தமிழ்நாடு உள்ளபடி கொண்டிருத்தலினாற்றான், உலகினை 'நானில' மென்றழைக்கலாயினர். எல்லா உலகும் இந்நான்கு வகுப்பில் சொல்லாமே அடங்காநிற்கும். உலகினுக்கு நானில மெனப் பெயரிட்டவர்களே தமிழராகி, அநாரியராவர், ஆவர். ஆரிய ரல்லர், அல்லர்.

குறிஞ்சி நிலம், மலையும் மலைசார்ந்த விடமுமாம். இங்குள்ள ஆண்பாலாருக்கு, மறவர், இறவுளர், குறவர் என்றும்; பெண்பாலாருக்கு மறத்தி, குறத்தி யென்றும் பெயர்களாம். ஊரின்பெயர் குறும்பொறை, சிறு குடி யென்றும். வாத்தியங்கட்குத் தொண்டகப்பறை, வெறியாட்டுப் பறை, துடி இவை பெயரென்ப. தலைவருக்குப் பொருநன், சிலம்பன் என்றும்; தலைவிக்கு, மறத்தியர், கொடிச்சியர் என்று பெயராம். இந்நில மாக்களின் தொழிலோ, தேனெடுத்தல், கிழங்ககழ்தல், குன்றமாடல், தினைக்கிளி கடிதல் முதலியனவாம். உணவுப் பொருள்கள்: தினை, மூங்கி லரிசி, கிழங்கு முதலியனவாம். தெய்வம் முருகக் கடவுள்.

நெய்த னிலம் கடலும் கடலைச் சார்ந்த விடமுமாம். ஆண்பாலாருக்குப் பரதர், நுளைபர், உமணர் என்றும்; பெண்பாலாருக்குப் பரத்தியர், நுளச்சியர் உமண்டிய ரென்றும் பெயராம். ஊர்களுக்குப் பட்டினம், சிறுகுடி, பாக்கம் என்பன பெயராயுரைப்பர். பட்டினம் என்னும் வழக்கு இப்போதைக்கு மருலிப் பட்டினம், விசாகப்பட்டினம், சென்னைப்பட்டினம் நாகப்பட்டின மென்று, நந்தமிழ்நாட்டுக் கடற்கரை யூர்கட்கு வழங்கிவரும் பெயர்களாம். தலைவராகிய அரயருக்குத் துறைவன், கொண்கன், சேர்ப்பன் என்பன பெயர்கள். வாத்தியம் மீன்கோட் பறை, நாவாய்ப் பறையாம். தொழில் மீன்விற்றல், உப்புச்செய்தல்,விற்றலாதியனவாம். தெய்வம் வருண னென்ப.

மருத நிலம்:—வயலும் வயல் சார்ந்த விடமுமாம். ஆண்பாலாருக்கு உழவர், கடையர் என்றும்; பெண்பாலாருக்கு உழத்தியர், கடைசியர் என்றும் பெயர்களாம். ஊர்களுக்குச் சிற்றூர், பேரூர், ஊர் என்று பெயராம். உணவுப்பொருள், செந்நெல், வெண்ணெல் என்பன. தொழில், நடுதல், களைகட்டல், அரிதல், கடாவிட லாதியன. தலைவர் பெயர் ஊரன், மகி

ளன், வேளாளன் என்பன. வாத்தியத்தின் பெயர் மண் முழவு, நெல்லரிக்கிணை என்பன. தெய்வம் இந்திரனும்.

முல்லை நிலம்:—காடும் காட்டைச் சார்ந்த விடமுமாம். ஆண்பாலாருக்கு ஆயன், இடையனென்றும்; பெண்பாலாருக்கு ஆய்ச்சி (ஆயத்தி) இடைச்சி யென்றும் பெயர். ஊர் பாடி என்ப. உணவுப் பொருளாவன. வரகு, சாமை யாதியன: தொழில், நிரைபாதி மேய்த்தலாம். தலைவன் பெயர், ஊரன், மகினன். வாத்தியப்பெயர், ஏறு, கோட்பறை. தெய்வம் மால்.

இந்நானில மக்களுள், முதன்மூவரும் தமிழ்நாட்டில் முற்பட்ட காலத்திலே வந்தேறியவர். ஆனால், முல்லை நிலமாக்கள் பாண்டியன் வந்தபோது கூடவந்தவரென்று சங்கமருவிய நூல்கள் கூறுவதால், இறுதியில் கூறப்பட்டவர்கள் சிறிது பிந்தி வந்தவர்கள் எனல் தேற்றம். இவ்வாயவர்கள் புராணங்களில் 'ஆபிறர்' 'ஆஹிர்' என்றழைக்கப் படுகின்றனர்.

பாலை நிலம்:—குறிஞ்சியும் முல்லையும் கலந்த தொன்றுதலால், பழந்தமிழர் அதையோர் நன்னிலமெனக் கணக்கிட்டிலர்.

மேலும், தமிழ்க்குடிகளை, வில்லவர், மீனவர் என்று வழங்குமா போல, இராஜபுதனத்திலும், கன்னட தேயத்திலும் தங்கள் குடிகளை இப்பெயர்கொண்டே அழைக்கப்படுவதால், அத்தேயங்கட்கும் தமிழ்த் தேயத்துக்கும் இருந்த பழங்கால ஒற்றுமை தெள்ளிதில் விளங்குகின்றது.

இங்ஙனம் நானில மக்கள் மருவவே, இத்தமிழகத்தே யிருந்த தொழில்பற்றிப் பழங் குடிகள் முதலாயினோர் பலரும் தோன்றலாயினர். அவர்களாவர்: போர்வீரர், கணக்காயர்* பாவாணர், நாவலர், புலவர், அமைச்சர், மருத்துவர், வள்ளுவர், வணிகர், தச்சர், கொல்லர், கம்மாளர், தொழிலாளர், கள்ளர், மறவர், வேளாளர். முதலாயினோர் என்ப.

(தொடரும்.)

---

* இம்மரபினரைக் காம்பீலிக் கருணீகர் எனவும், காவிதியர், ஒத்துரைப்போர், கணக்கர், காயக ரெனவும் வழங்குப. பிற மரபினர்க் குறித்து வழக்கி லறிதலாகும். 'காம்பீலியா' என்பது இமயகிரிமுதல் செம்பால் நதிவரையில் வியாபித்திருந்த பாஞ்சால தேசத்தில் ஒரு பிரதான பட்டணம் என்பர் ஜான் ஆண்டர்ஸன், எம். டி. அவர்கள்.

சுவாமி விவேகாநந்தரின் அருள் வாக்குகள்.

தைரியமாகவும் உறுதியாகவும் இரு. பிறகு நீ எவ்வழியைப்பற்றிச் சென்றாலும் முற்றறிவை யடைவாய். சங்கிலியின் ஒரு கணுவைப் பிடித்துக்கொண்டால், படிப்படியாய் சங்கிலி முழுதும் கைக்கு வரும். வேருக்கு நீர் வார்த்தால் மரம் முழுதும் அந்த நீரைப் பெறுகிறது; ஈஸ்வரனை யடைந்தால் எல்லாம் சித்தியாகிறது.

* * *

ஒருபுறப் பார்வையே உலகத்தை யழிக்கிறது. எல்லாப் புறங்களையும் விர்த்தி செய்யக்கூடுமானால் ஜெகத்தை நன்கு பார்க்கக்கூடும். உன்னுடைய நடக்கையை ஒருவழிப்படுத்தி அந்த நிலையில் நில். ஆரம்பத்தில் நிஷ்டையே, அதாவது ஒரே பொருளைச் சிந்தித்தலே, சரியான மார்க்கம். சிந்தித்தலும் உறுதியும் யாவற்றுக்கும் வழிகாட்டும். கோயில்களும், விதிகளும், முறைகளும். இளஞ்செடிகளைக் காக்கும் வேலிகளாகும். பிறகு செடி மரமாய் வளருவதற்கு இந்த வேலிகளை யகற்றவேண்டும். இவ்வாறே பல வேறு மதக் கோட்பாடுகளும். வேதங்களும் விதிகளும் சிறுபயிர் வளருவதற்குத் தொட்டிகள் போன்றன. செடி வளர்ந்து தொட்டியைவிட்டு நீங்க வேண்டியது அவசியம். நிஷ்டையானது சஞ்சலப்படும் ஆன்மா அதன்வழியே செல்லுவதைக் காக்கும்பொருட்டுத் தொட்டியில் செடி வைத்தலை யொக்கும்.

* * *

பரந்த சமுத்திரத்தை நோக்கு; அலையை மாத்திரம் பாராதே. எறும்புக்கும் மனிதனுக்கும் வேறுபாடில்லை. ஒரு புழுவும் மனிதனுக்குச் சகோதரமே. ஒன்று உயர்ந்ததென்றும் மற்றொன்று தாழ்ந்ததென்றும் எவ்வாறு கூறுவது? அதனதன் நிலையில் அது உயர்ந்ததே. நாம் இங்கிருப்பதுபோலவே சூரிய மண்டலத்திலும் நட்சத்திர மண்டலத்

திலும் இருக்கிறோம். ஆன்மா இடத்துக்கும் காலத்துக்கும் அதீதமானது; எங்கும் நிறைந்தது. ஈஸ்வரனைப் புகழ்கிற ஒவ்வொரு வாயும் என்னுடைய வாயே; பார்க்கிற கண்ணும் என் கண்ணே. நாம் ஒரு இடத்தில் கட்டுப்பட்டிருக்கவில்லை. சரீரம் நாமல்ல; அண்டம் முற்றிலும் நமது சரீரமாகும். மாத்திரக்கோலைக்கொண்டு நினைத்த மாத்திரத்தில் பலவிதக் காட்சிகளை உண்டாக்கும் மாந்திரிகனே நாம். வியாபித்த வலையின் நடுவே யிருந்துகொண்டு தான்விரும்பும் இடத்துக்கு ஒரு நூலைப்பற்றிச் செல்லும் சிலந்தி போல நாம் இருக்கிறோம். சிலந்திக்கு இப்போது தானிருக்குமிடமே தெரிகிறது; காலம் செல்லச் செல்ல முழுவலையும் அறிவுக்கு எட்டும். அது போலவே நாமும் இப்போது சரீரம் இருக்குமிடத்தை மட்டும் அறிகிறோம்; ஒரே வித மூளையை உபயோகிக்கக் கூடியவரா யிருக்கிறோம். நாம் விஞ்ஞானத்தை யடைந்தால் எல்லாவற்றையும் அறிவோம்; எல்லா மூளையிலும் வேலை செய்வோம். இப்போதும் நாம் அறிவைச்செலுத்திப் பார்த்தால், அதுவெகு தூரம் எட்டிப் புலனுக்கு அப்பாலும் வேலை செய்கிறது.

* * *

நாம் வாழ்வதற்கன்றி வேறொன்றுக்கும் பாடுபடவில்லை. நான் என்பதுகூட அற்றுவிட்டது. இது, சுத்தமான ஸ்படிகம் யாவற்றையும் பிரதிபிம்பித்தும் தானுகவேஇருப்பதுபோன்று. அந்த நிலைமையை அடைந்தால் பிறகு யாதொன்றும் செய்யக் கூடியதில்லை. நீ அழியாதவன் என்பதை அறி; அப்போது பயம் ஒழியும். நானும் என்பிதாவும் ஒன்றென எப்போதும் சொல்லு.

* * *

இனி வருங்காலத்தில் கிறிஸ்துக்கள் திராட்சைக்கொடியிலுள்ள பழக் குலைகள் போல் பலர் வருவர். பிறகு இந்த விளையாட்டுகள் முடிவுறும். ஒரு பானையிலுள்ள நீர் கொதிக்க ஆரம்பிக்கையில் முதலில்ஒரு குமிழியிட்டுப் பிறகுமற்றொன்றும் அதன்மேல் வேறொன்றுமாக எல்லாம் கொதித்து இறுதியில்ஆவியாகப் பரிணமிக்கிறது. புத்தரும் கிறிஸ்துவும் இவ்வுலகத்தில் தோன்றிய இரு பெருங் குமிழிகள்; மோஸஸ் ஒரு சிறு குமிழி; பெரிய பெரிய குமிழிகளும் தோன்றியிருக்கின்றன. ஒரு சமயம் எல்லாக் குமிழிகளும் மறைந்துவிடும். ஆனால் எப்போதும் புதிதாயிருக்கும் சிருஷ்டியானது கொதிப்பிற்கு வெவ்வேறு நீரைக்கொண்டு வரும்.

குமரன் துதி.

("கரும்புத் தோட்டத்திலே" என்றது போன்ற இசை.)

செல்வத்தி ருக்கும ரா — முன்பு
சீர்த்தினை காக்குங்கு றத்தியி டஞ்சென்று
நீரைய ருந்திலையோ

அன்னது போலநின் றன் — றொண்டர்
அன்புடை மெய்த்தொண்ட ரேலயற் சாதியார்
நீரருந் தாதெதன் னே

காதலொ டம்மங்கை யைக் குறக்
கன்னியென் றேகரு தாமல்க் டிமணம்
கண்டதுண் டோஇலை யோ

அப்படி யுன்னடி யார் — அயல்
ஆகுங்கு லத்தவள் என் றொதுக் காதும்
ணக்கம றுப்பதென் னே

அன்னையு மையொரு கால் — நல்ல
ஆதித்தி ராவிடப் பெண்மணி யாகவ
ளர்ந்துவி ளங்கில ளோ

அவ்வுமை யாள்கண வன் — சோம
யாஜியின் வேள்வியில் ஆதித்தி ராவிட
னாகவ ரவில்லை யோ

இச்செயல் தாம்பெரி யோர் — கண்டும்
இந்திய நாட்டினு டன்பிறந் தார்தமைச்
சென்மப்ப கைவரைப் போல்

கண்டவு டன் சினத் தால் — ஒரு
காதங்க ழிந்துவி லகென்று திட்டிய
தட்டிவெ ருட்டிடு வார்

ஆலய வாயிலிலே — வரின்
அஞ்சிக டுங்கவெ திர்த்தடித் தேசுவர்
வீதிக டைகளி லே

கண்டுவிட் டாலவ ரைப்—பல
கற்களு மண்ணுக்கை யாலெறிந் தோச்சிம
ருட்டிம கிழ்ந்திடு வார்

நீர்க்கரை ஓரத்தி லே — அந்த
நேரிழை யார்குடங் கொண்டுவந் தாலதை
ஆயிரந் துண்டென வே

அடித்து டைத்திடு வார்—புகை
எய்ந்திடும் வண்டியில் ஏறவந் தாலுயிர்
எங்கப்பு டைத்திடு வார்

என்னசொல் வேனட டா — இந்த
ஏழையர் துன்பங்க ளென்றுதொ லைந்திடும்
என்றுனை யேதொழு வேன்

பாரத சோதரர் காள் — இந்தப்
பாடவர் தம்மைப்ப டுத்திடி னுங்களுக்
கீசனெவ் வாறருள் வான்

நீர்கெனி யாலினு றுந் துன்ப
நீக்கமு யல்வதும் வெள்ளையர் தம்மைப்ப
ழிப்பது மட்டுமன் றே

உங்களி டத்திருக் குங் — குறை
ஒவ்வொன்று நீக்கிப்பு றத்தவர் தங்குறை
தீர்க்கமு யன்றனி ரேல்

அன்னிய ரும்பணி வார்—அன்றி
ஆறுமு கன்கும ரன்குகன் றண்ணளி
தேடிநம் பால்வ ருமே.

பு. கிருஷ்ணசாமி.

பத்திரிகை ஆராய்ச்சி.

ஜுலைமாதத்திய 'ஹெல்த்' பத்திரிகையில் மாமிச உணவையும் மரக்கறி உணவையும் சீர்தூக்கிப் பின்னையதே மனித சரீர போஷணைக்குச் சிலாக்கியமென நன்கு நிரூபிக்கப்பெற்றிருக்கின்றது. இவ்விஷயத்தைப் பல மேதாவிகளும் ஆராய்ந்து மரக்கறி உணவையே பாராட்டியிருக்கின்றனர். 'ஹெல்த்' கூறும் சில நியாயங்களை இங்குக் குறிப்பிடுவாம்:—

மரக்கறிகளில் ஆகாரத்துக்குரிய சகல விதமான தாதுக்களும் இருக்கின்றன. மரக்கறிகள் பலவிதமாய்க்கூட்டி உபயோகிக்கப்படுவதால் மாம்ச உணவைவிட மிகுந்தபோஷணையைத்தாத்தக்கனவாயிருக்கின்றன. கடலை, மொச்சை முதலிய கோதுத் தானியங்களில் மாமிசத்தைவிட அதிகமாக இரத்தவிர்த்தி செய்யக்கூடிய தாதுக்கள் பொதிந்து கிடக்கின்றனவென்று அநேக வைத்திய நிபுணர் ஆராய்ந்தறிந்திருக்கின்றனர். கோதுமை, வால்கோதுமை, சோளம் முதலிய தானியங்களில் முன்கூறப்பட்டவைகளில் பாதிதான் இரத்த விர்த்திக் காதாரமான பொருள்கள் இருக்கின்றனவாம். ஆனால் உருளைக்கிழங்கு, சவ்வரிசி (பிரின் அரிசி) நெல் அரிசி ஆகிய இவற்றில் மாமிசத்தைப்போல இரண்டு மூன்று பங்கு இரத்தவிர்த்திக் கேதுவான தாதுக்கள் உள்ளனவாம. ஆசியர்கள், முக்கியமாய் இந்தியர்கள், நெல்லரிசியினாலும் மரக்கறிகளினாலும் ஜீவிக்கிறார்கள். பெரும்பாலும் மரக்கறிகளையே புசித்துவரும் துருக்கியருக்கு இணையாகத் தேகபலத்தில் யாரையும் கூறமுடியாது. கருநாடக ஆங்கில யுத்தத்தின்போது கிளைவின் கீழிருந்த இந்திய சிப்பாய்கள் அரிசிக்கஞ்சியை மட்டும் அருந்திக்கொண்டு மாமிசமுதலிய மற்றஆகாரங்களை ஐரோப்பிய வீரருக்குக் கொடுத்துவிட்டபோதிலும், பின்னவர்களைவிட முன்னவர்களே அதிக கஷ்டத்தைச் சகித்துக்கொள்ளக் கூடியவராயிருந்தனராம். மாமிச உணவினால் சரீரத்துக்காவது மூளைக்காவது எவ்வித பயனுமிருப்பதாகத் தெரியவில்லை. பிராணிகளின் மாமிசம் அவ்வப் பிராணிக்குரிய நோயினால் அடிக்கடி பீடிக்கப்படுகிறது. மரக்கறிகளினால் சரீரம் பரிசுத்த மடைகிறதுமன்றி அதன் தோற்றமும் விர்த்தியடைந்து சரீரத்திலுண்டாகும் புண்புரைகள் திரைகள்

யாவும் மாறுகின்றன. இரத்தத்தில் உள்ள சிவப்பு நிறம் அதிகரிக்கின்றது. குடலினுள் அழுகிக் கெட்டுப்போகும்தன்மை குறைகின்றது. வாதரோகங்கள் வரா. மனம் பரிசுத்தமடைகிறது. ஒழுக்கம் சத்வகுண முடையதாகிறது. சிறு குடல்களுக்கு வேலை குறைகிறது. நெஞ்சுப்பஞ்வு குறைகிறது. மற்ற நோய்களும் அதிகமாய் அணுகா.

சுருங்கச் சொல்லுங்கால் உணவினால் எய்தும் பலன்களாகிய தசைவளர்த்தல், உஷ்ணத்தைக் காத்தல், வேலைசெய்யப் போதிய சக்தி கொடுத்தல் ஆகிய மூன்று காரியங்களும், மாமிச உணவின் தீமைகளின்றி, மரக்கறி உணவினாலேயே பெறக்கூடியன வென்பது திண்ணம்.

* * *

வடஇந்தியாவில் போபால் நாட்டு பீகம் ராணியார் தமது நாட்டில் வருஷத்தில் 5 லட்சம் ரூபா வருமானம் தரக்கூடிய குடிவகையை நிறுத்திவிட்டார். பாவநகர் நாட்டிலும் 1922ம் ஆண்டுமுதல் குடிவகையின்விற்பனையைத் தடுத்துவிட்டார்கள். அதனையடுத்துள்ள பாலிடானா நாட்டிலும் அவ்விதமே செய்திருக்கின்றனர். பரோடாவிலோ அரசாங்கத்தார் இவ்விஷயத்தை ஸ்தல ஸ்தாபனங்களின் அபிப்பிராயப்படி செய்ய விட்டுவிட்டனர். பிரிட்டிஷ் இந்தியாவில்

> பேஹார் ஒரிஸா மாகாண அரசாங்கத்தினர் தங்கள் மாகாணத்தில் மது விற்பனையைத் தடுத்ததற்காகப் போற்றப்படவேண்டும். அவர்கள் செய்த தீர்மானத்தால் வருமானம் குறையுமென்றாலும் அது புத்திசாலித்தனமானதே. குடிவகை விற்கப்படாததால் ஒரு மனிதனாவது அதன் தீமையினின்றும் விடுதலை யடைவானானால் அந்தத் தீர்மானம் நியாயமானதே. குடிவகை விற்பனையினால் ஒரு அரசாங்கத்தார் தமது வரவு செலவை நேர்செய்துகொள்ள முயற்சிப்பதென்றால் அதனால் நேரும் தீமைகளுக்கு எத்தனைகுடிஜனங்கள் உள்ளாகின்றனர் என்பதை அந்தந்த அரசாங்கத்தாரும் ஆலோசிக்கக் கடமைப்பட்டவராவர்.

என்று மாடர்ன் ரிவ்யூ எழுதுகிறது. பேஹார் ஒரிஸா மாகாணத்தை மற்றெல்லா மாகாணங்களும் பின்பற்றினால்எவ்வளவு நிலாக்கியமாகும்?

சதங்கையொலி.

வாழ்த்துகிறோம்.

இந்திய தேசத்தின் வடமேற்கு மூலையில் தனி யரசாண்டுகொண்டிருக்கிற ஆப்கனிஸ்டான் அரசரான அமீர் அமனுல்லாகான் அவர்கள் "நேர்த்தியான துணிகள் நமது நாட்டில் உற்பத்தியாகிற பரியந்தம் முரட்டுத்துணிகளா யிருந்தாலும் சுதேசித் துணிகளைத்தான் உபயோகிக்கவேண்டும்" என்று சொல்லுகிறார். இதனைக் கேட்கும்போது பழய சேர சோழ பாண்டியரின் ஆட்சிமுறை நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. சில நாட்களுக்கு முன் பசு வதை கூடாதென்று ஒரு உத்தரவைச் செய்து அதனை நிறுத்தினர். இந்த அரசர் அமனுல்லாகான் தற்கால இயக்கங்களைக் கவனித்து உண்மை யுணர்ந்து நேரியவழிகளில் தமது ஆட்சியைச் செலுத்துகின்றார். இவரையும் இவரது ஆட்சியையும் வாழ்த்துகிறோம்.

திருவிழாக்கள்.

நமது தமிழ்நாட்டில் கோவில்கள் ஏராளமாக விருக்கின்றன. அவைகளுட் பல கோவில்களில் திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன. காலையிலும் மாலையிலும் பஞ்ச முகூர்த்தங்களையும் எழுந்தருளுவிக்கின்றனர். அங்கு வரும் மக்களில் பக்தியுள்ள சிலர் தவிர ஏனைய பெரும்பான்மையோர் அலங்காரத்தையும் நகைகளையும் மேளம் முதலிய வாத்தியங்களையும் தாஸி ஆட்டத்தையும் கண்டுகளித்துச் சென்றுவிடுகின்றனர். திருவிழா நடத்துவதின் பயனை அவ்வளவாக இம்முறையில் நடைபெறும் உற்சவங்களாற் பெறமுடியவில்லை. ஆனால் அடியார்களின் திருவிழாக்களால் மக்கள் பெரும்பயனடைகின்றனர். இன்னும் அவர்களின் அரிய சரித்திரங்களைத் தொடர்ந்து உற்சவமாக நடத்தி அவர்களின் அற்புதச் செயல்களையும் இறைவன் திருவருளையும் திருவிளையாடல்களையும் விளக்கமுற உணர்த்தும்போது பெரும் பயன் விளைகின்றது. இதற்கு உதாரணமாக மதுரை பிட்டுத்திருவிழா, திருஅம்பர்மாகாளம் சோமயாஜிமாற நாயனர் யாகமஹோற்சவம், காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் உற்சவம், சீகாழி ஞானப்பால் உற்சவம், காரைக்கால் மாம்பழத்திருவிழா ஆதியவற்றை ஞாபகப்படுத்தலாம் தமிழ்நாடெங்கும் அடியார்களின் திருவிழாக்கள் நடைபெறுமாறு சைவப்பெருமக்கள் முயல்வார்களாக. இதைப்பற்றிச் சமயம் வாய்க்கும்போது விரிவாக எழுதுவோம்.

பட்டினத்தடிகள் உற்சவம்.

சைவசமயத் தெய்வத்துறவியாகிய பட்டினத்தடிகளது திருவிழா அவாது வளம்புகார்ப்பதியில் (காவிரிப்பூம் பட்டினம்) நடைபெறுகின்றது. பல்லவனீச்சுரம் ஆலயத்தில் பத்துநாள் உற்சவம் கொண்டாடப்படுகிறது. அடிகளது சரித்திர ஆரம்பம்முதல் முழு நிகழ்ச்சிகளும் தத்ரூபமாக நடத்தப்படுகின்றன. சென்ற இரண்டு வருடங்களாக நாட்டுக்கோட்டையார் மிகுதியாகச் சென்றுவருகின்றனர். அதன் பயனாகத் திருவிழா மிகச் சிறப்புற நடைபெறுகின்றது. நாட்டுக்கோட்டைப் பெண்மக்கள் மிகுதியும் அபிமானங்கொண்டு ஏராளமான பொருளுதவி செய்ய முன்வந்திருக்கின்றனர். ஆங்குள்ள மிராசுதார்களும் ஏனைய தொழிலாளர்களும் பொதுஜனங்களும் மிகுந்த பக்திகொண்டு உதவிபுரிந்து வருகின்றனர். அங்குள்ள அறுபத்துமூவர் குருபூஜை மடம் சுவாமிகள் இவ்வுற்சவப்பொறுப்பு முழுமையும் ஏற்று நடத்திவருகிறார்கள். இத்திருவிழா ஆடிமாதத்தில் நடைபெறுகிறது. இது சைவத் திருவாளர் யாவரும் சென்று பார்க்கவேண்டிய திருவிழாவாகுமென்று நாம் கூறவிரும்புகிறோம்.

பங்கஜம் திரும்பினாள்.

பங்கஜம் என்னும் இந்த யுவதியை ஆங்கில ஜனனபாதிரிமார் பெற்றோரறியாமல் மோசடியாக எடுத்துக்கொண்டு போனவிஷயம் சென்ற மாதத்தில் கூறப்பட்டது. அக்கன்னிகையைப் பாளையங்கோட்டைக்குக் கொண்டுபோய்க் கன்னிமடத்தில் வைத்திருந்தார்கள். சென்னை பிரமசமாஜத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமதி அலர்மேல் மங்கையம்மாள் பாளையங்கோட்டை சென்று அப்பெண்ணைக் கண்டு சில விஷயங்கள் பேசிவிட்டுத் திரும்பினர். அதன்மேல் அம்மங்கையின் தாயும் தங்கையும் திருநெல்வேலியில் போயிருந்துகொண்டு அப்பெண் தன்னைச் சிறையினின்றும் வெளிப்படுத்திவிட்டால் வீட்டுக்கு வந்துவிடுவதாகத் தெரிவித்ததின்மேல் அவளது சகோதரர் கௌரிசங்கர் என்பாரைத் தருவித்துப் பெண்ணை பாதிரிமார் அறியுமுன்னர் சென்னைக்கு அழைத்து வந்துவிட்டனர். இவ்விஷயம் இவ்வளவோடு முடிந்திருந்தால் ருசிகரமாயிராதென்று கருதிப்போலும் பாதிரிமார், பெண்ணின் தமையன் தமக்கையாகிய இருவர் பேரிலும் மிஷன் கட்டிடத்தன் ஆக்கிரமித்துப் பிரவேசம் செய்ததற்காக வழக்குத் தொடுத்து வாரண்டு பிறப்பித்தனர். இருவரும் சென்னையில் கைது செய்யப்பட்டுத் தமக்கைமாத்திரம் ஜாமீன்பேரில் விடப்பட்டார். தமையனைத் திருநெல்வேலி கொண்டுபோய் அங்கு சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் முன்னிலையில் விசாரணை நடக்கிறது.

மதிப்புரை.

மங்கம்மாள்:—இது மதுரை ஸ்ரீமான் எஸ் கூடலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட ஒரு நாவல். இது நல்ல வசனநடையும் கதைப்போக்குமுள்ள நாவல். படிக்கவிரும்பும் அன்பர்கள் இந்த நாவலைப்படிப்பதால் நன்மை அடைவார்கள். இதன் விலை ரூ க–அ–0. கிடைக்குமிடம்:- எஸ். கூடலிங்கம் புத்தகசாலை, மதுரை.

பக்திரசக் கீர்த்தனை:—இது கலியுக வரதரான ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் மீது பாடப்பெற்ற கீர்த்தனத்திரட்டாகும். இதனை இயற்றியவர் வேவுப்பட்டி திருவாளர் லெ.பெரி. லெட்சுமணன்செட்டியாரவர்களாவர். தமிழ்நாட்டுத் தெய்வமான குமாரக்கடவுள் மீது தமக்கெழுந்த பக்தியினால் பாடப்பெற்ற இந்நூலை நாம் பாராட்டுகிறோம். இதிற் காணப்படும் சிறு பிழைகளை அடுத்த பதிப்பில் திருத்துவார்களென்று நம்புகின்றோம். இதன் விலை ஆறணா. கிடைக்குமிடம்:—பெரி, லெ. லெட்சுமணன் செட்டியார், வேகுப்பட்டி.

விஷய ரசமஞ்சரி:—இதன் ஆசிரியர் திருவாளர் ச. தா. மூர்த்திமுதலியாரவர்களாவர். பல சந்தர்ப்பங்களில் பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட தனித்தனியான எ0 சிறு கட்டுரைகளைக் கொண்ட இப்புத்தகம் நன்றாகவிருக்கிறது. பள்ளிப்பிள்ளைகட்குப் பெரிதும் பயன்படுமென்றெண்ணுகிறோம். நூற்கருத்துகளையும் அநுபவங்களையும் பெய்தெழுதப்பட்டிருப்பதால் இப்புத்தகம் படிப்பவர்களுக்கு நல்ல பயனையளிக்கும். விலை சிறிது குறைக்கப்பட்டால் சிறுவர்கள் வாங்கிப் படிப்பதற்கு உபகாரமாகவிருக்கும். இதன் விலை ரூபாயொன்று. கிடைக்குமிடம்:—நவீனகதா புத்தகசாலை 121, 122 மங்கமாரி வீதி, ரங்கூன்.

ஹெல்த் "Health":—இது சென்னையினின்றும் வெளியாகும் ஒரு சிறந்த ஆங்கிலப் பத்திரிகை. சென்னைச் சட்டசபையில் சுகாதாரஸ்தானத்தில் அங்கத்தினராகவிருக்கிற சிறந்த டாக்டரான ஸ்ரீமான் யூ. ராமராவ்அவர்கள் இதன் ஆசிரியராவர். இதில் மனிதருக்கின்றியமையாத சிறந்த பல விஷயங்கள் சிறுசிறு கட்டுரைகளாகவும் குறிப்புகளாகவும் வெளிவருகின்றன. சித்திரப்படங்களும் திகழுகின்றன. இது சுகத்தை விரும்பும் ஆங்கிலங்கற்ற யாவரும் படிக்கத்தக்க பத்திரிகையாகும். வருஷசந்தா ஒன்றரைரூபா. விலாசம்:—The Manager 'Health' Thambu Chotti St; Madras.

புகழேந்திப்புலவர்:—நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடி நன்னூட்கவிதைக் கழகத்தின் மிக்க கவிராஜரான புகழேந்தியாரது சரித்திரத்தை இது கூறுகின்றது. இதனை முத்தியால் பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திருவாளர் எஸ். எஸ். அருணகிரி நாதன அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆங்காங்கே முன்னர் வெளிவந்த சரித்திரங்களையும் கன்ன பரம்பரைக் கதைகளையும்தொகுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இடையிடையே சந்தர்ப்பம் நோக்கி அவைகளை ஆசிரியர் விரித்துச் செல்கின்றார். வனப்புள்ள வசனநடையில் அமைந்திருக்கிறது. இதன் விலை அணு பத்து. விலாசம்:—The Madras Premier Co., 64, Ramaswamy Street, G. T. Madras.

சருவஞானோத்தர ஆகமம்:—இதன் ஞானபாதம் முன்னரே தமிழ்ச் செய்யுளாகப் பாடப்பட்டுள்ளது. அதற்குத் தற்போது தேவகோட்டையிலிருக்கும் சைவத் திருவாளர் பொ. முத்தையபிள்ளை யவர்கள் ஒரு விருத்தியுரை யெழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வரிய புத்தகம் நமது பார்வைக்குவரப்பெற்றோம். இவ்வாகமம் மற்றஆகமங்களைப் போலாது இறைவனுடைய சொரூப நிலையைச் சிவமெனவும் தடத்த நிலையைப் பதியெனவும் வைத்துப் பொருள் நான்கென்று கூறுகிறது. இந்நூலின் பெருமையை ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் சிவஞான பாஷ்யத்தில் புகழ்ந்தோதி யிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் மூலம் யாராலியற்றப்பட்டதென்பது தெரியவில்லை. பாக்கள் அழகு பெற வமைந்திருக்கின்றன. இவ்வரிய நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளுக்கும் அவதாரிகை பதவுரை பொழிப்புரை கருத்துரை விசேடவுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூலும் இவ்வுரையும் சைவத் திருவாளர்கட்கு வைப்புநிதியாகும். இப்புத்தகத்தில் மூலசுலோகமுடசேர்க்கப்பட்டிருக்கிறது. சித்தத்தைச் சிவன்பால் வைத்து அகத்தும் புறத்தும் சிவபூசை செய்து விளங்கும் நமது ஸ்ரீசொக்கலிங்க ஐயா அவர்களது பரிசோதனையை இவ்வுரை பெற்றிருப்பது சிறப்புடையதாகும். சைவ சமயவளர்ச்சிக்கு உதவிபுரிவதைக் குலதருமமாகக் கொண்ட ஸ்ரீமான்கள் அரு.சோம,மெ.அரு நா.,மெ.சித.அவர்களின் பொருளுதவிகொண்டு இந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது. இதுபோன்ற நூல்களை வெளியிட்டுவரும் திருவாளர் முத்தையபிள்ளையவர்கள் முயற்சிக்கு அன்பர்கள் நன்கு உதவிபுரிந்து ஊக்கமூட்டுவார்களாக. அழகான கிளேஸ்காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா ஒன்றரை. கிடைக்குமிடம்:—பொ. முத்தைய பிள்ளை அவர்கள் சிவாகமசித்தாந்த பரிபாலனசங்க சித்தாந்த சாத்திர போதகாசிரியர், தேவகோட்டை.

உ
சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை. ௨	காரைக்குடி உருத்திரோற்காரி ௵ புரட்டாசி௴	மணி ௬.

வணக்கம்.

முருகக்கடவுள்.

ஆனைமுக வர்க்கு நேரிளைய கர்த்த
ஆறுமுக முற்ற அழகோனே
ஆதியா னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா
தானவர்கு லத்தை வேல்கொடுது ணித்த
சால்சதுர்மி குத்த திறல்வீரா
தாளிணைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடுசி றக்க அருள்வாயே
வானெழுபு விக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கும் அறியாதாய்
மாமதுரை சொக்கர் மாதுமைக ளிக்க
மாமயில்ந டத்து முருகோனே
தேனெழுபு னத்தில் மான்விழிகு றத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா
தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தை
நீவிமகிழ் வித்த பெருமாளே

—அருணகிரிநாதர்.

கலைமகள்.

அன்பர்பா னீங்காவென் அம்மையே தாமரைமேல்
பொன்பொருவு மேனியயன் பூவில்—மன்பெரிய
வாக்கிறைவி நின்றுள் மலர்ச்சரணம் போந்தேனைக்
காக்கக் கடனுனக்கே காண்.

—இராமலிங்கசுவாமிகள்.

தென்னாட்டுப் பாளையக்காரர்.

[௨௫௩-ம் பக்கத் தொடர்ச்சி.]

நாகலாபுரம் கோட்டை பிடிபட்டதன்மேல் அவ்விடம் பாளையக்காரன் ஆங்கிலதளகர்த்தரிடம் வந்து சரண்புகுந்தான். இந்தப் பாளையக்காரன் இராமநாதபுரம் நாட்டில் கொள்ளை கொலை முதலிய கொடுஞ்செயல்களை நடத்திவந்ததால் அவனைச் சிறைசெய்து மூன்று நாட்களின் பின் அவன் தம்பியையும் பிடித்துவந்து வைத்துக்கொண்டு தன்னுடன் கூடவிருந்த மற்றப் பாளையக்காரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இவ்விருவரும் செய்துவந்த கொடுஞ்செயல்களையும் அதனால் இவர்களுக்குக் கொலைத்தண்டனை விதிப்பது நியாயமென்பதையும், ஆனால் கம்பெனியாருக்கு அடங்கி நடந்துகொண்ட பாளையக்காரர்களும் மற்றோரும் அஞ்சவேண்டியதில்லை என்பதையும், ஜெனரல் பானர்மான் எடுத்து விளக்கினார். பிறகு நாகலாபுரம் பாளையக்காரனது தம்பி சவுந்தரபாண்டிய நாயக்கனை அவன் கொள்ளையடித்த இராமநாதபுரம் நாட்டைச் சேர்ந்த கோபாலபுரம் என்னும் கிராமத்தில் தூக்கிட்டுக்கொல்லும்படி ஏற்பாடு செய்தார். கட்டபொம்மநாயக்கனைப் பிடித்து வைத்திருப்பதாகவும் அவனை என்னசெய்வதென்று அறிவிக்கும்படியும் புதுக்கோட்டைத்தொண்டமானிடமிருந்து கலெக்டர் லூஷிங்டனுக்குக் கடிதம்வந்ததாகத் தெரிந்ததின்மேல் கட்டபொம்மநாயக்கனைக் கைதியாக மதுரைக்கு அனுப்புவித்து அவ்விடத்திலுள்ள ஆங்கில தளகர்த்தனிடம் ஒப்புவிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டபொம்மநாயக்கனுடன் அவன் தம்பி ஊமையன் என்னும் குமாரசாமிநாயக்கன் உள்ளிட்டஆறுபேர் அவனுக்கு நெருங்கிய சுற்றத்தாரும் கொண்டுவரப்பட்டனர். நாகலாபுரத்திலிருந்து ஜெனரல் பானர்மான் தனது படையில் சிறு பகுதியை மதுரைக்கு அனுப்பிக் கட்டபொம்மநாயக்கன் முதலியோரை அழைத்துவரும்படி செய்தார். அதன்மேல் அரசாங்கத்தாரின் நடவடிக்கைகளைப் பகிரங்கமாய் அறிவிக்

கும்பொருட்டு எல்லா முக்கிய பாளையக்காரரையும் தருவித்து வைத்துக்கொண்டு கட்டபொம்மநாயக்கனை எல்லோரின் முன்னிலையில் நிறுத்தி அவனிடமிருந்து வாக்குமூலம் வாங்கப்பட்டது. தான் கிஸ்தி செலுத்துவதை நிறுத்திக்கொண்டதையும் கலெக்டர் ஜாக்ஷன் உத்தரவுப்படி அவரிடம் படைத்துணையின்றித் தனியேபோய் ஆஜராக மறுத்துவிட்டதையும்மேஜர் பானர்மான் உத்தரவுப்படியும் அவரிடம் வந்து ஆஜராகாமலிருந்ததையும் கம்பெனியின் ஆணையைமீறிச் சிவகிரிபாளையக்காரருக்கு விரோதமாய் அவன்மகனுக்கும் மாப்பிள்ளை வன்னியனுக்கும் உதவியாகப் படைசேர்த்து அனுப்பியதையும் கட்டபொம்மநாயக்கன் தனது வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டான். அதன்பேரில் கட்டபொம்மநாயக்கனைத் தூக்கிட்டுக்கொல்லும்படி தீர்ப்பளிக்கப்பட்டது. இதைக்கேட்டதும் அங்குகுழுமியிருந்த பாளையக்காரர் யாவரும் திடுக்கிட்டனர். கட்டபொம்மநாயக்கன் விசாரணை செய்யப்பட்டகாலத்தில் தைரியமாகவும் சிறிதும் கலங்காமலும் இருந்ததோடு தன்னைப்பிடித்துக்கொடுப்பதில் முயற்சியெடுத்துக்கொண்ட எட்டயாபுரம் பாளையக்காரரை அடிக்கடி வெறித்துப்பார்த்துக்கொண்டும் சிவகிரி பாளையக்காரரை வெறுப்புடன் நோக்கிக்கொண்டுமிருந்தான். தீர்ப்புச்சொல்லி முடிந்ததும் வெளியே அழைத்துச் செல்லுகையில் கம்பீரமான நடையுடன் மற்றப் பாளையக்காரரை வெறுப்புடன் பார்த்துக்கொண்டு சென்றான். அவனைத்தூக்கிடப்போகையில் தன் தம்பி ஊமையனைப்பற்றி மாத்திரம் கவலைகொண்டிருந்ததாகவும் தன் கோட்டையை விட்டு ஓடிவராமல் அதனைக்காத்து நின்று உயிர்துறந்திருந்தால் சிலாக்கியமாயிருந்திருக்குமென்றும் தெரிவித்தான். கட்டபொம்மநாயக்கனைக்கயத்தாறு பழைய கோட்டைக்கருகில் ஒரு பகிரங்கமான இடத்தில் தூக்கிட்டுக்கொன்றார்கள்.

அதன்மேல் மேஜர்பானர்மான் அவ்விடத்தில் வந்திருந்த மற்ற பாளையக்காரருக்கு எச்சரிக்கை செய்துபோக விடுத்தார். பிறகு கட்டபொம்மநாயக்கனுக்கு உதவியாயிருந்த ஏழாயிரம்பண்ணை, நாகலாபுரம், கொல்லர்பட்டி, காடல்குடி, குளத்

தூர் ஆகிய ஐந்து பாளையக்காரரின் பாளையங்களையும் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தையும் பிடித்துக் கம்பெனியாருக்குச் சேர்த்துவிட்டதாகவும், சகல பாளையங்களிலுமுள்ள கோட்டைகளும் படைகளும் ஆயுதங்களும் இனி அவசியமில்லையாதலால் கோட்டைகளை இடித்துப் படைகளைக்கலைத்து ஆயுதங்களை அதற்கென நியமிக்கப்படும் கம்பெனி உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்துவிட்டு எல்லோரும் அமைதியாய்க் கிருஷித்தொழிலைக்கைக்கொள்ள வேண்டியதென்றும் மேஜர் பானர்மான் பகிரங்க அறிக்கை எழுதிச் செப்டம்பர் 27-ம் தேதி கயத்தாற்றில் போயிருந்து எல்லாப் பாளையக்காரரையும் அங்குத் தருவித்து வைத்துக்கொண்டு அந்த அறிக்கையை அவர்களுக்கு வாசித்துக்காட்டி விளக்கினர். முதன் முதலில் கட்டபொம்ம நாயக்கன் முதலியவர்களுக்கு விதித்ததண்டனை நியாயமானதென்றும், பொதுவாய்ப் பாளையக்காரர்கள் அடங்காமல் நடந்து கொள்வதால் பற்பல தீங்குகள் நேருகின்றனவென்றும் அவற்றைப் பரிகரிப்பதற்கு மார்க்கம் யாதெனில் பாளையக்காரர்கள் கயத்தாற்றில் தன்னுடன் தங்கியிருந்துகொண்டு தத்தம்நாட்டிலுள்ள கோட்டைகளை அடியோடு இடித்துவிட்டு ஆயுதங்களையும் சேகரித்து ஒப்புவிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது; அல்லது எல்லாப்பாளையக்காரரும் தன்னைச்சூழ்ந்துவர மேஜர் பானர்மான் தானே தன்படைகளுடன் நேரில் ஒவ்வொருபாளையத்துக்கும் சென்று மேற்குறித்த காரியங்களைச் செய்துமுடிக்கவேண்டியது; இவ்விருவகைகளிலும் எது பிரியமோ அதை அநுஷ்டிக்கலாமென்றும், கோட்டைகளை இடித்து ஆயுதங்களை ஒப்புவித்ததாகச் செய்திவந்தவுடன் பாளையக்காரர் தத்தம் பாளையத்துக்குத் திரும்பிப்போகலாமென்றும் வற்புறுத்திக்கூறினர். எல்லாப்பாளையக்காரரும் தாங்களாகவே குறிப்பிட்ட காரியங்களைச்செய்து முடிப்பதாக ஒப்புக்கொண்டு தாங்கள் கயத்தாற்றில் இருந்துகொண்டே தத்தம் பிரதிநிதிக்கு அரசாங்கத்தாரின் ஆணையை நிறைவேற்றும்படி உத்தரவனுப்பினர். இவ்விதம் ஒருமாதகாலத்தில் பாளையங்களில் எங்குமுள்ள ௪௨-கோட்டைகளும் இடித்துப் பாழாக்கப்பட்டொழிந்தன.

சென்னை அரசாங்கத்தார் மேஜர் பானர்மான் செய்த காரியங்களை அங்கீகரித்ததுமன்றி ஆயுதங்களைத் தாங்களாகவே கொண்டுவந்து ஒப்புவிப்போருக்குப் பரிசளிப்பதாகவும் உத்தரவு பிறப்பித்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை இடிப்பதற்கு தளகர்த்தன் பாக்ஷா என்பவனுடன் ஒருசிறுபடையும் அனுப்பப்பட்டு அந்தக்கோட்டையும் இடிபட்டது. கம்பெனிக்குச் சேர்க்கப்பட்ட ஆறுபாளையங்களிலும் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களும் வந்து சேர்ந்தன. எல்லாக்கோட்டைகளும் இடிபட்டு ஆயுதங்களும் வந்து சேர்ந்தனவென்று தெரிந்தவுடன் பாளையக்காரரை அவரவரிடத்துக்கு அனுப்புவதற்கு முன் மேஜர்பானர்மான் தான் நடத்திய காரியங்களுக்கு ஒற்றுமையாகவே இனி அரசாங்கத்தாரும் பாளையக்காரரை நடத்துவார்களென்று வற்புறுத்திக்கூறி ஒரு பகிரங்க அறிக்கையைத் தயார் செய்து ஒவ்வொரு பாளையக்காரருக்கும் ஒவ்வொரு பிரதிகொடுத்ததுமன்றி அது செப்பேட்டில் பொறித்துக் கொடுக்கப்படுமென்றும் கூறிவிடுத்தார்.

ஏழாயிரம்பண்ணை, நாகலாபுரம் பாளையக்காரர்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டனர். கொல்லர்பட்டி பாளையக்காரன் துர்ப்பலமான குருட்டு வாலிபனனபடியாலும், குளத்தூர் பாளையக்காரன் வயது சென்ற கிழவனனபடியாலும் இவ்விருவராலும் இனிக்கலகங்கள் விளைய இடமில்லையென்று தெரிந்தால் அவர்கள் அரசாங்கத்தார் உத்தரவை எதிர்பார்த்து இராமநாதபுரத்துக்கு அனுப்பப்பட்டனர். நாகலாபுரம் பாளையக்காரனின் முக்கிய மந்திரியாயிருந்த சடகோப பிள்ளையையும் சென்னைக்கு அனுப்பப்பட்டது. கொல்லர்பட்டி பாளையக்காரனுக்கு அவன் குருட்டு மைத்துனனன சௌந்தரலிங்க நாயக்கனே பிரதானியாயிருந்ததாகவும், குளத்தூர் பாளையக்காரனுக்கு அவன் மகன் சின்னவெட்டுநாயக்கனும் ஆறுமுகம்பிள்ளை என்பவனும் துர்மந்திரிகளாயிருந்ததாகவும், ஏழாயிரம்பண்ணை பாளையக்காரனுக்கு பாரதப் பெருமாள் பிள்ளையே முக்கிய காரியஸ்தனயிருந்ததாகவும் தெரியவந்ததால் இவர்களையும், சிவ

கிரிபாளையத்திலும் மற்றப்பாளையங்களிலும் நேர்ந்த கலகங்களுக்கு மாப்பிள்ளை வன்னியனை மூலகாரணனாயிருந்த படியால் அவனையும் நாட்டைவிட்டு வெளியேற்றும்படி தீர்மானம் செய்யப்பட்டது.

மேஜர் பானர்மானிடம் அகப்பட்ட கைதிகளில் பெரும்பாலார் தூத்துக்குடியில் சரணடைந்த கைதிகளுடன்பாளையங்கோட்டைச் சிறைக்கோட்டத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் தூக்கிலிடப்பட்ட கட்டபொம்மநாயக்கனது இரு சகோதரரும் முக்கியமானவர்கள்.

பின்னால் நேர்ந்த சம்பவங்கள் ஒருபுறமிருக்க, மேஜர் பானர்மன் தனது வேலைகளைச்சரிவர முடித்துவிட்டு அரசாங்கத்தாரின் அளவுகடந்த நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டு கஅ00-ம் ஆண்டு ஆரம்பத்தில் ஐரோப்பாவுக்குச் சென்றார். அவர் போயினபின் சுமார் உ-வருஷகாலம் தென்னாடு அமைதியுடன் விளங்கியது.

மேஜர் பானர்மானுக்குப் பிறகு தென்னாட்டிலுள்ள ஆங்கிலப்படைக்கு மேஜர் ராபர்ட் டூரிங் என்பவர் சின்னாளும் இவருக்குப்பின் மேஜர் கலின்மக்காலேயும் தளகர்த்தர்களாய் வநதார்கள். மக்காலே காலத்தில் பாளையங்கோட்டையிலிருந்த ஆங்கிலப்படையின் முக்கிய பகுதி திருச்சிக்குத்திரும்பியது. மிகுந்திருந்த படையிலும் ஒரு பாகம் சங்கரநயினார் கோயிலிலும் மற்றோர் பாகம் கயத்தாற்றிலும் வைக்கப்பட்டது. ஆகவே பாளையங்கோட்டையில் ஒரு சிறு படையே எஞ்சி நின்றது. கஅ00-ம் ஆண்டுமுடிவில் அரசாங்கத்தாரின் நோக்கங்கள்யாவும் நிறைவேறி, நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்பட்டு விட்டதாகவே தோற்றியது. முற்றிலும் அழிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை சின்னாட்களுக்குப்பின்வேண்டும்போது முன்போலப்பலமாய்எழும்புவதற்குத் தயாராயிருந்ததாக அரசாங்கத்தாருக்குத் தெரியவந்ததும் திகில் உண்டாயது. பின்துவிசாரித்ததில் அக்கோட்டை மற்றக்கோட்டை

களைப்போலவே இடிபட்டுப்போனது உண்மைதானென்றும் ஆனால் மண்ணாலான கோட்டைகள் முற்றிலும் அழிக்கப்பட்ட போதிலும் வெகு சீக்கிரத்தில்—ஓராயிரம் அல்லது ஈராயிரம் வேலையாட்கள் இராப்பகலாய் உற்சாகத்துடன் வேலை செய்தால் ஒருமந்திரவாதியின் மாத்திரைக்கோல் அசைப்பிலாவது போல் இரண்டொரு நாட்களில் முன்போல் எழும்பிவிடக் கூடியதுதானென்றும் துரைத்தனத்தார் அறிந்துகொண்டனர்.

பாஞ்சாலங்குறிச்சி பாளையம் ஆங்கிலக் கம்பெனியாரின் நேரான ஆட்சிக்குள் சேர்க்கப்பட்டபோதிலும் அந்தப் பாளையத்திலுள்ள குடிஜனங்கள் சிறையிலடைபட்டிருந்த கட்டபொம்மநாயக்கனது சகோதரர்களிடம் மிகுந்த அநுதாபம் காட்டி வந்ததுமன்றி அவர்களில் மூத்தோனைப் பாளையத்துக்கு உரிமையாளனாகக் கருதி அவனைக் கட்டபொம்ம நாயக்கனென்றே குறிப்பிட்டு வந்தனர். கட்டபொம்ம நாயக்கனுக்கு நெருங்கிய உறவினனாகிய சிவத்தையா என்பவன் சிறையிலடைபடாமல் வெளியே யிருந்தான். இவன் மிகுந்த தந்திரசாலியும் ஆங்கிலேயரிடம் விரோதப் பான்மையுடையவனுமாயிருந்து சிறையிலிருந்த கட்டபொம்ம நாயக்கனையும் ஏனையோரையும் விடுவித்துத் திரும்பவும் சண்டையை ஆரம்பிப்பதற்குத் தக்க சமயத்தை எதிர்நோக்கி நின்றோருக்குத் தலைமை வகித்து இருந்தான்.

கஅ௦க பிப்ரவரி உ௩ தேதி பாளையங்கோட்டையில் மக்காலேயினுடைய பங்களாவில் ஆங்கில ஸ்திரீ புருஷர்கள் சுமார் உ௦ பேர் கூடி விருந்துண்டு கொண்டிருந்தனர். அப்போது கோட்டைக்குள் சிறையிலடைபட்டிருந்த பாளையக்காரர்கள் தங்கள் காவலாளிகளையும் கோட்டை வாயிற்காப்போரையும் ஆக்கிரமித்து அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு வெளியேறி விட்டனர். அவர்கள் பிரபலமான அரசாங்கக் கைதிகளாகக் கருதப்பட்டமையால் அவர்களுக்கு விலங்கிட்டுப் பலமான காவலுமிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்களில் சிலருக்கு வைசூரி கண்டதனால் சின்னாட்களுக்கு

முன் விலங்குகள் நீக்கப்பட்டிருந்தன. அவர்கள் தப்பியோடிய அன்று மாலை அவர்களைச் சேர்ந்தவர்களிற் பலர் மாறு வேடம் பூண்டு கோட்டைக்குள் பிரவேசித்து முன்னரே ஏற்படுத்திக்கொண்ட சங்கேதப்படி குறிப்பிட்டசமயத்தில் சிறைச்சாலையின் வாயிற்கதவைப்பலாத்காரமாகத் திறந்துவிட்டார்கள். அதே சமயத்தில் வாயிலில் காவலிருந்த இருவரையும் உள்ளிருந்த கைதிகள் தாக்கினர். காவலரில் சிலர் காயப்பட்டனர். உடனே அவர்கள் கையிலிருந்த ஆயுதங்கள் பறிக்கப்பட்டன. கைதிகள் தங்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்த துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு தங்களை மீட்கவந்த உதவியாட்களுடன் கூடிக கோட்டைவாயிற் காவலாளரின்மேற் பாய்ந்து அவர்களை வீழ்த்திவிட்டு வெகு வேகமா யோடி விடிவதன் முன் ௩0 மைல் தூரமுள்ள பாஞ்சாலங்குறிச்சியை யடைந்தனர். ஓடும்போதே வழியில் பலவிடங்களில் சுமார் நூறு ஆட்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துக்கொண்டதுமன்றி ஒரு இந்தியரின் கீழிருந்த ஒரு பட்டாளம் முழுவதையும்வென்று ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் அவர்கள் தப்பியோடும் அவசரத்தில் ஆங்கிலப்படையின் பலத்தைக் குறைக்கக்கூடிய நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டனர். தளகர்த்தர் மக்காலேயின் பங்களாவில் அன்று கூடியிருந்தோரில் பாளையங்கோட்டையிலுள்ள சகல ஆங்கில அதிகாரிகளும் சைனிய உத்தியோகஸ்தரும் அடங்கியிருந்தனர். ஒரு நாயக்கரின் கீழ் ஒரு சில போர்வீரரே அந்த பங்களாவைக் காத்து நின்றனர். அந்த இடமும் கைதிகள் தப்பியோடிய வழிக்கு ஒரு மைல் தூரத்திற்குள்ளாகவே யிருந்தது. தப்பியோடியவர்கள் அந்த பங்களாவைத் தாக்க நினைத்திருந்தால அங்கிருந்தோர் யாவரும் ஒருங்கே யொழிந்திருப்பர்.

கைதிகள் தப்பியோடிய செய்தி பரவியதும் முதலில் அவர்களுடைய பலத்தை யறிந்துகொள்ளாமல் சிறு சிறு படைகள் சேர்த்து ஓடியவர்களைப் பிடிக்கும்படி அனுப்பப்பட்டது. ஆனால் அது அசாத்தியமாகியது. அப்பால் மேஜர் மக்காலே தன்வசமிருந்த படைகளையும் நவாபின் குதிரைப்

படையையும் சேர்த்துக்கொண்டு ஓடிப்போனவர்களைப் பிடிப்பதற்காகக் கயத்தாறு போனார். சங்கரநயினார்கோயிலில் மேஜர் ஷெப்பர்டு வசமிருந்த படைகளும் கயத்தாற்றுக்கு உடனே வரும்படி உத்தரவு அனுப்பப்பட்டது. எல்லாப் படைகளும் அங்கே ௯-ந் தேதி வந்து சேர்ந்தன. திருநெல்வேலியிலுள்ள ஆங்கிலப் பட்டாளத்தில் ஆதியில் இருந்த ஐரோப்பிய குதிரைப்படை நாட்டில் அமைதியுண்டாகி விட்டதாகக் காணப்பட்டதால் சில காலாட் படைகளுடன் திருச்சிக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதனால் ஆங்கிலப்படையில் ௯00 நாட்டுத் துப்பாக்கிகளும் ௪ பீரங்கிகளுமே பாக்கியிருந்தன.

பிப்ரவரி எ-ந் தேதி ஆங்கிலப்படை கயத்தாற்றை நோக்கிப் புறப்பட்டுப் பாதிதூரம் சென்றதும் அ-ந் தேதி காலையில் கயத்தாற்றுக்கு ௧௯-மைல் தூரமுள்ள கலயநல்லூரையடைந்து அவ்விடத்தில் தங்கி இளைப்பாறி உணவருந்த ஏற்பாடாயது; அச்சமயத்தில் ஆயிரம் அல்லது ஆயிரத்திருநூறு பாளையக்காரப் படைவீரர் துப்பாக்கி, வாள், ஈட்டிகளுடன் ஆங்கிலப்படைக்கு முன்பாக உயர்ந்த இடத்தில் வந்துநின்று ஆங்கிலப்படையை மூன்று புறத்தும் எதிர்த்தனர். கலயநல்லூர்க் கிராமம் ஆங்கிலப்படையின் வசமிருந்தது. அதனையும் பாளையக்கார வீரர் எதிர்த்தனர். ஒருமணி நேரத்தில் பாளையக்காரர்படை ௪0 பேர் மாண்டவர்களைப் போட்டுவிட்டுப் பின்வாங்கிற்று. ஆங்கிலப்படையில் ௯ பேர் சேதம். அன்றிரவு முழுமையும் அங்குத் தங்கி மறுநாள் அதிகாலையில் பிரயாணமாகி காலை ௯-மணிக்குப் பஞ்சாலங்குறிச்சியை யடுத்த ஒரு மைதானத்தை ஆங்கிலப்படை யடைந்தது. அங்குகண்ட காட்சி யாவரையும் பிரமிக்கச் செய்தது.

(தொடரும்.)

தமிழகமும் ஜாதியும்.

[உ௩O-ம் பக்கத்தொடர்ச்சி.]

பண்டித—சுகவனம், சிவப்பிரகாசனார் எழுதியது.

(ஓர் குறிப்பின் விரிவு.)

இவ்வாறு மாந்தர்கள் பல்கவே, இத்தமிழ் மக்களுள், மிக்குச் சிறந்த நாகரிகத்தையும், செல்வாக்கினையும் கொண்டுள்ள மருதநிலமக்களாவார், தங்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள நானில வேற்றுமையுடன்,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." என்ற

தமிழ்வேத வாக்கின்படி, அனைவரும் நற்கதிபெற்றுய்வதற் கேதுவாகிய, கோயில், கடவுள்வழிபாடாதி பல செந்தண்மை வாய்ந்த சிவபுண்ணியத் தொழில்களையே தங்கட்குற்ற தொழிலாகக் கொண்டுய்யா நின்ற அந்தணர், குருக்கள், பார்ப்பார், பட்டர், தீக்ஷிதர், ஜீயர் முதலானவர்களை முதன் மரபின ரென்றும்,

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்கால
த்ன தனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனோ"

என்ற அமைதியில், உலகத்தார் நிர்ப்பயமாக வாழுமாறு ஆளுபவர்களை அரசரென் றிரண்டா மரபின ரெனவும்,

"அறம்வழா வகை முயற்சியோ டிருநிதி யீட்டித்
திறம்வழா வகை யோர்த்தொழில் செலுத்துதல் செப்பும்
நிறம்வழா நிரைக் கணம்புரந் தளித்தலிந் நிலத்தின்
மறம் வழாதவை சியர்கள்தம் மியல்பிதே மதிப்பாய்" என்றபடி

உலகத்தார்க்கு வேண்டும் பொருள்பலவும், பூவைசியர் தனவைசியர் கோவைசியர், தொழிலால், ஈட்டி எவர்க்கும் உபகரிக்கும் வேளாளர்களை மூன்றும் மரபின ரெனவும்,

"இத்திறத்தவர் மூவரு முளமகிழ் வெய்த
அத்திறத்தவ ருந்தொழில் செய்வதே யறனும்
கைத்திறத் திவர்க் கொருவரு நிகரறுங் காவல்
வித்தகத் தனிச் சூத்திரர் தங்குல மேன்மை"

என்றுங்கு, மேற்போந்த மும்மரபினும் புரியும்உலகபரிபாலனச் செயல்களுக்கு,இன்றியமையாதுவேண்டப்படுவதான சிறப்பாதி பலவகைத் தொழில் செய்யுந் தொழிலாளர்களை நான்காம்மரபின ரெனவும் அமைத்துக் கொண்டனர்.

இவ்வாறு அமைத்துக் கொண்டதுமுதல், ஒருவர் உயர்ந்தார், மற்றவர் தாழ்ந்தா ரென்கிற வேற்றுமைப்பா டின்றி, சீனர் சைனியர், காபானியர், ஜெர்மினியர் முதலானவர்களை ஆரியாரவார், தங்களைப் பார்க்கிலும் உயர்ந்தவ ரென்றுவது, தாழ்ந்தவ ரென்றுவது எப்படிக் கருதாம லிருக்கின்றூர்களோ, அப்படியே இவர்களும், இவர்களுள் ஒருவரை உயர்ந்தா ரென்றும், மற்றொருவரைத் தாழ்ந்தா ரென்றும் திரிகரணத்தினும் எண்ணமலே இருந்துவந்தனர்.

இப்படி வரவே, முத்தமிழ் வேந்தராம் சேர சோழ, பாண்டிய ராதியோர்களின் செங்கோல் தழைக்கலாயிற்று. இம் முத்தமிழ் வேந்தர்களைப்பற்றி, பாரதம் கஅகூ-ஆம் அத்தியாயம், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்யும்போது பாண்டிய நாட்டில் மணலிபுரத்திருந்த பாண்டியன் மகளை மணந்த காதையானும்; வான்மீகி ராமாயணம், கிஷ்கிந்தா காண்டம், சக-ஆம் சருக்கம் கஉ-ஆம் சுலோகத்தானும், சேரலாத னென்னும் சேரன், பாண்டவர்க்கு விருந்திட்டா னென்னும் புறநானூற்றின் கதையானும்,

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்தபோரிற்
பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம் பாடி"

என்று வரும் பழங் காவியமாகிய சிலப்பதிகாரச் செய்யு ளடிகளானும் பரக்கக் காண்க. முத்தமிழ் வேந்தர்கள் முன்வரவே,

"சூத்திரனும் ஒழுக்கமுறின் மறையோனெனப்பான்
சூத்திர னெனப்பரன் மறையோ னொழுக்கம் விட்டால்"

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம், கருமமே கட்டளைக்கல்;" "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையால்;" "ஆக்குமறிவா னலது பிறப்பினால், மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க" என்னும் ஆன்ற அறநூல்களுக் கிணங்க, ஜாதிபேதம், வகுப்புப் பேதம் யாதொன்றுமின்றித் தென்னாட்டினில் ஒரு தனிப்பெரும் ஜாதியராயமர்ந்து, தமிழ் கலைஞானங்களாகிய மறை, சைவம், அறநூல், அகத்திணை, புறத்திணைகளிற் கூறியுள்ள ஒழுங்கின்படி நடை உடைப்பாவனை சீரும் சிறப்பும், பூசனையாதியுடன்பெற்று வாழ்வாராயினர்.

அகத்திணை: தமிழ்த் தலைவனும் தலைவியும் கூடுங்காலத்தும், பிரிந்த காலத்தும், அதன் பிற்காலத்தும் நிகழலான மணமாதிபவற்றைக் கூறுவது.

புறத்திணை: அரசருக்குரிய வெற்றி, விஜயப் பிரதாபம், அகப்பாட் டொழுக்கம், புறப்பாட் டொழுக்கம், அரசியல் அமைச்சியல் போர் வீரம் ஈகை நீதி முதலானவைகளை வியக்தமாகக் கூறவல்லது.

இங்ஙனம், சகலசம்பிரமத்துடன் தமிழர் வாழ்ந்துகொண்டு வருகையில், ஹிமாசல புத்திரியின் திருக்கலியாணத் தன்று, ஹிமயமலையைச் சார்ந்த ஆசுர நாட்டுத் திராவிடர்க ளுள்ளே அறிவு, ஆற்றலிற் சிறந்த, அகத்திய குடும்பத்தி லுதித்த பிரபல தமிழ் முனிவர், இமயத்தினின்றும் தெற்குநோக்கிப் புறப்பட்டுத் தன்னுடனே தொல்காப்பியரையும், ரிஷிக்கூட்டங்களையும், பதினெட்டு ஆரியநாட் டரசர்களையும், அந்தணர், ஒருகார் வைசியர்கள், பல்விதத் தொழிலாளர்க ளடங்கிய கஅ- கோடி ஜனங்களையும், அருவாளர்களையும் உடன் கொண்டுவந்து தண்டகவனம் புகுந்து மீதியுள்ள காடுகளைப் போக்கி, நாடுகளாக்கி, அவ்வவ்விடங்கள்தோறும் அவ்வாரியவரயர்களையுங்குடிகளையும் இருடிகளையும், தென்னாட்டு மாந்தருடன் குடியேற்றிவைத்துத் தனக்குப் பொதிகையினை ஓராச்சிரமமாகச் செய்து வைத்துக் கொண்டு, அதில் வீற்றிருக்கலாயினர். ௦

தென்னாட்டுப் பழங்குடிக ளானவர்களும் தம்மை நாடிவந்தோர்களை, ஊட்டியும் உபசரித்தும் வந்தனர். விந்திய மலைக்கு வடக்கில் போயிருந்த தமிழர்களிற் சிலர் இவ்வாரியர்களுடன் வரவும் ஆயினர்.

மேலும், இங்கு குடியேறிய ஆரியவரசர்களும் இடம் பலம் ஆளுகை முதலியன போதாமையைக்கண்டு, திராவிட சேனைகளை இங்கிதமாயும் நனினமாயும் தழுவிக்கொண்டே தென் தேயத்தில் மிகுதியாயிருந்த தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு அரசும் புரியலாயினர்.

இங்குவந்த முனிவர்களுள் சிலர், திராவிட வரசர்கள்பால் கருந்தனம் பரிதானமாப் பெற்றுக்கொண்டே, ஆரிய வரசர்களிடம், திராவிட வரசர்களது கால பலாபலன்களையும், உளவுகளையும் சொல்லிக்கொண்டே வரவுமாயினர். சிலவிருடிகள் பரம வைதீகர்களாக விளங்கி வந்தனர். ஆரியர்கள் திராவிட தேயத்தில் குடியேறின்போது அவர்கள் நாட்டுவேளாளர்கள்வந்தாரேயல்லர். இவைகட்கெல்லாம் தொல்காப்பியத்துக் கேற்பட்ட நச்சினார்க்கினியர் உரையும், தொல்காப்பியம் அகத்திணையியலில் உள்ள "கொண்டுதலை" என்னும் சூத்திர உரையுமே போதியசான்றுகளாம்.

இஃதிவ்வாறிருக்க, அகத்தியர், தமிழ்நாட்டுக் குறிஞ்சி நிலத் தெய்வமாம் குமரக்கடவுளிடம் "குமரம்" என்னு மிலக்கண பாடங்கேட்டும், சிவபெருமானிடம் தமிழ் எழுத்தால் எழுதப்பட்டு, விஷ்ணு, பார்வதி, நந்தி, சிவகணநாதர்கள், நந்திபகவான் மாணாக்கர்களாகிய சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், திருமூலர், சிவயோகமுனிவர், பதஞ்சலி, வியாக்ரபாதர்முதலானவர்களும்; திருமூலர் மாணாக்கர்களாகிய பிரமன், இந்திரன், சந்திரன், உருத்திரன், காலாங்கி முனிவர் கஞ்சமலைச் சித்தர், முதலானவர்களும் ஓதியுணர்ந்த தமிழ் வேதம், பாரமேச்சுரம், புரோர்க்கிதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோகதம் முதலான இருபத்தெட்டுக் கோடி நூறுயிரந் தமிழாகமங்களைத் தீக்கைவழியால் கேட்டும், சோடஸ தீக்கையாதியன வடைந்தும், தன்பெயரால் சிற்றகத்தியம், பேரகத்

தியம் என்னும் இலக்கணங்களை யியற்றிப் பாண்டியன் முதலானோர்கட்குக் குரவராகி, சிவாலய முனிவர் நாடோறும் பாராயணம் செய்யும் பொருட்டுத் தமிழ் மறையைத் திரட்டிக் கொடுத்தும், முதற்சங்கத்தின்கண்ணே தான்தமிழாசிரியரெனத் தலைமைபூண் டொழுகுவா ராயினர். தாமியற்றிய இலக்கணங்களிலும் "புதியன புகுதல்" என்றபடி, வடமொழி விதிகளையும் சில புகுத்துவிடலாயினர்.

தமிழில் உஅ கோடி நூறாயிர வாகமங்களிருந்ததற்குச் சான்றுகள் கீழ்வருவனவாம்.

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்;"

"அண்ண லருளால் அருளுஞ்சி வாகமம்
எண்ணி லிருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவ ரீசன் விழுப்ப முரைத்தனர்
நண்ணினின் றப்பொருள் ஏத்துவ னானே;"

"ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க" என்பவைகளே.

மகேந்திரம்: இது, தமிழோங்கி வளர்ந்து வழங்கிய, முதற்கழக மிருந்த நாட்டிலுள்ளது; இம்மலை, கபாடபுரத்திற்குத் தெற்கிலுள்ளது; முதலூழியில் கடல்கொள்ளப்பட்ட தென்ப.

அகத்தியர் தென்னாடு வந்ததற்குப் பிரமாணம்: கந்தபுராணமும் தொல்காப்பியமுமாம். அகத்தியர் சிவதீக்கை யடைந்ததற்குப்பிரமாணம் நீலகண்ட பாஷியம். அகத்தியர் குமாரக்கடவுளிடம் இலக்கணங் கேட்டதற்குப் பிரமாணம்:

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை" என்பதாதியன கண்டுதெளிக.

இதன் பின்னர், முனிக் கரசுடன் வந்த ஆரியவரசர்கள், முனிவர்கள், குடிகள் முதலானவர்கள் "அரசன் எவ்வழி யவ்வழி குடிகள்" என்பதற் கிலக்காக, தமிழ்நாட்டுப் பழக்கவழக்க நாகரிக முதலானவைகளைத் தொட்டுக்கொண்டே, கொள்வன புரிந்துகொண்டு நம் சைவ, வைஷ்ணவர்களாய் வளர்ந்தேறலாயினர்.

க. இதுகாறுங் கூறிவந்தமையால்: க. தமிழும் தமிழ்மதமும், உ. ஆரியரது சங்கல்பகாலக் கணக்கினுக்கு வெகு முற்பட்டு 'கூஅ' கோடியே 'எகூ' இலட்சத்து 'அச' ஆயிர யுகமாக மிக்குத் தொன்றுதொட்டு ஊன்றி வருகின்றதென்பதும்; ௩. தமிழ், தன்னந்தனியே தனித்தியங்கு மாற்றலுடையதென்பதும்; ச. தெய்வத்தன்மை கொண்டுள்ள தென்பதும்; ரு. தேவர்கள் பேசிவந்த தென்பதும்; சு. சைவ வைஷ்ணவ மதங்களைக்கொண்டுள்ளதென்பதும்; எ. பதினுன்கு வித்தைகளைப் பெற்றுள்ள தென்பதும்; அ. தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலைகளை நிரம்பப் பெற்றுள்ள தென்பதும்;

உ. க. தமிழ்நாட்டின் சிறப்பு, பரப்பு; உ. சாபத்தா லழிவுற்றது; ௩. அதனல் பல்வேறு இடங்களிற்சென்று குடியேறியிருந்ததென்பதும்; ச. சாப விமோசன (நிவாரண) காலத்தில் நாடு, தேசமாதியனயாவும் முன்போலவே தலையெடுத்த வென்பதும்; ரு. நானிலமானதும்; சு. தொழிலால் நாற்றிறச் சாதியேற்படுத்திக்கொண்டதும்; எ. அகத்தியருடன் முதன்முதல் ஆரியர்கள் வந்தனரென்பதும்; அ. அகத்தியர் இலக்கணங்கற்றுத் தமிழ்மறையோதி, 'ஆகமவழியாகச் சிவதீக்கைபெற்றுச் சிவாலய முனிவருக்குத் தமிழ்வேதத்தைத் திரட்டிக்கொடுத்ததும்; கூ. தமிழ் வேந்தர்கட்கு ஆசிரியராய்த் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராய் அமர்ந்திருந்தன ரென்பதும்;

௩. ஆரியர்கள் திராவிடராய், திராவிடரது நடையுடை, பாவனை, மதாநுசாரங்களைத் தழுவிக்கொண்டு, கொள்வன, கொடுப்பன புரிந்தனரென்பதும்விசதமாய்த்தெரிந்திருக்கலாம். ஆரியர்கள் இவர்கள் ஏருடையரெனப் பெயருடையவராய் காடுகளாயிருந்த விடங்களை யுழுது படைக்கால்களாக்கி, நீரைப்பாய்ச்சி, வேளாண்மை செய்கின்றவர்க ளென்றுவர். இவர்கள், பரதேச வாசிகளாகப் புறப்பட்டுப் போனவர்கள். இவர்களுட் சிலர், ஐரோப்பா முதலிய அன்னிய தேசஞ்சென்று, அந்தந்த தேச வேற்றுமைகட் கிணங்கி, அவ்வவ்வூரின் ஒழுக்கப் பழக்கங்களைப் பூண்டு, பற்பல ஜாதியாராய்ப் பிரிவினை யடையலாயினர். இதற்கத்தாட்சி, அவர்கள் பேசும்

சருவபாஷைகளும் ஆரிய பாஷையினின்று கிளைத்து வேற்றுமைப்படத் திரிந்து வருதலேயாம்.

வேறுபல கூட்டத்தார், பரதேச வாசிகளாகப் புறப்பட்டு, வட இந்தியாவின் பாகத்துள்ள நம் புழந்திராவிடர்களை யடுத்து நாளாவட்டத்தில் வட இந்தியாவின் சிற்சில பாகத்தைத் தங்கள் சொந்த ஜாதிச் சேனையைக் கொண்டே கைப்பற்றிக்கொண்டு, ஆட்சிபுரிந்து வருவாராயினர்.

இவர்கள்பாரசீகத்திலிருந்தபோது, இவர்களுக்கு கோயில் குளம், தேர், திருவிழா முதலியன கிடையாவாம். ஐம்பெரும் பூதங்களைக் கடவுளெனக் கொண்டு, வந்தனை வழிபாடு செய்து வரலாயினர். ஆனால், நம் திராவிட தேயத்துள்ளனவாகிய ஆலயங்களும், ஆலயவழிபாடுகளும் இல்லையாம். தற்போதுள்ள ஜாதிப் பிரிவினைகளும் கிடையா. நம் தேயத்துள்ள தொழில்களைக் குறித்த பிரிவினைகளைப் போலவே கொண்டிருந்தனர். வடஇந்தியாவின்பாகத்தை ஆட்சிசெய்துகொண்டிருந்த போழ்தே, தங்கள் ஜாதியாரல்லாத வேறு ஜாதியார்கள்; தங்களைக் கடவுளென் றுயர்த்திக் கூறுவதற்காகத் தங்களைச் சுரர், பூசுரர், தேவரென்றுரைக்கப் பெயர்வைத்துக் கொண்டதுமன்றித் தங்களுக்குக் கீழ்ப்படியாமலும், எதிரிகளாயும் அநாரியர்களாயுமிருந்த திராவிடர்களை—அல்லது, தமிழர்களை—க் கோபங்கொண்டபோதெல்லாம் அசுரர், இராக்ஷதர், வானரர் என் இழித்துக் கூறவும் தலைப்பட்டனர்.

மற்றும் இவர்கள் புசிக்கும் போசனத்தைத் தேவபூஜையென்றும், தமிழர்கள் புசிக்கும் சாப்பாட்டைப் போசனமென்றும் வழங்குஞ்சம்பிரதாயத்தையுங்கொண்டனர். மேலும் இவர்கள் மாட்டு, இயற்கையாயமைந்துள்ள தொழிலைப்பற்றிய பிரிவுகளால் ஏராளமாய் லாபம் வருவதைக்கண்டு, தங்களுக்கநுகூலமாகவும், பிழைப்புக்கிடமாகவும் இருக்கப் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் நிலையான ஜாதிபேதங்களையும், அவைகளைப்பற்றிய உயர்வு தாழ்வுகளையும் உண்டாக்கிக் கொண்டனர். (தொடரும்).

தம்பிரானும் தம்பிரான் தோழரும்.

(தச்சநல்லூர் இலக்குமணப்போற்றிஐயா அவர்கள் எழுதியது.)

நமது திருநாவுக்கரசு நாயனூர் "குறியும் பொல்லேன்" எனவும் "குறிக்கோள் இலாது கெட்டேன்" எனவும் தமது பாசுரங்களில் அருளிச் செய்கின்றமையால் இப்பிறவியைக் கடக்க விரும்புவோனுக்கு தான் பின்பற்றி ஒழுகுவதற்குரிய லக்ஷ்யம்வேண்டுமென்பது விளங்குகின்றது. ஆகவே நாமங்குறி கோளாகக்கொண்டு ஒழுகத் தக்கவர் நமது உபாசனமூர்த்தி யும் நமது ஆசிரியரும் ஆவர். சைவராகிய நாம் ஸ்ரீ சிவபெரு மானையே முன்மாதிரியாகக்கொண்டு ஒழுகல் வேண்டும். சிவ பெருமானது தன்மையை உள்ளவாறே உணர்ந்தாலன்றி அவர் மீது நமக்குப் பக்திஉண்டாவது அரிது. ஆதலால் அவர் தமக் குத் தோழராகக்கொண்ட ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் விஷ யத்தில் நடந்துகொண்ட மாதிரியை ஆராய்ந்தறிந்தால் சிவ பெருமான்மீது நமக்கு அன்புபெருகுமென்பதில் எட்டுணையும் ஐயமின்று. நிற்க,

நமது சைவத்தில் ஏற்பட்ட தாசமார்க்கம், புத்திரமார்க் கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய நான்கினுள் ஸ்ரீ சுந் தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானுக்கு சகமார்க்க உரிமை உடையவர் என்பது புராணசித்தம். ஆகவே திருநாவுக்கரசு திருஞானசம்பந்தர் இவர்களைவிடப் பெரிது அணுகிய உரிமை சுந்தரருக்கு சிவபிரானிடம் வாய்ந்துள்ள தென்பது உணரத் தக்கதாம். அத்தகைய சுந்தரரும் ஒழுக்கம் தவறியபொழுது பட்டபாட்டை உன்னிப்பார்க்கில் சிவபிரானது நீதி கரதலாம லகம் போல் விளங்குவதாகும்.

ஸ்ரீ சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலிநாச்சியாரை விவா கம் செய்துகொள்ள முயன்றபொழுது அந்த அம்மை ஸ்ரீசுந்த ரர் தன்னைவிட்டு அகலாதிருப்பதாக சபதம் செய்துதந்தால் தாம் உடன்படுவதாகக்கூற, சபதம் செய்துகொடுக்க ஒப்புக் கொண்ட ஸ்ரீ சுந்தரர் சிவபிரானிடம் ஆலயத்திற்குச் சென்று

அச்சபத சமயத்தில் சிவபிரானை அவ்வாலயத்தைவிட்டு மகிழ மாத்தடியில் எழுந்தருளும்படி பிரார்த்திக்க, சிவபிரானும் அவ்வாறே இணங்கிய போதிலும் தமது அன்பர் இருவருக்கும் கேடு நிகழாவண்ணம் சங்கிலிநாச்சியாருக்கு உண்மையை வெளிப்படுத்தி மகிழ மர்த்தடியிலே பிரமாணம் வாங்கிக்கொள்ளும்படி செய்த உபாயமானது மிகவும் புகழத்தக்கதாம். இம்மட்டில் ஸ்ரீ சுந்தரர் பொய்மையான சபதம் செய்ய உத்தேசித்த தோஷத்தைத் தவிர பொய்ப் பிரமாணம் செய்துகொடுக்கவில்லையென்பது உண்மயே.

ஸ்ரீ சுந்தரர் இவ் வுலக இன்பத்தைவிட பேரின்பத்தில் மிக்க நாட்டமுடையவராய பெருந் தவராதலின் திருவாரூர்ச் சிவபிரானைத் தெரிசிக்க விசேடவிருப்பமுடையவராய்த் தன்னை மறந்து திருவாரூர் எல்லையில் அடிவைக்கவும் கண் ஒளி இழக்கப்பெற்றனர். இதுவே நீதி முறைமையாம். "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற்பொருட்டு" என்றபடி நமது நண்பர் ஒழுக்கம் தவறுவதைக் கண்டபொழுது அவரது நட்புக் கெடுமோ என்று அஞ்சாமல் அவரைக் கண்டித்து நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்படி செய்வது நட்பின் இலக்கணமாகும் ஆதலால் சிவபிரான் நண்பரும் சிக்ஷகருமாதலின் ஸ்ரீ சுந்தரர் பொய்ப்பிரமாணம் செய்ய உத்தேசித்த பாவத்தை ஒழிக்கவேண்டுவது இன்றியமையாமையாகும். பாவத்தின் பயன் அனுபவித்தே தீரல்வேண்டும். சிக்ஷையின் பயன் குணப்படுதலேயாம். சிவபெருமான் சிக்ஷியாவிடில் அவரது நீதிக்கும் கருணைக்கும் இழுக்குண்டாகும். அடியார்களைக் குற்றப்படுத்திக் குணப்படுத்துவது அரன் செயல் போலும். "குற்றம் ஒன்று அடியார் இலராகில் கூடுமாறு அதனைக் கொடுப்பானை" என்று ஸ்ரீ சுந்தரரே தமது தேவாரத்தில் அருளிச் செய்திருக்கின்றனர். இதனால் ஸ்ரீ சுந்தரர் தமது குற்றத்தை ஊழ்வலிப் பயனென்றே கருதுகின்றார்போலும். கல்வியினாலோ அறிவினாலோ எத்துணை மாட்சிமை உடையவராயினும் குற்றம் செய்தபொழுது தண்டனை படைவது இயல்பேயாம். ஊழும் தான் முற்பிறப்பிற்

செய்த தனது கருமமேயன்றி வேறின்று ஊழ் என்று கூறுவது சமாதானமாக மாட்டாது. ஸ்ரீ சுந்தரரது அறிவின் மாட்சியையும் அன்பின் அழுத்தத்தையும் பாராட்டாமல் அவரது நன்மையைக்கருதி நீதிக்கு இழுக்கு வராமல் ஸ்ரீ சுந்தரரது கண்ணை இழப்பித்த கடவுளின் கருணைத்திறம் மிகவும் சிந்திக்கத் தக்கதேயாம். அன்பனது குற்றம் கண்டவிடத்து "தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால், ஒத்தாங் கொறுப்பது வேந்து" என்றபடி ஒறுப்பதில் முற்பட்ட கடவுள் அன்பரது இடுக்கண் கண்டவிடத்து "இடுக்கண் களைவதாம் நட்பு" என்றபடி முற்பட்டுப் பரவையார் ஊடலைத் தணித்து ஸ்ரீ சுந்தரருக்கு உபகரித்த முறைமையையும் ஆராய்வோம். ஸ்ரீ சுந்தரர் சங்கிலிநாச்சியாரை மணம் செய்துகொண்டதுபற்றி ஊடலடைந்திருந்த பரவை நாச்சியாரைச் சமாதானப் படுத்துமாறு சிவபிரானைச் சுந்தரர் பிரார்த்திக்க அவர் தூதுசென்று உடன்படுத்தினர் என்றால் ஸ்ரீ சிவபிரானது கருணைத்திறம் இருந்தவாறெத்துணைச் சிறப்பாம். சிவபிரான் தூதுசென்றதை பாமரர் இழிவாகக் கூறுகின்றனர். அஃது அறியாமை. பரவை நாச்சியார் தேவதாசிகள் குலத்திற் பிறந்திடினும் ஸ்ரீ சுந்தரருக்கு மணமுறைப்படி விவாகம் செய்யப்பட்ட கற்புறு மனைவியரையும் கணவரையும் கூட்டிவைத்தல் பெரியார் நண்பர்களின் கடமையாதலாலும், நமது கடவுள் தூதுசென்று உடன்படுத்தியது நமது கடவுளின் பெருந்தன்மையை விளக்குவதாகும். சிவபெருமான் பக்த பராதீனனாகி பக்தர்களைப் பயத்தாலும் நயத்தாலும் ஆண்டருளிய முறைமையை ஆராயின் அவரது நீதியின் நிலைமையும் கருணையின் கருத்தும் நன்கு புலப்படும். அவரைப் பின்பற்றி ஒழுகத்தக்க ஊக்கத்தைப் பெறுவோமாக.

எழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யென்றுமுன்னி சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழிமிசைக் கிடலடியே னருங்காணங் கரைந்துகரைந்
தூழியிலென் புகலுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே.

—இராமலிங்க சுவாமிகள்.

கூரேச விஜயம்.

—————o—————

வ. வேதநாயகம்பிள்ளை, M. A. B. L. பி. எஸ். ஆச்சாரியர்.

"காவலில் புலனைவைத்துக் கலிதனைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டுழிதர்கின்றோம் நமன் தமர் தலைகள்மீதே
மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ ! நின் நாமம் கற்ற
ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே." திருமாலை.

தலையில் சரிகைப்பாகையும், உடம்பில் முட்டளவும் தொங்கிய நீளமான அங்கியும், காலில் தொள தொளர்த்தியான நிஜாரும் தரித்து, விற்பொறித்த வெள்ளி வில்லை மாட்டிய டவாலி மார்பில் வலம்படக் கிடப்பவும், இடுப்பை ஊதா நிறமுள்ள பட்டால் சுற்றிக் கட்ட அதில் கட்டாரியும் சொருகி, நடையில் இறுமாப்பும் கண்களில் பணிவின்மையும் புலப்படுத்தி அரங்கமாநகரின் வீதிவழியே இரண்டு சேவகர்கள் நடந்து செல்கின்றனர். எதிரே வருமவர்களிடத்தில் 'இராமாநுஜர் மடம் எங்கே? எங்கே'? என்று வினவிக்கொண்டு மேன்மேலும் போகின்றனர். இவர்கள் உடையவர் மடத்தை வினவிக்கொண்டு செல்லா நிற்பதின் காரணம் விளங்காதவர்களாய் வீதியில் சென்று கொண்டிருக்கும் ஜனங்கள் தம்முள் பலவாறுகப்பேசுவாராயினர். உடையவர் மடத்தைச் சார்ந்த சிலர் துரிதமாக மடத்தை நோக்கிச் செல்கின்றனர். மடத்து வாசலில் ஏகாங்கிகளின் திரளைக் கடந்து சேவகர் வரவை மிடுக்கான நடையும் கம்பீரமான தோற்றமும் வாய்ந்த ஒரு வாலிபரிடம் சிலர் வந்து தெரிவிக்கின்றனர். சிறிதுபொழுது அவர் சித்த ஸ்வாதீனம் இழந்தவர்போல் வறிதே நின்று பெரிய நம்பியை அழைத்து வரும்படி சிலருக்கு ஆக்ஞாபிக்கின்றார்.

பெரிய நம்பியும் அவர் செல்வமகளான அத்துழாய் அம்மையும் மடத்திற்கு வந்து சேரவும், குறித்த வாலிபரும் வந்த இருவர்களும் அங்கு கூடியிருக்கும் அவர்களுக்குக் கேட்காதபடி இரண்டொரு நிமிஷப் பொழுது அந்தரங்கமாகப் பேசுகின்றனர். அவர்கள் முகத்தில் கவலையும் பரபரப்பும் புலப்

படுகின்றன. ஒருவரையொருவர் பார்க்கின்றனர்; முடிவில் அவர்கள் ஏதோ ஓர் தீர்மானத்திற்கு வந்தவர்களாகக் காணப் படுகின்றனர். மடத்தின் உள்ளிடத்தில் வடுகநம்பி உடைய வருக்கு எண்ணெய்க் காப்பிட்டு நீராட்டுகின்றனர். அரசனால் அனுப்பப்பட்ட சேவகர்கள் மடத்தின் தலைவாசலை அடைந்து அங்கு நின்றுகொண்டிருக்கும் பெரிய நம்பியிடம் 'அரசன் இராமாநுஜரை அழைத்து வரும்படி கட்டளையிட்டிருக்கின் றான்; காலந்தாழ்க்காது அவரை அழைத்துவருக' என்று கூறவும் அவர் உள்ளே சென்று சேவகர் வந்த செய்தியைத் தாங்கள் பேசி வைத்திருந்த சங்கேதப்படி கூரத்தாழ்வானுக்குச் சொன்னார். கூரேசரும் உடையவர் நீராடிக்கட் டிக்கொள்வதற்கென்று வைத்திருந்த காவி வஸ்திரத்தை எடுத்துத்தாம் அணிந்துகொண்டு தம்முடைய வெள்ளை ஆடை யைக் காவி வஸ்திரமிருந்த இடத்தில் வைத்துவிட்டுப் பெரிய நம்பியோடும் அத்துழாய் அம்மையோடும் வெளியேசென்று, சேவகர்களை நோக்கி 'அரசவைக்குப் போகலாம் வாருங்கள்' என்று கூறினர். அங்ஙனமே அவர்கள் எல்லோரும் அர சன் தலை நகரத்திற்குப் புறப்பட்டுப் போயினர். உடையவர் நீராடி ஈரம் புலர்த்தி கட்டிக்கொள்வதற்கு வைத்திருந்த காவி வஸ்திரத்தைத் தேடிப்பார்த்தார். அது இருக்கவேண்டிய இடத்தில் வெள்ளை வஸ்திரம் இருக்கக்கண்டு அருகில் நின்ற வர்களை வினவினர், அவர்கள் அரசன் சேவகர்கள் வந்து தேவரீரைக்கூட்டிக் கொண்டு வரும்படியாக அரசன் ஆணை யைக் கூரத்தாழ்வானுக்குக் கூறவும் பெரிய நம்பியும் ஆழ்வா னும் அத்துழாய் அம்மையும் அரசன் தலைநகரத்திற்குப்போயி னர் என்று உடையவருக்குத் தெரிவித்தனர். இடியேறுண்ட நாகம்போல் உடையவர் நடுநடுங்கித் தரைமீது விழுந்தார்; சில நிமிஷநேரம் பிரக்ஞை அற்றிருந்தார். 'அந்தோ! பாவியேன் பொருட்டன்றோ எனது பரமாசாரியனான பெரிய நம்பிகள் தமது விருத்தாப்பியதசையில் தம் உயிரையும் பொருட் படுத் தாது அரசன் சபைக்கு ஏகினர். அரசனோ சைவத்தில் மிக்க பற்றுடையவனாயிற்றே. இவருக்கு அவனால் என்ன தீங்கு

நேரிடுமோ? என்று என் நெஞ்சம் பதறுகின்றதே என்று ஒரு நிமிஷ நேரம் பிரலாபிப்பர். 'இளங்கன்று பயமறியாது' என்றபடி அரசன் சபையையும் ஓர் பொருட்படுத்தாத ஆழ்வானுடைய மிடுக்கும் பரபரப்பும் என்ன துன்பத்தில் அவர்களை ஆழ்த்திவிடுமோ என்று மற்றொரு நிமிஷம் வருந்துவர். எதிரியின் கொடுஞ்சொல்லைப் போலத் துன்புறுத்தும் பரற்கல் நிறைந்த பாதை வழியே வெயிலாலும் மழையாலும் வருந்தி எவ்வாறு போகத் துணிந்தனள் என்று அத்துழாய் அம்மையின் இளமையை நினைந்து கவலையுறுவர். எழுந்திருந்து 'இதுபொழுதே அவர்களைத் தொடர்ந்து செல்வேன்' என்று மடத்தின் தலைவாசலுக்கு ஓடுவர். ஏகாங்கிகளும் முதலிகளும் உடையவர் திருவடிகளைப் பற்றிக்கொண்டு 'தேவரீரும் அரசனது சபையை நோக்கிப் போகத் துணிந்தால், நாங்கள் இங்கு உயிர்வாழோம்; நாங்களும் சம்பிரதாயமும் இன்றே நசித்துப்போவோம்' என்று கண்களில் தாரை தாரையாய் நீர் பெருக மன்றாடி முறையிட்டுக்கொண்டனர். உடையவரும் சிறிதுபொழுது ஸ்தம்பித்து நின்று தம்முள் பலவாறாக யோசிக்கலாயினர். "உண்மையான பாகவதனுடைய உள்ளக்கிடக்கை நிறைவேறாதுபோனால் அபசாரம் ஏற்படுமன்றோ? முதலிகளும் ஏகாங்கிகளும் என் விருப்பத்தைத் தடுத்ததும் சத்திய சங்கல்பனான ஆழ்வான் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்கல்லவா? அவன் களைந்து வைத்த ஆடையை நான் இன்னும் அணிந்து கொள்ளாததும் ஒரு பெருங் குறையாகுமே?" என்று கருதி ஆழ்வான் வைத்துப்போன வெள்ளை வஸ்திரத்தை உடையவர் தரித்துக் கொண்டார்.

சோழ ராஜ்யத்திலே உடையவர் ஒரு கணமும் தங்கியிருக்க முடியாதென்பது தெளிவாயிற்று. எவ்விடம் போவதென்று பல பல எண்ணி முடிவில் சோழராஜனின் விரோதியான பிட்டிதேவராயனது ராஜ்யத்திற்குப் போவதே உசிதமென்று தீர்மானிக்கப்பட்டது. பாகவத சமூகம் உடையவர் பிரிவாற்றாது கவலைக் கடலுளாழ்ந்து கரைகாணாது திகைத்தது. உடையவரும் சில அணுக்கத் தொண்டர்களோடு

மைசூர் ராஜ்யத்திற்குப் போயினர். காலை இளஞாயிற்றின் பொன்னிறக்கதிர்களால் கழனிகளெல்லாம் ஓர் புதிய அழகு பெற்றுத் திகழ்ந்தன. அரசனுடைய இராஜதானியான தஞ்சைமா நகரம் பசுமையான சோலைகளால் சூழப்பட்டு மரகத மணிபோல் ஒளிர்ந்தது. சோலைகளை ஊடுருவி வானோக்கிச் செல்லும் கோபுரங்களின் பொற்கலசங்களும் அரண்மனையின் தங்க ஸ்தூபிகளும் மரகதத்தைக் கீறிட் டமைத்த பொற்பணிகள்போல் விளங்கின. உய்யானம், நந்தவனம், பூஞ்சோலை முதலிய மலர் வனங்களெல்லாம் மகளிர் ஈட்டம். தெய்வ தீர்த்தம் பிரம தீர்த்தம் வசந்தவோடை செங்குவளை யோடை, முதலான நீர் நிலைகளிலும் 'கங்கையிற் புனிதமாய காவிரியின் இருபாரிசத்திலும் நீராடுவோர் திரள். பண்ணோடு திருமுறை பாராயணஞ்செய்யும் ஆதிசைவர்களின் கூட்டம் ஒரு புறம். மற்றொரு புறம் வேதாத்தியயனம் பண்ணும் பிராமணர்களின் கூட்டம். கண்முட்ட வளம் படைத்த காவிரியின் இருமருங்கும் இக்காட்சிகளைப்பார்த்துக்கொண்டு சேவகர் முன் செல்லவும் அவர்களின் பின் கூரத்தாழ்வானும் பெரிய நம்பியும் அத்துழாயம்மையும் செல்வாராயினர். கடல் சூழ்ந்த சிறிய உலகம் இது வென்னலாம்படியாய் அமைந்துள்ள நகரத்தின் கோட்டை வாயிலையடைந்து அவர்கள் இழுவைப் பாலத்தின் வழியாகக் கோட்டையினுட் பிரவேசித்தனர். தேர் நிலைகள் யானைக்கூட்டங்கள் குதிரைப் பந்திகள் சேனையிடங்கள் ஆஸ்தான மண்டபம், விநோத மண்டபம், நியாய மண்டபம், நிருத்த மண்டபம், கல்வி மண்டபம், பரிசனமண்டபம், தேவாசிரிய மண்டபம், சித்திரத் தெற்றி, சிலம்பக்கூடம், தர்மப்பள்ளி, ஆயுதசாலை, வைத்தியசாலை, அமுதசாலை, அறச்சாலை முதலியவைகளைக் கடந்து மேற் செல்வாராயினர்.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்."

கண்ணுற்று,

> "கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
> பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
> மாட மறுகும் மறையோர் இருக்கையும்
> வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
> ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
> பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்
> திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையோடு
> அணிவளை போழுநர் அகன் பெருவீதியும்
> நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
> காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
> பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
> பயில் தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
> நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கையும்
> கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
> நெடுந்தேர் ஊர்நர் கடுங்கண் மறவர்
> இருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்"

பிற்படச் சென்று குலோத்துங்க சோழனது அரண்மனையை யடைந்தனர். உடல் முழுதும் அங்கிதரித்த யவனவீரர் ஆயுதபாணிகளாய் வாயிலைக் காத்து நின்றனர். அரசுவாவின் பிடரிமீதேற்றிய ஸ்தம்பத்தில் அசைந்து கொண்டிருக்கும் புலிக்கொடி சாதாரணமாய் உட்செல்லும்படியான உயரம் வாய்ந்திருந்தது அவ்வாயில். அதன் இருபாரிசத்திலும் யவன தேசத்துச் சிற்பிகளால் நிர்மிக்கப்பெற்ற பிரமாண்டமான வெண்கலப் பிரதிமைகள் காவற்றொழில் மேற்கொண்டவர்கள் போல் காணப்பட்டன. மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட பெருவழிபோல் தோன்றிய அவ்வாயிலுட் சென்று ஐவரும் வெண்மணல் விரித்திருந்த நிலா முற்றத்தை யடைந்தனர். மல்லிகை, முல்லை, இருவாட்சி, ரோஜா முதலிய பூஞ்செடிகள் அம்முற்றத்தை அழகு செய்தன. காலை இளங்காற்று பூக்களின் இனிய நறுமணந்தாங்கி மிருதுவாய் வீசிக்கொண்டிருந்தது. அவர்கள், நிலா முற்றத்தைக் கடந்து சென்று சோழ பூபதியின் வரவேற்பு மண்டபத்தையடைந்தனர்.

முட்டளவும் பதியும் விலையுயர்ந்த இரத்தின கம்பளங்கள் அம்மண்டபத்தின் தளத்தின்மீது விரிக்கப்பட்டிருந்தன. மேலி டம் ஆகாயவர்ணமுள்ள நீலவிதான முடையதாயிருந்தது. நவ ரத்தின கசிதமான பணி யிழைத்த அரசுகட்டில் மண்டபத் தின் நடுவே அமைக்கப்பட்டிருந்தது. அதன் கால்கள் தொழில் நுட்பஞ் செறிந்தனவாய்ப் பசும் பொன்னாலாக்கப் பட்டிருந்தன. அரசு கட்டிலின் இருமருங்கும் அவரவர் தகுதிக்குத் தக்கபடியாகப் பெரிதும் சிறிதுமாய் ஆதனங்கள் அமைக்கப் பட்டிருந்தன. வேதவேதியரும் மீமாம்ஸகரும் தார்க்கிகரும், வையாகரணிகளும், ஆகமசித்தாந்திகளும், புரா ணிகர்களும் மண்டபத்தின் ஒரு பாகத்தே யிடம்பெற்றனர். திராவிட பாஷாவிற்பன்னரும், கவி சிரேஷ்டர்களும் மற்றொரு பாகத்தில் வீற்றிருந்தனர். மந்திரி பிரதானி தானபதி முத லிய காரியத்தலைவர்கள் அரசு கட்டிலைச் சூழ்ந்து நின்றனர். மன்னவர், மண்டலீகர், பட்ட வர்த்தனர், மகுட வர்த்தனர் முதலானவர்கள் தங்கள் தங்கள் பெருமைக்குத் தக்க ஆதனங் களில் அமர்ந்தனர். ருத்ரவீணை, நாரத வீணை, தும்புரு வீணை இராவணஸ்தம், கின்னரி, புள்ளாங்குழல் முதலான கீதவாத் தியங்கள் இன்னிசை நிறைத்தன. நாடகக்கணிகையர் நிர்த் தனம் செய்தனர். கங்கர், கலிங்கர், பாண்டியர், மலையாளர் கையுறை கொண்டு அரசன் சமயம் பார்த்து ஒரு புறம் நின்ற னர். வெள்ளை வட்டக்குடை நிழற்றவும் வெண்சாமரை வீச வும் மயிர்க்குஞ்சங்கள் சுழற்றவும், சிங்கவேறனைய சோழ பூபதி அரசுகட்டிலிவர்ந்து அங்கு கூடியிருக்கும் திரள்மீது கண்மலர் பரப்பினன். வந்தியர் வாழ்த்தினர். மாகதர் புகழ் ந்தனர். மங்கல மங்கையர் வாழ்த்தொலி எடுத்தனர். வேதி யர் ஆசி கூறினர். கட்டியக்காரன் மண்டபத்தினுட் புகுந்து தூரத்தே நின்று,

வளவ வாழி! மன்னவ வாழி!
புறவின் நிறைபுக்க புகழோய் வாழி!
கயல் எழுதிய இமய நெற்றியின்
அய லெழுதிய வில்லோய் வாழி!
பழியொடு படராப் பார்த்திவ வாழி!

என்று அடிபணிந்து அரங்கமா நகருக்கு அனுப்பிய சேவகர்கள் இராமாநுஜரையும் அவர் குருவையும் அழைத்து வந்திருக்கின்றனர்' என்று விண்ணப்பம் செய்தான். அரசன் அவர்களை உள்ளே அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தான். கட்டியக்காரன் வாயிலினின்ற கூரத்தாழ்வானையும் பெரிய நம்பிகளையும் அழைத்து வந்து அரசன் முன்னிலையில் நிறுத்தினான். உடையவர் திருக்கூட்டத்தைச்சேர்ந்தவருள் ஒருவனான நாலூரான் அரசனிடம் வேலையாய் அமர்ந்திருந்தான். அவன் எழுந்து அரசனைத் தொழுது 'முன் நிற்பவன் இராமாநுஜரின் பிரதம சிஷ்யனான கூரத்தாழ்வான்' என்று தெரிவித்துக்கொண்டான். அரசன் திருமுகமண்டலத்தில் சிறிது கோபமும் குறிப்புத் தவறிப்போன மனவருத்தமும் கலந்து தோன்றின. ஏவலாளரை விளித்து 'ஓலையும் எழுத்தாணியும் வழக்கம் போல இங்கு நிற்பவர்களிடம் கொடுத்துச் "சிவத்திற்கு மேற்பொருளில்லையென்று கையெழுத்து வாங்குமின்" எனப்பணித்தான். கூரேசரும் ஓலையைக் கையில் வாங்கி 'சிவத்திற்கு மேற்பதக்குண்டு' என்று ஒப்பமிட்டு அரசனிடங்கொடுத்தார். அரசன் கண்களில் சோரிவெள்ளம் பரந்தன. மீசை படபடவென்றுதுடித்தது. அவன் பல்லை நெறு நெறென்று கடித்துக் கிங்கரரை 'வம்மின்!' என்று கூவி 'நம் சபையையும் மதியாது வெறிகொண்டு பிதற்றும் இப்பித்தரின் கண்களைப் பிடுங்கி விடுக!' என்று கர்ஜனை புரிந்தான். கிங்கரர் தம்மை அணுகா முன்னர் கூரேசர் சிறிதும் சித்தஞ் கலங்காது சபையையும் ஓர்பொருட்படுத்தாது அரசன் நெஞ்சத்தை யூடுருவிச் செல்லுமாறு தமது கண்களால் ஒருதரம் பார்த்து விண்ணையும் பிளந்து செல்லும் கம்பீரத்வனியோடு 'பாவியாகிய உன்னைப் பார்த்ததற்குப் பிராயச் சித்தம் என் கண்களை யானே தோண்டி உன் முன்னர் எறிந்து விடுவதேயாம்' என்று கூறித் தமது திருக்கண்களைத் தாமே தோண்டி யெறிந்தார். விருத்தாப்பியரான பெரிய நம்பியின் கண்களோ வன்னெஞ்சரான கிங்கரர்களால் பிடுங்கப்பட்டன. சபையோர் திடுக்கிட்டு மெய்நடுங்கிப் போயினர். ஏவலாளரால் தலைவாசலில் கொண்டு விடப்பட்ட இருவரையும் அத்துராயம்மாம் கண்டு துக்க சமுத்திரத்

தின் கரைகாணுதவளாயினள். நம்பிகளோ பொறுத்தற்கரிய வேதனையையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு அத்துழாயம்மை க்கு வேண்டும் தேறுதல் கூறினர்.

பின்னர் அத்துழாயம்மையும் கூரத்தாழ்வானும் சில பாக வதர்களின் உதவிபெற்றுப் பெரிய நம்பியைத்தொட்டில்கட்டித் தூக்கிக்கொண்டு அரசன் தலைநகரை விட்டுப்புறப்பட்டு மெல்ல மெல்லக் கங்கை கொண்ட சோழபுரம் அடைந்தனர். நம்பி களுக்கோ அப்பொழுது வயது நூற்றுக்கு மேலாயிற்று. கண்வேதனை நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துவந்தது. மேற் பிரயாணம் செய்வது அசாத்தியமாயிற்று. நம்பிகளின் அந்தம தசை நெருங்கி விட்டதென்று இருவரும் உணர்ந்தார்கள். ஆழ்வார் மடிமீது தமது திருமுடியும் அத்துழாயம்மை மடி மீது திருவடிகளுமாய் நம்பிகள் சயனித்திருந்தார். அப்போது ஆழ்வானும் அத்துழாயம்மையும் நம்பிகளை நோக்கி 'தேவர் திருவவதரித்த கோயிலும் ஸ்ரீ பாஷ்யகாரரும் பெருமாளுமிரு க்க இந்தக் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு கொல்லைத் தலைமாட்டிலிருந்து திரு நாட்டுக் கெழுந்தருள வேண்டுமென்று திருவுள்ளமோ! என்று கிலேசித்தார்கள். அது கேட்டு நம்பி களும் நான் பல நாளாகச் செய்த புண்ணியமன்றோ, ஆழ் வான் மடிசித்தித்தது! ஒரு பாகவதன் மடியைக்காட்டிலும் கோயிலும் சிறந்ததாகுமோ? என்று மந்தஹாஸம் புரிந்து தமது பரமாசாரியராகிய ஆளவந்தாரின் திவ்ய மங்கள விக்கிர கத்தைத் தமது மனத்தில் நிலை பெறச்செய்து உயிர் துறந்தார். சரமகைங்கரியத்தின் பின் அத்துழாயம்மையும் கூரத்தாழ்வா னும் ஸ்ரீரங்கத்தை நோக்கிப் பிரயாணமாயினர். இவர்கள் வரும் செய்தி முன்னதாக உணர்ந்து திரள் திரளான ஜனங்கள் காவேரியின் கரையிற் கூடினர். 'தரிசனத்திற்குத் தரிசனம் கொடுத்த புகழோன் வருகின்றான்!' என்று ஆர்ப்பரித்தார் சிலர். வேறுசிலர் உத்தரியத்தை ஆகாயத்திலெறிந்து தமது அளவு கடந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். 'தமது கொள்கையின் பொருட்டு அடர்ந்து வரும் பெருந்துன்பத்தை யும் சகித்துக்கொள்வதற்குப் பின் வாங்காத சுத்த வீரர்களுக்

குத்தோல்வியே வெற்றியாகும்' என்றனர் பலர். தமது அபிப்பிராயத்தை வலியுறுத்துவதற்காகப் பிறரை இம்சிக்கின்றவன் செயல் வெற்றி போலத் தோன்றினும் முடிவில் தோல்வியேயாகும் என்று ஜனங்கள் எல்லோரும் கூறினர். அங்கு கூடியிருந்த பாகவத சமூகம் ஒரே மனதாய் உச்சஸ்வரத்தில்,

"பொலிக! பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச்சாபம்!
நலியும் நரகமும் நைந்த! நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை!
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல் வண்ணன் பூதங்கள் மண்
மலியப்புகுந்து இசை பாடி ஆடியுழிதரக் கண்டோம்!" [மேல்

என்றுபாடி ஆநந்த நிர்த்தனம் புரியும் சமயத்தில் ஆழ்வானும் அத்துழாயம்மையும் "பொலிக! பொலிக! பொலிக!" என்று தாங்களும் உச்சஸ்வரத்தில் பாடிக்கொண்டே மேன்மேலும்பெருகிக் கொண்டிருந்த பாகவதப் பெரு வெள்ளத்திற் கலந்தனர்.

மாப்பிள்ளை வீட்டாரின் கிராதகச் செயல்.

(பின்வரும் அக்கிரம சமாசாரத்தை "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையில் ஒரு நிருபர் வெளியிட்டிருக்கிறார். அதனை சுதேசமித்திரன் மொழிபெயர்த்திருக்கிறன்.)

வங்காளத்தில் பிள்ளைவீட்டார் (மணமகனது சொந்தக்காரர்கள்) என்றால் எப்பொழுதும் ஜனங்கள் பேய் பிசாசுகளைக்கண்டு பயப்படுவது போல் பயப்படுகின்றனர். வாங்காளிகளுள் சுதந்தர உணர்ச்சி அதிகமாக வந்தபோதிலும் சமூக ஆசார விஷயங்களில் அவர்கள் புராதனமான வழக்கமெத்தையும் மாற்ற தைர்ய மில்லாதவர்களாக இருக்கின்றார்கள். சென்ற ஆகஸ்டு மாதம் ஒரு காயஸ்த வகுப்புப் பெண்ணிற்கு விவாகம் நடந்தது. அதன் நிர்வாகிகளுள் நானும் ஒருவன். அந்தக் கல்யாண மென்றும் புனிதமான பெயர் துஷ்பிரயோகங்களுக்குள்ளானதுபோல் வேறெதுவும்உள்ளானதேயில்லை. பெண்ணின் தகப்பனான எனது நண்பரது வீட்டிற்கு கல்யாணத்திற்கு முன் தினம்

பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்தனர். அவர்களின் தொகை ரு.0அ ஆகும். அவர்கள் கிராமவாசிகள். அவர்கள் கட்டுக்கடங்காப் பிடாரிகளாக இருந்தனர். நகரத்திலுள்ள நாங்கள் மட்டுமரியாதைகளுக்கு இணங்கிச் செய்தனவற்றை எல்லாம் அவர்கள் இழித்துக்கூறிக் கேலி செய்தமையால் நாங்கள் கல்யாணத்தை அவர்கள் இஷ்டப்படி எல்லாம் நடத்தும்படி விட்டுவிட்டோம்.

சம்பந்திகள் காலையில் பெண்வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்ததும் தங்களுக்குப் பசியில்லை என்றும் ஆதலால் பகல் போஜனம் வேண்டாமென்றுங் கூறினர். பிறகு அவர்களுக்குச் சிற்றுண்டிக்காக ரூபாய் உ௫0 செலவிட்டுக் கிரேப்மாம்பழங்கள், ஆப்பில் பழங்கள் மற்றைய பலவும் வாங்கி சப்ளை செய்யப்பட்டன. பிள்ளைவீட்டாரில் ஒருவர் திடீரென்று நீங்கள் ரொட்டியும் தேத் தண்ணீரும் சப்ளை செய்யவில்லையே என்று கூறினர். வைதிக கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக உள்ள அவர்கள் மொறு மொறு என்று சுடவைக்கப் பட்டிருந்த ரொட்டித் துண்டங்களைச் சாப்பிடுவார்களென்று எனக்குத் தெரியாது. அவர்கள் பசியில்லையென்று கூறியதால் தேத்தண்ணீர் அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாதென்று நாங்கள் கருதினோம். இவ்வாறு இருந்த போதிலும் க0-பிராமணர்கள் தேத்தண்ணீர்போட ஆரம்பித்தனர். க0 சிறுவர்கள் ரொட்டியைத் துண்டாக்கி மொறு மொறு என்று சுடவைக்க ஆரம்பித்தனர். எங்களை அவமானப்படுத்துவதற்காக பிள்ளைவீட்டாரில் ஒருவர் திடீரென்று மோட்டாரில் ஏறிக்கொண்டு ஹாரிஸன் ரோட்டிலுள்ள ஒரு தேத் தண்ணீர்க் கடைக்குப் போய் பெரிய குடங்கள் மூன்றில் நிறைய தேத்தண்ணீர்வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். அவர்கள் வீட்டில்போடும் தேத்தண்ணீரை விட தூரமான இடத்திலிருந்து வரும் தேத் தண்ணீர் சீக்கிரம் வந்து விடுகின்றது என்று சொல்லிக்கொண்டே அத் தேத்தண்ணீரைச் சாப்பிட்டனர். நாங்கள் தயாரித்த தேத் தண்ணீர் அப்படியே யிருந்தது. ரொட்டியேனும் 'சாப்பிடுங்கள் ஐயா' என்று நான் கேட்டேன். (நாங்கள் எப்பொழுதும் பிள்ளைவீட்டுக்காரரைக் கெஞ்சிக் கொண்டும் அவர்களிடம் மிக்க மரியாதையாகவும் நடக்கவேண்டி யிருந்தது. அவ்வாறு இல்லாவிட்டால் கல்யாணம் நின்றுபோய் விடுமென்றும் சம்பந்திகள் அடுத்த ரெயிலில் ஊருக்குப் புறப்பட்டுப்போய் விடுவார்களென்றும் மணமகளின் தகப்பனர் பயப்பட்டார். கல்கத்தாவில் வசிக்கும் மாப்பிள்ளைகள்கூட இம்மாதிரி அடிக்கடி அற்ப காரணங்களைக் கூறிக் கல்யாணத்தை நிறுத்தி விடுவதுண்டு.) "இந்த ரொட்டியானது ஹிந்துக்களினால் நடத்தப்படும் ரொட்டிக் கிடங்கில் செய்யப்பட்டதென்பதற்கு ஒரு நற்சாக்ஷிப் பத்திரங்கொண்டு வந்தால் நாங்கள் உங்களது ரொட்டித்

துண்டங்களை உட்கொள்வோம்'' என்று பிள்ளைவீட்டாரில் ஒருவர் கூறினர். சாப்பாடு விஷயங்களை மேற்பார்க்கின்றவர்கள் பட்ட கஷ்டத்தைவிட என்னுடைய கஷ்டம் அதிகமானதல்ல. இரவு கூ-மணிக்கு நல்ல விருந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிள்ளை வீட்டார் "எங்களுக்கு இப்பொழுது பகல் போஜனம் வேண்டும்'' என்று கூறினர்கள். இதனல் பூரிகளைத் தூர எறிய நேரிட்டது. உடனே சாதம் வடித்துப் பகல் போஜனத்திற்கு வேண்டிய இதர சாமான்களும் சம்பிரமமாகச்செய்யப்படவேண்டி நேரிட்டது. இரவு கஉ மணிக்கு சாப்பாடு பரிமாறுவதற்குத் தயாராக இருந்தது. "நாங்கள் அதிகாலையில் இராபோஜனம் சாப்பிடுகின்ரேம்'' என்று பிள்ளை வீட்டார் உத்தரவிட்டனர். "எங்கள் ஒவ்வொருவருக்கும் தபால்தலைகள், பேனு, கடிதம்எழுதுவதற்கு வேண்டியதுதான் அவற்றைக் கொடுங்கள். நாங்கள் அவசரத்தில் இந்த வசதிகளுக்கெல்லாம் தக்க ஏற்பாடு செய்துகொண்டுவரவில்லை'' என்று பிள்ளைவீட்டார் கூறினர்கள்.

பிள்ளை வீட்டாரில் பிரதமமாக இருந்தவர் சம்பந்தியின் நெருங்கிய பந்து ஆவர். அவர் "நாங்கள் நதிக்கு ஸ்நானஞ் செய்யச் செல்ல வேண்டும். அதற்கு எங்களை ஏற்றிச் செல்ல ௰ வாடகை மோட்டார்களைக் கொண்டு வாருங்கள்'' என்று சொன்னர். இந்த அதிக்கிரமங்களில் மாப்பிள்ளையும் அவரது தகப்பனுருங் கலந்துகொள்ள வில்லை. ஆனல் பெண் வீட்டார் படும் கஷ்டங்களைக் கண்டு சந்தோஷமடைந்து வந்தார்கள். எனது நண்பரதுவீடு மிகச் சிறியது. நாதர்ஷாவின் பட்டாளத்தைப் போன்று வந்துள்ள இந்த சம்பந்திகள் ௬0அ பேரையும் தமது வீட்டிலேயே இறக்கி வைத்துக்கொள்ள முடிய வில்லை. இவர்களில் சிலர் தங்குவதற்காக எனது நண்பரின் அக்கம் பக்கத்து வீட்டார்கள் தங்களது வீடுகளை ஒழித்துக்கொடுத்தார்கள்.

பிள்ளை வீட்டார் தாங்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்த மின்சார விசிறிகளையும், நாற்காலிகளையும், மேஜைகளையும் உடைத்துவிட்டனர். அவர்கள் எல்லா சோடாபுட்டிகளையும் உடைத்துத்தங்களது கைகளை சோடாவினல் சுத்தி செய்துகொண்டனர். சம்பந்திகளில் ஒருவர் வீட்டுச் சொந்தக்காரரிடம் கூறினதாவது:—"தங்களது மின்சார கட்டணம் இம்மாதம் ௱00 ரூபாய் வரையாகும்படி நாங்கள் பார்த்துக் கொள்ளுகின்ரேம். நாங்கள் எல்லா விசிறிகளையும், ஓடிக்கொண்டிருக்கும்படி செய்துள்ளோம். பட்டப்பகலில் எல்லா விளக்குகளையும் எரிக்கின்ரேம்.'' என்பதாகும். நாங்கள் மணப்பெண்ணிற்காக எல்லா விதமான அவமானங்களையும் தைர்யமாக ஏற்றுப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், விரோதிகள் (சம்

பந்திகள்) இஷ்டப்படி எங்களைத் தூஷிக்குமாறு விடப்பட வேண்டுமென்றும் பெண்ணின் தகப்பனார் எங்களுக்கு உத்தரவிட்டிருந்தார். பெண்ணின் தகப்பனார் ருooo ரூபாய் வரதக்ஷிணையாகக் கொடுத்திருக்கின்றார். ரு ஆயிரம் ரூபாய் பெறுமான நகை பெண்ணுக்குப்போட்டிருக்கின்றார். கல்யாணச் செலவு விருந்துச்செலவு இவை ருooo ரூபாய் ஆகின்றன. ஏதேனும் நாங்கள் குற்றமிழைத்து விட்டதாகச் சம்பந்திகள் கருதின போதெல்லாம்கூட நாங்கள் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. மிக்க கயனத்துடன் சிகரெட்டுகள் சப்ளை செய்யப்பட்டன. ஹுக்காக்களுக்கும் சரியாக சப்ளை செய்யப்பட்டன. ஊழியக்காரர்களாகிய நாங்கள் சரியாக வேலை செய்ய வில்லை என்று கூறி வாலிபர்களெல்லோரும் சேர்ந்து ஹுக்காக்களை எல்லாம் உடைத் தெறிந்தனர். ௩o வருஷங்களுக்கு முன் நட்டியா என்ற விடத்தில் இம்மாதிரியான சம்பவம் நடந்ததை நான் பார்த்திருக்கின்றேன். நானே கல்கத்தாவிலிருந்து சென்ற பிள்ளை வீட்டாருடன் கூடப்போய் ஊர்வலம் வரும்பொழுது ஒரு வீட்டின் மாடியிலிருந்து பக்ஷணக் கூடைகளைக் கீழே எறிந்திருக்கின்றேன். அவ்வாறு செய்வதை நான் எனது உரிமையாகக் கருதினேன். ககஉ௩ ம் வருஷத்தில் கிராமத்தார்கள் ஹுக்காக்களை எடுத்துக்கொண்டுகல்கத்தாவிலுள்ளபெண்வீட்டாரை மண்டையையுடைத்துஅவர்களைக்குழிவெட்டிப் புதைத்துவிடுவதாக பயமுறுத்திக்கொண்டே துரத்துவதைக் காண நானே திடுக்கிட்டுப் போனேன். பிள்ளை வீட்டார் தங்கியிருந்த இடமானது பெண் வீட்டாரது கல்லறைபோலிருந்தது. அங்கு மீன்கள் எங்கும்வாரி இறைக்கப்பட்டிருநதன. கூடைகள் எங்கும் உடைக்கப்பட்டுக்கிடந்தன. வெற்றிலைகள் எங்கும் நிறைந்திருந்தன. குப்பைகள் ஏராளமாக இருந்தன.

அவர்கள் வந்த உ-வது தினத்தன்று பிற்பகல் ௩-மணிக்கு முகூர்த்தத்திற்கு இன்னும் ரு-மணி அவகாசமே இருக்கிறபொழுது "பிள்ளை வீட்டு உபாத்தியாயர்" மணப்பெண்ணின் தகப்பனும்அவளது சகோதரர்களும் நிம்தாலாக்கட்டம் சென்று உடனே மொட்டையடித்து முகக்ஷவரஞ் செய்துகொண்டு வரவேண்டும். நதிக்கரையிலுள்ள பிராமணர்களுக்கு கo ரூபாய் வீதம் மூன்று பேரும் கொடுக்கவேண்டும். பிள்ளை வீட்டாருடன் வந்திருக்கும் பிராமணர்கள் ஒவ்வொருவருக்கும் உo நூ கொடுக்கவேண்டும்." என்றும் உத்தரவிட்டார். கல்கத்தாவிலுள்ள பெண்ணின் தகப்பனும் அவரது குமாரர்களும் எப்பொழுதேனும் இங்கிலாந்து சென்று திரும்பி வந்தவர்களுடன் சாப்பிட்டிருப்பார்களென்றும் ஆதலால் பிராயச் சித்தச் சடங்கு நடக்குமுன் கல்யாணம் நடக்க முடியாதென்றும் கூறினார்கள். மணப்பெண் அழுதாள். பெண்ணின்

தாயார் கண்ணீர் உகுத்தாள். ஆபீஸில் "டை" முதலியன அணிந்து வேலைசெய்ய வேண்டியிருக்கும் பெண்ணின் தகப்பனார் எவ்வாறு மொட்டை யடித்துக்கொள்ள முடியும்? ராஜி பேசி அபராதத்தொகை இரண்டு மடங்கு ஆக்கப்பட்டு சிகை எடுபடாமற் காப்பாற்றப்பட்டது. கல்கத்தாவில் பாரிஸ்டர்களுடனும் அயல் நாடு சென்ற மற்றவர்களுடனும் விருந்துண்டதற்காக குடும்பத்தார் அனைவரும் ஜாதிப் பிரஷ்டர்களென்று கூறப்பட்டு அவமானப் படுத்தப்பட்டார்கள். மிகுந்த வேலையாலும் பணச்செலவினாலும் மனஞ்சலித்தும், புரோகிதரது உத்தரவுப்படி பட்டினி கிடப்பதால் களைப்புற்றும், மத விஷயமாகவும் சமூக ஆசார விஷயமாகவும் சம்பந்திகளால் தாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டும் இருக்கும் மணப்பெண்ணின் தகப்பனார் அடிக்கடி பெண்ணின் முன்னிலையில் சிப்பந்திகளிடம் மன்னிப்பும் கேட்டுக் கொள்ள நேரிட்டது. இம்மாதிரி தனது தகப்பனார் கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாவதைக்கண்டு மணப்பெண்ணின் மனமே துக்கத்தால் உடைந்து போகின்றது. அடிக்கடி மணப்பெண்கள் கல்யாண தினத்தன்று தங்களது ஆடைகளுக்கு எண்ணெயிட்டுநெருப்பு வைத்துக்கொண்டு தற்கொலை செய்து தங்களது தகப்பனாரின் அவமானத்தைக் காப்பாற்றுகின்றனர். ஏனெனில் அப்பெண்கள் என்னென்ன அவமானங்களுக்குத்தங்களது தகப்பனார் தங்கள் பொருட்டு உள்ளாக்கப்படுகிறாரென்பதை உணர்ந்திருக்கின்றனர். பெண்ணின் தகப்பனார் எப்பொழுதும் பயந்தே நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவர் தாம் ஏதேனும் சிறிது எதிர்த்தாற் கூட பெண்ணின் மாமியார் எங்கு கொடிய கிராதகிபோல் தமது பெண்ணைப்படுத்துவாளோ என்ற பயம் அவரது மனதில் குடிகொண்டிருக்கின்றது. பிள்ளை வீட்டாரில் சில புத்திசாலிகளான போக்கிலிகள் இருக்கின்றனர். அவர்கள் பெண்ணின் தகப்பனாரது மனதில் குடிகொண்டுள்ள இந்த அச்சத்தை உணர்ந்து அவரிடம் வந்து "எனக்கு 30 ரூபாய் கொடுங்கள் மாமியார் பெண்ணை நன்கு நடத்தும்படியும் அவருக்கு அரைகுறையான சாப்பாடும் அதிகவேலையும் கொடுக்காமலும் பெண்ணை கஷ்டப்படுத்தாமலும் பார்த்துக் கொள்ளுகின்றேன்" என்று சொன்னார்கள். நாட்டுப் பெண்களை அடிப்பதாலும் உதைப்பதாலும் தூஷிப்பதாலும் இரவில் வெளியிடங்களுக்குச் செல்லும்படி அனுப்புவதனாலும் அவர்களிற்பலர் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர். பிள்ளை வீட்டுப் பட்டாளம் ஊருக்குத் திரும்பி சென்ற மூன்று தினங்களுக்கெல்லாம் பணக்காரராயுள்ள காயஸ்த வகுப்பைச்சேர்ந்த எனது நண்பருக்குக்கீழ்க்கண்ட தந்தி வந்தது;— "பௌமா (கல்யாணப் பெண்) நதியில் நீர்முகந்துகொண்டிருக்கும்பொழுது முதலையால் கீறப்பட்டு பலமான காயத்திற்குள்ளாகி

யிருக்கின்றாள். உடனே வரவும்" மருமகள் தனது குமாரனை வசியப்படுத்திக் கொள்ளாமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பெண்ணின் மாமியார் தெரிந்தோ தெரியாமலோ அபாயகரமான காரியங்களைச் செய்யச்சொல்லும்படி அவர்களுக்கு உத்திரவிடுகின்றனள். மணமகனும் அவனது தகப்பனும் இந்த விஷயங்களில் சிறிதும் வாய்திறக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். மணமகன் படித்துக் கொண்டிருக்கும்பொழுது கல்யாணஞ் செய்துகொண்டிருப்பதால் வாய்திறக்க முடியவில்லை. அவனது தகப்பனோ தமது மனைவியைக்கண்டால் பேயைக்கண்டு ஓடுவதுபோல் நடுங்கி அவள் காலால் இட்ட காரியத்தைத் தலையால் செய்துமுடிக்க வேண்டியிருக்கின்றது. இந்தக் குறைகளை எல்லாம் எடுத்துரைத்துத் தான் வங்காளத்திலுள்ள சமூக ஆசார சீர்திருத்தக்காரர்கள் தங்களது வேலையைச் செய்து வருகின்றனர்.

மேற்கண்ட கடிதத்தால், மக்கள் எவ்வளவுதூரங் கீழிறங்கி விட்டனரென்பது விளங்குகிறது. கலியாணமென்பதென்ன! ஒரு பெண்ணும் புருஷனுங் கூடி இன்பமயமாக இம்மைமறுமைப்பயனைப் பெறுவதற்குப் போடும் அஸ்திவாரமன்றோ? இந்தக் காரியத்தில் தாய் தந்தையரும் சுற்றிக் கிடப்பவரும் இவ்வளவு உரிமைபெற என்ன நியாயமிருக்கிறது? மேலும் பிள்ளையைப் பெற்றவர் எவ்வளவு பாடுபட்டாரோ அவ்வளவு பாடு பெண்ணைப் பெற்றவரும் பட்டிருக்கிறார். அப்படியிருக்க ஒரு கூட்டத்தார் துன்பப்படுத்தவும் மற்றொரு கூட்டத்தார் துன்பப்படவுங் காரணமென்னை? பிள்ளை வீட்டார் மற்றொரு முறை பெண் வீட்டாராதலுங்கூடுமென்பதை அடியோடு மறந்து விடுகின்றனர். இந்தக் கல்யாண நடவடிக்கையின் ஒரு பாகமே இதிலடங்கியிருக்கிறது. இதைப்பார்த்த அன்பர்கள் இவர்கள் மக்கள்தாமா பைசாசங்களா என்று சந்தேகிக்கும் நிலையிலிருக்கிறார்களன்றோ? இம்மாதிரியான அறிவற்ற—ஆணவம் நிறைந்தவர்கள் தென்னாட்டிலுமில்லாமற் போகவில்லை. கொடுக்கும் பணத்தையும் உணவுப் பொருள்களையும் புறக்கணித்தெறிந்து விட்டு வீடுதோறும் சென்று திட்டிக்கொண்டு திரியும் மாப்பிள்ளைமார்களின் தாயார் பலர் இருக்கின்றார்கள். லட்ச ரூபா சீதனங்கொண்டு வந்த பெண்களைத் தம்வீட்டு வாசலில் மிதிக்கவொட்டாதபடி துன்புறுத்தும் பாவிகளுமிருக்கின்றனர். இம்

மாதிரியானவர்கள் வீடுகளில் மீண்டும் பணத்தை வாரிக்கொடுத்துப் பெண்களைக் கட்டக் காத்துக்கொண்டிருக்கிற மூடர்கள் மலிந்து நிற்பதால்தான் இக்கொடுமை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. சில வகுப்பாருள் பெண்ணைப் பெற்றவன்பாடு பெரும் அதிர்ஷ்டமாக இருக்கிறது. பதினாயிரக்கணக்காக வாங்கி விடுகிறான். பிள்ளை வீட்டாரின் கதி அதோகதியாகிவிடுகிறது. இத்துன்பங்களை யொழிக்க வாலிபர்கள் தைரியமாக வெளிவர வேண்டும். ஆனால் நிதானமாகத்திருத்தங்களைச் செய்யவேண்டும். இவைகளைவிட அயோக்கியத்தனமான செய்கை ஒன்று எங்கும் நிகழ்கின்றது. அதாவது ருது சாந்திக்குப் பணம் பெறுதல். கல்யாணஞ் செய்து முடிந்த பிறகு பணந்தந்தாலன்றி சாந்தி செய்ய மாட்டேன் என்று சொல்பவனை எந்த வகுப்பில் சேர்ப்பதென்று விளங்கவில்லை. தாலிகட்டுதற்கு முந்தி ஏதாவது கேட்டால் கொடுக்கலாம்; இல்லாவிட்டால் வேறொருவனுக்குக் கட்டி விடலாம். தாலிகட்டிய பிறகு வழக்குப் பேசுவது ஒரு மானங்கெட்ட செயலாகுமன்றோ? இம்முறையினால் வங்காளத்தில் பணங் கொடுக்க முடியாமல் தம் வீட்டை அடமானம் வைப்பதெனத் தகப்பன் தீர்மானித்து விட்டதறிந்து "சிநேகலதா" என்ற பெண் ஆடையில் மண்ணெண்ணெய் தோய்த்து நெருப்பை வைத்துக்கொண்டிறந்து போய்விட்டது. இவைகட்குப் பெயர் ஆசாரமாம். இவற்றைத் திருத்தக்கூடாதாம். திருத்தினால் பாரதஜாதி யழிந்து போய் விடுமாம். இப்படிக் கொடுமை செய்யாதவர்கள் ஆசாரக் குறைவுடையவர்களாம். திருத்துவதாகக் கூறுவதே பாவமாம். இப்படிச் சில வரட்டு வைதீகர்கள் கூறுகிறார்கள். மேலே கண்ட கடிதத்தில் பிள்ளை வீட்டு வைதீக உபாத்தியாயப் பிண்டங்கள் பிராயச்சித்தஞ் செய்த மாதிரியேதான் எங்கும் பிராயச் சித்தங்கள் நடைபெறுகின்றன. பணங் கொடுத்தால் — நிறையக் கொடுத்தால் சாஸ்திரம் ஒத்துக்கொண்டு விடுகிறது. முன்னோர்களது நூல்களின் பெருமைகளையும் வாழ்க்கையின் பெருமைகளையும் கொலைபுரிந்தவர்கள் பேராசைகொண்ட சுயநல வைதீகர்களே யென்பது மிகையாகாது.

———

நமது பலசரக்குக்கடை.

———o———

(Registered copy Right.)

அஞ்சாநேஞ்சன் எழுதுகிறார்:—

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவர் பி. ஏ. படித்தவர். இப்போது தான் பி. எல். என்ற படிப்பையும் படித்து முடித்தார். நல்ல மனிதன். உயரத்தில் கொஞ்சங் குட்டை. மட்டவயது. தென்னாட்டுப் பிராமணனாயினும் மீசைவைத்துக் கொண்டு முறுக்கிவிட்டிருப்பார். கொஞ்சம் சொத்துமிருக்கிறது. சிமந்தக் கலியாணத்திற்கு முந்தி ஆகவேண்டிய கலியாணங்களெல்லாம் ஆகிவிட்டன. வக்கீல் உத்தியோகம் பொறுமையாக இந்தியாவில் காலந் தள்ளுமானால் எனது நண்பர் நல்ல கியாதி பெறுவாரென்று வேப்பங்குளம் சோசியர் சொல்லியிருக்கிறார். வக்கீலுக்கு முக்கியமாக வேண்டியது ஜகசாலப்புரட்டு. கொஞ்சம் முகவசிகரம். கொஞ்சம் செளடால். வாசாலமானபேச்சு. தளுக்கு. குறும்புத்தனமானயோசனை. காசுவிஷயத்தில் பேராசை. லோபித்தனம். இவையிருந்தால் நல்ல அடி அடிக்கலாம். ஏறக்குறைய இவைகளில் சில எனது நண்பரிடத்தில் இயற்கையாகவே உண்டு. மற்ற அங்கங்களும் உண்டாதற்கு அறிகுறிகள் காணப்பட்டன. இவரும் நானும் அத்தியந்த நேசம். ஆனால் இவர் புதுமலராக விருந்தார். எனக்கு வக்கீல்களைக் கண்டால் பிடிக்கிறதில்லை. உண்மைக்கும் அவர்களுக்கும் ஒத்துவராது. அடிபிடி சண்டை கலகம் வந்தால்தான் இவர்களுக்குக் கொண்டாட்டம். எல்லாரும் ஒற்றுமையாக—பொறுமையாக—ஒழுங்காக இருந்தால் வக்கீல்கள் அந்தரத்தில் நிற்கவேண்டியதுதான். இந்தத் தொழில் தொலையுங்காலமும் அநியாயந் தொலையுங்காலமும் ஒன்றாகத்தான் வருமென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தச் சனியன் பிடித்த தொழிலில் எனது நண்பர் மாட்டிக்கொண்டு விட்டார். என்ன செய்யலாம்?

* * *

நான் ஒருநாள் எனது சிநேகிதர் வக்கீல் ஐயரைப் பார்த்து "என்ன நண்பரே! எந்தக் கட்சி?" என்று கேட்டேன். மந்தகாசமான முகத்துடன் என்னைப் பார்த்தார். நான் ஒரு பெண்ணாக இருந்திருந்தால் அப்போதே அவரைக் கலியாணஞ் செய்துகொண்டிருப்பேன். என் நண்பர் அவ்வளவு அழகு. அவருடைய டார்லவக்கும் அவருடைய விசாலமான கண்கட்

தும் மயங்காதவர் அந்த ஊரிலேயே கிடையாது. "ஐசே! கட்சியென்ன கட்சி! மகாத்மா கட்சிதான். வீட்டிலே இருக்கிறபோது கதர்தான் கட்டு கிறது; கோர்ட்டுக்குப் போகிறபோதுதான் அந்த இழவைக் கட்டவேண்டியி ருக்கிறது; ஆனாலும் மனதிற்குத் திருப்தியாகத்தான் இல்லை." என்று கூறி னார். இதைக் கேட்டவுடன் எனக்குச் சிரிப்பும் எரிப்பும் கலந்துவந்தன. "அன்பரே! காந்திகட்சி நன்றாயிருக்கிறது. காப்பிக்குடிக்குக் கணக்கில்லை; கட்டுவது சீமைத்துணி; தொழிலோ வக்கீல்; சொல்லிலே கூட உண்மை கிடையாது. உமக்குங் காந்திக்கும் யாது சம்பந்தம்?" என்று கேட்டேன். என்ன பதில் சொல்வார் பாவம்! பக்குப் பக்கென்று ஆடு திருடின கள்ளன் மாதிரி விழித்தார் எனது நண்பர் வக்கீல் ஐயர். இப்படித்தான் இந்தியர்க ளிற் பெரும்பாலா ரிருக்கின்றனர். மற்ற ஜனங்களும் காந்திகட்சியென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆனால் சமயத்தில் பயந்து நடுங் கிப் போகிறார்கள். சிலபேர்கட்குக் கையுங் காலும் விளங்கவில்லை. செய் கையில் காட்டமுடியவில்லை; செயலில்லை; மற்றெல்லாம் போகட்டும். கதர்துணி கட்டினாலென்ன? செத்தா போய்விடுவார்கள்? கதர் கட்டுவத னால் என்ன ஐயா குடிமுழுகிப் பொய்விடும்? அமிதவாதியானாலென்ன? மித வாதியானாலென்ன? வெறும் வாதியானாலென்ன? சாப்பாட்டு வாதியானால் தானென்ன? இந்தியனாகப்பிறந்து வளர்ந்தவன் இந்தியத் துணியைக் கட் டாமல் வழக்கும் பேசுவதென்றால் என்னால் சஹிக்க முடியவில்லை. ஜப் பான்கார மக்களில் குழந்தை கிழவன் பெண் குட்டி முதலிய எவரும் வேறு துணியைத் தொட்டும் அறியார்கள். அவர்களுடைய பொருள் எத் தனை கேவலமாயிருந்தாலும் அதைத்தான் உபயோகிப்பார்கள். அதன் விலை தாறுமாறாயிருந்தாலும் அதனைத்தான் வாங்குவார்கள். மற்றது உயர் ந்ததாயிருந்தாலும் கால்விலையாயிருந்தாலும் தொடமாட்டார்கள். இந்தியா விற்பிறந்து இந்தியாவில் வளர்ந்துதிரியும் "நிலப் புழுக்கள்" இந்தியச்சாமான் தவிர மற்றவற்றுக்கே போட்டழுது அந்நியரிடத்து அகப்பட்டுக்கொண்டே கிடந்துமடிகின்றன. எப்பொழுதுஇந்த சமூகத்திற்கு விமோசனம் வருமோ தெரியவில்லை. துணியாவது கட்டப்படாதா? துணியைக்கூட ஆதரிக்கமா ட்டாராம். சுயராஜ்யம் வந்து விடவேண்டுமாம். வாழைப்பழம்! அதனை அடுத்த வீட்டுக்காரன் உரித்துக்கொடுப்பான். சாப்பிடலாம்!

* * *

பண்டைய மன்னர்கள் லட்சலட்சமாகப் பணத்தைக் கொட்டிக் கொ டுத்துக் கோவில்களைக் கட்டினார்கள். தென்னாட்டில் இருக்கிற தேவஸ் தானத்திற்குக் கணக்கே இல்லை. ஆயிரக்கணக்காகக் கோவில்களைக் கட்

டிவைத்தார்கள். அவற்றிற்கு விட்டிருக்கிற கிராமங்களோ சொல்லி முடியாது. சில தேவஸ்தானங்கட்கு நூறு லட்சத்துக்கு அதிகமாகவும் சொத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப் பணத்தை வாரி வாரிக் கொடுத்து ஏற்படுத்திய கோவில்களைப் பாதுகாக்கவேண்டுமே? இதற்கு எப்படி யாட்களை வைத்தார்கள் தெரியுமா? பெண்டாட்டி பிள்ளைகளையுடைய பேர் வழிகளை வைத்தால் உருப்படியாகுமா? நாளாவட்டத்தில் தோலிருக்கச் சுளையை விழுங்கி விடுவாரே அதற்காக, கற்றறிந்து முற்றத்துறந்த சன்யாசிகளை மடாதிபதிகளாக நியமித்தார்கள். அந்த மடங்களில் சைவ வைஷ்ணவ சமய அறிவும் தமிழறிவும் வளர்க்கப்பெற்றன. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டியன செய்தார்கள். கோவில்களில் பூசைகளும் உற்சவங்களும் நன்றாக நடைபெற்றுவந்தன. வரவர இவைகள் குறைந்தன. பட்டம் மாறமாற நோக்கங்களும் போக்குகளும் மாறிவிட்டன. படிப்பு குறைந்தது. பாடங்குறைந்தது. பூசைகுறைந்தது. காலங்குறைந்தது. கதவும் மூடப்பட்டது. தேர் நின்றது. திருவிழா நின்றது. சில விடங்களில் வயிரமோதிரம் வலுத்தது. சில விடங்களில் தாஸி ஆட்டம் வலுத்தது. சில விடத்தில் வற்றக்காய்ச்சியபால் உரங்கொடுத்தது. சந்நியாச தர்மம் தொலைந்தது. புகார் கிளம்பிவிட்டது. பத்திரிகைகள் குறைகூறின. நாவல்களில் பண்டார சந்நிதிகள் வந்தார்கள். திருவிளையாடல்களைப் படமும் போட்டார்கள். கொலைகளும் நடைபெற்றன. கேஸ்கள் நடந்தன. என்னென்னவோ சொல்ல முடியாத—எழுதமுடியாத கூத்தெல்லாம் நடந்தன. முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டுப்படவே யாவும் குட்டிச்சுவராயிற்று. இந்தப் பண்டாரங்கள் செய்த பாவங்களெல்லாம் உருண்டுதிரண்டது. ஒரு மசோதாவாயிற்று. சட்டசபையில் வந்து முட்டியது. பலர் மறுத்தார். சிலர் எதிர்த்தார். என்னசெய்தும் பலனில்லை. சட்டமாகிவிட்டது. பத்திரிகைகளில் சிலர் பேஷ் டேஷ் என்றெழுதினர். சிலர் கூடாதென்றனர். இத்தனைக்கும் பிறகு பண்டாரங்கள் அசைந்தனர். அவர்கள் பிறந்து வளர்ந்து பட்டமேறினது முதல், பொது ஜனங்களின் அபிப்பிராயங்களைக் கவனிப்பது தங்கள் கடமையாகுமென்றாவது அல்லது கடவுளுடையசொத்தாதலால் இதனை அநியாயமாகச் செலவிடுதல் கூடாதென்றாவது இதுவரை கருதவேயில்லை. ஆனல் இப்பொழுது ஜனங்களின் உதவியை யெதிர்பார்த்தனர். மகஜரும் அச்சிடப்பட்டது. பிரசாரமும் நடந்தது. நம்மைக் கேட்பதற்கு இந்த உலகத்தில் ஆட்களிருக்கிறார்களென்ற உத்தேசம் வந்தது. ராஜப்பிரதிநிதி கையில் சட்டம் நிற்கிறது. அவர் என்ன சொல்லப்போகிறாரோ? எப்படியும்

சந்நிதானங்கள் மனம்போனபடி இனி விசேஷமாகச் செய்யமுடியாது. தகப்பன் பாட்டனுடைய சொத்தை யநுபவிப்பதுபோல அநுபவிக்கமுடியாது. ஒரு ட்ரஸ்டி மாதிரியாவது அதிகாரங் கிடைப்பதற்கே தேங்காய் உடைக்க வேண்டியாய்விட்டது. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையாது போகுமா?

தாழ்ந்தோரை உயர்த்தல்.

(''கரும்புத் தோட்டத்திலே'' என்றது போன்ற இசை.)

மேலைத்தி சையினின் றும்—இங்கு
மேவிய ஆங்கிலப் போதகர் தஞ்செயல்
கண்டுந்தெ ரிந்திலி ரோ (க)

தாழ்ந்த குலத்தினரை—அவர்
தம்மதத் தீடுபெ டுத்திப்பல் கல்வியும்
தக்கபொ ருளுந்தந் து (உ)

எம்மதக் கோவிலு ளே—வந்து
எப்பொழு துந்தொழு வீர்தொழு வீரெனப்
பன்முறை யுஞ்சொலி யே (ங)

ஆர்வமி குந்தழைப் பார்—நம
தாலயத் தன்புசெ லுத்திமெய்ப் பத்தியின்
நீறுபு னைந்த வரைத் (ச)

தேருமி ழுக்கவொட் டேம்—இனிச்
சீர்பெறு மாலய உண்டியல் சேர்பொருள்
யார்பொருள் என்பீ ரேல் (ரு)

நம்மவ ராலென் றும்—உளம்
நைந்தவ ருந்திடும் சாதியர் தந்தன
என்பது நன்குணர் வீர் (சா)

ஆடைது வைத்தளிப் பார்—உடல்
ஆசற வேமழிப் பாருழு வாரெண்ணெய்
ஆட்டியும் மிற்கொணர் வார் (எ)

கீள்பனை யேறிவெல் லம்—தந்து
நித்தலும் நீர்சுவை யோடுணைச் செய்குவர்
தோலையெ டுத்துணர்த் தி (அ)

பாதுகை போல்வன வாம்—பொருள்
பாரிலு ளார்க்குப்ப யன்படு மாறுப
ணிந்துசெய் தேதரு வார் (௯)

பேருப காரமெ னத்—தக்க
பெற்றியொ டுங்கண்ம லத்தைய கற்றித்தி
னந்தினம் தூய்மைசெய் வார் (௧௦)

இத்துணை நன்றியெ லாம்—செயும்
ஏழையர் தம்மைச்சி னந்துவெ றுப்பது
நீதிமு றையா மோ (௧௧)

எந்நன் றி கொன்றார்க் கும்—உய்தல்
எப்பொழு தேனுமுண் டாகுஞ்செய் நன்றியைக்
கொன்றவர்க் கென்றுமி லை (௧௨)

என் றபொய் யாமொழி யார்—மறை
என்னள வேனுமு ணர்ந்தனி ரேலிந்தத்
தீவினை செய்குவி ரோ (௧௩)

சென்றவை செல்குக வே—இனித்
தீயரென் றும்புலை யோர்களென் றும்சொலித்
தாழ்வுப டுத்தா தீர் (௧௪)

கூடுங்கு ழாங்களி லே—அவர்க்
கூட்டிய ழைத்தும தண்டையி ருத்திக்கு
லாவிக்க லந்திடு வீர் (௧௫)

அன்னவர் தம்மினை யுள்—மிக
அன்புட னேகிப்ப யின்றிடு வீரவர்
தம்மைநும் இல்லினு ளே (௧௬)

ஆதர மோடழைப் பீர்—இறை
ஆலயத் தேதடை யாதுமி லாதுவ
ரச்செய்து டன்றொழு வீர் (௧௭)

ஏரிகு ளம்கிண று—நதி
என்பன வற்றிலும் ஐயமி லாதுவ
ழங்கஉ டம்படு வீர் (௧௮)

சத்திரத் திற்கடை யில்—அவர்
தங்களை அன்பொடு சோதரர் போலவ
ரச்சொலி யேகலப் பீர் (௧௯)

உங்கள்க ருத்திருப் பின்—உடன்
உண்டல்ம ணத்தல்செய் தால்மிக நன்மையென்
றேதுமிப் பேருல கே (உ0)

சங்கரன் என்றொரு வன்—இந்துச்
சாதியிற் பஞ்சம ளுகவி ருக்கையில்
தள்ளெனச் சொல்லிடு வீர் (உக)

ஜானெனும் பேர்புனை யின்—அந்தச்
சங்கர னைவரு வீரிருப் பீரெனப்
புன்னகை யோடுரைப் பீர் (உஉ)

தோல்வினை யோனொரு வன்—உங்கள்
தொல்மதத் தேமுரு கப்பெயர் சூடிடச்
சீயெனச் சீறிடு வீர் (உங)

அன்னவன் ஆலிஹூ சேன்—சையத்
ஆயிட வேமுத லாளிச லாமென
ஆவலு டன்பணி வீர் (உச)

நீவிரிவ் வாறவ ரைச்—செயும்
நிந்தையை மெய்யறி வுற்றவர் யாவரும்
முற்றும்வெ றுத்திடு வார் (உரு)

வேதியர் ஆன்கரி நாய்—அதை
மென்றுதின் போரிவர் யாவரு மொன்றென
மேலவர் காண்பரெ ளுக் (உசு)

கீதையிற் கண்ணபி ரான்—மொழி
கேட்டனி ரேலும்ப டித்தனி ரேலுமிவ்
வேற்றுமை காண்குவி ரோ (உஎ)

அங்கமெ லாந்தொழு நோய்—உடன்
ஆவுரித் துண்புலை யோரெனி னுங்குளிர்
கங்கைய ணிந்தவர்க் கு (உஅ)

மெய்யடி யார்களெ னில்—புவி
மீதினில் யாந்தொழுந் தேவரெ னுந்தமிழ்
மாமறை யுந்தெரி யீர் (உகூ)

அன்பெனு மோர்பொரு ளே—சிவம்
ஆகுமெ னுந்திரு மூலர்தம் மந்திரத்
துண்மையு நீரறி யீர் (ங0)

மூப்புறு வைதிக ராம்—மதன்
மோகனர் பஞ்சமர் தங்குறை தீர்த்திட
இந்தும காஸபை யில் (௩௧)

பேசுகை யிற்கண் ணீர்—ஒரு
பேரரு விக்கடல் போலவ டித்தவர்
நம்மதத் துள்ளவ ரேல் (௩௨)

என்றலைப் பாகையி னை—அவர்
ஈரடிக் கீழுறச் சார்த்திவ ணங்கவி
ருப்புடை யேனென் றூர் (௩௩)

சாதிப்ப யித்தியத் தால்—சிலர்
சாற்றுவர் ஆங்கில நாட்டினும் சாதியிற்
றாழ்வுயர் வுண்டென் றே (௩௪)

அவ்வகை சாற்றுதலைச்—சிறி
தாய்ந்திடிற் சாலவும் பேதைமை யாமெனக்
கற்றவர் கூறிடு வார் (௩௫)

என்னையென் றாலங் கே—செல்வர்
ஏழையர் என்றிரு சாதியர் உண்டெனச்
சொல்லுவ துண்மைய ரோ (௩௬)

ஆயினு மேழையர் தாம்—பொருள்
ஆவலொ டீட்டிடிற் செல்வர்கள் ஆகுவர்
அன்னவ ரோடிவ ரும் (௩௭)

உண்டுகொள் வார்கொடுப் பார்—செல்வர்
உற்றகு ழாத்திலொன் றாவிருப் பாருரி
மைக்குறை யொன்றுமி லார் (௩௮)

நாவித ராவிருப் போர்—ஒரு
நாளினிற் செல்வர்கள் ஆயிட லாமிதில்
யாதிடை யூறுமி லை (௩௯)

பாரத நாட்டினி லோ—பெரும்
பாதகஞ் சூதுபொய் வஞ்சனை கள்ளம்
புரட்டிவை யாவுமுற் றுத் (௪௦)

தூய்மையி ரக்கம ருள்—விட்டுத்
தொல்லுயி ருண்மது உண்டொழுக் கஞ்சிறி
தேனுமில் லாரெனி னும் (௪௧)

பார்ப்பனர் பார்ப்பன ரே—அருட்
பண்பொடு நல்லொழுக் கத்தின ராயினும்
பஞ்சமர் பஞ்சம ரே (௪௨)

இப்பெரு நாட்டினி லே—மள்ளர்
ஈகைகுணங்கல்வி கேள்வியொ ழுக்கஞ்சி
றக்கவுள் ளாரெனி னும் (௪௩)

மள்ளர்கு லத்தினின் றும்—ஒரு
மாற்றுய ரச்செய்து சான்றவர் தம்குலத்
தாயினும் சேர்ப்பதுண் டோ (௪௪)

நல்விதி யில்லா த—இந்த
நாட்டினிற் போலத்தொ டாதிரளம் மோர்டிருக்
காதிர்நிற் காதிரென் றெ (௪௫)

வேற்றுமை எந்நா ளுங்—கொள்ளல்
மேலைத்தி சையினும் வேறெந்த நாட்டினும்.
என்றுமுண் டோபுகல் வீர். (௪௬)

மு. கிருஷ்ண சர்மா,
திருச்செந்தூர்.

பத்திரிகை ஆராய்ச்சி.

"யங் இந்தியா" பத்திரிகையில் ஒரு குறிப்பில் ஸ்ரீமாந் ராஜகோபாலாச்சாரியார் பின்வருமாறு எழுதுகிறார்:—

நமது சுய முயற்சியிலேயே நமக்கு நம்பிக்கை வேண்டும். நம்முடைய முயற்சியை அனுபவத்தில் கொண்டுவர என்னென்ன வழிகள் இருக்கின்றனவென்று நமது தலைவர்கள் பலவிதமாக ஆலோசித்தார்கள். கதர் ஒன்றுதான் உத்தமமான வழியாக அவர்களுக்குப் புலப்பட்டது. மற்ற வழிகளெல்லாம் வீணேயாகும். சில தலைவர்களும் சில பத்திரிகைகளும் கதரைவிட்டு பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நாம் எந்த முறையாகப் பார்த்தபோதிலும் கதர் ஒன்றுதான் சிறந்த வழியாகப் புலப்படும். கோபத்தினால் நாம் அதற்குப்பல பெயர்கள்

இடலாம். ஆய்ந்து ஓய்ந்து பார்க்கப்போனால் நமது முடிவுகளுக்கெல்லாம் முடிவாய் நிற்பது. கதர்தான். அந்நிய நாட்டுச் சரக்குகளை அல்லது பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிப்பதென்பது அனுபவத்தில் முடியாது. பிரிட்டிஷார் மனதில் படும்படியாக நாம் ஏதேனும் காரியம் செய்ய வேண்டுமானால் பிரிட்டிஷ் துணிகளை பகிஷ்கரிப்பது ஒன்றினால்தான் முடியும். இப்பொழுது உடனே நாம் கைத்தொழிலை ஆரம்பிக்கமுடியுமானால் பிறருடைய உதவியை எதிர்பாராமல் நாம் துணிக் கைத்தொழிலை மாத்திரம் தான் ஆரம்பிக்க முடியும். இந்தியாவில் பிரிட்டிஷாருடைய நன்மைகள் இந்த வியாபாரத்தில் தான் அடங்கியிருக்கின்றன.

இவ்வாக்கு கவனிக்கப்படத்தக்கதாகும். தற்போது இந்திய மக்கள் அந்நியநாட்டுப் பொருளை நீக்கின வரையில் பயனடையலாமென்பதில் ஐயமில்லையென்றாலும் இங்கிலாந்தில் ஒரு எண்ணத்தையுண்டாக்கவேண்டுமென்றெண்ணினால் அது துணி வியாபாரத்தாலன்றி மற்றொன்றால் முடியாது. துணி வியாபாரமும் நூல் வியாபாரமும் தான் இங்கிலாந்துக்கும் நமக்குமிடையில் பெரும் வியாபாரமாக நிற்கின்றன. கொஞ்சமும் அந்நியருடைய உதவி எதிர்பார்க்கப்படாமலே செய்யக்கூடிய தொழில் கதர் தொழில் ஒன்றுதானென்று கூறிவிடலாம். எளிதுமாகும். இதனால்தான் மகாத்மா இதனை அவ்வளவு தூரம் வற்புறுத்தியிருக்கிறார்.

* * *

பின்வரும் விஷயம் "கமர்ஷியல் இந்தியா" வில் காணப்படுகின்றது:—

அடியில்காணும் எண்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள பெரியமாகாணங்களில் கரும்புவிளையும் பிரதேசத்தைக்குறிக்கின்றன. முன்வருஷம் உ,௩௧உ,000 ஏக்கர்கள் பயிரிடப்பட்டதற்கு இவ்வருஷம் உ,௭௧௫,000 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருக்கிறதென்று மதிப்பிடப்படுகிறது. சாகுபடி ஆரம்பகாலத்தில் சீதோஷ்ண ஸ்திதிகள் சௌகரியமாகவிருந்தன. இப்பொழுதும் அவ்விதமாயிருக்கிறது. இனிமேல் அறுவடை காலத்தின் போக்கைப் பொறுத்ததே.

மாகாணங்களும் சமஸ்தானங்களும்	௧௯உ௩-உ௪. ஏக்கர்கள்.	௧௯உஉ-உ௩. ஏக்கர்கள்.
யுனைடெட் மாகாணங்கள்.	௧,௪௫௪,000	௧,௧௧௯,000
பஞ்சாப்	௪எஎ,000	௪உஉ,000
பீஹாரும், ஒரிஸ்ஸாவும்	உ௮௧,000	உ௬௫,000
வங்காளம்	உ0௮,000	௧௯௯,000
மதராஸ்	௧0௪,000	௧0௬,000
பம்பாயும் ஸிந்தும்	எ௧,000	௬௬,000
அஸ்ஸாம்	௪௧,000	௪௧,000
வடமேற்கு எல்லைமாகாணங்கள்	௩௯,000	௩௫,000
மத்திய மாகாணங்களும் பீராரும்	உ௧,000	௧௯,000
டெல்லி	௯,000	௮,000
பரோடா	உ,000	உ,000
மொத்தம்	உ,எ௧௫,000	உ,௩௯உ,000

* * *

திருநெல்வேலியிலிருந்து வெளிவருகிற "ஆரோக்கியமும் சிசுவின் சுக வாழ்வும்" என்னும் மாத ஸஞ்சிகையில் பின் வரும் விஷயங் காணப்படுகிறது:—

இந்துக்களுடைய விரதானுஷ்டானத்தை அவர்களுடைய முற்பிதாக்கள் ஏற்படுத்தி வைத்திருப்பதானது மிகவும் கடுமையானதாயிருப்பதோடுங்கூட தற்சமயம் வெகு அஜாக்கிரதையுடன் அசட்டை செய்யப்பட்டு வருகிறது. ஏகாதசி விரதமென்றும் பிரதோஷ விரதமென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது நல்லது தான். ஆனால் இந்துக்களில் எத்தனைபேர் இவைகளை மார்க்கசம்பந்தமான கடமைகளாக அனுஷ்டித்து வருகிறார்கள். அவர்கள் அன்றைய தினத்தில் தான் எளிதில் ஜீரணமாகாத விதமாய் எண்ணெய், நெய் சேர்த்து சட்னி சர்க்கரையுடன் தோசையையும் வடை, அடைகளையும் மனதிருப்தியாய் சாப்பிட்டுவிட்டுத்தங்களுக்கு விரதம் என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். இந்துக்களில் சிலர் உண்மை அந்தரங்கமாய் விரத தினத்தை ஒழுங்காய் சரிவர வேதாகம விதிப்படி அனுஷ்டித்து வரலாம். நான் அவர்களைப்பற்றி இங்கு பேசவில்லை. எனினும் பெரும்பாலார் நான்

முன் சொன்ன வகுப்பையே சேர்ந்தவர்களாகின்றனர். இந்துக்களிடத்தில் இன்னொரு விஷயமும் உண்டு. சொல்லத்தவறிவிட்டேன். அதாவது சிலர் விரதம் விரதம் என்று சொல்லி சதா காலமும் பட்டினியாயிருந்து தங்கள் சரீரத்தைக் கொடுத்துக் கொள்கிறார்கள். ஆக இவ்விரண்டு பழக்கங்களுமே நல்லதல்ல. ஒருவருடைய ஆகாரத்தின் நேரத்தையும், அளவையும் வரையறுத்துச் சொல்ல முடியாது. அவரவருடைய சௌகரியத்திற்கே விட்டு விட வேண்டியது. ஆனால் பொதுவாக நம் பெரியோரால் ஏற்படுத்தப்பட்ட பிரகாரம் பதினைந்து நாட்களுக்கொருதரம் விரதம் இருக்கவேண்டும். அல்லது தினம் ஒரு வேளை ஆகாரத்தை —அநேகமாய் காலை ஆகாரத்தை— ஒழித்து விடுவது நல்லது. இவ்விதியானது சுகதேகிகளாயிருக்கப்பட்ட வாலிபருக்குப்பொருந்தாதத்தாயிருக்கலாம். ஆனால் மத்திமப்பிராயம் கடந்தவர்களுக்கு நிரம்பவும் நலந்தருவதாகும்.

விரதத்தின் தத்துவங்கண்டு விரதமிருப்பார் மிகச்சிலராகவேயிருக்கின்றனர். பெரும்பாலார் சோறுண்பதை மாற்றிப் பலகார உணவோடு விரதத்தை முடித்து விடுகின்றனர்! நெறியோடு அனுட்டிக்கப்பட்டால் குறித்த பயன் கிடைப்பது திண்ணம். வழுவழுப்பாக விரதமனுட்டிக்கவே பயனும் பெறமுடியவில்லை. என்றாலும் தற்கால முறையிலாவது விரதமனுட்டிப்பதில் எதேச்சையாகச் சில நன்மைகள் கிடைக்கின்றன. விரதநாளன்று வீடு சுத்தமாக்கப்படுகிறது. புலால் நாற்றமொழிகின்றது. வேறுபலவும் புனிதமாகவிருக்கின்றன. சிறிது தெய்வ நினைப்புமுண்டாகின்றது.

சதங்கையொலி.

போலி நாவல்கள்.

தமிழ் நாட்டில் "நாவல்" மிகுந்துவிட்டது. உலகத்து ஜனங்களைக் கதை யெழுதுவதன் மூலமாகத் திருத்துவது சுலபமேயாகும். திருத்துதற்கு "நாவல்கள்" எப்படி சுலபமாகுமென்று கருதுகிறோமோ அப்படியே கெடுப்பதற்கும் அது எளிதான கருவியாக விருக்கின்றது. இதுகாலை நாவலெழுதுவோர் மலிந்துவிட்டனர். சொற்பப்படிப்புள்ள ஆண் மக்களும் பெண் மக்களும் நாவலையே படித்துக்கொண்டிருக்கின்றனர். ஒழிந்த நேரத்தில் ஏதாவது கதைப் புத்தகம் படிப்பதால் நன்மையே கிடைக்கும். ஆனால் ஒரு சில அறிவாளிகள் எழுதுகிற நாவல்களைத்

தவிரப் பெரும்பாலும் கழிபட்ட நாவல்களே வெளிவருகின்றன. இவற்றுள் கொலை, களவு, துப்பறிதல், வியபிசாரம், வரம்பில்லாத சுதந்திரம், இவைகள் மலிந்து கிடக்கின்றன. இவையில்லாவிட்டால் கண்டிப்பாக இந்த நாவல்கள் எழுந்திருக்கமாட்டா. இலக்கண வாசனை இலக்கிய வாசனையில்லாத பலரும் நாவலாசிரியராகின்றனர். இவை மிகுந்துவிட்டபடியால் மக்களுடைய படிப்புப் போலியாகி விடுகிறது. அறிவாளிகள் எழுதுகிற உயர்ந்த புத்தகங்கள் பரவாததற்கு இஃதோர் காரணமாகுமென்றுகூடக் கூறலாம் போலிருக்கிறது. இந்தப் போலி நாவல்களிற் சில சிபார்சுகளின்மேல் பள்ளிக்கூடங்களிலும் ஆதிக்கஞ் செலுத்த ஆரம்பிக்கின்றன. இவைகளைப் பரிசீலனைசெய்ய அரசாங்கத்தார் முன்வருவார்களா?

பதினேழுலட்சம் அநாதைகள்.

ஜப்பானில் நிகழ்ந்த பெரிய பூகம்பத்தின் பயனாகப் பெரு நஷ்டமுண்டாகிவிட்டது. ஜப்பான் கவர்ண்மென்டார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையினால், வீடில்லாமல் டோகியோ (தலைநகர்) நகரில் மட்டும் பதினேழு லட்சம் பேர் திண்டாடுகிறார்களென்றும், இவர்களின் நஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு ஆயிரம் லட்சம் என் (ஒரு நாணயம்) உடனே வேண்டியதிருக்கிறதென்றும் தெரிய வருகின்றன. ஆசியா கண்டத்தில் மிகச்செல்வாக்குப்பெற்றிருந்த ராஜ்யம் ஜப்பானேயாகும். ஜப்பானின் அபிவிருத்தியினால் ஐரோப்பியர்கள் ஆசியாக்காரரிடத்தும் மதிப்பு செலுத்த ஆரம்பித்தனர். வல்லரசாக விளங்கிய ஜப்பான் இதுகாலை மெலிந்திருக்கின்றது. இது சரியான நிலைக்கு வர இன்னும் பத்து வருஷத்துக்கு மேலாகுமென்று சில நிபுணர்கள் கூறுகின்றனர். ஜப்பானின் வீழ்ச்சி காரணமாக, சிங்கப்பூரில் ௧௧௦ லட்சம் பவுன் செலவில் ஏற்படவிருந்த கடற்படை ஸ்தாபனம் இனி அவசியமாயிராதென்று பிரான்ஸ் தேசத்தில் பலர் அபிப்பிராயப் படுகின்றனராம்.

சரஸ்வதி பூஜை.

ஐப்பசிமீ உ௨ சரஸ்வதிபூஜை வருகிறது. இவ்விழாவை சைவர் வைணவர் முதலிய இந்து மக்கள் யாவரும் கொண்டாடி வருகின்றனர். அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதி தேவியின் திருநாள் உலகத்திலுள்ள, அறிவைவேண்டும் மக்கள் யாவருங் கொண்டாட வேண்டியதாகுமன்றோ? இவ்வம்மையின் திருவிழாவானது பழயவழக்கம்பற்றி குறித்த தினத்தன்று ஏடுகளை அடுக்கி வணங்குவதோடு ஏதாவது பலகாரம் தின்றுவிட்டு முடிக்கப் பெறுகிறது. புராதன ஏடுகளை அன்போடு வணங்குவது போற்றத்தக்க முறையே யாகும். எனினும் நம் நூல்களை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களுடைய அறிவு விளங்கச் செய்வதற்கும் இந்நாளில் கடகால் போட வேண்டும். பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவும், பழய நூல்களை வெளியிடவும், அறிவை விளக்கும் கழகங்களைக் காணவும் முயலல்வேண்டும். இதுதான் உண்மையான சரஸ்வதி பூஜையாகும்.

குமரன் அநுபந்தம்.

உ

சிவமயம்.

தேவகோட்டை திருவாளர்

அரு. அரு. சோம.

சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்

சரித்திரம்.

திருவாளர்

பொ. முத்தையாபிள்ளையவர்கள்

எழுதியது.

சிவமயம்.

தேவகோட்டை சைவத் திருவாளர்,

அரு. அரு. சோம.

சோமசுந்தரஞ்செட்டியார்

சரித்திரம்.

செல்வமனைத்தும் மல்கிச் சிறப்புற்றோங்கும் பாண்டிநாட்டின் கண்ணே சீரும் சிறப்பும் மிக்கோங்கும் தேவிகோட்டை என்னும் நகரத்தின்கண் தனவைசியர் குலத்தில் இலுப்பைக்குடிக் கோவிலைச் சார்ந்த அருணாசலஞ் செட்டியாரென்னும் திருநாமம் வகிக்கப் பெற்ற பெரியார் ஒருவர் இருந்தனர். இவருக்குக் கற்பில் அருந்ததிபோன்ற அலர்மேல்மங்கை என்னும் அம்மையார் வாழ்க்கைத்துணை நலனாயிருந் தார். இவ்விருவரும் பூவில் மணமும் எள்ளில் எண்ணெய்யும் பழத் தினிரதமும்போல நீங்காத அன்புடையராய் இல்லறத்தை இனிது நடாத்தி வந்தனர். அதுவேயுமன்றி சைவ நூலாகிய சிவஞானபோத முதலிய சாத்திரங்களையும் தேவார முதலிய தோத்திரங்களையும் நன்கு ப்பின்று தெய்வங்களுள் மேலாய சிவபெருமானிடத்து அன்புபூண்டு ஒழுகுவாருமாயினர்.

இவ் வருணாசலஞ்செட்டியாருடைய அன்னையார் இப்பெரியாரை ப்பெறுதற்கு முற்பிறப்பில் அருந்தவம் முயன்றுள்ளார் என்பதுகூறா மலே விளங்குமாதலின் அவ்வருந்தவப்பயனால் உண்டாம் இப்புத்திரப் பேறேயன்றி அறிவின் முதிர்ச்சியால் அழகிய தட்பமுடைமைகாரண மாக அந்தணரெனும் பெயர்பெற்றுள்ளாரிடத்து அழகிய தட்பமுடை யராய் அவர்கள் பசிநோய் தீர்தற்கு வேண்டும் அரிசி முதலியன ஊரில் வசிக்கும் பிராமணர்களுக்கு வேலையாள் வசம் அனுப்பியும் வழிச்செல் லும் பிராமணர்களுக்கு இப்பொழுது சத்திரமிருக்கும் இடத்திற்கரு கிலுள்ள ஓர் பிராமணருடைய வீட்டில் அரிசி முதலியன கொடுத்து அவர்களைக்கொண்டு பாகம் செய்து உதவும்படிக்கும் இவ்வாறு நாடோ றும் செய்து வருவாராயினர். "அற்றார் அழிபசிதீர்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி" என்னும் திருக்குறளுக்கு இலக்கிய மான இவ் வரும்பெரும் செயலைத் தெரிந்த அருணாசலம் செட்டி யார் தன்னுடைய தாயாரைப் பலவாறு புகழ்ந்து இங்ஙனம் செய்துவரு தலால் இதனை யறிந்தாரே யன்றி அறியாதாரும் பசிநோய் நீங்கப்பெ

ரூர் என்றுணர்ந்து எவரும் பசிநோய் நீங்கி உய்தற் பொருட்டு தேவி கோட்டையில் அன்னசத்திரம் ஒன்றை ஸ்தாபித்தனர். அங்கு வருவோர் ஸ்நாநம் செய்தற்கு அதன் முன்னர் ஒரு குளமும் தொட்டு சிவதெரிசனம் செய்தற்கு அக்குளத்தருகே ஓர் விநாயகர் ஆலயமும்பிரதிட்டை செய்தனர்.

இவ்வாறு அந்தணர் பசிநோய் தீர்தற்கான சத்திரம் அமைத்தது டன் சிவநேசச் செல்வர்களான சைவ சீலர்கள் பசிநோய் தீர்தற்பொருட்டு சைவாச்சாரியர்களுள்ளிட்ட நாயன்மார்களுக்கு அவரவர்கள் திருநக்ஷத்திரத்தில் விசேட பூஜை நைவேத்தியங்கள் செய்து அந்த நைவேத்தியத்தைச்சைவர்கள் புசித்துய்யும் வண்ணம் குருபூஜைமடம் ஒன்றும் தாபித்தனர். மேற்சொல்லப்பெற்ற சத்திரத்திற்கும் மூலதனமாக கிராமம் வாங்கியும் இவ் வருணாசலம் செட்டியாரைச் சார்ந்த மெ. வகைப் பெரியார் அனைவரும் பொருளுதவி புரிந்தனர். ஆயினும் சத்திரம் தாபித்ததற்குக் காரணர் இவரே யாதலின் இவருக்கு சத்திரம் செட்டியார் எனவும் சத்திரம் அருணாசலம்செட்டியார் எனவும் பெயர்கள் வழங்கி வருவனவாயின. இதன் பின்னர் திருவாரூரிலும் தம் வகையருப் பொதுவில் ஒரு குருபூஜைமடம் தாபித்து செவ்வனே நடைபெறச் செய்தனர்.

மற்றும் தனவைசியர்களுள், தங்கள் பொருளோடு பிறர் பொருளையும் பெற்று திருப்பணி முதலியன செய்ய எண்ணுவோர் தாம் எண்ணிய பண்ணியம் எண்ணியவாறு முடிய இப்பெரியாருதவும் கைப் பொருளையே பேராக்கம் என முதன்மையாகப்பெற்று அதனுல் தாம் தொடுத்தசெய லினிது முற்றுப்பெறக் கண்டு மகிழ்வர்.

இவ்வாறு தனவைசியர்கள் திருப்பணி முதலியன செய்யும் வண்ணம் ஊக்குவித்து தாமும் திருப்பணி முதலிய பல தருமங்களை எப்பொழுதும் செய்து வருவாராயினர்.

சோமசுந்தரஞ்செட்டியார் பிறப்பு.

ஷை அருணாசலஞ் செட்டியாரவர்களுக்கு நற்குண நற்செய்கைகளமைந்த இவர் மனைவியாரிடத்து "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதனன்கல னன்மக்கட்பேறு" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் இராமநாதஞ்செட்டியார் சோமசுந்தரஞ் செட்டியார் என்னு மிருபிள்ளைகளும் பெண்கள்மூவரும் பிறந்தனர். இவர்களுள், சோமசுந்தரஞ்செட்டியார் துன்மதிளு ஆடிமீ௨௨ சோமவாரம் உத்திராட நக்ஷத்திரம் உதயாதிநாழிகை நாலரையே அரைக்காலுக்கு சிம்ம லக்கினத்தில்

பிறந்தனர். இவர் பிறந்ததும் இவருக்குப் பின்னர் உண்டாகும் அறிவினழகை திருவருள் முன்னரறிவிக்க அறிந்து சோமசுந்தரம் என்னுந் திருநாமம் புனைவித்தனர். இக்காரணத்தால் இவருடைய தந்தை தாயர்கள் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் திருவாக்குக்கு இலக்கியமாயினர். அறி தெய்வமென்பது அறியப்படுந் தெய்வமென்னும் பொருளில் வந்ததேனும் இவ்விடத்திற்கேற்ப அறியும் தெய்வம் என பொருள் கொள்ளுதலு மிழுக்காது. இங்ஙனம் நாமகரணஞ் சூட்டப்பெற்று வளர்ந்து வருநாளில்,

வித்தியாரம்பம்.

ஐந்தாமாண்டில் கல்வி கற்கும் வண்ணம் வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்றனர்.சிறிது காலத்துள் தமிழில் எழுதவும் படிக்கவும்தெரிந்து கொண்டபின்னர் இலக்கண இலக்கியங்கற்றுத் தேர்ச்சியடைதற் பொருட்டு தம்முடைய 18-வது வயதில் யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர். திரைகடலோடியும் திரவியம்தேடு என்னும் திருவாக்கில் திரவியம் என்பதற்கு பொருளல்லவற்றைப் பொருளென்றுணராத பெரியார் ஆதலின், சிவபரம் பொருளே பொருளென்றுணர்ந்து அதனை யுணர்த்துவார் எங்குளராயினும் அங்குச்சென்று பெறவேண்டுமென அத்திருவாக்கிற்குப் பொருள்கொண்டாரென்பது கல்விகற்றற் பொருட்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்றமையால் இனிது விளங்கக் கிடக்கின்றது. யாழ்ப்பாணத்துக்குச் சென்றதும் சித்தாந்த சைவசீலராகிய சைவத்திருவாளர் ஆறுமுகநாவலரவர்களிடத்துக் கல்விகற்ற சிவஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்களிடத்துச்சில வருடங்கள் அமர்ந்து கல்விபயின்று வருவாராயினர். பயிலுங்கால் "எண் பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய் நுண்பொருள் காண்பதறிவு" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் கற்பிக்கப்படும் அரும்பெரும் விஷயங்களை எளிதிலறிந்து கொள்ளும் வன்மையுடையராயினர்.

கல்யாணம்.

முதலாவதாக லெக்ஷிமி அம்மையாரை விவாஹம்செய்து சில வருடங்கள் சென்றும் புத்திரப் பேறில்லாமையின் அதனிமித்தம் இரண்டாவதாக காந்திமதி யம்மையாரை மணஞ் செய்தனர். இவ்வம்மையார் "மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கையினையும் நாயகனுடைய வருவாய்க்குத் தகுந்த செலவினையும் உடையராய் விளங்கினர். "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் மாண்பு

டைய இவ்வம்மையாரை மணந்ததும் நலங்களனைத்தும் சிறந்து நிறைந்தன. "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன், நன்கலம் நன்மக்கட்பேறு" என்னும் திருக்குறளுக் கிலக்கியமாய் இவ்வம்மையாருக்கு அருணாசலஞ் செட்டியார் இராமநாதன் செட்டியார் அலர்மேல் மங்கை சுந்தரேசன் செட்டியார் இலக்குமணன் செட்டியார் என்னுமைவரும் முறையே உற்பவித்தனர். "தெய்வந்தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் இவ்வம்மையார் நித்திரைவிட்டெழுங்காலத்து தம்முடைய நாயகனைத் தொழுதெழுந்து பின்னர் இல்லத்துக்கு வேண்டுங் காரியங்களை நாடோறும் நடாத்திவரும்உத்தம சிரோமணியாய் விளங்கினர். இன்னும் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் தன்னைக் கற்பினின்றும் வழுவாமற் காத்தலினும் தன்னுடைய நாயகனை உண்டி முதலியவற்றாற்பேணுதலினும் இருவரிடத்திலும் நன்மையமைந்த புகழைக்காத்தலினும் சிறிதும் தவறாதவராய் விளங்குவாராயினர். "அன்புமறனு முடைத்தாயினில் வாழ்க்கை பண்பும்பயனுமது" என்னும் திருக்குறளுக் கிலக்கியமாய் சோமசுந்தரஞ் செட்டியாரும் தம்மனைவியா ரிடத்துச் செய்யத்தகுமன் பினையும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடையவராய் வாழ்வாராயினர். இவ்வம்மையாரை மணந்துகொண்ட சிலவருடங்களின் பின் முதலாவது மனைவியார் சிவபதம் அடைந்தனர். அதன் பின்னர் இவ்வம்மையாரும் பரிதாபிவருடத்தில் யாவரும் பரிதபிக்கும் வண்ணம் இம்மண்ணுலகை விட்டு சிவபதமடைய மூன்றாவதாக அலர்மேலம்மையாரை மணஞ்செய்தனர். இவ்வம்மையாருக்கு இலக்குமி காந்திமதி என்னும் இரண்டு பெண்மணிகள் பிறந்தனர்.

தீக்ஷையும் சிவபூஜையும்.

சைவ சமயத்தை யநுட்டிக்கும் குலத்திலே பிறந்தாலும் சிவ தீக்ஷையின்றி சைவசமயாசாரங்களை அநுட்டித்தலும் சைவ நூல்களைப் படித்தலும் கூடாவாதலின், யாழ்ப்பாணமிருந்து தேவிகோட்டைக்கு வந்தபின்னர் தமதுகுலகுருவாய் விளங்கும் பாதரக்குடி ஸ்ரீலஸ்ரீசுவாமிகளிடத்து சமயதீக்ஷையும் சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ முருகப்பட்டாரகர்அவர்களிடத்து விசேட தீக்ஷையும் திருவாசக பூஜையும் பெற்றுக்கொண்டனர்.

சைவநூல் பயிலல்.

தேவிகோட்டையில் தம்முடைய தந்தையாராற்றாபிக்கப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையில் உபாத்தியாயர்களா யிருந்த பூண்டி

நாகலிங்கம்பிள்ளை ய்வர்களிடத்து முன் யாழ்ப்பாணத்திற்கேட்ட இலக்கண பாடத்தை இரண்டா முறையாகவும் வேலுமயிலுவாகனச் செட்டியாரவர்களிடத்து பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் திருக்குறள் முதலிய சைவ இலக்கியங்களையும் ஞானசித்திப் பத்திராதிபர் சி. தாமோதரம்பிள்ளையவர்களிடத்து சித்தாந்த சாத்திரங்களையும் நாகபட்டினம் ஸ்ரீலஸ்ரீ சாமிநாததேசிகர் அவர்களிடத்து தேவார திருவாசகங்களைப் பண்முறையோடும் பயின்றனர். "நித்தியபூஜையும் பாராயணமும்" "கற்க கசடறக்கற்பவை கற்றபி னிற்க அதற்குத் தக" என்பது திருக்குறளாதலின் தாம்கற்ற நூல்களினுலுண்டாகிய அறிவின் பயனும் நாடோறும் திருவாசக பூஜையும் திருவைந்தெழுத்தின் செபமும் முற்பகலிற் செய்து பின்னர் உணவருந்தி பிற்பகலில் பண்ணோடு பாடத்தகும் ஒருவரைக்கொண்டு பன்னிரு திருமுறைகளையும் பாடச்செய்துகேட்டு, கேட்குங்கால் "ஆட்பா லவர்க் கருளும் வண்ணத்தையும் ஆதிமாண்பையும்" நினைந்துநினைந்து கசிந்துகசிந்து அனலிற்பட்ட வெண்ணெபோல மனமுருக ஆனந்தக்கண்ணீர் ததும்ப சிவபெருமான் திருவடியில் ஈடுபட்டுப் பரவசமாவர். இங்ஙனம் தாமின்புறுதலேயன்றி "தாம் பெற்றவின்பம் பெறுகவிவ் வையகம்" என்னும் திருவாக்கிற்கு இலக்கியமாய் பிறரும் இன்புற எண்ணி அவர்களையும் சைவநூல் பயிலும்படிக்கும் சிவதீக்ஷைபெற்று சிவபூஜை செய்யும்படிக்கும் சிவபுண்ணியங்களைச் செய்யும்படிக்கும் இதோபதேசம் செய்துவருவர். தேவாரத்தில் உள்ள ஆராய்ச்சி மிகுதியை அறிந்து மிகுந்த சந்தோஷமெய்தி இவருக்கு தேவாரக்களஞ்சியம் என்னும் ஓர் பெயர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டாரசந்நிதிகளும் சூரியனார்கோவில் ஆதீனகர்த்தராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக பண்டாரசந்நிதிகளும்வழங்குவாராயினர்.

திருப்பணி செய்தல்.

திருவாடானை தண்டலச்சேரி காரைக்காலுக்கு அடுத்த தருமபுரம் கடம்பூர் திருக்கழிப்பாலை முதலிய பல சிவதலங்கள் இவர்களின் தந்தையாரால் திருப்பணி ஆரம்பம் செய்யப்பெற்று இவர்கள் காலத்தில் முற்றுப்பெற்று கும்பாபிடேகம் செய்யப்பெற்றன. இவர்கள் காலத்தில் சொந்தத்திலிருந்து திருவண்டுதுறையும் நேமங்கோவில் முத்தைய அய்யா என்று வழங்கப்பெற்ற முத்தையா செட்டியாரால் சிவாலத் திருப்பணிக் கென்று மூலதனமாகத் தங்களிடம் தந்து வைத்திருந்த தொகையை அபிவிருத்திசெய்து அதனோடு தமது பொருளையும் சேர்த்து முத்துப்பேட்டையும் திருப்பணி செய்வித்துக் கும்பாபிடேகம் செய்வித்தனர்.

பொருளீட்டல்.

"அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து தீதின்றிவந்த பொருள்" என்பது திருக்குறளாதலின் பிறவியிலே செல்வமுடையராகிய இவர் மேலும் அபிவிருத்தி செய்தற்பொருட்டு பலவூர்களிலும் ஜீனி அரிசி நூல்மில்கள், இரும்பு முதலிய கம்பனிகள், வட்டித் தொழில் முதலிய வியாபார தலமமைத்து ஆங்காங்கு ஏஜண்டுகளை அனுப்பி அறனெறியில் பழிக்கஞ்சிப் பொருளையீட்டினர். வியாபாரத் தலத்திற்குப் போய்வரும் ஏஜண்டுகளுக்கும் ஏனையோருக்கும் அவர்கள் விருப்பத்திற்கு அதிகமாகவே கொடுத்துதவும் உதாரத்துவமுடையரா யிருந்தமையின் இவர்களுடைய ஏஜண்டுகளும் ஏனையோரும் பிறரை எதிர்பார்க்கும் குறையில்லாத பெரும்பாக்கியம் உடையராயினர். அன்னாரிடத்து ஏதேனும் குறை காணப்படின் அக்குறையைத் தெரிந்துகொள்ளும் ஆற்றலில்லாத குறையுடையராகத் தன்னை அன்னார் நினையாதவண்ணம் அக்குறையை அவர்க்கு எடுத்துக்காட்டி சிவன்செயலாலே யாதும் வரும் என்னும் தெளிவுடையராதலின் இக்குறையும் அவனருட் செயலாமெனத்தேறி அதற்காக அன்னாருக்கு யாதொரு குறையும் செய்யாதிருக்கும் நிறையுடையராய் விளங்கினர்.

கொடை கொடுத்தல்.

கொடையென்பது தானம் தருமம் என்று இருவகைப்படும். அவற்றுள் தானமாவது சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானச் செல்வருக்கு வேண்டுவன கொடுத்தல். தருமமாவது வறியராய் வந்திரந்தோர்க்குக் கொடுத்தல். தண்டாம லீவதே தாளாண்மை தண்டியடுத்தக்கா லீவதே வண்மை—யடுத் தடுத்துப் பின் சென்றாலீவதே காற்கூலி" என்னும் திருவாக்கை நன்குணர்ந்தவராதலின் ஏற்பவர் இரக்குமுன் அவர் குறிப்பறிந்து கொடுத் துதவுவராயினர். அங்ஙனம் கொடுக்குங்காலத்து "இலனென்னு மெவ்வ முறையாமை யீதல் குலனுடையான் கண்ணே யுள" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாய் எந்தச் சமயத்தில் வரினும் இல்லையென்று சொல்லாமலும் கொடுத்துதவுதலும் உடையராய் விளங்கினார். இன்னுமொருவரிடத்துச்சென்று இரவாதவண்ணம் கொடுத்தல் என்பதும் இல்லை யென்னுங் குறையை வந்தவன் சொல்லுமுன்னர் குறிப்பறிந்து கொடுத்தலென்பதும் வந்தவர் சொல்லும் குறையை பிறரிடத்துச் சொல்லாது கொடுத்தலென்பதும் பொருளாகுமாதலின், அப்பொருள் அனைத்தும் இப்பெரியாரிடத்து இயல்பாக அமைந்து விளங்கின.

சைவசமய பரிபாலனம்.

இவர்கள் வாழ்நாளில் சைவசமய சம்பந்தமான நூல்கள் அச்சிட வேண்டுமென்று விரும்பின பலருக்கும் அச்சிடுதற்கான பொருளுதவி புரிந்துவந்தனர். ஸ்ரீ நீலகண்ட பாடியம் அச்சிடுதற்காக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்களுக்கு ரூபாய் ஆயிரமும் பெரிய புராணம் புதிய உரையுடன் அச்சிடுதற்காக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகளுக்கு ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறுங்கொடுத்துதவினர். புறச்சமயிகள் சைவநிந்தனை செய்யின் அவரை யடக்குதற்பொருட்டு வேண்டுவன வெல்லா முதவி சைவசமய ஸ்தாபனம் செய்துவந்தனர். சைவநிதி யெனப்படும் சிவாகமங்களை சைவ சிவாசாரியர்கள் பயிலும் வண்ணம் தம்மினத்தவருடைய பொருளுதவியையும் தமது பொருளையும் கொண்டு மாயூரத்தில் சிவாகம பாடசாலை தாபித்துள்ளார். இதுவேயுமன்றி சிவாகமங்களைத் தேடிக்கொணர்ந்து அச்சிடுதற்காக சிவாகம ஜீர்ணோத்தாரண மூலதனம் என்னும் பெயரால் தங்கள் வகையிலுள்ளார் பொருளுடன் தங்கள் பொருளும் சேர்த்து ஒரு பெரும் பொருள் வைத்து சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கமொன்று தாபித்து அதற்குப் பல பிரபுக்களை அங்கத்தினராகச் சேர்த்து மேற்சொன்ன சிவாகம ஜீர்ணோத்தாரண பண்டிலிருந்து வருடந்தோறும் சிலதொகை இச்சங்கத்திற்குச் கொடுக்கும்படி செய்து சிவாகமங்களை அச்சிடும்வண்ணம் செய்துள்ளார்.

ஜமீந்தார்ப் பட்டம்

இயல்பாகத் தமக்கிருந்த கோவிந்தமங்கலம் கிராமத்துடன் காரக் கோட்டைக் கிராமத்தையும் கிரயத்துக்கு வாங்கினமையால் இவை இரண்டு கிராமங்களும் ஆட்சிபுரியும் நிலைமையில் ஜமீந்தார்ப் பட்டம் வழங்கப்பெற்றனர்.

சஷ்டியப்த பூர்த்தி சாந்தி.

தம்முடைய (௬௧) வது வயதில் கண்டதேவியிலும் (௬௦) வது வயதில் சிதம்பரத்திலும் (௬௧)வது வயதில் திருவொற்றியூரிலும் சாத்திரவிதிப்படி தக்கபெரியோரைக்கொண்டு மிகச்சிறப்பாய்ச் செய்தனர்.

காசி யாத்திரை

தம்முடைய (௬௦) ம் ஆண்டுக்குள் பல சிவதலங்கள் சென்று சிவ தெரிசனம் செய்த புண்ணிய விசேடத்தால் சிவதலங்களுள் முதன்மையான காசிநகரை யடைந்து அங்கே செய்யவேண்டும் பஞ்சக்த

ரோசயாத்திரையும் பிரயாகையாத்திரையும் செய்து ஸ்ரீ விஸ்வேசுரருக்கும் விசாலாக்ஷி யம்மையாருக்கும் அபிஷேக முதலியன மிகச் சிறப்பாய்ச் செய்வித்து அங்கே சிலநாள் வசித்து அம்மையப்பருடைய திருவருளைப்பெற்று மீண்டு தேவிகோட்டை வந்து சேர்ந்தனர்.

திருவாரூர்த் திருப்பணி

திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கும் அடியேன் என்று ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழப்பெற்ற திருவாரூர்ச் சிவாலயத் திருப்பணியைச் செய்வதற்கு தன்னுள்ளத்தெண்ணி ஏனைய திருப்பணிகளெல்லாம் நாமே செய்துமுடித்தோமாதலின் இப்பெரும் திருப்பணியை நம்முடைய பிள்ளைகள் செய்துமுடித்து புண்ணியத்தையும் புகழையும் பெற்றுய்க வென்று எண்ணி தம்முடைய மூத்த குமாராகிய கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த அருணசலம் செட்டியாரை திருவாரூருக்கு அனுப்பி திருப்பணிக்கு ஆரம்பமுகூர்த்தம் செய்யும்படி செய்தனர். அவ்வாறே அருணசலம் செட்டியார் திருவாரூருக்குச் சென்று முகூர்த்தம் செய்துவந்தனர். பின்னர் வேண்டுவன செய்தற்குத் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

சிவபதம் அடைதல்.

சிதம்பரத்தில் தம்முடைய தந்தையார் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தமையால் தாமும் அவ்வாறே அத்திருப்பதியில் வசித்து சிவபதம் அடையவேண்டுமென்ற பெருநோக்கமுடையராய் சோதிடர்களைக்கொண்டு தம்முடைய ஆயுளைப்பற்றிப் பலகாலும் ஆராய்வாராயினர். எத்துணை நுண்ணறிவுடையராயினும் அறிவேன் என்று எண்ணுவார்க்கு அகப்படாது அப்பாற் பட்டு விளங்குவதே திருவருளின் இயற்கைத் தன்மையாதலின் அறுதியிடுவேன் என்றெண்ணிய சோதிடர் அனைவருக்கும் இவர் ஆயுளை அறுதியிட்டுக் கூறுதல் அரிதாயிற்று. இந்த நிலைமையில் எந்நாளிருப்பினும் இறப்பது நிச்சயம் என்னும் திருவாக்கை உள்ளத்தெண்ணி,

"அவா வென்ப வெல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பீனும் வித்து" என்னும் பொய்யாமொழியை மெய்யாகக்கொண்டு சிவபெருமான் திருவடியில் இடையறாது பதிந்த சிந்தையுடையராய் வாழு நாளில் ஸ்ரீ ஆலவாயுடையாருக்கும் ஸ்ரீமீனும்பிகைக்கும் பெருஞ்சாந்தியென்னும் மகா கும்பாபிடேகம் நிகழ்வதை அறிந்து ஆங்குச்சென்று கும்பாபிடேக தெரிசனம் செய்து ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளால் "நம் செந்தின்மேய வள்ளிமணாளன்" என்று புகழப்பெற்ற செந்தின்

மாநகரை யடைந்து முருகப் பெருமானுக்கும் ஸ்ரீ வள்ளியம்மை தெய்வயானையம்மையாருக்கும் செய்தருளப்பெற்ற மகா கும்பாபிடேகமும் தெரிசித்து அங்கிருந்தவாறே கன்னியாகுமரி திருவனந்தபுரம் முதலிய திவ்விய தலங்களையும் தெரிசித்து ஸ்ரீ சங்கரநாராயணர் கோவிலுக்குச் சென்று அங்கே நடைபெறும் ஆடித் தபசுத் திருவிழாவை தெரிசிக்கும் முறையில் தேவாரகோஷ்டியை அடைந்து ஓதுபவர்கள் ஓதும் முறையில் பண் பேதங்களைத் தெரிந்து இவ்வாறு பாடவேண்டுமென்று தெரிவித்து பேரானந்தக்கடலில் மூழ்கிவரும் நாளில் ஓர்நாள் அன்று நடைபெறவேண்டிய திருவிழாவின் றெரிசனம் முடிந்து தமது இல்லத்திற் சென்றதும் சரீரம் அசௌக்கியம் சிறிது நேர்ந்தமை யுணர்ந்து இனிச் சரீரம் நிலைபெறு தென்பதைத் திருவருளாலறிந்து, இங்குள்ளார் எவரோடும் எதுவும் பேசுதல் இனி அடாதெனத் துணிந்து மௌனமாயினர். இதனைத்தெரிந்த பரிசனங்கள் வைத்தியர்களைக் கொணர்ந்து நாடிகளைச் சோதிப்பார் ஆயினர். மனம் ஒருவழிப் படின் பிராணன் அடங்கும். பிராணன் அடங்கில் நாடி புலப்படாது. இப்பெரியாருடைய மனம் சிவபெருமான் றிருவடியிலீடுபட்டிருந்தமையின் வைத்தியர்களுக்கு நாடி புலப்படாமையால் அபாயநிலையி லிருக்கிறதென்று கூறினர். அது தெரிந்த பரிசனங்கள் மிக வருந்தி இவர்கள் அருமைப்புதல்வர் மூவருக்கும் தெரிவித்தனர். இம்மூவரும் சங்கரநாராயணர் கோவிலுக்குவிரைந்து சென்றனர். இவர்களிடத்தும் ஒருவார்த்தையும் பேசவில்லை. அச்சங்கரநாராயணா கோவிலும் முக்கிய சிவதலமேயாயினும் தங்களுடைய வியாபாரத்தலமாயும் பாடல் பெற்றதலமாயும் உள்ள திருநெல்வேலி க்ஷேத்திரத்திற்குச் சென்றால் அங்குஅநேக சௌகரியங்கள் உண்டென வெண்ணியும் பிரபல வைத்தியரைக்கொண்டு பார்க்கச்செய்யலாமென் றெண்ணியும் திருநெல்வேலிக்கு அழைத்துச்சென்றனர். அங்குச் சென்ற பின்னரும் தாம் முன்னிருந்தவாறே மௌனமாயிருந்தமையால் வைத்தியர் எவராலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. சைவசமயிகள் தம் சமயத்துக்கு ஓர் பெருங்குறை நேர்ந்துவிட்டதேயென வருந்தவும் ஏனையோர் ஒவ்வொருவரும் தம்முடைய தாய்தந்தையரைப் பிரிந்தாலொப்பவருந்தவும் ருத்ரோத்காரி௵ ஆடி௴ ௧௬உ செவ்வாய்க்கிழமை பகல் ௧௦-நாழிகைக்கு ஸ்ரீ காந்திமதியம்பா சமேத வேணுவனேஸ்வரர் திருவடி யென்னுஞ் சிவானந்தப் பெருவாழ்வை எய்தினர்.

உ
சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு ஐப்பசி மீ	மணி எ.

வணக்கம்.

சிவபெருமான்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

—காரைக்காலம்மையார்.

முருகக்கடவுள்.

அருவரை யெடுத்த வீர னெரிபட விரற்க ளூனு
மானிட மிருக்கு மாயி யருள்வோனே
அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு
மணிமயில் நடத்து மாசை மருகோனே
பருதியி னொளிக்கண் வீறும் அறுமுக நிரைத்த தோள்ப
ணிருகர மிகுத்த பார முருகாநின்
பதமல ருளத்தி னூளும் நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே
சுருதிக ளுரைத்த வேத னுரைமொழி தனக்கு ளாதி
சொலுவென வுரைத்த ஞான குருநாதா
சுரர்பதி தழைத்துவாழ அமர்சிறை யனைத்துமீள
துணிபட அரக்கர்மாள விடும்வேலா
மருமலர் மணக்கும்வாச நிறைதரு தருக்கள்சூழும்
வயல்புடை கிடக்குநீல மலர்வாவி
வளமுறு தடத்தினோடு சரஸ்வதி நதிக்கண்வீறு
வயிரவி வனத்தில்மேவு பெருமானே.

—அருணகிரிநாதர்.

தென்னாட்டுப் பாளையக்காரர்.

[௨௪௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

மேஜர்பானர்மான் உத்தரவுப்படி இடித்துத் தரைமட்டமாக அழிக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சி கோட்டையானது திரும்பவும் ஆறே நாட்களில் முன்னிருந்ததிலும் பலமான அரண்களுடனும் பீரங்கிகளுடனும் கண்டோர் வியக்குமாறு எழுந்து நின்றதைப் பார்த்ததும் திகிலடையாதார் யாவர்? கம்பெனியாரிடம் ஒப்புவிக்கப்படாமல் ஒளித்து வைக்கப்பட்டிருந்த அஸ்திர சாஸ்திரங்கள் யாவும் இப்போது பாஞ்சாலங்குறிச்சிகோட்டை யலங்கத்தில் காவலிருந்த போர்வீர்களின் கையில் துலங்கின. கம்பெனியார் வசமாக்கப்பட்ட பாளையங்களின் பிரஜைகள் இரண்டு வருஷம் அமைதியான வெறுப்புற்று இன்னொருமுறை ஆங்கியலேயருடன் எதிர்த்துநிற்பதில் மிகுந்த குதூகலமடைந்திருந்ததாகத் தெரியவந்தது.

இங்கு ஆறுநாட்களில் எழுப்பப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையின் அமைப்பைப்பற்றிச் சிறிது கூறுவாம். அது இருபக்கங்கள் ௫௦௦ அடியும் மற்றிரு பக்கங்கள் ௩௦௦ அடியும் கொண்ட ஒரு நீண்ட சதுரமாய், உறுதியானதும் பசையுள்ளதுமான களியினால் முற்றிலும் ஆக்கப்பட்டிருந்தது. மதில்கள் சாதாரணமாய் ௧௨ அடி உயரமும் சிறு சதுரக்கொத்தளங்களும் குறுகிய ஒளிவிடங்களும் உடையனவாயிருந்தன. கொத்தளங்களில் சிற்சில பழைய பீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்தன. கோட்டையைச் சுற்றிலும் அடர்த்தியான முள்வேலிகள் போடப்பட்டிருந்தன. ஆனால் அகழ் இல்லை. தொத்தளங்கள் வெளிப்புறங்களில் ௧௫ அடி உயரமும் கிட்டத்தட்டச் சதுரமுமாயிருந்தன.

இவ்விதம் பலமாகப் பாதுகாக்கப்பட்டகோட்டையைப் பெரிய பீரங்கிகளும் ஆங்கிலப்போர்வீரரும் இன்றிப் பகலில்

பிடிப்பது அசாத்தியமெனக் காணப்பட்டது. ஆனதால் கோட்டைக்கு ஒரு மைல் தூரத்தில் ஓட்டப்பிடாரம் கிராமத்துக் கருகில் ஒரு இடத்தில் ஆங்கிலப்படை சதுரமாய்த் தண்டிறங்கியது. வடக்கே உயர்ந்தபூமியையும் தெற்கே ஒரு குளக்கரையையும் ஓட்டப்பிடாரம் கிராமத்தைக் கிழக்கு முகத்துக் கருகிலும்வைத்துப் பாஞ்சாலங்குறிச்சியை மேற்குமுகமாய் நோக்கிக்கொண்டு ஆங்கிலப்படை யிருந்தது. சிறிது இளைப்பாறி உணவருந்தியபின் ஆங்கிலப்படையை இரு பகுதிகளாக அணிவகுத்து இருட்டில் எதிரிகள் றியடாதபடி கோட்டையை இரண்டு இடங்களில் தாக்க ஆலோசனை செய்யப்பட்டது. சிறிது நேரத்துக்குப்பின் ஒற்றர்கள் வந்து ௫000 பேர்கொண்ட பாளையக்காரர் படையொன்று ஆங்கிலப்படையை எதிர்க்கத் தயாராயிருந்ததாகத் தெரிவித்தனர். மாந்திரிகத்தினல் நிருமிப்பதுபோல் ஆறுநாட்களில் எழுப்பப்பட்ட பலமான கோட்டை எதிர் நிற்க, அதனைக்காத்து நின்றோர் நினைத்தற்கும் முடியாதபடி தொகையில் அதிகரித்துநின்று தம்மை எதிர்த்துவந்த ஆங்கிலப்படையைத் தாமே எதிர்க்க முன்வந்த செய்தியானது எதிர்பார்க்கக் கூடாததாயிருந்தது. ஆதலால் ஆங்கிலப்படை அங்குத் தாமதிப்பதில் பயனில்லை என்று கண்டு, உத்தியோகஸ்தரும் வீரரும் இருபகல்கள் கடுவெயிலில் நடந்தும் ஓரிரவு உறக்கமின்றியும் ஏற்கனவே களைத்துப்போ யிருந்ததாலும் மற்றோரிரவும் ஜாக்கிரதையுடன் விழித்திருந்து எதிர்த்துவருவோரைத் தகையமுடியுமா என்பது சந்தேகமாயிருந்தது. இதனல் ஆங்கிலப் படைவீரர்கள் எச்சரிக்கப்பட்டுப் பகல் உ-மணிக்குமேல் கோட்டையை எதிர்க்க ஆயத்தமாவதுபோல் அணிவகுத்து நிறுத்தப்பட்டனர். ஒரு விநாடிக்குள் கோட்டையினுள்ள கொத்தளங்கள் அரண்கள்தோறும் சுமார்உ000பேர் வீரர் ஈட்டிகளுடன் காணப்பட்டனர். ஆங்கிலப்படை அணிவகுத்து நிறுத்தியானதும் பாளையங்கோட்டையை நோக்கி நகரும்படி உத்தரவிடப்பட்டது. அவ்வாறே மூன்றிலொருபங்கு தூரம் சென்றதும், பின்னல் தூரத்திவந்த பாளையக்காரவீரர்கள் அஸ்தமனமானபின் பெருத்த ஆரவாரத்துடன் ஆங்கிலப்

படையின்மேல் விழுந்து தாக்கினர். ஆனால் ஆங்கிலப்படை வீரர் உடனே துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் எதிரிகளில் கக0 பேர் விழுந்துவிட்டனர். எஞ்சியவர் திரும்பி ஓடிப்போயினர். அதன்மேல், ஆங்கிலப்படை ஒவ்வொரு புதரிலும் எதிரிகளிருப்பதாக அஞ்சிக்கொண்டே இரவு முழுவதும் கடுநடைநடந்து க0-ந் தேதி காலை கூ மணிக்குப் பாளையங்கோட்டை சேர்ந்தது. இவ்வாறு ஆங்கிலப் படையானது புறமுதுகிட்டுப் பாளையங்கோட்டை சேர்ந்தபின் அவ்விடத்தில் மேஜர் மக்காலேயும் ஷெப்பர்டும் கூடி ஆலோசித்து திருச்சியிலிருந்து துணைப்படை வந்த பிறகுதான் மறுபடி பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை எதிர்க்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

இவ்வாறிருக்க, பிப்ரவரி உஎ-ம் தேதி காடல்குடி கோட்டையைத் தாக்குவதற்கு ஒரு சிறு ஆங்கிலப்படை அனுப்பப்பட்டது. ஆனால் எதிரிகள் முன்னடியே ஆங்கிலப்படை வருவதை யறிந்து பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து உ000 வீரர்களை அனுப்பியதால் ஆங்கிலப்படை எதிர்த்து நிற்கவியலாமல் சேதத்துடன் புறமிடும்படி நேர்ந்தது. இவ்விதமே துரைத்தனத்தார் வசமிருந்த பற்பல சிறு கோட்டைகளும் பாளையக்காரர் வசமாயின. இதனால் அவர்கள் பலவாற்றானும் பல மதிகரிக்கப் பெற்று ஆயிரம் துப்பாக்கிகளையும் குண்டுமருந்தையும் கைப்பற்றிக்கொண்டனர். ஸ்ரீவைகுண்டம்கோயில் மாத்திரம் பலமாய் அரண் செய்யப்பட்டிருந்ததால் எதிரிகள்வசப்படாமல் பாளையங்கோட்டையிலிருந்து துணைப்படை வருமட்டும் தாங்கி நின்றது. பாளையக்காரவீரர் இந்தச்சமயத்தில் தூத்துக்குடியைப் பிடித்துக்கொண்டதுமன்றி ஆங்குள்ள இந்திய கிறிஸ்துவர்களைக் கொடுமைசெய்து வருத்தினர்களென்று சொல்லப்படுகிறது. திருச்சியிலிருந்து எதிர்பார்த்திருந்த துணைப்படை வந்துகொண்டிருக்கும்போதே மேஜர்மக்காலே தன்வசமிருந்த ந.000 வீரரும் கூ பீரங்கிகளு மடங்கியபடையைக் கயத்தாற்றுக்குக் கொண்டுபோய் அங்கிருந்து பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நடத்தினர். முதலில் அ-மைல் தூரத்திலுள்ள ஒற்றம்

பட்டி என்னும் ஊருக்குச்சென்று பிறகு அங்கிருந்து ௮ மைல் தூரமுள்ள பசுவந்தலை என்னுமூருக்குப் போகும் மார்க்கத்தில் ௫௦௦, ௬௦௦ பாளையக்காரவீரர் வந்து ஆங்கிலப்படையை எதிர்த்தனர். நடந்துகொண்டே இருதாத்தாருக்கும் சண்டை நேர்ந்தது. பாளையக்காரவீரர் ஆங்கிலக் குதிரைப்படையை ஈட்டிகளால் தாக்கினர். இந்தச்சண்டையில் ஆங்கிலப்படையின் தளகர்த்தன் கிராண்டு என்பவர் ஈட்டியால் குத்துண்டு விழுந்தார். ஒரு சுபேதாரும் ஒரு நாயக்கனும் ௧௫ வீரரும் ௧௪ குதிரைகளும் பட்டன. பாளையக்காரர் பக்கலில் ௯௬ சவங்கள் போர்க்களத்தில் கணக்கிடப்பட்டன.

மறுநாள் மார்ச்சு ௩௧-ம் தேதி காலை ௮-மணிக்கு "ஜிப்ரால்டர்" என்று சொல்லத்தக்க பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையை ஆங்கிலப்படை அணுகியது. உடனே ௯௦௦ கஜ தூரத்தினின்று வடமேற்குக் கொத்தளத்தை ௩ பீரங்கிகளால் உடைத்தெறிய ஏற்பாடு செய்யப்பட்டது. எட்டரை மணிக்கு பீரங்கிகள் சுடஆரம்பித்ததும் எதிர்பார்த்தபடி பலனுண்டாகவில்லை. ஆனதால் மத்தியானம் பீரங்கிகளைக் கோட்டை மதிலுக்கு ௪௦௦ கஜதூரத்திலிருந்த ஒருமேட்டுக்கு நகர்த்திக்கொணர்ந்து மாலை மூன்றரை மணிவரையில் சுட்டதில் கொத்தளம் உடைபட்டதாகக் காணப்பட்டதால் நெருங்கிக் கைகலந்து சண்டைசெய்யும்படி உத்தரவிடப்பட்டது. ஆனால் ஆங்கிலப்படை சமீபத்தில் நெருங்கிவந்து பார்க்கையில் கொத்தளம் தகர்க்கப்படவில்லையென்று புலப்பட்டது. உண்மையில் கொத்தளங்களில் ஒன்றையேனும் ஆங்கிலப்படையால் உடைக்கமுடியவில்லை. கைகலந்து யுத்தம்செய்யச்சென்ற ஆங்கிலப்படையின்மீது ஐந்தாறு கொத்தளங்களிலிருந்தும் ஒளிவுகளிலிருந்தும் அக்கினிமாரி பொழிவதுபோல் பலமான துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஆங்கிலப்படைவீரர் ஒருவர்பின் னொருவராய் வீழ்ந்துபட்டனர். ஆனால் அவர்கள் தைரியத்தை விடாது முள்வேலியைக் கடந்து சென்றனர். கோட்டையுள்ளிருந்தோர் மிகுந்த துணிகரமாயும் உறுதியாயும் நின்றதனாலும் எதிர்த்த

விடம்கஷ்டமானதாயிருந்ததாலும்ஆங்கிலப்படைமதிலேக்கடக்க முடியவில்லே. மதிலின்மீது ஏறிய ஒவ்வொரு ஆங்கிலப்படை வீரனும் ஈட்டியினுலும் துப்பாக்கியினுலும் குத்துண்டு வெளிப்புறத்தே எறியப்பட்டதால் மதிலின்மீது அடிவைப்பதற்கும் முடியவில்லே. இறுதியில் ஆங்கிலப்படை புறங்கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டதும் உண்மையில் மிகப்பயங்கரமான காட்சிக் கிடமாகியது. ஆங்கிலப்படையில் இறந்தோரும் காயம் பட்டோரிற் பலரும் கோட்டைமதிலின் பக்கத்தில் கிடக்குமாப்டியாக விடப்பட்டபடியால், அவர்களின்மீது பாளையக்கார வீரர் சடுதியில் பாய்ந்து, சிலர் முதுகிட்டோடும் ஆங்கிலப் படையின் பின்னணியைத் தூரத்திச்செல்ல வேறுசிலர் காயம் ப்ட்டுச் சாக்கிடந்ததும் செத்ததுமான ஆங்கிலப்படை வீரரை ஈட்டிகளால் குத்தி ஒழித்தனர். ஓடுகிறஅவசரத்தில் ஆங்கிலப் படை ஒரு ஹவிட்ஸர் பீரங்கியைப் போட்டுவிட நேர்ந்தது. ஆறு உத்தியோகஸ்தரும் ருO சிப்பாய்களும் சேர்ந்து பெருத்த சேதத்துடன் அந்த பீரங்கியை இழுத்துக் கொண்டுவந்து சேர்த்தனர். ஆங்கிலப்படையானது பத்திரமான தூரத்தை யடைந்ததும் அணிவகுத்துக்கொண்டு கோட்டைமதிலுக்கு கருOO கஜ தூரத்தில் தண்டிறங்கியது. அஸ்தமித்ததும் இறந்துபட்டவர்களின் ஞாபகார்த்தமா மென்று சொல்லத்தக்கதாய் எங்கும் நிசப்தமாயிருந்தது. அன்று ஆங்கிலப் படையின் தோல்வியும் கோட்டை எவ்விதம் காக்கப்பட்டு நின்றதென்பதும் விளங்கவில்லே. இடித்த மதிலின்மீது பாளையக்காரர் படையில் ஒருவராவது காணப்படவில்லே. ஆனுல் ஈட்டிக் கூட்டங்கள் மட்டும் ஆங்கிலப்படையின் கண்களுக்குப் புலப்பட்டது. பாளையக்காரவீரர் யாதொரு பயமுமின்றி கோட்டைக்குள் நடமாடிக்கொண்டிருந்ததுமன்றி ஆங்கிலப்படையால் சுட்டுவீழ்த்தப்பட்ட பேர்களுக்குப் பிரதி ஆட்கள் உடனுக்குடன் வந்துகொண்டிருந்தனர். ஆங்கிலப்படை புறமுதுகிட்டு ஓடும்போது பாளையக்காரவீரர் ஓயாது ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர். ஆங்கிலப்படையிலிருந்த கஉO ஐரோப்பியரில் சகூ பேரே தப்பிப் பிழைத்தனர். மொத்தம் கOகூ பேர் சேதம். எட்ட

யாபுரம் வீரர் ௪000 பேர் ஒரு ஆங்கிலப்படையுடன் பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையின் கீழ்பால் எதிர்த்தும் மிகுந்தசேதத்துடன் திருப்பி யடிக்கப்பட்டனர்.

மேற்கூறிய சம்பவங்களிலிருந்து மேஜர் மக்காலேயின் சக்தி பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைத் தகர்க்கப் போதியதல்ல வென்று நன்கு விளங்கியது. பீரங்கிகள் உபயோகமற்றவை; படையும் திறமற்றது. இந்த ஆபத்தான நிலைமை அரசாங்கத்தாருக்குத் தெரியவந்தது. கருநாடகத்திலும்மலையாளத்திலும் நாலு பக்கங்களிலுமிருந்து ஒரு பெருத்த சுதேசப் படை திரட்டி கர்னல் பீட்டர் ஆக்னியூ என்னும் அநுபவம் வாய்ந்த தளகர்த்தரின்கீழ் அனுப்பப்பட்டது. ஆனால் இப் பெரும்படை முற்றிலும் பாஞ்சாலங்குறிச்சி வந்துசேர ஏறக்குறைய இரண்டு மாதங்களாயின.

இதற்கிடையில் திருநெல்வேலி கலெக்டர் இலங்கை அரசாங்கத்தினரின் உதவியைக்கோர ஒரு சிறுபடை அங்கிருந்து வந்து சேர்ந்தது. இது சென்னைத் துரைத்தனத்தாரின் அநுமதியின்றி கலெக்டர் தானே செய்ததால், அதற்காக அவர் கடியப்பட்டார்.

மேஜர் மக்காலே தனது படையைப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு ஒருமைல் தூரத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டிருந்தார். பாஞ்சாலங்குறிச்சிவீரர் மழை பொழியும்போது ஆங்கிலேயரின் பீரங்கிகள் தங்கள் ஈட்டிகளின் முன்னிற்காவெனக்கண்டு அடிக்கடி ஆங்கிலப்படையைத் தாக்கிக்கொண்டிருந்தனர். ஓரிரவு மிகக் கடுமையான மழையும் காற்றும் இடியுமாயிருந்த சமயத்தில் கோட்டையிலிருந்து ஆயிரம்வீரர் ஈட்டிகளுடன் வெளிப்புறப்பட்டு மழையில் நனைந்துகொண்டிருந்த ஆங்கிலப்படையின் ஒரு பக்க அணியைத் தாக்குதற்கு வந்தனர். ஆங்கிலப்படையில் ஒரு துப்பாக்கியாவது வெடிக்கவில்லை. பீரங்கியும் ஒரே முறை வெடித்துப் பின் அடங்கிப்போகவே அது எதிரிகள் வசமாகியது. பாஞ்சாலங்குறிச்சி

வீரர் மிகுந்த சந்தோஷத்துடன் பீரங்கியை இழுத்துக்கொண்டுபோயினர். ஆயினும் ஆங்கிலப்படைவீரர் அதனை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டனர்.

எதிர்பார்த்திருந்த ஆங்கிலப்படைகள் யாவும் மே மாதம் மத்தியில் வந்துசேர்ந்தன. கர்னல் ஆக்னியூ உக-ம் தேதி தமது பதவியைக் கைக்கொண்டார். பாஞ்சாலங்குறிச்சிகோட்டையைப் பிளக்க மூன்றுநாளாகியது. ஆனால் கோட்டையுள்ளிருந்தோர் உடைபட்ட வழிகளில் பருத்த முள்மரங்களை வெட்டி எறிந்து உட்புகவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தனர். உச-ம் தேதி மத்தியானம் கோட்டையின் நாற்புறத்திலும் பிளவுகள் உண்டாக ஆங்கிலப்படைவீரர் உட்செல்ல இடமேற்பட்டது. ஆங்கிலப்படை வலி மிகுத்திருந்தும் பாஞ்சாலங்குறிச்சிவீரர் சிறிதும் தளராமல் உட்புகவரும் ஆங்கிலப் படைவீரரைச் சூழ்ந்து துப்பாக்கியால் சுட்டும், ஈட்டியால் குத்தியும் எதிர்த்து நின்றனர். முக்கால் மணிநேரம் இவ்வாறு கைகலந்த யுத்தம் நடந்தபின் ஆங்கிலப்படைவீரர் இடித்த கோட்டையின் மீதேறினர். ஆயினும் அங்கிருந்து உள்ளிறங்குவது துர்லபமாகியது. ஏனெனில் உள்ளிருந்தவீரர் கோட்டைமதிலின்கீழ் ஆழ்ந்த பள்ளங்கள் வெட்டியிருந்தனர். ஆங்கிலப்படைவீரரில் கைக்குண்டெறிவோர் கோட்டை மதிலின் மீதேறுவதற்குப் பிணக் குவியல்களை மிதித்துச்செல்லவேண்டியிருந்தது. இதற்குள் பாஞ்சாலங்குறிச்சிவீரர் மறைவிடங்களிலிருந்து நீண்ட ஈட்டிகளைப் பிரயோகம் செய்து மதிலின் மீதேறிய ஆங்கிலவீரர்களை அவர்களறியாமலே க்ஷணத்தில் குத்தி வெளியே வீழ்த்தினர்.

ஆங்கிலக் குண்டினால் இடிக்கப்பட்ட பாகத்தை உடனுக்குடன் ஈரமண் கொண்டு பழுதுபார்த்தும் வந்தனர். முடிவில் ஆங்கிலப்படை பல வழிகளால் கோட்டையுள் நுழையவே எதிரிகள் திகிலடைந்து கோட்டையை விட்டு வெளியேறி இரண்டு ஒழுங்கான பகுதிகளாகப் பிரிந்து, ஆயுதமில்லாதவரையும் ஸ்திரீகளையும் மத்தியில் வைத்து ஆங்கிலப்படையை எதிர்த்து

நின்றனர். இப்படி நின்றோரை ஆங்கிலக் குதிரைப்படை எதிர்த்துத் தாக்கி சுOO பேரைச் சேதப்படுத்திற்று. எஞ்சியோர் தப்பியோடி விட்டனர். கடைசியாக உOOO பாஞ்சாலங்குறிச்சிவீரர் ஓடிப்போயினர். சுடுO சவங்கள் கோட்டைக்குள் கிடந்தன. ஆங்கிலப்படையில் உO தளகர்த்தரில் ச-பேர் கொல்லப்பட்டும் சு பேர் காயப்பட்டும் போயினர். ஐரோப்பியரில் கொல்லப்பட்டோர் கசு பேரும் காயம்பட்டோர் எசு பேருமாவர். சுதேசிகளில் உசபேர் கொல்லப்பட்டும் சுசுபேர் காயம்பட்டும் போயினர். ஆக மொத்தம் உஉரு பேர் சேதம்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையானது ஆங்கிலப்படையினால் எதிர்த்துப் போராடிப் பிடிக்கப் பன்முறை முயற்சித்து இப்போதுதான் பிடிபட்டது. ௩OOO வீரர்களும் சில சமயங்களில் அவர்களின் குடும்பங்களும் ஆங்கில பீரங்கிகளுக்குத் தப்பும்பொருட்டு கோட்டைக்குள் எங்கணும் குழிகள் தோண்டிக்கொண்டு வசித்ததைக் கண்ணுற்றோரில் யாரே மனங்கலங்காதவர்? அவர்கள் பாதுகாப்புவேலை தற்கால இஞ்சினீரையும் பிரமிக்கச் செய்யும்படியாயிருந்தது. இவ்விதமிருந்த பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டையை இடிப்பதற்கு ஆங்கிலப்படையில் ஒரு பகுதி நிறுத்தப்பட்டது. தூத்துக்குடியைப் பாதுகாப்பதற்கும் ஒரு சிறுபடை அனுப்பப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி கோட்டை இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டதுமன்றி குடிகளுக்குப் பயமுண்டாகும்பொருட்டுக் கோட்டை நின்றவிடத்தை உழுதுபயிரிடுவித்தனர். தேசபடங்களிலும் துரைத்தனக் கணக்குகளிலுமிருந்து பாஞ்சாலங்குறிச்சி என்னும் பெயரை அகற்றிவிடும்படி உத்தரவிடப்பட்டது. இப்போது அவ்விடத்தில் சில மண்மேடுகள் தவிர வேறொன்றுங் காணப்படவில்லை. இராணுவப் படத்தில் மாத்திரம் "அழிவுற்ற பாஞ்சாலங்குறிச்சி" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆங்கிலக் குதிரைப் படையால் துரத்தப்பட்டு ஓடிய பாஞ்சாலங்குறிச்சி வீரருடன் கூடவிருந்த ஊமையன் பாஞ்சாலங்குறிச்சிக்கு ௩ மைல் தூரத்தில் ஒரு கிராமத்துக்கருகில் காயம்

பட்டு விழ்ந்தான். ஆங்கிலப்படை சிறிது தூரம் பாஞ்சாலங் குறிச்சிவீரரைத் துரத்தியடித்துத் திரும்பியது. அதன்மேல் இரவு வரையில் துரத்தி அகப்பட்டோரைப் பிடித்து வரும்படி எட்டயபுரம் ஆட்கள் அனுப்பப்பட்டனர். இவர்கள் மிகுந்த களியாட்டத்துடன் சாயந்திரம் புறப்பட்டனர். அஸ்தமித்ததும் எங்கும் அமைதியாகக் காணப்பட்டதால் அந்த கிராமத்திய சில ஸ்திரீகள் காயம்பட்டு உதவியை நாடுவோருக்கு உதவிபுரியும் நோக்கத்துடன் படுகளத்துக்கு வந்தனர். கொல்லப்பட்டுக் கிடக்கும் பிணக்குவியலினிடையே குற்றுயிருடன் விழுந்துகிடந்த தன்மகனை உதவிக்குவந்த ஸ்திரீகளில் ஒரு வீரத்தாய் கண்ணுற்று அவன்மீது வீழ்ந்து பிரலாபிக்க அவனை எல்லோருங்கூடித் தூக்கமுயன்றனர். அத்தருணத்தில் அந்த உத்தமவீரன் தனது எஞ்சிய பலத்துடன் "அன்னாய்! நான் சாகிறேன்; ஆனால் அருகில் கிடக்கும் சுவாமிகளைக் காப்பாற்ற முந்துங்கள்" என்று கூறினன். அக்கணத்திலே அவ்வீரத்தாய்மார் அவன்கூறிய மொழிகளை ஏற்று இரத்த வெள்ளத்தில் நனைந்து உயிருடன் கிடந்த ஊமையனைத் தேடிக் கண்டெடுத்து அருகிலிருந்த ஒருத்தியின் இல்லத்திற் சேர்த்து அவன் காயத்துக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்தனர். அத் தருணத்தில் துரத்திவந்த எட்டயாபுரம் வீரரின் யுத்த ஆரவாரம் அவர்கள் செவியில் பட்டது. உடனே அவ்வன்னைமார் ஒரு யுக்தியைக் கடைப்பிடித்து ஊமையன் சரீரத்தைத் துணியினால் மூடி எல்லோரும் சூழ விருந்து அழஆரம்பித்தனர். எட்டயாபுரம் ஆட்கள் அங்குவந்து காரணம் யாதென்று வினவ ஒரு சிறுவன் வைசூரியினால் அப்போதுதான் இறந்தானென்று பதிலளிக்கப்பட்டது. இதைக் கேள்வியுற்றதும் எட்டயாபுரம் ஆட்கள் திரும்பிப்பாராமல் ஓட்டம்பிடித்தனர். ஊமையனும் அவனுக்கு உதவுவோரும் தப்பினர்.

அதன்பின் ஊமையன் எவ்வாறு பிழைத்து மருது சகோதரருடன் சிறுவயலில் வந்து சேர்ந்தானென்பது யாருக்குந் தெரியவில்லை. ஆனால் அவ்வளவு பலமான எதிரிகள் எதேச்சையாய்த் திரியும் வரையில் நாட்டில் அமைதியுண்டாவதற்

கிடமில்லை. பற்பல பாளையக்காரரின் வசமிருந்த ஆயுதம்தாங்கிய வீரர்களின் தொகை உ௨000 ஆகுமென கலெக்டர் லூஷிங்டனால் மதிப்பிடப்பட்டது. இவர்கள் யாவரும் ஒரு நொடிக்குள் எவ்விதப் படையெழுச்சிக்கும் தயாராயிருந்தனர். ஒழுங்காய் நடத்தப்பட்ட உ0000 பாஞ்சாலங்குறிச்சி ஆட்களை ஜெயிப்பது அசாத்தியமென ஜெனரல் வெல்ஷ் என்பவர் அபிப்பிராயப்பட்டார். அதே பாஞ்சாலங்குறிச்சி ஆட்களில் பெருந்தொகையானவர் அந்தப் பாளையக்காரனுடனும் ஊமையனுடனும் கோட்டை பிடிபட்ட பின்பு சிவகெங்கையை நோக்கித் தப்பியோடி விட்டனரென்பது பிரசித்தம். ஆனதால் சிவகெங்கையை நோக்கி ஆங்கிலப்படையும் நகர்ந்தது.

(மே மாதம் உ௮ம் தேதி அதாவது பாஞ்சாலங்குறிச்சி பிடிபட்டதின்மேல் ச நாள் சென்று ஆங்கிலப்படை முழுவதும் நாகலாபுரத்தில் தண்டிறங்கி அங்கிருந்து ஒரு சிறுபடையை கமுதியை மீட்பதற்கு அனுப்பினர். கமுதிக்கோட்டையானது கலகக்காரர்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. ஆனால் ஆங்கிலப்படை சென்றதும் எதிரிகள் ஓடிவிட்டனர். ஒரு சிறுபடை அவ்விடத்தில் நிறுத்தப்பட்டது. பிறகு நாகலாபுரத்திலின்றும் புறப்பட்டு (ஜூன் உ-ம்தேதி சிவகெங்கை நாட்டிலுள்ள திருப்புவனத்துக்கு ஆங்கிலப்படை வந்துசேர்ந்தது.) அவ்விடத்தில் எதிரிகள் முதன்முதல் தலைகாட்டினர். அதிலிருந்து ஜூலை க௪-ம் தேதி வரையில் இராமநாதபுரத்தை நோக்கி ஆங்கிலப்படை நகர்ந்துகொண்டிருக்கையில் எதிரிகளால் ஓயாது தாக்கப்பட்டது. போகும்வழி முழுதும் காடடர்ந்திருந்ததால் எதிரிகளால் மிகுந்த கஷ்டம் நேர்ந்தது. அநேக ஐரோப்பியர் உள்படப் பெருத்த சேதமும் ஏற்பட்டது. இராமநாதபுரம் சென்றதும் கர்னல் ஆக்னியூ கர்னல் மார்டின்ஸ் என்பவரோடுகலந்தார். மருது சகோதரர் காளையார்கோயிலுக்குச் சென்று நிற்பார்களென்றும் இக்கோயில் மிகுந்த பலமாய் அரண் செய்யப்பட்டிருந்த தென்றும் பாஞ்சாலங்குறிச்சி நடவடிக்கைகள் திரும்பவும் நடைபெறுமெனவும் தெரியவந்தது.

மேல் நடந்த சம்பவங்கள் மருது சகோதரர் சரித்திரத்தில் கூறப்படும். கட்டபொம்மநாயக்கனும் ஊமையனும் பிடிபட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டுவரப்பட்டுக் கோட்டையைத் தகர்க்கும் பீரங்கிக்காகச் செய்யப்பட்ட மணல் மேட்டின் மேல் தூக்கிலிடப்பட்டனர்.

கஅ௦க-ம் ஆண்டு ஜூலைமாதம் ௩க-ம் தேதி கருநாடக தேசம் முழுவதும் நவாபின் ஆளுகையிலிருந்து ஆங்கிலக் கம்பெனியின் ஆளுகைக்குள் வந்தது. அதன்மேல் தென்னாட்டுப்பாளையங்களில் கலகஞ் செய்தோருக்குப் பொதுவான மன்னிப்பு அளிக்கப்பட்டது. அதில் பாஞ்சாலங்குறிச்சி சிவத்தையாநாயக்கனும் குலசேகரபட்டணம் மூப்பனும் தளவாய்ப்பிள்ளையும் சேர்க்கப்படவில்லை. சிவத்தையாநாயக்கன் ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகில் பிடிபட்டுப்பலமான காவலுடன் பாளையங்கோட்டைக்குக் கொண்டு போகப்பட்டான் மற்ற இருவரும்சிலநாட்சென்று பிடிபட்டனர். தளவாய்ப்பிள்ளை பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவுக்கு மற்றும் எக-பேருடன் ஏற்றியனுப்பப்பட்டான். இவ்வாறு முடிந்த பாஞ்சாலங்குறிச்சி சரிதத்தை நமசிவாயம் என்னும் ஒரு புலவர்சிந்தாகப் பாடியுள்ளார். இது இப்போது கிடைப்பது அசாத்தியமாகிவிட்டது.

இச்சரித்திரமானது மிகவும் பூஜ்யதைக்குரிய கால்டுவெல் D.D.L.L.D. குருவவர்களால் பல துரைத்தன பிரதிகளினின்றும் பாதிரிமார் லிகிதங்களினின்றும்தொகுத்தெழுதி கஅஅக ஆண்டு சென்னை அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிடப்பெற்றுள்ள "திருநெல்வேலி ஜில்லாவின் இராஜீய பொதுச் சரித்திரம்" என்னும் பழைய நூலினின்றும் பெயர்த்தெழுதியதாகும். அவர் பாளையக்காரர்களைப்பற்றியும் பாளையக்காரக் குடிஜனங்களைப்பற்றியும் எழுதுவதை இங்கு குறிப்பிட்டு இச் சரித்திரத்தை முடிப்போம்.

"பாளையக்காரர் இப்போது ஜமீன்தாரானர். அவர் தன் சுபாவத்தோடு பேரையும் மாற்றிக்கொண்டார். தற்காலத்திய சாதுவான நாயக்க மறவ ஜமீன்தார்கள், சென்ற நூற்றாண்டின்

சரித்திரத்தில் நிறைந்துள்ள கொடுஞ்செயல்களைப் புரிந்த கல கமும் அடங்காத்தனமுமுடைய பாளையக்காரரின் வழித் தோன்றல்கள் தானென்று யாரும் நம்பக்கூடாமலிருக்கிறது. மேலும் இக்காலத்திய சாந்தமான நாயக்கக் கிருஷிகர்களோ, தலைவரின் வார்த்தையைக்கேட்ட மாத்திரத்தில் தங்கள் உதி ரத்தையாவது தங்கள் தலைவரின் விரோதிகள் உதிரத்தையா வது சிந்துவதற்குத் தயாராயிருந்த பாளையக்கார சூரர்க ளின் நேரான சந்ததியாரென்று யாரும் கேட்கக்கூடும்''

தேவரும் சிறுவரும்.

பண்டித—மயில்வாகனனுர் B. Sc.

''அரிதரிது மானிடராதலரிது'' என்று ஔவைப்பிராட்டி யார் திருவாய்மலர்ந்தருளினுர். நமது சமய சாஸ்திரங்கள னைத்தும் மானிடப்பிறவியின் பெருமையை வியந்து பாராட்டா நிற்கின்றன. இறைவனுடைய பொன்னடி நீழலை யடைந்து அழியாவின்பப் பெரும்பேற்றினை யநுபவிப்பதற்குரிய வாயி லாகவிருப்பது மானிடப்பிறவியாதலின் பொன்னகர்க்கரசாய் இன்னளிமூரலா நன்னலம்பொருந்திய கற்பகக்கா நீழலில்வை கும் அமரர்கோமகனும், உம்பர்வானகத் தொளிர்கின்ற சந் திரதேவனும் ஏனைய தேவர்களும் ஓரோர்காலத்தில் மக்க ளாய்ப் பிறக்கவேண்டியவராகின்றுர்கள். இது ஒருவாற்று னும் மறுக்கொணு உண்மையாகும். அங்ஙனமாயின் அமு துண்டு பெருவாழ்வு படைத்த அமரர்கள் உலகில் மக்கள் யாக்கையை யெடுத்துப் பிணிமூப்புச் சாக்காடென்னும் இவற் றினுட்பட்டு அலைவரென்று சொல்வது பொருந்துமோ வெனின், பொருந்துமென்போம். மக்கள் யாக்கையினது பெரும்பயனுகிய வீட்டின்பத்தைப் பெறுதற்கு விரும்பினோர்

அவ் யாக்கைக்குரிய இளமை, முதுமை, சாக்காடு ஆதியவற்றைத் தவிர்த்துவிடுதல் ஒருவாற்றானும் அமையாததொன்றாம். ஆதலினாலே தேவர்கள் மானிடராகப் பிறக்கும்பொழுது தமது தெய்வக்குணங்களுள் ஒரு சிலவற்றை யொழித்து மானிடர்க்குரிய இயற்கைக்குணங்கள் பலவற்றைத் தாங்கியவதரிப்பர். பெருந்தவப் பேற்றினாலே தேவர்களை மக்களாகப் பெற்றெடுத்த அன்னைமார் தமது செல்வக்குழந்தைகள் முன்னாளிற் றேவராயிருந்த மாண்பினையறியார். அங்ஙனமாயினும் "யாண்டிருந்தோ ஈண்டுவந்து எமது மடித்தலத்திருக்கும் இவர் யாரோ" வென்றெண்ணி யையப்பாடுற்றமையாற் போலும் "ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ" என்று வினவுவாராயினர்.

பொன்னுலக மாளும் புரந்தரரோ பொற்பமைந்த
மின்னுலவு செஞ்சடையோன் மெய்யருளைப் பெற்றவரோ ஆரா
உந்திக் கமலத் துறைகின்ற வேதியரோ
செந்திருவைச் சேர்ந்த திருமா லிவர்தாமோ ஆராரோ
தேவர் குருவோ திருக்கிளருஞ் சந்திரனார்
ஆசை மகனோ அவுணர் குலக்குருவோ ஆராரோ
இந்திரனார் மைந்தர் எழிலார் சயந்தனெனுஞ்
சுந்தரரோ கந்தருவர் சொந்தநிலம் வந்தவரோ ஆராரோ

என்று தமது செல்வக்குழந்தைகளைத் தாராட்டுவாராயினர்.

யசோதைப் பிராட்டியார், கௌசல்யாதேவியார், மகா மாயாதேவியார், பகவதியார், மாதினியார், சந்திரமணிதேவியார், புவனேச்வரிமாதா, இசைஞானியார் என்றின்னோரன்ன பெரியோர் தெய்வத் தன்மைபொருந்திய தமது அருப்பெறன் மக்களை மடித்தலத்திருத்திச் சீராட்டிப் பாராட்டும்பொழுது அம் மக்களது பெருமையை ஒவ்வொருவாற்றா னறிந்தாரெனினும் அவ்வளவில் தஞ் செல்வப்புதல்வராகக் கொண்டாரேயன்றி வேறுபட வெண்ணினரல்லர். உலகனைத்தினையும் ஈன்றானையீன்ற திருத்தாதை சிறு குழந்தைவடிவாகிக் கண்ணன் என்னும் பெயர்பூண்டு ஆயர்பாடியில் நந்தகோபன் றிருமனையில் வளர்ந்து வருகின்ற நாட்களில் ஒருநாள் மணிவண்ணனாகிய கண்ணன்

அசோதைப் பிராட்டியார் வீட்டிலில்லாத தருணம் பார்த்து உறியிலிருந்த வெண்ணெயைக் கவர்ந்து பவளவாயினுள்ளிட்டுச் சுவைகண்டு சிறிதுகாலை மகிழ்வுற்றிருந்தனன். அன்னை வருதலும் கபடநாடக சூஸ்திராவதாரியாகிய அச்சுதன் ஒன்று மறியாதவன்போல வாய்வாளாதிருக்கக் குறிப்பாலுணர்ந்த அன்னை அவனது சிறு கையைப்பற்றி "வாயினுள் உன்னவிருக்கின்றது, திற பார்ப்போம்" என்றனள். மணி வாயைத்திறந்து காட்டுதலும் உலகுகாப்போனைக் காக்கும் உயர்பெரும் பேற்றினைப்பெற்ற அன்னை தனது செல்வக் குழந்தையினுடைய வாயினுள் சுவர்க்க மத்திய பாதலமாகிய மூவுலகும், தேவ, சித்த, இருடிகணங்களும் இருக்கக்கண்டு ஒரு கணப்பொழுது அச்சமுற்றாள். மாமாயன் தனது தெய்வவுருவை மறைக்க அன்னையும் முன்னையுணர்வோடு துளபங்கமழுந் திருக்குழந்தையை வாரித் தழுவி மார்போடணைத்து உச்சிமோந்து முத்திமிட்டு மடித்தலத்திருத்தி மகிழ்வுகூர்ந்தனள்.

அன்னைமடித்தலத்திருந்து சிறுகாற் பெருவிரலைச் சுவைத்துத் திருமுகத்திற் குறுநகை யரும்பப் பார்ப்போரனைவரும் உளங்களிகூரக் கேட்போருக் கிதங்கருஞ் சிறு குதலைச் சொற்களால் அம்மே, அப்பா என்று மொழிந்து பகைமன்னரின்றித் தனியரசு புரியும் ஆழிவேந்தனென்ன அரசு வீற்றிருக்கும் இளமைப் பருவத்தினது பெருமாண்பினை யறியாத தாய் தந்தையரிலர். பொன்னரை ஞாணும் பொற்சங்கிலியுமணிந்து பூம்பட்டாடை யுடுத்தி அன்புடைய அம்மானது தோண் மீதிவர்ந்து அவரது மயிரைச் சிறு விரலாற்பற்றித் தெருவிற் பவனிசெல்லும் பொழுதும், முன்றிலிலிருந்து புழுதியளைந்து மணலைக் குவித்துச் சிற்றில்கோலி விளையாட்டுத் தோழர்களாகிய பரிசனர்கள் புடைசூழக் கொலுவீற்றிருக்கும்பொழுதும் அன்னையின் முன்றானையைப்பற்றி அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாக நின்று தான்விரும்பிய பொருளைப் பெற்றபின்னர் அழுகையையொழிந்து மகிழ்வு கூர்ந்திருக்கும்பொழுதும், கரும்பின் கட்டிமுதலிய இனிய பொருட்களை நாவாலதுக்கிச் சுவை கண்டு வாயினின்றும் வடியும் நீர் பட்டாடையை நனைப்பப்

பேருவகையுற்று மகிழ்வே யுருவாயிருக்கும்பொழுதும், அல்லலொழிந்த ஆழ்துயில் வேளையில் மெல்லெனக் கடைவாய்ப் புறத்திற் சிறு நகை தோற்றும்பொழுதும் இளமைப் பருவத்தின் து பெருவனப்பினைக் காணலாம்.

இவ்வுலகிற் செயற்கருஞ் செயல்களைச்செய்து முடிப்போரைத் தெய்வத்தன்மை பொருந்தியவராகக் கொள்வோம். நம்முடைய பரதகண்ட நாகரிகத்தை வழிப்படுத்திய மகா இதிகாசங்களாகிய பாரத ராமாயணத்திலுள்ள வீரர்களனைவரும்தேவ அம்சத்தா லவதரித்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அங்ஙனமே யவனபுர காவியங்களாகிய ஈலியகாவியம் (Iliad) உதீசகாவியம் (Odyssey) என்பனவற்றுள்ளும் தேவர்களும் மக்களும் சம்பந்தமுடையவர்களா யிருக்கக் காண்கிறோம். யவனபுரக் கதைகளுள் தேவமகளிர் தாயாராக, மானிட ஆடவரைத் தந்தையராகக்கொண்ட சிறுவர்களும் மானிடமகளிரைத் தாயராகவும் தேவரைத் தந்தையராகவுங்கொண்ட சிறுவர்களும் இருக்கக்காணலாம். ஊர்வசி, இந்திரன், புரூரவன் என்பாருக்கியைய யவனபுரத்திலும் வீநசா (Venus) திவ்யபிதா (Iupifer) அங்கிசன் (Anchises) என்பாருளர். இதனால் அறியக்கிடப்பதெதுவெனிற் பண்டைநாளிலுள்ள மனிதர்தமது தேவத்துவத்தையறிந்து தேவரைத் தமக்கு உரிமையாளராக்கிஉறவுமுறைகொண்டாடினார்களென்பது. இந்நாளில் ஒருசாரார் தம்மைத்தாமேபுழுத்தநாயினுங்கடையரென இழித்துக்கூறித் தம்மைஇழிந்த நிலைக்கிழுத்துச் செல்கின்றனர். இவர் தம்மை எவ்வாறிழிவுபடுத்திக் கொள்ளினும் கொள்ளுக; ஆனால், இத்தெய்வத் தமிழ்நாட்டில் இக்காலத்திலவதரித்து அன்னைமடியிலும் தொட்டிலிலும் மறைந்துகிடக்கிற தெய்வக் குழந்தைகளை இவரது துர்ப்போதனைகட் ககப்படவிடுதல் கூடாது. கருவுயிர்த்த தாய்ச்சிங்கம் இறந்துவிட வெள்ளாட்டு மந்தையினுள் உறைந்துவளர்ந்த இளஞ்சிங்கம் தன்னை ஒரு வெள்ளாடாக நினைத்து அந்தச் சாதிக்குரிய கனைப்பொலியைக் கற்றுக்கொண்டதுபோல தெய்வ அம்சம் பொருந்திய குழந்தைகளும் தமது உண்மை நிலையைமறந்து வலியிழந்து மானிடப்பதராதல்

கூடும். தமிழ்நாடு மேனிலையை யடைந்து வருகின்ற இந்த நாட்களில் முதுதமிழ்க் குலத்திலே தேவர்கள் அநேகர் உற்பவித்திருக்கிறார்களென்பது அறிஞர் பலருடைய கருத்து. இவ்வாறு உற்பவித்திருக்கிற தெய்வக்குழந்தைகள் வளர்ந்தவர்களாக வரும்போது கவிவல்லராகவும், புயவலி படைத்தவர்களாகவும், மெய்யறிவாற்றலுடையவர்களாகவும் விளங்குவார்கள். இந்தத் தெய்வக்குழந்தைகளே நமது நாட்டினை மேனிலையில் வைக்கப்போகிறார்கள். ஆதலால், இந்த இளஞ்சிங்கங்களை வெள்ளாடுகளாகாத வண்ணம் பார்த்துக்கொள்வது நம்மனைவர்மேலும் பொறுத்த கடனாகும்.

நமது பண்டைநாட் சிறப்பை நமது செல்வக் குழந்தைகளுக்குப் போதித்து வைத்தல்வேண்டும். குமரி முதல் இமயம் வரையிலுமுள்ள நாடனைத்தினையும் வென்று மணிமுடி சூடி ஆழிவேந்தனாக அரசுபுரிந்த சோழன் கரிகாற் பெருவளத்தானது திருவளத்தைத் தமிழ்நாட்டுச் சிறுவரனைவரும் அறிதல்வேண்டும்; அண்டினார்க் கன்பனைப் மாங்குடி மருதனாரியற்றிய தீஞ்சுவை மதுரைக்காஞ்சிக்குத் தலைவனாக விளங்கிய தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனது பெருஞ்சிறப்பினை நம்செல்வச் சிறுவர்களறிதல்வேண்டும்; பாரதப்போர் நடந்தகாலத்தில் பாண்டவர் துரியோதனாதியோர் என்னும்இருவகையார் சேனைக்கும்பெருகவுணவளித்தஉதியன் சேரலாதனது பதியுந் தமிழ்நாடே யென்னு முண்மையினை நம்பாலியர்க்குச் சொல்லிவைக்கவேண்டும். மீனக்கொடியும் விற்கொடியும் புலிக்கொடியும்பறக்கக் கானப்பேரெயிலகத்தும், காரியாற்றினும், தகடூரினும் பொருது புறங்காட்டாது வீழ்ந்த பெருமக்களுக்குரிய நாடு இந்தத் தமிழ்நாடு என்பதை நமது தவமைந்தர் அறிதல் வேண்டும்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என்று நாயனார் புகழ்ந்துரைத்தது நமது தமிழ்நாட்டு வீரரை யென்பதை நமது தெய்வக் குழந்தைகளுக்கு நினைப்பூட்டி

வைக்கவேண்டும். தமிழ்நாட்டிலிருந்த ஒரு வீரத்தாய் தனது மைந்தனைப்பற்றிச் சொல்லுகிற ஒரு உறுதியுரையைச் சற்றுச் செவிசாய்த்துக் கேட்போமாக.

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

பூதவுடம்பு அழிந்தொழிந்த பின்பும் நிலைபேறுடையதாக மன்னிநிற்கும் புகழுடம்பே தமது உண்மையுடலம் என அறிந்து அதனை வளர்த்தற்கு முயலுவது தெய்வத்தன்மை பொருந்தியவர்க்குரிய குணமாகும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்று நாயனாருரைத்த பெருமந்திரத்தைக் காலையினும் மாலையினுஞ் செபித்து வருமாறு நமது செல்வச் சிறுவர்க்குச் சொல்லி வைத்தல் வேண்டும்.

"பயம்" என்பது இன்னது என்று அறியாதிருந்த நெல்சனுடைய சரித்திரம்போன்ற சரித்திரங்களை நமது பாலியர்களறிந்திருக்கவேண்டும். நமது கண்ணின்மணி போன்ற சிறுவர்களுடைய கல்வி விஷயத்தில் நாம் இப்பொழுது எடுத்துக் கொள்ளுகிற சிரத்தையைப்போலப் பதின்மடங்கு அதிகமாகிய சிரத்தையுள்ளோமாய் அதற்காகவேண்டிய பொருளைச் செலவிடுவதிற் சிறிதும் பின்னில்லாதவர்களாயிருத்தல் வேண்டும். நாம் உயிர்வாழ்வது எதற்காகவென்று ஆராய்ந்து பார்ப்போமாயின் நமது ஆன்மலாபத்துக்காகவும் நமது அருமைச் சிறுவர்களை மேனிலையில் வைத்தற்குமே யென்பதை யறிந்து கொள்வோம். உண்மை யறிவினைக்கொடுக்காது நமது சிறுவர்களுக்குப் பொருளினை மாத்திரந்திரட்டி வைத்துவிட்டுப்போ

வோமாயின் அப்பொருள் அவர்களுக்குத் தீமையை விளைக்குமேயன்றி ஒருவகை நன்மையையும் பயவாது. ஆதலால் சின்னஞ்சிறு வயதினராகச் சிற்றில் சிதைத்து விளையாடிக்கொண்டிருக்கிற காலத்திலேயே நமது சிறுவர்க்கு நமது முன்னோரின் பெருமையை யுணர்த்திவைக்கவேண்டும். "நான் தமிழன், தெய்வத் தமிழ்நாட்டிற் பிறந்தவன், எனது முன்னோர் மிகுத்த வீரம்படைத்தவர்கள், போரிற் புறங்காட்டாத் தீரம் மிகுந்தவர்கள், ஆண்மை குன்றா ஆற்றலுடையவர்கள், தோள் வலிபடைத்த சுத்தவீரர், அவரது மரபிற்பிறந்த நான் எனது சாதியாரின்உயர்ச்சிக்காக முயலுவேன், மிகப்பழமையான நாகரிகம் வாய்ந்த எனதுசாதி ஏனையசாதிகளினும் பார்க்க உயர்ந்ததேயன்றி ஒருவாற்றானுங் குறைந்ததல்ல, நான் தமிழன், தெய்வத் தமிழ்நாட்டிற் பிறந்தவன், அந்நாட்டின் உயர்ச்சிக்காக உழைப்பதற்கே நான் பிறந்திருக்கிறேன், கம்பனையொத்த கவிவாணரும், கரிகாற் பெருவளத்தானைப் போன்ற திருவாளரும், வரையாது கொடுக்கும் வள்ளல்களும் தோன்றியசாதி யெனது சாதி; அவரது புகழினைப் பெருக்குவேனேயன்றி ஒருபோதுங் குறைக்கமாட்டேன். தெய்வத்தமிழ்நாட்டிற்குரியதெய்வமாகிய திருமுருகன் எனக்கு ஆண்மையையும், கல்வியையும், அறிவினையுந்தந்தருளுவாராக" என்று அநுதினமுந் துதித்துவரும்படி நமது தெய்வக் குழந்தைகளுக்குத் தெரிவிப்போமாக.

நீலகிரி வரலாறு.

துடிசைகிழார்—அ. சிதம்பரனார் எழுதியது.

நீலகிரி என்பது அஷ்டகுலபர்வதங்களில் ஒன்று. இது ஜலமட்டத்துக்குமேல் ௬0,000 அடி உயரமுள்ளது. இதனுடைய உயர்ந்தபாகம் உதகமண்டலம் என்னப்படும். அதைத்தான் இப்பொழுது Ooty (ஒத்தை), Ootacamund என்று

சொல்லுகிறார்கள். மேகமண்டலமானது பூமிக்கு இரண்டு மைல் உயரத்திலுள்ளது. இரண்டு மைல் என்பது ௧0,௫௬0 அடி. உதகமண்டலம் என்றாலும் மேகமண்டலம் என்றாலும் ஒன்றே. உதகம், மேகம், நீர் முதலியவை ஒரு பொருள் பயப்பன. உதகமண்டலம் அவ்வளவு உயரத்திலிருந்தும் எந்தஇடத்திலும் நீர் ஊற்றெடுத்து ஓடுகின்றது. இதை உதகமண்டலம் சென்றவர்கள் அறிவார்கள். இவ்வித நீர் வளப்பம் மேகமண்டலத்துக்குச் சரியாய் இருப்பதனால் ஏற்பட்டதென அறிகிறோம். எப்போது மேகமண்டலத்தை அளாவியிருக்கிறதோ அப்போதே உதகமண்டலமானது அதிகக்குளிர்ச்சியுள்ளது என்பது போதரும்.

நீலகிரியானது இப்போது தனிஜில்லாவாக இருக்கிறது. ஐதர், டிப்பு காலத்தில் மைசூர் இராஜ்ஜியத்தோடு சேர்ந்திருந்தது. அசோகர் காலத்தில் பௌத்த அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இராமயணகாலத்தில் வாலி சுக்கிரீவர்களுடைய இராஜ்ஜியத்துக்கு உட்பட்டிருந்தது. அப்போது நீலன் என்னும் வானரன் இம்மலையில் வசித்து வந்ததாக ஏற்படுகிறது. அவனுடைய பெயரால் நீலகிரி (நீலன்—கிரி) பெயர் பெற்றதென்றுசொல்லுகிறார்கள்.

வானரர் என்போர் தமிழ் வகுப்பில் சேர்ந்த ஓர் பிரிவார். இப்போது சித்தூர், கடப்பை, பல்லாரி, மைசூர் முதலிய இடங்களில் (Boyas) "போய" ஜாதி என்று ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். அவர்கள் தங்களை "வான்மீகர்கள்" என்றும் "வானரர்" என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் வாலி, சுக்ரீவர்கள் இந்த "போய"வகுப்பைச் சேர்ந்தவர்களாவென்று ஆராயவேண்டி யிருக்கிறது. அப்படி இனிவரும் ஆராய்ச்சியில் ஏற்பட்டால் தமிழ்நாட்டுச் சரித்திரத்துக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். வான்மீக வமிசத்தார் "போய" ஜாதியர் என்பதில் ஐயமில்லை. அச்சாதியார் யாரைக்கேட்டாலும் அப்படியே சொல்லுகிறார்கள். "போய" என்றால் தமிழ்நாட்டில் நாம் கூறும் "போய" ஜாதியல்ல. தமிழ்நாட்

டில் "போய" என்றால் "ஒட்ட" ஜாதி ஆகும். அவர்கள் கூறு வதற்கு அநுசரணையாக வான்மீகர் மைசூர் நாட்டினர் என்று ஏற்படுகிறது. மைசூர் நாட்டில் முல்பாகல் தாலூகாவில் அவந்தி என்னும் க்ஷேத்திரம் இருக்கிறது. அதனை "ஆவணி" என்று சொல்லுகிறார்கள். அங்கே பழயகோவில்களும், இடிந்துபோன கோட்டைகளும், மலையும், மலையின் பேரில் கோவிலும் இருக்கின்றன. கோவில்களிலுள்ள கல்வெட்டுகளை கவர்ன்மெண்டார் எடுத்துப் பிரசுரித்திருக்கிறார்கள். அக் கல்வெட்டுப்பிரதி அவ்வூரிலுள்ள சங்கராச்சாரியார் மடத்தில் இருக்கிறது. அதனை நான் ஆராய்ந்து பார்த்ததில் சப்த முத்திக்ஷேத்திரங்களில் ஒன்றாகிய "அவந்தி"யே இந்த "ஆவணி என்று ஏற்பட்டது. இங்கே வான்மீகருடைய ஆசிரமமும், மலையின் பேரில் வான்மீகர் குகையும் இருக்கின்றன. மலை உச்சியில் சீதையம்மன் இருந்த குகையும் லவன் குசன் இருபிள்ளைகள் இருந்த இடமும் அழகாக இருக்கின்றன. லவன் குசன் என்போர் அஸ்வமேதக் குதிரையைக் கட்டின இடத்தை இன்றும் பார்க்கலாம். லவனும் குசனும் ஸ்ரீராமருடன் சண்டை போட்ட இடமும் இருக்கிறது. இன்னும் அநேக திருஷ்டாந்தங்கள் இது வான்மீக ஆசிரமம் என்பதற்கு சாட்சி பகருகின்றன. அவ்வூரிலுள்ள ஒவ்வொருவரும் வான்மீக ஆசிரமமென்று கூறுகிறார்கள். ஆகையால் வான்மீகருடைய வமிசத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பக்கத்தில் இருப்பதற்கு யாதொரு ஐயமுமின்று. அப்போயர்களே தங்களை "வானரர்கள்" என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் இராமாயணகாலத்தில் போயர்கள் "வானரர்கள்" என்ற ஜாதியாராய் வாழ்ந்து வந்தார்கள் என்று போதருகின்றது.

பன்னிரண்டாவது நூற்றாண்டில் நீலகிரியில் அரசாண்ட படக (Badagas) அரசனாகிய "காலன்" என்பவனை மைசூரில் அரசாண்ட "விஷ்ணுவர்த்தனன்" என்பவன் ஜெயித்ததாக சரித்திரம் தெரிவிக்கிறது. இவ் விஷ்ணுவர்த்தனன்என்பவன் தான் முதலில் சமணனாக இருந்து ஸ்ரீ இராமாநுஜரால் வைஷ்ணவ

ளுக ஆக்கப்பட்டவன். ஆகையால் பன்னிரண்டாவது நூற்றுண்டுக்கு முன் நீலகிரி படகஅரசர்களால் ஆளப்பட்டு வந்தது என்றும் கால அரசன்காலத்தில் மைசூர் அரசாங்கத்துக்குஉட்பட்டது என்றும் தெரிகிறது. மைசூர் என்பது "மகிஷாஷபுரம்" என்பதன் திரிபு என்று கூறுகிறுர்கள். "மகிஷம்" என்றுல் "எருமை" என்று அர்த்தமாகும். "எருமையூர்" என்றுலும் மைசூர் என்றுலும் ஒரே பொருளைத் தருவன. எருமை என்னும் பதத்திலுள்ள முதல் இரண்டெழுத்துக்கெட்டு மை என்னும் எழுத்து ஊர் என்னும் பதத்துடன் சேர்ந்து. இடையில் சகர ஒற்றுத் தோன்றி மைசூர் ஆயிற்று என்னலாம். மைசூர் நாட்டிற்குப் பிரதான தெய்வமாகிய "சாமுண்டி ஈஸ்வரி" என்பவள் மகிஷாசுரனைக் கொன்றதாக புராணம் கூறுகிறது. சாமுண்டிஈஸ்வரி படத்தைப்பார்த்தால் அம்மன் எருமையைக் கொன்றதாக ஏற்படுகிறது. மகிஷாசுரன் எருமை உருவமாக இருந்தான் என்று புராணம் கூறுகிறது.இவைகளைக் கவனிக்குமிடத்து நீலகிரியில் வசிக்கும் தோதவர்கள்(Todas) புராதனமானவர்கள்என்றும்அவர்களால் நீலகிரியும் மைசூரும் முதன்முதல் ஆளப்பட்டு வந்தன என்றும், பின்னுல் படகர்கள் தோதவர்களை ஜெயித்து நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றும் ஏற்படுகிறது. தோதவர்கள் எருமையை வணக்கம் செய்கிறவர்கள். ஆனதால் அவர்களை வென்றதை மகிஷாசுரனை வென்றதாக உருவகப்படுத்தியிருக்கிறுர்கள். மைசூர்நாடு முதன்முதல் தோதவர்களுடைய நாடு என்பதை அவ்வூர்ப் பெயரே தெரிவிக்கின்றது. மேலும் தோதவர்களுடைய பாஷையானது கன்னட பாஷைக்குத் தொந்தமுள்ளதாயிருக்கிறது. இன்னும் நீலகிரியில் உள்ள உருவங்களைக் (Monuments) கவனித்தால் மைசூர் நாட்டில் உள்ளவைகளுக்குப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. நீலகிரியானது முதலில் தோதவர்களுடைய ஆளுகைக்கும், பின்னுல் படகர்களுடைய ஆளுகைக்கும் பின்னுல் "ஒய்சளர்" உடைய ஆளுகைக்கும் பிறகு கஉ-வது நூற்றுண்டில் விஷ்ணுவர்த்தனின் ஆளுகைக்கும், கஎ-வது நூற்றுண்டில் உடையார்

களுடைய (Ummatur Odayars) ஆளுகைக்கும் பிறகு ஐதர் டிப்பு முதலியவர்களுடைய ஆளுகைக்கும் உட்பட்டிருந்தது. மைசூர் சண்டைக்குப் பின்னுல் ஆங்கிலேய அரசாட்சிக்கு உட்பட்டிருக்கிறது. டிப்புசுல்தானுடைய அழிந்துபோன கோட்டைகளை இன்றும் பார்க்கலாம். நீலகிரியானது தோதவர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதும் மைசூர் (எருமையூர்) ராஜ்ஜியமும் அப்போது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்ததென்பதும் ஏற்படுகின்றன. ஆனுல் இராமாயண காலத்திலே நீலன் என்னும் வானரன் அரசாண்டதாகவும் அவனுடைய கிரி ஆனதால் நீலகிரி என்று அவன் பெயரால் பெயர் ஏற்பட்ட தென்றும் அறிகிறோம். வானரர்களுடைய ஆட்சிக்குப் பின்னரே தோதவர்களுடைய ஆளுகை ஏற்பட்டிருக்கிறது.

நீலகிரிக்கு அடுத்தாப்போல் மேல்பாகத்தில் 'நீலம்பூர்' இருக்கிறது. அது இப்போது மலையாளத்தில் சேர்ந்திருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட மாப்பிள்ளைகள் கலகத்தில் நீலம்பூரைப்பற்றி எல்லாரும் அறிந்திருப்பார்கள். ஏனென்றுல் நீலம்பூர் இராஜாவைத்தான் முதன்முதல் மாப்பிள்ளைகள் தாக்கினது. இராமாயண காலத்தில் நீலன் என்னும் வானரனுக்கு இந் நீலம்பூர் இராஜதானியாக இருந்திருக்கலாமோ என்று ஊகிக்க இடம் தருகின்றது. ஏனென்றுல் "கேரளம் வானரா சாரம்" என்ற பழமொழியானது இதனை வலியுறுத்துகின்றது. அப்பழமொழியின் கருத்து என்னவென்றுல் கேரளமாகிய மலையாளம் வானரர் என்னும் ஜாதியாருடைய ஆசாரத்தை உடைத்தா யிருக்கிறது என்பது. ஆகையால் கேரளத்துக்கும் வானர ஜாதியாருக்கும் தொன்று தொட்டு சம்பந்தம் உள்ளதை நோக்கின் இராமாயண காலத்தில் நீலன் கேரளத்தையும் அரசாண்டதாகக் கருதலாம்.

காதல் வெள்ளம்.

வ. வேதநாயகம் பிள்ளை; பி. எஸ். ஆச்சாரியார்.

"அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.—தாயுமானுர்.

வானத்தின் அகலிடமெல்லாம் சூரியன் தனது கிரணங்களால் ஒளிவீசித் திகழுமாறுபோல, ஆரிய நாடெங்கும் உடையவர் பக்திப் பிரேமாம்ருதத்தை வாரியிறைத்து வல்லாரையும் மாட்டாரையும் பரமபதநாதன் அடித்தொண்டராக்கிப் புகழ்வீசி விளங்குநாளில், அவருக்குப் பலவிதத்தாலும் பணிசெய்வதே வாழ்க்கையின் பயனுகுமென்று தொண்டு ஒழுகிய பலருள் வடுகநம்பி என்பவர் ஒருவர். இவர் ஆந்திர நாட்டினராதலின், ஆந்திரபூர்ணர் என்றும் பெயர் பெறுவர். இவருக்கு ஏற்பட்டிருந்த நித்திய கைங்கரியம் உடையவருக்கு எண்ணெய்க் காப்பிடுதல். தோளோடு தோள் இடித்துச் சென்று "இப்பணி எனக்கிடுக! இப்பணி எனக்கிடுக!" என்று முந்துவார் கூட்டத்தில், இவருக்கு வேறு கைங்கரியங்களும் அமைந்துள்ளன.

இவர் உடையவர் திருவடிநிலைகளையே தமது ஆத்மார்த்த பூஜையில் விக்கிரகமாக அமைத்து வழிபட்டு வந்தார். இவ்வாறு ஒழுகுநாளில் உடையவர் அடுத்த கிராமத்திற்குப் பிரயாணப்பட்டுத் தம்முடைய திருவாராதனமான அருளாளப் பெருமானின் விக்கிரகத்தை எடுத்துவரப் பணித்துத் தாம் முன்பாகப் போயினர். இவரும் தம்முடைய திருவாராதனமான உடையவர் திருவடிநிலைகளையும் உடையவர் திருவாராதனமான அருளாளப்பெருமான் விக்கிரகத்தையும் ஒரே மூட்டையாகக் கட்டி யெடுத்துச் சென்றுர். இதனை உடையவர் கண்ணுற்று "வடுகா என்செய்தாய்?" என்று மிகுந்த கோபத்தோடு வினவலும், வடுகநம்பியும் அஞ்சலி கூப்பிய கையினராய் மிக்க வினயத்தோடு 'தங்கள் தேவரில் எங்கள் தேவருக்குவந்த குறையென்ன?' என்று விண்ணப்பஞ் செய்தார்.

உடையவரும் இவர் காதல்வெள்ளம் கரைபுரண்டோடுமாறு கண்டு ஆனந்தபரவசராயினர்.

"குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டித் தென்திசை இலங்கை"

நோக்கும் பெரியபெருமாளுடைய திருக்கண்ணழகைப் பாரா யென்று உடையவர் வடுகநம்பியைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று வேண்டிக்கொள்ளினும், இவர் பெருமாள் திருக்கண்ணழகையும் உடையவர் திருக்கண்ணழகையும் பார்த்து ஒப்பு நோக்கி,

'என் அமுதனைக் கண்ட கண்கள்
மற்றொன்றினைக் காணாவே!'

என்று உடையவர் கண்ணழகிலேயே ஈடுபட்டு நிற்பர். திருக்கோயில் சென்று பெருமாள் தளிகைப் பிரசாதம் பெற்றால், தொண்டர்கள் இருகையாலும் வாங்கி உட்கொண்டபின், கைகளை நீரால் கழுவாது தலையில் தடவிக்கொள்வது வைணவசம்பிரதாயம். எம்பெருமானார் அமுதுசெய்தருளித் தளிகைப் பிரசாதம் வழங்கினால்,

'போனகம் செய்த சேடம் தருவரேல்
புனிதம் அன்றே!'

என்ற பெரியார் அருள்வாக்கின்படி, தமது இரண்டு கைகளாலும் ஏற்றுப் பிரசாதத்தை உட்கொண்டு, வடுகநம்பியும் தம் திருமுடியிலே கைகளைத் தடவிக்கொள்வர். உடையவர் இதனைக்கண்டு மிகவும் கோபித்து 'வடுகா, கையைக் கழுவிக் கொள்' என்று அருளிச்செய்தார். இவரும் அவ்வாறே செய்தனர். மறுநாள் பெரியபெருமாள் சந்நிதிக்கு இவர் உடையவருடன் சென்றபொழுது, உடையவர் பெருமாள் பிரசாதத்தை வாங்கி உட்கொண்டு வடுகநம்பிக்கும் கொடுக்க, நம்பியும் இரண்டு கைகளாலும் அதனையேற்று உட்கொண்டு கைகளைக் கழுவிக்கொண்டார். இதனைக்கண்டு 'வடுகா, என்ன செய்தாய்?' என்று உடையவர், கண்கள் கோபக்குறிகாட்ட வினவிய

பொழுது, இவரும் 'அடியேன், நேற்று அருளிச்செய்தபடியே செய்தேன்' என்று விடைபகர்ந்தனர். உடையவரும் இதனைக் கேட்டு 'நாம் இன்று உனக்குத் தோற்றுவிட்டோம்' என்று அருளினர்.

வீதியெல்லாம் தோரணம். கன்னலும் கமுகும் வீதியின் இருமருங்கும் அழகு செய்கின்றன. திரள்திரளான ஜனங்கள் உல்லாசமாய் வார்த்தையாடிக்கொண்டு பெருமாள் பவனி வரும் சிறப்பைக் கண்டுகளிக்கச் செல்கின்றனர். கீதவாத்தியங்கள் இன்னிசை, பகவானைச் சேவித்துநிற்கும் தொண்டர் குழாத்தின் செவிப்புலனையும் சிந்தைப்புலனையும் ஆநந்தத்தில் ஆழ்த்துகின்றது.

"பச்சை மாமலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தங் கொழுந்தே!"

என்று பாகவதோத்தமர்கள் கல்லும் புல்லும் உருக எம்மருங்கும் எம்பெருமான் கருணைத்திறம் இயம்புகின்றனர்.

"தோள் கண்டார் தோளே கண்டார்! தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்! தடக்கை கண்டாரும் அஃதே!"

என்ற வண்ணமாய், பக்தகோடிகள் சேவைசெய்து கொண்டு நிற்க, எம்பெருமான் ஜகந்மோஹநன் என்னும் தன் திருநாமத்தை விளக்கித் திருவரங்கப் பெருநகரின் திருவீதி வழியாகப் பவனிவருகின்றான். எம்பெருமானார் திருச்செவிகளில் பெரியபெருமாள் பவனிவரும் கோலாகலத்தை எடுத்துக்கூறுவது போன்று, சங்கநாதம் முழங்கிற்று. 'வடுகா, எழுந்திராய்! பரமபதநாதன் நம் பொருட்டாகத் திருவீதியலங்கரித்து எழுந்தருளுகின்றான்! காலம் தாழ்க்காதே; புறப்படு!' என்றார் எம்பெருமானார். அச்சமயம் நம்பியும் உடையவருக்குப் பாலமுது காய்ச்சும் பணிமேற்கொண்டிருந்தார். உடையவரின் வார்த்தையைக் கேட்டு, நம்பியும் "உம்முடைய பெருமாளைச் சேவிக்கப் புறப்பட்டால் என்னுடைய பெருமாளுக்குக்காய்ந்து

கொண்டிருக்கும் பாலமுது பொங்கிப்போமே' என்று மறுத்துவிட்டார். வடுகநம்பி வைஷ்ணவ சம்பிரதாயத்தைத் தழுவிக்கொள்ளுமுன், இவ்ருக்கு உறவினராயிருந்த சிலர், இவர் இராமானுஜர் திருவடிகளை ஆசிரயித்துத் தொண்டக்குலத்தினரானபின், பார்க்கவந்தனர். இவரும் அவர்களைஉபசரித்தனுப்பிவிட்டு, அவர்களும் தம்மைப்போல் பண்டைக் குலத்தைத் தவிர்த்தவர்கள் அல்லாததால், அவர்கள் தொட்டுப் பழகிய பாண்டங்களை உடைத்தெறிந்துவிட்டுப் பிராயச்சித்தம் என்னவென்றுநீண்டபொழுதாகநினைந்து,பாகவதோத்தமரான முதலியாண்டான் வீட்டுப் புழைக்கடையில் கழித்து வைத்திருந்த மட்பாண்டங்களை எடுத்துவந்து உபயோகித்தார். வடுகநம்பி பலநாளாக உடையவருக்கு மனமொழி மெய்களால் பணி இயற்றி, உடையவர் திருமந்திரதானம் செய்து உலகை வாழ்வித்ததுபோல, தாமும் உடையவர் திருநாமத்தை வழங்கித் தம்மை அடைந்தவர்களை வாழ்வித்தருளினர்.

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதரித்த இல்லம்.

ச. சச்சிதாநந்தம்பிள்ளை B. A. L T.

திருப்பாதிரிப்புலியூரில்,நிகழும் வைகாசி மாதத்தில், சின்னாட்களுக்குமுன் வெகு சிறப்புடன் நிறைவேறிய பிரமோத்சவத்தின் சார்பாக, இந்நாளிற் சைவ உலகிற்கொரு தனி விளக்காய் விளங்கும் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் பல அறிஞர்களால் நான்கு நாட்களாக, அரும்பெருஞ் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன. அந்நிகழ்ச்சியில் எமக்கிட்ட பணியைச் செய்யும் பொருட்டு எனது நண்பர் சாத்தூர் வக்கீல் திருவாளர் கந்தசாமிமுதலியார் B. A. அவர்களும் யானும் புலிசை நோக்கிச் பிரயாணஞ் செய்யும் போது, வைகாசி

௧௧-ந்தேதியன்று தல தரிசனங் குறித்துச் சீர்காழியில் இறங்கினோம். அவ்வூரில் வசித்துவரும் தமிழ்ப்புலவரும், தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி வல்லாரும் கைம்மாறு கருதாது பலருக்குத் தமிழ்நூல் பயிற்றுவோருமாகிய திருவாளர்—முத்துத் தாண்டவராய பிள்ளையவர்களோடு அளவளாவத் திருவருள் துணைசெய்தது. அப்போது, திருஞானசம்பந்தப் பெருமானது பரம்பரையிற்றோன்றியபேர் இன்னுமுளரோவென்றும் அவர் திருவவதரித்த திருமாளிகை இன்ன இடத்ததென்று குறிப்பிட முடியுமோவென்றும் கேட்டேன். பிள்ளையவர்கள் பால் தெரிந்து கொண்ட விஷயங்களை ஈண்டுக்குறிக்கின்றேன். சுவாமிகள் திருவவதரித்த கவுணிய கோத்திரத்தினர் பலர் சீர் காழியிலும் சுற்றிடங்களிலும் இருக்கிறார்கள். அவர்களிற் பலர் தற்கால நிலைமைக்கேற்பப் பல்வேறு ஜீவனோபாயங்களை மேற்கொண்டொழுகுகின்றார்கள். வைதிகநெறியிலேயே நிற்பவர்களாகச்சொல்லிக் கொள்ளுகின்ற சிலர் தாமும் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் திருவிழாக்காலங்களில், பெருமான் பின்னர் வேதபாராயணஞ் செய்துவருதல் தம்பெருமைக் கிழுக்காமென்று கருதுகின்றனர்.

இவர்களிவ்வாறாக, பெருமானது பரம்பரையில் வந்தவர்களிற் கடைசியாகத் தோன்றியவர் இற்றைக்குச் சுமார் ௧௨ ஆண்டுகட்கு முன் சிவபத மெய்தினார். அவர் உயிரோடிருந்த போது தோணியப்பராலயத்து விசேட நாட்களில் அவர் ஒரு வகைக் குப்பாயத்தோடு ஆலயத்துக்குச் செல்வது வழக்கம். அப்போது வெள்ளித்தடி யொன்றவர் கையிலிருக்கும். முதன் மரியாதைகள் அவர்க்குச் செய்யப்படும். ஆளுடைய பிள்ளையாருக்குத் திருமுலைப்பா லுத்சவம் குளக்கரையில் நடந்தவுடன்பிள்ளையார் மேற்சொன்ன பெரியார்வீட்டிற்கு நேராக எழுந்தருளுவார். அப்போது அவ்வீட்டிலிருந்து பிள்ளையாருக்குக் கஞ்சி நிவேதிக்கப்படும். பின்னர் சுவாமி திருக்கோலக்காவிற்கு எழுந்தருளுவார். இப்படி அவ்வீட்டிற்கு எழுந்தருளியதன்காரணம் அவ்வீட்டிற்றான் பிள்ளையார் ஆதியில் திருவவ

த்தாரஞ் செய்தமையும், அவ்வீட்டிற்குரியாராயிருந்த அந்தணர், பிள்ளையார் திருமரபைச் சேர்ந்தவராயிருந்தமையுமே. அக்கிழவனார் சிவபதமடைந்த பின், சம்பந்தப்பெருமான் அவ்வீட்டில் நின்று கஞ்சி நிவேதனம் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

இவ்விவரங்களை யறிந்தபின்னர் எனது நண்பருக்கும் எனக்கும் அப்புனித இல்லத்தைத் தரிசிக்கப் பேரவா உண்டாகியது. தகுந்த வழிகாட்டியோடு சென்று அதைக்கண்டபோது எங்கள் மனம் பெரிதும் வருந்தியது. இதைப்படிக்கும் ஒவ்வொருசைவர் மனமும் புழுங்காதிராது என்று நம்புகின்றேன், அந்தோ!என்ன கண்டோம். "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப், பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத சீதவளவயற் புகலித் திருஞான சம்பந்தர் 'திருவவதரித்த' அப்புண்ணிய இல்லம்,இப்போது'இரட்டைத்தெரு' என்று வழங்கப்படும் ஒரு தெருவில், ௧௧-வது எண்ணுற்றஒரு வீடாய்க் குன்றியிருக்கின்றது. அதை ஒரு தெலுங்கப் பிராமணர் வாங்கி அதில் வசித்து வருகின்றனராம்.

இந்நிலைதானோ அப்புனிதவிடத்திற்குரியது! பரசமயகோளரியும் பாலறாவாயருமாகிய பரமாசாரியர் அவதரித்துவளர்ந்த இல்லம், ஒரு தெலுங்கப் பிராமணர்க்குரிய சிறு வீடாகவோ மாறவேண்டும்! விசாரணையின்பேரில் வழிகாட்டியா லறியத்தக்க வளப்பமில் மனையாகவோ வாடவேண்டும்! இன்னுஞ் சில ஆண்டுகள் கழிந்தால், இதுதானவ்வீடு என்று காட்டுவோரும் இலராவரன்றோ?

அத்திருமனையை மணியாலும் பொன்னாலும் அலங்கரிக்க வேண்டாவோ? கவுணியர் குலதீபமங்குத் தோன்றியருளிய தென்பதை என்றும் நினைவூட்ட நந்தாவிளக்குகள் நாட்டவேண்டுமன்றோ? பண்டிதர்க்கும், பாமரர்க்கும், இளையோர்க்கும் முதியோர்க்கும் சைவர்க்கும் பிறர்க்கும் கண்டவளவில் அவ்வில்லத்தின் பண்டைப்பெருமை கண்ணுக்குப் புலனாகும்படி தக்க கட்டிடம் அமைக்கவேண்டாவோ? அந்தோ! சைவச்

சகோதரர்காள்! இங்ஙனமே சைவசமய சந்தானாச்சாரியர்கள் அடங்கியமகிமை வாய்ந்த தலங்களையும்மதியாதிருக்கின்றோம். பேருபகாரிகளாகிய இப்பெரியார்களை நாம் பாராட்டாதிருப்போமாகில், செய்நன்றி கொன்ற பாதகம் நம்மைச்சேர்ந்துவிடுமே. இதற்குப் பெரிதும் அஞ்சி, இத்திருத்தலங்களை ஏற்ற முறையில் சிறப்பிக்க முற்படுவோமாக. கொட்டும், முழக்கும், சீரும் சிறப்பும் பிரபலமான சிவாலயங்கட்கு மட்டுமா உரியவை? சிவாலய வழிபாட்டையும் சைவ சமயத்தையும் நிலைநாட்டிய சமயாசாரியர் சந்தானாசாரியர்க்கு முரியவை என்று யாவரும் ஒத்துக்கொள்ளுவோமன்றோ! சமயகுரவர் ஏனைய மூவரைப்பற்றியும் இங்ஙனமே விசாரித்து உண்மையறிந்து செய்வன செய்தல் நமது கடமை.

பெரியார் அவதரித்த இடங்களையும் அடங்கிய இடங்களையும் சிறப்பாய்ப் போற்றல் பிறநாடுகளிலுங் கையாளப்படுவதொருவழக்கமே. ஆங்கில கவிச்சக்கிரவர்த்தியாகிய ஷேக்ஸ்பியர் பிறந்த இடத்தை ஆங்கிலேயர் எவ்வளவு சிறப்பாய்ப் பாராட்டுகின்றனர். டிக்கன்ஸ் என்னும் கதாசிரியர் வளர்த்துவந்ததொரு நாயையும், யாழ்வல்ல இத்தாலியனொருவன் உபயோகித்த வீணையையும் எத்தனையோ சவரன் கொடுத்து மேல் நாட்டு அபிமானிகள் வாங்கினார்களாம். நாமுமிந்த நற்கருத்தைப்பேணவேண்டுமல்லவா?

ஆகையால்,சைவ சோதரர்களே! சிவாலயத்திருப்பணிசெய்யும் பெருஞ்சிவ புண்ணியத்தில் ஈடுபட்டிருக்கும் நாட்டுக்கோட்டைப் பிரபுக்களே! நாமெல்லாம் சைவ சமயிகளாயிருத்தற்குக் காரணராகிய நமது சம்பந்தப் பெருமானுக்கு ஆலயங்களிலும் குருபூசை மடங்களிலும் சிறப்புச் செய்வதோடமையாது, அவர் திருவவதரித்த இல்லத்தை வாங்கி, அதிலோரழகிய மண்டபம் சமைத்து, பெருமானவதரித்த இடமதுவெனச் சிலையிலுமெழுதி,கூடுமாயின் சம்பந்தப்பெருமான்திருவுருவமொன்றைப் பிரதிட்டையுஞ் செய்து, சுருக்கமான அளவில் நித்திய பூசைக்கு ஏற்பாடுபண்ணி, இடையறாது தேவார பாராயணம்

நடைபெறும் வண்ணம் தேவாரபாடசாலை யொன்றுமங்கமைத்தால் எவ்வளவு சிறப்பாய் இருக்கும்! சம்பந்தப்பெருமான் சாரமற்ற மனிதருளொருவரல்லர். இன்று முள்ளார் என்று முள்ளார். மேற்சொன்ன வகையில் அவரைப்போற்றுவோமாயின் பெருஞ்சிவபுண்ணியம் நம்பால்வந்தடையும். சைவந்தழைக்கும். பல லக்ஷ ரூபாய்களை மனமுவந்து சிவபுண்ணியத்திற் செலவிடுவோர் இன்னுஞ் சிலரிருக்குமிந்நாளில், சில நூறுரூபாய்களில் செய்து முடிக்கத்தக்க ஸ்ரீசம்பந்தர் ஞாபகச் சின்னம் விரைவில் அமைக்கப்படுமென்றே நம்புகின்றேன். இதனைச்செய்து முடிக்க முந்துந் திருவாளர் யாவரென்றறியச் சைவ உலகம்பேரவாவுடையதாயிருக்கும். இந்நற்காரியம் விரைவில் இனிது நிறைவேறத் திருவருள் துணைசெய்வதாக.

தீபாவளிப்பண்டிகை.

"நவிலு மிவ்வுலகில் யாமுள வளவு
நலமுறு கன்னிமைத் தூசைச்
சிவமுறு தயில முழுக்கினை யருந்தத்
தீந்தரு முணவினைச் சீரைத்
தவமுற வளிக்குந் தழன்மணிப் பொன்னைத்
தடமுறு மழகுள மனையைக்
கவனமுற் றடையி னுயிர்தனைக் காணீர்
கர்ண்மி னென் றாசினைப் புரிவான்."

உலகில், இளமைப் பருவம்வாய்ந்த எழில்மிக்க வனிதாரத்தினங்களையேனும், நூதனமாகிய உயர்ந்த வஸ்திரங்களையேனும், தேகாரோக்கியத்தைத்தரும் தைலஸ்நானத்தையேனும், ஷட்ரசவர்க்க பரமான்னங்கள் சுகந்த சிற்றுண்டிகளையேனும், சிறப்பாகிய அணிமணிப் பொன்னுலாய ஆபரணாதிகளையேனும், அழகிய விசாலமாகிய மாட கூட மாளிகையேனும் இதரமான எவ்வித சுக நலபோக பாக்கியங்களையேனும்,

யாவரேனும் யாமுள்ள வரையில் அடைதல் கூடா. மீறிச்செய் வோர் மாறாது ஆவியிழப்பர் என இத்தனை அநீதியாய் எத் தகையோரும் சித்தங்கலங்க ஏங்கிநின்று துக்கிக்கும் வண் ணம் நரகன் எனும் ஓரசுரன் கொடுங்கோ லோச்சிவரும் நாளில், இக்கொடுமைகட் காற்றாத பக்தகோடிகளால் தூண் டப்பெற்ற இந்திரனால் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ கண்ணபிரா னனவர் வருந்தினோர்க்கு அபயமீந்து, ஸ்ரீசத்தியபாமா சகிதம் நரகாசுரனோடு அமர்செய்து செருக்களத்தே வீழ்த்தியபின் கருணையங் கடலாகிய சர்வேசன் அன்னானைக் கிருபையால் நோக்கி ஏ! நரக!! எம் பக்தகோடிகட்கு நீ செய்தவை யனைத் தும் கொடுமையினுங் கொடுமையேனும், இவ் விறுதிக்காலத்து நினக்கு வேண்டுவன தெரிவிப்பின் பூர்த்திசெய்வோம் என்ற அருளுடையான் அருள்மொழியைக் கேட்டலும் ஞானோ தயமாகி சிந்தை நைந்துருகி துடித்தெழு மனத்தால் துதி பல பலவாய்ச் செய்து பின்னரும் செந்திருநாயகனை நோக்கி, ஏ! பக்த பராதீன!! இகலோக இன்பங்களத்தனையும் என்னால் வெகுகாலமாயிழந்து துயர்க்கடலிலாழ்ந்துபரிதவித்திருந்த இவ் வுலகினர் கருணாமூர்த்தியாகிய உம்மால் அத்துயர்க் கடலைத் தாண்டிச் சுகமெய்தியகாலம், துலா (ஐப்பசி) மாதம் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி திதி சந்திரோதய வேளையாகையால் பிரதி வருஷமும் இதே மாத, பட்ச, திதி, வேளையில் வல்வினைகளை யும் வராதொழிக்கும் நினது திவ்ய நாம சிந்தனையோடு எண் ணெய் தேய்த்து, ஸ்னானம்செய்து புதிய வஸ்திராபர ணங்களை அணிந்து இகபரசுக தேவதேவனாகிய நினக்கு வை திகமுறைப்படி ஆராதித்துத் துதித்து இன ஜன சத்வ கோஷ் டியுடன் உண்டவர்க்கு அன்னார் பவப்பிணியொழித்து நின் அடி நீழலும் தந்தருளவேண்டு மென்பதே எளியேன் கோரிக்கை எனலும்; அபயமென்றோரை ஆதரிக்கும் ஸ்ரீ அச் சுதன், சுயநலங்கருதாது பொதுநல நாடும் இறுதிக்கால உணர் வைக் கண்டு மகிழ்ந்து குற்றமனைத்தும் போக்கி, அவ்வாறே வரமளித்து ஒப்பீடில்லாப் பரமபதத்திற் சேர்த்தருளினனென் பது தொன்னூற் றுணிபு.

இன்று பராதகாலத்தில் ஸ்நானம் செய்பவர்களுக்கு எண்ணெயில் மகாலட்சுமிதேவியும், நீரில் கங்காதேவியும் ஆவிர்ப்பவித்திருந்து சகலசம்பத்துக்களையும் அளிக்கின்றார்களென்றும்; தீபாவளிக்கு முந்திய தினமும், தீபாவளி தினமும், தீபாவளிக்குப் பிந்திய தினமும் ஆக மூன்று தினங்களிலும் வீடுகளிலும் அறைகளிலும் எங்கும் இருட்டேயில்லாமல் பிரகாசமாயிருக்கும்படி செய்யவேண்டுமென்றும்; எவர்கள் வீட்டில் அன்று தீபம் பிரகாசிக்கவில்லையோ அவர்கள் வீட்டிலும், அன்று சந்திரோதய காலந்தவறி சூரியோதயமானபின் ஸ்நானஞ்செய்பவர் வீட்டிலும் தரித்திரம் குடிகொள்ளும்படி சாபம் கொடுக்கப்படுமென்றும் நூலாராய்ச்சிக்காரர் கூறுவர். இதுவே தீபாவளி (தீப—ஆவளி) தீபவரிசைகளால் அலங்கரித்து தீனதயாளனை ஆராதிப்பது என்பதின் சாராம்சமாகும்.

தீபாவளி என்பதும் மற்ற மற்ற விசேஷங்களைப்போலவே சுத்த சத்வகுண சீலர்களால் மிக்க பயபக்தி விசுவாசத்துடன் அநுஷ்டிக்க வேண்டியதென்பதே சத்வ சாஸ்திரக் கொள்கை. இதையடுத்து அமாவாசையன்று நடத்தும் நோன்பு என்ற சுத்த வைதிக விரதமும் இதைநன்றாய் ஞாபகப்படுத்துகிறது. நாள்பட அநுபவித்த துன்பங்களையெல்லாம் போக்கி இன்பத்தை யடைந்ததன் அறிகுறியாக பகவானை ஆராதிப்பதென்றும்; மற்ற அபீஷ்டங்களை யெல்லாம் அடையவேண்டி வெகுநாள் கவலையி லாழ்ந்திருந்தவர் பெண்மணிகளே யாகையால் அவர்கள் தீபாவளிதினம் போலவே அடுத்த அமாவாசையை நோன்பு என்னும் விரதமாகக்கொண்டு எவ்வித சிற்றுண்டியாதி பலகார பட்சணங்களையும் வாயிலிடாமல் நிச்சலமாக விருந்து தம் தம் இஷ்டானுசாரம் சர்வேஸ்வரியை ஆராதித்துவரும் நேர்மை, பக்தி, சுத்தி, நெறி, முதலியவற்றையும் கவனிக்க தீபாவளியின் தூயதன்மை தோற்றமாம். விரதம், நோன்பு, பண்டிகை திருவிழா முதலியன முக்கியமாய் பெண்டுகளுக்கே உரியனவாகையால் அம்மங்கையர்க்கரசிகளின் ஒப்பற்ற ஒழுக்க வழக்கங்களிலிருந்தே அந்தந்த நாளின் வைபவங்களை அறிந்துகொள்ளலாம்.

ஜீவகாருண்யமே உருவாய்க்கொண்டு சுத்த சத்துவகுண சீலராய், திரிகாலஞானிகளாய் விளங்கிய நமதுமுன்னோர்கள் பண்டிகை விரதம் நோன்பு முதலிய பெயர்களால் சில தினங்களைக் குறிப்பிட்டு வைத்ததன் காரணம் தேகத்தைச் சுத்திகரித்து நோயற்றவாழ்க்கையைஉண்டுபண்ணவே. அத்தினங்களை உபவாச நாளாகக்கொண்டு தினந்தினம் உபயோகிக்கும் பதார்த்தங்களிலும் தாமச பதார்த்தங்களை நீக்கி சத்துவகுண காய்கறிகளையே ஒரே வேளை உணவாகக்கொண்டு, வாதமாதி மூத் தோஷங்களை வளரவிடாமலடுத்து, நீண்ட ஆயுளைப் பெற்று இல்லற தருமங்களை இயல்புடன் செய்துவரவே என்பது அநுபவசாலிகளுக்கு நிதர்சனமாம். சாதாரண ஆதிவார, சோமவார, சுக்கிரவார, சனிவாரங்களிலும், கிருத்திகை, அமாவாசைகளிலும், திவசம் என்னும் சிரார்த்த நாளிலும், விரதமிருப்போரும் வாதமாதி ரோகங்களையுண்டாக்கும் தமோகுண காய்கிழங்குகளை நீக்கி சத்துவகுண காய்கறி பதார்த்தங்களையே சேர்த்தல் வழக்கமேயன்றோ? எனவே பண்டிகைகள் யாவும் விரதமே எனல் வெள்ளிடை.

இத்தகைய விரதங்களில் தமிழ்நாட்டிற்கு முக்கியமென்ற மட்டில் விலக்காது இம சேது பரியந்தம் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகையாகிய தீபாவளி நமது தமிழ்நாட்டில் சில குடும்பங்களில் பாபாவளி(பாப—ஆவளி)பாபங்களை வரிசையாக செய்தல் என்ற பெயராக மாறுதலடைந்து கசாய்க்கடைக்காரர் வேலையாகிய பெருங்கொலைகளைச் செய்வதும் செய்விப்பதும், விற்பதும், உண்பதும், உண்பிப்பதுமாக, வருஷத் தோர்முறை அருமையாக வரும் இப்புண்ணிய திருநாளை வீணே கொலைத்தினமாக்கி, அளவற்ற பிராணிகளின் உயிரைப் போக்கி, மனுஷ ஜென்மம் வந்ததன்பயனைச் சிறிதேனும் கவனியாது பாபத்தொழிலைச் சொந்தமாக்கி, தன்தேக மாமிசம் போன்ற இதர ஜெந்துக்களின் மாமிசங்களைப் புசித்தும், இந்த அகோர செயலுக்கேற்ப இழிவான கள் சாராய மாதி மதுவர்க்கங்களைக் குடிக்கும் வழக்கத்தையும் பெருமையாகக் கருதி தீபாவளி பண்டிகை கொண்டாடியதாய் பெண்டுபிள்ளை

களுடன் கூடிக் குலாவி ஆனந்திப்பதே தற்கால தீபாவளியா யிருக்கிறது. இது அவரவர் குலத்தின் ஒழுக்கத்திற்கும் அறக் கடவுளுக்குந்தான் சம்மதமாமோ?

அக்காலத்தில் ஒரேஒரு நரகாசுரன் இருந்ததையே ஆற் றுணுது நடுங்கிய உலகில் தற்போது வீட்டிற்கு வீடு நரகா சுரர்களைக் காணும்படியான பரிதாபநிலையில் வந்துள்ளதும் வினைவசம்போலும். அந்த நரகன் என்னும் அசுரன் ஒழிந் தும் அவன்செய்துவந்த கொடுந்துன்பமாகிய நரகவேதனை இன் றும் ஒழிபடவில்லை. அந்த நரகனால் தேவரும் மனிதருமே தியங்கினரென்றால் இந்த நரகர்களால் பட்சி, விலங்காதி ஜீவரா சிகள் கூட்டக்கூட்டமாய் வதைக்கப்படுகின்றன. அவை வை கறைத் துயிலெழுந்தவுடனே மனித கோடிகளையும் தங்கள் இனிய கீதங்களாற் கண் விழிக்கச்செய்து, கடவுளைப் பணியக் கற்பித்து, சோம்பலைநீக்கி சுருசுருப்புடன் தொழில்முறையில் செல்லவும் தூண்டுதல் செய்து, ஆனந்தமாய் வாழும் சமயம் மாமிசபட்சணிகளைக் கண்டவுடனே திடுக்கிட்டு, மெய்மறந்து, ஆவிசோர்ந்து, அத்தனே! எத்தனை நரக அசுரரைப் படைத்த னையோ? என்றேங்கித் தவிக்கின்றன! என்னே அவற்றின் அப யத்தொனி!

குளிக்கச்சென்று சேற்றைப் பூசிக்கொள்ளலை யொப்ப இப்படிப்பட்ட விசேஷதினங்களில் பண்டிகை (விரதம்) கொண் டாடி பாபத்தை நீக்கிக் கொள்வதற்குப் பதிலாக காடை, கவு தாரி, கோழி, முயல், பன்றி, ஆடு முதலிய ஜீவராசிகளை வதைத்தும், முட்டைகளைச் சிதைத்தும், மச்சமாதி ஜலசரங் களைத் துணித்தும் அந்நன்னாளைக் கொலைத்தினமாக்கியும், பாபராசிகளை மூட்டை கட்டிக்கொள்ளல் தருமமா? ஒரு வீட்டில் குழந்தைக்கு வியாதிகண்டால் அக்குடும்ப முழுதும் கண்கலங்கி மனம் வேறுபட்டு, சிந்தை நைந்து நொந்து துக்க சாகரத்திலாழ்ந்து வருந்துவது பிரத்தியட்சமல்லவா? அக்கால் செய்துகொள்ளும் பிரார்த்தனைகளும் கோடிப்புகளும் ஆரா தனைகளும் நவக்கிரக சாந்திகளும் கணக்கிலடங்குமா? அப் போது பார்க்கும் வைத்தியமும், சோதிடமும், குறிகளும் இத்

தனே யென்பதுண்டா? ஒரு குடும்பத்தில் வந்த சிறிய நோயைப்பற்றி இவ்வளவு பிரமாதமும் பிரயாசையுமென்ருல், இதைப்போல் ஒரு குடும்பத்திலுள்ள கும்பலிலிருந்து ஒரு ஜீவனுகிய கோழியோ, ஆடோ, பன்றியோ, ஒன்றைத் தனித்துப் பிரித்து அதன் ஜதைக் கூட்டங்களின் மனந் திடுக்கிட, வயிறுகுழம்ப, சித்திரவதை செய்வதென்ருல் இதைவிடக் கொடுமை வேறுண்டா? இவை வளரத்தானே தெய்வமணங் கமழுந் தமிழ்நாட்டில் சில வகுப்பாருக்கு ஆடி யுகாதி. தீபாவளி நாட்டுக் கார்த்திகை மாட்டுப் பொங்கல் முதலிய பண்டிகைகள்வருகின்றன? இப்படி வதைபட்டுஉயிர்விடும் வாயில்லாப் பிராணிகளின் கண்ணீர் வீண்போமா? மனிதனுல் கொல்லப்படும் அந்தப்பிராணி அந்த ஆபத் சமயத்தில், தன் கழுத்தை அறுக்கையில் தன்னைக் காத்துக்கொள்ள வேறு வகையின்றி "எல்லா ஜீவராசிகளுக்கும் ஏக தந்தையாகிய தருமக் கடவுளே? இந்த நரகாசுரனிடத்தில் அகப்பட்டு மீளும் வழியின்றி சித்திர வதையுடன் உயிர் விடுகின்றேன். இதற்குக் காரணமாயுள்ள ஒவ்வொரு குடும்பமும் இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலும் ஓயாமல் உழன்று அவதிப்பட்டே அழியக்கடவது" என்ற கொடூர சாபத்தைக் கொடுத்து ஆவியிழக்கின்றது. அந்த அனுதைப் பிராணியின் அபயக்குரலும் அழுகை சப்தமும் கல்லான மனத்தையும் கலங்கச்செய்து விடுமே! எனவும், திக்கற்ற அப்பிராணி உயிர்விடுஞ் சமயம் கடவுளை நினைத்துவிடும் ஒவ்வோர் கண்ணீர்த் துளியும் வழிவழி யீர்வதோர் வாள்களாக நின்று பழிக்குப் பழிவாங்கத் தப்பாதே! எனவும், ஜீவகாருண்யமே உருவாக வந்துள்ள நமது வம்ச மூதாதைகளாகிய மகரிஷிகள் கூறியுள்ள ஆப்தவாக்கியம் அணுவளவும் தவருதே! "சீவவதை தனக்குச் சித்திரவதை" "தீவினையகற்று" "புலையுங் கொலையுங் களவுந்தவிர்" "நோன்பென்பது கொன்றுதின்னுமை" "ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும்" "அவிசொரிந்து ஆயிரம்

வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று"
என்பவாதி கவனிக்கத்தக்கன.

"கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞான மாகும்
கொலையாதி அகன்றொழுகும் தவங்கள் தாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி அகற்றிய நல்லறங்கள் தாமே
குவலயத்தில் ஒப்பரிய அறங்க ளாகும்
கொலையாதி அகன்று பெறுஞ் செல்வந்தானே
கூறின் உயிர்க்கு இதமான வாழ்வதாமே."

என்பவாதி பொன்னுரைகளையேனுங் கவனித்து, இது வெகு நாள் வழக்கம், வழக்கத்தை விடக்கூடாது என்ற பிடிவாத குணத்தையும், அறியாமல் இது வரையில் செய்துவந்த குல நாசத்தை விளைவிக்கும் ஜீவவதையும் விடுத்து ஆழ்வார்களுடையவும் நாயன்மார்களுடையவும் சந்ததிவழிவந்த நாம் நமது சமய, குல, ஒழுக்கங்களை நினைந்து அவ்வழி யொழுகிப் பாபக் கடலினின்றும் மீளுதல் நமது வம்சச் சிறப்பாகும்.

ஒப்பில்லா நமது சமய, குல, ஒழுக்கங்களில் உண்மைப் பற்றுடைய ஜீவகாருண்ய நண்பர்கள் உத்தமோத்தம தினமாகிய தீபாவளியன்றும் அதன்முன் பின் இருதினங்களிலும் குற்றமற்ற ஜீவப்பிராணிகளைத் தங்கள் கையாலேயே கோழிக்குத் தவிடும், தானியங்களும், பன்றிக்குக் கூழும் கஞ்சியும், ஆட்டுக்குத் தழையுங் கொடுத்து வளர்த்தும், இவர்கள் தங் குரலைக்காட்டிக் கூப்பிட்டவுடனே அன்பாக ஓடிவரப் பழக்கியும் சொந்தம் பாராட்டிவந்த கபடமற்ற செந்துக்களை மனந் துணிந்து கொல்லவும் விற்கவும் தின்னவும் உள்ள சில வகுப்பாரை அவற்றினின்றும் நீங்கும் பொருட்டுக் கூடியவரை முயற்சி செய்தல் தமிழ்நாட்டின் முக்கிய கடமைகளில் முதன்மையானதாம்.

கொல்லா விரதங் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என்இச்சை பராபரமே"

அ. வேங்கடாசல முதலியார்
ஆயுர்வேத வைத்தியர், திருவண்ணாமலை.

சர்க்கரை இறக்குமதி.

"இந்தியாவில் இறக்குமதியாகும் ஆகாரப்பொருள்களில் சர்க்கரை மிகவும் முக்யமானதாக விருக்கிறது. நாலுமுதல் ஆறுலக்ஷம் டன்கள் இந்தியாவில் இறக்குமதியாகின்றன. அவைகள் ஏறக்குறைய கரு முதல் உஉ கோடி ரூபாய்கள் மதிப்பாகிறது. குயூபா, ஜெர்மனி, மருஷியஸ், ஜாவாதீவுகள் முதலிய இடங்களில் ஏற்றுமதியாவதற்கு வேண்டிய சர்க்கரை விளைகிறது. ஆனால் இங்குசெலவாவதற்கு போதாததாக யிருக்கிறது. சண்டை காலத்தில் சர்க்கரை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியானது. ஆனால் இங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்குத் தடையேற்பட்டபொழுது, சர்க்கரை விளைவு வரவரக் குறைந்தது. இப்பொழுது இந்தியாவின் பிரயோஜனத்திற்குக் கூடப் போதாமையாயிருக்கிறது. இந்தியாவிற்கு சமீபத்திலும் அடுத்தாற்போலுள்ள ஜாவா முதலிய தீவுகளிலிருந்து இந்தியாவிற்கு சர்க்கரை வருகிறது. அத்தீவுகளின் செழிப்பான நிலங்களில் நன்முக விளைவதால், குறைந்த விலைக்கு அவர்களுடைய சர்க்கரையை விற்க அவர்களுக்கு முடிகிறது. மருஷியஸ் தீவுகளிலிருந்தும் இந்தியாவிற்குச் சர்க்கரைவருகிறது; ஆனால் ஜாவாவிலிருந்து வருவதுபோல் அவ்வளவு அதிகமாகவில்லை. சண்டைக்கு முன்னால் ஜெர்மனியிலிருந்தும் இந்தியாவிற்கு 'பீட்ரூட்' சர்க்கரை வந்தது. ஆனால் சண்டையிலிருந்து அது அநேகமாக நின்றுவிட்டது.

கல்கத்தாவிலிருந்து ஒரு சாமான்ஏற்றும் படகுமூலம் பத்துதினங்களிலே ஜாவாவுக்குச் செல்லலாம். பின்வரும் ஸ்டீமர்களே முக்கியமாக ஜாவாவிலிருந்து கல்கத்தாவிற்கு வருகின்றன. அவையாவன:—ஓசாக் ஷோடன்கெய்ஷா, நிப்போன் யூஷன் கெய்ஷா, ஜாவா வங்காளம்கப்பல், பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம்நாவிகேஷன்கம்பெனி, ராலிபிரதர்ஸ் அன்கோ லிமிடெட்

வரி:—தற்காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் இறக்குமதியாகிற சர்க்கரைக்கு க௱-க்கு உரு வரி போடப்பட்டிருக்கிறது.

இந்தவரி ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் தீர்வைவிலாசு மதிப்பையொட்டிப்போடப்படுகிறது. இவ்வரிவிற்பனையாகும்விலையைக் கவனியாமல் ஜனவரி மாதத்திலேயே போடப்படுகிறது.

பருவம்:—ஜாவாவில் யந்திரங்கள் டிசம்பர் மாதம் வரையில் வேலைசெய்துகொண்டிருந்தபோதிலும், சர்க்கரைக்குப்பருவம் மே மாதத்திலிருந்து ஆகஸ்டு வரையுமாகும். ஜாவாவில் புதிய சர்க்கரை மே மாதத்தில் அறுவடையாகிறது. இந்திய வெல்லப்பாகுக்குப் பருவம் நவம்பர்,டிசம்பர் மாதம். இது மார்ச்சு மாதம் முடிய நடைபெறுகிறது. அச்சமயத்தில் இந்தியாவில் சரியானபடி சர்க்கரைப்பாகு இருக்கிறதில்லையாகையால் இம்மாதம் சர்க்கரை இறக்குமதிக்குச் சரியான காலமாகவிருக்கிறது. ஆனால் இந்தியாவில் சர்க்கரை ஆலைகள் ஆரம்பமானதிலிருந்து விஷயங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. இது எங்கே கொண்டுசெல்லும் என்பதுதெரியவில்லை. எவ்விதத்திலும் பூஜா பருவத்திற்கும், தீபாவளிக்கும் இறக்குமதியாவதற்கு ஆகஸ்ட் ஸெப்டம்பர் மாதங்களே தகுந்த மாதங்களாக விருக்கும்.

வியாபாரம்:—இந்தியாவில் முக்கியமாக சர்க்கரை வியாபாரங்கள் செய்பவை கல்கத்தா, பம்பாய், கராச்சி, மதராஸ், ரங்கூன் முதலிய துறைமுகங்களே. இவை எல்லாவற்றிலும் கல்கத்தாவிலேயே அதிகமாக இறக்குமதியாகிறது.

இந்தியா, இங்கிலாந்து, யூரோப் இம் மூன்று இடங்களும் அதிகமாக சர்க்கரை உற்பத்திசெய்கின்றன. ஜெர்மனியில் விளையும் பீட்ரூட் சர்க்கரை யூரோப்புக்குப் போதுமானதாக விருக்கிறது. சில சமயங்களில் இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்கிறது. ஆனால் அங்கு விளைவு கம்மியாக விருக்கிறபொழுது அவை ஜாவாவில் வாங்கவேண்டியிருக்கிறது. அமெரிக்காவுக்கு குயூபன்தீவுகள் சர்க்கரை அனுப்புகின்றன. அங்கு விளைவு கம்மிப்படுகிறபொழுது அத்தேசமும் ஜாவாவில் தான் வாங்க வேண்டும். இவ்விதமாக ஜாவா சர்க்கரைஉற்பத்திக்குப் பிர

தானமாக விருக்கிறது. இன்னும் குரூபா, ஜெர்மனி முதலிய இடங்களில் விளையும் சர்க்கரை அதிக விலையுள்ளதாக விருக்கிறது. ஆனால் ஜாவாவில் விளைவது மிகவும் மலிவாயிருக்கிறது. அங்கு கூலியும் ஜாஸ்தியில்லை. விளைவும் சரியானபடியிருக்கிறது. இக்காரணங்களை முன்னிட்டே ஜாவாசர்க்கரைக்கு, ௧00-க்கு ௨௫ வரிபோட்டும், இந்திய சர்க்கரையுடன் போட்டி செய்ய இயல்கிறது. ''கமர்ஸியல் இந்தியா''

நியாயமா?

சோதரர்காள் நுஞ்செல்வச் சுந்தரிய ரைச்சற்றும்
ஆதரமில் கைம்மையரென் ருக்கியிருட் பாழறையுள்
வாதைச் சிறைப்படுத்தி வாழ்ந்துவக்குந் தீயீர்க்கெப்
பேதையரோ அந்தணராம் பேர்தந்து போயினரே.

சீரணிநெற் றித்திலகம் தீர்ப்பதுவும் அன்றிநறும்
தாரணியுங் கூந்தலையுந் தான்மழிக்கக் கைம்மையர்க்கென்
நீரமிலா தேநூல் எழுதினரை யாம்காணில்
ஓரடியில் வன்றடியால் ஓங்கியடித் தேகொல்வம்.

செய்யீர் மறுமணநும் சிற்றிடையார்க் கென்றுரைத்த
பொய்யேயும் நூலெயெலாம் பொன்றமுது காட்டெரியில்
வையீர் இனியேனும் மங்கையருக் கன்னதுசெய்
துய்யீ ரெனப்புகறற் கோரிமையுந் தாழ்த்தாதீர்.

உற்றுரு நீருஞ்சேர்ந் துண்டுவந்தா டிக்களிக்கச்
சிற்றுடை சுற்றத் தெரியாச் சிறுமியர்க்குப்
பொற்றாலி பூண்பிக்கும் புன்றொழிலா லன்னவர்நூல்
அற்றலகூ தும்பிழையோ அன்றேல் விதிப்பயனோ.

நுங்கள்விருப் புள்ளனவேல், நுண்ணிடையா ராயிரவர்
தங்களையும் நீர்மணக்கத் தக்கீர்போ லும்மெலிய
மங்கைய ரவ்வாறு மணக்கமறுப் பீர்போலும்
இங்குள்ளஉம் நீதிமுறை எந்நாட்டுங் காண்பரிதே.

சோலையிலே வாழுமிளம் தோகையன்னார் நூலிலராய்
மூலையிலே தள்ளுண்டு மூடுதிரை யுள்வருந்துங்
காலையிலே தோழியர்தம் காதலரோ டாடனினைந்
தாலையிலே புக்ககரும் பாநைத லோர்ந்திலிரோ.

பல்லாற்று னும்தமர்கள் பைங்கணுறக் கைம்மையரைக்
கொல்லாமற் கொல்வதினும் கொண்கரொடு கட்டையினில்
எல்லார்செந் தீமூள்வித் தேற்றீர் புகலிடமொன்
றில்லாத அன்னார்க்கு எழில்மணஞ்செய் வித்திலிரோல்.

வீதியிலே சிற்றில் விளையாடு மோர்சிறிய
பேதையின்பா லுன்னகத்துப் பேரழுகை யாதெனவென்
காதலன்மாண் டானெனமின் கம்பிவந்த தென்றுபின்னும்
ஆதரமோ டங்குவிளை யாடியதும் கேட்டிலிரோ.

ஒன்றே யுரைப்பல் ஒறுத்திரோ லும்பொறுப்பல்
என்றே மறுமணநம் ஏழைச் சிறுமியர்க்கு
மன்றேற்றிச் செய்து மகிழ்வாமோ மற்றையர்போல்
அன்றேநாம் நாகரிகர் ஆவாமிஃ துண்மையரோ.

வந்துவிழுந் துற்றதடி மார்பில் இருப்புலக்கை
இந்தவிதி யானுறுவல் என்றறியே னென்னவழும்
கந்தமலர்க் கூந்தலிலாக் கைம்மையர்கண் ணீர்கண்டும்
உந்தமனம் சோர்ந்திலவேல் உண்மையிலெஃ கும்முளமே.

சில்லென்று பூக்கும் சிறுநெருஞ்சிக் காடதனில்
நில்லென்று சொல்லி நிறுத்திவழி போனீரென்
றொல்லென் றழுதகுரல் உங்கள்செவிக் கேட்டிருந்தும்
கல்லென்ற வுள்ளங் கரையாத தென்னேயோ.

மு. கிருஷ்ணசர்மா,
திருச்செந்தூர்.

பத்திரிகை ஆராய்ச்சி.

அமெரிக்காவில் குடிப்பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்குத் தலைமைபூண்டு உழைத்துவரும் பூனைக்கால் ஜான்ஸன் அவர்கள் சமீபத்தில் தென்னாப்பிரிக்கா சென்றபோது தர்பனில் வெளியாகும் "வித்யாபாநு" பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன:—

நான் ஆயிரவருடங்கள் வரை உயிரோடிருக்க நேர்ந்தாலும் அந்நாள் வரைக்கும் நான் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது அவ்வூர் ஜனங்கள் என்பால் காட்டிய அன்பும் விசுவாசமும் மறக்கக்கூடியனவல்ல. இந்த விசுவாசத்தை முன்னிட்டும் வேறு சில முக்கிய காரணங்களை முன்னிட்டும் இந்தியஜனங்களின் ஞாபகம் என்னுள்ளத்தில் பரிபூரணமாய்ப் பதிந்திருக்கிறது. நான் மதுவிலக்கு விஷயமாக உபந்நியாசஞ் செய்ய இந்தியாவுக்குச் சென்றது அநேகமாய் மூடத்தன மென்றே நினைக்கிறேன். ஏனெனில் என்னைவிடச்சிறந்த மதுவிலக்குப் பிரசாரகர்கள் அநேகர் இந்தியாவில் மலிந்திருக்கின்றனரென்று எனக்குத் தெரியும். அமெரிக்காவில் சாராயக்குடியை நிறுத்த ஆரம்பித்து சொற்பகாலமே ஆகிறது. இந்தியாவிலோ பல ஆயிர வருடங்களுக்கு முன்னரிருந்தே—என்னுடைய முன்னோர்கள் மிருகங்களின் தோல்களை ஆடையாக உபயோகித்தும் குகைகளில் வசித்தும் வந்த காலத்திலிருந்தே இலாகிரிப் பதார்த்தங்களின் கெடுதல்களைப்பற்றி ஜனங்களுக்குப் போதித்து வந்திருக்கின்றனர். ஆகவே அத்தகைய உயர்ந்த அறிவாளிகள் முன் நான் புதிதாக யாது சொல்லக்கூடும்? இங்கு யான் சொல்லக் கூடிய தெல்லாம் அமெரிக்கா மதுவிலக்கு விஷயமாய் நிகழ்த்திய பெரும் போராட்டங்களின்பயனாகக்கடைசியாக இந்தியாவின்கொள்கையை அநுசரித்து நடக்க ஏற்றுக் கொண்டதோடு மதுவிலக்கைத்தன்தேசீய வாழ்க்கையாக அங்கீகரித்துக்கொண்டது என்பதேயாகும். இந்திய மேதாவிகள் சொல்லுவதற்கேற்ப சாராயக் குடிப்பழக்கம் மிகவுங் கொடியதென்று எங்களுக்குத் தோற்றியதால், ஊரில் சாராய விற்பனைக்கு அநுமதி தருவது மிகவும் கெடுதியாகத் தெரிந்தது.

இல்லாகிரி வியாபாரங்களில் நேர்ந்த துன்பங்கள் எங்கள் தேச சரித்திரத்தில் அதிகமாயிருக்கின்றன. நான் சிறுவனாயிருந்த காலத்திலிருந்த ஒரு ஜன சமூகத்தை முற்றிலும் சங்கிலிகோத்ததுபோல் வரிசையாக அடிமைத் தனத்தில் வைத்திருந்தோம். இதற்குக்காரணம் இலாகிரியே ஆகும். இந்தக்கொடிய வஸ்துவின் வாய்ப்பட்டு அறியாமற் செய்த பல தவறுகள் எங்கள் உணர்விற்கு வந்த பிறகு பெரிதும் வெட்கமடைந்தோம்.

இந்தியாவில் கட்குடி கூடாதென்பது அரசியற்காரர் கூற்றன்று. பல்லாயிரம் வருடங்கட்குமுன்னர் பஞ்சமகாபாதகங்களில் ஒன்றாகக்கொண்டு சமய வொழுக்கத்தின்பாற்சார்வோர் நீக்கத்தக்கதெனக் கூறியுள்ளார்கள் நமது மூதறிஞர்கள். இந்திய நாட்டுச் சமய நூல்களில் கள்ளை மிக மிக வெறுத்துக்கூறியிருக்கின்றனர். இதுகாலை ஐரோப்பிய நாட்டினர் பணவாசைபிடித்தலைவதால் தரும மின்னது அதருமமின்னதென்று உணராது உலகமுற்றும் சாராயவியாபாரத்தைப்பெருக்கிப்பொருள் சேர்த்து வருகின்றனர். இந்தப்பாழும் வியாபாரத்தால் அரசாங்கத்தினர்க்குப் பெரும்பொருள் கிடைப்பதால் அரசாங்கங்களும் துணைபுரிகின்றனவென்று கூறவேண்டியதில்லை. ஆனால் மிஸ்டர் ஜான்ஸன் கூறுகிறபடி கட்குடி கூடாதென்று பல்லாயிரம் வருஷங்கட்கு முன்னிருந்தே நமது முன்னோர் பிரசாரஞ்செய்து வந்திருப்பதற்குப் பெருமைபாராட்டிக்கொள்ளலாம். ஆனால் இது காலை குடியில் மயங்கிக்கிடக்கும் எண்ணற்ற இந்தியரின் பரிதாப நிலையைக்கண்டு வருத்தமும் வெட்கமுங் கொள்ளாமல் முடியுமா?

* * *

ஆசிரியர் "வாஸ்வானி" அவர்கள் எழுதியுள்ள ஓர்குறிப்பு "நவசக்தி மும்முறை" யில் வெளிவந்திருக்கிறது. அதிலொரு பாகம் வருமாறு:—

எதிர்காலத்தில் இந்தியர்கள் ஒரு கொடியை வணங்குவார்கள்: அந்தக்கொடி மனித சமூகத்தின் கொடியேயாகும். இந்தியா இப்பொழுது அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுகுகின்றது. இன்று நாம் கொண்டாடுகின்றவர் அஹிம்ஸா மூர்த்தியாக விளங்

குகின்றார். ஸ்ரீமான் டால்ஸ்டாயும் அஹிம்சாதர்மத்தை விருப்பத்தோடு போதித்திருக்கின்றார். ஆனால் இப்பொழுது இந்தியாவில் ஒரு பெரிய டால்ஸ்டாய் தோன்றியிருக்கின்றார். அவர், பொறுமை அன்பு சாந்தம் முதலிய நற்குணங்களினால் தலை சிறந்து விளங்குகின்றார். அவர் முற்றும் துறந்தவராக இன்று இந்தியாவில் இருந்து வருகின்றார். டால்ஸ்டாய் தாம் கூறியதை அனுஷ்டானத்தில் செய்து காட்டியவரல்லர். ஆனால் நமது தேசத்தில் தோன்றியிருக்கும் அஹிம்ஸா மூர்த்தி டால்ஸ்டாய் கூறியதையெல்லாம் காரியத்தில் செய்து காட்டியிருக்கின்றார். அவர் யார்? அவரே நமது காந்தியடிகள். டால்ஸ்டாய் செல்வத்தை அறவே ஒழித்துவிட வேண்டுமென்று கூறினார். ஆனால் அவர் தமது செல்வத்தைத் துறந்தாரில்லை. காந்தியடிகள் தமதுசெல்வத்தைத் துறந்து இன்று இந்தியாவில் ஏழைகளுக்காக உழைத்து வருகிறார். ஏழைகளைப்போல் அவரும் எளிய வாழ்க்கையை நடத்தி வருகிறார். அவர் எளியவர்களோடு கலந்து வாழ்ந்து அவர்களின் நன்மைக்காக உழைத்துவருவதினால் கடவுள் அவரைஆசீர்வதித்து மேன்மைப்படுத்தி யிருக்கிறார். கதர், ஏழைகளின் தோழன் என்பதை விளக்கிக்காட்டும் ஒரு சின்னமாக இருக்கிறது. இந்தியாவிலிருக்கின்ற ஏழைகளைப்போல் உலகின் மற்றப் பாகங்களில் இருக்கின்றார்களா? அவர்களின் ஆதரவை நாடுவதே சுயராஜ்யத்தின் இரகசியமாகும்.

மகாத்மா ஒரு சிறந்த அவதார புருஷர் என்பதை உலகமே ஒப்புக்கொண்டு விட்டது. என்றாலும் உண்மைக்கருத்தறிந்து நடக்கமுயல்பவர் மிகச் சிலராகவே யிருக்கின்றனர். வாயைத் திறந்து பிறருக்குச் சொல்லமுயலு முன்னர் நீ நடந்து பழகிக்கொள் என்று மகாத்மா கூறுகின்றார். தற்போது அவர் பெயரைச் சொல்லிக் காரியத்தைத் தங்கள் நோக்கம்போற் சாதிக்க முயல்கின்றவர் மலிந்திருக்கின்றனர்.

* * *

ஸ்ரீமான் ஜமன்லால்ஜீக்கு மகாத்மா காந்தியடிகள் எழுதியுள்ள கடிதத்தில் பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன:—

நான் எப்பொழுது "சத்தியத்தை" ப்பற்றி யோஜிக்கின்றேனோ அப்பொழுது, எல்லாம் சத்தியத்தில்தான் போய் முடிகிறது என்ற எண்ணம் என் உள்ளத்தில் பதிகின்றது. அஹிம்சை

ஒரு போது சத்தியமில்லாமலிருக்கலாம். சத்தியத்துக்கு அஹிம்சை இன்றியமையாதது. நிர்மலமான அந்தக்கரணத்திற்கு எது புலப்படுகிறதோ அதுதான் சத்தியம். அதை ஸ்திரமாகவும் உறுதியாகவும் செய்தால், சுத்த சத்தியத்தை உணரலாம். சத்தியத்திற்கு, மதத்திற்கு ஒருவித விரோதமும் எப்பவும் ஏற்பட முடியாது என அபிப்பிராயம் கொண்டுள்ளேன். ஆனல் அஹிம்சையின் பொருளை நிர்ணயிப்பது சில சமயங்களில் கடினமாகவிருந்தது. ஜந்துக்கள் நசுங்கும்படி தண்ணீரை உபயோகிப்பதுகூட ஹிம்சைதான். இந்த இம்சையான உலகில் அஹிம்சை மயமாக வேண்டும். இக்காரணம்பற்றித்தான் சத்தியத்தில் அஹிம்சைபுகுதல் வேண்டுமென்று சொல்லுகிறேன். சத்தியத்தில் அன்பு இருக்கிறது. சத்தியத்தில் மிருது சுபாவமிருக்கிறது. சத்தியவாதி, சத்தியாக்கிரஹிக்கு வினயம் வணக்கம் நிரம்பவும் அவசியம். எப்பொழுது அவனுக்கு சத்தியத்தில்உறுதி, நம்பிக்கை ஏற்படுகின்றதோ அப்போது வணக்கமும் வினயமும் தானே உண்டாகும்.

இவ்வுரைகளால் அஹிம்ஸை என்பதெது வென்பது நன்கு விளங்குகிறது. சிறுஉயிரையும் வருத்தாதிருத்தலே 'அஹிம்ஸை' என்பதன் பொருளாகுமென்று மகாத்மா கூறுகின்றார். அவர்வழி செல்கிறேமென்று ஆரவாரஞ் செய்கின்ற அரசியல் வாதிகள் அஹிம்சை யென்பதற்குப் பொருள் மக்களை மக்கள் துன்புறுத்தா திருத்தலே என்று கொண்டிருக்கின்றனர். இதனல்தான் சமய அறிவில்லாத தனித்த அரசியல் வாதிகளும் மேனட்டுப் போக்கில் படித்துப் பழகியவர்களும் மகாத்மாவின் அஹிம்சையை அறியமுடியாதென்று நாம் பன்முறை கூறியுள்ளோம். சமய அறிவுள்ள அன்பர் பலர் "காந்தீயம்" என்றொரு சமயத்தைவகுக்கவேண்டுமென் றபிப்பிராயப்படுவதுங் குறிப்பிடத் தக்கதாகும்.

* * *

பிஜித்தீவிலுள்ள இந்திய சங்கத்தார் பண்டிதர் பனர்ஸி தாஸ் சதுர்வேதி அவர்கட்குப் பின் வருமாறு ஒரு தந்தியை அனுப்பியிருக்கிறார்:—

" தலைவரி விதிக்கப்பட்டதன் சம்பந்தமாகப் பெருங் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியர்களெல்லோரும் இந்தியாசெ

ன்றுவிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. போதிய அளவு கப்பல்களுக்கு தயவுசெய்து உடனே ஏற்பாடு செய்யுங்கள். இந்தியத் தலைவர்களிடம் இங்குள்ள நிலைமையை யறிவியுங்கள். இந்திய அரசாங்கத்தாருக்கும், பொது ஜனங்களுக்கும் பீஜியில் சென்ற மூன்று வருஷங்களுக்குள் இந்தியர்களின் நிலைமை எவ்வளவு கேவலமான நிலையடைந்திருக்கிற தென்பதையறிவித்து பீஜி விஷயத்தில் அவர்கள் தங்களது கவனத்தைச் செலுத்தும்படி செய்யவேண்டும். அரசாங்கத்தார் இரண்டு வருஷங்களுக்கு முன் இங்குள்ள நிலைமையை விசாரித்தறிய வந்த பிரதிநிதிக்கூட்டத்தவர்களின் அறிக்கையை உடனே பிரசுரிக்கவேண்டும். பீஜி இந்தியர்கள் என்ன செய்யவேண்டுமென்று புகட்டப்பட வேண்டுவது அவசியம். தாய் நாட்டு இந்தியர்களின் உதவியும் இன்றியமையாததாகும்.''

பிஜித்தீவில் சுதேசிகள் அ௮000 பேரும்இந்தியர் ௬௧000 பேரும் ஐரோப்பியரும் பிறருமாக ௧0000 பேரும் இருக்கின்றனர். அரசாங்கத்தாருக்கு உண்டானபணத்தேவையைமுன்னிட்டு ௧௬-வயதிற்குமேற்பட்டு ௬0-வயதுக்குட்பட்ட யாவரும் வருஷமொன்றுக்கு ஒரு பவுன் தலைவரிகொடுக்க வேண்டுமென்று சட்டஞ்செய்திருக்கின்றனர். இந்தவரி சுதேசிகட்கில்லை. ஐரோப்பியர் பெருந்தனிகர்களாக விருக்கின்றனர். பெரும்பாலும் பிழைப்புக்கு வழியின்றியே இந்தியர் அங்கு சென்றிருக்கிறபடியால் இந்தியருள் ஏழைகளே அதிகம். கரும்புத்தோட்டங்களில்ஐரோப்பிய முதலாளிகள் படுத்துந் தொல்லைகளால் கால்களும்கைகளும்சோர்ந்துவிழும்படி வருந்துகின்ற இவர்கட்குத் தாங்கமுடியாத வரியும் போட்டிருக்கின்றனரே! கேட்பாரில்லையே! தப்பிப்பிழைத்து நம் நாட்டுக்கு வந்து சேரலாமென்று தந்திகொடுத்திருக்கின்றனர். வந்துவிடுவார்களானால் அங்குள்ள தோட்டங்கள் காடாகி அழிந்து போகுமாதலால் அந்த நாட்டிலுள்ள ஐரோப்பியர் வர வழிமறிப்பார்களன்றோ? இந்திய அரசாங்கமா கப்பலனுப்பி அழைத்துவரப்போகிறது. சுதந்தரமுள்ள நாட்டிற் பிறந்தவரை இப்படித் துன்புறுத்த முடியுமோ?

சதங்கையொலி.

தமிழ்நாட்டுத் தலைவர்.

தமிழ்நாட்டில் அரசியல் தலைவர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். அச் சிலருள்ளும் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமிஐயங்கார் சட்டசபையை நாடி நிற்கிறார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் நிர்மாண வேலையைக் கவனிக்கலாமென் றுரைக்கிறார். ஸ்ரீ ஈ. வி. ராமசாமிநாயக்கர் சட்டசபை எதிர்ப்பிரசாரம் செய்யவேண்டு மென்கிறார். நமது கலியாணசுந்தரர் "காந்திமதம்" காணவேண்டுமென்கிறார். ஜனங்கள் யார் சொல்வதைக் கேட்டு எந்தவழி நடப்பதென்று தயங்குகின்றனர். எல்லாவற்றையும் சமரசப்படுத்தி மேலேறி நிற்கக்கூடிய திட்டத்தைப்போட வல்லவர் கிடைக்கவில்லையே? இந்த நிலையில்தான் இந்திய அரசியல் தலைவர்கள் யாவருமே நிற்கின்றனர்.

கதரின் நிலை.

கதராடை மபிவிருத்தியினால்தான் இந்தியர்க்கு நல்வாழ்வு வரப்போகிறதென்று மகாத்மாவின் திருவாக்கு எழுந்தது. அதனை யேற்றுப் பலரும் கதரபிவிருத்திக்கு முயன்றனர். காங்கரஸ் சபைகளும் பல தேசாபிமானிகளும் ஆங்காங்கே முயற்சிசெய்ததன் பயனாகக் கதருடுத்துபவர் அதிகரித்து வருகின்றனர். மிகச் சிலரே நூல் நூற்கின்றனர். உடுப்பவரை நோக்கும்போது நூற்பவர்தொகை மிகமிகக் குறைவாகவே யிருக்கின்றது. ஆகவே கலப்புக்கதர் எங்கும் பரவிவருகின்றது. ராட்டினங்களை வீடுதோறும் சுழலச் செய்தாலன்றிச் சுத்தமான கதர் கிடைப்பதரிதே யாகும். காங்கிரஸ்காரர்களும் ஏனைய தேசாபிமானிகளும் நூல் நூற்பதற்கு வேண்டிய முயற்சியைக் காலந்தாழ்க்காது செய்ய முயலவேண்டும். இன்றேல் புறட்டுக்கதர் மிகுதியும் பரவிவிடும். பின்னர் மக்களது ஊக்கங்குன்ற மில்வேட்டிகளில் புத்தியைச் செலுத்திவிடுவர். அப்பால் கதரியக்கத்திற்குப் புத்துயிர் கொடுப்பதெளிதன்று!

முப்பது குடும்பம்.

ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்துள்ள சேதுநாராயணபுரத்தில் இருக்கும் பஞ்சமர்கள், தாங்கள் வழக்கமாகச் சாமிகும்பிடல் முதலியவற்றுக்குச் சுற்றிவரும் தெருவில் இப்போது மேல்ஜாதியார்கள் விடமாட்டோம் என்கிறார்கள் என்ற காரணத்திற்காக சுமார் முப்பது வீட்டுக்காரர் ரோமன் கதோலிக் கிறிஸ்தவ மார்க்கத்திற் சேர்ந்துகொண்டார்கள் என்று செய்திகிடைத்திருக்கிறது. நாயையும் கழுதையையும் பன்

றியையும் தெருவில் நடமாடவிடும் மக்கள், பிறப்புமுறையில் ஆறறிவுடைய மக்கள் வகுப்பிற் பிறந்திருக்கும் பஞ்சமரை விடமாட்டோம் என்று கூறுவது பெரும் மூடத்தனமும் வன்கண்மையுமாகுமன்றோ? வீதியிலும் நடக்கக்கூடாதென்று கூறுபவர்களுடன் இருப்பதைவிட கைகொடுத்துச் சேர்த்துக்கொள்ளும் கிறிஸ்தவமதத்திற்சேர அவ்வூர்ப் பஞ்சமர்கள்விரும்பியது அதிசயமன்று! வீதியில்நடக்கக்கூடாதென்று கூறி முப்பதுகுடும்பத்தாரை அயல்மதம் புகச்செய்த மதத்துரோகிகள் அந்தப் பஞ்சமர்கட்குத் தாழ்ந்தவரா உயர்ந்தவரா வென்பது ஆராயத் தக்கதாகும். ஐரோப்பியரிடம் சமசுதந்திரத்திற்கு அடித்துக்கொள்ளும் தேசாபிமானிகள் நாட்டுப்புறங்கட்குச் சென்று ஜனங்களிடமிருந்து ஜனங்கட்குச் சமசுதந்திரம் வாங்கிக்கொடுக்க முயல்வார்களாக.

மதிப்புரை.

நச்சினார்க்கினியன்:— இது திருசிராப்பள்ளியிலிருந்து வெளிவரும் ஒரு மாதப்பத்திரிகை. தமிழ்நாட்டினர்க்கு நன்கு தெரிந்த பண்டித ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் இதன் ஆசிரியராவர். இவர்களால் முன் நடத்தப்பெற்ற 'விவேகோத'யத்தைப் போலவே இதிலும் வியாசங்களும் சிறு கதைகளும் விநோதக்குறிப்புகளும் இயற்கைகளையும் செயற்கைகளையும் பற்றிய பாடல்களும் திகழ்கின்றன. டபிள் கிரவுன் ௧X௧௬ அளவில் ௩௦ பக்கங்களில் வெளிவருகின்றது. இதன் வருஷ சந்தா ரூ உ. விலாசம்:—பண்டித ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள், நச்சினார்க்கினிய நிலையம், ஆணிமுத்தம்மாள் ஸ்டோர், தெப்பக்குளம், திருச்சி.

வைசியன்:—அறுப்புக்கோட்டையிலிருந்து வெளிவரும் இம் மாதப் பத்திரிகையின் முதலிரண் டிதழ்கள் வரப்பெற்றோம். ஆயிர வைசிய காசுக்கார மரபினரின் நலத்தைநாடி யுழைக்க முன்வந்திருக்கும் இப்பத்திரிகை, இதுகாறும் தனிப்பத்திரிகை யொன்றில்லாத அம்மரபினருக்கு மிகுந்த பயனை யளிக்குமென்று நம்புகிறோம். மகாத்மாவின் வழிபற்றிச்செல்ல இப்பத்திரிகை முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு சமூகத்தாரும் மகாத்மாவின் வழிபற்றித் தங்கள் சமூகத்தைத் திருத்த முயலுவார்களானால் நாடு விரைவில் சுதந்தரம் பெற்றுவிடுமன்றோ? இவ்வழியில் உழைக்க முன்வந்திருக்கிற இப்பத்திரிகை செழித்தோங்குவதாக. டெம்மி ௧X௮ அளவில் வெளிவருகிறது. இதன் வருஷசந்தா ரூ உ. விலாசம் மானேஜர் வைசியன் ஆபீஸ் அறுப்புக்கோட்டை.



திருக்குற்ருல அருவியும் கோயிலும்.   மலையாளம் அரசர் தீர்த்தமாடிவிட்டு வருகின்ருர்.

உ
சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு கார்த்திகை மீ	மணி ௮.

வணக்கம்.

திருக்குற்றாலத் தேவாரம்

மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்
இலையார் சூல மேந்திய கையா னெயிலெய்த
சிலையான் மேய நன்னகர் போலுஞ் சிறுதொண்டீர்.

போதும் பொன்னு முந்தி யருவி புடைசூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்குங் குற்றாலம்
மூதூர் இலங்கை முட்டிய கோனை மிறைசெய்த
நாதன் மேய நன்னகர் போலும் நமரங்காள்.

நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப்
பொடியணிந்த நம்பா னம்மை
ஆட்பலவுந் தானுடைய அம்மா
னிடம்போலும் அந்தண் சாரல்
கீட்பலவுங் கீண்டுகிளை கிளையன்
மந்திபாய்ந் துண்டு விண்ட
கோட்பலவின் றீங்கனியை மாக்கடுவன்
உண்டுகளுங் குறும்ப லாவே. —சம்பந்தர்.

திருக்குற்றாலக் காட்சி.

அரு. சோமசுந்தரச் செட்டியார்.

இத்திருத்தலம் திருநெல்வேலி ஜில்லாவில், தென்காசிக்கு நான்கு மைல் தூரத்திலுள்ளது. தென்காசி, திருநெல்வேலியிலிருந்து திருவிதாங்கூர் செல்லும் எஸ். ஐ. ஆர் ரெயில்பாதையிலிருக்கின்றது. தென்காசியிலிருந்து திருக்குற்றாலத்திற்கு நல்ல சாலை ஒன்று உளது. அதில் ஒவ்வொரு மைலுக்கிடையே மேலகரம், நன்னகரம், சுவாமியார் குடியிருப்பு எனும் ஊர்கள் உள்ளன. இத்திருக்குற்றாலத் திருநகரம் தென்னிந்தியாவிலுள்ள கோடைகால சுகவாசஸ்தானங்களுள் ஒன்று. இது மேற்குத் தொடர்ச்சிமலைக் கூட்டத்தில் ஒரு மலையின் அடிவாரத்திலுள்ளது. எங்கும் இயற்கை யின்பம் செறிந்திருக்கிறது. யாண்டும் பச்சைப்பசுங் கொடிகளும் செடிகளும் தழைத்துப் பூத்துக் கண்களைக் கவர்ந்துகொண்டு விளங்குகின்றன. நாம் அப் பசுங்கொடிகளின் குளிர்ந்த தழைகளையும், வளைந்த கொம்புகளையும், அலர்ந்த அழகிய பன்னிறப் பூக்களையும் பார்த்து மகிழும்பொழுது, இயற்கையாக, நம்முடைய நா அவைகளை அருந்த அவாவுகின்றது. ஊர் முழுதும் நீரோடைகள் நிறைந்துள்ளன. வயல்கள் நாலு பக்கங்களிலும் பரந்திருக்கின்றன. மிக உயர்ந்த தென்னை மரங்களும் கமுகமரங்களும் ஆங்காங்கு உள்ளன. நிலத்தை ஒட்டிப்படர்ந்த மாமரங்கள் பல நிறைந்துள்ளன. அம்மரங்களினிடையே, குரங்குக் கூட்டங்கள் தங்களுடைய குட்டிகளை அடிவயிற்றிலே அணைத்துக்கொண்டு, அங்குமிங்கும் தாவித்திரிவதும், கத்திக்கொண்டு பழங்களைப்பறித்துத் தின்பதும், காய்களைப் பறித்துச் சாலையில் செல்வோர்மேல் எறிவதும் அழகாக இருக்கின்றன. வாதராஜமரம் புளியமரம் முதலியவைகள்கூட மிகப்பொலிந்து விளங்குகின்றன. காட்டுச் செடிகளிலுள்ள புஷ்பங்கள்கூடக் கண்ணுக்கு விருந்தாக இருக்கின்றன. மிகக் குளிர்ச்சியான பிர

தேசமாதலால், தொட்டாற்சிணுங்கி எனும் சிறு செடி எங்கும் நிறைந்திருக்கின்றது. இத் திருநகரத்தின் இயற்கை வனப்பு இச்சிறு கட்டுரையளவில் வருணிக்குந் திறத்ததன்று.

இது பாண்டிய நாட்டில் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள் பதினான்கனுள் ஒன்று. இது மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் மூன்றிற்கும் பெயர் போனது. நமது நடராஜப் பெருமானார் திருநடம்புரியும் ஐந்து சபைகளில் சித்திரசபையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. திருஞானசம்பந்தப் பெருமானார் தேவாரப் பதிகங்கள் இரண்டு உடையது. இரண்டு பதிகங்களும் மிக அழகானவைகள். ஸ்தலபுரான முறைவழி, இத்தலத்திற்கு இருபத்தொரு பெயர்களுண்டு. இந்த ஸ்தலபுராணம் புலவர்திலகர்களால் மிகப் போற்றப்படுவது. மிக இன்சுவையுடைய பாக்களால் யாக்கப்பெற்றது. இதிலுள்ள மந்தமாருதச்சருக்கம் மிக அழகுடையது. இதனை யாத்த புலவர், திரிகூட ராஜப்பக் கவிராஜர் என்பவர். இவர் இற்றைக்கு இருநூற்றுப்பத்து வருடங்களுக்கு முன்னர் திருக்குற்றாலம்—மேலகரத்தில் வாழ்ந்துவந்த சைவ வேளாளராவர். சிவபக்தியின் மேலீட்டால் இவர் பாடிய பிரபந்தங்களிலுள்ள பாடல்கள் எல்லாம் தேனென இனிக்கின்றன. இவர் திருக்குற்றாலத்தைப்பற்றிப் பாடியபிரபந்தங்கள் பல. அவைகளுள் இத்தலபுராணமே மிகவும் முக்கியமானது.

மலைவளம்

இந்தமலை அழகிய சிகரங்களையுடைய மூன்று குன்றுகளோடு விளங்குகின்றது. இதனாலேயே இதன் பெயர் திரிகூடாசலம் என வழங்கப்பெற்றிருக்கின்றது. இதில் அடர்ந்த காடுகள் பல உள்ளன. அழகிய மரங்கள் நிறைந்த தோட்டங்கள் பல உள்ளன. அருவிகள் பல வீழ்கின்றன. ஆறுகள் ஓடி வருகின்றன. ஆண்டு மிக மெல்லிய தென்றற்காற்று மேகவெள்ளத்தில் தோய்ந்து, அருவிகளிற் படிந்து, செடிகளையும் கொடிகளையும் தடவிக்கொண்டு வந்து ஊந்துந்தோறும் ஊந்துந்தோறும், அதிற் கமழும் பச்சிலை வாசத்தினாலும், பல்வகைப் பூமணத்தினாலும், குளிர்ச்சியினாலும் அக்கடுங்கோடைநாளில்

நமது உள்ளத்தில் எழும் உவகைக்கு ஓர் எல்லை இல்லை! ஆ! ஆ!! அந்தப்பச்சிலைகளின் அழகையும் தென்றலின் அருமையையும் என்னென்று பகர்வது? சில தளிர்கள் பச்சைப் பசேலெனப் பிரகாசிக்கின்றன. சில செக்கச்செவேரெனச் சிறந்திருக்கின்றன. சில கொடிகள் கண்களைக் கொள்ளைகொள்கின்றன. என்ன அழகு! என்ன ஒளி! என்னே இயற்கையின் பெருமை! என்னே இறைவன் சிருட்டித்திறம்!! இந்த மலைப்பாங்கரில் மூலிகைகள் நிறைந்துள்ளதுபோல் வேறெங்கும் இல்லை. இங்கே எல்லாமூலிகைகளும் அகப்படும். இதில் மோர்ப்புல் எங்கும்நிறைந்துளது. சிகைக்காய்ச்செடிகள செறிந்துள்ளன. கல்தேக்குமரங்கள் அகன்ற விசாலமான இலைகளோடு உயர்ந்து ஓங்கிவளர்ந்திருக்கின்றன. மூங்கில்மரங்கள் அதிகமாக இருக்கின்றன. கல்யாணக் கொட்டகைகளை அலங்கரிக்கத்தக்க அழகிய ஈச்சைமுதலிய செடிகள் பல உள்ளன. தோட்டங்களில் மா, பலா, வாழை, வங்குஸ்தான், ஆரஞ்சு, சாதிக்காய், குங்குலியம், கருவைப்பட்டை, கமுகு, கிராம்பு, சந்தனம் முதலிய மரங்களும், ஏலச்செடி, மிளகுக்கொடி முதலியவைகளுமுள்ளன. தோட்டங்கள் மிகச் செழிப்பாக இருக்கின்றன. மலையின் சில பாகங்களில் செண்பகமரங்களும் உள்ளன. சிலபாகங்களில் காடுகள் நெருப்புவைத்துக்கொளுத்தப்பெற்றுக் கரியாக்கப்பெறுகின்றன. பிறகு கரிகள் எல்லாம் மூட்டைகளாகக் கீழே கொண்டுவரப்படுகின்றன. மலையில் மனிதர் நடமாடும் இடங்களில் மிருகபயம் நேருவதில்லை. ஆனால் பல வகை மிருகங்கள் வசிக்கின்றன என்று சொல்லிக்கொள்ளப் பெறுகிறது. அடிவாரத்தில் கோயிலுக்குப் பின்புறத்தில் நந்தவனம் ஒன்று உளது. முல்லைச் செடிகள் அதிகம். புன்னை மரங்கள் அளவில்லாத புட்பங்களோடு பொலிந்து விளங்குகின்றன. கோயிலுக்குத் தென்புறத்தில் நின்று மலையைப் பார்க்கும் பொழுது, அது சிவலிங்க வடிவமாகத் தோன்றுகின்றது. அதன் பக்கங்களில், எல்லையில் கருணைக்கு உவமையாக இயம்பத்தக்க பத்தரைமாற்றுத் தங்கம்போன்ற பசுமையான இனிய நறுந்தளிர்களையும், புதிய பூக்களையும் உடைய, பச்சைப்பசுந்

கொடிகள், அச்சிவலிங்கத்தை உமாதேவியார் சூழ்ந்திருப்பது போல் படர்ந்திருக்கின்றன. சிகரத்தில் உயர்ந்த மரங்கள் பல படர்ந்து நெருங்கி நிமிர்ந்து, நின்மலனது சடாபாரத்தைப் போல் விளங்குகின்றன. அண்ணலார் சடாபாரத்தினின்றும் உவட்டெடுத்து ஓடுகின்ற கங்கையாற்றை ஒப்ப, வடஅருவி, நிறைய நீரைச் சொரிந்துகொண்டிருக்கின்றது. அவ் வடவருவியின் ஒரு பாங்கரில் ஆடவரும் மற்றொரு பாங்கரில் பெண்டிரும் குழந்தைகளுமாக நின்று தூயநீரிற் றோய்வது, அம்மையப்பராக விளங்கும் ஆண்டவனது இயற்கையழகைக் கண்டுகண்டுவந்து பணிந்து, அவன் ஆரருளாம் ஆனந்தவாரிதியிற் றோய்வது போலிருக்கின்றது. ஊருக்குள் பொழிலெலாம் காக்கை குருவி முதலிய பறவைகள் ஆங்காங்கு தங்களுடைய சப்தங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. ஊருக்குள் ஓடுகிற தண்ணீரெல்லாம் ஜில்லென்று பனிக்கட்டி போலிருக்கிறது. தரையெல்லாம் குளிர்ந்து பசும்புல் நிறையப்பெற்றனவாக விளங்குகின்றன. ஊர் அதிகக் குளிர்ச்சியாக இருக்கின்றபடியால் புஷ்பச் செடிகள் ஏராளமாக வைத்துப் பயிராக்கப் பெறுகின்றன அழகிய நிறத்தோடும் சிறந்த மணத்தோடும் புஷ்பங்கள் ஏராளமாக உண்டாகின்றன. வானத்தில் சதா குறுந்துளி தூற்றுவது பனிநீர் தெளிப்பது போலிருக்கிறது. சில சமயங்களில் இளவெயில் எரிக்கிறது வெகுஅழகாக இருக்கிறது.

அருவிகள்.

தேன் அருவி:—இது மிக உயர்ந்த இடத்தினின்றும் விழுகின்றது. மலங்காடுகளினின்றும் வருகின்ற ஜலம், ஒரு தோட்டத்தின் வழியாக வந்து இதில் விழுகின்றது. இவ்வருவியினின்றும் ஓடிவருகின்ற ஜலமே செண்பகாதேவி எனும் இரண்டாவது அருவியாகவும், அதினின்றும் ஓடிவருவதே வடவருவியாகவும் வீழ்கின்றன. இவ் வருவியிலிருந்து கீழே உள்ள வடவருவிவரை ஒரு பெரும்பள்ளத்தாக்காக இருக்கிறது. இடையே தண்ணீர் ஓடுகின்றது. இரண்டு சரிந்த பக்கங்களிலும் மரங்கள் அடர்ந்திருக்கின்றன. இத் தேனருவி விழுமிடம்

பெருங் குடவரையாக இருக்கின்றது. அதன் ஒரு பக்கத்தில் தேனீக்கள் பல கூடுகள் கட்டியிருக்கின்றன. ஒரு பக்கத்தில் புறாக்கள் வசிக்கின்றன. கொஞ்சம் விலகி யிருக்கின்ற—மலை நீண்டு குழிந்துள்ள இடத்தில் குரங்குகளும் அவைகளின் குட்டிகளும் அதிகமாக இருக்கின்றன. இது மலையடிவாரத்திலிருந்து மூன்றரை மைல் தூரம் இருக்கும். ஒன்றரை மைல் வரை நல்ல வழியாகவிருக்கிறது. பிறகு பாதை மிகக் கஷ்டம். அபாயமான இடங்களும்உண்டு.

செண்பகாதேவி:—இது ஐந்தருவி ரோட்டிலுள்ள அடிவாரத்திலிருந்து இரண்டரை மைல் தூரம் இருக்கும். ஒரு மைல் நல்லபாதை ஒருமைல் நல்லகாட்டுப்பாதை. பிறகு அரை மைல் சிறிது சிரமமான பாதை. இதுவும் உயரமான இடத்திலிருந்தே மடமட வென்று விழுகின்றது. அந்த இடத்தில் நின்று அதில் ஸ்நாநம் செய்வதற்குரிய சௌகரியங்களில்லை. வேண்டுமானால் பக்கத்திலுள்ள பள்ளத்தில் குளிக்கலாம். இந்த அருவிக்குப்பக்கத்தில் ஒரு கல்மண்டபமும் ஒரு சிறு குகையும் இருக்கின்றன. இந்த மண்டபம் ஒரு இடைச்சியினால் கட்டப்பெற்றது என்று தெரிகிறது. இம்மண்டபத்தில் சாமியார் ஒருவர் வசிக்கிறார். மண்டபத்திற்குக் கொஞ்சம் கீழ்ப்பாகத்தில் ஒரு அம்மன் கோயிலிருக்கின்றது. அம்பிகையின் பெயர் செண்பகவல்லி. நித்தியம் ஒருகாலம் பூஜை நடைபெறுகிறது. சித்திரைமீ உற்சவம் நடைபெறுமாம். இக்கோயிலுக்குப் பக்கத்தில் அகஸ்தியர் தங்கிய இடம் ஒன்று சிறு கோயிலாக இருக்கிறது. அதில் ஒரு யோகதண்டம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் விநாயகர் கோயிலொன்று உளது. அதில் சுப்பிரமணியரும் இருக்கின்றார். செண்பகவல்லி அம்மன் கோயிலுக்குள் பின் பிரகாரத்தில் அகஸ்தியனார் விக்கிரகம் ஒன்று உளது. மூலஸ்தானத்தில் தேவியின் இருபக்கங்களிலும் பூரணை புஷ்கலை என இரண்டு சக்திகள் இருக்கிறார்கள்.

ஐந்தருவி:—இதற்கும் ஊருக்கும் இரண்டரைமைல் தூரம் இருக்கும். இதற்குச் செல்லும் சாலைமேலேதான் ஜனங்கள் பெரும்பாலாக மாலையில் உலா வவருகிறார்கள். இது இரா

ண்டு பெருங்கிளைகளையும் மூன்று சிறு கிளைகளையும் உடையதாக ஐந்து இடத்தில் விழுகின்றது. இதனாலேயே இது ஐந்தருவி யெனப் பெயர் பெற்றிருக்கின்றது. இதிலும் ஸ்நாநம் செய்வது சிரமம்தான். இதன் பக்கத்தில் ஒரு சிறிய சர்ஸ்தா கோயில் இருக்கிறது.

பொங்குமா கடல்:—இது ஒரு பெரிய ஆழமான கிணறு போல் இருக்கிறது. இதன் ஆழம் ௩௪ அடிகள் இருக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். செண்பகாதேவியினின்றும் ஓடிவருகின்ற ஜலம் இதில்வந்து விழுந்து பொங்கிஎழுந்து வடவருவியாக வீழ்கின்றது. இப் பொங்குமாகடலிற்குப் போவதற்கு இவ் வடவருவிக்குப் பக்கத்தில் உள்ள மண்டபத்திற்கு வடபுறத்தில் ஒருபாதை இருக்கின்றது. படிகள் உள்ளன. பாதை மிகச் செங்குத்தானது. அபாயமானதுதான்.

வடவருவி:—இத் தெள்ளிய அருவி திருக்கோயிலுக்குத் தென்புறத்தில், வடகிழக்கு முகமாகப் பொங்குமாகடலினின்றும் விழுகின்றது. இவ் வருவிதான் மிகவும் முக்கியமானது. திருக்குற்றாலம் சுகவாசஸ்தானமாகக் கொள்ளப்பெறுவதன் முக்கிய காரணங்களுள், இவ்வருவி நீராடலும் ஒன்றாகும். தென்னாட்டில்வேறு மலைகளில்விழும் அருவிகள் இதைப்போல் ஸ்நாநத்திற்கு ஆரோக்யமாகவும் சௌகர்யமாகவும் இல்லை. தண்ணீர் பரந்த இடத்தில் விழுவதால் பலர் கூட்டமாக நின்று ஸ்நாநஞ் செய்வதற்கு சுலபமாக இருக்கின்றது. மேலும் நெடுக இரும்புக்கம்பி போட்டிருப்பதால் எல்லோரும் அவைகளைப்பிடித்துக்கொண்டு அருவிநீரிற்றோயலாம். ஜலம் கொஞ்சமாகவரும் இடத்தில் பெண்களுக்காக மறைவுதட்டிகள் கட்டப்பெற்றிருக்கின்றன. அருவிக்குப் பதினைந்தடி தூரத்தில், ஸ்நாநஞ்செய்ய வருவோர் வஸ்திரம் முதலியவற்றை, அருவி வீழ்ச்சியில் பரந்துவருகின்ற நீர்த்துளிகளினாலும், சாரல்ஜலத்தாலும் நனைந்து போகாமல் வைத்துக்கொள்வதற்கும், பிறகு எடுத்து மறைவாக அணிந்துகொள்ளுதற்கும், நீராடுவதற்கு முன்னர் தங்கியிருந்து எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதற்குமாக ஒரு பெரிய கூரைக்கொட்டகை போடப்பெற்று அதில் பல அறைகள் தடுக்

கப்பெற்றிருக்கின்றன. இவ்வறைகளுக் கெனத் தனியே ஒரு காவற்காரன் இருக்கின்றான். பருவகாலத்திற்கு இவ்வளவு ரூபாய்கள் கட்டவேண்டுமென்று ஒரு விதியிருக்கிறது. அவ் விதிக்கு உட்படுவோரே அவைகளை உபயோகப்படுத்தலாம். மற்றவர்கள் உபயோகிக்கக் கூடியதாக, அக்கொட்டகையின் கீழ்ப்புறத்தில் உயர்ந்த தளத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. மேலும் அருவி ஜலம் வீழ்ந்து ஓடுமிடத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. அது அவ்வளவு சௌகர்யமானதல்ல. இவ் வருவியினின்றும் ஓடிவரும் ஜலமே சித்திராநதி யெனும் பெயரோடு செல்கின்றது. அருவிக்குச் சமீபத்தில் இந் நதிக்கரையின் வடபாகத்தில் நீண்டதோர் மண்டபம் இருக்கின்றது. அதில் ஏறக்குறைய ஐம்பது பூஜைவேதிகைகள் இருக்கின்றன. இப்பொழுது அவ்வேதிகைகளில் பூஜை செய்வோரின்மையால் அவைகள் வேஷ்டி துவைக்கும் கற்களாகவிளங்குகின்றன. அருவிவீழ்வதற்குப்பதினைந்து அடி தூரத்தில் மேல்புறத்தில் மலையிலிருந்து எப்போழுதோ புரண்டு விழுந்த பெரும்பாறை யொன்று உள்ளது. அருவிக்கு முன்னால் ஜலம் நிறையுமிடம் மிகப் பெரும் பள்ளமாக இருக்கிறது. அதில் ஸ்நாநஞ் செய்வோருடைய அணிகலன்கள் அருவியிலிருந்து விழுகின்ற ஜலத்தின் அதிர்ச்சியினால் விழுந்து விட்டால் பிறகு எடுப்பது மிகத் துர்லபம். அதற்காக ஸ்நாநஞ்செய்வோர் பெரும்பாலும் நகைகளை அணிந்து கொள்வதில்லை. தப்பித்தவறி விழுந்துவிட்டால், காட்டிலாகா அதிகாரிகளுக்கு அறிவித்து வைத்தால், வருடத்திற்கு ஒருமுறை தண்ணீர்ப் பெருக்கில்லாத காலத்தில் அப்பள்ளத்தைச் சுத்தப்படுத்தும்பொழுது அகப்பட்டால் அவர்கள் அந்நகைகளை எடுத்துச் சொந்தக்காரர்களிடம் ஒப்புவிப்பார்கள். கோயிலிலிருந்து இவ் வருவிக்குப் போவதற்கு ஒரு நல்லபாலம் கட்டப் பெற்றிருக்கிறது. இப் பாலத்தின் கீழேதான் சித்திராநதி ஓடுகின்றது. இச் சித்திராநதி கங்கைகொண்டானுக்குச் சமீபத்தில் கடலோடு கலக்கின்றதாம்.

(தொடரும்.)

குமர நாயகன் எமக்கு ஆன்ம நாயகன்.

பிரமச்சாரி பிரபோத சைதந்யர்
(பண்டித—மயில்வாகனனார்) எழுதியது.

"மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வளவினான் மலைமகண் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லிய லிவளே.

இவளைவார் குழல்மென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்க ணங்கையா னைக்குங்
குழகனல் லழகனெங் கோவே.

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொன்
மையல்கொண் டையுறும் வகையே."

திருமுருகனிளமைச் சீரினை முன்னொருபேர் துரைத்த னம். ஞானசாரியனாகிய அவனது திருவடித் தாமரைகளை மனமொழி மெய்களால் வணங்கி, வேலேந்தியவிறற் போ ரண்ணலாகிய அவன் மாலேந்திய மனத்தனாக வள்ளிநாயகி

யார்பாற் சென்றுணுதலினுல், தன்னை வழிபடும் பக்குவான்மாக்களை யாட்கொள்ளத் தனிநாயகனுக வந்தருளுவான், என்னும் உண்மையை மேலோர் சொல்லிய முறையே யெடுத்தோதப் புகுந்தனம்.

இக் கட்டுரை முகத்திற்றந்த மூன்று செய்யுட்கள் இன்னுயிர்த் தலைவனது பிரிவாற்ருது வருந்துகின்ற ஒரு தலைமகளது வேட்கையுஞ் செயலும் இன்னவா றிருந்தனவாமென அவளது தோழி வருந்தி யுரைக்கும் பொருண்மைய. அவற்றின் பொருளை யாராய்ந் துணர்ந்து அப்பாற் செல்வாம்.

"இமாசலராஜன் புதல்வியாராகிய உமாதேவியாரது திருப்புதல்வன், சுவர்க்கலோக வாசிகளாகிய இந்திராதி தேவரது (சிறைத்துயர் தீர்த்து அன்னோர்) குலமுழுதினையுமாட்கொண்ட தனித்தலைவன், குமரவேள் என்னுந் திருநாமத்தினைப் பூண்டோன், வள்ளிநாயகியாருக் குகந்த மணவாளன் சேன்மீன்கள் உலவுகின்ற வயல்களினுற் சூழப்பட்ட திருவிடைக்கழி யென்னுந் திருத்தலத்தில் அழகுபொருந்திய குராமரநீழலில் நின்ற வேலேந்திய விசாலித்த கரங்களையுடைய முதல்வன், (என்னுயிர்க் குயிராகிய) சேந்தன் (யாது செய்தானென் றறிவாயோதோழி?) என்னிருகையினுங் கிடந்த சங்க வளையல்களைக் கவர்ந்துகொண்டான் (காமவேட்கையாற்) பித்தேறிய மனத்தை எனக்குத்தந்து என்னைவிட்டகன்ருன்; என இவ்வாறு துன்புற்றுப் புலம்பினுள் மெல்லென்ற இயல்பினையுடைய எனது தலைவியாகிய இம்மடமகள்" "நீண்ட கூந்தலையுடையாளாகிய இவளது மெல்லிய தனங்களிரண்டினும் பசலைபூப்ப இவளழகினைக் கவர்ந்த இளங்காளையாகிய கள்வனை நீவிர் கண்டிவிரோ? கவளவுணவை யுண்கின்ற யானையின் மீது ஆரோகணித்து இருமருங்கும் வெண்சாமரையசைய வெண்கொற்றக்குடை நீழலில் பொன்னுலமைந்த மலைபோன்று இவர்ந்து வருகின்ற குமரநாயகனே அக் கள்வனுவான். அவனெந்தலைவன்; விளங்குகின்ற மாளிகை சூழ்ந்த திருவிடைக்கழி யென்னுந் திருத்தலத்தில் திருக் குராமர நீழ

லின்கீழ் நின்ற அத்தலைவன் கருங்குவளை மலரனைய கண்களை யுடைய தெய்வயானை யம்மையாருக்கு நாயகன்; (எமது கண்ணினைக் கவர்ந்த) பேரழகுடையோன்'' ''அவனது செம்மேனியின் பொலிவினைக் கண்டு, செந்நிறத்த அக்கினிச் சோதியோ, செங்கதிர்மண்டிலமோ, செம்பவளக்கொழுந்தோ, பத்தரைமாற்றுப் பசும்பொன்னைச் சுட்டெடுத்த சிவந்த சிந்தூரமோ, மாணிக்கக் குவியலோ அழகுக்கு அரசாக விளங்குமிவ் வுருவமென அழகிய மொழியை யுடையாளாகிய எனது தலைவி யையுறுவள். அவள் இன்னணம் ஐயுறுதற்குக் காரணமாய் நின்றான் யாவனோவெனில், வேதங்களில்வல்ல அந்தணர் வாழுகின்ற திருவிடைக்கழி யென்னுந் திருத்தலத்தில் திருக்குராமர நீழலின்கீழ் நின்ற வரிபூண்ட வெவ்விய வில்லைக் கரத்தேந்திய ஆடவருட்சிறந்தோனாகிய குமரநாயகனென்பது''

மேலாகிய பேரின்ப அநுபவத்தை இவ்வாறு அகத்திணைப் பொருண்மேல் வைத்து உரைக்கும் மார்க்கத்தினை யாராய்ந்து நோக்குங்கால், உரைமன மிறந்து உவமை கூறுதற் கெட்டாது அப்பாலுக் கப்பாலாய் நின்ற அநுபவத்தை உரைக்கப் புகுந்தானொருவன் பிறிதொரு வகையாலும் விளக்குதல் கூடாமையாற் கேட்போனுடைய அனுபவத்துட்பட்டு நின்ற ஒரு உவமைப் பொருளால் விளக்குதலை நிகர்த்தது இது என்போம்; கடலைக் காணாதானுக்கு ஏரியைக் காட்டி இதனைப்போலப் பன்னூறுயிர மடங்கு அகன்றது கடல் என்றல் போல்.

''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள''

என்றாராதலின், கண்டுங்கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியும் பலவாறாகிய உலகவின்ப மனைத்தும் ஒண்டொடி மாதரிடத்தே யுள்ளன. ஆயினு மவர்பாற் பெறுமின்பம் துன்பத்தோடுகூடிய சிற்றின்பமாகும். இறைவனிடத்துப் பெறுமின்பமோ எல்லையிகந்த பேரின்பம்.

"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினுந்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் றன்னடைந்தார்க் கிடைமருதனே."

என்றபடி தீஞ்சுவைக் கனியுங் கருப்பங்கட்டியும் குளிர்ந்த மலரினை யணிந்த கூந்தலை யுடையாராகிய பாவையொத்த மடநல்லாரும், மறுமன்னரின்றித் தனியாழியுருட்டி உலக னைத்தையும் ஆளுகின்ற அரசியற் செல்வமும் இனியனவாயி னும் அவை நிலைபேறுடையனவல்ல; தன்னை யடைந்தார்க்கு எம்பெருமா னளித்த செல்வம் இவையனைத்தினும் மிக்கது; நிலைபேறுடையது. ஒருத்திக்கும் ஒருவனுக்கு மிடையிலுள்ள அன்பு காரணமாகப் பிறந்தவின்பம் ஏரியனையதெனக் கொள் வோமாயின், இறைவன்பா லடையும் நிரதிசயானந்த வின்பு மானது கடல்போலப்பரந்ததென்போம். அங்ஙனமாயினும் இவ் விருவகை யின்பமும் அன்பே காரணமாகப் பிறந்தனவா மாதலின் ஒன்றனுக்கொன்று உவமையாயின. ஆதலினலன் றோ கல்வியிற் பெரியார் அநுபவ விலக்கண மனைத்தினையும் ஒருவனுக்கும் ஒருத்திக்குமிடையில் நடந்த அன்பினைந்திணை யின்பால் வைத்து ஓதினர்.

ஒப்பற்ற தனித்தலைவன் ஒருவனே. அவனைப் பல்லாற் றானும் வழிபடும் அன்பர் அவனது அனந்தகல்யாணகுணங் களுள் ஒன்றையோ பலவற்றையோ பற்றுக்கோடாகக்கொண்டு பலவாறாய திருப்பெயரிட்டு வழங்குவர். இவ்வுண்மையை "அம்பிகையா ரருள்வடிவம்" என்னும் தலைப் பெயரிட்ட மற் றொரு கட்டுரையிற் பெருக ஆராய்வாம். இவண் யாம் உளத் துக்கொள வேண்டிய உண்மையெது வெனின் அரி யென்றும், அயனென்றும், அரனென்றும்,குமரனென்றும், கணேசனென் றும்,வேறு வேறு திருப்பெயரால்வழங்கப்படுகிறதனித்தலைவன் ஒருவனே யென்பது. புராணங்கள் பலவேறுகடவுளரைக் கற் பித்துதந்தை, மைந்தன், அம்மான் மருமான் என்று இவ்வாறு முறைப் பெயரேற்றி வழங்குகின்றனவே யெனின், அவை ஒவ் வோர்உண்மையை விளக்குதற்பொருட்டு வாக்குமனதீத கோச

ரமாகியமெய்ப்பொருளுக்குப் பல்வே றுருவங்களைக்கூறும் இயல்பினவாதலின் இங்ஙனம் கூறுவதியல்பே யென்பது.

அன்பருளத்து நினைந்த உருவமெதுவோ அவ்வுருவத்தோடு எம் மிறைவன் வெளிப்படுவன். தொன்றுதொட்டு நமது நாட்டினர் பிறவா யாக்கைப் பெரியோனையும், குறிஞ்சிக் கிழவனாகிய குமர நாயகனையும், மணிவண்ணனையும், அவனோடுடன்றோற்றிய சங்கவண்ணனையும், விண்ணவ ரிறைவனாகிய இந்திரனையும், பெருமணலுலகு புரக்கும் வருணனையும், வெற்றியருளுங் கொற்றவையையும் வழிபட்டுவந்தனர். ஏனைய மூர்த்தங்களுக்குரிய வழிபாடு வடநாட்டினுக்குந் தமிழ்நாட்டினுக்கும் பொதுவா யமைந்திருக்கக் குமர நாயகனுடைய வழிபாடு தமிழ் நாட்டுக்கே சிறந்திருக்குங் காரணத்தினால் குமரநாயகன் எமக்கு ஆன்மநாயகன் ஆவானென்பது பெறப்படுகின்றது.

வள்ளிநாயகியார் பக்குவான்மாவின் வடிவம்; அவரது உயிர்த்தோழி திருவருள் வடிவம். திருவருள் ஆன்மாவை இறைவன்பாற் செலுத்தி யகலுதல்போலப் பாங்கியுந் தலைமகளைக் குறியிடத்துய்த்து அகலுவாள்.

"பற்றின் மிக்கதோர் பாவையிவ் வரை
சுற்றி வந்துநீ சூடுங் கோடல்கள்
குற்று வந்துநின் குழற்கு நல்குவன்
நிற்றி யீண்டென நிறுவியேகினாள்."

என்று கந்தபுராணத்துக் கூறியதை நோக்குக. தலைமகன்பால்லின்புற்ற தலைவி அவன் பிரியுங்காலைத் துன்புற்றலமரல்போல இறைவன்பாற் பெறும் ஆராவின்பத் தமுதை நுகர்ந்த ஆன்மா அவனது பிரிவு நேரும்பொழுது துயருற்றுப் புலம்பும். இருவகை யிரங்கலும் ஒருவகையாய சொற்களாலமைந்து நிற்பனவாம். ஆநந்தத் தழுந்தல், அநுபவவிருப்பம், ஒழியாவின்பத்துவகை, ஆனந்தமேலீடு, முத்திக்கலப்பு ஆகிய அனைத்தும் தத்தமக்கு நிகர்த்த அகப்பொருட் டுறையோடு சார்ந்து நிற்பன. இவ்வா றாராயுங்கால் இக் கட்டுரை முகத்திற்றந்த செய்,

யுட்கள் பேரானந்தப் பெரும்பேற்றை விழைந்து நின்ற ஒரு ஆன்மாவினது விழைவினை அதற்கு உயிர்த்தோழியா யமைந்த திருவருள் எம்பிறைவனாகிய குமரநாயகனுக்கு எடுத்தோதிய பொருண்மைய வென்பது புலப்படும்.

குருபரம்பரைக் கதைகள்.

(௦)

திருக்கச்சிநம்பிகள் வண்டிஓட்டின வைபவம்.

ஸ்ரீமாந் வ. வேதநாயகம்பிள்ளை M.A. B.L., பி. எஸ். ஆச்சாரியார்.

> "தன்னைப் பணிவதினும் தன்னடியார் பாதமலர்
> முன்னைப் பணிவதற்கு முந்துமினோ!—என்னவே
> செங்குமுத வாய்திறந்து செப்பினான் ஓர்வசனம்
> இங்குலகோர் வாழ என." (ஊற்றுவெள்ளம்)

வாழையடி வாழையாக வந்து வைஷ்ணவ சமயத்தைத் தமிழ்நாடெங்கும் பரவச்செய்த குருபரம்பரையில் திருக்கச்சி நம்பி ஒருவராவர். இவர் திருமழிசைக் கடுத்த பூவிருந்த வல்லி யென்னும் கிராமத்தில் செல்வத்தாலும் சீலத்தாலும் சிறந்த வீரராகவச்செட்டியார் என்ற ஓர் வைசியப் பிரபுவிற்கும் அவரது தர்மபத்தினியாகிய கமலையம்மைக்கும் புத்திரராக அவதரித்தருளினார். இவர் பிறைச் சந்திரனைப்போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இளம்பருவத்திலேயே ஞான பக்தி நிரம்பப்பெற்று காஞ்சீபுரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமாளைக் கைங்கரியத்தால் உகப்பித்து வந்தார். இது காரணத்தால் இவர் திருக்கச்சிநம்பிகள் என்றும் காஞ்சிபூர்ணர் என்றும் அழைக்கப்பெறுவர்.

திருக்கச்சி நம்பிகள், ஒவ்வொருநாளும் வேகவதி நதிக்கரைக்கு எழுந்தருளும்போது, வள்ளுவ குலத்தில் பிறந்தானொரு வைஷ்ணவன் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவனாதலாலே,

அதிதூரத்திலிருந்தபடியே இவர் திருவடிகளைச் தரிசித்துக் கொண்டிருப்பது வழக்கம். இவர் எழுந்தருளியபின், திருவடிகளால் மிதியுண்ட மணற்பொடிகளை எடுத்துத் தன்தலையின் மீது தரித்துக்கொள்வான். இவ்விதம் அநேகநாள் அநுசரித்துக் கொண்டு வாராநிற்க, ஒருநாள் அவனுடைய செய்கையை நம்பிகள்கண்டு, 'நீர் இப்படிச் செய்வதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டார்.

"ஸ்வாமி! அடியேன் தவத்துள் சிறந்தவனும் அல்லன்; குலத்தில் மிகுந்தவனும் அல்லன்; தனத்தில் மிஞ்சினவனும் அல்லன். ஆயினும் மேலோர் பெறும்பேற்றைப் பார்க்கப் பார்க்க, ஆசை கரைபுரளா நிற்கின்றது. அவ்வாசை கைகூடுவதற்கோ, பகவானுடைய அருள்வேண்டியிருக்கிறது. அதுவோ, சுலபத்தில் சாத்தியமாவதில்லை. தேவரீரோ, பகவானைப் பிரதிதினமும் பணிவிடையால் உகப்பித்து முகமுகமாய் வார்த்தையாடும் அருட்பெருஞ் செல்வராகையாலே, தேவரீருடைய திருவடித்தூசு ஒன்றுமே, அடியேனுக்கு இந்த அபேக்ஷையைத் தலைக்கட்டி வைக்கும் என்ற துணிவால் இவ்வண்ணம் செய்துகொண்டிருக்கிறேன்" என்று வள்ளுவன் சொன்னான்.

நம்பிகள் அவனைக் கருணை கரைபுரண்டு ஒழுகும் கண்களால் குளிரநோக்கி, "பாகவதோத்தமராகக் காணப்படுகின்றீரே! இங்ஙனம் செய்வது தகுதியாமோ?" என்றார்.

வள்ளுவன் அஞ்சலி கூப்பிய கையனாய், "தகுதி அன்று என்றீர். ஆனால் மற்று எந்த உபாயத்தால் எளியேனுடைய பேராசை நிறைவேறுமோ அந்த உபாயத்தைப் பெருமானைக் கேட்டாவது அறிவித்தருளினால், நான்பிழைத்துப்போவேன்" என்று விண்ணப்பித்தான். அன்றிரவு, நம்பி சுவாமியிடத்தில் இதை விண்ணப்பம் செய்துகொள்ள, அவர் குறுநகை செய்து, "நம்பீ! நம் அடியார் அடிப்பொடி அவன் தலைமேலிருக்கையில் அவனுக்குப் பேற்றில் சந்தேகமும் உண்டோ?" என்று அருளிச்செய்தார்.

மறுநாட் காலையில், வழியோரத்தில் காத்துக்கொண்டே யிருந்த வள்ளுவனை நம்பிகள் மிகவும் ஆதரத்தோடே நோக்கி "உமக்குப் பேறு சித்தமாயிருக்கிறதுகாண்!" என்று அருளிச் செய்தார். அப்போது அந்த வைஷ்ணவன் இவர் திருவடி களிலே தண்டனிட்டு, "தேவர் திருவடிகளின் மகிமையால் அன்றோ, அடியேன் இத்தகைய பேறு பெற்றேன். தேவரீ ருக்குப் பரமபதம் சித்தியாகும் காலத்தை அடியேன் அறிந்து கொண்டால் அவ்விடத்தும் அருகிலிருந்து தேவரீரைச் சே விக்கலாகுமே என்று ஆதரம் பொங்கி எழுகின்றது. அதை யும் கேட்டு அருளிச்செய்ய வேண்டும்" என்று மிகவும் விந யத்துடன் வேண்டிக்கொண்டான்.

தனக்குப் பேறுபெறுங் காலத்தைப் பெருமாளிடம் எப் படிக் கேட்கலாகுமென்று ஐயுற்றுக் கொண்டே கோயிலுட் சென்று வழக்கப்படி பணிவிடையில் ஈடுபட்டிருக்கையில், கரு ணாநிதியாகிய எம்பெருமான் நம்பியை நோக்கி, "நம் திரு உளப்பாங்கை, வள்ளுவனாகிய ஸ்ரீவைஷ்ணவனுக்கு வெளியிட் டீரோ?" என்று புன்முறுவல் பூத்தார். நம்பி, "ஆம்"! என வும், "அதற்கு அவன் என்ன சொன்னான்" என்று பெரு மாள் கேட்ப, அவன் கேள்வி இருந்தபடியை இவர் விண் ணப்பம் செய்தார்.

பகவான் மந்தஹாஸம் புரிந்து "ஈச்வர பக்தியும் குரு பக்தியும் சிறந்தவைகளே எனினும், பாகவதாபிமானமே பேற் றுக்குக் கொள்கொம்பாய் இருப்பது. அஃதில்லாதார்க்குப் பேற்றில் சந்தேகம் என்று சொல்லவும் வேண்டுமோ?" என்று திருவாய்மலர்ந்தார். அப்பொழுதே நம்பி பெருமாளிடம் நிய மனம்பெற்று, திருவரங்கப் பெருநகருக்குளெழுந்தருளித், தாம் அணிந்திருந்த பரிவட்டங்களைக் களைந்து சேமித்து வைத்து, மாடு மேய்ப்பவன்போல் உடைதரித்து பெரிய நம்பியிடத்தில் வண்டியோட்டும் தொழிலில் அமர்ந்திருந்தார். இவ்வாறு பல வருஷங்களாக மாடு மேய்த்து அடிமைசெய்து வந்தார். ஒரு நாள் பெரியநம்பி, திருக்கச்சிநம்பி வண்டி ஓட்ட, கிரா மங்களைச் சுற்றிப் பார்த்துவர எழுந்தருளினர். திரும்பிவரு

கையில்சூரியாஸ்தமனத்தின்பின் பெருங்காற்றும் பெருமழையும் உண்டாயின. வழிநெடுகப் பெருவெள்ளம் கோத்தது. வானம் நட்சத்திர ஒளியும் இன்றி இருண்ட மேகங்களாலே நிறைந்திருந்தது. பக்ஷிஜாலங்கள் மழைக்கொதுங்கித் தமது கூடுகளில் குளிரால் நடுக்குற்றுப் பதுங்கிக்கொண்டன. சில இடங்களில் வண்டியின் இரு சக்கரங்களும் குடத்தளவும் சேற்றில் அமிழ்ந்தன. வண்டி யோட்டிக் கொண்டிருந்த திருக்கச்சிநம்பி, ஒரு கையில் மாடுகளின் தலைக்கயிறுகளைப் பிடித்துக்கொண்டும், சோனுமாரியாகப் பொழியும் மழையில் தமது திருமேனி முழுதும் நனைந்துகொண்டும், சுற்றியிருக்கும் இருளின் குழாத்தை ஊடுருவிச்செல்லும் விழிகளோடுமற்றொரு கையால் பிடித்திருக்கும் விளக்குக் கூண்டின் மின்மினி வெளிச்சத்தால் வழிதேடிக்கொண்டும், சேற்றுப்பாங்கில் வண்டி உருளைகள் அமிழும்போதெல்லாம் தோள்கொடுத்துக் கிளப்பித் தள்ளிக்கொண்டும், மிகுந்த பிரயாசையோடே பெரியநம்பியைத் திருமாளிகை கொண்டுசேர்த்தார்.

பெரியநம்பி திருமாளிகைக்குள்ளே எழுந்தருளி உடைமாற்றிக்கொண்டிருந்தார். அது சமயம் இவர் மாடுகளைப் பிடித்து ஒருபுறம் கட்டிவிட்டு, திருமாளிகையின் அடுத்த திண்ணைமேல் ஏறி, நனைந்த வஸ்திரங்களைப் பிழிந்து காற்றில் உலரும்படி செய்தார். பின்னர், தாம் பெருமாள் கோயிலில் தரித்துக்கொண்டிருந்த பரிவட்டங்களன்றி உடுப்பதற்கு வேறு உடை இல்லாமையால், அவற்றைத் தரித்துத் திண்ணையின் ஒருமூலையில் ஒதுங்கி இருந்தார். இதற்குள்ளாக, உள்ளே சென்ற பெரியநம்பி, தமது வஸ்திரங்களில் நல்லதான இரண்டு வஸ்திரங்களை இவருக்காகக் கையில் எடுத்துக்கொண்டு முற்றத்தில் இவரைத் தேடிக் காணமல், ஏவலாளரைக் கூவி, "என்னகாண்? நம் மாட்டுக்காரன் இந்தமழையில் தன் தேக முழுதும் சிலிர்க்கும்படி நனைந்து மிகுந்த கஷ்டத்தோடு காப்பாற்றிக்கொண்டு வந்து சேர்ந்தபடியால் அன்றோ நீங்கள் நம்மைக் காணவாய்த்தது! இப்பொழுது அவனை அநாதரித்துவிட்டீர்களே" என்று விசனப்பட்டார். பிறகு குடையை ஒரு

கையில் பிடித்துக்கொண்டு, ஒரு கையில் விளக்குக்கூண்டை ஏந்திக்கொண்டு, வெளியே புறப்பட்டு, "அடா! மாட்டுக்காரா! மாட்டுக்காரா!" என்று சத்தமிட்டு இரண்டு மூன்று அடி பெயர்த்து நடந்தார். மிகுந்த விருத்தாப்பியத்தால் அடி யெடுத்து வைக்கவும் அசக்தராயிருந்த அந்தப் பிராம்மணோத்தமர், தன்பொருட்டு மழையையும் காற்றையும் பொருட்படுத்தாது அந்த இரவில் வெளியே செல்வதைக்கண்டு நெஞ்சம் குழம்பு பட்டழிந்து தன்னையும் மறந்து, உடுத்தியிருந்த பரிவட்டத்தோடு குதித்தோடி வந்து திருக்கச்சிநம்பி பெரிய நம்பியின் திருவடிகளில் அடியற்றமரம்போல் விழுந்து கிடந்தார்.

நம்பிகள் கண்டு ஆச்சரியப்பட்டு, அவரை வாரிஎடுத்து மார்போடணைத்து, "இந்த வேஷத்தை இதுவரையும் எப்படி மறைத்துவைத்து மோசஞ்செய்தீர்? காஞ்சீபூர்ணரே!" என்று வினவி அவரைத் தமது திருமாளிகைக்குள்ளே எழுந்தருளப் பண்ணி, "இப்படிச் செய்ததற்குக் காரணம் என்ன" என்று கேட்டுத்தெரிந்து சில நாள் அவரோடு அளவளாவித் தமது மாளிகையிலே வைத்துக்கொண்டிருந்து விடைகொடுத்தருளினார். திருக்கச்சிநம்பிகளும் தமது ஊருக்குத் திரும்பி, பெருமாளுக்கு உகந்த கைங்கரியத்திலே ஈடுபட்டிருந்தார்.

——(o)——

தமிழ்ப்புலவர்கள் அகராதி வரிசை.

இலக்கண விளக்கப்பரம்பரை திருவாரூர் சோமசுந்தரதேசிகர்.

குறிப்பு.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைப் பேசுவோர் கணக்கிறந்தோராவர். அவர்கள் தங்கிப் பல்கும் இடங்களும் பல. தமிழ் நூல்களும் அளவில. அவற்றை யியற்றினோரும் பல்லோராவர். அங்ஙனமாயினும் தமிழ் மொழியும், தமிழ் நூல்களும், தமிழ்ப் புலவர்களும்

ஒருவாறாகவாவது இத்துணை யென்று இதுகாறும் முயன்றார்களில்லை, தமிழ்மொழி வரலாறு எழுதுவதற்கும்உற்ற சாதனங்களும் கிடைத்தில. இவைகளையெல்லாம் கூடியவரையும், என்னாலியன்றவரையும் செய்ய எண்ணித் திருவருளை முன்னிட்டு முன்னாள் தொட்டு இந்நாள் காறு முள்ள புலவர்களின் பெயர்களை அகராதி வரிசைப்படுத்தி எழுதிவரத் துணிந்தேன். இவ்வரிசையில் யானறியாதுள பல புலவர்கள் இருத்தல் முடிந்ததாகலான் இதனைக் கண்ணுறும் பெரியார்கள் தங்கட்குத் தெரிந்த புலவர்களின் பெயரையும் காலத்தையும் அவர்களது நூல்களையும் வெளியிடுவோர்களாயின் யான் எழுமையும் அவர்கட்குக் கடப்பாடுடையனாவதன்றித் தமிழுலகும் பெரிதும் கடமைப்படும் என்பதில் ஐயமில்லை.

அ

அகத்தியனார்
அகம்பன்மாலாதானார்
அக்காரக்கனி நச்சுமனார்
அசனுத்தம்பி பிள்ளை
அஞ்சனாட்சி
அஞ்சியார்
அடியார்க்கு நல்லார்
அடைநெடுங்கல்லியார்
அணிலாடுமுன்றிலார்
அண்ணாமலை ரெட்டியார்
அதங்கோட்டாசிரியர்
அதிகமான்
அதிமதுரகவி
அதிராவடிகள்
அதிவீரராமபாண்டியன்
அநதாரி
அநந்தபாரதி ஐயங்கார்
அனந்தசுப்பையர்
அந்தோணிக்குட்டிஅண்ணாவியார்
அபிராமிபட்டர்
அப்தல்காதிறு றாவுத்தர்
அப்பாவுப்பிள்ளை, குன்றக்குடி
அப்பாவுமுதலியார், முடிச்சூர்.
அப்பாவையர்
அப்புக்குட்டிஐயர்
அம்பலவாண பண்டிதர்
அம்பிகாபதி
அம்பிகைபாகர்
அம்மள்ளனார்
அம்மூவனார்
அரங்கநாதக்கவிராயர்
அரங்கநாதச்செட்டியார், அரியக்குடி.
அரங்கநாதமுதலியார், பூண்டி.
அரசகேசரி
அரபத்தநாவலர்
அருணகிரியார்
அருணந்திசிவாசாரியார்
அருணாசலக்கவிராயர், முகவை.
அருணாசலக்கவிராயர், சீகாழி,
அருணாசலக்கவிராயர், தாச்சி.
அருணாசலக்கவிராயர், மு, ரா.
அருணாசல பட்டாரகர், துக்காச்சி.
அருணாசல முதலியார்
அருமருந்து தேசிகர்
அருளாளப்பெருமாள்
அலியார் புலவர்
அலிநயனார்
அலிநாசிப்புலவர்
அவிரோதி யாழ்வார்
அழகியசிற்றம்பலக் கவிராயர்

புத்தகாலயங்கள்.

IV

தமிழ்நாட்டு மூவேந்தர்கள் காலத்திலேயே புத்தகாலய வியக்கம் நந்தமிழ்நாட்டில் தோன்றியதென்று துணிந்து கூற லாம். ஆயினும் பிற்பட்ட காலத்தில் இவ் வியக்கத்தைக் கண்டு வளர்த்த அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகள் தற்போது இவ்விஷயத்தில் நந்நாட்டைவிடஎவ்வளவோமுன்னடைந்திருக் கின்றன. இவ் வியக்க வளர்ச்சிக்கென அத் தேயங்களில் செய்யப்பட்டுவரும் முயற்சிகள் வியக்கத்தக்கனவா யிருக்கின் றன. இந்நிலையில் நந் தமிழகமோ வெனில், தன் பண்டைச் சிறப்பையும் மறந்து நீண்ட துயிலில் ஆழ்ந்து கிடக்கிறது. நந் தமிழ் மண்டிலத்தை யடுத்த தெலுங்கு, வங்காள மண்டி லத்தாரும், மைசூர், பரோடா போன்ற சுதேச மன்னரும் தங் கள் மண்டிலங்களில் புத்தகாலய வியக்கத்தை விரிவாக வளர் த்து, அதன் நற்பயனைத் தாமடைந் தின்புற்றுவரும் இக்கா லத்தில் இன்னுந் தமிழர் அவர்களைக் கண்டேனும் இவ் விஷ யத்தில் விழிப்படையா திருத்தல் வருந்தத்தக்கதன்றோ ?

தற்போது நந் தமிழ் ஜில்லாக்களில் ஆங்காங்கே பொது ஜனங்களின் முயற்சியால் சிற்சில புத்தகாலயங்களும், வாசக சாலைகளுமேற்பட்டிருக்கின்றன. ஆனால்அவைஒன்றுக்கொன்று கூட்டுறவும் அறிமுகமு மின்றித் தனித்தனியே நடைபெற்று வருகின்றன. ஆதலால் அவை நாளடைவில் உற்சாகங்குன்றி மேன்மேலும் வளர்ந்தோங்க வழியின்றி மறைகின்றன. சமீ பத்திற் சென்னை விளம்பர சபையினின்றும் வெளிப்போந்த "The Madras year book 1923" என்ற பிரசுரத்தில் இம் மாகாணத்திலுள்ள புத்தகாலயங்க ளெல்லாவற்றினுடையவும் விபரங்களடங்கிய ஜாபிதா ஒன்று வெளி வருமென்றெதிர் பார்க்கப்பட்டது. ஆயினும் அதில் சுதேச ராஜ்யங்களும், தெலுங்கு ஜில்லாக்களும் சேர்ந்த சென்னை மாகாண முழுவ திலும் கூஉ புத்தகாலயங்கள் மட்டும் இருப்பதாகக் குறிக்

கப்பட்டுள்ளது. ௧௦ தெலுங்கு ஜில்லாக்களில் மாத்திரம் சுமார் ௬௦௦புத்தகாலயங்க ளேற்பட்டிருப்பதாகக் கணக்கெடுக் கப்பட்டிருக்க, மேற்குறித்த விளம்பர சபையாரின் ஜாபிதா வில் பொதுவாக சென்னை மாகாணத்திற் கெல்லாம் ௩௨௨ புத்த காலயங்களை மட்டும் குறிப்பிட்டிருப்பது பயனற்ற செயலாம். ஆகையால் இச் சமயத்தில் நந்தமிழ் ஜில்லாக்களில் எத்தனை புத்தகாலயங்களும், வாசகசாலைகளு மேற்பட்டிருக்கின்றன? அவற்றில் பாஷாவாரி எத்தனை புத்தகங்க ளிருக்கின்றன? எத்தனை யங்கத்தின ரிருக்கின்றனர்? அவற்றின் நிருவாகிகள் யாவர்? அவை எப்பொழு தேற்பட்டன? எவ்வுதவியைக் கொண்டு அவை போஷிக்கப் படுகின்றன? அவைகளின் சரி யான விலாசங்கள் யாவை? என்ற விபரங்கள் தெரியவேண்டி யிருக்கின்றன. அதன்மீது தமிழ் நாட்டின் சார்பாகப் புத்த காலயங்களின் மகாநாடு ஒன்று கூட்டவேண்டும். அதற்கு அங்காங்கே யுள்ள புத்தகாலயங்கள் யாவும் தத்தம் பிரதி நிதிகளை யனுப்ப வேண்டும். இவ்வியக்கத்தி னிடத் தபிமான முள்ள அறிஞர்கள் யாவரும் அங்கு விஜயம்செய்யவேண்டும். அம்மகா நாட்டில், "புத்தகாலய வியக்கத்தை நந் தமிழ்நாட் டில் எவ்விதம் பரவச்செய்வது? எவ்வெவ் வழிகளில் புத்தகா லயங்களை வளர்ப்பது? இவ்வியக்கத்தை நிலையாக நிறுத்த என்ன முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்?" என்ற விஷயங் களைப்பற்றி யோசித்துத் தீர்மானிக்கவேண்டும். இவ்வியக்கத் தில் தற்போது நந்நாட்டில் அரசியல் விஷயங்களில் மாறுபட்ட கருத்துடன் பிரிந்துநிற்கும் எல்லாக் கக்ஷியார்களும் ஈடுபட லாம். பிராமணர், பிராமணரல்லாதார், மிதவாதிகள், அமித வாதிகள் என்ற வேற்றுமைகளுக்கு மிங்கிடமில்லை. ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு இவ்வியக்கமே எல்லாக்கக்ஷிகளையும் ஒன்று படுத்தும் பொதுவான இயக்கமாமென்பது இனிது விளங்கும். இவ்வியக்கத்திற் கெனவே தமிழில் தனிப் பத்திரிகை யொன் றேற்படவேண்டும்; அல்லது தற்போது வெளியாகும் பத்திரி கைகளுள் ஏதேனுமொன்று சிறப்பாக இவ்வேலையை யேற் றுக்கொள்ள வேண்டும். அதில் அறிவாளிகள் புத்தகாலய

வியக்க சம்பந்தமாக உலகில் ஆங்காங்கே நடைபெறும் முயற்சிகளைப்பற்றியும், நந்நாட்டில் அவ்வியக்கத்தை வளர்க்கவேண்டிய விதங்களைப்பற்றியும் சிறந்த வியாசங்களெழுதி, இவ்விஷயத்தில் நாட்டில் உற்சாகத்தைக் கிளப்பிவிடவேண்டும்.

தமிழகத்தில் ஆக்காங்கேயேற்பட்டுள்ள புத்தகாலயங்கள் யாவும் தத்தம் புத்தகாலயங்களின் வளர்ச்சிக் குறிப்புகளை அவ்வப்பொழுது குறித்த பத்திரிகையில் வெளியிட்டு வர வேண்டும் ஒவ்வொரு ஜில்லா முக்கியப் பட்டணங்களிலும் ஜில்லா புத்தகாலயங்க ளேற்படவேண்டும். அவற்றிற்குக் கிளைகளாகத் தாலூகாக்கள், கிராமங்கள் முதலியவற்றில் கிளைப் புத்தகாலயங்க ளேற்படவேணடும். தமிழ் ஜில்லாக்களுக் கெல்லாம் பொதுவாகத் தமிழ்நாட்டுத் தலைமைப் புத்தகாலயமொன்றேற்படவேண்டும். அவற்றுள் குறித்த காலத்திற் கொரு முறை கிராம, தாலுகா புத்தகாலயங்கள் ஜில்லா புத்தகாலயங்களுக்கும், ஜில்லா புத்தகாலயங்கள் யாவும் தமிழ்நாட்டுத் தலைமைப் புத்தகாலயத்திற்கும் தத் தம் புத்தகாலயங்களின் நிலைமையைப்பற்றிய அறிக்கைகளை யனுப்பவேண்டும். அவை யாவும் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அவ்வப்போது பிரசுரிக்கப்பட வேண்டும். புத்தகாலயங்க ளேற்படாத கிராமங்களுக்கு, ஜில்லா தாலூகா புத்தகாலயங்களி னின்றும் யாத்திரைப் புத்தகாலயங்களென்ற பெயரால் சிறு சிறு பெட்டிகளில் குறித்த ஒரு சங்கையுடைய புத்தகங்களைவைத்துப் பொறுப்பு வாய்ந்தவர்களின் மூலம் அவற்றை யனுப்பிவைத்து வாசகர்களுக்கு எட்டச் செய்ய வேண்டும். செல்வாக்குள்ள புத்தகாலயங்கள் தம் சார்பில் பண்டித சபைகளை யேற்படுத்தி அவற்றின் மூலமாய்ப் பண்டைய நூல்களையும், நவீன சாஸ்திரங்களையும் ஆராய்ந்து நல்ல நூல்களைவெளியிடலாம். போட்டி வித்வத் பரீக்ஷைகளை யேற்படுத்தி நாட்டில் உற்சாகத்தைக் கிளப்பலாம். பண்டிதர்களுக்குக் அவ்வப்போது தக்க வெகுமதிக ளளித்து அவர்களை யாதரிக்கலாம். தமிழ்நாட்டுப் புராதன சாசனங்களையும் சிற்பங்களையும் ஆராய்ச்சி செய்து தமிழரின் உண்மைச் சரித்

திரத்தைக் கண்டுபிடிக்கலாம். புத்தகாலயங்களின் சார்பாக ஆங்காங்கே தேசிய பாடசாலைகளை யேற்படுத்திக் கல்வியையும், கைத்தொழிலையும் கற்பிக்கலாம். அசையும் படக்காக்ஷிகளைக்கொண்டு நாட்டில் விஞ்ஞானத்தை விதைக்கலாம். வருடந்தோறும் பொருட்காக்ஷிகளை நடத்தி நமது கலைகளை வளர்க்கலாம். தாய்மொழியாந் தமிழை நனிவளர்ந் தோங்கச் செய்யலாம். நாடெங்குந் தமிழ்மணம் பரப்பலாம். இன்னும் இது போல் செய்யவேண்டிய வேலைகள் பலவுள.

பொதுவாக ஒருநாடு செழிப்படைய வேண்டுமாயின் அந்நாட்டு மக்களிடையில் கல்வியறிவும், உலகில் ஞானமும் நன்கு பரவியிருக்க வேண்டுவதவசியம். அத்தகைய நாட்டில் ஒற்றுமை யுணர்ச்சியும், உயர்தனி நோக்கமும், தேசாபிமானமும் செழித்தோங்கும். அரசியல் துறையிலும் அந்நாடு ஆதிக்கம்பெறத் தடையில்லை. இவ்வளவுக்கும் புத்தகாலய வியக்கமொன்றே ஏற்ற சாதனமாம். ஆதலின் நந்தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளும், தமிழ்ப் பத்திராதிபர்களை இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தி, தமிழ் நாட்டில் புத்தகாலய வியக்கம் தோன்றிவளரச் செய்ய முயற்சிக்க இனியேனும் முன்வருவார்களா?

என். வேங்கடரமணன்,
"ஆநந்தநிலயம்" சேலம்.

நகர வாழ்க்கை.

"தற்கால மனித சமூகத்தின் அழிவுக்கு அறிகுறியாய் நிற்பது பெருத்த நகரங்களின் வாழ்க்கை விழைவுதான்" என்று தற்காலத்து அயர்லாந்தின் ஞானி ஒருவர் கூறிய மொழிகள் கிராம சமுதாய வாழ்க்கையையே உரிமையாகவுடைய இந்தியாவுக்கு மிகப் பொருத்தமாகும். மட்டுக்கு மிஞ்சிய

தொழிற் பெருக்கத்தினல் நாட்டிலுள்ள தெள்ளிய அறிவும் பெருத்த செல்வமும் இழுக்கப்பட்டுப் பெரிய நகரங்களும் பட்டினங்களும் உண்டாவதற்கு ஏதுவாகின்றது. இந்தத் தீமையினல் கிராமச் செல்வநிலை குலைந்துபோய் இந்தியாவின் பொருள் வருவாய்நிலை அழிந்துபோகும் போலிருக்கிறது. இந்தியாவில் பூர்வத்தில் காணமுடியாத வீடற்ற மன்பதைகளின் கூட்டம் பெருகுகின்றது. சாமான்ய கிராமவாசிகளும் ஏரையும் குடித்தனத்துக்குரிய சிறு கைத்தொழில்களையும் துறந்து பெரிய தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் கூலி வேலை செய்து பிழைக்கச் செல்லுகின்றனர். கிராமங்களிலுள்ள மத்திய வகுப்பாரும், நவ நாகரிகத்தில் உண்டான பயனுய் இருக்க இடமற்ற மற்ருேர் வகுப்பினராகிய "சம்பளகாரராய் மேஜைகளில் எழுதி அவலப் பிழைப்புப் பிழைப்போராகின்றனர். மற்ருேர்பால் பிரபுக்களும் செல்வர்களும் நகர வாழ்க்கையின் ஆடம்பரங்களையும் சுகாநுபவங்களையும் கண்டு மயங்கி, பரம்பரையான கிராமத்தின் நன்மையில் கருத்தைச் செலுத்திப் பொதுநலத்துக்குத் தாராளமாய் உதவிசெய்து கொண்டிருந்த தங்கள் முன்ஞேர்களின் இருப்பிடத்தைப் பாழடையவிடுத்துச் செல்லுகின்றனர். கிராமங்களை விடுத்து நகரங்களுக்குச் செல்லும் இந்த மயக்கத்தினல் இந்தியாவின் கிராம வாழ்க்கை வெகுவாய்ப் பாதிக்கப்படுகின்றது. கிராமம் சிதைந்து பட்டினம் அளவுக்குமீறி வளர்வதினல் தனக்கே கேட்டை வருவித்துக் கொள்ளுகிறதென்பதை உணரவில்லை. கிராமத்தின் ஜனங்களும் விளைபொருள்களும் நகரத்துக்குச் சென்றுவிட, நகரத்திலிருந்து கிராமத்துக்கு யாதொரு பிரதியுபகாரமும் கிடைப்பதில்லை. சமீபத்தில் "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பத்திரிகையில் வெளியான ஈ. எல். எம். ஹர்ஸ்டு என்பவரின் அரிய வியாசத்தில் "திருடர்களில் நகரங்களே மிகக் கொடுமையானவை. தனித்த ஜனசமூகங்கள் தங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் திருப்திசெய்யும் பொருட்டு கல்வியறிவற்ற பாமர ஜனங்களை அடிமைப்படுத்தி, வியவகாரங்களைப் பெருக்கி, மேலானகல்வியும் நோக்கமும்உணர்ச்சியுமற்று,

தோட்டிமுதல் தொண்டமான் ஈறுக யாவரும் ஒரே பொது நன்மைக்குச் சேவைபுரியும் பழைய பொதுவாழ்வைமுற்றிலும் அழித்துவிட்டன. இக்காலத்தில் ஐசுவரியத்துக்கும் அதிகாரத் துக்கும் உழைப்பதில் ஆரோக்கியமான ஆகாரமும் சுகவாழ்க் கையும் நல்லொழுக்கமும் கைவிடப்படுகின்றன. பூமியிலிருந்து அடையக்கூடிய பலன் முழுவதும் கிடைப்பதில்லை. வறுமை யும், வியாதியும், பஞ்சமும், நியாயஸ்தல நடவடிக்கைகளும் மலிந்து காணப்படுகின்றன'' என்று கூறியுள்ளார். கிராமங் களை அழியவிடுவதால் தாங்கள் அடையக்கூடிய தீமையை நகரவாசிகள் இன்னும் உணரவில்லை. ஆனால் பிரதிபலன் முன் னமே தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. நகரவாசிகள் தங்கள் கொடுமைகளுக்குத் தக்க அபராதம் இறுக்க வந்துவிட்ட னர். தினசரி வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதும் வேலை யின்றிச் சோம்பேறிகளாய்ப் பலர் திண்டாடும் கொடுமையும் நகரங்களிற் காணப்படும் இன்னும் பல தீங்குகளும் கிராமப் பொருளாதாரங்களின் அழிவினால் நேர்ந்தனவேயாம்.

முற்காலத்திய கிராம சமூகவாழ்க்கையின் உண்மை நிலை மாறிச் சுயநலம் அதிக்கிரமித்துக் காணப்படுகின்றது. கிராம வாசி தன் கிராமத்திலும் அதன் பழம்பெருமையிலும் வைத் திருந்த ஆர்வத்தை யிழந்து அதனால் தனக்கும் சமூகத்துக் கும் பெரும்நஷ்டத்தை யுண்டுபண்ணுகிறான். சமூக வாழ்க் கையின்—குடும்ப வாழ்க்கையின் கட்டுப்பாடின்றி வேலைசெய் வோரும் மத்தியவகுப்பாரும் நகரங்களின் வெளியாடம்பரங் களில் சுலமாய் அகப்பட்டுழலுகின்றனர்.

தற்காலத்தில் இந்திய கிராமங்களில் எங்கு பார்த்தாலும் உணவுக் குறைவும், நல்ல குடிதண்ணீர் இன்மையும், சுகாதா ரக்குறைவும், நோய்ப் பெருக்கமுங் காணப்படுகின்றன. பழைய கூட்டுறவு வாழ்க்கை அநேக கிராமங்களில் மறைந்துவிட்டது. முற்காலத்தில் நாடெங்கும் சுற்றி பக்திரசப் பாடல்களைப்பாடி பஜனைகளாலும், கீர்த்தனங்களாலும் ஜனங்களுக்குள் மேலான எண்ணங்களைப் பரவச்செய்துகொண்டு வந்த உண்மைச் சாதுக் கூட்டங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. பரஸ்பரம் அன்பும்

ஒற்றுமையும் போக, அவற்றிற்குப் பிரதியாகப் பொறுமையும் போட்டியும் தலையெடுத்திருக்கின்றன.

இந்திய ஜனசமூகத் தாழ்வுக்கு முக்கிய காரணங்களி லொன்று கிராம சமூகவாழ்க்கையின் சிதைவாகும். இதற்கு முக்கிய பொறுப்பாளிகள் கல்வி யறிவுள்ளவர்களே யாவர். எழுத்துவாசனை யறியாத கிராமவாசிகளின் உயிர்ச்சத்தைப் படித்த வகுப்பாரே உறிஞ்சியவர்ராகக் கருதப்படுவர். இம் மாதிரி கிரர்மவாசிகளைச் சூறையாடுதல் இனி அசாத்தியமா கும். கிராமவாசிகள் தங்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் தீங் குகளை உணர ஆரம்பித்துவிட்டனர். கிராமவாசிகளின் பெ ருங்கூட்டம் திரண்டெழுங்கால், இதனைச் சாந்தப்படுத்து வது யாவரா்லும் இயலாது. ஐரோப்பாவில் இவ்வாறே எளிய கிராமவாசிகள் நெடுங்காலமாகப் பெருத்த தனவந்தர் களின் கொடுமையால் நசுக்குண்டிருந்ததால் இப்போது அதன் பிரதிபலன் எங்கணும் காணப்படுகின்றது. மனிதனுடைய பொறுமைக்கும் ஓர் அளவு உண்டு. அந்த எல்லையைக் கடந் தால் அது ஆற்றொணாததாகும். ஆனதால் நகரவாசிகளுக்கும் பெருத்த முதலாளிகளுக்கும் இனி வருங்காலத்தில் கனத்த அபாயம் நேரக்கூடியதா யிருக்கிறதென்பதை அவர்கள் உணர வேண்டும்.

மனித சமூகத்தின் பெரும்பாகம் அரண்மனைகளிலும் மாடமாளிகைகளிலும் உறைந்திருக்கவில்லை, ஆனால் கிராமங் களில் சிறு குடில்களில்தான் வாழ்ந்து வருகிறது. அவர்களின் வாழ்க்கை இயற்கையிலேயே சாந்தமும், திருப்தியும், அமை தியும் சந்தோஷமுமானது. அவர்கள் வேண்டுவது உண்ணப் போதிய உணவும், உடுக்கச் சாமான்ய ஆடையுமேயாம். இவற் றை அவர்கள் உழைப்பால் அடைய இடமில்லாவிடில் அவர் கள் யாது செய்வர்? அவர்கள் விழித்து எழுந்தார்களானல், மாளிகைகளில் பலமான காவலுடன் உல்லாசமாய்க் காலங்க ழித்து வரும் நகரவாசிகளும் செல்வர்களும் ஒரு மூச்சுக்கு எதிர் நிற்கமாட்டார்களென்பதை அறியவேண்டும். ஆனதால் கிரர்மாந்தரங்களில் வாழ்ந்துவரும் எளிய மக்களுக்கு

அவர்கள்விழித்து எழுமுன், இப்போதே வேண்டுவன செய்து அவர்களின் வாழ்வை இன்பமாகச் செய்ய முன்வர வேண்டியது நகரவாசிகள் செல்வர்கள் ஆகியவர்களின் கடமையாகும். இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் கிராமவாசிகளைத் தட்டியெழுப்பி அவர்களுக்கு வேண்டிய கல்வியையும் தொழில்களையும் கற்பித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். தற்காலத்தில் உயர்தரக் கல்விச்சாலைகள் யாவும் பெரிய பட்டினங்களிலேயே யிருப்பதால் அவற்றால் கிராமங்களில் வாழும் எளியவர்களுக்கு யாதும் பயனின்று. நகரவாசிகள் எவ்வளவு கல்வியறிவும் நாகரிகமும் பொருந்தியவர்களா யிருப்பினும் கிராமவாசிகள் மூடர்களென்றும் அநாகரிகர்களென்றும் நாமே கருதி அவர்களை எள்ளுகிறோம். இதனால் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும், படித்தவகுப்பாருக்கும் படிப்பில்லா ஜனத்திரளுக்கும், பரஸ்பர சம்பந்தமற்றுப் பெருத்த பிளவுகள் உண்டாக ஏதுவாகின்றது. இப்பிரிவினைகளால் இந்தியாவின் நன்மை என்பது நகரங்களின் அபிவிர்த்தியிலும் படித்த வகுப்பார் என்று சொல்லப்படுவோரது சிறப்பிலும் நலத்திலுமே அடங்கியுள்ளதென நாம் கருதும்படி செய்துவிட்டது. ஆனால் உண்மையில் ஜனங்களின் இருப்பிடமான கிராமத்திலும் கிராமவாசிகளின் மறைந்த சக்தியிலும் புதைந்துகிடக்கிற மகா சக்தியை எழுப்பிவிடுவதுதான் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டுவதாகும்.

கிராம சமூகவாழ்விலேயே நமது தேசநன்மை சார்ந்திருக்கின்றது. ஆதலால் கிராமசுயஆட்சியைப்புதுப்பிப்பதே நமது தேசமுன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். அன்றியும் தேசீய இயக்கத்துக்கு ஒரே பொதுவான இலட்சியத்தை ஏற்படுத்திக்கொண்டு அதனைப் பின்பற்றி நமது ஜனத்தலைவர்களும், இராஜீயவாதிகளும், பொதுஜனங்களும், கலாசாலைகளும் பொதுஸ்தாபன சங்கங்களும் ஏகோபித்து உழைக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டியதும் அவசியமாகும். நமது அன்றாட வாழ்க்கையிலும் செயல்களிலும் அந்த உன்னத இலட்சியம் ஊடுருவி நிற்கவேண்டும். நமது நகரங்களின் உணர்ச்சி

களும் கிளர்ச்சிகளும் எத்தனையோ முறை பரிசோதனைக்குட்பட்டு அந்த இலட்சியத்துக்குத் தகாதவை யெனக்கண்டோம். நமது இலட்சியத்தை அடைவதற்கு இனி நாம் நகரங்களினின்று கிராமங்களின்பக்கம் நமது கவனத்தைத் திருப்பி அடிவாரத்திலிருந்தே நமது சமூகவாழ்க்கையாகிய கட்டடத்தை யாரம்பிக்க வேண்டும்.

குங்குலியக் கலய நாயனார் சரித்திரம்.

:o:

(ஸ்ரீமாந் சந்தானம் பி. ஏ. எல். டி. அவர்கள் எழுதியது.)

இப்புண்ணிய பூமியாகிய சோழ மண்டலத்தில் ஜனங்களுக்கு அறிவு, நல்லொழுக்கம், பக்தி இவைகளைப் புகட்ட உதித்த புண்ணிய புருஷர் அநேகர். அவர்கள் ஒவ்வொருவரும் இல்லறத்திலிருந்து குற்றமற்ற நடத்தையாலே விசேஷ ஈச்வரானுக்ரகத்தை பெற்று அஞ்ஞான மென்ற இருளைப் போக்கி, ஈச்வரனது பாதார விந்தத்தை அடையலா மென்று நடந்து காட்டியிருக்கின்றனர். பின் சொல்லப்படும் சரித்திரம் அவ்வுத்தம புருஷர்களின் சரித்திரங்களிலொன்றாகும்.

சோழ ராஜ்யத்தில் இந்தியர்க ளெல்லாராலும் புண்ணிய நதி யெனக் கொண்டாடப்படும் காவிரி நதிக்கரையில் கடவூர் என்றொரு சிவ க்ஷேத்திரமுண்டு. இது தற்காலத்தில் திருக்கடையூரென்று வழங்கும் ஊரேயாகும். மாயவரத்திலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ளது. அங்குள்ள சிவாலயம் மிகப் பிரசித்திப்பெற்றது. நீரே கதி என்று தன்னைக் கட்டிக்கொண்ட பக்த சிரோன்மணியாகிய மார்க்கண்டேயரைக் காக்கும் பொருட்டு, தம்மையும் தம்மருமை பக்தனையும் பாசக் கயிற்றினால் சுற்றிய காலனைக் கோபாவேசங்கொண்டு காலாலுதைத்து வீழ்த்திய சுவாமியை தரிசனம்செய்வோர் யாவரும் மெய்ம்மறந்து திருவருளை வியந்து நிற்பர் என்பதற்கு ஐயமே இல்லை. இவ்வூரில் ஓர் உத்தம அந்தணருக்குச் சற்புத்திரராய்க் கலயர் அவதரித்தார். ஏராள ஐசுவரியத்தைப் பெற்றிருந்த இப்பிராமண சிரேஷ்டர் விசேஷ பக்தியுடன் சிவா

லயத்திற்குத் தினந்தோறும் தவருமல் சென்று கற்பூர தீபங் காட்டுவதுபோல் குங்குலியப் புகைமூட்டிச் சுவாமி தரிசனம் செய்வது வழக்கம். எவ்வித அசௌகரிய மேற்படினும் கோவிலுக்குச் சென்று குங்குலியதூபம் போட்டுச் சிவனடியைத் தொழாமலிரார். இப்படியிருக்குங்காலையில் இவருடைய செல்வம் வரவரக் குன்றிக்கொண்டே வந்தது. ஈச்வரன் தன்னுடைய பக்தனைப் பரிசோதித்தார் போலும். அப்பொழுதும் கலயர் மனம் சிறிதும் தளர்ச்சியடையாது வழக்கம்போல் கோவிலில் திருப்பணியைச் செய்துவந்தார். வர வர வறுமை மேலிட வீடுகளையும் ஸாமான்களையும், மனைவியின் நகைகளையும் விற்று ஜீவிக்கலானுர். இவ்வளவு சிரம தசையை யடைந்தும் தன் திருப்பணியாகிய குங்குலிய தூபத்தை மறந்திலர். கடைசியில் போஜனத்திற்குக்கூட வழியில்லாமல் கொடிய வறுமை உண்டாயிற்று. இம்மகானுக் கிசைந்த அத் தர்ம பத்தினி தன் நாயகன் படும் துன்பம் சகியாது, தன்தாலியைக் கழற்றி, மிகுந்த வணக்கத்துடன், "நாத! இதோ என் பொன் தாலியிருக்கிறது. இதை எடுத்துச்சென்று, விற்று, வீட்டுக்கு வேண்டிய பொருளைச் சேகரித்து வாருங்கள்" என்ருள்.

பொன்தாலியைக்கையிலெடுத்துக் கடைவீதிக்குச்சென்ற பிராமணர் எதிரில் குங்குலியப் பொதியைக்கொண்டுவந்த ஒரு வியாபாரியைக்கண்டார். அப்பொதியைக் கண்டதும் மனைவியின் தாலியை யெடுத்துக்கொண்டு எதற்காகக் கடைவீதிக்குப் போகின்றோமென்பதை அடியோடு மறந்தனர். ஆஹா! இக் குங்குலியம் சுவாமிக்குத் தூபம் போடுவதற்கு வேண்டிய பொருளல்லவா? இதைவிட மேலான பண்டம் தாம் வாங்கக் கூடியது யாது? பகவானுடைய கைங்கரியத்திற்கு இன்றியமையாத பொருளல்லவா என நினைத்துப் பேரானந்தத்தில் மூழ்கி, கையிலிருந்த தாலியை வியாபாரியிடம் கொடுத்துப் பண்டமாற்றினுர். குங்குலியச் சுமையை எடுத்துக்கொண்டு சிவாலயத்தினுள் சென்ருர். சுவாமியை தரிசித்துத் தூபமிட்டுத் தியானத்திலிருந்தார். உணவுப்பொருள் வாங்கச்சென்றவரை வீட்டிலுள்ளோர் இரவுமுழுதும் ஆவலுடன் எதிர்பார்த்துப் பிறகு

களைப்புமேலிட்டு அயர்ந்து தூங்கினர். தன்பக்தனைச் சோதித்தது போதுமென்று கருணைகூர்ந்து ஒன்று மில்லாத தன் பக்தன் வீட்டில் அளவற்ற பொன் வெள்ளிக்குவியல்களையும் மற்றும் வேண்டிய சாமான்களையும் சிருஷ்டித் தருளி ஸ்திரீரத்னமாகிய கலயரின் மனைவியாரின் ஸ்வப்பனத்தில் ஈச்வரன் எழுந்தருளி ஆசிர்வதித்தார். உடனே கண்விழித்துப் பார்த்துத் திடுக்கிட்டுநின்றாள். "இதென்னவிந்தை! எங்குபார்க்கிலும் நாணயக்குவியல்களும் உணவுப்பொருள்களும் நிறைந்து கிடக்கின்றனவே! இவைஎப்படிஇங்குவந்தன? இதுவும்ஈசனின் திருவிளையாடலிலொன்றோ! உணவுப்பொருள் வாங்கச்சென்ற புருஷரைக்காணோமே" என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். கோவிலில் மெய்ம்மறந்துசிவதரிசனத்தின்பேரானந்தத்தில் மூழ்கியிருந்த கலயர்முன் சிவபெருமான் தோன்றி, "பக்த சிரேஷ்டா! நீவீட்டிற்குச்சென்று உன் களைப்பைத்தீர்த்துக்கொள்வாயாக" என்றருளினார். அப்பொழுதுதான் கலயருக்குத் தன்வீட்டு ஞாபகம் வந்தது. மனைவி மக்கள் யாது செய்கின்றனரோ எனக் கவலையுற்று வீட்டுக்குச் சென்றார். வீட்டில் நடந்திருக்கும் விசேஷங்களைக் கண்டுதிகைத்து மனைவியை வினவ, அவ்வுத்தமி, "அவனன்றி ஓரணுவும் அசையாது; எல்லாம் நம்மையாளும் ஈசன்செயல்" என்றாள். பின்பு முன்னினும்பக்திமேலிட்டுத் தானதருமங்கள் செய்துவந்தனர்.

இப்படி யிருக்குங்கால் ஆடுதுறைக் கருகிலுள்ள திருப்பனந்தாளென்ற ஸ்தலத்தில் ஓர் சிவலிங்கம் பூமியிலிருந்து கிடைத்தது. அந்த லிங்கம் ஒருபக்கம் சாய்ந்திருந்தமையால் அரசன் தன்னாலியன்றவரையில் நேராக வைக்கப் பிரயத்தனப்பட்டான். லிங்கத்தைக் கயிற்றால்சுற்றி யானைகளைக்கொண்டு இழுத்துப்பார்த்தான். ஆனால் அச்சிவலிங்கம் அசையவில்லை. இவ் வதிசயச் செய்தியைக்கேட்ட கலயர் லிங்கத்தைத் தரிசிக்குமாறு திருப்பனந்தாளை யடைந்தார். தான் அதை நேராக நிறுத்திவைக்க மிக்க ஆவல்கொண்டு அதைச் சுற்றியிருந்த கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டிழுத்தார். அநேக மனிதர்களாலும் யானைகளாலும் இழுக்கக்கூடாத

இந்த லிங்கம் இவரொருவரிழுத்தலும் நேராக நின்றது. இவர் இழுத்தது பக்திக கயிற்றல்லன்றோ! உண்மை பக்தர்கள் நினைக் குங்காரியங்கள் சித்தி பெற இடையூறுகள் நேரிடுமோ? அர சனும் அங்கிருந்த யாவரும் கலயரை நமஸ்கரித்தனர். கல யர் சில நாள் அங்கே தங்கிப் பிறகு ஊருக்குச் சென்றார். தென்னாட்டில் அவதரித்த பக்தசிரேஷ்டரில் இவரொருவ ரென்பதற்கு ஐயமேயில்லை.

சிறு மணித்திரள்.

ஒரு சீடன் தன் குருவினுடைய நாமத்தை மிக பக்தியு டன் ஜபித்துக்கொண்டே நிறைவெள்ளத்தோடுகூடிய ஆற்றின் மீது நடந்து அதைக் கடந்து சென்றான். அதைக்கண்ட அவ னது ஆசிரியர் "அந்தோ! என் பெயருக்கு எவ்வளவு மகத் துவ மிருக்கிறது! என் மகத்துவ மெனக்கே தெரியாமற் போ யிற்றே!" என்று எண்ணிக்கொண்டு, தானும் "நான், நான்" என்று கதறிக்கொண்டு ஆற்றைக் கடக்கத் தொடங்கினார். ஆனால் அவர் நீரில் மூழ்கி இறந்துபட்டார். பக்தியினால் எத்துணை யசாத்தியமான காரியத்தையும் செய்து முடிக்கலா மன்றி, தான் என்ற அகங்காரத்தால் நாசத்தையே யடைவர்.

* * *

பிறவிக் குருடனாகிய திருதராட்டிர மன்னன் ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டு மென விரும்பித் தனக்கு விழிகளைக் கொடுத்தருளும்படி பக வானை மிக வேண்டிக் கொண்டார். அதற்கு அவ் விறைவன் அப்படியே யாகுகவென் றருள் புரிந்தார். உடனே திருத ராட்டிரன் தன்னிருவிழிகளும் தெரியப் பெற்றவனாய்க் கண் ணெதிரே கண்ணனைக் கண்டு தரிசித்து, அளப்பரும் ஆனந்த மெய்தி "தண்ணருட் கடலே! உடனே தமியேனது விழிப் புலனை யவித்துப் பழமைபோல் அந்தகனே யாக்குக" என இறைஞ்சினார். கண்ணபிரான் அதைச் செவியுற் றாச்சரியமுற்

றவராய் "திருதராட்டிரனே! உலகின் மக்கள் உயர்தனிச் செல்வமாக் கருதும் விழிச் செல்வத்தை மீண்டும் விரைவி லவிக்கும்படி வேண்டுவதன் காரண மியாது?" என வினவி னார். அதற்கு அம்மன்னவன் "அண்ணலே! அநேக ஆயிர மாண்டுகள் தவங்கிடந்துந் தரிசிப்பதற்கரிய உமது சச்சிதா னந்த சொரூபத்தைக்கண்டு களித்த என்கண்களால் மீண்டும் இம்மாயப் பிரபஞ்சத்தின் காட்சிகளைக்கண்டு கருத்தழிய என் மனம் ஒருப்படவில்லை." எனப் பணிந்து விடை பகர்ந்தார்.

* * *

சண்டாள குலத்திற் பிறந்த ஒருபக்தன் ஒருநாள் அன் னியர் யாரு மறியாதபடி ஆலயத்தினுட் புகுந்து ஆங்குள்ள தெய்வத்தை வணங்கி வழிபட்டுத் துதித்துக் கொண்டிருக்கை யில், அக் கோயில் அர்ச்சகர்கள் அவனைக் கண்டு அளவிலாக் கோபங்கொண்டு அவனைப் பிணித்து அவ்வூர் அரசன்முன் கொண்டு நிறுத்தினர். அவ்வரசன் அவனை விசாரித்து, கோ யிலினுட் புகுந்த குற்றத்திற்காக அம்மனிதனது ஒரு காலைத் துண்டித்து விடும்படி உத்தரவிட்டான். அதைக்கேட்ட அப் பக்தன் "அரசே! என்னிடத் தன்பு கூர்ந்து அவ்விறைவனது அருட் பேருருவத்தை மற்றொருமுறை காணும்படி எனக் கனுமதிகொடுத்து, அதற்கென மற்றொரு காலையுந் துண்டித் துவிடுங்கள்" என விழைந்து வேண்டிக்கொண்டான்.

* * *

சாக்ரடீஸ் என்ற தத்துவ ஞானியார் சாருந் தறுவாயி லிருக்கையில் அவரைக் கண்ட ஒருவர் "ஐயா! தாங்கள் மர ணத்திற்குச் சிறிதும் அச்சமின்றி ஆகுலப்படாம லிருப்பதற் குக் காரண மென்ன?" என்று வினவினர். அதற்கு அப் பெரியார் "எனக்கு மரணத்தைப்பற்றி யச்சமில்லாததோடு சந்தோஷமு மடைகிறேன். ஏனென்றால், புழுக்கள் நெளியும் இப்புன்புலால் யாக்கையைவிட்டு இன்று விடுபடப்போகிறேன். நான் ஆன்மாவே யன்றி சரீரமல்ல. அவ்வான்மாவுக் கென்றும் மரண மென்பதில்லை. இந்நிலையில் இவ் வுடற் கட்டுகளினின் றும் விடுதலையடையப் போகிறதைப்பற்றிச் சந்தோஷ மடை யாது, துக்கமடைவானேன்?" என்று பதில் கூறினர்.

ஒரு பக்தனிடத்தில் சிறிது பொருளிருந்தது. அவர் அதை யதிக தரித்திரர்களா யிருப்பவருக்குக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவ்வூரரசன் யானைமீதேறி அவ்வழியே வந்துகொண்டிருந்தான். அதைக்கண்ட அப்பக்தர் தம் பொருளை வாரி அவ்வரசன் முன்னிறைத்தார். அதைக்கண்ட மன்னன் ஆச்சரியமெய்தி, பொருளை அவ்வாறிறைப்பதன் காரணமென்னவென் றறிய விரும்பினான். அதற்கு அப்பக்தர் "வேந்தே! இப்பொருள்களை அதிக வறியோரா யிருப்பவருக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தேன். உம்மைவிட அதிக தரித்திரர் வேறு காணப்படவில்லை. எனெனில், செல்வம் எவ்வளவு அதிக மிருக்கிறதோ அவ்வளவு ஆசையு மதிகரித்திருக்கும். பேராசை கொண்டவன் பெருந் தரித்திரனாவன். ஆசையற்றவனே தனிகன். ஆதலால் எனக்கு நீரே யதிகவறியோராய்த் தென்பட்டீர்." என்று விடை யிறுத்தார். என். வே.

கெனியா சரித்திரம்.

['சோஷலிஸ்டு ரிவ்யூ' என்னும் ஆங்கிலத்தொழிற்கட்சிப் பத்திரிகையில் டாக்டர் நார்மன் லீஸ் என்பவர் எழுதியது.]

கெனியா என்பது ஆபிரிகா கண்டத்தின் கிழக்கில் அரபிக் கடலோரத்திலுள்ள சிறு குடியேற்ற நாடு. மகாயுத்தத்திற்குமுன் ஜெர்மனியர் வசமிருந்து பிறகு ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

கெனியாவில் முதன்முதல் குடியேறிய ஐரோப்பியர் ஆங்கில ஜெர்மன் பாதிரிமார்களாவர். இவர்கள் ௧௮௪௦-ம் ஆண்டில் அங்குச் சென்றனர். அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே சில இந்தியக் குடித்தனக்காரர் கடற்கரையோரமுள்ள பட்டினங்களில் வசித்து வர்த்தகம் செய்துவந்தனர். இவரையே யன்றி உள்நாட்டில் ஒருவரும் பிரவேசிக்கவில்லை. அக்காலத்தில் அந்நாடு அரபிய அரசாட்சிக்குட்பட்டிருந்தது.

௧அ௬௫-முதல் ஆங்கில ஜெர்மன்பாதிரிமார் சிறிது சிறிதாக நாட்டிற்குள் நுழைந்து 'பரிசோதனை' செய்ய ஆரம்பித்தனர். ௧அஅ௫-ம் ஆண்டுவரையில் ஆங்கிலஜெர்மன் அதிகார தோரணை யுடையோரும் தத்தம் கொடிகளுடன் நாட்டிற் பிரவேசம் செய்தனர். இப்போது கெனியா குடியேற்றநாடு என்று வழங்கும் பிரதேசப் பூர்வ குடிஜனங்களுடன் ஜோஸப் தாம்ஸன் என்னும் ஆங்கிலேயரும், கார்ல் பீடர்ஸ் என்னும் ஜெர்மானியரும் 'உடன்படிக்கை' செய்துகொண்டனர். சகல வியவகாரங்களையும் ஒருவிதமாய் ஒழுங்குப்படுத்தி ௧அஅ௫-ம் ஆண்டில் முடிந்த பர்லின் உடன்படிக்கையின்படி கிழக்கு ஆபிரிகா பிரதேசமானது, ஆங்கிலேயர், ஜெர்மானியர், போர்த்துகேசியர் ஆகிய மூன்று இனத்தவர்கட்குட் பகுத்துக்கொள்ளப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே பிரிட்டிஷ் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பூர்வகுடிகளுடன் செய்துகொண்ட பற்பல உடன்படிக்கைகளின் நிபந்தனைகளும் நிராகரிக்கப்பட்டு வந்தன. நாளடைவில் சிறு சிறு அரசாங்கங்கள் தனியரசுகளாயின. இறுதியில், ௧௯௨0-ல் பிரிட்டிஷ் கிழக்கு ஆபிரிகா பாதுகாப்புநாடானது தொலைந்து அரசராணையின்படி கெனியா குடியேற்ற நாடாகியது.

நாடு பரிசோதிப்போரைப் பின்பற்றி, இந்திய, அராபிய, பிரிட்டிஷ் வர்த்தகர் வந்து சேர்ந்தனர். ஆனால் அரசாங்கத்தாரால் உகாந்தா இருப்புப்பாதை போட்டு முடியும்வரையில் உள்நாட்டில் ஒழுங்கான வர்த்தகம் நடைபெறுவது துர்லபமாயிருந்தது. இந்த இருப்புப்பாதையானது கடற்கரைப்பட்டினமாகிய மொம்பாஸாவிலிருந்து கெனியாவை ஊடறுத்துக் கிழக்கு மேற்காய்ச் சென்று நீலநதி உற்பத்தியாகும் பெரிய ஏரிக்கரையில் முடிகிறது. இந்த ஏரியின் குறுக்கே நீராவிக்கலங்கள் துரைத்தனத்தாரால் உகாந்தாவுக்குச் விடுப்படுகின்றன. உகாந்தா இருப்புப்பாதையானது முற்றிலும் ஆங்கிலேயர் மூலதனத்தைக்கொண்டு ௧அ௯௬ முதல், ௧௯0௧ வரையில் கட்டப்பட்டது. முதலுக்கு வட்டி ஆண்டுதோறும் இன்றும் கொடுபட்டு வருகிறது. இந்த இருப்புப்பாதை போடுவதற்குப்

பெரும்பாலும் இந்திய வேலையாட்களே உதவியாயிருந்தனர். இவ்வாறு வந்த வேலையாட்களுக்குப் பிறகு இந்தியாவிலிருந்து சிறு கடைக்காரர்களும் பெருத்த வியாபாரிகளும் ஏராளமாய்ச் சென்று ஆபிரிக்கர்களுடன் ஒழுங்கான வியாபாரத்தை முதன் முதலில் துவக்கினார்கள். இந்த இந்திய வியாபாரிகளும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்த இந்தியருமே இப்பொழுது கெனியாவில் ஐரோப்பியருடன் சம இராஜிய உரிமையைக்கேட்டு நிற்கின்றனர்.

௧௮௯௪-ம் ஆண்டுமுதல் கிழக்கு ஆபிரிகாவில் ஒரு சில ஐரோப்பியர் வேட்டை விளையாட்டுகளினிமித்தம் வரத் தலைப்பட்டனர். இவ்வாறு வந்தோர் நாட்டின் வளப்பத்தைக்கண்டு தங்களுக்கு ஏராளமான பூமியை அரசாங்கத்தாரிடம் கேட்டு வாங்கிக்கொண்டனர். இப்போது இந்தியருக்கு எதிர்கட்சித் தலைவராய் நிற்கும் டேலாமேர் பிரபு ௧௯௦௩-ம் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு ௨௦௮ பவுன் விகிதம் சாஸ்வதக் குத்தகையாக ஒரு லட்சம் ஏகரா நிலத்தை வாங்கிக்கொண்டனர். ௧௯௦௨-ல் தேசாதிபதியாயிருந்த ஸர் சார்லஸ்எலியட் என்பவர் தாம் கிழக்குஆபிரிக்காவின் மலைப்பிரதேசங்கள் ஐரோப்பியர் குடியேற்ற ஸ்தலமாகுமென்று அறிக்கைபிறப்பித்ததுமன்றிடெலாமேர் பிரபுவுக்குக் கொடுத்ததைப்போல், ஆனால் சிறுபகுதிகளாக, ஐரோப்பியருக்குபூமி பங்கிட ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இவ்வாறு விடுக்கப்பட்ட நிலம் ஒவ்வொன்றும் ஆறாயிரம் ஏகரர்வுக்குக் குறையாதிருந்தது. இதனால் முதலெடுப்பில் நிலம் வாங்கினோர் அதனைப் பின்னால் வந்தவர்களுக்குத் திருப்பி விற்றதினால் மொத்தத்தில் கோடிக்கணக்கான பவுன் லாபமடைந்திருக்கின்றனராம். இப்போதுபெரிதும் சிறிதுமாக ௧௧௦௦ பட்டாதார்களிருக்கின்றனர். ஆனால் இவர்களில் அந்நாட்டிலேயே வாசம் செய்வோர் மிகச் சிலரேயாவர். இந்த நிலச்சுவான்தார்களும் இவர்களைச் சார்ந்திருக்கும் கடைக்காரர்களும், சாப்பாட்டு விடுதிக்காரர்களும், நிலத்தரகுகாரர்களுமே அக்குடியேற்ற நாட்டின் பூர்வகுடிகளாகிய ௩௦ லட்சம் ஜனங்களையும் அடக்கியாளும் உரிமையைப் பெற்றுநிற்போராவர்.

௧௯௦௭-ல் முதன்முதல் கெனியாவில் சட்டசபை ஏற்பட்டது. அச்சபையில் தேசாதிபதியால் நியமனம் பெற்ற உத்தியோகப்பற்றற்ற ஐரோப்பியரும் உட்கார்ந்தனர். ௧௯௧௯-ல் ஏற்பட்ட புதிய சட்டத்தின்படி ஆண் பெண் இருபாலாராகிய ஐரோப்பியர்களுக்குமாத்திரம் வாக்களிக்கும்சுதந்தரம் கொடுக்கப்பட்டது. ஏனையோருக்கு இல்லை. இந்த ஐரோப்பிய வாக்காளர் சேர்ந்து சட்டசபையின் மொத்த அங்கத்தினரில் பாதிக்குக் கொஞ்சம் குறைவானவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐரோப்பிய அங்கத்தினரில் பலரைத் தேசாதிபதி நிர்வாகசபை அங்கத்தினராக நியமனம் செய்கிறார். இவர்களே உண்மையில் அரசாட்சியைக்கொண்ட குழுவினராவர்.

இவ்வாறு அரசியல் முழுவதும் வெள்ளையர் கையிலிருப்பதால் கெனியாவிலுள்ள பூஸ்திதி கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டிருக்கிறது:—

ஐரோப்பியர் வசம் ௧௧,௦௦௦-சதுரமைல் பரப்பு; இந்தியர் வசம் ௨௦-சதுரமயிலளவு; ஆபிரிக்கர்வசம் யாதுமின்று; மிகுந்தவையாவும் "அரசாங்கத்தார" தாம்

அரசாங்கத்தை நடத்துவோரின் கொள்கையினால் அந்நாட்டின் பொக்கிஷம் வறட்சியடைந்துவிட்டது. நாட்டின் பூர்வ குடிகள் நாலிலொருபங்கு குறைந்துபோய் எஞ்சியோர் அடிமைகளைப்போல் வறுமையால் பீடிக்கப்பட்டு நிற்பதால், பிறநாட்டு நிலச்சுவான்தார்களின் ஆதிக்கமற்ற பிரிட்டிஷ் ஆபிரிக்காவின் ஏனைய பாகங்களைவிடக் கெனியாவில் உற்பத்தியாகும் பொருள்கள் மிகக்குறைவாயிருக்கின்றன. பெருத்த செல்வர்களுக்கும் எளியவர்களுக்கும் ஒப்ப தலைக்கு ஒருபவுன்ஆள்வரி ஒன்றே விதிக்கப்பட்டது. இதனால் வருமானவரி விதிக்கப்படுவதற்குமுன், வெள்ளையரும் இந்தியரும் சேர்ந்து மொத்த வருமானத்தில் நூற்றுக்கு ஒன்றுகூட வரிகொடுக்கவில்லை. சுதேசிகள் நூற்றுக்கு ௯௯-பங்கு வரிச்செலுத்தினார்கள். வருமானவரி விதிக்கப்பட்டபொழுதுங்கூட டெலாமேர் பிரபுவின் தலைமையில் நிலச்சுவான்தார்கள் ஒன்றுகூடி எதிர்த்து நின்ற

தால் ஒரு வருஷம் அமுலிலிருந்து பிறகு அரசாங்கத்தாரால் ரத்து செய்யப்பட்டது.

கெனியாவில் இந்தியப் பிரச்னை எழாதிருந்தால் கிழக்காப்பிரிக்காவில் ஒரு புதிய முறையான அடிமைத்தன்மை நிலைநாட்டப்பட்டுவிடும். கெனியாவானது இன்னும் ஒரு ஐந்து அல்லது பத்து வருடங்களில் 'சுய ஆட்சி' பெற்ற குடியேற்றநாடாகி பூஸ்திதி முற்றிலும் ஒரு சில வெள்ளையரின் வசமாகி யாதொரு தடையுமின்றிச் சுதேசத் தொழிலாளிகளை அடக்கியாளுவதற்கு இடங்கொடுத்துவிடும். விவகாரத்தில் இந்தியர்மலைப் பிரதேசங்களில் பூஸ்திதிக்குள்ள தங்கள் உரிமையைக் கைவிட்டு, சட்டசபை வாக்களிப்பு, இந்தியர் வரத்து ஆகிய விஷயங்களில் கவனம் செலுத்தியிருக்கின்றனர். ஆனால் இறுதியில் இந்தியர் வரத்து ஒன்றுதான் முடிவான விஷயமாய் நிற்குமெனத்தோற்றுகிறது. இப்போதுள்ள வெள்ளையர் இந்திய வர்த்தகர்களையும் தொழிலாளரையும் கிருஷிகர்களையும் வெறுப்பது போலவே ஐரோப்பிய வேலையாட்களையும் வராவிடாமல் தடுக்கவிரும்புகின்றனர். வெள்ளையர் விரும்புவது யாதெனில், கெனியாவை ஐரோப்பிய தனவந்தருக்கே யுரிமையாகச்செய்து அதனால் ஆங்கிலக் கனவான்களின் இளங்குமரர்கள் சிலவாயிரம் பவுன் முதலைக்கொண்டே, அரசாங்க நிலங்களிலிருந்து ஒரு நொடியில் அப்புறப் படுத்திவிடக்கூடிய வாக்குரிமையற்ற ஆபிரிக்கன் உழைப்பின் பெருத்த பயனால் கொழுத்த லாபமடையக்கூடியதாயிருக்க வேண்டுமென்பதேயாம். கெனியாவாசம் வெள்ளைய கனவான்களுக்கு எவ்விதம் உரிமையோ அவ்விதமே எளிய இந்தியர்களுக்கும் உரிமையுள்ளதாகும். நியாயப்படி பார்த்தால், ஏகாதிபத்தியத்தைக் கேவலப்படுத்தும் படியாக வெள்ளையருக்குக் கிடைத்திருக்கும் அநீதியான சாதகங்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவே இந்தியருக்கும் பாத்தியதையுண்டென்னலாம். இந்த அக்கிரமமான சாதகங்களை ஒழிப்பதற்கு அவ்வித சாதகங்களை எல்லோருக்கும் சம உரிமையாக்கவேண்டியது தான் ஒரே மார்க்கமாகும். இந்தியர்களுக்கு ஆபிரிகாவில் வாக்குரிமையும் கிடைத்துவிட்டால்

ஆபிரிகருக்கு இதுவரையில் வெள்ளையர் வஞ்சகத்தினால் கிட்டாத உரிமைகள் கிடைக்க ஏதுவாகும். இப்போதும் குடியேற்ற நாட்டு மந்திரியும் இவருக்கு முன்னிருந்தோரும் போதுமான கல்வியுள்ள இந்தியரையும் ஆபிரிக்கரையும் வாக்குரிமையாளரில் சேர்க்கச் சம்மதமிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தியர் கேட்கும் உரிமைகளைக் கொடுத்துவிட்டால் ஐரோப்பிய நிலச் சுவான்தார்கள் ஆயுதந்தாங்கிக் கலகம் செய்வதாகப் பயமுறுத்துகின்றனர். ஆபிரிக்கரிடத்து அவர்களுக்குள்ள அக்கரையினாலன்றிச் சுயநலப் பிரியத்தினால் தாங்கள் எதிர்த்து நிற்கவில்லையென்று எடுத்து விளக்குவதற்காக அவர்கள் லண்டனுக்குச் சில தூதுவரை யனுப்பினர். இந்திய வியாபாரிகளின் மோசங்களினாலும் கொடுமையான தீய்வொழுக்கங்களினாலும் எளிய சுதேசிகளின் பணமும் நடக்கைகளும் கெட்டழிந்துவிடுமெனப் பறைசாற்றுவிக்கப் படலாம். உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமானால், ஆபிரிக்கரிடமிருந்து வெள்ளையர் நிலத்தைத் திருடிக்கொண்டார்களென்றும் அவ்வாறு திருட்டுச் சொத்தை அநுபவிக்கும் திருடர், வேலிக்கு அப்பால் நின்று தங்களை இந்தியர் பார்ப்பதைச் சகிக்கவில்லையென்றும் சொல்லவேண்டியதே.

பாராளுமன்றத்தில் அங்கத்தினர்கள் எழுந்து நின்று கெனியாவுக்கு வெள்ளையர் செய்திருக்கும் நன்மைகளைக் குறித்துப் பெரும் பேச்சுகள் பேசலாம். சுதேசிகளுக்கென்று சிலவிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொல்லப்படலாம். ஆனால் அவைகள் சட்டத்தில் இடம்பெறவில்லை. அரசாங்கத்தாரை யன்றி எந்த சுதேசிக்காவது நிலத்தில் எவ்வித உரிமையும் கிடையாது.

பாரத தேசீய கீதம்.

(பண்டித— ம. கோபால கிருஷ்ணய்யரவர்கள்.)

எம்முடைய தாயகத்தை ஈசனென்றும் காத்தருள்க
நம்முடைய நேயமிகு நாடுசெழித் திடுமாறே
அம்மையுமை யொருபாகன் அருள்புரிக மனமுவந்து
செம்மைதிகழ் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க.

பாரதநற் றாயினது பழஞ்சரிதை பாடுமினோ
வீரமிகு மாரதரின் மேன்மையினைப் பாடுமினோ
வாரமிளிர் அவள்பொன்னார் மார்பகமே பாடுமினோ
சீரியநம் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க.

ஸ்ரீராமச் சந்திரன்றன் திருப்புகழே பாடுமினோ
மாராஜ புத்திரர்கள் மகிதலத்தில் வாழ்ந்துமுனம்
வீராவே சத்தமர்செய் வியன்புகழைப் பாடுமினோ
சீராரும் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க.

மையறுசீர் அக்பரது வண்புகழே பாடுமினோ
துய்யநம சிவாஜியுடைத் தொல்புகழே பாடுமினோ
பொய்யில்சுதந் தரப்பாக்கள் புரிந்துதினம் பாடுமினோ
செய்யபுகழ்ப் பாரத்தைத் தேவர்பிரான் காத்தருள்க.

சுடலையிடை நடனமிடும் தூயசிவ பெருமானே
தடதடென ஒலிபரப்பும் தமருகத்தின் நாதமெலாம்
கடல்புடைசூழ் காசினியில் கடிதினனி பரப்பிடுக
திடமிகுநற் பாரதத்தைத் தேவர்பிரான் காத்திடுக.

தீதுநலம் எவைவரினும் சிறிதெனினும் கலங்காமே
மேதினியில் செய்கடன்செய் மேதகைய ஆண்டகையாம்
மாதுணிவார் வீரமிகு மன்மெமக்குத் தந்தருள்க
தீதில்புகழ்ப் பாரதத்தைத் தேவர்பிரான் காத்தருள்க.

இது "நியூஇந்தியா" வில் அன்னிபெசன்ட் அம்மையார் எழுதிய ஆங்கில கீதத்தின் மொழிபெயர்ப்பு.

சாதி.

(மு. கிருஷ்ணசர்மா, திருச்செந்தூர்.)

தேவருல கும்புகழும் ஜேஸிபோஸ் ராஜாராம்
பாவலர்கோ னுந்தாகூர் பண்புறுத யானந்தர்
ஏவருஞ்சொல் கோகுலர்போல் எவையபல் லுத்தமரும்
பாவநிறை சாதியெலாம் பாரினுளோன் றென்றனரே.

தூயசிரத் தானந்தர் தொல்புகழ்ச்சு ரேந்திரரும்
மாயையகல் நம்சுப்ர மண்யர்ச தாசிவர்நல்
ஆயுமுளப் பூபேந்த்ரர் அஞ்சாப்ப டேல்கோரும்
தீயவர்கொள் சாதிமுரண் தீர்த்தொழிக என்றனரே.

மெய்த்தவத்தோர் தம்மாலும் விட்டகலற் கொண்ணாத
அத்துவணையின் பும்பெருநா டாட்சிமுழு துந்துறந்து
நத்துமுயிர் கட்கின்பம் நாட்டுமொரு கொள்கையுறும்
புத்தபிரா னுஞ்சாதி பொய்யென்று கூறினரே.

மார்பினிலும் கைகளிலும் வல்லிருட்புக் கீலடியால்
சோர்வுறுபோழ் தந்தமக்குத் தன்பமிழைத் தார்ப்பொறுப்டாய்
சீரியதே வாஎன்று செப்பியநல் ஏசுபிரான்
பாரினுளிச் சாதிமுரண் பாழுறுக என்றனரே.

மேதினியுள் மிக்கபுகழ் மேவலெனின் சொல்வதுபோல்
சாதியினு லும்செல்வத் தாலுமுள தாழ்வுயர்வு
வீதல்டைந் தோற்றுமையால் மேம்படுநூ வாழ்க்கையையெப்
போதடியேம் கண்டுமனப் புண்ணாறி யுய்குதமே.

நாடாரும் சக்கிலிய நண்பருமல் லும்புகலும்
ஒட்டாமு யன்றுழைக்கும் உத்தமராம் மள்ளர்களும்
ஈடாரு மில்லாத ஏழையராம் பஞ்சமரும்
வாடா வருந்தும் மனக்கொதிப்பு வீணாமோ.

அந்தணராம் ஓரினத்துள் ஆயிரமாம் உட்பிரிவு
வெந்திறல்சேர் மன்னர்தமுள் வேற்றுமையை யாயிரமாம்
செந்திருத்தே மேம்வணிகச் செல்வருட்பத் தாயிரமாம்
நோக்குமனத் தேவையருள் நூற்றுப்பி ரத்தளவாம்.

பத்திரிகை ஆராய்ச்சி.

திருவாளர் பொ. திருகூடசுந்தரம்பிள்ளையவர்கள் "தமிழ் நாட்"டில் கதரைப்பற்றிய வியாசத்தினிறுதியில் பின்வருமாறு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள்:—

(௧) இந்தியாவில் வசிக்கும் ஜனங்கள் சுமார் ௩௦ கோடி. சண்டைக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் செலவான துணி ௧௨-கெஜம். சௌகர்யமான காலங்களில் செலவாகும் துணி ௧௫ கெஜம். ௧௫ கெஜம் துணிக்கு ௫ ராத்தல் நூல்வேண்டும். ௩௦ கோடி ஜனங்களுக்கு ௧௫௦ கோடி ராத்தல் நூல் வேண்டும். தினந்தோறும் ஒரு பெண் சராசரியாக சுமார் ௨ பலம் நூல் நூற்பாள். ௧ வருஷத்தில் சுமார் [illegible] ராத்தல் நூல் நூற்பாள். ஆகையால் ௧௫௦ கோடி ராத்தல் நூலை நூற்க ௧௨ கோடிப் பெண்கள் வேண்டும். தினந்தோறும் ஒரு நெசவுகாரன் சுமார் ௮-கெஜம் துணி நெசவு செய்வான். ௧௫௦ கோடி ராத்தல் நூலை நெய்ய சுமார் ௨௦ லெட்சம் நெசவுகாரர் வேண்டும். ஆகவே இந்திய மகா ஜனங்களுக்கு வேண்டிய துணியனைத்தையும் செய்துதரவேண்டியது ௧௨-கோடி நூற்பவர்களும் ௨௦லெட்சம் நெசவுகாரர்களுமே யாகும். இது முடியாத காரியமா?

(௨) கதரின் வெற்றி:—கத்தர் இயக்கம் தோன்றி இரண்டு வருஷங்கள் ஆயின. அதற்குள் சென்னை மாகாணத்திற்கு வரும் விதேசத் துணிகளில் ௨ கோடி ரூபாய் பெறுமானவை குறைந்துவிட்டன. இங்கிலாந்தில் பிளாக்பர்ன் என்னும் ஊரில் உள்ள மில்களில்சுமார் ௩௦ ஆயிரம்தறிகள் வேலையில்லாமல் நிற்கின்றன. அங்கே ௩௪ மில்கள் இருக்கின்றன. அவைகளில் கதரியக்கத்திற்கு முன் வருஷம் ௧-க்கு ௧௦௦-க்கு ௩௪ வட்டி கிடைத்தது. கதர் வந்தபின் ௧௯ மில்களில் ௧௦௦-க்கு ௫ வட்டியே கிடைத்தது. ௧௱ மில்களில் வட்டியே கிடையாது. சில மாதங்களுக்கு முன் மாஞ்செஸ்டரில் வெளியாகும் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில், கதர் இயக்கத்தினுல் வருஷம் ௧-க்கு இந்தியாவுக்குப் போன சீமைத்துணிகளில் ௨௦௦ கோடிகஜம் குறைந்து விட்டது என்று கூறப்பட்டிருந்தது.

வேலையில்லாமல் குடிக்கக் கஞ்சிக்கும் உடுக்கஉடைக்கும் திண்டாடிநிற்கும் லட்சக்கணக்கான எளியஇந்தியர்களுக்குப்பெருந்

துணையாய் நிற்கக்கூடியது கதர் உற்பத்தியே யாகுமென நமது மகாஞானி காந்தியடிகள் அறிவுறுத்தி யிருப்பதை நாம் ஒவ்வொருவரும் நினைவிலிருத்தி அவர் ஆணைவழி ஒழுகுவோமாயின், கதரே நமக்கு எல்லாநலன்களையும் அளிக்கவல்லதாகு மென்பதில் ஐயமின்று. ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களும் ஆண்களும் ஓய்வு காலங்களில் வீண்வம்புபேசுவதை விடுத்து ராட்டினத்தையும் தறியையும்கைக்கொண்டால் கிராமவாசம் இன்பமய மாகிவிடும்.

* * *

டோக்கியோ ஏகாதிபத்திய சர்வகலாசாலையில் ஆசிரியராகிய டாக்டர் கெஞ்சிகாட்டோ என்பவர் ஜப்பான் பத்திரிகையில் மதங்களைப் பாகுபடுத்தி ஒரு வியாசம் வரைந்திருக்கிறார். அவர் சொல்வதாவது:—

உலகத்திலுள்ள சமயங்களை யாராய்ந்து பார்ப்போமானால், இரண்டு பெரிய பிரிவுகள் காணப்படுகின்றன: ஒன்று அத்துவிதம், மற்றொன்று துவிதமாகும். இந்துக்கள், பாரஸீகர், யவனர் ரோமானியர் இவர்கள் யாவரும் ஆரியர்களாதலால் அத்துவித சமயிகளாவர். கிறிஸ்துவமதத்துக்குக் காரணபூதமா யிருந்த பூர்வகாலத்து யூதமதமும் பின்னுந் தோன்றிய மகமதியமதமும் துவித சமயங்களாம். துவித சமயங்கள் மனிதனுக்கும் கடவுளுக்கும் கண்டிப்பான வேற்றுமையைப் பாராட்டுகின்றன; இறைவனைப் போன்றவர்களா யிருந்தபோதிலும் மனிதர் கடவுளாக வியலாதென்னும் கொள்கையையுடையன; கடவுள் பூலோகத்திற்குப் புறம்பாயுள்ள வேற்றுலோக வாசியென்றும் கூறுகின்றன. மகமதுநபி தம்மைக் கடவுளென்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் கடவுளின் பணியாளராயிருந்து அவருடைய உண்மைகளை மனிதவர்க்கத்துக்கு விளக்க வந்தவரென்று சொல்லிக்கொண்டார். பழய ஏற்பாட்டுக் கதைகளின்படி யூதராகிய மோசஸ் கடவுளைத் தூரத்தில் நின்று தரிசித்துக் கொண்டிருக்கையில் சினைமலைச் சிகரத்தில் பத்துக் கட்டளைகளைப் பெற்றார். கிரேக்கர்களும் ரோமானியரும் வீரர் வணக்கத்தைப் பெரும்பாலும் கைக்கொண்டனர். அத்துவித சமயங்களோ வெனில், மனிதர் போதுமானவரையில் ஞானத்தை யடைந்தவுடன் கடவுளின் சொரூபத்தை யடைந்துவிடக்கூடுமெனக் கூறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் துஷ்ட

நிக்ரக சிஷ்டபரிபாலனத்துக்காக மனிதஉருத்தாங்கி இப்பூவுலகில் கடவுள் அவதரிக்கிறார். புத்த மதஸ்தாபகராகிய கௌதமர்சாமான்யராய்ப் பிறந்து திவ்ய ஞானத்தைப் பெற்றபின் புத்தரானார். சரித்திரபூர்வமாக அபிவிருத்தி சம்பந்தமாய்க் கவனித்தால், நாகரிகமதங்களென்றும், அநாகரிக மதங்களென்றும் இரண்டு விதங்களைக் காண்கிறோம். அநாகரிக மதங்கள் முரணான கொள்கைகளைக்கொண்ட முரட்டுசுபாவ முன்னவர்களின் சமயங்களாகும்; நாகரிகமதங்கள் உயர்ந்த தத்துவங்களையும் மேலான அறிவின்பொருள்களையும் அடக்கி நின்று முதிர்ந்த ஞானிகளின் சமயங்களாய் விளங்கும்.

இந்தியாவில் நிலைபெற்றுள்ளிரும் சைவசித்தாந்தம், விசிஷ்டாத்துவிதம், வேதாந்தம் முதலாய தனிப் பெருஞ் சமயங்களின் வேறுபாடு அறியவியலாத பிறநாட்டுச் சமயநூல் விற்பன்னர் இந்து மதமெனப் பொதுவாக வழங்கிவருகின்றனர். இவைகள் சில விஷயங்களில் ஒன்றற்கொன்று மாறுபடினும் இவர் கூறுகிறபடி கடவுளுக்கும் உயிர்கட்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்பது மட்டும் உண்மையாகும்.

* * *

காந்திபுராணத்திற்கு முன்னுரை எழுதுகையில் 'நவசக்தி' ஆசிரியர் திரு. வி கலியாணசுந்தர முதலியாரவர்கள் நூல்களைப்பற்றியும் நூல்களை ஓதும் முறையைப்பற்றியும் பின்வருமாறு எழுதுகிறார்:—

நூலை இருகூறாகப் பிரிக்கலாம்: ஒன்று மெய்ந் நூல்; மற்றொன்று கலை நூல். மெய்ந்நூலென்பது உலகமே. ஈண்டு உலகமென்றது, இயற்கையும், அதனோடே கலந்துள்ள பேரறிவும் அவ்விரண்டையுங் கண்டின்புறுஞ் சிற்றறிவுஞ் சேர்ந்ததொன்றையென்க. இஃது என்றுமழியாது ஒரு பெற்றியாயிலங்கலான், இதனை மெய்ந்நூலென்று கூறலாம். தாம் உலகை யுணர்ந்து இன்புற்று, அவ்வின்பத்தைப் பிறரும் நுகருமாறு பாச் செய்யுளாகவோ உரைச்செய்யுளாகவோ அறிஞர் அருளும் நூலைக் கலைநூல் என்னலாம். நூல் ஆகுபெயர். பண்டைநாளில் வாழ்ந்த மக்கள்உலகென்னும் மெய்ந்நூலையே நேர்மையாகப்பயின்று இன்ப வாழ்வு நடாத்தினர்கள். அவ்வாழ்வு இப்பொழுதுகுலைந்தது. மெய்ந்நூலைப் பயின்று, அதன் வாயிலாகப் பெறும் அநுபவத்தைக் கலைநூலாக

எழுதும் வழக்கம் நாளடைவில் ஒழிந்தமையால், போலிக் கலை நூல்கள் கிளம்பி, மெய்நூற் பயிற்சியைக் கெடுத்து, மக்கள் இன்பவாழ்வைக் குலைத்தன. போலிக் கலைநூற் பயிற்சியே இந்நாளில் யாண்டும் பரவிவருகிறது. அப்பயிற்சி யாளரே கல்வியாளரென்றுங் கருதப்படுகிறார். கையால் கட்டப்பட்ட மண்டபங்களில் அமர்ந்து, வயிறோம்புங் குறிக்கொண்டு, கட்டுக் கட்டாக ஏடுகளைக் கட்டியழுது பட்டம் பெறுவது கல்வியாகாது. இக்கல்வி பெறுவோர் இயற்கை யின்பத்தை நாடாது, செயற்கை யின்பத்தை நாடுவது கண்கூடாம். ஐரோப்பா கண்டத்தில் தற்காலப் பாழுங் கல்வி பரவியிருக்கிறது. ஆண்டு அக்கல்வி கற்றார் பலர்; கல்லார் சிலர். தற்காலக்கல்வி பெருக்கெடுத்தோடும் ஐரோப்பாவை—அறிஞர்களே—சிறிது கண்ணோக்குங்கள். ஆண்டு அமைதி நிலவுகிறதோ? போர்க்கருவிப் பெருக்குக்கு நிலைக்களமாகவன்றோ ஐரோப்பா விளங்குகிறது? கல்வியின்பயன் இதுவோ? செயற்கை மண்டபங்களிலிருந்து ஏடுகளைக் கட்டியழுங் காலம் என்று ஒழியுமோ? இயற்கை மண்டபமாகிய மாத்தடியிலமர்ந்து, மெய்ந்நூலைப் பயிலுங்காலம் மீண்டும் வருமோ?

சதங்கையொலி.

திருப்பதியில் நகரவிடுதி.

சிறந்த யாத்திரை ஸ்தலமான திருப்பதிக்கு நாட்டுக்கோட்டையார் ஏராளமாகச் சென்று வருகிறார்கள். முன் அங்கு நாட்டுக்கோட்டையார் கடைகள்சிலவிருந்தபடியால் தங்கஇடங்கொடுத்தார்கள். இப்போது இரண்டொருகடைகளிருந்தாலும் தங்க வசதியில்லை. இந்தக்கஷ்டம் அங்கு செல்கிற நம்மவரைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாயிருக்கிறதென்ற விஷயத்தை முன்னொரு முறை நாம் எழுதி யிருந்தோம். இப்பொழுது சென்னை நகரத்தார் நகரமகமைப் பணத்திலிருந்து திருப்பதியில் ஒரு நகர விடுதிக்கு வீடுவாங்குவதென்று நிர்மானித்திருக்கிறார்களென்ற சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கிறோம். மிகமிக உபயோகமாகுமாறு விடுதியமைக்க முன்வந்த சென்னை நகரத்தாரை வாழ்த்துகின்றோம்.

காக்கிநாடா காங்கிரஸ்.

௩௮-வது இந்திய தேசியமகாசபை வருகிற டிசம்பர்மாதம் ௨௬-ந் தேதி காக்கிநாடா காந்தி நகரில் கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்

நடைபெறுகின்றன. உடன்தேதி விஷயாலோசனைக் கமிட்டிகூடும். தேசிய மகாசபையுடன் தொழிற்காட்சியும் முக்கியமாய் அகில இந்தியக் கதர்க் காட்சியும் நடைபெறும். தொண்டர்கள் ௫௦௦ பேர் வரையில் நின்று காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் அபிமானிகளுக்கும் உதவிபுரிவர் எனவும் தெரிகிறது.

"மெய்கண்டான்."

இப்பெயர் கொண்ட மாதஸஞ்சிகை யொன்று நமது பார்வைக்கு எட்டியது. அதில், ஸ்ரீமாந் பிரமநாயகம்பிள்ளையவர்கள் நமக்கெழுதியுள்ள விண்ணப்ப மொன்றைப் பிரசுரித்து, அதன்கீழ் அவசியமின்றி இதன் ஆசிரியர் ஒரு குறிப்பெழுதியிருக்கிறார். ஆசிரியர் பதவி வகிப்போர் நிருபர்களின் வியாசங்கட்கு அடியில் குறிப்பெழுத வேண்டிய அவசியம் எப்பொழுது நேருகிற தென்பதையும், வேறொரு பத்திரிகையைப்பற்றியாவது பத்திராதிபரைப்பற்றியாவது குறிப்பிடும்போது எவ்வளவு மரியாதையோடு குறிப்பிடவேண்டு மென்பதையும் அறிந்து கொள்ளுதல் நலமாகும். இதன் ஆசிரியர்க்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இவரது பத்திரிகைக்கும் நமது பத்திரிகைக்கும் எந்தவழியில் சம்பந்த மேற்பட்டிருக்கிற தென்பது விசாரித்தறிய வேண்டியதாகும், ஆனால் நம்மைப்பற்றிப் பத்திராசிரியர் தம் நிலை தவறி யெழுதியிருக்கிறா ராதலால் "ஒழுக்க முடையார்க்கு ஒல்லாவே தீய, வழுக்கியும் வாயாற்சொலல்" என்ற வள்ளுவர் வாக்கைமட்டும் ஞாபகப்படுத்துகின்றோம்.

பொதுப்பத்திரிகை.

மேற்படி பத்திரிகையில் ஸ்ரீமான் பிரமநாயகம் பிள்ளை யவர்கள் குமரனைப்பற்றிச் சில கூறியுள்ளார்கள். குமரன் முழுச் சைவனாக விருக்கவேண்டுமென்றும், 'அபேதாநந்தர் உருவப்படம்' 'ஈப்போ உபந்யாசம்' 'திருமந்திரதானம்' போன்றவை வெளிவரலாகாதென்றும் பிறவுங் கூறியுள்ளார்கள். அவர்களுடைய சைவ சமயப்பற்றை நாம் மிக மிகப் பாராட்டுகிறோம். ஆனால், ஒரே நோக்கங்கொண்டு சைவசமய தத்துவங்களை ஆராய்ந்து பேசிச் செல்லும் பத்திரிகைகளுமுண்டு. அவைதாம் நண்பர் கூறுகிறபடி செல்லுதல் கூடும். நமது குமரனின் நோக்கம் அப்படிப்பட்டதென்று நாம் எப்பொழுதும் கூறியதில்லை. முதற்பத்திரிகையில் குமரன் எந்நோக்கங்கொண்டு வெளிவருகிறானென்பது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. நிற்க, சிவனடியார் திருக்கூட்டத்தின் நோக்கம் தற்போது ஒன்றேயாகும். எல்லாரையும் ஜீவகாருண்ய நெறிபற்றச்செய்வது. நண்பர் கூறுகிறபடி, சைவர்களை

மட்டும் நோக்குவது; ஏனையோரைப் பார்ப்பதில்லை' யென்று கொண்டால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமயங்களில் தீவிரமான பற்றுள்ளங் கொண்டிருக்கிறார்க ளாதலால், அவர்களும் நம்மைப் பார்க்கப் போவதில்லை. எனவே ஜீவகாருண்ய இயக்கம் குன்றுகிறது. வேறு சில புறமதங்களில் "ஜீவகாருண்யக்" கொள்கையே கலக்கப்படவில்லை. அவர்களும் ஜீவகாருண்யத்தைப் பெறவேண்டிய தவசியமன்றோ? எம்பெருமானால் ஆக்கப்பெற்றிருக்கும் பல்கோடி யுயிர்ப்பிராணிகளையும் பல்வேறு மதத்தினர்கூடிக் கொன்று விழுங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை யெல்லாம் பார்த்து அவர்கட்குக் கருணையுண்டாகுமாறு முயற்சிசெய்து கடைத்தேறச் செய்யவேண்டியது சைவப் பெருமக்களது முதற் பெருங் கடமையாகும்! அவ்வாறின்றி 'சைவரல்லாத் பிறரைப் பார்க்கமாட்டேன்; பேசமாட்டேன்' என்று கூறித் தவம் புரியுங்கால மிதுவன்றென்பது எமது தாழ்மையான அபிப்பிராயமாகும். உலகத்தாரை முற்றும் சைவராக்க வேண்டுமென்னும் எண்ணம் நமக்கிருக்குமானால், ஜீவகாருண்ய தர்மம் உலகெங்கணும் பரக்குமாறு உழைக்க முயலவேண்டும். எவரிடமும் துவேஷமில்லா திருந்தாலன்றி நமது பேச்சை எவருங் கேட்க மாட்டார்களென்பது அநுபவத்திற் கண்டதாகும். காரைச் சிவனடியார் திருக்கூட்டம் தற்போது சைவ சமயத்தின் அடிப்பீடமான "ஜீவகாருண்யம்" ஒன்றை மட்டுமே தனக்குக் கொள்கையாகக் கொண்டு வேலைசெய்து வருகிறதென்பதை நண்பருக்குத் தெரிவிக்கின்றோம்.

இங்கிலாந்தில் தேர்தல்.

இங்கிலாந்தில் பார்லிமெண்டுசபை நவம்பர் மாதம் கசு-ம் தேதி கலைக்கப்பட்டது. மறுபடியும் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்குப் பற்பல கட்சித்தலைவரும் பலமான பிரசாரம் செய்து வருகின்றனர். இரண்டு மூன்று பிரிவினராய் இருந்த (லிபரல்) தாராளக் கட்சியார் இப்போது ஒன்று கூடிவிட்டனர். தொழிற்கட்சியார் முன்னிருந்ததைவிடப் பலமாகவே யிருந்தபோதிலும், இந்தத் தேர்தலில் அவர்களுக்கு தாராளக் கட்சியாரைவிட அதிகமான பலம் கிடைப்பது அரிதென்னலாம். சென்ற பார்லிமெண்டு சபையில் அங்கத்தினரா யிருந்த இந்தியராகிய மிஸ்டர் சகலத்வாலா இப்போதும் தேர்தலுக்கு வேண்டிய முயற்சியைச் செய்துகொண்டிருக்கிறார். பிரிட்டனில் மொத்தம் உ கோடியே க0 லட்சம் வாக்காளரில் கூ0 லட்சம் பேர் ஸ்திரீகளா யிருக்கின்றனராம். எக்கட்சியார் ஜெயம்பெற்று அதிகாரம் வகிக்க வந்தபோதிலும் அவர்களால் இந்தியாவுக்கு நன்மை கிடைக்குமென்று எண்ணக் காரணமில்லை.

உ

சிவமயம்.

குமரன்.

1-1-24.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞூ மார்கழி மீ	மணி கூ.

வணக்கம்.

விநாயகர்.

புயல்காடடும் பனிவரையின் பிடிதழுவுஞ்
சிவவேழம் பொருப்பில் வானி
னியல்காட்டு மிருபிடிசேர் முந்நாலு
துதிக்கையன்முன் னீன்ற ஞானச்
செயல்காட்டு மொருகோடடி னிருகோட்டு
வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல்காட்டுந் திருமேனி மழைமதச்செண்
பகக்களிற்றை மனத்துள் வைப்பாம்.

உமாதேவியார்.

இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை
மேருவரைக் கிறைவி வேதச்
சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து
மணக்குமொரு செழும்பூங் கொம்பு
கமையவரைப் புரக்கவருட் கடல் சுரந்து
மடைதிறந்த கண்ணு ளென்னுஞ்
சமையவரைத் தலைவிகுழல் வாய்மொழியம்
பிகைதிருத்தா டலைமேற் கொள்வாம்.

திருஞானசம்பந்தர்.

மதுரேசர் திருநாட்டு வந்தசமண் கழுவேற மாறுச் சைவஞ்
சதுரேற மனுநீதி தழைத்தேறத் திருவேடு தமிழ்சேர் வைகை
யெதிரேறத் தொண்டர்குழா மீடேறப் பாசமய விருள்விட் டோடக்
கதிரேறு மணிச்சிவிகை யேறினன் சரணமந்தக் கரணஞ் சேர்ப்பாம்.

—திரிகூடராஜப்பக் கவிராஜர்.

திருக்குற்றாலக் காட்சி.

(௩௪௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வருவி சிறிது தூரத்தில் நின்று பார்க்கும்பொழுது பூமாரி பொழிவதுபோலும் பால் பரந்து வீழ்வதுபோலும் மிக வெண்மையாகக் காணப்பெறுகின்றது. அதற்குச் சமீபத்தில் ஒரு முப்பது அடி தூரத்தில் நிற்கும்பொழுது உடம்பில் பனிநீர் தெளிப்பதுபோல் தூய நீர்த்துளிகளை வீசுகின்றது. நெருங்கி நின்றால் பளிங்கு போன்ற ஜலத்தைச் சடசடவென்று எற்றுகின்றது. சில சமயங்களில் சிறு கல்மழைபோ லிருக்கின்றது. ஜலம் அருந்துதற்கு அமுதம்போல் இருக்கிறது. மழை அதிகமாகப் பெய்யும்பொழுது, அருவியில் ஜலம் பெருவெள்ளமாக வருகின்றது. மேலும் அவ்வெள்ளம் சிறு பொடிக்கற்களையும் மரங்கம்புகளையும் எற்றிக்கொண்டு வருவதால் அப்பொழுது மட்டும் ஸ்நாநம் செய்யவியலாது. இவ்வருவியின் சப்தம் ஊர் முழுதும் கேட்கிறது. உடம்பில் நல்லெண்ணெயைத் தேய்த்துக்கொண்டு ஒரு கால்மணி நேரம் இவ்வருவியில் நின்றால் உடம்பிலுள்ள வலியெல்லாம் தீர்ந்துபோகிறது. ஜலமானது பல பாகங்களிலும் அடிபட்டு வருவதாலும், மிக உயர்ந்த இடத்திலிருந்து கீழே மிகுந்த வேகத்தோடு வீழ்வதாலும் மின்சாரசக்தி அதிகமுடையதாக இலங்குகின்றது. இதனால் பல நோய்கள் தீர்ந்து போகின்றன. பருவமுழுவதும் இதிற் படிந்துள்ள ஒருவர் உடம்பு செழித்து அழகாக மிளிர்வதை அதிற்படிந்து வந்தோர் யாவரும் அறிவர். மேலும் மலையில் மூலிகைகள் நிறைந்துள்ளபடியால், அவைகளிலே படிந்து வருகின்ற இவ்வருவி ஜலமானது மருந்துக்கு ஒப்பாக விளங்குகிறது என்னலாம். அதனாலேயே தேகாரோக்யத்தைத் தருவதாகத் திகழ்கின்றது. அருவிஜலம் மடமடவென்று உடம்பிலே விழுந்து, உடம்பிலுள்ள இரத்தக் குழாய்களைச் சுறுசுறுப்பாக ஓடச் செய்து பொறுக்கமுடியாத உஷ்ணத்தை உண்டாக்குவதால், எல்லோரும் காலைமாலை இருவேளையிலும்

எண்ணெய் தேய்த்துக்கொண்டே ஸ்நானஞ் செய்கிறார்கள். ஆனால் ஒருவரும் அரைப்புத் தேய்த்துக் கொள்வதில்லை. அருவியில்தலையைநீட்டினால் எண்ணெயெல்லாம் பறந்துபோய்விடும். இவ்வருவிக்கு நான்குகாலம் பூஜை நடைபெறுகிறது. முன்னர் இவ்வருவி கோவிலின் பராமரிப்பில் இருந்தது. ஆனால் இப்பொழுது அரசாங்கத்தாரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. அருவிக் கரையில் ஐரோப்பியர்க்கு மட்டும் பிரத்தியேகமாகக் காலையில் நேரம் ஒதுக்கிவைக்கப் பட்டிருப்பதாகவும், அப்பொழுது வேறொருவரும் அருவியில் ஸ்நானஞ் செய்யக்கூடாதென்றும் ஒரு அறிவிப்புப்பலகை கட்டப்பட்டிருக்கிறது.

திருக்கோயில்.

இது மிகவும் பிரசித்தி பெற்ற சிவாலயங்களுள் ஒன்று. இதன் பெருமையைத் திருக்குற்றால ஸ்தல புராணத்துள் பரக்கக் காணலாம். முன்னர் மூலஸ்தானத்தில் விஷ்ணு மூர்த்தியாக இருந்த வடிவத்தை, சிவலிங்க வடிவமாக அகஸ்தியனார் ஆக்கினார் என்று புராணங்கூறுகிறது. திருக்குற்றாலநாத ஸ்வாமி கோயிலுக்குத் தென்புறத்தில் குழல்வாய்மொழியம்பாகோயிலிருக்கிறது. வலது புறத்தில் தரணி பீடம் இருக்கிறது. பிரகாரத்தில் மேல் புறத்தில் தென் மேற்கு மூலையில் விஷ்ணு மூர்த்தி கோயிலும், வடமேற்கு மூலையில் அகஸ்தியனார் கோயிலும், இவ்விரண்டுக்குமிடையில் சாஸ்தா கோயிலும் இருக்கின்றன. அகஸ்தியனார் திருவுருவம் மிக அழகாக இருக்கிறது. ஸ்தல விருக்ஷம் திருக்குறும்பலா. இது அப்பர் சுவாமிகள் தேவாரம் பெற்றது. இது இப்பொழுதும் மிக வயது முதிர்ந்த மரமாக இலை, காய் கனிகளோடு, குழல்வாய் மொழியம்பா கோயிலுக்குத் தென் புறத்தில் இருக்கிறது. சுவாமிக்குக் குளிர்ச்சியைத் தணிக்கும் பொருட்டு சுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப் பெறுகிறது. கோயிலுக்குள் அருவி ஜலம் மிகச் சிறு ஓடைகளாய்ப்பாய்கின்றது. கோயில் சங்கு வடிவமாகக் கிழக்கு நோக்கி இருக்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள திருவீதியின் பெயர் சங்கு வீதியென்பதாகும். பணி

புராதனமானதே. கோயிலுக்குக் கீழ்பாகத்தில் சித்திரா நதியும் மேல் பக்கத்தில் அருவி நீரோடுகின்ற ஓர் ஓடையும் கோயிலைச் சூழ்ந்து ஓடுகின்றன.

சித்திர சபை:—இது கோயிலுக்கு வடபாலுள்ள மேட்டில் ஐந்தருவிச் சாலைக்கு வட புறத்தில் ஒரு தெப்பக்குளத்துக்கு முன்னர் கிழக்கு முகமாகவிருக்கிறது. இந்த தெப்பக்குளத்தையும் சபையையும் சுற்றித்தான் தேரோடும்திருவீதியிருக்கிறது. சபைக்குத் தாமிர ஓடு போடப் பெற்றிருக்கிறது. சபைக்குள் வடபுறம் சுவரில் உள்ள நடராஜ வடிவமாகிய சித்திரத்திற்கே விசேஷ பூசை நடை பெறுகிறது. பக்கத்தில் உற்சவ மூர்த்தியும் இருக்கிறது. உள்ளே அதைச் சுற்றியுள்ள சுவர்களில், திருக்குற்றால ஸ்தல புராணம், திருவிளையாடல் முதலியவைகளிலுள்ள சரித்திரங்கள் சித்திரங்களாக வரையப்பட்டிருக்கின்றன. தெப்பக்குளத்தில் தென் கிழக்கு மூலையில் கூத்தர் கோயில் என்பது இருக்கிறது. கோயில் மிகப் பழையது. சிறிது கிழக்கு முகநோக்கிய சுவாமி சந்நிதானமும், தென் முக நோக்கிய அம்பாள் சந்நிதானமுமாக இரண்டே சந்நிதானங்களுள.

மற்றொரு சிவன்கோயில்:—இந்த ஸ்தலத்திற்கு வடபால் முக்கால் மைல் தூரத்திலுள்ள காசிமகேஸ்வரத்தில் சிவன் கோயில் ஒன்று உளது. இந்தக் காசி மகேஸ்வரத்தில்தான் திருக்குற்றாலத்தைச் சேர்ந்த பொது ஜனங்களிற் பலர் வசிக்கிறார்கள்.

குமார கோயில்:—இது காசி மகேஸ்வரத்திலிருந்து முக்கால் மைலிருக்கும். இந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணிய சுவாமி மிக சுந்தரமாக இருக்கின்றார். சாந்நித்யம் விசேஷம். கோயிலுக்குள் மகாலிங்கம் உமாதேவியார் முதலிய மூர்த்திகளும் இருக்கின்றன. கோயிலின் வடகிழக்கு மூலையில் ஒரு நடைகேணி இருக்கிறது. மேலே கல் மூடப்பட்டிருக்கிறது. நீண்ட தூரம் படிக்கட்டுச் செல்கின்றது. கோயில் உபயோகத்திற்கு வேண்டிய தண்ணீர் இதிலிருந்தே

எடுத்துக் கொள்ளப் பெறுகிறது. கோயில் பெரியதாகவே இருக்கிறது. மலையாளத்துப் போற்றிமாரே பூஜை செய்பவர்கள். கோயிலின் மேல் புறத்தில் ஒரு சிறு நதி செல்கின்றது.

கட்டிடங்கள்.

மண்டபங்கள்:—ஸ்தலத்தின் நாலுபக்கங்களிலும் பல வேறு மண்டபங்கள் இருக்கின்றன.

சிங்கம்பட்டி சத்திரம்:—இது தென்காசி குற்றாலம் சாலையில் கோயிலுக்குச்சமீபத்தில், சித்திராநதியின் மேல் புறத்தில் இருக்கின்றது. இது சிங்கம்பட்டி ஜமீன்தாருக்கு உரியது. இதில் பல அறைகள் உள்ளன. அவைகளுக்குரிய சிறு கட்டணத்தைக் கொடுப்போர் அவைகளில் வசிக்கலாம்.

பங்களாக்கள்:—இந்த ஸ்தலம் சிறந்த சுகவாச ஸ்தானமாக இருக்கிறபடியால் ஏராளமான பங்களாக்கள் இருக்கின்றன. நமது தென்னாட்டுப் பிரமுகர்கள் பலர் சொந்தமாகப் பங்களாக்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக பங்களாக்களில் அழகிய குரோட்டன்ஸ் செடிகளும், ரோஜா, முல்லை முதலிய புஷ்பச் செடிகளும் தென்னை மா பலா கமுகு முதலிய மரங்களும் நிறைந்திருக்கின்றன. சிறுஓடைகளும் சில பங்களாக்களுள் பாய்கின்றன. இந்த பங்களாக்களெல்லாம் பருவகாலமாகிய வைகாசி நடுவ முதல் ஆவணி நடுவவரை மூன்று மாதங்கட்குமே உபயோகத்திலிருக்கின்றன. மற்ற காலத்தில் உபயோகமில்லை. அதனால் இந்த மூன்று மாதங்களிலும் வாடகை மிக அதிகம். மூன்று மாதங்கட்கும் ௫00 ரூபாய் வாடகையுள்ள பங்களாக்களுமிருக்கின்றன. இந்த பங்களாக்களுள் அலங்காரமானது சிங்கம்பட்டி ஜமீன்தாருடைய பங்களாவேயாம். அதற்கடுத்துள்ள காரைக்காட்டார் பங்களாவும் நன்றாகவேயிருக்கிறது. எல்லாவற்றினும் மிகப் பெரியது திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பங்களாவேயாகும். இதன் விஸ்தீரணம் ஏறக்குறைய ஒரு மைல் இருக்கும். இவைகளெல்லாம் காசிமகேஸ்வரம் சாலையிலேயே இருக்கின்றன.

இவைகளின் சமீபத்திலேயே தபால் ஆபீஸ் இருக்கிறது. தந்தி ஆபீஸ் இங்கு இல்லை. தந்திகள் எல்லாம் தென்காசிக்குத்தான் கொண்டுபோகப் படவேண்டும். எட்டையாபுரம் ஜமீன்தாருக்கு ஓர் பங்களா தென்காசிச் சாலையில் இருக்கிறது. ராமநாதபுரம் ராஜா காசிமகேஸ்வரம் சாலையில் இடம் வாங்கியிருக்கிறார். சித்திரசபைக்கு சமீபத்திலுள்ள எட்டறை பத்தறை என்பன கோயிலிலிருந்து வாடகைக்கு விடப்படும் கட்டிடங்களாகும்.

மடங்கள்:—தென்காசி சாலையிலுள்ள திருநாவுக்கரசுசுவாமிகள் மடமே அடியார்கள் வசிக்கக்கூடிய ரமணீயமான இடமாக இருக்கிறது. கட்டிடம் நன்றாக விசாலமாக மேன்மாடி வைத்து உயரமாகப் பங்களாவைப்போல் கட்டப்பெற்றிருக்கிறது. பக்கத்தில் நந்தவனம் ஒன்று உளது. மண்டபத்திற்குள் நால்வரும் சேக்கிழாரும் உயர்ந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கிறார்கள். நித்திய பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. சொந்தக்காரருடைய சிபார்சுக் கடிதங்களுடன் வருவோர் இதில் பருவகாலம் (Season) முழுவதும் வசிக்கலாம். மற்றப் பொது ஜனங்கள் சிபார்சில்லாமலே மூன்று தினங்கள் வசிக்கலாம். இதற்குரியவர் சிவபக்தி, அடியவர்பக்தி முதலியவைகளிற் சிறந்த வைரவ பண்டாரத்தார் என்பவர். தென்காசியில் இவருக்குரிய வட்டிக்கடை ஒன்றுளது. மற்றும் இந்தச்சாலையிலேயே இந்த மடாலயத்திற்குச் சிறிது மேற்கே திருவாவடுதுறை மடம் இருக்கிறது. இது மிகச் சிலமடைந்திருக்கிறது. முன்னர் மட்டும் ஒரு நல்ல கொட்டகை இருக்கிறது. இடம் மிக விசாலமானது. காசிமகேஸ்வரம் சாலையில் மௌனசுவாமி மடம் ஒன்று உளது. இது ஒரு பெரிய பஜனை மடம்.

நகர விடுதி:—இவ்வூரில் நமது தனவைசியர்களுக்கு ஒரு நகர விடுதி இல்லாதது ஓர் பெருங் குறையாகவே இருக்கிறது. இவ்வகுப்பாரின் ஆடவர் பெண்டிர் இருபாலாருமாக ஏராளமான ஜனங்கள் இங்கு யாத்திரையாக வருகிறார்கள். இட-

மின்றிப் பலர் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் மற்றச்சாதாரண ஸ்தலங்களில் விடுதிகளை ஏற்படுத்துவதைக் காட்டிலும் தெய்வீக ஸ்தலமாகவும் சுகவாசஸ்தானமாகவும் உள்ள இந்த இடத்தில் ஏற்படுத்துவது மிகச் சிறந்ததாகும்.

போது இலவச வாசகசாலை:—கோயில் முன்மண்டபத்தில் அறை ஒன்று உளது. அதில் கோயில் அதிகாரிகளால் முன்னர் ஒரு பொது இலவச வாசகசாலை ஏற்படுத்தப்பட்டிருந்ததாம். இப்போது அது நடை பெறவில்லை. மறுபடியும் அது தோன்றுமானால் பொது ஜனங்களுக்கு மிக உபயோகமாயிருக்கும்.

தோட்டங்கள்:—ஸ்தலத்தின் நான்கு புறங்களிலும் நன்செய்த் தோட்டங்கள் பல உள்ளன. மலையிலுள்ள தோட்டங்கள் இரண்டு. ஒன்று வரதப்ப நாயுடு எஸ்டேட். இது மிகப் பெரியது. அடிவாரத்திலிருந்து ஏழு மைலிருக்கும். நல்ல சாலை. மற்றொன்று சிவகிரித் தோட்டம். இது சிறியதே. இது வடவருவிக்கு மேல் புறத்திலுள்ளது. இவ் விரண்டு தோட்டங்களிலுமே வங்குஸ்தான் முதலியவைகளுண்டாகின்றன.

சுகவாசம்.

வருஷா வருஷம் சுகத்தை உத்தேசித்து ஏராளமான ஜனங்கள் இங்கே வருகிறார்கள். ஜனத்திரள் அதிகரிப்பதினால் ஊரில் ஆபாசம் அதிகப்படுகிறது. உள்ளூர் யூனியன் ஊரைச் சுத்தி செய்வதற்கு கவனம் எடுத்துக்கொள்ளுகிறது. என்றாலும் இன்னும் போதிய சிறந்த கவனம் செலுத்தப்பெறவில்லை. இத்தகைய சுகவாசஸ்தானத்தில் யூனியன் அதிக கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகும். இனி நமது தனவைசியப் பிரபுக்களில் பழக்கமுடைய ஒரு சிலரே வருஷா வருஷம் பருவகாலத்தில் இங்கு வந்து வசிக்கிறார்கள். எல்லாருமே இங்கு வந்து வசித்து இயற்கை இன்பத்தையும் தெய்வ இன்பத்தையும் பெற்று இனிது வாழலாம். சுகவாச ஸ்தானத்தோடு இது சிறந்த சிவஸ்தலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. நமது முன்

னோர்கள் இயற்கை யின்பம் செறிந்துள்ள எல்லா இடங்களிலும், மலைகளிலும், ஆற்றங்கரைகளிலும், கடற்கரைகளிலும் நமது கோயில்களை ஏற்படுத்தி யிருப்பதன் நோக்கம் மக்களுக்கு இருமை இன்பத்தையும் நல்குவதற்கேயாகும். தற்காலம் இந்த ஸ்தலத்திற்குச் சிலர் சுகவாசத்தை மட்டும் கருதி வருகிறார்கள். அவர்கள் எப்பொழுதும் கைத் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு உயிர்ப் பிராணிகளைச் சுட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். இது மிகப் பாவகரமான காரியமாகும். மேலும் இப்புண்ணிய ஸ்தலத்தில் இத்தீமை புரிவது மஹாபாதகமேயாம். ஒரு பருவம் இந்த ஸ்தலத்தில் வந்து வசித்தவர்கள் அடுத்த பருவங்களிலும் வந்து வசிக்க அவசியம் விரும்புவார்கள். ஸ்தலம் அவ்வளவு சிறந்ததாக இருப்பதே காரணமாகும்.

திருப்பதி வரலாற்று ஆராய்ச்சி.

(அ. கிருஷ்ணசாமி நாயுடு.)

நமது குமரனில் சில திங்கட்கு முன்னர் குமரனைப்பற்றிய வரலாறு ஒன்று திருப்பதி வரலாறு என்னும் மகுடம் புனைந்து வெளிவரலாயிற்று. அவ்வரலாற்றினை வரைந்தார் திருவாளர் துடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள். நமது அன்பர் அவ்வரலாற்றினைச் சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாது வரைந்திருப்பாரேயாயின், தமிழுகத்திற்கு எத்துணையோ நலந்தந்திருக்கும். அங்ஙனமின்றி, உண்மைக்கு மாறாக வரையப்பட்டுள்ளதினால் இவ்வாராய்ச்சி எழுதலாயிற்று.

அவ்வரலாற்றின் கண் திருப்பதி என்னும் திருவேங்கடம் குமரக்கடவுள் மலையே என்றும், அம்மலையிலெழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையார் குமார சுவாமியே என்றும், காட்டிய காரணங்களைத் தொகுத்துக்காட்டுவோம். அவையாவன:—திருப்பதியில் எழுந்தருளியுள்ள குமரக் கடவுளுக்கு

இதுகாலை நடக்கும் பூசைமுறை வைகாநச விதிப்படி ஸ்ரீ இராமாநுஜர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டதென்பதும், வில்வ அருச்சனை மகாபிஷேகம் பூமி நீளாசமேதரன்றித் தனித்திருத்தல் முதலியன குமரக்கடவுளுக்கே உரியன என்பதும், பாலாஜி என்பதற்கு சுப்பிரமணியன் என்பது பொருள் என்பதும், திருப்புகழ்ப் பாடலில் திருவேங்கடப் பெருமானைக் குமரக்கடவுள் என்று கூறப்பட்டிருக்கின்றதென்பதும், வட ஆற்காடு மேன்யூலில் திருப்பதி குமாரசுவாமி மலையே என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறதென்பதும் முதலியனவாம்.

இவற்றினை உட்கொண்ட இவ்வரலாற்றினை ஆராய்வதற்குக் கருவிகளாகக் கொண்டவை வைணவ சமயநூல்களன்று; இரு சமயத்தவரும் ஒரு சமயமும் தவறாது மேற்கொள்ளும் நூல்களும், ஆதாரங்களுமேயாம்.

பூசை, வில்வம், அபிஷேகம், தனித்திருத்தல் முதலியவற்றைப் பற்றிச் சுருங்கச் சிலவற்றை ஆராய்வோம். தமிழ்நாட்டில் பழங்காலத்தில் பூசை முதலியன இன்னின்ன கோயில்களில் இன்னின்ன வண்ணம் நடந்துவந்தன என்பதற்கு எவ்வகை ஆதாரங்களும் கிடைத்தில. கோயில்களும், அக்கோயில்களில் கடவுளர்களும், இருந்தனராகப் புலப்படுகின்றனவே யன்றி, இதுகாலை நடைபெறும் ஆராதனங்களும், அலங்காரங்களும், அபிஷேகங்களும் நடந்தனவாகப் புலப்பட்டில. அக்காலத்து ஆடல்களும், படைப்புக்களும் வேறானவை. திருவேங்கட மலையைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் சாற்றப்படுகின்றன. அவையனைத்தினும் அக நானூற்றில் அமைந்துள்ளனவே அதிகம். அவையும் அம்மலை வருணனையும் அம்மலையை ஆண்ட அரசனின் ஆண்டகைமையினையும் பற்றி ஆக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, அம்மலையிலுள்ள கோயில்களையும் கடவுளையும் பற்றி ஒன்றுமே கூறிற்றில. ஆயினும், அகநானூற்றில் அழகிய அடிகள் சில,

"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்."

௫௦

என விளங்குகின்றன. திருவிழாக்களும், விழுமிய சிறப்புக்களும் உடைய வேங்கடம் எனவே, கோயிலொன்று அம்மலையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென ஊகித்தல் வேண்டும். இப் பெற்றித்தான ஊகங்களைக்கொண்டு அப்பழந்தமிழ்க்காலத்தில் பூசை முதலியனவற்றை மதிக்கவேண்டியிருக்கின்றதேயன்றி, வேறு தக்க சான்றோர்களின் சான்றுகள் ஒன்றனையும் காணேம். அதற்குப் பிற்பட்ட காலங்களில் சில பூசை முறைகள் சிலப்பதிகாரம் முதலியவற்றில் செப்பப்படுகின்றன. ஆனால், அவை இக்காலத்துள்ள முறைகளன்று. இவ்வடிவங்கொண்ட இக்கடவுளர்க்கு இம்மலரும், இத்தழையும், இந்நீரும், இவ்வள்ளமும், இம்முறையுமே பூசை செய்ய வேண்டுமென்பது இக்காலக் கட்டுப்பாடு. இக் கட்டுப்பாட்டைக் கடந்த அக்காலத்தில் பூசை முதலியன நடாத்தின வரலாற்றை எங்ஙனே எண்ணுவது!

"கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்"

எனக் கூவிளையையும் பூசைக்குகந்தது என ஓர் ஆழ்வார் பாடுவாரேயாயின் அவரை நாம்சைவர் என்பேமா? அங்ஙனமே திருத்துழாயும் ஆராதனைக் குரியது என்று பாடின நாயன்மாரை வைணவர் என்பேமா? வைணவக் கோயில்களில் வில்வ மரமும், சைவக் கோயில்களில் திருத்துழாய்ச் செடியும் இருந்தால், அவற்றை அவ்வக்கோயில்கள் அன்றென்பதா? எத்துணையோ சைவ வைணவக் கோயில்கள் பிரிந்து வலம் வரா வண்ணம் ஒரு படித்தாகவே அமைக்கப்பட்டிருக்கின்றனவே! திருத்தில்லையில் நடராஜ தரிசனமும் கோவிந்தராஜ தரிசனமும் ஓரிடத்திருந்தே கண்டு களிக்கும் பெற்றியாக அமைத்த பெரியோர்களின் திருவுள்ளம் என்னையோ? இவையனைத்தையும் கூர்ந்து நோக்கின் அக்காலம் பூசை முதலிய வழக்காறுகள் இக்காலத்துக் கூறப்படும் வரம்பிற்குட்பட் டிருக்கவில்லை என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. இவ்வாறான பரந்த வேறுபாடில்லாக் கொள்கையுடன் கூவிள்மும் அபிஷேகமும்

திருமலையில் ஆராதனை செய்யப்பட்டால் அக்கோயிலை வைண வக்கோயில் அன்றென்று எங்ஙனம் துணிந்து கூறலாம்?

ஆரியர் கொள்கை தமிழ்நாட்டில் ஆழ்ந்து பதிந்த பின்னர் தமிழர் கொள்கை வேறுபட்டதைப்போல் பூசை முதலியனவும் வேறுபட்டன. இதைப்பற்றித் தமிழ் நூலாராய்ந்த சான்றோர் களுக்குச் சான்று கூறவேண்டா. ஆரிய ஆசார அலைகள் தமிழ் நாட்டின் தண்ணிய எக்கர்களில் 'பாய்ந்து' வருங்காலத்தில், ஸ்ரீ இராமாநுஜருக்குத் தம் எண்ணங்களாம் வித்துக்களை விதைத்தல் மிக எளிதாயிற்று. அதுகாலை, ஆரியமுறைக் கேற்ப ஆராதனங்களும் பிறவும் திருவேங்கடத்தில் சீர்ப்படுத் தியிருப்பர். ஸ்ரீ இராமாநுஜர்—வைகாநச முறைப்படி பூசை முதலியன அமைத்த இராமாநுஜர்—எல்லா உரிமையையும் தம் கையில் கொண்டிருந்த இராமாநுஜர்—வில்வமும் அபிஷேகமும் தமக்கு உடன்பாடல்லாம லிருந்திருந்தால் அவற்றை மட்டும் மாற்றுதிருப்பரோ? குமரக் கடவுளின் திருவடிவத்தையே வேறுபடுத்தியமைத்த இராமாநுஜருக்கு அவ்வடிவத்தின் பக் கல் ஓர் பெண்வடிவத்தை யமைத்தற்கு ஆற்றலின்றோ? கபிலே ஸ்வரம் என்னும் கடிநகரையே கட்டழித்துப் புத்தப்புதிதாகக் கோவிந்தராஜ பட்டினம் கட்டுவித்த இராமாநுஜருக்குத் திருமலையில் அம்மன்சன்னிதி ஆக்குவித்தல் அருமையா? அன் றியும், ஒரு நகரத்தார் அனைவரையும் தம் சொல்வழிப் படுத் தும் தந்திரங்கற்ற இராமாநுஜருக்கு ஓர் உற்சவம் கற்பித்துத் திருச்சானூருக்குப் பெருமானை எழுந்தருளச் செய்தல் இய லாததா?

வடஇந்தியாவில் பல வைணவக் கோயில்களிலும் இங்குத் திருவரங்கம் திருநாராயணபுரம் முதலிய கோயில்களிலும், மூலவர்பக்கம் தாயார் விக்கிரகம் அமைக்கப்படாமல் இருக்கின் றன. இதனால் முன்காலம் தனித்த ஓர் கடவுள் விக்கிரகம் அமைக்கும் வழக்கமும் இருந்திருக்கலாம். நமது அன்பர் 'பாலாஜி' என்பதற்கு, சுப்பிரமணியன் என்று பொருள்கொள் கின்றார். நேரான பொருள் சுப்பிரமணியன் அன்று; இளங்

குமரன் என்பதாம். குமரன் என்னும் பெயர் இக்காலக் கடவுளரின் திருவடிவங்களை நோக்குழி, சுப்பிரமணியக் கடவுளையே செப்பும். குமரன் என்னும் பொருளைத்தரும் 'பாலாஜி' என்னும் மொழி உலகவழக்கொன்றிலேயே வழங்குதலின் அதனைப்பற்றி அதிகம் ஆராயவேண்டா. பேயாழ்வாரும் ஓரிடத்தில்,

"... ... ... வேங்கடமே—மேலை
இளங்குமரர் கோமான் இடம்"

எனத் திருவேங்கடத் தெம்பெருமானைக் குமரனாகவே வழிபடுகின்றார். மேலும்,

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் ணகர்."

என வேங்கடம், திருப்பாற்கடல் வைகுந்தம் திருக்கடிகை முதலியவற்றிலுள்ள பெருமாள்களை, இளங்குமரன் என்றே அகங்குழைந்து பாடுகின்றமையால், அப்பதிகளில் உள்ள கடவுளர் அனைவரும் இதுகாலை எண்ணப்படும் குமரக்கடவுளின் திருவடிவங்களேயாயின், திருவேங்கடத் தெம்பெருமானும் குமரக்கடவுளேயாம். உருவினும் திருவினும் கட்டிளங் குமரனாகவே காட்சிதந்த திருவேங்கடத் தெம்பெருமானைக் குமரனாகவே வணங்குகின்றார். யானும் அத்திருவுருவத்தை மனமொழி மெய்களாரக் குமரன் என்றே சிந்திக்கின்றேன்; செப்புகின்றேன்; வந்தனை செய்கின்றேன்.

திருப்புகழ்ப் பாடலைப் பற்றிய கடா விடைகளை யானொன்றும் கிளக்கவில்லை. என்னினும் அறிவினும், ஆற்றலினும் பெரியார் சைவத்திருவாளர் அரசன் சண்முகனார் சிவஞான முனிகள் கட்டுரைக்கு வரைந்த மறுப்பே இதற்கும் மறுப்பாக அமைந்துள்ளமையான், அதனை அங்ஙனமே எழுதுகின்றேன். சிவஞான சுவாமிகள் "தமிழ் நாட்டிற்குவடக்கட் பிறவெல்லையும் உளவாக 'வேங்கடத்தை எல்லையாகக் கூறினர், அகத்தியனார்க்குத் தமிழ்ச்செவி யறிவுறுத்தச் செந்தமிழ்ப் பா

மர்சிரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பு என்னும் இவைபு பற்றி'' என்பது. இதற்கு அரசன்சண் முகனார் "அது கருத் தாயின் அவர்தாமே இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்கட வுள் எனக் காஞ்சிப்புராணத்துட் கூறலான், அறுமுகக் கடவு ளுக்குத் தந்தையாகலானும், அகத்தியனார்க்குக் குரவராகலா னும், அக்கண்ணுதல் வரைப்பினுள் ஒன்றைக்கூறல்வேண்டும்; அற்றன்று. இருவரும் அபேதமாதல் கருதி அங்ஙனம் கூறி னாரெனில், தெற்கின் கண்ணும் அறுமுகக் கடவுள் வரைப்பி னுள் ஒன்றே கூறல் வேண்டும்; அங்ஙனம் அன்மையானும், எல்லை கூறல் யாவர்க்கும் ஒப்பமுடிந்ததாதல்வேண்டுமாகலின், 'வீங்குநீர்..........வண்ணமும்' என இளங்கோவடிகள் கூறி ன்மையும், திருமுருகாற்றுப் படையுள் முருகோன்மலை எனப் பரங்குன்று முதலாய பிற கூறலன்றி, வேங்கடத்தை அவன் மலையென நக்கீரனார் கூறுமையும், புராணங்களுள் பல நெடி யோன் குன்றமெனவே கூறலும் ஆராயின், வேங்கடம் அறு முகக் கடவுள் மலையாம் என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடி யாமை பெறப்படலானும், பிற்காலத்தார் சில வேறு கூறின் அது பிரமாணம் ஆகாமையானும், முருகன் குறிஞ்சி நிலத் துத் தெய்வம் ஆகலின் அமையும் எனில், கைலாயத்தையும் மேருவையும் கண்ணுதல் மலை எனவும், பொதியிலை அகத்தி யன் மலை எனவும் கூறலன்றி, அவன் மலை எனக் கூறலின்மை யானும், அவ்வாறே வேங்கடமும் நெடியோன் மலை ஆதல் அன்றி அறுமுகக் கடவுள் வரைப்பு எனல் கூடாமையானும், அது பொருந்தாது.'' எனச்சண்முகனார் திருவடிகளில் அன்பு சான்ற சண்முகனாரே திருவேங்கடத்தைச் சண்முகனார் வரைப்பு அன்றெனச் சாற்றுவாராயின் இனி வேறு சான்றும் வேண்டுமோ? வேண்டின் "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி, உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும், எல்லாரானும் அறியப்படுதலினாலும், வேங்கடத்தை எல்லையா கக் கூறினார்.'' என உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க் கினி யரே நடுநின்று நற்சான்று நவில்வாராயின் வேறு சான்றுகள் வேண்டுமோ? வேண்டா; வேண்டா.

ஸ்ரீ இராமாநுஜர் காலம், சுங்கந்தவிர்த்த குலோத்துங்க சோழன் என்னும் அநபாய சோழன் காலம்; கி. பி. ௧0௭0-௧௧௧அ-கூ ஆகும். திருப்புகழ் பாடிய அருணகிரியார் காலமோ இற்றைக்கு ௪௫0-வருடங்களுக்கு முந்தியதாகும். ௪௫0 வருடங்களுக்கு முன்னிருந்த அருணகிரியார் அ00 வருடங்களுக்கு முன்னிருந்த இராமாநுஜரால் திருத்தி யமைக்கப்பட்ட குமரக் கடவுளைப் பற்றிப் பாடுவதெங்ஙனம்? தம் காலத்துள்ளனவற்றைப் பாடுவதன்றோ இன்னோரின் இயல்பு. கர்ன பரம்பரை ஒன்றனையே தழுவிக் கட்டுரை வரைந்த துடிசைகிழார் பல வினுக்களை எழுப்பி விடையில்லையே என்று தம் கட்சியைத் துணிந் துரைத்தனர். இவ்வாருன வினுக்களன்றோ எழுப்பல் வேண்டும்? விடையிறுக்கவேண்டும். காலங்கணிக்கும் கணக்காயரே கட்டுரையினை யாராய்வாராக.

வட ஆற்காடு மேன்யூவில் திருப்பதி குமாரசாமிமலை என எழுதப்பட்டிருக்கின்றது. இருக்க. திருவேங்கடப்பெருமாள் கோயிலின் உ-வது பிரகாரத்தின் வடக்குச் சுவரில் திருவேங்கடம் ஸ்ரீ வைஷ்ணவக் கோயிலென்றும், அக்கோயில் எம்பெருமானுக்குப் பல இறையிலி நிலங்களும், பொன்களும் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் செதுக்கப்பட்டுள்ளது. இச்சாசனம் இராஜராஜ சோழன் காலத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டில் எது உண்மை? கல்சாசனம் உறுதியா? காகிதச் சாசனம் உறுதியா? ௧000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் செதுக்கிய சிலாசாசனத்தைத் தெளிவதா? ௫0 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஏட்டுச்சாசனத்தைத் தெளிவதா? ஆன்றோர்களே ஆராய்க.

இதுகாறும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள பெருமாளைப் பற்றிப் பெரிதும் பேசிய ஆராய்ச்சியாளர் ஒருவரும் அப்பெருமானின் திருவடிவத்தைப் பற்றி ஒன்றுமே சிந்தித்தாரில்லை. சங்க நூற்கள் சாலவும் அம்மலையையே அழகுபட வருணித்தன. ஆழ்வார் பாசுரங்கள் அனைத்தும் திருவேங்கடத் தெம்பெருமானை ஸ்ரீமந் நாராயணன் என்று தெளிந்து போற்

றுகின்றனவேயன்றி, அவ் வெம்பெருமான் திருவடிவத்தைப் பற்றி ஒன்றுமே செப்பிற்றில. பிற்காலத் தாசாரியரும், புராணத்தாரும் அவ்வெம்பெருமான் திருவடிவத்தைப் பற்றி ஒரு வகை இலக்கணம் இயம்புகின்றனர். அவையனைத்தும் ஸ்ரீ இராமாநுஜர் காலத்திற்கு பிற்பட்டமையும், ஒருதலைப் பட்சமும் ஆயினமையின், அவ்வாட்சிகள் வீழ்ச்சிகளேயாம். மற்றும் வேண்டுமென்றே விளம்பின புராணப் பொய்களை யாவரே புலங்கொள்வர். சைவசமயத்திலும் அருணகிரியாரைத் தவிர மற்றை நாயன்மாரும் பிறரும் திருவேங்கட மலையைப்பற்றி ஒன்றுமே நவின்றிலர். கர்ன பரம்பரைக் கதைகளும் ஒலி வடிவத்தைப் பற்றி உரைப்பூசல் நிகழ்த்தினவேயன்றி வரி வடிவத்தைப் பற்றி வாளாபோயின. சாதத்தைக் குறிக்கொண்டெழுந்த சாசனங்களும் கோயிலின் பெயரைச்சொல்லி மண்ணும் கல்லும் வழங்கியதாக மகிழ்கின்றனவே யன்றி, திருவடிவத்தைப் பற்றிச் செப்பத் தியக்கமுற்றன. ஆகையால், திருவேங்கடத் தெம்பெருமான் திருவடிவம் என்னே என்று சிந்திப்பது; தெளிவது. இங்ஙனம் கண்ணும் கருத்துங் கழன்று என்செய்வேம் என்று ஏக்கமுறுகையில் அவ் வெம்பெருமான் திருவடிவத்தின் சிலம் பொலிகள் செவியுற்றன. சித்தம்புகுந்து தித்திக்கும் அச்சிலம் பொலிகளைச் சிந்திக்கும் பொழுது அச்சிலம்பு அதிகாரத்துடன்.

"வீங்கு நீரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைத் தடக்கையி னேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ வாடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்."

எனச்செப்புகின்றது. இளங்கோவடிகள் இசைத்த இளங்கும

ச்ன் திருவண்ணம் இஃதேயாம். இளங்கோவடிகள் இயம்பிய திருவுருவமும், ஸ்ரீ இராமாநுஜர் வேறு படுத்தியதாகச் சிதம்பரனார் செப்பும் திருவுருவமும் ஒன்றே. அவ்வுருவத்தைச் சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர், வேறுபடுத்தி பிருப்பி னன்றோ ஸ்ரீ இராமாநுஜர் காலத்தில் மாற்றியமைத்தல் வேண்டும். அங்ஙனம் மாற்றியதாக எவ்வகை ஆதாரமும் இல்லையே, இல்லை. ஆகையால் ஸ்ரீ இராமாநுஜர் வேறுபடுத்தியதாகப் பெரும்பழியை ஆசாரிய சுவாமிகள் பேரில் சுமத்துவதினால் பயனென்னேயோ? அன்று இளங்கோவடிகளாலும், இன்று நம்மாலும் கண்கூடாகக் காணப்படும் திருவண்ணம், ஒருவண்ணமாகவே காணப்படுகின்றது. இளங்கோவடிகள் இசைத்த எமதுளங்கொண்ட எம்பெருமான் திருவடிவத்தைக் குமரன் என்றே கூறுக; கண்ணன் என்றே கழறுக; ஸ்ரீராமன் என்றே செப்புக; பிறிது எப்பெயரானும் பேசுக.

ஆயினும், அத்திருவுருவத்தின் திருநாமம் இளங்கோவடிகள் நெடியோன் என நுவல்கின்றனர்; சிதம்பரனார் சுப்பிரமணியன் எனச் செப்புகின்றனர். அத்திருவுருவத்தைப் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் நோக்கலுறின், நெடியோன் என்பதும் நேரும்; சுப்பிரமணியன் என்பதும் சிறக்கும். தம ருகந்த பெயரே தம் பெயராகக் கொண்டுள்ள திருவேங்கடத் தெம்பெருமானை வாழ்த்துவோமாக; வாழ்வோமாக.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவில்லா அடிமை செய்யவேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே.

தென்னிந்தியா சரித்திர ஆதாரங்கள்.

———o———

(தி. நா. சுப்பிரமணியம்.)

மேனாளில் சரித்திரம் என்பது 'யாவரும் ஒத்துக்கொண்ட கதை' என எண்ணப்பட்டு வந்தது. ஆனால் நமது நாகரிகம் விருத்தியடைய அடைய அவ்வெண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. சமீபகாலத்தில் ஓராசிரியர் வானத்திற் பறக்கும் பறவையின் கண்ணுக்கு மட்டும் ஒரே மலைத் தொடரின் பாகங்கள் என்றும், கடலிலேயே திரியும் மானுமிக்கு அங்ஙனம் தோற்றாது தனித்தனித் தீவுகள் என்றும் தோற்றக் கூடியவிதமாகக் கடலினின்றும் வெளிப்போந்து காணப்படும் எரிமலைச் சிகரங்களாலாகிய தீவுகளுக்கு உவமித்துக் கூறினர். வானத்து இருந்து பருந்தைப்போல் கூரிய பார்வையைக்கொண்டு பார்த்தாலும் நமது இந்திய சரித்திரத் தீவுகளில் ஒரு சிலவே காணப்படும். அப்படித் தோன்றுவதும் வெகுதூரத்தில் மிக மங்கலாகக் காணப்படும். வர்ணக்காரன் மைதீட்டி உடனே அழித்த ஓர் ஓவியத்தை ஒக்கும்.

நமது இந்துதேசச் சரித்திரம் உலகத்திலுள்ள பல அறிஞர்களது உள்ளத்தைக் கவர்ந்து வந்திருக்கின்றது. ஆனாலோ, அதன் வல்லமையும் ஆயுதக்கூர்மையும் இந்திய வீரரிடம் மழுங்கிப்போகின்றது. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி பி கஅளஎகூ) அதாவது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே ஆங்கில நாட்டில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இந்தியநாட்டுச் சரித்திரத்திற்கெனத் தனிப்பாடம் ஒன்று ஏற்படவேண்டும் என்னும் பிரஸ்தாபம் நடந்திருக்கிறது. அன்றி, இதுகாறும் நமது நாட்டுச் சரித்திரத்திற்காகப் பாடுபட்டவர்களைக் கணக்கிட்டால் முக்காற்பங்கு ஐரோப்பியர் ஆகின்றனர். இன்றும், பலர் பல இடங்களில் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இந்துதேசச் சரித்திர ஆராய்ச்சியையே முக்கியமாகவுடைய 'ராயல் ஏஷ்யாடிக் ஸொஸைட்டி' (Royal Asiatic Society of Great

Britain and Ireland) என்னும் சங்கம் லண்டன் மாநகரத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு நூற்றாண்டு விழாவை விமரிசையாக நடத்தியதை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். அப்பொழுதும் நாம் வெட்கமடையவில்லை. 'பிறரால் வழிகாட்டப்பட்டே இந்தியர் முன்னேறுவர்' எனப் பலராற் கூறப்படும் இழி சொல்லிற்கு இலக்கு ஆகாமல் இனி மேன்மையுடையக் குமரனைப் பிரார்த்திக்கின்றோம்.

நந்தேசச் சரித்திரத்தை ஒருங்கு சேர்த்து எழுதுவதற்கு அநேக இடர்ப்பாடுகள் உண்டு. அதற்கு உரிய ஆதாரங்கள் கிடையா. ஆராய்ச்சியாளர் இருந்தாலன்றோ ஆதாரங்கள் கிடைக்கும்? கொஞ்சகாலமாக இவ்வுணர்ச்சி வடநாட்டிற் பெரிதும் உண்டாகிவருகின்றது. ஒரு பண்டார்கர், ஒரு ஜயஸ்வால், ஒரு பானர்ஜி அல்லது ஒரு மஜூம்தார் தமிழ்நாட்டிற்கும் உண்டானால் தமிழ்நாட்டுச் சரிதமும் விரைவில் ஒழுங்காகும். இதற்காக உழைத்த நம் நாட்டு ஆசிரியர்களையும் அயல்நாட்டுப் பெரியார்களையும் நாம் மறக்கலாகாது.

உள்ளதைக் கொண்டு ஆராய்வோமாயின் தென்னாட்டுச் சரித்திர ஆதாரங்களை (க) இலக்கியம் (உ) ஞாபகச்சின்னங்கள் (சாஸனங்களும் நாணயங்களும் இவ்வகுப்பிற்சேரும்) (ந) பிறநாட்டு இலக்கியம் என மூன்று வகுப்புகளாகப் பிரிக்கலாம்.

I. இலக்கியம்.

இத்தலையங்கத்தையும் நாம் பொது சிறப்பு என இரு கூறாகப் பிரிக்கலாம். அதாவது நாட்டுச் சரித்திரத்தைக் கூற வேண்டும் என்னும் எண்ணமில்லாமல் எழுதப்பட்டுச் சரித்திரக்குறிப்புகள் அடங்கிய நூல்களும் சரித்திர நூல்களும் ஆம். இவற்றுள் முன்னதில் சிற்சில இடங்களில் சரித்திரசம்பந்தமான செய்திகள் கூறப்பட்டிருக்கும். எழுதியோர்க்குச் சரித்திர நோக்கம் இல்லாததால் பல தவறுகள் காணப்படலாம். ஆதலின், கூறப்பட்டிருப்பனவற்றுள் எவை சரித்திர சம்பந்தமுடையவை என்பதையும் அவற்றை நாட்டுச் சரித்திரத்துள் எம்மட்டில் உபயோகப்படுத்தலாம் என்பதையும் நாம் ஆராய

வேண்டும். அன்றி, ஒரு நூலுட் கூறப்பட்டிருப்பதை நாட்டுச் சரித்திரத்திரத்துள் எவ்விடத்தில் உபயோகப்படுத்த வேண்டும் என்பதை யறிய அந்நூலின் காலத்தை அறிய வேண்டுவது அவசியம். நமது நாட்டுப் புலவர்களும் நூல்கள் எழுதிவைத்த காலத்தைக்குறித்து வைத்ததில்லை. நூல்களின் காலமோ நாட்டுச் சரிதத்தைக்கொண்டே நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கின்றது. இவ்விதம் ஒன்றையொன்று தாங்கி நிற்கின்றன.

சிறப்பிலக்கியம் என்பது சரித்திரத்தையே கூறுமுகத்தான் ஆகிய நூல்களாகும். சீனு முதலிய மற்றைய நாடுகளுக்கு உள்ளதைப்போல இது இந்தியாவிற்குக் கிடையாது எனவே கூறலாம். அப்படிக் காணப்படுவதிலும் பொய்யும் புனைசுருட்டும் கலந்திருக்கின்றன. இவ்வகை இலக்கியத்திற்குத் தகுந்த உதாரணம் தமிழில் உள்ள கொங்குதேச ராஜாக்களும் பாலியில் உள்ள மகாவம்ச தீப வம்சாதி நூல்களுமே.

இந்நிலையில் நாம் செய்யவேண்டுவது ஒன்று: அதாவது இலக்கியச்சரித்திரம் ஒன்று வெளிவரல்வேண்டும். அதை ஒழுங்காக எழுத எவரும் முன்வந்தாரில்லை. அன்றி, வெளிவந்த ஒரு சில புத்தகங்களோ, மேலே குறிக்கப்பட்டிருக்கும் பெயருக்கும் உள்ளே எழுதப்பட்டிருப்பதற்கும் பொருளுக்கும் சம்பந்தமில்லாதவாறு இருக்கின்றன. ஆனல் சென்றவருஷத்தில் தஞ்சை ஸ்ரீமாந் ராவ்பகதூர் கி. ஸ்ரீ. ஸ்ரீனிவாஸபிள்ளையவர்களால் வெளியிடப்பட்ட 'தமிழ்வரலாறு' அவ்வாறுஇன்றி பெயர்க்குத்தகுந்த பொருத்த முடையதாக இருக்கின்றது. அப்புத்தகத்தில் ஒரு பகுதியே வெளிவந்துள்ளது. மற்றொரு பகுதி பாக்கியிருக்கிறது. எழுதிவைத்திருந்தகுறிப்புகள் கள்வுபோய் விட்டமையாலும், வயது முதிர்ச்சியால் தானே ஒன்றையும் செய்யச்சக்தியில்லாமையாலும், அதை நிறுத்திவிட்டார் என அறிய மிகவும் விசனப்படுகிறோம். தன்னலம் கருதாது தனது எழுபதாம் ஆண்டுக்குப் பிறகு தமிழில் உழைத்து எழுதற்கரிய புத்தகத்தை வெளியிட்டார் வேறுஎவரையும் அறியோம்.

II. ஞாபகச் சின்னங்கள்.

இஃதும் கட்டிடங்கள், சாஸனங்கள், நாணயங்கள் என மூன்றாகப் பகுக்கப்படும்.

கட்டிடங்கள்:—இது அநேகமாகக் கோயில்களையும்ஒரோவிடத்து ஞாபகச் சின்னங்களாகக் கட்டுவித்த குளம், கிணறு, மண்டபம்போன்றவற்றையும் குறிக்கும். அவற்றை முறையாக ஆராய்ந்தால் அக்கால மாந்தரது வழக்க ஒழுக்கங்களும் மத சாஸ்திரீய அறிவு முதலியனவும் நன்கு வெளிவரும். அவை கட்டப்பட்டிருக்கும் முறை முதலியவற்றைக் கொண்டு பிற நாட்டாரது ஆதிக்கம் எம்மட்டில் நம் நாட்டை மாறுபடுத்தியது என்பதை உணரலாம். அன்றி ஓர்நாடு சமாதானநிலையிலிருந்ததா அல்லது சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டிருந்ததா என்பதை அக்காலத்திய கட்டிடங்களையும் நூல்களின் அறிவு நுட்பத்தையும் கொண்டு கூறிவிடலாகும் எனச் சிலர் எண்ணுகிறார்கள். மேற்கூறிய விதமாகக் கட்டிடங்களை யாராய்வது அவற்றை நேருக்குநேரே பார்த்தாலன்றி ஆகாது. ஆதலின்.(க) அக்கட்டிடங்கள் நன்கு பாதுகாக்கப்படவேண்டும். மண்ணுள் புதைந்து கிடக்கும் கட்டிடங்களைத் தோண்டி யெடுத்துச் சீர்திருத்தவேண்டும். இவையெல்லாம் நம்மாற்கூடி யதல்ல. பெரிய சங்கங்களையும் அரசாங்கத்தையுமே பொறுத்ததாகும். (உ) அவற்றை நன்றாக ஆராயவேண்டும். இதைத் தனவந்தர்கள் மேற்கொள்ளலாம். இவ்வாராய்ச்சி நம்மவர்க்குள் விருத்தியடையவில்லை. காலஞ்சென்ற து. அ. கோபிநாத ராயர் அவர்களது 'இந்து விக்கிரக சாஸ்திரம்' (Hindu Iconography) கங்கோலி என்பார் எழுதிய தென்னிந்திய வெண்கலச்சிலைகள் (South Indian Bronzes by Gangooly) என்னும் ஆங்கில நூல்களும் டாக்டர் G. ழுவோ-துப்ரே என்பார் எழுதிய 'தென்னிந்தியசிற்ப விக்கிரக சாஸ்திரங்கள்' (Archeologie du Sud de l' Inds, Tome I Architecture et Tome II. Iconographic par Prof G. Jouveau-Dubreuil) என்னும் பிரெஞ்சு நூலுமே நாம் இங்கே குறிப்பிடத்தக்கன.

சாஸனங்கள்:—இந்நாட்டில் வேண்டிய அளவு இருக்கின்றன. கி. பி. ௬00-க்குப் பிறகு நமது நாட்டுச் சரித்திரத்திற்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளன இவையே. அதற்கு முற்பட்ட காலத்தனவாக உள்ள சாஸனங்களை நாம் விரல்களைக் கொண்டே எண்ணிவிடலாம். நமது நாட்டுச் சரித்திரத்தை ஒழுங்காக எழுதவேண்டுமாயின் நாம் முக்கியமாகச் சாஸனங்களையே ஆராயவேண்டும். அவற்றுள் ஒரு சிறிய மாடுபிடிச் சண்டையில் விழுந்த ஒரு வீரனது புகழ்ச்சிமுதல் மகாயுத்த சமாதானம் ஈறாக எவ்வையும் கூறப்பட்டிருக்கும். ஒரு சாஸனம் பிராமணர்களுக்கோ அல்லது ஒரு கோயிலுக்கோ செய்யப்பட்ட தானத்தைக் குறித்ததாகயிருந்தாலோ, அதில் நாட்டில் உள்ள அரசாங்கமுறை விரிவாகக் கூறப்பட்டிருக்கும். அவற்றில் காலமும் ஒருவாறு காணப்படும். அன்றி, எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டும் நாம் காலத்தை ஆராயக்கூடும். அங்ஙனம் ஆராய அச்சாஸனங்கள் உருவப்படங்களுடன் தெளிவாகப் பதிப்பிக்கப்படல் வேண்டும். அவ்விதமான புத்தகம் தமிழில் கிடையாது. ஆங்கிலத்திலும் சோழர் பல்லவர் ஆகிய இரு வமிசங்களுக்கு மட்டுமே சிறிது வெளிவந்திருக்கின்றன. தமிழ் நாட்டார் உபயோகத்திற்காக என் நண்பர் ஒருவர் முக்கிய சாஸனங்களையெல்லாம் ஒரு சிறிய முகவுரையுடனும் சமஸ்கிருத பாகத்திற்கு மொழி பெயர்ப்புடனும் வெளியிடுவதற்குப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கு முன்பாகச் செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. தென்னிந்திய சாஸனங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு அட்டவணை எடுக்கவேண்டும். அதனால் மிகுந்த உபயோகம் உண்டு. உதாரணமாக, இந்தியாவிலுள்ள 'பிராமி' என்னும் எழுத்துக்களால் ஆகிய சாஸனங்களுள் கி. பி. ௪00 வரை உள்ளவற்றிற்கு 'லூடர்' என்னும் ஜெர்மானிய ஆசிரியர் ஒருவர் ஆங்கிலத்தில் ஒரு அட்டவணை செய்திருக்கிறார். (List of Brahmi Inscriptions of Northen India upto A. D. 400 by Dr Luder). அதில் ஒரு சாஸனம் இன்னரால் இன்ன வருஷத்தில் கண்டு பிடிக்கப்பட்டது; அதற்குப் பிறகு எவ்வ

ளவு தடவை எவ்வெவரால் பதிக்கப்பட்டிருக்கிறது; அதன் காலம் முதலியவற்றைப்பற்றி ஆசிரியர்கள் எங்ஙனம் அபிப்பிராயப்படுகின்றனர் என்பன கூறப்பட்டிருக்கும். நமக்கும் அவ்விதம் ஒன்று வேண்டும்.

நாணயங்கள்:—மேற்கூறப்பட்ட இரண்டைப் போலில்லாமல், பிறரது பொருளுதவியை நாடாமல், ஒருவர் செய்யக்கூடியது நாணய ஆராய்ச்சியே. இதுவரையிலும் அவ்விதமே நடந்துவந்திருக்கிறது. மேற் கூறிய விதமாக இதற்கும் ஒரு அட்டவணை வேண்டும். இவ்வாராய்ச்சியே சாஸனங்களாலும் இலக்கியங்களாலும் புறக்கணிக்கப்பட்ட பாகங்களுக்கு உதவி புரிவது.

III. பிறநாட்டு இலக்கியம்.

இந்தியாவின் பண்டைச் சரித்திரத்திற்கு மிக உதவியாக இருப்பது இதுவே. மற்றைய நாடுகளைப் போலல்லாமல், இந்தியாவிற்கு இது கொஞ்சம் மிகுதியாகவே இருக்கிறது. தென்னிந்தியாவும் தன் பங்கை இழக்கவில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் மகத நாட்டுப் பேரவையில் வந்துவதிந்த மெகஸ்தனீஸ் என்னும் யவனர் முதன் முதல் தென்னாட்டைப் பற்றிக் கூறியுள்ளார். பின்னர், யவன நாட்டு ஆசிரியர்களான பிளினி (Pliny) டாலிமி (Ptolemy) பெரிபிளஸ் என்னும் பெயர் தெரியா ஆசிரியர் (Periplus of the Erytherian Sea) முதலானோரும், சீனயாத்திரிகர்களான (Fa-hien) பாஹியான், ஹ்யூங்-த் ஸாங், (Hieuen Thsang) என்பாரும் விவரமாகக் கூறி இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அப்துர் ரஸக் (Abdur-Razak) இபன்-பதோஹ் (IbnBatuth) என்னும் மகம்மதியர்களும் நிகாலோ-டீ-கொண்டீ (Nicolo-dei-Conti) நுனிஸ் (Nuniz) பீஸ் (Paes) முதலிய ஐரோப்பியர்களும் தென்னாட்டைப் பற்றி எழுதுகிறார்கள். ஆனால் இவை தொடர்ச்சியற்று நடு நடுவே உதவி புரிவனவாகும். இவை ஒழுங்காக ஆராயப்பட்டுத் தமிழில் நல்ல மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட வேண்டும். இவை தமிழில் இல்லாது இருப்

மீது ஒரு பெருங் குறையே. எனினும் யவன ஆசிரியர்கள் தமிழ் நாட்டைப்பற்றிக் கூறுவதைத் "தமிழ் நாடும் யவனரும்" என்னும் பெயரிய வியாசம் ஒன்றில் விளக்குவோம்.

சர்வம் சக்திமயம்.

(ஸ்ரீமத் பிரபோதசைதந்யர்.)

சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையாரின் முன்னிலையில் நவராத்திரி நான்காம் நாளிரவு புரிந்த விரிவுரையின் சுருக்கம்;—

கீழ்த் திசைக் கடலினுதித்த சூரியதேவன் நண்பகற் காலத்தில் வான மண்டலத்தி னுச்சிநிலையத்தை யடைந்து, சிறிது சிறிதாகக் கீழிறங்கி மாலை வந்தெய்து முன் மேற்றிசைக் கடலினுள் மறைகின்றான். தினந்தோறும் நடந்து வருகிற இச்செயல் நமது உயிர் வாழ்க்கையைப் பெரிதும் ஒத்திருக்கிறது. மானிடருடைய உயிர் வாழ்க்கையிலும் காலைப் பொழுதுண்டு, நண்பகலுண்டு, அஸ்தமன காலமுமுண்டு. பிரபஞ்சத்தோற்றமனைத்தினையும் ஒருங்கு வைத்து நோக்குவோமாயின் சராசரப் பொருட்களனைத்தினுக்கும் ஏற்பட்ட பாலகுமார விருத்தப் பருவம் உண்டென அறிவோம். தேவரும், மக்களும், விலங்கினமும், செடி, கொடி, மலர் என்றின்னவும், மானும், மலையும் நதியும், நக்ஷத்திரக் கூட்டங்களும் சூரிய, சந்திரரும் என்றின்னவாறாக எங் கண்முன் தோற்றுகிற இப்பிரபஞ்சம் என்றும் இப்பரிசேயமைந்துள்ளதா? அன்றேல் இது ஒரு காலத்திற்றோற்றிப் பின்னொரு காலத்திலழிந்து விடுவதா? குடிசனம் நெருங்கிய நகரங்கள் பாழடைந்து பாலை வனாந்திரமாவதும், பாலைவனாந்திரஞ் சீருஞ்சிறப்புமெய்திய திருநகரமாவதும் சில நூற்றாண்டு எல்லையினுள் ஏற்படக் கூடிய மாறுதலாயின் கால சக்கிரத்தினுள்ளே அளவின்றியமைந்து கிடக்கிற பன்னூறாயிரம் யுகங்களில் ஏற்படக் கூடிய

மாறுதல்களை மனத்தினாற்சிந்திக்கவும்படுமோ? பண்டு சிறப்புற்றிருந்த பாபிலோனிய மெங்கே? பார்வொன் குலத்தோர் அரசுபுரிந்த எகிப்து ராஜ்ஜியமெங்கே? ஆழிவேந்தனாகி உலகினையாளுவேனென்று அடல் கூறிநின்ற அலெக்சாண்டர் மன்னனெங்கே? அம்மன்னனது சேனைகளை வென்று பரதக் கண்டத்தை விடுவித்த சந்திரகுப்த னென்னுஞ் சார்வபௌமனெங்கே? கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பனெங்கே? கங்கைப் பேர்யாற்றுக் கரைகொண்ட செங்குட்டுவ னெங்கே? இன்னோர் இருந்தார், பின்னர் இறந்தார் எனக்கேட்டுச் சிந்தைநொந்து பெருமூச்செறிகிற நம்முடைய வாழ்க்கைதான் எத்தன்மையது? எமக்கு முன் எத்தனை சந்ததியாரிருந்தார்? இன்னும் எத்தனை சந்ததியாரிருக்கப் போகின்றார்? தேவர் மக்கள் விலங்கு முதலிய உயிர்த்தோற்றங்களனைத்து மழிந்து போகுமியல்பினவாம். நமக்கு ஒளியையும் வெப்பத்தையும் தருகிற சூரியன் பெரியதொரு அக்கினிக் கோளம் என விஞ்ஞான நூல் வாயிலாக அறிவோம். இவ்வக்கினிக் கோளம் குளிர்ந்துகொண்டே போகிறது. ஒரு காலத்தில் நெய்யற்ற விளக்குச் சுடர்போலச் சூரியகோளம் அணைந்துபோம். சந்திரனும் உடுக்கூட்டங்களும் ஒளியற்றுப்போக யாண்டும் பேரிருள் கவியும். உலகத்தோற்ற மனைத்தும் ஒழிந்துபோகிற அக்காலம் சர்வசம்ஹார காலமெனப்படும். ஒருவர் இவ்வுலக வாழ்வை யொருவி மாணிக்குங் காலத்தில் அவருயிரைக்காலன் கவர்ந்துகொண்டா னென்கின்றோம். இக்காலன் நித்தியத்துவ முடையவனோ வென்றால், இல்லை. அவனும் அழிந்துபோகு மியல்பினனே. காலனுடைய உயிரையுங் கவருகின்ற மகா சக்தி யெதுவோஎன வினவுவோமாயின், மகாகாளி எனவும், ஆத்யகாளி யெனவும் வேதங்களால் துதிக்கப்படுகிற சர்வசம்ஹார உருத்திராயணியே அம்மகாசக்தி யென்போம்.

வாக்குமனாதீத கோசரமாகிய ஒரு பரம்பொருள் உண்டென வேதங்கள் கூறுகின்றன. அப்பரம் பொருளினை நாம் அறிதல் கூடுமோவெனின், அறிதல் கூடாது. உரையினாலும் மனத்தினாலு மளத்தலே யறிதலாதலால், அறிதற்குரிய பொ

ருள் உரை மனம் இரண்டினுக்கும் உட்பட்டு நிற்றல்வேண்டும்; ஆதலினால் உரைமன மிறந்துநின்ற பரம்பொருளை யாம் எங்ஙனம் அறிதல்கூடும்? அங்ஙனமாயினும் வேதங்க ளப்பரம்பொருளை அநந்த கல்யாண குணமுடையோன் எனப் போற்றித் துதிக்கின்றன. குணியாகிய பரம்பொருள் உரைமன மிறந்து நின்று எம்மால் அறியப்படாத தொன்றாயினும் அப்பரம் பொருளின் குணங்க ளெம்மா லறியப்படுந் தகையன. சத்தனாகிய உருத்திரனை நாம் அறியோம்; சத்தியாகிய உருத்திராயணியை நாம் அறியவல்லோம். தினமும் மாலைக்காலச் சந்திப்பொழுதில், பகற்காலம் அகன்று இரவு வந்து எய்தும் எல்லையிலே, வேதநூல் வல்ல அந்தணர்கள் உருத்திராயணியைத் துதிப்பார்கள். பகல் முழுதும் தொழில்செய்து கொண்டிருந்த உயிர்க்கூட்டங்கள் தாஞ்செய்த தொழிலினின்று நீங்கி யடங்குகின்ற மாலைக்காலம் சர்வசம்ஹார காலத்தை நிகர்த்திருக்கின்ற தன்றோ? உலகினை மூடுகிற இருட்படலம் சர்வசம்ஹார காலத்தில் சூரிய சந்திர நக்ஷத்திரங்க ளனைத்தும் ஒழிந்து போகப் பிரபஞ்சமனைத்தினுங் கவிந்துநின்ற பேரிருளை நிகர்க்குமன்றோ? ஞானக்காட்சியினாலே இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களையு முணர்ந்த முதன்மையோர், சர்வசம்ஹார காலத்திலே தோற்றுகிற மகாசக்தியாகிய ஆத்யகாளியைக் கரிய நிறத்தோடும் கையிற் கத்தியோடும், பிரமசிரங்களாலமைந்த மாலையோடும், ஸ்மசான பூமியிலே தோற்றுவதாகத் தியானிப்பார். ஸ்மசானம் பரிசுத்தபூமி. உயர்ந்தோர், தாழ்ந்தோர், இளையோர், முதியோர், செல்வர், வறிஞர், பண்டிதர், பாமரர் என்றின்னோரன்ன வேறுபாடுகளை யகற்றிவிட்டு அனைவரும் ஒரு தன்மையராய் ஈற்றில் வந்தடைகின்ற இடமிதுவன்றோ? மகாஸ்மசானம் என அறிஞராற் றுதிக்கப்படுகிற ஸ்ரீகாசித் திருத்தலத்திலே மணிகர்ணிகையின் சமீபத்திலே யமைந்திருக்கிற ஸ்மசானத்தை ஒரு முறை கண்ணினாற் கண்டவர்கள் பந்தங்களனைத்தினும் நின்று நீங்கப்பெற்று ஞானத்தை யடைவார்களென்பது சத்தியம். மன்னர் மண்டலீகரும் அவரால் அற்பமென்று கருதப்படுகிற ஏழைகளும் ஈற்றில்

ஒரே தன்மையராகி வெந்து ஒருபிடி சாம்பராய்விடுவார் என்பதைத் தினமுஞ் சிந்தித்து வருவோமாயின் அகங்காரத்துக்கு இடமெங்கே? காமக்களியாட்டுக்கு இடமெங்கே? துன்பப்படுவோருக்குக் கொடுத்துதவாது பணத்தைப் புதைத்து வைக்கிற லோபத்துக்கு இடமெங்கே? பிறரைக் கெடுக்கவெண்ணுகிற குரோதத்துக்கு இடமெங்கே? ஆதலால் உட்பகை யாறையுங் கடந்து உண்மையை யடைய விரும்புவோமாயின், மகாஸ்மாசனத்தை மனத்தினுற் சிந்திப்போமாக. பிரபஞ்சமனைத்தும் ஒழிந்து போகின்ற சர்வசம்ஹார காலத்திலே அனைத்துயிர்க் கூட்டங்களும் அழிந்துகிடக்கின்ற பெருவெளியனைத்தும் பெரியதொரு ஸ்மசானமாகும். மயக்கத்துக்கு இடமாயிருக்கிற கல்வி, செல்வம் என்பவும், இவைகாரணமாகத் தோற்றுகிற பலவகை வேறுபாடுகளாலமைந்த பிரபஞ்சமும் ஒழிந்த நிலையில் உண்மைஞானம் உதிக்குமாதலின் ஞானத்தை விரும்பிய மேலோர் சங்கார கருத்தனாகிய பரம்பொருளோடு அந்நியோந்நியமாய் நின்ற சங்காரகாரணியாகிய உருத்திராயணியைத் தோத்திரம் பண்ணுவர். உருத்திரன் உருத்திராயணியென்ற பெயர் கேட்டவுடனே மக்களாகிய நாம் சிறு மதியினாலே யாராயாது கொள்ளுகிற தப்பெண்ணம் ஒன்றுண்டு. உருத்திரன் ஒரு ஆண்பிள்ளை; உருத்திராயணி ஒரு பெண்பிள்ளை; அவர்களிருவரும் உலகத்தாரைப் போலக் கலியாண முடித்துப் பிள்ளைகுட்டி பெற்றுப்பொருள்தேடி வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைப்பது பெருந்தவறு. ஆயினும் அப்படி நினைப்பது எமக்கு இயல்புதான். மனிதராகிய நாம் கடவுளைப்பற்றி நினைக்கும்போது மனிதராக நினைக்கிறோம்; நமக்குக் கலியாணம் முடித்துக்கொள்வது அவசியமாகத் தோற்றுவதால் அவருக்கு மொருகலியாணம் முடித்துவைத்து விடுகிறோம். எருமைமாடு கடவுளைப்பற்றி நினைப்பதாயின் பெரியதொரு எருமைமாடாகக் கருதுமேயன்றிப் பிறிதொன்றாகக் கருதாது. இனி ஆண்பிள்ளைகளாகிய நாம் பெண்களை யெங்களிலும் ஒருபடி குறைந்தவராக நினைக்கும் இயல்புடையேமாதலினால், ஆண் தெய்வம் பெண்தெய்வம் என வகுத்து ஆண்

தெய்வத்தினும் பெண் தெய்வஞ் சற்றுக் குறைவானது என்று கருதுவதும் எம்மூடமதிக் கியல்பு. உண்மையில் ஆராய்ந்து பார்த்தாற் கடவுள் ஆணுமல்லப் பெண்ணுமல்ல; மனிதருமல்ல எருமைமாடுமல்ல. சர்வவியாபியாகிய பரம்பொருளே கடவுள். அப்பரம்பொருள் எங்கும் நிறைந்ததாதலின் ஆண், பெண், மனிதர், மாடு என்னும் இவையனைத்தினுஞ் செறிந்துநின்றது என ஆராயும் ஆராய்ச்சி பிறிதொன்று. அங்ஙனமாயின் கடவுளுக்கு உருவமில்லையோ வெனின், அருட்சத்தியே பரம்பொருளுக்கு உரிய உருவமென்போம். அவ்வருட்சத்தியின் வடிவமெதுவோவெனின், அப்பொருளை யாராய்வதே இவ்வுபந்யாசத்தின் கருத்தாதலின், ஈண்டு ஒரு விடத்தில் மாத்திரங்கூறியொழியாது உபந்யாசம் முழுவதினும் அப்பொருளை வகுத்து வகுத்துக் கூறுவோமென்பது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து அக்கினியும் வெப்பமும் எவ்வாறு தாதான்மியத்தால் இரு திறப்பட்டும் உண்மையி லொன்றாயமைந்து நிற்கின்றனவோ, அவ்வாறே பரம்பொருள் அருட் சத்தியென இருபான்மைய வாய் வழங்குவோமெனினும், உண்மையி லவையொன்றேயா மென்பது. சுடுதல் ஒளிதருதலென்னுங் குணங்களே அக்கினியாய் நின்றது. இவற்றின் வேறாகிய குணியொன்றிருக்குமாயின் அது உரைமனமிறந்தது. சுடுதல் ஒளிதருதல் என்னும் இவற்றை நீக்கியபின் அக்கினியில் எதுவேனும் எஞ்சிநிற்குமா? குணமே எம்மாலறியத்தக்கது; குணி யொருவாற்றானு மறியத்தகாதது. அக்கினியே யுருத்திரனுமாயின், சுடுதல், அடுதல், ஒளிதருதல் என்னுமிவை உருத்திராயணியாம்; இவற்றின் வேறு அக்கினியில்லாத வாறுபோல, உருத்திராயணியின் வேறு உருத்திரனில்லையென்பது. அங்ஙனமாயின் புராணங்களிருவராகக் கூறியவே யெனின், ஞான உண்மைகளைக் கல்வியறிவில்லா இளைஞரும் பிறரும் அறியும் வண்ணம் உருவகப்படுத்திக் கூறு நீர்மைய புராணங்களாதலின், அவை இங்ஙனங் கூறியதால் இயைந்ததொரு இழுக்கில்லை யென்பது. நாம் தத்துவம் விசாரிக்கப் புகுந்தோமாதலின், புராணங்களிற் கூறுகிற திருக்கலியாணச் செய்தி முதலியவற்றைச் சிறிது பொ

முதை ஒரு புறம் வைத்துவிட்டு, உண்மையை யாராய்ந்துணர்ந்து அப்பாற் புராணக் கதைகளையும் சேர்த்துக்கொள்வதினுற் பாதகமில்லை. உபந்நியாசத் தொடக்கம் முதல் இதுகாறும் கூறிய பொருளைத் தொகுத்துக்கூறி அப்பாற் செல்வாம். அவன் அவள் அதுவென்று இவ்வாறு சுட்டி யுணர்வதற்கேதுவாய்நின்ற பிரபஞ்சம் தோற்றம் நிலை இறுதியென்னும் முத்தொழிற்படுமெனவும், இம் முத்தொழிலும் காலத்தினுட்பட்டு நின்றனவெனவும், முடிவு ஈறு அற்றதாக எமக்குத் தோற்றுகிற காலத்தையே புராணங்கள் காலனெனக் கூறின வெனவும், இக்காலமு மழிந்துபோகிற ஒரு நிலையுண்டெனவும், அங்ஙனம் நிகழுகிற் சர்வசங்காரத்தில் ஒன்ருய்த் தனித்திருக்கிற பரம் பொருளைக் காலகால ரெனவும், மகாகாளரெனவும், மகாகாளியெனவும், ஆதிசக்தி யெனவும், பரனெனவும், பரையெனவும், பரையொடுகூடிய பரனெனவும் நூல்கள் பலவாருகக் கூறினவெனினும், உண்மையில் நிலைத்து நின்றது ஒரு பொருளேயெனவும், அறிஞரும், புராணிகரும், பிறரும் தத்தம் உள்ளத்துக்கு இயைந்தவாறு பல வடிவங்களாகத் துதித்தாரெனவும் சங்கார காரணமாகிய பரம்பொருளைத் தியானிப்பதனுல் அகங்காரம் முதலியன அறப்பெற்றுப் பந்தம் நீங்கி நாம் வீடுபேறடைவோமெனவுங் கண்டாம்.

இனிச் சங்காரத்துக்கு முன்னின்ற உற்பத்தி திதியையும் பின்னின்ற திரோபவ அநுக்கிரகத்தையும் அடைவே யாராய்வாம். சங்கார கருத்தனுகிய உருத்திரனை வேதம் தீவண்ணனெனப் பரவித் துதிக்கும். சங்காரத் தொழிலின் புறத்தோற்றந் தீயேயாதலின் வேதங்கள் வேள்வித் தீயினையொரோவிடத்து உருத்திரனெனப் போற்றின. பிரபஞ்சத் தோற்றமுறையில் ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று நீரும், நீரினின்று மண்ணுந் தோற்றிய வென்பது விஞ்ஞான நூலுக்குஞ் சமய சாஸ்திரங்களுக்கு மொப்ப முடிந்த முடிபு. சமயசாஸ்திரங்கள் ஆகாயத்துக்கு மப்பாலாராய்ந்து விந்துதத்துவம் நாததத்துவம் என்னுமிவற்றை அறிந்து விளக்கின. இங்ஙனம் அறிதற்குரிய புவனங்கள்

ஏழு. அவற்றினுள் அக்கினி புவனத்துக்கு அதிதேவதையாகக் கருதுமிடத்து ஒப்பற்ற தனிப்பரம் பொருளை வேதம் உருத்திரனெனப் பெயரிட்டு வழங்கும். உருத்திரன் மருத்துக்களுடைய மைந்தன் என வுரைத்த வேதமுடியின் பொருளெது வோ வெனின், வாயுபுவனத்தினின்றுந் தேயுபுவனந் தோற்றியதாதலின், வாயுபுவனத் ததிதேவதையைப்பழமறையானது தேயு புவனத் ததிதேவதைக்கு மைந்தனாகக் கூறிற்று என்பதாம். நீரனைத்தும் நாராயணனுருவம் என்னும் மறைமுடியினைத்துருவி நோக்கும்பொழுது, அப்புபுவனத்துக்கு விஷ்ணுமூர்த்தி அதிதேவதை யென்பது பெறப்படுகின்றது. விஷ்ணுவினது சத்திக்கு வைஷ்ணவி யென்று பெயர். வேதநூல் வல்ல அந்தணாளர்கள் உச்சிப்பொழுதில் நீரிறைத்து மலர்தூவி வைஷ்ணவி சத்தியைத் துதிப்பார்கள், பொருள், இன்பம் என்னும் புருஷார்த்தங்கள் இரண்டினுக்கு முரியவள் வைஷ்ணவி சக்தியேயாதலின்.

புராணங்கள் காவற் கடவுளைப் பற்றிச் சொல்லுகிற குறிப்புகள் சிலவற்றைத் தந்து அப்பாற் செல்வாம். முன்னொரு காலத்திலே, தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலினைக்கடைய, ஆண்டிருந்து அமுதத்தொடுமெழுந்த பொருளின் செல்வியாகிய மலர்மகள், அரிபரந்தாமனுக்கு மனைவியாயினள்; பின்னு மோரூழியில் வராக வுருவினைக்கொண்டமாதவன் மண்மகளைத்தனது மருப்பிலேந்தினன்; அன்றே அவளவனுக்கு மனைவியாயினள். அவளைக்காப்பாற்றி வருவது வாசுதேவனுக்குரிய கடமையாயிற்று; கேவலம் மானிடராகிய ஆடவர் தம்மனைவியருக்குப் பொன்னும் பூணுங் கொடுத்துப் போற்றி வருவாராயின், புருஷோத்தமனாகிய நாராயணன் தனக்குகந்த நாயகியாகிய நிலமகளைப் போற்றாது விட்டுவிடுவானா? ஆதலினால், மாயவன் பலப்பல வடிவந்தாங்கி உலகினுற்பவித்துத்துட்ட நிக்கிரக சிட்டபரிபாலனஞ்செய்து பூபாரந்தீர்ப்பது இயல்பாயிற்று. இன்னணமேற்பட்ட அவதாரங்களுள் அயோத்தியில் தசரதகுமாரனாகிய அவதாரத்திலே திருமால் ஸ்ரீராமச்சந்திர னென்னும் பெயரினைத்தாங்கத் திருமகள்

சீதாபிராட்டியாராகத் திருவவதாரஞ் செய்தாளெனவும், அரவணைச் செல்வன் நந்தகோபாலனாக விளங்க அரிப்பிரியை உருக்குமணி, சத்தியபாமாவாதிய அட்ட லக்ஷுமிகளாக அவன் மருங்கு பொலிந்தாளெனவும் புராணங்கூறுகின்றது.

பதுமநாபன் காயாம்பூ நிறத்தினன். அவனையகலாது அவனோடு என்று முடனின்ற பதுமை செந்தாமரைப்பூ நிறத்தினள். திருமகளும் திருவின்கேள்வனும் நித்தியராய் வியாபகராய் அனைத்துயிரினுஞ் செறிந்து நிற்பாரெனப் பாஞ்சராத்திர ஆகமங்கள் கூறுகின்றன. திருமகள் திருமாலினுடைய சத்தி; ஆதலினாலே, நிலமகளுங் கோகுலத்தில் கண்ணனுடைய திருநயன நோக்கத்தைக் காதலித்து நின்ற பாவைமாரனைவரும் திருமகளின் அமிசம் ஆவாரென்பது பெறப்படுகின்றது. செல்வம், வனப்பு, வெற்றி யென்னு மிவைதிருமகளுக்குரிய இலக்கணங்கள். ஆதலினாலன்றோ தனலக்ஷ்மி, சௌபாக்கிய லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி என ஆன்றோர் போற்றினர். இங்ஙனம் போற்றப்பட்ட சத்திகள் ஒன்றா பலவாவென்றால், தீயென்னும் ஒருபொருளே அடுதல் சுடுதல் முதலிய தொழில் வேற்றுமையாற் பலவேறு வகைப்படுமாறுபோல, ஒருசத்தியே தொழில் வேறுபாட்டாற் பலவாக வழங்கப்படுமென்க. அஃதன்றியுஞ் செல்வம், வனப்பு, வெற்றியென்னும் இவை ஒன்றினொடொன்று சார்புடையன என்பது வெளிப்படை. (தொடரும்.)

———o———

மாயையின் மூன்று திரைகள்.

———o———

(சுவாமி ஸ்ரீ ஞானேஸ்வரானந்தா எழுதியதின் மொழிபெயர்ப்பு.)

இயற்கையழகை உற்றுநோக்கி ஆழ்ந்து ஆலோசிக்கவல்லவனும் சமுத்திர தீரத்தில் நின்று எண்ணிறந்த அலைகளின் வரிசைகள் முழங்கிக்கொண்டும், அலைந்து கொண்டும், மோதிக்கொண்டும் வந்து கடைசியில் மறைவதைப் பார்த்து "இந்த அலையும் திரைகள் எங்கிருந்து வருகின்றன? எவ்விடத்துக்

குச் செல்லுகின்றன? இந்த முழக்கமும் அலைச்சலும் எதற்காக?'' என்று கேட்காதிருக்க மாட்டான். இந்தக் கேள்விகளுக்கு விடைகள் அந்தப் பெருத்த அதிசய சம்பவத்திலேயே பொதிந்து கிடக்கின்றன. விசாலமாகிய சமுத்திரத்திலிருந்தே அவைகள் உற்பத்தியாகி அந்த முந்நீர்ப் புணரியையே சென்றடைகின்றன; எங்கும் பரந்துள்ள காற்றே அவ்வலைகளை அலைத்து முழங்கச் செய்கின்றது.

வாழ்வென்னும் குறுகிய வரம்பின்மீது நின்று அறிவுக்கு அப்பாலுள்ள விரிந்த சமுத்திரத்தினால் சூழப்பட்டிருக்கும் மனிதன், முக்கியமாய்த் தனது எண்ணங்களும் நம்பிக்கைகளும் வீணாகும்படியாகவோ தமக்குரியவரை இழக்கும்படியாகவோ சங்கடங்கள் என்னும் அலைகளால் தாக்குண்ட போழ்தில், அதே கேள்விகளைப்பன்முறை கேட்டிருக்கிறான். ஆனால் இந்த ஆச்சரியமான சம்பவங்களுக்குக் காரணமாயுள்ள உண்மையை அறிந்து கொள்ள அவன் செய்த முயற்சி வீணாகியது. இங்ஙனம் தான் அறியாமையாகிய திரையினால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு தன் அறிவுக்கும் யுக்திக்கும் எட்டாததைப் பற்றி வருத்தமடைகிறான். அந்தகாரத்தில் மனிதனுக்குச் சாந்தி கிடையாது. பேரொளியினிடத்துப் பிறந்த மனிதன் தன் வாழ்விற்கு முக்கிய ஆதாரமாக உள்ள பேரறிவைத் தேடி அலைகிறான். அறியும் தன்மை தனக்குரியதென்றும் தன்னால் கூடுமானால் இயற்கையின் மறைபொருள்களை எல்லாம் துருவியறியக் கூடுமென்றும் அவன் தெரிந்து கொண்டிருக்கிறான். ஐயோ, பாவம்! அவனுடைய எளிய புலன்கள் சிதைந்தும் நொறுங்கியும் கெட்டுப் போயிருப்பதால், அவைகள் எட்டி எட்டிப் பார்த்தும் கிட்டாமல் மோதுப்பட்டு அவமே திரும்புகின்றன. தன்னால் அறியக் கூடுமென்று நினைக்கிறான்; ஆனால் உண்மையாகவே அறியக் கூடவில்லை. இதுதான் மாயையாகிய மறைதிரையின் முதலாவதாகும்; மனிதன் தன்னை விடுவித்துக்கொள்ள ஓய்வின்றி முயற்சி செய்யும் இயற்கையின் மறைப்பு இதுவேயாம்.

மனிதன் என்றைக்கும் சாகாமல் உயிர்த்திருக்க விரும்புகிறுன். ஆனால் எப்போதும் சலனமடையும் பெற்றியதாகிய இயற்கையின் மார்பகத்து, யாதொன்றும் நித்திய வாழ்வைப் பெற வியலாதென்னும் கண்டிப்பான உண்மையை அவ்வியற்கையே அறிவுறுத்துகிறது. ஏக்கத்தினல் பீடிக்கப்பட்டவனுகிய அவனுக்கு வாழ்வே ஒரு பெரும்பாரமாகத் தோற்றுகிறது. அவ்விதமாக அவன் மனச்சோர் வடைந்திருக்கும் காலத்தில், சில சமயங்களில், அவன் நித்தியமான வாழ்விலிருந்திருக்கிறுனென்றும் அவ்வித வாழ்க்கை அவனுக்குரியதேயென்றும் இந்தக் கம்பீரமான இயற்கைத் தோற்றத்தில் அவனுடைய தெய்வீக உரிமையைத் தடுப்பது ஏதுமில்லை யென்றும் அவனுக்குள்ளேயே ஒரு இன்ப வாக்கியம் ஆன்மாவுக்கு உரைக்கிறது. தான் நித்தியமாய் வாழக்கூடுமென்று உணருகிறுன்; ஆனல் உண்மையில் கூடவில்லை. மாயையின் இரண்டாவது இரகசியத் திரை இதுவே.

திக்கற்றுத் தவிக்கும் ஆன்மாவைச் சூழ்ந்து வளைக்கும் முக்கோண இரகசியப் பட்டியின் மூன்ருவது திரையை இப்போது விளக்குவாம். மனிதன் உலகத்தில் சகலவித சுகாநுபவப் பேற்றையும் விரும்புகிறுன். கஸ்தூரிமானைப் போலவே அவன் நாளெல்லாம் முயன்று சிற்சுகத்தைத் தேடி யலைகிறுன்: அது உலகப் பொருள்களில் கிடைக்குமென்று அவன் பெரிதும் நம்புகிறுன்.. ஆனல், பாவம்! அவற்றை அவன் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள முயற்சிக்கையில், அவை ஓடும்தன்மையவாதலால், கைப்பிடியிலிருந்து நழுவி விடுகின்றன. அப்படியிருந்தும், நித்தியமாகிய ஆநந்தம் தனக்குச் சுபாவமாக உரியதென்றும் துக்கங்களும் துன்பங்களும் தனக்கு அந்நியமாய வஸ்துக்களென்றும் அவனுக்குள்ளேயே ஏதோ ஒன்றிருந்து வற்புறுத்துகிறது. ஆம், வாஸ்தவமே. அவன் பேரின்பத்திற்காகவே பிறந்த குழவியாக விருந்தும், தனக்குரிய பிதுரார்ஜிதத்தை இழந்து விட்டான். அவன் ஆநந்தத்தை யனுபவிக்க விரும்பியும் முடிகிறதில்லை. இயற்கையில் காணப்படும் எதிர்மறைத் துன்பத்தின் தோற்றம்—அதாவது வேதாந்திகள் கூறும் மாயை—இதுவாம்.

இறைவன் அம்சமாக உற்பவித்த மனிதன் இவ்விதமாக மாயையின் முத்திறப்பட்ட மறைதிரையினுல் முற்றிலும் கட்டுப் பட்டிருக்கிருன். அவன் சர்வஞ்ஞனுக விழைகிருன்; ஆனுல் முடியவில்லே. அவன் நித்திய வாழ்வில் திளேக்க விரும்புகி ருன்; ஆனுல் சர்வ சக்தியுள்ள காலன் அவனே ஈர்த்துக்கொண் டுசெல்கிருன். பேரானந்த வமுதை முற்றிலும் பருக ஆசைப் படுகிருன்; ஆனுல் அது அவன் வாயினின்றும் நழுவி விழு கின்றது.

உலகத்தோற்றத்தின் ஆரம்பத்திலிருந்தே மானிடகர்மங் களின் நோக்கம், சச்சிதாநந்தத்தை,—என்ருல் நித்தியவாழ்வு, பேரறிவு, நித்தியாநந்தம், என்னும் மூன்றிளேயும்—அடையும் மார்க்கத்திலுள்ள தடைகளேக் களேவதாகவேயிருந்தது. மானிட எண்ணங்களின் ஆதிக் குறிப்பாகிய உபநிஷத்துக்களில் உண்மையை மறைக்கும் இரகசியத்திரைகளே ஊடுருவிப்பார்க் கும் எத்தனங்கள் பலவற்றைக் காண்கிருேம். கதோபநிஷத் தில் இளங்குமரனுகிய நாசிகேது பிதுர்லோகத்துக்குச்சென்று எமதர்மராஜனேப்பார்த்து நித்தியவாழ்வின் இரகசியத்தைப்பற் றிப் பின் வருமாறு கேட்கிருன். "மனிதன் இறக்குங்கால், என்ன சம்பவிக்கிறது என்ற சந்தேகம் எங்களுக்குள் நிகழ் கிறது. சிலர் அவன் இருக்கிருனென்றும், மற்றவர் இல்லே யென்றும் கூறுகின்றனர்" முதலில் எமன் அவனுக்கு இரகசி யத்தைச் சொல்ல விரும்பவில்லே. ஆனுல் நாசிகேதுவும் உண் மையை அறியாமல் போவதாகவில்லே. ஆனதால் நாசிகேதுவின் பக்குவநிலேயை யறிந்த தர்மன் அந்த அதி இரகசியத்தை வெ ளியிட இசைந்து உண்மையான நித்தியவாழ்வை யளிக்கவல்ல ஆன்மஞானம் அல்லது தன்னே யறியும் அறிவை நாசிகேதுவுக் குப் பின்வருமாறு விளக்குகிருன். "தன்னே அறியும் ஆன்மா பிறப்பதுமில்லே, இறப்பதுமில்லே. யாதொன்றினின்றும் அது உண்டாவதில்லே; அதினின்றும் யாதொன்றும் உண்டாவது மில்லே. அநாதியானதும் நித்திய மானதும் ஆகிய இந்த ஆன்மா சரீரம் விழும் காலத்திலும் அழிவையடைகிறதில்லே" மற்ருெருபநிஷத்தில், ஒரு மகா ஞானி கூறுவதாவது:—

"நித்தியவாழ்வைப் பெறவிரும்பும் மக்காள்! கேளுங்கள். அஞ்ஞானிகளுக் கெட்டாமல் கோடிசூரியப்பிரகாசமாய் ஒளிரும் சர்வவல்லமையுள்ள பொருளாகிய ஆத்மத்தை அறிந்துள்ளேன்; அவனையறிந்தவன் எவனும் நித்தியவாழ்வைப் பெறமுடியும். அதையன்றி வேறு மார்க்கமில்லை."

பேரறிவை மறைக்கின்ற திரையை நீக்கும் முயற்சியைக் குறித்து முண்டகோபநிஷத்தில் சவுனகருக்கு ஆங்கிரசர் அளிக்கும் விடையில் பலவேறு வகைத்தான ஞானத்தை இரண்டு முக்கிய அங்கங்களாகப்பாகுபடுத்திக்கூறுகிறார். ஞானமானது பரம் என்றும் அபரம் என்றும் இருவகைப்படும். வெளித்தோற்றங்கள் சம்பந்தமான வேதங்கள் சாஸ்திரங்கள் யாவும் 'அபரவித்தை' யென்று பகுக்கப்பட்டிருக்கின்றன. அபரவித்தையினால் சுத்த ஞானத்தை யடைய முடியாது. ஆனால் சர்வவல்லமையும் அகண்டஞானமுமுள்ள தன்னை யறியும் அறிவே 'பரவித்தை' அல்லது 'முற்றறிவு' எனப்படும்.

சதாநந்தத்தை மறைக்கும் மாயையின் மூன்றாவது இரகசியத் திரையைப்பற்றிச்சாந்தோக்கிய உபநிஷத்தின் ஆறாவது பிராமணத்தில் யுக்தி பூர்வமாகவும் அதியற்புதமாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. "எல்லையற்றதுவே ஆநந்தம்; எல்லையுள்ள எதிலும் ஆநந்தத்தைக் காணவியலாது. முடிவற்றதுவே ஆநந்தம்; அதனையே அறிதல் வேண்டும்" என்று நாரதருக்குச் சனற்குமாரர் உபதேசிக்கிறார்.

துக்கங்கள் யாவும் மனிதனது குறையினால் உண்டாகின்றன. தன்னைத்தானுணர்ந்து தனக்குள்ளேயே எல்லாவற்றையும் ஒருவன் பார்ப்பானாகில், துக்கங்கள் நிவிர்த்தியாகின்றன. சகல துக்கங்களையும் நிவிர்த்தித்துக் கொள்ளுதற்கு எங்கும் நிறைந்த ஆன்மாவை யறிய வேண்டும். இதை நாம் அறிந்தாலல்லது; திரையை ஊடுருவிச்செல்லவும் இயலாது; பிறப்பு இறப்பு, சந்தேகம், ஏக்கம், துயரம், துன்பங்களினின்றும் விடுதலைபெறவும் முடியாது. இந்த ஆத்மாதான் நமது வாழ்வின் ஒரே நோக்கமாகவும் நமது தெய்வீக உரிமைப்பொரு

ளாகவும் நமது உண்மைப் பொருளாகவு மிருக்கின்றது. இந்த ஆத்மாவினின்றும் நாம் தோன்றினோம்; திரும்பவும் அதனை யே சென்றடைவோம். நமதுவாழ்வின் தற்காலத்துன்பங்கள் யாவும் நமது அஞ்ஞானத்தினின்று பிறந்தவையாம்.

இப்போது ஆன்மாவை யடைவதெங்ஙனம்? ஆன்மாவை யடைவதற்கு உபநிஷத்துக்களில் இருவகையான மார்க்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானத்தினால்; மற்றொன் று உபாசனை அல்லது பக்தியினால். ஞானமார்க்கமே நேரியவழி யாகும். ஆனால் இம்மார்க்கம் திடசித்தமுள்ள ஒரு சில ருக்கே கிட்டும். இன்னோர் இகபரசுகங்களை நன்காய்ந்து அவற் றின் சிறுமையையும் பயனின்மையையும் உணர்ந்து அவற்றின் மீது இச்சை வைப்பதில்லை. உண்மையான ஆன்மஞானத் தைத்தவிர வேறொன்றும் அவர்களைத் திருப்தி செய்யாது. ஆனால், பெரும்பாலோர் இவ்வுலக வாழ்க்கையினும் சுகத்தி னும் இச்சை கொண்டவராயிருக்கின்றனர். அன்னோருக்குஉபா சனை அல்லது பக்தி மார்க்கத்தை உபநிஷத்தில் சொல்லியிருக் கிற ஆன்ம ஞானத்தை யடைவதற்கு மூன்று படிகளுள. பிரத மத்தில் குருவினிடத்திலும் நூல்களிலிருந்தும் உண்மை யறிவைப் பெற்று அதினிடத்து உறுதியான நம்பிக்கை கொள் ளவேண்டும். இரண்டாவதாக, ஏதாவதொரு ரூபத்தைப் பார்த்துக்கொண்டாவது அல்லாமலாவது தியானம் செய்தல் வேண் டும். தியானத்துக்குக் கருவியாக ஏதாவதொரு உருவத்தை வேண்டும் வரையில் அவன் உபாசகனே (யோகி) யாவன். ஆனால் உருவத்தின் உதவியின்றித் தியானம் செய்து ஆன்ம ஞானத்தை யடையக்கூடியவன் ஞானியாவன். மூன்றாவது படி யாதெனில், நித்தியாசனமாம்; என்றால் சமாதி; ஆன்மாவுடன் சதா சுகித்திருத்தல்.

முன்னால் கூறப்பட்டவாறு இயற்கையின் எதிர்ப்பைத் தாண்டிச் செல்லுதற்கு நேரான (ஞான) மார்க்கத்தைப் பின் பற்றினாலும்சரி, வளைவான (உபாசனை, பக்தி, யோகம்) மார்க் கத்தைக் கடைப்பிடித்தாலும் சரியே. ஒருவன் பிரதமத்தில்

செய்ய வேண்டியது தான் பந்தத்திலகப்பட்டிருப்பதை யுணர்ந்து அந்த பந்தத்தை யறுத்தெறிய முயற்சிக்கவேண்டும். அவ்வாறு முயற்சித்தால் சிற்றின்பத்துக்கும் பேரின்பத்திற்குமுள்ள வேறுபாட்டை யறியும் சக்தி கிட்டும். அதன்மேல் சிற்றின்பத்தை விடுத்துப் பேரின்பத்தைக்கைக்கொள்ளுதற்குவழி தெரியும்.

"சரீரத்திலாவது மனத்திலாவது பலவீனமாயிருக்கும் எவனும் தன்னிலைக்குத் தக்கவாறு புறப் பற்றுகளை ஒழிக்கப் பழக விரும்பாதவனும் ஆன்ம ஞானத்தை யடைய வியலாது. இந்தச் சாதனைகளை அநுட்டிக்கும் ஞானிக்கு ஆநந்தக் கோட்டையின் கதவம் திறந்து நிற்குமென்பது திண்ணம்." என்பது சுருதி.

தமிழ்ப்புலவர்கள் அகராதி வரிசை.

(௩௫௫-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒ

ஒடைகிழார்
ஒதஞானி
ஓரம்போகியார்

ஔ

ஔவை

க

கந்துல்வெள்ளத்தார்
கச்சமாலையர்—காஞ்சி
கச்சியப்ப சிவாசாரியார்
கச்சியப்பமுனிவர்
கடவூர்—எருமைவெளியனார்
கடவுண்மாமுனி
கடிகைமுத்துப்புலவர்
கடுங்கோட்காவீரன்
கடுவன்மள்ளன்
கணக்காயனார்
கணக்காயன்—தத்தன்
கணபதிஐயர்
கணபதிக் குருக்கள்
கணபதி பிள்ளை
கணபதி தாசர்
கணிகண்ணன்
கணிமேதாவியார்
கணேசபண்டிதர்
கண்டிராதத்தன் மதுரை
கண்டிராதித்தன்

கண்டியதேவன் [யூர்
கண்ணகனார்-இருங்கோன்எல்லை
கண்ணகனார் காட்டூர் கிழார்மகனார்
கண்ணகனார்—பாண்டியன் எனாதி
கண்ணகனார்-வம்பார்காட்டிளங்
கண்ணகத்தனார்
கண்ணகத்தனார்—ஆவூர்கிழார்மகனார்
கண்ணகத்தனார்—ஆர்க்காடுகிழார்மக
கண்ணகத்தனார்—மதுரை [னார்
கண்ணம்புகுந்தராயத்தனார் மதுரை
ஓலைக்குடை
கண்ணன்—கொல்லி
கண்ணன்—நாமகளார் மகள் இளங்
கண்ணன் பூம்பெருங்
கண்ணன்—வாயினிளங்
கண்ணன்—வேட்டக்
கண்ணனார்—எருக்காட்டூர்த்தாயங்
கண்ணனார்—குமட்டூர்
கண்ணனார்—கதையங்
கண்ணனார்-காவிரிப்பூம் பட்டினத்
துக்காரிக்
கண்ணனார்-செல்லூர் கௌசிகன்
கண்ணனார் மருங்கூர் கிழார்மகனார்
கண்ணனார் மதுரை
கண்ணனார் தத்தங்
கண்ணனார் புல்லங்
கண்ணனார் இழிகட்பெருங்
கண்ணனார் கூடலூர்பங்
கண்ணனார் பூதங்
கண்ணனார் பெருந்தும்பின்கிழான்
கண்ணியன்—பொதும்பிற்பல்
கண்ணுத்திரையர்
கண்ணுத்திரையர்—ஆசிரியர்
கண்ணுடையவள்ளல்—காழி
கண்ணையாள்—நக்
கதக்கண்ணன்
கதப்பிள்ளை—கருவூர்
கதிரைவேற்கவிராயர்
கதிரைவேற் பிள்ளை
கநகசபைப்புலவர்
கநகசபைப் பிள்ளை
கனகசுந்தரம்பிள்ளை—திரு. த.
கந்தக்கண்ணன்
கந்தன்
கந்தசாமிக்கவிராயர்—மு. ரா.
கந்தசாமிப் புலவர்
கந்தசாமிப் பிள்ளை
கந்தப்பையர்
கந்தரத்தனார்—உரோமத்துக்
கந்தரத்தனார்—விண்ணப்புறங்
கபிலதேவர்
கபிலர்
கம்பர்
கம்பர்கிழான்
கயத்தாற்றரசன்
கயத்தூர்கிழார்
கயமனார்
கருணைப்பிரகாசர்
கருணையர்
கருவூர்கிழார்
கருவூர்த்தேவர்
கருவூர் பவுத்திரன்
கலிங்கத்தர்—கருவூர்
கலைக்கோட்டுத்தண்டினார்
கலைக்கோட்டுத்தண்டினார்—முறு
வெங்
கலைக்கோட்டுத்தண்டினார்-விழிக்கட்
பேதை
கல்போதுஜமீன்தார்
கல்விக்களஞ்சியப் புலவர்
கல்யாணசுந்தரமுதலியார்—பூவை.
கல்லாடர்

கா

கி

கீ

கு

கூ

கே

கோ

கொள்ளம்பக்கனார் செல்லூர்
கொள்ளம்பக்கனார் படுமாத்துமோசிகீரன்
கொற்றனார்—புறநாட்டுப்பெருங்
கொற்றனார் இடையூர்ச்சேந்தன்
கொற்றனார் உமட்டேர்கிழார்
கொற்றனார் கண்ணகாரன்
கொற்றனார்—கிடங்கில்
கொற்றனார் கொற்றங்
கொற்றனார் செயலூர்—இளங்
கொற்றனார் நற்றங்
கொற்றனார் மாற்றூர் கிழாமகனார்

கோ

கோக்குளமுற்றனார்
கோசனார்—கருவூர்
கோட்டனார்-கோடை
கோதமனார்
கோபாலகிருஷ்ண தாசர்
கோபாலகிருஷண பாரதி
கோரக்கநாதர்
கோலம்புல்லன்—மதுரை
கோவனார்
கோவனார்—திங்கான்முடி
கோவதத்தன்
கோவிந்தபிள்ளை
கோவிந்தசாமி ஐயர்
கோவூர் கிழார்
கோழியார்

கௌ

கௌசிகனார்—பெருங்
கௌசிகனார் மதுரை இளங்

ச

சங்கரநமசிவாயர்
சங்கரபண்டிதர்
சங்கரசாரிபுலவர்
சங்கரமூர்த்திக் கவிராயர்
சடகோபதாசர்
சட்டைமுனி
சண்பகவடிவு
சண்முக சட்டம்பியார்
சண்முகசுந்தர முதலியார்
சண்முக ஞானியார்
சண்முக தேசிகர்
சண்முகாநந்த சுவாமி
சண்முகம்பிள்ளை—சோழவந்தான்
சண்முகம்பிள்ளை திருமயிலை
சண்முகத்தம்பிரான்-தருமை
சத்திமுற்றப்புலவர்
சத்திநாதனார்
சதாசிவதேசிகர்-I இலக்கணவிளக்க பரம்பரை
சதாசிவதேசிகர் II ௸
சதாசிவதேசிகர் III ௸
சதாசிவம்பிள்ளை
சந்திரசேகர உபாத்தியாயர்
சந்திரசேகர கவிராஜபண்டிதர்
சபாநாயகர்
சபாபதிநாவலர்
சபாபதி முதலியார்
சமணமுனிவர்
சமயதிவாகரமுனிவர்
சம்பந்தசரணாலயர்
சம்பந்தமூர்த்தி நாயனார்
சம்பந்தர்
சயங்கொண்டார்
சரவணதேசிகர்

பத்திரிகை ஆராய்ச்சி.

---o---

கல்கத்தா "மார்டன் ரிவ்யூ" டிசம்பர்மாதப் பத்திரிகையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐயோவா சர்வகலாசாலையில் உபந்யாசகரா யமர்ந்திருக்கும் டாக்டர் சுதீந்திரபோஸர் அவர்கள் அமெரிக்காவில் நாட்டுப்புறத்துச் சமாசாரப் பத்திரிகைகளைப்பற்றி நீண்டதோர் வியாசம் வரைந்திருக்கிறார். அதில் அவர் சொல்வதாவது:—

நாட்டுப் புறத்துப் பத்திரிகை சாதாரணமாய் வார மொருமுறையே பிரசுரிக்கப்படுகிறது. அது தேசிய சமூகவாழ்க்கையில் முக்கிய ஆதாரமாக விருக்கிறது. (அமெரிக்க) ஐக்கிய மாகாணங்களில் உ௫00 தினசரிப் பத்திரிகைகளிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவற்றில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரரை யுடையனவாய்ச் சுமார் ௫00 பததிரிகைகளேயுள. ஆனால் வாராந்திரப் பத்திரிகைகளோ எல்லாவகையும் கூடி கசுஉஎஎ ஆகும்..........................௲000 முதல் ௫000வரையில் ஜனத்தொகையுள்ள பட்டினங்களில் இரண்டு அல்லது அதிகமான பத்திரிகைகளிருக்கின்றன..................................வாஷிங்டன் மாகாணத்தில் சு0 ஜனங்களுள்ள ஒரு கிராமத்தில் ஒரு வாராந்திரப் பத்திரிகை நன்கு நடைபெறுவதாக நான் வாசித்திருக்கிறேன்..........................நகர தினசரிப் பத்திரிகைகள் கேவலமெனத் தள்ளும் சமாசாரங்களையே முக்கியமாய் நாட்டுப்புறத்துப் பத்திரிகைகள் கூறுகின்றன. நாட்டுப்புறத்து வாரப்பத்திரிகைகள் பிரதானமாய் உள்ளூருக் குரியனவாகவே யிருக்கின்றன..........................அறுபது வருடங்களுக்குமுன் நாட்டுப்புறத்துப் பத்திரிகைகள் கையினால் இயங்கும் அச்சியந்திரங்களில் ஒரு முறைக்கு ஒரு பக்கமாக அச்சிடப்படுவது வழக்கமாயிருந்ததாம். அவ்விதம் சில நூறு பத்திரிகைகள் அச்சடிக்க இரண்டு மணி நேரம் ஆகும். இப்போதோ சிறு நகரங்களில் தற்காலத்துத் தினசரி சமாசாரப் பத்திரிகைகள் மின்சார விசையினால் ஓடும் அச்சியந்திரங்க ளாதிய நவீன சாதனங்களினால் நாற்பது பக்கங்கள் கொண்ட பத்திரிகைகளை அரை மணி நேரத்தில் பதினாயிரம் பிரதிகள் அச்சடித்து உள்ளூர் சந்தாதாரர்களுக்கு ௬0 நிமிஷங்களில் அனுப்பப்படும். சு0 வருஷங்களுக்குமுன் எழுத்துக்கள் கையினால்

பொறுக்கி யடுக்கப்பட்டன. இப்போது பத்தில் ஒன்பது பங்கு பத்திரிகைகள் யந்திரங்களினால் செய்யப்படுகின்றன. கையினால் வேலை செய்வோரில் இப்போது ஒரு நாளைக்கு ௨௦ பத்திகள் அடுக்கக்கூடியவருமிருக்கின்றனர்.

நமது நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தோர் குறைவாக இருப்பதால் சமாசாரப் பத்திரிகைகள் மேனாடுகளைப்போல் அவ்வளவு அதிகமாகச் செலவழிய மார்க்கமில்லை. ஒவ்வொரு ஊரிலும் பொதுநலப் பிரியரான செல்வர்கள் முயற்சித்தால் அந்தந்த கிராமத்தின் கல்விப் பெருக்கத்தையும் பத்திரிகை விருத்தியையும் விரைவில் காணக்கூடும்.

*　　　*　　　*

புகையிலையைப்பற்றி "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" என்ற பத்திரிகையில் ஒரு நீண்ட வியாசம் எடுத்தாளப் பெற்றிருக்கிறது. அச்செடியின் வரலாற்றைப்பற்றி அவ்வியாசத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறது:—

'கி. பி. ௧௪௯௨-வருஷத்தில் புகையிலைப் பூண்டும் அமெரிக்கா கண்டமும் ஏககாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. கியூபா என்னும் தீவைப் பரிசோதித் தறியும்படியாய் அனுப்பப்பட்ட கொலம்பஸ் என்பவரும் அவருடைய தோழர்களும் திரும்பிவந்து "வாசனையுள்ள ஓர்வித தழையை தங்கள் மேல் அணிந்து தீப்பற்றி எரியும் கொள்ளிக்கட்டைகளை வாயில் கௌவினவர்களாய் உலாவும் மனிதரை அங்கே கண்டோம்," என்று சொன்னார்கள். ஐம்பது வருஷங்களுக்குப் பின் மெக்சிகோ பட்டணத்தில் உச்சிதமான விளைபொருள்களைச் சோதித்தறியும்படியாய் ஸ்பெயின் தேசத்து அரசனால் அனுப்பப்பட்ட பிரான்ஸிஸ்கோ பெர்னாண்டஸ் என்னும் பேர்கொண்ட ஸ்பானிய னொருவன் இவ்வற்புதப் பூண்டை கியூபா தீவிலிருந்து முதன்முதலாய் ஸ்பெயின் தேசத்துக்குக் கொண்டு சென்றான். லிஸ்பன் பட்டணத்திலிருந்த பிரஞ்சு ஸ்தானாதிபதியாகிய ஜின் நிக்காட் என்பவர் இப்புகையிலைச் செடியை கி. பி. ௧௫௬௦-வருஷம் ஸ்பெயின் தேசத்திலிருந்து பிரான்சுக்கு அனுப்பினார்...........௧௫௬௫-வருஷத்தில் ஸர் வால்டர் ராலே என்பவர் இங்கிலாந்து தேசத்தில் புகையிலை உபயோகத்தை முதல் முதல் பரிபாலித்தார்....................இங்கிலாந்து தேசத்தின் அரசராகிய முதலாம் ஜேம்ஸ் என்பவருடைய ஸ்தானாதிபதியாகிய

ஸர் தாமஸ் ரோ என்பவர் கசுகசு-வருஷத்தில் ஜிஹாங்கீர் என்னும் மொகலாயச் சக்கரவர்த்தியின் அரங்கசபைக்கு வந்தார். அவர்தான் இந்தியாவுக்குப் புகையிலையைக் கொண்டுவந்தார்........................

புகையிலையை மனிதர் முக்கியமாய் நான்கு விதங்களில் பிரயோகம் செய்துவருகின்றனர். (க) தாம்பூலத்துடன் சேர்த்துமெல்லுதல். (உ) சுண்ணும்பு, நெய்யுடன், வேண்டுமானுல் வாசனைகளும் கூட்டித் தூள் செய்து நாசிக்குள் ஏற்றுதல். (௩) இலைகளைப் பக்குவப்படுத்திக் கழியாகச் சுருட்டித் தீப்பற்றவைத்து அதன் புகையை உள்ளுக்கு இழுத்தல். இவ்வகையில் சுருட்டு, பீடி, ரோக்கு, சிகரட், பைப் முதலாய பல உட்பிரிவுகள் உண்டு. (ச) வைத்திய முறைப்படி விஷப்பரிகாரத்துக்கு வமனகாரியாக வாய்ப்பிரயோகமாகவும் விரேசனகாரியாகக் குதப்பிரயோக மாகவும் கொள்ளப்படும். இவையேயன்றிப் புகையிலையின் நரம்புகளைச் சேகரித்து விளை நிலங்களுக்கு உரமாகவும் சில பிரதேசங்களில் உபயோகித்து வருகின்றனர். இவ்விதமாக மகாயுத்தத்துக்கு முன் உலகத்தில் விளைந்த மொத்தப் புகையிலையின் மதிப்பு ஓராண்டில் சுஉ0 கோடி ரூபாயாகுமெனவும் சு0 கோடி ஜனங்கள் இதனை உபயோகிக்கின்றன ரெனவும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

புகையிலையில் அடங்கியுள்ள விஷ வஸ்துக்களைப்பற்றி அவ்வியாசத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

நிக்கோட்டீன் இரத்தாசயத்தைத் தாக்கும் ஓர் விஷம். அது உதிர நரம்புகளின் பேரிலும் மூத்திர கோசங்களின் பேரிலும் கிரியை செய்து இரத்த ஓட்டத்தை விரைவாக்கி இரத்த நாளங்களைக் கடினப்படுத்துகிறது. நிக்கோட்டீன் என்பது ஏறக்குறைய ஹைட்ரோ சியனிக் ஆசிட் என்னும் திராவகத்தைப் போலவே சடுதியாயும் சுறுசுறுப்பாயும் ஜீவனை மாய்க்கும் ஓர் வேகமுள்ள பாஷாணமாயிருக்கிறது. நிக்கோட்டீனுக்கு வயிற்றின்மேலும் குடலின்மேலுமுள்ள விஷத்தன்மை சிறுவன் சுருட்டுப்பிடிக்க ஆரம்பிக்கும்போதே காணப்படும். புகையிலையை முதலாவது உபயோகிக்க முயற்சிக்கும்போது உண்டாகும் குமட்டலும் பேதியுமே அதில் அதிக மயக்கந்தரும் வஸ்துக்கள் சேர்ந்திருக்கின்றனவென்பதைத் தெளிவாய்க் காட்டுகிறது. "புகையிலையிலிருக்கும் நிக்

கோட்டின் முதலாவது ஜன்னியை உண்டாக்கி பின்பு பாரிசவாயுவைக் கொண்டுவருகிறது..''
என்று ஸர் லாடர் பிரிண்டன் என்னும் ஆங்கிலவைத்திய சாஸ்திரி சொன்னார்.

காலிடின் புகையிலைக்கு மணத்தைத் தரும் முக்கிய வஸ்து இதுதான். காலிடின் என்பது நிக்கோடீன் என்பதைப் போலவே அவ்வளவு விஷமுள்ள ஓர் உப்பு. ஓர் துளியில் இருபதில் ஓர் பாகம் ஒரு தவளையைச் சீக்கிரத்தில் கொல்வதற்குப் போதுமானதாயிருக்கிறது. ஒரு மனிதன் அதைச் சில விநாடிகள் மட்டும் சுவாசிப்பானானால் கைகால் சோர்வும் தலைச்சுற்றலும் உண்டாகும்.

என்றாலும் எத்தனை சிறுவர், முக்கியமாய் நகரங்களில், புகையிலையைப் பலவகையாய்ப் பிரயோகப்படுத்தி வருவதை நாம் காண்கிறோம்! கொச்சி சமஸ்தானத்தில் வாலிபர் சுருட்டுப் பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்குச் சட்டமேற்பட்டிருந்தும் அப்பழக்கம் நின்றுவிடவில்லை.

சதங்கையொலி.

அறந்தாங்கி ரயில் பாதை.

மாயவரத்திலிருந்து அறந்தாங்கி வரை போடப்பட்டிருக்கிற ரயில் பாதை தஞ்சாவூர் ஜில்லா போர்டைச் சேர்ந்ததாகும். அப்படியிருந்தாலும் தென்னிந்திய ரயில்வே கம்பனியாரின் பார்வையிலே தான் நடைபெற்று வருகிறது. ஆனால் இந்த வழியில் பிரயாணஞ் செய்வோரே தென்னிந்திய ரயில்வே கம்பனியாரின் நேர்மையை அறிவர். கழிபட்ட வண்டிகள் இந்த வழியில் தான் வந்து சேருவது வழக்கம். அநேகமாக இரண்டாவது வகுப்பு வண்டியில் ஓட்டை விளக்குகள்தா மிருக்கும். நாதியற்ற பொருளைப் போலத் தேவோரின்றி இந்த ரயில்பாதை விடப்பட்டுக்கிடக்கிறது. சில வருடங்களுக்கு முன் திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியார் அவர்களைத் தலைமையாகக் கொண்டு புரோவின்ஷியல் ரயில்வே கம்பனி யொன்று அறந்தாங்கி—காரைக்குடி வழியையேற்படுத்த முயலவே, தென்னிந்திய ரயில்வே கம்பனியார் விழித்தெழுந்திருக்கின்றனர். இப்பொழுது மானாமதுரையிலிருந்து காரைக்குடி மார்க்கமாக அறந்தாங்கி வரை ஒரு தொடரைக் கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புரோவின்ஷியல் ரயில்வே கம்பனி பணம் சேர்த்து வைத்துக் கொண்டு தூங்கவேண்டிய நிலையி லிருக்கிறது.

இந்த முயற்சி தலைப்படவே மாயவரத்திலிருந்து அறந்தாங்கி வரையுள்ள தஞ்சை ஜில்லா போர்டு ரயில் பாதையையும் தென்னிந்திய ரயில்வே கம்பனியார் வாங்கிச்சென்னைக்கும் தனுஷ்கோடிக்கும் நேராக "மெயில்" செல்லும் வழியாக்கி விடலாமென்று உத்தேசிப்பதாகத்தெரிகிறது. இதன் பொருட்டாகவே போலும் ஷெ இருப்புப்பாதையைதங்களிடம்விட்டுவிடும்படி கேட்டிருக்கின்றனர். அதற்கு ஜில்லா போர்டார் இதனை விடமுடியா தென்றும், அறந்தாங்கியிலிருந்து மானாமதுரை வரை போடும் பாதையையும் அங்குள்ள ஜில்லா போர்டாரிடமே விட்டு விடவேண்டு மென்றும், மற்ற ஜில்லா போர்டாரால் போடமுடியாதிருக்குமானால் தாங்களே போடத்தயாராயிருப்பதாகவும் தெரிவிப்ப தெனத் தீர்மானித்திருக்கின்றனர். சாதாரணமாக விருக்கும் வரை ஜில்லா போர்டிலிருந்த இந்த ரயில் பாதைக்கு நல்ல காலம் பிறக்குமா வென்றெதிர் பார்க்கும்போது கவர்ண்மெண்டார் தட்டிப்பிடுங்கிக் கொள்ளப் பார்க்கின்றனர். பொது ஜனங்களாக முயன்று முன்வந்திருக்கிற இந்தியர்களின் கம்பனியான புரோவின்ஷியல் ரயில்வே கம்பனியார் இத்தனை முயற்சியும் செய்திருக்கும்போது அதனைப்புறக்கணித்து விட்டுத் தென்னிந்திய ரயில்வே கம்பனியாருக்கு உரிமை கொடுப்பது எவ்வளவு நியாயம்! என்ன செய்யலாம்? அரசாங்கத்தின் நிலை இப்படியிருக்கிறது.

ஏகாதிபத்தியப் பொருட்காட்சி.

இதற்கு நமது அரசாங்கத்தார் செலவிடும் தொகை மூன்று லட்சத்துக்கு மேலாகுமென்று தெரிகிறது. இதற்கேற்பட்ட அதிகாரிகள் தாவிகளை அனுப்ப முயன்றார்கள். அதனைப் பொதுஜனங்கள் மறுக்கவே அது தடைப்பட்டது. இப்பொழுது தமிழ் நாட்டில் செய்யப்படும் தெய்வ ஸ்தோத்திரங்களை அங்கு பாடுவிக்க ஏற்பாடு செய்கிறார்களென்றறிகிறோம். இந்த அதிகாரிகள் நம்முடைய நாட்டின் நிலை தெரியும்படி இந்த நாட்டிலேயே பிறந்து இரவு பகலென்றில்லாமல் உழைத்து விட்டுத் தவிக்கும் மக்களையும், ஏழைக் குடும்பங்களில் பாலும் கஞ்சியும் கிடையாமல் வயிறும் முதுகும் காய்ந்து ஒட்டிப்போயிருக்கும் எண்ணமுடியாத குழந்தைகளையும் ஒப்பச் சிலஉருவங்கள் செய்து கண் காட்சிக்கு அனுப்புதல் நலமாகும். அந்த ஏழைகள் வசிக்குமிடமாக இடிந்து போய் மழையும் வெயிலும் பிரவேசமாகும் குடிசைகளைப் போன்ற சிலவற்றையும் கட்டுவித்தனுப்பலாம். ஏழைக் குழந்தைகட்குப் பக்கத்தில் இங்குள்ள ஆங்கிலோ இந்தியரின் குழந்தைகளைப் போன்ற உருவங்களையும் அமைத்தல் நலமாகும். இதற்கு முயல்வார்களா? பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியத்திற் சேர்ந்த நாடு

களிலுள்ள கைத்தொழிற் பொருள்கள் யாவும் இக்கண்காட்சிச் சாலையில் வைக்கப்படும். அவற்றை ஆராய்ந்துபார்த்து அங்குள்ளவர் இவற்றைப்போன்ற பொருள்களைச் செய்து இந்த நாடுகட் கனுப்புவார்கள். இங்கிருக்கிற ஏமாந்த ஜனங்கள் கையிலிருக்கிற தொழிலையுந் தொலைத்துவிட்டுச் சோற்றுக்குத் தூங்குவார்கள். இதுதான் நடக்கப்போகிற காரியமென்று நமக்குத் தோன்றுகிறது.

மதிப்புரை.

—:(o):—

திருக்குறள் விளக்கம்:—இப் பெயருடன் அருமையான மாத ஸஞ்சிகை யொன்று நமது பார்வைக்கு வரப் பெற்றோம். கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தரித்திருக்கும் திருக்குறளுக்கு மக்களின் நிலைக்கேற்பக் காலந்தோறும் உரையெழுத வேண்டிய அவசியம் நேர்ந்து கொண்டேயிருக்குமென்பது அறிஞர் ஒப்புக் கொள்ளக் கூடியதேயாகும். தேவரின் திருக்குறளுக்கு உரையன்றிப் போற்றிய புலவர் மலிந்திருந்த காலமும் பின்னர் உரை விரும்பியபோது பரிமேலழகர் முதலியர் செய்த உரை கொண்டு பொருளறிவார் மலிந்திருந்த காலமும் போய்விட்டன. இதுகாலை மக்கட்குத் தமிழறிவு குன்றி நிற்பதால் தேவரின் மூலம் அழகரின் உரையாகிய இரண்டிற்கும் ஒரு விளக்கவுரை வகுக்கவேண்டியது கற்றறிந்தார் கடனாக எஞ்சி நின்றது. அக்குறையை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் காரியதரிசியும் "சித்தாந்தம்" பத்திரிகையின் ஆசிரியருமான திருவாளர் கிருஷ்ணாம்பேட்டை குப்புசாமி முதலியார் அவர்கள் பூர்த்தி செய்ய முன்வந்தது போற்றத்தக்கதாகும். தேவர் குறள் பெரிய எழுத்தில் முதலிலும், அடுத்து பரிமேலழகர் உரையும், அதன் பின்னர் பல மேற் கோள்களுடன் புதிதாக எழுதப் பெற்ற விளக்கமும் அச்சிடப்பெறுகின்றன. அழகிய காகிதத்தில் ௬௪ பக்கங்களுடன் இச்சஞ்சிகை வெளிவந்திருக்கிறது. ௧௯௨௪-ஆம் பிப்ரவரி மாதம் முதல் சஞ்சிகைகள் தொடர்ந்து மாதாமாதம் வெளியிடப் பெறுமென்றும், இருபது சஞ்சிகையில் நூலை முற்றுறச் செய்தல் கூடுமென்றும் அறிகிறோம். தனி ஸஞ்சிகையின்

விலை அணு நான்கே. வேண்டுவோர் "கா. ரா. காளத்தீஸ்வர முதலியார், கஅ. கிருஷ்ணப்ப மேஸ்திரி தெரு, பார்க்டவுண், சென்னை," என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க.

இராஜபுத்திர விஜயம்:—இவ்வரிய புத்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. சுதேசமித்திரன் உதவி ஆசிரியராக சுமார் பத்து வருஷமிருந்து நாட்டின் நிலைமை நன்கறிந்துள்ள ஸ்ரீமாந் எம். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் இந்நூலை எழுதியிருக்கிறார்கள். இந்தியாவின் வீரசிங்கங்களாக விளங்கிய ராஜபுத்திரரது சரித்திரங்களை நமது வாலிபர்களொவ்வொருவரும் படித்துணரவேண்டுமென்று நாம் பலமுறை எண்ணியதுண்டு. இதுகாலை இப்பணியை முற்றுவித்த ஐயரவர்களைப் பாராட்டுகிறோம். இதன் ஆசிரியர் கூடலூர் சிறையில் வதிந்த காலத்தில் பல ஆங்கில நூல்களின் உதவிகொண்டு இதனையெழுதியிருப்பதாக அறிகிறோம். நூல் தெள்ளிய நடையில் அமைந்திருப்பது போற்றத் தக்கதாகும். இதைத் தொடர்ந்து இன்னும் ஐந்து பாகங்கள் வெளியிடப்படுமென்று ஆசிரியர் முகவுரையிற் குறிப்பிட்டுள்ளார். பயமும் சோம்பலும் மலிந்திருக்கும் தமிழ் நாட்டிலுள்ள வாலிபரொவ்வொருவரும் இந்நூலை வாங்கி வாசிப்பார்களாக. கிரவுன் உஉஉ பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ஒன்றேகால் ரூபாய். தபாற்கூலி வேறு. விலாசம்:—மயில்வாகனன் கம்பனி, ௩௨. ஐயப்பசெட்டி வீதி, மண்ணடி, சென்னை.

காந்தி புராணம்:—உலகில் ஒப்பற்ற பெரியாராம் காந்தியெம்பெருமான் திருப்பெயரைக் கொண்டெழுந்திருக்கும் இப்புராணம் போற்றற்குரியதென்று நாம் கூறவேண்டியதில்லை. இப்புராணத்தை இயற்றும் பேறு நமது பண்டிதை அசலாம்பிகை யம்மையாருக்குக் கிடைத்துளது. செவ்விய இனிய நறும்பாக்கள் ௫௭௦ கொண்டு இந்நூல் விளங்குகின்றது. நமது நண்பரும் நாட்டின் பெருந்தலைவர்களுளொருவருமான ஸ்ரீமாந் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் எழுதியுதவியுள்ள அருமையான முகவுரை இதன் முகத்தில் பொலிகின்றது.

ஸ்ரீமாந் முதலியாரவர்கள் ''உரிமையுள்ள நாட்டில் தான் உயரிய நூல்கள் தோன்றும்'' என்று குறிப்பிடுகிறார்கள். உயரிய நூல் தோற்றுவதற்குக் காரணம் இதுமட்டு மன்று. ஒப்பாரு மிக்காருமின்றித் தனக்குத்தானே சரியான தலைமகன் கிடைத்தலும் பெருநூலெழுச்சிக்கு இன்றியமையாத காரணமாகும். எத்தலைவனைக் குறிக்கொண்டு தனிப்பெரு நூல் வெளிவருவது? இதுகாலை உலகிலேயே ஒப்பாரு மிக்காருமில்லாது தனிப்பெரும் செல்வமாக விளங்கும் காந்தியடிகளையே தலைவனுக்கொண்டு இந்நூல் எழுந்திருக்கின்றது. பாக்கள் இனிமையாகவும் கடுஞ்சொற் புணர்ப்பின்றியும் எளிதாக விளங்குமாறு யாக்கப் பெற்றிருக்கின்றன. அடிகளது சரிதம்விடாதுதொடர்பாகக் குறிப்பிடப்பெற்றிருக்கின்றது. அவர்தென்னாபிரிகாவில் பட்டனுபவித்துள்ள கொடுந்துன்பங்களைஆசிரியர் பாடும்போதுதன்னைமறந்த பக்திமேலீட்டிலீடுபட்டுப்பாடியிருக்கிறாரென்று கூறுவோம். அப்படிப்பட்ட சில பாடல்களைப்பலரிடம்—சிறுவரிடமும்—பெண்மக்களிடமும்—நாம் படித்துப் பொருள் கூறும்போது அவ்விடத்திலிருந்த யாவருடைய கண்களும் நீரைப் பெருக்கின. இப்படிப்பட்ட ஒரு அருநூலை இன்று தமிழ்நாடு பெற்றிருப்பது அதன் அதிர்ஷ்டமென்றே கூறுவோம். அரியநூலைத் தமிழ் நாட்டுக்கு உதவிய அம்மையாருக்குத் தமிழுலகு என்ன கைம்மாறு செய்தல் கூடும்? காகிதம் அச்சு முதலியனவும் அழகாக அமைந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் இந்நூலை வாங்கித் தமது சேம நிதியாகக் கொண்டு போற்றவேண்டுமென்று நாம் சிபார்சு செய்வதோடு கூடியவிரைவில் இந்நூல் தமிழ் மக்களது மனதின் கண் எழுதப்பெறவேண்டுமென்றும் விரும்புகிறோம். ஆனால் காலத்தைக் குறிப்பிடும்போது கி. பி. ஆண்டும் ஆங்கில மாதமும் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. அதற்குப் பதிலாக சகவருஷமும் தமிழ் மாதங்களுங் குறிப்பிடப்பட்டிருக்கலாமென்று நாம் கருதுகிறோம். இதன் விலை ரூபா ஒன்று. தபாற்கூலிவேறு. விலாசம்:— பண்டிதை— அசலாம்பிகை அம்மையார், திருப்பாதிரிப்புலியூர்.

உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு தை மீ	மணி ௧௦.

வணக்கம்.

விநாயகர்.

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்றன் மைத்துனனே மணிநீல கண்டத்
தென்னிளங் காய்களி றேயிமை யோர்சிங்க மேயுமையாள்
தன்னிளங் காதல னேசர ணுவுன் சரணங்களே.

—கபிலதேவர்.

முருகக் கடவுள்.

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் .... பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
காகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவனமேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியூர் வாழ்பொற் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

சாலிவாகன சகாப்தம்.

——:o:——

தி. நா. சுப்பிரமணியம்.

சாலிவாகன சகாப்தம் என்னும் பெயரைக் கேட்டிராதார் தென்னாட்டில் இல்லை என்பது நமது துணிபு. இஃது இந்தியாவில் வழங்கிவரும் இரண்டு அப்தங்களுள் ஒன்றாகும். அவை இரண்டுள் ஒன்று விந்தியமலைக்கு வடக்கேயும் மற்றொன்று அதற்குத் தெற்கேயும் உபயோகப்பட்டு வருகின்றன வெனச் சற்று ஏறக்குறையக் கூறலாம். தென்பிரிவில் உபயோகப்பட்டுவரும் சகாப்தம், அல்லது உலக வழக்கில் உள்ளபடி, சாலிவாகன சகாப்தம், கி. பி. எஅ-ம் வருஷம் மார்ச்சுமீ கஅஉ ஆரம்பிக்கின்றது.

விந்தியமலைக்கு வடக்கே முக்கியமாக குஜராத், மாளவம் அதைச்சுற்றிய நாடுகள் முதலிய இடங்களில் உபயோகப்பட்டு வரும் அப்தம், விக்கிரமாப்தம் எனப்படும். அது பூர்ணிமாந்தம் என்னும் கணக்குப்படி கி. மு. ருஎ-ஆ பிப்ரவரிமீ உஙஉ முதலும், அமாந்தம் என்னும் கணக்குப்படி கி. மு. ருஎ-ஆ ஸெப்டம்பர்மீ கஅஉ முதலும் கணக்கிடப்பட்டு வருவதாகும்.

சகாப்தத்தை பம்பாய்க்காரர்கள் கணக்கிடுவது நாம் செய்வதைக் காட்டிலும் ஒரு வருஷம் குறைந்தது. அது நடக்கும் வருஷத்தைக் குறிப்பதற்குப் பதிலாக நடந்த வருஷத்தைக் குறிப்பதால் ஆகிய தவறாகும். பூனா நகரத்து ஸர் ராமகிருஷ்ண கோபால பண்டாரகர் அவர்கள் இவ்வித்தியாசம் சாஸனங்களிலும் காணப்படுகின்றன என்பதை வெகு கஷ்டப்பட்டு நிரூபித்திருக்கின்றார். (Appendix I. to the Early History of the Deccan down to the Mohammadan conquest)

கி. பி. ஆறும் நூற்றாண்டில் வசித்துவந்த பிரபல வான சாஸ்திரியான வராகமிஹிரர் இந்திய சித்தாந்தங்களுள் பழமையான ஐந்தைப்பற்றி 'பஞ்சசித்தாந்திக' மென்று ஒரு நூல்

எழுதியிருக்கிறார். அவற்றுள் மிகப்பழமையானது "பைதாகம சித்தாந்தம்." அதன்முறைப்படி பஞ்ச ஸம்வத்ஸரத்தின் முதல் வருஷம் 'நடக்கும்' சக அப்தத்தின் மூன்றாவது வருஷமாகும் என (XII 2) வராகமிஹிரர் கூறுகின்றார். ஆகவே கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கு முன்பு அதிக நாளாக சகாப்தம் இருந்திருத்தல் முடியாதென்னும் கொள்கை வலியுறாது. இச்சகாப்தம் கணித சாஸ்திரத்திலும் மிகுதியாக உபயோகப்பட்டு வருகிறது. இந்திய பிரபல கணிதசாஸ்திரி B. தீக்ஷித் அவர்கள் தமது "பாரதீய ஜ்யோதிஷம்" என்னும் ஹிந்தி புத்தகத்தில் "கலியுகமும் சகாப்தமும் வானசாஸ்திரக் கணித நூல்களில் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் விக்கிரமாப்தமும் மற்றைய ஸம்வத்ஸரங்களும் அப்படி உபயோகிக்கப்படவில்லை" என (பக்கம் 372) க்கூறுகிறார். தவிர காலஞ்சென்ற J. F. Fleet துரை அவர்கள் "வானசாஸ்திர சம்பந்தமான கரணம் அட்டவணை பஞ்சாங்கம் முதலியவற்றுள் வருஷங்கள் "விக்கிர மாப்தத்தில் இந்த வருஷம் என எழுதப்படாமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்நூல்களில் எல்லாம் சக ஆண்டுகளாகவே காணப்படுகின்றன" என் எழுதி யிருக்கின்றார். (Journal of the Royal Asiatic Society 1913. P. 994.)

பாமரஜனங்கள் இவ்விரண்டு அப்தங்களையும் சாலிவாகன சகம் என்றும் விக்கிரமசகம் என்றும் கூறுகிறார்கள். அதனால் 'சகம்' என்னும் சொல் அப்தத்தைக் குறிப்பதாகின்றது. வடமொழி அகராதிகள் ஒன்றிலாவது 'சகம்' என்பதற்கு அவ்விதப்பொருள் உள்ளதாகக் காணப்படவில்லை. ஆனால் சரித்திரக்காரர்கள் 'சகர்கள்' என ஒருவகை சாதியினர் அக்காலத்திலும் அதற்குப் பின்பும் இமயம் முதல் கிருஷ்ணா வரை உள்ள நாட்டிற் பரவியிருந்தனர் என்பதை அறிவர். மத்ஸ்ய புராணம் பௌராணிக வமிசங்களுக்குப் பிறகு இந்தியாவை ஆண்ட வமிசங்களைப்பற்றிக் கூறும்பொழுது நந்தர், மௌரியர், ஆந்திரர்களைக் கூறிப் பிறகு 18 சக அரசர்களை உடைய ஒரு வமிசத்தைக் கூறுகிறது. அன்றி, பாணன் தனது

ஹர்ஷ சரிதத்தில் 'மாற்ருனது நகரத்தில் ஒரு சகவரசன் பிறன் மனைவியைப் பின்தொடரும் சமயத்திற் சந்திரகுப்தனுற் குரூரமாகக் கொல்லப்பட்டான்.' எனக் கூறுகிருர்.

வராகமிஹிரர் இந்த அப்தத்தைச் சககாலம், சக பூபகாலம், சகேந்திரகாலம் முதலிய தொடர்களாற் கூறுகின்ருர். ஏழாம் நூற்ருண்டின் துவக்கத்திலிருந்த பிரமகுப்தன் என்ற மற்ருெரு கணிதசாஸ்திரி 'சகநிருபஸ்யாந்தே' எனக் கூறுகின்றனர். ஆருரம் நூற்ருண்டின் கடைசியில் ஆண்ட மங்கலீசன் என்னும் சளுக்கிய அரசன் தனது சாஸனத்தில் இச் சகாப்தத்தைப்பற்றி "சகந்ருப-ராஜ்யாபிஷேக-ஸம்வத்ஸரேஷு-அதிக்ரமேஷு-பஞ்சஸு-சதேஷு" எனக் கூறுகின்ருர். இரண்டாம் புலிகேசி என்னும் அரசனது ஐகோல் சாஸனத்துப் 'பிரசஸ்தி' எழுதிய ரவிகீர்த்தியும் இதை 'சக அரசர்களது காலம்' எனவே கூறுகின்றனன்.

இவ்விதமாகவே விக்கிரமாப்தமும் முதலில் வேறு ஒரு பெயருடன் வழங்கி வந்திருக்கின்றது என்பது குமாரகுப்தன் என்னும் அரசன் மாலவ ஜாதியாரிடமிருந்து 493 வருஷம் கழிந்த காலத்தில் அரசாண்டிருந்தான் எனக் கூறும் மந்தஸார் சாஸனத்திலிருந்து நன்கு விளங்குகிறது. மேற் கூறிய சாஸனத்தைக் கண்டுபிடித்த காலஞ்சென்ற டாக்டர் பிளீட் விக்கிரமாப்தத்தைப் பற்றிக் கூறுமிடத்துப் பின்வருமாறு எழுதுவது கவனிக்கத்தக்கது:—

'புரொபஸர் கீல்ஹார்ன் அவர்கள் கி. மு. 57-ல் ஆரம்பிக்கும் அப்தமானது கி. பி. 473-லும், 532-33 லும் 'மாலவர் கணக்கு' எனவும், கி. பி. 879-ல் 'மாலவர் காலம் அல்லது அப்தம்' எனவும். 738, 1169 முதலிய வருஷங்களது சாஸனங்கள் மால மன்னரது வருஷம் எனவும்.................. .... 'விக்கிரம எனப்படும் எண்ணிக்கை'யைப் பற்றிக் கூறும் கி. பி. 842-ல் உள்ள சாஸனத்தில்தான் 'விக்கிரம' என்னுஞ் சொல் முதன்முதல் இதற்குச் சேர்க்கப்பட்டிருக்கிறது எனவும்......................இவ்வப்தம் சம்பந்தமாக விக்கிரமன் என்னும் அரசன் பெயர் முதன்முறையாக

கி. பி. 993-ல் எழுதப்பட்ட ஒரு செய்யுளால் அறியவருகிறது எனவும்.....................விக்கிரமாதித்தன் என்னும் சக்கரவர்த்தியால் இவ்வப்தம் நிலைநிறுத்தப்பட்டதென்பது கி. பி. 1198-ல் தான் முதலில் கூறப்பட்டிருக்கிறது எனவும் காண்பித்திருக்கின்ளுர்' (J. R. A. S. 1913. P. 994.)

மறுபுறமாக, நமது சகாப்தமும் இப்படியே பலவிதமாக வளர்ந்து வந்திருக்கின்றது. இதன் உற்பத்தியைப்பற்றிய கதைகளும் ஒவ்வொரு விதமாக வராகமிஹிரர் பிரமகுப்தர் முதலியோரது நூல்களுக்கு உரை எழுதியோர்களாலும், கல்ஹணன், ஆல்பெருனி முதலியோர்களாலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனல் யாவும், இஃது ஒரு குரூரமாகவும் கொடுமையாகவும் ஆண்ட ஓர் அரசனது வீழ்ச்சியையே ஞாபக மூட்டுகின்றது என்பதில் ஒத்து இருக்கின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

வராகமிஹிரரது 'சகேந்திரகால' என்னும் தொடருக்கு உரை எழுதும்பொழுது பட்டோற்பலர் (கி. பி. 996) "சகர்கள் என நீச அரசர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் விக்கிரமாதித்தனுல் வேரறுக்கப்பட்ட காலமே சககாலம் என வந்தது. ஆகவே 'சகேந்திரகால' (சக அரசர்களது கால முதல்) என்பது சக அரசர்கள் கொல்லப்பட்ட காலத்திலிருந்து எனப் பொருள்படும்" என எழுதிச் செல்கிருர்.

ஆல்பெருனி என்னும் மகம்மதிய யாத்திரிகர் (Alberuni] "மூல்டானுக்கும் லோனி என்னும் கோட்டைக்கும் மத்தியில் உள்ள கரூர்ப் பிரதேசத்தில் இருந்த ஒரு குரூர அரசன்மேல் விக்கிரமாதித்தன் என்னும் அரசன் கொண்ட வெற்றியைக் குறிப்பதாகும்" எனக் கூறுகின்ருர்.

கி. பி. 1300-க்குச் சமீபகாலத்திய ஜைனகதை ஒன்று "பிரதிஷ்டான புரத்திற் பிறந்த சாதவாகனன என்பான் உச்சயினி நகரத்திய விக்கிரமாதித்தன் படையெடுத்து வந்ததை முறியடித்ததும் பிரதிஷ்டான நகரத்திற்கு அரசனுக முடிசூட்டப்பெற்ருன். அவன் தப்திநதி வரை உள்ள நாடுகளைத்

தன்வசமாக்கி, இவ்வப்தத்தை ஏற்படுத்தி, ஜைன மதத்தைத் தழுவினான்" எனக் கூறுகின்றது.

ஆனால் தென்னாட்டில் மிகுதியாக வழக்கில் உள்ள கதை பின்வருமாறு:—“ பிரதிஷ்டான புரத்தில் ஓர் குயவன் வீட்டில் இரண்டு பிராமணர்கள் சிறுவயதுள்ள தங்கள் சகோதரியுடன் வசித்து வந்தார்கள். ஒரு நாள் அப்பெண் தண்ணீர் தூக்கிவரக் கோதாவரிக்குச் சென்ற சமயத்தில் நாகராஜனாகிய சேஷன் அவள் அழகைக்கண்டு மயங்கி, மனித உருவெடுத்து அவள் இஷ்டத்திற்கு மாறாகத் தன்னெண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். கால அளவில் அவள் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை சிறிது வளர்ந்ததும், தன் தோழர்களுக்குத் தான் ஒரு அரசனாக இருந்து விளையாடுவது வழக்கம். அவன் குயவர் வீட்டிற் பிறந்தவனாதலின், யானை, குதிரை, காலாள் முதலிய மண் பொம்மைகளை வேண்டிய அளவு செய்து அவற்றைப் படையாக உபயோகிப்பதும் வழக்கம். ஆகவே அவனுக்குச் * சாதவாகனன் எனப்பெய

---

* “ சாதம் தத்தானி வாகனானி யேன ஸக: சாதவாகன: ” இஃதன்றிச் சோமதவர் தனது கதா சரித் சாகரத்தில் சாதவாகனன் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் வேறு ஒருவிதமாகக்கூறுகிறார். அஃது பின்வருமாறு:—

சாதன் என்னும் யக்ஷன் ஒருவன் ஒரு முனிவரது குமாரத்தியுடன் வாழலுற்றான். ஆனால் அவர்களது கூட்டம் மற்றைய முனிவர்களுக்குச் சம்மத மில்லாமல் இருந்தது. அவர்களது சாபத்தால் யக்ஷனும் அவன் மனைவியும் இருசிங்கங்களாக மாறிவிட்டனர். சிறிது காலத்திற்கெல்லாம் பெண் சிங்கம் ஓர் ஆண்மகவைப் பெற்று உயிர்நீத்து முன் சரீரத்தை யடைந்தது. அப்பால் அம்மகவு தகப்பனான அரிமாவின் போஷணைக்குள்ளாகவே இருந்துவந்தது. அவ் வாண்சிங்கம் எங்குசென்றாலும் தன் குமாரனை முதுகின்மேலேற்றிக்கொண்டு செல்வது வழக்கம். அங்ஙனமாக ஒரு நாள் பையனை ஓரிடத்தில் இறக்கிவிட்டு பக்கத்தில் உள்ள குளத்திற்குத் தண்ணீர் குடிக்கச் சென்ற பொழுது, தீபகர்ணி என்னும் அரசன் ஒரு அம்பால் அச்சிங்கத்தைக் கொன்றுவிட்டான். யக்ஷனும் சிங்க உடலை நீத்து முன் உருவத்தை அடைந்தான். சாதன் என்னும் யக்ஷனை வாஹனமாகக் கொண்டதால் இச்சிறுவன் “ சாதவாஹனன் ” எனக் கூறப்பட்டான். (சாத:வாஹன: யக்ஷயஸ:) இங்ஙனமாகவே இன்னும் பல கதைகள் இருக்கின்றன.

ரிடப்பட்டது. அப்பொழுது உச்சயினியில், பட்டி வேதாளம் இவர்களுடைய உதவியைக்கொண்டு விக்கிரமாதித்தன் அரசாண்டுவந்தான். அவனுக்கு மரணம் ஒரு கன்னியின் குமாரனால் சம்பவிக்கப்போகிற தென்பதைக் கேள்விப்பட்டு அப்படிப்பட்டவன் தன் நாட்டுள் இருக்கிறானா என்பதை அறிந்துவர வேதாளத்தை அனுப்பினான். வேதாளமும் இச்சிறுவனைக் கண்டுவந்து விக்கிரமாதித்தனுக்கு உணர்த்திற்று. இச்சிறுவனை அழித்துவிடக் கருதி வேந்தனும் பெரும்படையுடன் நகர்ந்தான். ஆனால் சாதவாகனன் தன் தகப்பன் சேஷனாற் கற்றுக்கொடுக்கப்பட்ட ஒரு மந்திரத்தின் உதவியால் களிமண்ணாலாகிய படைக்கு உயிர் உண்டாக்கினான். அப்படையின் உதவியால் விக்கிரமாதித்தன் தோற்கடிக்கப்பட்டு சாதவாகனன் முடிசூடப்பெற்றான். அச்சம்பவத்தை என்றும் ஞாபகமூட்டுவதற்காக இச் சகாப்தம் ஏற்படுத்தப்பட்டது.

இது காறும் கூறியவாற்றால், சுமார் கி. பி. 78-க்குச்சமீப காலத்தில் மிகவும் வலியுற்றிருந்த சக அரசர்களைச் சாதவாகன அரசன் ஒருவன் அழித்து இவ்வப்தத்தை நிலைநிறுத்தினான் என எண்ணுவது இயற்கை. ஆனால் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் வேறுவிதமாக எண்ணுகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றிக் கூறியவர்களுள் முக்கியமானவர்களும் அவர்கள் கொள்கைகளும் பின்வருமாறு:—

க. புரொபஸர் ஒல்டன்ஸ்பர்க் (Prof. Oldensburg) பெர்குஸான் (Fergusson) முதலியோர்களால் கூறப்பட்ட கனிஷ்கக் கொள்கை. இஃது காபூல், பஞ்சாப் முதலியவிடங்களில் ஆண்ட குஷான் வமிசத்தைச் சேர்ந்த கனிஷ்கன் என்பவன் ஏற்படுத்தியதாகக் கூறுவதாகும்.

உ. அதே இடங்களில் ஆண்டுவந்த வேம காட்பைஸிஸ் (Vema kadphises II) என்பவன் ஏற்படுத்தியதாகக் கூறும் கொள்கை. (Epigraphia Indica) 'எபிகிராபியா இண்டிகா' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் புரொபஸர் ஸ்டென் குனோ (Prof. Sten Konow) அவர்கள் கூறுவதாகும்.

ந. பண்டிட் பகவன்லீலரன் இந்திராஜி அவர்களது 'நாக பாணன் என்னும் க்ஷஹராத்திர அரசன் ஏற்படுத்தியது' என்னும் கொள்கை.

ச. புதுவை டாக்டர் G. ழுவோ-துப்ரே, கன்னிங்ஹாம் முதலியோர்களது 'சஷ்டண'ன் என்னும் சக அரசன்உற்பத்தி செய்தது என்னும் கொள்கை. (இக்கொள்கை சாதவாகன அரசன் கௌதமி புத்திரனுக்கும் இடந்தரும்.)

மேற்கூறிய கொள்கைகள் எம்மட்டில் உண்மை என்பதை முறையே ஆராய்வோம். (தொடரும்)

சர்வம் சக்திமயம்.

:o:

ஸ்ரீமத் பிரபோதசைதந்யர்.

(சகஉ-வது பக்கத் தொடர்ச்சி.)

இனிச் செல்வம், வனப்பு, வெற்றியென்னும் இவற்றை மருவி மணிமுடிகவித்து நிலவலயத்தை யாளும் மன்னரைத் தமிழ்ப்புலவர் திருமாலாக மதித்துப் "பூவைநிலை" யென்னுஞ் செய்யுட் புனைந்தளிப்பார். இச்செயலின் உட்கிடையைக் கூர்ந்து ஆராயுமிடத்துப் பெரியதோர் உண்மை புலப்படுகின்றது. அஃது எதுவோ வென்னில், சத்தி எவ்வெவ்விடத்து வெளிப்படுகிறுளோ, அவ்வவ் விடத்துச் சத்தனும் வெளிப்படுவானென்பது. அங்ஙனமாதலிற் சத்தியுஞ் சத்தனும் தர்தான்மியத்தால் இருதிறப்பட்டு நிற்பரெனினும் உண்மையளவில் ஒருவராய் நிற்பாரென்பது முடிகின்றது. இக்குறிப்பினைப் பின்னரு மாராய்வாம். செல்வம், வனப்பு, வெற்றி என்னும் இவற்றினைப் பெருகப் பெற்ற சிறப்பினோராகிய மன்னர் திருமாலினமிசமாகுங்கால், இவ்விலக்கணங்களை அளவாகப்பெற்ற ஏனைய ஆடவரும் திருமாலினமிசம் ஆவாரோவெனின், ஆவாரென்பது. ஆண்டன்மை படைத்த ஆடவ ரனைவரும் புருஷோத்தமனாகிய நாராயணனுடைய அமிசமாகக்கருதப்படுவர். இயற்கை வனப்பு வாய்ந்து தமது நாயகருக்குச் சகல சுப சோபனங்

களும் வந்தடைவதற்குக் காரணராய் நின்ற கற்புடைமடவாரனைவரும் இலக்குமிதேவியின் அமிசமாகக் கருதப்படுவர். என்றிவ்வாறு ஆராயுமிடத்துக் காவற்கடவுளாகிய திருமாலும் திருமகளும் அனைத்துயிர்களினுஞ் செறிந்து நின்று செல்வம், வனப்பு, வெற்றி யென்னும் இவற்றை யுதவிப் பாதுகாத்து வருகிறாரென்பது பெறப்படுகின்றது. புருஷார்த்தங்களுட் பொருள் இன்பம் என்னும் இரண்டினையுந் துய்த்து அவற்றின்மேல் அருவருப்புற்று ஞானத்தைத்தேடும் பெரியோரே சங்காரகருத்தனைத் துதித்தற்கு அருகராவார்; பொருள் இன்பம் என்னும் இவற்றை விழைந்தோர் இலக்குமி தேவியையும் பதுமநாபனையும் இறைஞ்சுவதே மரபாகும்.

சர்வசங்கார காலத்துக்குப்பின் யாண்டும் இருள்கவிய நிறைந்த நீரின் மேற்பரப்பிலே ஆலிலை யொன்றின் மீது நீலமேனியோன் அறிதுயில் புரிவானெனவும், பின்னர் அவனது நாபியங்கமலத்தினின்று இரணிய கருப்பனாகிய பிரமதேவன் தோற்றுவானெனவும் அப்பிரமதேவன் பிராமி யென்னுஞ் சத்தியினுடைய உதவியினால் உலகங்களைத் தோற்றுவிப்பானெனவும் புராணங்கூறுகின்றது. ஆகவே பிராமி, வைஷ்ணவி, உருத்திராயணி என்னும் மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில் புரிந்து வருகின்றாரென்பது பெறப்படுகின்றது. சர்வசங்காரகாலத்து இருள் கன்று ஒளியும் உயிர்த்தோற்றமும் வெளிப்படுகிற படைத்தற் காலம் குணதிசையிற் பரிதியெழுகிற காலைப்பொழுதை நிகர்த்தது. வேதநூல் வல்ல அந்தணர்கள் காலைப்பொழுதில் நீரிறைத்து மலர்தூவிப் பிராமியென்னுஞ் சத்தியை வழிபடுவார்கள். உஷத்காலத் தோத்திரமாக வேதத்திற் காணப்படும் பதிகங்களும் உலகமாதாவாகிய பிராமிக்கு உரியனவே.

நவராத்திரி விரதத்தை யனுட்டிப்போராக இச்சபையிற் குழுமியிருக்கிறயாம் வழிபடுகிற தெய்வவுருவத்தின் மாண்பினையாராய்ந்து சிந்திப்போமாயின், அறிதற்கரிய இரகசியங்கள் பலவற்றை எளிதில் அறிந்து கொள்ளுவோம். யாம் இதுகாறுங் கூறிய பிராமி, வைஷ்ணவி, உருத்திராயணி என்னும் சக்தி

களும் பிறவும் அத்தெய்வ வுருவத்திற் றோற்றுவன. ஆங்குத் தோற்றும் மூர்த்திகளைத் தனித்தனி மூர்த்திகளாகக்கருது வோர் உண்மை தேரார். உரைமனமிறந்து நின்ற ஒருதனிப் பரம்பொருள் தானே தனது அருளினால் மக்களாகிய நாம் கண்டு தரிசிக்கும்படி வெளிப்படுத்திய அருளுருவம் அத்தெய்வவுருவம் என்பதையுளங்கொண்டு நாம் அத்தெய்வவுருவத்தைத் தியானித்தல் வேண்டும். அத்தெய்வ வுருவத்தி னடுவிற் பராசக்தியாகிய எம்மன்னை தோற்றுவாள். அவளாரோகணித்திருக்கின்ற சிங்கமானது வேதமுதலிய அனைத்துக்கலைஞானங்களும் ஒடுங்குகின்ற வாக்கு ரூபமாகும். மகிஷாசூரன் அஞ்ஞான ரூபம்; அவனை யழிக்கின்ற எம்மன்னையை ஞானரூபியெனத் தேவரும் முனிவருந் துதித்தேத்துவர். நடுவினின்ற திருவுருவத்தினிருபாலும் கலைமகளுந் திருமகளுந் தோற்றுவர். இவரிருவரையும் பராசக்தியினுடைய புதல்விகளென நாம் நமது மக்கட்டன்மைக்கு இயையக் கூறுவோமெனினும், உண்மையில் இவரிருவரும் பராசக்தியினின்றும் வேறல்லர். கல்விக்கிறைவி பராசக்தியினொரு அம்சம்; செல்வத்துக்கிறைவி மற்றொரு அம்சம். மேலும் ஒரு பாலில் ஞானகணேசனும், மற்றொருபாலில் அமரர் சேனாதிபதியாகிய குமரநாயகனுந் தோற்றுவர். கலை மகளுக்குச் சித்தி, புத்தி யென்னும் இரு புத்திரிகளுளரென்றும் அவரிருவரையுங் கணேசமூர்த்தி மணமுடித்தாரென்றும் பார்க்கவ புராணங் கூறுகின்ற இயல்பை நோக்குமிடத்துக் கலைமகள் கல்விக்கிறைவி யென்றும், அக்கல்வியினாற் பெறப்படுகின்ற அறிவு (புத்தி), அநுகூலம் (சித்தி) என்னுமிவற்றுக்குத் தலைவராக விளங்கும் பதியினைக்கணபதி யென வேதம் வழுத்திற்றென்றும் அறிவோம். இனிக் கலையனைத்துஞ் சார்ந்து நின்ற சத்தனை வேதம் இரணிய கருப்பனெனத் துதிக்கும். இங்ஙனந் துதிக்கப்படுகிற இரணிய கருப்ப (பிரமன்) னும், கலைமகளு (பிராமி) ம், சித்தி, புத்தியும், ஞான கணேசனும் பராசக்தியினது பரஞான ரூபத்துக்கு வாயிலாக நின்ற அபரஞான அம்சபாவாரே யன்றி வேறாகா ரென்பது பெறப்படுகின்றது. இனித் திருமாலின்

புதல்வி யரிருவரைக் குமர நாயகன் மணமுடித்தாரெனப் புராணங் கூறுகின்றது. தெய்வயானை யம்மையார் திருமாலுக்குப் புதல்வியா ராயதோடு தேவராஜனாகிய இந்திரனுக்கும் புதல்வியாராகிப் பொருளுக்குத் தலைவியாராக விளங்குவார். அன்பினைந்திணைப் பாலதாகிய இன்பத்துக்குரிய சத்தி வள்ளிநாயகியாரென்பது வெளிப்படை. அங்ஙனமாகவே, பொருள், இன்பம் என்னும் இரண்டினையும் திருமாலுக்குந் திருமகளுக்கும் புதல்விய ரெனக் கொள்ளுவதும் இவ்விரண்டினுக்குந் தலைவராக விளங்கிய வீரவேற்கரத்தரைத் திருமான் மருகரெனக் கொண்டு துதிப்பதும் மனிதராகிய வெமக்கு இயல்பேயாம். புராணக் கதையை யொருபால் வைத்துவிட்டுத் தத்துவ உண்மையை நாடுவோமாயின் திருமால், திருமகள், இந்திரன், குமரநாயகன், வள்ளிநாயகியார், தெய்வயானை யம்மையார் என்னும் அனைவரும் பராசக்தியினுடைய அர்த்த காம (பொருளின்ப) ரூபத்தின் அமிசமாவாரேயன்றிப் பிறிதாகா ரென்பது பெறப்படுகின்றது.

பரஞானம் மோக்ஷ சாஸ்திரப் பொருளாகும்; அபரஞானம் அதற்கு வாயிலாக நின்ற தர்ம சாஸ்திரங்களின் பொருளாகும். இவ்வாறு ஆராயுமிடத்து, நவராத்திரி காலத்தில் அம்மன் கொலுவிருக்கை யென நாம் பூசிக்கின்ற திருவுருவம் ஒன்றாகி இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்றினையும் தன்னுட் பொருந்தியதாய், அறம் பொருள் இன்பத்தையும் அவற்றின் நீங்கிய வீடு பேற்றினையும் அளிக்கு மியல்பினதாய் அஞ்ஞானத்தை யகற்றி ஞானத்தைத் தருகின்ற பரவொளியாய் வாக்கு மனாதீத கோசரமாகிய பரம்பொருளை யாம் சிந்தித்துத் துதிப்பதற் கியைந்த திருவுருவமாய் விளங்குவது. புருஷார்த்தங்க ளனைத்தினையும் வேண்டி நின்றோர் மங்கள ரூபியாகிய இறைவியைத் துதிப்பாராதலினால் யாமும் எம்மாலியன்ற தமிழ்மாலை புனைந்து அவளது மெல்லென்ற நீர்மையவாய சிற்றடியை உள்ளத்திலுஞ் சிரத்திலு மிருத்தித் துதிப்போமாக.

ஆயிரங் கதிரவ ரொருங்குதித் தனரெனப்
பாயிருள் சீக்கும் படிவமப் படிவத்து

இலங்கொளி நிறைமதி யேய்ப்பத் துலங்கும்
நுதற்கட் டீட்டிய நுண்சுடர்ச் சுட்டியொடு
கருமுகிற் கூந்த லிடைமிளிர் திருமுகம்
திருமுகத் தொளிர்வது சிறுபுன் முறுவல்

அதுவே,

அரியே றிவர்ந்து வாட்படை யேந்தி
எருமைப் பேரோ னுரனளித் திடுநாட்
சுரகுல முதல்வர்க் குவகையும் பரவா
அவுண மாக்கட் கச்சமுங் காட்டிய
நிலைய தாகலி னீள்கடல் வரைப்பினில்
அருள்பெறு வாருக் கருளுங் காட்டும்
மருள்பெறு மவர்க்கு மருட்சியுங் காட்டும்.

அவ்வழி,

திருவிழை மாந்தர் திருமகட் கண்டனர்
கலைவிழை மாந்தர் கலைமகட் கண்டனர்
அறநெறிச் செல்வோ ரறத்துமுதல் கண்டனர்
தவநெறிச் செல்வோர் தவத்துமுதல் கண்டனர்
சுற்றமுந் தொடர்பு நீக்கிய கொள்கைப்
பற்றறு மாண்பினர் பரவெளி கண்டனர்
யாயெனக் கண்டன மியாமு மாதலின்
வேத முதல்வியை மாதவப் பயனை
மலைக்கிறை பயந்த மழலையங் குழவியை
நீல மேனி நெடியோன் றங்கையை
யால முண்டவற் கரும்பெருந் துணைவியை
ஓமெனு முருவனை யுவந்தரு ளனையைச்
சேயைப் பயந்த செல்வியை யாய்தமிழ்
வளம்பொலி தருகென வழுத்தி
யுளங்கொண் டேத்துக முண்மைதேர் பொருட்டே.

ஐம்புலக் கட்டறுத்து யோக நிட்டையினால் உடலினின்று பிரிந்து பேரறிவாகிய சைதந்யத்தினோடு ஒன்றுபட்டு நின்ற மேலோர் உரைமன மிறந்து நின்ற பரம்பொருளை நேரிற்காணுவர். அப்பெருநீர்மையை யடைதற்குமுன் கல்வி, செல்வம், பெண்டு, பிள்ளை யென்னும் இவற்றைக் காதலித்து நிற்கின்ற யாம் பரம்பொருளை யெங்ஙனந் தியானித்தல் கூடும்? கடவுளை நினைக்கும்போது உருவம், குணம் என்னும் இவற்றோடு

கூடிய திருவுருவமே யெம்மனக் கண்ணுக்குத் தோற்றுகிற தாகலின் சத்தியையே யாம் அறிவோம்; உரைமன மிறந்து நின்ற சத்தனை யாமறியோ மென்பது பெறப்படுகின்றது.

" அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றித்
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டும் இரவியைப் போலவீசன்"

என்றும்,

" சத்திதா னதமாதி தானாகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னதியாகும் தரும்வடி வானவெல்லாம்
சத்தியுஞ் சிவமுமாகும் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன்வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே"

என்றுங் கூறிய அருணந்தி சிவாசாரியாரது திருவாக்கி னுண்மை யித்தொடர்பி னுளங்கொளற்பாலது.

மேல் யாம் புரிந்த ஆராய்ச்சியில் முத்தொழி லியல்பைச் சுருக்கமாக ஆராய்ந்தோம். எஞ்சிநின்ற திரோபவ அநுக்கிரக மென்னு மிரண்டினையும் பற்றி இரண்டொரு குறிப்புச் சொல்லி இவ்வுரையை முடிப்பாம். பிருதிவி, யப்பு, தேயு, வாயு, ஆகாயம், விந்து, நாதம் என்னும் ஏழு புவனங்களுக்கும் இறைவியாகி நிற்கு நிலையில் அருள்வடிவான பராசத்தியை முறையே வாணி, இலக்குமி, உமை, மகேஸ்வரி, மனோன்மணி, அபர வாகீசுவரி, பரவாகீசுவரி எனப் பெயரிட்டு வழங்குவோம். உரைமன மிறந்து நின்ற பரம்பொருளை இவ்வெழுவகைச் சத்திகளோடு இயைந்து நின்ற நிலையிற் றியானிக்கும் பொழுது பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், விந்து, நாதம் என்று இவ்வாறு தியானிப்பது முறை. இங்ஙனம் வெளிப்படுகிற சத்தன் சத்தியின் வேறல்லன். சத்திகளை மூவருந் தம்முள் வேறல்லர். திரோபவசத்தி மகேஸ்வரி யெனவும், அநுக்கிரகசத்தி மனோன்மணி யெனவும் உண்மை நூல்கள் கூறுவன.

" சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
யொத்துறு மகேசையாகி யுமைதிரு வாணியாகி

வைத்துறுஞ் சிவாதிக்கிங்கன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திறனின் ஞானிச னத்திற மவளுநிற்பள்"

எனுஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தை நோக்குக.

சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்புணர்ந்தாங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன் பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே.

அருண்ஞான ரூபியாகிய அன்னையினுடைய பெருமையைச் சொல்லுதற்கு விரும்பினேனாயினும் ஏழையேன் எங்ஙனஞ்சொல்ல வல்லேன்? நான்கு வேதங்களாலும் இருபத்தெட்டு ஆகமங்களாலு மியைந்த அணிமணிச் சிங்கசானத்தின் மீது அரசு வீற்றிருக்கின்ற எம் மன்னையினது திருவடி மலரிற் படிந்த ஒரு சிறு தூசியன்றோ சூரிய சந்திர நக்ஷத்திரங்களோடு விளங்குகின்ற இப்பிரபஞ்ச மனைத்தும்? இப்பிரபஞ்சத்திற் காணப்படுகிற பூதசக்திகளாகிய அனலை, (அனல், வெப்பம்) சுயம்பிரபை, (ஒளி) இசை மொழி, (ஓசை, சத்தம்) மின்னொளி, (மின்னலிற் காணப்படுகிறசத்து-Electricity), வசீகரி (காந்தசதது) என்னும் ஐந்து சத்திகளையும் வசப்படுத்திய பௌதிக சாஸ்திரிக ளவற்றி னுதவியால் நீராவிக்கப்பல், தூரதிருஷ்டிக் கண்ணாடி, வாத்தியக்கருவிகள், கம்பியில்லாத் தந்தி என்னும் அற்புதக் கருவிகளை யமைத்துச் செயற்கருஞ் செயல்களைச் செய்கிறார்கள். பருப்பொருட் டன்மையாகிய பூதாகாசத்தில் விளங்குகிற பூதசக்திகளை யறிந்து கொள்ளுதற்கு வன்மையில்லாத நாம் சிதாகாசத்தில் விளங்குகிற வாமை, சேட்டை முதலிய அட்ட சக்திகளையும, ஈசானி முதலிய ஐவகைச் சத்திகளையும், பராசக்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசக்தியினையும், உன்மனை, சமனை முதலிய கலைகளனைத்தினையுங் கடந்து பரவெளியிற் றனித்து நின்ற சிதாநந்த ரூபியையும் யாங்ஙனம் அறிய வல்லோம்?

மனோன்மணி, மகேஸ்வரி, இலக்குமி, சரஸ்வதி யென்று நாம் பெயரிட்டு அழைக்கின்ற பெண்பாலார் உண்மையில் தேவியினுடைய அம்சமே யெனப் பெரியோர் கூறுவாராதலினால்,

அன்னுருடைய மனத்துக்குத் துயர் விளைக்காதபடி அவரைப் பேணி நடந்து இம்மை மறுமைச் சுகங்களைப் பெற்று வாழ்வோமாக.

ஆராய்ச்சி—பெரியபுராணம்.

(Registered copy right.)

திருவாரூர் இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகர்.

[உகசுு-ம் பக்கத் தொடர்ச்சி.]

நமது சுவாமிகளும் "நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி, புந்தியாரப் புகன்ற வகையினல், வந்தவாறு வழாமல் இயம்புவாம்" என்பதால் நம்பி காலத்துக்குப் பின்னரே இப்புராணம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது உறுதிபெறுகின்றது. ஆகவே இராஜராஜ மன்னவன் என்ற முதலாம் ராஜராஜனது காலத்துக்குப் பின்னர் என்பது நிச்சயப்படும். தலையெல்லை இராஜராஜ மன்னவன் காலமான கி. பி. கஅ௫—க்கு கலி ச௦அசு ஆக வீரராஜேந்திரனென்ற இயற்பெயரினையுடைய ராஜாதிராஜன் காலமான கலி சகளக கடை யெல்லையாகும்.

இப்புராணம் பாடிய காலத்தை இதுதானென நிச்சயித்துச் சொல்லமுடியாதோ வெனின், இது பொழுது இருக்கும் சாதனங்களைக் கொண்டு கூறுதல் இயலாத காரியமாயிருக்கிறது. நமது சுவாமிகள் பாயிரத்திலேயே அநபாயன் கட்டளைகொண்டு சொல்கின்றேனென்பதாலும், இவ் " அநபாயன் " என்ற ப்பெயரைத் தரித்தவர்கள் பலரென்று முன்னர்க் காட்டினமையாலும், சரித்திரத்துக்குற்ற பெருஞ் சாதனமான கல்வெட்டுக்கள் முழுமையும் இதுகாறும் வெளியிடப் படாமையானும், வெளிப்பட்டவைகளுள்ளும் "படித்தவன் பாட்டைக் கெடுத்தான்; எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்பதற்கொப்ப அவரவர்கள் மனம் போனவாறு பொருள்கொண்டு உண்மைக்கு மாருகக் கொள்வதாலும், இது பொழுது நிச்சயமாகச் சொல்லவியலாது. ஆதலினலேயே பொதுவாகக் கூறினும்.

இனி ஒரு சாரார் இந்நூலுக்கு முதல்நூல் வடமொழி உபமன்யு பக்தவிலாச மென்றும், சிலர் அகத்தியபக்த விலாச மென்றும், சிலர் தமிழிலேயே கன்ன பரம்பரைச் செய்திகளைக் கொண்டு செய்ததென்

றும் கூறுவர். தமிழ்ப்புலவர்களிலும், தமிழபிமானிகளிலும் பலரும் இந்தக் கொள்கை யுடையோ ராவர். சின்னாள் முன்னர்க்கூட யாழ்ப் பாணத்தி னின்றும் வெளிவந்த தமிழ் உரை நடையான தேன் தமிழ்த்தனிமாட்சியின் ஆசிரியர் யாழ்ப்பாணத்து நல்லூர் திருவாளர் த. கைலாச பிள்ளை அவர்கள் "அறுபத்து மூன்று நாயன்மாருந் தமிழ் நாட்டினரன்றோ? இவர்களுடைய சரித்திரஞ் சொல்லு நூல் பெரிய புராணமன்றோ? அப்பெரிய புராணத்துக்கு முதனூல் உபமன் னியு பக்தவிலாசமன்றோ? அது வடமொழியி லுள்ளதன்றோ? சொ ற்பகாலத்துக்கு முன்னிருந்த இவ்வளவு பெரிய நாயன்மாருடைய சரி த்திரத்தைத் தாங்கள் எழுதி வையாமல் ஆரியத்தினின்றும் பெற்றவர்க ளுக்கு இந்த நடை ஏனடி! இடுப்பிலே கையேனடி!! உபமன்னியு வினுடைய நூலே பெரியபுராணத்துக்கும் முதனூலென்பதைப்பெரிய புராணம் திருமலைச்சிறப்பு ௩௭-ம் பாட்டாலறிக. அந்தப் பக்தவிலா சம் தமிழிலே உள்ளது என்பராயின், சேக்கிழார் நாயனார் சோழரா ஜாவுக்குத் தாம் அதையே எடுத்துக் கொடுத்து விடலாமே. புதிதாக ஒரு புராணம் பாடவேண்டியதில்லையே" என்பர். இது ஒன்றே யான் மேலே கூறியதை விளக்கப் போதியதாம். இதனுண்மை காண் பதே நமது நோக்கமாகும்.

இவர்கள் கூறிய ௩௭-ம் செய்யுள் பின்வருமாறு:—

" என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
யன்று சொன்ன படியா லடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
பின்றெ ளுதர வாலிங் கியம்புகேன் "

இவ்விதமாக முனிவர்களிற் றலைமைபெற்ற உபமன்னிய பக வான் விடாது பற்றின அடியாரான நம்பியாரூரரது செய்கையை அப் பொழுது சொன்ன காரணத்தினால், அடியவர்களதுபழமையான சிற ப்பைத் திருத்தொண்டத்தொகையின் உதவிகொண்டு அந்தொகையை விரிவாக இன்று என் ஆசையால் சொல்வேன் என்றார்.

என்று என்ற சொல்முன் " உள்ள வண்ண முனிவரன் உரை செய்வான்:வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய, வள்ளல் சாத்து மதிமலர் மாலையு, மள்ளு நீறு மெடுத்தணை வானுளன்" என்றது முத லாகத் "தேசமெல்லாம் விளக்கிய தென்றிசை, யீசர் தோணிபுரத்துட னெங்கணும், பூசனைக்குப் பொருந்து மிடம்பல, பேசிலத்திசை யொவ் வா பிறதிசை " என்று மாமுனியான உபமன்னியு பகவான் வன் றொண்டர் செய்கையைச் சொன்னார் என்பதைத் தழுவுதல் காண்க.

இவ்விதமாகச் சொன்ன படியால்; சொன்ன காரணத்தினால்; அவ்வளவு மாண்பிளையுடைய வன்றொண்டராற் கூறப்பட்ட திருத்தொண்டத்தொகையின் அடைவே கூறுவே னென்றார் சுவாமிகள். இது பெருமைக்குக்காரணமாய் நிற்கின்றதேயன்றி முதனூல் என்றுகொள்ளக்கிடக்குஞ்சொற்கள்தாமெவையென யாராய்வுழி ஒன்றும் கிடைக்கப் பெற்றிலோம். அன்றியும் உபமன்னிய பகவானுவது தாம் முழுக்கதையும் சொன்னதாக யாண்டுங் கூறினாரில்லை. எல்லோருக்கும் அத்தனும் எம்பெருமான் றந்த வருட்பாற்கடலுண்டு சித்தமார்ந்து தெவிட்டி வளர்ந்தவரான உபமன்னியர் சிவபெருமானிடத்து அன்பினராய முனிவர் பன்னூறுபேர் களங்கமற்ற மனத்தினராய், அரனிடைவைத்த மனத்தினராய்ச் சூழவிருந்தபொழுது (கரு) அவ்விடத்திலே உன்மனுகலையெனக் கூறத்தகுந்த ஆயிரங்கோடி சூரியர் ஒருங்கு கூடிப் பிரகாசிப்பதை யொத்த ஒளியொன்று தோன்றுதலும்; அதனைக்கண்ட யோகியரனைவரும் இஃதென்கொல் லென்ற வளவில் (கசு) ஐம்பெரும்பூதமாயும் முச்சுடராயு நின்ற இறைவனைச் சிந்தித்துத் தெளிந்து மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர் தம்மை மனத்துட்கொண்ட வன்றொண்டன் கைலயங்கிரி சார்கின்றானென்பதைத் தெளிந்து அத்திசைநோக்கித்தண்டனிட்டு உபமன்னிய பகவான் நிற்றதலும், அதனைக் கண்ட முனிவரர் என்னவென்று கேட்டனராக; (கஎ-கக) யாதவன் றுவரைக் கிறையாகிய மாதவன் முடிமேலடி வைத்தவனுன உபமன்னியபகவான் "தம்பிரானைத் தன்னுள்ளந்தழீ யவன், நம்பியாரூரன் நாம்தொழுந் தன்மையான்" என்றான்.

என்ற அளவிலே அவர்கள் அம்முனிவர்கோனை வணங்கி, "ஐய! அன்னவன் கதையைக் கேட்க விருப்புளோம்" என்றனராக; (உ0) முனிவரரும் அவ்வாறே ஆலாலசுந்தரர் அணுக்கத் தொண்டராயிருந்து கமலினி அநிந்திதையைக் காதலித்துப் பூமியிற் சனித்தது வரையில் விளம்பினர். (உக-உக) பின்னரும் மாதவர்கள் தென்றிசை யாதுகாரணத்தால் சிறப்புற்றதென அதன் காரணங்களையுந் தெரிவித்தனர்—என்பது புராணம். ஆகையாலே திருவாளர் த. கைலாசபிள்ளையவர்கள் கொண்ட கருத்திற்கிசைந்த சொல்லொன்றும் அங்கு காணப்படவில்லை.

இப்படிக் கொள்ளாமல் அடிஃபவர் என்றுள்ள இரண்டாமடி நான் காஞ்சீரை முதற்கண்ணெடுத்துக்கொண்டு பொருளுரைத்தல் பொருந்தாதோவெனின், பொருந்தா தென்பதும் காட்டுவாம். இயம்புகேன் என்ற முற்றுவினை சுவாமிகள் வாக்கு. எதை இயம்புகேன் என்ற கடாவிற்கு திருத்தொண்டத் தொகைவிரி இயம்புகேன் என்பது விடை.

எவ்வாறு இயம்புகேன்? என் ஆதரவால். எவ்விடத்து? இங்கு. எப்படிப்பட்ட திருத்தொண்டத்தொகை? சீர் திருத் தொண்டத்தொகை. யாருடைய சீர்? தொன்று அடியவர்சீர். என்ற கடாவிடைகளால் இயலாதேன்பது தேற்றம். பின்னரும் சுவாமிகள்

மற்றி தற்குப் பதிகம் வன்றொண்டர் தாம்
புற்றி டத்தெம் புராண ரருளினாற்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகை யெனப்
பெற்ற நற்பதி கந்தொழப் பெற்றதாம். (௩௭)
அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்த நாதனு நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாம லியம்புவாம். (௩௧)

என்று அழுத்தமாகக்கூறுவதால் இதற்கு முதனூல்கள் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியுமே யாம்.

இச்சான்றே யன்றி நம்பியாண்டார் நம்பி புராணமாகும் திருமுறை கண்ட புராணத்தும் "முறை பதினொன்றாக்கினார் நம்பி; ஆக்கியபின் திருத்தொண்டத்தொகை யடைவை யருளாலே, நோக்கியபின் நாயன்மார் நடங்கடைவும் தொழிற்பேறும், பாக்கியத்தால் இபமுகத்தோன் அருள்செய்த பகுதியினால், வாக்கியல்சேர் அந்தாதி அடைவே வகுத்தார்" என்று காணப்படுவதுங் கொண்டு இதற்கு முதனூல் வடமொழியிலில்லை யென்றுந் துணிந்து கூறலாம்.

இதுவன்றி அவ்வாறு வடமொழி இதற்குமுதனூலாயின், அதனில் தமிழ்ப்பெயர்கள்எல்லாம்அங்ஙனமே காணப்படுங்காரணந்தானென்னை? தேவாரம் பாடினாரென்று கூறப்படுவதல்லது திருத்தொண்டர் புராணம் போன்று இன்ன அடியையுடைய பாசுரத்தைப் பாடினாரென்று கூறாததுதா னென்னை? இவைகளுக் கெல்லாம் தக்க விடை யிறுக்க வியலாது. ஆயினும் சிலர் கொண்ட கொள்கைகளை மக்களாய்ப் பிறந்தார் அறவே நீக்க முடியாததொன்றாம். உண்மை காண்பதே நமது கடமையாகலின் இத்துட னிறுத்துவாம்.

ஒரு வகையாகப் பெரியபுராண வாராய்ச்சியை முடித்தற்கு வல்லமைதந்த அருட்பெருஞ் சோதியாம் முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றாம்.

தமிழ்ப்புலவர்கள் அகராதி வரிசை.

(சஉஉ-வது பக்கத் தொடர்ச்சி.)

ச

சரவணபிள்ளை—மாயூரம்
சரவணப்பெருமாளையர்
சரவண கவிராயர்
சரவணமுத்துப் புலவர்
சரவணமுத்துப் பாரதி
சல்லியன் குமரன்
சவ்வாதுப் புலவர்

சா

சாண்டிலியன்—கடம்பனூர்
சாகலாசனர்
சாதேவனர்
சாதேவனர் ஆமூர்கௌதமன்
சாத்தன்
சாத்தனர்
சாத்தனர் ஆவூர்மூலங்கிழார்மகனர்
சாத்தனர் ஆலம்பேரி
சாத்தனர் உறையூர் முதுகண்ணன்
சாத்தனர் ஒக்கூர்மா
சாத்தனர் கருவூர் கதம்பிள்ளை
சாத்தனர்—பிரான்
சாத்தனர் பெருந்தலைச்
சாத்தனர் வடமவண்ணக்கன் பெருஞ்
சாத்தனர் வண்ணக்கன்
சாத்தியார்
சாத்தந்தையார்
சாமிநாதையர்—வே.
சாமிநாதகவிராயர்
சாமிநாததேசிகர்—இல-கொத்து
சாமிநாததேசிகர் கொட்டையூர்
சாமிநாததேசிகர் சு.
சாமிநாத பிள்ளை
சாமினாத பிள்ளை வித்வான்
சாமிநாத முதலியார் ஐ.
சாந்தலிங்கக்கவிராயர்
சாந்துப்புலவர்
சாஸ்திரம்ஐயர்

சி

சிகண்டியார்
சிங்கக்குட்டி சீரியர்
சிதம்பரஐயர்
சிதம்பரசுவாமிகள்
சிதம்பர தேசிகர்
சிதம்பர பிள்ளை சேலம்
சிதம்பரநாததேசிகர்—இ. வி. பரம்பரை
சித்தம்பலபுலவர்
சித்தம்பலமுதலியார்
சிந்தையசெட்டியார்
சிவக்கொழுந்துதேசிகர்
சிவசம்பு புலவர்
சிவஞானதேசிகர்
சிவஞான முனிவர்
சிவப்பிரகாசசுவாமிகள்

வில்வம்.

அ. வேங்கிடாசல முதலியார்-

தமிழ் நாட்டு மகா மூலிகைகளில் துளசியைப் போலவே வில்வமும் மகிமை மிக்க சிறந்த சித்தௌஷத சஞ்சீவியாம். நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு மூலிகையும் தெய்வீக சக்தி வாய்ந்ததென்று நமது சாஸ்திர, அநுபவ, கைவல்ய முறைகளைக் கொண்டு எவ்வளவு சொல்லினும் எழுதினும் நவநாகரிகப் பெருங் களிப்பில் ஆழ்ந்துள்ள நந் தமிழ்நாட்டு மக்களே தற்காலக் கல்வியின் பயனாய் நம்பார்கள். நம்பாததோடு நில்

லாமல் "இது சுத்த கர்நாடகம்" என்று பரிகசிக்கவும் முன் வருவார்கள். எனவே, துளசியைப் போலவே வில்வத்தையும் எல்லாம் வல்ல கடவுள் ரூபமாகவே கொள்ளும் ஆஸ்திகர்களுக் கன்றி ஏனையோர்க்கும் இம்மகா மூலிகையின் அரிய குணம் உப யோகமாகுமாறு இதிலுள்ள ஔஷத சக்தியை மட்டில் எடுத்து க்காட்டுதல் பொது நன்மையும் தேச சேவையும் ஆம் என க்கொண்டு அன்பர் சிலர் விருப்பப்படி சில முக்கிய குணங்களைக் கீழே காட்டுவாம்.

நமது நாட்டில் சாதாரணமாய் எங்கும் உள்ள மர இன மாகிய வில்வம், (க) வேர், (உ) பட்டை, (ந) இலை, (ச) பூ, (ரு) பிஞ்சு, (சு) காய், (எ) பழம், (அ) விதை, (கூ) பிசின், (க0) குடுக்கை—எனப் பத்து விதங்களாய் உலகத்திற்கு உத வி புரிகிறது. இவ்விதம் தனித்தனியாகவே யன்றிச் சிற்சில கூட்டுச் சரக்குகளுடன் சேர்ந்து, கியாழம், பானம் (ஷர்பத்), ரசாயனம், லேகியம், தைலம், எண்ணெ, தீநீர் (திராவகம்), புதை நீர் (ஆசவாரிஷ்டம்) முதலிய பாக பேதங்களாகவும் உரு மாறி உடலைப் போஷிக்கின்றது. 'வில்வம் பெருஞ் செல்வம்' என்பதும் வைத்தியர்க்குள் வழங்கும் பழமொழி. துளசியை ப்போலவே வில்வமும் தக்க சமயத்தில் மிக்க உதவி செய்ய க்கூடியதா யிருப்பதால் வைத்தியர்களுக்குப் பெருஞ் செல்வ மாய் விளங்கி வருகின்றது.

க. வேர்.

ஒரு மரத்தின் ஜீவாதார மத்தனையும் வேரிலேயே பொருந் தியிருப்பதனாலேயே, சுகாதார விதி முறைகளை வகுத்த பெரி யார்கள் எந்த மூலிகையை எடுப்பினும் முதன் முதலாக அதன் வேரையே மூல காரணமாகக் கொண்டு ஜென்ம வியாதிகளே யல்லாது கன்ம வியாதிகளையும் போக்க விதிகளை யமைத்துள் ளார்கள். அன்றியும் பல்வலி, கண் பூவிழுதல் முதலிய இதர பல வியாதிகளுக்கும் வேர் பிடுங்குதல் என்னும் முறையை யும் ஸ்ரீ அகஸ்தியராதி மகான்கள் ஏற்படுத்தி யுள்ளார்கள். எனவே, ஓஷதிகளின் முக்கிய குணம் அவற்றின் வேரிலே

யே அமைந்திருப்பதால், இந்த வில்வத்தின் சிறப்பை அதன் வேர் ஒன்ருலேயே தெரிந்து கொள்ளலாம்.

வைத்திய சாஸ்திரங்களைக் கைம்மாறு கருதாது வெளியிட்ட அகஸ்தியாதி மகரிஷிகள் எல்லோரும் வில்வத்தைப் பற்றிக் கூறுங்கால், வில்வாதி, லகு வில்வாதி,' மகா வில்வாதி, ஆனந்த வில்வாதி, சரபுங்க வில்வாதி என்ற பெயர்களாலேயே லேகியம், கிருதம், எண்ணெ, தைலம் என்ற வகைகளால் முடிக்கின்ருர்கள். இவற்றில் முக்கியமாய் ஸ்ரீ தந்வந்திரி பகவான், ஸ்ரீ அகஸ்திய மகா முனிவர், ஸ்ரீ தேரையமகரிஷி முதலியோரே இந்த வில்வத்தைப்பற்றி வெகுவாய் ஆங்காங்கு [துளவ முறை வில்வம்—துளவம் போன்றுதவு கூவிளம் —துளவமே வில்வம் என] துளசியைப் போன்ற குணமுள வில்வம் எனச் சுட்டிக் காட்டிச் செல்லும் முறைகளிலெல்லாம் வில்வ வேரையே வில்வப் பொதுவாக எடுத்தாண்டு செல்கின்றனர். எனவே, வில்வ வேரைக் கியாழம், வெந்நீர் ஊறல் கியாழம், தீநீர், புதைநீர், சூரணம், லேகியம், தைலம்- எந்த முறையிலாவது தினக் கிரமமாய் உபயோகித்துவரக் கீழ் கண்ட வியாதிகள் இருந்த விடந் தெரியாது மறைந்து போவதுடன் கெர்ப்ப வாசத்திற் பிறக்கும் சந்ததிகட்கும் சதா சர்வ காலமும் வைத்தியச் செலவும் வைத்தியர் தயவும் இல்லாமலே செய்து கொள்ளலாம். அத்தகைய ஔஷத முறைகள் சிலவற்றையும் இங்கு எழுதலாமாயினும் நீண்ட வியாசத்திற் கிடமிராதென்க்கொண்டு சிற்சில மேற் குறிப்புகளோடு செல்லலே முறையாம்.

வில்வ வேரால் தீரும் வியாதிகள்.

க.	குன்மம்	அ.	நீரேற்றம்
உ.	வாயு	கூ.	சன்னி
ங.	கபம்	க0.	தேகவலி
ச.	பித்தம்	கக.	நெஞ்செரிவு
ரு.	சோபை	கஉ.	விஷபாண்டு
சூ.	கபதாகம்	கங.	மயக்கம்
எ.	கபசுரம்	கச.	மருந்தின் வேகம்

கரு. இடுமருந்து
கசு. இருதயத் துடிப்பு
கஎ. கடுப்பு
கஅ. அக்கினி மந்தம்
கசு. அரோசகம்
உ0. அதிசாரம்
உக. விக்கல்
உஉ. பித்த சுரம்
உ௩. வாந்தி
உச. சுட்கநோய்
உரு. கரும் பித்தம்
உசு. ஈளை
உஎ. காசம்
உஅ. அஸ்திசுரம்
உசு. எலும்புருக்கி
௩0. பைத்திய ரோகம்
௩க. சித்தப்பிரமை
௩உ. மறதி ரோகம்
௩௩. சுழலை
௩ச. மூர்ச்சை—முதலியன

இவற்றுள் கரும் பித்தம் மகா அபாயமான ரோகம். இதனால் நகம், பல், நா, கண்ணின் வெள்ளை விழி முதலிய யாவும் நீல நிறமாக்கருத்து, கருநிறமான வாந்திகண்டு மரணமும் சம்பவிக்கும். இதனை விஷபித்தம் என்றும் நூல்கள் கூறும். மரணத்தைத் தரும் மகா கொடிய ரோகத்தையும் நீக்கும் வன்மையுள்ளது வில்வ வேர் என்றால், இதன் அரிய குணத்தைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். இங்கு கரும் பித்தம் என்பது காலனையும், வில்வ வேர் என்பது கால காலனையும், அவ்வியாதியால் வதைப்படும் தேகம் என்பது மார்கண்டேயரையும் உவமிக்கும். எனவே மறலி கொல்லி என்ற பெயரும் வில்வத்திற்கு வைத்திய பரிபாஷைகளில் வழங்கி வருதல் அநுபவமே.

உ. பட்டை.

வில்வத்தின் பட்டை பொதுவாக மேக ரோகங்களை நீக்கும் குணமுடையது. இதுவும் வேரின் குணத்தில் சரிபாதி பலனைத் தருவது. தற்கால நாகரிக குடியர்களாகிய காப்பிக் குடியர்கள், காப்பிக்கொட்டை அஸ்கா என்னும் மணல் சர்க்கரை இவற்றை நீக்கி வில்வப் பட்டை அல்லது வேர் அல்லது இலை இவற்றில் ஏதாவதொன்றைக் கொத்தமல்லி விதை, நன்னாரி வேர் இவற்றுடன் கலந்து பனங்கற்கண்டு அல்லது பனைவெல்லம் கூட்டிக் குடித்து வருவார்களாயின், அந்தக் காப்பிக் குடியாலுண்டாகும் தாதுக்ஷீணம், நீத்தல், ஜலம் போலாதல்,

துரித ஸ்கலிதம், சொர்ப்பன ஸ்கலிதம், கோழி சிட்டுக்குருவி போன்ற பயனற்ற வாழ்க்கை, சகல உஷ்ணம், மூலம், பவுத்திரம், சக்தி யில்லாமை, நீர்த் துவார ரோகங்கள், மறதி, தூக்கமின்மை, பெருந்துயில், சோம்பல், மயக்கம், தியக்கம், முன் கோபம், வெயில் தாளாமை, தேகச்சூடு, மேகச் சூடு முதலிய உஷ்ண பித்த ரோகங்கள் பலவும் கண் காணுதோடும். உஷ்ணமும் பித்தமும் மீருதிருக்கின் தேக நிலை மாருதிருக்குமென்பது அநுபவம். பட்டையை உபயோகிக்கும்போது மேல்கரடான புறணி நீக்கிச் சேர்க்கவேண்டும். பட்டை எடுப்பதில் மரத்தின் மேல்பாகத்தை விடப் பூமியைச் சேர்ந்துள்ள அடிப்பாகம் விசேஷமானது. இதைவிடப் பூமிக்குள் மண் அல்லது மணலில் மறைந்துள்ள கீழ்ப் பாகம் பின்னும் விசேஷமானது. இதை விட ஒரு ஜாண் அல்லது முழம் ஆழத்தில் உள்ள முற்றப் பெருத்த வேரின் பட்டை மிகச் சிறப்பானது. இது முன் கூறிய வேர் (சல்லி வேர்—சிறு வேர்) போன்றே பற்பல ரோகங்களையும் கண்டிக்கும்.

ரு. இலை.

வில்வ யிலை யென்று நினைக்கும்போதும், சொல்லும்போதும், எழுதும் போதும் திரிமூர்த்திகளில் ஒருவராகிய திரிபுராந்தக மூர்த்தியும் ஸ்ரீ மகா லட்சுமிதேவியும் எதிரில் திவ்ய சேவை சாதிப்பதாகத் தோற்றும். திரிபுராந்தக மூர்த்திக்கோ வில்வ தளம் அர்ச்சனைக்குரிய மிகப் பிரியமான உத்தமோத்தம பூஜா திரவியம். ஸ்ரீ மகா லட்சுமிக்கோ வில்வக்கொழுந்து உறைவிடம். வில்வத்தளிரும் வில்வக் குடுக்கையும் ஸ்ரீ லட்சுமி பலமென வழங்கல் உலக வழக்கு. வில்வ இலையை முன் சொன்னபடி காப்பிக்குப் பதில் காலைப்பானமாக உபயோகித்து வர மேக ரோகங்கள் விலகும். கலங்குமா என்னும் சிகித்சாப் பொடி (சிக்சாப்பொடி—கதம்பப் பொடி) யாக இடித்து தேகத்தில் தேய்த்துக் குளித்து வர, தேகத்தில் காணும் வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், முடை நாற்றம் முதலிய துர்நாற்றங்களும், தேகத்தில் உப்பு பூத்தல், மா உதிர்தல், சொறி, சிரங்கு, தினவு காணல் முதலியனவும் தீரும். துளசிக்

குள்ளது போலவே இதற்கும் விஷக் கிருமிகளைக் கொல்லும் சக்தி ஒரு சிறிது இருப்பதால், தொற்று நோய்கள் பல தோன் றாதழியும். இவ்விபரம் (துளசி) என்ற தனி வியாசத்தின் கீழ் வியக்தமாய் வெளிவரும்.

வில்வக் கொழுந்து:—ஜலமேகம், தீராத உஷ்ணம், வெள் ளை, வெட்டை, விந்து க்ஷீணம், பாண்டு, சோகை, வீக்கம், கண் சிகப்பு முதலிய வற்றை நீக்கும். பூச்சி கடிக்காத வில் வத் துளிர் மூன்று, வால்மிளகு மூன்று இரண்டும் அதிகாலை யில் சூரியோதயத்தின் முன் மென்று தின்று, வெள்ளாட்டின் பால் அரைக்கால் அல்லது வீசம்படி உடனே அருந்திவர பல வித நீர்ரோகம், மேக ரோகம், மூல ரோகம் முதலிய நீங்கும். ஆயின் இப்படித்தொடர்ந்து ஒன்றிரண்டு மண்டலங்கள் சாப் பிட்டுப்பின்னும் அவ்வளவு நாள் வரையில் மதுவகை, மச்ச மாமிச வகை, புலால்வகை, புகை (பீடி சிகரெட், சுருட்டு, பொடி) வகை, பெண் சம்சர்க்கம், பகலுறக்கம், இரா விழிப்பு முதலிய நீக்கித் தேகத்தைக் காப்பரேல், இதன் அனுபவத்தை அவரவரே நேரில்பரீக்ஷிக்கலாம். இதுவோ சிறிய முறை; அரி யகுணம். சூட்சம வித்தை; மாட்சிநிகரற்றது. இவ்வாறு உண் போர் அதிகாலையில் ஸ்நாநம் செய்து, நகம் படாமல் வில்வ தளக்கொழுந்தை, ஸ்ரீ விநாயகர், வள்ளி நாயகர், சபாநாயகர், பாற் கடற்பள்ளி நாயகர், உமாதேவி, ரமாதேவி இவர்களில் எவரை யேனுஞ் சிந்தித்து, வந்தித்து, ஸ்ரீ சடாட்சர, பஞ் சாட்சர, அஷ்டாட்சர மகா மந்திரங்களில் ஒன்றைத் தியானி த்துத்திரிகரண சுத்தியுடன் கொண்டு வர உப்புவர்த்த பாண்ட மும் செப்புச் சிலையாம்.

"பச்சிளங் கூவிளம் பத்தியோ டுண்டிடில்
நிச்சயஞ் சொன்னோம் நெருப்புங் குளிர்ந்திடும்
அச்சமு மில்லை யழகாந் திருமேனி
வச்சிரம் போலவே வந்திடும் விந்துவே."

௪. பூ.

வில்வப்பூவை காலத்தில் எடுத்து பத்திரப்படுத்திக்கொண் டு வேண்டுங்கால் வேப்பம் பூவை உபயோகிப்பது போல்

தொகையல், இரசம், குழம்பு முதலிய பாகங்களாகச் செய்து உபயோகப் படுத்தி வரலாம். பச்சையான புதிய பூவை மற்றும் சில ஔஷதச் சரக்குகளுடன் சேர்த்து, ஓமத் தீநீர், சோம்புத் தீநீர் இறக்குவது போல பட்டி. கட்டி வாலைத் திராவகம் இறக்கி வைத்துக் கொண்டு அவசியமான போது உபயோகித்துக் கொள்ளலாம். இப்பாகங்களால் சிசுக்கள் முதல் பெரியவர்கள் வரையில் மந்தம், அஜீரணம், அஜீரண பேதி, வாந்தி, வாந்தி பேதி முதலிய குடலைப் பற்றிய ரோகங்கள் நீங்கும்.

ரு. பிஞ்சு.

விதையும் ஓடும் முற்றாத மிகவும் இளம் பிஞ்சுகளாக எடுத்து மாம்பிஞ்சுகளை வடுமாங்காய் போடுவது போல ஊறுகாய்களாக பாகப் படுத்திக் கொண்டு பழைமையான பின் உபயோகித்து வரலாம். அல்லது மாங்காய் நெல்லிக்காய் முதலியவற்றை தித்திப்பு (முறப்பா) முறையில் கற்கண்டுப் பாகில் பாகப்படுத்திக் கொண்டும் உண்டு வரலாம். இவ்விரண்டில் கார்ப்புச் சுவை வேண்டுவோர் முன்னதையும் இனிப்புச்சுவையை விரும்புவோர் பின்னதையும் செய்து கொள்ளலாம். எனினும் முன்னதே வாதபித்தமாதி மூத்தேகிகட்கும் பொருத்தமானது. ஔஷதமாகவேயல்லாது போஜன பதார்த்தங்களுடன் ஊறுகாய் வகைகளில் இதுவும் ஒன்றாக நின்று, ஆகாரமாய் உட்சென்று, ஔஷதமாய் ரோகங்களை வென்று தேகசுகத்தை நல்கும் குணமுடையதாகும்.

தமிழ் வசன நடை.

பண்டிதை சு. பாலாம்பிகையம்மாள்.

தமிழ் மொழிக்கு நன்னாளணுகியது போலும். எம்மொழிக்குற்ற துயர் எம்மொழிக்கும் நேர்ந்திலது. வழங்காமொழிகளாகிய ஆரியம் முதலியனவும் நிறைவுற்றுள்ளன. நம்மன்

னையார்க் குற்ற நோய்க் கொடுமையை யோர்ந்திரங்கி அதனைத் தீர்க்க முயலுவார் இந்நாளிற் பலர். தமிழ்ச் சங்கங்களும், தமிழ் நன்மை நாடும் நூல்களும் பல தோன்றிப் பெருமுயற்சி செய்து வருகின்றன. ஆதலின் தமிழ்க் குற்ற நோய்களையும், தீர்க்கு முறைகளையும் இந்நாளில் உரைப்பது சாலப் பயனுறுமாகலின் இஃதெழுந்ததாமென்பது.

சொல்லினுஞ் சொற்றொடரினும், உரையினும் பொருளினும் எம்மொழி மிகவும் குன்றியது. சொற்குறை இருவகைத்து. அவற்றுள் ஒரு வகையில் ஆட்சியற்றவை. சங்க நூற் சொற்களில் பாதிப் பங்கு இந்நானூல்களிற் காண்கிலம். முப்பானாண்டின் முன் வழங்கிய பல சொற்கள் மாய்ந்தன. ஒண்ணுமை, உஞற்றுதல், உடன்பிறந்தான், உசாவுதல், சிவணுதல், எங்குற்றான், கழுவாய், பட்டாங்கு, இச்சொற்களை இந்நாளில் எந்நூலில் யார் வாயிற் காண்பது?

இவ்வாறு தமிழ் மொழிகளை யெல்லாம் விழுங்கியது வடமொழியே. மணத்தை விவாகமும், சுவடியைப் புஸ்தகமும், தந்தை தாயைப் பிதா மாதாவும், சிறப்பை விசேஷமும், பொதுவைச் சாதாரணமும், மக்களை மனுஷரும் ஒழித்தன பிறவுமன்ன. இங்ஙனம் தனிச்சொற்கு வடமொழியாலுற்ற புன்கணாற்றொணாதது. மற்றோரினம் ஒரு வகைப் பகுமொழிகள் அன்னாளிற் காலங் காட்டு மீறுகள் ஆட்சியிற் பொலிந்தன. வருதும், சென்றும், செறீஇ முதலியன இந்நாளிற் றொழிந்தன.

தொடர்மொழிக்குற்ற இடரிதனினுங் கொடிது. இந்நாளிற் றொடர்மொழிக்கெல்லாம் வடமொழிக்கே செல்வோம். தமிழ் மொழியைக் கெடுக்க ஆற்றவும் மஞ்சுகின்றேம். கல்விக் காப்பு என்பதற்கு வித்தியா பரிபாலனம் என்றும், மேன்மக்களன்பன் என்பதற்கு ஆரிய சனப்பிரியன் என்றுங் கூறுகின்றேம். முன்னாளிற் றொடர் மொழிகளை வேண்டியவாறு கண்டனர். பாட்டாண், கொண்டு கூட்டுப் பொருள்கோள், ஒப்புடை, இடைப் பிறவரல், புக்கில் முதலிய தொடர் மொழிகளை இந்நாளிலாக்கக் கருதேம்.

சொற்றொடரும் பல்லாற்றானும் வலி குன்றியது. அதன் வனப்பாவது அதன் சுருக்கமே. "நுண்மாண் நுழைபுலமில் லான்" என்பதனை இந்நாளில் நுண்ணியதாய் மாட்சிமைப்பட் டுப் பல நூல்களினும் நுழைந்த அறிவைப் பெறாதவன் என் றும் "மலிமெய்து" என்பதனை மலமானது என்ன தன்மை யுடையது என்றும், "மகனெனல்" என்பதனை மகனென்று சொல்லாதிருப்பீராக என்றும், "எப்பொருட்டு" என்பதனை என்ன பொருளையுடையது என்றும், "எய்த்த மெய்யன்" என் பதனை இளைத்த உடம்பை யுடையவனாயிருக்கிறான் என்றும் நீட்டியென்றும் நீள உரைக்கிறோம். அன்றியும் தமிழ் முறை க்கு மாறான ஆங்கில முறையைத் தழுவுகிறோம். சொற்றொடரி னிருமருங்கும் ஒத்த அளவினவாய்த் தலைபோனிற்கும் பண் பினைக் கருத்தினுங் கொள்கிலம். இன்ன மாண்புகளிற்றமை யே யன்றிப் பல்வகை முறைக் கேடுகளுமுற்றன. அன்றியும் புதினங்க ளெழுதுவோரும், புதுக் கதைகளியற்றுவோரும் மொழிவழு, இலக்கணவழு முதலிய வழுக்கள் பொலியவெழுதி நம்மொழியைக் கீழ்மொழியாக்குவர்.

பொருளாட்சியோவெனின் மிகவுஞ் சுருங்கிற்று. தமி ழில் ஒரு பொருளுக்குப் பல சொல்லுள்வேனும் அவைகளப் பொருளின் வேறுபாடுகளை யேனும் வேறு தன்மைகளையேனும் உணர்த்தி யிருத்தல் வேண்டும். (நிகண்டு) பேதை, பெதும் பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண், இம்மொழிகளனைத்தும் பெண் மக்களையே குறிக்கினும் ஒவ் வொன்றும் முறையே எழு, பதினொன்று, பதின்மூன்று, பத் தொன்பது, இருபத்தைந்து முப்பத்தொன்று, நாற்பது முதலி ய வயசுப் பருவப் பெண்களையே குறிக்கும். மக்கள் மாக்கள் என்னுமிரண்டும் மனிதரைக் குறிக்கினும் மாக்கள் மூடரையே குறிக்கும். "மாவு மக்களுமை யறிவினவே, பிறவுமுளவே யகிளைப் பிறப்பே" (தொல், பொரு) இந்நாளிலவ் வேறுபாடு களைக் காண்கிலம். இக்குறையினாலா யிரக்கணக்கான சொற் கள் வீணாய்க் கிடக்கின்றன. அநேக கருத்துக்களைக் குறிக் கச் சொற்களுமில்லை.

தமிழில்வான சாத்திரம், சங்கம சாத்திரம், ரசாயன சாத்திரம் முதலிய சாத்திரங்களில்லை. வடமொழியிலிருந்தேனும், பிறமொழிகளிலிருந்தேனும் தமிழி லியற்றப்படல்வேண்டும். அவைகளி லியன்றளவு பழைய தமிழ்ச் சொற்களமைத்துத் தமிழைப் பொலியச் செய்தல் வேண்டும். பத்திராதிபரும், பாலபாடம் முதலிய நூல்களியற்றுவோரும் தத்தம் பதினங்களிலும், நூல்களிலும் பழைய சொற்கள் வழங்கி வரச் செய்தல் வேண்டும். ஆட்சியில்லாத சொற்களின் அகராதியியற்றல் வேண்டும். ஒரு பொருட் சொற்களின் வேறுபாட்டைக் காட்டும் அகராதி வேண்டும். விவேகிகளாலே வசன நடை யுயர்த்தப் படல் வேண்டும். இவ்வனைத்தும் செய்யப் பெரியோர் முன்னிற்பராயின் தமிழானது சங்க காலத்துப் போலப் பொலிவும் பெருமையு மெய்தப் பெறுமென்பது கூறாதே யமையும்.

திருமுருகன் திருப்பள்ளி யெழுச்சி.

---o---

கி. வா. ஜெகந்நாதன்.

மலர்முக வனியின மார்த்தன சங்கம்
வார்முழ வார்த்தன வந்தனர் தேவர்
மலர்முகத் திருமகள் மாலொடு வந்தாள்
மருகநின் மலரடி காணநின் னின்சொல்
மலர்வுடன் கேட்கவே வந்தனன் இறையோன்
மார்பொடுத் தணைக்கவே வந்தனள் சக்தி
முலையணி பணியொளி செய்வுமை வந்தாள்
முருகபி ரான்!பள்ளி யெழுந்தரு ளாயே. (௧)

குப்பையைக் கீண்டின கோழிகள் நிற்கே
குறிப்பறி விக்கவே கூவின இரவி
அப்பெரு வானிடை யாயிரங் கிரணம்
அகலிடம் விசவே அழகுட னெழுந்தான்.

திப்பிய மாயுள விரைபுனல் நினக்கே
தேவர்கள் கொணர்ந்தனர் அரம்பையர் வந்தார்
இப்பியின் முத்தென யிலங்கு வெண் ணகையாய்!
இளமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (உ)

தாமரை தடங்களில் மலர்ந்தன வண்டு
தாவியே மதுவுடன் தாதினை யுகுத்த
நாமகள், பூமகள், கவரிகள் கொணர்ந்தார்
நாங்களு முன்னருள் வேட்டுனைத் தொழுதோம்.
மாமறை நாயக! தேவர்கள் நாத!
மதிமுக வமுதெனு மின்சொலைப் பரப்ப
தோமறு தேவியர் சூழ்தர வருவாய்
தூமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (ங)

அணங்கினர் பற்பல அணிகளைக் கொணர்ந்தார்
ஆதவன் செங்கதிர் பரப்பியே வந்தான்.
குணங்கொளு மன்பர்கள் நின்னரு ளேற்கக்
குழுமின குளைத்துதித் தொருபுறந் தேவர்
மணங்கமழ் பலமலர் வரிசையாய்த் தொடுத்த
மாலைகள் கொணர்ந்தனர் வருகவென் றேத்தி
உணர்விறந் தின்பமா யுலவினர் பல்லோர்.
ஓம்முரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (ச)

திருப்புகழ் பாடினர் திருவுடை மகளிர்
திருமுரு காற்றுப் படையிசைத் தனர்சிலர்
விருப்புடன் திருவகுப் போதினர் சில்லோர்
மெய்ம்மறை, வேதியர் நவின்றனர் இதுவோ?
திருப்பரங் குன்றிலே திருமணங் கொண்டோய்!
தேவரி யக்கர்கள், கின்னரர், வந்தார்
மருப்புறு வாரண வதனனும் வந்தான்
மாமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (ரு)

இத்தனை யொலிகளுள் செவிபுக யிலையோ?
இன்னமும் துயிலுதல் நின்றனக் கழகோ?
நித்தனுக் கொருபொரு ளுரைத்தவ னே!யுன்
நேயமா ரருளெமக் கருதலுதல் வேண்டும்.
உத்தம ரத்தின மொத்தவ னே!யவ்
வுமைதரு குமரனே! இமையவர் பெருமா!

இத்தின மருள்செய எழுந்தினி கருவாய்
இளமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (௬)

சூரனை மாய்த்தவெம் நாதனே ! ஈச !
சுப்பிர மணியனே ! தற்பிர காசா !
வாரிதி யொலியென யிவ்வொலி கேட்டும்,
மலரணை யினிலிரு தேவியை யணைத்தே,
மாரனை வென்றவ ! துயிலுத லழகோ ?
வாயில் திறந்தெமக் கருள்செயல் வேண்டும்
தீரனே ! யுமையவள் பாலனே ! வேலா !
திருமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (எ)

பக்தர்கட் கருள்செயும் பாலனே ! யுந்தன்
பசுமயில் வாகன மேலிவர்ந் தாட,
உத்தம ! நின்னறு முகத்தினைக் காட்ட,
ஒளிரிரு மங்கையர் பங்கினைக் காட்டச்,
சித்தஜன் வெட்கிடு மழகினைக் காட்டச்,
சேவடி யிரண்டுமெம் துணையெனக் காட்டச்,
சத்தியின மூலசுரந் தாங்குங் காட்டத்
தனிமுரு கா ! பள்ளி யெழுந்தரு ளாயே. (அ)

ஏழைகள் குற்றமி யற்றின ரென்றோ ?
இன்னமும் விடிந்திலை யெனுநினை வோ? நின்
மாழைமங் கண்மலர் வியருட் னிரவில்
மாசகம் கொண்டதுப் பெய்தின வாறோ ?
கோழிகள் கூவியும துயிலெழ வில்லை.
குமரனே ! யமரர்கள் தலையனே ! குழகா !
ஆழியோ ரறிஞோர் பாடினர் பத்தர்க்
கருள்முரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே. (௯)

காகங்கள் கரைந்தன பனிமலர் வாசம்
கமழ்ந்தன இருள்,பனி, கதிரவ னொளியால்,
வேகமாய் நீங்கின விஞ்சையர் பாடி
மேலவ னுமுனைத் தொழுதிட் வடைந்தார்.
தாகமே யடைந்தவர் நீரினைத் தேடும்
தன்மைபோல் நின்னரு ளடையவே நின்றோம்
ஆகையால் நீயினி யெழுந்திடல் வேண்டும்
அருமுரு கா!பள்ளி யெழுந்தரு ளாயே ! (௰)

தமிழ்நாடும் யவனரும்.

—o—

தி. நா. சுப்பிரமணியன்.

குமரன் 'திரைகடலோடியுந் திரவியந்தேடக் கப்பற்ற ளத்தில் உலவி வருகின்றான். அங்ஙனம் உலவுவது பொரு ளாசையால் அல்ல. நாவாய் வழிச்சென்று வியாபாரம் புரி தல் ஈனத்தொழில் அல்ல என்பதை மற்றையோர்க்கு நன்கு அறிவுறுத்தத் தானே அத்தொழிலை நடத்திக் காட்டுகிறான். பெரியோர்கள், எதையும் பிறர் நன்மைக்காகக் கூறுவதற்கு முன், அந்நெறியைக் கடைப்பிடித்து உலகிற்குக் காட்டுவார் களாதலின்.

இருமருங்கினும் அலைகள் மோத அசையும் கப்பல்கள் ஏறித் துலைவிற் சென்று வாணிபம் புரிதல் நம் நாட்டிற்குப் புதிது அன்று. ஆனால் தற்காலம் அஃது ஒரு சிறிது வெ றுப்புடன் நோக்கப்பட்டுவருகிறது. இதற்குக் காரணம் மத் திய காலத்தில் மாறிய நமது சமூக வாழ்வேயாகும். ஜைன பௌத்தமதங்கள் தலைதூக்கி நம்மதக்குறைபாடுகளை விளக்க வே, பெரியோர்கள், அக்குறைகளைச் சீர்திருத்த முயன்ற தால் சமூக வாழ்க்கையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. அப்பொழுது செய்யப்பட்ட திருத்தங்களுள், 'அஹிம்ஸா' தர்மத்தை நிலை நாட்டியதும் ஒன்றாகும். அதற்கடுத்த கா லத்து நாடு நாடாகிச் சமாதான வாழ்க்கையைச் சிறிதுகா லம் அனுபவித்ததும், மேற்கூறிய 'அஹிம்ஸா' தர்மத்தை அளவுக்கு மிஞ்சி உபயோகித்துத் தமிழ் நாட்டினர்—ஏன்? இந்தியர்கள்—தங்கள் வீரத்தையிழந்தனர். அந்தக் காலம் முதல் ஈனத்தொழிலாகக் கருதப்படுவனவற்றுள் இக்கப்பல் வியாபாரமும் ஒன்றாகும். தற்பொழுது நம்நாடு அடிமைத் தனத்தினின்றும் விடுபட்டுத் தான் இழந்த சுதந்திரத்தைய டைய முயன்று வருவதால் இத்துறையும் பழுதுபார்க்கப்பட வேண்டுவது அவசியமே. ஆனால் கேடுற்ற காலத்தும் விடா

மற் காப்பாற்றிய நகரத்தார் வகுப்பு இருக்குந்தனிலும் நாம் கவலைப்படவேண்டுவதில்லை.

எம்நாடு, ஒரு காலத்து மிகச்சிறந்த நாகரிகத்தை வளர்த்துவந்தனவாகக் கருதப்படும் நாடுகளுடன் வாணிபம் புரிந்து நன்கு உறவாடி வந்ததென்பது யாவரும் அறிந்ததே.

"............ வெண்ணுரை கலங்க
யவனர் தந்தவினை மாணன் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயர்"

தலைப்பல இடங்களிற் படித்திருக்கிறோம். யவனர் என்பது கிரேக்கருள் ஒரு வகுப்பின் பெயராகிய 'அயோனியர்' என்பதின் மரூஉ எனத்தோன்றுகிறது. அதுமுதலில் கிரேக்கரையும் பின்னால் பொதுவாக மத்தியதரைக்கடற் பிரதேசத்திலிருந்து வருவோர் எல்லோரையும் குறிக்கலாயிற்று. ஆயினும் இவ்வியாசத்தில் எங்கும் இச்சொல் கிரேக்கரைக் குறிப்பதாகவே உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் வியாபாரம் செய்த நாட்டைப்பற்றி, விட்டுச்சென்றிருக்கும் குறிப்புகள் மிகவும் உபயோகமுள்ளவை. நம் நாட்டினரும் அங்ஙனம் தாங்கள் வியாபாரம் செய்த தேயங்களைப்பற்றிய குறிப்புகள் வைக்காமற் போனது மிகவும் வருந்தத்தக்கதேயாம். யவனர் முதலியோரது குறிப்பைக்கொண்டு நமது நாட்டில் எந்த அரசர்கள் எவ்வளவு ஆண்டுகள் நீதிசெலுத்தினர் என்பதைப் போன்ற செய்திகளை (Political History) அறிய முடியாது. ஆனால் அக்காலத்திய நாட்டு அமைப்பு, உள்நாட்டு நிலை, செழுமை, வியாபாரம் முதலிய மற்றைய அங்கங்கள் யாவும் அறியக்கூடும்.

தமிழ்நாடு மூன்று புறங்களிலும் கடலாற் சூழப்பட்டிருப்பது கடல்வழி வியாபாரத்திற்கு ஒரு இன்றியமையாத சாதனமாகும். சோழ பாண்டிய நாட்டுக்கரை 'ஸ்வர்ணபூமி' எனக்கூறப்படும் மலாய் நாட்டுடனும், சேரநாட்டுக்கரை செங்கடல் மத்தியதரைக்கடல் சமீபமாயுள்ள நாடுகளுடனும் வியாபாரம் செய்தற்குரிய சாதனங்களை நன்கு பெற்றிருக்கின்றன.

சுக்கான் பிடித்துக் கலங்களை நடாத்தித் தொழில் புரிய முதன் முதலாக ஆரம்பித்தது எகிப்தியர்களே எனத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் அதை வெகுநாள் அனுபவிக்கவில்லை. 'பொனீஷியர்'கள் என்னும் வகுப்பார் சிக்கிரமாக இவர்களைப் பின்தொடர்ந்தனர். இவர்கள் வசித்த பாலஸ்தீனம் (Palestine) கிழக்கே நீரிலும், மேற்கே நிலத்திலும் செல்வதற்குரிய சாதனங்களை இயற்கையாகவே பெற்றுள்ளது. இவர்கள் தலைவில் உள்ள நாடுகளிலும், உதாரணமாக இங்கிலாந்திலும் குடியேறியிருந்தனர். இவர்கள் முன்னேற்றத்தைக் கண்டுமயங்கி யூதர்களும் இத்தொழிலை மேற்கொண்டனர். கி. மு. ௧௦௦௦-க்குச் சமீபகாலத்தில் ஆண்ட, டேவிட், ஸாலமன் என்ற அரசர்களது காலத்திற்றான் யூதர்கள் வியாபாரம் உன்னத நிலையை யடைந்ததாகத் தோற்றுகிறது. ஸாலமன் குணதிசை நாடுகளுள் ஒன்றற்குக் கப்பலை யனுப்பித் தங்கம், தந்தம், சந்தனக்கட்டை, குரங்கு, மயில் முதலியவற்றைப் பெற்றான் என விவிலியவேதம் கூறுகின்றது. (Old Testament, 1 Kings IX 28) மேற்கூறிய சாமான்களுள் ஹீப்ரு பாஷையில் லபீம், கபீம், துகிம், (Labim, Kafim, Tukim.) எனக்கூறப்பட்டன இபா, கபி, தோகை என்னும் சொற்களின் சிதைவாகி முறையே தந்தம் (யானை) குரங்கு, மயில் ஆகிய மூன்றையும் உணர்த்துகின்றன என்பது அறிவாளிகள் கொள்கை. இவையன்றி கிரேக்கபாஷையில் அரிசியும், லவங்கப்பட்டையும் ஓரிஸா, கர்பி, (Oryza, Karpi,) எனக்கூறப்படுகின்றன. அவை முறையே அரிசி, கருவா என்பனவற்றின் சிதைவுகள் எனவும் கூறப்படுகின்றன. இவற்றால், ஸாலமன் கப்பல் சென்று வந்த நாடு தமிழ் நாடே எனக்கூறப்படுகிறது.

அலெக்ஸாண்டர் இறந்தபிறகு அவன் நாடு பங்கு பிரிக்கப்பட்டபொழுது எகிப்து 'டாலமி' என்பவன் பாகத்தில் விழுந்தது. அவன் அலெக்ஸாண்டிரியாவைத் தலைநகராக்கி வியாபாரத்தை மேம்படுத்தினான். அவனுக்குப் பின்னால் கி.

மு. கசச-வரை ஆண்ட 'டாலமி' அரசர்களும் கீழைத் தேசவியாபாரத்திற் கவனம் செலுத்திவந்தனர். செங்கடல் மேல்கரையில் பெர்நிகே என்னும் நகரத்தைக்கட்டிய 'டாலமி பிலடெல்பஸ்' (Ptolemy Philadelphus) என்பவனே மிக வும் பெயர்போனவன். அக்காலத்திய "வியாபாரிகள் அலெக் ஸாண்டிரியாவிலிருந்து புறப்பட்டு நைல் நதி வழியாக எதிர் முகமாகச்சென்று தீபீஸ் (Thebes) க்குச் சமீபத்தில் உள்ள 'காப்டோஸ்' (Koptos) (26. N.) க்குச் செல்வார்கள். அது வே பன்னிரண்டு அல்லது பதினான்கு நாட்கள் செல்லும். 'காப்டோஸிலிருந்து செங்கடற்கரையில் உள்ள 'மியோஸ் ஹார்மஸ்' (Myos Hormus 27—12. N.) என்னும் துறை க்கு அழகான சாலை ஒன்றிருக்கிறது. அஃதன்றி இன்னும் தெற்கேயுள்ள 'பெர்நிகே' க்கும் (Bernice. 23—55. N) நல்ல சாலை ஒன்றிருக்கிறது. இந்தியாவிற்குச் செல்லும் கலங் கள் பெர்நிகேயிலிருந்து புறப்பட்டு பழைய வழக்கம்போல் அரேபியா கரையோரமாக ஸயாக்ரஸை (Sayagrus. தற் போதிய ரஸல்கேட் (Rasalgate) முனை; அடைந்து பாரசீகக் கரையோடாவது நேரே இந்தியாவின் மேல்கரையில் உள்ள துறைகளுள் ஏதாவதொன்றிற்காவது செல்லுவது வழக்கம்.

இவ்வழி எகிப்து தனியரசாக இருந்தவரையிற்றான் பின் பற்றப்பட்டுவந்தது. ரோமாபுரிக் குடியரசு பக்கத்திய நாடு களைத் தன்னுள்ளடக்கி ஆரம்பித்து எகிப்தை ஜெயித்து அதை அகஸ்டஸ் ஆளுகையில் ஒருமாகாணமாக மாற்றிவிட் டது. வாணிபம் நிறுத்தப்படவில்லை. ஆனால் சீர் திருத்தப் பட்டது. 'எகிப்திய-கிரேக்கர்' களே ரோமர்களின் கீழ் இவ் வாணிபத்தை நடத்திவந்தனர். எகிப்திய மாலுமிகள் எகிப் தியக் கலங்களில் ரோமநாட்டுக் கரைக்குக் கொணரும் இந்தி யச்சரக்குகள் விலையுயர்ந்தனவாகக் கருதப்பட்டன. இவர்கள் கப்பல்கள் பெரியதாகவும், ஒரு வீரர் படையை தன்னுள் அடக்கியும் இருந்தன. சீக்கிரம் கரைசேர்வதற்கும் மற்ற வைகளினின்றும் பிரித்தறிவதற்கும் அனுகூலமாக இவை நாட்டைச் சமீபத்தவுடன் பாய்களைத்தூக்கி விரிக்கவேண்டும்

என உத்திரவிடப்பட்டன. தலைப்பாய்கள் அடிவானத்திற்ரே ன்றியவுடன் அந்நாள் நாட்டில் எங்கும் விழாக்கொண்டாடு வது வழக்கம்.

இங்ஙனமாக நடந்துவர சுமார் கி. பி. 47-க்கு சமீப மாக ஒரு குறுக்குவழி கண்டுபிடிக்கப்பட்டது. ஹிப்பலோஸ் (Hippalos) என்னும் மாலுமி ஒருவன் அராபிக் குடாக்கடலை விட்டு வெளியில் வந்ததும், அங்கிருந்து கரை யோரமாகச் சுற்றி வராமல் நேரே கடல் நடுவே தன் கலத்தைச் செலுத்தித் தமிழ் நாட்டு மேலைக்கரையில் உள்ள முசிரியை யடைந்தான். அவன் வெகு நாளாகத் தன் கப்பல் செல்லும் திசைகளை நன்ருகக் கவனித்துத் துறைகள் உள்ள திசைகளையும் தூலைவையும், ஒவ்வொரு இடத்தில் அடிக்கும் காற்றுகளையும் குறித்து வைத்திருந்தாற்ருன் அங்ஙனம் துணிந்து தன் கலத்தைச் செலுத்த முடியும். ஆனல் யவன நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் யாவும் குறித்தே வைத்திருத்தல் வேண்டும் என எண்ணப்படுகிறது. ஆகவே கொலம்பஸைப் போல மனம் துணிந்து கப்பலைச் செலுத்திக் காட்டுவோர் தான் தேவையாயிருந்தது போலும், டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) அவர்கள் "ஹிப்பலோஸ் ஒன்றும் புதிதாகக் கண்டு பிடித்து விடவில்லை. அரபிய, போனீஷிய மாலுமிகளுக்கு இக்குறுக்குவழி தெரிந்ததே அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டு அவ்வழியாகச் சென்ற கிரேக்கர்களுள் முதலாமவனுக இருக்கலாம்" என்னும் கருத்தை உடையவராக இருக்கிருர். (Ancient Commerce of India p. 28.) அவ்வளவு நிச்சயமாக நாம் கூறவியலாது. ஏனெனில் வேனிற் காலத்தில் யவன நாட்டிலிருந்து குறுக்கே கடலைத் தாண்டித் தமிழ் நாட்டை அடைய மிகவும் உபயோகப்படும் தென் கிழக்குக் காற்று யவன நூல்களில் அதைக் கண்டு பிடித்து உபயோகித்தவர் பெயரைக் கொண்டே "ஹிப்பலோஸ்" எனக் கூறப்பட்டு வருகிறது. (Periplus Maris Erythreoi J. W. Mc. Crindle மொழி பெயர்ப்பு p. 136.)

இக்குழுக்கு வழி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு யவனர் வேனிற் காலத்தில் புறப்பட்டு முப்பது நாள்களில் அரேபியா வில் உள்ள ஓஸெலிஸ் (Ocelis தற்காலத்தில் Ghella அல்லது Cella.—Mc. Crindle p. 84) என்னும் துறையை அடைவார்கள். அதைத் தவிர முஸா (Muza present Musa. Mokha என்னுமிடத்திலிருந்து 25 மைல் வடக்கே தற்காலத்தில் ஒரு கிராமமாக இருக்கிறது.) தேஸேன் என்னும் துறைகளும் இருந்தன. ஆனால் இந்தியாவிற்கு வரும் கப்பல்களுக்கு ஓஸெலிஸ் தான் மிகவும் ஸௌகரியமான துறையாகும். அங்கிருந்து "ஹிப்பலோஸ்" என்னும் காற்றின் உதவியால் நாற்பது நாள்களில் நேராக "இந்தியாவில் முதல் துறை"யான முசிறி வந்து சேர்வார்கள். அவர்கள் திரும்புகாலில் எகிப்தியர் டைபிஸ் (Tybis) என்று கூறும் மாதத்திலாவது மெகிர் (Mechir) என்னும் மாதத்தின் முதலிலாவது அதாவது தமிழ் நாட்டில் வழங்கும் மார்கழி மாதத்தின் முடிவிற்குள் புறப்பட்டு விடுவார்கள். இவ்விதம் இவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு ஒரு வருஷத்திற்குள் ஊர் போய்ச் சேர்ந்து விடுவார்கள்.

இம்மாலுமிகள் அநேகமாகத் தமிழ் நாட்டைக் குறித்தே வருவார்கள். தமிழ் நாடுதான் அக்காலத்திற் கப்பற்றொழிலுக்கு ஏற்ற சாதனங்களையும், வியாபாரம் செய்வதற்கான பொருள்களையும் நிரம்பப் பெற்றிருந்தது. யவன மாலுமிகளுக்கு முக்கிய நோக்கம் தமிழ் நாட்டிலிருந்தாலும் மற்றைய பாகங்களையும் நன்றாகக் கவனித்து வந்திருக்கிறார்கள். இவ்விதம் இந்திய நாடுகளைப் பற்றிக் குறிப்பு வைத்துச் சென்றிருப்பவர்களுள் முக்கியமானவர் மூவர். 'பெரிபிலஸ் கடலின் மாலுமி' என்னும் பெயருடன் (Periplus of the Erytherian Sea or Periplus Maris Erythereon) நூல் எழுதிச் சென்ற பெயர் தெரியா ஆசிரியர். இவர் எகிப்தில் சுமார் கி. பி. 78-ல் இருந்தவர். இவர் பொதுவாகப் "பெரிபிலஸ்" எனவே குறிப்பிடப்படுவர். (2) கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் அன்டோனியஸ் பயஸ் ஆண்ட காலத்து அலெக்ஸாண்டிரியா

நகரத்தில் வான சாஸ்திரியாக இருந்த க்ளாடியஸ் டாலமாய்ஸ் (Kladios Ptolemaios). இவர் பொதுவாக டாலமி எனப்படுவர். (3) பிளினி சுமார் கி. பி. 79-ல் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு இயற்கைச் சரித்திரத்தை முடித்து விட்டார். இம் மூவரும் தமிழ் நாட்டு மக்களையும் வெளி வியாபாரத்தையும் பற்றி நன்றாகக் கூறியிருக்கிறார்கள். டாலமி துறைமுகப்பட்டினங்கள் உள்நாட்டு நகரங்கள் முதலியவற்றிற்கு ஒரு பெரிய அட்டவணை கொடுத்திருக்கிறார். அநேக துறைகள் தமிழ் இலக்கியத்திற் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு நிச்சயித்து விடக்கூடும். ஆனால் உள் நாட்டு நகரங்களை அவ்வளவு எளிதாக நிர்ணயித்து விட முடியாது. டாலமி தென்னிந்தியாவை ஒரு தீபகற்பமாகக் கருத வில்லை. அவரது நிலப்படத்தில் பம்பாயிலிருந்து மசூலிப்பட்டினம் வரையில் உள்ள கடற்கரையை மேற்கேயிருந்து கிழக்கு முகமாக ஒரு கோட்டை இழுத்து வைத்திருக்கிறார். மலை ஆறு முதலியவைகளும் அந்தப்படத்தில் வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அலெக்ஸாண்டிரியாவிலிருந்து அக்காலத்தில் தமிழ் நாட்டைப்பற்றி இவ்வளவு விபரமாகவும், நாம் அறிந்த விஷயங்களுடன் ஒத்துக் கொள்ளுமாறு நிச்சயமாக அறிந்தும் எழுதியிருப்பது அவர் கொண்ட அவாவையும் கஷ்டத்தையும் விளக்குகிறது.

தொண்டு.

சென்னை, "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள், திருப்புத்தூர் தாலுக்கா சுவ தொண்டர் மகாநாட்டில் வாசித்த அக்கிராசன உபந்யாசத்தினின்றும் எடுக்கப்பட்டது.

தொண்டு செய்பவர் தொண்டராதலால், தொண்டு எது என்பதை முதலில் ஆராய்தல் வேண்டும். அவ்வாராய்ச்சி நிகழ்த்தி உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிட எனக்கு

விருப்பமில்லை. ஆயினும் அது குறித்துச் சில உரைகள் பகர வேண்டுவது எனது கடமை என்று உணர்கிறேன்.

எல்லாப் பணிகட்குந் தொண்டென்னுஞ் சொல் வழங்கலாமோ எனில் வழங்கலாகாதென்று கூறுவேன். உலகில் பணிகள் பலதிறப்பட்டுக் கிடக்கின்றன. அவைகள் யாவும் தொண்டாகுமோ? ஆகா. பல திறப்பட்டுக் கிடக்கும் பணிகளை இரு தொகுப்பாகக் கூறிடலாம். ஒரு தொகுப்பு தன்னலங்கருதி ஆற்றப்படும் பணிகள்; இன்னொரு தொகுப்பு பிறர் நலங்கருதி ஆற்றப்படும் பணிகள்; இவ்விரண்டினுள் பிறர்நலங்கருதி ஆற்றப்படும் பணியையே தொண்டெனக் கோடல் வேண்டும். என்னை?

தன்னலப்பணியில் விருப்புடைய ஒருவன் என்றும் பிறர் நலம் பேணாது தன் வாழ்வொன்றே நாடிப் பிறரை அடிமைப் படுத்தித்தான் தலைமைப் பேறெய்தவே முயல்வன். அவன் உள்ளத்தை அவா என்னும் பேய் அலைத்துக் கொண்டேயிருக்கும். அப்பேயால் அலைக்கப்படுகிறவன் எக்கொடுமையுஞ் செய்ய ஒருப்படுவன். அவன் மனதில் பிறர் பொருள் அவாவும், அதை யொட்டி வெகுளியும், அழுக்காறும் பிறவும் உலவிக்கொண்டேயிருக்கும். இத்தன்னலமுடையவன் ஆற்றும் பணியைத் தொண்டென்று எவ்வாறு கூறுவது? பிறர் நலங் கருதி உழைப்பவன்பால் தன்னல அவா என்னும் பேய்க்கு என்ன வேலையுண்டு? அவன் உள்ளத்தில் என்றும் பிறர் நலமே ஊறிக் கொண்டிருக்கும். அவ்வன்பனை அவா என்செய்யும்? வெகுளி என் செய்யும்? அழுக்காறென் செய்யும்? இவையற்ற ஆண்டவன் அவன் உள்ளத்தில் கோயில் கொள்வன். ஆண்டவன் எவ்வாறு கைம்மாறு கருதாது தன் கடனாற்றுகிறானோ, அவ்வாறே தன்னலங் கருதாத பெரியோனும் தன் கடனாற்றுகிறான். இவன் செய்யும் பணியையும் மற்றவன் செய்யும் பணியையும் பொதுப் படத் தொண்டென்று கொள்வதோ? ஆகவே பிறர் நலப் பணியையே தொண்டெனக் கோடல் வேண்டும்.

தன்னலங் கருதாத் தொண்டே யாண்டும் பரவினுல் உல கில் கொடுமை ஏது? நடுக்கமேது? கவலை ஏது? உலகில் வாழும் ஒவ்வொருவரும் "நாம் பிறர்க்குத் தொண்டு செய்ய வே படைக்கப்பட்டோம்" என்று நினைத்துத் தங்கடனாற்றி ஞல் உலகம் தெய்வலோகமாக வன்றோ மாறும்? உலகில் தோன்றிய சமயாசாரியர் பலரும் இத்தொண்டையே அறிவுறு த்திச் சென்ருர். எச்சமயத்தை எடுத்து ஆய்ந்தாலும் அதன் கண் தன்னல மறுப்பும் பிறர் நலச் சேவையும் பேசப்படுதல் காணலாம். சமயங்கள் பலவாகக் காணப்பட்டாலும் அவைக ளின் ஊடே தொண்டெனும் ஒரு பெருஞ் சமரசம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. பல மதங்கள் என்று பன்மையாகக் கூறு வதற்குப் பதிலாகத் தொண்டு மதமென அவைகளை ஒருமைப் படுத்திக் கூறலாம். அத் தொண்டை மனிதன் மறந்தநாள் தொட்டுச் சீவபோதம் பெருக்கெடுத்து உலகை அரித்து வரு கிறது.

நம்முன்னேர்கள் மனித சமூக வளர்ச்சிக்கும், அமைதிக் கும் தொண்டைத் தமக்குரிய மதமாகவே கொண்டனர். தெய் விகத் தொண்டை அடிப்படையாகக் கொண்டே நம் பண்டை மூதறிஞர்கள் வருணங்களையும் ஆச்சிரமங்களையும் வகுத்தார் கள். வருணங்களின் நிலையும், ஆச்சிரமங்கள் நிலையும் குலைந் துள்ள இவ்வேளையில் அவைகளின் அடிப்படை தொண்டு என் ருல் சிலர் என்னை நோக்கி எள்ளி நகையாடுவர். இந்நாளில் சட்டமும் இராணுவமும் பீரங்கியும் நிலைபெறுத்தி வரும் அமைதியை அந்நாளில் நம்முன்னேர்கள் கண்ட தரும முறை கள் காத்து வந்தன என்ருல் அம்முறைகளின் பெற்றியை விரித்துரைக்கவும் வேண்டுமோ? தொண்டை அடிப்படை யாகக் கொண்ட எம்முறையும் அமைதியை நிலைபெறுத்து மென்பதில் ஐயமில்லை. அமைதிக்கு அடிப்படையான தொண் டுமதம் இப்பொழுது சண்டை மதங்களாக மாறிவிட்டது. என் செய்வது?

ஒருவருக்கொருவர் தொண்டராகுந் தெய்விக மதம் மாண் டு, ஒருவருக்கொருவர் தலைவராக வேண்டுமென்னும் சீவ

போத மதம் வளர்ந்து வருகிறது. தொண்டை மறக்கவும் தலைமையை யெண்ணவும் தூண்டும் பேய்மதம் எங்கணும் பரவி வருகிறது. இம்மதம் மேல் நாட்டில் பிறந்து வளர்ந்து கீழ் நாட்டிலும் குடி புகுந்திருக்கிறது. இம்மதத்துக்கு வேதம், பொருளாதார நூல். தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாகரிகத்தை மேல்நாடு கொண்டமையால், அது யுத்த நாடாகவே திகழ்கிறது. இந்நாகரிகத்தால் மனித வகுப்புக்கே கேடு நிகழ்ந்து வருகிறது. அஹிம்சா தர்மத்தை வளர்க்க வேண்டிய மக்கள் கூட்டம் ஹிம்சையைக் குறிக்கொண்டு நிற்கிறது. இவ்வாறு மக்கள் வாழ்வே குலைந்து வரும் இவ்வேளையில் மகாத்மா காந்தி அஹிம்சா தர்ம இயக்கத்தைத் தோற்றுவித்துத் தொண்டு நெறியோம்ப முனைந்து நிற்கிறார். அந்நெறியோம்பத் தொண்டர் படை திரட்ட எங்கணும் பெரு முயற்சி நடைபெற்று வருகிறது.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே—தாயுமானர்.

நாவல் வெள்ளம்.

வாகீச பக்தன்.

இதுகாலை நமது தமிழ் நாட்டில் வெளிவந்து உலாவும் நாவல்கள் எண்ணிலாதன. நாவல்கள் மல்கிவருவதைப் போல்; நாவலாசிரியர்களும் ஆயிரக்கணக்காகப் பெருகிவருகின்றார்கள். நாவல்களை விரும்பிப் படிப்போரும் லக்ஷக்கணக்காக இருக்கின்றார்கள். ஆடவர் பெண்டிர் மாணவர் அனைவரும் நாவல் வெள்ளத்தில் திளைக்க நனி விரும்புகின்றார்கள். புத்தகக் கடைகளிலும் நாவல் வெள்ளம் பெருகிக்கொண்டேயிருக்கின்றது. அவ்வெள்ளம் புகாத வீடுகள் அரிதாகவே இருக்கின்றன. ஆகவே இந்நாளில் நாவல் வெள்ளம் மக்கள் பலரைக் கொள்ளைகொண்டு வருதல் இனிது புலப்படும். இவ்வெள்ளம் இவ்வாறு பெருகி வருவதன் காரணம் என்னை? காலநிகழ்ச்சிகளெல்லாம் பெண்

மக்கள் வடிவ நலன்களைப் பெரிதும் அளவுகடந்து வருணித் துக் காமக் கிளர்ச்சியை எழுப்புவனவாக இருத்தலே முதற் பெருங் காரணமாகும். இரண்டாவது காரணம் கல்விப் பெருக்கமின்மையேயாம்.

ஒவ்வொரு நாவலும் ஒவ்வொரு பெண்மணியின் பெயராலேயே எழுதப்படுகின்றது. பெண்மணிகளின் பெயர் புனையப் பெற்ற நாவல்களே பெரிதும் விலைப்போகின்றன. நவில்தொறும் நவில்தொறும் நுண்ணறிவுடையார்க்கு நூல் நயம் இன்பமூட்டு வதைப் போல், வாசிக்குந்தொறும் வாசிக்குந்தொறும் நாவல் நசையுடையார்க்கு நாவல்கள் சிறுமையின்பத்தினை நனி நல்கிக் களிப்பூட்டுகின்றன என்பது மிகையாகாது. நாவல் வாசிப் போர்க்குப் புதுமையிலேயே புத்தி செல்லுதலால் அன்னார் நவீன நாகரிக வெள்ளத்தால் விழுங்கப்பட்டு வருதலை நாம் நன்கு காணலாம். நாவல் வாசிப்போர், நாவலாசிரியர்களை ஆதரிப்பதைப்போல் வேறு எவரும் எத்துறையையும் ஆதரியார். அவர்கள் நாவல்கள் வெளிப்போந்த மறு நாளே ஒவ்வொன்றையும் விலைக்கு வாங்கி வாங்கிக் குவிக்கின்றார்கள். எவ்வளவு அதிக விலையாக இருப்பினும், கதைமட்டும் காமக்கிளர்ச்சியை எழுப்புந் திறத்ததாயிருந்தால் அந்நாவல்கள் மிகச் சூடாக விலைப்போகின்றன. ஆகவே இத்தகைய காதைகளை எழுதுவோர் எல்லையின்றிப் பெருகிவருகின்றார்கள். இனி இத்தீய நாவல்களை வெளியிடுவோரிற் பலர் இத்தொழிலையே வயிற்றுப் பிழைப்பிற்குரிய முக்கிய ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆனந்தமாக வாழுகின்றார்கள். அவர்களைப் பார்த்து ஆங்கிலக்கலா சாலைகளினின்றும் வெளிவரும் தமிழ்ச் சுவையறியாத் தம்பங்களாகிய மாணவர்கள் பலர் வயிற்றுப் பிழைப்புக்காக நாவல்கள் எழுதி வயிறு வளர்ப்பான் புகுகின்றார்கள். நாவல்கள் சூடாக விலைப் போகப்போக அத் தொழிலையே மேற்கொண்டு விடுகின்றார்கள். எனவே வறுமையாம் சிறுமை வாட்டுதலால் ஏழை மாணவர் பலர் வயிற்றுப் பிழைப்பு ஒன்றையே முக்கியமாகக் கொண்டு இத்துறையில் இறங்குகின்றார்கள். மேற்

றிசை நாவலாசிரியர்களுள் காமக்கிளர்ச்சியினை எழுப்புவதிற் கைதேர்ந்தவராகிய ரெய்னால்ட்ஸ் (Reynolds) எழுதிய நாவல்களை மொழி பெயர்த்துப் பெயர்களை மட்டும் மாற்றி விட்டுப் பிரசுரித்து விடுகின்றார்கள். பல நாவல்களில் பாத்திரங்களின் பெயர்கள் மட்டும் தமிழ்ப் பெயராகவும், நடையுடை பாவனை யனைத்தும் மேற்றிசை நாகரிகமாகவுமே இருக்கின்றன. எனவே இந்நாவல் வெள்ளம் இம்மேற்றிசை நாகரிகக் குப்பைகளை நகரங்களின் வாயிலாக வாரிக் கொண்டு வந்து புனிதமான கிராமங்களுட் புகுந்து இளைஞர் பலரைக் கொள்ளை கொண்டு போகின்றது. இவ்வெள்ளத்தைத் தடுக்க வேண்டுவதறிஞர் கடனாகும். இதனால் நான் உண்மைக் காதற் கதைகளையும், நாவல் முறையில்(Model)இனிய காதைகளை எழுதுதலையும்வெறுக்கின்றேனென்று ஒருவரும்எண்ணுதலாகாது.இதுகாறும்நான் நவின்று வந்த நாவல் வெள்ளம் அனைத்தும், "காட்டுத் தீ போல் காமக்கிளர்ச்சியை எழுப்பி இன்னல் விளைவிப்பன வற்றையே" என்பதை எல்லோரும் இனிது உணருதல் வேண்டும். ஏனெனில் நாவல்களில் நல்ல நாவல்களும் சிலவுண்டு. நல்ல ஆசிரியர்களும் சிலருளர். அந்நாவல்களையும் அவ்வாசிரியர்களையும் நான் பெரிதும் போற்றுகின்றேன். ஆனால் தீய நாவல்களையும் அவைகளின் ஆசிரியன்மாரையும் நான் பெரிதும் வெறுக்கின்றேன். அவ்வாசிரியன்மார் இவைகளை எழுதி வெளியிட்டு நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள்வாழ்வைப் பாழ்படுத்தித் தாம் வயிறு வளர்ப்பதைக் காட்டிலும் இரந்துண்டல் நலமெனக் கூறுகின்றேன். இனிப் படிப்போரை நோக்கிச் சில உரைகள் பகருகின்றேன். அன்பர்களே! உங்கள் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷமும் மிகவும் அருமையானது. ஆகவே, புண்ணிய நூலல்லாத தீய நாவல் வெள்ளத்தில் அழுந்தி உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள். காலத்தைப் பொன்போற் போற்றுங்கள்! போற்றுங்கள்!! புண்ணிய நூல்களைப் படியுங்கள். தீய நாவல்களைத் தீயினுக்கிரையாக்குங்கள்! தீந்தமிழ்ப் புலவர்களே! இந்நாவல் வெள்ளத்தைத் தடுத்தற்கு நாம் எத்தகைய அணை கோலுதல் வேண்டும்? முன்— முன்

ளார்களைத் தெறிவது போல், இந்திய நாவல் வெள்ளத்தை நல்ல நாவல்களை மிகுதியாக வெளியிட்டே தடுத்தல் வேண்டும். ஆங்கிலமுந்தமிழும் பாங்குடன் கற்ற தமிழ் ஆசியர்கள் நல்ல நாவல்களை எழுதி வெளியிடல் வேண்டும். ஆகவே நாவல்க ளெழுதுதல் பாமரர் காத்திலிருந்து பண்டிதர் காத்திற்கு மாறுதல் வேண்டும். "தீயநாவல்களை வாசித்தல் கூடாது." என்று பிள்ளைகளைப் பெற்றோரும், மனைவியை நாயகனும், மாணவரை ஆசிரியர்களும் அழுத்தமாகக் கண்டித்தல் வேண் டும்.

பத்திரிகை ஆராய்ச்சி.

பொங்கற் புதுநாள் குறித்து, ஸ்ரீமாந் பூ. முருகேச முத லியாரவர்கள் அனுப்பிய பின்வரும் இன்சுவை நிறைந்த செய் யுள், சென்னை இந்து நேசனில் வெளிப் போந்திருக்கின்றது. முன்னரே பொங்கற் புதுநாள் நிறை வெய்திவிட்டதாயினும் செய்யுளின் அருமை நோக்கிக் கீழே தருகின்றோம்.

"பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் கலன்கள் எல்லாம் பொங்குக
பாலும் சோறும் பாகும் நெய்யுமிந்
நாலும் கலந்த நற்பொங் கலைப்போல்
நம்மொரு பண்பும் நம்மொரு நண்பும்
பொன்னெழில் போலப் பொங்குக பொங்குக
இன்னதோர் பொங்கல் இன்னுமோராயிரம்
மன்னக் கண்டு மகிழ்ந்து வாழுமின்
என்னரு நண்பீர் இன்புற வாழ்க
பன்னுபா லாற்றின் மணலிற்பல் லாண்டே."

* * *

பாடுதலின் பயனைப்பற்றியும், வைத்திய சாலைகளிலும், சுகவாச ஸ்தலங்களிலும் இன்னிசை நிறைந்திருக்க வேண்டிய தினவசியத்தைப் பற்றியும் சென்னை, "ஹெல்த்" பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது.

"பாடுதல் தேகசௌக்கியத்திற்குப் பேருதவி புரிவதாகவிருக் கின்றது. நன்றாகப் பாடுதல் சரியாக நிலைத்து நின்று மூச்சு விடுதலைக்குறிக்கிறது. பாடுதல், சிறப்பாக மார்புக் கூட்டிலுள்ள கருவிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதோடு, பொது வாகப் பாடுவோர்க்குச் சுகத்தையும் அளிக்கின்றது. ஆகலான், நாம் கல்விச் சாலைகளில் பாடற் பயிற்சியை அதிகமாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தொழிற் சாலைகளில் ஒவ்வொரு நாளும் ஒரு பொழுதாயினும் இருபொழுதாயினும் ஒரு சில நிமிஷ நேரங் களாவது, பாடுந் திறமுடைய ஒரு கூட்டத்தினரைக் கொண்டு இன்னிசைக் கீதங்களை இசைப்பதில் செலவழிக்கப்படுதல் வேண் டும். மேலும் தொழிற் சாலை அதிதிகள், தொழில் புரிவோர் பாடு தலை விரும்பி அனுபவிக்க வெண்ணினால் அதற்கிசைதல் வேண் டும். வேலை செய்வோர் சந்தோஷமாயிருப்பதை ஏன் நாம் அசௌகரியப்படுத்துதல் வேண்டும். இசை விழைந்து பொறு மையாக இருப்பது இயலாத காரியமா? இனி, சுகவாச ஸ்தான ங்கள், வைத்திய சாலைகள் தீரா நோயாளரிருக்கு மில்லங்கள் மற்ற சுகாதார சாலைகள், தங்களுடைய கைதொழிற்பட்டிகையில் இசை நிகழ்ச்சியினையும் ஒரு பாகமாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இசையானது நோயாளிக்குச் சந்தோஷத்தையும் நம் பிக்கையையும் நல்குவதோடு அமையாது மேலும், சரீர சம்பந்தமா கச் சீக்கிரம் சுகமடையும்படியும் செய்கிறது. வைத்திய சாலையில் இப்பொழுது, வைத்தியக் கருவிப் பெட்டியும் சத்திரமிடும் மேஜையு மிருப்பதைப் போல். இசைக் கருவிகளும் இருத்தல் வேண்டும். ஒன்றை அதிகமாக உபயோகப் படுத்துவோமானால், மற்றொன்றின் அவசியம் குறைந்தொழிவதுண்மை. ஆகவே நமது நாட்டிலுள்ள தர்ம சாலைகள், சிறைச்சாலைகள் முதலிய வற் றில் ஏன இசையின்பத்தை உண்டாக்குதல் கூடாது. அவ்வாறு செய்வோமானால், அங்குறைபவர்களுக்குப் பலத்தையும் தன்னடக் கத்தையும் கொடுக்கும். அதனால் அவர்கள் அவைகளை விட்டு வெளி யே வரும்பொழுது, உண்மைக்கு மாறுபடாதிருக்கும்படி அவர் களுக்கு உதவியாக இருக்கும்."

இந்தக் கட்டுரை சுகத்திற்கு இசை அவசியம் என்பதை இனிது எடுத்துக் காட்டுவதை நாம் நேரில் பல இடங்களில் காண்கிறோம். நோயாளிகள் உள்ள இடத்தில் பாடகர்கள் வந்து தேவாரம் திருவாசகம் முதலிய அருட் பாடல்களை இன் னிசையோடு இசைத்தலைக் காண்கின்றோம். இனி நாட்டுப்

புறங்களில் வேலையாட்கள் தொழில் புரியும்பொழுது, சாதாரண இசைப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டே சுலபமாகத் தத்தம் வேலைகளைச் செய்து முடிப்பனைப் பார்த்திருக்கின்றோம். மற்றும் பெரிய இஞ்சினியர்களால் கூடப் பெருங் கருவிகளைக்கொண்டு ஏற்ற முடியாத கற்றூண்களையும் மரங்களையும் சாதரணக் கூலியாட்கள் சிறு சிறு மரத்துண்டுகளையும், மூங்கிற் கழிகளையும் கடப்பாறைகளையும் வைத்துக் கொண்டு சுலபமாக, 'ஏலேலோ'ப் பாட்டு முதலியவைகளை இசைத்துக் கொண்டு ஏற்றி விடுகிறார்களன்றோ? மற்றும் ஏற்றப்பாட்டு, கப்பற்பாட்டு முதலியனவும் தொழிலாளர் பாடல்களாக விளங்குகின்றனவன்றோ?

* * *

திருச்சி, நச்சினார்க்கினியனில், ஸ்ரீமாந் மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், தமிழ் மாதங்களின் பெயர்க்காரணங்களைப் பின்வருமாறு யூகிக்கிறார்கள். தமிழாராய்ச்சி மிக்க தக்கார் அனைவரும் ஆராயத்தக்க பொருளாதலான் கீழே தருகின்றோம்.

"தமிழகத்தில், "திங்கள்" என்னும் மொழியே மாதத்தைக் குறிக்கும். பன்னிரு திங்களின் பெயரும் தமிழ்ப் பெயரேயாம். இதனை விளக்குதும்: சூரியன் மகரத்திற்குப் புகுந்து உத்திரத்தை நோக்குங்கால், அக்காலத்திற்கு "மகர சங்கராந்தி" "உத்தராயணம்" என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. மழை நீங்கிப் பகலவன் வெளிப்பட, உலகம் பிணி பீடை நீங்கித் தொழில் புரிய யத்தனிக்கின்றது. நடராஜப்பெருமான் "தை" "தை" என்று நடனஞ்செய்வது சிருஷ்டித்தொழிலையே குறிக்கும். மகரத்தில் பரிதி "பொருந்து" தலானும் தை என்ற பெயர், மாதத்திற்கு ஆயிற்று. அன்றியும், செங்கதிரோன் தோற்றத்தாலுண்டாகும் உவகையை வெளியிடற்பொருட்டே, வீடுவாசல்களனைத்தும் துப்புரவு செய்யப்பட்டுத் தமிழகங்களில் சூரியனுக்குப் பொங்கலிடப்பட்டு வருகின்றது. ஆதலால் 'சிறப்பு' என்ற பொருளும் 'தை' என்ற மொழிக்கு வாய்ந்ததுபோலும். மழை நீங்கினும் வானம் மேகத்தினால் மாசு படிந்திருப்பதனால், மாசி (இ-விகுதி) என்பது அடுத்த திங்களின் பெயராம். மார்கழி முதல், நான்கு மாதம் பனிக்காலம். அப்பனி கூறுபடும் மாதம் பங்குனியாம். (பங்கு—கூறு, பகுதி). படிந்த மாசும் பெய்த பனி

யும் நீங்கவே, வானம் சித்திரம் போன்று வெயிலெரிக்க அழகு றும். அத் திங்களில் இருபெருஞ் சுடரும் களங்கமற்ற ஒளி தரும். இரவும் பகலும் செவ்விய வானம் திரைபோன்றும், பரந்த கடல், பாவை போன்றும் விளங்கும். அப்பொருள்பற்றியே சித்திரை என்ற பெயரிடப்பட்டது போலும். இத் திங்களில், மக்கள், மாக்கள், கால்நடைகள், பூண்டுகள் தழைத்து இன்புறும். வேனிலதிகரிக்க, புல் பூண்டுகள் வாடி மயங்கும். அவை காச நோயுற்றனபோலக் காணப்படும். [வை (வைக்கோல், புல்), காசம், இ—வைகாசி.] தை முதல் ஆனி முடிய ஆறு மாதங்களும் தேவர்கட்குப் பகற்காலமாம். அப்பகல் முடிவிற்கு எல்லையாயுள்ள மாதமாதலின் அது ஆனி என்ற பெயர் பெற்றது. (ஆனி—எல்லை). சூரியன் வடவெல்லையை யடைந்து தெற்கு நோக்குங்காலம் 'தெக்ஷிணயனம்' எனப்படும்: வெங்கதிரொளியோன் திசை திரும்புக்கால், உலகம் ஆட்டமுறும். ஆட்டமுற்றுக் குலுங்கவும், காற்றுண்டாகின்றது. ஆடி என்பதற்குக் 'காற்று' என்ற பொருளுமுண்டு. சூடதிகரித்துக் காற்றுக் கிளம்பலும், மேகங்கள் வெண்பசுக் கூட்டங்கள் (ஆவணி—ஆ, அணி) அணிவகுத்துச் சென்றாற்போன்றும், வரிசை வரிசையாக ஒன்றோடொன்று சேர்ந்து ஒழுங்குபட்ட கடைவீதிபோன்றும் வானத்திற்றோன்றும். (ஆவணம்—கடைவீதி) வானத்தில் மேகங்கள் திரண்டு சூரியவொளியை மறைத்தலால் பிணி பீடைகள் துவங்கும். இதுபற்றியே ஆவணி ஞாயிறுதோறும் தமிழகங்களில் சூரியனுக்குப் பொங்கலிட்டு வணங்குதல் வழக்கம். அடுத்து வருந் திங்கள் புரட்டாசியாம். வானில் வெயிலும் மஞ்சும் புரண்டு புரண்டு, மாறுபாடடைந்து அற்ப மழை பெய்தனிமித்தம் புரட்டாசி எனப்படும் [பு ரட்டு, புரண்டு, அசி (வான்), ஆசு (அற்பம்), இ]. ஐப்பசி—ஐ, பசி—நுணுகிய தீ அல்லது பசி. சூரிய வெப்பங் குறைவதால் மக்களையுடற்றும் பசியும் நுணுகுவதாகும். கார் மயங்கத் தொடங்கவே கார்த்திகை (கார், திகை) யாயிற்று. நூல்கொண்ட மேகங்கள் மயக்கமுறுவனபோலும் மழை பொழிதலும் சூலி மயக்கந்தெளிகின்றது. மாரி கழிவதால் மார்கழி எனப்படும். இவ்வாறு பன்னிரு திங்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே காணப்படுகின்றன."

உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரி ஞு மாசி மீ	மணி கக

வணக்கம்.

சிவபெருமான்.

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பே ரண்ணலின்
அடியலா லடைசா ருடையரோ வடியரே.

—சம்பந்தர்.

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

—அப்பர்.

தொண்டரடித் தொழலுஞ் சோதியிளம் பிறையுஞ்
சூதனமென் முலையாள் பாகமுமா கிவரும்
புண்டரிகப் பரிசா மேனியும்வா னவர்கள்
பூசலிடக் கடனஞ் சுண்டகருத் தமரும்
கொண்டலெனத் திகழுங் கண்டமுமெண் டோளுங்
கோலநறுஞ் சடைமேல் வண்ணமுங்கண் குளிரக்
கண்டுதொழப் பெறுவ தென்றுகொலோ வடியேன்
கார்வயல்சூழ் கானப்பே ருறைகாளை யையே.

—சுந்தரர்.

சமூக வாழ்க்கை.

:o:

பண்டித மயில்வாகனனுர் (B. SC., LOND.)

உலகிற் பிறந்த மாத்திரத்தே தாய், தந்தை, சுற்றத்தார், உடன் பிறந்தார் என உரிமை பாராட்டுந் தொடர்புகள் ஏற்படுகின்றன. சில ஆண்டுகள் கழிய ஆசிரியன், நண்பன், அரசன் என்றின்னோரன்ன தொடர்புகளும் மனைவி, மக்கள், அயலார், கிராமத்தார் என்றித் தொடக்கத்த தொடர்புகளும் ஏற்படுகின்றன. இத்தொடர்புகளால் அமைந்தது உலக வாழ்க்கை. மக்களாயினருக்கு இவை இன்றியமையாது வேண்டப் படுவனவேயாம். விலங்கினங்கள் தாமும் தனித் துறையாது மனைவி, மக்கள், குழு என்னும் இவற்றோடு கூடி உடனுறைகின்றனவாதலின், அறிவுடையோராகிய மக்கள் தனித்துறைதல் யாங்ஙனமாகும்? கானகத்திற் றொடர்பற்று உறைந்து ஞான நிலையில் நிற்கும் தபோதனர் தேவர்களினும் மேம்பாடுடையாராதலின் மக்களெனப்படார். இனி வழிபறிகள்வரும், கொள்ளைக்காரருமாய் வனத்தின் கண்ணே தனித்து வாழுகின்ற மாக்கள் விலங்கினங்களினுங் கடைப்பட்டவராதலினல் மக்களெனப்படார். இவ்விருசார்பினுஞ் செல்லாது நடுநின்ற மக்கள் உடனுறை வாழ்க்கைக்கு உரியவரே யன்றித் தனித்துறைவாரல்லர். ஆதலால் அன்னருக்கு யாம் மேற் காட்டிய தொடர்புகளனைத்தும் நிலை பெற்று நின்று இன்பத் துன்பங்களையெய்து விக்கின்றன.

பலவாய இத்தொடர்புகளை மூன்று வகைப் படுத்தியாராய்தல் கூடும். உலக வாழ்க்கையிலுள்ள தொடர்புகளனைத்தினும் மிக நெருங்கிய தொடர்பு எது வென ஆராய்வோமாயின் நாயகன், நாயகி என்னும் இருவர்க்கிடையே அந்நியோன்னியமாக அமைந்து கிடந்த அன்பின்றொடர்பு ஏனையவற்றினும் பார்க்க மிக நெருங்கிய தெனக் காண்போம். மூவகையென யாங்கொண்ட தொடர்புகளுள் முதல் வகையிது. இல்லற நடாத்தும் நாயகனும் நாயகியும் ஒரு சாராக இவர்க்கும்

மைந்தர், சுற்றத்தார், குரவர், விருந்தினர், ஏவலாளர் என்றின்னோருக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பு இரண்டாவது வகையாகும். இனி நகரமாக்களுக்கும் அரசனுக்கு மிடையிலேற்பட்ட தொடர்பும், பிற தொடர்பில்லார் இருவருக் கிடையே அரசியன் முறை, பொருள் செயல்வகை என்னும் இவற்றால் ஏற்பட்ட தொடர்பும் மூன்றாவது வகையினுட் படுவன. அன்பின் றொடர்பு, சுற்றத் தொடர்பு, (அரசியற்) பொருட் பாற்றொடர்பு என யாம் வகுத்துக் கொண்ட மூவகையினுள்ளே எல்லாத் தொடர்பும் அடங்குவன. இவற்றையே முது தமிழ்ப் புலவர் காமத்துப் பால், அறத்துப்பால் (இல்லறவியல்), பொருட்பால் என முப்பாலாக வகுத்துக் கூறினர். இனிச் சுற்றத் தொடர்பினீங்கி நின்ற தவவொழுக்கத்தினருக்குத்துறவறங் கூறப்பட்டது. இதுவும் அறத்துப்பாலினுள் அடங்கும். ஆகவே முப்பாலுரைக்கும் நூல் உலக வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் நீர்மையதாய் ஏனைய நூல்களினுந் தலை சிறந்து நின்றது.

உலக வாழ்க்கை அன்பின்றொடர்பு, சுற்றத்தொடர்பு, பொருட்பாற் றொடர்பு என மூவகைத் தொடர்பினாலமைந்தது எனமுன்னமே காட்டினோம். ஆராய்ந்து நோக்குவாமாயின் இவற்றின் வேறாக இன்பத்துன்பங்கள் ஏற்படாவென்பதும், அங்ஙனமாதலின் இவையே இருவினைக்கும் இம்மைமறுமைச் சுகதுக்கங்களுக்கும் ஆதாரமாய் நின்றனவென்பதும் தெளிவாகப் புலப்படுவனவாம். மூவகைத்தாகிய இத்தொடர்புகளின் இயல்பினை நன்கறிந்து ஒழுகுவோர் துன்பத்தினீங்கி இன்பத்தைப் பெறுவர். பொருள் மிக்கபடைத்தாரேனும் கல்வியறிவு உடையாரேனும் வாழ்க்கையின் இரகசியத்தை அறியாதிருப்பரேல் அவர் வாழ்க்கை செம்மையற்றுத் துன்பத்தை வருவிக்கும் என்பது வெளிப்படை. உதாரணமாகப் பெரும் பொருள் படைத்த சீமானொருவர் பலதுறைகளிலும் வல்லவராயிருந்தும் தம்மனைவியோடு ஒத்து வாழுஞ் சத்தியற்றவர் என்று வைத்து கொள்ளுவோம். விடியல் முதல் மாலைப் பொழுது வரையும் மனைவியொடு சீறிச்சினந்து கொண்டிருப்

பாராயின் அவருக்கு மன ஆறுதலுண்டாகுமோ? உண்டா காது. அன்றை வீட்டிற் கூலிப்பிழைப்புச் செய்துகொண்டு மனைவியோடு சந்தோஷமாக வாழும் வறியவனுடைய செம்மை இச்செல்வந்தருடைய செம்மையினும்பன்மடங்கதிகமானதே: அவனுக்கு மன ஆறுதலுண்டு, அகமகிழ்வு உண்டு. வேறு சிலர் பெருஞ் செல்வம் படைத்திருந்தும் சுற்றத்தாரோடு ஒத்துவாழும் மார்க்கத்தையறியாமையால் ஈகை, அருள் முதலிய நற்குணங்கள் அடையப்பெறுதாராய்ப் பேராசை பொறாமையென்னுந் தீக்குணங்கள் பற்றியலைப்ப மன ஆறுதலற்றுச் சுகமிழந்து வருந்துகிறார்கள். பெற்ற பிள்ளைகளை வளர்க்கு முறை தெரியாமையால் சீர்கெட்ட கீழ்மக்களோடு நட்புப் பூணும்படி விட்டுப் பிற்காலத்தில் தமது பிள்ளைகள் சொற் கேளாது நடக்கிறார்களே யென மனம் வருந்தித் துன்புறுகின்ற பெற்றோர் எத்தனையோ பலர். இங்ஙனம் உலக நடையைக் கூர்ந்து ஆராய்ந்து பார்ப்போமாயின், வாழ்க்கையின் மருமத்தை யுணர்ந்தோர் அகமகிழ்வும் மன ஆறுதலுமுடையவராய் இன்புற்றிருப்பதையும் அதனை யுணராதோர் பொருள், செல்வம், கல்வி யென்னுமிவற்றைப் பெற்றிருந்தும் துன்புற்று நலிவதையுங் கண் கூடாகக் காணுவோம்.

ஆதலினால், தமது வாழ்நாளைச் செம்மையாகக் கழிக்க வேண்டுமென்னும் விருப்பினையுடையோர் மூவகைப்பட்டு நின்ற தொடர்புகளின் இயல்பை யாராய்ந்தறிந்து முரண் கொள்ளாது ஒழுக வேண்டுமென்பது முடிவாகின்றது. உறக்கம், இளமை, நோய் என்னும் இவற்றிற் கழிகிற நாள் போக எஞ்சியிருக்கும் வாழ்நாளோ மிகச்சில. அங்ஙனமாதலின் இணக்கமறிந்திணங்காது அவமே முரண்பட்டு நின்று வாழ்நாளை வீணுக்குவது எவ்வளவு பேதைமை. வாழ்க்கையின் மருமத்தை யறிந்தவரே இம்மையினும் மறுமையினுஞ் செம்மையுற்றிருப்பாரென்பதைப் பன்முறையும் வற்புறுத்திக் கூறுவோம். தம் மனப்பாங்குக்கு நடப்பேமா மெனக் கட்டறுந்த மாடுபோல் இலக்கின்றி நெறிதவறித் திரிபவர்கள் துன்பத்தை படைகளி யல்லே. சமுவாய வாழ்க்கையமைந்திருக்கும் மரபினைக் கூர்ந்

தாராய்வோமாயின் அது ஒரு கட்டுக்கோப்பாக விருக்கிற தென்பதையும் நிலையினின்றோர் இன்பமடைவாரென்பதையும் நிலைதவறினோர் துன்பமுறுவாரென்பதையும் நன்கு உணர்ந்து கொள்வோம். அஃதெங்ஙனமாகுமெனின் உலக வாழ்க்கை யாகிய சமவாய (கூடிவாழுகின்ற) வாழ்க்கையாம். மேற் காட் டியவாறு போல மூவகைத் தொடர்புகளாலமைந்தது; இனித் தொடர்பெனப்படுவது இருபாலாருக் கிடையில் நிகழ்வது; இவ்விருபாலாரும் தத்தம் மனப் பாங்கின் வண்ணம் ஒழுகுவா ராயின் துன்பம் வந்தெய்து மென்பதும் ஒன்றித்து அறநெறி யி னிற்பாராயின் இன்பம் வந்தெய்து மென்பதும் வெளிப் படை.

மூவகைப் பட்ட தொடர்புகளின் தன்மை, இயல்பு, மரபு என்னும் இவற்றைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறள் என்னும் தலையாய நூல் சிறப்புறவிரித்துக் கூறும். ஏனைய நீதி நூல்கள் சிற்சில பாகங்களைக் கூறுவன. வட மொழியிலுள்ள தர்ம சாஸ்திர அர்த்த சாஸ்திரங்களும் கல்ப சூத்திரமாதியனவும் பெருகக் கூறுவன. இக்கட்டுரையிற் பொது வியல்பாகிய சில விஷயங்களைக் கூறி முடிப்பாம். மூவ கைத் தொடர்பினுள்ளும் முதற் கண்ணின்றது அன்பின்றொ டர்பு என முன்னமே கூறினும். இது செம்மையுற்ற வழியே ஏனைய தொடர்புகளுஞ் செம்மையுறும். ஆதலினால் நாயகனு க்கும் நாயகிக்கும் இடையிலுள்ள அன்பின்றொடர் பினியல்பை நன்கறிந்திருப்பது இல்லற நடாத்துதற்கு இன்றியமையாத தொன்றும். இது பற்றிப் போலும் தண்டமிழ்ப் பெரும் புல வர்கள் அகத்திணையின் பாற் கிடந்த இன்பத்துறையைப் பெரு கவிரித்துக் கூறினார்கள். இத்தொடர்பு அன்பிற்பாற்பட்டது. அன்பே கருவியாக நிகழ்வது. நாயகன் நாயகிபாற் பேரன்பு பாராட்டவேண்டும். அங்ஙனமே நாயகியும் நாயகன்பால் நிறை ந்த அன்பு உடையவளாயிருத்தல் வேண்டும். "எம்மிறைவன் எம்பெருமாட்டியைப் பாகத்தில் வைத்துக் கொண்டான், மணி வண்ணனாகிய கண்ணன் திருமகளை மார்பில் வைத்துக் கொண் டான், பிரமதேவன் கலைமகளை நாவிலிருத்தினான். யான் என்

னின்னுயிர்க்குயிராகிய தலைவியைக் கண்ணினுள் வைத்துக் காப்பாற்ற விழைந்தேன். ஆதலினால் கருமணியினின்று ஆடு கின்ற பாவையே யகன்றுவிடு, யான் விரும்புகின்ற திரு நுத லுடையாளுக்குத் தக்க விடம் பிறிதொன்றிலது" என்று கூறி ய நாயகனுடைய அன்பு எத்துணைச் சிறப்புடையது. இத்த கைய அன்புநாயகனுடைய உள்ளத்துத் தோன்றுமாயின் நாயகி யினுடைய உள்ளத்தும் அது பொலிவுறும் என்பதற்கு ஐயமி ல்லை, சிலர் தம்மனைவியரைப் பயமுறுத்தியாள முயற்சிக்கிறார் கள்; இது பேதைமைப்பாலதாகும். அன்பினால் அச்சத்தை விளைத்தல் இயலும். ஏனெனில் உண்மையன்பு உள்ளவிடத்து வேண்டிய அளவு அச்சமுந் தோன்றும். ஆனால், அச்சத்தி னால் அன்பை விளைவிக்க முயலுதல் மணல்கொண்டு கயிறு திரி க்க முயல்வதை யொக்கும். அன்புடையாரிருவர் மன நிறை வோடு வாழுகின்ற இல்லத்திற் சாந்தம், பொறுமை, தண் ணளி முதலிய நற்குணங்கள் பல தோன்றுதலும் செம்மையும் சீரும் வந்தெய்துதலும் இயல்பேயாம். காரணமின்றி வெகு ளுதல், வன்மஞ் சாதித்தல் என்னுமிவை உள்ளத்துட் புகுந் தாற் பிரிவினை யேற்படும். ஆதலால் அன்பின் வழுவாது நின் ற நாயகனும் நாயகியும் பொறுமையுடனும் ஆதரவுடனும் சீவி யம் நடத்த வேண்டும்.

இல்லத்தி லுதித்தெழுந்த அன்பின் சுடர் யாண்டும் பரந்து மைந்தர், சுற்றத்தார், உள்ளூரார், தேயத்தார், உலகத்தார் என்றின்னோர் பால் விரிந்து விரிந்து செல்ல வேண்டும். அன் பானது காலதேச எல்லையிலுட்பட்டதல்ல; ஆதலால் அது இன் னார்க்குரியது, இன்னார்க்குரியதல்லாதது எனன்பதோர்வரையறை யில்லை. "யாது மூரேயாவருங்கேளிர்" என்று கூறிய முது தமிழ்ப்புலவர் எல்லா வூரையுந் தம்மூராகவும் எல்லா மக்களை யுந் தமது சுற்றத்தாராகவும் கொண்டார். ஆதலால் சுற்றத் தொடர்பு இல்லத்திலே தோன்றி முதற்கண் நெருங்கிய தொட ர்புடையார்பாற் செல்லுவதாமாயினும் மனம் அகற்சியடைய அகற்சியடைய யாண்டும் பரந்து உலக மனைத்தினையுங் கதுவத் தக்கது. சுற்றத் தொடர்பு நிலைபெறுவதற்கு அன்பின் வழி

வந்த ஈகை ஆதாரமாய் நின்றது. பிறிதொன்று கொடுத்தற்கு வழியில்லாதரர் தாமும் இன்மொழியும் புன்னகையும் இயன்ற பணிவிடையுஞ் செய்தல் கூடுமாதலின் ஈகைக் குணத்துக்கு வறுமை யொருபோதுந் தடையாகாது. உள்ளத்திலே தியாக சிந்தனை யுதிக்குமாயின் அதுவே போதுமானது. பிறர்க்குத விசெய்ய விரும்பிய தியாகி தான் கருதிய உதவியைச் செய்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் தாமே வந்தெய்து வனவாம். தியாக சிந்தையோடு பிறர்க்குதவி செய் யுஞ் செயலே நிறைந்த இன்பத்தோடு கூடியதா யிருத்தலின் அதற்குப் பிறிதொரு கைம்மாறு வேண்டப்படுவதில்லை.

இனி ஒரு நகரத்திலோ ஒரு தேயத்திலோ ஒருங்கு கூடி வாழும் மாந்தர் பொருள் இன்பங்களை வளர்த்து தம்முள்ளே கலாம் விளையாது அறநெறி முறைப்படி வாழ்வதற்கு அவரை வழிப்படுத்துவான் ஒரு அரசன் இன்றியமையாதவனுகின்றான். அரசன் பிரஜைகளுக்குச் செய்யவேண்டிய கடமையையும் பிரஜைகள் அரசன்பாற் செலுத்த வேண்டிய கடமைகளையும் இவையிவை யென இருசாராரும் அறிந்து நடப்பாராயின் அரசியற் பொருட்பாற் றொடர்பு நன்கு நிலை பெறும். (க) கள்வரானும்உட்பகையானும் தீங்குவிளையாது பாதுகாத்தலும்,(உ)கணவன் மனைவி, பெற்றோர், புதல்வர், என்றின்னோருக்கிடையினுள்ளபொருளுரிமை ஒழுக்க நெறி இவற்றை வரையறை செய்து விதித்தலும், (௩) பொருளோடு இயைபுபட்ட ஆட்சி, விற்பனவு, நன்கொடை இவற்றினியல்பை வரையறுத்துக் கூறுதலும், (௪) இருவர்க்கிடையேயுள்ள உடன்படிக்கை யினியல்பை வரையறுத்துக் காட்டுதலும், (௫) நெறியதுதவறிதுவென வகுத்துக் காட்டி அறமுறை நிறுத்தலும் அரசியலுக்குரிய அகக்கடமைகளாம். இவற்றோடு ஒன்றி நின்ற சிறப்பினவாகிய புறக்கடமைகளுஞ் சிலவுள அவையாவன:— க. கிருஷி வர்த்தகம் என்னுமிவற்றை விருத்தி பண்ணுதல், அங்ஙனம் விருத்தி செய்தற்கு வேண்டிய நாணயம், நிறையிவற்றை யேற்படுத்தல், முறை யறிந்து தீர்வை விதித்தல், கப்பற் போக்குவரவுக்கு வேண்டிய சட்டங்களை யேற்படுத்தல், 2. தொழிலாள

ரை நிலைப் படுத்தல், ௩. போக்கு வரவுக்கு வேண்டிய பாதை புகை ரத வீதியிவற்றை நிருமித்தல், ௪. தந்தி தபாற் சௌகரியங்களை யேற்படுத்துதல், ௫. நீர்க்குழாய், தெரு விளக்கு ஆகிய இவற்றை யமைத்தல், ௬. சுகாதாரத்துக்கு வேண்டுவன செய்தல், நோயுற்றோர்க்குச் சிகிச்சை செய்வித்தற் கேற்றவசதிகளை யுண்டாக்கல், ௭. கல்விச் சாலை யேற்படுத்துதல், ௮. வறுமையுற்றோரையும், வலிமையற்றோரையும் பாதுகாத்தல், ௯. மரந்தரும் வனங்களைப் பாதுகாத்தல், ௧௦. மதுபான நீக்கம் முதலிய வற்றில் ஊக்கஞ்செலுத்துதல். இத்தகைய கடமைகளை அரசியலாளர் செய்து வருவாராயின் குடிகள் அவர்பாலன்பு மச்சமும் பூண்டு அவர் வழி நிற்பதுமியல்பே யாம்.

அன்பின்றொடர்பு, சுற்றத் தொடர்பு, அரசியற் பொருட்பாற்றொடர்பு என்னும் இவற்றினியல்பை யாராய்ந் தறிந்து நெறிதவறாது நிற்பவரே வாழ்க்கை நலனையடைந்தோராவார்; இவர் செயலாலே சமூக மனைத்தும் நலனெய்தும். இத்தொடர்புகளை யாராய்ந் தறிவுறுத்தும் நூல்களே நூல்களெனப்படுவன. பிற நூல்கள் விளையாட்டு நூலும் பொழுது போக்கு நூலுமாமேயன்றி உண்மை நூலெனப்படா. பெருந்தகையவாய நூல்களுட் பெருந்தகையதாக விளங்குவது திருவள்ளுவ நாயனர் உரைத்தருளிய முப்பானூல்—இது மூவகைத்தாய் தொடர்பினியல் பனைத்தையும் விரிவாகக் கூறுவது. தமிழ்மொழிக்கு அருங்கலமாகிய இந்நூலினைத் தமிழரனைவரும் அமைவுறக்கற்று அதன்வழி நிற்பரேல் இம்மை மறுமைப் பயனையடைவார்களென்பது திண்ணம்.

சாலிவாகன சகாப்தம்.

———:o:———

தி. நா. சுப்பிரமணியன்.

(சஙஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதம் பலவிதக் கொள்கைகள் உண்டாவதற்கு அக் காலத்திய சரித்திரம் நிச்சயமாகக்கூற முடியாதது தான் காரணமாகும். முதலாவதாக உள்ள கனிஷ்கக்கொள்கை வெகு நாளைக்குமுன்பு உண்டானதாகும். கனிஷ்கனது காலமும் நிச்சயிக்கப்படவில்லை. அக்காலத்திய சரித்திரம் இந்துதேசம் முழுமையும் நாளைக்கும் நிலையற்றதாக இருக்கிறது.

I. கனிஷ்கக் கோள்கை.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வடக்கே யிருந்து வந்த 'சகர்' என்னும் கூட்டத்தினர் வடஇந்தியாவிற் புகுந்தனர் என்றும், அப்பால் அவர்கள் தங்கள் இனத்தவராகிய 'பார்த்தியர்' என்பவருடன் உறவாடி யிருந்தனர் என்றும் பாரசீகத்திற்கு அதிகப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருந்தனர் என்றும் சீன தேசத்துச் சரித்திரம் கூறுகின்றது. இந்தியச் சரித்திரத்தில் 'சகர்' 'பஹ்லவர்' 'யவனர்' 'பார்த்தியர்' முதலியோர் ஒருங்கே கூறப்பட்டு வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவுள் நுழைந்த ஜாதியினரைக் குறிக்கின்றனர். இவர்களில் மௌஸ் (Maues) என்னும் பெயரினன் ஒருவன் சுமார் கி. மு. 100-ல் தக்ஷசிலத்தில் ஆண்டு வந்தான். பிறகு சுமார் கி. மு. 57-ல் முதலாம் அஸீஸ் (Azes I) என்பவன் பட்டமெய்தினன். அவன் காலத்திற்போலும் சக-பார்த்தியர் வட இந்தியா முழுவதையும் தக்காணததினொரு பகுதியையும் தம்முள்படுத்தியது. இச்சமயத்தில் யூ-சீ (Yue-Chi) என்னும் 'குஷான்' வகுப்பினர் (Oxus) ஆக்ஸஸ் நதிக்கரையில் உள்ள தங்கள் இருப்பிடத்தைவிட்டு பாக்டீரியாவையும் (Bacteria) இந்தியாவின் எல்லைப் புறத்தையும் கிட்டினர்.

அஸிஸுக்குப் பின் அஸிலிஸெஸ் (Azilises) அலிஸ் II, காண்டோபர்னீஸ் (Gondopharnes) என்னும் அரசர்கள் ஆண்டனர். காண்டோபர்னீஸ் என்பவனது சாஸனம் ஒன்று 'டாக்டி-பாஹி' (Takht-i-Bahi) என்னும் இடத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அஃது ஏதோ ஒரு அப்தத்தின் 103-க்குச் சரியான அவனது 26-ம் வருஷத்தில் பொறிக்கப் பட்டதாகும். அவ்வப்தம் கி. மு. 57-ல் ஆரம்பிக்கும் விக்கிரமாப்தமாக இருக்குமானால், காண்டோபர்னீஸ் சுமார் கி. பி. 20-ல் பட்ட மெய்தியிருத்தல் வேண்டும். அவன், அகஸ்டஸ் என்னும் யவன அரசனாலும், ப்ரேடிஸ் (Phraetes IV A. C. 8—11) என்னும் பார்த்திய அரசனாலும் உபயோகப்படுத் தப்பட்ட 'கைஸாஸர்' என்னும் விருதை உபயோகிப்பதால் அவ்விருவருக்கும் பிற்காலத்தியவனாகவே இருத்தல் வேண் டும். அவன் முதலில், பஞ்சாபையும், மற்றும் வடக்கேயுள்ள நாடுகளையும் தன்னுட் கொண்ட ஒரு பெரிய ராஜ்யத்திற்கு அதிபனானன். பின்னர் அரகோஸியா, (Arachosia) ஸிந்த் முதலிய ஸிந்து நதி முகத்துவாரப் பிரதேசங்களைக் கீழ்ப்படுத் தினான். காண்டோபர்னீஸ் சுமார் கி. பி. 50-ல் இறந்ததும், நாடு பல கூறுகளாகப் பிரிந்து, பஞ்சாப், மருமகன் அப்ட கேஸிஸுக்கும் (Abdageses) அரகோஸியாவும், ஸிந்தும், ஆர்தாகனீஸ் (Orthoganes, See Percy Gardner' s British Museum Catalogue, Greek and Seythinan Kings, page 109 Vol. XXIII, 9.) அகப்பட்டன. ஆர்தாகனீஸுக் குப்பிறகு பகோரிஸ் (Pakores ஷை p. 110. Vol. XXIII 8. என்பவன் ஆண்டிருக்கிறான். கி. பி. 70-லும் அந்தப் பிரதே சம் இங்ஙனம் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. ஏனெனில் அக்காலத்திய யவன 'பெரிபிளஸ்' ஆசிரியர், இந் நாடு "ஒருவரை ஒருவர் துரத்த வேண்டும் என்ற எண்ணத் துடன் சதா சண்டையிட்டுக் கொண்டிருக்கும் குறுநில மன் னர்களால் ஆளப்பட்டு வருகிறது" எனக் கூறியிருக்கிறார். (Indian Antiguary Vol. VIII. p. 138.)

இதற்குப் பிறகு அந்நாடு யூ-சி. வகுப்பினருள் ஒருவனுகிய காட்பைஸிஸ் (Kadphises) என்பவனுல் ஜெயிக்கப்பட்டது. இவன் நிச்சயமாக இரண்டாவது காட்பைஸிஸ் ஆவன். பிந்திய 'ஹான்ஸ்' சரித்திரம் "குஸுலேலா காட்பைஸீல் 'கௌ-பூ' (Kao-fu) அதாவது காபூலேயும், 'கி-பின்' (Kipin) அதாவது காஷ்மீரத்தையும் (?) ஜெயித்தான். அவன் தான் காபூலே ஜெயித்தவருள் முதல்வனுவன். அவன் மகன் வேம காட்பைஸிஸ் 'டீன்-சூ' (Tien-chu) அதாவது இந்தியாவை ஜெயித்துத் தானே அரசனுக இருந்தான்." எனக்கூறுகிறது. (Quoted from J. R. A. S. 1913 p. 992.) காலஞ்சென்ற டாக்டர் பிளீட் துரை "கி. பி. 50-க்குச் சமீபமாகக் காபூல்கரசு 'ஹெர்மாய்ஸ்' (Hermaeus) என்னும் கிரேக்க அரசனிடமிருந்து குஷான குஜுலோ காட்பைஸிஸுக்கு மாறியது என்னும் கொள்கையை நாம் எவ்விதத்திலும் மறுக்கவில்லை. அக்குஜுலனது பிள்ளை வேமனே வட இந்தியாவில் ஒரு குஷான இராஜியத்தை ஸ்தாபித்தான்." எனக் கூறுகிருர். (See above).

குஜுலனும், ஹெர்மாய்ஸும் சுமார் கி. பி. 50-ல் வசித்தவர்கள் என்றும், கனிஷ்கன் கி. பி. 78-ல் சகாப்தத்தை ஏற்படுத்தியவன் என்றும், நாம் இரண்டு கொள்கைகளேயும் ஒரே சமயத்திற் கொள்ளுவதற்கில்லை. ஏனெனில்:—

இவ்விரண்டு ஆண்டுகளுக்கும் இடையேஉள்ள 28 ஆண்டுகளுள் குஜுலனது அரசாக்ஷியின் முடிவு, வேமனது ஆட்சி முழுவதும், கனிஷ்கனது அரசியலின் ஆரம்பம், முதலியன நடைபெற்றிருக்க வேண்டும். சீனச் சரித்திரம் குஜுலன் தனது எண்பதாவது ஆண்டில் மரணமடைந்ததாகக் கூறுகின்றது. வேமனேப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆயினும் அவனது வெற்றிகளேக் கொண்டும், வேண்டிய அளவு நாணயங்கள் கிடைப்பதைக் கொண்டும், அவனும் அதிக நாட்கள் ஆண்டதாகவே மதிக்க வேண்டியிருக்கிறது. கன்னிங்ஹாம் துரை இவனது ஆட்சிக்கு நாற்பது ஆண்டுகள் மதிப்பி

டுகின்றனர். இவ்விதமாக இருவர்களும் நீண்ட காலம் ஆண்டிருப்பதாகத் தோற்றுவதால் இந்த 28 வருஷங்கள் போதாது. (Early History of India by V. A. Smith 2nd Edition p. 239 foot-note i).

குஜூலவமிசத்தியக் குஷானர்களைப் பற்றி 113, 122-ம் வருஷங்களில் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் இருக்கின்றன. அவை, விக்கிரமாப்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளவானால், சரித்திரம், நாணயவாராய்ச்சி முதலிய எல்லாவற்றுடனும் ஒத்துக்கொள்ளுகின்றன. பல ஆராய்ச்சியாளர்களும் இங்ஙனமே எண்ணுகிறார்கள். இவையன்றி, தற்காலத்திய ஞாபகச் சின்ன பரிசோதக இலாகாத் தலைவராகிய ஸர்ஜான் மார்ஷல் அவர்கள் (Sir John H. Marshall, Director-General of Archeology) தக்ஷசிலத்திற் 'சிர்-ஸ்தூப'த்தில் (Chir-Stupa) 136-ம் வருஷத்திய சாஸனம் ஒன்று பொறிக்கப்பட்ட வெள்ளித் தகட்டைக் கண்டு பிடித்தார். விக்கிரமாப்தமானால் அது கி. பி. 79-க்குச் சரியாகவரும். (J. R. A. S. 1914, p. 973-78.) அதிற் கூறப்பட்டிருக்கும் அரசன் குஜூலனாகவே இருத்தல் வேண்டும்; ஆனால் நிச்சயமாகக் கனிஷ்கன் அல்ல. (Taxila Inscription of year 136 by Dr. Sten-Konow in Epigraphia Indica Vol. XIV pp. 264-88.) மார்ஷல் துரை அவர்கள் தக்ஷசிலத்தைப் பற்றி 'Guide of Taxila' என ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் அங்கே வெட்டிப் பிரிக்கப்பட்டக் கட்டிடங்களை ஆராய்ந்தும், அக்கட்டிடங்கள் கிடைக்கும் நாணயங்களை வரிசையாக ஆராய்ந்தும், "இரண்டு காட்பைஸிஸூக்கும் முன்பாகக் கனிஷ்கன் ஆண்டதாக இனிக்கூறுவது முடியாத காரியம்" என்னும் முடிவிற்கு வந்திருக்கிறார். அன்றி, வேமனுக்கு அடுத்தாற் போலக் கனிஷ்கன் பட்டமெய்தினான் என்பதையும் நிச்சயமாகக் கூற முடியாது. இவர்களுக்கு இடையில் 'ஸோடர் மேகஸ்' (Soter Megas) சக்கிரவர்த்தி என்னும் விருதையுடைய பெயர் தெரியா அரசன் ஒருவனது நாணயங்கள் காணப்படுகின்றன.

சகாப்தத்திற்குக் காரணன் கனிஷ்கனே என எண்ணிய ஆசிரியர்கள், அவன் கிரேக்க-பௌத்த சிற்பத்தை அதன் உன்னத நிலையில் இந்நாட்டிற் பரவச் செய்தான் எனவும் நினைத்தார்கள். அவன் சாஸனங்களையுடைய புதுமைகள் கண்டு பிடிக்கப்பட்டதும் இக்கொள்கை கொஞ்சம் கொஞ்சமாக மறையவேண்டியதாயிற்று. அவற்றில் கிரேக்க சிற்பம் விளங்கவில்லை. பெர்குஸான் துரை அவர்களும், 'காந்தாரா' சிற்பம் நகாசு வேலைகளில் கிரேக்கரை விட ரோமரைத்தான் அதிகமாகப் பின்பற்றுகிறது எனக் கூறுகிறார். லெப்டினன்ட்—கர்னல் வாட்டெல் அவர்கள் (Lieut-Col. Waddell) அரசாங்கக் கண்காக்ஷிகளுக்காக காந்தாராவிலும் ஸ்வாட் (Swat) பிரதேசத்திலும் விக்கிரகங்களைச் சேர்த்தனர். அவர் அவற்றின் புகைப் படங்களை புரொபஸர் எர்னஸ்ட் கார்டினரு (Prof. Earnest Gardner)-க்குக் காண்பித்த பொழுது கார்டினர், உடை முதலியவற்றால் அவை பிந்திய ரோம, பைஸாந்திய (Byzantine) விக்கிரகங்களை ஒத்திருக்கின்றன எனக்கூறினார். வாட்டெலும், காந்தாரச் சிற்பம் மிகவும் பிந்திய காலத்ததென்றும், உன்னத நிலையை கி. பி. நான்காம் நூற்றாண்டிற்றான் அடைந்திருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வந்தார். (Actes Onzieme Congres Internationaldes Orientalistes Sect, I 246.)

இவையன்றிச் சீன தேசத்துச் சரித்திரம் தா-யூ-சி (Ta-Yue-Chi.) வகுப்பைச் சேர்ந்த 'பா-தியோ' (Po-t'iao) என்னும் அரசன் கி.பி. 229-ல் சீனாவிற்கு ஒன்று அனுப்பியதாகக் கூறுகிறது. 'பா-தியோ' என்பது குஷன் வமிசத்தில் வந்த வாசுதேவனைக் குறிப்பதாகும். அங்ஙனமாயின், கனிஷ்கன் பட்டமெய்திய காலம் சுமார் கி. பி. 130 முதல் 169-க்குள் இருத்தல் வேண்டும். இவ்விதமாகக் கனிஷ்கன் கி. பி. 78-ல் ஆண்டுவந்தான் எனக் கூறமுடியாது.

கடைசியாகச் சாஸனங்களில் ஆண்டுகளைக் குறிப்பிடும் விதமும் வேறாக இருக்கின்றது எனப் புரொபஸர் ஸ்டென்

கொநோ அவர்கள் கூறுகிறார்கள். கனிஷ்கன் ஒரு புது அப்தத்தில் ஆண்டுகளைக் குறிப்பிட்டாலும், நாள்களைத் தனது முன்னோர்களைப் போலவே, விக்கிரமாப்தச் சாஸனங்களுள் குறிப்பிடப்பட்டிருப்பனவே போலக் குறித்து வந்தான். அவை சகாப்தச் சாஸனங்களுக்குப் பெரிதும் முரணாக இருக்கின்றன. இங்ஙனம், கனிஷ்கன் சாலிவாகன சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்க முடியாதென்பது போதரும்.

II. வேம காட்பைஸிஸ் கொள்கை.

இக்கொள்கை 'எபிகிராபியா இந்திகா' என்னும் சாஸன ஆராய்ச்சிப் பத்திரிகையின் ஆசிரியராகிய டாக்டர் ஸ்டென் கொநோ அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கொள்கை ஒருகால் இருக்கக்கூடுமோ என்பதற்கும் பல இடையூறுகள் உள்ளன. முதலில் வேமன் கி. பி. 78—79-ல் ஆண்டிருத்தல் வேண்டும். 136-ம் வருஷத்திய 'சிர்ஸ்தூப'ச் சாஸனம் அக்காலத்தியது ஆகிறது. ஆனால் நாம் அச்சாஸனம் குஜூலனதே எனக் கூறவேண்டியிருக்கிறது. (Ep. Ind. Vol. XIV p. 289) அவன் ஆண்டதாகவே வைத்துக்கொண்டாலும், அவன் ஒரு அப்தத்தை ஏற்படுத்தியதாக நிரூபிக்க வேண்டும். ஏனெனில் அவனாலும், அவன் பின்னோர்களாலும் இச்சகாப்தம் உபயோகிக்கப்பட்டதில்லை. அதன் பிறகு அந்த அப்தம் மத்திய இந்தியச் சகர்களால் உபயோகிக்கப்பட்டது என நிரூபிக்க வேண்டும். இங்ஙனம் இக்கொள்கை வலியுடைத்தது அல்ல.

III. நாகபாணக் கோள்கை.

அஸிலூம் அவன் பின்னோர்களும் பஞ்சாபை ஆண்டு வந்த காலத்தில் நாட்டின் மற்றைய பாகங்கள் க்ஷத்ரபர்கள் என்றும் மகா க்ஷத்ரபர்கள் என்றும் கூறப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்தன. அவர்கள் சக வமிசத்தைச் சேர்ந்தவர்களாகவும், கிட்டத்தட்டத் தனியரசர்களாகவும் இருந்தனர். அவர்களுள் நாகபாணன் என்பவனது நாணயங்கள் வேண்டிய அளவு கிடைக்கின்றன. மத்திய இந்தியாவில்

ஜொகல்தம்பி (Joghaltembhi) என்னுமிடத்தில் 13250 நாணயங்கள் உள்ள ஒரு புதையல் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. அவன் காம்பேக் குடாக்கடற் பக்கத்தில் ஆண்டதாகத் தோற்றுகிறது. மகாராஷ்டிர நாட்டில் கார்லி, நாஸிக் ஜுன்னர் போன்ற இடங்களிலுள்ள குடை வரைக் கோயில்களுள் இவனது சாஸனங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. (Luder's List of Brehmi Inscription of Northern India up to A. D. 400 No. 1133 and the following nos.) அவ்விடங்களில் அவன் ஏற்படுத்திய விக்கிரகங்களின் அழகைக் கொண்டு அவன் அரசு செழித்திருந்தது எனவும், அவனது சாஸனங்கள், 41, 42, 45, 46 முதலிய ஆண்டுகளிலும் பொறிக்கப்பட்டிருப்பதால் அவன் ஆட்சி நீண்டதாக இருந்தது எனவும், ஆகவே அவன் சகாப்தத்தை ஏற்படுத்தி யிருத்தல் கூடும் எனவும் கருதப்படுகிறது.

அவனுக்குப் பிறகு அந்நாட்டை ஆண்டதாக 72-ம் வருஷத்தில் ருத்திரதாமன் என்பவனது சாஸனம் ஒன்று ஜுனகத் என்னும் இடத்திற் கிடைத்தது. அது அவன் பாட்டன் சஷ்டணனும் (Chashtana) ஆண்டதாகத் தெரிவித்தாலும் அவர்கள் நாகபாணனுக்குப் பின்றோன்றியவர்கள் எனக் கொள்வதற்குத் தடை யெதுவும் காணப்படவில்லை. ஆனால் கி. பி. 1905—906-ல் புரொபஸர் தேவதத்த ராமகிருஷ்ண பண்டர்கார் என்னும் ஆசிரியர் ஆர்தெலி என்னுமிடத்தில் ருத்திரதாமனது சாஸனம் ஒன்றைக் கண்டு பிடித்ததும், இக்கொள்கை வலியிழக்கலாயிற்று. அச்சாஸனம் 'ஸாமோடிகனது' (Ysamotika) 'கொள்ளு'ப் பெயரனும், சஷ்டனனது பெயரனும், ஜயதாமனது பிள்ளையுமாகிய ருத்திரதாமனால் 52-ம் வருஷத்திற் பொறிக்கப்பட்டதாகும். (Archeological Survey of Western India. Progress report for 1905-06 p. 35 and J. R. A. S. 1899 p. 365) அவன் சாஸனம் 72-ம் வருஷத்திலும் இருப்பதால் அவ்வருஷம் அவன் பட்டமெய்திய வருஷத்தைக் குறித்தற்கில்லை. ஏதோ ஒரு அப்தத்

தின் வ்ருஷமாகவே, இருக்க வேண்டும். இவ்வமிசத்தினர் உபயோகித்தது சகாப்தமே என ஆசிரியர்கள் முடிவு செய்து இருக்கின்றனர். அங்ஙனமாயின் அது கி. பி. 130-க்குச் சரியாகும்.

நாகபாணனது சாஸனங்களும் சகாப்தத் திலேயே கணக்கிடப் பட்டவைகளாயின் சஷ்டனான் கி. பி. 124-க்குப் பிறகு தான் பட்ட மெய்தியிருத்தல் வேண்டும். ஏனெனில் அஃது தான் நாகபாணனது கடைசியாகக் கிடைக்கக் கூடிய சாஸன காலமாகும். அன்றி, நாஸிக்கில் மூன்றுவது குகையில் உள்ள பெயர்போன சாஸனம் ஒன்று, கௌதமிபுத்ர சாதகர்ணி, சகர் யவனர், பவ்ரவர்களை அழித்து, க்ஷஹராத்ரர்களை (Kahaharatas) வேரறுத்துச் சாதவாகன வம்சத்தை நிலை நிறுத்தினான் எனக் கூறுகிறது. (Inscription No. 2 See Epi. Ind. Vol. VIII p. 61 and Luder's List No. 1123) இச்சாஸனத்தில் அவன் ஆளுவதாகக் கூறிய நாடுகளுள் பெரும்பாலும் ஒரு காலத்து க்ஷஹராத்ரர்களது நாடாக இருந்தவை. கௌதமி புத்ரன் க்ஷஹராத்ரர்களை வென்றது நாணயங்களாலும் குறிப்பிடப்படுகின்றன. 'ஜொகல்தம்பி' நாணயங்கள் 13250-உள் 9270. கௌதமி புத்திரனால் மறுபடியும் அடிக்கப் பட்டனவாம். அவற்றுள் ஒரு பக்கத்தில் சைத்யமும், மூன்று வளைவு கோடுகளும் காணப்படுகின்றன. அதே போலச் சஷ்டனனது நாணயங்களிலும் காணப்படுகின்றன. இதுவன்றிச் சஷ்டனனது நாணயங்களை ஆராய்ந்தால் க்ஷஹராத்திரர்களது அழிவிற்குப்பிறகே சஷ்டனான் பட்டமெய்தியிருத்தல் வேண்டுமென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

(தொடரும்.)

வில்வம்.

அ. வேங்கடாசல முதலியார்.

(சடுஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்த வில்வப் பிஞ்சு ஊறுகாயை (வில்வக்கொழுந்தைப் போல மண்டலக் கணக்காயும் அதே பத்தியமாயும்) காலை தோறும் ஒரு காய் வீதம் அன்றன்று வெறும்வயிற்றில் தின்று அதன் மீது சாத தீர்த்த மென்னும் நீராகாரம் அரைக்கால்படி அல்லது வீசம்படி அருந்தி வரத் தீராத குன்மம், மாறாத பித்தம், தொலையாத புராண சுரம், நிலையான சிலேத்தும ரோகம், முதலிய தீர்ந்து, இரத்தம் சுத்தியாகி, இரத்த விருத்தியுமுண்டாகி, தாதுக்கள் இறுகி, வில்வத் தளிரின் குணத்தைப் பெறலாம். இப்பிஞ்சை வில்வக் கற்பம் என்பர் சித்தபுருஷர்கள். கிழவன் குமரனாவான் என்னும் பழமொழியை இப்பிஞ்சினிடத்து அநுபவத்திற் காணலாம். ஆனால் "சத்தியங் கெட்டாலும் கெடலாம் பத்தியம் கெடக் கூடாது" என்பதைத் திட்டமாய்க் கைக் கொள்ள வேண்டும். இதுவே கற்ப முறை. ஆனால் சிறிய முறை. அநுபவிகட்கு இதுவே சஞ்சீவி முறை. "சூட்சுமத்திலிருக்கிறது மோட்சம்" என்பதை இதனால் உள்ளங்கை நெல்லிக் கனியாகக் காணலாம். "பச்சிளங் கூவிளம்" என்று முன் கூறியுள்ள செய்யுள் இங்கு சிந்திக்கத்தக்கது.

சு. காய்.

இது, எண்ணெய்ச் சிக்கையும், அழுக்கையும், தீராத வெப்பத்தையும் போக்குஞ் சக்தி வாய்ந்தது. எண்ணெய் ஸ்நானம் செய்ய சக்தியில்லாத ஏழைக்கிராமவாசிகளான பெண்மக்கள் தங்கள் தலைமயிரிலுள்ள அழுக்கைப் போக்கிக் கொள்ளவும், கபால உஷ்ணம் கண் எரிச்சல், உஷ்ணத்தலைவலி, காது இரைச்சல், முதலிய உஷ்ண வியாதிகளை நீக்கிக் கொள்ளவும் வில்வக்காயைச் சற்று வாய் பிளக்கும்படி தட்டி நெருப்பில் வேகவைத்து அந்தச் சுளையை நன்றாய் ஜலம் விட்டரைத்து சீயக்காய் போல் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து வருவார்

கள். இப்படி அடுத்து ஸ்நானம் செய்து வருவதாலேயே தீபாவளிக்குத் தீபாவளிகூட எண்ணெய் கண்டறியாத அவர்களுக்கு இளவயதிலேயே மூக்குக் கண்ணாடி மாட்டிக் கொள்ளுதல், இளம்பற்களைக் கம்பிகளால் கட்டிக் கொள்ளுதல், செம்பட்டை மயிராதல், பால நரையுண்டாதல் முதலிய கொடுவினைகள் சமீபத்திலேயே நாடுவதில்லை. "கூவிளங்காய்க்குமுன் குருட்டுக் கண்ணில்லை" என்பது முதுமொழி. கூவிளம் என்பது வில்வத்திற்குடைய பல பெயர்களுள் ஒன்று.

எ. பழம்.

கற்பகத்தருவிற் கனிந்த தெய்விகக்கனியாம் வில்வப்பழத்தின் பெருமையை அநுபவசாலிகளே அறியவல்லார்! நன்றாக முற்றிக் கனிந்த வில்வக் கனியின் நறுஞ்சுளைகளை முதலிற் காட்டிய வகைகளால் கியாழம் பானம் (ஷர்பத்), ரசாயனம், லேகியம், தீநீர், தைலம், எண்ணெய் மற்றும் எந்த முறைகளாலேனும் பாகம் செய்து அரைக் குழந்தை முதல் அந்தியக் கிழவர் வரை, கெர்ப்பிணி, பிரசவ ஸ்திரீ, வயோதிகர்வரை எந்தப்பருவத்தும், எச்சமயத்தும், உபயோகித்து வரலாம். "கூவிளங் கனிகாணக் கூற்றுவனொதுங்கிடும்" என்ற பொன்னுரைப்படி வில்வப் பழம் எந்த குடும்பத்தில் விசேஷமாய் வழங்கப்படுகிறதோ அந்த குடும்பத்தில் பாலாரிஷ்டப் பிணிகளும் பழமலச் சிக்கலும் பரிதிகண்ட பனிபோற் பறக்கும்.

வில்வப்பழத்தின் பொதுக் குணம் தேகம், தீனிப்பை, குடல் இவற்றின் பலவீனம், அஜீரண பேதி, தீராத பேதி, சீதபேதி, கிராணி பேதி, வாந்தி பேதி, இரத்தக் கடுப்பு, மலக்கட்டு, வழக்கமான மலபந்தம், மூல ரோகம், வாந்தி, ஓக்காளம், பசிமந்தம், குடல் வாத ரோகம், கண்ணிருள் கப்பும் சாலேஸ்ர வியாதி, முதலியவும் இவற்றின் கிளை வியாதிகளும் தொடர்வியாதிகளும் நீங்கி இரத்த சுத்தியும் விருத்தியும் உண்டாம். இவையேயல்லாது மதுவகைகளாலும், மச்ச மாமிசவினங்களாலும் உண்டான சுக்கில சுரோணித குற்றங்களும் இக்கற்பகக் கனியால் கதிரவன் முன் காரிருளாம்.

சைவ வைணவ சமயத்துதித்த சுத்த சத்துவகுண ஆகா ரத்திற்குரிய மக்களிடையில், இத் தேசத்திற்கே முற்றும் பொருந்தாத * மாக்களின் அசுத்த தீனியாகிய அன்னிய ஆகா ரம் வந்து புகுந்த பின்னரே நமது நாடும் நமது தேவாலயங்க ளும் நமது சுபா சுபங்களும் யாவும் சில குடும்பங்களின் வாயி லாக மது மாமிச மயமான அனாச்சார வழக்கமாக மாறுபட்டு அதன் பலனாகத் தீராத நோயும் மாறாத கவலையுமாக சந்ததி களாக ஊறி பிஞ்சிலே பழுத்த நஞ்சுக் கனிகள் போல போஷ ணைக்குரிய ராஜ கருவிகள் பலமற்று, நைந்து, நொந்து உரு மாறி இதுவும் மனிதக் குழந்தைதானோ என்றெண்ணும்படி எலிக்குஞ்சு, மூஞ்சூறுக்குஞ்சுகள் போன்று பிறப்பதும், கர் ப்பத்திலேயே இறப்பதும், பிறந்து இருந்தாலும் சின்னாளிலே யே பாலாரிஷ்டத்தால் படாத பாடுபடுவதும், வளர்ந்து வயது வந்த பிறகும் சந்தோஷமற்று ஏதோ பூமிக்குப் பாரமாய் சில நாள் கழித்து விதியை நினைத்து வினையை ஒழித்துக் காலனார் க்குக்கடுகிச் செல்லுவதுமாக விருக்கின்றது.

இவ்வளவிற்கும் காரணம் இயற்கைக்கு மாறான ஆகாரத் தை இரைப்பையில் தள்ளி அதன் உள்ள அவயவங்களை யெல் லாம் சின்ன பின்னமாக்கி சீர்கெடச் செய்வதாலேயே வரும் தீமைகளேயாம். பால் அருந்தும் குழந்தைக்கு முதன் முத லாக அன்னமூட்டுங்கால் பாலை மட்டில் ஜீரணித்து வந்த நுண் மையான சிறு குடல் இந்த சாதத்தை ஜீரணிக்கச் செய்ய சக் தியற்று அஜீரண பேதியை உண்டாக்குவது பிரத்தியக்ஷமல் லவா? அதே போல சாக பட்சணத்திற்காகவே அமைக்கப் பட்ட தமிழ் நாட்டு மக்களின் சத்துவகுண இரைப்பைக்கு முற்றுமாறான, அதியுஷ்ண, அதிபித்த, அஜீரணமே ரூபமான மக்களின் வாழ்க்கைக்குப்பொருந்தாத மது, மாம்ச அனாச்சார வகைகளை பல காரணங்களை வீண் சாக்குப் போக்குகளாக்கொ ண்டு குடித்தும் தின்றும் வருவதாலேயே நமது சந்ததிகள் இக்கேட்டிற்கு ஆளாகும்படி நேர்ந்தது.

---

* மாக்கள்—மிருகங்கள்.

சுருங்கக் கூறுமிடத்து பூர்வம் நமது சந்ததியார்கள் திரிகால வர்த்தமானங்களை யுணர்ந்து, தேச கால வாழ்க்கைக்குத் தக்கவாறு, சுத்த ஆகாரத்திலும் சத்துவகுண உத்தம வஸ்துக்களையே தேர்ந்தெடுத்து உபயோகித்து வந்ததனால் அப்பதார்த்த வகைகளின் இரசத்திற்குத் தக்க சுத்த இரத்தமும் இரத்தத்திற்குத் தக்க அறிவும், அறிவுக்குத் தக்க ஆரோக்கியமும், ஆரோக்கியத்துக்குத் தக்க சந்தானமும், குறைவற்ற ஆயுளும், நிறைவுற்ற தேக மனோவன்மையும் பெற்று வீரர்களாகவும், சூரர்களாகவும், தீரர்களாகவும், சாஸ்திரக்கலாவல்லவர்களாகவும், பக்திமான்களாகவும், சத்தியவான்களாகவும், சர்வேசனுக்கும் சத்துக்களாகவும், இருந்தார்கள். பொய்யுடம்பை நீத்தார்களாயினும் புகழுடம்புடன் இன்றும் நம்முன் நின்று நம்முடைய கோர கிருத்தியங்களைக்கண்டு மனம் வருந்தி அந்தோ! உத்தம சந்ததியில் வந்த நீங்கள் துராச்சாரத்தில் மூழ்கியதாலல்லவா இக்கேட்டுக்காளானீர்களென்று நெஞ்சந் துடிக்கின்றார்கள். இத்தகைய ஆச்சார ஹீனமான சந்ததி இருப்பதைவிட இறப்பதே மேலெனச் சாபமும் கொடுக்கின்றார்கள். எனவே, இனியேனும் நமது பின் சந்ததிகளாவது பாரத மக்களாய், பழந்தமிழர்களாய், ஆழ்வார், நாயன்மார்களின் தொண்டர்களாய் விளங்க வேண்டுமானால் சிற்சிலர் டாம்பீகத்திற்காக கைக்கொண்டுள்ள காப்பிக் குடி முதல் எல்லா விதமதுக்குடிகளையும், ரொட்டி பிஸ்கோத் பெப்பர் மின்ட் முதல் எல்லாவித அன்னிய சிற்றுண்டி வகைகளையும் சோடாக் குடி முதல் டானிக் என்னும் அயல் நாட்டு பான வகைகளையும் பீடிக்குடி முதல் அழகிய உயர்ந்த சுருட்டு வகைகளையும், சில குடும்பங்களில் பிரசவ காலத்தில் உபயோகிக்கும் பிராந்தி முதல் நமது நாட்டு ஆச்சாரத்திற்கு முற்றுமாறான வெளிதேச (ஆஸ்பத்திரி) மருந்து வகைகளையும், தேக வலுவிற்கென்று சேர்க்கும் பாலும் கோழி முட்டையும் சேர்ந்த தந்திரகார முதல் மச்ச மாமிசாதி புலால் வகைகளையும் கண்ணாலும் பாராமல், கையாலும் தொடாமல், மனத்தாலும் சிந்தியாமல், தீர்க்கமான நெறியுடன் இருத்தல் மிக மிக அத்தியாவசியமான பெருக்கதோர் விரதமாகும்.

இதற்கு சம்பந்தமல்லாத விஷயத்தை ஏன் இங்கு குறிப்பிட வேண்டுமெ‌ன சிலர் யோசிக்கலாம். பரிசுத்தமான துளசி, வில்வம்இவற்றைப் பார்க்கும் கண்களால் இதர அனுச்சார வஸ்துக்களைப் பார்ப்பதும், தெய்வீக திருத்துளவம் வில்வம் இவற்றை தொட்டெடுக்கும் சுசிகரமான கையால் அசுசியான கோர சவங்களைத் தொடுதலும் வியாதிகளை வலிதில் அழைத்துக்கொள்ளுதலாம் என்பது வைத்திய சாஸ்திரம். சுத்தமான பசுவின் பாலைக் கறக்கும் (பாத்திரம்) அல்லது கறப்போன் (கை) இவற்றில் ஏதேனும் புளிப்பு அல்லது இனிப்பு முதலிய கிஞ்சிற்று பட்டு விட்டாலும் அதனால் அந்த பால் திரிந்து கெட்டு, பாலுமாகாமல் தயிருமாகாமல் வீணாய்ப்போதல் அநுபவமல்லவா? அதே போல பரிசுத்தமாகிய சுத்த சத்துவ உதிரம் ஓடிக் கொண்டிருக்கக்கூடிய தேகத்தில், அசுத்த வஸ்துகளின் பார்வையாலும் ஸ்பரிசத்தாலும் சுத்த உதிரம் கெட்டு அசுத்தமாக மாறி பலவித தீரா ரோகங்களுக்கு அடிகோலி விடுகிறது. ஓர் பயங்கர ரூபத்தைக் கண் பார்ப்பதாலேயே அந்த கோர காட்சியின் பயனாக தேகம் படபடத்து நாடி துடிதுடித்து சில சமயம் மூர்ச்சையுமுண்டாகி விடுகின்றதல்லவா? கண் பார்ப்பதினாலேயே இத்தனை விபரீதம் தேகத்திற்கும் மூளைக்கும் உண்டாவானேன்? என்பதை உற்று நோக்க, மது மாம்ச சேர்க்கையாலேயே நாம் இன்று இந்த ஈன ஸ்திதியில் இருக்கிறோம் என்பது தோன்றும். எனவே துளசி வில்வத்தைத் தொடவும் பூஜிக்கவும் பெரும் பாக்கியம் பெற்ற வம்சத்தில் வந்த யாவரும் மது மாம்ச வகைகளைக்கனவினும் சிந்திக்கக் கூடாதென்பதற்காகவே இங்கு இவ்வாறு வற்புறுத்த வேண்டியதாயிற்று.

அ. விதை.

வில்வப் பழத்தின் உள்ளிருக்கும் விதைகளை யெடுத்து உலர்த்தி மேல் தோல் போக்கி உள்ளிருக்கும் வித்தை லேகிய முறைகளில், சாரப்பருப்பு, அக்ரூட், பாதாம் பருப்பு முதலியவற்றைச் சேர்ப்பது போல தனியாகவோ பால் எடுத்தோ சேர்ப்பது ஆயுர்வேத வைத்திய முறை. தேகத்தின் இராஜ

கருவிகளாகிய மூளை, இருதயம், ஈரல், குண்டிக்காய் முதலிய வற்றிற்குச் செழுமையும் கொழுமையும் அளித்துப் போஷிப் பது பொதுவாய் வித்தினங்களின் இயற்கைச் சுபாவம். இவ் வகையில் இவ்வில்வ விதையின் பருப்பு தனியாகவோ, அரை த்துப் பிழிந்த பால் ரூபமாகவோ மேற் காட்டிய இராஜ கருவி களுக்குத் துணைக் காரணமாய் நின்று தேகத்தைப் போஷித் தும் பாதுகாத்தும் வருவதில் நிகரற்றது. இவ் வில்வ விதைப் பருப்பை ஜலத்தில் ஊறவைத்து வெண்ணெய் போல் அரை த்து வெள்ளாட்டுப் பால் அல்லது பசுவின்பாலில் கலந்து வடி கட்டிச் சிற்று கொதிக்கக் காய்ச்சிக் காலைதோறும் கொஞ்சம் கற்கண்டுப் பொடியிட்டு இளஞ் சூட்டுடன் அருந்தி வர, வாய் வேக்காடு, வாயின் இருபுறங்களிலும் (கடை வாயில்) புண் பட் டிருத்தல், நாவு வெடிப்பு, காரம் சேர்க்க முடியாதபடி நாவில் எரிச்சல், மார்பெரிச்சல், வயிற்று எரிச்சல், குலை எரிச்சல், நீர் எரிச்சல், சிவந்த நீர், மஞ்சள் நீர், ஆரம்ப பிரமேகம், மூல ரோக ஆரம்பம் முதலியன குணமாம்.

கூ. பிசின்.

இது பொதுவாக தேகத்தில் பல வீனம், சுரத்தின் பின் காணும் பலவீனம், சக்திக்குறைவு, ஆண்மை இல்லாமை, மண வாழ்க்கையில் விருப்பமின்மை, இராஜக்கருவிகளின் பலவீனம் சொர்ப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம், மறதி, இரத்தத்தில் கொழுமை யின்மை, சுறு சுறுப்பின்மை, சோம்பல் முதலிய வியாதிகளையுடையோர்க்கு சஞ்சீவி யென்னலாம். இன்னும் சுக்கிலத்திலுள்ள சகல வித வியாதிகளையும் நீக்கி புத்திர சந் தானத்திறகும் துணை செய்யக் கூடியது. தாது (சுக்கில) க்ஷீணத்தைப் பற்றிய எல்லா குறைகளை நீக்குவதும், இழந்த பலத்தையும் புதுப்பித்து அழிந்த சத்துவத்தைத் திரட்டிச் சேர்த்து, தேக மனோவன்மைகளைக் கொடுத்து, புத்துயிரளி த்து இகலோக வாழ்க்கைக்குரிய இன்பத்தை நல்கக் கூடியது மாகிய உயரிய வஸ்து. லேகிய முறைகளிலும், செந்தூர பற் பங்களின் அநுபான வகைகளிலும் சேர்ந்து பேருதவி செய் வது. தளர்ந்த தேகத்தை இறுகச் செய்வது. உதிரத்தில்

அயச் சத்தை அதிகரிக்கச் செய்வது. இரத்த விருத்தியை விரைவில் உண்டாகச் செய்வது. கெட்ட இரத்தத்தை சுத்தி செய்வது. இரத்த விகற்பத்தைச் சமனஞ் செய்வது. தங்க பற்பம் தங்க செந்தூரங்களைவிட, தாது உற்பத்தியும், தாது புஷ்டியும் செய்வதில் முதன்மையானது.

கO. குடுக்கை.

வில்வக் குடுக்கைக்கு இலட்சிமி பலமென்று பிரசித்தப் பெயர் இருப்பதாக முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இலட்சுமி பலமாகிய வில்வக் குடுக்கையின் பெருமை அளவிடற்கரியது. இக்குடுக்கையானது தன்னைத் தொட்ட மாத்திரத்திலேயே (ஸ்பரிச வேதியைப் போல) தன் மயமாக்குந் தன்மையுடையது. இதை ஸ்நானம் செய்து சித்தசுத்தியுடன் பக்தியோடு கையில் வைத்துக் கொண்டிருந்தால், கையிலுள்ள சர்மத் துவாரங்களின் வழியாக, "மிகினுங் குறையினு நோய் செய்யு நூலோர் வளி முதலா வெண்ணிய மூன்று" என்ற பொய்யா மொழியின்படி வாதமாதி நாடிகள் மிகாமலுங் குறையாமலும் அதனதன் நிறைப்படி முறை பிசகாது நின்று தேகத்தைப் பாது காக்கும் பெருங்குணத்தைப் பெற்றிருக்கின்றது.

இந்தக் குடுக்கையின் பெருமித அருங்குணத்தை உலகத்தவரும் அநுபவிக்க வேண்டிய நமது மூதாதைகள் இதை வீட்டின் உபயோகத்தில் தினசரிப் பழக்கத்தில் நடமாடும் ஏற்பாட்டைச் செய்து வைத்தனர். ஆண்மக்களுக்கு வீபூதி, ஸ்ரீசூர்ணம் வைத்துக் கொள்ளவும், பெண் மக்களுக்குக் குங்குமம், மஞ்சட் பொடி, கலவைச் சூர்ணம், தாம்பூல மாத்திரைகள், குழந்தைகளின் உரை மருந்துகள் முதலியவற்றை வைத்துக் கொள்ளவும் வில்வக் குடுக்கைகளையே உபயோகித்து வந்தார்கள். இவையேயன்றி, சாந்து கூட்டும் மைக் கிண்ணங்கள், குழந்தைகளுக்கு எண்ணெய், கார மருந்து முதலியவார்க்கும் பாலடை என்னும் சங்குகள், முதலியவற்றிற்கும் இக்குடுக்கைகளையே நீளத்தில் இரண்டாக பிளந்து கிண்ணங்களாகவும் பாலடைகளாவும் உபயோகித்து வந்தார்கள். எள்ளெண்ணெய் ஆமணக்கெண்ணெய், நெய் இவற்றை முகந்து எடுத்துக்கொள்

ளவும் இக்குடுக்கைகளைக் குறுக்கில் பிளந்து வில்வக் குச்சிகளை அல்லது மூங்கிற் குச்சிகளை காம்புகளாகப் போட்டு அகப்பைகளாக ஆண்டு வந்தார்கள். இதில் பெருங் குடுக்கைகளாகத் தேர்ந்தெடுத்துப் பெரிய அகப்பைகளாகச் செய்து கொண்டு சாதம், கூழ், குழம்பு, இரசம் மற்ற பதார்த்த வகை, பலகார வகைகட்கும் முக்கிய கருவியாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அக்காலத்து ஆயுர்வேத வைத்தியர்களும் இந்தக் குடுக்கைகளிலேயே, குளிகைகள், செந்தூரங்கள், பற்பங்கள். சுண்ணங்கள், மாத்திரைகள், சூரணங்கள், எண்ணெய் முதலியவற்றை வைத்து அநுபவித்துக் கொண்டு வந்துள்ளார்கள். இன்றும் சில பழயகால் சாஸ்திரானுபவமான வைத்தியர் வீடுகளில் இக்குடுக்கைகளைக் காணலாம். கிராமங்களிலுள்ள சில்லரைக் கடைகளில் எண்ணெய்க் கரண்டிகளாக பனங் கொட்டைகளை இன்றும் வைத்துக்கொண்டிருப்பதுபோல, அக்காலத்து விபூதி ஸ்ரீசூரணக் குடுக்கை முதல் அகப்பை முதல் இதர உபகரண சிறு பாத்திரங்கள் வரை இந்த வில்வக் குடுக்கைகளையே உபயோகித்து வந்தார்கள்.

இப்படி எடுத்ததெல்லாம் இக்குடுக்கை மயமாகக் காலை முதல் இரவு படுக்கை வரையில், குழந்தை முதல் பெரியவர்களீருக ஒவ்வொருவர்கையிலும் இக்குடுக்கை நடமாடிவந்ததால் இதன் ஸ்பரிச சக்தியால் பித்தமும் உஷ்ணமும் அளவு மீருதிருக்க தேகம் நோய்வாய்ப் படாமல் பாதுகாக்கப்பட்டு சுக தேகியாய் வாழ்ந்தனர். இன்றும் சில அநுபவசாலிகள் விபூதியை வில்வக் குடுக்கையிலடைத்து எப்போதும் இடுப்பிலே வைத்திருக்கக்காணலாம். இதன் அநுபவத்தை அவர்கள் பரம்பரையாய்ச் சொல்லக் கேட்டவர்களானதால் மகிமை தெரிந்து பெருமை உணர்ந்து அருமை அறிந்து ஆபத்தை நீக்கும அரிய சஞ்சீவி யென்றோர் ஆபரணம் போல் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

"நிச்சயஞ் சொன்னோம் நெருப்புங் குளிர்ந்திடும்
அச்சமுமில்லை யழகாந்திருமேனி"

என்ற தொடரில் காணப்படும் பொருட்களின் நயத்தை அநுபவசாலிகளன்றோ உணர்ந்தானந்தித்தல் வேண்டும்.

தொட்டார் தேகத்தைத் தூய்மை யாக்கும் இவ்வரிய சஞ்சீவி தற்காலம் காலவேறுபாட்டிற்கேற்ப அரிச்சந்திர பூபதி மயானங் காத்தததை யொப்ப் மூக்குத் தூளுறிஞ்சுவோரிற் சிலரிடம் முதன்மையாய் விளங்குகின்றது. இதற்கு அவர்கள் சொல்லிக் கொள்ளும் பெருமையோ வெகு நீளம். பார்த்தால் கண்கெட, முகர்ந்தால் நெடி யேற, உறிஞ்சுவதால் வெண்ணிற மூளையும் தன் சக்தி யிழந்து மஞ்சள் நிறமாக மாற, இவ்வசுத்தமான புகையிலைத் தூளாற் மூளையின் இயற்கைக்குணம்கெட்டு அதனின்றுண்டாகும் எழுபத்தீராயிர நாடிபேதங்கள் உஷ்ண பித்த மயமாகத் தாபிதமாக்கி தேகத்தைக் கெடுக்கச் செய்யும் துராச்சார மூக்குத்தூளை அடைத்து வைக்க உபயோகமாகிறது. எந்த வஸ்துவைப் போட்டாலென்ன? அதைக் கையில் வைத்து அடிக்கடிபோட எடுப்பதால் அந்த சந்துஊறி மேலைய குணங்கள் உண்டாகாவோ? என்னின்,

"மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திரிந்து பலவீனஞ் சேர்க்கும்—பொருந்து பித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓதுபுகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்."

என்ற பொன்னேபோன்ற முன்னோருரையின் வண்ணம் ஆதி முதல் அந்தம் வரையில் நன்மை ஒரு சிறிதுமின்றி தீமையே உருவாயமைந்துள்ள, காண் பார்க்குங் கண்ணைக் கெடுக்கும் விஷ வஸ்துவாகிய புகையிலைத் தூளை அடைத்து வைப்பது யோக சாஸ்திரங்களில் மிகவும் முக்கியமானதாயும் இன்றியமையாததாயுமுள்ள மான்தோல் புலித்தோல் முதலியவற்றில் வலைஞர்கள் (செம்படவர்கள்) தங்கள் வியாபார சாமான்களாகிய புலால் இனங்களை மூட்டை கட்டினால் எப்படியோ அப்படியே வில்வக் குடுக்கையில் அசுத்த மூக்குப் பொடியை யடைப்பதும். எனவே பரிசுத்த வில்வக் குடுக்கையில் அபரிசுத்த புகையிலைத் தூளை அடைத்தல் எவ்வாற்றானும் பொருந்தாதென்பதே முடிவாகும்.

வியாசம் வளர்ந்து விட்டது. விஷயமோ பெரியது. அரியது. எவ்வளவு சுருக்க முயன்றும் முடியாதது. இன்னமும் இதைச் சார்ந்த யோக முறைகள் பல விருப்பினும் இங்கு இடமின்மை நோக்கிக் குறைக்க வேண்டியதாயிற்று. எனவே பொதுக்குணச் சிறப்போடு பூர்த்தி செய்வாம்.

"பல்லவம் பூபிஞ்சின் பழமியா வும்முறையே
வல்லவம் மேகமந்த மாகுன்மஞ்—செல்லுகின்ற
நோக்கமருள் விந்துநட்டநூறு மடுத்தவர்கட்
காக்கமருள் வில்லுவத்திலாம்.

வில்லுவத்தின் வேருக்கு வீறுமுன் பிரைபுகபம்
சொல்லவொணுப் பித்தந் தொடர் சோபை—வல்லகப
தாகசுரம் நீரேற்றஞ் சந்நியொடு மெய்வலியும்
வேக மொடு நீங்குமே.

அக்கினி மந்தம் அரோசியதி சாரம் விக்கல்
நிற்கரிய பித்தசுரம் நீள்வாந்தி—கட்கநோ
யாதியநோ யேகும் அழகோடு புஷ்டியுண்டாம்
கோதில் வில்வவேரதனைக் கொள்."

இந்த மூன்று வெண்பாக்களையும், நந்தமிழ் நாட்டு ஆஸ்திகோத்தமர்கள் கற்று கவனம் செலுத்தி ஊன்றிக் கவனிப்பராயின் இதில் இல்லாத சக்தி என்ன இருக்கின்றதென்பது வெள்ளிடை மலையேயாகத் தோற்றும். கீழுள்ள இரண்டு வெண்பாக்களில் வில்வத்தின் வேருக்கு இயற்கையா யமைந்துள்ள ஔஷத சக்தியும், ஆரோக்கிய சக்தியும், பிணிகளை வீட்டும் பெருஞ் சக்தியும் தேகத்தைப் போஷிக்குந் திவ்ய சக்தியும் எவ்வளவு அபரிமிதமாயமைந்திருக்கின்றன வென்பது பிரத்தியட்சமன்றோ! அழகோடு புஷ்டி யுண்டாம் என்பது கவனிக்கத் தக்கது.

இராஜபுத்திர வீரமாதர் சரித்திரம்.

——:o:——

1. திலகவதி.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

முன்னுரை.

மாதரைப் பேதையர் எனவும், அபலைகள் எனவும் பகர்வர் பலர். இது பெரும்போக்காகப் பேசப்படும் வசனமேயாம். இவ்வுண்மையை ஆராயக் கருதியே "இராஜ புத்திர விஜயம்" என்னும் நூல் தொகுதியின் ஒரு பகுதியாக இதனை எழுதலானேம். நமது தேசத்தின் ஆதிகால சரித்திரத்தை ஆழ்ந்து நோக்கின், உண்மை நன்கு புலனாகும். தமிழ் மக்களிலே பல மாதர்கள் வீரஞ் செறிந்த மங்கையராக விளங்கியுள்ளர் என்பதைப் புறநானூறு போன்ற பண்டை நூல்களில் பரக்கக் காணலாம். இராஜபுத்திரரிலோ எண்ணிறந்த வீரமாதர் போர்முனையிலும் தீரங்காட்டி, வாகைசூடி, வரிசை பெற்றுளர். அத்தகைய வீரமாதரின் சரிதங்கள் வரன் முறையாக நமது "குமரனில்" மாதந்தோறும் வெளிவரும்.

இனி, இராஜபுத்திரர் என்றால் யாவர் என இரண்டொரு வார்த்தை இயம்பவேண்டும். பொதுவாகச்சொல்லின், இராஜ பரம்பரையைச் சேர்ந்தோர் இராஜ புத்திரர் எனப் பெறுவர். ரஜோகுணம் அல்லது இராஜஸ குணம் மிகுந்திருப்பது பற்றி அவர்களை "ரஜபுத்திரர்" எனச் சிலர் அழைப்பர். இராஜ் புத்திரர் என்போர் ஆதிகால சூரிய, சந்திர, அக்கினி குலங்களைச் சேர்ந்தோராவர். அவர்களது பரம்பரையான உறைவிடம் இராஜஸ்தானம் எனப்படும். இக்காலத்திலே அந்நாடு ஆங்கிலத்தில் "ராஜபுதனம்" என வழங்கி வருகிறது. அது நமது தேசத்தின் வடபாகத்திலுள்ளது.

ஆதிகாலத்திலே நமது தேசத்தின் வடபாகத்தில் முடிவேந்தர்களாகவும் வெற்றி வீரர்களாகவும் விளங்கியவர்கள் இராஜபுத்திரரே. முதல் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்

ஞண்டு வரையில் அன்னியரை இங்கே அண்டவிடாது அருஞ் சமர் புரிந்து வந்தவர்களும் அவர்களே. பன்னிரண்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில் அக்குல வேந்தர்களில் முதன்மை யான இருவர் தம்முள் மாறுபட்டுக் கிடந்தனர். அது நமது பாரத தேசத்தின் சாபத்தீடாகும். ஆனதுபற்றி அன்னிய மதத்தினரான முகம்மதியர் என்போர் முதன் முதலாக நமது தேசத்தில் முடிமன்னராகத் தோன்றலாயினர். நாளடைவிலே அவ்வன்னியர் இங்கே நிலையாக நின்று விட்டனர். அவ்வண் ணம் நிலையாக நின்ற முகம்மதிய வமிசத்தில் மொகலாயரையே முதன்மையாகச் சொல்ல வேண்டும். அம்மொகலாயரில், பேபர், அக்பர், ஷாஜஹான் ஆகிய இவர்கள் முக்கிய புருஷர் களாவர். அம்மூவரில், பேபரைத் தவிர்த்து மற்றைய இரு வருக்கும் உற்ற துணையாக நின்று, இப்பாரத பூமியில் வெற் றியும் புகழும் தேடிக் கொடுத்து, விளங்கியவர்களும் இராஜ புத்திரரே. இராஜபுத்திரரின் பேராதரவு இல்லாதிருந்திருப் பின், இத்தேசத்திலே மொகலாய வரசும் வமிசமும் தலைகாட் டித் தழைத்திரா.

இத்தேசத்திலே மொகலாய வரசு தலைகாட்டக்கூடாதென் று தனியாச் சமர்புரிந்த வீரன் சங்கரசிம்மன் எனப்படுவான். அச்சங்கரன் சூரிய குலத்தில் உதித்து மத்தியபதி என்னும் நாட்டை மகிமையுடன் பரிபாலித்து வந்தவன். அவனது சரி தத்தை "இராஜ புத்திர விஜயம்" என்னும் நூலின் முதற் புகுதியில் பரக்கக்காணலாம். அம்மன்னவனது பேராண்மை யையும் பேராற்றலையுங் கண்டு, வேசாறிப் போய் விட்ட பேபர் என்பான், இனி வேறு வகையில்லையென மதித்துக் கப் பங் கட்டி வாழ்வதாகவும் சங்கரனுக்குத் தூதனுப்பினன். இத்தகைய ஏற்றம் படைத்த இராஜபுத்திரரின் பெருமையை என்னென்று எடுத்துரைப்போம். அவர்களுக்கு மரபின் மா னமே மகிமையான பூஷணம். போரில் புறங்கொடாதிருத்தலே பரமவிரதம், சுதந்திர வாழ்வே சுகவாழ்வென்பது அவர்களின் இயற்கை யுணர்ச்சி. அதுபற்றி, உடல், பொருள், ஆவி மூன் றையும் ஒருங்கே வழங்க அவர்கள் ஒரு போதும் பின் வாங்கி

யதில்லை. இராஜ புத்திர ஆண் மக்கள் மட்டுமேயன்றிப்பெண் மக்களும் அப்படித்தான். கற்பின் நலத்தையும் முதிர்ச்சியையும் அப்பெண்மணிகளிடந்தான் நன்கு காண முடியும். அவர்களுடைய சரிதத்தைப் படிப்பின், வீர ரசமும் தேச பக்தியும் பெருகி வளருமென்பது திண்ணம். வீரத் தன்மை குன்றியுள்ள இக்காலத்திலே "இராஜ புத்திர விஜயம்" போன்ற நூல்கள் இன்றியமையாது வேண்டற்பாலன என்று பெரியோர் பலர் பேசியிருக்கின்றனர்.

பல ஆங்கில நூல்களை ஆராய்ந்து பார்த்து, "இராஜபுத்திர வீரமாதர் சரித்திரத்தை," எழுதி அதனைக் "குமரனில்" வெளியிடத் துணிந்துளோம். இதனைக் கண்ணுறும் அன்பர்கள் இதில் ஏதேனும் குற்றங்குறைகளிருப்பின், அவற்றை எனக்கு அன்புகூர்ந்து அறிவிப்பார்களாக.

இராஜபுத்திரர் என்போர் சூரிய, சந்திர, அக்கினி என்னும் மூவகைக் குலங்களில் அடங்குவராயினும், உட்பிரிவாக அவர்களுக்குள்ளே முப்பத்தாறு குலங்கள் உள. அப்பெருங் குலங்கள் மூன்றினில், வீர வாழ்வுக்கும் வெற்றி மாலைக்கும் பெரிதும் பாத்திரமாவது அக்கினி குலமே. வீர மாதரில் பலரும் அக்கினி குலத்தினில் உதித்தோராவர். நமது தென்னாட்டிலுள்ள நாயகர் அல்லது வன்னியர் என்போரும் அந்த அக்கினி குலமென அறியக் கிடக்கின்றது. இதனைப்பற்றி மற்றோரிடத்தில் விரிவாக ஆராய்வோம். திலகவதி யென்னும் திருநாமம் படைத்த மாதும் அக்கினி குல தீபமே. இனி, அம்மங்கையின் சரித்திரத்தைப் பேசுவோம்.

இராஜஸ்தானம் அல்லது இராஜபுதனம் என்பதில் பல நாடுகள் அடங்கியுள. அந்நாடுகளிலே அன்று முதல் இன்றளவும் தலை சிறந்து விளங்குவது மத்தியபதி அல்லது நடுநாடு என்பதாகும். அந்நடுநாடு தன் பெயருக் கேற்ப நடுநாயகமான நாடே. எங்ஙனமெனில், கடந்த ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்நாட்டில்தான் அரசர் பலர் இடைவிடாது அரசு புரிந்து வந்துளர். அதனை அடிப்படுத்த

அல்லாவுதீன், பேபர், அக்பர், அவுரங்கசீப் முதலிய வீர புருஷர் தண்டெடுத்துச் சென்று முயற்சி புரிந்தது இவ்வளவு அவ்வளவு அன்று. மேலும் அந்நாட்டு அரச மங்கையை மனைவியாகக்கொள்ள ஆதிகால முகம்மதியர் உட்படப் பலரும் பெரு முயற்சி புரிந்ததும் கொஞ்சமன்று. ஆயினுமென்ன? அவர்கள் முயற்சியனைத்தும் மண்ணைக் கவ்வினவேயன்றிவேறன்று. அச்சமயங்களிலே நாட்டின் நலத்தையும் மக்களின் சுகவாழ்வையும் மங்கையரின் கற்பையும் எல்லாவற்றிற்கும் மேலாக மரபின் மானத்தையும் மதித்து ஆவியைப் பறிகொடுத்த இராஜபுத்திர வீரருக்குக் கணக்கில்லை; நாடு நாடாயில்லாது நலங் குன்றியதும் கூறுந்தரமன்று. என்றாலும் அந்நாடும் சரி, அந்நாட்டரசரும் சரி, வளமையிலும் வீர தீரத்திலும் குன்றிப் பணிந்து விட்டில்லை. ஆனது பற்றி இதர இராஜபுத்திர வேந்தரும் வீரரும் அந்நடு நாட்டின் நரபதிகளை அன்று தொட்டு இன்றுகாறும் பயபக்தி விசுவாசத்துடன் மதித்து வருகின்றனர். இக்காலத்திலே அந்நாடு தனது தலை நகரின் பெயரைக் கொண்டு, உதயபுரி யென வழங்கிவருகிறது. அதன் பழைய தலைநகரான சித்தூர் என்னும் பெயரைக் கேட்டவளவில், பரவசமும் வீராவேசமும் கொள்ளாத இராஜபுத்திரர் இரார். அச்சித்தூரின் பெருமிதப் பெருமையை வாய் கொண்டமட்டும் வாழ்த்திப் பேசாத ஆதிகால சரித்திர ஆசிரியர் கிடையாது. அக்நாட்டரசர்களுக்கு ராணா என்னும் பட்டப் பெயர் உண்டு. ராணா என்றால், ராஜன் என்பதே பொருள்.

அத்தகைய சித்தூரைத் தலைநகராகக் கொண்டு பதின்மூன்றும் நூற்றாண்டிலே அந்நாட்டை யாண்டு வந்த அரசன் பெயர் ராணா இலட்சுமண சிம்மன். அக்காலத்திலே டில்லி நகரில் அரசு செலுத்திய அல்லாவுதீன் என்பான் பன்னிரண்டு வருஷகாலம் பெரும்படை கொண்டு ஓயாப் போர் புரிந்து, நடு நாட்டை வாட்டிவிட நாட்டங் கொண்டும், முடியாது போயிற்றென்றால், ராணா இலட்சுமணனது பெருமையை நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. அவனது ஆட்சியின் நேர்மை அளவிட்டுரைக்குந் தரமன்று. மரபின் மானமும், மங்கை நல்

லாள் பத்மினியின் கற்பும் மக்களின் சுதந்திரமே விசேஷமென மதித்த ராணு இலக்குவன் போரிலே அப்பட்டாணியப் பார்த்திபனுக்குப் புறங்கொடாமல், தனது ஆருயிரை வழங்கியுள்ளான். அங்ஙனமே அவன் புதல்வர் பன்னிருவரில் பதினொரு பெயரும் தமதுயிரை மகிழ்வுடன் அமர்க்களத்தில் வழங்கிய உத்தம வீரராவர்.

அவ் வேந்தனது மூத்த பிள்ளையின் பெயர் அரசிம்மன். அம்மைந்தன் இணையிலா ஆற்றலும் வீரமும் படைத்தவன். எழில்நலமும் அறிவுவளர்ச்சியும் நிரம்பப் பெற்றவன். தனது நற்குண நற்செய்கைகளினால், குடிமக்களின் உள்ளத்தை குடியாகக் கொண்டவன். இளவரசு என்ற முறையில் எவரையும் இன்புறச் செய்தவன்.

சில சமயங்களிலே, வனவிலங்குகளை வேட்டை யாடுதல் வேந்தரின் கடமை யல்லவா? தவிர, அது வேந்தரின் பொழுது போக்குமாகும். ஒரு தினம் நமது அரசிம்மன் வேட்டையை நாடிக் கானகம்போனான். அச்சமயம் அவனுடன் சில துணைவரும்சென்றனர். அவர்கள் வேட்டைக்குப் போனவிடம் வேங்கைக் குன்றம் என்னும் மலைப்பிரதேசம். அங்கே கரடி, புலி, சிங்கம், காட்டானை முதலிய மிருகங்கள் மிகவதிகம். அவ்விலங்குகளை வேட்டையாடுவதைக் காட்டிலும் முள்ளம் பன்றியை வேட்டையாடுவதே இராஜபுத்திரருக்கு மிகவும் விருப்பமானது. அவ் வேட்டை எளிதன்று; பரம ஆபத்துக்கு இடமானது. வேங்கையினும் அம்மிருகம் மிக்க மூர்க்கம் பொருந்தியது. தன்னை எதிர்த்து வாட்டும் வீரனைக்கொன்று குவிக்க முயன்று முடியாது போயின பின்பே, அது தனது உயிரை விதியன்றி யிழக்கும் இயற்கை யுடையது. என்னும், அம் முள்ளம்பன்றி வேட்டையை இராஜபுத்திரவீரர் ஒரு பொருட்டாக மதியார். அச்சம், ஆபத்து முதலியவற்றை அவ்வீரர் கனவினும் கருதுவதில்லை. சுத்த வீரனான அரசிம்மன் ஆபத்தென்பதை அறியான்.

வேட்டைக்குப் புறப்பட்ட காலையில், ஆடம்பரமான பரிவாரமெதையும் அரசிம்மன் நாடவில்லை. உயிர்த் துணைவரான

சிலரை மட்டும் உடனழைத்துச் சென்றான். கானகத்தில் காலடி வைத்ததும், முள்ளம் பன்றி யிருக்குமிடத்தையே அவர்கள் நாடிச் சென்றனர். அப்பொழுது, மிகவும் பழுத்துக் கொழுத்த முள்ளம் பன்றி யொன்று அவர்களுக்குத் தென்பட்டது. உடனே அவர்கள் அதன்மீது அம்புகளை ஏவினர்; ஒவ்வோர் அம்பையும் அம்மிருகம் உதறித் தள்ளிவிட்டது; அப்பால் அதனை யணுகி, நீண்ட வேல் கம்பை வீசினர்; அவ்வேல் கம்பையும் தனது உடலைச் சிலிர்த்து அது வீழ்த்தி விட்டது. முடிவில் வாள் கொண்டு தாக்கலாயினர்; அவ்வாள் வீச்சை அது சட்டை செய்யவில்லை. அவர்கள் மீது சீறிப் பாய்வதும் சிறிது தூரம் ஓடி ஓரிடம் ஒளிவதுமாக அவர்களை அது வருத்தி வந்தது. நெடு நேரம் பன்றியுடன் போராடியதனால், அரசிம்மனும் அவன் துணைவரும் களைத்துப் போய் விட்டனர். அதுகண்ட பன்றி, இதுவே சமயமென ஓடத் தொடங்கியது. உடனே அவர்களும் தங்கள் களைப்பைக் கருதாது அதனைத் துரத்திச் சென்றனர். முடிவிலே அப்பன்றி செழிப்பான சோளக்கொல்லை யொன்றில் புகுந்து பதுங்கிக் கொண்டது.

அரசிம்மன் இளவரசனாயினும், அன்னியரின் கொல்லையிலே உத்தரவின்றி நுழைய உள்ளங் கொள்ளவில்லை. ஆதலின் தனது துணைவருடன் தோட்டத்துக்கு வெளியே திகைத்து நிற்கலானான். இதற்குள் களைப்பும் அலுப்பும் கலந்து கொள்ளவே அவர்கள் அனைவரும் வாட்டங் கொண்டு இளைப்பாறத் தொடங்கினர். ஆயினும் பன்றி பதுங்கிக் கொண்டு விட்டதே என்ற ஏக்கம் அவர்களை விட்டகலவில்லை.

ஈதிங்ஙனமிருக்க, முன்னாளிலே வள்ளியம்மை தினைப் புனப் பரண்மீது நின்று, ஆலோலம் பாடிக்கொண்டு, பட்சி பறவைகளை ஓட்டிக்கொண்டிருந்தாள் என்பதைப் பலரும் அறிவர். அங்ஙனமே, சோளக் கொல்லையின் நடுவே நின்ற பரண் மீதமர்ந்து, ஆலோலம் பாடிக்கொண்டு, பெண்ணரசி யொருத்தி பட்சி சாலங்களைக் கவண் கல்லினால் வெருட்டி யோட்டிக் கொண்டிருந்தனள். முள்ளம் பன்றி வந்து அப்புனத்தில் புகுந்ததையும், அரசிளங்குமரன் அதனைத் துரத்தி வந்து

வேசாறி நிற்பதையும், அம்மங்கை நல்லாள் மதித்தறிந்தது தான் தாமதம். ஆள் உயரத்திற்குமேல் வ்ளர்ந்திருக்கும் சோளத்தண்டொன்றை அம்மாதரசி பறித்து, அதனை வேல் கம்புபோல் கூர்மையாக்கித் தனது பரண்மீது ஏறிநின்று பன்றியைக் குறித்துத் தண்டை வீசி யெறியவே, அது அடிதாங்கமாட்டாமல் ஆவியை விட்டது. உடனே அப்பெண் பால் பன்றிதனை யிழுத்து வந்து, அரசிளஞ் சிங்கத்தின் முன்னே வீசியெறிந்து, "தாங்கள் துரத்தி வந்த விலங்கு இது தானே" என்று கூறிவிட்டுப் போயினள். தமது குலமங்கையரின் வீரதீரச் செயல்களை அரசிம்மனும் அவன் துணைவரும் அறிவாராயினும், அவ்வீரமாதின் செயல் அவர்களுக்கு மிக்க ஆச்சரியமே யுண்டுபண்ணியது.

அப்பால் அவர்கள் பன்றியை யிழுத்துச் சென்று, ஓர் ஆற்றங்கரையை யடைந்து இளைப்பாறினர். இங்ஙனம் அவர்கள் இளைப்பாறி நிற்கையில், வீரமாதின் தீரத்தைக் குறித்துப் பேச்சு நிகழ்ந்தது. அத்தகைய வீரமாதின் மாலை பெறும் வாலிபனே பாக்கியவானென அவ்விளைஞர் பேசிக் கொண்டனர். அங்ஙனமிருக்கையில், உண்டை வில்லொன்று வேகமாக வந்து, அரசிம்மனது அசுவத்தின் காலில் தாக்கியது. அவ்வளவுதான் தாமதம். அப்பரி பாதமொடிந்து பிரக்ஞை யற்றுப் பூமியின்மீது சாய்ந்துவிட்டது. அதுகண்ட வாலிபர் ஈதென்ன விந்தையெனக் கலங்கி, உண்டை வில் வந்த திசையை உற்று நோக்கினர். நோக்கியதும் அப்பெண்ணரசியின் பாணியிலிருந்தே உண்டை வில் வந்திருக்க வேண்டுமென்று தென்பட்டது. தான் வீசிவிட்ட உண்டை வில்லால் அசுவம் தனது காலைப் பரப்பிக் கொண்டு வீழ்ந்து விட்டதை அம்மங்கையுணர்ந்து கொள்ளாமலில்லை. உணர்ந்து கொண்டதும், அவள் விரைந்து வந்து, அவ்வாலிபரைக்குறுகித் தனது விளையாட்டு விநயமானதைப் பொறுத்தருளும் வண்ணம் வேண்டிக்கொண்டு திரும்பிப் போயினள். எனினும் ஒரு பெண்பாலிடம் இருமுறை

பரிபவப்பட்ட மனவருத்தம் அவ்வாலிபரைப் பெரிதும் வாட்டி நின்றது. பின்பு அந்திப்பொழுது வரையில் அவர்கள் அவ்வாற்றங்கரையில் காலங்கழித்துவிட்டு, வீடு திரும்பினார்கள்.

மாலைப் பொழுதிலே அம்மங்கையும் தனது வீடு நோக்கிப்போயினள். அச்சமயம் அவள் சிரத்திலே அடுக்கடுக்கான சட்டிகளைக் கொண்ட கூடை யொன்றிருந்தது. தவிர அவள் தனது இருகைகளிலும் இரண்டு எருமைகளைக் கயிறு கொண்டு ஓட்டிச் சென்றாள். தற்செயலாக வாலிபரும் அதே வழியில் செல்லலாயினர். அவளைக் கண்டதும், "ஆ! இவள் கேவலம் பெண்பிள்ளை. நாமோ ஆண் மக்கள். இங்ஙனமிருந்தும், ஒரு முறையேயன்றி இருமுறை நாம் அப்பெண்ணினிடம் விளையாட்டாக அவமானமடைந்து விட்டோம். ஆதலின் நாமும் வேடிக்கையாக இப்பெண்ணை அவமானங்காண வேண்டும். இல்லையேல் நாம் ஆண்மை பொருந்திய ஆண் மக்களாகோம்" என்று தம்முள்ளே அவ்விளைஞர் பேசிக்கொண்டனர். அவ்வளவிலே வாலிபரில் ஒருவன் "இப்பெண் எம்மாத்திரம்! இவளை விளையாட்டாக அவமானப்படுத்தல் ஒரு பெரிதன்று. அவளுடைய பால் தயிர்ப் பானைகள் தரையில் விழும் வண்ணம் அரை நொடிப்பொழுதில் யான் செய்து காட்டுவேன்" என்றான். அது கேட்ட அரசிம்மன், "அன்பனே! ஆராயாது வீரம் பேசாதே. நம்மை இருமுறை அவமானக் கோலங் கண்ட வீரமாதைப் பரிபவப் படுத்தல் எளிதன்று. அது ஆகாதகாரியமென்பதே எனது துணிபு" என்று கூறியும், அவ்வாலிபன் கேட்கவில்லை. சொல்லிய வண்ணம் செய்து காட்டாது போயின், தான் அம்மங்கை நல்லாளுக்கு அடிமையாளாகி விடுவதாக அவன் தருக்குடன் பேசித் தன் குதிரையைத் தட்டி விட்டான்.

குதிரையோ நாலுகால் பாய்ச்சலாகப் பறந்தோடத் தலைப்பட்டது. அப்பெண்ணையும் அநேகமாக நெருங்கி விட்டது. குதிரை வரும் வேகத்தைக் கண்டும் கேட்டும் அப்பெண் பரபரப்படைந்து, பானைகளைக் கீழே போட்டுவிடுவாள் எனப் பலரும் கருதி நின்றனர். இதற்குள் பரிமாவும் மயிரிழைத் தூரத்

தில் திலகவதியை நெருங்கியது. இதனை உய்த்துணர்ந்த அப் பெண் சிறிதும் உள்ளம் பதைக்கவில்லை; தான் செல்லும் வழியை விட்டகலவுமில்லை; அசுவம் தன்னை யணுகியதும் ஒருபுறம் சற்றே மயிரிழை ஒதுங்கி, ஓர் எருமையின் கயிற்றை வீசிக் குதிரையின் காலில் மாப்பு வலித்தனள். உடனே அவ்வாலிபன் தனது குதிரையுடன் குப்புற நிலத்தில் சாய்ந்து அவளுக்குத் தண்டனிடுவான்போல் மண்ணைக் கவ்வினன். அம்மங்கையோ ஏதுமறியாதவள் போல் வழிநடந்தனளே யன்றித் திரும்பிப் பார்க்கவில்லை. அதுகண்ட மைந்தர் அனைவரும் "அந்தோ! மூன்றாவது முறையும் வெட்கிப் போயினோமே" என்று தலைகுனிந்து நின்றனர். வேறு என்ன செய்வர்!

பின்பு, இரவு நெருங்கிவிடவே வாலிபர் அனைவரும் தத்தம் மாளிகை போய்ச் சேர்ந்தனர். அரசிம்மனுக்கோ ஒன்றிலும் கருத்துச் செல்லவில்லை; அறுசுவை கலந்த வுணவு எட்டிக்காய் போலிருந்தது; உறக்க மென்பது ஊடாடவில்லை. வித்தையுள்ளவனுக்கும் விசாரமுள்ளவனுக்கும் ஊணிலோ உறக்கத்திலோ சுகசிந்தை செல்லுமோ? "அவ்வீரமாது யாருடைய பெண்? அவளை எங்ஙனம் மணப்பது? மணந்தாலன்றி மனவருத்தந தணியாது" என்னும் சிந்தா குலத்திலேயே ஒருவாறு இரவைக் கழித்தனன். காலக் கிரமத்தில் பொழுது புலர்ந்தது. அப்பெண் யாரென அரசிம்மன் புலம் விசாரித்தான். அதன் பயனாக, அவள் ஓர் ஏழை ராஜபுத்திரனது செல்வக் குமரியெனத் தெரிய வந்தது. உடனே இளவரசன் தனது துணைவருடன் அவ்வேழையின் குடிசை சேர்ந்தான். சேர்ந்ததும், ஏழையையழைத்து வலுவில் மணம் பேச அவன் கூசவில்லை. அப்பொழுது அவ்வேழை சிறிதும் அச்சமின்றி, அரசிளங் குமரனது முன்னிலையில் சரிசமமாக வீற்றிருந்து உரையாடலாயினன். அது கண்ட துணைவரில் சிலர் "ஈதென்ன விந்தை! அரசிளஞ் சிங்கத்தின் முன்னே பணிவின்றி வீற்றிருக்கின்றான் இப்பேதை" என்றனர். மற்றுஞ் சிலரோ "அன்று! அன்று!! க்ஷத்திரிய வமிசத்தினரான உண்மை ராஜ்புத்திரர் ஏழையாயினும் சீமானாயினும் தமது கம்பீரமான

குணத்தையும் சுதந்தரத்தையும் விட்டுக்கொடார்'' என்றனர்.

வேறு சிலரோ அவ்வேழையின் தோற்றத்தையும் நடையையுங் கண்டு தமது மனத்தகத்தே மகிழ் பூத்து நின்றனர். மங்கையின் மணமாலையை நாடி அரசிம்மன் உரையாடியும், அதனை அவ்வேழை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே அருகிலிருந்தோர் "அரசிம்மன் அரசிளங்கோ'' என அவ்வேழைக்கு அறிவுறுத்தினர். அதற்கு அவன், "அரசிளஞ்சிங்கமாயினென்? ஆண்டியின் மைந்தனாயினென்? இச்சமயம் என் மனம் ஒப்பவில்லை'' என்று சொல்லி விட்டான். அதன்மேல் அரசிம்மன் யாது செய்ப்முடியும்? முன்னையிலும் மும்மடங்கு வாட்டத்துடன் மாளிகை நோக்கிப்போயினன். அவனை ஆற்ற முடியாது துணைவரும் பிறரும் தேம்பி நின்றனர்.

அப்பால் அவ்வேழை தன் குடிசைக்குள் நுழைந்து, நடந்த செய்தியைத்தன்து தாய்க்குணர்த்தினன். அது கேட்ட அன்னை அடங்காக்கவலை கொண்டு, ''அப்பனே! வலுவில் வந்த ராஜவாழ்வை வேண்டாமென வீசி யெறிந்துவிடுவதா'' என்று வருந்திக் கூறினள். சுருங்கச் சொல்லின், சில தினங்களுக்கெல்லாம், வேதவிதிப்படி நம் திலகவதி அரசிம்மனுக்கு மாலை சூட்டினள். அதன் பின்பே அரசிளஞ் சிங்கத்தின் மனவாட்டம் தணியலாயிற்று: அதுகண்டு அனைவரும் அகங்களித்தனர்.

தமிழ்ப்புலவர்கள் அகராதி வரிசை.

:o:

(சருக-வது பக்கத் தொடர்ச்சி.)

த

தத்துவராய சுவாமிகள்
தத்துவராய முனிவர்
தம்பி பிள்ளை V. J.
தருமைகுரு
தலைமலைகண்ட தேவர்
தனிமகனார்
தன்வந்தரி

தா

தாசி—னார்
தாசி—திருக்கண்ணபுரம்
தாண்டவராய சுவாமிகள்
தாண்டவராய முதலியார்
தாண்டவ மூர்த்தி
தாமோதரன்
தாமோதரனார்—உறையூர்
தாமோதரனார்—மருத்துவன்
தாமோதரம் பிள்ளை
தாயங்கண்ணன்
தாயங்கண்ணியார்
தாயுமானார்

தி

தித்தனார்—வீரைவெளியன்
திப்புத்தோளார்
தியாகராஜ தேசிகர்
திரிகூடப்பராஜ கவிராயர்
திருக்குருகூர் பெருமாட்கவிராயர்
திருக்குறுங்குடிநம்பி
திருஞான சம்பந்தர்
திருஞானசம்பந்த உபாத்தியாயர்
திருஞானசம்பந்த பிள்ளை
திருத்தக்க தேவர்
திருத்தாமனார்
திருப்பாணாழ்வார்
திருப்பாற்கடநாத கவிராயர்
திருமங்கையாழ்வார்
திருமழிசையாழ்வார்
திருமலைக்கொழுந்து கவிராயர்
திருமாளிகைத் தேவர்
திருமூலர்
தில்லைநாதநாவலர்
தில்லைநாயக சோதிடர்
தில்லைமூவாயிரவர்
திருவரங்கத்தமுதனார்
திருவழுந்தூர் தாசி
திருவள்ளுவர்
திருவாதவூரர்
திருவாலியமுதனார்
திருவாலவாயுடையார்
திருவேங்கடஐயர்
திருவேங்கட நாதர்
தினைமீதிநாகன்

து

துரைசாமி தேசிகர்
துரைசாமி மூப்பனார்

தூ

தூங்கலோரியார்

தெ

தெய்வசிகாமணி பிள்ளை
தெய்வநாயக முதலியார்

தே

தேரையர்
தேரையர் ஐயாதிச்சிறுவெண்
தேவராய சுவாமி
தேவராய பிள்ளை நல்லூர்
தேவனுயகர்
தேவனர்

தொ

தொடித்தலை விழுத்தண்டினுர்
தொண்டரடிப்பொடி யாழ்வார்
தொண்டரடிப்பொடி—திருமாலை
தொண்டைமானிளந்திரையன்
தொல்கபிலர்
தொல்காப்பிய தேவர்
தொல்காப்பியர்

தோ

தோதான்

ந

நக்கனர்—விரியூர்
நக்கண்ணையர்
நச்சாத்தனர்
நச்சினர்க்கினியர்
நச்சுமனர்
நச்செள்ளையார்
நஞ்சியர்
நடராசர்
நடராச ஐயர்
நத்தத்தனர்
நப்பாலத்தனர்
நப்பாலனர்
நப்பசலையார்—மாறேக்கத்து
நப்பூதனர்—காவிரிப்பூம்பட்டின [த்து
நமசிவாயக்கவிராயர்
நமசிவாயர்—குகை
நமசிவாயர்—குரு
நமசிவாய தம்பிரான்
நம்பி—திருக்கோட்டியூர்
நம்பியாண்டார் நம்பி
நயனியப்ப முதலியார்
நயின முகம்மது
நரிவெரூஉத்தலையார்
நல்லச்சுதனர்
நல்லந்துவனர்
நல்லந்தையார்—கோட்டியூர்
நல்லாதனர்
நல்லாதனர்—குடவாயில்
நல்லாவூர் கிழார்
நல்லிறையனர்
நல்வெழினியார்
நல்வழுதியார்
நல்லகுசியார்
நல்லதம்பி பிள்ளை
நல்லவீரப்ப முதலியார்
நற்றுமனர்—மதுரை
நன்கணியார்
நன்மார்பன்
நன்முல்லையார்
நன்மூலன்
நன்னலியார்

நா

நாகநாத பிள்ளை
நாகராயர்—முரிஞ்சியூர்முடி

நாகரியர்
நாகலிங்கபட்டாரகர்
நாகனார்—அம்மயன்
நாகனார்—இள
நாகனார்—கண்ணன்
நாகனார்—தங்காநன்
நாகனார்—நன்
நாகனார்—பெட்டன்
நாகனார்—பொன்
நாகனார்—கள்ளிற்கடயத்தன்
நாகனார்—மதுரைக்கொல்லன்
நாகனார்—மதுரை மருதன் இள
நாகனார்—முப்பேர்
நாகனார்—விளம்பி
நாகனார்—வெண்-நன்
நாகனார்—வெள்ளைக்குடி
நாகையார்—அஞ்சில் ஆந்தைமகன்
நாரதன்
நாராயண ஐயங்கார்—திரு
நாராயண பாரதி
நாராயணசாமி நாயக்கர்
நாராயணசாமி பிள்ளை—திரிசிர [புரம்
நாற்கவிராசநம்பி

நி

நிக்கிலஸ்
நிசகுணயோகியார்
நிரஞ்சன நாதர்
நிரம்பவழகிய தேசிகர்

நெ

நெடுங்கண்ணன்—பாண்டிய எனாதி
நெடும்பல்லியத்தை
நெடும்பல்லியத்தனார்
நெடுவெண்ணிலவினார்
நெட்டிமையார்
நெல்லைநாதர்
நெல்லையப்பன் கவிராசர்
நெற்குன்றைவாண முதலியார்

நை

நைநாரச்சாம் பிள்ளை
நையாண்டிப் புலவர்

நொ

நொச்சிநியமங்கிழார்

நோ

நோய்பாடியார்

ப

பகழிக்கூத்தர்
பசலையார்—நம்
பசுங்குடையார்
படிக்காசு
பட்டினத்தார்
பணிப்பெண்கள்
பதடிவைகலார்
பதுமனார்
பதுமன்மரூஉமோலியார்
பரஞ்சோதி முனிவர்
பரசுராமகவி
பரசுராம கவிராயர்
பரணர்
பரமானந்தர்
பரமேசுரப் புலவர்
பரராஜசிங்கம்
பராயனார்
பரிமேலழகர்

பர்த்திரகிரி
பல்காயனார்
பவணந்தி
பவாநந்தம் பிள்ளை
பவளம்பாடிப் புலவர்
பழனிக்குமாரசாமித் தம்பிரான்
பனம்பாரனார்

பா

பாணபத்திரன்
பாண்டித்துரை தேவர்
பாண்டியன்
பாண்டியன் மனைவி
பாண்டியன் மாறன் வழுதி
பாரகாயான்
பாரதி
பாரதி உன்னையூர்
பாரிமகளிர்
பார்வதியம்மாள்
பாலகிருஷ்ண கவிராசர்
பாலசுப்பிரமணிய முதலியார்
பாலத்தனார்—நம
பாலத்தனார்—மதுரை காமங்கண்ணியநம்
பாலபாரதி
பாலையானந்த சுவாமி
பால்வண்ண முதலியார்

பி

பிங்கலர்
பிசிராந்தையார்
பிச்சுவையர்
பிச்சையார்
பித்தமத்தர்
பிரமசாமி
பிரமனார்
பிரமமுனி
பிரான்சிஸ்கஸ் (FRANCISCUS)
பிலிப்—தெ—மெல்ஸ்
பிள்ளைப்பெருமாளையங்கார்
பிள்ளைலோகாசார்யார்

பீ

பீதாம்பர புலவர்
பீமகவி

பு

புகழேந்தி
புத்தமித்திரன்
புலவன் விநாயகர்
புலிப்பாணி
புல்லனார்—கண்ணம்
புவனேகவாகு

பூ

பூங்கணுத்திரையார்
பூங்குன்றன்
பூட்கோபாலனார்
பூதத்தாழ்வார்
பூதத்தேவன்
பூதநாதனார்
பூதப்பாண்டியன்
பூதம்புல்லன்
பூதனார்
பூதனார்—சேந்தம்
பூதன்றேவனார்
பூரிக்கோ
பூலாறசாமி பிள்ளை
பூலோகசிங்க முதலியார்

பத்திரிகை ஆராய்ச்சி.

:o:

சென்னை லக்ஷ்மி பத்திரிகையில், ஸ்ரீமாந் எஸ். முத்து சாமி பிள்ளை அவர்கள், "குழந்தைப் பாட்டு" எனும் மகுடத்தின் கீழ் ஒரு சோம்பேறிப் பையனைப் பற்றிப் பின்வரும் பாடல்களை வரைந்திருக்கின்றார்கள். பாடல்களின் இன்சுவை கருதி மாணவர் பலர்க்கும் பயன்படுமாறு கீழேதருகின்றோம்.

ஊரும் எறும்பே! ஒருமணி நேரம்
ஒளித்து விளையாட வாராயோ?
நேரமிலை; மழைக் காலம் நெருங்குமுன்
நெல்மணி சேர்த்திட வேண்டு மப்பா! (க)

மாமலர் தோறும் திரியும் வண்டே!—பாண்டி
வட்டாட என்கூட வாராயோ?
ஆழ! நல்வேளை அலர்மலர் மூடுமுன்
அள்ளித்தேன் சேர்த்திட வேண்டுமேப்பா! (உ)

காகமே! கால்மணி நேர மென்னோடு
களித்து! விளையாட வாராயோ?
ஆஹா! நேர மெனக்கில்லை யப்பா!—மழைக்
காகும் கூடுகட்ட வேண்டு மப்பா! (ஙு)

ஓடுசிற் றாறே! ஒரு நிமிஷம் விளை
யாட உவந்துநீ வாராயோ?
நாடு செழிக்க நன்னீர்விட வேண்டுமென்
நண்பனே! போதெனக் கில்லையப்பா! (ச)

வானத் துலாவிடும் சூரியனே! கீழே
வந்து விளையாட வாராயோ?
போனகம் கொள்ளவும் நேரமில்லை புத்தி
கெட்டபையா! வர மாட்டே னப்பா! (ரு)

ஓகோ! இதுவென்ன ஒருவரும் என்கூட
ஓடி! விளையாட வாராரோ?
ஆகாத பிள்ளையோ நான்மட்டும் அந்தப்போ
அண்டாமல் பார்த்திட வேண்டு மினி. (சு)

* * *

திருச்சி நச்சினார்க்கினியனில் அதன் ஆசிரியர் வரைந்துள்ள, "விருந்தோம்பல்" எனுங் கட்டுரையின் இடையே

உத்தியோகஸ்தர்கள் தம்வீடுகளில் ஒருவரும் நுழையாதவாறு சிறித்தூரத்தும் சேவகர் முதலியோரை நியமித்து, வரும் அதிதிகளைத் துன்புறுத்துதற்கு மேற்கோளாக, தக்கோர் ஒருவர் பாடிய பின்வரும் இனியபாடல் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

> திண்வண இடித்துத் தெருவிற் சுவர் வைத்துப்
> புண்படவே பீங்கான் புதைத்திட்டு—நண்ணுவரை
> வேகத் துடன்பிடுங்க வேட்டைநாய் கட்டல் "உத்
> யோகக் குறி" யென் றுணர்.

*   *   *

சென்னை இந்து நேசனில், கடலூர் டி. திருவேங்கடாச்சாரி பி. ஏ. அவர்கள் புத்தகங்களின் பயனைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்கள்:—

மனிதனின் அறிவை விசாலிக்கச் செய்வது கல்வியாகும். கல்விக்கு உபகரணமாயுள்ளவை பெரும்பாலும் புத்தகங்களே. நல்ல அறிவாளிகளிடத்துச் சம்பாஷிப்பதாலும் அவர்களுடன் உறவாடுவதாலும் அனேக விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ளக் கூடும் என்றாலும் இச்சாதனம் எல்லார்க்கும் கிட்டாததாகும். தவிர, இம்மாதிரி விஷயங்களை அறிய விரும்புகிறவன் தன் மனதை வேறு சிந்தனைகளில் செல்லவிடாமல் ஒரே பற்றுடையதாய் அடக்கியாளத் திறமையுள்ளவனாயிருக்க வேண்டும். இது சாமானியமான விஷயமல்ல வென்பதை யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடும். பெரியோர்களை அணுகுவது சுலபமான காரியமன்று. சிலர் தாங்கள் எவ்வளவுதான் கல்விமான்களாயிருந்த போதிலும் அயலாருக்குப் பிரயோஜனப்படும்படியாய் அக்கல்வியை வினியோகிக்க இஷ்டப்படார். அல்லது செருக்கடைந்து மற்றோரை அலக்ஷியமாக மதிக்கவுங்கூடும். சிற்சில வேளைகளில் தங்கள் அரிய சிநேகிதர்களுக்கும் தங்கள் எண்ணங்களை வெளியிடார். ஆனால் தம் எண்ணங்களைப்புத்தகங்களில் வெளியிடும்போது ஒன்றையும் ஒளிப்பதற்கில்லை. புத்தகம் எழுதுவோரின் அறிவு, ஆராய்ச்சி, சிந்தனை முதலியவற்றின் பயனாக உண்டான அரிய பெரிய விஷயங்களெல்லாம் புத்தக ரூபத்தில் நமக்கு எளிதாய்க் கிடைக்கக்கூடும். நேரில் கல்விமான்களோடு சம்பாஷிப்பதென்றால் தற்காலம் உயிருள்ளவரோடு மட்டும் தான் அது சௌகரியமாயிருக்கும். ஆனால் கல்விக்கோரெல்லை இல்லாததாலும், ஆயுள்

பூராவும் கல்விகற்றாலும், "கற்றது கைம்மண்ணளவு கல்லாததுல களவும்" ஆகிவிடுமாகையாலும் அந்தந்தக் காலங்களில் தோன்றியுள்ள அரிய மகான்களுடைய எண்ணங்களையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்விஷயத்தில் நமக்கு மிகப் பயன்படுவன புத்தகங்களேயாம். ஏனெனில் அவைகளை எழுதிய பெரியோர் நம்மைப் பிரிந்து சென்றிருப்பினும் அவர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் என்றும் அழியாதவாறு புத்தங்களில் பொதிந்துகிடக்கின்றன. நமக்கு மட்டும் போதுமான சக்தியும் ஊக்கமுமிருப்பின் அவ்விஷயங்களை நம் நன்மைக்காக உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடும். ஆதலின், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரக்யாதி பெற்ற பண்டிதர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் கொண்ட ஓர் புத்தகாலயம் (Library) எவ்வளவு சிறியதாயினும் ஒப்புயர்வற்ற அணிகலனாகும். அதன் மேன்மை அளவிட முடியாதது.

* * *

ஒரு ஆங்கில வைத்தியர், "டெய்லி ஹெரால்டு" பத்திரிகையில் மரக்கறி வகைகளின் நறுங் குணத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுவதாகச் சென்னை லக்ஷ்மி பத்திரிகை, "பழங்களே சிறந்த ஆகாரம்" எனும் மகுடத்தின் கீழ் எடுத்துக் காட்டுகின்றது.

ரொட்டி, வெண்ணெய், கோதுமை, அரிசி, வெங்காயம் முதலிய சாமான்கள் மாமிசத்தைக் காட்டிலும் தேகத்திற்கு பலத்தை உண்டு பண்ணுகின்றவைகளாக இருக்கின்றன வென்று நான் முதலில் நன்கு தெரிந்துகொண்டேன். மாமிசத்தைவிட இவை பசியைத் தணிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. பிறகு நான் பழங்களைச் சாப்பிட ஆரம்பித்தேன். அந்தப் பழங்களை உட்கொள்ளுவதின் பெருமைதான் என்ன! பழங்களைச் சாப்பிடுவதன் பயனாக எனது தேகம் நாளுக்குநாள் பலமடைந்து வந்தது. எனது தேகத்தின் நரம்புகள் நாளுக்குநாள் பலமடைந்து வந்தன. எனக்கு முன்பு இருந்த தலைவலி அடியோடு ஒழிந்துவிட்டது. பழங்களைச் சாப்பிடுவதற்கு முன்பு நான் மிகவும் மந்த முள்ளவனாக இருந்தேன். பழங்களைச் சாப்பிட்டு வந்ததினால் எனக்குச் சக்தியும் உற்சாகமும் நாளுக்குநாள் அதிகமாகி வந்தன. அதிலிருந்து நான் மற்ற ஆகாரங்களை நிறுத்திப் பழங்களையே வழக்கமாகச் சாப்பிடுவதற்கு ஆரம்பித்தேன். இதைப்பற்றி நான் மற்றவர்களோடு

அடிக்கடி வாதிப்பது முண்டு. அவர்கள் மாமிசம் சாப்பிடுவதை விட்டுவிட முடியாதென்று அடிக்கடி என்னிடத்தில் கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் எனது வைத்திய கலாசாலை ஆசிரியரிடத்திலும் வாதித்தேன். சரீரப் பிரயாசையினால் ஜீவிக்கின்றவர்கள், தான்யங்களையும், காய்கறிகளையும், பழங்களையும் சாப்பிட்டுக்கொண்டு வரலாம். ஆனால் மூளையை உபயோகித்து வேலை செய்கிறவர்கள் மாமிசம் சாப்பிடாமலிருக்க முடியாதென்று அவர் என்னிடத்தில் கூறினார். அவர் கூறியது சரியானதல்ல. உலகத்திலுள்ள ஜனங்கள் பலவிதமான நிலைமைகளில் இருந்து வருகிறார்கள். மனிதன் வியாதியில்லாமல் தேக ஆரோக்கியத்துடன் எப்படி யிருக்க முடியும்? வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள் எப்படிக் குணமடைய முடியும்? மனிதன் தனது ஆயுள் காலத்தை எப்படி விருத்தி செய்துகொள்ள முடியும்? என்று பலர் பல கேள்விகளைக் கேட்கலாம். மனிதர்கள், மீன், கோழி, மாமிசம் முதலியவைகளைச் சாப்பிடாமல் சிறந்த பழங்களையே சாப்பிட்டு வருவார்களானால் அவர்களுக்கு தேக ஆரோக்கிய முண்டாகும். வியாதி என்பதும் அவர்களை அணுகாது. அவர்கள் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் இருக்கலாம். அவர்களுடைய ஆயுள், நாளுக்கு நாள் விருத்தியாகும். இரத்தமே வாழ்க்கைக்கு ஆதாரம். நமது முன்னோர்கள் கண்டுபிடித்தவைகளைக் காட்டிலும் இப்பொழுது உள்ளவர்கள் புதிதாக ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை. "ஒருவன் ஆப்பிள் பழம் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் அவன் டாக்டரிடத்தில் செல்ல வேண்டியதேயில்லை. கீரைகளைச் சாப்பிட்டு வந்தால் கவலை யென்பதே ஏற்படாது" என்று பெரியோர்கள் கூறுவது வழக்கம். பழங்களின் ரசத்தையும், காய்கனிகளையும், கீரைகளையும் பெரியோர்கள் ரத்த சுத்திசெய்யும் வஸ்துக்கள் என்று கூறுவது வழக்கம். விரை சம்பந்தமான வியாதிகளைக் கண்டிப்பதில் ஆப்பிள் பழத்திற்குச் சமமாக ஒன்றுமேயில்லை. எலுமிச்சை, ஆரஞ்சுப் பழங்கள் இன்புளுயன்சா முதலிய ஜுரங்களை நிவர்த்தி செய்யக்கூடிய சக்தியுள்ளவைகளாக இருக்கின்றன. திராட்சைப் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் தேகத்தில் எப்பொழுதும் பலம் இருந்துகொண்டே யிருக்கும். தேகத்தின் இளமையும் காந்தியும் மாறா. கீரைகளையும் காய்கறிகளையும் சாப்பிட்டு வந்தால் தேகத்தில் யாதொரு வியாதியும் ஏற்படாது. மனிதர்கள் மாமிசம் சாப்பிடுவதை அறவே ஒழித்து அவர்கள் முன்னோர்கள் உட்கொண்ட பழங்கள், தானியங்கள், கொட்டைகள்,

காய்கறிகள், கீரைகள், பால், வெண்ணெய், தேன் முதலிய வைகளைச் சாப்பிட்டு வருவார்களானால் அவர்கள் நீண்ட ஆயுளுடையவர்களாகவும், தேக ஆரோக்கிய முள்ளவர்களாகவும் இருக்க முடியும். இதில் சந்தேகம் சிறிதும் வேண்டாம்.

சதங்கையொலி.

திருக்கூட்டத்துப் பிரசாரம்.

மாசி மாதம் பிறந்து விட்டபடியால், இனி ஒவ்வொரு ஊரிலும் குட்டிவெட்டுப் பொங்கல்கள் நிகழும். ஆகவே, சென்ற வருஷங்களைப்போல் இந்த வருஷமும் எல்லா இடங்கட்கும் சென்று கொலை மறுத்தற் பிரசாரம் செய்வதாக நமது காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தினின்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள அன்பர்கள் பொங்கல்கள் நிகழும் இடங்களையும் தெய்திகளையும் காரியதரிசிக்கு அறிவிப்பார்களாக. மற்றும் ஜீவகாருண்ய சீலர்கள் சென்ற வருஷங்களில் எல்லாவகை உதவிகளையும் புரிந்ததைப் போல் இவ்வருஷமும் புரிவார்களென்று நம்புகின்றோம்.

பள்ளிக்கூடங்களில் கைராட்டினம்.

பீஹார் ஒரிஸா சட்டசபையில், நாளிது மாசி மாதம் எ-ந் தெய்தி கூடிய கூட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதாவது அம்மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்கக்கலாசாலைகளில், ௧0-வயதிற்கு மேற்பட்ட எல்லா மாணவர்களுக்கும், கைராட்டினங்களில் நூல் நூற்கும் பயிற்சி கட்டாயப் பாடமாக வைக்கப் பெறவேண்டுமென்பதேயாகும். இதற்கு ௬௭ பேர் சாதகமாகவும் உ௬ பேர் விரோதமாகவும் வாக்களித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேறியிருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்குமென்பதில் ஐயமின்று. இனி அம்மாகாணக் கலாசாலை அதிகாரிகள்தான் இம்முயற்சியினை செய்கையால் வலுவடையச் செய்தல் வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம்.

சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மாணவரில்லத்தில் வசித்து வரும் மாணவர்களுக்குப் புதிய கட்டிடம் ஒன்று விசாலமாகக் கலாசாலை நடத்துதற்கு அமைத்தற்காக நமது தனவைசியப் பிரபுக்களிடமிருந்து

சக ஆயிரம் ரூபாய்கள் வசூலாயிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே கலாசாலையின் பெயர், "நாட்டுக்கோட்டை நகரத்தார் குருகுல வித்தியாசாலை" என்று இடப்பெறுமாம். தற்பொழுது நகரத்தார் மரபிற் பிறந்த மாணவன் ஒருவனும் வாசித்து வருகின்றானாம். பட்டங்கள் பெறுதற்கும் மற்ற வீண் டம்பங்கள் செய்தற்கும் செலவழிப்பதைக் காட்டிலும் இது நல்ல தருமந்தான். இதுகாலை செல்வர்கள் ஆங்கிலக் கலாசாலைகளின் மீது சிறிது கவனஞ் செலுத்திவருகிறார்கள். ஆனால் தமிழ்க்கலாசாலைகளின் மீதும் கவனஞ்செலுத்துவார்களாயின் அவர்களுடைய புகழ் மணம் என்றும் நமதருந் தமிழ்நாட்டை விட்டகலாது கமழ்ந்து கொண்டிருக்கும்.

கிறிஸ்தவப் பாதிரிமார் முயற்சி.

சமீபத்தில் பசுமலையில் நடந்த கிறிஸ்தவப் பாதிரிமார் கூட்டத்தில் ஒருவர், "இந்தியாவில் எம்மட்டும் கிறிஸ்தவ மதம் பிரபல்யமாகிறது?" என்ற விஷயத்தைப்பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்திருக்கின்றார். அது பசுமலையினின்றும் வெளிவரும், "ஐக்கிய சபைத் தூதிகை" என்னும் பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றது. அதில் அவர் கூறுவதன் சாரம் வருமாறு:—

"இந்தியாவில் சுமார் நூறு வருஷங்களுக்கு அதிகமாகக் கிறிஸ்தவ மார்க்கம் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. திருவாங்கூரில் சரு அல்லது கஎ-வது நூற்றாண்டுகளாக இம்மார்க்கத்தார் வசித்துவந்திருக்கிறார்கள். எவ்வளவோ பிரயாசையோடு தற்காலத்தில் எத்தனையோ மிஷன்கள் ஏராளமான பணத்தைச் செலவழித்துச் சுவிசேஷ ஊழியம் நடத்தி வருகின்றார்கள். என்றாலும், இந்து மார்க்கம் சற்றாவது தளர்ச்சியடைந்து வாராதிருப்பதைப் பார்க்கும்போது நமது விசுவாசமும் தைரியமும் குறைந்துபோக ஏதுவாகிறது. ஆகவே, "இந்து மார்க்கத்தின் பலம் எதிலிருக்கிறது? நாம் செய்யவேண்டிய காரியம் என்ன?" வென்று ஆலோசிப்பது உசிதம். இந்துக்கள் இயற்கையாகவே பக்திமயமாகயிருக்கிறார்கள். அவர்கள் ஆலயங்களுக்குப் போகும் பொழுது வெகு பக்திவிநயமாக நடந்துகொள்ளுகிறார்கள். இந்துக்களின் ஜாதியாசாரம் ஒரு பெரிய சக்தியாயிருக்கிறது. மேலும் சுதேசாபிமானமும் சிறிது காலத்திற்குள் அதிகமாகப் பரவிவருகிறது. ஆகவே இவைகளுக்குத் தக்கவாறு நாமும் நடந்து கொள்ளுதல் வேண்டும். தற்காலத்தில் நமது ஆலயங்களும் ஆராதனைகளும் சாதாரண இந்துவிற்குப் பக்தியை உண்டாக்கத்தக்கவைகளாக இல்லை. இது பெரிய குறைவே. எனவே, இந்தத் தடைகளெல்லாம் ஒழிந்து போம்படி நாம் வேலை செய்யவேண்டும்."

இதனை வாசிக்கும் ஒவ்வொருவர் உளத்தும் கிறிஸ்தவப் பாதிரிமார் தங்கள் மார்க்கத்தை வளர்ப்பதில் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது இனிது புலப்படும். மேலும், "இவ்வளவு பாடுபட்டும் இந்த மார்க்கம் தளரவில்லையே" என்று அப்பாதிரியார் வருந்தி இனிமேல் செய்யவேண்டிய வேலையைக் குறிப்பிடுவதைப் பார்க்கும்பொழுது அவர்களுடைய விடாமுயற்சி நன்குவிளங்கும். அவர்கள் என்னசெய்தாலும், நம்முடைய சமயாபிமானிகட்கு இன்னும் உணர்வு பிறக்கவில்லையே! சமயபரிபாலனஞ் செய்யவேண்டிய மடங்கள் எல்லாம் மாயையினின்றும் அகலவில்லையே! எல்லோரும் அயர்ந்தன்றோ உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள்! சமயாபிமானிகளே! மடபதிகளே! எழுமின்! எழுமின்!! விழிமின்! இந்தியாவைக் கிறிஸ்தவ மதத்திற்கு இரையாவதினின்றும் காப்பாற்றுமின்!

மதிப்புரை.

கிராமானுகூலன்:—இப்புதிய மாதப் பத்திரிகையின் முதல் இதழ் கிடைத்தது. இதன் ஆசிரியர் கும்பகோணம் ஸ்ரீமாந் என். ஆபத்சகாய ஐயர் அவர்களாவர். இதில் கிராம சம்பந்தமான அரசியல் நிர்வாகம் நன்கு கவனித்து எழுதப்படும் என்று தெரிகிறது. வருடசந்தா ரூ உ-0-0.

கதாசந்திரிகை:—இப்புதிய மாதப்பத்திரிகையின் முதல் மலர் முதல் இதழ் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் மைலாப்பூர் பூ. அ. பாஷ்யமையங்கார் பி. ஏ., எல். டி., அவர்கள் ஆவர். இவ்விதழில் இனிய கதைகளும் வர்த்தமானங்களும் வரையப்பட்டிருக்கின்றன. வருஷசந்தா ரூ. உள்நாட்டுக்கு உ—அ—0 வெளிநாடு ௩—அ—0.

ஹரிசமய திவாகரம்:—இது ஒரு புதிய மாதப் பத்திரிகை. மதுரை பண்டித, ஆ. அரங்கராமாநுஜ ஐயங்கார் அவர்களால் வெளியிடப் பெறுவது. இதன் முதல் இதழில் வைஷ்ணவ சமய சம்பந்தமான பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உள்நாட்டுக்கு வருஷசந்தா ரூ உ. வெளிநாட்டுக்கு ரூ உ—அ—0.

சாரஸ்வதி:—சென்னை சாரஸ்வதி சங்கத்தினின்றும் வெளிவரும் இம்மாதப் பத்திரிகையின் உ-வது மல[illegible]தொலி யெங்குங் [illegible]றோம். சஞ்சிகை அழகிய சிறு புத்தக வடிவமாக [illegible] மிகுதிரு வாரூரிசிறப்பா, கப் பெண்மக்களுக்குரிய பல விஷயங்கள் [illegible] குடிப்பிறந்த மூதப் பட்டிருக்கின்றன. வருஷ சந்தா உள்ளூருக்கு க—[illegible] [illegible]வெளியூருக்கு க—அ—0.

பாலவிநோதினி:—வரகவி திரு. ஸ. சுப்பிரமணிய பாரதியாரவர்களால் நடாத்தப் பெறும் இம்மாதப் பத்திரிகையின் ௬-வது மலர் ௪-வது இதழ் வரப்பெற்றோம். இது சிறப்பாகக் குழந்தைகளுக்கென வெளியிடப் பெறுவதாகும். எளிய நடையில் சிறு கதைகளும் சரித்திரங்களும் வியாசங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூ. ௧—௮—0. வெளிநாட்டுக்கு ரூ. ௨. விலாசம்:—ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கம்பெனி, ராயப்பேட்டை, சென்னை.

சதாரோக்கியமுந் தந்த க்ஷேமமும்:—இது ஒரு புதிய ஆங்கில தமிழ் மாத சஞ்சிகை. பாதிப்பகுதி தமிழும், பாதிப்பகுதி ஆங்கிலமுமாக வெளிவருவது. இதில் பொதுவாதச் சுகாதார சம்பந்தமான விஷயங்களும் சிறப்பாகப் பல் சம்பந்தமான விஷயங்களும் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந் டாக்டர் எச். வெங்கட ராவ் எல். எம். அண்டு எஸ். அவர்கள் ஆவர். இப்பத்திரிகையை அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். ஒரு வருட சந்தா ரூபா ஒன்றரையே. (௨௫0 சைனாபஜார் ரோட், சென்னை.)

நவரச மஞ்சரி:—இப்புதிய மாதப் பத்திரிகையின் முதல் மலர் முதல் இதழ் கிடைத்தது. இதில்பல அரிய விஷயங்கள் மாதம்தோறும் வெளிவரும் என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதில் பாரதச் செய்யுட்களின் பதவுரை குறிப்புரை முதலியன தொடர்ந்து வெளியிடப் பெற்றிருக்கின்றன. புத்தகம் நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் ஆசியர் ஸ்ரீமான் ஏ. எம். போருரான் செட்டியார் அவர்கள் ஆவர். இதன் வருஷ சந்தா ரூ ௫—௮—0. விலாசம்:—நெ. ௫௧௧, தங்கசாலை வீதி, பார்க் டவுன், சென்னை.

தாஜ் மஹால்:—இச்சிறு புத்தகம் ௨௪ பக்கங்கள் கொண்டது. சென்னை பா. தாவுத்ஷா அவர்களால் எழுதப்பட்டது. தாஜிமஹாலின் பெருமையினைச் சித்திரப் படங்களோடு விளக்குகிறது. விலை அணா நான்கு. விலாசம்:— தாருல் இஸ்லாம் புத்தகசாலை, ௧௬, ௧ள ஸக்கிண்டு லேன் பீச்சு சென்னை.

நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்:—இஃதும் ஸ்ரீமாந் பா. தாவுத்ஷா அவர்களாலேயே இயற்றப் பெற்றதாகும். புத்தகம் ௧௪௨ பக்கங்கள் [illegible] நல்ல உயர்ந்த (Feather-white) காகிதத்தில் [illegible]குத் தக்கவாறு [illegible]ருக்கிறது. நபிகள் நாயகமும் நான்கு தோழர்கல் நமது ஆலயங்களு வாழ்க்கையினை விரிவாக ஆராய்ந்து ஆசிரியர் நன்[illegible]யை உண்டாழுதியிருக்கின்றார். ராப்பர் பைண்ட் ரூ ௧-௮-0. காலிகோ ரூ [illegible]-0-0.

உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சதங்கை உ.	காரைக்குடி உருத்திரோற்காரிஹு பங்குனிமீ	மணி கஉ

வணக்கம்.

சிவபெருமான்.

குருகாம் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானும்
பருகா வமுதமாம் பாலி னெய்யாம்
பழத்தி னிரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகா லுமையா ளொர்பா கனுமா
முண்ணின்ற நாவிற் குரையா டியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே.

—திருத்தாண்டகம்.

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினா னாயடியே னணிகொடில்லை கண்டேனே.

—திருவாசகம்.

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானு மணிதில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே.

—திருவிசைப்பா.

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

—திருப்பல்லாண்டு.

சிற்பக்கலை.

த. ராமகிருஷ்ணன்.

---o---

நமது தாய்நாடு பண்டைக்காலத்து பரதகண்டமென்றும் தற்காலம் இந்தியாவென்றும் அழைக்கப்பெற்று வருகின்றது. அதன் பழமையை நமது தேயத்தினரும் அன்னிய தேயத்தினருமாகிய சரித்திர ஆசிரியர், சாசன பரிசோதகர், பூதத்துவ சாஸ்திரிகள் முதலியோர் ஆராயப்புகுந்தனர். மிகப் புராதனமாகிய பாபிலோனியா, எகிப்து தேயங்கள் மேன்மை பெற்றிருந்ததற்கு எத்துணையோ காலங்களுக்கு முன்னர் நாகரிகமடைந்திருந்தமை யுணர்ந்தனர்.

நமது நாடு.

நமது நாடு இயற்கை வளங்களால் நிறைந்திருந்தது. கலைகளுக்கும் கலைஞானங்களுக்கும் உறைவிடமாக விருந்தது. கைத்தொழில்களையும் வாணிபத்தையும் வளர்த்தது. இயற்கை செயற்கைப் பொருள்களை அயல் நாடுகளில் பரப்பியது. செல்வத்திலும் வலிமையிலும் வெற்றியிலும் கருணையிலும் செழித்து விளங்கியது. இலக்கியப் பயிற்சியில் இணையற்றிருந்தது. தத்துவ வுணர்ச்சியில் தலை சிறந்து சமய வுண்மையை நிலைநாட்டியது. நமது மூதாதையர் தம்மை நிகர்த்த நாகரிகர், செல்வர், வீரர், அறிஞர், அறவோர், துறவினர் எவ்வுலகிலுமில்லையென் றிணையற் றிருந்தனர். நமது இலக்கியங்களோ, இன்றும் இனிய சுவையுடனும் ஆழ்ந்த கருத்துக்களுடனும் சிறந்த நீதிகளுடனும் மிகுந்த பக்தியை யூட்டுவனவாகப் பொலிந்து விளங்குகின்றன. நமது வாணிபப் பொருள்கள் சென்று பரவாத தேயங்களிருந்ததில்லை. எத்தேயத்தினரும் இற்றைநாள் வரையில் கண்டறியாத கைத்தொழில்களையும் கலைஞானங்களையும் அறிந்திருந்தனர். இக்காலை மேல்நாடுகளில் கைத்தொழில் பயில்வோர்களும் கண்டஞ்சும் நிலைமையில் கைத்தொழில்களும் கலைஞானங்களும் கற்பிக்கப் பெற்றன. பண்டைநாளில் பல்கலைகளையும் சாத்திரங்களையும் கற்பிக்கின்ற பல்கலைக்கழகங்

கள்மன்னர்களாலும் ஆங்காங்கு நிறுவப்பெற்றிருந்தன. இந்தியாவின்மீது பிறதேயத்தினர் படையெடுத்தமையாலும் பிறகாரணங்களாலும் அவைகள் முறையே அழியலாயின. கலை பயில்வோரும் கற்பிக்கின்றவர்களும் குறைந்தனர்.

சிற்பக்கலைகள்.

வடமொழியிலும் பிறமொழிகளிலு முள்ள கலைநூல்கள் சிதறலாயின. இந்தியா சமாதான நிலையடைந்ததின் பின்னர், அவற்றுள் அகப்பட்டவைகள் உணர்ந்துகொள்ள முடியாதனவும், உட்கருத்துக்கள் விளங்காதனவுமாக இருக்கின்றனவென்று அதனை யாராய்ந்தோர் கூறுகின்றனர். அந்நூல்கள், நமது முதாதையர் தங்கள் புத்தி நுட்பத்திற் கேற்பத் தத்தம் குருகுலங்களில் பயின்றுவந்த முப்பத்திரண்டு சிற்பசாத்திரங்களும் அறுபத்து நான்கு கலைஞானங்களுமெனப. *சிற்பசாத்திரங்கள் அதர்வ வேதத்தின் உபவேதம். இதனை அர்த்தவேதமென்றும் கூறுவர். இவை விசுவகர்மா த்வஷ்டா பிரஹ்மா தேவக்ஞ மய முதலியவர்களா லாக்கப்பெற்றவை. சிற்பசாத்திரங்கள் இயந்திரவித்தை (Applied Mechanics), பல

* சிற்ப சாத்திரங்கள்:—(க) விசுவகர்மா-உகூ000 கிரந்தம். (உ) விசுவேசம்-ங0000 (ங) விசுவசாரம்-கரு000 (ச) மநு-உ0000 (ரு) நள-கக000 (சு) இருடி மானவீத-உரு000 (எ) இருடி மானசாரகரு000 (அ) பஹுசுருத-ச000 (கூ) சிரேஷ்டா-உ0000 (க0)மாநபோதம்-ஙசு000(கக)விசுவபோதாயனம்-ரு0000(கஉ)அயாதிசாரம்-கஉ000 (கங)விசுவசாரம்-உஅ000(கச)இருடிபராசர-உ0000 (கரு) விசுவகாசியபம்-உரு000 (கசு) வாஸ்துபோதம்-கரு000 (கஎ) வாஸ்துவித்யாபதி-ங0000 (கஅ) வாஸ்துகலாரூபம்-ங0000 (ககூ) இருடி சித்ரஉ0000 (உ0) சித்ரகம்-உரு000 (உக) சாதக-சரு000 (உஉ) பிரஹ்ம-ஙசு000 (உங) இந்த்ர-சஎ000 (உச) சௌர-ரு0000 (உரு) இருடி இலவஜ-உங000 (உசு) இருடி சௌர-க0000 (உஎ) சித்ர சாரம்-கடு000 (உஅ) மானசாரம்-கஉ000 (உகூ) இருடி வாஸ்த்வாதிகாரம்-உ00000 (ங0) சித்ராதிகாசம்-கரு000 (ஙக) இயந்திராதிகாரம்-உரு0000 (ஙஉ) பிராயஸ்சித்தம்-ங0000 (இவை சென்னை ஸ்ரீ திரு. M. A. அநந்தாழ்வார் B. A., A. C. E., B. C. E, அவர்கள் "இந்திய சிற்பசாஸ்திரம்" என்று எழுதிய வியாசத்தில் கண்டது)

வகை கருவிகளியற்றல், இயல்புக் காட்சி (Perspection), சக்தி தத்துவம் (Physics), இரசாயன தத்துவம், பூததத்துவம் பூகர்ப்பசாத்திரம்(Geology), அளவை நூல், சித்திரவேலை (Sculpture), வானநூல், நகரநிர்மாணம், ஆலய நிர்மாணம், ஜலாசயம், நீர்ப்பாய்ச்சல், நகர சுகாதாரம், தாவரநூல் (Botany), வாகன வித்தை, மின்சாரவித்தை (Electricity)—முதலியனவாக ஒரு இராஜ்ய நிர்மாணத்திற்கு வேண்டிய பலவகை ஸ்தாபனங்களையும் பலவகை கைத்தொழில்களையும் கற்பிக்கின்ற சுமார் பத்து லட்சங்களுக் கதிகமான கிரந்தங்களை யுடையதாகி மிகப்பரந்து கிடந்ததாகத் தெரிய வருகின்றது. அச்சியந்திரங்கள் முதலிய பல செளகர்யங்களும் அமைந்து கிடக்கின்ற இக்காலத்து நமது நாட்டில் கைத்தொழில்களை கற்பிக்கின்ற நூல்கள் வெளிவரவில்லை. அயல்நாடுகளில் குடிசைத் தொழில் முதல் எவ்வகைத் தொழில்களையும் கற்பிக்கின்ற அநேக நூல்கள் ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. பல கைத்தொழிற் கல்லூரிகளும் நிறுவப்பெற்றிருப்பதாக அறிகின்றோம். ஒரு தேயத்தில் கைத்தொழிலைப்போதிக்கின்ற நூல்களும் கல்லூரிகளும் மிகுந்திருப்பின், அத்தேயத்தின் தொழில் எத்தகைய உன்னதநிலை யடைந்திருக்கவேண்டுமென்பதுசொல்லாமலே விளங்கக் கிடக்கின்றது. அச்சியந்திரம் முதலிய வசதிகளில்லாத மிகப் புராதன காலத்துப் பலவாயிரம் கிரந்தங்களையுடைய சிற்ப சாத்திரங்கள் எழுதப்பட்டிருக்குமானல், அக்காலத்துச்சிற்பிகளின் கைத்தொழில் தேர்ச்சியும் அனுபவமும் சாத்திரஆராய்ச்சியும் கல்வியினுயர்ச்சியும் மதிநுட்பமும் எவ்வளவு மேம்பாடடைந்திருத்தல் வேண்டும்! தேசமக்களின் ஆதரவும் அரசாங்க உதவியும் எவ்வளவு பெற்றிருத்தல்வேண்டும்! தேசமக்களின் ஆதரவும் அரசாங்க உதவியு மில்லாத இக்காலத்து—சிற்பிகளிடமிருந்து கல்வியும் கைத்தொழிலும் சாத்திர ஆராய்ச்சியும் அடியோடு மறைந்துவிட்ட இக்காலே—சிற்பிகள் ஏழைமக்களாக நிற்கின்ற இக்காலே—எத்தகைய தொழில்களை, எத்தகைய ஆராய்ச்சிகளை, எத்தகைய சாத்திரங்களை இத்தேயத்தினரும் பிறரும் எதிர்பார்த்தல் கூடும்? அரசாங்கவுதவி பெற்றும் தேச

மக்களின் ஆதரவு பெற்றும் மிகுந்த செல்வங்களினிடையே களித்து நிற்கின்ற அயல்நாட்டுச் சிற்பிகளால் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டன. என்று நமது நாட்டுக்கு இறக்குமதியாகின்ற பலவகை இயந்திரங்கள், எஞ்சின்கள், மோட்டார் முதலிய வாகனங்கள் இன்னும் பலவித கருவிகளும் எவ்வளவோ மிகுதியான விலைகள் கொடுத்து பெற்றுக்கொள்ளுகின்றனர். இன்னும் ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாகிய உணவுப்பொருள்களையும் உடைகளையும் அந்நிய நாட்டினின்று எதிர்பார்க்கும்பொழுது ஏனையவற்றை கேட்பானேன். நமது நாட்டில் எஞ்சின்களில்லை, மோட்டார்களில்லை, இதர வசதியான பொருள்களில்லை யென்று எளிதில் சொல்லிவிடலாம். பஞ்சும் விளையாது போகவில்லை; சிற்பிகள் இராட்டினமும் நெசவுக் கருவிகளுஞ் செய்ய மறந்திருக்க மாட்டார்கள். நெசவிடுவோர்களும் இசைந்திடுவர். இச்சிறு காரியத்திலாவது தேச மக்கள் தங்கள் காசை அன்னியர்வசம் கொடுக்காதிருத்தலாகாதா? பல துளி பெரு வெள்ளம். நம்மை நாம் உணர்ந்தோமில்லை. பல நூறாண்டுகளாக அந்நியர்களுக்கு டாக்கா மஸ்லின்களையும் சல்லாத்துகில்களையும், பலவிதப் பட்டு நறுமடிகளையும் சரிகைத் துப்பட்டாக்களையும் சித்திரத் தையல்வேலைகள் நிறைந்த பல ஆடைகளையும் நாம் அனுப்பி வந்திருக்கின்றோம் என்பதாக டாவர்னியர் (Tavernier) கூறுகின்றார்.

நெசவுக் கருவி.

சிறந்த நெசவுத் தொழிலிலும், பலவித வர்ணங்களைக் கலப்பதிலும், வாசனை திரவியங்கள் செய்யதிலும், பலவிதச் சித்திர வேலைகளிலும், உலோகங்களில் வேலை செய்வதிலும் இந்தியர் பூர்வகால முதல் மிகுந்த புகழ் படைத் திருந்தார்களென்று பண்டிதர் வீபர் (Weber) ஆராய்ந்து சொல்லுகின்றார். நமது நாட்டில் வந்து நெசவுத்தொழிலைக் கற்றுப்பஞ்சும் உடன்கொண்டு சென்று ௧௭௬0-வது வருடம் வரையில் நமது நெசவுக் கருவிகளை யொத்த கருவிகளை வைத்து நெசவு செய்துவந்தார்களென்று பெயின்ஸ் (Bains) உரைக்கின்றார். இவ்வாறு செய்துவரும் நாளில் ௧௭௬௪-ல் ஹார்க்ரீவ்ஸ் செய்த இராட்டினமா

கிய ஸ்பின்னிங் ஜென்னி (Spinning Genny) யும், ௧௭௭௯-ல் கிராம்ப்டன் செய்த ம்யூல் (Mule) என்னும் கருவியும், ௧௭௮௫-ல் கார்ட்ரைட் செய்த நெசவிடும் இயந்திரமும்சேர்ந்து ௧௭௯௮-ல் வாட் செய்திருந்த நீராவியந்திரத்தின் உதவியையும் பெற்று நெசவுத் தொழிலைப் பெருக்கினர். அதற்கு நமது செல்வமும் நமது நெசவுக் கருவிகளும் உதவியா யிருந்தன. இதற்கு டிக்பி (Digby) என்பார் தமது "வளமுள்ள பிரிட்டிஷ் இந்தியா" என்னும் நூலில் காட்டியுள்ள குறிப்பு சான்றாகின்றது. அதாவது, இங்கிலாந்தின் கைத்தொழில் அபிவிருத்திக்கு வங்காளத்திலிருந்தும் கருநாடகத்திலிருந்தும் வந்த செல்வங்கள் காரணமென்றும், நெசவுக்கு உபயோகிக்கப்பட்ட இயந்திரங்கள் இந்தியாவி லிருப்பவைகளை ஒத்ததாகவே இருந்தனவென்றும், இந்தியர்களுக்கு நெசவுத் தொழிலிலிருந்த வேலைத்திறன் மேனாட்டாரிடம் இல்லை யென்றும் சொல்லியிருக்கின்றார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அயல்நாட்டினருக்கு ஆடைகளைக் கொடுத்துதவிய நாம் இப்பொழுது அவர்களிடமிருந்து ஆடைகளை எதிர்பார்ப்பது வெட்கத்திற்கிடம். பிறதேயத்தார்களுக்குக் கைத்தொழில்களை கற்பித்ததும் கைத்தொழில்களுக்கு பிறப்பிடமு மாகிய நமது தேயத்தின் பெருமைக்கு இழுக்கை யுண்டாக்குவது உண்மை மக்களின் கடமையாகாது. நமது தேவைக்கு இயந்திரங்களோடு போட்டி போட வேண்டுவதில்லை. இராட்டினங்களையும் கைத்தறிகளையும் போதுமான அளவுக்குப் பெருகச் செய்தலே சாலும். இயந்திரங்கள் நிர்மாணித்துக் கொள்ளத் திறமை யற்றவர்களல்ல. பல ஆண்டுகளாக அந்நியர்களின் சுழல்காற்றில் நசுக்குண்டு, கைத்தொழில்களெல்லாம் அழிந்துபோய், தேசத்தின் அருமையும் மூதாதையர்கள் பெருமையும் அறியாதவர்களாகி இருளுலகில் வீழ்ந்து விட்டோம். விழித்தெழுந்து நமது மூதாதையர் பெருமைகளை ஆராய்ந்து சிறுகச் சிறுக முயன்று அன்னார் பெருமைக்கிலக் காவோம். அன்னையும் மகிழ் வடைவாள். நமது இராட்டினமாகிய சிறிய இயந்திரத்தைக் கைக்கொண்டு பெரிய இயந்திரங்களெல்லாம் அவர்கள் செய்துகொண்டதுபோல, நாமும்

பழைய இராட்டினத்தையே முதன்மையாகக் கொண்டு பெரிய இயந்திரங்களைப் படைத்திடற்கு முன்னோர் திறன்களை ஆராய்வோம்.

நமது செல்வம்.

புண்ணியம் வாய்ந்த தாய்த் திருநாடானது, “யாண்டும் நிறைந்துள்ள ஓர் சக்தியுண்டு. இயங்குகின்ற உலகிலுள்ள பொருள்களெல்லாம் அச்சக்தியினால் நிரம்பப் பெற்றிருக்கின்றது. அச்சக்தியை அன்பு, சிவம், பிரமம் என்று அறிவுடையார் பல பெயரிட் டழைப்பர். நாம் பொருள்களுக்கு உரிமையாளர்களன்று. அவற்றை விரும்புதல் கூடாது. உள்ளத்துறவுடன் (தியாகத்தினால்) நுகர்தல் வேண்டும். உலகத்தில் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு பல ஆண்டுகள் வாழ விரும்புதல் தகுதி” என்ற சமய வுண்மையினால் கட்டப்பெற்றிருக்கின்றது. இதில் வாழ்ந்த நமது முன்னோர், ஆன்ம சக்தி நிறைந்து, ஜீவகாருண்யம் ததும்பி, இறைவனன்பி லீடுபட்டு, உலகிலுள்ள மக்களெல்லாம் உடன்பிறந்தார், சமத்துவமானவர்களென்று எல்லாவுயிர்களையும் தன்னகத்தே காண்கின்ற பரந்த நோக்க முடையார். உயர்ந்தாரை யேத்தலும், ஒத்தாரைச் சார்தலும், குறைந்தார்க் குதவுதலுமாகிய வேள்வி முடிப்பர் இறைவனது படைப்பைக் கூர்ந்தாராய்ந்த சிற்பியர். ஆ என்னும் பசுக்களாகிய ஆன்மாக்கள், பரசிவத்துடன் லயமடைதற்கு வழியாக, கண்டோர்கள் கண்களைக் கவரும் சித்திரங்கள் நிறுவிய கோபுரம் முன்வாயிலில் கட்டி, அதனைக் காண வந்த வளவிலே உள்ளே நின்ற கொடிமரத்து மணிகள் இனிய கீதஞ்செய்து விளிக்க, அதனை யடைந்து நிலைத்து நிற்க, அப்பால் பலி பீடத்தைக் கண்டு பாசங்களை பலிகொடுத்து, அதற்கப்பால் பசுவாகி, அருவுருவில்லாது எங்கும் நிறைந்த இலிங்க வடிவமாம் பேரருட்பிழம்பைப்பிரியாது கலந்து பேரின்பமடைய ஆலயங்களமைப்பர். அதனைச் சுற்றிலும் நகர அமைப்புகள் முறையே இயற்றுவர். இல்லறம் நடாத்திடப் பல வேறு கருவிகளும் பண்டங்களும் பணிகளும் திறமுடன் நிருமிப்பர். மின்சார விசையினாலும் ஆவியினாலும் சுழன்று பிறர் பொருள்

வளவும் இயந்திரங்க ளமைக்கத் துணிந்திலர். நாடு இயற்கைச் செல்வர்களால் நிறைந்திருந்தது. யாருக்கும் அவ்வெண்ணம் உதிக்கவில்லை. ஈண்டு எல்பின்ஸ்டன் (Elhinstone) என்னும் சரித்திரக்காரர் சொல்வதும் இதற்கு ஆதாரமாகின்றது. "இந்தியாவில் ஜனங்கள் நிறைந்திருந்தனர். க்ஷேமமாக வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு இந்தியனும் சுயேச்சையுடனிருக்கின்றான். வயல்களெல்லாம் அளவிடப்பட்டிருந்தன. நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. ராஜபாதைகள் போடப்பட்டிருந்தன. மயில் கற்கள் நடப்பட்டிருந்தன. பொன்னும் இரத்தினமும், பட்டும் ஆபரணங்களும் எல்லாக் குடும்பங்களிலுமிருந்தன. இவை நாகரிகமுள்ள வாழ்க்கைக்குப் போதுமானவைகளாக விருந்தன. உள்நாட்டு ஏற்பாடுகளும் ஒழுங்காக விருந்தன. தங்கள் விரோதிகளிடத்தும் அன்பு நிறைந்திருந்தது. போதுமான கல்விப்பயிற்சி விருத்தியடைந்திருந்தது. ஆதென்ஸ் (Athens) நகரிலுள்ள அறிவாளிகளைவிட தெய்வ அறிவில் சிறந்திருந்தனர்" என்பது. * இந்தியாவில் உலோகவகைகள் மிகச் செழிப்படைந்திருந்தன. முத்து வயிரம் பச்சை புஷ்பராகம் முதலியவைகளும் அகப்பட்டன. தங்கமும் வெள்ளியும் நினைக்கமுடியாத காலங்களிலிருந்து எடுக்கப்பட்டு வருகின்றன. † இந்தியர்களிடமிருந்து கிரேக்கர்கள் தங்கக் கட்டிகளை விலைக்குவாங்கி வந்தனர். § குஜராத்திலுள்ள மிகப் பெயர்போன சோமநாத (Somnath) ஆலயத்தில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அது கூடாகச் செய்து உள்ளே மதிக்கமுடியாததும் மிகுந்த வியப்பைத் தரத்தகுந்ததுமான வயிரங்கள் நிறைத்து வைக்கப்பெற்றிருந்தன. கஜினிமகமதின் படையெடுப்பில் அந்தக் கோயிலை அழித்து இலிங்கத்தை உடைத்ததில் அதிலிருந்த மணிகள் சிதறின. அவற்றின் விலை மதித்துக் கணக்கிட முடியாதிருந்ததாக சொல்லப்படுகிறது. மைலாசன சிம்மாசனத்தில் செய்தி

* Chambers's Encyclopaedia Vol. V p. 538

† Periplus.

§ Lethbridge's History of India.

ருந்த அதியற்புதமான செதுக்கு வேலைகளும் அதில் இழைக்கப்பட்டிருந்த நவரத்தினங்களும் பார்க்கும்பொழுது சொல்ல முடியாத ஆனந்தத்தை யுண்டாக்கினதாக டாவர்னியர் (Tavernier) வருணித்திருக்கின்றார். இவற்றால் நமது நாட்டுச் செல்வங்கள் அளவிட முடியாதிருந்தனவாக விளங்குகின்றது.

கப்பல், வாகனாதிகள்.

இயற்கை வளங்களால் செழித்து, விவசாயம் கைத்தொழில் வியாபாரங்களில் சிறந்து விளங்கிய நமது நாட்டினர் பிறதேயங்களோடு வர்ணிபஞ் செய்வதற்குக் கடல் வழியாகவும் கரை வழியாகவும் கடந்து செல்லத்தக்க கப்பல் முதலிய வாகனங்களைச் செய்தனர். இதனை "பூர்வீக இந்தியர்களின் கப்பற்றொழில்" என்னும் நூலில் "இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து, பாபிலோனியா, எகிப்து, கிரீஸ், ரோம், அரேபியா, ஆபிரிகா பிரதேசங்கள், ஔஸ்திரேலியா முதலிய தேசங்களுக்கு கப்பல்களிலும், சைன துருக்கிஸ்தான் பாரஸீகம் முதலிய நாடுகளுக்குக் கரைவழியாகவும் சென்று வாணிபஞ் செய்தனர். டேரியசும் அலக்சாந்தரும் தங்கள் நாடுகளுக்காக இந்தியாவில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் கட்டுவித்தார்கள். கப்பல் கட்டுவது பூர்வகாலமுதல் இந்தியாவில் முக்கியமான கைத்தொழில்" என்று பண்டித முகர்ஜி வரைந்துள்ளார். இன்னும் "இந்தியாவில் நூறுவருடங்களுக்குமுன் பதினாயிரம் டன் (Ton) பாரமுள்ளவைகளாகக் கட்டப்பட்ட இந்தியக் கப்பல்கள் இங்கிலாந்திலுள்ள தேம்ஸ் (Thames) நதியில் ஆங்கிலேயர் கப்பல்களோடு சென்றன."* இந்தியக் கப்பல்கள் கி. பி. முதல் நூற்றாண்டில் இரண்டாயிரத்தெழுநூறு கன அடிகள் கொள்ளும்படியான பெரிய மரக்கலங்களாக விருந்தன. ஐரோப்பாவிலிருந்து ந000 மைல் தூரமுள்ள அமெரிக்காவுக்கு யாத்திரை செய்ய இரண்டாயிரம் கன அடி கொண்ட சிறுமரக்கலங்கள் அனுப்பப் பெற்றிருக்கின்றன என்று ரோமாபுரி நூலாசிரியர் ஒருவர் கூறுகின்றார். இவற்

* Mr Digby கூறுகின்றார்.

ருல் சென்ற நூறுண்டுகளுக்கு முன் வரையிலும் கட்டப்பெ ற்றிருக்கிற. இந்தியக் கப்பல்களும் அவற்றின் அளவு நிறை சென்றிருந்த தேசங்கள் முதலியனவும் அறியத்தக்கவை.

இனி, †இருக்கு வேதத்து "தரையிலும் வானத்திலும் நீரிலும் செலுத்தக்கூடிய விமானங்கள், சுவர்ணுதி லோகங்க ளில் மின்சார விசை யூட்டி நிருமாணிக்கும்படியாகக்" கூறுகின் றது. இதுபோல பல மந்திரஙகள் காணப்படுகின்றன. §இரு க்கு வேதத்தில் மின்சார விசை வித்தை கூறப்படுகின்றது. " மநுவின் காலத்தில் கப்பலோட்டிகள் இருந்திருத்தல் வேண் டும். மநுஸ்மிருதியில் கப்பல் கட்டுந்தொழில் சொல்லப்பட்டுள து" என்று ஸர் வில்லியம் ஜோன்ஸ்(Sir William Jones) குறி க்கின்றுர். இராமாயணத்தில் புஷ்பகவிமானம் பிரசித்தியுடை யது. சீவக சிந்தாமணியில் மயில்பொறியும் போஜப்பிரபந்தத் தில் ஆகாயத்திலும் தரையிலும் மணியொன்றுக்கு சஙு மைல் செல்லத்தக்கக் குதிரைப்பொறி யொன்றும் யாதோ ருதவியு மில்லாமல் தானே யியங்கக் கூடிய விசிறி (Automatic fan) யொன்றும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவற்ருல் ஆகாயவிமானம், மோட்டார் முதலியவற்றின் குறிப்புகள் கிடைத்தன.

உலோகத்தொழில்.

"கைத்தொழில் நாடாகவிருக்கின்ற இங்கிலாந்தில் சில வருடங்களுக்கு முன்பு, இரும்பு வார்ப்பட வேலை ஆரம்பிக்கப் பெற்றது. இரும்பு உருக்குதல், பற்றவைத்தல், எஃகு செய் தல் முதலிய தொழில் முறைகளை இந்தியர் அநாதிகாலமாக உணர்ந்திருந்தனர்." என்று பண்டித வில்ஸன் மொழிகின்றுர்.

இரும்புத் தொழிலாளிகள் தங்கள் தேயத்திற்கு வேண்டு வனவற்றைச் செய்து வந்ததுடன், பிறநாடுகளுக்குத் தேவை யான பொருள்களையும் உண்டாக்கி ஏற்றுமதி செய்து வந்தனர். அப்பொருள்களெல்லாம் உலகெங்கும் புகழடைந்திருந்தன.

---

† இருக்கு வேதம்—மண்டலம் ௪, சூக்தம் ௫, மந்திரம் ௨௮.

§ ஷை அஷ்டகம் ௧, அத்யாயம் ௮, வர்க்கம் ௨௧, மந்திரம் ௧௦.

இப்பொழுது டில்லிக்குப் பக்கத்தில் இருக்கும் பிரசித்திபெற்ற இரும்புத்தூண் சுமார் ஆயிரத்தைநூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டது. இன்றும் அதனைப் பார்ப்பவர்கள் வியப்புறுகின்றனர். அதன் வார்ப்படவேலையி னருமையும் வேலைத்திறமையுங்கண்டு மெச்சாதவர்களில்லை. உலகிலுள்ள எந்த இரும்புத் தொழிற்சாலைகளிலும் இத்தகைய தூண் வார்ப்படஞ் செய்வதற்கியலாது என்று இந்திய ஜியாலாஜிகல் சர்வேயில் உத்தியோகம் வகித்திருந்த மிஸ்டர் பால் (Ball) சொல்லுகின்றார்.

அஸ்லாமில் மிகப் பெரிதாகிய பீரங்கிகள் செய்யப்பட்டன. டமாஸ்கஸ் நகரில் செய்து வந்த பட்டாக் கத்திகள் இந்திய எஃகினாலாயவை. அக்கத்திகள் உலகில் சிறப்பாக மதிக்கப்பெற்றன. பாரசீக வியாபாரிகள் இந்தியாவிற்கு வந்து இரும்புச் சாமான்களை மிகுதியாக வாங்கி ஏற்றுமதி செய்து ஆசியாவின் இதர நாடுகளில் விற்று முதல் செய்துவந்தனர். இங்கிலாந்திலும் கத்தி முதலியவை செய்வதற்கு இந்திய எஃகு மிகுதியாக வாங்கப்பட்டது. எஃகு உருக்குவதிலும் இரும்பு வார்ப்படவேலை செய்வதிலும் இந்தியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தேர்ச்சியுற்றிருந்தனர் என்று அறியக்கிடப்பதாக கஅகூஉ-ல் மாதவ கோவிந்த ரானடே வரைந்துளார். இந்தியச் சிற்பிகளின் இணையற்ற உலோகத் தொழில் திறமையை வியந்து கூறியவர் நடுநிலையுடைய ஐரோப்பியரென்பது கவனிக்கத்தக்கது.

இயந்திரப் பொறிகள்.

தேசப் பாதுகாப்பிற்காக கோட்டை மதிற் புறத்து நிறுவப்பெற்றிருந்தவைகளும் பிறவுமாகும். இவை சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி. இராமயணம் முதலிய இலக்கியங்களில் விளக்கப்பெற்றிருக்கின்றன. அவை மதிற்பக்கத்துப் பகைவரனுகினால் தானே வளைந்து எய்யும் இயந்திரவில், கரிய விரலையுடைய குரங்கு போலமைத்த அனுகினாரைக் கடிக்கும் பொறி, கற்களை வீசுகின்ற கவண்பொறி, உருக்கிய உலோகப் பொருள்களைச் சுற்றிலும் இறைக்கின்ற பொறி, தூண்டில் வடிவாக அகழியில் போடப்பட்டு மதில் பற்றுவோரை கோத்து வலிக்

'கும் பொறி, ஆண்டலைப்புள் வடிவாகச் செய்து பறக்க விட்டிருப்பதும் பக்கத்தில் சென்றவர்களுடைய உச்சியைக் கொத்தி மூளையை சிதறவடிக்கின்ற பொறி நிரைகள், பகைவர் மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறி, பக்கத்தில் சென்றவர்களை ஒவ்வொருவராகச் சேர்த்து நூறு பெயர்களான வுடன் நெருக்கிக் கொல்லும் நூற்றுவரைக் கொல்லி, களிற்றுப்பொறி, கழுகுப்பொறி, புலிப்பொறி, சகடப்பொறி, தகர்ப் பொறி முதலியன.

போர்க்கருவிகள் எஃகினால் பல வுருவங்களில் செய்யப்பட்டிருந்தன. வில்லும் அம்பும் முக்கியமானவை. அம்புத் தலைகள் புகை வீசுகின்றவைகளும், நெருப்பு ஜ்வாலைகளை கக்குகின்றவைகளும், மின்சார ஒளி வீசுகின்றவைகளுமாக இரசாயனப் பொருள்களால் ஆக்கப்பெற்றிருந்தன. ஔரப முனிவரால் கண்ட ஔரபாக்னி என்ற வெடிமருந்து போன்ற கலவையும் உபயோகிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. யுத்த வீரர் எஃகினால் செய்த கவசங்கள் அணிந்திருந்தனர்.

வானசாஸ்திர ஆராய்ச்சிக் கருவிகள்.

வானசாஸ்திர ஆராய்ச்சியில் இந்தியர் மிக மேன்மையுற்றிருந்தனர். ஸர் ஐஸக் ந்யூட்டன் கண்டுபிடித்ததாக மிகப் புகழ்பட்ப் பேசப்பட்டுவரும் ஆகர்ஷண சக்தியி னியல்புகளை மிகப் புராதன காலத்திலேயே இந்துக்கள் உணர்ந்திருந்தனர். பாஸ்கராச்சாரியார் செய்த "சித்தாந்த சிரோன்மணி" என்னும் நூலை மொழிபெயர்த்த வில்கின்சன் (Wilkinson) ஒரு சுலோகத்தின் கருத்தை இவ்வாறு விளக்குகின்றார் "பூமிக்கு ஆகர்ஷண சக்தி இயல்பானது. இந்த ஆகர்ஷண சக்தியினால் பூமி தன்மேல் சுமத்தப்பட்ட எவ்வகை பாரமான வஸ்துக்களையும் வலித்து நிற்கின்றது. பொருள்கள் விழுந்து விடக்கூடியவைகள் போல காணப்பட்டாலும், பூமியின் இழுப்பினால் அவ்விதம் விழுந்துவிடவில்லை."

இனி வானப் பொருள்களை ஆராய்வதற்குப் பலவகையான இயந்திரங்களை உபயோகித்திருக்கின்றனர். அவை:—

(க) திகந்ச யந்திரம்—வானமண்டலத்திலுள்ள ஒரு கிரகம் அல்லது நட்சத்திரத்தின் பாகை (Degrees) யளவை கண்டறியத் தக்கது. (உ) துருவப்ரோத சக்ர யந்திரம்—ஒரு கிரகம் அல்லது நட்சத்திரத்தின் இறக்க கதியின் பாகை யளவு (Degree of declination) காண்பது. (ங) இயந்திர சம்ராட்—(இயந்திரங்களுக்கரசு)—வானமத்தியிலிருந்து (Meridian) செல்கின்ற ஒரு கிரகம் அல்லது நட்சத்திரத்தின் ஏற்ற இறக்க கதிகளையும் அவற்றின் தூரமும் கால அளவுகளையும் கண்டறிவது. (ச) பித்தியந்திரம்—சூரியனது மிக உயர்ந்த செல் கதிகளையும் இடப்பரப்பையும் (Latitude of Place) கண்டறிவது. (ரு) விஷுவத் யந்திரம்—வானமத்தியிலுள்ள சூரிய கதியின் கால அளவை கணக்கிட்டறிவது. (சு) பலக யந்திரம். (எ) சக்ர யந்திரம். (அ) சாப யந்திரம். (கூ) துரிய யந்திரம். (கo) சங்கு அல்லது சூரிய கடிகாரத்தில் காலந் தெரிவிக்குங் கருவி, முதலியனவாக பல இருந்தன. முதலில் காட்டிய ஐந்து இயந்திரங்களும் இப்பொழுது காசியிலுள்ள மன்மந்திர சோதிடக் காட்சிச் சாலையில் (Manmander Observatory) வைத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

அற்புத நிர்மாணங்கள்.

மிகச் சிறப்புவாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் சோழன் கரிகாற் பெருவளத்தான் அரசாட்சிக் காலத்திலிருந்த பட்டி மண்டபம் என்னும் வித்தியா மண்டபம், முத்துப் பந்தர், தோரண வாயில் முதலியன தங்கத்தினாலும் நவ மணிகளாலும் மிக நுண்ணிய வேலைப்பாடுடன் செய்யப்பட்டவை. இன்னும் மிக வியக்கத் தக்கவைகளாக ஐந்து மன்றங்கள் நிறுவப் பெற்றிருந்தன அவை:

க. வெள்ளிடை மன்றம்.—அந்த நகரத்தில் புதிதாகவந்தவர்கள் தங்குவதற்குரியது. தங்களுடன் கொண்டு வந்த சாமான்களை அந்த மன்றத்தின் வெளியிடத்தில் வைத்துவிட்டுச்செல்லுங் காரியங்களுக்குச்செல்லலாம். அந்நாட்டினர் செல்வமுடையராதலால் அதனை அபகரிக்க நினையார். மன்றத்தினி

யல்பறியாத பிறர் கவர நினைந்தாராயின், அப் பொருள்களை அவர் தலைமீதேற்றி வீதிகளில் சுற்ற வடித்து, கனவிலும் களவென்பதை நினையாதிருக்கச் செய்யும் தகைமையது.

உ. இலஞ்சி மன்றம்.—இது ஒரு பொய்கையை உடையது: அப்பொய்கையில் கூனர், குறளர், ஊமையர், செவிடர், தொழுநோயினர் முழுகி வலஞ் செய்தால் அவர்கள் நோய் நீங்கி மகிழ்வடையச் செய்வது.

ங. நிழல்கால் நெடுங்கல் மன்றம்.—இது ஒளி வீசுகின்ற நெடியதோர் கற்றூண் நாட்டிய மண்டபம். வஞ்சனையால் மருந்து ஊட்ட உண்டு பித்தேறியவர்களும், நஞ்சையுண்டு துயரடைந்தவர்களும், கொடிய விஷத்தையுடைய பாம்பினால் கடியுண்டவர்களும், பேயினால் பிடிக்கப்பட்டவர்களும் அந்தத் தூணை வலஞ்செய்வதால் நோய் நீக்குவது.

ச. பூதச் சதுக்கம்.—தம்மைப் பிறர் நம்பும்படியாக தவ வேடம் தரித்து, அத்தவத்திற்கு மாறான ஒழுக்கங்களுடைய பொய் வேடத்தார்; தன் கணவனை வஞ்சித்து பிறன் கடையொழுகும் பெண்டிர்; அரசனைக் கெடுக்க நினைத்த மந்திரியர்; பிறர் மனை புகுவார்; பொய்ச் சாட்சியம் சொல்லுவோர்; கொடுக்கப் புகழ்ந்து கொடாமையால் பழிக்கும் இழிகுணத்தர்; இவர்களை அறைகூவித்தன் கைப்பாசத்தால் கட்டிவரச்செய்து புடைத்து உண்ணும் பூதவடிவினையுடையது. இது நாற் சந்தியில் நிறுத்தப் பெற்றிருப்பது.

ரு. பாவை மன்றம்.—அரசனது செங்கோல் முறைமை சிறிது தவறினும்; தரும நூல் முறையில் நியாயஞ் செலுத்தும் நியாயாதிபர் நடுவு நிலை தவறி ஒரு சார் பற்றினும், நாவினால் கூறமாட்டாது கண்ணீர் சொரிந்து கண்ணால் காட்டுகின்ற பாவை யுருவம் நிறுத்தப் பெற்றது.

இந்த ஐந்து வகைப்பட்ட மன்றங்களின் அமைப்புக்களை கூர்ந்து ஆராய்வார்க்கு அறநெறி முதற்றே அரசின் கொற்றம் ஆதலினால் அரசனது கோல் கோணாது, அமைச்சர் மதி மயங்காது, நியாயாதிபர் மருங்கு சாராது, துறவினர் ஒழுக்கங்

குன்றாது, இல்வாழ்வான் பிறர்மனை நயவாது, கொடையாளிகளை இகழாது, பொய்க்கரி கூறாது, வஞ்சனை, விடம், பேய்களால் பீடியாது, கூன், செவிடு, ஊமை தொழுநோ யாதியவற்றினின்று நீங்கி, களவைக் கனவிலும் கருதாது—மக்கள் இனிது வாழ்க்கை நடத்துவதற்கேதுவாக அரசனது பெரு நோக்கமும், சிற்பிகளது கைத்திறமும், இயற்கைப் பொருளாராய்ச்சியும், இரசாயன வித்தையின் அநுபவமும் புலப்படாமற்போகா.

போது.

இருக்கு வேதத்தின் உபவேதமாகிய ஆயுள் வேதத்தின் நுட்பங்களுணர்ந்து சத்திரப்பிரயோகத் (Surgery) திற்குரிய கருவிகளும் பிறவும் சாம வேதத்திற்கு உபவேதமாகிய கந்தர்வ வேதத்தின் தன்மையுணர்ந்து, மக்கள் மனதை எகாக்ரப் படுத்தி, அன்பு நெறியொழுகி அன்புருவை அடைவித்தற்கேதுவாகவும் இன்னிசைக் கருவிகள் பல இயற்றியுள்ளார். இவற்றை விவரிப்பதால் மிக விரியுமென்றஞ்சி விடுகின்றேன். கண்ணாடி செய்தொழிலை விளக்குவதற்கு இந்திரப்ரஸ்த நகரத்து பளிங்கு மண்டபம் முதலியன சான்றாம்.

இனி சிற்ப ரீதிக்கேற்ற நகர நிர்மாணங்களில், திருவாலவாயுடையார் மதுரை மாநகரென்ன, அரியணைச்செல்வன் அறிதுயிலமரும் திருவரங்க மென்ன, திருமலை நாயக்கன் மஹாலென்ன, உலகப் பிரசித்திப்பெற்ற தாஜ் மஹாலென்ன, மஹா பலேஸ்வரமென்ன, அஜண்டாக் குகைக் கோயில்களென்ன—இன்றும் இவற்றைக் கண்ணுற்று எத்தனை அந்நிய தேயத்தவர் வியப்படைகின்றனர்.

பாரத தேயத்தின் பண்டை மாண்புகளை யுணர்ந்த, ஜெர்மன் பண்டிதராகிய ஹீரான் (Herren) முர்ரே (Murray) என்னும் இருவரும், "உலகத்திலுள்ள எந்தத்தேசங்களும் தோன்றுவதற்கு முன்னரே, இந்தியா கலைஞானங்கள் கைத்தொழில்கள் நீதிபரிபாலனம் தத்துவஞானம் இன்னும் சமூக வாழ்க்கைக்குரிய எல்லாத் துறைகளிலும் நாகரிகம் பெற்றிருந்தாக" வாயார வாழ்த்துகின்றனர்.

பிரஞ்சு பண்டிதராகிய டாக்டர் கோல்ட் ஸ்டக்கர் (Dr. Goldstucker) தாம் எழுதிய இந்திய வேத புத்தகம் (Bible in India) என்னும் நூலில்—"இப்பொழுது உலக முழுவதும் பரவியிருக்கின்ற, கைத்தொழில் கலைஞானம் தத்துவ சாஸ்திரம் சமய நெறி முதலியவற்றிற்கு ஆரியாவர்த்தமாகிய இந்தியா தான் பிறப்பிடம். ஓ! இறைவனே! என்னுடைய தாய் நாடு புராதன இந்தியாவின் பெருமையை மிக விரைவில் அடைவதாக." என்று மனங்குளிரக் கடவுளை பிரார்த்திக்கின்றார். இதுவன்றோ தேச பக்தி!

வேண்டுகோள்.

படைப்புக் காலந்தொட்டு, இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் நிலைக்களமாக, இறைவனருளிய இயற்கைப் பொருள்களின் நுட்பமுணர்ந்தும், மறை மொழிகளின் மாண்பறிந்தும், சமூக வாழ்க்கை இனிது நடைபெற இல்லறவியல், அரசியல், பொருள் செயல் வகை ஆகியவற்றிற்கு ஏற்ற நிலையங்கள் கருவி காரணங்கள் நிர்மாணித்துதவிச் சிறப்புடன் 'ஆசாரியன் 'ஜகத் குரு' என்ற மதிப்புகளைப் பெற்று வாழ்ந்த சிற்ப பரம்பரையினர் இக்காலை அரசாங்க ஆதரவில்லாமலும், அந்நிய நாட்டுச் சாமான்களை விரும்பி நிற்கும் தேச மக்களின் ஒத்தாசை குறைந்தும் கைத்தொழில்கள் அழிந்த காரணத்தால் கல்வியுமில்லாதவர்களாக நிற்கின்றார்கள். கல்வியும் தொழிலும், உயிரும் உடம்பும் போல ஒற்றித்து இயங்க வேண்டுவனவாதலால், சென்ற காலம் செல்க; இனியேனும், சிற்ப பரம்பரையினர் தங்கள் மூதாதையர்களின் பெருமையை அடைந்திடக்கல்வியை வளர்த்து அதனடியாகத் தொழிலைப்பெருக்க முயல்வார்களாக! தேச மக்களும் இந்தியாவின் புராதன மாண்பினைக் காத்திடக்காலத்திற்கேற்றவாறு உதவிகள் புரிவார்களாக! எல்லாம் வல்ல இறை முதற்பொருள் கருணை பாலித்திடுக!! ஓம்.

(இஃது காரைக்குடி விசுவ பிராஹ்மண் மஹா ஜன சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் படிக்கப்பட்டது.)

சாலிவாகன சகாப்தம்.

———:o:———

தி. நா. சுப்பிரமணியன்.

(சகூச-வது பக்கத்தொடர்ச்சி.)

∴ மேலே கூறிய விதமாக நாகபாணனும் ருத்திரதாமனும் சகாப்தத்திலேயே தங்கள் ஆண்டுகளைக் குறிப்பிடுகின்றனர் என்றால், இவ்விருவருக்கும் இடையிலுள்ள காலம் ஐந்து வருஷங்களாகும். இதற்குள், க. நாகபாணனது கடைசிக் காலம்; உ. க்ஷகராத்ரர்களது அழிவு; ங. சஷ்டனன் பட்டமெய்தியது; முதலில் க்ஷத்ரபனும், பின்னர் மகா க்ஷத்திரபனும் அரசாண்டது; ச. ஜயதாமனது ஆக்ஷி; ரு. ருத்திரதாமன் அரசெய்தியது; அவன் ஆட்சியின் முதல் வருஷங்கள்; ஆகிய இவைகள் நடந்திருந்தல் வேண்டும். (Nahapana and the Saka Era by Rakhal Das Bannerji, J. R. A. S. 1917, p. 273.)

இவையாவும் இவ்வைந்து வருஷங்களுக்குள் நடக்க முடியாதனவல்ல; ஆனால் நடந்திருக்கா. "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்க"ளெனக் குருட்டு யோசனை செய்பவர் அங்ஙனம் செய்து கொள்ளத் தடையில்லை. ஆனால் அக்கொள்கையைப் பிறருக்கும் அறிவுறுத்த வேண்டுவராயின், கட்டிட ஆராய்ச்சி, சாஸன எழுத்துக்களின் வடிவாராய்ச்சி, மொழிநூல், நாணய நூல் முதலியவற்றின் முடிபுகளைத் தள்ளிவிட வேண்டியவராவர்.

(அ) கட்டிட ஆராய்ச்சி:—நாகபாணனது கட்டிடங்களை நன்றாக ஆராய்ந்து அந்நூல் வல்லாரான டாக்டர் ழவோ-துப்ரே அவர்கள் தனது பிரஞ்சு நூலாகிய "Archeologie du Sud de L'Inde"யில், பின்வருமாறு கூறுகின்றனர். "கிறிஸ்து அப்தத்திற்கு முன்னும் பின்னுமாக உள்ள கட்டிடங்கள் தம்முட் பெரிதும் மாறுபடுகின்றன. நாஸிக், கார்லி முதலிய இடங்களில் உள்ள நாகபாணனது ஞாபகச் சின்னங்கள் ஸாஞ்

சியில் உள்ள ஸ்தூபத்தின் வகுப்பைச் சேர்ந்து கிறிஸ்துவிற்கு முந்திய காலத்தனவாகும். இதற்கு மாறாகக் கனிஷ்கனது விக்கிரகங்களும், அமராவதித் தோப்பில் உள்ளவைகளும், நாஸிக்கில் உள்ள கௌதமி புத்திரனது குகைகளும், கான்ஹேரியில் உள்ள யஞ்யஸ்ரீயினது குகைகளும், ஏசுவிற்குப் பிற்காலத்தனவாகும்.'' (Vol. I p. 15, 49.) ''நாகபாணன் காலத்திய வடிவு கௌதமி புத்திரனது காலத்தினின்றும் பெரிதும் மாறுபடுகிறது. அவை காலத்தாலாகிய மாறுதல்களேயொழியத் திடீரென உண்டானவையல்ல. உதாரணமாக 'மணி' வடிவமாகிய குடம் 'குட'வடிவமாக மாறிவிட்டது. (தற்காலத்தில் இப்பாகத்திற்குக் 'குடம்' எனப் பெயர். இஃது தூணிற்கு மேல் பாகத்தில் போதிகைக் கீழ் உள்ளது. தற்காலத்தில் குடம் போலத்தான் பார்வைக்குக் காணப்படுகிறது. ஆனால் தற்காலத்திய குடத்திற்கும், மேலே கூறப்பட்ட குடத்திற்கும் வித்தியாசம் உண்டு.) இவ்விதம் மாறுவதற்குச் சுமார் ஒரு நூற்றாண்டாவது வேண்டும்.''

(ஆ) எழுத்துகளின் வடிவ ஆராய்ச்சி:—ருத்திரதாமனது சாஸனத்திய எழுத்துக்களை விட நாகபாணன் காலத்தியவை மிகவும் பழமையான காலத்தனவாம். டாக்டர் துப்ரே அவர்கள் ''இருவர் சாஸனங்களும் சமகாலத்தனவாம் எனக்கூறுதல், சாஸன எழுத்துகளது சரித்திரத்தில் ஒரு மலையை ஒத்த தவறு இழைத்தலாகும்'' எனக் கூறுகிறார். (Ancient History of Deccan, p. 30.)

(இ) மொழி நூல்:—நாகபாணனது சாஸனங்கள் எல்லாம் பிராகிருதத்தில் உள்ளன. ருத்திரதாமனுடையவோ, பின்னாற் காணப்படுகிற சமஸ்கிருதத்தில் உள்ளன. அன்றிக் காலக் குறிப்புகளும் வித்தியாசப்படுகின்றன. நாகபாணன் சாஸனங்களில் காலங்கள் விக்கிரமார்க்க சாஸனங்களில் உள்ளவற்றைப் பின்பற்றுகின்றன.

(ஈ) கடைசியாக நாணயவாராய்ச்சி:—நாகபாணன் பெயரையுடைய நாணயங்கள் ராஜுவுலன் காசுகளைப் பெரிதும் ஒத்தி

ருக்கின்றன. (Plate facing p. 630 of J. R. A. S. 1913) இருவரும் க்ஷஹராத்ர வமிசங்களைச் சேர்ந்தவராதலின், அங்ஙனம் இருப்பது இயற்கையே எனக் கூறலாம். ஆனால் மற்றொரு ஒற்றுமையும் இருக்கிறது. "கரஹோடிஸ் (Karahotes) நாணயத்திலும் நாகபாணன் காசிற் சிலவற்றிலும் காணப்படும் 'H' என்னும் எழுத்து, 'அராமிக்மூல' (Aramic Origin)த்தை யுடையது." ஆகவேதான் அஃது சகபஹ்லவக் காசுகளில் மாத்திரம் காணப்படுகின்றது. (J. R. A. S. 1913 p. 1013.)

நாகபாணனது காசு வஜ்ராயுதத்தையும் அம்பையும் குறிகளாகக் கொண்டது. அஃது, "பார்த்தியர்களுடனும் ஹகன (Hagana), ஹகமஷா (Hagamasha) என்னும் சத்ரபர்களுடனும் நாகபாணனது உறவைக் காட்டுகிறது." (Early History of India, 3rd Edition, p. 218 and Catalogue of the Coins in Indian Museum, Calcutta, Vol. I p. 195.) ஆனால் ராஜுவுலன், ஹகன, ஹகமஷா முதலியோர் கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவராவர்.

நாகபாணனது நாணயங்களுட் பெரும்பாலும் கௌதமி புத்திரனால் மறுபடியும் அடிக்கப்பட்டனவென்று மேலே கூறியுள்ளோம். அதைக் கொண்டு சிலர் கௌதமி புத்திரனே நாகபாணனைக் கொன்றான் என்றும், கௌதமி புத்திரனை கி. பி. முதல் நூற்றாண்டின் கடைசியில் வைப்பதால், நாகபாணன் சுமார் கி. பி. 78க்குச் சமீபமாக அரசாண்டிருத்தல் கூடுமென்றும் கூறலாயினர். ஆனால் அக்காசுகளை நன்கு ஆராய்ந்தால், உண்மை வேறுவிதமாகத் தோற்றுகிறது. ரெவரெண்ட் எச். ஆர். ஸ்காட் என்னும் பாதிரியார் ஜோகல் தம்பி புதையலை நன்றாக ஆராய்ந்து பின்வரும் மூன்று கொள்கைகளை ஸ்தாபித்தார்.

(க) "நாகபணனது பெயரையுடைய காசுகள் உலகிற்பரவியது நீண்ட காலமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் அவை கொஞ்சம் கொஞ்சமாகக் காலத்தால் ஏற்பட்ட மாறுபாட்டை யடைந்திருக்கின்றன."

(ங) அவற்றின் தலைகள் "ஒன்றற்கொன்று வெகுவாக மாறுபடுகின்றன." ஆதலின் அவை எல்லாம் ஒரே மனிதனது படங்களாக இருத்தற்கில்லையென ராப்ஸன் துரை அவர்கள் கூறுகிறார்கள். (Catalogue of the Coins of Audhras, Kshaharatas etc. in the British Museum, London, by E. J. Rapson p. cx). 'முதலிரண்டு துணிபுகளால், நாகபாணன் பெயரைக் கொண்டுள்ள காசுகள் எல்லாம் சாஸனங்களால் அறியக் கிடக்கும் நாகபாணனிடமிருந்து வந்தனவல்ல என்பது போதரும்.

(ச) "நாணயங்களின் நிலையைக்கொண்டு நிதானிக்குமளவில்............இரண்டாம் தடவை அடிக்கப்படுவதற்கு முன்பு ....அவை நீண்ட நாள் உலக வழக்கில் இருந்திருத்தல் வேண்டும் எனவே கூறவேண்டியிருக்கிறது." (Journal of the Bombay Branch of the Royal Asiatic Society, Vol. XXII, p. 224.) இக்கடைசித் துணிபு மிகவும் முக்கியமானது. அப்பதின் மூவாயிரத்துச் சில்லரை நாணயங்களையுடைய குவியலுள் மிகவும் கிட்டிய காலத்தனவாய நாணயங்களையே நாகபாணன் அடித்ததாகக் கொண்டாலும், அவை மறுபடியும் கௌதமி புத்திரனால் அடிக்கப்படுவதற்கு முன்பு நீண்ட நாள் உலகிற் பரவியிருத்தல் வேண்டுமென்றும், ஆகவே கௌதமி புத்திரனுக்கும் நாகபாணனுக்கும் இடையில் உள்ளகாலம் சற்று நீண்டதாகவேயிருத்தல் வேண்டுமென்றும், கூறுகிறது. காலஞ்சென்ற வி. ஏ. ஸ்மித் அவர்களும் "கௌதமி புத்திரனே நேராக நாகபாணனைக் கொன்றான் என எண்ணவேண்டுவதில்லை............கௌதமி புத்திரன் நாகபாணனது குலத்தையோ விருப்பையோ வேரறுத்ததற்கு முன்பே நாகபாணன் இறந்து விட்டான் எனவே நான் மதிக்கிறேன்" எனக்கூறுகிறார். (E. H. I. 3rd Edition, p. 217).

இங்ஙனமாக, நாகபாணன் இருந்த காலம் சுமார் கி. மு. 20—10க்குள்ளாக இருத்தல் வேண்டும் என்னும் முடிவிற்கு ஆசிரியர்கள் வந்திருக்கின்றனர். நாகபாணன் சகாப்தத்தை

ஏற்படுத்தி யிருக்க முடியாதென்பதும், அவன் அவ்வப்தத்தில் தன் சாஸனங்களைக் குறிப்பிட்டிருக்க முடியா தென்பதும் போதரும்.

IV. கஷ்டணக் கொள்கை.

கடைசியாக இக்கொள்கை ஒன்றுதான் மிஞ்சியது. இதுவும் வலியுறாது போயினதால், வேறு கொள்கை நிறுவ வேண்டிவரும். இக்கொள்கை சுமார் ௩௫ வருஷங்களுக்கு முன்பு கன்னிங்ஹாம் (Arthur Cunningham C. S. I.) துரைமகனால் நிறுவப்பட்டு (See N. Chr. 1888, p. 232 and 1892, p. 44), புரொபஸர் தேவதத்த ராமகிருஷ்ண பண்டாரகர் அவர்களால் ராயல் ஏஷ்யாடிக் ஸொஸைட்டியின் பம்பாய்க் கிளையின் பத்திரிகையில் (J. B. B. R. A. S. Vol. XX, p. 280) நன்கு ஆராயப்பட்டதாகும். ஆனால், பின்னால் கவனிக்காமற்றள்ளப்பட்டது. அதற்கு முக்கிய காரணங்கள்,—(க) நாகபானனது சாஸனங்கள் சகாப்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன, (உ) சகாப்தம் கனிஷ்கனால் நிறுவப்பட்டதாகும்—என்னும் இரண்டு கொள்கைகளுமே யாகும்.

இஃது மறுபடியும் ௧௯௨0-ல் புதுவை டாக்டர் ஜி. ழுவோ துப்ரே அவர்கள் "தக்காணத்துப் பூர்வ சரித்திரம்" என்னும் நூலில் இக்கொள்கையை ஆராய்ந்து பின்வருமாறு முடித்துக் கூறுகின்றார்:—

க. கஷ்டணன் வமிசத்தைச் சேர்ந்த அரசர்களது சாஸனங்களின் காலங்கள் சகாப்தத்திலேயே குறிக்கப்பட்டிருக்கின்றன வென்பது நிச்சயம்.

உ. கஷ்டணன் வமிசத்தைச் சேராது வேறுவமிசத்தைச்சேர்ந்த அரசர்களில் எவரும் கி. பி. ௪0௦-க்கு முற்பட்ட காலத்தில் தங்கள் சாஸனங்களைச் சகாப்தத்தில் குறிப்பிடவில்லை என்பதை நாம் அறிவோம்.

௩. 'சகர்'களான கஷ்டணனது வமிசத்தைச்சேர்ந்தோர் உபயோகித்த கி. பி. ௭அ-ல் ஆரம்பிக்கும் அப்தம் பண்டைக் காலத்தில் 'சகாப்தம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

ச. இச்சகாப்தத்தில் குறிப்பிட்டவையுள் மிகவும் பழைமையானது சஷ்டனனது பெயரனுகிய ருத்திரதாமனுல் பொறிக்கப்பட்ட ருஉ-ம் வருஷத்திய ஆந்தௌ சாஸனமாகும். "சஷ்டனனே வமிச ஸ்தாபகனுதலின், அவன் ஒரு அப்தம் ஸ்தாபித்தலும், அதை அவன் வமிசத்தினர் உபயோகித்தலும், அப்தம் ஸ்தாபிக்கப்பட்டு ருஉ ஆண்டுகளுக்கு பின்பு அவன் பெயரன் அரசாளுதலும், இயற்கையே" (Ancient History of the Deccan, p. 36).

இக்கொள்கை எவ்விதத்திலும் பொருத்தமாகவே தோற்றுகிறது. ஆனுல் தேசாபிமானம் (?) கொண்ட ஒரு சாரார் இதை மறுத்துக் கௌதமி புத்திரனே இவ்வப்தத்தை ஸ்தாபித்தான் எனக் கூற முயல்கின்றனர். அவர்கள் கூற்றுப் பின்வருமாறு:—

க. சஷ்டனன் முதலில் 'க்ஷத்ரபன்' என்னும் விருதையே உடைத்தாயிருந்தான். அஃது மேலதிகாரியாகச் சக்கரவர்த்தி ஒருவன் இருத்தல் வேண்டுமென்பதைக் குறிக்கின்றது.

உ. அவனது நாணயங்களின் ஒரு புறத்தில் மூன்று வளைந்த கோடுகளையுடைய சைத்யம் காணப்படுகிறது. அது கௌதமி புத்திரனுல் மறுபடியும் அடிக்கப்பட்ட நாகபாணனது நாணயங்களிலும் காணப்படுகிறது.

ந. கௌதமி புத்திரனது நாஸிக் சாஸனம் அவன் ஸௌராஷ்டிரம், மாளவம் முதலிய தேயங்களை ஆண்டதாகக் கூறுகிறது. ஆனுல் சகர்களும் அந்நாடுகளையே ஆண்டனர் என அறிவோம்.

ச. உஜ்ஜயினியில் ஆண்ட சஷ்டனனும் பைதானுவில் ஆண்ட ஸ்ரீ புளுமாயியும் சமகாலத்தவர் என டாலமி என்னும் யவன ஆசிரியர் கூறுகிருர். (Indian Antiquary, Vol. XIII, p. 366). ஸ்ரீ புளுமாயி கௌதமி புத்திரனின் மகனுதலின், சஷ்டனனும் கௌதமி புத்திரனும் சமகாலத்தவர் ஆதல் கூடும். இங்ஙனம் சஷ்டனன் சாதவாகனர்களுக்கு—கௌதமி புத்திரனுக்கு—ச்சிற்றரசனுதல் வேண்டும்.

உஜ்ஜயினியில் சஷ்டனனுக்கு முந்தியும் சகர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுக்கு மாறாகவோ, அன்றி வேறு ஏதாவது காரணம் கொண்டோ, அவன் கௌதமி புத்திரனுடன் ஒன்று சேர்ந்து உஜ்ஜயினியில் ஆண்ட சகர்களை வென்றிருத்தல் கூடும். அவ்வெற்றிக்குப் பிறகு, உஜ்ஜயினியில் தான் முடி சூட்டிக்கொண்டு கௌதமி புத்திரனுக்குச் சிற்றரசனாக ஆண்டிருத்தல் வேண்டும்.

இங்ஙனம் சஷ்டனன் குறு நில மன்னனாக இருக்கையில் ஒரு அப்தத்தை நிறுவியிருத்தல் இயலாது. மேலே கூறியதிலிருந்து சுமார் கி. பி. எ௮-க்கணித்ததாகக் கௌதமி புத்திரன் சஷ்டனனது உதவியைக் கொண்டு சகர், யுவனர், பஹ்லவர் முதலியவர்களை அழித்து க்ஷஹராத்ரர்களை வேரறுத்துச் சாதவாகன வமிசத்தை நிறுத்தினன் என்பது ஏற்படுகிறது. கர்ன பரம்பரைக் கதைகளும் சகாப்தம் சாலிவாகன அரசன் ஒருவன் சகர்களை வென்றதைக் குறிப்பதாகும் எனக் கூறுகின்றன. 'சாலிவாகன' என்பது 'சாதவாகன' என்பதன் மரூஉ. ஆதலின், கௌதமி புத்திரனே அதை ஸ்தாபித்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

இதுவே அவர்கள் கொள்கை. நானும் ௧௯௨௨-ல் கல்லூரியில் வாசித்து வந்த காலத்தில் இக்கொள்கையைப் பின்பற்றினேன். ஆனால் இதற்கு ஒரு பெருங்குறை உண்டு. சாதவாகன வமிசத்தினர் எவரும் இச்சகாப்தத்தில் தங்கள் ஆண்டுகளைக் குறிக்கவில்லை. ஆதலின் இவர்களில் ஒருவன் நிறுவினான் எனக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?

சஷ்டனனும் ஸ்ரீ புளுயிமாயும் சமகாலத்தவர் என டாலமி கூறுவதுதான் சாதவாகனர் சரித்திரத்திற்கு மைற்கல்லாகும். இது இல்லாது போயின், சாதவாகனர் சரித்திரத்திற்குரிய காலங்களைக் கூறுதல் இயலாது. சமீப காலத்தில் எனது நண்பர் திருவனந்தபுரம் கே. ஜி. சங்கரய்யர் பி. ஏ., பி. எல்., அவர்கள் இக்கொள்கை வலிவற்றது என்றும், இவர்கள் சமகாலத்தவர் என டாலமி கூறவில்லை என்றும் கண்டு

பிடித்திருக்கின்றனர். டாலமி, உஜ்ஜயினியில் ஆளும் சஷ்டனனும், பைதானவில் ஆளும் சிரோ-டாலமி என்னும் யவன அரசனும் சமகாலத்தவர் எனக் கூறுவதாகத் தெரிகிறது. அங்ஙனமாயின் கௌதமி புத்திரனது காலம் வேறு விதமாக மாற்றப்படுதல் வேண்டும். இது விஷயமான பெருமை யெல்லாம் ஸ்ரீ அய்யர் அவர்களுக்கே சேர வேண்டுமென விரும்புவதால், மேலே செல்லாது அவர் எழுதி வெளியிடும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. மேலே கூறிய இரண்டு காரணங்களால் கௌதமி புத்திரன் சகாப்தத்தை நிறுவி யிருத்தல் முடியாதென்பது போதரும்.

கவி கதாசாரியார் "விக்கிரமாதித்தன் என்னும் உஜ்ஜயினி அரசன் ஒரு அப்தத்தை நிறுவினன்; ஆனால் கஙடு ஆண்டுகளுக்குப்பின் அவ்வமிசத்தைச் சேர்ந்த மற்றொரு அரசன் விக்கிரமாதித்தனைக் கொன்று வேறு ஒரு அப்தத்தை ஏற்படுத்தினன்" எனக்கூறுகிறார். (Quoted from J. R. A. S. for 1913 Oct.)

இதுகாறுங் கூறிய வாற்றால்,

க. சகாப்தம் நிறுவப் பெற்றுச் சுமார் ௩௦௦ ஆண்டுகள் வரை வேறு வமிசத்தரசர்கள் எவராலும் உபயோகிக்கப்படாததாலும்,

உ. அதை உபயோகித்த வமிசத்தினர் 'சக்ர'க்ஷாதலானும்,

௩. அவ்வமிச ஸ்தாபகனது பெயரான் அப்தம் ஆரம்பித்த ருஉ-ம் வருஷத்தில் ஆண்டதாலும்,

அவ்வமிச ஸ்தாபகனாகிய சஷ்டனன் என்னும் அரசன் இச்சகாப்தத்தை நிறுவினன் எனக் கொள்வதே இயற்கை எனக்கூறி இவ்வியாசத்தை முடிப்போம்.

உயிர்க்குறுகண் செய்யாமை.

காரைக்குடி வாசகசாலையின் பதினோராவதாண்டு நிறைவு விழாவில், காரைச் சிவனடியார் திருக்கூட்டத்து உதவிக் காரியதரிசியாகிய ஸ்ரீமாந், அரு. சோமசுந்தரச் செட்டியார் அவர்கள் செய்த சொற்பொழிவின் ஓர் பகுதி:—

அன்பின்மிக்க அக்கிராசனரவர்களே! கண்ணியம் வாய்ந்த கனவான்களே!!

இன்று இவ்வின்ப விழாவில், ஜீவகாருண்ய சம்பந்தமான ஒரு சொற்பொழிவினைச் செய்யும் வண்ணம் எளியேனைப் பணித்த இவ்வாசகசாலையார்க்கும், இவ்வாசகசாலையிற் பேரன்பு பூண்டொழுகும் இவ்வூர் ஆங்கிலக் கலாசாலைப் போதகாசிரியர்களாகிய எனது ஆசிரியன்மார்க்கும் முதற்கண் எனது நன்றியறிதலான வணக்கத்தினைச்செலுத்துகின்றேன். இன்று எளியேன் எடுத்துக் கொண்டிருக்கும் மகுடம், உயிர்க்கு உறுகண் செய்யாமை என்பதாகும். இத்தொடர் மொழி உலகெலாம் புகழும் உத்தமோத்தமராகிய திருவள்ளுவர் பெருமானார் திருவாய்மலர்ப் பிறந்த தாகும். இஃது திருக்குறளில், "தவம்" எனும் அதிகாரத்தில், தவலக்ஷணத்தை எடுத்து இயம்பும், "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" எனும் முதற்பாவிலுளதாகும். இத் தொடர்மொழியில், "உறுகண்" எனும் ஒரு பதமே அரும் பொருளுடையதாக விருக்கின்றது. "உறுகண்," "புன்கண்" எனும் பதங்களின் பொருள், "துன்பம்" என்பதாகும். எனவே, இதன் பொருள், "உயிர்ப் பிராணிகளுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தல்" என்பது எளிதிற் புலனாகின்றது. இதுபற்றி மற்றுமோரிடத்தில், நமது திருவள்ளுவர் பெருமானார், "தன்னுயிர்க் கின்னாமை தானறிவானென்கொலோ, மன்னுயிர்க் கின்னா செயல்" எனும் திருக்குறளினைத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள். இக்குறட்பாவால், "ஒருவன் தன்னுயிர்க்கு நேரிடும் துன்பங்களை யுணர்ந்து வருந்துங் காலத்து, அவனே மற்றோ ருயிர்க்குத் தீங்கிழைத்தல் எவ்வாறு பொருந்

தும்? உதாரணமாக, நம்மை ஒருவன் தடிகொண்டு அடிப்பானானால், கையாற் புடைப்பானானால், நமக்கு எவ்வளவு வருத்தம் உண்டாகின்றது? இவ்வாறே, ஒருயிர்ப் பிராணியை ஒருவன் துன்புறுத்துவானானால்—கதறக் கதறக் கழுத்தறுப்பானானால்—அவ்வுயிர் பெரிதும் வருந்துமன்றோ? ஆகவே, எல்லா உயிர்ப் பிராணிகளிடத்தும் பேரன்பு காட்டுதலே சிறப்புடைத்தாகும்.'' என்பது இனிது விளங்கும். கொல்லாமையைப் பற்றித் திருவள்ளுவர் பெருமானார் திருவாய் மலர்ந்தருளியதைப்போல், வேறொருவரும் அவ்வளவு அழகாக வலியுறுத்திக் கூறினாரில்லை. இதனை, ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' ''அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று'' எனும் இன்பு வாக்குகளால் இனிது உணரலாம். இவ்வாறு, நீதிநூல்களிற் றலைசிறந்து விளங்கும் தமிழ்நாட்டுச் சட்ட புத்தகமாகிய திருக்குறளினை யாத்த திருவள்ளுவர் பெருமானார், ''எல்லா அறத்தினுங் கொல்லா வறமே மிகச் சிறந்தது'' என்று கூறுகின்றார். வேறு பல நீதி நூல்களினை யாத்த புலவர் பெருமக்களும் இவ்வறத்தைப் பற்றி ஆயிரக்கணக்கான இன்பப் பாடல்களை யருளியிருக்கின்றார்கள். அவைகளை யெல்லாம் ஒப்புவித்து நான் உங்கள் காலத்தைப் போக்க விரும்பவில்லை. ஆனால், அவர்களில் ஒரு புலவரை மட்டும் குறிப்பிடப் பெரிதும் விழைகின்றேன். அதாவது, ''நான்மணிக்கடிகை'' எனும் நன்னூலினை நவின்றருளிய விளம்பிநாகனார் என்பார், ''எல்லாவிடத்துங் கொலைதீது.'' என இயம்புவது என் உளத்தைப் பெரிதும் ஈர்க்கின்றது. இனிச் சிறப்பாகச் சமய நூல்களை யாத்தருளிய ஆசாரியர்கள் அருளிச் செய்வதை நாம் கவனிப்போம். சைவத் திருமுறையாகிய தேவாரத்தின் கண்ணே, திருவானைக்காப் பதிகத்தில், ''ஊனொடுண்ட னன்றெனா வூனொடுண்டறீதென, ஆனதொண்டரன்பினாற் பேசநின்ற தன்மையான்.'' என்று நமது திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளுகின்றார்கள். இனிச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருப்புறம்பயப் பதிகத்தில், ''குற்றொருவரைக் கூறை கொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாஞ்

செற்றொருவரைச் செய்த தீமைகள் இம்மையே வருந்தின்ணமே'' என்றும், திருவாரூர்ப் பதிகத்தில், "நல்ல நினைப் பொழிய நாள்களி லாருயிரைக்கொல்ல நினைப்பனவுங் குற்றமு மற்றொழிய'' என்றும், திருமுருகன்பூண்டிப் பதிகத்தில், "பசுக்களே கொன்று தின்று பாவிகள் பாவமொன் றறியார்'' என்றும், திருக்கழுக்குன்றப்பதிகத்தில், "கொன்று செய்த கொடுமையாற் பல சொல்லவே'' என்றும் இயம்புகின்றார்கள். திருவாசகத்தில், நமது மாணிக்க வாசகப் பெருமானார் மிக நுண்மையாக, நேரே வெளிப்படையா யின்றி, ஒருவமான முகத்தால், கொல்லா அறத்தின் திறத்தினைப் பாராட்டி யிருக்கின்றார்கள். அதாவது திருச்சதகத்தில், "விச்ச தன்றியே விளைவு செய்குவாய்'' எனும் பாசுரத்தில், "தாம் வளர்த்த தோர் நச்சு மாமர மாயினுங் கொலார்'' என்று பகர்கின்றார்கள். இதன் பொருள், "ஒருவன் அரும்பாடுபட்டு வளர்த்த ஓர் மாமரம், கடைசியில் பலன் தரும்பொழுது விஷம் பொருந்தியகனிகளை நல்கினும், அன்போடு வளர்த்தமையால் அவன் அதனை வெட்டி வீழ்த்தத் துணியான்'' என்பதேயாகும். வடமொழிப் புலவராகிய காளிதாச கவியானவர், 'குமாரசம்பவம்' எனும் நூலின் கண்ணே, "விஷவ்ருக்ஷோபிஸம்வர்த்ய-ஸ்வயம் சேத்தும் அஸாம்ப்ரதம்'' எனும் வாசகங்களால் மேற்கூறிப் போந்தஉண்மையினை விளக்கிக்காட்டியிருத்தலையும் ஈண்டுநான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். இவைகளை விடச் சைவப்பெரு மக்களாகிய நமக்கு வேறு என்ன சான்று வேண்டும்? இனி, வைணவ நூல்களிலே தலை சிறந்து விளங்கும் திருவாய்மொழியில், "நண்ணாதார்'' எனும் பதிகத்தில், "மறுக்கி வல்வலைப் படுத்திக் குமைத் திட்டுக் கொன்றுண்பர், அறப்பொருளை யறிந்தோரார் ஈதென்ன உலகியற்கை?'' என்றும், "பொலிக பொலிக'' எனும் பதிகத்தில் "கொன்றுயி ருண்ணும் வியாதி பகை பசி தீயன வெல்லாம், நின்று இவ்வுலகிற் கடிவான் நேமிப்பிரான் தமர் போந்தார்'' என்றும் நம்மாழ்வார் நவின்றருளுகின்றார். இவ்விரண்டு மேற்கோள்களில், முதலாவது நம்மாழ்வாரின் உருக்க நிறைந்த உள

த்தின் சிறத்தை இனிது புலப்படுத்துகின்றது. இரண்டாவது "கொல்லா வறத்தினையும் மக்கள் வாழ்வினையும் வாழ்வித் தற்காகவே ஆழ்வாராதியர் இவ்வுலகில் அவதரித்தருளினர் கள்" என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்விருபாக்க ளும் என் உளத்தைப் பெரிதும் கொள்ளை கொள்கின்றன. இவ் வாறே வாறு ஒருவிராகப் புலவர் திலகர்களின் அபிப்பிராயத் தைப்பற்றிய ஆராய்ச்சியினை முடிக்கின்றேன். இனி, "உயிர்க் குறுகண் செய்யாமை" எனும் இம்மகுடத்தினை எளியேன் பல பகுப்புக்களாக வகுத்து வைத்திருக்கின்றேன். அம்முறையில் 'உயிர்ப்பிராணிகளுக்கு எவ்வெவ்வகையில் துன்பங்கள் இழைக் கப் பெறுகின்றன? அவைகளை நாம் எவ்வாறு சீர்திருத்துதல் வேண்டும்? அவ்வேழைப் பிராணிகளிடத்து நாம் எவ்வாறு அன்பு காட்டுதல் வேண்டும்?" என்ற விஷயங்களைப் பற்றித் தனித்தனியே சில உரைகள் வழங்குவான் புகுகின்றேன்.

புலாலுணவு.

மக்களுக் குரிய இயற்கை உணவு மரக்கறி வகைகளும் தானியங்களுமே யாம். இதனை, மக்களின் மென்மையான குட லானும், முத்துப்போன்ற அழகிய பல்வரிசைகளானும் இனிது உணரலாம். நமது பற்களும் குடலும் மரக்கறி வகைகளைச் சீரணஞ் செய்யும் வன்மை யாளிலேயே அமைக்கப்பட்டிருக்கி ன்றன. ஆகவே, நமக்கு உரிய உணவு மரக்கறி யுணவேயாம். மரக்கறி யுணவின் மாண்பு நம்மால் அளவிடற் கரியதாகும். நெல் உளுந்து பாசிப்பயறு துவரை கோதுமை கடலை முதலிய வித்துக்களின் பெருமை நம்மால் விளம்பத் தக்கதோ? இனி, உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனை க்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளின் பெருமையினையும், கத்தரிக் காய், வாழைக் காய், பலாக் காய், புடலங் காய், அவரைக்காய், முருங்கைக் காய், முதலிய காய் வகைகளின் பெருமையினையும், மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், ஆர ஞ்சுப்பழம், எலுமிச்சம் பழம் முதலிய பழவகைகளின் பெரு மையினையும், முளைக்கீரை, அரைக்கீரை, பொன்னாங்காணிக்

கிரை, தூதுவளங்கீரை, அகத்திக்கீரை, வல்லாரைக்கீரை, பசலிக்கீரை, முருங்கைக்கீரை, மணத்தக்காளிக்கீரை முதலிய கிரை வகைகளின் மாண்பினையும் என்னென்பேம்! என்னென் பேம்!! ஆ! ஆ!! என்ன குளிர்ச்சி! என்ன ருசி! எவ்வ ளவு மதுரம்! அன்பர்களே! இவ்வரும் பொருள்களை விட்டு விட்டு, ஏனோ மக்களிற் பலர் மாமிச ஆகாரத்தினை மாந்துதல் வேண்டும்? வேண்டாம்! வேண்டாம்!! மரக்கறி வகைகளை யே மாந்தினாற் போதும். மேலும், சுகவழி (Hygiene) சொல்லும் வண்ணம் மக்கள் உணவில் நிறைந்திருக்க வேண் டிய பொருள்கள் மூன்று. அவையாவன:—(க) உடலை வளர் க்கும் பொருள் (Protein) (உ) உடலுக்கு வன்மையை— சக்தியை நல்கும் பொருள் (Carbohydrate) (ங) உடலு க்கு உஷ்ணத்தைக் கொடுக்கும் பொருள் (Fat) இம்மூன்ற னுள்ளும் முதற் கூறிய இரண்டுமே மிகவும் அதிகமாக வேண் டற்பாலனவாம். இவ்விரண்டும் மரக்கறிவகைகளிலும் வித்துக் களிலுமே மிக அதிகமாக இருக்கின்றன. மாமிசப் பொருள் களில் உஷ்ண சக்தியை நல்கும் கொழுப்புப் பொருள்களே அதிகமாக இருக்கின்றன. அதிக உஷ்ண பூமியாகிய இந்தியா தேசத்தில் வாழ்வோராகிய நமக்கு அதிக உஷ்ணம் தேவை யில்லை! இல்லை!! குளிர்ச்சி மிக்க நாடுகளாகிய ஐஸ்லண்ட், கிரீன் லண்ட் முதலிய விடங்களிலுள்ளவர்களுக்கே அதிகமான உஷ் ணம் வேண்டும். நமக்குச் சிறிது உஷ்ணம் இருந்தாற்போ தும். இச்சிறு உஷ்ணத்தைப் பெறுதற்கே நம் முன்னோர்கள், நெய்யும் பாலுந் தயிரும் நித்தலும் மாந்திவந்தார்கள். இனி, மாமிச உணவைப்போல் அசுத்தமும் அதிகச் செலவும் உள்ள ஆகாரம் வேறொன்றுமில்லை! உயிர்க்கொலை புரிந்து பெறும் ஊனுணவால் வரும் பாவத்திற்கு ஓர் எல்லையு முண்டோ? இதைப்பற்றி நமது முதுதமிழ்ப் புல்வர்கள் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள். அவைகளுள் இரண்டு மூன்று பாக்களைமட்டும் ஈண்டு எடுத்துக்காட்டுகின்றேன். இந் நாளில் திண்ணை வேதாந்தம் பேசுவோரிற்பலர்;"எந்தஉணவை உட்கொண்டாலென்ன? சிலகாலம் இருந்து இறக்கிறோம் இவ்வு

பிர்ப்பிராணிகளின் உடலைச் சிதைப்பதால் என்ன தீமை வந்து விடும்? ஒருகாலத்திலும் பிரமத்திற்கு அழிவில்லையே! ஆகவே, மனத்தில் மட்டும் அன்பு இருந்தாற் போதும். எதை வேண்டுமானாலும் இஷ்டப்படி புசிக்கலாம்'' என்று இயம்புகின்றார்கள். இப் பிர்மஞானிகளை நோக்கிச், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள், ''புன்புலால்கருதும் நீங்கள் எவ்வளவு சித்திகளைச் செய்தாலும் ஒருகாலும் நீங்கள் ஞானிகளாகமாட்டீர்'' என்று நவில்கின்றார்கள். அவ்வின்பப் பாடலைக் கேளுங்கள்!

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை
யெழுப்புகின்ற வுறவ னேனும்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே.

மற்றுமோர் புலவர் மனத்தினை விளித்து,

ஊறுகா யாதிதன்னி லுதித்ததோர் புழுக்கண் டாயேல்
வேறவே வீசிச் சிந்தை மெய்மிகக் குலைந்தற் றாயால்
நாறுமூன் புழுத்ததேனு நனிமிக விரும்பி யுள்ளங்
தேறிநீ யுண்டவாறென் செப்புதி தெளிவிலாதோய்!

என்று இயம்புகின்றார். மற்றும் திருப்புகழில் ஓரிடத்தில், அருணகிரி நாதர் ''வயிற்றுக் குண்பன வாயிர மிருக்கக் கண்டும் விட்டுயிர், வதைத்துத்தின்பவர்பாழ்மத மழியாதோ'' என்று இயம்புவதும் நினைவுக்கு வருகின்றது! இனி, எவ்வெவ் வூனினை மக்கள் புசிக்கின்றார்கள் என்பதைக் கவனிப்போம். விஷம் பொருந்தாத எல்லா வகைப் புலாலினையும் மக்கள் மாந்துகின்றார்கள். தனியே அருந்துதலைத்தவிர, விழாக்கள் பலவற்றிலும் இப்புன்புலாலைப் பல்லோர் சேர்ந்து பருகிக் களியாட்டயருகின்றார்கள். ஆ! ஆ!! எத்தனைகௌரவ விருந்துகளிலும், தமாஷ்களிலும், கல்யாணம் புதுமை பெண்ணழைப்பு வேவுஎடுத்தல் தீபாவளி முதலியவற்றிலும் புலால் நாறுகின்றது! அந்தோ! கொடுமை! கொடுமை!! ஊனுண வருந்து

வதைப்போ லிழிவு வேறொன்றுமில்லை! இல்லை!! அதனினும் வருங்காலத்து மக்களாகிய பிள்ளைகளுக்கு ஊட்டுவது பேரிழி வாகும். மக்கள் மாமிசம் புசியாவிடில், மற்ற வகையாலும் உயிர்க் கொலைகள் நிகழா. புசித்தலாலேயே உயிர்ப் பலியிடு தல் என்னும் கொடுமை இன்னும் ஓங்கி வளர்ந்து கொண்டிரு க்கின்றது. ஆகவே, மக்களாவா ரனைவரும் மாமிசத்தினை நீக்கி, மரக்கறி வகைகளையே உட்கொள்ளுதல் வேண்டும் என் பதனை எல்லோரும் இனிது உணருதல் வேண்டும். இதனை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, இனி உயிர்ப் பலியிடுங் கொடுமையினைப்பற்றிச் சில உரைகள் பகருகின்றேன்.

இராஜபுத்திர வீரமாதர் சரித்திரம்.

——:o:——

2. தாரா பாய்.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

நமது பாரத தேசத்தின் வடபாகத்திலே ஆதிகாலத்தில் மிகவும் சிறந்து விளங்கிய இராஜ்யங்கள் நான்கு. அவை, மத்தியபதி, கன்னோசி, டில்லி, அனகலபுரம் எனப்படும். அவற்றில் அனகலபுரத்தை ஆண்டு வந்த அரசர் சோனகர் என்னும் வகுப்பைச் சேர்ந்தோ ராவர். இராஜபுத்திரரிலே பொதுவாகச் சூரிய, சந்திர, அக்கினி என மூவகை வமிசங்கள் உள. அம் மூவகையிலும் முப்பத்தாறு உட்பிரிவுகள் உண்டு. சோனகர் என்னும் வகுப்பினர் அந்த முப்பத்தாறு பிரிவுகளில் ஒரு பிரிவைச் சார்ந்தோரே. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் அச் சோனகரின் ஆட்சிக்கே அனகலபுரம் உட்பட்டிருந்தது. ஏழாவது நூற்றாண்டிலிருந்து முகம்மதியர் நமது தேசத்தில் தோன்றி அரசு பெற முயன்றனர். அவர்களுடைய ஆதிக்கம் நாளடைவில் ஓங்கிப் பரவலாயிற்று. ஸிந்து நதி வழியே ஒரு சாராரான முகம்மதியர் படை கொண்டுவர, மற்றொரு சாரார்

ரான பட்டாணியர் என்போர் வடமேற் கெல்லை வழியாகத் தண்டுகொண்டு வந்தனர்.

அவ்விதம் படையெடுத்து வந்த முகம்மதியருக்கும் அனகலபுரத்தை ஆண்டுவந்த சோனகருக்கும் பதின்மூன்றும் நூற்றாண்டிலே கடும்போர் மூண்டது. அதன் பலனாக அச்சோனகர் தமது புராதன அரசை யிழந்துவிட்டனர். எனினும் அச்சோனகர் சும்மா விருக்கவில்லை. தட்ச சைலம் என்னும் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு, அதில் அரசு செலுத்திவரத் தலைப்பட்டனர். அத் தட்சசைல நாடு ஸிந்து நதிக்கு மேல்புறம் இருந்ததாகச் சரித்திர ஆசிரியர் சொல்லுகின்றனர். பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் அங்கே அரசு செலுத்தியவன் பெயர் ராவ் சூரஸ்தானம். அக்காலத்திலே ராவ் என்பது அரசரைக் குறிக்கும் ஒரு பட்டப் பெயராக வழங்கி வந்தது. சூரஸ்தானம் என்றால் சூரத்தனத்தின் தாயகம் என்பதே பொருள். அவன் தன் பெயருக்கேற்ப மகா சூரனே.

ராவ் சூரஸ்தானனுக்குப் புத்திர பாக்கியம் இல்லை; ஆனால் ஒரு பெண்மகவு மட்டுமே பிறந்து அவனை மகிழ்வித்து வந்தது. அவள் பெயர் தாராபாய். அருமையாகப் பிறந்த குழந்தையை அன்னை பரம அன்புடன் வளர்த்து வருவது இயற்கை. அங்ஙனமே தாராபாயை அவளது அன்னை வளர்த்துவந்தாள்; தொட்டிலில் அமர்த்தித் தாலாட்டும் பொழுது, முன்னோரின் வீரப் பிரதாபங்களையும் குலப்பெருமையையுமே பாடித் தாலாட்டுவாள்; சிறிது வயதானதும், மூதாதைகளின் வீரச் சரிதங்களை விளம்பியே சீராட்டுவாள். அங்ஙனம் சீராட்டித் தாலாட்டி வந்ததால், பெண்களுக் குரிய பழக்க வழக்கங்களில் தாராபாய் கவனஞ் செலுத்தவில்லை; பெருமித வீரமாதாக விளங்கி, வாகை சூட வேண்டு மென்பதிலேயே அப்பெண்மணியின் சித்தம் செல்லலாயிற்று. இது கண்ட ராவ் சூரஸ்தானம் தனது மகளைக் குதிரையேற்றத்தில் நன்கு பயிற்றுவித்தான்; அஸ்திர சஸ்திரப் பிரயோகத்திலும் பெரிதும் பயிற்சி செய்வித்தான் அதனால் பன்னிராண்டு நிரம்புவதற்குள் போர் நூலை அவள் ஓரளவு கரைகாணலாயினள்.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பது பழமொழி. இம்மொழிக்கு அச்சோனகர் இலக்கா கும் காலம் நெருங்கிற்று. விதியின் விளைவை யாவர் தடுக்க முடியும்? பட்டாணியக் குலத் தலைவரில் ஒருவனான லில்லா என்பான் அத்தட்சசைலத்தின்மீது படைகொண்டு வந்தான். அதுகண்ட ராவ் சூரஸ்தானமும் தனது துணைவருடன் போருக் கெழுந்தனன். இரு தரத்துப் படைகளும் தட்சசைல நகருக் கருகே சந்தித்துச் சமர் செய்தன. போரின் கடுமையை என்னென் றுரைப்பது! வீரரின் தலைகள் இரண களத்தில் உருண்டோடின; இரத்த ஆறு பெருக்கெடுத்துப் பரவிற்று. தாரா பாயை மாளிகையில் பத்திரமாக அமர்த்தி வந்துள்ளோமென ராவ் சூரஸ்தானன் மதித்திருக்கையில், போர்க்களத்தே இளைஞனொருவன் சிறிதும் சலியாது வாட்போர் புரிவதைக் கண்டதும், அவனுக்கு அச்சமும் ஆனந்தமும் ஒருங்கே கிளம்பி ஓங்கி நின்றன. அவ்விளைஞன் யாரென அவன் உற்றுநோக்கினான். தனது அருமை மகளே ஆண் உடை தரித்து அமர் புரிவதாக அவனுக்குப் புலப்பட்டது. சோனக வீரரில் பலரும் அவ்வதிசயத்தை அறிந்துகொண்டனர். அவ்வளவில் அவர்களுடைய போராவேசம் பொங்கி விட்டது. பன்னிரண்டு வயதும் நிரம்பப் பெறாத பெண்மணிக்குச் சளைப்பதா என அவர்கள் மகா மூர்க்கங் காட்டிப் பட்டாணியரைக் கொன்று குவித்தனர். தாராபாயின் வாள் வலியையும் சோனகரின் தோள் வலியையுங் கண்டு, அப்பாட்டாணியர் நிலைகுலையும் சமயம் நெருங்கிற்று. ஆயினும் என்ன? லில்லா என்பானோ படையின்மீது படையாகக் கொண்டுவந்து குவித்தான்; படு மோசமான சூழ்ச்சியையும் மேற்கொண்டான். அப்படை வலிக்கும் சூழ்ச்சிக்கும் முன்னிலையில் சோனகரின் சபம் சாயவில்லை. ஆதலால் பட்டாணியரின் பக்கமே வெற்றி நிற்கலாயிற்று. சோனகர் விதியின்றி வாட்டத்துடன் திரும்பினர். பல சொல்லிப் பயனென்ன? தட்சசைல நாட்டை அப்பட்டாணியர் கைப்பற்றிக்கொண்டனர்.

அதன்பின் ராவ் சூரஸ்தானன் யாது செய்வான்? ஒன்றுந் தோன்றாது மத்தியபதியில் வந்து குடியேறினன். ராஜபுதன நாடுகளில் மத்தியபதியே சிறந்த நாடாகும். அச்சமயம் மத்தியபதியின் மன்னவனாக விளங்கியவன் பெயர் ராணா ரவிமல்லன். இவன் ௧௪௭௯-ம் வருஷம் முதல் ௧௫௦௯-ம் வருஷம் வரையில் மிகவும் சிறப்பாக அரசு செலுத்தியவன். தன் இனத்தைச் சேர்ந்த ராவ் சூரஸ்தானனிடம் ராணா ரவிமல்லனுக்குப் பேரன்பும் பரிவும் உதித்தன. அந்த அன்பிலும் பரிவிலும் ராவ் சூரஸ்தானன் தனது துயரை ஒருவாறு மறந்தவன்போல் வாழ்ந்து வரலாயினன். அங்ஙன மிருக்கையில், தாராபாயின் பேரழகும் பெரு வீரமும் ராஜபுதன மெங்கும் பரவி வந்தன. அதனால் அவளை மனைவியாகக் கொள்ளவேண்டு மென்று பலரும் விரும்பி நின்றனர். அழகின் கனிவும் வீரத்தின் விளைவும் தீரத்தின் தளிருமான தாராபாயின் மணமாலை பெற ஆடவர் அனைவரும் அவாவி நின்றது இயற்கையே. ஆயினும் அவளது உள்ளக் கருத்தை நிறைவேற்றி வைக்க ஒருவராலும் ஆகவில்லை. ‘‘தட்சசைல நாட்டை மீட்டுக் கொடுக்கும் தீர புருஷனுக்கே மாலை யிடுவேன்; வேறு எவரையும் கனவிலும் சிந்தியேன்’’ என்று அப்பெண்கள் நாயகம் பேசி வந்தாள்.

ராணா ரவிமல்லனுக்கு மூன்று மைந்தர் இருந்தனர். அம்மூவரில் முதல்வன் பெயர் சங்கரசிம்மன்; இரண்டாமவன் பெயர் பிருதிவிராஜன்; கடையவன் பெயர் ஜெயமல்லன். அரசை யாவர் அடைவதென அம்மூவருக்கும் சச்சரவு நிகழ்ந்தது. அதில் படுகாய மடைந்த சங்கரன் உயிர் தப்பினால் போதுமென ஓடிவிட்டான்; போனவிடம் ஒருவருக்கும் புலப்படவில்லை. [விதிவசத்தால் மாறுவேடம் பூண்டு ஆட்டிடையனாக அமர்ந்து காலங் கழித்து வந்த அந்தச் சங்கரனே பிற்காலத்தில் மத்தியபதி மன்னவனாகி, மொகலாயனை பேபர் சக்கரவர்த்தியை எதிர்த்து முறியடித்தவன்.] பிருதிவிராஜனே தனது தந்தையின் கோபத்துக்கு ஆளாகி, நாடு கடத்தப்பட்டுப் போயினன். மூன்றாமவனான ஜெயமல்லனே மத்தியபதியின் இளவரசாக அச்சமயம் இருந்து வந்தவன். [அம்

மூன்று மைந்தரும் தம்முள் மாறுபட்டு, ஒரு மாதினிடம் சோதிடம் கேட்டுப் பகைத்தெழுந்து பரிபவப்படும் சம்பவத்தை இராஜபுத்திர விஜயத்தின் முதல் பாகத்தில் பரக்கக் காணலாம்.]

தாராபாயின் பேரழகைக் கண்டுங் கேட்டு மிருந்த ஜெயமல்லனுக்கு அவளை மணக்க வேண்டுமென ஆசை பிறந்தது. அதற்கு அவள், "அரசிளஞ் சிங்கமே! உனக்கு ஆண்மை விருப்பின், தட்சசைலத்தை மீட்டு வா; அங்ஙனம் மீட்டுவந்தால், தாராபாயின் மணமாலை தட்டாது கிட்டும்" என்றனள். அவ்விதமே நாட்டை மீட்டுத் தருவதாக ஜெயமல்லன் வாக்களித்தான். ஆனால் அதற்குள்ளாக அவனை மோகம் வந்து மூடிக்கொண்டது. அரசிளங்கோ என்னும் செருக்கும் தலைமட்டங் கொண்டுவிட்டது. மோகமும் செருக்கும் மூடிக்கொள்ளவே, அவன் தனது வாக்குறுதியை மறந்தான்; வீரர்க் குரிய போக்கையும் கைவிட்டான். ஆகவே, தாராபாயை முரட்டுத்தனமாகக் கைப்பிடிக்க முயன்றான். அது கண்ட ராவ் சூரஸ்தானத்துக்குக் கோபம் பொங்கி விட்டது. சுருங்கச் சொல்லின், ராவின் வாளுக்கு ஜெயமல்லன் இரையாகி வீழ்ந்தனன். இச்செய்தி ராணா ரவிமல்லனுக்கு எட்டிற்று. அப்போது மத்தியபதி மன்னவன் அடங்கத் துயர் கொண்டு புத்திர சோகத்தால் வாடலாயினன்.

புத்திர சோகம் பொல்லா தென்பர். மூத்தபிள்ளை போன விடந் தெரியவில்லை; இளைய பிள்ளையோ அடங்காப் பதட்டத்தினால் நாடு கடத்தப்பட்டுப் போயினான்; மூன்றுமவனும் மோகத்தால் மாண்டுபோனா னென்றால், அத்துயரை யாவர் சகிக்க முடியும்? எனினும் பட்டத்துக்குப் பிள்ளை இல்லையே யென்று ரவிமல்லன் அவ்வளவாக வருந்த வில்லை. "மத்தியபதி மன்னவனது மகன் தனது வாக்கை நிறைவேற்றாது பேடியாகி வாளுக்கு இரை யாகினனே" என்பதில்தான் அவனுக்கு வருத்த மதிகம். இதுவே அவனது உடலையும் உயிரையும் ஒருங்கே வாட்டி வந்தது. அச்சமயத்தில் சிலர் அம்

மன்னவனை யடைந்து, ராவ் சூரஸ்தானத்தைப் பழி வாங்க வேண்டுமென்று பகன்றனர். இதற்கு ரவிமல்லன் யாது பதில் கொடுத்தான்?

"நன்று! நன்று!! பழிக்குப் பழியா வாங்குவது! தனது தாய் நாட்டை யிழந்து தவிக்கும் தந்தையின் துயரை யுணராமல், மங்கையின் மனக் கோளையும் மதியாமல், மோகமே கொண்டு, மகளைமுரட்டுத்தனமாகக் கைப்பிடிக்க முயன்றவன் படுபேடியன்றோ? பேடியான ஜெயமல்லனைப் பெற்றெடுத்த எனக்கன்றோ தண்டனை விதிக்கவேண்டும்? ஜெயமல்லனுக்கு அக்கதி நேர்ந்தது மிகவும் பொருத்தமே. அதுபற்றி எனக்குச் சிறிதும் வருத்த மில்லை. அத்தகைய பிள்ளை ஏன் பிறந்தான் என்பதே எனது தணியா வருத்த மாகும். இங்ஙன மிருக்க, யான் எங்ஙனம் சூரஸ்தானனைப் பழி வாங்குவது? அவனை இச்சமயம் ஆற்றுவதே எனது கடமையாகும். இது பற்றி, வேதங்கரம் என்னும் நாட்டை அவனுக்கு அளிக்க வேண்டும். இனி, அத் தாராபாயின் மனத்தைக் குளிர்விக்க வழி யிருப்பின், விரைவில் சொல்லுங்கள்."

என்றே ரவிமல்லன் கூறினன். என்னே, ராணாவின் பெருந்தன்மை! இவன் ராவ் சூரஸ்தானனுக்கு அளித்த நாடு தட்சசைலத்திற்கு எவ்விதத்திலும் குறைந்த தன்று. நாட்டுக்கு நாடு பெற்றுவிட்டபோதிலும், அந்த ராவுக்கும் சரி, தாராபாய்க்கும் சரி, தட்சசைலத்தை மீட்கவேண்டு மென்ற ஆவல்மட்டும் தணியவில்லை. அதுகண்ட ரவிமல்லன், "அந்தோ! அவ்விருவரின் உள்ளத்தையும் குளிர்விக்கும்படியான ஆற்றல் படைத்த மைந்தன் எனக்கு இல்லாது போயினனே" என்று புலம்பி நின்றான்.

அச்சமயத்திலே, முன்னம் நாடு கடத்தப்பட்டுப் போன பிருதிவிராஜன் வேறொரு நாட்டிலே பெயரும் புகழும் பெற்று விளங்கி நின்றனன். இது செய்தி ரவிமல்லனுக்குத் தெரியவந்தது. அவ்வளவில் அம்மைந்தனை மன்னித்து விட்டதாக அவனுக்கு ஓலை யனுப்பப்பட்டது. உடனே பிருதிவிராஜன்

விரைந்து வந்து தந்தையின் பாதம் பணிந்து, "அரசே! எனது பழைய பிழையை மன்னித்தல் வேண்டும். தட்சசைல நாட்டை மீட்டுத் தந்து, தங்களையும் ராவையும் களிக்கச் செய்து தாராபாயின் மணமாலையும் பெறுவேன். இல்லையேல், யான் தங்களது உதரத்தில் உதித்தவ னல்லன்" என்று சபதஞ் செய்து கொடுத்தான். மைந்த னுரைத்த வாசகத்தைச் செவிக் கமுதெனக் கொண்ட ரவிமல்லன் அப்பிருதிவியை மார்புறத் தழுவி மனமகிழ்ந் திருந்தனன்.

அங்ஙன மிருக்கையில், பிருதிவிராஜனது பெரும் புகழைக்கேட்ட தாரா பாய், "ஈசா! அவ்வீரன் வந்து எனது நாட்டை மீட்டுத் தாரானோ! அவனுக்கு மாலை யிடும் பாக்கியம் எனக்குக் கிட்டாதோ! உனது கருணை யிருப்பின், எல்லாம் இனிது முடியும்" என்று சிந்திக்கலானாள். ராஜபுத்திரரிலே பிருதிவிராஜன் என்னும் பெயர் யாவரையும் ரமிக்கச் செய்யும். ஆதலின் பலர் அப்பெயரையே தமது அருமந்த மைந்தருக்குச் சூட்டுவர். இதன் விவரம் மற்றொரு கதையில் விரிவாகக் கூறப்படும். தாராபாய் பிருதிவியை நினைத்து நின்ற காலையில், அவ்வீரசிங்கம் ராவ் சூரஸ்தானத்தை யடைந்து, "அரசே! அஞ்ச வேண்டாம்; கலக்கத்தையும் கை விடுங்கள். தட்சசைலத்தை ஒரு நொடியில் மீட்டுத்தருவேன். இல்லையேல், நான் இராஜபுத்திர னல்லன்" என்று கூறினன். இவ்வுரை கேட்டதும், தாராபாய் விரைந்து வந்து அப்பிருதிவிராஜனுக்கு மாலை சூட்டி மகிழ் பூத்தனள். பிருதிவியைக் கண்டதும், நாடு திரும்பி வந்துவிட்டது போலவே அவள் கருதிவிட்டாள்.

அதன்பின், பிருதிவிராஜன் ஒரு கணமும் காலந் தாழ்க்க வில்லை. தனது ஆயிரக் கணக்கான துணைவரிலே ஐந்நூறு வீர சிகாமணிகளைத் தேர்ந்தெடுத்தான். அவர்கள் அனைவரும் வேலும் வேல்கம்பும் அம்பும் வில்லும் உடைவாளும் ஈட்டியும் தாங்கிச் சிங்கநாதத்துடன் புறப்பட்டனர். தாராபாயோ தன் காதலனை விட்டுப் பிரிய மனங் கொள்ளவில்லை; மேலும் போர்க்கோலம் பூண்டு, பட்டாணியரைப் புறங்கண்டு, பெருமித

வாகை சூடி வரவேண்டுமென்றும் அவளுக்கு ஆசை யுண்டா யிற்று. ஆதலின், அவளும் ஆண் உடை தரித்து வாளும் வேலும் வில்லுந் தாங்கி வீரருடன் வீரராகப் புறப்பட்டாள்.

எல்லாரும் சேர்ந்து தட்சசைல நகரம்போய்ச் சேர்ந்தனர். அச்சமயம் அங்கே அல்லாப் பண்டிகை நடந்துகொண்டிருந் தது. அதன் கடைசித் தினத்திலே மிகவும் ஆடம்பரமான ஊர்வலம் நடக்கும். இது அனைவரும் அறிந்த விஷயம். அந்த ஊர்வலத்தில் தாராபாய், பிருதிவிராஜன், அவனது உயிர்த்துணைவன் ஆகிய மூவரும் கலந்துகொண்டனர். மற்ற வீரரோ நகரின் மதில் புறத்திலே மறைவாகக் காத்திருந்தனர், போரின் விளைவை நாடி.

ஊர்வலம் அப்பட்டாணியப் பார்த்திபனது அழகிய மாளி கையை அணுகிற்று. அதனுடன் கூடிக்கொள்ளக் காத்திரு ந்த அக்காவலன் தனது மாளிகையின் சாளரத்தின் வழியே சிரசை நீட்டிப் பார்த்தான். ஊர்வலத்திலே அசுவசாரிகளாய்க் கம்பீரமாக வரும் மூவர் வேற்று மனிதரை அவன் அறிய வில்லை. அம்மூவரும் யாவர் என அவன் தனது அயலிலிரு ந்த மெய்காவலரை வினவினன். அவ்விதம் அவன் வினவி வாய் மூடுமுன், தாராபாய் எய்த அம்பொன்று விரைந்து சென்று அவனது மார்பகத்தில் புகுந்தது; அவ்வம்பை யடு த்துப் பிருதிவிராஜன் வீசிய வேல் கம்பு சென்று அவனது ஆவி யைக் கவரலாயிற்று; உயிர்த் துணைவனது வாளோ ஊர்வலத் திலிருந்த பல பட்டாணிய வீரரைப் பலிகொண்டது.

குலத்தலைவன் குற்றுயிருடன் தரையில் சாய்ந்தான் என்று கேட்டவுடனே, மாளிகை எங்கும் அழுகுரல் கிளம்ப லாயிற்று. ஊர்வலத்தி லிருந்தவர்கள் திக்பிரமை கொண்டு ஒன்றுந் தோன்றாமல் மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தார் கள். கரைகடந்த களியாட்டத்திலே மூழ்கிக் கிடந்த நகர மாந் தருக்கோ, உள்ளமும் உடலும் ஒருங்கே பதைத்தன. இதற் குள் அவ்வீர மாதும் வீர சிங்கமும் தமது உயிர்த் துணைவனு டன் கோட்டை வாயிலை நோக்கிப் போயினர். அங்கே அவ்வா

யிலைக் காத்து நின்ற காவலாளன் வாளா விருக்கவில்லை. தனது யானையின் மீதேறி வந்து, அம்மூவரையும் வழி மறித்தான். போரில் நன்கு பழகிய அக்குஞ்சரம் வெறிகொண்டு, தனது துதிக்கையை நீட்டித் தாராபாயை வாரிக்கொள்ளத் தலைப்பட்டது. அருகே யிருந்த அவள் காதலனும் துணைவனும் அம்மா தரசி இன்றோடு மடிந்துவிடுவாள் என ஏக்கங்கொண்டு நின்றனர். ஆயினும் அப்பெண்மணி யாது செய்தாள்? சில பேடிகளைப்போல் பயந்து பதுங்கப் பார்த்தனளோ? இல்லை; இல்லை. கதியும் மதியும் கலங்காது, தனது உடைவாளை உருவி ஓங்கி வீசினள். அவ்வளவுதான் தாமதம். யானையின் துதிக்கை துண்டுபட்டுக் கீழே விழுந்தது. உடனே கையிழந்த குஞ்சரம் அங்கு நிற்க வில்லை; அம்மாதுக்கு முதுகு காட்டி யோடத் தலைப்பட்டது. அதுகண்ட மாவுத்தன் அங்குசங்கொண்டு குத்திக் குத்தி அதனைத் திருப்பப் பார்த்தும் முடியவில்லை. அம் மிருகம் பாகனுக்கு அடங்காமல் பிளிறிக்கொண்டே பறந்தோடிவிட்டது.

இதற்குள் நகர்ப் புறத்தே காத்து நின்ற ஐந்நூறு குதிரை வீரரும் ஆயுத பாணிகளாக அக்கோட்டையினுள்ளே புகுந்து கொண்டனர். அரசனும் அரசியும் பக்க பலம் பெற்றதும், அனைவரும் அணியாக நின்று பட்டாணியரின் வரவை எதிர் நோக்கி நின்றனர். உடனே அப்படையும் போருக்கெழும்பி வந்தது. பண்டிகைக் காலத்திலே திடீரெனப் போர் மூண்டதால், பட்டாணியர் பெரும்படை திரட்டி வர முடிய வில்லை; தக்க போர்க் கருவிகளையும் தயாரிக்கக் கூடவில்லை. என்றாலும் அப் பட்டாணியர் மகா வீரபுருஷர்; போரில் புறங்கொடுக்க ஒருப்படாதவர்; வீரமே விளைத்து வாகை சூட விரும்பு வோருமாவர். ஆதலின் கிடைத்த படை வலியைக் கொண்டு ஆண் சிங்கங்களைப்போல் அருஞ் சமர் புரியலாயினர். அவர்கள் புரிந்த போரின் கடுமையும் மூர்க்கமும் கூறுந் தரமல்ல. இராஜ புத்திர வீரரும் போரில் சளைக்க வில்லை. வீரரின் தலைகள் நிலத்தே குவிந்தன; உடற் குறைகள் நின்று கூத்தாடின; வாள்களின் முனைகளும் மழுங்கிப்போயின வெனலாம்.

போர் நூலதனில் நன்கு பழகிய பிருதிவிராஜன் தனது வாள் வலிக் கேற்ற வீரரைச் சந்தித்தோமென அக மகிழ்ந்து அளவிலா வீரங் காட்டி அமர் புரிந்தான். தாராபாயோ தளர் வென்பதை அறியாதவளாகி நீண்ட நேரம் வாள்கொண்டு பட்டாணியரை வெட்டி வீழ்த்தி வந்தாள். அங்ஙனம் ஒரு முகூர்த்த காலம் ஓயா மூர்க்கத்துடன் போர் நிகழ்ந்து வந்தது. பட்டாணியரின் பக்கமே வெற்றி நிற்குமெனப் பலரும் கருதலாயினர். அச்சமயத்தில் தாராபாய் தனது காதலனையும் மெய் காவலனையும் விட்டுப் பிரிந்து, பகைவனது படை வரிசையில் புலிப்போத்தெனப் பாய்ந்து, பட்டாணிய தளகர்த்தனைப் படு களத்தில் சாய்த்து விட்டாள். என்னே, அம்மாதின் வீரத் தனம்!

தளகர்த்தன் தரையில் சாய்ந்ததைக் கண்டவுடனே, பட்டாணிப் படைகள் நிலை குலைந்து விட்டன; அது வரையில் அவர்களுக்குத் துணையாக நின்ற மன வுறுதியும் பறந்தோடிற்று. உள்ளமும் உடலும் சோர்ந்த பின்னர், அவர்கள் என்ன செய்வார்கள்? புறங் காட்டி யோடிவிட்டார்கள். பிருதிவி ராஜனும் தாராபாயும் வெற்றி முரசம் முழங்க, வீரவாகை சூடிச் சிங்க நாதம் போல் சங்க நாதஞ் செய்தனர்.

அன்று மாலை நடந்த போரிலே உயிரைப் பறி கொடாமல் எஞ்சி நின்ற பட்டாணியர் நள்ளிரவிலே யாரு மறியா வண்ணம் தட்சசைலத்தைத் துறந்து போயினர். இதுகேட்ட ராணா ரவிமல்லனும் ராவ் சூரஸ்தானனும் அளவிலா ஆனந்தங் கொண்டனரென நாம் விளம்பவும் வேண்டுமோ? முடிவாகக் கூறுமிடத்து, அவ்வெற்றி வீரனுக்கும் வீர மாதுக்கும் தட்ச சைல நகரிலேயே வேத விதிப்படி விவாகம் நடந்தேறிற்று. கண் பெற்ற குருடனைப்போல் ராவ் சூரதஸ்தானன் களிகூர்ந்து அத்தட்சசைல நாட்டை யாண்டுவரத் தலைப்பட்டான்.

நாட்கள் பல சென்றன. அந்நாட்டை முன்னம் கைப்பற்றி யிருந்த பட்டாணியனுக்குப் பரிவுள்ள தம்பி யொருவன் இருந்தனன். தன் தமையன் ஆவி யிழந்ததைக் கேட்டு அவன் மனம்

துடித்துக் கொண்டே யிருந்தது. முதலிலே பிருதிவியை எங்ஙனம் எதிர்ப்பதெனவே அவன் வாளா விருந்தான். முடிவிலே, ஒன்று போரில் மடிவோம், அல்லது வாகை சூடுவோம் என்றெண்ணிப் போருக் கெழுந்தான். அவ்விதம் எழுந்து வந்து பிருதிவி ராஜனை யழைத்தான், போர் புரிய. போசென்ற பேச்சிலும் இச்சை செலுத்தும் பிருதிவி ராஜனே தினவுத்தோளுக்கு விருந்து கிடைத்ததெனக் கருதினனே யன்றிச் சிறிதும் பின் வாங்க வில்லை. சமரின் வேட்கையே நிரம்பி நின்ற ஓராயிரம் வீரர் அப்பிருதிவியுடன் புறப்பட்டனர். வீரரில் வீரனான பிருதிவியும் ஆண்மையே வடிவெடுத்து வந்தது போன்ற மடமாதும் போரில் புகின், பக்க பலமாகச்செல்ல யாவரே பின்வாங்குவர்? பேரிகை சங்கம் முதலிய பல வகை முழக்கத்தி னிடையே, வீரரது ஆரவாரம் ததும்பிக் கிளம்ப, அம்மாதும் வீரனும் போர்க் கோலத்துடன் களத்தில் தோன்றினர். இருபக்கத்துப் படைகளும் கடுங் கோபத்துடன் கைகலந்தன. சண்டை மிகவும் மும்முரமாகவே நடந்து வந்தது. சிறிது நேரம் வெற்றியும் தோல்வியும் இப்பக்கமும் அப்பக்கமும் ஊசலாடி நின்றன. முடிவில் பட்டாணியன் தனது வீரருடன் தன் தமையன் போன வுலகமே போய்ச் சேர்ந்தான். பெண்பா லெனினும், புவியிலுள்ளோர் வியக்கும் வண்ணம் அரும் போர் புரிந்து, எண்ணிறந்த வீரரை எமனுலகமனுப்பிய தாராபாயை அனைவரும் உச்சிமீது வைத்துக்கொண்டாடினர். அம்மாதின் போர்த் திறனைப் போற்றிப் புகழார் தார் இல்லை யென்றே இயம்ப வேண்டும்.

இராஜபுதனத்திலே அஜமேரு என்னும் நாடொன்றுண்டு. இக்காலத்திலே அது ஆங்கிலத்தில் ஆஜ்மீர் என வழங்கி வருகிறது. அந்த அஜமேரு நாட்டை அக்காலம் மல்லூகான் என்பான் ஆண்டு வந்தான். அவன் சுத்த வீரர்களில் ஒருவன்; அஞ்சா நெஞ்சும் அளவிலா ஆற்றலும் படைத்தவன்; குலாபிமானத்தில் கரை கடந்தவன். ஆதலால், "நமது இனத்தாரிலே இருவர் இராஜ புத்திரரிடம் போரிலே மாண்டுபோயின ரல்லவா?" என்று அவன் கொதிப்புக் கொண்டது

கொஞ்சமன்று. அதுபற்றி அவன் மிகவும் பெரிய படை யொன்று திரட்டிப் போருக்கு வர எண்ணி யிருந்தான்.

இச்செய்தி வீர சிங்கமான பிருதிவி ராஜனுக்கும் தாரா பாய்க்கும் தெரிய வந்தது. ஆண் சிங்கத்தை அதன் குகையி லேயே எதிர்ப்பது போல், மல்லூகானை அஜமேரு நகரிலேயே எதிர்த்துத் தாக்கவேண்டுமென இருவரும் கருதினர். உடனே இணையிலா ஈராயிரம் வீரர் தீரமே பேசித் திரண்டு வந்தனர். அப்படை வகுப்புடன் வீரமாதும் வெற்றி வீரனும் அஜமேரு நகரை யணுகிய வுடன், இரு படைகளும் அந்நகர்ப் புறத்தில் கை கலந்தன. மல்லூகானது படைவீரர் பராக்கிரமத்துடன் போர் புரிந்தன ராயினும், இராஜபுத்திரரின் வாள் வலிக்கும் தோள் வலிக்கும் ஆற்ற முடியவில்லை; பஞ்சுபோல் பறந்தனரே யன்றி, முனைந்து நின்று சமர் செய்ய மனவுறுதி கொள்ளாது போயி னர். மல்லூகான் மகா வீரனாயினும், சிங்கத்தைக் கண்டோ டும் யானை போலாயினன். அதனால் பிருதிவியின் புகழும் தாரா பாயின் வீரமும் தேச மெங்கும் ஓங்கிப் பரவின. அக்காலத் திருந்த முகம்மதிய அரசுகளெல்லாம் அவ்விருவரின் பெயரைக் கேட்டுப் பீதிகொண்டே கிடந்தன. ரவிமல்லனும் சூரஸ்தானனும் தமது மக்களின் மன வுறுதி கண்டு மிகவும் மகிழ்ந்திருந்தனர்.

இவ்விதம் அவ்விருவரின் வீரவாழ்வைக் குறிப்பிடும் சம்ப வங்கள் பலவுள. இன்றும் நாளையும் இராஜபுத்திரர் ஒன்று கூடின், அவ்விருவரின் விரப் பிரதாபங்களை விரித் துரைத்துப் புகழ்ந்து பேசுவர். அவ்வளவு பெயரும் புகழும் படைத்தவர் கள் நெடுங் காலம் உலகி லிருக்கக் கொடுத்து வைக்க வில்லை; புண்ணிய புருஷர்களையும் வீரர் திலகங்களையும் கண்டால், தென்றிசைத் தலைவனுக்கு மிகவும் பிரியம் போலும்! அவன் அன்னாரைத் தனது வாயிலிட்டுக் கொள்வான். இவ்விதமே அவ்விருவரின் வாழ்வும் இவ்வுலகில் முடிந்தது. முடிந்த விவ ரத்தை இங்கே கூறுவோம்.

பிருதிவி ராஜனுக்குப் பல சகோதரிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தி அற்புத நாட்டரசனது வாழ்க்கைத் துணை

யாக இருந்தனள். அந்த அற்புத நாட்டரசன் பெயர் பிரபுராவ். அவன் மகா சூரன்; புத்திமானு மாவான். எனினும் பண்டை வினையின் பயன் போலும்! அபினி மயக்கம் அவனை அடிமை கொண்டு விட்டது. கஞ்சா, அபினி முதலிய மயக்கப் பொருள்கள் இராஜபுத்திரருக்கு உயிர் போன்றவை. படை முகத்தில் புகும் பொழுதும், விவாக சமயத்திலும் அவர்கள் அபினியும் கஞ்சாவும் சாப்பிடாமலிரார். கஞ்சா உருண்டை கொண்ட பின்னர் படை முகத்தில் புகுந்து விட்டால், பதின் மடங்கு வீரமும் வலியும் அவர்களுக்கு வந்துவிடும். அச்சமயம் அவர்களுக்குத் தலைகால் தெரியாது; உயிரும் ஒரு பொருட்டாகத் தோன்றாது; அக்கொடிய பழக்கத்தால் மகத்தான அனர்த்தங்கள் விளையும். அதிலும், அபினி மிதமிஞ்சி விட்டால், கேட்க வேண்டியதில்லை. முற்காலத்திலே அக்கொடிய வழக்கம் இராஜபுத்திரர் அனைவரிடமும் குடிகொண்டு கிடந்தது.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமென்பர் பெரியோர். மொந்தை மொந்தையாக மதுபானங் கொள்வோன் அறிவழிந்து, மதி மயங்கி, அல்லல் படுவது போலவே, பிரபுராவும் அல்லல் படலாயினன். கஞ்சா சாப்பிட்டவுடனே, அவனுக்கு மூளை கலங்கிவிடும்; மானமும் அபிமானமும் பறந்துபோம்; சுற்றமும் துணையும் தெரியாது போம்; அருமை மனைவி என்றும் புலப்படா தாகிவிடும். எனவே அப்பிரபுராவ் தனது அருமந்த மனைவியை அடிப்பான், உதைப்பான் ஏசுவான், பேசுவான்; கத்திகொண்டும் குத்தக் கருதுவான்; அவளைப் பஞ்சணையில் படுக்க விடான்; பாழுந் தரையில் படுத்துறங்கும் வண்ணம் பலவுங்கஞ் செய்வான்.

அங்ஙன மிருந்தும், அவன் மனைவி தனது விதியை நினைந்து வருந்தி நெடுநாள் பொறுமையுடன் இருந்து வந்தாள். முடிவிலே வினைப் பயன் வந்து சூழ்ந்துகொண்டது. அதனால் கணவ னகத்தைத் துறந்துவிடக் கருதினள். ஒரு தினம் அவளுக்கு ஆற்றொணாத் துயரம் உண்டாகிவிட்டது. உண்டாகிவிடவே, "இனி யான் ஒரு கணப்பொழுதும் கணவ னகத்தே

தங்கியிரேன். ராஞவின் மகளாகிய யான் அடியும் குத்தும் உதையும் வதையுமா படுவது? விரைவில் வந்து என்னை அழைத்துச் செல்லாது போயின், என்னை உயிருடன் காண்பதரிது'' என்று தன் சகோதரனுக்கு நிருபம் விடுத்தனள்.

அக்கடிதம் பார்த்தவுடனே, பிருதிவிராஜனுக்கும் விதி வலியால் அடங்காக் கோபமுண்டாகிவிட்டது. தனது உயிர்க் காதலியுடனும் ஒன்று முரையாமல், அவன் அற்புதநாடடைந்தான். அந்நகரம் போய்ச் சேர்ந்த நேரம் நடு நிசியாகும். நகரின் வாயிற் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. காவலாளரைத் தட்டி யெழுப்பிக் கதவைத் திறக்கச் சொல்லவும் அவன் கருத வில்லை. அந் நகரின் மதிலைத் தாண்டிக் குதித்து உள்ளே புகுந்தனனென்றால், அவனது கோபாவேசத்தை நாம் விரித் துரைக்க வேண்டுமோ? பிரபு ராவின் படுக்கை யறையைத் தேடிச் சென்று அவ்வறையில் பு[illegible]ந்து மஞ்சத்தின் மீதேறி, அவனது மார்பகத்தே மண்டி போட்டு வீற்றிருந்துகொண்டு, தனது ஈட்டியை நெஞ்சுக்கு நேரே நீட்டினன். அவ்வளவில் துயிலுணர்ந்த பிரபு ராவ் என்ன செய்வான்? கையும் காலும் நடுங்க வாய்விட்டுக் கதறியழுதான்; கையெடுத்துக் கும்பிட்டான்; இந்நிலை கண்டும் பிருதிவிராஜனது கோபம் தணிய வில்லை. அவனைக் கொலை புரிந்து விடவே பிருதிவி முனைந் திருந்தனன். அச்சமயம் பிரபு ராவின் மனைவிக்கு மனம் மிகவும் இளகிவிட்டது. ஆதலின், தன் மணாளனை மன்னித்து விடவேண்டுமென்று தனது சோதரனை வேண்டிக்கொண்டனள். அதற்கு, ''தங்காய்! உனது வேண்டுகோளுக்கு இணங்கியே இப்பாதகனை மன்னித்தல் வேண்டும். ஆனால் இவன் தானிழைத்த பிழையை மதித்து உன்னை யடிபணியின் இவனை மன்னிப்பேன்'' என்று கொதித்தனன் அப்பிருதிவிராஜன். விதியின்றிக் கிடந்த பிரபுராவ் அவ்விதமே தனது மனைவியின் பாதத்தைத் தன் சிரமீது தாங்கி நின்று உயிர்ப் பிச்சை பெற்றான்.

அப்பால் பிருதிவிராஜன் அந்த அற்புத நகரிலேயே ஐந்து தினம் தங்கி யிருந்தனன். அப்போது பிரபு ராவும் பிருதிவி

ராஜனும் வேற்றுமையின்றி வாழ்ந்து வந்தனர்; ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டும் நட்புக் காட்டினர். பின்பு பிருதிவிராஜன் அவ்விருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு மத்தியபதிக்குப் புறப்பட்டான். நாவுக்கினிய நல்லுணவு செய்வதில் பிரபு ராவ் கைதேர்ந்தவன். அத்தகைய சிற்றுண்டி முடிப்பொன்றைப் பகை முடிந்ததின் அறிகுறியாக அற்புத நாட்டரசன் கொடுக்க, பிருதிவிராஜனும் வஞ்சனை யின்றி அதனை ஏற்றுக்கொண்டான்.

தாராபாயைப் பிரிந்திருந்த தாபத்தினால் பிருதிவிராஜன் கன வேகமான குதிரையின் மீதேறிக்கொண்டு திரும்பி வரலானான். வழியில் கும்பமேரு நகரைக் குறுகிய வுடன் அவனுக்குப் பசி யதிகரித்தது. ஆதலால் ஆங்கிருந்த நீரோடையொன்றில் சிறிது பொழுது தங்கி, அச்சிற்றுண்டியை ஆர்வமுடன் புசிக்கத் தலைப்பட்டான். அவ்வளவிலே அச் சிற்றுண்டியி லிருந்த விஷம் தலைக்கேறிவிட்டது; மதியும் மயங்கத் தலைப்பட்டுவிட்டது; இனி நெடுநேரம் உயிர் நிலைத்திரா தெனவும் அவனுக்குத் தென்பட்டது.

உடனே அப்பிருதிவி ராஜன், “என் கண்ணே! பெண்கள் நாயகமே! எனது ஆயுள் இன்றோடு முடிவடையப் போகின்றது. கடைசி முறையாக உன்னைக் கண்டு, கண் மூட விரும்பியுள்ளேன். எனக்கு விடை கொடுத்து என்னை வேறுலகமைப்ப விரைந்து வருவாயாக” என்று தனது தேவி தாரைக்குத் தூது விடுத்தனன். அத்தூதுவன் உரைத்த மாற்றங் கேட்டவுடனே தாராபாய் தாங்கொணாத் துயர் கொண்டு கன வேகமாக நாதனைக் காண வந்தாள். கும்பமேரு என்னும் நகருக்கும் அந்நீரோடைக்கும் ஆறு மைல் தூரந்தா னுண்டு. மிகு விரைவாகச் செல்லக் கூடிய பரியின் மீதேறி அவள் விரைந்து வந்தும், அதற்குள்ளாக அப்பிருதிவிராஜன், அந்தோ! மண்ணுலகை விட்டு விண்ணுலகம் போய் விட்டான். பிருதிவியின் உடலத்தைத்தான் அம்மாதரசி நோக்க முடிந்தது. பின்னர் நடந்தவற்றை விரித்தெழுத மனம் வரவில்லை; எழுதுவோரும்

ஒடவில்லை. வெற்றி வீரனுடன் வீர மாதும் உடன் கட்டையேறி அமரருல கடைந்தாள்.

அச்சமயம் பிருதிவிராஜன் மாளாது இன்னும் சிறிது காலம் ஆவிதாங்கி வாழ்ந்திருப்பின், நமது பாரத தேசத்தின் சரித்திரம் வேறு விதமாக முடிந்திருக்கும். அவ்வீர புருஷனது வெற்றிச் செயல்களை இன்னும் விரிவாகக் காண விரும்புவோர் இராஜ புத்திர விஜயத்தின் முதல் பாகத்தைப் பார்க்கலாம். இப்பூவுலகில் அப்பிருதிவி இருபத்தேழு வருஷ காலமே வாழ்ந்திருந்தான்.

பத்திரிகை ஆராய்ச்சி.

கைராட்டினமும் கைத்தறியும் இக்காலத்தில் இந்நாட்டு வறுமையை யொழித்து எளியவர்களுக்குச் சுக வாழ்வை யளிக்க வல்லது என்பதை இந்தியத் தலைவர்கள் யாவரும் ஒரு தலையாய் வற்புறுத்திவருவது ஒருபுற மிருக்க, சமீபத்தில் நடைபெற்ற சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் அபிவிர்த்தி இலாகா மந்திரி அவற்றால் ஜனங்களின் வாழ்வு சுகப்படுவதற் கேதுவில்லை யெனக் கூறினர். இது சம்பந்தமாய் பர்லின் நகரில் வெளியாகும் 'இந்தியாவின் கைத்தொழிற் சர்ச்சை' என்ற பிரசுரத்தில் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது:—

> சென்ற இரண்டு வருடங்களாக ஜெர்மனியில் சிறிய வீட்டுக் கைத்தொழில்களைக் கைக்கொள்ளும் முயற்சி இடையறாது காணப்படுகின்றது. இம்முயற்சி கைராட்டினச் சுழற்சியிலும் கைத்தறி நெசவிலுமே விசேஷமாய்க் காணப்படுகிற தென்னலாம். ஜெர்மனியில் எந்த மூலையிலும் விவசாயிகளுங்கூடச் சர்க்காவையும் கைத்தறியையும் கையாள வந்துவிட்டனர். .... ஹங்கேரியிலும் இம்மாதிரியான முயற்சியே நடைபெறுகின்றது. அந்நாட்டில் இப்போது ௪,000 கைத்தறிகள் இருக்கின்றனவென்றும், அவற்றில் ௨,000 தறிகள் எப்போதும் உபயோகத்திலிருக்கின்றன வென்றும் அறிகிறோம்...............

சதங்கையொலி.

நமது மாதப் பதிப்பு.

குமரன் மாதப் பதிப்புக்கு இம்மாதத்தோடு இரண்டாவதாண்டு பூர்த்தியாகின்றது. இந்த வருஷத்தில் பத்திரிகையை அபிவிருத்தி செய்ய முயன்றோம். ஆனால் எதிர் பார்த்த அளவு சந்தாதாரரின் தொகை அதிகரித்திலது. பத்திரிகை விஷயத்தில் எது செய்வதாயினும் படிப்பவர் அதிக மிருத்தல் வேண்டும். இந்தக் கஷ்டம் தமிழ் நாட்டில் சாதாரணமாக எல்லாப் பத்திரிகைகளுக்கு மிருந்து வருகிறது. புது வருஷத்தில் சந்தாதாரர் காட்டும் ஊக்கத்திற்குத் தக்கபடி பத்திரிகை நடைபெறுதல் கூடுமென்று சுருக்கமாகக் கூற விரும்புகின்றோம். புது வருஷத்தில் பத்திரிகையை ராயல் அளவில் பெரிதாக்கி இரண்டு பத்தியாகச் செய்ய உத்தேசித்திருக்கிறோம். சென்ற இரண்டாண்டுகளாக ஆதரித்து வந்தாற்போல் புது வருஷத்திலும் ஆதரிக்குமாறு அன்பர்களை வேண்டுகிறோம்.

தமிழ் வளர்ப்பு.

தமிழுக்குச் செய்யவேண்டிய தொண்டு பலவாக விருக்கின்றன. முதலாவதாகச் சரியானபடி சேகரித்துச் சிறந்த புத்தகசாலையொன்றைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்தவேண்டும். அந்த நூல்களை எளிதான விலையில் அடங்கும்படி அச்சிட்டு அவைகளைத் தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களில் வசிக்கும் ஜனங்கள் அறியும்படி செய்ய முயலவேண்டும். தமிழ் நூல்களின் அவசியத்தையும் பெருமையையும் தமிழ் மக்கள் உணருமாறு செய்யவேண்டுவதே முதலாவது தொண்டாகும். இந்தப் பிரசாரம் நடைபெற்றால் பிறகு தமிழ்ப் பாஷையை எந்தெந்த வழியாக அபிவிருத்தி செய்வதானாலும் சுலபமாக விருக்கும். மேடைகளில் நின்று நாம் தமிழைப்பற்றிப் பேசுவதால் மட்டும் தமிழ் வளர முடியாது. சாதாரண ஜனங்கட்கும் தமிழ் நூல்கட்கும் இருந்த சம்பந்தம் அற்றுப் போயிருப்பதைக் கிராமங்கட்குச் செல்வார் அறிவர். தமிழ் மொழியை எழுதவும் படிக்கவும் அறிந்திருப்பவர் மிகச் சிலர். அவருள்ளும் பழைய நூல்களைப்பற்றியறிந்திருப்பவர் தொகையை கைவிரலா லெண்ணிவிடலாம். தமிழ் அபிமானம் உண்டாகுமாறு செய்யும் வரை தமிழை ஆதரிப்பாரில்லை; தமிழ் நூல்களைப்பற்றிப் பொது ஜனங்கள் அறியும்வரை தமிழில் அபிமான முண்டாகப் போவதில்லை. ஆகவே தமிழ்ச்

சங்கங்கள் செய்யவேண்டிய வேலைகளுள் முக்கியமாக விருப்பது தமிழ் நூல்களைச் சுலபப்படுத்திக் கிராமங்கள்தோறும் பரப்ப வழி தேடுவ தாகும். இம்முயற்சியிற் பொருளுள்ள சங்கங்கள் தலையிட்டால் நல்ல பலனுண்டாகும்; அல்லது இம்முயற்சிக்கென ஒருபுதிய சங்கந் தாண்பினும் நன்மையே யாகும்.

மதிப்புரை.

இரக்தாட்சி வருஷ பஞ்சாங்கம்:—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்ட இப்பஞ்சாங்கம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. விஷயங்கள் மிக அழகாகத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. சைவ மக்கட்கு வேண்டிய இன்றியமையாத விஷயங்கள் இதில் பொலிகின்றன. அழகான காகிதம்; அழகான அச்சு. இதன் விலை அணா இரண்டு. வேண்டுவோர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ௩௦௬, லிங்கச் செட்டித்தெரு, சென்னை—என்றெழுதிப் பெற்றுக் கொள்க.

நவரச மஞ்சரி:—இப்பெயருடன் கூடிய மாதச் சஞ்சிகையின் முதலிரண்டு பிரதிகள் வரப் பெற்றோம். இதில் வில்லிபாரதம் பொழிப்புரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புகளோடு தொடர்பாக வெளியிடப்பெற்று வருகிறது. முதலாவது சஞ்சிகையில் ௩௩ பாக்களும் இரண்டாவது சஞ்சிகையில் ௬௬-பாக்களும் வெளிவந்திருக்கின்றன. உரையும் பதிப்பும் காகிதமும் நன்றாயிருக்கின்றன. இம்மாதிரிமுழுதும் வெளிப்பட்டு வருமானால் பாரத நூல் முடிவுறச் சுமார் ஆறு வருஷங்கள் செல்லுதல் கூடும். இச்சஞ்சிகையில் ஹிதோபதேசம், பொது வர்த்தமானங்கள் போன்ற விஷயங்களும் வெளி வருகின்றன. இதன் வருட சந்தா ரூ ௩—௮—௦. வேண்டுவோர் எ. எம். போரூரான் செட்டியார், பிரசுரகர்த்த பத்திராதிபர், ௩௧௧, தங்கசாலைவீதி, பார்க்டவுண், சென்னை" என்றெழுதிப் பெற்றுக் கொள்க.
